197

25 — 30

D
V211,31 N78
N79.20
102132

SECRETARIAT LIBRARY

Tamil Nadu Legislative Assembly / ~~Council~~ Debates:-

Vol. XX S.No 1-5 No.

Date 1978

1978 XX 1-5

இந்த / புத்தகக் கட்டை வரிசை மாற்றாமல்

ஒரே புத்தகமாகப் பைண்டிங் செய்யும்படி கேட்டுக்

கொள்ளப்படுகிறது.

59

for LIBRARIAN.

புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600009

விலை ரூ. 1]

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின் மூன்றாவது கூட்டத்தொடர்.

1978, செப்டம்பர் 9 11 முதல் 14 வரை

(தொகுதி 20—எண்கள் 1 முதல் 5 வரை)

©
தமிழ்நாடு அரசு
1980

சட்டமன்றப் பேரவைத் துறை
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை—600009

விலை ரூ. 1]

D
Y211.31 N78
N79-20

122132

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

அமைச்சரின் பேரவைச் செயலர்களும்

தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்): பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப் பட்டவை, காவல், பயண இசைவுச் சீட்டு, மது விலக்கு, இலஞ்ச ஒழிப்பு, பெருந்தொழில்கள், சுரங்கம், கனிவளம்.

2. மாண்புமிகு திரு. கி. மனோகரன் (நிதி அமைச்சர்): நிதி, திட்டம், சட்ட மன்றம். பொதுப் பணி (கட்டிடங்கள்) மற்றும் பொதுப்பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்), மின்சாரம். இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (கூட்டுறவுத்துறை அமைச்சர்): கூட்டுறவும் ஆவணப் பதிவுத் துறையும்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்): வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை,

6. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் (உணவுத் துறை அமைச்சர்): உணவு, மீன்வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், தேர்தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலைவாசிக் கட்டுப்பாடு.

7. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி அறநிலையத்துறை அமைச்சர்): செய்தி, விளம்பரம், திரைப்படத்தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, சின்கோனா உட்பட வனங்கள்.

8. மாண்புமிகு திரு. க. நாராயணசாமி முதலியார் (சட்ட அமைச்சர்): சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் பற்றி சட்டம் இயற்றல், சீட்டு நிதி பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு.

9. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்): தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

10. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை அமைச்சர்): நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம், கிராமதானம்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்): தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்): அரிசன நலம், எழுது பொருள்-அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலை வாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

13. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்): போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறை முகங்கள்.

14. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மை நீர்ப்பாசனத் துறை அமைச்சர்): வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, வேளாண்மை பணிக் கூட்டுறவு சங்கங்கள், பாசனத் திட்டங்கள் (சிறு பாசனம் உள்ளிட்டது), வேளாண்மை பொறியியல்.

15. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (ஊரகத் தொழில் துறை அமைச்சர்): கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், வஃபு.

16. மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்): மக்கள் நல்வாழ்வுத் துறை.

17. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நலத்துறை அமைச்சர்): மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

18. மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் (கைத்தறி நெசவுத்துறை அமைச்சர்): கைத்தறி, கதர், நெசவாலைகள், நூல்.

அமைச்சர்களின் பேரவை செயலர்கள்

1. திரு. எம். வின்செண்ட் : நிதி அமைச்சரின் பேரவை செயலர்.

2. திரு. ஆனூர் ஜகதீசன் : கூட்டுறவுத்துறை அமைச்சரின் பேரவை செயலர்.

3. திரு. பி. முசிரிபுத்தன் : வருவாய்த்துறை அமைச்சரின் பேரவை செயலர்.

4. திரு. ஐசரிவேலன் : செய்தி, அறநிலையத்துறை அமைச்சரின் பேரவை செயலர்.

5. திரு. எம். ஏ. ஜெயவேலு : சட்ட அமைச்சரின் பேரவை செயலர்.

6. திரு. ஆ. வெள்ளைச்சாமி : கல்வி அமைச்சரின் பேரவை செயலர்.

7. திரு. ப. கோ. கிட்டு : போக்குவரத்துத்துறை அமைச்சரின் பேரவை செயலர்.

8. திரு. இரா. அருணாசலம் : மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் பேரவை செயலர்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU

THIRU PRABHUDAS PATWARI

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. HON. THIRU M. G. RAMACHANDRAN (*Chief Minister*)—Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition, Prevention of Corruption, Largescale Industries, Mines and Minerals.

2. HON. THIRU K. MANOHARAN (*Minister for Finance*)—Finance, Planning, Legislature and Public Works (Building).

3. HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Electricity*) Electricity, Iron and Steel Control.

4. HON. THIRU K. A. KRISHNASWAMY (*Minister for Co-operation*))— Co-operation, Registration.

5. Hon. THIRU S. D. SOMASUNDARAM (*Minister For Revenue*) Revenue, Commercial Taxes and Excise.

6. HON. THIRU G. R. EDMUND (*Minister for Food*)—Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections, Ex-Serviceman and Price Control.

7. THE HON. THIRU R. M. VEERAPPAN (*Minister for Information and Hindu Religious Endowments*) Information and Publicity, Film Technology, Tourism Development Corporation on Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests Cinchons.

8. Hon. THIRU K. NARAYANASWAMY MUDALIAR (*Minister For Law*) Law, Courts, Prisons, Legislation on weights and measures, Legis.lation on Chits and Registration of Companies.

9. HON. THIRU C. ARANGANAYAGAM (*Minister for Education*)—Education including Technical Education, Official Language and Employment and Training.

10. HON. THIRU K. KALIMUTHU (*Minister for Local Administration*)—Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Bhoodan and Gramdan.

11. HON. THIRU S. RAGHAVANANDHAM (*Minister for Labour*)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning, Accommodation Control.

12. Hon. Thiru P. SOUNDARAPANDIAN (*Minister for Harijan Welfare*)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour.

13. Hon. Thiru C. PONNAIYAN (*Minister for Transport*)—Transport, Motor Vehicles Acts, Highways and Ports.

14. Hon. Thiru P. KOLANDAIVELU (*Minister for Agriculture and Irrigation*)— Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service, Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Agro-Engineering

15. Hon. Thiru. K. RAJA MOHAMMED (Minister for Rural Industries.)— Rural Industreis including Village, Cottage and Small Industries, Milk and DairyDevelopment and Waqfs

16. Hon. Thiru THIRUCHI R. SOUNDARARAJAN, (Minister for Health) Health.

17 Hon. Selvi P. T. SARASWATHI (*Minister for Social Welfare*)— Social Welfare including Women and Children's Welfare, Animal Husbandry, Beggars' Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

18 Hon. Thirumathi SUBBULAKSHMI, JAGADEESAN, Minister for Handlooms. Handlooms, Khadi, Textiles and Yarn.

PARLIMENTARY SECRETARIES TO THE CABINET MINISTERS.

1. Thiru M. Vincent—Parliamentary secretary to Minister for Finance.
2. Thiru Annoor Jagadeesan – Parliamentary Secretary to Minister for Co-operation.
3. Thiru P. Musiriputhan—Parlimentary Secretary to Minister for Revenue.
4. Thiru Isari Velan—Parliamentary Secretary to Minister for Information and Hindu Religious Endowments.
5. Thiru M. A. Jayavelu—Parliamentary Secretary to Minister for Law.
6. Thiru A. Vellaisamy—Parliamentary Secretary to Minister for Education.
7. Thiru P. G. Kittu—Parliamentary Secretary to Minister for Transport.
8. Thiru R. Arunachalam—Parliamentayy Secretary to Minister for Health.

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஆறாவது சட்டமன்றப் பேரவையின் மூன்றாவது கூட்டத்தொடர்.

1978, செப்டம்பர் 9 முதல் 14 வரை
(தொகுதி 20 எண்கள் 1 முதல் 5 வரை)

பக்கம்

உள்ளடக்கம்.

அரசினர் சட்ட முன்வடிவுகள்—

இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978. 623—639 639

கடன் நிவாரணச் சட்டம், 1978.

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1978 578—603 252

நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு, 1978. 575—577

பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு, 1978. 253

பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1978. 253

மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) சட்ட முன்வடிவு, 1978. 603—604 252

மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978.

அரசினர் தீர்மானம்— 553

விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

பக்கம்

அரைமணி விவாதம்—

முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி 1977-ல் தமிழகத்திற்கு தேர்தல் பிரசாரத்திற்காக வந்தபோது ஏற்பட்ட செலவு குறித்து. 254—266

அறிக்கை அளித்தல்—

பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை. 49

அரசினர் உறுதிமொழிக் குழு. 912

பொது நிறுவனங்கள் குழு.

மதிப்பீட்டுக் குழு.

விதி 82-ன் கீழ் கல்வி அமைச்சரின் அறிக்கை. 546—552

விதி 82-ஏ-ன் கீழ் கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிக்கை. 42

அறிவிப்புகள்—

1978-79 ஆம் ஆண்டின் கூடுதல் மானியக் கோரிக்கைகள். 178

1978-79 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். 178—251

1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்டமுன்வடிவு. 252

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம். 639—695

மதுரை காமராஜ் பல்கலைக் கழகப் பேரவைக்குத் தேர்தல். 41—42

ஒழுங்குப் பிரச்சினைகள்—

அதிகாரிகள் மாடத்தில் அமர்ந்துள்ள அதிகாரிகளோடு உறுப்பினர்கள் பேசுவது குறித்து. 552

உடுக்குறியிட்ட வினாக்கள் அனைத்தும் எடுத்துக் கொள்ளப் பெற்று பதிலளிக்கப்பெற வேண்டுமென்பது குறித்து. 538—539

எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பிற்கு அடிக்கப்பெற்ற மணியின் ஓசை குறித்து. 604

நிகழ்ச்சிநிரல்படி தனித் தீர்மானம் எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் என்பது குறித்து. 253—254

மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத துணை வினாவை அனுமதிப்பது குறித்து. 91—93

பக்கம்

வானொலியில் பேரவை நிகழ்ச்சி பற்றி தவறாக அறிவிக்கப் பெற்றது குறித்து. 537—538

விதி 82-ஏ-ன் கீழ் கூட்டுறவுத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை குறித்து. 42

கவன ஈர்ப்புகள்—

கல்லணை கிளிக்கூண்டில் நீர்க்கசிவு. 569—570

கிழக்கு முகவை மாவட்ட நிலவள வங்கிகள் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க வேண்டிய அவசியம். 553—556

கீரனூர் விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தில் கடன் வழங்கப் படாமை. 556—557

குமரி மாவட்டம் நெய்யாறு இடதுகரை கால்வாயில் தண்ணீர் விடாமை. 567—568

கூட்டுறவுக் கடன்கள் வசூலில் கெடுபிடி. 560—562

தஞ்சை மாவட்டத்தில் குறுவை பயிரை பூச்சி தாக்குவது. 565—567

மகாபலிபுரம் கடற்கரைப் பகுதிகளில் கடல் அரிப்பு. 44—46

மணிமுத்தாறு நீர்ப்பிடிப் பகுதிகளில் மழை பொய்த்துவிட்டமை. 570—574

மேட்டூர் கெமிகல் கம்பெனிகளின் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு. 46—49

வெங்காயத்தின் விலை வீழ்ச்சி. 563—565

வேதாரண்யம் பகுதியில் புகையிலை கொள்முதல் செய்யாத நிலை. 557—560

தகவல் கோரல்—

அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷனின் ஆண்டறிக்கை இந்தியில் தரப்பட வேண்டுமென்று சொல்லப்பெறுவது குறித்து. 539—540

அரைமணி விவாதம் குறித்து. 175

உரிமைப் பிரச்சினை குறித்து. 177

உறுப்பினர் கைது பற்றிய செய்தி குறித்து. 546

பக்கம்

தகவல் கோரல்—தொடர்ச்சி.

ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து. 175—176

சட்டமன்றப் பேரவை அலுவலகத்திலுள்ள இடநெருக்கடி குறித்து. 177

தூத்துக்குடி அனல் மின்நிலையத்திற்கான 'கன்வேயர் பெல்ட்' தயாரிப்பு. 35—36

பேரவைத் தலைவரை பதவியில் இருந்து நீக்கக் கோரும் தனித் தீர்மானம் குறித்து. 540—546

மகாகவி பாரதியார் பிறந்தநாள் விழா குறித்து. 177

விதி 82-இன் கீழ் கல்வி அமைச்சர் அறிக்கை அளிப்பது குறித்து. 540

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள வட மாநிலங்களுக்கு உதவுவது குறித்து. 177

தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் அமைச்சர்களின் பேரவை செயலர்களும். i—vi

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உட்பட). viii—xvi

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். vii

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். 267, 695—696, 976—977, 977—979

வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள். 121—158, 487—519

உடுக்குறியிடாத வினாக்கள். 158—175, 520—537

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையை (Index) பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன; துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் "சட்ட முன்வடிவு" என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புக்கள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)', 'மாநகராட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத்தலைப்பின் கீழ் கொடுக்கப்பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் "தலைவர்" என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப்பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப்பெற்றுள்ளது :—

அ. — அறிக்கை.
அறிவி. — அறிவிப்பு.
அ.வி. — அரைமணி நேர விவாதம்.
கு.வி. — குறுகிய கால விவாதம்.
பொ.வி. — பொது விவாதம்.
ஆ.உ. — ஆளுநர் உரை.
உ.பி. — உரிமைப் பிரச்சினை.
ஒ.பி. — ஒழுங்குப் பிரச்சினை.
க.ஈ. — கவன ஈர்ப்பு.
க.ஈ.அ. — கவன ஈர்ப்பு அறிக்கை.
ச.அ.நி. — சட்ட முன்வடிவின் அறிமுக நிலை.
ச.ஆ.நி. — சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை—இந்நிலையில்

(1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பெறும் தீர்மானம்,
(2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம்,
(3) சுற்றுக்கு அனுப்பப்பெறுவதற்கான திருத்தம்.
(4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கான தீர்மானம்,
(5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன.

ச.பிரி.ஆ. — சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்தல்.
ச.பே. — சட்டமன்றப் பேரவை.
ச.மே. — சட்டமன்ற மேலவை.
த.கோ. — தகவல் கோரல்
த.வி. — தன்னிலை விளக்கம்
தீ. — தீர்மானம்.
உ.தீ. — உரிமைத் தீர்மானம்.
ஒ.தீ. — ஒத்திவைப்புத் தீர்மானம்.
த.தீ. — தனித் தீர்மானம்.
து.மா.கோ. — துணை மானியக் கோரிக்கை.
மி.மா.கோ. — மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை.
பே.அ. — பேரவையின் அலுவல்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. முனு ஆதி.

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. பி.எச். பாண்டியன்
2. திரு. சு. முத்துச்சாமி
3. திரு. மு. செல்வராஜ்
4. திரு. ரா. மார்க்கபந்து

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி. எல்.,

துணைச் செயலாளர்

திரு. த. இராதாகிருஷ்ணன்

குழு அலுவலர்

திரு. ச. பாஷ்யம், பி. ஏ. (ஆனர்ஸ்)

சார்புச் செயலாளர்கள்

திரு. வி. சீதாராமன், பி.காம்.
திரு. பி. எம். பத்மனுபன் நம்பியார், பி. ஏ.,
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.
திரு. செ. சு. ஞானகிராமன், பி.ஏ; பி.எல்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ: பி.எல்.
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.

தலைமை நிருபர்

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.

எஸ்டேட் அதிகாரி

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

உறுப்பினர்களின் தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல். (தொகுதிகள் உள்பட)

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
1 அண்ணாமலை, திரு. எம்.	ஹரூர் (செ.வ.).
2 அப்துல் ரஜாக், திரு. கே. எம்.	ஆலந்தூர்.
3 அப்துல் லத்தீப், திரு. கி.	கடலூர்.
4 அப்புனு கவுண்டர், திரு. கா.	பெண்ணாகரம்.
5 அமிர்த ராஜ், திரு. இரா.	திருச்செந்தூர்.
6 அம்பிகாபதி, திரு. மு.	மன்னார்குடி.
7 அய்யாசாமி, திரு. ரா.	தாராபுரம் (செ.வ.).
8 அரங்கசாமி, திரு. க.	குன்னூர் (செ.வ.).
9 அரங்கநாதன், திரு. அ. க.	வேலூர்.
10 அரங்கநாதன், திரு. மு.	திருவல்லிக்கேணி.
11 அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்.)	கோயம்புத்தூர் (மேற்கு).
12 அருணாசலம் திரு. இரா. அமைச்சரின் பேரவை செயலர்	நாமக்கல் (செ.வ.).
13 அர்சுனன், திரு. வீ.	ஆரணி.
14 அழகர்சாமி, திரு. சோ.	கோவில்பட்டி.
15 அன்பழகன் திரு. க.	புரசவாக்கம். (சென்னை)
16 அன்பழகன், திரு. தி.	நாட்ராம்பள்ளி.
17 ஆண்டி அம்பலம், திரு. மெ.	நத்தம்.
18 ஆதிசுவாமி, திரு. இரா.	குளச்சல்.
19 ஆறுமுகம், திரு. சி.	மதுராந்தகம்.
20 ஆறுமுகம், திரு. எச். ஜி.	பர்கூர்.
21 ஆறுமுகம், திரு. இல.	திருநாவலூர்.
22 ஆறுமுகம், திரு. மு.	சேலம்-2.
23 ஆறுமுகம், திரு. த.	அரியலூர்.
24 இராசமாணிக்கம், திரு. இரெ.	குத்தாலம்.
25 இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர்.	திண்டிவனம்.
26 இராசரத்தினம், திரு. து.	பூந்தமல்லி.
27 இராதா, திரு எஸ். ஆர்.	கும்பகோணம்.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
28 இராமசாமி, திரு. கே.என்.கே.	கோபிச்செட்டிபாளையம்.
29 இராமசாமி, திரு. எஸ்.ஜே.	சோளிங்கர்.
30 இராமசாமி, திரு. எஸ். வி.	பெரம்பலூர் (செ.வ.).
31 இராமசாமி. திரு. த.	இராமநாதபுரம்.
32 இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.	சாத்தூர்.
33 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்).	அருப்புக்கோட்டை.
34 இராமச்சந்திரன், திரு. என். செஞ்சி.	செஞ்சி.
35 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்).	பண்ருட்டி.
36 இராமச்சந்திர ரெட்டி, திரு. என்.	ஹோசூர்.
37 இராமலிங்கம், திரு. செ.	திருவிடைமருதூர்.
38 இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா.	தல்லி.
39 இளங்கோவன், திரு. கோ.	திருவையாறு.
40 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.	அம்பாசமுத்திரம்.
41 உக்கிரபாண்டியன், திரு. க.	பரமக்குடி (செ.வ.)
42 உச்சி, திரு. கே.	கூடலூர்.
43 உத்திராபதி, திரு. பொ.	திருத்துறைப்பூண்டி (செ.வ.).
44 உமாநாத், திரு. ரா.	நாகப்பட்டினம்.
45 உய்யக்கொண்டான், திரு. கே. ஜே.	ஆற்காடு.
46 எட்மண்ட், மாண்புமிகு திரு. க. உரொ. (அமைச்சர்).	திருநெல்வேலி.
47 எத்திராஜ், திரு. கி.	அச்சரப்பாக்கம் (செ.வ.).
48 ஏகாம்பர ரெட்டி, திரு.	பள்ளிப்பேட்.
49 ஐசரி வேலன், திரு. (அமைச்சரின் பேரவை செயலர்)	டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், சென்னை.
50 கணேசன், திரு. இ.	எடப்பாடி.
51 கணேசன், திரு. எஸ்.	பூம்புகார்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
(1)		(2)
52	கண்ணன், திரு. ம.	கண்டமங்கலம் (செ.வ.).
53	கந்தசாமி, திரு. கே.	ஆண்டிப்பட்டி.
54	கந்தசாமி, திரு. கா. வே.	கிணத்துக்கடவு.
55	கபாலி, திரு. டி. கே.	மயிலாப்பூர், (சென்னை)
56	கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம.	திருவாடானை.
57	கருணகிரி முத்தையா, திரு. க.	மருங்காபுரி.
58	கருணாநிதி, திரு. மு.	அண்ணாநகர், சென்னை.
59	கருணாநிதி, திரு. தாழை. மு.	திருவாரூர் (செ.வ.).
60	கருணாமூர்த்தி, திரு. வெ.	ஜெயங்கொண்டான்.
61	கருப்பசாமி பாண்டியன், திரு. வீ.	ஆலங்குளம்.
62	கலியமூர்த்தி, திரு. துரை	சிதம்பரம்.
63	காத்தமுத்து, திரு. கி. பெ.	தொட்டியம்.
64	காளிமுத்து, மாண்புமிகு திரு. கா. (அமைச்சர்).	திருப்பரங்குன்றம்.
65	காளியப்பன், திரு. பொ.	காரைக்குடி.
66	காளியப்பன், திரு. இரா.	ஏற்காடு (ஆ. வா.).
67	கிட்டப்பா, திரு. என்.	மாயூரம்.
68	கிட்டு, திரு. ப. கோ. (அமைச்சரின் பேரவை செயலர்)	பல்லடம்.
69	கிருஷ்ணன், திரு. பி. எம்.	பாலக்கோடு.
70	கிருஷ்ணன், திரு. செ.	கன்னியாகுமரி.
71	கிருஷ்ணன், திரு. நா.	ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.).
72	கிருஷ்ணன், திரு. பி.	விழுப்புரம்.
73	கிருஷ்ணன், திரு. ரா.	வாசுதேவநல்லூர் (செ.வ.).
74	குப்புசாமி, திரு. என்.	மொரப்பூர்.
75	குருசாமி, திரு. ப.	ஆண்டிப்பூர் (செ. வ.).
76	குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. (அமைச்சர்).	உடுமலைப்பேட்டை
77	கோதண்டராமன், திரு. வி. கே.	குடியாத்தம்.
78	முசிறிபுத்தன், திரு. பி. (அமைச்சரின் பேரவை செயலர்)	முசிறி.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
(1)		(2)
79	கோபாலன், திரு. போ.	உதகமண்டலம்.
80	கோவிந்தராசன், திரு. சி.	நெல்லிக்குப்பம்.
81	கோவிந்தன், புலவர் கா.	செய்யாறு.
82	கோவேந்தன், திரு. மு. ரெ.	பேராவூரணி.
83	சங்கரய்யா, திரு. என்.	மதுரை கிழக்கு.
84	சண்முகம், திரு. கா. ந.	லால்குடி.
85	சண்முகம், திரு. ப. உ.	திருவண்ணாமலை
86	சண்முகம், திரு. ஆர்.	திருத்தணி.
87	சண்முகம், திரு. கூத்தகுடி. ச.	திருப்பத்தூர்
88	சதாசிவம், திரு. செ.	அரவக்குறிச்சி.
89	சந்திரசேகரன், திரு. ஆர்.	கம்பம்.
90	சந்திரன், திரு. ப.	பெரணமல்லூர்.
91	சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ.	தியாகராயநகர், சென்னை.
92	சமரசம், டாக்டர் கே.	காவேரிப்பட்டிணம்.
93	சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்.)	திருமங்கலம்.
94	சவுந்திரராஜன், திரு. ரெ. வீ.	பாபனாசம்.
95	சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.	ஆயிரம்விளக்கு, சென்னை.
96	சாது செல்வராஜ், திரு. கோ.	ஸ்ரீவைகுண்டம்.
97	சாமிக்கண்ணு, திரு. தா.	செங்கம் (செ. வ.).
98	சிகாமணி, திரு. பொ.	திருவொற்றியூர்.
99	சிவசாமி, திரு. செ.	இளையாங்குடி.
100	சிவபெருமாள், திரு. மு.	ஓமலூர்.
101	சின்னசாமி, திரு. வ.	சேந்தமங்கலம் (ஆ. வா.).
102	சின்னசாமி, திரு. வி. கொ.	பவானிசாகர்.
103	சின்னய்யா, திரு. வீ.	குளத்தூர் (செ.வ.)
104	சின்னராசு, திரு. க. இரா.	கிருஷ்ணகிரி.
105	சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ.	குளித்தலை.
106	சுந்தரம், திரு. ப.	திருப்பத்தூர்.
107	சுந்தரம், திரு. மு.	ரிஷிவந்தியம்.
108	சுந்தரராஜன், திரு. மு.	விருதுநகர்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
109 சுந்தரராஜ், திரு. நா. ..	திருமயம்.
110 சுப்பராயன், திரு. என். ..	பனமரத்துப்பட்டி.
111 சுப்பிரமணியம், பாக்கூர், திரு. சு.	உத்திரமேரூர்.
112 சுப்பிரமணியம், திரு. கே. ஜே.	போளூர்.
113 சுப்பிரமணியம், திரு. ஆர். சி.	கடலாடி.
114 சுப்பிரமணியம், திரு. டி. ..	ஆண்டிமடம்.
115 சுப்பிரமணியன், திரு. ஓ. ..	சிவகங்கை.
116 சுப்பிரமணியன், திரு. மா. சின்னச்சேலம், ..	சின்னசேலம்.
117 சுப்பிரமணியன், திரு. வ. மு. ..	மானாமதுரை (செ. வ.).
118 சுப்பிரவேலு, திரு. கே. ..	சீர்காழி (செ. வ.).
119 சுப்பு, திரு. க.	வில்லிவாக்கம்.
120 சுப்புலட்சுமி, ஜெகதீசன் மாண்புமிகு திருமதி (அமைச்சர்.) ..	மொடக்குறிச்சி.
121 சுப்பையா, திரு. ச. ..	சங்கரநயினார் கோவில் (செ. வ.).
122 சுவாமிதாஸ், திரு. அ. ..	பத்மநாபபுரம்.
123 செங்கோடன், திரு. கா. ..	கபிலமலை.
124 செங்கோட்டையன் திரு. கு. அ.	சத்தியமங்கலம்.
125 செல்லப்பன், திரு. அ. ..	வலங்கைமான் (செ. வ.
126 செல்வராசன், திரு. அ. ..	துறைமுகம், சென்னை.
127 செல்வராஜ், திரு. சீனி. ..	சமயநல்லூர் (செ. வ.).
128 செல்வராஜ், திரு. மு. ..	குறிஞ்சிப்பாடி.
129 சொக்கலிங்கம், திரு. கெ. ..	திருப்போரூர் (செ. வ.).
130 சோமசுந்தரம், திரு. ஓ. ப. ..	பொள்ளாச்சி.
131 சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்).	கிருஷ்ணராயபுரம் (செ. வ.).
132 சௌந்திரராசன், திரு. கே. ..	திருச்சிராப்பள்ளி-2
133 சௌந்திரராஜன், திரு. மு. ரா.	பவானி
134 சௌந்திரராஜன், மாண்புமிகு திரு. ஆர்., திருச்சி. (அமைச்சர்.)	ஸ்ரீரங்கம்.
135 ஞானசிகாமணி, திரு. தே. ..	விளவங்கோடு.
136 தங்கவேலு கவுண்டர், திரு. பொ.	மேல்மலையனூர்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
137 தங்கவேலு, திரு. ர. ச. ..	வால்பாறை (செ. வ.).
138 தண்டபாணி, திரு. ரா. க. சு.	காங்கேயம்.
139 தமிழரசன், திரு. இ. ..	பேரணாம்பட்டு (செ. வ.).
140 தனசேகரன், திரு. ந. ..	தூத்துக்குடி.
141 தனபால், திரு. ப.	சங்கரி (செ. வ.).
142 தனுஷ்கோடி, திரு. கோ. ..	ராஜபாளையம் (செ. வ.).
143 தாமரைக்கனி, திரு. இரா. ..	ஸ்ரீவில்லிபுத்தூர்.
144 திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத்தலைவர்). ..	அறந்தாங்கி.
145 திருவேங்கடம், திரு. பெ. சு.	கலசப்பாக்கம்.
146 துரை கோவிந்தராசன், திரு. (அரசாங்க தலைமைக் கொறடா).	திருவோணம்.
147 துரைசாமி, திரு. ப. ..	ராசிபுரம்.
148 துரை முத்துசாமி, திரு. ..	சங்கராபுரம்.
149 துரை முருகன், திரு. ..	இராணிப்பேட்டை.
150 துரைராஜ், திரு. சு. ம. ..	பொன்னேரி (செ. வ.).
151 துலுக்காணம், திரு. வ. ..	உளுந்தூர்பேட்டை (செ. வ.).
152 தைலப்பன், திரு. டி. எம். ..	ஒரத்தநாடு.
153 நடராசன், திரு. ஆ. ..	பேரூர்.
154 நடராசன், திரு. எஸ். ..	தஞ்சாவூர்.
155 நல்லதம்பி, திரு. தீ. சு. ..	பார்க் டவுன், சென்னை.
156 நாச்சிமுத்து, திரு. க. ..	பொங்கலூர்.
157 நாச்சிமுத்து கவுண்டர், திரு. கே. பி.	மேட்டூர்.
158 நாராயணன், திரு. ரா. ..	தாரமங்கலம்.
159 பட்டாபிராமன், திரு. செ.	திருவள்ளூர்.
160 பண்ணை சேதுராம், திரு. கே.	பெரியகுளம்.
161 பரமசிவன், திரு. ஏ. எம். ..	மேலூர்.
162 பரமசிவம், திரு. மொ. ..	வானூர் (செ. வ.).
163 பழனிசாமி, திரு. சு. ..	மேட்டுப்பாளையம்.
164 பழனிசாமி, திரு. சொ. ந. ..	அவினாசி (செ. வ.).

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
165 பழனிமுத்து, திரு. சி. ..	ஆத்தூர்.
166 பழனியப்பன், திரு. அ. ப. ..	ஒட்டன்சத்திரம்.
167 பழனிவேல், திரு. என். ..	பழனி (செ. வ.).
168 பாண்டியன், திரு. பி.எச். ..	சேரன்மாதேவி.
169 பாலகிருஷ்ணன், திரு. சோ.	முதுகுளத்தூர்.
170 பாலகுரு, திரு. வெ. ..	சோழவந்தான்.
171 பாலன், திரு. சு.	பெரம்பூர், சென்னை (செ. வ.).
172 பாலாஜி, திரு. க. ..	காஞ்சீபுரம்.
173 பாலுசாமி, திரு. அ. ..	நிலக்கோட்டை (செ. வ. .
174 புருஷோத்தமன், திரு. த. ..	சைதாப்பேட்டை, சென்னை.
175 புஸ்பராஜு, திரு. த. ..	ஆலங்குடி.
176 பெரியசாமி, திரு. மொ. ..	மங்களூர் (செ. வ.).
177 பெரியசாமி, திரு. ரா. ..	உப்பிலியாபுரம்.
178 பெரியசாமி, திரு. டி. பி. எம்.	மதுரை மேற்கு.
179 பெருமாள், திரு. என். ..	வரகூர் (செ. வ.).
180 பெருமாள், திரு. ரா. கு. ..	விளாத்திகுளம்.
181 பொன்னுசாமி, டாக்டர், ஏ.	பெருந்துறை.
182 பொன்னுரங்கம், திரு. ப. ..	இராயபுரம். சென்னை
183 பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்). ..	திருச்செங்கோடு.
184 மணிமாறன், திரு. மா. ..	நன்னிலம் (செ.வ.).
185 மணிமாறன், திரு. ஆர். ..	திருப்பூர்.
186 மணிமுடி, திரு. எஸ். ..	எழும்பூர், சென்னை (செ.வ.).
187 மருதாசலம், திரு. க. ..	தொண்டாமுத்தூர்.
188 மனோகரன், மாண்புமிகு திரு. கி. (அமைச்சர்). ..	பாளையங்கோட்டை.
189 மாணிக்கம், திரு. சி. ..	திருச்சிராப்பள்ளி-1.
190 மார்க்கபந்து, திரு. ரா. ..	அணைக்கட்டு.
191 மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் ..	(நியமன உறுப்பினர்).
192 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். ..	பட்டுக்கோட்டை.
193 மீனாட்சிசுந்தரம், திரு. மா. ..	வேதாரண்யம்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
194 முத்துசாமி, திரு. பா. க. சி.	தர்மபுரி.
195 முத்துசாமி, திரு. சு. ..	ஈரோடு.
196 முத்துசாமி கரையாளர், திரு. சு.	தென்காசி.
197 முத்தையா, திரு. இரா. ..	சேடப்பட்டி.
198 முருகேசன், திரு. கூ. ச. ..	திருவரம்பூர்.
199 முனிசாமி, திரு. பொ. ..	வந்தவாசி. (செ.வ.).
200 முனிரத்தினம், திரு. இரா.ச. ..	கும்மிடிபூண்டி.
201 முனு ஆதி, மாண்புமிகு திரு. .. (பேரவைத் தலைவர்)	தாம்பரம், சென்னை.
202 மூக்கையா தேவர், திரு. பி. கே.	உசிலம்பட்டி.
203 யூசுப், திரு. யா. சை. மு. ..	ராதாபுரம்.
204 ரகுமான்கான், திரு. அ. ..	சேப்பாக்கம், சென்னை.
205 ரகுராமன், திரு. வீ. ..	புவனகிரி.
206 ரகோத்துமன், திரு. கோ. ..	முகையூர்.
207 ரமணி, திரு. கு. ..	கோயம்புத்தூர் (கிழக்கு)
208 ரசாக், திரு. எம். எம். ஏ.	கடையநல்லூர்.
209 ராமசாமி, திரு. கோ. ..	சிவகாசி.
210 ராமசாமி, திரு. து. ..	வெள்ளக்கோயில்.
211 ராமதாஸ், திரு. பி. ..	போடிநாயக்கனூர்.
212 ராமநாதன், திரு. சி. ..	விருத்தாசலம்.
213 ராமலிங்கம், திரு. ஏ. ..	காட்டுமன்னார்கோவில் (செ. வ.).
214 ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு.	புதுக்கோட்டை.
215 ராஜு, திரு. செ. மெ. ..	தலைவாசல் (செ. வ.).
216 ராஜு, திரு. வி. கே. ..	அரக்கோணம் (செ. வ.).
217 லட்சுமிநாராயணன், திரு. என்.	மதுரை மத்திய தொகுதி.
218 லத்தீப், திரு. எம். ஏ. ..	வாணியம்பாடி.
219 வடிவேல், திரு. கு. ..	கரூர்.
220 வரதராஜன், திரு. என். .	திண்டுக்கல்.
221 வரதராஜன், திரு. சௌ. வே.	சேலம்-1.
222 வாசன், திரு. சீ. மு. ..	வேடசந்தூர்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
223 வின்செண்ட், திரு. எம். .. (அமைச்சரின் பேரவை செயலர்)	நாகர்கோவில்.
224 விஜயராகவன், திரு. பொ.	கிள்ளியூர்.
225 வேங்கா கவுண்டர், திரு. பி.	வீரபாண்டி.
226 வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா.	சிங்காநல்லூர்.
227 வெள்ளைச்சாமி, திரு. ஆ. .. (அமைச்சரின் பேரவை செயலர்.)	ஆத்தூர்.
228 வேணுகோபால், திரு. த. ..	தண்டராம்பட்டு.
229 வேலுச்சாமி, திரு. ஓ. சோ.	ஒட்டபிடாரம் (செ. வ.).
230 ஜகதீசன், திரு. ஆனூர் பு.கோ. .. (அமைச்சரின் பேரவை செயலர்.)	செங்கல்பட்டு
231 ஜான் வின்செண்ட், திரு. மு.	நாங்குனேரி.
232 ஜெபமணி, திரு. ர.	சாத்தான்குளம்.
233 ஜெயராமன், திரு. வே. இரா.	தேனி.
234 ஜெயவேலு, திரு. எம்.ஏ. .. (அமைச்சரின் பேரவை செயலர்.)	காட்பாடி.
235 ஜேம்ஸ், திரு. ஜே.	திருவட்டாறு.

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்—அமைச்சர்.
3. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் —அமைச்சர்.
5. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.
6. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்.
7. திரு. வி.பி. இராமன்—தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின் மூன்றாவது கூட்டத்தொடர்.

1978 செப்டம்பர் 9 முதல் 14 வரை

(தொகுதி 20 — எண்கள் 1 முதல் 5 வரை)

பக்கம்

'அ'

அகதிகள்— 170
இலங்கையிலிருந்து வந்தவர்கள். 173
கொட்டப்பட்டியில் கட்டடங்கள். 612
தேவலாவில் நிலமற்ற இலங்கைத் தமிழர்கள். 770—772
மறுவாழ்வு ஆலோசனைக் குழு (ஸ்ரீலங்கா).

அண்ணாமலை, திரு. எம்.— 537
அரிசனங்கள், இலவச வீடுகள். 857
காட்டு நிலங்கள்-பயிர்கள் பாதுகாப்புத் திட்டம்.
கால்நடை—தர்மபுரி மாவட்டத்தில் ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள். 857
798
சலவைத் துறைகள்—தருமபுரி மாவட்டத்தில் அமைத்தல். 804
தொழிற்கூடங்கள், அரூர் வட்டத்தில் அமைத்தல். 536—537
நில உச்சவரம்புச் சட்டம், உபரி நிலம்.
பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 926
1978. 804
பாலம், வாணியாற்றின் குறுக்கே. 140—141
மகனூர்பட்டி ஊராட்சி சாலைகள்.
மணிமுத்தாறு நீர்ப்பிடிப் பகுதிகள், மழை பொய்த்து விட்டமை (ப. ஈ.). 573
மருத்துவமனை—ஓசூரில் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் உருவாக்குதல். 798

அ—தொடர்ச்சி.

	பக்கம்
அண்ணாமலை, திரு. எம்.—தொடர்ச்சி.	
மேட்டூர் கெமிகல் கம்பெனிகளின் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு (க. ஈ.).	46, 48
அப்துல் லத்தீப், திரு. கி.—	
கால்நடை அலுவலர்கள் பயிற்சிக்கு அயல்நாடு அனுப்பப் பெறுதல்.	794
நீதிமன்றங்கள்—விருத்தாசலத்திலுள்ள மாவட்ட முன்சீப் கோர்ட் கட்டிடத்தைப் பழுது பார்த்தல்.	795
அப்புனு கவுண்டர், திரு. கா.—	
அரிசன நலப்பணிகள், தருமபுரி மாவட்டம்	160
காவல் நிலையம், தர்மபுரி.	522
அம்பிகாபதி, திரு. மு.—	
அத்தியாவசியப் பணிகளை நிர்வகிக்கும் அவசரச் சட்டம், 1978, நிராகரிக்கக் கோருதல் (த.தீ.).	360—361
அரிசனங்கள்—தஞ்சை மாவட்டத்தில் வழங்கப்பட்ட குடி மனைப் பட்டாக்கள்.	774
ஆளுநர் உரை (தீ.).	677
இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978.	634—636
இறவைப் பாசனம், திருமேனி ஏரி, மன்னார்குடி தாலுக்கா.	527
உபரி நிலங்கள், தேனாஞ்சேரி கிராமம்.	166—167
உள்ளாட்சி—மன்னார்குடி பேருந்து நிலையத்தில் பிரயாணி கள் தங்கும் அறைகள் கட்டுதல்.	829
உள்ளாட்சி—மன்னார்குடி பேருந்து நிலையத்திற்கு எதிரில் புதிய கடைகள்.	829
உறுப்பினர்கள் 41. 42, 184 ஆகிய விதிகளின்கீழ் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து (த. கோ.).	863, 877
கல்லணையிலிருந்து பட்டுக்கோட்டை கடைமடைப் பகுதி களுக்கு தண்ணீர் கிடைக்காமை (க.ஈ.).	897—898
கால்நடை மருத்துவமனைகள், எண்ணிக்கை.	167

அ—தொடர்ச்சி.

	பக்கம்
அம்பிகாபதி, திரு. மு.—தொடர்ச்சி.	
குறுவைப் பயிர், பூச்சி தாக்குதல், தஞ்சை மாவட்டம் (க.ஈ.)	565, 567
கைத்தறி—தமிழ்நாட்டில் நெசவுத் தொழிலில் ஈடுபட் டுள்ளோர்.	763—764
சுருட்டு, பீடி தொழிலாளர்கள், எண்ணிக்கை.	165
சென்னை-மகாபலிபுரம் பகுதி, ஹைட்ரோலாஜிகல் சர்வே.	505
தொழிலாளர்கள்—பணைமேடு பஞ்சாலைத் தொழிலாளர்கள்.	827—828
நகராட்சிமன்றக் காவலர்கள், ஊதியம்	167
நீர்ப்பாசனம்—மன்னார்குடி வட்டத்தில் பாசன வசதிகள்.	825—826
நீர்ப்பாசனம்—வடுவூர் ஏரியை ஆழப்படுத்தி பராமரித்தல்	826
நெல் கொள்முதல், செலவு.	527
பல்லவன் பொறியியற் கழகம், பி.இ., பட்டதாரிகள்.	533
பள்ளிகள்—	
புள்ளிமங்கலம் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்.	762
ராஜாஜிகட்டளை கிராமத்திற்கு கட்டடம்.	139—140
பாடப் புத்தகங்களிலிருந்து சில பகுதிகள் நீக்கப் பெற் றுள்ளது (க. ஈ.).	882
புகையிலை, கொள்முதல் செய்யாத நிலை, வேதாரண்யம் பகுதி (க. ஈ.).	557, 560
புயல்—தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்ட சேதங்கள்.	739
பேரவை நிகழ்ச்சிபற்றி வானொலி அறிவிப்பு (ஒ.பி.)	537
பொறியியல் கழகங்கள், பணியாளர்கள்.	533
மதிப்பீட்டு அதிகாரிகள், பிரதம வங்கி.	492—493
மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978.	965—968
மருத்துவத் துறை—செயற்கை அவயவங்கள் பொருத்து நிலையப் பணியாளர்களை நிரந்தரமாக்குதல்.	803
முதல் நிலைக் காவலர்கள், தேர்வு.	529
விவசாயம்—நிலக்கடலை பயிரிடுவோருக்கு அரசு உதவிகள்.	790—791
வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தி அமைத்தல் சட்ட முன்வடிவு, 1978.	935

பக்கம்

அ—தொடர்ச்சி.

அமிர்தராஜ், திரு. இரா.—

கிராமக் கைத்தொழில்—உடன்குடியில் பனை வெல்லம், சர்க்கரை, கற்கண்டு செய்முறை பயிற்சி நிலையம். 853

குலசேகரன்பட்டணம் பேரூராட்சி, பிரித்தல். 141

கூட்டுறவு—உடன்குடி விவசாய நாணயக் கடன் சங்கத் தலைவர் மீது குற்றச்சாட்டு. 761

கிராமக் கைத்தொழில்—

திருச்செந்தூரில் பனை ஓலைப் பொருட்கள் பயிற்சி நிலையங்கள். 853—854

நீர்ப்பாசனம்—கடம்பாகுளம் மராமத்து. 854

வெற்றிலை விவசாயம், கடன், உடன்குடி ஊராட்சி ஒன்றியப் பகுதி. 532—533

அர்ச்சுனன், திரு. வீ.—

கல்வி—ஆரணியில் தொழில் கல்விக் கூடம் அமைத்தல். 757

நீர்ப்பாசனம்—தச்சூர் ஆற்றிலிருந்து அகாம் ஏரிக்கு கால்வாய் வெட்டுதல். 820

போக்குவரத்து—ஆரணி பேருந்து நிலைய இடமாற்றம். 722

அரங்கசாமி, திரு. க.—

கால்நடை—உதகை தொகுதி, மேலூர் கிராமத்தில் மருத்துவ மனை. 767

வாடகை கார்கள்—குன்னூரில் நிறுத்த இடம். 831

வீடுகள்—நீலகிரி மாவட்டத்தில் அரசு ஊழியர்களுக்கு. 766

அரங்கநாதன், திரு. மு.—

அத்தியாவசியப் பணிகளை நிர்வகிக்கும் அவசரச் சட்டம், 1978, நிராகரிக்கக் கோருதல் (த.தீ.). 345

ஆளுநர் உரை (தீ.). 456, 456, 651

உறுப்பினர்கள் 41, 42, 184 ஆகிய விதிகளின் கீழ் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து (த.கோ.). 876

காவலர் குடியிருப்புகள், ஐஸ் ஹவுஸ். 524—525

சித்த வைத்தியர்கள், பதிவு செய்தல். 530

அ—தொடர்ச்சி.

பக்கம்

அரங்கநாதன், திரு. மு.—தொடர்ச்சி.

[illegible]னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1978. 402—406

மீனளம்—மீன்பிடி டிராலர்கள் வாங்குதல். 772—773

அரங்கநாயகம், திரு. செ.—

அபிஷேகபுரம் பகுதி தனியார் பள்ளி நிர்வாக நிலை (க.ஈ.அ.) 337—338, 339, 340

ஆசிரியர் கோரிக்கை, முடிவுகள் (அ.). 546—[illegible]

ஆ.மா.கோ. (முதல்), 1978-79 (பொ.வி.) 212, 213

பாடநூலில் மார்க்சியத் தத்துவம் எழுதப் பெற்றுள்ள தன்மை குறித்து (ஓ.தீ.). 332—333

பாடப் புத்தகங்களிலிருந்து சில பகுதிகள் நீக்கப் பெற்றுள்ளது (க. ஈ.அ.). 883—884, 885, 886

பார்வையாளர்கள் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து (தீ.). 410

மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) சட்ட முன்வடிவு, 1978. 603, 619—620, 621, 622, 623

அரங்கம்—

கலைவாணர் அரங்கம், ஒரு நாளைய சராசரி வருமானம். 783

அரிசனங்கள்—

அரயபுரம் குடியிருப்பு மின்சக்தி வழங்கல். 31

ஆனந்தல் குடியிருப்பில் தெரு விளக்குகள். 161

இலவச வீடுகள். 537

கள்ளக்குறிச்சி வட்டத்தில் குடியிருப்பு மனை வழங்கல். 803

கறவை மாடு வாங்குவதற்கு கூட்டுறவுச் சங்க மானியத் தொகை. 815

தஞ்சை மாவட்டத்தில் வழங்கப்பட்ட குடிமனைப் பட்டாக்கள். 774

தருமபுரி மாவட்டத்தில் நலப் பணிகள். 160

மனைப் பட்டாக்கள் வழங்கல். 773—774

வீட்டுமனைப் பட்டா, அரிசனங்களுக்கு, கருங்குளம் கிராமம். 531

வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல். 798—802

பக்கம்

அ—தொடர்ச்சி.

அரை மணி விவாதம்—

முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி 1977-ல் தேர்தல் பிரசாரத்திற்காக வந்தபோது ஏற்பட்ட செலவு குறித்து. 254—266

அலுவலகங்கள்—

தருமபுரி மாவட்டத்தில் சூப்பிரெண்டிங் என்ஜினியர் அலுவலகம் அமைத்தல். 166

வேலூரில் புதிய கட்டிடங்கள் கட்டுதல். 812

அரசு மற்றும் உள்ளாட்சி மன்ற ஊழியர்கள், மருத்துவ வசதி. 518

சாலை ஆய்வாளர்கள், மாதாந்திரப் பயணப்படி. 164

அழகர்சாமி, திரு. சோ.—

ஆளுநர் உரை (தீ.). 65—75

உறுப்பினர்கள் 41, 42, 184 ஆகிய விதிகளின் கீழ் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து (த. கோ.). 860—861, 862, 863, 864, 909, 910, 911

கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு, 1978. 951—953

கோட்டாறங்குளம், சிவந்திபுரம் இனாம் கிராமங்கள், மேல்வாரம் வசூலித்தல். 126—127

பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு, 1978. 959—960

வினா நேரம் நீடிக்கப் பெறாதது குறித்து (த.கோ.). 319

வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின் சக்தி வழங்கல் குறித்த கட்டண விதங்களைத் திருத்தி அமைத்தல் சட்ட முன்வடிவு, 1978. 934

வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்தம், தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு, 1978. 372—374

அறிக்கை அளித்தல்—

வினா எண் 285 துணை வினாவிற்கான கூட்டுறவு அமைச்சரின் திருத்தப்பட்ட பதில். 42

—தொடர்ச்சி.

பக்கம்

அன்பழகன், திரு. க.—

அத்தியாவசியப் பணிகளை நிர்வகிக்கும் அவசரச் சட்டம், 1978, நிராகரிக்கக் கோருதல் (த. தீ.). 365

து.மா.கோ. (முதல்), 1978-79 (பொ.வி.). 206—228

மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத துணை வினா அனுமதிப்பது குறித்து (ஏ. பி.). 93

"ஆ"

ஆசிரியர்கள்—

கல்லூரி, யு. ஜி. சி. ஸ்கேல், கூடுதல் செலவு. 501—502

கோரிக்கை, முடிவுகள் (அ.). 546—552

மருத்துவப் பட்ட மேற்படிப்பு வகுப்புகள், நியமித்தல். 34

மலைப்படியும் குளிர் காலப்படியும் வழங்கல் "பச்சைக் கோமாச்சி மலை" (கம்பம் வட்டம்). 137

ஆண்டி அம்பலம், திரு. மெ.—

கோட்டாறங்குளம், சிவந்திபுரம் இனாம் கிராமங்கள், மேல்வாரம் வசூலித்தல். 126—127

தியணைப்பு—நத்தத்தில் நிரந்தர நிலையக் கட்டிடம் அமைத்தல். 781

நிலம் ஒப்படை செய்யப்பட்ட நிலங்களின் மேம்பாட்டிற்கு மானியம் 753—754

விக்கிரமசிங்கபுரம் கூட்டுறவு நாணயச் சங்கம், பணம் கையாடல். 286

வீடுகள், ஆதி ஆந்திர அரிசன மக்களுக்கு குடிசை மாற்று வாரியம் மூலமாக. 842

ஆதிவாசிகள்—

கூடலூர் தொகுதி, சிறியூர் கிராமம். 765—766

ஆராய்ச்சிக் கூடங்கள்—

கிண்டி கிங் நிறுவனத்தை விரிவுபடுத்துதல். 159

ஆ—தொடர்ச்சி.

பக்கம்

ஆலயங்கள்—

அர்ச்சகர்கள் சட்டத்தை செல்லுபடியாக்கும் நடவடிக்கை. 728—729
உயிர்ப்பலி. 133—136
நிலக்குத்தகை வழக்குகள், கோவை. 494—496

ஆலைகள்—

அரியூர் நூற்பாலை. 837
அவினாசி வட்ட நூற்பாலைகள், அரசு ஏற்று நடத்துதல் 316
கரூர் நூற்பாலை, விரிவுபடுத்துதல். 820
சர்க்கரை ஆலைகள். 739—741
பழனி தாலூகாவில் உள்ள பஞ்சாலைகள் 752—753
மாயூரம், மணல் மேட்டிலுள்ள நூற்பாலை. 828

ஆளுநர் உரை—

நிறை (தீ). 695

ஆறுமுகம், திரு. சி.—

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1978. 590—592
பேரவை நிகழ்ச்சி பற்றி வானொலி அறிவிப்பு (ஒ.பி.). 538

ஆறுமுகம், திரு. எச். ஜி.—

தொழிற்சாலை, ஊத்தங்கரை தாலூகாவில் பனஞ் சர்க்கரை ஆலை. 843
நீர்ப்பாசனம்—பெருகொண்டாபுரம் ஏரிக்கு வரத்துக் கால்வாய் வெட்டல். 843
மின் இணைப்பு, பம்பு செட்டுகளுக்கு, தருமபுரி மாவட்டம் 531

ஆறுமுகம், திரு. த.—

சாலை அரியலூர்—செந்துறை சாலை. 746
நீர்ப்பாசனம்—புள்ளம்பாடி வாய்க்காலில் இருந்து கிளை வாய்க்கால். 805

ஆ—தொடர்ச்சி.

பக்கம்

ஆறுமுகம், திரு. மு.—

ஆளுநர் உரை. 50—55
இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன் வடிவு, 1978. 623—624
காசிமேடு (வட சென்னை) பகுதியிலுள்ள குடிசைகள் கடலரிப்பால் பாதிக்கப் பெற்றுள்ளமை (க. ஈ.). 335—336
கால்நடை, தஞ்சை அருகிலுள்ள ஈச்சங்கோட்டை பண்ணையில் உறை-விந்து சேகரிப்பு நிலையம். 854—855
சர்க்கஸ் தொழிலாளர் நலச் சட்டங்கள் அமல் செய்தல். 305—306
தொழில், தொழிற்சாலை மையங்கள் ஏற்படுத்தல்' 793
மகாபலிபுரம் கடற்கரைப் பகுதிகளில் கடல் அரிப்பு (க.ஈ.). 44, 45—46
மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) சட்ட முன்வடிவு, 1978. 618—619
மருத்துவம், திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள மூளைக் காய்ச்சல் பற்றி ஆராய அறிஞர் குழு. 794—795
மின் திட்டம், கோவை மாவட்டம் 521
ஜனதா விடுதி, சென்னை. 296—300

"இ"

இயற்கை சீற்றங்கள்—

வெள்ளம்—
சென்னையில் மழையினால் பாதிக்கப்பட்ட குடிசைகள், உதவி. 158

இரங்கல் குறிப்பு—

இராமலிங்க ரெட்டியார் திரு. டி. [illegible]

இராகவானந்தம், திரு. எஸ்.—

அத்தியாவசியப் பணிகளை நிர்வகிக்கும் அவசரச் சட்டம், 1978 நிராகரிக்கக் கோருதல் (த. தீ.). 344, 347, 349
இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவன தொழில் தகராறு குறித்து (க.ஈ.அ.). 887—888, 889—890 891.

இராகவானந்தம், திரு. எஸ்.—தொடர்ச்சி. பக்கம்

உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978. 342

உறுப்பினர்கள் 41, 42, 184 ஆகிய விதிகளின் கீழ் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து (த. கோ.). 907, 908

சென்னைப் பெருநகர போக்குவரத்துத் திட்ட அமைப்பின் சொத்துக் குறிப்புகள் நிராகரிக்கப் பெற்றதாகச் சொல்லப் பெறுவது (க. ஈ. அ.). 891—894, 895

இராசமாணிக்கம், திரு. இரெ.—

ஆயாபுரம் அரிசன குடியிருப்பு மின்சக்தி வழங்குதல். 31

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி லிப்டுகள் சரிவர இயங்காமை (த.கோ.). 36

பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 1978 913—916

பள்ளிகள்—உயர்நிலைப் பள்ளி (பெண்கள்), குத்தாலத்தில் துவங்குதல். 829—830

இராசரத்தினம், திரு. து.—

உறுப்பினர்கள் 41, 42, 184 ஆகிய விதிகளின்கீழ் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து (த.கோ.). 870, 871, 872, 874, 875

இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—

ஆளுநர் உரை (இ) 411—483, 639—694

இராமச்சந்திரன், திரு. ச.—

அண்ணா போக்குவரத்துத் தொழிலாளர்கள் இடமாற்றம் செய்யப்படுவது குறித்து (க. ஈ. அ.). 902, 903, 904

அத்தியாவசியப் பணிகளை நிர்வகிக்கும் அவசரச் சட்டம், 1978 நிராகரிக்கக் கோருதல் (த.நீ.). 350

மகாபலிபுரம் கடற்கரைப் பகுதிகளில் கடல் அரிப்பு (க. ஈ. அ.). 44—45, 46

வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தி அமைத்தல் சட்ட முன்வடிவு, 1978. 342, 935—938, 939—940,

இராமச்சந்திரன், திரு. செஞ்சி. ந.—

உதவித் தொகை, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் முதியோர் பெறுவது. 737

கல்லூரிகள், அரசுக் கல்லூரிகளில் மாணவர் ஆசிரியர் விகிதாசாரம். 815—816

சாலை, கரும்பு உற்பத்தி நிதியிலிருந்து பணிகள். 761

தனியார் பள்ளி, கீழ்மாலியங்கை, செ. ஆ. மாவட்டம் 521

பாலம். தொண்டி ஆற்றின் குறுக்கே. 757

மேல் சித்தாமூர் ஆரம்ப சுகாதார நிலையம், கட்டடம் கட்டுதல். 314—315

இராமசாமி, திரு. எஸ். ஜே.—

அரிசனங்கள்—வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கல். 798—802

ஆளுநர் உரை (தீ.). 448

சாலை—.

சாலை, வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள சாலை உருளைகள். 314—315

கூ. மா. கோ. (முதல்), 1978-79, (பொ. வி.). 193—196

நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம், கைப்பற்றப்பட்ட நிலங்கள். 406—497

பட்டாளம் திருவலம் கூட்டுறவு—சர்க்கரை ஆலைகள் கரும்பு வாங்கிய விலை. 1—6

பாதாள சாக்கடைத் திட்டம். காஞ்சிபுரம். 174—175

பாலங்கள்—வடாற்காடு மாவட்டத்தில் வெள்ள நிவாரணப் பணியின்கீழ் போடப்பட்டவை. 787—782

பாதாளச்சாக்கடைத் திட்டம், காஞ்சிபுரம். 174—175

பக்கம்

இ—தொடர்ச்சி.

இராமசாமி, திரு. எஸ். ஜே.—தொடர்ச்சி.

போக்குவரத்து, தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம் 789—790

மாநில மருத்துவக் கல்லூரி, பட்ட மேற்படிப்பு 520

மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், விவரங்கள் 171

வெள்ள நிவாரணப் பணி—வட ஆற்காடு மாவட்டத்தில் சாலை. 749

இராமசாமி, திரு. த.—

சக்கரக் கோட்டை கண்மாய் 149—150

இராமலிங்கம், திரு. செ.—

குத்தகை நிலம் வாங்க கடன் பெற்றவர்கள் 174

இராஜா முகமது, திரு. கே.—

ஊரகத் தொழில் துறை அமைச்சர் மீது (உ.பி.). 324, (325—329, 330

இளங்கோவன், திரு. கோ.—

அபிஷேகபுரம் பகுதி தனியார் பள்ளி நிர்வாக நிலை (க.ஈ.). 337, 338—339

கல்லணை கிளிக்கூண்டில் நீர்க்கசிவு (க.ஈ.). 569

நீர்ப்பாசனம், கிளிக்கூடு அருகில் காவிரியில் மணற் போக்கி அமைத்தல். 844

முதலைகள் சரணாலயம், கல்லணை, கிளிக்கூடு கிராமம். 498—499

ராஜா மிராஸ்தார் மருத்துவமனை, தஞ்சை, படுக்கைகள். 518—519

"ஈ"

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—

இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவன தொழில் தகராறு குறித்து (க.ஈ.). 890

கால்நடை, பாப்பான் குளம் பராமரிப்பு நிலையம். 768

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்)

பக்கம்

ஈ—தொடர்ச்சி.

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—தொடர்ச்சி.

திருத்தச் சட்ட முன்வடிவு, 1978. 584—585

கூட்டுறவு, தாராசுரம் பட்டு (கைத்தறி) உற்பத்தி விற்பனை சங்கம். 786

நிலங்கள், கோடாரங்குளம் கிராமத்திலுள்ள இனாம் நிலங்கள் மாற்றம். 767

மணிமுத்தாறு நீர்ப்பிடிப் பகுதிகள், மழை பொய்த்து விட்டமை (க.ஈ.). 570, 572, 573

"உ"

உச்சி, திரு. கே.—

அகதிகள்—தேவலாவில் நிலமற்ற இலங்கைத் தமிழர்கள் 812

ஆதிவாசிகள், கூடலூர் தொகுதி, சிரியூர் கிராமம். 765—766

குடிநீர்—மாவனள்ளா கிராம ஆதி வாசிகளுக்கு வழங்கல் 830

கூட்டுறவுக் கடன், மசினக்குடி விவசாயிகளுக்கு, நீ. மாவட்டம். 526—527

பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள், நீலகிரி மாவட்டம் 517—518

புதிய காவல் நிலையங்கள், நீலகிரி மாவட்டம் 523

மருத்துவம்—ஐ. ஏ. எஸ். அதிகாரிகளுக்கு வசதி 784

மலைத் தோட்டத் தொழிலாளர், ஊதிய நிர்ணயம் 28—31

உணவு தானியங்கள்—

நெல் கொள்முதல், செலவு 527

பயறு, ஆய்வு நிலையம் 529

உத்திராபதி, திரு. பொ.—

உள்ளாட்சி, திருத்துறைப்பூண்டி பேரூராட்சியினை நகராட்சியாக ஆக்குதல். 726—727

உறுப்பினர் கைது பற்றி செய்து குறித்து (த.கோ.) 546

து.மா.கோ. (முதல்), 1978-79 (பொ.வி.). 201—206

பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1976 317

பக்கம்

உ—தொடர்ச்சி.

உத்திராபதி, திரு. பெ.—தொடர்ச்சி.

உதவித் தொகை, திருமயம் தாலுக்காவில் முதியோர் பெறுவது. 747—738

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் முதியோர் பெறுவது 737

உபரி நிலங்கள், நிலங்கள், மதுரை மாவட்டத்தில் எடுத்தல் உபரி நிலங்கள் எடுத்தல். 732—735

உமாநாத், திரு. ஆர்.—

ஆளுநர் உரை (தீ.). 417, 418, 442, 480, 650

இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவன தொழில் தகராறு குறித்து (க. ஈ.). 889

உறுப்பினர்கள் 41, 42, 184 ஆகிய விதிகளின் கீழ் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து (த. கோ.) 862, 864, 862, 864, 907—908

எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பிற்கு அடிக்கப்பெற்ற மணியின் ஓசை குறித்து (ஒ. பி.). 604

கல்லூரி, திருச்சி ரீஜினல் பொறியியற் கல்லூரிக்கு காஞ்சி சங்கராச்சாரியார் வருகை. 788

குடும்ப நலத் திட்டம், அறுவை சிகிச்சைக்கு ஆள் கொண்டு வருதல், கிராம அதிகாரிகளிடையே "கோட்டா" முறை. 712—715

பாட நூலில் மார்க்சிய தத்துவம் எழுதப்பெற்றுள்ள தன்மை குறித்து (ஒ. தீ.). 331—332

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை (தீ). 116—117

முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி 1977-ல் தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்தபோது ஏற்பட்ட செலவு குறித்து (அ. வி.). 256—260

மூலக் கேள்விக்கு தொடர்பில்லாத துணை வினா அனுமதிப்பது குறித்து (ஒ.பி.) 91, 92

பக்கம்

உ—தொடர்ச்சி.

உரிமைச் பிரச்சினை—

பார்க்க—தலைவர்—தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும். 37 41

உள்ளாட்சிகள்—

அவிநாசி ஒன்றியம்—பிரித்தல். 303

உள்ளாட்சிகள்—

ஒன்றியங்களில் கிராமப் பணிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கல் 769

கலைக்கப்பட்ட ஊராட்சி மன்றங்கள் எண்ணிக்கை 850

காரைக்குடி, நகராட்சி அலுவலகக் கட்டிடம் கட்டுதல் 23—24

குலசேகரன்பட்டிணம் பேரூராட்சி, பிரித்தல் 141

சிதம்பரம் வட்டம் பாளையங்கோட்டையை நகரப் பஞ்சாயத்தாக்குதல். 633

சென்னை மாநகரத்தில் வீட்டு கதவுகளில் வர்ணம் பூசி இலக்கம் பொறிக்க ஆன செலவு. 702—703

சென்னை மாநகராட்சி, சுற்றியுள்ள ஊராட்சிகளை இணைத்தல். 24—25

சென்னை மாநகராட்சியில் நிலவரி நிலுவை 128—129

சேலம் நகர் வளர்ச்சித் திட்டம், 304—305

திருத்துறைப்பூண்டி பேரூராட்சியினை நகராட்சியாக ஆக்குதல். 726—727

துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் வீட்டு வரி நிலுவை 826—827

அலையானூர் ஊராட்சிகள் இரண்டாகப் பிரித்தல் 503—504

தூத்துக்குடி நகராட்சி, சில பகுதிகளை இணைத்தல் 504

நகராட்சிமன்றக் காவலர்கள், ஊதியம் 167

பூதப்பாண்டி பேரூராட்சி. சுற்றுவட்டார ஊராட்சிகளைச் சேர்த்து நகரமன்றம் அமைத்தல். 727—728

பேருந்து நிலையம் சோன்மாதேவி, புயலில் பாதிப்பு 23

பேரூராட்சி மன்றங்கள், வருவாய் வளர்ச்சி ஆய்வுக்குழு அறிக்கை. 864

மகளூர்பட்டி சாலைகள் 140—141

மன்னார்குடி பேருந்து நிலையத்தில் பிரயாணிகள் தங்கும் அறைகள் கட்டுதல். 629

மன்னார்குடி பேருந்து நிலையத்திற்கு எதிரில் புதிய கடைகள் 829

மாயூரம் ஒன்றியம், பள்ளிக் கட்டிடங்கள், அரசு மானியம் 529

பக்கம்

எ.

எட்மண்ட், திரு. க. உரொ.—
உறுப்பினர்கள் 41, 42, 184 ஆகிய விதிகளின்கீழ் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து (த.கோ.). 863—864

எட்மண்ட், திரு. க. உரொ.—தொடர்ச்சி.
ஊரகத் தொழில் துறை அமைச்சர் மீது (உ.பி.) 323
எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பிற்கு அடிக்கப்பெற்ற மணியின் ஓசை குறித்து (ஒ.பி.). 604
காசிமேடு (வட சென்னை) பகுதியிலுள்ள குடிசைகள் கடலரிப்பால் பாதிக்கப் பெற்றுள்ளமை (க.எ.அ.). 335—336, 337
பேரவைத் தலைவரைப் பதவியில் இருந்து நீக்கக் கோரும் தனித் தீர்மானம் குறித்து (த.கோ.). 543
வெங்காயம், விலை வீழ்ச்சி (க. ஈ. அ.) 563—565
எண்ணெய்—
சமையல் எண்ணெய், சோளத்திலிருந்து 530
வித்துக்கள்—
வித்துக்கள்—உற்பத்தி 823—825

"ஏ"

ஏடுகள்—
பேரவை முன்வைக்கப் பெற்றவை 119, 267, 483—485, 695—696
ஏற்றுமதி—
காலணிகள், வெளிநாடுகளுக்கு 843—844

ஒ.

ஒத்திவைப்புத் தீர்மானம்—
பார்க்க—தலைவர்—தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்.
ஒழுங்குப் பிரச்சினை—
பார்க்க—தலைவர்—தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்

பக்கம்

"க"

கட்டிடங்கள்—
அம்மாபேட்டை ஒன்றியத் தொடக்கப் பள்ளி 166
உயர்நிலைப் பள்ளிகள், பழுதுபார்த்தல் (வ. ஆ.) 174
காவல் நிலையம், பனக்குடி, புதுப்பித்தல் 522
கொட்டப்பட்டியில் அகதிகளுக்கு 173
சேத்தியாத் தோப்பு, பத்திரப் பதிவு அலுவலகம் 164
திருப்பத்தூர் வணிக வரி அலுவலகம் 171
திருவண்ணாமலையில் நீதிமன்றத்திற்காக 754—755
நெல்லிக்குப்பம் அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி 169
புதுக்குப்பம் உயர்நிலைப்பள்ளி 261
புதுப்பாளையம் உயர்நிலைப்பள்ளி விஞ்ஞானக் கூடம் 171—172
பெரிய கிருஷ்ணாபுரம் அரசினர் உயர்நிலைப் பள்ளி 161
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், திருச்சி, புதிய கட்டடம். 129—131
மேல் பித்தாபுர் ஆரம்ப சுகாதார நிலையம் 314—315
ராஜாஸ் கட்டளை கிராம பள்ளி 139—140
கடல் அரிப்பு—
காசிமேடு (வட சென்னை) பகுதி பாதிக்கப்பட்டுள்ளது குறித்து (க.ஈ.). 335—337
மகாபலிபுரம் கடற்கரைப் பகுதிகள் (க.ஈ.) 44—46
கடன்களும், முன்பணங்களும்—
அரிசனங்களுக்கு தொழில் நடத்த வட்டியில்லாமல் கொடுத்தல். 832—833
குத்தகை நிலம் வாங்க கும்பகோணம் தாலுகா பிரதம நிலவள வங்கியில் கடன் பெற்றவர்கள். 174

	பக்கம்
கணேசன், திரு. எஸ்.—	
அதிகாரிகள் வரிசையில் அமர்ந்திருக்கும் அதிகாரிகளோடு உறுப்பினர்கள் பேசுவது குறித்து (ஒ.பி.).	552
அறநிலையம்—அர்ச்சகர்கள் சட்டத்தை செல்லுபடியாக்கும் நடவடிக்கை.	728—729
கல்லூரிகள்—மாணவர் சேர்க்கை காலத்தில் காலி இடங்கள் பற்றி வானொலியில் அறிவித்தல்.	738
கிண்டி கிங் நிறுவனத்தை விரிவுபடுத்தல்	159
கூட்டுறவு நாணய பாங்குகள் நகை மீது கடன் வழங்கும் தொகையை அதிகரித்தல்.	7—9
கூட்டுறவுச் சங்கங்களில் கணக்குகள் தணிக்கை	287
சேமநிதிக் கணக்கு, மாநில அரசு ஊழியர்களின் கணக்கை மாநில அரசே நிர்வகித்தல்.	736—737
தொழிலாளர் (கள்)—தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு புத்தக வங்கிகள் ஏற்படுத்தல்.	720—721
நிலம்—	
பரசலூர் ஒன்றிய மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக்குதல்.	163
பழனி அருகில் சிறிய விமானதளம் அமைத்தல்	131
மலைத் தோட்டத் தொழிலாளர், ஊதியநிர்ணயம்	28—31
மீனவர் கூட்டுறவுச் சம்மேளனங்கள், இயங்குதல்	16—18
விசைத்தறி கூட்டுறவுச் சங்கம்	530
வெளியீடு, ‘ தமிழரசு ’ ஏடு	778
வேலை வாய்ப்பு தேடித் தரும் அலுவலகங்கள் பதிவு செய்துள்ளவர்கள்.	524
கந்தசாமி, திரு. கே.—	
உறுப்பினர்கள் 41, 42, 184 ஆகிய விதிகளின்கீழ் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து (த.கோ.).	862—868

	பக்கம்
கூட்டுறவுச் சங்கங் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1978.	596
‘ பச்சைக்கோமாச்சிமலை ’ ஆசிரியர்களுக்கு மலைப்படியும் குளிர்காலப்படியும்.	137
பாடப் புத்தகங்களிலிருந்து சில பகுதிகள் நீக்கப் பெற்றுள்ளது (க.ஈ.).	885, 886
மதுரைப் பல்கலைக் கழக (திருத்த, சிறப்பு விதித் துறைகள்) சட்ட முன்வடிவு, 1978.	604, 605 604, 605 611
கந்தசாமி, திரு. கே.—	
வினா நேரம் நீட்டிக்கப் பெறாதது குறித்து (த.கோ.)	326
கபாலி, டி. கே.—	
காவல் நிலையம் சாந்தோம் பகுதிக்கு	523
குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள், மின்வசதி	144
குடிநீர்—சென்னை, நொச்சிக் குப்பம் பகுதியில் குழாய்கள் அமைத்தல்.	831—832
கரியமாணிக்கம், திரு. கரு. இராம.	
குடும்பநலத் திட்டம்—அறுவை சிகிச்சைகள் செய்தல்	709—712
கருணாநிதி, திரு. மு.—	
ஆளுநர் உரை (தீ.)	93—116, 473—474, 482, 660, 681
எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பிற்கு அடிக்கப்பெற்ற மணியில் ஓசை குறித்து (ஒ.பி.).	604
கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1978.	594
சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1978.	407—408
பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை (தீ.).	117

க—தொடர்ச்சி.

	பக்கம்
கல்லூரிகள்—	
அரசுக் கல்லூரிகளில் மாணவர் ஆசிரியர் விகிதாச்சாரம்.	815—816
அரசு கலைக் கல்லூரி, சேத்தியா தோப்பில்	835
திருச்சி ரீஜினல் பொறியியற் கல்லூரிக்கு காஞ்சி சங்கராச்சாரியார் வருகை.	788
மதுரை தொழிற் கல்லூரியில் சூரிய அடுப்பு கண்டு பிடித்தல்	744
மாணவர் சேர்க்கை காலத்தில் காலி இடங்கள் பற்றி வானொலியில் அறிவித்தல்.	738
மாநில மருத்துவக் கல்லூரி, பட்ட மேற்படிப்பு	520
வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மானியம்.	337—839
ஆரணியில் தொழில் கல்விக் கூடம் அமைத்தல்	757
திருப்பூரில் பாலிடெக்னிக் அமைத்தல்	162
தோட்டக்கலை நிலையம்	814
பாடநூலில் மார்க்கிச தத்துவம் எழுதப் பெற்றுள்ள தன்மை குறித்து (ஒ.தீ.).	331—335
மதிய உணவு எடுத்துச் செல்லும் வண்டிகள் எண்ணிக்கை, வட ஆற்காடு மாவட்டம்.	165
மாணவர்களுக்கு அரசு பாடப் புத்தகங்கள் வெளியீடு	849—850
கலப்படம்—	
வழக்குகள்	532
கலை—	
தமிழ்நாட்டில் தெருக்கூத்து பயிற்றுவிக்கும் பயிற்சி நிலையம்	750
கலையரங்கம்—	
தாகூர்-பாரதி கலையரங்கம், நிதி உதவி	502—503
கவன ஈர்ப்புகள்—	
அண்ணா போக்குவரத்துத் தொழிலாளர்கள் இடமாற்றம் செய்யப்படுவது குறித்து.	901—907
அபிஷேகபுரம் பகுதி தனியார் பள்ளி நிர்வாக நிலை	337—340
அருள்மிகு மாகாணநாத சுவாமி ஆலய பகுதியிலுள்ள அரிசன மக்களிடம் வசூல் கெடுபிடி.	881—882
இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவன தொழில் தகராறு குறித்து.	886—891

க—தொடர்ச்சி.

	பக்கம்
கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.	
உளுந்தூர்பேட்டை மயிலாடும்தாங்கல் கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்து.	680
கல்லணை கிளிக்கூண்டில் நீர்க்கசிவு	569—570
கல்லணையிலிருந்து பட்டுக்கோட்டை கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்காமை.	897—898
காசிமேடு (வட சென்னை) பகுதியிலுள்ள குடிசைகள் கடலரிப்பால் பாதிக்கப் பெற்றுள்ளமை.	335—337
குறுவைப் பயிர், பூச்சி தாக்குதல், தஞ்சை மாவட்டம்	565—567
கூட்டுறவுக் கடன்கள் வசூலில் கெடுபிடி	560—562
சிதம்பரம் வட்டத்தில் பாசன மதகுகள் சிலரால் இடிக்கப் பெற்றது குறித்து.	898—901
சென்னைப் பெருநகர போக்குவரத்துத் திட்ட அமைப்பின் செயற் குறிப்புகள் நிராகரிக்கப் பெற்றதாகச் சொல்லப் பெறுவது.	891—895
நெய்யாறு இடது கரை கால்வாயில் தண்ணீர் விடாமை, குமரி மாவட்டம்.	567—568
பாடப் புத்தகங்களிலிருந்து சில பகுதிகள் நீக்கப் பெற்றுள்ளது.	882—886
புகையிலை, கொள்முதல் செய்யாத நிலை, வேதாரண்யம் பகுதி.	557—560
மகாபலிபுரம் கடற்கரைப் பகுதிகளில் கடல் அரிப்பு	44—46
மணிமுத்தாறு நீர்த் தேக்கத்திலிருந்து பெருங்கால் பாசனத்திற்குத் தண்ணீர் விடாமை.	895—897
மணிமுத்தாறு நீர்பிடிப் பகுதிகள், மழை பொய்த்து விட்டமை.	580—574
மேட்டூர் கெமிகல் கம்பெனியின் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு.	46—49
விவசாயக் கூட்டுறவுச் சங்கம், சேனூர், கடன் வழங்கப் படாமை.	556—557

க—தொடர்ச்சி.

பக்கம்

காட்டு வளம்—

அண்ணாமலையார் மலையில் மரம் வளர்ப்பு. 839—849
காட்டு நிலங்களில் விளையும் பயிர்களுக்குப் பாதுகாப்பு திட்டம் 857
விவசாயிகளுக்குக் கடன், கிழக்கு முகவை மாவட்ட நிலவள வங்கிகள். 553—556
வெங்காயம், விலை வீழ்ச்சி 563—565

கள்ள நோட்டுக்கள்—

நாசரேத்தில் கைப்பற்றல் 841
கிண்டியிலுள்ள குழந்தைகள் பூங்காவை பராமரித்தல். 791
செளகுளத்தூர் காட்டுப் பகுதி நிலங்கள். 840

காப்பகங்கள்—

முகையூர் தொகுதியில் குழந்தைகளுக்காக. 762

கால்நடைகள்—

அலுவலர்கள் அயல்நாட்டுப் பயிற்சிக்கு அனுப்புதல். 794
உதகை தொகுதி, மேலூர் கிராமத்தில் மருத்துவமனை. 767
களக்காடு பகுதியில் மேய்ச்சல் இடம். 808—809
கால்நடை உணவு, தாக்கட்டுப்பாடு. 855
கேரளாவிற்குக் கடத்தப்படுதல். 519
கோடியங்கறை பறவைகள் சரணாலயம். 769—770
தஞ்சை அருகிலுள்ள ஈச்சங்கோட்டை பண்ணையில் உறை-விந்து சேமிப்பு நிலையம். 854—855
தருமபுரி மாவட்டத்தில் வறட்சி மீட்புப் பணிகளின் கீழ் ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள் அமைத்தல். 857
தருமபுரி மாவட்டத்தில் வளர்ச்சி. 775—776
தனியார் கோழிப்பண்ணைகளுக்கு அரசு மானியம். 785—786
பாப்பாங்குளம் பராமரிப்பு நிலையம். 768
மருத்துவமனைகள் எண்ணிக்கை. 167
மருதூர் கால்நடை மருத்துவமனைக் கட்டிட நிலைமை. 355
விவசாயிகளுக்கு வழங்கல். 778—779

க—தொடர்ச்சி.

பக்கம்

காவல்—

காவல் நிலையங்கள், வாடகைக் கட்டிடம். 522
காவல் நிலையம், சாந்தோம் பகுதிக்கு. 523
காவல் நிலையம், தர்மபுரி. 522
காவல் நிலையம், வியாசர்பாடி. 523
காவலர் குடியிருப்புகள், ஐஸ் ஹவுஸ். 524—525
காவலர் குடியிருப்பு, ஜம்னாத்தூர், வ.ஆ. மாவட்டம். 525
புதிய காவல் நிலையங்கள், நீலகிரி மாவட்டம். 523
முகையூர் தொகுதியில் துணைக் காவல் நிலையங்கள். 160
முதல் நிலைக் காவலர்கள், தேர்வு. 529
வாளையாறு பகுதியில் லாரி பரிசோதனை. 170

காளிமுத்து, திரு. கா.—

சென்னை மாநகராட்சி. மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1978. 402, 407, 408, 409
மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1978. 835, 396, 397, 398, 399, 400, 401, 402

காளியப்பன், திரு. பொ.—

நகராட்சி, காரைக்குடி அலுவலகக் கட்டிடம் கட்டுதல். 23—24

கிட்டப்பா, திரு. என்.—

அகதிகள் (இலங்கை) மறுவாழ்வு ஆலோசனைக் குழு, 170, 770—772
அரசுத் தரப்பில் நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், நடத்த குழுக்கள் தேர்வு. 131—133
அரிசன மாணவர் விடுதி, கலசப்பாக்கம். 534

பக்கம்

க—தொடர்ச்சி.

கிட்டப்பா, திரு. என்.—தொடர்ச்சி.

அறநிலையம், அர்ச்சகர்கள் சட்டத்தை செல்லுபடியாக்கும் நடவடிக்கை. 728—729
ஆட்டோ ரிக்ஷா கட்டணம் உயர்த்தக் கோரிக்கை. 509—513
ஆயத்த ஆடை தயாரிக்கும் நிலையங்கள், கோ-ஆப்டெக்ஸ் மூலம் நிறுவுதல். 169
உறுப்பினர்கள் 41, 42, 184 ஆகிய விதிகளின் கீழ் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து (த.கோ.). 872, 873. 875
உள்ளாட்சி—சென்னை மாநகரத்தில் வீட்டு கதவுகளில் வர்ணம் பூசி இலக்கம் பொறிக்க ஆன செலவு. 792—793
உள்ளாட்சி, திருத்துறைப்பூண்டி பேரூராட்சியினை நகராட்சியாக ஆக்குதல். 726—727
ஏற்காடு தோட்டத் தொழிலாளர்கள் ஊதியம். 169—170
கடிகாரத் தொழிற்சாலை, உதகை. 517
கல்லூரிகள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவைகளுக்கு மானியம். 837—838
கல்லூரி, மதுரை தொழிற் கல்லூரியில் சூரிய அடுப்பு கண்டுபிடித்தல். 744
கல்வி, தோட்டக் கலை நிலையம். 814
கள்ள நோட்டுக்கள், நாசரேத்தில் கைப்பற்றல். 841
கால்நடை உணவு, தரக் கட்டுப்பாடு. 855
கால்நடை, விவசாயிகளுக்கு வழங்கல். 778—779
கிராம விவசாய வளர்ச்சித் திட்டம், தருமபுரி. 168—169
குடும்ப நலம், அறுவை சிகிச்சை செய்துகொண்ட சிறைவாசிகள். 746
கொட்டம்பட்டியில் அகதிகளுக்கு கட்டடங்கள். 173
கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள், வெளி மாநிலங்களில் அமைத்தல். 169
கோடிக்கரை பறவைகள் சரணாலயம். 769—770

பக்கம்

க—தொடர்ச்சி.

கிட்டப்பா, திரு. என்.—தொடர்ச்சி.
சலவைத் தொழிலாளர், பெயர் மாற்றம். 162
சாலை, மாயூரம் நகரில் பராமரிப்புச் செலவு. 776
சிறைகள், சாகுபடி செய்தல். 160
சிறைகள், பெண் கைதிகளுக்கு புனர்வாழ்வு அளித்தல். 856
சுகாதாரம், சென்னையில் மலேரியா காய்ச்சல். 754
சென்னை மாநகராட்சி, சுற்றியுள்ள ஊராட்சிகளை இணைத்தல். 24—25
தற்கொலைகள், சென்னை நகரம். 534
தாகூர்-பாரதி கலையரங்கம், நிதி உதவி. 502—503
திருச்சி மத்திய சிறை, தப்பியோடிய கைதிகள். 167—168
திரைப்பட விழா, சென்னை. 528
தீண்டாமை, ஒழிப்புக்கான ரோந்துப் படை. 777—778
தோல் பதனிடும் தொழிலாளர்கள், எண்ணிக்கை. 536
நிரந்தரப் பொருட்காட்சிகள், மாவட்டங்களில் அமைத்தல். 168
நுகர்பொருள்—நியாய விலைக் கடைகள், மத்திய அரசால் மாநிலத்தில் அமைத்தல் குறித்து. 791
நூற்பாலை, மாயூரம், மணல் மேட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலை. 828
பயணப்படி, காவல் துறையினருக்கு வழங்குதல். 745
பயறு, ஆய்வு நிலையம். 529
பயிர் காப்புத் திட்டம், செயல்படுத்தல். 311—313
பருத்தி சாகுபடி, தஞ்சை மாவட்டம். 528
பழத்தோட்டம் பண்ணை, வாம்பன். 168
பள்ளிகள்—
உயர்நிலைப் பள்ளிகள், அறிவியல் ஆய்வுக் கூடங்கள். 836
தொழிற் பயிற்சிப் பிரிவு தொடங்குதல். 636
வில்லியநல்லூர் பகுதியில் துவக்குதல். 830
கட்டடங்கள், மாயூரம் ஒன்றியம், அரசு மானியம். 529
பாக்கு சாகுபடி, ஊக்கம். 534
பால், தமிழ்நாடு பால்வளக் கழகத்தின் சித்திரக்குளம் பூத்தில் தவறான எடை உபயோகம். 791

பக்கம்

பால்வளம், ஊத்தங்கரையில் திட்டம் துவங்குதல். 856

பாலிடெக்னிக்ஸ், ஆண்கள் பள்ளியில் பெண்களைச் சேர்த்தல். 797—798

புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள். 141—142

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், நிலக்கரி கொண்டு வருதல். 797

மக்கள் தொகை, சென்னை நகரம். 835

மாயூரம் அரசினர் மருத்துவமனையில் படுக்கைகள் வசதி செய்தல். 838

மீனளம், தரங்கம்பாடியை மீன்பிடி துறைமுகமாக்கல். 730

வரதட்சணை முறை, சட்டத்தை மீறியவர்கள் மீது நடவடிக்கை. 837

வள்ளுவர் கோட்டம், இலக்கியம், பண்பாட்டு நிகழ்ச்சிகள் நடத்த அனுமதி. 294—295

வனத்துறை. கிண்டியிலுள்ள குழந்தைகள் பூங்காவை பராமரித்தல். 731

வாடகை சைக்கிள் ரிக்ஷா, உரிமம். 521

வாளையாறு பகுதியில் லாரி பரிசோதனை. 170

விடுதி, சென்னையில் வேலைபார்க்கும் பெண்கள் தங்க. 782—783

விமானதளம் கன்னியாகுமரியில் அமைத்தல். 32

வெளியீடு 'தமிழரசு' ஏடு. 778

வெற்றிலை கொடிக்கால் சாகுபடி, ஊக்கம். 535

வெற்றிலை சாகுபடி, ஆராய்ச்சி. 535

வெற்றிலை சாகுபடி, ஊக்கம். 535—536

வேளாண்மை, கொல்லைக் கரையில் காபி விளைச்சல். 776—777

வேளாண்மை, நாவலூர் குட்டப்பட்டு கிராமத்திலுள்ள அறிவியல் நிலையத்தில் மாணவர்களுக்கு பயிற்சி. 743—744

கிராமக் கைத்தொழில்—

பண்ருட்டியில் பனைவெல்லம், சர்க்கரை, கற்கண்டு செய்முறை பயிற்சி நிலையம். 853

திருச்செந்தூரில் பனை ஓலைப் பொருட்கள் பயிற்சி நிலையங்கள். 853—854

க—தொடர்ச்சி.

பக்கம்

கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ.—

கூட்டுறவுக் கடன்கள், வசூலில் கெடுபிடி, (க.ஈ.அ.) 560—562

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1978. 578, 592—596, 603

புகையிலை, கொள்முதல் செய்யாத நிலை, வேதாரண்யம் பகுதி (க.ஈ.அ.). 558—560

விவசாயக் கூட்டுறவுச் சங்கம், கீரனூர், கடன் வழங்கப்படாமை (க.ஈ.அ.). 556—567

விவசாயிகளுக்குக் கடன், கிழக்கு முகவை மாவட்ட நிலவள வங்கிகள் (க.ஈ.அ.). 553—556

வினா எண் 385 துணை வினாவிற்கான திருத்தப்பட்ட பதில் (அ). 42

கிருஷ்ணன், திரு. செ.—

பூதப்பாண்டி பேரூராட்சி, சுற்று வட்டார ஊராட்சிகளைச் சேர்த்து நகர்மன்றம் அமைத்தல். 727—723

கிருஷ்ணன், திரு. ரா.—

இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவன தொழில் தகராறு குறித்து (க.ஈ.). 820

கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு, 1978. 947—948

திருநெல்வேலி-தூத்துக்குடி, மின்பிரிவு தொழிலாளர்களுக்குச் சலுகைகள். 282—286

போக்குவரத்துக் கழகப் பணியாளர்களில் தாழ்த்தப்பட்டோர் எண்ணிக்கை. 159

மணிமுத்தாறு நீர்ப்பிடிப் பகுதிகள், மழை பொய்துவிட்டமை (க.ஈ.). 574

மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) சட்ட முன்வடிவு, 1978. 616—618

மருத்துவமனை. ஆரம்ப சுகாதார நிலையம், வாசுதேவநல்லூர்—கட்டிடத்தில் கீறல் ஏற்பட்டிருத்தல் குறித்து. 716—717

வெள்ளத்தால் பாதிக்கப்பெற்றுள்ள வட மாநிலங்களுக்கு உதவுவது குறித்து (த.கோ.). 177

பக்கம்

குடிநீர்—

கடல் நீரை குடிநீராக்கும் திட்டம். 170

காக்காபுரம் கிராம அரிசன குடியிருப்புகளுக்கு வழங்கல். 842

சாவகட்டுபாளையத்தில் குடிநீர் வழங்கல். 758

சிதம்பரம் நகருக்கு குடிநீர் குறையினை நீக்குதல். 721—722

சென்னை, தொச்சிக்குப்பம் பகுதியில் குழாய்கள் அமைத்தல். 831—832

பழனி வட்டத்தில் குடிநீர் வழங்கு திட்டங்கள். 742

புதுப்பாளையம் பேரூராட்சிக்கான திட்டம். 784—785

பொன்னமராவதி ஒன்றியத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள். 758

மாவனள்ளா கிராம ஆதிவாசிகளுக்கு வழங்கல். 830

குடியிருப்புகள்—

அரிசன குடியிருப்புகளுக்குச் சொத்து வரி. 724—725

எடுத்தனூர் அரிசன குடியிருப்பில் தெரு விளக்குகள். 743

குடிசைப் பகுதி வாரிய வீடுகளில் வசிப்போருக்கு உள்ள நிபந்தனைகள், சலுகைகள். 851—853

தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள அரிசனங்களுக்கு. 810—811

பேறுகால மருத்துவ உதவியாளர்களுக்கு அளித்தல். 715—716

குடும்ப நலம்—

அறுவை சிகிச்சைக்கு ஆள் கொண்டு வருதல், கிராம அதிகாரி களிடையே 'கோட்டா முறை'. 712—715

அறுவை சிகிச்சைகள் செய்தல். 709—712

அறுவை சிகிச்சை செய்துகொண்ட சிறைவாசிகள். 746

குழந்தைவேலு, திரு. ப.—

கல்லணை கிளிக்கூண்டில் நீர்க்கசிவு (க.ஈ.அ.). 569—570

கல்லணையிலிருந்து பட்டுக்கோட்டை கடைமடைப் பகுதி களுக்கு தண்ணீர் கிடைக்காமை (க.ஈ.) 897—898

குறுவைப் பயிர், பூச்சி தாக்குதல், தஞ்சை மாவட்டம் (க.ஈ.அ.). 566—567

சிதம்பரம் வட்டத்தில் பாசன மதகுகள் சிலரால் இடிக்கப் பெற்றது குறித்து (க.ஈ.அ.). 898—899, 900—901

பக்கம்

குழந்தைவேலு, திரு. ப.—தொடர்ச்சி.

நெய்யாறு இடது கரை கால்வாயில் தண்ணீர் விடாமை, குமரி மாவட்டம் (க.ஈ.அ.). 567—568

மணிமுத்தாறு நீர்த் தேக்கத்திலிருந்து பெருங்கால் பாசனத் திற்குத் தண்ணீர் விடாமை (க.ஈ.அ.). 895—897

வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்தம், தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு, 1978. 366—367, 377—382, 383, 384

குழுக்கள்—

பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, மதிப்பீட்டுக் குழு } பணிக்காலத்தை நீட்டித்தலும், வெற்றிடங்களை நிரப்புதலும் (தீ.). 341—342

பொது நிறுவனங்கள் குழு, அறிக்கை அளித்தல். 49

கூட்டுறவு—

அர்பன் பாங்குகள் நகை மீது கடன் வழங்கும் தொகையை அதிகரித்தல். 7—9

உடன்குடி விவசாய நாணயக் கடன் சங்கத் தலைவர் மீது குற்றச்சாட்டு. 761

கடன்கள், வசூலில் கெடுபிடி (க.ஈ.). 560—562

சங்கங்கள் கடன் விவசாயிகளுக்கு பணமாக வழங்குதல். 9—11

கடன் வசதி, அண்டம்பள்ளம் விவசாயிகளுக்கு புறக்கணிக்கப் படுவது. 7

காய்கறி விற்பனை, சென்னை. 524

சங்கங்களில் கணக்குகள் தணிக்கை. 287

தாராபுரம் பட்டு (கைத்தறி) உற்பத்தி விற்பனைச் சங்கம். 786

தொழில் கூட்டுறவு வங்கி ஆரம்பித்தல். 717

படாளம், திருவலம் சர்க்கரை ஆலைகள், கரும்பு வாங்கிய விலைவிகிதம். 1—6

பால்வழங்கு சங்கங்கள், நீலகிரி மாவட்டம். 517—518

மதிப்பீட்டு அதிகாரிகள், பிரதம வங்கி. 492—493

மாநில வங்கியின் விருந்தோம்பல் செலவு. 786

மீனவர் சம்மேளனங்கள், இயங்குதல். 16—18

க—தொடர்ச்சி.

பக்கம்

கூட்டுறவு—தொடர்ச்சி.

விக்கிரமசிங்கபுரம் நாணயச் சங்கம், பணம் கையாடல். 286

விவசாயக் கடன் சங்கங்கள், தணிக்கைக் கட்டணம். 287—289

விவசாயக் கடன், மலைக்குடி விவசாயிகளுக்கு, நீலகிரி மாவட்டம். 526—527

விவசாயக் கூட்டுறவுச் சங்கம், கீரனூர், கடன் வழங்கப் படாமை (க.ஈ.). 556—557

— விவசாய விற்பனைச் சங்கத்திற்கு, நவீன அரிசி ஆலை, கள்ளக்குறிச்சி. 491

கேளிக்கை—

திரைப்படங்கள், பரிசு. 531

கைத்தறி—

தமிழ்நாட்டில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர். 763—764

நெசவாளர் முன்னேற்றம், சிறப்புத் திட்டம் 316

கையாடல்—

வடூர் கிராமம், அரசு விதைச் சுத்திகரிப்பு நிலையத்தில், 848—849

கோதண்டராமன், திரு. வி. கே.—

ஆசிரியர்கள், மருத்துவ பட்ட மேற்படிப்பு வகுப்புகள், நியமித்தல். 34

ஆளுநர் உரை (தி.). 480, 481, 483

உறுப்பினர்கள் கொடுத்துள்ள 41, 42, 184 ஆகிய விதிகளின் கீழ் அறிவிப்புகள் குறித்து (த.கோ.). 865

கல்வி—மாணவர்களுக்கு அரசு பாடப் புத்தகங்கள் வெளியீடு. 849—850

கூட்டுறவு, தொழில் கூட்டுறவு வங்கி ஆரம்பித்தல். 717

கைத்தறி நெசவாளர் முன்னேற்றம், சிறப்புத் திட்டம். 316

தொழிலாளர் நல நிதி, செலவு, வடார்காடு மாவட்டம். 504—505

பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு, 1978. 956—957, 958

க—தொடர்ச்சி.

பக்கம்

கோதண்டராமன், திரு. வி. கே.—தொடர்ச்சி

மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1978. 390—391, 400

ரப்பர், கிராம்பு பயிரிடல், திட்டம். 499—500

வக்பு வாரியம், திருத்தியமைத்தல். 152—157

வினா நேரம் நீட்டிக்கப் பெறாதது குறித்து (த.கோ.). 318

கோபாலன், திரு. போ.—

கடிகாரத் தொழிற்சாலை, உதகை. 517

கலை, தமிழ்நாட்டில் தெருக்கூத்து பயிற்றுவிக்கும் பயிற்சி நிலையம். 750

பயணிகள் விடுதி, தொட்டபெட்டா சிகரத்தில் அமைத்தல். 730

பொது நூலகங்களில் பல்கலைக் கழக வெளியீடுகள் வைத்தல். 137—139

கோவிந்தராசன். திரு. சி.—

ஆம்புலன்ஸ் வண்டிகள், கட்டணம். 519

உடுக்குறியிட்ட வினாக்கள், பதிலளிக்கப்பெறுவது குறித்து (ஒ.பி.). 538

நெல்லிக்குப்பம் அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, கட்டடம். 162

நெல்லிக்குப்பம் சர்க்கரை செஸ் நிதியில் இருந்து புதியதாக சாலை அமைத்தல். 33—34

மின் வாரியம், டிரான்ஸ்பார்மர்கள் வாங்குதல். 526

மேட்டூர் கெமிகல் கம்பெனிகளின் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு (க.ஈ.). 49

வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்தம், தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு, 1978. 371—372

ச.

சட்ட முன்வடிவுகள்—

இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978, ஆய்வு (தீ.) 623—638

பிரிவு ஆய்வு 638

நிறைவேற்றல் (தீ.) 639

நிறைவேற்றல்

ச—தொடர்ச்சி.

பக்கம்

சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978, அறிமுகம் 342—343

கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு, 1978—

அறிமுகம் 639

ஆய்வு—தீ 945—955

பிரிவு—ஆய்வு நிறைவேற்றல் 955

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1978.

ஆய்வு-தீ 578—603

பிரிவு-ஆய்வு

நிறைவேற்றல் (தீ.)

சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1978—

அறிமுகம் 878

ஆய்வு-தீ 402—408

பிரிவு-ஆய்வு 409

நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு, 1978—

ஆளுநர் இசைவு 252

அறிமுகம்

ஆய்வு-தீ 575—577

பிரிவு-ஆய்வு 577

நிறைவேற்றல் (தீ.)

நிறைவேற்றம்

பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு, 1978—

அறிமுகம் 253

ஆய்வு 956—961

பிரிவு-ஆய்வு 961

நிறைவேற்றல் 961

ச—தொடர்ச்சி.

பக்கம்

சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

சட்ட முன்வடிவு (கள்)—

பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 1978—

அறிமுகம் 253

ஆய்வு-தீ 912—920

பிரிவு ஆய்வு 920

நிறைவேற்றம் 920

பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1978.

ஆய்வு 970—974

பிரிவு ஆய்வு 974

நிறைவேற்றல் 974

(மதுரை) காமராஜ் பல்கலைக்கழக பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர்கள் குறித்து (அ). 878

மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) சட்ட முன்வடிவு, 1978.

ஆய்வு-தீ. 603—604, 605—670

பிரிவு ஆய்வு 620—622

நிறை (தீ) 623

நிறை

மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1978.

அறிமுகம் 878

ஆய்வு-தீ 385—394, 396—401, 401—402

மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978.

அறிமுகம் 252

ஆய்வு 962—970

பிரிவு ஆய்வு 969—970

நிறைவேற்றல் 970

வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தி அமைத்தல் சட்ட முன்வடிவு, 1978.

ச—தொடர்ச்சி.

பக்கம்

சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

அறிமுகம் 342
ஆய்வு 930—945
பிரிவு ஆய்வு 940—945
நிறைவேற்றல் 945

வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்தம்-தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு, 1978.

அறிமுகம் 878
ஆய்வு-தி 366—382
பிரிவு-ஆய்வு 382—384

சதாசிவம், திரு. செ.—

வெங்காயம், விலை வீழ்ச்சி (க.ஈ.) 563

சமரசம், டாக்டர், கே.—

ஓரப்பம், குந்தாரப்பள்ளிச் சந்தைகள் 163
கால்நடை—தருமபுரி மாவட்டத்தில் வளர்ச்சி 775—776
தளைநகரம்—காவேரிப்பட்டணத்தை வட்டத் தலைநகரமாக்குதல். 732
மலைவாழ் மக்கள்—கொத்தளம் பகுதியில் மேம்பாட்டுத் திட்டம். 774
வீட்டுவசதி வாரியப் பணிகள், தருமபுரி மாவட்டம் 163

சரணாலயம்—

முதலைகள், கல்லணை கிளிக்கூடு கிராமம் 498—499

சலவைத் துறைகள்—

தருமபுரி மாவட்டத்தில் அமைத்தல் 798

சவுந்திரராஜன், திரு. செ. வீ.—

இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978. 630—632

து. மா. கோ. (முதல்), 1978-79. வாக்கெடுப்பு—

மாநில ஆட்சித் தலைவர் அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள். 243
மாவட்ட நிர்வாகம் 244

ச—தொடர்ச்சி.

பக்கம்

சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.—

அண்ணா சிலை அலங்காரம், செலவு. 123—124
அத்தியாவசியப் பணிகளை நிர்வகிக்கும் அவசரச் சட்டம் 1978 நிராகரிக்கக் கோருதல் (த.நீ.) 355, 356, 357,
ஆளுநர் உரை (தி) 457, 458, 651, 693
உள்ளாட்சி—கலைக்கப்பட்ட ஊராட்சி மன்றங்கள் எண்ணிக்கை. 850
சென்னைப் பெருநகர் போக்குவரத்துத் திட்ட அமைப்பின் செயற்குறிப்புகள் நிராகரிக்கப் பெற்றதாகச் சொல்லப் பெறுவது (க.ஈ.) 891
பள்ளிவாசல், இந்திரா நகர், சென்னை 532

சாலைகள்—

அரியலூர்—செந்துறை சாலை 746
ஆக்கிரமிப்பு, சிதம்பரம் வட்டம் 148—149
கரும்பு உற்பத்தி நிதியிலிருந்து பணிகள் 761
காந்திபுரம்-காரவள்ளி சாலை, தார் போடுதல் 514
கொடைக்கானல் பகுதியில் பணிகள் 803
நெல்லிக்குப்பம், சர்க்கரை ஆலை செஸ் நிதியில் இருந்து புதியதாக சாலைகள் அமைத்தல். 33—34
பகனூர்பட்டி ஊராட்சி 140—141
மாயூரம் நகரில் பராமரிப்புச் செலவு 776
வடஆற்காடு மாவட்டத்திலுள்ள சாலை உருளைகள் 747

சிவசாமி, திரு. செ.—

காவல் நிலையங்கள், வாடகைக் கட்டிடம் 522
கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1978 585—586
நீர்ப்பாசனம்—முகவை மாவட்டத்தில் வெள்ளச் சேதத்திற்கான தடுப்புச் சுவர்கள். 829
பாடப் புத்தகங்களிலிருந்து சில பகுதிகள் நீக்கப் பெற்றுள்ளது (க.ஈ.). 884, 885

சிவசாமி, திரு. செ.—தொடர்ச்சி.

பக்கம்

- விவசாயிகளுக்குக் கடன், [illegible] மாவட்ட நிலவள வங்கிகள் (க.ச.). 553, 555
- வேளாண்மைக் கழகங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண விகிதங்களைத் திருத்தி அமைத்தல் சட்ட முன்வடிவு, 1978 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1978). 933—934

சிறைச்சாலைகள்—

- கைதிகள் பல்கலைக் கழகத் தேர்வு எழுதுவதற்கான வசதிகள் 795—796
- சாகுபடி செய்தல் 160
- திருச்சி மத்திய சிறை, தப்பியோடிய கைதிகள் 167—168
- பெண் கைதிகளுக்கு புனர்வாழ்வு அளித்தல் 856
- மத்திய சிறைச்சாலைகளில் நூலகங்கள் 796—797
- வேலூர் மத்திய சிறையில் குடி தண்ணீர் தட்டுப்பாடு 763

சின்னசாமி, திரு. வ.—

- காஞ்சிபுரம்-காரவள்ளி சாலை, தார் போடுதல் 514
- பழரசத் தொழிற்சாலை, கொல்லி மலை 534

சின்னராசு, திரு. க. இரா.—

- சூப்பிரெண்டிங் என்ஜினியர் அலுவலகம், தருமபுரி மாவட்டம் அமைத்தல் 166

சுகாதாரம்—

- பெரியப்புலியூர் சாராயத் தொழிற்சாலை கழிவு நீரால் ஆற்று நீர் கெடல். 814
- சென்னையில் மலேரியா காய்ச்சல் 754
- பாதாளச் சாக்கடைத் திட்டம், காஞ்சீபுரம் 174—175

சுந்தரம், திரு. ப.—

- நீர்ப்பாசனம்—திருப்பத்தூர் ஏரியை பழுது பார்த்தல் 814
- மருத்துவ மனை—திருப்பத்தூரில் இரத்தப் பரிசோதனை நிலையம். 756
- திருப்பத்தூர் வணிகவரி அலுவலகக் கட்டிடம் 171

பக்கம்

சுந்தரராஜ், திரு. நா.—

- ஆளுநர் உரை (நி) 694
- உதவித் தொகை—திருமயம் தாலுக்காவில் முதியோர் பெறுவது. 737—738
- குடி நீர்—பொன்னமராவதி ஒன்றியத்தில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள். 758
- கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1978 586—588
- துலையானூர் ஊராட்சி, இரண்டாகப் பிரித்தல் 503—504
- மின்சாரம்—திருமயம் வட்டம், மோட்டார்களுக்கு மின் இணைப்பு. 736
- மின் பிரிவு, புதுக்கோட்டை 282
- முகாம் நீதி மன்றம், பொன்னமராவதி 300—301
- வேளாண்மை விளை பொருள் விற்பனை (திருத்தம், தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு, 1978. 369—370

சுப்பிரமணியம், திரு. ஆர். சி.—

- வீட்டுமனைப் பட்டா, அரிசனங்களுக்கு கருங்குளம் கிராமம். 531

சுப்பிரமணியன், திரு. ஒ.—

- கூட்டுறவுக் கடன்கள், வசூலில் கெடுபிடி (க.ச.) 560, 562
- மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு 1978. 389

சுப்பிரமணியம், திரு. கே. கே.—

- மோத்தக்கல் ஊராட்சி, நீர் புறம்போக்கு நிலங்களில் உள்ளோருக்கு பட்டா வழங்குதல் 12—13

சுப்பிரமணியன், சின்னசேலம், திரு. மா.—

- 'அண்ணா', 'பெரியார்' கப்பல்கள், இலாபம் 506—508
- அரிசனங்கள், கள்ளக்குறிச்சி வட்டத்தில் குடியிருப்பு மனை வழங்கல். 503
- அரிசனங்கள், மனைப் பட்டாக்கள் வழங்கல். 773—774

	பக்கம்
சுப்பிரமணியன், சின்னசேலம், திரு. மா.—தொடர்ச்சி.	
காய்கறி விற்பனை, கூட்டுறவு முறை, சென்னை	524
சாலை ஆய்வாளர்கள், மாநகரப் பயணப்படி.	164
தொண்டி துறைமுகம், சீர்திருத்தம்	309—310
நீதிமன்றம் முதல் வகுப்பு கள்ளக்குறிச்சியில் அமைத்தல்	18—19
பயிற்சி நிலையம், அறிவியல் கண்ணாடிப் பொருட்களை உருவாக்குதல்.	819
போக்குவரத்து, சென்னையில் டாக்சி டிரைவர்கள் மீது வழக்குகள்.	760
மருத்துவமனை, கள்ளக்குறிச்சியில் குழந்தைகள் பிரிவு ஏற்படுத்தல்	819
முந்திரித் தொழிற்சாலை, தென்னாற்காடு மாவட்டத்தில் அமைத்தல்.	164
வழக்குகள்—தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்கீழ்	834
விற்பனை வரி, சோதனைகள் மூலம் கிடைத்த வரி வருமானம்	811
சுப்பிரமணியன், திரு. வ. மு.—	
தொழிலாளர் நல மருத்துவமனை, மானாமதுரை	527
நில அளவை வரைபடம் உரிமையாளர்களுக்கு வழங்குதல்	11—12
சுப்பு, திரு. க.—	
அக்சோ இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனின் ஆண்டறிக்கை இந்தியில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டதாகச் சொல்லப்படுவது குறித்து.	925—926, 928
அண்ணா போக்குவரத்துத் தொழிலாளர்கள் இடமாற்றம் செய்யப்படுவது குறித்து (க.ச.).	901, 903, 904—90[illegible], 906—9[illegible]
அத்தியாவசியப் பணிகளை நிர்வகிக்கும் அவசரச் சட்டம், 1978, நிராகரிக்கக் கோருதல் (த.தீ.).	343—35[illegible], 364, 36[illegible]

	பக்கம்
சுப்பு, திரு. க.—தொடர்ச்சி.	
ஆளுநர் உரை (தீ)	439, 447, 448, 459, 469—470, 471—472, 643—689
இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவன தொழில் தகராறு குறித்து (க.ச.).	888
உறுப்பினர்கள் 41, 42, 184 ஆகிய விதிகளின் கீழ் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து (த.கோ.).	862, 864, 867, 686, 869, 908, 910
ஊரகத் தொழில் துறை அமைச்சர் மீது (உ.பி.)	330
எம்.ஏ. படிப்பு படிப்பவர்கள், முழு ஊதியம் வாங்குவது குறித்து.	315
ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து (த.கோ.)	175
கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு, 1978	945—947
காவல் துறையினர் ஓர் உறுப்பினர் வீட்டில் சோதனையிட்டது குறித்து (உ.பி.)	317
கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1978.	578—581, 597
கூட்டுறவுத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை குறித்து (உ.பி.)	43
சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விடுதிகள் ஒதுக்குதல்.	124—126
சென்னைப் பெருநகர் போக்குவரத்துத் திட்ட அமைப்பின் செயற்குறிப்புகள் நிராகரிக்கப் பெற்றதாகச் சொல்லப் பெறுவது (க.ச.)	891, 894
சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1978	402
பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1978	970—972, 973
மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) சட்ட முன்வடிவு, 1978	603

பக்கம்

சுப்பு, திரு. க.—தொடர்ச்சி.

மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1978 385—388
மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத துணை வினா அனுமதிப்பது குறித்து (ஓ.பி.) 92
விதி 82-ன் கீழ் கல்வி அமைச்சர் அறிக்கை அளிப்பது குறித்து (த.கோ.) 540

சுப்ரவேலு, திரு. கா—

மருத்துவ மனைகள், கிராமப்புறங்களில் சித்த மருத்துவ மனைகள் அமைத்தல் 839

சுவாமிதாஸ், திரு. அ.—

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1978 583—584
நெய்யாறு இடதுகரை கால்வாயில் தண்ணீர் விடாமை, குமரி மாவட்டம் (க.ஈ.) 567, 568

செங்கோட்டையன், திரு. கு. அ.—

நீர்ப்பாசனம்—சத்தியமங்கலம் தொகுதி [illegible] ஏரி திருநாறையில் ஏரி அமைக்கும் திட்டம். 780
திருநாறையில் ஏரி அமைக்கும் திட்டம். 779—780
புதுப்பீர்கடவு கிராமத்தில் ஏரி கட்டும் திட்டம். 780
மாதம்பாளையம் குளத்தை செப்பனிடும் திட்டம். 781

செல்லப்பா, திரு. அ.—

தொடக்கப் பள்ளி கட்டடங்கள், அம்மாபேட்டை ஒன்றியம் 166
வெண்ணாற்றின் தென்கரையைப் பலப்படுத்துதல். 806
மருத்துவ ஆய்வாளர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். 747

சேமநிதிக் கணக்கு—

மாநில அரசு ஊழியர்களின் கணக்கை மாநில அரசே நிர்வகித்தல். 736—737

பக்கம்

சொக்கலிங்கம், திரு. கெ.—

அரிசனங்கள், கறவை மாடு வாங்குவதற்கு கூட்டுறவுச் சங்க மானியத் தொகை. 815
து.மா.கோ. (முதல்), 1978-79, பொ.வி. 178—183
நீர்ப்பாசனம், மானாம்பதி பெரிய ஏரியை ஆழப்படுத்துதல். 844—845
பள்ளிகள், திருப்போரூர் தொகுதியில் அரிசனநலப் பள்ளிக் கட்டடங்கள். 756—757

சோமசுந்தரம், திரு. எஸ். டி.—

ஆளுநர் உரை (தீ.). 66
உளுந்தூர்ப்பேட்டை மயிலாடும் தாங்கல் கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்து (க.ஈ.அ.). 880
து.ம.கோ. (முதல்), 1978-79 (பொ.வி.). 203
பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு, 1978. 253, 956, 961
பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 1978. 253, 912, 919, 920
பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1978 970, 972—974

சௌந்தரராசன், திரு. கே.—

செயற்கை வைரம் தயாரிப்பு. 157
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், திருச்சி, புதிய கட்டடம். 129—131
விவசாய பாலிடெக்னிக், நாவலூர்-கொட்டப்பட்டி, அமைத்தல். 513—514
வேலை வாய்ப்பு அலுவலகக் கட்டடம், திருச்சி. 759

சௌந்திரராஜன், திரு. திருச்சி ஆர்.—

மேட்டூர் கெமிகல் கம்பெனிகளின் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு (க.ஈ.அ.). 47—48, 49

பக்கம்

சுப்பு, திரு. க.—தொடர்ச்சி.

மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1978 385—388

மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத துணை வினா அனுமதிப்பது குறித்து (ஒ.பி.) 93

விதி 82-ன் கீழ் கல்வி அமைச்சர் அறிக்கை அளிப்பது குறித்து (த.கோ.) 540

சுப்ரவேலு, திரு. கா—

மருத்துவ மனைகள், கிராமப்புறங்களில் சித்த மருத்துவ மனைகள் அமைத்தல் 839

சுவாமிதாஸ், திரு. அ.—

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1978 583—584

நெய்யாறு இடதுகரை கால்வாயில் தண்ணீர் விடாமை, குமரி மாவட்டம் (க.ச.) 567, 568

செங்கோட்டையன், திரு. கு. அ.—

நீர்ப்பாசனம்—சத்தியமங்கலம் தொகுதி [illegible] ஏரி 780

திருநாரையில் ஏரி அமைக்கும் திட்டம். 779—780

திருநாரையில் ஏரி அமைக்கும் திட்டம். 780

புதுப்பீர்கடவு கிராமத்தில் ஏரி கட்டும் திட்டம். 781

பொதுப்பாளையம் குளத்தை செப்பனிடும் திட்டம்.

செல்லப்பா, திரு. அ.— 166

தொடக்கப் பள்ளி கட்டடங்கள், [illegible] ஒன்றியம் 806

வெண்ணாற்றின் தென்கரையைப் பலப்படுத்துதல்.

மருத்துவ ஆய்வாளர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். 747

சேமநிதிக் கணக்கு—

மாநில அரசு ஊழியர்களின் கணக்கை மாநில அரசே நிர்வகித்தல். 736—737

பக்கம்

சொக்கலிங்கம், திரு. கெ.—

அரிசனங்கள், கறவை மாடு வாங்குவதற்கு கூட்டுறவுச் சங்க மானியத் தொகை. 815

து.மா.கோ. (முதல்), 1978-79, பொ.வி. 178—183

நீர்ப்பாசனம், மானாம்பதி பெரிய ஏரியை ஆழப்படுத்துதல். 844—845

பள்ளிகள், திருப்போரூர் தொகுதியில் அரிசனநலப் பள்ளிக் கட்டடங்கள். 756—757

சோமசுந்தரம், திரு. எஸ். டி.—

ஆளுநர் உரை (தீ.). 66

உளுந்தூர்ப்பேட்டை மயிலாடும் தாங்கல் கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்து (க.ஈ.அ.). 680

து.ம.கோ. (முதல்), 1978-79 (பொ.வி.). 203

பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு, 1978. 253, 956, 961

பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 1978. 253, 912, 919, 920

பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1978 970, 972—974

சௌந்தரராசன், திரு. கே.—

செயற்கை வைரம் தயாரிப்பு. 157

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், திருச்சி, புதிய கட்டடம். 129—131

விவசாய பாலிடெக்னிக், நாவலூர்-கொட்டப்பட்டி, அமைத்தல். 513—514

வேலை வாய்ப்பு அலுவலகக் கட்டடம், திருச்சி. 759

சௌந்திரராஜன், திரு. திருச்சி ஆர்.—

மேட்டூர் கெமிகல் கம்பெனிகளின் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு (க.ஈ.அ.). 47—48, 49

"ஞ"

பக்கம்

ஞானசிகாமணி, திரு. தே.—

இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவன தொழில் தகராறு குறித்து (க.ஈ.). 886

நிலைமைப்பு, குறித்துறையில் நிரந்தர நிலையக் கட்டிடம் அமைத்தல். 782

விபத்து, பாதிக்கப்பட்ட பனைமேறு தொழிலாளர்களுக்கு நிதி வழங்கல். 804

"த"

தகவல் கோரல்—

அந்நிய இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனின் ஆண்டறிக்கை இந்தியில் அனுப்பப்பட வேண்டும் என்று சொல்லப் பெறுவது குறித்து. 539—549, 920—930

அமைப்பணி விவாதம் குறித்து. 175—176

உரிமைப் பிரச்சினை குறித்து. 177

உறுப்பினர்கள் 41, 42, 184 ஆகிய விதிகளின்கீழ் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து. 860—877, 879, 907—911

உறுப்பினர் கைது பற்றிய செய்தி குறித்து. 546

ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து. 176

சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதி வீடுகள் சரிவர இயங்காமை. 36

சட்டமன்றப் பேரவை அலுவலகத்திலுள்ள இட நெருக்கடி குறித்து. 177

தூத்துக்குடி அனல் மின்நிலையம், 'கன்வேயர் பெல்ட்' தயாரிப்பு. 35—36

பாரதியார் பிறந்தநாள் விழா குறித்து. 177

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தகவல் கோரல்—தொடர்ச்சி.

பேரவைத் தலைவரைப் பதவியில் இருந்து நீக்கக் கோரும் தனித் தீர்மானம் குறித்து. 540—546

விதி 82-ன் கீழ் கல்வி அமைச்சர் அறிக்கை அளிப்பது குறித்து. 540

வினா நேரம் நீட்டிக்கப் பெறாதது குறித்து. 318—320

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வடமாநிலங்களுக்கு உதவுவது குறித்து. 177

தங்கவேல், திரு. ர. ச.—

வால்பாறைப் பகுதியில் பாசன வசதி. 150—151

தலைநகரம்—

காவேரிப்பட்டணத்தை வட்டத் தலைநகரமாக்குதல். 732

தலைவர்—

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—

அவையில் காட்டப்பெறும் பொருள்கள்—

தலைவரிடத்தில் காட்டாமல் அவைக்குள் ஆயுதங்களைக் கொண்டுவரக் கூடாது, அப்படிக் கொண்டு வருவது குற்றம் (த.கோ.). 865

அவையில் பயன்படுத்தப்பெறும் சொற்கள், தொடர்ச் சொற்கள்—

முதலமைச்சர் அவர்கள் இவ்வளவு நேரம் பேசுகிறாரே என்று கேட்க உறுப்பினருக்கு உரிமை இல்லை என்று தலைவர் குறிப்புரைத்தபோது "உங்களுக்கு உரிமை இல்லை" எனத் தலைவரைப் பார்த்து ஓர் உறுப்பினர் குறிப்பிட்டது கண்டிக்கப் பெற்றது. (ஆ.உ.வி.). 679

உரிமைப் பிரச்சினைகள்—

ஊரகத் தொழில் துறை அமைச்சர் மீது—30—3—1978 ஆம் நாளன்று அவையில் வக்ஃப் வாரியம் பற்றித் தாம் கூறியதை ஊரகத் தொழில்

"ஞ"

	பக்கம்
ஞானசிகாமணி, திரு. தே.—	
இங்கிலாந்தின் பெலிவிரிண்டர்ஸ் நிறுவன தொழில் தகராறு குறித்து (க.ஈ.).	886
நிலைவைப்பு, குறித்துறையில் நிரந்தர நிலையக் கட்டடம் அமைத்தல்.	782
விபத்து, பாதிக்கப்பட்ட பனையேறு தொழிலாளர்களுக்கு நிதி வழங்கல்.	804

"த"

தகவல் கோரல்—	
அந்நிய இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனின் ஆண்டறிக்கை இந்தியில் அனுப்பப்பட வேண்டும் என்று சொல்லப் பெறுவது குறித்து.	539—549, 920—930
அரைமணி விவாதம் குறித்து.	175—176
உரிமைப் பிரச்சினை குறித்து.	177
உறுப்பினர்கள் 41, 42, 184 ஆகிய விதிகளின்கீழ் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து.	860—877, 879, 907—911
உறுப்பினர் கைது பற்றிய செய்தி குறித்து.	546
ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து.	176
சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதி வீடுகள் சரிவர இயங்காமை.	36
சட்டமன்றப் பேரவை அலுவலகத்திலுள்ள இட நெருக்கடி குறித்து.	177
தூத்துக்குடி அனல் மின்நிலையம், 'கன்வேயர் பெல்ட்' தயாரிப்பு.	35—36
பாரதியார் பிறந்தநாள் விழா குறித்து.	177

த—தொடர்ச்சி.

	பக்கங்கள்
தகவல் கோரல்—தொடர்ச்சி.	
பேரவைத் தலைவரைப் பதவியில் இருந்து நீக்கக் கோரும் தனித் தீர்மானம் குறித்து.	540—546
விதி 82-ன் கீழ் கல்வி அமைச்சர் அறிக்கை அளிப்பது குறித்து.	540
வினா நேரம் நீட்டிக்கப் பெறாதது குறித்து.	318—320
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வடமாநிலங்களுக்கு உதவுவது குறித்து.	177
தங்கவேல், திரு. ச. ச.—	
வால்பாறைப் பகுதியில் பாசன வசதி.	150—151
தலைநகரம்—	
காவேரிப்பட்டணத்தை வட்டத் தலைநகரமாக்குதல்.	732
தலைவர்—	
தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—	
அவையில் காட்டப்பெறும் பொருள்கள்—	
தலைவரிடத்தில் காட்டாமல் அவைக்குள் ஆயுதங்களைக் கொண்டுவரக் கூடாது, அப்படிக் கொண்டு வருவது குற்றம் (த.கோ.).	865
அவையில் பயன்படுத்தப்பெறும் சொற்கள், தொடர்ச் சொற்கள்—	
முதலமைச்சர் அவர்கள் இவ்வளவு நேரம் பேசுகிறாரே என்று கேட்க உறுப்பினருக்கு உரிமை இல்லை என்று தலைவர் குறிப்புரைத்தபோது "உங்களுக்கு உரிமை இல்லை" எனத் தலைவரைப் பார்த்து ஓர் உறுப்பினர் குறிப்பிட்டது கண்டிக்கப் பெற்றது. (ஆ.உ.வி.).	679
உரிமைப் பிரச்சினைகள்—	
ஊரகத் தொழில் துறை அமைச்சர் மீது—30—3—1978 ஆம் நாளன்று அவையில் வக்ஃப் வாரியம் பற்றித் தாம் கூறியதை ஊரகத் தொழில்	

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

துறை அமைச்சர் மதுரையில் தவறாகவும் உண்மைக்கு மாறாகவும் திரித்தும் கூறியிருப்பது உரிமை மீறிய செயல் என்று கூறி ஓர் உறுப்பினர் உரிமைப் பிரச்சினையொன்றை எழுப்பினார். ஊரகத் தொழில் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு, இதில் அவை உரிமை மீறில் எதுவும் இல்லை என்று கூறித் தலைவர் அதனை நிராகரித்தார். 330—329

ஏற்கெனவே அவையிலே பேசிய பேச்சையொட்டி தம் வீடு காவல் துறையினரால் சோதனையிடப் பெற்றது குறித்து உரிமைப் பிரச்சினையொன்றை ஓர் உறுப்பினர் எழுப்பி அதையொட்டித் தம்மைப் பேச அனுமதிக்க வேண்டுமென்று வற்புறுத்தியபோது தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார் :—

" தாங்கள் கொடுத்திருக்கிற உரிமை மீறல் பிரச்சினையை நான் நேற்றைக்கே தள்ளுபடி செய்து விட்டேன். பிறகு திருப்பித் திருப்பி விதிகளைப் பார்த்தபொழுது வெளியிலே நிகழ்ந்திருக்கிற ஒரு பிரச்சினையை, நிர்வாக நடவடிக்கைகளை, உரின்ம மீறலாக இங்கே கொண்டுவந்து பேசுவது என்பது அனுமதிக்க முடியாத ஒன்று என்பது தெரிகிறது. ஆகவே உங்களுடைய பிரச்சினை பத்திரிகை வாயிலாகவும் வந்திருக்கிறது. இங்கேயும் எதிர்க்கட்சித் தலைவர் விளக்கமாகப் பேசியிருக்கிறார். ஆகவே அந்த அளவு பதிவேட்டிலே ஏறிய பின்னால் மறுபடியும் உரிமை மீறல் என்று கொண்டு வருவது விதிகளின்படி சரியல்ல என்பதால் உங்களைப் பேச அனுமதிக்கவில்லை.

இந்த அவைத் தலைவர் என்ற முறையில் எனக்குக் கடமைகள் இருக்கின்றன. இந்த அவையை நடத்துவதற்கு விதிகளை உண்டாக்கி எனக்குத் தந்து இருக்கிற காரணத்தால் அவைகளை ஒட்டித் தான் நான் நடக்க முடியும்.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

சட்ட விதிகளின்படி சட்டமன்ற உறுப்பினர் பேரவைத்
தலைவரின் ஆளுகைக்கு உட்பட்ட இடத்தில்
பாதிக்கப்பட்டிருந்தால் சொல்லுங்கள், நடவடிக்கை
எடுக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் அவையிலோ
அல்லது விடுதியிலோ பாதிக்கப்பட்டு இருந்தால்,
அவருக்கு எல்லாவிதமான பாதுகாப்பும் கொடுக்க
வேண்டியது என்னுடைய கடமை. ஆனால் சட்ட
மன்ற உறுப்பினர் மீது வெளியே காவல் துறை
யினர் நடவடிக்கை எடுக்கின்றனர் என்றால் எந்த
வகையில் நான் அதைத் தடுத்து நிறுத்த முடியும்." 869, 873
(த.கோ.).

சட்ட அமைச்சரின் பேரவை செயலர் மீது—" குமரி
மாவட்ட ஜனதா எம்.எல்.ஏ.-க்கள் சட்டமன்றத்தில்
குமரி மாவட்டப் பிரச்சினைகளை எடுத்து அதிகமாகப்
பேசுவது இடையாது. ஒருவேளை அவர்கள் பேசி
னாலும் அது புரிவதில்லை. என்ன பேசுகிறார்கள்
என்றுகூடத் தெரிவதில்லை" என்று சட்ட
அமைச்சரின் பேரவைச் செயலர் ஒரு பொதுக்
கூட்டத்தில் பேசிய பேச்சு அவை உரிமைமீறிய செயல்
என்று ஓர் உறுப்பினர் எழுப்பிய பிரச்சினையை
நிராகரித்துத் தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார்:

" In Practice and Procedure of Parliament by Kaul and Shakdher, it has been stated ' speeches or writings containing vague charges against members or criticising their parliamentary conduct in a strong language particularly in the heat of a public controversy, without, however, imputing any *mala fides*, are not treated by the House as a contempt or breach of privilege.'

 பக்கம்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்கு பிரச்சினை—தொடர்ச்சி.

இருந்தாலும் ஒரு உறுப்பினர் பொது மேடையில் என்ன பேசினாலும் 'மற்ற உறுப்பினர்களின் மனம் புண் படும்படி அல்லது அவர்களுக்கு வருத்தம் ஏற்படக் கூடிய அளவில் பேசாமல் இருப்பது நல்லது. ஆகவே, அவர்கள் எழுப்பியுள்ள அவை உரிமை மீறல் பிரசினையை உன்னிப்பாகக் கவனித்தால் அது உரிமை மீறலாகத் தெரியவில்லை." 37—41

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

பாடநூல்களில் மார்க்சிய தத்துவம் எழுதப் பெற்றுள்ள தன்மை குறித்து—கல்வியமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது. 331—334

ஒழுங்கு—

உட்கார்ந்து கொண்டே பேசக் கூடாது. உறுப்பினர் ஏதாவது சொல்லவேண்டுமென்றால் தலைவரது அனுமதியைப் பெற்று சொல்ல வேண்டும். 538

தலைவர் எந்த உறுப்பினரைப் பார்த்து அமரவேண்டும் என்று சொல்கிறாரோ அவர் அமர வேண்டும். அவருக்கு மற்றவர்களைப் பற்றிக் கேட்க அதிகாரம் கிடையாது. எல்லோரும் எழுந்து பேசக் கூடாது. (அ.வி.). 264

தலைவர் நிற்கும்போது உறுப்பினர் உட்கார வேண்டும். 144

தலைவர் நின்று கொண்டிருக்கும்போது உறுப்பினர்கள் உட்கார்ந்து விடவேண்டும். 609

தலைவர் பேசிக்கொண்டிருக்கும்போது அனுமதி யில்லாமல் உறுப்பினர்கள் எழுந்து பேசக் கூடாது. (ஆ.உ.வி.). 358, 679

தலைவரின் அனுமதி பெற்றே பேச வேண்டும். (வி.வி.). 12

 பக்கம்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்கு பிரச்சினை—தொடர்ச்சி.

தலைவர் பேசிக்கொண்டிருக்கும்போது அனுமதி யில்லாமல் உறுப்பினர்கள் எழுந்து பேசக்கூடாது (அ.உ.வி.) 358, 679

தலைவரின் அனுமதி பெற்றே பேச வேண்டும் (வி.வி.) 12

பேச்சை முடித்துக்கொண்டு அமர வேண்டும் என்று தலைவர் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டும் கூட, பேசிக் கொண்டிருந்த உறுப்பினர், தாம் உட்கார முடியாது என்றும் தாம் பேசித் தான் ஆகவேண்டு மென்றும் கூறியபோது தலைவர் பின்வருமாறு குறிப் புரைத்தார்:—

"இதுதான் தலைவரின் ஆணைக்குக் கொடுக்கின்ற மதிப்பா ? உறுப்பினர் சொல்வதற்கு தலைவர் கட்டுப்பட வேண்டுமா ? அனுமதியின்றி உறுப்பினர் பேசினாலும் தலைவர் அதை நீக்க வேண்டிய நிலை வரும்" (ச.மு.வ.). 608—609

ஒரு கொலையைப் பற்றிய தகவல் அவையில் தெரிவிக்கப் பட்டதன் காரணமாக, உறுப்பினர் ஒருவருடைய வீட்டைக் காவல் துறையினர் சோதனை போடுவது அவை உரிமையை மீறிய செயலாகும் என ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பினார். உறுப்பினர் இதுபற்றி உரிமைப் பிரச்சினை எழுப்ப விரும்பினால் அதனை எழுத்து மூலமாகத் தந்திருக்க வேண்டும் அவ்வாறு கொடுக்காமல் ஒழுங்குப் பிரச்சினை என்று இதனை எழுப்பும்போது அதற்கு அமைச்சரிடம் பதில் இருக்காது என்று தலைவர் குறிப்புரைத்தார் (உ.பி.). 817

ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வினாக்களைப் பட்டியலில் சேர்த்து விட்டு மற்ற வினாக்களுக்கான விடைகளை அச்சிட்டுத் தருவதற்குப் பதிலாக துணை வினாக் களைச் சுருக்கிக் கொண்டு எல்லாவற்றுக்குமே அவையில் விடைகளை அளிக்க வகை செய்யவேண்டும்

பக்கம்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்கு பிரச்சினை—தொடர்ச்சி.

என ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பினார். அதன் மீது தலைவர் அளித்த தீர்ப்புரையாவது:—

"உறுப்பினர்கள் எனக்கு ஒத்துழைப்புத் தருவதைப் பொறுத்திருக்கிறது, கேள்விகளை எடுத்துக் கொள்வதும் பதில் அளிப்பதும். ஆகவே, எல்லா உறுப்பினர்களும் என்னோடு ஒத்துழையுங்கள், எல்லாக் கேள்விகளுக்கும் இங்கே பதிலளிக்க வாய்ப்பு ஏற்படும்" (வி.வி.). 538—539

ஒரு தீர்மானம் ஓட்டெடுப்பின் மூலம் தோல்வியுற்றது என்று வானொலியில் அறிவித்தார்கள். ஆனால் ஓட்டெடுப்பு நடைபெறவில்லை என்று கூறி ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பினார். அதற்குத் தலைவர் அளித்த தீர்ப்புரையாவது:—

"ஓட்டெடுப்பு என்றால் 'வாய்ஸ் ஓட்' கூடச் சொல்லலாம். ஓட்டெடுப்புக்கு விட்டால் தான் ஓட்டெடுப்பு என்று சொல்லவேண்டுமென்றில்லை. வாய்ஸ் ஓட்டையும் சொல்லலாம். ஆகவே, அதில் தவறு ஒன்றும் இல்லை.". 538

துணை வினா ஒன்றுக்குத் தாம் அளித்த விடையைத் திருத்தி ஓர் அமைச்சர் விதி 82-ன் கீழ் அளித்த அறிக்கையையொட்டி, "இவ்வாறு அமைச்சர் தாம் முதலில் சொன்ன விடையைத் திருத்திக் கொண்டால் உறுதிமொழிக் குழுவிற்கே வேலையில்லாமல் போகுமாதலால், இது முறைதானா" என்று ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினையொன்றை 1978, செப்டம்பர் 9 ஆம் நாள் எழுப்பினார். தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார்:—

பக்கம்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்கு பிரச்சினை—தொடர்ச்சி.

"ஒரு அமைச்சர் பேசிவிட்டுப் பின்னால் அந்தக் கூட்டத் தொடரிலேயே அதற்கு ஒரு திருத்தத்தைக் கொடுத்துவிட்டால், தாங்கள் எழுப்பிய பிரச்சினை எழுவதற்கு வழியில்லை. அவ்வாறு திருத்தம் கொடுத்துவிட்ட பின்னால் அஷ்யூரன்ஸ் கமிட்டிக்கு இதில் வேலையில்லை. கடைசியில் திருத்தம் செய்து சொன்னது தான் நிற்கும்." (வி.வி.). 49

'மூலக் கேள்வியையொட்டி துணை வினாக்கள் கேட்க வேண்டும்' எனத் தலைவர் தந்த தீர்ப்பையொட்டி எழுப்பப்பெற்ற ஒழுங்குப் பிரச்சினை மீது தலைவர் அளித்த குறிப்புரையாவது:—

"குறிப்பிட்ட ஒரு தொகுதியைப் பற்றி ஒரு உறுப்பினர் கேள்வி கேட்டால், அதையொட்டிய கேள்விகளைக் கேட்க வேண்டுமே தவிர, மற்ற மாவட்டங்களிலுள்ளதைப் பற்றிய துணைக் கேள்விகளைக் கேட்கக் கூடாது என்று சொல்லவில்லை, அவரவர் தொகுதியிலுள்ள கிராமங்கள், அதைச் சுற்றியுள்ள இடங்களைப் பற்றிக் கேட்கும்போது, மற்றவர்கள் வேறு இடங்களைப் பற்றி, மாவட்டங்களைப் பற்றிக் கேட்க வேண்டாம்." (வி.வி.). 91

கவன ஈர்ப்பு—

அதிகமான கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்ள வேண்டிய நிலையிலும் சட்டமுன்வடிவுகள் நிறைவேற்றப்படவேண்டிய அவசியத்தை முன்னிட்டும் தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:—

"ஒன்பது கவன ஈர்ப்புத் தீர்மான அறிக்கைகள் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களின் மேசை மீதும், பேரவைத் துறை நூலகத்திலும் வைக்கப் பட்டுள்ளன. பத்திரிகைகளுக்கும் அவை அளிக்கப் படும். எனவே, அந்த அறிக்கைகளை படித்ததாக

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

அவை ஏற்றுக்கொள்ளும் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தேவையென்று கருதினால் ஒரு விளக்கம் கேட்கலாம். அமைச்சர்கள் சுருக்கமாகச் சொன்னால் சட்டமுன்வடிவுகளை நிறைவேற்றுவதற்கு ஏதுவாக இருக்கும்.'' 553, 556

குறுக்கீடுகள்—

அமைச்சர் பேசிக் கொண்டிருக்கும்போது தலைவரின் அனுமதியில்லாமல் உறுப்பினர்கள் குறுக்கிட்டுப் பேசுகின்ற அணுகுமுறை ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல (த.மா.கோ.). 241

உறுப்பினரொருவர் தம்மைப்பற்றித் தவறான தகவல் அவையில் சொல்லப்பெற்றிருப்பதாகத் தன்னிலை விளக்கம் அளித்துக் கொண்டிருந்தபோது வேறொர் உறுப்பினர் குறுக்கிட்டபோது, அது குறுக்கீடு செய்த உறுப்பினருடைய பிரச்சினையல்லவென்றும் அதைப் பற்றித் தலைவரே தீர்மானிக்க வேண்டுமென்றும் குறிப்புரைக்கப் பெற்றது. (த.வி.). 860

ஓர் உறுப்பினருடைய பேச்சைத் தடை செய்வதற்கும் நீக்குவதற்கும் தலைவருக்கு உரிமை இருக்கிறது. இன்னொரு உறுப்பினர் அதில் குறுக்கிடுவதற்கு உரிமையில்லை. (அ.வி.). 266

தலைவரின் அனுமதியைக் கேட்டுப் பெற்ற பிறகு தான் பேசவேண்டும். அனுமதியின்றித் தாமே எழுந்து பேசும் வழக்கம் வேண்டாம். ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப உரிமை இருந்தாலும் ஒரே உறுப்பினர் எழுந்து எழுந்து கேட்டுக்கொண்டிருந்தால் அவை நிகழ்ச்சிகளைச் சரிவர நடந்த இயலாது, நிகழ்ச்சி நிரலை முடிக்க முடியாது. (ச.மு.வ.). 356, 357—358

பேசுகின்ற உறுப்பினர் சம்மதிக்கவில்லையானால் விளக்கம் கோர விரும்புகிற உறுப்பினர் குறுக்கிடுதல் ... வேண்டும் (வி.வி.). 234

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

தகவல் கோரல்—

உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பெற்ற தகவல் அவைத் தலைவருக்கு வந்ததா என ஓர் உறுப்பினர் கேட்ட போது "அந்தத் தகவல் வந்தது. ஆனால் தொடர்ந் தாற்போல் அவர் விடுதலை செய்யப்பட்டு விட்டார்'' என்ற தகவலும் ஒன்றாகச் சேர்ந்து வந்ததால்தான் அதை சபையிலே அறிவிக்கவில்லை. 546

உறுப்பினர் ஒருவர் தமக்குப் பாதுகாப்புத் தேவை என்று சொல்லிப் பேச முற்பட்டபோது "பாது காப்புத் தேவை என்றால் அரசுக்கு எழுதி அனுப்புங்கள்; அவையில் எந்த விதியின் கீழும் தங்களைப் பேச அனுமதிக்க முடியாது'' என்று தலைவர் குறிப்புரைத்தார். 871

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு பற்றிஅவரைப் பேச அனுமதிக்க முடியாது என்று (ஒ.தீ.). 834

தாம் அறிவிப்புக் கொடுத்துள்ள பிரச்சினை என்றைக்கு எடுத்துக்கொள்ளப் பெறும் என்பதைப் பற்றி ஓர் உறுப்பினர் தலைவரின் அறையிலே வந்து கேட்க வேண்டும். (ஒ.தீ.). 175—176

தாம் கொடுத்திருந்த அறிவிப்புப் பற்றிச் சுருக்கமாகத் தகவல் கோர வேண்டுமேயன்றி உரைபோல் ஆரம்பித்துப் பேசிக்கொண்டே போகக் கூடாது. இப்பிரச்சினையை அறையிலேயே தள்ளிவிட முடியு மென்றாலும் பெருந்தன்மையுடன் சந்தர்ப்பம் கொடுக்கப் பெற்றிருக்கிறபோது ஒரு அளவோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். (ஒ.தீ.). 861—862

தாம் கொடுத்திருந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பெற வேண்டுமென்று ஓர் உறுப்பினர் வலியுறுத்தியபோது தலைவர் பின்வருமாறு தீர்ப் புரைத்தார்:—

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

தகவல் கோரல்—தொடர்ச்சி.

பக்கங்கள்

"நீங்கள் கொடுத்திருப்பதற்கு அரசிடமிருந்து பதில் வரவில்லை. பதில் வந்தால்தான் அனுமதிக்க முடியும். என் கடமை அவ்வளவுதான். அதற்கு மேல் எனக்கு அதிகாரம் இல்லை. அமைச்சர்களை பதில் கொடுங்கள் என்று நான் கட்டாயப் படுத்த முடியாது. பதில் வந்து இருக்குமானால் நான் அதை அனுமதித்து இருக்க முடியும்."

"விதி 41இல் கொடுத்திருந்தாலும் அல்லது 42இல் கொடுத்திருந்தாலும் கவர்னர் உரையில் பேசலாம் என்று தள்ளியிருப்பேன். நீங்கள் கொடுத்திருப்பது அரசின் கவனத்திற்கு வந்து, தங்களுக்குப் பதில் வரவேண்டும் என்பதற்காகத்தான் பெயர்களை இங்கே குறிப்பிட்டேன். அப்படிச் செய்ய வேண்டும் என்று எந்த விதியிலும் இல்லை. உறுப்பினர் அதை வற்புறுத்தக் கூடாது, தலைவரோடு ஒத்துழைக்க வேண்டும், நேரத்தை வீணாக்க வேண்டாம்." 909, 911

தாம் கொடுத்துள்ள அறிவிப்பு தள்ளப் பெற்றதாக தகவல் ஏதும் தமக்கு வரவில்லையென்று உறுப்பினரொருவர் கூறியபோது அதைப்பற்றித் தலைவரின் அறையில் வந்து கேட்க வேண்டுமென்று குறிப்புரைக்கப் பெற்றது. 874

"பதவியிலிருந்து பேரவைத் தலைவரை நீக்கக் கோரும் தீர்மானத்தை" இந்தக் கூட்டத் தொடரிலேயே எடுத்துக் கொள்ள வேண்டுமென ஓர் உறுப்பினர் வற்புறுத்தியபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது:—

"1976 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நாள் ஒன்றரை மணிக்குத்தான் இந்த நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. ஆகவே அப்படிப் பார்த்தால் 16 ஆம் தேதிதான் எடுத்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

தகவல் கோரல்—தொடர்ச்சி.

வருகின்றது. ஆனால் ஆய்வுக் குழுவின் முடிவுப் படி 16 ஆம் தேதி சட்டமன்றக் கூட்டத் தொடர் இல்லை. ஆகவே அடுத்து வருகின்ற கூட்டத் தொடரில் இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்வது குறித்து அதிலும் எத்தனை உறுப்பினர் கள் இதனை ஆதரிக்கிறார்கள், எத்தனை பேர் எதிர்க்கிறார்கள் என்பனவற்றை எல்லாம் பரிசீலனை செய்து பார்த்த பிறகுதான் முடிவு எடுக்க முடியும்". 542

வினா விடைகளுக்கு ஒரு மணி நேரம் என்பதை மேலும் நீட்டிக்கலாம் என்று ஒரு உறுப்பினர் கூறிய பொழுது தலைவர் "இன்றைக்கு நிகழ்ச்சி நிரல்படி ஒவ்வொன்றையும் ஒதுக்கப்பட்டிருக்கின்ற நேரத் திற்குள்தான் முடித்தாக வேண்டும். எனவே மேலும் அவசரமாகவும் அவசியமாகவும் நிறைவேற்றியாக வேண்டிய பல சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. நேரத்தை மேலும் நீட்டிக்க அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவெடுத்தால் அதன்படி நடப்பது குறித்து ஆட்சேபணை இல்லை" என்று குறிப் புரைத்தார். (வி.வி.). 318—319

தன்னிலை விளக்கம்—

அவையில் ஒரு உறுப்பினரைப் பற்றி இன்னொருவர் தவறாகப் பேசியிருந்தாலோ அல்லது தாம் பேசிய பேச்சுக்குத் திருத்தம் கூறவேண்டியிருந்தாலோ தன்னிலை விளக்கம் தரலாம். வெளியே இருக்கிற பிரச்சினைக்கு அவையில் அனுமதிக்க விதிகளிலே இடம் இல்லை. (த.கோ.). 871

"தமக்கு ஒதுக்கப் பெற்றிருக்கிற அரசாங்க வீட்டில் வேறு நபர் தங்கியிருக்கிறார்" என்று அவையில் தம் மீது குற்றஞ்சாட்டி வேறொரு உறுப்பினர் பேசி யுள்ளது உண்மைக்குப் புறம்பான தவறான தகவல்

தலைவர்—தொடர்ச்சி

தன்னிலை விளக்கம்—தொடர்ச்சி.

என்றும் தம்மோடு தம் மைத்துனர் தான் தங்கி யுள்ளார் என்றும் அதுபற்றி தாம் ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்துள்ளதாகவும் ஓர் உறுப்பினர் 1978, செப்டம்பர் 14 ஆம் நாள் தன்னிலை விளக்கம் அளித்தார். தலைவர் அளித்த தீர்ப்பாவது:—

"உறுப்பினரோடு வேறொருவர் தங்கியுள்ளார் என்று தான் அந்த உறுப்பினரும் குறிப்பிட்டார். நீங்களும் உங்களோடு தங்கியிருப்பவர் உங்கள் மைத்துனர் தான்; வேறெவரும் இல்லை என்று ஒத்துக் கொள்கிறீர்கள். எனவே இதில் உரிமை மீறல் பிரச்சினை வருவது என்பதோ திரித்துக் கூறினார் என்ற பிரச்சினையோ எழவில்லை." 859

தீர்ப்பு—

தலைவரின் தீர்ப்புக்குப் பிறகு அதுபற்றிப் பேச அனுமதி யில்லை. (த.கோ.). 875—876

தலைவரின் தீர்ப்பிற்குள் போகக் கூடாது, அப்படியே விட்டுவிட வேண்டும். (ஒ.பி.). 552

தொடர்புடைமை—

அவசியம் இல்லாததை எடுத்துக் காட்டுதல் தேவை யில்லை. (த.கோ.). 541

நடைமுறைகள்—

அறிவிக்கை கொடுக்காத உறுப்பினர் கவன ஈர்ப்பு அறிக்கையின்மீது விளக்கம் கேட்க முடியாது. (க.ஈ.). 886

ஆளுநர் பற்றி ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட வார்த்தை களை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு ஆணையிட்டுத் தலைவர் அளித்த குறிப் புரையாவது:—

"ஆளுநர் பற்றிக் குறிப்பிடக் கூடாது." (ச.மு.வ.). 351

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறைகள்—தொடர்ச்சி

கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு அறிவிப்புக் கொடுத்த உறுப்பினருக்குத்தான் அமைச்சர் அறிக்கை அளித்த பிறகு விளக்கம் கோரும் உரிமை உண்டு. (க.ஈ.). 336

"தினந்தோறும் கேள்வி நேரத்தில் முன்வரிசையில் இருக்கிற அமைச்சர்களுக்குத் தான் பதில் சொல்லும் வாய்ப்பு ஏற்படுகிறது; கடைசியில் இருக்கிறவர் களுக்கு வாய்ப்பு இல்லை. ஏனென்றால் அவர்கள் பதில் சொல்ல நேரம் இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே கடைசியில் இருக்கிற அமைச்சர்களின் கேள்வி களுக்குத் துணை வினா கேட்டு விளக்கம் பெற எங்களுக்கு வாய்ப்பு இல்லாமலேயே போய்விடுகிறது. அதனால் இப்போது இருக்கிற முறையை மாற்றி, ஒரு நாள் விட்டு ஒரு நாள் கடைசியில் இருக்கிற அமைச்சர்களின் கேள்விகளை முதலில் எடுத்துக் கொண்டு, தகுந்த விளக்கங்களைப் பெற எங்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படுமா" என்று ஓர் உறுப் பினர் வினவியதற்குத் தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:—

"தங்களுடைய யோசனை நல்லதுதான். ஒரு முறை இங்கிருந்து பதில் சொல்வது, ஒரு முறை அங்கிருந்து பதில் சொல்வது என்ற கருத்தை ஏற்றுக் கொள்கிறேன்; இனி அப்படியே செய்கிறேன்." 589

துணை அறிக்கையின் மீது விவாதம் நடைபெற்ற பிறகு, அது சம்பந்தப்பட்ட நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை விவாதமின்றி நேராக நிறைவேற்றலாம். (ச.மு.வ.). 575

வாக்கெடுப்பின்போது 'பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்' கேட்கக் கூடாது. (ச.மு.வ.). 598

பக்கம்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறைகள்—தொடர்ச்சி.

விளக்கம் கேட்கும்பொழுது உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பில்லை, சுருக்கமாகக் கேட்க வேண்டும், அதன் வரலாறு முழுவதையும் சொல்ல வேண்டாம். (க.ஈ.). 340

விளக்கம் பெறும்போது அத்தனையையும் பேச ஆரம்பித்தால் நேரம் இருக்காது. சந்தேகத்தை மட்டும் கேட்டால் போதும். (க.ஈ.). 566

நேரம் ஒதுக்குதல்—

முதலமைச்சர் 5 மணி நேரம் பேசுவது சரியென்று தலைவர் கருதுகிறாரா என்று ஓர் உறுப்பினர் வினவிய போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:—
"விதிகளைப் பார்த்தேன். உங்களால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை என்றால் அதற்கு நான் பொறுப்பாளி அல்ல. முதல் அமைச்சர் அவர்கள் இவ்வளவு நேரம் பேசுகிறார்களே என்று கேட்க உங்களுக்கு உரிமை இல்லை." 675

பார்வையாளர் மாடம்—

பார்வையாளர் மாடத்திலிருந்து ஒரு வார காலத்திற்குள் மூன்றாவது முறையாகத் துண்டு அறிக்கை வீசப் பெற்றது குறித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஓர் உறுப்பினர் கோரியபோது, அனுமதிச் சீட்டுக்குக் கையொப்பம் இடுகின்ற உறுப்பினர்கள் இதையெல்லாம் கருத்தில் கொண்டு கையொப்பமிட்டால் இப்படிப்பட்ட பிரச்சினை வராது என்றும், உறுப்பினர்கள் எல்லோரும் முடிவு எடுத்து அவைக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்றும் குறிப்புரைத்தார். (ஒ.பி.). 398

பார்வையாளர் மாடத்திலிருந்து குரல் எழுப்பியவரின் பெயரைத் தலைவர் அறிவித்ததும், பெயர் அறிவிப்பதால்தான் இப்படி நிகழ்கிறது என்றும் பெயரை

பக்கம்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

பார்வையாளர் மாடம்—தொடர்ச்சி

அறிவிக்காமல் விட்டுவிட வேண்டும் என்றும் ஒரு உறுப்பினர் கோரியபோது, 'தண்டனை கொடுக்கின்றபொழுது பெயர் சொல்லித்தான் ஆகவேண்டும்' என்று தலைவர் குறிப்புரைத்தார். (அ.தீ.). 409—410

மரபு—

உறுப்பினர் யாரும் அதிகாரிகள் வரிசையிலே அமர்ந்திருக்கின்ற அதிகாரிகளுடன் பேசுதல் கூடாது. (ஒ.பி.). 552

எழுத்து மூலமாக அவைத் தலைவருக்குக் கொடுத்த பிறகுதான் எந்தப் பிரச்சினையையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள முடியும். இடையிலே எழுந்து எழுப்புவது அவ்வளவு சரியல்ல. (ச.மு.வ.). 610

தலைவர் வேறோர் அலுவலை எடுத்துக் கொண்டதற்குப் பிறகு தொகுதியைப் பற்றிய ஒரு விஷயத்தைக் கேட்பதற்கு என்று ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப முடியாது. தலைவர் அனுமதிக்காவிட்டால் அதை வற்புறுத்தவும் கூடாது. (ஒ.பி.). 335

தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்தவருக்குத் தான் அமைச்சர் பதிலுரைக்குப் பிறகு விளக்கம் கேட்பதற்கு வாய்ப்பு உண்டு. (ச.மு.வ.). 364

நிதி ஒதுக்க சட்ட முன்வடிவின்மீது சில உறுப்பினர்கள் பேச விரும்பியபோது, துணை மானியக் கோரிக்கை மீது விவாதம் முடிந்த பிறகு அதற்கான நிதி ஒதுக்க சட்டமுன்வடிவை நேராக நிறைவேற்றுவது மரபாக இருப்பதாலும் நேரம் இல்லாததாலும் விவாதம் இல்லாமல் அதை நிறைவேற்றலாம் என்று தலைவர் குறிப்புரைத்தார். 574—577

முதல் நாள் அவையில் நடைபெற்ற அரை மணி விவாதத்தைக் குறித்து அடுத்த நாள் பிரச்சினை எழக் கூடாது. (ஒ.பி.). 320

பக்கம்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

மரபு—தொடர்ச்சி.

வழிமொழிதல்—

தீர்மானம் முன்மொழியப் பெற்ற பிறகு வழிமொழியப் பெற வேண்டும். (ச.மு.வ.). 343

வாக்கெடுப்பு—

எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பிற்கு அடிக்கப்பெற்ற மணியோசை சரியாகக் கேட்கவில்லை என்பது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது, அதில் குறைபாடு இருந்தால் நிவர்த்தி செய்யப்படும் என்று தலைவர் குறிப்புரைத்தார். 604

எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு ஆரம்பித்தபின் உறுப்பினர்கள் யாரும் அவைக்குள் வருவது கூடாது.* (ச.மு.வ.). 597

விசாரணையில் இருக்கும் பொருள்—

நீதி மன்றத்திலுள்ள வழக்கு குறித்த பிரச்சினை பற்றிப் பேசுதல் கூடாது. (து.மா.கோ.). 180

விவாதம்—

அமைச்சர் பதிலளிக்கும்போது எந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டு இருக்கிறதோ அதற்கான விளக்கத்தை மட்டும் அளித்தால் போதும். (உ.பி.) 39—40

எழுப்பப்பெறுகின்ற பிரச்சினைக்கு அரசுத் தரப்பில் பதில் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்த முடியாது. (த.கோ.). 863, 866

ஓர் குறிப்பிட்ட பிரச்சினைபற்றி அமைச்சர் பதிலளித்த பிறகு, அதே பிரச்சினையை திரும்பத் திரும்பச் சொல்லி நேரத்தை வீணாக்கக் கூடாது. (வி.வி.).. 148, 157

குறிப்பிட்ட பிரச்சினைகளை எழுத்து மூலமாக அமைச்சர்களுக்குத் தந்தால் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். (த.கோ.). 867

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

விவாதம்—தொடர்ச்சி.

தமிழகத்திற்கு முன்னாள் பிரதமர் 1977-இல் தேர்தல் பிரச்சாரத்திற்காக வந்திருந்தபோது தமிழக அரசுக்கு ஏற்பட்ட செலவுபற்றி அரை மணி நேர விவாதத்தை தலைவர் அனுமதித்தது குறித்து ஓர் உறுப்பினர் 1978 செப்டம்பர் 11 ஆம் நாள் ஒழுங்குப் பிரச்சினை யொன்றை எழுப்பினார். அந்த ஒழுங்குப் பிரச் சினையை நிராகரித்ததோடு தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார்:—

“40-வது விதியில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்,

‘The Speaker may allot half an hour on three sittings in a week for raising a discussion on a matter of sufficient public importance which has been the subject matter of a question, oral or written, the answer to which was given within five days prior to the date of notice and which needs elucidation on a matter of fact.’

என்பதுதான். மக்கள் வரிப்பணத்திலிருந்து எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று கேட்பது பப்ளிக் இம்பார்ட்டன்ஸ் ஆகும். எனவே அரை மணி விவாதம் அனுமதிக்கத் தக்கதே.”. (அ.வி.). 254—255

விவாதத்தில் இருக்கும் பொருள் பற்றித்தான் பேச வேண்டும். 627

வினாக்கள்-விடைகள்—

அடுத்த வினா எடுத்துக்கொள்ளப் பெறுகின்றபோது முந்தைய வினாவில் ஒரு துணை வினா கேட்க ஓர் உறுப்பினர் எழுந்தபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:—

“தலைவர் ஓர் உறுப்பினரை அமரச் சொன்னால் அவ்வுறுப்பினர் அமர்ந்து விடவேண்டும்.

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தனசேகரன், திரு. ந.—தொடர்ச்சி.

'Every Member need not be given a chance.' என்று விதியிருக்கிறது. இதைச் செய்வதற்குத் தான் தலைவரை இங்கே உட்கார வைத்திருக்கிறார்கள். தலைவர் எழுந்து நின்றால் உறுப்பினர் அமர வேண்டும்." (து.வி.). 21—22

உறுப்பினர்கள் கேள்வியாகக் கேட்க வேண்டும், விளக்கக் கூடாது. (து.வி.). 733

எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. (து.வி.). 496

சுருக்கமாகக் கேட்க வேண்டும். (து.வி.). 10

பொதுப்படையாக இன்றி, குறிப்பிட்டுச் சொன்னால் தான், நடவடிக்கை எடுப்பது குறித்து அமைச்சர் பதில் சொல்ல முடியும். (து.வி.). 138

மூலக் கேள்விக்குச் சம்பந்தப்பட்டதாயிருத்தல் வேண்டும். (து.வி.). 92—93

வினாக்களைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும், விளக்கமாகச் சொல்லி கடைசியிலே கேட்பது என்றால் அதற்கு நேரம் இருக்காது. (து.வி.). 734

தற்கொலைகள்—

சென்னை நகரம் 534

தனசேகரன் திரு. ந.—

தூத்துக்குடி நகராட்சி, சில பகுதிகளை இணைத்தல் 504

நெல்லை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல் 756

முத்துக்குளிப்பு, தூத்துக்குடி 290—293

விமானதளம்—தூத்துக்குடி அருகில் அமைத்தல் 32

தாமரைக்கனி, திரு. இரா.—

இறைவைப் பாசனம், வேதாரண்யம் தொகுதி 491—492

உள்ளாட்சி, திருத்துறைப்பூண்டி பேரூராட்சியினை நகராட்சியாக ஆக்குதல் 726—727

பக்கங்கள்

தாமரைக்கனி, திரு. இரா.—தொடர்ச்சி.

கான்சாபுர கிராம அரிசன குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கல் 842

பிளவக்கல் அணைக்கட்டுப் பகுதியில் விதைப் பண்ணை அமைத்தல் 151—152

தாழ்த்தப்பட்டோர்.—

போக்குவரத்து கழகப் பணியாளர்களின் எண்ணிக்கை 159—160

திருவேங்கடம், திரு. பெ. சு.—

அரசு அலுவலகங்கள், வேலூரில் புதிய கட்டிடங்கள் கட்டுதல் 812

அரியூர் கூட்டுறவு நூற்பாலை 827

ஆனந்தல் அரிசனக் குடியிருப்பு தெரு விளக்குகள் 161

கலசபாக்கத்தில் மின்துறை அலுவலக கட்டிடங்கள் வாடகைக் கட்டிடங்களில் இருப்பது குறித்து 741

கலசபாக்கம் ஒன்றியத்தில் புதிய துவக்கப் பள்ளிகள் திறத்தல் 813

காவலர் குடியிருப்பு, ஜம்னாத்தூர், வட ஆற்காடு மாவட்டம் 525

குடிநீர் வழங்கல், புதுப்பாளையம் பேரூராட்சிக்கான திட்டம் 784—785

கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்கள், தணிக்கைக் கட்டணம் 287—289

கையாடல், வசூர் கிராமம், அரசு விதைச் சுத்திகரிப்பு நிலையத்தில் 848—849

செகண்டரி கிரேட் ஆசிரியர் பதவிக்கு பதிவு செய்துகொண்டவர்கள், விவரம் 172

'செட்டில்மென்ட்' ஜவ்வாது மலைப்பகுதி 498

சௌகுளத்தூர் காட்டுப் பகுதி நிலங்கள் 840

திருவண்ணாமலையில் நீதிமன்றத்திற்காக கட்டடங்கள் 754—755

துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் வீட்டுவரி நிலுவை 826—827

புதுப்பாளையம் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதி 841

புதுப்பாளையம் உயர்நிலைப் பள்ளிக்கு விஞ்ஞானக்கூடம் 171—172

பேருந்து நிலையம், திருவண்ணாமலையில் அமைத்தல் 723—724

மதிய உணவு எடுத்துச்செல்லும் வண்டிகள் எண்ணிக்கை, வட ஆற்காடு மாவட்டம் 165

பக்கங்கள்

தீர்மானங்கள்—தொடர்ச்சி.

திருவேங்கடம், திரு. பெ. சு.—தொடர்ச்சி.

மருத்துவமனை அதிகாரிகள், திருவண்ணாமலை 755
மேல் சோழங்குப்பத்தில் புதிய வரி கட்டுதல் 828
வேலை தேடித் தரும் அலுவலகம், வட ஆற்காடு மாவட்டம், பதிவு செய்துள்ளவர்கள் 523—524
வேலூர்-நாகர்கோவில் விரைவுப் பேருந்து, விபத்து குறித்து 718—719
வேலூர் மத்திய சிறையில் குடிதண்ணீர் தட்டுப்பாடு 763
ஜவ்வாதுமலையில் அபிவிருத்தித் திட்டம் 847—848
ஜவ்வாதுமலை விவசாயிகளுக்கு ஆடுகள் வழங்கும் திட்டம் 789

திரைப்படம்—

விழா, சென்னை 528

தீண்டாமை—

ஒழிப்புக்கான ரோந்துப் படை 777—778

தீயணைப்பு—

குழித்துறையில் நிரந்தர நிலையக் கட்டிடம் அமைத்தல் 782
நத்தத்தில் நிரந்தர நிலையக் கட்டிடம் அமைத்தல் 781

தீர்மானங்கள்—

அத்தியாவசியப் பணிகளை நிர்வகிக்கும் அவசரச் சட்டம், 1978—நிராகரிக்கக் கோருதல் (த.நீ.) 343—366
ஆளுநர் உரை 50—90, 93—116, 411—483

பார்க்க ஒத்திவைப்புத் தீர்மானம்

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை 116—118, 409—41[illegible]
பேரவை நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல் 975
பொதுக்கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களின் பணிக்காலம் நீட்டித்தலும், வெற்றிடங்களை நிரப்புதலும் 341—342
விதி 41 (3)ஐத் தளர்த்தல் 553

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

துரை கலியமூர்த்தி திரு.—

அரசு கலைக் கல்லூரி, சேத்தியாதோப்பு 835
ஊராட்சி ஒன்றியங்களில் கிராமப் பணிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கல் 769
கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் 170
கீழத்திருக்கழிப்பாலை கிராமத்திற்கு பாசன வசதி 832
குடிநீர், சிதம்பரம் நகருக்கு குடிநீர் குறையினை நீக்குதல் 721—722
குமாரக்குடி கிராமத்தில் பட்டாக்கள் வழங்கல் 834
சாலை ஆக்கிரமிப்பு, சிதம்பரம் வட்டம் 148—149
சிதம்பரம் வட்டத்தில் பாசன மதகுகள் சிலரால் இடிக்கப் பெற்றது (க.ஈ.) 898, 899
சிதம்பரம் வட்டத்தில் ஹையர் செகண்டரி பள்ளிகள் 805—806
சிதம்பரம் வட்டம் பாளையங்கோட்டையை நகரப் பஞ்சாயத் தாக்குதல் 833
பத்திரப்பதிவு அலுவலகம், சேத்தியாத்தோப்பு, கட்டடம் 164
வெள்ளாற்றில் தார் எடுத்தல் 14—16

துரை கோவிந்தராசன், திரு.—

உறுப்பினருக்கு ஒதுக்கப்பெற்ற வீட்டில் பிறர் தங்கி இருப்பது குறித்து (த.வி.) 859

துரை முத்துசாமி, திரு.—

உறுப்பினர்கள் 41, 42, 184 ஆகிய விதிகளின்கீழ் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து (த.கோ.) 869
உறுப்பினருக்கு ஒதுக்கப்பெற்ற வீட்டில் பிறர் தங்கி இருப்பது குறித்து (த.வி.) 859, 860
காவல் நிலையம், வியாசார்பாடி [illegible]
குடியிருப்புகள், பேறுகால மருத்துவ உதவியாளர்களுக்கு அளித்தல் 715—716
சர்க்கரை ஆலைகள் 739—741
நவீன அரிசி ஆலை, கள்ளக்குறிச்சி 431

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தொழிற்சாலைகள்—தொடர்ச்சி.

மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) சட்ட முன்வடிவு, 1978

613—614

மருத்துவமனை, சங்கராபுரத்தில் பெண் மருத்துவ அலுவலர் நியமனம் 621

மின்வழங்கு மீட்டர்கள், பஞ்சாயத்துக்களில் பொருத்தல் 813—814

விமான தளம், உளுந்தூர்ப்பேட்டையில் உள்ளதை சீர்செய்தல் 705—709

துரைமுருகன் திரு.— 717—718

அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனின் ஆண்டறிக்கை இந்தியில் அனுப்பப்பட வேண்டும் என்று சொல்லப் பெறுவது குறித்து

926—927

அண்ணா விவசாயப் பண்ணை, பழச் செடிகள் கொள்முதல் 928—929,

உறுப்பினர்கள் 41, 42, 184 ஆகிய விதிகளின்கீழ் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து (த.கோ.) 310—311

873, 874,
875, 876,

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1978 877, 879

தேம்பள்ளி—திருவலம் வரத்துக் கால்வாய் பழுதுபடல் 595

பேரவைத் தலைவரைப் பதவியில் இருந்து நீக்கக் கோரும் தனித் தீர்மானம் குறித்து (த.கோ.) 749

540—545

வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிறகாரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண விதங்களைத் திருத்தி அமைத்தல் சட்ட முன்வடிவு, 1978

துலுக்காணம், திரு. வ.— 935

உளுந்தூர்ப்பேட்டை மயிலாடும் தாங்கல் கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்து (க.ஈ.)

குடியிருப்புகள், தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள அரிசனங்களுக்கு 380

மருத்துவமனை, உளுந்தூர்ப்பேட்டையில் டாக்டர்கள், நர்சுகள் நியமிக்காதது 810—811

809—810

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தொழிற்சாலைகள்—தொடர்ச்சி.

துறைமுகங்கள்—

தொண்டி, சீர்திருத்தம் 309—310

தொழில்கள்—

தொழிற்சாலை மையங்கள் ஏற்படுத்தல் 793

பழரசத் தொழிற்சாலை, கொல்லிமலை 534

தொழில்கல்வி—

விவசாய பாலிடெக்னிக், நாவலூர்-கொட்டப்பட்டி, அமைத்தல் 513—514

தொழிலாளர்கள்—

ஏற்காடு, தோட்டம், ஊதியம் 169—170

சர்க்கஸ் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நலச் சட்டங்கள் அமல் செய்தல் 305—306

சலவைத் தொழிலாளர் பெயர் மாற்றம் 162

சுருட்டு, பீடி எண்ணிக்கை 165

தேசிய பஞ்சாலை போனஸ் 158

தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு புத்தக வங்கிகள் ஏற்படுத்தல் 720—721

தோல் பதனிடும் தொழிலாளர்கள், எண்ணிக்கை 536

நல நிதி, செலவு, வடாற்காடு மாவட்டம் 504—505

பீடித் தொழிலாளர்களுக்கு சேமநல நிதி பிடிக்கும் சட்டம் கொண்டுவருதல் 719

மணல்மேடு பஞ்சாலைத் தொழிலாளர்கள் 827—828

மருத்துவமனை, மானாமதுரை 527

மலைத் தோட்டத் தொழிலாளர், ஊதிய நிர்ணயம் 28—31

வடலூர், சேஷசாயி தொழிற்சாலை சிறுபான்மை சங்கத்துடன் செய்த ஒப்பந்தம் ரத்து செய்தல் 25—28

தொழிற்சாலைகள்—

அரூர் வட்டத்தில் அமைத்தல் 804

பக்கங்கள்

தொழிற்சாலைகள்—தொடர்ச்சி.

த—தொடர்ச்சி.

ஆயத்த ஆடை தயாரிக்கும் நிலையங்கள், கோ-ஆப்டெக்ஸ் மூலம் நிறுவுதல் 169
ஊத்தங்கரை தாலுகாவில் பனஞ் சர்க்கரை ஆலை 843
கடிகாரத் தொழிற்சாலை, உதகை 517
செயற்கை வைரம் தயாரிப்பு 167
பால் பவுடர், நிறுவுதல் 173
பெரியபுலியூர் சாராயத் தொழிற்சாலை, கழிவு நீர் 314—315
முந்திரி, தென்னாற்காடு மாவட்டத்தில் அமைத்தல் 164
மேட்டூர் கெமிகல் கம்பெனிகளின் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு (க.ஈ.) 46—49

"ந"

நடராசன், திரு. ஆ.—
காலணிகள், வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி 843—844
குத்தகை நிலம், வழக்குகள், கோவை 494—496
கோவை பாளையம் தோட்டப் பகுதியில் குடிசை மாற்றுப் பணிகள் 816
கோவை விவசாயப் பல்கலைக் கழகப் பூங்கா 817
கோழிப் பண்ணை (தனியார்)களுக்கு அரசு மானியம் 785—786
பால் பவுடர் தொழிற்சாலை நிறுவுதல் 173
பீடித் தொழிலாளர்களுக்கு சேமநல நிதி பிடிக்கும் சட்டம் கொண்டுவருதல் 719
புதுப்பதி—சின்னாம்பதியில் குழந்தைகள் நல மையங்கள் 817
பேரூருக்கு மினி பேருந்து வசதி 172

நல்லதம்பி, திரு. தி. சு.—
சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 406—407
மெக்சிகன் டிராலர்கள் 778
வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிறகாரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தி அமைத்தல் சட்ட முன்வடிவு, 1978 935

நா

பக்கங்கள்

நாராயணசாமி, திரு. கே.—
கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு, 1978 639, 945, 954—955
மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 962, 969, 970

நி.

நிதி அலுவல்—
அ.மா.கோ. (முதல்) 1978-79—(பொ.வி.) 178—243
அ.மா.கோ. (முதல்), 1978-79, வாக்கெடுப்பு:
கதர் 247
கல்வி 245
காட்டு வளத் துறை 249
காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு 251
கூட்டுறவு 246
சமூக நலன் 247
சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 251
சாலைகளும் பாலங்களும் 249
சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் 249
சிறைச்சாலைகள் 245
சின்கோனா 246
செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் 250
தொழில்கள் 246
செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் 250
நகர்ப்பகுதி மேம்பாடு 248
நுகர்பொருள் வழங்கல் 248
பல்வகை 249
பல்வகை மூலதனச் செலவு 251
பழங்குடியினர், அரிசனங்கள் முதலியவர்களின் நலன் 247
பாசனம் 248

நி—தொடர்ச்சி

	பக்கங்கள்
நிதி அலுவல்கள்—தொடர்ச்சி.	
நி.மா.கோ. (முதல்), 1978-79, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.	
பின்தங்கிய வகுப்பினர் முதலியவர்களின் நலன்	247
பொதுச் சுகாதாரம் .	245
பொதுப் பணிகள்—கட்டடங்கள்	248
பொதுப்பணித்துறை கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு	250
மருத்துவம்	245
மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்	251
மாநில ஆட்சித் தலைவர். அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்	240
மாவட்ட நிர்வாகம்	244
மீனளம்	246
மோட்டார் வண்டி வரிச் சட்டங்கள்—நிர்வாகம்	243
வேளாண்மை	246
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு	250
நிலங்கள்—	
உச்சவரம்பு சட்டம், உபரி நிலம்	536—537
ஒப்படை செய்யப்பட்ட நிலங்களின் மேம்பாட்டிற்கு மானியம்	753—754
கல்ராயன் மலைகளிலுள்ள ஜாகீர் நிலங்கள் சர்வே செய்தல்	735
குமரக்குடி கிராமத்தில் பட்டாக்கள் வழங்கல்	834
கோடாரங்குளம் கிராமத்திலுள்ள இனாம் நிலங்கள் மாற்றம்	767
கோயில்கள், குத்தகை வழக்குகள், கோவை	494—498
'செட்டில்மெண்ட்' ஜவ்வாது மலைப் பகுதி	498
தஞ்சை மாவட்டத்தில் மனைப் பட்டாக்கள்	847
திருக்கோவிலூர், விழுப்புரம் வட்டங்களில் மனைப் பட்டா வழங்குதல்	13—14
தீய புறம்போக்கு, மோத்தக்கல் ஊராட்சி, வசிப்போருக்கு பட்டா வழங்குதல்	12—13
தேனாஞ்சேரி கிராமத்தில் உபரி	166—167
நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம், கைப்பற்றப்பட்ட நிலங்கள்	496—497

நி—தொடர்ச்சி.

	பக்கங்கள்
நில அளவு வரைப்படம் உரிமையாளர்களுக்கு வழங்குதல்	11—12
பொதுப் பணித் துறை நிலங்களில் ஆக்கிரமிப்பு	845
நினைவுச் சின்னங்கள்—	
அண்ணா சிலை அலங்காரம், செலவு	123—124
நீக்கங்கள்	135, 143
	144, 151
	233, 265
	329, 330
	388
நீதிமன்றங்கள்—	
அலுவலர்களுக்கு அரசு வாகனங்கள் அளித்தல்	301—303
ஆத்தூரில் முன்சீப் கோர்ட்	759—760
பொன்னமராவதியில் முகாம் நீதிமன்றம்	300—301
மாவட்ட நீதிமன்றம், தூத்துக்குடியில் அமைத்தல்	19—22
முதல் வகுப்பு நீதிமன்றம். கள்ளக்குறிச்சியில் அமைத்தல்	18—19
விருத்தாசலத்திலுள்ள மாவட்ட முன்சீப் கோர்ட் கட்டிடத்தைப் பழுதுபார்த்தல்	795
நீர்ப்பாசனம்—	
அருவிக்கரை மதகுக்கு (Weir) பதிலாக ரெகுலேட்டர் கட்டுதல்	33
அவினாசித் தொகுதியில் குட்டைகளைப் பழுது பார்த்தல்	818
இறவைப் பாசனம், திருமேனி ஏரி, மன்னார்குடி தாலுக்கா	527
இறைவை, வேதாரண்யம் தொகுதி	491—492
ஒலகலம்பாடி கிராமத்தில் சிறு விவசாயிகள் இறைவைப் பாசனத் திட்டம்	768
கடம்பாகுளம் மராமத்து	854
காம்பக்குடி ஒன்றியப் பகுதி	514—517
கரிசல்குளம், வடகரை கிராமம், விஸ்தரித்தல்	313—315
கல்லணை ஊளிக்கூண்டில் நீர்க்கசிவு (க.ஈ.)	569—570

பக்கங்கள்

நீ—தொடர்ச்சி

நீதி மன்றங்கள்—தொடர்ச்சி.

கிளிக்கூடு அருகில் காவிரியில் மணற்போக்கி அமைத்தல் 844
கிளியனூர் ஏரி சீரமைப்பு 783—784
கீழத்திருக்கழிப்பாலை கிராமத்திற்கு பாசன வசதி 832
'கொடுமுடியாறு' திட்டம், நெல்லை மாவட்டம் 487—490
சக்கரக்கோட்டை கண்மாய் 149—150
சத்தியமங்கலம் தொகுதி ஏறகள்ளியில் ஏரி கட்டும் திட்டம் 780
திருநாறையில் ஏரி அமைக்கும் திட்டம் 779—780
புதுப்பீர்கடவு கிராமத்தில் ஏரி கட்டும் திட்டம் 780
வரதப்பாளையம் குளத்தை செப்பனிடும் திட்டம் 781
சிறுமலை நீர்த்தேக்கத் திட்டம் 826
சேரன்மாதேவி தொகுதியிலுள்ள பாசனக் குளங்கள் 811
தச்சூர் ஆற்றிலிருந்து அகரம் ஏரிக்கு கால்வாய் வெட்டுதல் 820
திருப்பத்தூர் ஏரியை பழுதுபார்த்தல் 814
தேம்பள்ளி—திருவலம் வரத்தக் கால்வாய் பழுதுபடல் 749
நெய்யாறு இடது கரை கால்வாயில் தண்ணீர் விடாமை, குமரி மாவட்டம் (க.ஈ.) 567—568
பாசனத் திட்டம், புகழூர் நதி, கரூர் தொகுதி [illegible]
புள்ளம்பாடி வாய்க்காலில் இருந்து கிளை வாய்க்கால் 805
பூமலைக்காடு ஏரி, பழுதுபார்த்தல் 164
பெறுகொண்டாபுரம் ஏரிக்கு வரத்துக் கால்வாய் வெட்டல் 843
மணிமுத்தாறு நீர்ப்பிடிப்புப் பகுதிகள், மழை பொய்த்து விட்டமை (க.ஈ.) 570—574
மத்துவராயபுரம் கிராமம் சின்னாற்று நீரைப் பயன்படுத்துதல் 33
மன்னார்குடி வட்டத்தில் பாசன வசதிகள் 825—826
மானாம்பதி பெரிய ஏரியை ஆழப்படுத்துதல் 844—845
முகவை மாவட்டத்தில் வெள்ளச் சேதத்திற்கான தடுப்புச் சுவர்கள் 829
மேல் சோழங்குப்பத்தில் புதிய ஏரி கட்டுதல் 82[illegible]
வடகரை கிராமம் மேட்டுக் கால்வாய் மண் அரிப்பினால் பாதிப்பு 818—819
வடூர் ஏரியை ஆழப்படுத்தி பராமரித்தல் 826

ந—தொடர்ச்சி.

நீர்ப்பாசனம்—தொடர்ச்சி. பக்கங்கள்

150—151
வால்பாறை மேற்பகுதியிலுள்ள நிலங்கள் 806
வெண்ணாற்றின் தென்கரையைப் பலப்படுத்துதல் 14—16
வெள்ளாற்றில் தூர் எடுத்தல்

நுகர்பொருள்—
ஓட்டப்பிடாரம், கயத்தாறு ஊராட்சிகளிலுள்ள நியாய விலைக் கடைகள், பண்டக சாலைகள் 846—847
நியாய விலைக் கடைகள், மத்திய அரசால் மாநிலத்தில் அமைத்தல் குறித்து 731

நூலகங்கள்— 137—139
பல்கலைக் கழக வெளியீடுகள் வைத்தல்

நெசவு— 539
விசைத்தறிக் கூட்டுறவுச் சங்கம்

ப

பண்ணை சேதுராம், திரு. கே.— 289—290
அமுதம் அங்காடி, கொடைக்கானலில், நிறுவுதல்
இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவன தொழில் தகராறு குறித்து 886
உறுப்பினர்கள் 41, 42, 184 ஆகிய விதிகளின்கீழ் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து (த.கோ.) 867, 868
கொடைக்கானலில் அரசுப் பேருந்து பணிமனை அமைத்தல் 32
சென்னை மாநகராட்சியில் நிலவரி நிலுவை 128—129
கொடைக்கானலில் பணிமனை அரசுப் பேருந்து, அமைத்தல் 32
பெரியகுளம் அரசினர் உயர்நிலைப்பள்ளி, கட்டடம் 162
போக்குவரத்து, பெரியகுளம் பேருந்து நிலையம், விரிவுபடுத்துதல் 723

பயணப்படி— 745
காவல் துறையினருக்கு வழங்குதல்

பயணிகள் விடுதி— 730
தொட்டபெட்டா சிகரத்தில் அமைத்தல்

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

பயிற்சி நிலையம்—

அறிவியல் கண்ணாடிப் பொருட்களை உருவாக்குதல் 819

பரமசிவம், திரு. மொ.—

கிளியனூர் ஏரி சீரமைப்பு

புதுக்குப்பம் உயர்நிலைப்பள்ளி, புதிய கட்டிடம் 783—784 161

பல்கலைக் கழகம்—

கோவை விவசாயப் பல்கலைக் கழக பூங்கா 817

பழனிசாமி, திரு. சொ. ந.—

அவிநாசி ஊராட்சி ஒன்றியம், பிரித்தல் 303

சாவகட்டுபாளையத்தில் குடிநீர் வழங்கல் 758

தமிழ்நாடு நூற்பு ஆலைகள், அவினாசி வட்டம், அரசு ஏற்று நடத்தல் 316

நீர்ப்பாசனம், அவினாசித் தொகுதியில் குட்டைகளைப் பழுது பார்த்தல் 818

மருத்துவராயபுரம் கிராமம் சின்னாற்று நீரைப் பயன் படுத்துதல் 33

பழனிமுத்து, திரு. சி.—

அண்ணா போக்குவரத்துத் தொழிலாளர்கள் இடமாற்றம் செய்யப்படுவது குறித்து (க.ஈ.) 901

கல்ராயன் மலைகளிலுள்ள ஜாகிர் நிலங்கள், சர்வே செய்தல் 735

து.மா.கோ. (முதல்). 1978-79 (பொ.வி.) 183—188

நீதிமன்றம், ஆத்தூரில் முன்சீப் கோர்ட் 759—760

பெரிய கிருஷ்ணாபுரம் அரசினர் உயர்நிலைப் பள்ளி கட்டடம் 161

பழனியப்பன், திரு அ. ப.—

கல்லூரி ஆசிரியர்கள், யு.ஜி.சி. ஸ்கேல், கூடுதல் செலவு 501—502

மாவட்ட மருத்துவ அலுவலர்கள், நபர்கள் 34—35

பழனிவேல், திரு. என்.—

ஆலயங்களில் உயிர்ப்பலி 133—136

இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 629—630

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

பழனிவேல், திரு. என்.—தொடர்ச்சி.

கலைவாணர் அரங்கம், ஒரு நாளைய சராசரி வருமானம் 783

து.மா.கோ. (முதல்), 1978-79 (பொ.வி.) 188—190

நிலங்கள், மதுரை மாவட்டத்தில் உபரி நிலங்கள் எடுத்தல் 732—733

பஞ்சாலைகள், பழனி தாலூகா 752—753

பழனி வட்டத்தில் குடிநீர் வழங்கு திட்டங்கள் 742

வரட்டாறு, பழனி வட்டம், மேல்நிலைப் பாலம் 520

விவசாயம், மதுரை மாவட்டத்தில் வனப்பகுதி நிலங்கள் 808

வேலைவாய்ப்பு, மதுரை மாவட்ட அலுவலகத்தில் பதிவு செய்துள்ளோர் 759

பள்ளிகள்—

அபிஷேகபுரம் பகுதி தனியார் பள்ளி நிர்வாக நிலை—(க.ஈ.) 337—345

அம்மாபேட்டை ஒன்றியம், தொடக்கப் பள்ளிக்குக் கட்டடங்கள் 166

உயர்நிலைப் பள்ளிகள், அறிவியல் ஆய்வுக்கூடங்கள் 830

உயர்நிலைப்பள்ளி, தொழிற் பயிற்சிப் பிரிவு தொடங்குதல் 830

உயர்நிலைப்பள்ளி, (பெண்கள்), குத்தாலத்தில் துவங்குதல் 829—830

உயர்நிலைப்பள்ளி, வில்லியநல்லூர் பகுதியில் துவங்குதல் 830

கட்டடங்கள், ஊராட்சி ஒன்றியம், மாயூரம், அரசு மானியம் 529

கலசப்பாக்கம் ஒன்றியத்தில் புதிய துவக்கப் பள்ளிகள் திறத்தல் 813

சிதம்பரம் வட்டத்தில் ஹையர் செகண்டரி பள்ளிகள் 805—806

தனியார் பள்ளி, கீழ்மாவியங்கை, தென் ஆற்காடு மாவட்டம் 521

திருப்போரூர் தொகுதியில் அரிசன நலப்பள்ளிக் கட்டடங்கள் 756—757

நெல்லிக்குப்பம் அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, கட்டடம் 162

புதுக்குப்பம் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் 161

புதுப்பாளையம் உயர்நிலைப்பள்ளி, விஞ்ஞானக்கூடம் 171—172

புள்ளிமங்கலம் உயர்நிலைப்பள்ளி, கட்டடம் 762

பெரிய கிருஷ்ணாபுரம் அரசினர் உயர்நிலைப் பள்ளி கட்டடம் 161

பெரியகுளம் அரசினர் உயர்நிலைப் பள்ளி, கட்டடம் 162

ராஜாஸ்கட்டளை கிராமம், பள்ளிக் கட்டடம் 139—140

வெள்ள நிவாரணப் பணிகளின்கீழ் பழுதுபார்த்தல் (வ.ஆ.) 174

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

பள்ளிவாசல்—
இந்திரா நகர், சென்னை 532

பாண்டியன், திரு. பி. எச்.—
சேரன்மாதேவி தொகுதியிலுள்ள பாசனக் குளங்கள் 811
பேருந்து நிலையம், சேரன்மாதேவி புயலில் பாதிப்பு 23

பால்—
ஊத்தங்கரையில் திட்டம் துவக்குதல் 856
தமிழ்நாடு பால்வளக் கழகத்தின் சித்திரக்குளம் பூத்தில் தவறான எடை உபயோகம் 791
பால்பெருக்குத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட தொகை 821—823

பால்வாடி—
புதுப்பதி—சின்னாம்பதியில் குழந்தைகள் நல மையங்கள் 817

பாலங்கள்—
நொண்டி ஆற்றின் குறுக்கே 757
பரலியார் குறுக்கே 805
வடாற்காடு மாவட்டத்தில் வெள்ள நிவாரணப் பணியின்கீழ் போடப்பட்டவை 787—788
வரட்டாறு, பழனி வட்டம், மேல்நிலைப் பாலம் 520
வாணியாற்றின் குறுக்கே 804

பாலன், திரு. சு.—
குடிசைமாற்று வாரிய வீடுகள். குடிக்கூலி 142—144

பாலிடெக்னிக்ஸ்—
ஆண்கள் பள்ளியில் பெண்களைச் சேர்த்தல் 787—788

பாலுச்சாமி, திரு. அ.—
சிறுமலை நீர்த்தேக்கத் திட்டம் 826

புயல்—
தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்ட சேதங்கள் 739

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

புருஷோத்தமன், திரு. து.—
உறுப்பினர்கள் 41, 42, 184 ஆகிய விதிகளின்கீழ் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து (த.கோ.) 867
சென்னையில் மழையினால் பாதிக்கப்பட்ட குடிசைகள், உதவி 158

புவியியல் ஆராய்ச்சி—
சென்னை-மகாபலிபுரம் பகுதி, ஹைட்ரோலாஜிகல் சர்வே 505

புஷ்பராஜு, திரு. த.—
கரம்பக்குடி ஒன்றியப் பகுதி, பாசன வசதி 514—517
புதுக்கோட்டை நகர், தனி வட்டாட்சியர் நியமித்தல் 769
போக்குவரத்துக் கழகப் பணிமனைகளை விஸ்தரித்தல் 764
போக்குவரத்துக் கழகம் (சோழன்) பணிமனையினை சீர் திருத்தம் செய்தல் 764—765

பேரவை—
பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை (தீ.) 116—118
பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப் பெற்றது குறித்து (ஒ.பி.) 395, 409—410
நடவடிக்கை (தீ) 409—410
வெளி நடப்பு 256

பொது நிர்வாகம்—
இராதாபுரம் துணை வட்டத்தை தனி வட்டமாக மாற்றுதல் 839
புதுக்கோட்டை நகர், தனி வட்டாட்சியர் நியமித்தல் 769
நெல்லையை இரண்டாகப் பிரித்தல் 750

பொறியியல்—
பொறியியல் கழகங்கள், பணியாளர்கள் 833

பொன்னுரங்கம், திரு. ப.—
சென்னை மாநகராட்சி பள்ளி ஆசிரியர்கள், வீடுகள் 173
வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தி அமைத்தல் சட்ட முன்வடிவு, 1978 940

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

பொன்னையன், திரு. சி.—

அண்ணா போக்குவரத்துத் தொழிலாளர்கள் இடமாற்றம் செய்யப்படுவது குறித்து (க.ஈ.அ.) 904, 905—906

அத்தியாவசியப் பணிகளை நிர்வகிக்கும் அவசரச் சட்டம், 1978 (நிராகரிக்கக் கோருதல்) (த.தீ.) 348—349, 905—906

ஆளுநர் உரை (தீ) 447—448

வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண விதங்களைத் திருத்தி அமைத்தல் சட்ட முன்வடிவு, 1978 934, 935

போக்குவரத்து—

"அண்ணா, பெரியார்" கப்பல்கள் இலாபம் 506—508

ஆட்டோ ரிக்ஷா கட்டணம், உயர்த்தக் கோரிக்கை 509—515

ஆரணி பேருந்து நிலைய இடமாற்றம் 722

கழகப் பணிமனைகளை விஸ்தரித்தல் 764

கழகப் பணியாளர்களில் தாழ்த்தப்பட்டோர் எண்ணிக்கை 159—160

சென்னையில் டாக்சி டிரைவர்கள் மீது வழக்குகள் 760

சேரன், பணி விதிகள் 145—148

சோழன் போக்குவரத்துக் கழகப் பணிமனையினை சீர்திருத்தம் செய்தல் 764—765

தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம் 789—790

திருவண்ணாமலை பேருந்து நிலையம், அமைத்தல் 723—724

தம்பியாற்றுப் பாலத்தை அகலப்படுத்துதல் 820—821

பணிமனை, அரசுப் பேருந்து, கொடைக்கானலில் அமைத்தல் 32

பல்லவன் பொறியியற் கழகம், பி.இ., பட்டதாரிகள் 533

பழனி அருகில் சிறிய விமானதளம் அமைத்தல் 131

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், நிலக்கரி கொண்டு வருதல் 787

பெரியகுளம் பேருந்து நிலையம் விரிவுபடுத்துதல் 723

பேருந்து ஓட்டுநர்கள், உரிமம் புதுப்பிக்கக் கட்டணம் 306—308

பேரூருக்கு மினி பேருந்து வசதி 173

வாடகை சைக்கிள் ரிக்ஷா, உரிமம் 531

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

போக்குவரத்து—தொடர்ச்சி.

விமானதளம், உளுந்தூர்பேட்டையில் உள்ளதை சீர்செய்தல் 717—718

விமானதளம், கன்னியாகுமரியில் அமைத்தல் 32

விமானதளம், தூத்துக்குடி அருகில் அமைத்தல் 32

வேலூர்-நாகர்கோயில் விரைவுப் பேருந்து, விபத்து குறித்து 718—719

ம.

மக்கள் தொகை—

சென்னை நகரம் 838

மணிமாறன், திரு. மா.—

அர்ச்சகர்கள் சட்டத்தை செல்லுபடியாக்கும் நடவடிக்கை 728—729

அரிசன குடியிருப்புகளுக்குச் சொத்து வரி 724—725

அருள்மிகு மாகாணநாத சுவாமி ஆலயப் பகுதியிலுள்ள அரிசன மக்களிடம் வசூல் கெடுபிடி (க.ஈ.) 881, 882

அறநிலையங்கள் மருத்துவமனை தொடங்குதல் 35

இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 624—626

கடன்கள், அரிசனங்களுக்கு தொழில் நடத்த வட்டியில்லாமல் கொடுத்தல் 832—833

கலப்படம், வழக்குகள் 532

கூட்டுறவுச் சங்கங்கள், கடன் தொகையைப் பணமாக வழங்குதல் 9—11

சமையல் எண்ணெய், சோளத்திலிருந்து 530

தஞ்சை மாவட்டத்தில் நஞ்சையில் மிளகாய் பயிரிடுதல் 846

தஞ்சை மாவட்டத்தில் பருத்தி, மிளகாய் பயிரிடும் நிலத்தின் பரப்பளவு 846

திரைப்படங்கள், பரிசு 531

நெல், தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தியான அளவு 845

பயிர் காப்புத் திட்டம், செயல்படுத்தல் 311—313

பொதுப்பணித் துறை நிலங்களில் ஆக்கிரமிப்பு 845

போக்குவரத்துக் கழகப் பணியாளர்களில் தாழ்த்தப்பட்டோர் எண்ணிக்கை 159—160

மாநில வங்கியின் விருந்தோம்பல் செலவு 786

விவசாயக் கூட்டுறவுச் சங்கம் கீரனூர், கடன் வழங்கப் படாமை (க.ஈ.) 556—557

ம—தொடர்ச்சி.

பக்கங்கள்

மணிமாறன், திரு. ஆர்.—

எண்ணெய் வித்துக்கள், உற்பத்தி 823—825

பாலிடெக்னிக், திருப்பூரில் அமைத்தல் 162

மதிப்பீட்டுக் குழு :

ஐந்தாவது, ஆறாவது அறிக்கைகள், அவைமுன் வைத்தல் 912

மருத்துவம்—

அரசு மற்றும் உள்ளாட்சி மன்ற ஊழியர்களுக்கான வசதி 518

ஆம்புலன்ஸ் வண்டிகள், கட்டணம் 519

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் வசதி 784

எம்.டி. படிப்பவர்கள் முழு ஊதியம் வாங்குவது குறித்து 315

சித்த வைத்தியர்கள், பதிவு செய்தல் 530

செயற்கை அவயங்கள் பொருத்து நிலையப் பணியாளர்களை நிரந்தரமாக்குதல் 803

திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள மூளைக் காய்ச்சல் பற்றி ஆராய அறிஞர் குழு 794—795

மருத்துவ ஆய்வாளர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் 747

மாவட்ட மருத்துவ அலுவலர்கள், நபர்கள் 34—35

மருத்துவ மனைகள்—

அறநிலையங்கள் தொடங்குதல் 35

ஆரம்ப சுகாதார நிலையம், வாசுதேவநல்லூர், கட்டிடத்தில் கீறல் ஏற்பட்டிருத்தல் குறித்து 716—717

உளுந்தூர்பேட்டையில் டாக்டர்கள், நர்சுகள் நியமிக்காதது 809—810

ஓசூரில் தொழிலாளர் கூட்டுறுதித் திட்டத்தின்கீழ் உருவாக்குதல் 798

கள்ளக்குறிச்சியில் குழந்தைகள் பிரிவு ஏற்படுத்தல் 819

கிராமப்புறங்களில் சித்த மருத்துவ மனைகள் அமைத்தல் 839

கோவை பயிற்சி மருத்துவ விடுதியில் உணவு வழங்கும் பிரிவு மூடப்பட்டிருத்தல் 742—743

சங்கராபுரத்தில் பெண் மருத்துவ அலுவலர் நியமனம் 813—814

திருப்பத்தூரில் இரத்தப் பரிசோதனை நிலையம் 756

திருவண்ணாமலையில் மருத்துவ அதிகாரிகள் பணி புரிதல் 755

பரசனூர் ஒன்றிய மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக்குதல் 163

ம—தொடர்ச்சி.

பக்கங்கள்

மருத்துவ மனைகள்—தொடர்ச்சி.

புதுப்பாளையம் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதி 841

மாயூரம் அரசினர் மருத்துவமனையில் படுக்கைகள் வசதி செய்தல் [illegible]

மேல்சித்தாமூர் ஆரம்பச் சுகாதார நிலையம், கட்டிடம் கட்டுதல் 314—315

ராஜா மிராஸ்தார் மருத்துவமனை, தஞ்சை, படுக்கைகள் 518—519

மலைவாழ் மக்கள்—

கொத்தளம் பகுதியில் மேம்பாட்டுத் திட்டம் 774

மலைஜாதியினர் வசிக்கும் இடங்கள் பற்றிய விவரம் 793—794

மனோகரன், திரு. கி.—

அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனின் ஆண்டறிக்கை இந்தியில் அனுப்பப்பட வேண்டும் என்று சொல்லப்பெறுவது குறித்து (த.கோ.) 539—540

அத்தியாவசியப் பணிகளை நிர்வகிக்கும் அவசரச் சட்டம் 1978, நிராகரிக்கக் கோருதல் (த.தீ.) 921—925, 926, 927, 928, 929, 930

உறுப்பினர்கள் 41, 42, 184 ஆகிய விதிகளின்கீழ் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து (த.கோ.) 350, 351, 352, 354—355, 361—364, 366, 879

ஊரகத் தொழில் துறை அமைச்சர் மீது (உ.பி.) 324, 325

எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பிற்கு அடிக்கப்பெற்ற மணியின் ஓசை குறித்து (ஒ.பி.) 604

து.மா.கோ. (முதல்), 1978-79 (பொ.வி.) 181, 182

து.மா.கோ. (முதல்), 1978-79, வாக்கெடுப்பு : 228—242

மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் 243—244

மாவட்ட நிர்வாகம் 244

மனோகரன், திரு. இ.—தொடர்ச்சி.

பக்கங்கள்

மோட்டார் வண்டி வரிச் சட்டங்கள்—நிர்வாகம். 243

நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன் வடிவு, 1978 252, 575—577

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை (தீ) 116, 117—118

பேரவைத் தலைவரைப் பதவியில் இருந்து நீக்கக் கோரும் தனித் தீர்மானம் குறித்து (த.கோ.) 543—544, 545

பேரவை நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல் (தீ) 975

பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களுடைய பணிக்காலத்தை நீட்டித்தலும், வெற்றிடங்களை நிரப்புதலும் (தீ.) 341—342

மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 252, 962, 964, 966, 967

முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி 1977-ல் தேர்தல் பிரசாரத்திற்காக வந்தபோது ஏற்பட்ட செலவு குறித்து (அ.வி.) 261—263

விதி 41(3) ஐத் தளர்த்தல் (தீ) 553, 879

மாணிக்கம், திரு. சி.—

சிறைச்சாலைக் கைதிகள் பல்கலைக் கழகத் தேர்வு எழுதுவதற்கான வசதிகள் 795—796

மத்திய சிறைச்சாலைகளில் நூலகங்கள் 796—797

மலைஜாதியினர் வசிக்கும் இடங்கள் பற்றிய விவரம் 793—794

மார்க்கபந்து, திரு. ரா.—

இந்து, சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 626—629

உறுப்பினர்கள் 41, 42, 184 ஆகிய விதிகளின்கீழ் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து (த.கோ.) 870, 871, 872, 874, 875, 876, 877

மார்க்கபந்து, திரு. ரா.—தொடர்ச்சி.

பக்கங்கள்

உறுப்பினருக்கு ஒதுக்கப்பெற்ற வீட்டில் பிறர் தங்கி இருப்பது குறித்து (த.வி.) 858—859

கடன் நிவாரணச் சட்ட முன் வடிவு, 1978 948—951

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1978 581—583

நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு, 1978 576

பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு, 1978 958—959

பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 1978. 917—919

பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட தொகை 821—823

வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்தம், தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு, 1978 375—377, 383, 384

மாரிமுத்து திரு. ஏ. ஆர்.—

அத்தியாவசியப் பணிகளை நிர்வகிக்கும் அவசரச் சட்டம், 1978 நிராகரிக்கக் கோருதல் (த.தீ.) 359—360

அரைமணி நேர விவாதம் குறித்து (த.கோ.) 175

கல்லணையிலிருந்து பட்டுக்கோட்டை கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்காமை (க.ஈ.) 897

சென்னைப் பெருநகர் போக்குவரத்துத் திட்ட அமைப்பின் செயற்குறிப்புகள் நிராகரிக்கப் பெற்றதாகச் சொல்லப் பெறுவது (க.ஈ.) 891

தூத்துக்குடி அனல் மின்நிலையம் 'கன்வேயர் பெல்ட்' தயாரிப்பு (த.கோ.) 36

முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி 1977-ல் தேர்தல் பிரசாரத்திற்காக வந்தபோது ஏற்பட்ட செலவு குறித்து, அரைமணி நேர விவாதம் (ஓ.பி.) 254, 255, 256

வினா நேரம் நீட்டிக்கப் பெறாதது குறித்து (த.கோ.) 318

மின்சாரம்—

கலசபாக்கத்தில் மின்துறை அலுவலகக் கட்டிடங்கள் வாடகைக் கட்டிடங்களில் இருப்பது குறித்து 741

மின்சாரம்—தொடர்ச்சி.

பக்கங்கள்

கன்னியாகுமரியில் மின்துறை அலுவலகக் கட்டிடங்கள், வாடகைக் கட்டிடங்களில் இருப்பது குறித்து 741
டிரான்ஸ்பார்மர்கள் வாங்குதல் 526
திருநெல்வேலி-தூத்துக்குடி, தொழிலாளர்களுக்குச் சலுகைகள் 282—286
திருமயம் வட்டம், மோட்டார்களுக்கு மின் இணைப்பு 736
பம்பு செட்டுகளுக்கு இணைப்பு, தருமபுரி மாவட்டம் 531
புதுக்கோட்டைக்கு தனிப்பிரிவு 282
மின் திட்டம், கோவை மாவட்டம் 521
மின் வழங்கு மீட்டர்கள் பஞ்சாயத்துக்களில் பொருத்தல் 705—709

மீ

மீன்வளம்—
கூட்டுறவு சம்மேளனங்கள் இயங்குதல் 16—18
தரங்கம்பாடியை மீன்பிடி துறைமுகமாக்கல் 730
மீன்பிடி டிராலர்கள் வாங்குதல் 772—773
முத்துக்குளிப்பு, தூத்துக்குடி 290—293
மெக்சிகன் டிராலர்கள் வாங்கியது 773

மீனாட்சிசுந்தரம், திரு. மா.—
புகையிலை, கொள்முதல் செய்யாத நிலை, வேதாரண்யம் பகுதி (க.ஈ.) 557, 559

முத்துசாமி கரையாளர், திரு. சு.—
மணிமுத்தாறு நீர்த் தேக்கத்திலிருந்து பெருங்கால் பாசனத்திற்குத் தண்ணீர் விடாமை (க.ஈ.) 695, 896

முத்தையா, திரு. இரா.—
பொது நிறுவனங்கள் குழு, அறிக்கை அளித்தல் 69

முருகேசன், திரு. கூ. ச.—
அபிஷேகபுரம் பகுதி தனியார் பள்ளி நிர்வாக நிலை (க.ஈ) 339—340
கல்லணை கிளிக்கூண்டில் நீர்க்கசிவு (க.ஈ.) 570

பக்கங்கள்

ய.

யூசுப், திரு. யா. சை. மு.—
இராதாபுரம் துணை வட்டத்தை தனிவட்டமாக மாற்றுதல். 839
காவல் நிலையக் கட்டிடம், பணக்குடி, புதுப்பித்தல் 522
'கொடுமுடியாறு' அணைக் கட்டுத் திட்டம், நெல்லை மாவட்டம். 487—490
நம்பியாற்றுப் பாலத்தை அகலப்படுத்துதல். 820—821

ர.

ரகுமான்கான், திரு. அ.—
அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் ஆண்டறிக்கை, இந்தியில் தரப்பட வேண்டுமென்று சொல்லப் பெறுவது குறித்து (த.கோ.) 539—540
920—921, 925—927
929
455—465
ஆளுநர் உரை (தீ.)
உறுப்பினர்கள் 41, 42, 184 ஆகிய விதிகளின் கீழ் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து (த.கோ.) 866—867

ரகுமான்கான், திரு. அ.—
325
ஊரகத் தொழில்துறை அமைச்சர் மீது (உ.பி.)
மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) சட்ட முன்வடிவு, 1978 611—613
மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 962—965
வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தி அமைத்தல் சட்ட முன்வடிவு, 1978 930—932, 938—939

ரகுராமன், திரு. வீ.—
கீழ்த்திருக்கழிப்பாலை கிராமத்திற்கு பாசனவசதி 832
டோபிகானா, பரங்கிப்பேட்டை 528

பக்கங்கள்

ரகோத்தமன், திரு. கோ.—

துணைக் காவல் நிலையங்கள், முகையூர் தொகுதி 160

காப்பகங்கள், முகையூர் தொகுதியில் குழந்தைகளுக்காக 762

திருக்கோவிலூர், விழுப்புரம் வட்டங்களில் மனைப் பட்டா வழங்குதல் 13—14

முகையூர் தொகுதியில் அரிசனங்களுக்கு மனைப்பட்டா வழங்குதல் 749

ரசாக், திரு. மு. மு. அ.—

கரிசல்குளம், வடகரை, விஸ்தரித்தல் 313—314

வடகரை கிராமம் மேட்டுக் கால்வாய் மண் அரிப்பினால் பாதிப்பு 818—819

ரமணி, திரு. கு.—

அத்தியாவசியப் பணிகளை நிர்வகிக்கும் அவசரச் சட்டம், 1978, நிராகரிக்கக் கோருதல் (த.நி.) 352—354, 358—359, 364

அரசியல் தியாகிகள் குழந்தைகளுக்கு இலவசப் படிப்புதவி 806—808

அரசு மற்றும் உள்ளாட்சி மன்ற ஊழியர்கள், மருத்துவ வசதி. 518

ஆளுநர் உரை (ஒ.) 56—63, 64

கோவை பயிற்சி மருத்துவ விடுதியில் உணவு வழங்கும் பிரிவு மூடப்பட்டிருத்தல். 742—743

சேரன் போக்குவரத்து, பணி விதிகள். 145—148

தேசியப் பஞ்சாலைத் தொழிலாளர்கள், போனஸ் 188

ரமணி, திரு. கு.—

பெரியப்புலியூர் சாராயத் தொழிற்சாலை, கழிவுநீர். 314

பேருந்து ஓட்டுநர்கள், உரிமம் புதுப்பிக்கக் கட்டணம் 306—308

மின்வாரியம், டிரான்ஸ்பார்மர்கள் வாங்குதல். 526

வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண விதங்களைத் திருத்தி அமைத்தல் சட்ட முன்வடிவு, 1978. 939

பக்கங்கள்

ராமநாதன், திரு. சி.—

வடலூர், சேஷசாயி தொழிற்சாலைத் சிறுபான்மை சங்கத்துடன் செய்த ஒப்பந்தம், ரத்து செய்தல். 25—28

ல.

லத்தீப், திரு. எம். ஏ.—

ஆளுநர் உரை (தீ.) 459, 473, 694,

உரிமைப் பிரச்சினை குறித்து (த.கோ.). 177

ஊரகத் தொழில் துறை அமைச்சர் மீது (உ.பி.). 320—323. 324, 325, 330,

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1978 588—590, 594

நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு, 1978 577

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப் பெற்றது குறித்து (ஒ.பி.) (அ.தீ.). 395, 410

பாரதியார் பிறந்தநாள் விழா குறித்து (த.கோ.). 177

மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு 1978. 393—394, 396—397, 400

வ.

வடிவேல், திரு. கு.—

கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு, 1978. 953—954

கரூர் கூட்டுறவு நூற்பாலையை விரிவுபடுத்தும் திட்டம். 820

பாசனத் திட்டம், புகழூர் நதி, கரூர் தொகுதி. 525

வரதட்சிணை முறை—

சட்டத்தை மீறியவர்கள் மீது நடவடிக்கை. [illegible]

வரதராஜன், திரு. என்.—

குடிசைப் பகுதி வாரிய வீடுகளில் வசிப்போருக்கு உள்ள நிபந்தனைகள், சலுகைகள். 851—853

மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978. 965

வரி(கள்).—

கோடாறங்குளம், செந்[illegible]ராம் இனாம் கிராமங்கள், மேல்வாரம் வசூலித்தல். 126—127

சென்னை மாநகராட்சியில் நில்வரி நிலுவை. 128—129

வ—தொடர்ச்சி.

பக்கம்

வழக்குகள்—
தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்கீழ். 834

வாகனங்கள்—
ஸ்கூட்டர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு. 526

வாசன், திரு. சீ. மு.—
நீதித்துறை அலுவலர்களுக்கு, அரசு வாகனங்கள் அளித்தல். 301—303
மருதூர் கால்நடை மருத்துவ மனைக் கட்டிட நிலைமை 865
ஜனதா விடுதி, சென்னை. 296—300

வாடகை கார்கள்—
குன்னூரில் நிறுத்த இடம் 831

வாரியங்கள்—
வக்ப், திருத்தியமைத்தல். 152—157
வீட்டுவசதி, தருமபுரி மாவட்டம் 163

விடுதி(கள்)—
அரிசன மாணவர் விடுதி, கலசப்பாக்கம் 534
சென்னையில் வேலை பார்க்கும் பெண்கள் தங்க. 782—783
ஜனதா விடுதி, சென்னை. 296—300

விபத்து—
பாதிக்கப்பட்ட பனையேறு தொழிலாளர்களுக்கு நிதி வழங்கல். 804

விவசாயம்—
அண்ணா விவசாயப் பண்ணை, பழச் செடிகள் கொள்முதல். 310—311
களக்காடு பகுதி விளைநிலங்களில் காட்டுப் பன்றிகள் தொல்லை. 751—752
கிராம விவசாய வளர்ச்சித் திட்டம், தருமபுரி. 168—169
குறுவைப் பயிர், பூச்சி தாக்குதல், தஞ்சை மாவட்டம் (க.ஈ.). 565—567
கூட்டுறவுக் கடன், மசினக்குடி விவசாயிகள், நீலகிரி. 526—527
கொல்லைக் கரையில் காப்பி விளைச்சல். 776—777
தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தியான நெல் அளவு. 845
தஞ்சை மாவட்டத்தில் நஞ்சையில் மிளகாய் பயிரிடுதல். 846
தஞ்சை மாவட்டத்தில் பருத்தி, மிளகாய் பயிரிடும் நிலத்தின் பரப்பளவு. 846

வ—தொடர்ச்சி.

பக்கங்கள்

விவசாயம்—தொடர்ச்சி.
நாவலூர் குட்டப்பட்டு கிராமத்திலுள்ள அறிவியல் நிலையத்தில் மாணவர்களுக்குப் பயிற்சி. 743—744
நிலக்கடலை பயிரிடுவோருக்கு அரசு உதவிகள். 790—791
பருத்தி சாகுபடி, தஞ்சை மாவட்டம். 528
பயிர்காப்புத் திட்டம், செயல்படுத்தல். 311—313
பாக்கு சாகுபடி, ஊக்கம். 534
பாலிடெக்னிக், நாவலூர்-கொட்டப்பட்டி, அமைத்தல். 513—514
புகையிலை, கொள்முதல் செய்யாத நிலை, வேதாரண்யம் பகுதி (க.ஈ.). 557—560
மதுரை மாவட்டத்தில் வனப்பகுதி நிலங்கள். 809
ரப்பர், கிராம்பு பயிரிடல், திட்டம். 499—500
வாம்பன் அருகே பழத்தோட்டப் பண்ணை. 168
விதைப்பண்ணை, பிளவக்கல் அணைக்கட்டுப் பகுதியில் அமைத்தல். 151—152
விவசாயிகளுக்கு கடன், கிழக்கு முகவை மாவட்ட நிலவள வங்கிகள் (க.ஈ.). 553—556
வெங்காயம் விலை வீழ்ச்சி (க.ஈ.). 563—565
வெற்றிலை கொடிக்கால் சாகுபடி, ஆராய்ச்சி, ஊக்கம். 836
வெற்றிலை கொடிக்கால் சாகுபடி, ஆராய்ச்சி, ஊக்கம். 535
ஜவ்வாது மலையில் அபிவிருத்தித் திட்டம். 847—848
ஜவ்வாது மலை விவசாயிகளுக்கு ஆடுகள் வழங்கும் திட்டம். 789

விளம்பரம்—
அரசுத் தரப்பில் நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், நடத்த குழுக்கள் தேர்வு. 131—133
இலக்கியம், பண்பாட்டு நிகழ்ச்சிகள் வள்ளுவர் கோட்டத்தில் நடத்த அனுமதி. 294—295
பொருட்காட்சிகள் மாவட்டங்களில் அமைத்தல். 168

விற்பனைக்கூடங்கள்—
அமுதம் அங்காடி, கோடைக்கானலில் நிறுவுதல். 289—290
ஒரப்பம், குந்தாரப்பள்ளி சந்தைகள். 163
கோ-ஆப்டெக்ஸ், வெளி மாநிலங்களில் அமைத்தல். 169
மாவட்ட ஒழுங்குமுறைக் கூடங்கள், விவரங்கள். 171

பக்கம்

விற்பனை வரி—

சோதனைகள் மூலம் கிடைத்த வரி வருமானம். 811

வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள். 1—35

விஜயராகவன், திரு. பொ.—

சட்ட அமைச்சரின் பேரவை செயலர் மீது (உ.பி.) 37—38

சட்டமன்றப் பேரவை அலுவலகத்தில் உள்ள நெருக்கடி குறித்து (த.கோ.) 176

மின்துறை அலுவலகக் கட்டிடங்கள், கன்னியாகுமரி, வாடகைக் கட்டிடங்களில் இருப்பது குறித்து. 741

வீட்டுவசதி—

ஆதி ஆந்திர அரிசன மக்களுக்கு குடிசை மாற்று வாரியம் மூலமாக, வீடுகள். 842

குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள், மின்வசதி. 144

குடிசைமாற்று வாரிய வீடுகள், குடிக்கூலி. 142—144

கோவை பாளையம் தோட்டப் பகுதியில் குடிசை மாற்றுப் பணிகள். 816

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகள் ஒதுக்குதல். 124—126

சென்னை மாநகராட்சி பள்ளி ஆசிரியர்களுக்கு. 173

நீலகிரி மாவட்டத்தில் அரசு ஊழியர்களுக்கு. 765

புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு. 141—142

வாரியப் பணிகள், தருமபுரி மாவட்டம். 163

வீரப்பன், திரு. ஆர். எம்.—

அத்தியாவசியப் பணிகளை நிர்வகிக்கும் அவசரச் சட்டம், 1978 நிராகரிக்கக் கோருதல் (த.தீ.). 357

அருள்மிகு மாகாணநாத சுவாமி ஆலய பகுதியிலுள்ள அரிசன மக்களிடம் வசூல் கெடுபிடி (க.ஈ.). 881—882

இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978. 623, 635—639

மணிமுத்தாறு நீர்ப்பிடிப்பு பகுதிகள், மழை பொய்த்து விட்டமை, (க.ஈ..அ.) 570—572, 573—574

பக்கம்

வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா.—

வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தி அமைத்தல் சட்ட முன்வடிவு, 1978. 932—933

வெள்ள நிவாரணப் பணி—

வடஆற்காடு மாவட்டத்தில் சாலை வேலைகள். 748

வெளியீடு—

'தமிழரசு' ஏடு. 778

வேணுகோபால், திரு. த.—

எடுத்தனூர் அரிசன குடியிருப்பில் தெரு விளக்குகள். 743

ஒலகலம்பாடி கிராமத்தில் சிறு விவசாயிகள் இறைவைப் பாசனத் திட்டம். 768

கூட்டுறவு கடன் வசதி, அண்டம் பள்ளம் விவசாயிகளுக்கு புறக்கணிக்கப்படுவது. 7

பூமலைக்காடு ஏரி, பழுதுபார்த்தல் 164

ஸ்கூட்டர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு. 526

வேலை வாய்ப்பு—

செகண்டரி கிரேடு ஆசிரியர் பதவிக்கு பதிவு செய்து கொண்டவர்கள், விவரம் 172

திருச்சி அலுவலகக் கட்டடம். 759

மதுரை மாவட்ட அலுவலகத்தில் பதிவு செய்துள்ளோர். 759

வேலை தேடித் தரும் அலுவலகம், வட ஆற்காடு மாவட்டம், பதிவு செய்துள்ளவர்கள். 523—524

வேலை வாய்ப்புத் தேடித் தரும் அலுவலகங்கள், பதிவு செய்துள்ளவர்கள். 524

வேலுச்சாமி, திரு. ஓ. சோ.—

மாவட்ட நீதிமன்றம், தூத்துக்குடியில் அமைத்தல். 19—22

நாகர்பொருள், ஓட்டப்பிடாரம், கயத்தாறு ஊராட்சிகளிலுள்ள நியாய விலைக் கடைகள், பண்டகசாலைகள். 846—847

ஜ.

ஜான் வின்சென்ட், திரு. மு.

கால்நடைகள், களக்காடு பகுதியில் மேய்ச்சல் இடம். 808—809

கால்நடைகள், கேரளாவிற்கு கடத்தப்படுதல். 519

ஐ—தொடர்ச்சி.

பக்கங்கள்

வேளாண்மை, கலக்காடு பகுதி விளை நிலங்களில் காட்டுப் பன்றிகள் தொல்லை. 751—75

ஜெபமணி, திரு. ச.—

இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978. 633—634

வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தி அமைத்தல் சட்ட முன்வடிவு, 1978 935

வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்தம், தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு, 1978. 374—3

ஜெயவேலு, திரு. எம். ஏ.—

சட்ட அமைச்சரின் பேரவைச் செயலர் மீது (உ.பி.). 39, 40

ஜேம்ஸ், திரு. ஜே.—

அத்தியாவசியப் பணிகளை நிர்வகிக்கும் அவசரச் சட்டம், 1978 நிராகரிக்கக் கோருதல் (த.தீ.). 360

அருவிக்கரை மதகுக்குப் (Weir) பதிலாக ரெகுலேடர் கட்டுதல். 3

ஆளுநர் உரை (தீ.). 75—80, 474—475, 478, 482,

உடுக்குறியிட்ட வினாக்கள் பதிலளிக்கப் பெறுவது குறித்து (ஒ.பி.) 681

உறுப்பினர்கள் 41, 42, 184 ஆகிய விதிகளின்கீழ் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து (த.கோ.) 864

து.மா.கோ. (முதல்), 1978-79 (பொ.வி.) 196—20

பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு, 1978. 957

பாஸியார் குறுக்கே பாலம். 905

மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) சட்ட முன்வடிவு, 1978. 614—616

மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு 1978. 391—393

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1978 செப்டம்பர் 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

*குறுகிய கால வினா எண். 1—

படாளம், திருவலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை பெற்ற கரும்பு.

திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-ம் ஆண்டு முதல் இதுவரை செங்கல்பட்டு மாவட்டம் படாளம், வட ஆற்காடு மாவட்டம் திருவலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு விவசாயிகளால் சப்ளை செய்யப்பட்ட கரும்பு டன் எவ்வளவு ?

(ஆ) டன் ஒன்றுக்கு விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட விலை விகிதம் ஆலைவாரியாக எவ்வளவு ?

(இ) விவசாயிகளுக்கு முழுத் தொகையும் கொடுக்கப்பட்டு விட்டதா ?

(ஈ) இதில் வைப்புத் தொகை போன்ற தலைப்புகளில் பிடித்தம் ஏதும் செய்யப்பட்டதா ?

(உ) கொடுக்கப்படாமல் நிலுவையில் உள்ள தொகை எவ்வளவு ? எப்போது கொடுக்கப்படும் ஆலைவாரியாக ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) படாளம் (மதுராந்தகம்) கூட்டுறவு சர்க்கரை ஆலை பெற்ற கரும்பு 2,80,308 டன்கள். திருவலம் (வேலூர்) கூட்டுறவு சர்க்கரை ஆலை பெற்ற கரும்பு 2,65,469.475 டன்கள்.

திருவலம் ஆலை, ஆம்பூர் சர்க்கரை ஆலைக்கு 44,474.673 டன்கள் கொ[illegible]துள்ளது.

(ஆ) படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலை கொடுத்த வி[illegible] டன் ஒன்றிற்கு ரூபாய் 115. திருவலம் ஆலையும் அதே விலைதா[illegible] கொடுத்தது.

(இ) படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலை முழுத் தொகை யையும் கொடுத்துவிட்டது. திருவலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை விவசாயிகளுக்கு இன்னமும் டன் ஒன்றிற்கு ரூபாய் 5 வீதம் கொடுக்க வேண்டும்.

(ஈ) படாளம் ஆலையில் டன் ஒன்றிற்கு ரூபாய் 5 மூன்று ஆண்டு வைப்புத் தொகையாக வாங்கப்பட்டுள்ளது. வட்டி விகிதம் 10 சதவீதம். பங்கு (Share) குறைவாக வைத்திரு[illegible] போரிடம் டன் ஒன்றிற்கு ரூபாய் 5 வீதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

திருவலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை கொடுக்க ஒப்பு கொண்ட விலை டன் ஒன்றிற்கு ரூபாய் 127.50. தற்போது கொடுக்கும் விலை டன் ஒன்றிற்கு ரூபாய் 115. டன் ஒன்றிற்கு ரூபாய் 7.50 திரும்பக் கொடுக்கப்படாத வைப்புத் தொகையாகப் பிடித்தம் செய்யப்படுகிறது.

(உ) படாளம் ஆலை கொடுக்க வேண்டிய தொகை ஏது மில்லை. திருவலம் ஆலை கொடுக்க வேண்டிய தொகை டன் ஒன் றிற்கு ரூபாய் 5 மட்டுமே.

கரும்புக்கு விலையாகக் கொடுப்பதில் படாளம் ஆலை நிலுவை வைக்கவில்லை. திருவலம் ஆலை கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகை ரூபாய் 13·52 இலட்சம். தற்போது நிலுவை யில் இருக்கும் தொகைகள் சர்க்கரை மார்க்கெட் சரிவினால் கொடுக்க முடியாமல் உள்ளன.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஆரம்பத்தில் டன் ஒன்றுக்கு ரூபாய் 100 கொடுக்கப்பட்டது. அதற்குப் பின்னால் ரூபாய் 5 கொடுக்கப்பட்டது. ரூபாய் 15 கொடுக்கும்போது, ரூபாய் 10 அவர்கள் சேவிங்ஸ்க்காகப் பிடித்துக் கொண்டார்கள். கடைசியில் அவர்களுக்கு மிஞ்சியது ரூபாய் 5 தான் டன் ஒன்றுக்கு. ஆகவே, அவ்வாறு பிடிக்கக்கூடிய தொகையை பிடிக்காமல் விவசாயிகளுக்கு அந்தத் தொகையை அப்படியே கொடுக்க அமைச்சர் அவர்கள் உத்திரவிடுவார்களா? இல்லாவிட்டால் இவ்வளவு ரூபாயை அவர்கள் அங்கே வைப்பாக விட்டு வைத்தால் பின்னால் அவர்கள் கூட்டுறவுக் கடன் வாங்க வேண்டி வரும். கடன் வாங்கி இப்படிப் பணம் சேர்க்க வேண்டுமா? ஆகவே, அதை ரத்து செய்து அந்தத் தொகை முழுவதையும் கொடுக்க அமைச்சர் அவர்கள் உத்திரவிடுவார்களா?

பேரவைத் தலைவரவர்
மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஓடிக் கொண்டிருக்
களே, சர்க்கரை ஆலைகள் மிகவும் நஷ்டத்தில் மீது இருந்த
கின்றன. காரணம், மத்திய சர்க்கார் சர்க்கரை அப்படி ரத்து செய்யப்
கட்டுப்பாட்டை ரத்து செய்தது ஆகும். விட்ட காரணத்
பட்டதன் காரணமாக சர்க்கரை விலை குறைந்து கொடுக்க
தால் இன்று சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்குக் ஏற்பட்டு
வேண்டிய தொகையைக் கொடுக்க முடியாத நிலை மத்திய
இருக்கிறது. இதை ஏற்கெனவே நாம் உறுப்பினர்
அரசுக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறோம். மாண்புமிகு கேட்டார்
ரூபாய் 15 அப்படியே கொடுக்கப்பட வேண்டும் என்று அவை
கள். ஆனால் அந்த நிலைமைகளை எல்லாம் பார்த்துத்தான் அதிலும்
களை ஒழுங்கு செய்ய வேண்டிய சூழ்நிலை இந்த அரசுக்கு—அளவிற்கு
குறிப்பாக கூட்டுறவுச் சர்க்கரை ஆலையைப் பொறுத்த
ஏற்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே,
திரு. பெ. சு. திருவேங்கடம்: விவசாயிகளுக்குக் கொடுக்
இன்றைய தினம் சர்க்கரை ஆலைகள் ஆகவே,
கும் தொகை ஆலைக்கு ஆலை வித்தியாசப்படுகிறது. எல்லா ஆலை
கூட்டுறவுச் சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில் அரசு ஏற்பாடு
களிலும் ஒரே தொகை நிர்ணயம் செய்து அளிக்க கொடுக்கப்படுகின்ற
செய்யுமா என்பதையும், அதே நேரத்தில் செய்யப்படுமா
தொகை ஒரே நேரத்தில் கொடுக்கப்படவும் ஆவன
என்று அறிய விரும்புகிறேன்.

பேரவைத் தலைவரவர்
மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : வேண்டிய தொகை
களே, சர்க்கரை ஆலைகளிலே கொடுக்கப்பட முடியாமல்
குறைந்ததற்கும், ஒரே சீரான விலையைக் கொடுக்க பட்ச விலை
இருப்பதற்கும் காரணம், மத்திய சர்க்கார் குறைந்த ஏற்
யாக ரூபாய் 85 கொடுக்க வேண்டும் என்று உத்திரவிட்டு சர்க்கரை
களவே இந்த அரசுக்கு அனுப்பி, அதன் அடிப்படையில் வேண்டும்
ஆலைகளில் குறைந்தபட்சம் ரூபாய் 85 நிர்ணயிக்க அல்லாது
என்று கேட்டுக் கொண்டு இருக்கிறோம். அது மட்டும் செய்யப்
இன்று ஒவ்வொரு ஆலைக்கும் ஒவ்வொரு விலை நிர்ணயம் பொறுத்தவரையில்
படுகிறது. குறிப்பாக, கூட்டுறவு ஆலையைப் 125 வரை கொடுக்கப்
டன் ஒன்றுக்கு ரூபாய் 100 முதல் ரூபாய் பொறுத்தவரையில்
படுகிறது. தனியார் சர்க்கரை ஆலையைப் செய்து கொண்டு
அங்கே விவசாயிகளோடு அவர்கள் ஒப்பந்தம் செய்து இருக்கி
அந்த அடிப்படையில் அவர்கள் விலை நிர்ணயம் ஏற்படும் நஷ்டம்
றார்கள். மேலும், இன்று சர்க்கரை ஆலையில் முயற்சிகளை நாம்
தவிர்க்கப்பட வேண்டும் என்று எவ்வளவோ கொடுக்க வேண்டிய
எடுத்துக் கொண்டாலும், மத்திய சர்க்கார் மேலும், மத்திய
ரேட்டைக் கொடுக்காமல் இருக்கிறார்கள். ரத்து செய்து
சர்க்கார் சர்க்கரைக்குண்டான கட்டுப்பாட்டை இன்று
விட்ட காரணத்தால் மேலும் விலை குறைந்து விட்டது.

இருக்கும் மார்க்கெட் நிலவரப்படி சர்க்கரை ஆலேகளில் உற்பத்தி
செய்யப்படும் சர்க்கரையை வெளியில் விற்க முடியாமல் தேங்கிக்
கிடக்கும் சூழ்நிலே இருக்கிறது. இதையெல்லாம் உடனடியாக
மத்திய சர்க்கார் பார்த்து நடவடிக்கைகளே எடுக்க வேண்டும்
என்று நாம் ஏற்கெனவே கேட்டுக் கொண்டு உள்ளோம்.

திரு. ரா. உமாநாத் : தலேவரவர்களே, சர்க்கரை விலேயை
'' டி கன்ட்ரோல் '' செய்த பிறகு விலே குறைந்திருப்பதாகச்
சொன்ஞர்கள். ஆனல் ரூபாய் 2.15-க்கு விற்றுக் கொண்டிருந்த
சர்க்கரை இப்போது ரூபாய் 3-க்கு விற்கிறதைத்தான் நாம்
பார்க்கிரும். சர்க்கரை ஆலே முதலாளிகளேப் பொறுத்தவரையில்
கரும்புக்கு அவர்கள் நிர்ணயம் செய்த விலேயில்கூட ஏராளமான
தொகை விவசாயிகளுக்குக் கொடுக்கப்படாமல் பாக்கி வைத்தி
ருக்கிருர்கள். அரியர்ஸ் பெருமளவில் இருக்கிறது. ஆனல், அந்த
முதலாளிகள் சர்க்கரையை ரொக்கத்திற்கு விற்று, மொத்த
மாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ளும்போது கரும்பு உற்பத்தி
செய்யும் விவசாயிகளுக்கும் ஏன் அவர்கள் பணத்தைக் ரொக்க
மாகக் கொடுக்கக் கூடாது ? அதோடு அரியர்ஸ் வைத்திருக்கும்
தொகைக்கு வட்டியும் கிடையாது ? ஆகவே, கரும்புக்கு—
ரொக்கமாகப் பணம் கொடுப்பதற்கும், அரியர்சுக்கு வட்டி
போட்டுக் கொடுக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலேவரவர்களே,
நான் ஏற்கெனவே சொன்னதைப் போல மத்திய அரசு ஏற்றுமதிக்
கொள்கை கட்டுப்பாட்டை ரத்து செய்த காரணத்தால் சர்க்கரை
பெருமளவில் தேங்கிக் கிடக்கிறது. சர்க்கரை ஆலேகளில் தேங்கிக்
கிடக்கின்ற சர்க்கரையை விற்க முடியாததாலும் கடன் பெற
முடியாமலும் இருக்கிற ஒரு சூழ்நிலேயால் விவசாயிகளுக்குப் பணம்
சரியாகக் கொடுக்க முடியவில்லே. ஆனல் எந்தவிதமான பாக்கியும்
வைக்கக் கூடாது. அதிலும் குறிப்பாக விவசாயப் பெருங்குடி
மக்களிடம் வாங்கும் கரும்புக்கு நிர்ணயித்துள்ள விலேயைக்
கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு தெரிவித்திருக்கிறது.
அதைப் போல அந்தப் பாக்கிகளுக்கு வட்டியும் போட்டுக்கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிரும். அதன்படி சர்க்கரை
ஆலேகள் நடந்து கொள்ளும் என்ற எண்ணம் இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலேவரவர்களே, அருணு
சர்க்கரை ஆலேயில் இன்றைக்கு விவசாயிகளுடைய கரும்புக்கு
டன்னுக்கு 100 ரூபாய் என்று ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு
95 ரூபாய்தான் முதலில் தருவதாகவும் பாக்கியை பின்னல் தருவ
தாகவும் சொல்லி, அந்த வகையில் சுமார் $1\frac{1}{2}$ கோடி
ரூபாய்க்குமேல் பாக்கி வைத்திருக்கிருர்கள் என்பது அரசுக்குத்
தெரியுமா ? விவசாயிகள் கடன் பாக்கி வைத்திருந்தால் ஜப்தி

போன்ற தீவிரமான நடவடிக்கை எடுக்கப்படுகிறதே அதைப்
போல, பல்வேறு சலுகைகளேயும் பெற்றுக் கொண்டு $1\frac{1}{2}$
கோடி ரூபாய்க்கு மேல் பாக்கி வைத்திருக்கிற அருணு சர்க்கரை
ஆலே மீதும் ஜப்தி போன்ற நடவடிக்கையை எடுத்து, விவசாயி
களுக்குச் சேர வேண்டிய தொகையை வாங்கிக் கொடுக்க அரசு
நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலேவரவர்களே,
அருணு சர்க்கரை ஆலேயைப் பொறுத்தவரையில் அவர்கள் ஏற்
கெனவே செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி நடந்து கொள்வ
தாக உறுதி கூறியிருக்கிருர்கள். மேலும் விவசாயிகளுக்குச் சேர
வேண்டிய பணம் $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு மேல் பாக்கி இருப்ப
தாகச் சொன்ஞர்கள். அப்படிப் பாக்கி இருந்தால் உடனடியாக
வசூல் செய்து கொடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலேவரவர்களே, கட்டிங்
ஆர்டர்ஸ் உரிய காலத்தில் கொடுப்பதில்லே என்று சொல்லப்படு
கிறது உண்மையா ? வெட்டிய கரும்பையும் உடனடியாக எடுத்
துச் செல்லத் தகுந்த ஏற்பாடு செய்வதில்லே என்று கூறுவதும்
உண்மையா ? அதனல் விவசாயிகள் பெரிதும் நஷ்டம் அடை
கிருர்கள் என்பதும் உண்மையா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலேவரவர்களே,
கட்டிங் ஆர்டர்ஸ் கொடுத்துவிட்டாலும், சர்க்கரை ஆலேயின்
அரைக்கும் திறனேப் பொறுத்துத்தான் கரும்பை எடுத்துக்கொள்ள
முடியும். குறிப்பாக ஒரு சர்க்கரை ஆலே 2,000 டன் அரைக்கும்
திறன் கொண்டதாக இருந்தால், ஒரே நாளில் 4,000 டன் வந்து
சேர்ந்தால் 2,000 டன்தான் அன்றைக்கு அரைக்க முடியும்;
2,000 டன் தேங்கிக் கிடக்கும். மேலும் கரும்பு முற்றும் காலம்
(மெச்சூரிட்டி) கிட்டத்தட்ட ஒரே சமயத்தில் இருக்கின்ற கார
ணத்தாலும் இந்த மாதிரியான சிக்கல் ஏற்படுகிறது. இவைகளேத்
தவிர்க்க வேண்டும். 'ட்ரான்ஸ்போர்ட் பெசிலிட்டி' சரி
யாகக் கிடைப்பதில்லே. 'கட்டிங் ஆர்டர்' கொடுத்தாலும்,
வெட்டிய கரும்பை எடுத்துச் செல்லப் போதுமான வாகன வசதி
கிடைக்காமல் ஏற்படுகின்ற தொல்லேகள் இவைகளே வைத்து,
இந்த நிலேமைகளில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று நாங்
களே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிரும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : தலேவரவர்களே, அமைச்சர
வர்கள் விடை சொல்லும்போது தற்போது சர்க்கரை ஆலேகள்
நஷ்டத்தில் இருப்பதாகச் சொன்ஞர்கள். அந்த நஷ்டம்
கூட்டுறவுச் சர்க்கரை ஆலேகளில் அதிகமா அல்லது பொதுத்துறை
சர்க்கரை ஆலேகளில் அதிகமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1978 செப்டம்பர் 9

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, பொதுத்துறையில் அதிக நஷ்டமா அல்லது கூட்டுறவுத் துறையில் அதிக நஷ்டமா என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து விளக்கமாகப் பதில் சொல்ல முடியும்.

[முற்பகல் 9-10]

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சர்க்கரையின் விலை இன்று உயர்ந்திருக்கிறது. மத்திய அரசின் சர்க்கரைக் கொள்கையின் காரணமாக இன்றைக்குச் சர்க்கரை ஆலைகளை நிறுத்தக்கூடிய, விவசாயிகள் கரும்பு உற்பத்தியை நிறுத்தக்கூடிய நிலைமை ஏற்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ? ஆகவே இந்த நிலைமையைப் போக்க அரசு நடவடிக்கைகள் எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, சர்க்கரைக் கட்டுப்பாட்டை ரத்து செய்ததன் காரணமாக விலை ஏறவில்லை, மாறாகக் குறைந்திருக்கிறது. அதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏறி இருக்கிறது என்று சொல்கிறார்கள். அவ்வாறு ஏறி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. வெளி மார்க்கெட்டிலே விற்கக்கூடிய சர்க்கரையின் விலை குறைந்திருக்கின்றது. அதனால்தான் இன்று சர்க்கரையை வெளியே விற்கக்கூடிய சூழ்நிலையில் நஷ்டம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. மேலும் இந்த அரசைப் பொறுத்த மட்டில் விவசாயப் பெருங்குடி மக்கள் தரும் கரும்புக்கு அதிக விலை கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறது. இப்போது டன் ஒன்றுக்கு கொடுக்கப்படும் விலை ரூபாய் 85 என்பதற்குப் பதிலாக ரூபாய் 125 என்ற முறையில் கொடுக்க வேண்டும் என்று நாம் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறோம். மத்திய அரசு இன்றிருக்கக்கூடிய சூழ்நிலையிலே மத்திய அரசின் விவசாய அமைச்சர் திரு. பானுபிரதாப்சிங் அவர்கள் கரும்பினை விவசாயம் செய்ய வேண்டாம் என்று வெளிப்படையாகவே சொல்லக்கூடிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் தமிழகத்திலே இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள் ஒரு தடவை கரும்பைப் பயிர் செய்து விட்டால் தொடர்ந்து 3 வருடங்கள் அவர்கள் மறுதாம்பாகப் பயிர் செய்ய வேண்டிய சூழ்நிலை இருப்பதை நான் அவர்களிடம் எடுத்துச் சொல்லி இருக்கிறேன். ஆகவே, தமிழ்நாட்டிலே விவசாயிகளுக்குக் கரும்பு உற்பத்திக்குக் கொடுக்கின்ற விலையை டன் ஒன்றுக்கு ரூபாய் 85 என்பதற்குப் பதிலாக ரூபாய் 125 என்ற அளவில் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று நாம் கேட்டிருக்கிறோம்.

9 செப்டம்பர் 1978]

இசுக்கழி கிராமக் கூட்டுறவு விவசாயச் சங்கம்

*வினா எண். 101—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா——

(அ) திருவண்ணாமலை வட்டம், இசுக்கழி கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத்தில் இருந்து அண்டம்பள்ளம் விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய கடன் வசதிகள் அனைத்தும் முழுமையாகப் புறக்கணிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இது குறித்து அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) கடன் வசதிகள் புறக்கணிக்கப்படுவதில்லை.

(ஆ) இது குறித்த வினா எழவில்லை.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கடன் புறக்கணிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். இந்த இசுக்கழி கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத்தில் 10 ஊராட்சி ஒன்றியங்கள் இணைந்திருக்கின்றன. அந்த பத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் குறிப்பிட்ட காலத்தில் விவசாயிகளுக்கான கடன்களை வழங்குவதில்லை என்பதை அரசு உடனடியாகப் பரிசிலனை செய்து கடன்களை உடனடியாக வழங்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் அண்டம்பள்ளி கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம் கடந்த 1975-76ஆம் ஆண்டிலிருந்து கலைக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தினாலே, அதுவும் போதுமான காரணங்களுக்காகக் கலைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தாலே அந்தச் சங்கத்திலே உள்ள விவசாய உறுப்பினர்களுக்கு, ஏறத்தாழ 1,251 விவசாயிகளுக்கு அந்த உரிமை மறுதளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த விவசாயிகள் இசுக்கழி அருகிலேயே உள்ள விவசாயச் சங்கத்திலே போதுமான கடன் வசதி அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் நகைக் கடன்கள்

*வினா எண். 102—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா——

(அ) கிராமப் பகுதியிலுள்ள விவசாய கூட்டுறவுக் கடனுதவி சங்கங்களும், கூட்டுறவு அர்பன் பாங்குகளும் நகைகள் மீது கடன் வழங்குவதில் கிராமுக்கு ரூபாய் 25/யை அதிகரிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை அதிகரிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) அண்டு (ஆ): மத்திய கூட்டுறவு வங்கிகளும் நகர வங்கிகளும், தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களும், விவசாய வங்கிகளும், விவசாயக் கடன் சங்கங்களும் நகைகள் மீது ஒரு சவரனுக்கு ரூபாய் 320 அல்லது சவரன் மீதான மார்க்கெட் மதிப்பில் 80 சதவீதம் இவற்றில் எது குறைவோ அந்த அளவிற்கு ஏற்கெனவே கடன் வழங்கி வருகின்றன.

திரு. எஸ். கணேசன் : கிராம விவசாயக் கூட்டுறவுக் கடன் உதவிச் சங்கங்களில் பெரும்பாலான சங்கங்களில் நகைக் கடன்கள் கொடுப்பதில்லை. ஒன்றிரண்டு சங்கங்களினால்தான் அப்படிப்பட்ட கடன் உதவி வழங்கப்படுகிறது. நாட்டில் இப்போது வட்டிக் கடைகள் மூடப்பட்டிருக்கின்றன— அதிகமாக வட்டி வாங்குகிறார்கள் என்பதற்காக. அர்பன் பாங்குகள் மாதம் ஒன்றுக்கு இவ்வளவுதான் கடன்கள் வழங்கலாம் என்ற ஒரு வரையறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே தமிழ்நாட்டிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களும், தொழிலாளர்களும் இப்படிப்பட்ட கடன் உதவி கிடைக்காமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே அரசு மறுபரிசீலனை செய்து கிராம விவசாயக் கூட்டுறவு கடன் உதவிச் சங்கங்கள் மூலம் விவசாயிகள் கடன்கள் பெறுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் வாயிலாகவும், கிராமக் கூட்டுறவு விவசாயச் சங்கங்களின் வாயிலாகவும், நகர வங்கிகள் வாயிலாகவும், இந்த அரசு 1976-77-ல் ரூபாய் 40 கோடி நகைக் கடனாகக் கொடுத்திருக்கிறது. 1977, 1978-ஆம் ஆண்டுகளில் ரூபாய் 50.23 கோடி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்களின் விருப்பப்படி மத்திய கூட்டுறவு வங்கிகள் கிளைகள், கிராமக் கூட்டுறவு விவசாய நாணயச் சங்கங்கள், நகர வங்கிகள் இவற்றின் மூலம் 1978-79 ஆம் ஆண்டில் ரூபாய் 70 கோடி அளவிற்கு நகைக் கடன்கள் வழங்க தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் : தங்கத்தின் விலை ரூ. 400 ஆக இருக்கும்போது ரூ. 320 நகைக்கடன் விவசாயக் கூட்டுறவு சங்கங்களின்மூலம் கொடுக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இப்போது சவரன் விலை 600 ரூபாயாக இருக்கும்போது விவசாயிகளுக்கு அதிகப்படியாக கடன் கொடுக்க அரசு முன்வருமா ? விவசாயிகள் தங்களிடம் இருக்கிற நகைகளை ஏற்கெனவே வங்கிகளில் அடமானம் வைத்துவிட்டார்கள். இப்போது புதிதாகக் கடன் பெற அவர்களிடம் போதுமான நகைகள் இல்லை. இருக்கிற நகைகளை வங்கிகளில் வைத்துவிட்ட காரணத்தினால் ரூ. 400 என்று தங்கம் விற்று

வந்தபோது ரூ. 320 கொடுக்கப்பட்டதே, எனவே, இப்போது ரூ. 600 என்று விற்கும்போது அதை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை அனுதாபத்தோடு இந்த அரசு கவனிக்கும்.

(திரு எஸ். கணேசன் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 25 கேள்விகள் இருக்கின்றன. கேட்கப்பட்ட பிரச்னைகளுக்கெல்லாம் அவர்கள் பதில் அளித்துவிட்டார்கள். தயவுசெய்து உட்காருங்கள்.

கூட்டுறவுக் கடன்கள் வழங்கல்

*வினா எண் 103—திரு மா. மணிமாறன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் காசோலை வழங்காமல் பணமாக வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தற்போது கூட்டுறவுக் கடன் சங்கங்களின் நடைமுறையில் உள்ள காசோலை வழங்கும் முறையை ரத்து செய்ய அவசியமில்லை.

திரு. மா. மணிமாறன் : காசோலை வழங்குவதால் கல்வியறிவு இல்லாத மக்கள் பணம் வாங்கும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன. பத்து கிலோ மீட்டருக்கு மேலாகச் சென்று கிளைச் சங்கங்களில் பணம் வாங்கும் இடர்பாடுகள் இருக்கின்றது. கூட்டுறவுச் சங்கங்களில் ட்ரான்ஸ்ஸாக்ஷன் செய்ய தனிப்பட்ட மக்கள் அச்சப்படுகிறார்கள். மூன்று மாத காலம் டிரான்ஸ்ஸாக்ஷன் அதிகமாக இருப்பதன் காரணமாக கூட்டம் அதிகமாகயிருப்பதால் அவர்கள் நேரமும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, இதை மறுபரிசீலனை செய்து காசோலை முறையை ஒழித்துவிட்டு எப்போதும்போல் பணமாகப் பட்டுவாடா செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காசோலை முறை புகுத்தப்பட்டது சீரிய நோக்கோடு. போலியாக சிலர் காசுகள் பெற்றுவிடுகிறார்கள். கடன் கொடுக்கும்போது அதிகாரமற்ற பிடித்தங்கள் என்ற தவறான முறைகள் கையாளப்படுகிறது. அதோடு விவசாயப் பெருங்குடி மக்கள் வங்கிகளில் கணக்குகள் வைக்கும் பழக்கத்தை

ஊக்குவிக்க வேண்டும், கூட்டுறவு உணர்ச்சியை உருவாக்க வேண்டும் என்ற காரணத்தினாலும் இந்தக் காசோலை முறை தமிழக அரசால் பின்பற்றப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : காசோலை கொடுப்பதன் மூலம் எந்த வைடும் பாதிக்கப்பட்டதாக சொல்பவைகள் நிறுத்தப்படவில்லை. காசோலை கொடுத்த பிற்பாடு செலவுக் காசு, இதரக் காசு என்றும் பிடிக்கப்படுகிறது. ஆகவே, இந்த காசோலை முறையை நிறுத்திப் பணமாகக் கொடுக்கப்படுமா ?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி போட்டு விவரங்களைக் கேட்டால் அதைப்பற்றி விவரங்களை தர முடியும்.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு விவசாயச் சங்கங்களில் விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதில் குத்தகை வார விவசாயிகளுக்கு எந்த சங்கங்களின் மூலமும் கடன் கிடைப்பதில்லை. அப்படியே கடன் கொடுப்பதாக இருந்தாலும் நில உடமைதாரர்களிடமிருந்து இவர் தான் நிலத்தை சாகுபடி செய்கிறார் என்று எழுத்து மூலமாக எழுதிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இப்படி வற்புறுத்துவது இப்போதுள்ள நடைமுறைக்கு ஒவ்வாத பிரச்னை. எனவே குத்தகை வார விவசாயிகளுக்கும் நேரடியாக மற்ற விவசாயிகளுக்குக் கிடைப்பது போல் கடன் கிடைக்க அரசாங்கம் உதவி செய்யுமா என்று கேட்டுக் கொள்வதோடு கடன் கொடுக்கும் பொழுது கொடுக்கப்படும் காசோலையை நிறுத்தி பணமாகக் கொடுக்க முன்வருமா என்பதையும் கேட்டுக்கொள்வதோடு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து சுருக்கமாக கேளுங்கள்.

திரு. என். பழனிவேலு : மற்றவர்கள் எல்லாம் நீண்டநேரம் எடுத்துக் கொள்கிறார்கள். நான் ஒரு கேள்வியை மட்டும் கேட்கும்போது இப்படிச் சொல்லி விட்டால் நான் என்ன செய்வது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகக் கேளுங்கள் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உபகேள்வி மூலக் கேள்வியை ஒட்டியதாக இல்லையாதலால், இதில் கேட்ட விவரங்களுக்கு தனிக் கேள்வி போட்டால் அரசுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

இந்தக் கூட்டுறவு சங்கங்களில் கொடுக்

திரு. ஏ. ராமலிங்கம்: கப்படும் காசோலையை மாற்றப் போகும்போது, பரிசுப் பத்திரங்களை வாங்கும்படி மத்திய கூட்டுறவு வங்கி வற்புறுத்தி வருவது அரசுக்குத் தெரியுமா ? இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாத வகையில் அரசு ஏற்பாடு செய்யுமா ?

இதுவரையில் அர

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: சுக்கு இப்படிப்பட்ட தகவல் எதுவும் வரவில்லை. இப்படிப்பட்ட முறைகேடுகள் எங்காவது இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அருள்கூர்ந்து அரசுக்குத் தெரிவிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நில அளவு குறித்த வரை படங்கள்

மாண்புமிகு

*வினா எண் 104—திரு. வ. மு. சுப்பிரமணியம் ; வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில உரிமையாளர்களுக்கு நில அளவு வரை படம் வழங்குவது குறித்துத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

பேரவைத் தலைவர் அவர்களே,

திரு. வ. மு. சுப்பிரமணியம்: 1974 ஆம் ஆண்டு விவசாயிகளிடமிருந்து இதற்காக பத்து ரூபாய் வசூலிக்கப்பட்டது. இதற்கான நில அளவு வரை படங்கள் நிலச் சொந்தக்காரர்களிடம் இல்லாததால் அடிக்கடி வரப்பு தகராறு, நிலத் தகராறு வருகிறது. இதை கிராம அதிகாரிகள் பயன்படுத்திக் கொண்டு விவசாயிகளைத் துன்புறுத்தி வருகிறார்கள். இதனால் அடிக்கடி சச்சரவுகள் நடக்கின்றன. கடைசியில் கொலைவரை வந்து முடிகின்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, இந்தப் பிரச்னையில் அரசு கவனம் செலுத்தி வரை படங்கள் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: உறுப்பினர் அவர்கள் வரைப்படத்தைப்பற்றிக் கேட்டிருக்கிறார்கள். இப்போது அடங்கலைப்பற்றியும், கூட்டுப் பட்டாவைப் பற்றியும் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். கூட்டுப்பட்டா அதிகாரிகளிடத்தில் முறையிடவேண்டியிருக்கிறது. ன்றிருந்தால் அதைப்பற்றி இதைப்பற்றியும் அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

[1978 செப்டம்பர் 9

(திரு. சி. ஆறுமுகம் எழுந்தார்........)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதுள்ள கேள்வி அவர்களுடைய தொகுதியைப்பற்றியது. நீங்கள் ஏன் எழுந்திருக்க வேண்டும் ?

திரு. சி. ஆறுமுகம்: எந்தக் கேள்வி வந்தாலும் அதைப்பற்றி கேட்பதற்கு உறுப்பினர்களுக்கு உரிமையிருக்கிறது. ஆகவே, நீங்கள் இப்படித் தீர்ப்புச் சொல்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து நான் சொல்வதை சற்றுக் கேளுங்கள், கேள்வி கேட்டிருக்கக்கூடிய தொகுதியைப்பற்றி உபகேள்விகள் இருக்க வேண்டும் என்று பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம்: அப்படிச் செய்திருப்பது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி உங்கள் கட்சித் தலைவரிடம் கேளுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி: இது பொதுவான கேள்விதானே?

திரு. சி. ஆறுமுகம் : பாராளுமன்றத்திலே இந்தியாவிலுள்ள பிரச்னைகளை எல்லாம் கேட்கலாம் என்றிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து பேசாமல் உட்காருங்கள். பேசுவதற்கு அனுமதி கேட்டு, எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசுங்கள். இப்போது பேசி முடிந்தாகி விட்டதா ; உட்காருங்கள்.

மோத்தக்கல் ஊராட்சியிலுள்ள புறம்போக்கு நிலங்கள்

*வினா எண் 105—திரு. கே. ஜே. சுப்பிரமணியம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், போளூர் தொகுதி, 132. மோத்தக்கல் ஊராட்சிப் பகுதியிலுள்ள சர்வே எண் 117/2-இல் உள்ள தீய புறம்போக்கு நிலத்தில் பட்டா எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டது ?

(ஆ) ஏற்கெனவே அனுபவித்து வருபவர்களுக்கு தாமதமில்லாமல் பட்டா வழங்கப்படுமா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும் ?

1978 செப்டம்பர் 9]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ), (ஆ), & (இ) மோத்தக்கால் கிராமத்தில் உள்ள சர்வே எண் 117-2-இல், 1972 ஆம் வருடம் விவசாயத்திற்கு லாயக்கான 50.63 ஏக்கர் நிலம் 38 நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டது. அந்நிலத்தில் எஞ்சியுள்ள 455.59 ஏக்கர் பாறை நிலமானதால் விவசாயத்திற்கு லாயக்கற்றவை. இதில் யாதொரு ஆக்ரமணமும் இல்லை.

திரு. கே. ஜே. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே. வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த எனது தொகுதியில், மோத்தக்கல் ஊராட்சிப் பகுதியிலுள்ள சர்வே எண் 117—2-இல் உள்ள தீய புறம்போக்கு நிலத்தை சிலருக்குப் பட்டா செய்து கொடுத்திருப்பதாகவும், மேலும் பட்டா வழங்குவதற்கு அந்த நிலம் தகுதியற்றதாக இருக்கின்றது என்றும் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அந்த தீய புறம்போக்கு நிலத்தில் ஏற்கெனவே சாகுபடி செய்யும் ஏழை விவசாயிகள், அரசு தங்களுக்குப் பட்டா வழங்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த தீய புறம்போக்கு நிலத்தை ஏற்கெனவே சாகுபடி செய்துவரும் ஏழை விவசாய மக்களுக்குப் பட்டா வழங்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்...

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, அங்கே உள்ள மற்ற நிலங்கள் விவசாயத்திற்கு ஏற்றதில்லை என்று சொல்லியிருக்கிறேன். ஆனால், உறுப்பினர் அவர்கள் ஏழை விவசாயிகள் ஆக்கிரமிப்புச் செய்திருப்பதாகக் கூறுகிறார்கள். ஏழை விவசாயிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலங்கள், உண்மையிலேயே அரசுக்குத் தேவையில்லாமல் இருக்குமானால், அந்த நிலங்களுக்குப் பட்டா வழங்குவதிலே எவ்வித ஆட்சேபணையும் இல்லை.

திருக்கோவிலூர், விழுப்புரம் வட்டங்களில் மனைப் பட்டாக்கள்.

*வினா எண் 106— திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977—78-ல் தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவிலூர் , விழுப்புரம் தாலுகாக்களில் வீட்டுமனை பட்டா கோரி வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

(ஆ) அவற்றுள் எத்தனை நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது?

(இ) தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்கள் எத்தனை?

[1978 செப்டம்பர் 9

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

(அ) 1977–78-ல் (1–4–77 முதல் 31–3–78 வரை) தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவிலூர் மேலும் விழுப்புரம் வட்டங்களில் வீட்டு மனைப் பட்டா கோரி வந்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை:—

விழுப்புரம்	376
திருக்கோவிலூர்	35

(ஆ) வீட்டுமனை பட்டா வழங்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை—

விழுப்புரம்	234
திருக்கோவிலூர்	30

(இ) தள்ளுபடி செய்யப்பட்டமனுக்களின் எண்ணிக்கை—

விழுப்புரம்	116
திருக்கோவிலூர்	5

திரு. வி. கொ. சின்னசாமி : தலைவர் அவர்களே, வீட்டு மனை பட்டா கொடுப்பதில், மொத்தமாக தமிழகத்திலே (மணியடிக்கப் பட்டது).

வெள்ளாற்றில் தூர் எடுத்தல்.

* வினா எண் 107.— திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், பரங்கிப் பேட்டை வெள்ளாற்று முகத்துவாரம் அன்னங்கோயில் என்ற இடத்தில் மீன்பிடி படகு உள்ளே வர முடியாமல் மண்மேடிட்டுவிடுவதை தடுத்து ஆழப் படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இல்லை.

1978 செப்டம்பர் 9]

திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பரங்கிப் பேட்டையைச் சேர்ந்த அன்னங்கோயில் என்ற இடத்தில் முகத்துவாரத்தில் வருஷத்தில் 4, 5 மாதங்கள் பெரிய போட்டுகள், விசைப்படகுகள் மீன் பிடித்துக் கொண்டு உள்ளே வர முடியாமல் மணல்மேடிட்டு அது தூர்ந்து போய்விடுவதால், அங்கேயுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக வளர்ச்சி மன்றத்தின் மூலமாக தீர்மானம் செய்து அது அரசுக்கு அனுப்பப்பட்டது தவிர, அங்கே 10,000-க்கு மேலான மீன்பிடித் தொழிலாளர்கள் அந்தப் பகுதியிலே வசிக்கின்றார்கள். எனவே அவர்களுக்கு அனுகூலமாக இதைச் சீர் செய்ய, அரசு ஏற்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–30)

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தமிழக அரசால் இதற்கு முன்னால் துறைமுக ஆய்வுக்குழு ஒன்று தமிழகத்தில் இருக்கிற கடலோரக் கிராமங்களில் ஆய்வு செய்யும்படி நியமிக்கப் பட்டது. அந்தக் குழு ஆய்வு செய்து 15 கடற்கரை இடங்களில் மீன்பிடிக் கலங்கள் தங்க தகுதியான இடங்கள் என்று சிபாரிசு செய்தது. அதிலே பரங்கிப்பேட்டையும் ஒன்று. பின்னால் தமிழக அரசு அதிலே கலங்கள் தங்குவதற்கான துறைமுகங்களைக் கட்டுவதற்கான ஆராய்ச்சிகளைச் செய்த நேரத்தில் அதை உருவாக்க பல கோடி ரூபாய் செலவாகும் என்ற முடிவுக்கு வந்த காரணத்தால் அவ்வளவு தொகையைச் செலவழிக்க முடியாது என்ற நிலைமையில் கைவிடப்பட்டது.

திரு. துரை கலியமூர்த்தி ; மாவட்ட ஆட்சித் தலைவர், நடைபெற்ற வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் மூன்று லட்சம் ரூபாய் செலவில் செய்யலாம் என்று அறிவித்தார்கள். அது அரசின் கவனத்திற்கு வந்ததா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : ஆட்சிமன்றக் குழுவின் முடிவு எதுவும் இதுவரை அரசுக்கு வந்து சேரவில்லை.

திரு. என். கிட்டப்பா : பரங்கிப் பேட்டைக்கு அருகில் உள்ள அன்னங்கோயில் என்ற இடத்தை மீன்பிடி துறைமுகமாக மாற்ற வேண்டுமென்றால், பலகோடி ரூபாய் செலவாகும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா? பரங்கிப்பேட்டையின் முக்கியத்துவம் கருதி அந்த முகத்துவாரத்தைச் சீர் செய்ய இனியேனும் அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா ?

[1978 செப்டம்பர் 9

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : சரியாக எத்தனை கோடி ரூபாய் மதிப்பீடு இடப்பட்டது என்ற புள்ளி விவரங்கள் இல்லை. இருந்தாலும் நம்முடைய அரசு தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது.

மீனவர் கூட்டுறவுச் சம்மேளனங்கள்.

* வினா எண். 108.— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட மீனவ கூட்டுறவு சம்மேளனம் எந்தெந்த மாவட்டங்களில் உள்ளன ?

(ஆ) அவைகளுள் இயங்காமல் உள்ளவை எத்தனை?

(இ) அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) கீழ்க்கண்ட ஒன்பது மாவட்டங்களில் உள்ளன—

1. சென்னை,
2. செங்கற்பட்டு,
3. தென்னாற்காடு,
4. தஞ்சாவூர்,
5. திருநெல்வேலி,
6. வட ஆற்காடு,
7. இராமநாதபுரம்,
8. மதுரை,
9. கன்னியாகுமரி.

(ஆ) ஒன்றுமில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். கணேசன்: இந்த மீனவக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் மூலமாக எந்தெந்த வகையில் மீனவப் பெருங்குடி மக்கள் பயன் அடைகிறார்கள் ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இந்த மீனவச் சம்மேளனங்கள் மூலமாக மீனவர்களுக்கு வேண்டிய நைலான் வலைகள், அவர்களுடைய தொழில்களுக்குத் தேவையான மற்ற சில சிறிய பொருள்கள், வியாபாரம் செய்வதற்கான நிதி வசதி எல்லாம் செய்யப்பட்டு வருகிறது.

1978 செப்டம்பர் 9]

திரு. இரா. தாமரைக்கனி : தமிழ்நாட்டிலிருந்து வருடத்திற்கு ஒரு தடவை இரால், கருவாடு போன்ற மீன்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கின்றன. இதனால் மத்திய சர்க்காருக்கு அன்னியச் செலவாணி கோடிக் கணக்கில் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே தமிழ்நாட்டிலுள்ள கடற்கரை துறைமுகப் பகுதிகளைச் சீரமைப்பதற்கான செலவினை மத்திய சர்க்கார் செய்ய முன்வர வேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப் போல் மீன்களைத்து நாம் செல்வங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் பல கோடி ரூபாய் அன்னியச் செலவாணி கிடைக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மீன்பிடி துறைமுகங்களை அமைப்பதற்குத் தேவையான நிதி வசதிகளை மத்திய அரசு செய்ய வேண்டியது நியாயந்தான். அதை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

திரு. அ. செல்லப்பா : அளிக்கின்ற நிதி சலுகைகள் போன்றவற்றை மாவட்ட அமைப்புகளுக்கு ஒட்டு மொத்தமாக அளிக்காமல் வட்ட அமைப்புகளுக்குப் பிரித்து வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாவட்டங்களில் பணியாற்றுகின்ற மீனவ கூட்டுறவுச் சம்மேளனங்கள் அந்த மாவட்டம் முழுவதும் பணியாற்ற வேண்டுமென்பதுதான் விதிமுறை. அந்த அடிப்படையில் இருந்தும் சம்மேளனங்கள் மாவட்டங்களில் எங்கெங்கு மீனவர்கள் இருக்கிறார்களோ அவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்ய வேண்டுமென்பது அரசின் கொள்கை. அவர்கள் எங்காவது குறுகிய நோக்கத்தோடு சரிவரச் செயல்படவில்லை என்ற நிலைமை இருந்தால் உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதைப் பற்றி விசாரித்து இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே ஹொகேனக்கல், தென்பெண்ணை, சென்னை இன்னும் இவை போன்ற பல பகுதிகளிலே மீன் வளத்தைப் பெருக்குவதற்கு அதிகமான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே தர்மபுரி மாவட்டத்திலே மீன்வள கூட்டுறவுச் சம்மேளனத்தைத் தொடங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, தர்மபுரியில் மீன்வள சம்மேளனம் தொடங்குவதற்குண்டான சாத்தியக்கூறுகள் எந்த அளவிற்குத் தேவையாக இருக்கிறது என்பதைப் பற்றி எல்லாம் பரிசீலனை செய்து தேவையிருக்கிறது என்று அரசு முடிவெடுக்குமானால் அங்கே ஒரு சம்மேளனத்தைத் தொடங்க அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

[1978 செப்டம்பர் 9

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, மீன்
வள சம்மேளனம் இல்லாத மாவட்டங்களிலே பொதுவாக அர
சாங்கத்துக்கு சம்பந்தப்பட்ட ஏரிகள், குளங்கள் இருக்கின்றன.
அவைதளில் மீன்களைபிடிக்க ஏலம் விடுகிறார்கள். அப்போது மீனவர்
களுக்கு அதிலே முன்னுரிமை தரப்படுகிறதா ? இல்லையென்றால்
எந்த முறையில் ஏலம் விடப்படுகிறது? குறிப்பாக மீனவர்களுக்கு
முன்னுரிமை தருவதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவ
ரவர்களே, வடாற்காடு, தர்மபுரி, மாவட்டங்களிலே மாத்திர
மல்ல, தமிழகத்தின் எந்தப் பகுதியிலே உள்ள ஏரி,
ஆறு, குளம், வாய்க்காலாக இருந்தாலும் அவை போன்றவை
களை மீன்பிடிக்க குத்தகைக்கு விடுகிறார்கள், அப்போது மீனவர்
கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை தரப்பட வேண்டுமென்று
ஏற்கனவே அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

கள்ளக்குறிச்சியில் முதல் வகுப்பு நீதிமன்றம்

*வினா எண். 109— திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் :
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியில் முதல்
வகுப்பு நீதி மன்றம் ஒன்று அமைக்கக் கோரி அரசிடம் விண்ணப்பம்
வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: (a)
No.

(b) Does not arise.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர்
அவர்களே, கள்ளக்குறிச்சிப் பகுதியிலே வசிக்கின்ற மக்கள்
எல்லாம் தற்சமயம் உளுந்தூர்பேட்டைக்குச் சென்று வழக்காட
வேண்டியிருக்கிறது. கள்ளக்குறிச்சியிலிருந்து உளுந்தூர்பேட்டை
கிட்டத்தட்ட 60 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.
60 கிலோ மீட்டர் செல்லக்கூடிய அந்த அளவிற்கு நம்முடைய
நாட்டு மக்கள் பொருளாதாரத்திலே முன்னேறவில்லை. கள்ளக்
குறிச்சியிலே அதிகமான வழக்குகள் வருகின்றன. ஆகவே,
கள்ளக்குறிச்சியிலே முதல் வகுப்பு நீதிமன்றம் ஏற்படுத்துவதற்கு
உடனடியாக முடியாவிட்டாலும் (Camp Court) கேம்ப்
கோர்டாவது உடன் அமைத்துத் தர அரசு முன்வருமா ?

1978 செப்டம்பர் 9]

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: The Committee on Jurisdiction did not accept such a suggestion. They have gone into the matter so deeply that they have not recommended the constitution of the First Class Magistrate's Court at Kallakurichi. The Committee further felt that the suggestion for the constitution of a separate First Class Magistrate's Court for Kallakurichi taluk and a part of Tirukoilur taluk or for the local area attached to the Sub-Magistrate's Courts, Kallakurichi and Tirukoilur is not acceptable The question of a Camp Court must be considered by the High Court and the Government can finalise the stand only after taking into consideration the views of the High Court.

தூத்துக்குடியில் மாவட்ட நீதி மன்றம்.

*வினா எண். 110 திரு. ஓ. சோ. வேலுச்சாமி : மாண்புமிகு
சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருநெல்வேலி நீதி நிர்வாக மாவட்டத்தை இரண்டாகப்
பிரித்து தூத்துக்குடியில் மாவட்ட நீதிமன்றம் ஏற்படுத்த
அரசுக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: No, Sir.

திரு சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே,
இப்போது திருநெல்வேலி மாவட்டத்திலே உள்ள அந்தக்
கோர்ட்டிலே அதிகமான கேஸ்கள் வருவதன் காரணமாக சீக்கிர
மாக பைசல் ஆகாமல் இருக்கின்றன, அது மட்டும் அல்ல, அது
ஒரு பெரிய மாவட்டம். ஆகவே தூத்துக்குடியிலே மாவட்ட
நீதிமன்றம் ஏற்படுத்தி மக்களுக்கு உதவி செய்ய அரசு முன்
வருமா? அந்த முறையிலே அரசாங்கம் தன்னுடைய முடிவை
மறு பரிசீலனை செய்து அங்கே ஒரு கோர்ட்டை ஏற்படுத்த
முயற்சிக்குமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Tuticorin which is a coastal town situate in the eastern end of the district ; whereas Tirunelveli is centrally situate in the district. The District Court cases arising from Tuticorin, Kovilpatti, Vilathikulam, Srivaikuntam and Tiruchendur taluks are not sufficient for constituting a separate district and Sessions Court at Tuticorin. Therefore, the High Court considered that it is not possible to constitute a separate District Court at Tuticorin in Tirunelveli district.

[1978 செப்டம்பர் 6

திரு [illegible] : [illegible] அவர்களே, [illegible] 300 [illegible] மேற்பட்ட [illegible] திற்குப் [illegible] வேண்டியிருக்கிறது [illegible] கின்றார்கள், [illegible] அமைக்கும் [illegible] ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: The Member is requested to put a separate question on the feasibility or otherwise of the Court of Subordinate Judge.

[முற்பகல் 9.40]

திரு. [illegible] : [illegible] அவர்களே, இந்தக் கோர்ட் [illegible] கமிட்டி [illegible] உள்ளதா [illegible] அதை [illegible] என் [illegible] சப் [illegible] ஜுடிஷனல்-கமிட்டி [illegible] என்பனை [illegible].

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: This question mainly pertains to the establishment of a separate district court at Tuticorin. If the hon. Member is pleased to put a separate question on the establishment of a Subordinate Court, the High Court will be consulted and thereafter Government can reveal its stand.

திரு. [illegible] : [illegible] அவர்களே, [illegible] இருக்கும் [illegible] இருப்பதை, [illegible] உட [illegible] கொண்டு [illegible] பரி [illegible] கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: In my first answer, I have already stated that Tirunelveli is centrally situated whereas Tuticorin is only a coastal town situated at the eastern end of the district. The High Court's Committee called the Varadarajan Committee has already given its findings that it is not possible to establish a court at Tuticorin.

1978 செப்டம்பர் 9]

THIRU M. A. LATHEEF: Apart from the recommendations made by the Committee on Judiciary which deals with the establishment of various civil courts and other courts in different places, what is the role played by Government to recommend to the Committee to meet the aspirations of people in different parts of the State?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Government makes its views known to the High Court. The High Court Judges gather in a conclave and decide these matters and send their recommendations. Normally the High Court, being an independent organisation know the views of the litigant public in various centres. The Government always gives respect and weight to the views of the High Court.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, ஜுடிஸ்டிக்ஷன் கமிட்டியும், வரதராஜன் கமிட்டியும் சிபாரிசு செய்திருந்தும் அது செயல் படுத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? உதாரணமாக, பெரியகுளத்தில் சப்-கோர்ட் வேண்டுமென்று சிபாரிசு செய்திருந்தும், பல ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருந்தும் இன்னும் வரவில்லை. (மணி யடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து வினா எண். 111.

திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன் : ஸ்பீக்கர் சார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள்.

திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன் : தலைவரவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள். தயவு செய்து உட்காருங்கள். விதிகளைப் படித்துவிட்டு வந்து நீங்கள் பேசுங்கள். அல்லது உங்கள் தலைவராவது உங்களுக்கு வழி காட்ட வேண்டும். அல்லது பேரவைத் தலைவர் சொல்வதையாவது கேளுங்கள். அதையும் கேட்காமல் நின்றுகொண்டிருந்தால் என்ன அர்த்தம்? எல்லோரும் நிற்க உரிமை உண்டு என்று நின்று கொண்டிருந்தால் என்ன செய்வது? நான் படிப்பதைக்கேளுங்கள்.

[திரு. பேரவைத் தலைவர்] [1978 செப்டம்பர் 9.

It is left to the Speaker to decide who should be given chance to put supplementary questions on a particular question. Every Member need not be given a chance.

அதைச் செய்வதற்கு என்னை இங்கே உட்கார வைத்திருக்கிறீர்கள். எனவே, தயவு செய்து நீங்கள் உட்காருங்கள். இது அவை, அதைத் தெரிந்து கொண்டு பேசுங்கள். நானே உங்களை உட்கார வைக்க வேண்டியிருக்கிறது. இல்லை என்றால் என்னைக் காப்பாற்றுவதற்கு யாரும் கிடையாது. தயவு செய்து அமருங்கள்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : நான் தெரிந்து கொண்டு தான் வந்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். நான் நின்றுகொண்டிருந்தால் நீங்கள் உட்கார வேண்டுமென்ற சட்டம் படித்தீர்களா ? அல்லது நான் படிக்கும்போது எனக்குத் தெரியும் நீங்கள் உட்காருங்கள் என்று சொல்ல வந்திருக்கிறீர்களா ? தாங்கள் உறுப்பினர் என்று நினைத்துக் கொண்டால் நீங்கள் இப்படி செய்ய மாட்டீர்கள். தயவு செய்து உட்காருங்கள். நீங்கள் எழுந்திருக்கவே கூடாது.

திரு. என். கிட்டப்பா : உறுப்பினர் வெளியே போக வேண்டுமென்றால் எழுந்துதானே போக வேண்டும். அதைக் கூட கூடாது என்றால் ....

திரு. சி. ஆறுமுகம் : உறுப்பினரை நீங்கள் அப்படி சொல்லக் கூடாது. எழுந்திருக்கவே கூடாது என்று நீங்கள் எப்படி சொல்லலாம்? ....

(திரு. க. அன்பழகன் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயதுசெய்து பேராசிரியர் இப்பொழுது எழுந்திருக்க வேண்டாம். நான் ஆபத்தான கட்டத்திலிருந்தபொழுது தாங்கள் சிரித்துக் கொண்டிருந்து விட்டீர்கள். தங்கள் உறுப்பினருக்கு ஆபத்தான தாங்கள் எழுந்து கொண்டிருக்கிறீர்கள். நான் கட்டத்தில் பாதுகாப்பு வேண்டுமென்று சொன்னபொழுது தாங்கள் எழுந்துகொள்ளவில்லை. அப்பொழுது எழுந்திருந்திருக்க வேண்டாமா ? இப்பொழுது எழுந்திருக்காதீர்கள். A Member should not interrupt or make insinuations against the Speaker என்று விதியில் இருக்கிறது. அதைப் படித்தீர்களா ? உட்காருங்கள்.

1978 செப்டம்பர் 9]

சேரன்மாதேவி பேருந்து நிலையம்.

*வினு எண். 111— திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மாதேவி பஞ்சாயத்து பேருந்து நிலையம் புயலால் பாதிக்கப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அப்பேருந்து நிலையத்தை சீரமைக்க மானியம் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) பேருந்து நிலையம் புயலால் பாதிக்கப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

காரைக்குடி நகராட்சி அலுவலகக் கட்டிடம்.

*வினு எண். 112— திரு. பொ. காளியப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டில் காரைக்குடி நகராட்சி அலுவலகம் கட்டுவதற்கு அறிஞர் அண்ணாவால் அடிக்கல் நாட்டப்பட்டும் இதுவரை நகராட்சி அலுவலகம் கட்டப்படாததன் காரணம் என்ன ?

(ஆ) அதனைக் கட்டுவதற்கு என்ன முயற்சி எடுக்கப்பட்டுள்ளது ?

(இ) அண்ணா அவர்கள் பெயர் பொறிக்கப்பட்ட அவரால் திறந்து வைக்கப்பட்ட சலவைக்கல் இப்போது எங்கு உள்ளது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) நிதிப் பற்றாக்குறையால் இத்திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) தேவையான நிதி திரட்டவும் அரசிடம் கடன் பெறவும் ஆணையர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

(இ) இந்த சலவைக்கல் பாதுகாப்பாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

[1978 செப்டம்பர் 9

திரு. பொ. காளியப்பன் : பேரவைத் தலைவரவர்களே, அண்ணாவால் அடிக்கல் நாட்டப்பட்ட அந்த நகராட்சிக் கட்டிடம் கிட்டத்தட்ட 9 ஆண்டுக் காலமாக அப்படியே இருக்கிறது. அதை இந்த அரசாவது கடன் கொடுத்து அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தற்போது ரு. 2 இலட்சம் மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டு, அந்த அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சென்னை மாநகராட்சியுடன் ஊராட்சிகள் இணைப்பு.

* வினா எண். 113 திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சென்னையைச் சுற்றியுள்ள ஊராட்சிகளை சென்னை மாநகராட்சியுடன் இணைக்கும் திட்டத்திற்கு சம்பந்தப்பட்ட ஊராட்சிகளிடமிருந்து எதிர்ப்பு ஏதேனும் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: கானகம்-தரமணி, விருகம்பாக்கம், சாலிக் கிராமம், எருக்கஞ்சேரி ஆகிய நான்கு பேரூராட்சிகள் எதிர்ப்புகள் தெரிவித்துள்ளன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, 4 ஊராட்சிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதன்மீது அரசு என்ன மேல் நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ? அதைப் போலவே சென்னை நகராட்சியை விரிவு படுத்தும் திட்டத்தின்கீழ் பல பகுதிகளைச் சேர்ப்பதாகத் தெரிகிறது. அப்படி சேர்க்கப்படுவதன் அடிப்படை நோக்கத்தினை அரசு அறிவிக்க இயலுமா ? எந்தெந்தப் பகுதிகள், விரிவு படுத்தப்படுகிற பகுதிகளாக ஆக்கப்படுகிற நேரத்தில் புதிதாகச் சேர்க்கப்படுகிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்தப் பேரூராட்சிகளின் எதிர்ப்பை நிராகரித்து 29—5—1978 ஆம் நாளிட்ட ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசாணை (பல்வகை) 790-ல் இணைப்புக்கான இறுதி ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. சென்னை மாநகர எல்லையுடன் வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டுள்ள புறநகர் திட்டப் பகுதிகளை இணைப்பதற்கான செயற்குறிப்பை வீட்டுவசதி வாரியம் 1962-லும், 1970-லும் அனுப்பியது. அந்தச் செயற்குறிப்பு வந்த பிறகுதான் அதிலே 12 பேரூராட்சிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

1978 செப்டம்பர் 9]

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தை விரிவு படுத்துகிற திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள், அந்தந்தப் பேரூராட்சிப் பகுதியிலே உள்ளவர்கள் அதிக வரி செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்; அந்த வரியை அவர்களாலே தாங்க முடியாது என்ற அடிப்படையிலே தான் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். இது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்ததா ? ஆமெனில், உரிய விதத்திலே அவர்களுக்குப் பரிகாரம் காணப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : விதிக்கின்ற அந்த வரிக்கு ஈடாக வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

திரு. க. அன்பழகன் : வளர்ச்சிப் பணிகள் என்பது 10 ஆண்டுக்காலம், 20 ஆண்டுக் காலம் ஆகியும் புறநகர்ப் பகுதியிலே நடைபெறாமல் இருந்திருக்கிறது. ஏற்கனவே அப்படித்தான், இனியும் அப்படித்தான் ஏற்பட முடியும். எனவே, ஏற்படுகிற தாமதத்தையொட்டி, முன்னாலேயே வரி வசூலிக்காமல் இருக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்த மக்களுடைய முறையீட்டை உரிய வகையிலே பரிசீலித்து நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வடலூர், சேஷசாயி தொழிற்சாலைத் தொழிலாளர்கள்.

*வினா எண். 114—திரு. சி. ராமநாதன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள வடலூர், சேஷசாயி தொழிற்சாலையில் சென்னை டி.சி.எல். அவர்கள் முன்னிலையில் 10-3-1978 அன்று அங்கீகரிக்கப்பட்ட சங்கம் என்ற பெயரால் சிறுபான்மை தொழிற்சங்கத்துடன் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் சிறுபான்மை தொழிற் சங்கத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1978 செப்டம்பர் 9

(முற்பகல் 9-50.)

திரு. சி. ராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, வடலூர் சேஷசாயி என்ற தொழிற்சாலையில் சிறுபான்மைத் தொழிற் சங்கம் ஒப்பந்தம் செய்துகொண்டு பெரும்பான்மை யாக உள்ள தொழிலாளர்கள் புறக்கணிக்கப்படுவது அங்கே நடைபெறுகிறது என்று கூறுகிறார்கள். அது உண்மையா ? அப்படி உண்மை என்றால், அதை நீக்க அரசு நடவடிக்கை எடுக் குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கூறப்படுவது உண்மை அல்ல.

திரு. சி. கோவிந்தராசன் : அந்த ஒப்பந்தம் செய்ததால் வேலை பளு இருக்கிறது என்றும் அந்த ஒப்பந்தத்தை செய்யக் கூடாது என்று தொழிலாளர்கள் மத்தியில் எதிர்ப்பு இருந்தும் கூட அந்த ஒப்பந்தம் செய்து கொண்ட பிறகு ஒரு வாரம் தொடர்ந்து வேலை நிறுத்தம் நடைபெற்றது அமைச்சர் அவர் களுக்குத் தெரியுமா ? அப்படி என்றால் மைனாரிட்டி ஒப்பந்தம் செய்யப்பட்டது என்பதை அறிந்து அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, வேலை நிறுத்தம் நடந்தது தெரியும். ஆனால் ஒப்பந் தம் ஏற்படுவதற்கு முன்பாக 3 சங்கங்களின் உறுப்பினர்களின் நிலை சரிபார்க்கப்பட்டது. அந்த 3 சங்கங்களின் பெரும்பான் மையைப் பற்றி திருப்தி செய்யப்பட்ட பிறகு தான் 10–3–78 அன்று கையெழுத்தாகியது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், ஜனநாயக அடிப் படையில் இது போன்ற சிறுபான்மை தொழிற் சங்கத்துடன் ஒப்பந்தம் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால், ஒரு தொழி லுக்கு ஒரு சங்கம் என்ற அடிப்படையிலே பெருவாரியான தொழிலாளர்கள் இருக்கக்கூடிய சங்கங்களை அங்கீகாரம் செய் வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர் களே, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் வருவதை இந்த அரசு ஆதரிக்கிறது. அதற்கு வேண்டிய முறையில் எல்லாத் தொழிற் சங்கத் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கீகாரத்தைப் பொறுத்தவரையில் ஒரு தொழிலுக்கு ஒரே சங்கம் என்று வந்து விட்டால் அந்தப் பிரச்சினையே எழவில்லை. ஒரு தொழிற்சாலையிலே ஒரே சங்கம் இருந்தால்

1978 செப்டம்பர் 9]

சங்கமாக பாவிக்கப்படும். ஒரு
அது அங்கீகரிக்கப்பட்ட ஓராண்டுக் காலம் ஆகிவிட்டால்,
தொழிற் சங்கம் ஆரம்பித்து நிர்வாகத்திற்கு
தங்களுக்கு அங்கீகாரம் வேண்டும் என்று Evaluation and
கிடைக்கவில்லை என்றால், நிவாரணம்
எழுதலாம். அதற்கு எழுதலாம்.
Implementation Committee
கிடைப்பதற்கு அங்கே வசதி இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்
திரு. மு. அம்பிகாபதி : ஒரு சங்கம் என்பதை அமுல்
அவர்களே, ஒரு தொழிலுக்கு முறையை அமுல் படுத்த
படுத்துவதற்கு ரகசிய வாக்கெடுப்பு தொழிலாளர்கள்
அரசாங்கம் முன் வருமா ? ஏனென்றால் டி. வி. எஸ். நிறுவனத்
தேர்ந்தெடுத்த சங்கத்தை அங்கீகரிக்க ஏற்பாடு செய்ய
தினர் அடம் பிடிக்கிறார்கள். அதற்குத் தகுந்த விரும்புகிறேன்.
அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்
களே, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்பதற்கும் ஒரு தொழிற்
சாலைக்கு ஒரு சங்கம் என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது.
இதில் எது என்பதை விளக்கிச் சொல்லி, எல்லாச் சங்கங்களும்
சேர்ந்து, மத்திய சங்கமும் முடிவெடுத்து அரசுக்குப் பரிந்துரை
தருமானால் அரசு அதைப் பரிசீலனை செய்யும்.

அங்கீகரித்த
திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, ஒப்பந்தத்தையும்
சங்கத்தோடு சட்டப்படி போடப்பட்ட மீறப்பட்டிருக்
இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனத்தில் இந்த
கிறது என்று புகார் வந்திருக்கிறது. இது சம்பந்தமாக விரும்பு
அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய
கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்
களே இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனத்தில் 12 (3)
செட்டில்மெண்டு ஒன்று கையெழுத்தாகியிருக்கிறது. நிர்வாகத்
தின் சார்பாகவும் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அதில்
Subject to approval by the Central Government
என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் இந்த அரசைப்
பொறுத்த வரையில் 12 (3) செட்டில்மெண்ட் இருந்தால்
அதற்கு மரியாதை கொடுத்து அதைச் செயல் படுத்த வேண்டும்
என்று கருதுகிறது. அதன் காரணமாக, 2, 3 தினங்களாக
டிபுடி லேபர் கமிஷனர் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்
கிறார். தேவையானால் லேபர் செக்ரட்டரி அவர்களையே
டெல்லிக்கு அனுப்பி பேச்சு வார்த்தை நடத்த அரசு கருதிக்
கொண்டிருக்கிறது.

[1978 செப்டம்பர் 9

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்த
சேஷசாயி தொழிற்சாலையில் ஒப்பந்தம் ஏற்பட்டதற்குப் பின்
னாலே வேலை நிறுத்தம் நடைபெற்றது உண்மை என்று அமைச்சர்
அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே முதலிலேயே பரி
சீலனை செய்து இந்தச் சங்கம்தான் சரி என்று ஒப்பந்தம் செய்த
தற்குப் பின்னாலே தொழிலாளர்கள் அந்தத் தொழிற் சங்கத்திற்கு
விரோதமாக திரும்பி அந்த ஒப்பந்தத்தை எதிர்க்கின்ற காலத்
தில், இன்றுவரு அந்த ஒப்பந்தத்தை மறு பரிசீலனை செய்ய
அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே,
வேலை நிறுத்தம் செய்யும் உரிமை எல்லோருக்கும் உண்டு.
இந்த அரசு சட்டமன்றத்தில் இதைக் கூறியிருக்கிறது, வேலை
நிறுத்தம்செய்வது அரசை எதிர்த்துச் செய்வது என்று கருதாது
என்று. ஒருவேலைநிறுத்தம் செய்துவிட்டாலேயே 12 (3) செட்டில்
மென்ட் மாறிவிடுவது இல்லை. 12 (3) செட்டில் மென்டின்
தன்மை அதற்குண்டான சட்ட விளக்கம் அனைத்தையும் இதே
மன்றத்தில் கேஸ்-லாவைப் படித்துக் காட்டி விளக்கியிருக்கிறேன்.

மலைத்தோட்டத் தொழிலாளர் ஊதியம்.

*வினா எண். 115 திரு. கே. உச்சி, திரு. எஸ். கணேசன் :
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நீலகிரி மாவட்டத்தில் வேலை செய்யும் தோட்டத்
தொழிலாளர்களுக்கு கடைசியாக எந்த ஆண்டில் கூலி
நிர்ணயம் செய்யப்பட்டது ?

(ஆ) ஆண்களுக்கும் பெண்களுக்கும் கொடுக்கப்படும் கூலி
எவ்வளவு ?

(இ) நிர்ணயம் செய்த கூலி எல்லாத் தோட்ட அதிபர்க
ளாலும் முறையாகக் கொடுக்கப்படுவது எப்படி கண்காணிக்கப்
படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) நீலகிரி மாவட்டம் உட்பட தமிழ் நாட்டிலுள்ள
தோட்டத் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதியம்
1948-ம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் கீழ்
இதற்கு முன்னர் 1976-ம் ஆண்டு மாற்றியமைக்கப் பெற்று
அது 18—11—1976-ம் ஆண்டு கெசட்டில் வெளிவந்துள்ளது.

1978 செப்டம்பர் 9]

(ஆ) சம ஊதியச் சட்டம் அமுலில் இருப்பதால் ஒரே
மாதிரியான வேலைக்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம ஊதி
யமும் வழங்கப்படுகிறது. குறைந்த அளவு ஊதியச் சட்டத்
தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதியம் நீலகிரி மாவட்டத்
திற்கும் பொருந்தும். அந்த ஊதியம் வீதம் பின்வருமாறு :—

	அடிப்படை ஊதியம்.		பஞ்சப்படி.	
	ரூ.	பை.	ரூ.	பை.
1. வயது வந்தோர் (18 வயதிற்கு மேல்).	3	85	1	35
2. இளைஞர் (15 வயது முதல் 18 வயது வரை).	2	65	0	60
3. சிறுவர் (15 வயதுக்குக் குறைவான வர்கள்).	2	35	0	35

மேற்கண்ட பஞ்சப்படி நுகர்வோர் சராசரி
எதிர்காலத்தில், மேற்கண்ட தகுந்தவாறு மாற்றியமைக்கப்
விலைவாசி புள்ளி மாற்றத்திற்குத் தகுந்தவாறு மாற்றியமைக்கப்
படவேண்டும்.

(இ) நீலகிரி மாவட்டத்நில் குன்னூர், உதகமண்டலம்,
கூடலூர் என்ற மூன்று இடங்களில் தோட்டத்தொழில் ஆய்வாளர்
கள் இருக்கின்றனர். தொழிலாளர்களுக்கு அரசு நிர்ணயம்
செய்த குறைந்த பட்ச ஊதியம் வழங்கப்படுகின்றனவா என
இவர்கள் கண்காணித்து வருகின்றனர்.

திரு. கே. உச்சி : பேரவைத் தலைவரவர்களே, இந்த
நிர்ணயிக்கப்பட்ட அடிப்படைக் கூலி எல்லாத் தோட்டத்
தொழிலாளர்களுக்கும் ஒரே மாதிரியாகக் கொடுக்கப்பட
வேண்டும். அப்படிக் கொடுப்பது இல்லை என்பது அரசுக்குத்
தெரியுமா ? அப்படிக் கொடுக்காத தோட்ட முதலாளி மீது
நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை
வரவர்களே, கொடுக்கப்படவில்லை என்ற புகார் வரவில்லை.
புகார் கொடுத்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, பெரிய தோட்
டங்களிலும் சிறிய தோட்டங்களிலும் வேலை செய்பவர்கள் தொழி
லாளர்கள்தான். அரசு நிர்ணயித்துள்ள அடிப்படைக் கூலியில்
வித்தியாசம் இருப்பதாக அறிகிறோம். எனவே, அதைப்
போக்கி, அனைவருக்கும் ஒரே சீராகக் கூலி கொடுக்க அரசு
ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1978 செப்டம்பர் 9

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை
வரவர்களே, குறைந்தபட்ச ஊதியம் எல்லோருக்கும் பொது
வாகத்தான் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவரவர்களே, ஆண்
களுக்கும் பெண்களுக்கும் சம கூலி கொடுக்கப்படுவதாக கனம்
அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்தச் சட்டம்
அமல்படுத்துவதற்குப் பதிலாக, தொடர்ந்து இன்றைக்கும் பெண்
களுக்கு குறைந்த கூலி கொடுக்கப்படுகிறது. அந்தச் சட்டம்
செய்யப்படுகிறபோது, நீங்கள் அமைச்சர் இல்லை. நானும்,
நீங்களும் ஒரே தொழிலாளர் அரங்கத்தில் தலைவர்களாக இருந்
தோம். ஆண்கள் செய்யக்கூடிய வேலையைத்தான் பெண்கள்
செய்கிறார்கள். இருப்பினும் பெண்கள் செய்யும் வேலையை
கிரேடு 2 என்று போட்டு அவர்களுக்குக் குறைந்த கூலிகொடுக்க
வேண்டும் என்று போட்டு இருக்கிறார்கள். அதனால் குறைந்த
கூலி பெண்களுக்குத் தொடர்ந்து கொடுக்கப்படுகிறது. ஆகவே,
அன்று செய்யப்பட்ட அநியாயத்தை முடித்துக் கட்டி, நியாயம்
வழங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை
வரவர்களே, ஈக்குவல் ரெமியூனரேஷன் ஆக்ட்டின்படி ஆண்
களுக்கும் பெண்களுக்கும் ஒரே மாதிரியான வேலை கொடுக்கப்
பட்டால், ஒரே மாதிரியான கூலி கொடுக்க வேண்டும். இது
சட்டம். அந்த சட்டத்தை யாராவது மீறினால், அதற்கு விரோத
மாக நடந்தால் அதைக் குறிப்பிட்டு, மாண்புமிகு உறுப்பினர்
கள் இந்த அரசுக்குத் தெரிவித்தால் அதைப் பரிசீலனை செய்து
தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில்
தோட்டத்தில் பணியாற்றும் இலங்கை அகதிகளுக்கு அந்த நிர்ண
யிக்கப்பட்ட கூலி கொடுக்கப்படவில்லை என்ற புகார் அரசாங்
கத்திற்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. இப்போது கூட அவர்
கள் வந்து இருக்கிறார்கள். ஆகவே, அது சம்பந்தமாக அர
சாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை
வரவர்களே, அந்தப் புகாரை அரசிடம் கொடுத்தால் பரிசீலனை
செய்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

[முற்பகல் 10–00]

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, குறைவாகக் கூலி கொடுப்
பதில்லை என்றும் அதற்கான கோரிக்கை அரசுக்கு வரவில்லை
என்றும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் கூடலூர்த்
தொகுதி டெரஸ் எஸ்டேட்டில் குறைந்த கூலி கொடுக்கிறார்கள்

1978 செப்டம்பர் 9]

என்று சொல்லி, அதற்காக, போராட்டம் நடத்தினார்கள் ; பின்
னால் உண்ணாவிரதம் இருந்தார்கள். அதன் பிறகும் நிர்ண
யித்த கூலி கொடுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?
அதற்கு என்ன நடவடிக்கை அரசு எடுக்கப் போகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே,
குறைவாக கூலி கொடுக்கப்படுவதில்லை என்று நான் சொல்ல
வில்லை. குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்று புகார் வந்
தால் இந்த அரசு விசாரிக்கும் என்று சொன்னேன். புகார்
வந்தால், அதுபற்றி விசாரித்து நடவடிக்கை எடுப்பதைவிட இந்த
அரசுக்கு வேறு என்ன வேலை இருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் 10 வினாக்கள்
இருக்கின்றன. இன்றைக்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் பேச
வேண்டி இருப்பதால், வினா நேரத்தை நீட்டித்துக்கொண்டு
போக முடியாது. மேலும் வினா நேரத்தை நீட்டித்தால் மற்ற
நிகழ்ச்சிகளும் பாதிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கி
றேன். எனவே, மீதமுள்ள கேள்விகளும், பதில்களும் நட
வடிக்கைக் குறிப்பில் சேர்த்து அச்சிடப்பெறும்.

அரயபுரம் அரிசனக் குடியிருப்புக்கு மின்சக்தி வழங்கல்.

*வினா எண். 116 திரு. இரா. இராசமாணிக்கம்: மாண்புமிகு
அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி சேத்திரபாலபுரம் ஊராட்சியில்
அரயபுரம் அரிசன காலனிக்கு மின்வசதி செய்து கொடுக்க மின்
கம்பம் நடப்பட்டு கம்பிகள் இழுக்கப்பட்டும் மின் இணைப்பு
கொடுக்காததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை
என்ன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) குத்தாலம் தொகுதி சேத்திரபாலபுரம் ஊராட்சியில்
உள்ள அரயபுரம் அரிசன குடியிருப்புப் பகுதியில் தெரு விளக்கு
கள் அமைத்து அவைகளுக்கு 22–4–1978 அன்று மின்சக்தி
அளிக்கப்பட்டு விட்டது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

புதிய விமானதளங்கள்.

*வினா எண். 117—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில் விமான நிலையம் அமைத்திடக் கோரி தமிழக அரசு மத்திய அரசுக்கு விண்ணப்பம் அனுப்பியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

*வினா எண். 118— திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் அல்லது அதன் வெகு அருகில் விமான நிலையம் அமைக்கக் கோரி மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்தி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் நிலை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

கொடைக்கானலில் உள்ள அரசுப் பேருந்துப் பணிமனை.

*வினா எண். 119— திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் நகரில் கட்டப்பட்ட State Bus Depot உபயோகமில்லாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) கொடைக்கானல் நகரில் அரசுப் பேருந்துப் பணிமனை இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

Aruvikarai weir.

*Q. No. 120 —THIRU J. JAMES: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a regulator (road-*cum*-dam) in the place of Aruvikarai weir at Thiruvettar in Kanyakumari district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

சின்னாற்று நீர்ப்பாசனம்.

*வினா எண். 121— திரு. செ. ந. பழனிசாமி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கோவை மாவட்டம், மத்துவராயபுரம் கிராமத்தைச் சேர்ந்த சிங்கபதி மலைவாழ் மக்களுக்கு சின்னாற்றில் வரும் தண்ணீரைப் பயன்படுத்த கூடுதல் வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

இல்லை.

நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைப் பகுதியில் புதிய சாலைகள்.

*வினா எண். 122— திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நெல்லிக்குப்பம் ஈ.ஐ.டி. பாரி சர்க்கரைத் தொழிற்சாலை நிறுவனம் கரும்பு செஸ் நிதியாக ஆண்டுதோறும் எவ்வளவு ரூபாய் கொடுக்கிறது ?

(ஆ) அந்த நிதியிலிருந்து அந்தப் பிரதேசத்தில் புதிய சாலைகள் நிர்மாணிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு உண்டா?

1978 செப்டம்பர் 9

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) நெல்லிக்குப்பம் ஈ. ஐ. டி. பாரி சர்க்கரைத் தொழிற்சாலை நிறுவனம் 1974—75-ல் ரூ. 28.11 இலட்சமும், 1975—76-ல் ரூ. 27.99 இலட்சமும், 1976—77-ல் ரூ. 20.11 இலட்சமும், 1977—78-ல் ரூ. 9.33 இலட்சமும் கரும்பு செஸ் கொடுத்துள்ளது.

(ஆ) கரும்பு மேல்வரி நிதியிலிருந்து ஈ. ஐ. டி. பாரி சர்க்கரை ஆலைப் பகுதியில் புதிய சாலைகள் அமைக்கும் பொருட்டு 1974—75-ல் ரூ. 7.05 இலட்சமும், 1975—76-ல் ரூ. 9.45 இலட்சமும், 1976—77-ல் ரூ. 8.60 இலட்சமும், 1977—78-ல் ரூ. 9.61 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளன. ஏற்கெனவே, ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூ. 36.31 இலட்சம் செலவு மதிப்பீடு உள்ள 5 சாலைப் பணிகள் நடப்பு ஆண்டில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ரூ. 8 இலட்ச மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் ஈ. ஐ. டி. பாரி ஆலைப் பகுதியில் புதிதாக எடுத்துக் கொள்ள சர்க்கரை இயக்குநர் ஒரு சாலைப் பணியை பரிந்துரை செய்துள்ளார். இது அரசின் ஆய்வில் உள்ளது.

மருத்துவப்பட்ட மேற்படிப்பு வகுப்புகளுக்கு ஆசிரியர்கள்

*வினா எண். 123—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மருத்துவப்பட்ட மேற்படிப்புப் பிரிவில் போதுமான அளவு ஆசிரியர்கள், வல்லுநர்கள் இல்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இது குறித்து எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) போதுமான அளவு ஆசிரியர் உளர்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

மாவட்ட மருத்துவ அலுவலர்கள்.

*வினா எண். 124—திரு. அ. ப. பழனியப்பன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மூன்றாண்டுகளுக்கு மேல், மாவட்டங்களில் பணியாற்றிவரும் District Medical Officer எத்தனை பேர் ?

(ஆ) தொடர்ந்து அவ்விதம் பணியாற்ற அனுமதித்ததற்கு விசேஷ காரணங்கள் உண்டா ?

1978 செப்டம்பர் 9]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) ஒரு அதிகாரி.

(ஆ) இல்லை. இவரை மாற்றுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

அறநிலையங்களால் மருத்துவ மனைகள் திறப்பு.

*வினா எண். 125—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசினர் உதவியோடு தனிப்பட்ட அறநிலையங்கள் மருத்துவ மனை தொடங்கும் திட்டத்தின் கீழ் மருத்துவ மனை தொடங்க எத்தனை விண்ணப்பங்கள் அரசிற்கு வந்துள்ளன ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத்துறை இயக்குநருக்கும் அரசுக்கும் 15 விண்ணப்பங்கள் வந்துள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்

(அ) தூத்துக்குடி அனல் மின் நிலையம் 'கன்வேயர் பெல்ட்' தயாரிப்பு.

(திரு. ஏ. ஆர். மாரிமுத்து எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சீரோ அவர் (Zero hour) உண்டு என்று நினைத்துக்கொண்டு பேச ஆரம்பிக்காதீர்கள். நமக்கு சீரோ அவர் கிடையாது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நமக்கும் உண்டு. நான் நீண்ட விவாதம் நடத்தப் போவதில்லை. ஒரு பாயின்ட் மட்டும் சொல்லிவிடுகிறேன்.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு தேவைப்படும் 'கன்வேயர் பெல்ட்' 5 கோடி ரூபாயில் செய்வதற்கான ஆர்டரை சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தார் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மின்சார வாரியம் வேறு ஒரு தனியார் நிறுவனத்திற்கு அந்த ஆர்டரை கொடுக்கப் போவதாகத் தெரிகிறது. அப்படி அந்த ஆர்டரை தனியார் நிறுவனத்திற்கு கொடுக்காமல் அரசு நிறுவனமான சதர்ன் ஸ்டரக்சுரல்ஸ் நிறுவனத்திற்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் இந்தக் கேள்வியை குறுகிய கால வினாவாகவோ அல்லது 41ஆவது விதியின் கீழோ கேட்டிருந்தால் அமைச்சரவர்கள் விளக்கம் சொல்லியிருப்பார்கள். திடீரென்று தாங்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினைக்கு அமைச்சர் எப்படி பதில் சொல்ல முடியும் ?

(ஆ) சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியின் லிப்டுகள் சரிவர இயங்காமை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கியிருக்கும் விடுதியில் உள்ள 4 லிப்டுகளும் சரியாக வேலை செய்யவில்லை. எம்.எல். ஏ-க்கள் செல்லும்போது பாதியிலேயே நின்று விடுகின்றன. அதனால் உறுப்பினர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்ற ஒரு நிலை வந்துவிடுமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஆகவே லிப்டுகள் சரியாக வேலை செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை இந்த அவையில் வந்து சொல்லி, அவைத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றில்லை. சட்டமன்றச் செயலாளரிடமே இதைத் தாராளமாகச் சொல்லலாம். அவர்களிடம் சொல்லி, நடவடிக்கை எடுக்காவிட்டால் இந்த அவையிலே நீங்கள் குறிப்பிடுவது நியாயம். செயலாளர் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார் ; அவருடைய அறையில் சொன்னாலே வேலை நடந்துவிடும்.

3. உரிமைப் பிரச்சினை.

சட்ட அமைச்சரின் பேரவை செயலர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 184 ஆவது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சுவாமிதாஸ், மற்றும் திரு. பொ. விஜயராகவன் ஆகியோர் கீழ்க்கண்ட அவை உரிமை மீறல் பிரச்சனை குறித்து அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள் :

"According to the news item published in 'Dinamalar' a Tamil daily at its issue, Nellai edition, dated 24th August 1978, Thursday, Thiru Jayavelu, Parliamentary Secretary to Law Minister was alleged to have made in the course of his speech at Swamiyarmadam on 23rd August 1978 the following remarks:

''குமரி மாவட்ட ஜனதா எம்.எல்.ஏ.க்கள் சட்டமன்றத்தில் குமரி மாவட்ட பிரச்சனைகளை எடுத்து அதிகமாகப் பேசுவது கிடையாது. ஒருவேளை அவர்கள் பேசினாலும் அது புரிவதில்லை. என்ன பேசுகிறார்கள் என்றுகூடத் தெரிவதில்லை.''

The above remarks cast aspersions against the members of the Janatha Party and constitute a breach of privilege. I, therefore, request that I may be permitted to raise the matter in the House against Thiru Jayavelu, Parliamentary Secretary. The relevant paper (newspaper) is also enclosed herewith.

இது எப்படி அவை உரிமை மீறல் செயல் என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன், திரு. விஜயராகவன்.

திரு. பொ. விஜயராகவன் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தந்துள்ள பார்லிமென்ட் செக்ரெட்டரி மாண்புமிகு ஜெயவேலு அவர்கள் 23—8—78 அன்று சாமியார் மடத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் 'கன்னியாகுமரி மாவட்ட ஜனதா எம்.எல்.ஏ.க்கள் சட்டமன்றத்தில் கன்னியாகுமரி மாவட்ட பிரச்சனைகளைப்பற்றி அதிகமாகப் பேசுவதில்லை ; ஒருவேளை அவர்கள் பேசினாலும் அது புரிவதில்லை ; என்ன பேசுகிறார்கள் என்றுகூடத் தெரிவதில்லை'' என்று பேசியது 24—8—1978 நெல்லை பதிப்பு, தினமலர், பத்திரிகையில் வெளியாகி இருக்கிறது.

[திரு. பொ. விஜயராகவன்] [1978 செப்டம்பர் 9

இந்த மன்றத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஜனதா கட்சி எம்.எல்.ஏ.க்கள் கன்னியாகுமரி மாவட்ட பிரச்சனைகள் பற்றியும் இந்தத் தமிழகத்தின் பல்வேறு பிரச்சனைகள் பற்றியும் பல்வேறு நேரங்களிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது இந்த மன்றத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரியும்; தாங்களுக்கும் நன்ருகத் தெரியும். ஜனதா கட்சி ஒரு பொறுப்பான எதிர்க்கட்சி என்ற அளவில் இந்த மன்றத்தில் குமரி மாவட்டப் பிரச்சனைகளையும் மற்ற பகுதிகளிலுள்ள பிரச்சனைகளையும் எடுத்துச்சொல்லி, அமைச்சர்களிடமிருந்து தகுந்த விளக்கங்களையும் நாங்கள் பெற்றிருக்கிருேம். அப்படி நாங்கள் இங்கே பேசியது அமைச்சர்களுக்கு எல்லாம் புரிந்திருக்கிறது; புரிந்துகொண்டு தகுந்த பதிலும் சொல்லியிருக்கிருர்கள். ஆனல் கன்னியாகுமரி மாவட்ட ஜனதா கட்சி எம்.எல்.ஏ.க்கள் கன்னியாகுமரி மாவட்டப் பிரச்சனைகளைப் பற்றி இந்த மன்றத்திலே சொல்வது கிடையாது, சொன்னலும் அது மற்றவர்களுக்குப் புரிவதில்லை; என்ன சொல்கிருர்கள் என்பது தெரிவதில்லை என்று பொதுக் கூட்டத்தில் மாண்புமிகு பார்லிமெண்டரி செக்ரெட்டரி அவர்கள் பேசியது பத்திரிகையிலும் வெளியாகி இருக்கிறது. இது கன்னியாகுமரி மாவட்ட ஜனதா கட்சி எம்.எல்.ஏ.க்களையும் ஜனதா கட்சியையும் களங்கப்படுத்தும் நோக்கத்தோடும், மக்கள் மத்தியில் தவருன எண்ணத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடும் திட்டமிட்டு கூறப்பட்டது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில் அவைக்குத் துணையாக இருக்கின்ற வகையில் பல்வேறு பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி இருக்கிறோம். அந்த நேரங்களில் அதற்கான விளக்கங்களும் கூடப் பெற்றிருக்கிறோம். ஆகவே இது திட்டமிட்டு செய்யப்பட்டிருக்கின்ற ஒரு செயல். மக்கள் மத்தியில் ஜனதாகட்சியைப் பற்றியும் குமரி மாவட்ட ஜனதா கட்சி எம்.எல்.ஏ.க்களைப் பற்றியும் ஒரு தவருன கருத்தை உருவாக்குவதாக அமைந்திருக்கின்றது. ஆகவே தலைவரவர்கள் இதனைப் பரிசீலித்து உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இ. தமிழரசன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும் போது.. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். அமைச்சரின் பேரவைச் செயலர் பதில் சொல்லட்டும்.

1978 செப்டம்பர் 9]

திரு. எம். ஏ. ஜெயவேலு அமைச்சரின் பேரவை செயலர்) மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் பேசிய ஊர் சாமியார் மடம் என்பதாகும். மடம் என்று சொல்வதனல் சாமியார்கள் தங்குகின்ற மடம் என்ற பொருள்படுவதுபோல் இருக்கிறது. அது அந்த ஊரின் பெயர்—சாமியார்மடம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரின் பேரவை செயலர். ஜெயவேலு, அவர்கள் இந்தப் பிரச்சினைக்குத்தான் பதில் சொல்ல வேண்டும்.

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்டவாறு தான் பேசினேன் ஜனதாக் கட்சியைப் பற்றி இந்த மாவட்டத்தில். பேசுவது பொருத்தம் என்று நினைக்கிறேன். ஏனெனில் இந்த குமரி மாவட்டத்திலிருந்துதான் அதிகமான ஜனதா எம்.எல் ஏ.க்களை அனுப்பியுள்ளீர்கள். மத்தியில் உள்ள அரசு, புரட்சித் தலைவரின் நேர்மையான அரசைப் பாராட்டுகிருர்கள். லஞ்சலாவண்யமற்ற அரசு, அதிகாரத்தில் தலையீடு இல்லாத அரசு என்று எண்ணி புரட்சித் தலைவரை ஆதரிக்கின்ற நிலை இருக்கின்றது. ஆனல் துரதிஷ்டவசமாக தமிழகத்திலே உள்ள ஜனதாக் கட்சி அதுவும் குறிப்பாக சட்டமன்ற ஜனதா உறுப்பினர்கள், ஜனதா மத்தியத் தலைவர்களுக்கு எதிராகச் செயல்படுகிருர்கள். தி.மு.க. வெளி நடப்புச் செய்யும்போதெல்லாம் இவர்களும் நேரிடையாகவோ அல்லது வேறு சாக்குப் போட்டுவிட்டு வெளிநடப்புச் செய்கின்ருர்கள். இத்தகைய போக்கின் காரணமாக மக்கள் பிரச்சினைகளை விட்டு விடுகின்ற நிலை ஏற்பட்டு தி.மு.க.வின், அரசினை எதிர்க்கும் ஒவ்வொரு செயலிலும் துணை நிற்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களுக்குள்ளேயே ஒரு குழப்பமான நிலை. ஒருவர் தமிழர்கள் இந்தியை கற்க வேண்டும் என்று சட்டமன்றத்திலே பேசுகிருர். ஒருவர் இந்தியை எதிர்க்க எந்தத் தியாகமும் செய்யத் தயார் என்று சொல்லுகிருர் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரின் பேரவை செயலர் திரு. ஜெயவேலு அவர்கள், அங்கே பேசிய முழுப் பேச்சையும் சொல்ல வேண்டியதில்லை. இந்தப் பிரச்சினைக்குப் பதில் சொன்னல் மட்டும் போதும்.

திரு. எம். ஏ. ஜெயவேலு : (அமைச்சரின்பேரவை செயலர்): தலைவரவர்களே, அங்கே பேசிய பேச்சினைக் குறிப்பிட்டதால் தான் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் என்ன பிரச்சினையை எழுப்பி இருக்கிறார்களோ அந்தப் பிரச்சினைக்குத்தான் தாங்கள் பதில் சொல்ல வேண்டும். அதற்கான விளக்கத்தை மட்டும் சொல்லிவிட்டு அமருங்கள் போதும். (கூச்சல் குழப்பம்).

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவை செயலர்): அப்படி அவர்களுக்குள்ளேயே உள்ள அந்த நிலையில் அவர்களுக்கே என்ன பேசுவது என்பது தெரியவில்லை என்று தான் குறிப்பிட்டிருக்கிறேன். ஆகவே சாதாரண ஒரு தனி மனிதனுக்குள்ள பேச்சுரிமை அடிப்படையில்தான் நான் சார்ந்துள்ள கழகத்திற்கு எதிராக செயல்படுகின்ற ஒரு கட்சியைப் பற்றி என் சொந்தக் கருத்தை பொதுக் கூட்டத்தில் பேசினேன். அந்தப் பத்திரிகையிலே என்னுடைய முழுப் பேச்சையும் பிரசுரிக்காத காரணத்தினால்தான் உரிமைப்பிரச்சினை தந்த உறுப்பினர் அவர்களுக்கு இந்தக் கருத்து ஏற்பட்டுள்ளது. துண்டு துண்டாகப் பிரசுரம் செய்ததால் தான் இந்த நிலைமை ஆகவே, நான் யாருடைய மனதையும் புண்படுத்த வேண்டும் என்று பேசவில்லை. அதற்கு நான் பொறுப்பல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10.10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Practice and Procedure of Parliament-ல் என்ற புத்தகத்தில்........

(திரு. அ. சுவாமிதாஸ் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பிரச்னைமீது அமைச்சரின் பேரவை செயலர் சொன்னதற்குப் பிறகு நான்தான் தீர்ப்பு சொல்ல வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயிண்ட் ஆப் ஆர்டர். திரு. சுவாமிதாஸ் அவர்களும் உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பேசுவதற்கு அனுமதி கொடுக்கவில்லை இதுவரையிலும்' ஆகவே இது சம்பந்தமாக அவர்களது கருத்துக்களைத் தெரிவிக்க சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுவாமிதாஸ் அவர்களை முதலில் கேட்ட போது நான் பேசவில்லை, திரு. விஜயராகவன் அவர்கள் பேசுவார்கள் என்று சொன்னார்கள்,

In Practice and Procedure of Parliament by Kaul and Shakdher, it has been stated 'speeches or writings containing vague charges against members or criticising their parliamentary conduct in a strong language particularly in the heat of a public controversy, without, however, imputing any *mala fides*, are not treated by the House as a contempt or breach of privilege.

இருந்தாலும் ஒரு உறுப்பினர் பொது மேடையில் என்ன பேசினாலும் மற்ற உறுப்பினர்களின் மனம் புண்படும்படி அல்லது அவர்களுக்கு வருத்தம் ஏற்படக்கூடிய அளவில் பேசாமல் இருப்பது நல்லது. ஆகவே, அவர்கள் எழுப்பியுள்ள அவை உரிமை மீறல் பிரச்னையை உன்னிப்பாகக் கவனித்தால் அது உரிமை மீறலாகத் தெரியவில்லை. ஆகவே இதை நான் தள்ளுபடி செய்கிறேன்.

திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியன் : பொது மேடைகளில் பேசுகிற பேச்சுக்களின்மீது உரிமை மீறல் பிரச்னை கொண்டுவர அனுமதித்தால் தினந்தோறும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தரக் கூடாது என்று விதிகளைக் காட்டினால் நான் திருத்திக்கொள்கிறேன்.

(4) அறிவிப்பு.

(மதுரை) காமராஜ் பல்கலைக்கழக பேரவைக்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. காமராஜ் பல்கலைக்கழகப் பேரவையில் (செனட்) இச்சட்டப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) எஸ். பாலகிருஷ்ணன் (2) ஆர். முத்தையா (3) பி. இராமதாஸ், (4) அ. ரகுமான்கான் ஆகியோரின் பதவிக் காலம் 30-10-1978-ம் நாளுடன் முடிவடைவதால், பல்கலைக்கழக பேரவையில் ஏற்பட்டுள்ள நான்கு வெற்றிடங்களுக்கு தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து நால்வரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு, காமராஜ் பல்கலைக்கழகம் கோரியுள்ளது. பல்கலைக்கழகத்தின் விதிமுறைப்படி பகுதிவாரி அடிப்படையில் (ப்ரப்போர்ஷனல் ரெப்ரஸென்டேஷன்) இத்தேர்வு நடைபெறுவதில்லை.

எனவே, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 11-9-78 திங்கட்கிழமை மாலை 3 மணிக்குள் சட்ட மன்ற பேரவை செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் செயலாளரிடமிருந்து

பெற்றுக்கொள்ளலாம். நியமனத் தாள்கள் 11 – 9—78 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 12 – 9 – 78 செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது நான்கு இடங்களுக்கு மேற்படுமாயின் 14 – 9 – 78 வியாழக்கிழமை பகல் 10 மணிக்கும் 12 மணிக்கும் இடையே, சென்னை கோட்டையில் இருக்கும் பேரவைக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(5) அறிக்கை அளித்தல்.

விதி 82-ஏ இன் கீழ் கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 4 – 3 – 1978 அன்று உடுக்குறியிட்ட வினா எண். 385 விடையளிக்கையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சந்திரன் கேட்ட துணை வினாவிற்கு, முன்னாள், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ''தலைவரவர்களே, கூட்டுறவுச் சட்டத் திருத்தங்களை ஆராய்வதற்கும், அவற்றில் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கும் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. பழனி என்பவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்படவில்லை. பழனி என்பவர் அதிகாரியாகத்தான் அந்தக் குழுவிலே பணியாற்றி வருகிறார்'' என்று பதிலளித்தார். அதனை ''கூட்டுறவுச் சட்ட திருத்தங்களை ஆராய்வதற்கும் அவற்றில், தேவையான மாற்றங்களைச் செய்வதற்கும் தனி ஊழியர்கள் அமர்த்தப்பட்டனர். திரு. பழனி என்பவர் தலைமையில் ஒரு நபர் குழு அமைக்கப்படவில்லை. திரு. பழனி என்பவர் அரசு அனுமதித்த பல்வேறு பதவியாளர்களில் ஒரு இணைப் பதிவாளரின் பதவியில் அமர்த்தப்பட்டார்'' என்று திருத்திக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசாமி கேட்ட வினாவிற்கு ''சட்ட திட்டங்கள் திருத்தக் குழு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. சட்ட திட்டங்கள் திருத்தப்பட்ட பின்பு தேர்தல்கள் நிச்சயமாக நடத்தப்படும்'' என்று முன்னாள் உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் பதிலளித்தார். இச்சொற்றொடருக்குப்பதிலாக ''சட்ட திட்டங்கள் திருத்தப்பட்ட பின்பு தேர்தல்கள் நிச்சயமாக நடத்தப்படும்'' என்ற சொற்றொடரை அமைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(6) ஒழுங்குப் பிரச்னை.

(அ) விதி 82ஏ-ன் கீழ் கூட்டுறவுத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை குறித்து.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர். இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னால் கூறியது, சட்ட திருத்தம் செய்யப்படும் என்பது மட்டுமல்ல, தேர்தல் நடத்தப்படும் என்று அஷ்யூரன்ஸ் என்ற முறையில் உறுதிமொழி கொடுத்திருக்கிறார். அப்படியிருக்கும்போது இப்போதுள்ள அமைச்சர் முன்னால் சொன்னதை மாற்றி திருத்தம் கொடுத்துவிட்டால் அஷ்யூரன்ஸ் கமிட்டிக்கே வேலையில்லாமல் போய்விடுகிறது. ஆகவே இப்படி முன்னால் ஒரு உறுதிமொழியைக் கொடுத்துவிட்டு, இப்போது இது போன்று மாற்றிக் கொண்டிருப்பது ஒழுங்கு முறைக்கு உட்பட்டதுதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு அமைச்சர் பேசிவிட்டு பின்னால் அந்தக் கூட்டத் தொடரிலேயே அதற்கு ஒரு திருத்தத்தைக் கொடுத்துவிட்டால், தாங்கள் எழுப்பிய பிரச்னை எழுவதற்கு வழியில்லை. அவ்வாறு திருத்தம் கொடுத்துவிட்ட பின்னால் அஷ்யூரன்ஸ் கமிட்டிக்கு இதில் வேலையில்லை. கடைசியில் திருத்தம் செய்து சொன்னதுதான் நிற்கும்.

திரு. க. சுப்பு : இப்போது நடப்பது முன்னால் கூறிய கூட்டத்தின் தொடர் அல்ல. புதிய கூட்டம், முன்னாள் அமைச்சர் மாறப்பட்டு புதிய மந்திரியும் வந்திருக்கிறார். இப்படி அடிக்கடி மாற்றம் செய்து கொண்டிருப்பது சரியல்ல. அப்படியானால், Assurance committee will become obsolete.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்களது விளக்கம் சரியானதுதான் என்று தீர்ப்பு அளிக்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : பாயின்ட் ஆப் ஆர்டர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நேரமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நேரமில்லை. தயவு செய்து பின்னால் சொல்லுங்கள், இப்போது உட்காருங்கள்.

(7) கவன ஈர்ப்புகள்.

(அ) மகாபலிபுரம் கடற்கரைப் பகுதிகளில் கடல் அரிப்பு.

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மகாபலிபுரம் கோவிலுக்கு அருகில் உள்ள கடற்கரைப் பகுதிகளில் கடல் அரிப்பு ஏற்படுவதைத் தவிர்க்க, மரத்தினலான கடல் அரிப்புத் துடப்பு அரண் கட்டுவது குறித்து—மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய புதை பொருள் ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிவுரையின் பேரில் மத்திய பொதுப்பணித்துறை, மே 1978-ல் மகாபலிபுரத்தில் கடலில் தடுப்புச் சுவர் (groyne) கட்டத் துவங்கியது. இவ்வேலை பூனு மத்திய நீர் மின் நிலைய ஆராய்ச்சி நிலையத்தைக் கலந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. மத்திய அரசின் அதிகாரிகள், மகாபலிபுரத்தில் உள்ள புராதன கடலோரக் கோவிலைக் காக்க, இத்தடுப்புச் சுவர் அவசியம் என கருதினர். இவ்வேலை தற்போது நடைபெற்று வருகிறது.

2. இவ்வேலை ஆரம்பிக்கப்பட்டபின் இத்தடுப்புச் சுவரின் வட பாகத்தில், மிக அதிகமான கடல் அரிப்பு ஏற்பட்டது. மாமல்லபுர அன குப்பத்தின் மீனவர் காலனியருகே கடலரிப்பு பெரிய அள விற்கு ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அரிசன வீடு அபிவிருத்தி வாரியத்தினுல் 1976-ல் கடலோரத்தில் கட்டப்பட்ட 52 வீடுகள் அடங்கிய பகுதியும் ஆபத்திலிருக்கிறது. இதில் ஆறு வீடுகள் கட லரிப்பால் பாதிக்கப்பட்டு விட்டன. மேலும், இக்குப்பத்திற்கு வட பகுதியிலுள்ள இந்திய சுற்றுலா அபிவிருத்திக் கழகத்திற்குச் சொந்தமான கட்டிடங்களும் இக்கடலரிப்பால் பாதிக்கப்ப வாய்ப்பிருக்கிறது.

3. இவ்விஷயம், இந்த அரசின் பார்வைக்கு வந்தவுடன், மத்தியப் பணித் துறை தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு கடலரிப்பை மேலும் தடுப்பதற்கு துரிதமான நடவடிக்கை எடுக்க கோரி, 28—6—1978-ல் தந்தி செய்தி மூலம் கேட்டுக் கொ ளப்பட்டது. தலைமைச் செயலாளரிடமிருந்து நேர்முகக் க தமும் உடனடியாக அனுப்பப்பட்டது. 3—7—1978 அன்று மத்திய அரசின் பணி மற்றும் வீடு வசதி செயலருக்கு அனுப்பிய நேர்முகக் கடிதத்தில் மத்திய அரசுத் துறையினர் எவரும் இ கடலரிப்பால் ஏற்படும் பாதிப்பை எதிர் நோக்கி தேவையா ஆய்வுகளை இத்தடுப்புச் சுவர் கட்டிட பணி நிறைவேறும் காலத் லேயே நடத்தவில்லையென எண்ணுவதற்கு தக்க காரணங்க

இருக்கின்றன. ஏனெனில், ஆய்வுகள் நடத்தப்பட்டிருப்பின், இவ்வபாயத்தைத் தடுத்திருக்கலாம். அல்லது தேவையான தடுப்பு நடவடிக்கைகளையாவது சரியான நேரத்தில் எடுத்திருக்க லாம் எனக் கூறியுள்ளார். மத்திய அரசினல் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழு, மத்திய பொதுப்பணித் துறையை, மேற்கூறிய இடத்தில் அதிக அளவில் மணலைக் கொட்டி கடலரிப்பை தடுக்க நடவடிக்கை எடுக்க கோரலாம் என தீர்மானித்துள்ளது. இவ் விஷயத்தில் துரித நடவடிக்கை எடுக்க மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறோம்.

4. 29—7—1978 அன்று மத்திய அரசிடமிருந்து வந்த பதில் கடிதத்தில், ''தடுப்பு சுவர் கட்டியது மட்டும், இக்கடலரிப்பு ஏற்படுவதற்கு காரணமாக இருக்க முடியாது. பூனுவிலுள்ள மத்திய நீர் மின் ஆராய்ச்சி நிலையம் மேல் ஆய்வுகளை நடத்தி வருகிறது. இதற்கிடையில், மணலைக் கொட்டி கடலரிப்பை தடுக்க நட வடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது'' எனக் கூறப்பட்டுள்ளது.

5. மத்திய பொதுப் பணித்துறை, இக்கடலரிப்பால் பாதிக்கப் பட்ட மீனவர்களுக்கு ஈட்டுமானத் தொகை வழங்கியுள்ளதாக கூறப்படுகிறது. மேலும் இந்த மீனவர்களுக்கு வேறு இடம் அளிப்பதற்கு, செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

6. இந்த அரசு, கடலரிப்புத் தடுப்புப் பணிகளை துரிதப் படுத்த கோரி, மத்திய அரசு அதிகாரிகளுடன் கலந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.

(முற்பகல் 10-20)

*திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மகாபலிபுரத்தில் பல்லவர் காலத்திலே கட்டப்பட்ட இந்தக் கற்கோயில், சரித்திர பிரசித்திப் பெற்றக் கோயிலாகவும், சிற்பக் கலையிலே சிறந்து விளங்குவதாகவும், உலக அதிசயங்களிலே ஒன்ருகவும் திகழ்ந்து வருகின்றது. அப்பேர்ப்பட்ட புராதனப் பெருமைவாய்ந்த, சிற்பக் கலை மிகுந்த கோயிலை பாதுகாக்க வேண்டுமென்பது தான் எங்கள் கவலையெல்லாம். இன்றையத் தினம் கடல் அரிப்பு, ஏற்பட்டு, அந்தக் கோயிலுக்கு பேராபத்து வரக்கூடிய நிலைமை இருக்கிறது. மத்திய அரசு செய்கின்ற பணிகள் விரைவாக நடைபெறுவதாகத் தெரியவில்லை. நானே நேரில் சென்று பார்த்த பிறகுதான், இந்த கவன ஈர்ப்பை இங்கே கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே, இந்தக் கடல் அரிப்பு தடுப்புச்சுவர் கட்டுவதற்காக மத்திய அரசு எவ்வளவு தொகையை யாரிடத்திலே கொடுத்திருக்கின்றது என்பதையும், இந்தப் பணியை நம்முடைய மாநில அரசு விரைவாகச் செய்யும்படியும்

[திரு. மு. ஆறுமுகம்] [1978 செப்டம்பர் 9

இதைச் செய்வதற்கு மத்திய அரசிடமிருந்து தேவையான நிதி
உதவிகளைப் பெற்று, விரைவாகச் செய்ய வேண்டுமென்றும்
கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,
மகாபலிபுரத்திலே உள்ள 6 ஆம் நூற்றாண்டிலே பல்லவர் காலத்
திலே கட்டப்பட்ட இந்தக் கோயில் உண்மையிலேயே சரித்திரப்
புகழ் வாய்ந்தது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
சொன்னதுபோல், அதை உலக அதிசயங்களில் ஒன்று என்று
சொல்வது சரியாகாது. இந்தக் கோயிலை காப்பாற்றுவதற்காக,
கடல் அரிப்பிலிருந்து இந்தக் கோயிலை பாதுகாப்பதற்காக தடுப்
புச் சுவர் கட்டும் வேலை மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்டது.
ஆனால், தடுப்புச் சுவர் கட்டியதன் விளைவாக, இன்றைக்கு
இந்தக் கடல் பகுதிக்குப் பக்கத்திலே இருக்கின்ற குப்பத்திலே
தண்ணீர் புகுந்துவிட்டது. ஆகவே, நம்முடைய அரசாங்கத்தின்
சார்பிலே சொல்வது, நீங்கள் தடுப்புச் சுவர் கட்டப்போய்,
கோவிலைப் காப்பாற்றப் போய், இப்போது குப்பத்தை நாம்
பறிகொடுக்கின்ற நிலைமை இருக்கின்றது என்று நாம் சொல்
கிறோம். ஆனால் அவர்கள் ஏன் கடல் அரிப்பு ஏற்பட்டது என்
பதைப்பற்றி பூனாவிலே இருக்கின்ற ஆராய்ச்சி நிலையத்தைக்
கேட்டு, அதற்கு மேலே நடவடிக்கை எடுக்கிறோம் என்று
சொல்லுகிறார்கள். பொதுவாக, இந்த செப்டம்பர் மாதத்திலே
கடந்த ஆண்டு ஏற்பட்ட அனுபவம் இருக்கிறது. புயல் ஏற்படு
மானால், கடலும், கடல் தண்ணீரும் உள்ளே வரும் என்ற அபாய
நிலை இருக்கின்றது. ஆகவே, திரும்பத் திரும்ப மத்திய சர்க்காரை
நாம் வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். கடல் அரிப்புத்
தடுப்புச் சுவரை மேலும் கொஞ்சம் நீட்டினால், இந்த நிலைமை
ஏற்படாது என்பதை வலியுறுத்திக் கொண்டு வருகிறோம்.

(ஆ) மேட்டூர் கெமிகல் கம்பெனிகளின் கழிவு நீரால்
ஏற்படும் பாதிப்பு.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே,
''சேலம் மாவட்டம், மேட்டூர் ஆர்.சி. பிளாண்ட் இரசாயனக்
கழிவு நீரால் ஊற்றுநீர் கெட்டு, தோட்டக் காடுகளில்
உள்ள மரங்கள் பட்டுப்போய், வீரக்கல்புதூர் ஊராட்சிக்குட்
பட்ட கிராமப் பகுதிகளில் 300 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள்
பாதிக்கப் பெற்றுள்ளதாலும், புதுச்சாம்பள்ளி;, கருமலைக்
கூடல் பகுதியிலுள்ள குடிநீர் கிணறுகள் பாதிக்கப் பெற்றுள்ள
தாலும், அப்பகுதி மக்கள் இடையே ஏற்பட்டுள்ள பதட்டநிலை
குறித்த''.

அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன்.

1978 செப்டம்பர் 9]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்: பேரவைத்
தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் கெம்பிளாஸ்ட்
கம்பெனி மற்றும் மேட்டூர் கெமிகல் கம்பெனிகளின் கழிவு நீரால்
பி.என்.பட்டி, வீரக்கல்புதூர் ஆகிய ஊர்களிலுள்ள கிணறுகளின்
நீர் பாதிக்கப்பட்டுள்ளது. அவ்வூர் மக்களின் வேண்டுகோள்களின்
அடிப்படையில் மேற்கூறிய கிணறுகள் ஆய்வு செய்யப்புட்டன
என்று பொது சுகாதாரம் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர்
தெரிவித்துள்ளார். 294 கிணறுகள் ஆய்வு செய்யப்பட்டன ;
இவற்றுள் 187 கிணறுகள் மண்ணிட்டு மூடப்பட்டு விட்டன.
இப்போது பயன்படுத்தப்பட்டு வரும் 107 கிணறுகளுள், பாசனக்
கிணறுகள் 27 மற்றும் பருகுநீர்க் கிணறுகள் 80 ஆகும். பாசனக்
கிணறுகள் 27-ல் 5 கிணறுகள் பயன்படுத்தத் தக்கனவாகவும்
2 கிணறுகள் பொறுத்துக் கொள்ளத் தக்கனவாகவும், 20 கிணறு
கள் பயன்படுத்தத் தகுதியற்றனவாகவும் உள்ளன. பருகு நீர்க்
கிணறுகள் 80-ல் 16 கிணறுகள் பயன்படுத்தத் தக்கனவாகவும்
6 பொறுத்துக் கொள்ளத் தக்கனவாகவும், 58 கிணறுகள் பயன்
படுத்தத் தகுதியற்றனவாகவும் உள்ளன. தண்ணீரின் தரத்தைச்
சாதாரண நிலைக்குக் கொண்டு வருவதற்காக, பயன்படுத்தத்
தகுதியற்ற கிணற்று நீரை முழுவதுமாக வெளியே இறைத்து
விடுதல், இறைக்கப்பட்ட நீர் கிணறுகளின் அருகில் தேங்காமல்
தவிர்த்தல் முதலான தீர்வு நடவடிக்கைகளை கடைப்பிடிக்கும்படி
இயக்குநர் எடுத்துக் கூறியுள்ளார்.

கெம்பிளாஸ்ட் கம்பெனி மற்றும், மேட்டூர் கெமிக்கல்
கம்பெனி ஆகியவை இக்கிராமங்களுக்கு, வீட்டுக் குழாய்கள்,
பொதுக் குழாய்கள் வழியாக நாளொன்றுக்கு 5 மணி நேரம்
காவேரியிலிருந்து மருந்திட்டு சுத்தம் செய்யப்பட்ட தண்ணீர்
வழங்குகின்றன.

கெம்பிளாஸ்ட் கம்பெனி சுற்றுப்புறத்தில் காற்றுத் தூய்மை
கெடுதல் பற்றிய ஆய்வும் மேற்கொள்ளப்பட்டு, புகைக்கூம்பு
குறைந்தது 50 அடி உயரத்துக்கு அமைக்குமாறு கம்பெனிக்கு
அறிவுறுத்தப்பட்டுள்ளது. கழிவு நீரை முடிவு செய்யவும் தேவை
யான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி கம்பெனி கேட்டுக்
கொள்ளப்பட்டுள்ளது, கழிவு நீரை முடிவு செய்யுமிடங்களுக்கு
அப்புறப்படுத்துவதற்கு மூடிய குழாய்களைப் பயன்படுத்துமாறும்
சேலம் மாவட்ட நல்வாழ்வு அலுவலர் தொழிற்சாலைக்கு
அறிவுறுத்தியுள்ளார். தடுப்பு நடவடிக்கைகளை விரைவில் முடிப்
பதற்காகத் தொழிற்சாலையை வலியுறுத்துவதற்கான நடவடிக்
கையும் எடுக்கப்பட்டுள்ளது.

தடுப்பு நடவடிக்கைகளின் திறனைச் சரி பார்க்க தொடர்
நடவடிக்கை எடுக்கப்படும் என இயக்குநர் கூறியுள்ளார்.

[திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்] [1978 செப்டம்பர் 9

தமிழ்நாடு நீர் வழங்கு மற்றும் வடிகால் வாரியம் இக்கிரா
மங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட நீர் வழங்குவதற்கான
திட்டத்தை 25 லட்ச ரூபாய் செலவில் நிறைவேற்றி வருகிறது.

* திரு. எம். அண்ணாமலை: அமைச்சர் அவர்கள் மேட்டூர்
ஆர்.சி. பிளாண்ட்டு கெம்ப்ளாஸ்ட், கெமிகல்ஸ் நிறுவனங்களி
லுள்ள கழிவு நீரால் பாதிக்கப்பட்டுள்ள கிணறுகளுக்குத் தடுப்பு
நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
இது உண்மைக்கு மாறானது. 1967-ல் அண்ணா அவர்கள் முதல்
வராக இருந்த நேரத்தில் எங்கள் கட்சியின் மாவட்டச் செயலாளர்
திரு. கே. எஸ். அர்த்தநாரி, மேட்டூர் பஞ்சாலைத் தொழிலாளர்
சங்கத் தலைவர் தோழர் சீரங்கன் ஆகியவர்கள் விவசாயிகள்
பிரச்சினையை எடுத்து அரசின் கவனத்திற்குக் கொண்டு
வந்த நேரத்தில் இடைக்கால நிவாரணமாக ஒரு ஏக்கருக்கு ஆறு
மூட்டை ராகி என்ற அடிப்படையில் ஒரு மூட்டை ராகிக்கு 80
ரூபாய் வீதம் ஏக்கர் 1-க்கு 480 ரூபாய் நிவாரணமாகக் கொடுக்
கப்பட்டது. மேலும் அன்று அரசின் உத்தரவு கிணற்று நீரைப்
பம்ப் செய்து இறைத்து அப்புறப்படுத்திக் கொடுக்கவேண்டும்.
அப்படிக் கொடுத்தும் சுத்தப்படுத்தவில்லை என்று சொன்னால்
அடுத்து அந்தச் சங்க நிர்வாகிகளையும் விவசாயிகளையும் கூட்டி
பேச்சு வார்த்தை மூலமாக ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டுமென்ப
தாகும். அதற்கு ஏதோ பெயரளவுக்கு நாம்கேவாக தண்ணீரை
இறைத்துவிட்டு விட்டு விட்டார்கள். கடந்த ஜுன் மாதம்
மூன்றும் தேதி அந்தப் பகுதியிலுள்ள 39 கிணறுகளை
சென்று பார்த்ததில் அவ்வளவும் கெட்டு விட்டிருந்தன. ஒரு
கிணற்றிலாவது தவளை, மீன்கள் கூடப் பிழைப்பதில்லை. அந்தப்
பகுதியிலுள்ள வாழை, தென்னை போன்ற மரங்கள் எல்லாம்
பட்டுப் போய் சதுப்பு நிலங்களாக மாறிவிட்டன. பல மைல்
தூரம் குடிதண்ணீருக்கு அலையும் நிலையையும் போக்கி நிவாரணம்
அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : தலைவர்
அவர்களே, உறுப்பினர் அவர்கள் ஜுன் மாதம் பார்த்ததைச்
சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஜுலை மாதத்தில் எடுக்கப்
பட்ட நடவடிக்கையை இங்கே இயக்குநர் அவர்கள் அனுப்பி
யதைப் படித்திருக்கிறேன். நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு
வருகின்றன. குறைபாடுகள் ஏதும் இல்லாத வகையில் இந்த
அரசு, முக்கியமாக குடிதண்ணீர் தருவதில் தக்க நடவடிக்கைகளை
எடுத்து வருகிறது. தற்போது எல்லாவிதமான நன்மை
களும் அந்த மக்களுக்குச் செய்யப்பட்டிருக்கிறது என்பதைச்
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

1978 செப்டம்பர் 9]

திரு. சி. கோவிந்தராசன் : மேட்டூர் பிரதேசத்தில் இருக்
கக்கூடிய கெம்ப்ளாஸ்ட், மேட்டூர் கெமிகல்ஸ் கழிவு நீரால்
ஏற்படுகின்ற பாதகத்தைப் போக்க நடவடிக்கை எடுக்கப்பட்
டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே
குடிதண்ணீர்ப் பிரச்சினை மட்டுமல்ல, வேளாண்மையும் பாதிக்கப்
பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்
பது என்ற முறையில் இயக்குநர் ஆலோசனையோடு கழிவு நீரை
விஞ்ஞான முறையில் சுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும்
எடுக்க வேண்டும். ஆலைகள் என்று இருந்தால் கழிவு நீர்
வரத்தான் செய்யும்.

[முற்பகல் 10-30]

அதற்காக ஆலைகளே கூடாது என்று சொல்லிவிட முடியாது.
கழிவுநீரைச் சுத்தப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்தால் அதன்
மூலம் விவசாயத்திற்கும் உதவிகரமாக இருக்கும் என்ற முறை
யிலே தான் நெல்லிக்குப்பத்திலே பாரி சர்க்கரை ஆலையிலே
எஃப்ளுவன்டை கிளியர் செய்வதற்கான திட்டத்தை அவர்களே
கையாண்டிருக்கிறார்கள். அந்த முறையிலே அந்த முதலாளிகளி
டத்திலே வற்புறுத்தி அந்தத் திட்டத்தை கையாண்டு எஃப்ளு
வன்டை கிளியர் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு
எடுக்குமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்த
ஆலோசனையை ஏற்று அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

(5) அறிக்கை அளித்தல் (தொடர்ச்சி).

(ஆ) பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு சட்டப் பேரவைத்
தலைவர் அவர்களே, இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின்
1971-1972-ஆம் ஆண்டிற்கான வணிகத் துறை தவிர்த்த பிற
துறைகள் பற்றிய அறிக்கை, 1972-73-ஆம் ஆண்டிற்கான, வணி
கத் துறை தவிர்த்த பிற துறைகள் பற்றிய அறிக்கை, 1972-73-ஆம்
ஆண்டிற்கான வணிகத்துறைகள் பற்றிய அறிக்கை, ஆகிய
வற்றின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை
தான் அவைமுன் அளிக்கிறேன்.

[1978 செப்டம்பர் 9

(9) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் —தொடர்ச்சி.

திரு. மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின்மீது நன்றி தெரிவிக்
கும் தீர்மானத்தின் மீது எங்களுடைய காந்தி-காமராஜ் தேசிய
காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை எடுத்துக்
கூறுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நான் வணக்கத்தைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் எங்களது பெருந்தலைவர் காமராஜ் அவர்கள்
சென்னையிலே கடந்த 30 ஆண்டுகளாக வாழ்ந்துவந்த வாடகை
வீட்டை தமிழக அரசு வாங்கி அதை நினைவில்லமாக அமைத்ததற்
காக நான் என்னுடைய நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்
கொள்கிறேன். அதே நேரத்தில் இன்றைய தினம் அதை
நினைவில்லமாக ஆக்க எடுத்த அரசு விழாவிற்கு தமிழ்நாட்டிலே
உள்ள அனைத்துக் கட்சிகளின் தலைவர்களையும் அழைத்தபோது
எங்கள் இயக்கத்தின் தலைவரும், இலக்கியச் செல்வரும், நாடாளு
மன்ற உறுப்பினரும், காமராஜரின் தொண்டருமான திரு. குமரி
அனந்தன் அவர்களை ஏன் அழைக்கவில்லை என்று கேட்க விரும்பு
கிறேன். காமராஜ் அவர்களுக்கும் திரு. குமரி அனந்தன் அவர்
களுக்கும் அதிகத் தொடர்பு இல்லை என்று இந்த அரசு கருது
கிறதா அல்லது குமரி அனந்தனுக்கு காமராஜரின்பால் உள்ள
அன்பையும் விசுவாசத்தையும் இந்த அரசு சந்தேகிக்கிறதா என்று
தெரியவில்லை. கட்சி பாரபட்சமற்ற முறையிலே அரசு விழா
நடக்கிறபோது காமராஜரின் உண்மையான தொண்டரான குமரி
அனந்தனை ஏன் அழைக்கவில்லை என்பதற்கு அமைச்சர் அவர்கள்
விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. காமராஜ் அவர்களின் நினைவில்லத்திலே பெருந்தலைவர்
காமராஜ் அவர்கள் தான் வாழ்ந்தபோது பயன்படுத்திய பொருள்
களை எல்லாம் காட்சிக்காக வைத்திருக்கிறார்கள். திரு. காமராஜ்
அவர்கள் 1942 ஆம் ஆண்டிலிருந்து 1954 ஆம் ஆண்டு வரையிலே
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகவும் 1954 ஆம் ஆண்டி
லிருந்து 1963 ஆம் ஆண்டு வரையிலே தமிழக முதல்வராகவும்
இருந்த நேரத்திலே அவர்கள் தமிழகத்திலே உள்ள தன்னுடைய
நண்பர்களுக்கு தன்னுடைய கைப்பட எழுதிய கடிதங்கள் தமிழ
கத்தின் பல பகுதிகளிலே இருக்கின்றன. தமிழக அரசு பத்திரி
கைகளிலே அதற்காக ஒரு வேண்டுகோள் விடுத்து ஆங்காங்கே
உள்ள கடிதங்களைப் பெற்று அந்த நினைவில்லத்திலே
வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கல்கத்தாவிலே நேதாஜி சுபாஷ் சந்திர
போஸ் அவர்களின் நினைவில்லத்திலே அவர்கள் தம் வாழ்நாள்
முழுவதும் பயன்படுத்திய காரை பொது மக்கள் பார்க்கும் வகை

யில் காட்சிக்காக வைத்திருக்கிறார்கள், அதைப் போன்று பெருந்
தலைவர் காமராஜ் அவர்களின் நினைவில்லத்திலேயும் அவர்கள்
பயன்படுத்திய கார் எம்.டி.டி. 2727 எண்ணுள்ள அந்த காரை
அது யாரிடம் இருந்த போதிலும் இந்த அரசு என்ன விலை கொடுத்
தாவது உடனடியாக வாங்கி காட்சிக்குரியதாக வைக்க வேண்டு
மென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய
சேவையை நினைவுகூறும் வகையில் காமராஜ் பல்கலைக் கழகம்
என்ற பெயர் மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு இன்றைய தினம்
சூட்டப்பட்டிருக்கிறது. அதையும் நான் இந்த நேரத்திலே வர
வேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காமராஜ் பல்கலைக் கழகம்
என்று பெயரிடப்பட்டதற்கு நம்முடைய மரியாதைக்குரிய உறுப்
பினர் திரு. கந்தசாமி அவர்கள் காமராஜர் தனி மனிதர், அவரு
டைய பெயரை பல்கலைக் கழகத்திற்கு எப்படிச் சூட்டலாம்
என்று கேட்டார். காமராஜ் அவர்கள் ஒரு தனி மனிதர் அல்ல.
அவர் ஒரு தத்துவம். தனி மனிதனும் தத்துவமாகலாம் என்
பதற்கு எடுத்துக்காட்டாக தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து
காட்டிய ஒரு மாமேதை அவர். இந்தியாவிலேயே முதன் முதல்
தமிழ்நாட்டிலே கல்விக் கண்ணைத் திறந்து விட்டவர்கள். முதன்
முதல் நாட்டிலே கோடிக்கணக்கான ஏழை எளியவர்களின் இல்லங்
கள் தோறும், ஏழை எளியவர்களின் உள்ளங்கள்தோறும்
இலவசக் கல்வித் திட்டம் என்ற ஒளிவிளக்கை ஏற்றிய தலைவர்
அவர். அப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்தத் தலைவர்
ஒன்பதாண்டுக் காலம் தன்னுடைய நிர்வாகத் திறமையினால்
தமிழகத்தை இந்தியாவிலேயே தொழில் துறையில் இரண்டாவது
ஸ்தானத்திற்கு உயர்த்தியவர். குப்தரின் காலத்தைப் பொற்
காலம் என்று சொல்வதைப்போல் தன்னுடைய ஆட்சிக் காலத்தில்
தமிழகத்தின் பொற்காலமாகச் செய்தார். இப்படிப்பட்ட
வரலாற்றுச் சிறப்பு மிக்க தலைவருக்கு இன்றைய தினம் தமிழக
அரசு மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு காமராஜ் பல்கலைக் கழகம்
என்று பெயரிட்டிருப்பது மிகவும் சாலப் பொருத்தமானதாகும்.

(திரு. பி. எச். பாண்டியன் தலைமை)

அதே நேரத்தில், அவருடைய சேவைகளை இத்துடன் விட்டு
விடாமல், $4\frac{1}{2}$ கோடி தமிழக மக்களும், இந்தியாவிலுள்ள 60
கோடி மக்களும் அவரைப் போற்றி வாழ்த்துகின்ற இந்த நேரத்
தில் நான் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். காம
ராஜ் பிறந்த இராமநாதபுரம் மாவட்டத்தை நிர்வாக வசதிக்
காகத் தமிழக அரசு இரண்டாகப் பிரிப்பதற்குத் திட்டமிட்டி
ருக்கிறது. அப்படி இரண்டாகப் பிரிக்கக் கூடிய நேரத்தில்
விருதுநகர் உள்ளிட்ட புதிய மாவட்டத்திற்கு காமராஜ் மாவட்டம்
என்று பெயரிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்
றால் ஆந்திராவில் ஆந்திர மக்களுக்காகப் போராடி, ஆந்திராவை
மொழிவழித் தனி மாகாணமாகப் பிரிக்க வேண்டுமென்று பாடு
பட்ட மரியாதைக்குரிய பிரகாசம் அவர்கள் பெயரில் பிரகாசம்

[திரு. மு. ஆறுமுகம்] [1978 செப்டம்பர் 9

ஜில்லா என்று ஒரு ஜில்லாவிற்கு பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.
ஆகவே, இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்
பொழுது விருதுநகர் உள்ளிட்ட புதிய மாவட்டத்திற்கு காமராஜ்
மாவட்டம் என்று பெயரிட வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றையதினம் அரசியலில் ஒரு தலைவர்
எவ்வாறு நிர்வாக ஊழல் இல்லாமல் தூய்மையாக இருக்க வேண்டு
மென்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கி, வாழ்ந்தவர் காமராஜ்.
நாணயம் மிக்க தலைவராக விளங்கியவர் அவர். அப்படிப்பட்ட
பெருமை வாய்ந்த காமராஜருக்கு மத்திய அரசின் சார்பாக
நாணயம் வெளியிடுவதற்குத் தமிழக அரசு பரிந்துரை செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் காமராஜ்
நாணயமான அரசியல்வாதி. அவ்வாறு நாணயமாக வாழ்ந்து
இந்த நாட்டு மக்களுக்கு எவ்வளவோ சேவைகளைச் செய்திருக்
கிறார்கள். காந்தியாரின் நினைவையும், நேருவின் நினைவையும்
போற்றும் வகையில் நாணயங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.
அது போன்று காமராஜ் அவர்களுடைய சேவையையும், அவ
ருடைய நாணயத்தையும் பாராட்டும் வகையில் ஒரு ரூபாய்,
பத்து ரூபாய் நாணயங்களை மத்திய அரசு வெளியிடுவதற்கு
மாநில அரசு வற்புறுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான்
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய ஆளுநர் அவர்கள் தமிழகத்தில் இந்தி
மொழி ஆதிக்கம் எந்த உருவில், எந்த வடிவில் வந்தபொழுதும்
அதை உறுதியாக எதிர்ப்போம் என்று கூறியிருக்கிறார்கள். எங்கள்
கட்சியைப் பொறுத்தவரையில், தமிழின்மீது ஆதிக்கம் செலுத்து
வது இந்தியாக இருந்தாலும், தமிழின் வளர்ச்சியைத் தடுக்கும்
மொழி ஆங்கிலமாக இருந்தாலும் எதிர்ப்போம். தமிழின்
வளர்ச்சிதான் முக்கிய குறிக்கோள், தமிழின் வளர்ச்சியைப்
பாதிப்பது எந்த மொழி ஆதிக்கமாக இருந்தாலும் அதை நிச்சய
மாக, உறுதியாக, இறுதிவரையில் எதிர்த்துப் போராடுவோம்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழின் வளர்ச்சியைத்
தடுக்கக்கூடியவகையில் எந்த உருவில் எந்தத் திணிப்பு வந்தாலும்
அவசியம் ஏற்பட்டால் நாங்கள் போர்க் கொடி ஏந்தவும் தயங்க
மாட்டோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்
கிறேன்.

1965 ஆம் ஆண்டு, இந்திய தேசிய காங்கிரஸ் பிளவு படாத
நேரத்தில் அரசியலமைப்புச் சட்டம் 8-வது பிரிவில் குறிப்பிட்டு
உள்ளபடி 14 மொழிகளில் எந்த மொழியில் வேண்டுமானாலும்
யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதுவதற்கு அங்கீ
கரிக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்
ஆனால் இவ்வளவு காலமாகியும், நாட்களாகியும் இந்தத் தீர்
மானத்தை மத்திய அரசு அமலுக்குக் கொண்டுவராமல் கால

1978 செப்டம்பர் 9] [திரு. மு. ஆறுமுகம்]

கடத்துகிறது. இன்றையதினம் 14 மொழிகளுக்கு மேலாக
புதிதாக சிந்தி என்ற மொழியையும் சேர்த்து 15 மொழிகள்
தேசிய மொழிகளாக இருக்கின்றன. ஆகவே, இந்த 15 மொழி
களுக்கும் ஆட்சி மொழி அந்தஸ்து கொடுக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அருகில் உள்ள மலேயா
வில், மலாய், சீனம், ஆங்கிலம், தமிழ் ஆகிய நான்கு மொழி
களும் ஆட்சி மொழிகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன. அருகில்
உள்ள இலங்கையில் சிங்களமும், தமிழும் ஆட்சி மொழிகளாக
இருக்கின்றன. அப்படியிருக்கும் நிலைமையில் இந்தியாவில் 15
மொழிகளும் ஏன் தேசிய மொழிகளாக இருக்கக் கூடாது என்பது
என்னுடைய கேள்வி.

[முற்பகல் 10 40]

எவ்வளவு குறை உடையதாக இருந்தாலும் என் தாயின்
மார்பினை நான் பாலுக்கு நம்புவது போல், என் தாய்மொழியைப்
பற்றி நிற்க வேண்டும். அதுவே எனக்கு உயிரூட்டும் பால்
அளிக்கும் சக்தியுள்ளது என்று நம்முடைய தேசத்தின் தந்தை
மகாத்மா காந்தி அவர்கள் கூறியுள்ளார். ஆகவே, நம்முடைய
தமிழ்த்தாய் குறைவில்லாத தாய். அந்தத் தமிழ்த்தாய் ஆட்சிப்
பீடத்திலே ஆட்சிமொழியாக இடம் பெற வேண்டுமென்பது
தான் எங்களுடைய கட்சியின் கொள்கை என்பதை நான் ஆணித்
தரமாக இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.
வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழ், வாழிய பாரத மணித்
திருநாடு எங்கள் முழக்கம்.

சேலம் மாவட்டத்தில், சேலம்—ஈரோடு மின் விநியோகக்
கம்பெனி ஒன்று இருந்தது. அரசாங்கம் 5 வருஷங்களுக்கு
முன்பு அந் நிறுவனத்தை நாட்டுடைமையாக்கியது. அண்டர்
டேக்கிங் என்ற முறையில் அது தனி நிறுவனமாக இருந்து
வருகிறது. அதன் காரணமாக அந்த அண்டர்டேக்கிங் என்றி
ருப்பதால் அதற்கு ஒரு டிவிஷன் அந்தஸ்துதான் கொடுக்கப்
பட்டிருக்கிறது. இன்றையதினம் சேலத்தில் 1,85,000 கன்ஸ்
யூமர்கள் இருக்கிறார்கள். 60,000 கன்ஸ்யூமர்கள் இருக்கக்
கூடிய தர்மபுரி மாவட்டத்திற்கு ஒரு சிஸ்டம் ஏற்படுத்தப்பட்டு
இருக்கிறது. ஆனால், 1,85,000 கன்ஸ்யூமர்கள் இருக்கக் கூடிய
சேலத்தில் ஒரு சிஸ்டம் ஏற்படுத்தவில்லை. நிர்வாகப்பளுவின்
காரணமாக அங்கு சில முன்னேற்றங்களும் நல்ல காரியங்களும்
தடைப்பட்டு வருகிறது. ஆகவே, சேலத்தைப் பொறுத்தவரைக்
கும் ஒரு தனி சிஸ்டம் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
நாட்டுடைமையாக்கப்பட்டு பல ஆண்டுகளாகியும் அதிக சிப்பந்தி
கள் போடாததன் காரணமாக, 12,000-க்கு மேற்பட்ட புதிய
இணைப்புகள் கொடுக்கப்படும் அதற்கேற்ற சிப்பந்திகள் இல்லை
என்று நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதையும் அரசின்
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

சேலம் மாவட்டம் மேட்டூரிலே அரசுத் துறையிலே ஏற்படுத்தக் கூடிய அனல் மின் நிலையத்தை, எவ்வளவு துரிதமாக, விரைவாக ஏற்படுத்த முடியுமோ, அவ்வளவு விரைவாக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்று நீண்டகாலமாக ஒரு கோரிக்கை இருந்து வருகிறது. ரெயில்வே செஸ் வரி அப்பகுதியில் ரூ. 37 இலட்சம் இருந்து வருகிறது. அந்த வரியை மாவட்டத்தினுடைய அபிவிருத்தித் திட்டத்திற்காகச் செலவு செய்யாமல், மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தவே செலவு செய்ய வேண்டுமென்று சேலம் மாவட்ட அபிவிருத்தி கவுன்சிலில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. ஆகவே, ரூ. 37 இலட்சம் ஏற்கனவே இருப்பதால், சேலத்தில் மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த நிதிப் பிரச்னை குறுக்கே நிற்காது என்பதை இந்த நேரத்திலே நான் அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4 இலட்சம் மக்கள் ஜனத்தொகையையும் ரூ. 2 கோடி வருமானமுள்ள சேலம் போன்ற பெரிய நகரில், பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற அரசு எல்லாவிதமான ஏற்பாடுகளைச் செய்தும், அந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரத் தாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் சேலம் நகரத்திற்கு விரைவில் பாதாள சாக்கடைத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). நான் 7 நிமிடம்தான் பேசியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : 14 நிமிடம் பேசியிருக்கிறீர்கள். இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. மு. ஆறுமுகம் : எங்கள் கட்சியிலே யாரும் பேசவில்லை, நான் ஒருவன்தான். 20 நிமிடம் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : உங்கள் கட்சியில் நீங்கள் ஒருவர்தானே இருக்கிறீர்கள்.

திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியில் இரண்டு உறுப்பினர்கள் இருக்கிறோம். நகரமைப்பு சட்டத்தில் பல திருத்தங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தனியார் மனைப் பிரிவுகளும் போட்டு, ரோடுகளும், விளக்குகளும், சாக்கடைகளும்

ஒப்படைக்கப்படாமல் சென்றுவிடு
போட்டு நகராட்சிகளிடம் வாங்குபவர்களுக்கு நகரமைப்பு பிரிவில்
வதன் காரணமாக, மனை வாங்க முடியாமலும்
லைசன்ஸ் பெற முடியாமலும், கடன் ஆகவே, தனியார்
கஷ்டப்பட வேண்டிய நிலை ஏற்படுகிறது. வாங்கக் கூடியவர்கள்,
போடக்கூடிய அனுமதி பெருத மனைகளை அனுமதி பெற்று;
ரிஜிஸ்தர் செய்தவர்கள், நகராட்சியிலிருந்து அரசு நகராட்சிகள்
என்.ஓ. சி. பெற்று வரவேண்டுமென்று கேட்டுக்கொள்
சட்டத்திலே திருத்தம் செய்யவேண்டுமென்று
கிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

தொடக்கப்பட்டு விமானங்களும் ஆகவே, நிர்வாக
சேலத்தில் இரும்பாலை ஒன்றும் வருகின்றன. வேண்டு
வேலைகள் நடைபெற்று விமான தளம் ஏற்படுத்த உணவுப் பண்டங்
சௌகரியத்திற்காக ஒரு அதே மாதிரி ரத்து செய்ய
மென்று கேட்டுக்கொள்கிறன். அதையும் கெய்வார் குழு நியமிக்
களின் மீது வரி விதிக்கப்படுகிறது. அரசு விரைவாக
வேண்டும். விற்பனை வரி சம்பந்தமான அறிக்கையை
கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின் கேட்டுக்கொள்கிறேன்.
சமர்ப்பிக்க வேண்டுமென்று

நடைபெற்றுக்
சேலத்தில் பொருட்காட்சி நல்ல முறையில் நடத்தும்
மாநிலம் பூராவும் தனியார் ஆனால்,
கொண்டிருக்கிறது. பல முறைகேடுகள் உள்ளன. நிறைந்து
பொருட்காட்சியில் பொழுதுபோக்கு அம்சங்கள் அரசு பொருட்
இப்பொருட்காட்சி ஆகவே, இனிமேல் மாவட்டந்
நன்முறையில் நடைபெறுகிறது. ஏற்படுத்தி, பொறுப்பில் பொருட்காட்சி
காட்சிக் கழகம் ஒன்றை சொந்தப் கேட்டுக்கொள்கிறேன்.
தோறும் அரசே தனது
நடத்த வேண்டுமென்று

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே,
அவர்கள் பேசும்போது
மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் விழாவில் அவருடைய கட்சித்
அரசாங்கம் நடத்திய காமராஜர் அழைக்கவில்லை என்று கூறி
தலைவர் குமரி அனந்தன் அவர்களை காமராஜர் விழாவில் அனந்தன்
னார்கள். விருதுநகரிலே நடந்த என்று தெரிவித்துக்கொள்
வந்து கலந்து கொண்டிருக்கிறார்
கிறேன்.

திரு. மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, தலைநகரில்
நடந்த விழாவுக்கு அழைக்கப்படவில்லை என்று குறிப்பிட்டேனே
தவிர விருதுநகரிலே நடைபெற்றதைப் பற்றிக் குறிப்பிட
வில்லை.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: விருதுநகர் காமராஜர்
அவர்கள் பிறந்த ஊர். ஆகவே அதற்குத் தனி முக்கியத்துவம்
உண்டு.

*திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கவர்னர் அவர்களுடைய உரையின் மீது நன்றி செலுத்தும் தீர்மானம் பற்றி எங்கள் கட்சிக் கொள்கையை தெளிவாக எடுத்து முன்வைத்து எங்கள் குழுத் தலைவரும் மற்ற உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள். நான் சில குறிப்பிட்ட விஷயங்களை மட்டும் பேச முன் வந்திருக்கிறேன்.

தொழிலாளர் சம்பந்தப்பட்ட வரையில் கவர்னர் உரையில் கொள்கை விளக்கக் குறிப்பில் சரியாள பிரச்சினையை முன் வைக்கவில்லை என்பதை அறிக்கையைப் பார்த்தால் தெரியும். தொழிற்சங்க உரிமை மிகவும் முக்கியமானது. அந்த உரிமையைப் பற்றி யாரும் அதிகம் விளக்கம் கொடுக்கத் தேவையில்லை. ஜனநாயகத்தில் தொழிற் சங்க இயக்கத்தினுடைய உரிமை மிகவும் முக்கியமானதாகும். கவர்னர் உரையில் 2 வது பாராவில் சொல்லியிருப்பதை ஞாபகப்படுத்தி சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

''ஏற்படும் பொருளாதார வளர்ச்சி சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் மக்களுக்கு மற்றவர்களை விட அதிகமாக போய் சேர்ந்து அதன் விளைவாக வறுமை ஒழிப்பும், ஏற்றத்தாழ்வுகளின் குறைப்பும் ஏற்பட வேண்டும் என்பதும், இத்தகைய முயற்சிகள மக்கள் அனைவரின் அடிப்படைச் சுதந்திரங்கள் குன்றாத வகையில் அமைய வேண்டும் என்பதும் நமது அடிப்படை இலட்சியமாகும்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொழிற் சங்க இயக்கத்தில் தொழிலாளி மக்களுக்கு எதிராக வரக்கூடிய பல்வேறு தாக்குதல்களை நேரடியாகப் பார்க்கிறோம். ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். அண்மையில் கோவையில் சேரன் போக்குவரத்துக் கழகத்தில் நடந்த முக்கியமான விஷயம். அந்தக் கொலை விஷயம் பற்றி நான் விளக்கமாகப் பேச விரும்பவில்லை, அங்கே ஒரு தொழிற் சங்கத்தை வைத்து நடத்த முடியாத நிலைமை இருக்கிறது. கம்பெனி அதிகாரிகளே தொழிற் சங்கம் நடத்துகிற அற்புதம். கார்ப்பரேஷன் அதிகாரிகளே தொழிற் சங்கம் நடத்துகிற அற்புதம் இங்கே இந்த தமிழகத்திலேதான் பார்க்க முடிகிறது. இந்த தமிழகத்தைத் தவிர வேறு எங்கேயும் பார்க்க முடியாது. அந்த ஸ்தாபனத்தை உருவாக்குகிற நேரத்தில் தனியார் துறையில் இருந்து கார்ப்பரேஷனாக, அரசின் ஸ்தாபனமாக ஆக்கப்பட்ட நேரத்தில் எந்தவிதமான சங்கங்களையும் உருவாக்கக் கூடாது என்று முன்பு அவர்கள் எப்படி தடுத்து வந்தார்களோ, அந்தக் கும்பனியினுடைய ஆட்களை அப்படியே சேர்த்துக் கொண்டு மீண்டும் அந்தச் சங்கம் உருவாகியிருக்கிறது. அதுவும் தேசியமயமாக்கப்பட்ட நிறுவனத்தில் வந்திருக்கிறது. அதன் பிறகு அந்தத்

துறையினரால் உருவாக்கப்பட்ட கையாள் சங்கமாக அதிகாரிகளே, மேனேஜிங் டைரக்டரிலேயிருந்து, ஜெனரல் மேனேஜர் வரையில் அதற்கு உற்சாகம் ஊட்டி வளர்க்கப்படுகிறது.

(முற்பகல் 10-50)

பல இடங்களில் அவர்கள் வன்முறையில் ஈடுபட்டு இருப்பதற்கான எத்தனையோ சாட்சியங்கள் இருக்கின்றன. அவற்றை ஓராண்டிற்கும் மேலாக நம்முடைய போக்குவரத்து அமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி இருக்கிறோம் வேறு எந்தச் சங்கமும் அங்கே அமைக்க முடியவில்லை. சி. ஐ. டி. யு. சங்கம் உருவாக்கவேண்டும் என்று நாங்கள் முயற்சி எடுத்த போது, அதன் காரணமாக தொழிலாளர்கள் தாக்கப்பட்டனர். 14 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். 30 தொழிலாளர்கள் ஊட்டி, கூடலூர் போன்ற காட்டுப் பிரதேசங்களுக்கு மாற்றப்பட்டார்கள். இவற்றைப் பற்றியெல்லாம் தொழிலாளர்கள் சங்கம் முறையிட்டபோது, அதனுடைய மேனேஜிங் டைரக்டர் ஒரு விஷயத்தைப் பற்றி லேபர் டிபார்ட்மென்டுக்கு கடிதம் எழுதியிருக்கிறார். அந்த வாசகத்தைக் கூறுகிறேன். "எந்த அரசியல் கட்சியையும் சாராது நடத்தப்படும் ஒரு சங்கத்தைப் பார்த்து அரசியல் கட்சிகளுக்கு கண்கள் உறுத்துகின்றன. அதை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று தயாராக இருக்கிறார்கள் என்று எழுதியிருக்கிறார். இது எதைக் காட்டுகிறது. என்றால் அவர் மேனேஜிங் டைரக்டராக பதவி வகிப்பதை விட்டு விட்டு ஒரு அரசியல் கட்சி நடத்துவது போல் ஒரு சங்கத்தை நடத்துவதற்கு ஒரு அரசியல் கட்சியைப் போல் வேலை பார்த்துக்கொண்டு இருக்கிறார். அரசியல் கட்சிகளை எதிர்க்கிற ஒரு அரசியல்வாதியாகிவிட்டார். அவர் ஒரு டெபுடி லேபர் கமிஷனராக இருந்தவர். அவர் எந்தத் தகுதியின் அடிப்படையில் மேனேஜிங் டைரக்டராக நியமிக்கப்பட்டார் என்று எனக்குப் புரியவில்லை. அவர் தொழிற் சங்கத்தை நசுக்குவதற்கு திறமையானவர் என்று அந்த அடிப்படையில் செயல்பட்டுவருகிறார். தொழிற்சங்க ஜனநாயகத்திற்கு விரோதமாக செயல்பட்டு வருகிறார். முறையாக அங்கே யாரும் தொழிற்சங்கம் வைத்து நடத்த முடியவில்லை. அங்கே ஒரு கம்பெனி சங்கத்தை அவர் வைத்துக்கொண்டு அதை மேனேஜ்மென்டின் கையாளாக, அந்தச் சங்கத்தை நடத்தி வருகிறார். அப்படிச்செய்வது ஜனநாயகத்திற்கு ஆபத்து என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இந்த நிலை மாற வேண்டும். இப்படிப்பட்ட அதிகாரிகள் மாற்றப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும்.

இதுபோல் ஈரோட்டில் நடக்கும் தாக்குதல் என்னவென்றால் ஈரோடு கிருஷ்ணா ரிபைனரீஸ் எண்ணை மில் அதிலே 298 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 117 பெண்கள் வேலை செய்கிறார்கள். அதை நடத்துபவர் ஒரு மில்லியனர் என்று சொல்கிறார்கள். ஆனால் அந்தக் கம்பெனி ரிஜிஸ்டர் செய்யப் படவில்லை. அப்படிச் செய்யப்படவில்லை என்றால் அந்த பாக்டரி டிபார்ட்மென்ட் என்ன செய்து கொண்டு இருந்தது என்று கேள்வி கேட்டோம். அந்தக் கேள்வியை சங்கத்தில் இருந்து கேட்டபிறகு அதை ரிஜிஸ்டர் செய்ய முதலாளி விண்ணப்பம் கொடுத்து ரிஜிஸ்தர் செய்யப்பட்டது. பாக்டரி இன்ஸ்பெக்டரும் இன்ஸ்பெக்ட் செய்திருக்கிறார் என்றால், நிலைமை புரியலாம். இது சட்டபடி தொழிலாளர்களுக்குக் கொடுக்கவேண்டிய உரிமை களை பறிப்பது போல் இல்லை. ரிஜிஸ்டர் செய்யப்பட்ட கம்பெனி என்றால் தொழிலாளர் என்றால் தொழிலாளர் நல சட்டத்தின்படி கொடுக்கப்படவேண்டிய உரிமைகள் கொடுக்கப் படவேண்டும். இப்படி ரிஜிஸ்டர் சொய்யப்படாமல் ஒரு கம்பெனி இயங்குகிறபோது அரசின் சட்டத்தை மீறி நடக்கிறார்கள் என்கிறபோது தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு எப்படி இருக்க முடியும்? ஏழை எளியமக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கருதி அரசு சட்டங்கள் செய்து இருந்தபோதிலும் அதை நடைமுறைப்படுத்தாமல் அதிகார வர்க்கம் இருக்கிறது என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன் அங்கேயிருக்கும்படியான டெபுடி லேபர் கமிஷனர், பல தரம். தலையிட்டும் இன்று வரையில் அந்த 298 தொழிலாளர்களையும் நிரந்தரம் செய்யவில்லை. அத்தனை பேரையும் வெளியேற்றிவிட்டு புதிதாக ஆட்களை நியமிப்பேன் என்று முதலாளி சொல்லிக் கொண்டிருக்கிறார். இந்த நிலைமை நீடித்தால் எப்படி தொழிற்சங்க ஜனநாயகம் பிழைக்கும் என்பதை இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல் சென்னையில் இந்துஸ்தான் டெலிபிரின்டரில் 12 (3) செட்டில்மென்ட் டெபுடி கமிஷனர் முன்பு கையெழுத்திடப் பட்டது. அந்த ஒப்பந்தத்தை மத்திய அரசு ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று சொல்லிக்கொண்டு இருப்பதால், அந்தத் தொழிற்சங்க தகராறு சட்டத்தின்படி போடப்பட்டஒப்பந்தத்தை அங்கே அமல் படுத்த முடியாமல் இருக்கிறது. இந்த நிலை நீடித் தால் எப்படி தொழில் தகராறு சட்டம் டெபுடி கமிஷ்னர் செயல், படுவார். சர்க்கார் இது குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். மத்திய சர்க்கார் இதில் தலையிடுவதன் காரணமாக, மாநிலங் ளுக்கு ஜனநாயக ரீதியில் கொடுக்கப்பட்டுள்ள சில உரிமைகளைக் கூட மாநில அரசாங்கம் பயன்படுத்தி சுயமாக செயல்பட முடிய வில்லை என்றால் எப்படி ஜனநாயக உரிமை பாதுகாக்க முடியும் என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

இது போல் டி.வி.எஸ். கம்பெனியில் நடந்து இருப்பது அனை வரும் அறிவோம். அங்கே தொழிலாளர்கள் விரும்பிய தொழிற்சங்கத்தை அமைக்க முடியவில்லை. அது மட்டு மல்லாமல், அங்கே பி.எப். சட்டத்தை அமுல்படுத்தாமல் அவர் களுக்கு விலக்கு அளிக்கப்பட்டு, அவர்களே பி.எப். வசூலித்து அதிகச்சலுகையை தொழிலானர்களுக்கு கொடுக்கிறார்கள் என்று ஒரு நிலையை எடுத்து இருக்கிறார்கள். அதன் மூலம் சட்டத்திலி ருந்து தவிர்க்கப்பெற்றுள்ளனர். அப்படி இருப்பதால் அந்த நிர்வாகம் அந்த ஃபண்டை அவர்களுடைய இஷ்டத்திற்கு பயன் படுத்தமாட்டார்களா? அதற்கு வட்டி கொடுப்பார்கள் அது வேறு விஷயம். இது ஜனநாயக முறையில் சரியா தொழிற்சங்க உரிமைகளையே கொடுக்காத ஒரு நிர்வாகத்திற்கு இப்படி பி. எப். பி-லிருந்து தவிர்ப்பு அளித்து உரிமைகள் வழங் குவது சரியா என்பதை நமக்குப் புரியவில்லை. இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக்காரணம் அரசாங்கம் இதனைப் பரிசீலித்து அந்த நிலையை மாற்ற வேண்டும் என்பதற்காகத் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேமாதிரி ஆசிரியர்கள் பிரச்சனை. அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களுடைய பிரச்சனைகளைப்பற்றி கல்வி அமைச்சரவர்கள் அறிக்கை வெளியிட்டார்கள். அது உண்மை. ஆனால் அது ஆசிரியர்களின் பிரச்சனைகளைத் தீர்க்கவில்லை என்பதே அதன் சாராம்சம் இன்று அவர்களுக்கு வேலைப் பாதுகாப்பு, தனியார்துறையிலும், அரசுத்துறையிலும் இல்லை. உதாரணம், என்னவென்றால் தனியார் கல்லூரி ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அரசு கல்லூரிகளில் 10 (1) விதியின் கீழ் வேலை செய்தவர்கள் இன்றைக்கு பதவி இழந்திருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் மீண்டும் வேலை கொடுக்க வேண்டுமென்பது முக்கியமான பிரச்சனை. அதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட் டிருக்கிறது? ஒன்றும் இல்லை. அதனால் தான் இன்றைக்கு ஆசிரி யர்கள் கைதாகி, சிறைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். பள்ளிக்கூடத்திலே மாணவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டிய ஆசிரியர்கள், தாங்களே கைதாகி, சிறைச்சாலைக்கு சென்று பாடம் கற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். இதெல்லாம் எப்படி ஜனநாயகத்தை வளர்க்க உதவும்? நிச்சய மாக உதவாது. இது encroachment on democ atic rights ஆகும். அதற்கெல்லாம் ஒரு முடிவு கட்டியாகவேண்டும்.

இதைச் சொல்லும்போது இன்னொன்றையும் சொல்ல வேண் டும். நம்முடைய மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் இங்கே பேசும்போது ஒன்றைக் குறிப் பிட்டார்கள். மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் இங்கே உரக்க குரல் கொடுக்கிறார்கள். இந்திரா காங்கிரஸ் கட்சி

வரக்கூடாது. சர்வாதிகார ஆட்சி மீண்டும் வரக்கூடாது என்று சொல்லி எச்சரிக்கை விடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால் மக்கள் ஏற்கனவே ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்கள். அவர்கள் என்னதான் குரல் கொடுத்தாலும் இந்திரா காங்கிரஸ் தான் ஆட்சி அமைக்க வேண்டுமென்று மக்கள் முடிவு செய்து விட்டார்கள் என்று அவர்கள் இங்கே கூறினார்கள்.

இந்திரா காங்கிரஸ் அரசாங்கம் [வரவேண்டுமென்று அவர்கள் சொல்ல உரிமை இருக்கிறது. அந்த உரிமை இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் ஒரு விஷயம். நாங்கள் இதை முற்றிலும் அரசியல் அடிப்படையிலே அணுகிப் பார்க்கிறோம். இந்திரா காந்தி அம்மையார் மீது போடப்பட்ட 'ஷா கமிஷன்' கொடுத்துள்ள அறிக்கையை இன்றைக்கு நாட்டு மக்கள் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். தினம் தினம் பக்கம் பக்கமாக அவர்கள் செய்த அராஜகம் வெளிவந்து கொண்டிருக்கிறது. இன்று உலக மக்களே அதை எல்லாம் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். உலகம் பூராவுக்கும் இந்த செய்தி பரந்திருக்கிறது. ஆனால் அவ்வளவு அராஜகத்தையும் செய்து விட்டு, இன்றைக்கு என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் ? நடை பெற்ற தவறுகளுக்கு நாங்கள் பொறுப்பல்ல ; அதிகாரிகள் தான் அதற்குப் பொறுப்பு ; அதிகார வர்க்கம்தான் தவறு செய்தவர்கள் என்று இன்றைக்கு இந்த நாட்டிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் மீது குற்றத்தைச் சுமத்தி தன்னுடைய அரசியல் நடவடிக்கைகளை மீண்டும் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். அவசரக் காலத்தில் தான் செய்தது சரி தான் என்று இன்றைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்; அவசர நிலை பிரகடனப்படுத்தியது சரியானதுதான் என்று இன்றைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிற, தான் செய்துள்ள பயங்கர தவறுகள் பற்றி துளிக்கூட உணராத அம்மையார்தான் அரசாங்கம் அமைக்க வேண்டும் என்று மக்கள் முடிவு செய்துவிட்டார்களாம். யார் அந்த மக்கள்? அவசரக் காலக் கொடுமைகளை அனுபவிக்காதவர்களா அவர்கள் ?

இன்றைக்கு மத்தியிலே இருக்கின்ற ஜனதா அரசாங்கம் தேர்தல் நேரத்திலே மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற, மக்கள் குறைகளைக் கேட்டு அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க முன்வந்தால் இன்றைக்கு அவர்கள்மீது மக்களுக்கு இருக்கும் அதிருப்தி போய்விடும். அவசரக் காலத்திலே இந்திரா அம்மையாரின் சர்வாதிகாரப் போக்கால் ஏற்பட்ட தொல்லைகளை அனுபவித்தவர்கள் இந்த நாட்டு மக்கள். அந்த நிலை மீண்டும் வரக்கூடாது, அந்த அனுபவம் இன்னொருமுறை ஏற்படக் கூடாது என்ற ஒரு முடிவினால் தான் இந்த நாட்டிலே 30 ஆண்டு காலம் நடைபெற்றுக் கொண்டிருந்த காங்கிரஸ் ஆட்சியை மக்கள் வீழ்த்திக் காட்டினார்கள். அதைத்தான் இன்றைக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் சொல்லிக்கொண்டிருக்கிறது.

தற்போதைய இந்திய அரசியல் நிலைமையில், பலமான ஒரு இடதுசாரி ஜனநாயக முன்னணி அமைய வேண்டும். அதற்குமுன் வரக்கூடிய கட்சிகள் எந்தக்கட்சியாக இருந்தாலும் ஒற்றுமையாக இருந்து, ஒரே அணியாகத் திரண்டு, இந்த நாட்டிலே சர்வாதிகார ஆட்சியை மீண்டும் தலைதூக்க விடக் கூடாது ; இந்த நாட்டிலே இன்னொருமுறை எமர்ஜன்ஸி வரக்கூடாது என்ற அடிப்படையை உருவாக்க ஒரு பரந்த ஜனநாயக முன்னணி உருவாக வேண்டும்.

இன்றைக்கு மேற்கு வங்காளம், திரிபுரா போன்ற இடங்களில், பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு குறைபாடுகள், தொல்லைகள், உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டபோதிலும் சகித்துக் கொண்ட மக்கள் 85 சதவிகிதத்திற்குமேல் ஓட்டு போட்டிருக்கிறார்கள், என்றால் அவர்கள் ஒரு நல்ல அரசியல் பாடம் படித்திருக்கிறார்கள். அந்த மக்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருக்கலாம். ஏழைகளாக இருக்கலாம். பொருளாதார வளம் இல்லாதவர்களாக இருக்கலாம். ஆனால் அரசியல் வாழ்க்கைப் பாடம் அனுபவத்தில் பெற்றிருக்கிறார்கள். ஆகையால் அந்த மக்களைத் திரட்டி இந்த இடதுசாரி ஜனநாயக முன்னணி என்ற ஒரு அணியை ஏற்படுத்த வேண்டும் என்று நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதுதான் இன்றைக்கு இந்த நாட்டிலே ஏற்பட்டுக் கொண்டுவருகின்ற ஒரு சூழ்நிலை, ஏற்பட்டு வருகிற அரசியல்போக்கு என்பதை இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

எங்கள் கட்சியின் நிலை அதுதான். தான் செய்த தவறுகளுக்கு எல்லாம் வருத்தம் கூட சொல்லாமல் இன்றைக்கு அதிகார வர்க்கத்தை பலி கடாவாக்கி, தவறுகளுக்கு அவர்கள்தான் பொறுப்பு என்று சொல்லி, எமர்ஜன்ஸி கொண்டுவந்தது சரிதான் என்று இன்றைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிற இந்திராகாந்தி அம்மையாரின் ஆட்சி மீண்டும் இந்த நாட்டிலே வரக் கூடாது. அந்த கொடுமைகள் மீண்டும் இங்கே வரக்கூடாது. அதற்கு ஒரு நல்ல பலமான ஜனநாயக முன்னணி தேவை. அந்த எண்ணத்தில்தான் நாங்கள் செயல்படுகிறோம். அண்ணா தி. மு. க. வுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் தொடர்பு இருக்கிறதா இல்லையா என்பதுபற்றி எங்களுக்கு கவலை இல்லை; அது அவர்கள் பிரச்சனை. ஆனால் தமிழ் நாட்டில் இந்திரா காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வரும் என்று சொல்கிறார்கள் ; மத்தியில் வரவேண்டுமென்று மக்கள் முடிவு செய்துவிட்டதாகவும் சொல்கிறார்கள். அது அவர்களுடைய ஆசை. ஆனால் அனுபவ ரீதியான உண்மை என்ன? அதுதான் மக்களுக்குத் தெரிந்த உண்மையை மேலே குறிப்பிட்டேன்.

மக்களின் குறைகளைப் போக்க வேண்டும். ஆனால் ஏழ்மை ஒழிய வேண்டும். வரிகள் குறைய வேண்டும். பாடுபடுபவன் வாழ வேண்டும். உழைப்பவன் முன்னேற வேண்டும். தாழ்ந்த

நிலையில் இருப்பவர்களுக்கு உதவ வேண்டும். உழைப்பவனுக்கு உதவிசெய்ய வேண்டும். இப்படிப்பட்ட ஒரு எண்ணம் இன்றைக்கு மக்களிடம் பலமாக உருவாகியிருக்கிறது. அதை செயல்படுத்த ஒரு ஜனநாயக இடதுசாரி முன்னணிதான் தேவை. அந்த ஜன நாயக முன்னணியை உருவாக்க வேண்டுமென்று நாங்கள் செயல் பட்டுக் கொண்டிருக்கிறோம். அதில் எல்லாக் கட்சிகளுக்கும் பொறுப்பு இருக்கிறது. அண்ணா தி.மு.க. தன்னுடைய மலையாளி எதிர்ப்புக் கொள்கையை கைவிட்டுவிட்டு தி. மு. க. மார்க் கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இன்னும் இதுபோன்ற மேலேசொன்ன கடமைகளை நிறைவேற்ற ஒப்புகின்ற மற்ற கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு அணியை வகுத்தால் தான் நம்முடைய இந்த எண்ணம் நிறைவேறும். மற்றொரு அணியும் தமிழகத்தில் உருவாகலாம். அது வேண்டுமானால் இந்திரா காங்கிரஸ் அணியாக இருக்கலாம். அந்த அணி வந்தால் நல்லது என்று அவர்கள் சொல்லலாம். அது அவர்களுடைய உரிமை. நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால் இந்த நாட் டுக்கும் எதிர்காலத்திற்கும் ஏற்ற ஒரு அணி எது என்பதைத்தான் நாம் பார்க்கிறோம்.

[முற்பகல் 11—00]

ஆகவே அப்படிப்பட்ட முறையில் ஜனநாயகத்திற்கும் சர்வாதி காரத்திற்கும் இடையில் நடக்கின்ற ஒரு போராட்டத்தில் . ஜன நாயகம் வேண்டுமா அல்லது சர்வாதிகாரம் வேண்டுமா என்பது தீர்மானிககப்படவேண்டும், ஜனநாயகம் வேண்டும் என்கிற அடிப் படையில் இருந்துதான் நிலச் சீர்திருத்ததிற்கும் தொழிலாளி மற்றும் ஏழைகளின் வாழ்க்கையினை மேம்படுத்துவதற்கும் உரிய பல்வேறு காரியங்களைச்செய்ய வேண்டிய ஒரு ஆட்சி அமைப்பு ஏற்படவேண்டிஇருக்கிறது. அவ்வித அரசாங்கங்கள் ஏற்பட்டு இன்றைக்கு நல்லபலக் காரியங்களைச் செய்யவேண்டி இருக் கின்றது. அவ்வித அரசாங்கத்தினர் கையாளுகின்ற கொள்கை களிலே சில தவறுகள் ஏற்பட்டாலும் அதனை அவர்கள் அனுபவத்தில் புரிந்து கொண்டு தவறுகளைத் திருத்திக் கொண்டு முன்னேற வேண்டும். அப்படிப்பட்ட அரசியல்வளர்ச்சி போக்குத் தான் இன்றைக்கு வளர்ந்து வருகின்ற சூழ்நிலை இருக் கின்றது. ஆனால் சில வேளைகளிலே மக்கள் சில தவறான பகட்டான கோஷங்களுக்கு ஆளாகக்கூடும். அதைப் பின்பற்றிச் செல்லக்கூடிய நிலை ஏற்படலாம். மக்கள் தடம் புரளுகின்ற நிலை கூட ஏற்படக்கூடும். ஆனால் எப்போதுமே அப்படி சென்று கொண்டிருப்பார்கள் என்பதல்ல. சர்வாதிகாரத்தை....

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, நாங்கள் யாரையும் தடம் திருப்புவது இடையாது. ஆகவே அவர்கள் தடம் புரளுவது பற்றி.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : திரு. ரமணி அவர்களே நீங்கள் சீக்கிரம் முடியுங்கள். சுருக்கமாக முடித்துவிடுங்கள்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அரசியல்வாதிகளுடைய சில கோஷங்களை சரியாகப் புரிந்துகொள்ள முடியாத சாதாரண மக்கள் அவர்கள் போட்ட கோஷத்திற்கு சில நேரங்களில் இறை யாவது உண்டு. அந்த யதார்த்த நிலைமையைத்தான் சொல் கிறேனே தவிர தனிப்பட்டவர்களைப் பற்றிப் பேசவில்லை. மக்கள் சில சமயங்களில் தடம் புரண்டு போவது உண்டு. அவ்வாறு தடம் புரண்டு மக்கள் தவறான பாதையில் செல்வதைத் தடுத்து அவர்களை முன்னேறச் செய்ய வேண்டியது அவசியம். இந்த ஆளுநர் உரையில் உழைப்பாளி மக்களின் ஜனநாயக உரிமைகளை கோடிட்டுக் காட்டி இருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆகவே அரசு இதனைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு உழைப்பாளி மக்களுடைய ஒற்றுமையையும், ஜனநாயகத்தின் இடது சாரி கட்சிகளின் ஒற்றுமையையும் முன்னேற்றத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அரசாங்கம் சரியான பாதையில் செல்ல வேண் டும் என்பதையே நான் கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல சர்வாதிகாரத்தை மக்கள் நிச்சயம் ஆதரிக்க மாட்டார்கள். அரசியல் சட்டத்தின் பேசிக் ஸ்டரக்சர் தியரி அதாவது அடிப் படைக் கட்டமைப்புக் கொள்கையைப் பற்றிய சட்டத் திருத்தத் தை ராஜ்ய சபாவில் கொண்டுவந்த காலத்தில் அது நிறைவேறாத வகையில் இந்திரா காங்கிரஸ் கட்சியால் செய்யப்பட்டு விட்டது. இப்படி மக்களுக்குரிய நல்ல காரியங்களைச் செய்வதில் குறுக்கிட்டு எதிர்க்கக்கூடிய கட்சியாக இந்திரா காங்கிரஸ் இருக்கின்றது. மக்கள் கொடுத்த அதிகாரம்தானே பாராளுமன்றத்துக்கு, மக்கள்தான் பலம் பொருந்தியவர்களாக பரம அதிகாரம் படைத்தவர்களாக இருக்கவேண்டும். sovereign power belongs to the people அதுதான் அங்கு வந்த திருத்தம். அந்த வகை யில் மக்களுக்கு பயன்படுகின்ற வகையில் அரசியல் சட்டங்கள் திருத்தம் செய்யப்பட வேண்டும். இதனைக் கூட எதிர்க்கின்ற போக்கிலே இருந்து கொண்டு என்ன ஜனநாயகம் பேசுகிறார்கள். இந்திரா காங்கிரஸ் கட்சியினர் என்பது எனக்குப் புரியவில்லை. ஆகவே சர்வாதிகார சக்திகளல்ல—இடதுசாரி அணிவகுப்புத்தான் ஜனநாயக உரிமைகளுக்கு பாதுகாப்பினைபரிபூரணமாக அளித்து ஆதரவளிக்கும் என்று சொல்லி நான் அமருகிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : பாய்ன்ட் ஆப் ஆர்டர், நம்முடைய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ரமணி அவர்கள் பேசும்போது அவசர காலத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்களது கம்யூனிஸ்ட் கட்சி அவசர காலத்தைத் தவறு என்று ஒப்புக்கொண்டதா ? அப்போதிருந்த ஆளும் கட்சியின் அவசர காலச்சட்டத்தை இதுவரைக்கும் நாங்கள் ஒப்புக்கொண்டது தவறு

என்று ஒப்புக்கொள்ளவில்லையே. ஆனால் நம்முடைய மார்க்ஸிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவசர காலத்திற்கு ஆதரவு இன்
னும் கூட வைத்திருக்கிறார்கள். அது என்ன காரணம். (இடை
யில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்று குறிப்பிடப்படுகிறது)
மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அல்ல. இந்தியக் கம்யூனிஸ்ட்
கட்சி.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அந்தமாதிரி ஆதரவு
சென்ற காலத்தில் அ.இ. அண்ணா தி.மு.க. கட்சி கொடுத்தது.
அதனால்தான் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திரா காங்
கிரஸ் கட்சியோடு அந்தக் கட்சி, கொண்டிருக்கின்ற உறவினை
முறித்துக்கொண்டால்தான் நாங்கள் இவர்களோடு உடன்பாடு
வைத்துக்கொள்வோம் என்று தெரிவித்து, அதன் அடிப்படையில்
அண்மையில் நிலைமைகள் மாறி இருப்பதை உணர்ந்து அதற்கான
ஒரு உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : பாயின்ட் ஆப் ஆர்டர். மதுரை மாநக
ராட்சித் தேர்தலில் அவர்களோடு கூட்டு வைத்திருந்தார்களே,
அதற்கான காரணத்தை விளக்குவார்களா ?

திரு. கு. ரமணி : ஏற்கெனவே சொன்ன காரணம்தான்.
அது கூட்டு அல்ல. அதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆளும்
கட்சியோடு தொகுதி உடன்பாடுதான். தொகுதி உடன்பாடு
வேறு, கூட்டு வேறு, ஐக்கிய முன்னணி வேறு. அதுமாதிரி
காங்கிரஸ் கட்சியோடு பலர் தொகுதி உடன்பாடு செய்துகொள்
கிறார்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மார்க்ஸிஸ்ட்
கட்சி உறுப்பினர் திரு. ரமணி அவர்கள், அது தொகுதி உடன்
பாடுதான் என்று சொன்னார்கள். எந்தக் கொள்கை அடிப்
படையில் அந்த தொகுதி உடன்பாடு ஏற்பட்டது என்பதை அறிய
இயலுமா ?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. பி. எச். பாண்டியன்)
கவர்னர் அவர்கள் உரைமீது நாம் பேசிக் கொண்டிருக்கிறோம்.
தொகுதி உடன்பாடு பற்றி பேச வேண்டாம். இப்படி ஒவ்வொரு
வராகக் கேட்டுக்கொண்டிருந்தால் எப்படி? திரு. அழகர்சாமி.

திரு. என். கிட்டப்பா : அவர்கள் எல்லாம் பேசவில்லையா,
நான் பேசுவதில் என்ன தப்பு ?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. பி. எச். பாண்டியன்)
திரு. அழகர்சாமி...

*திரு. சோ. அழகர்சாமி : ஆளுநர் அவர்களது உரை
என்பது அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கைகளைச் சொல்லக்
கூடிய ஒரு கொள்கை அறிவிப்பு என்று நான் நினைக்கிறேன். இந்த
உரையை, ஆளுநர் அவர்கள் உரையை முழுமையாக இருபது
பக்கங்களைப் படித்துப் பார்த்தாலும் கூட நல்லெண்ணத்தை
அவர்கள் சொல்லியிருக்கிறார்களே தவிர சமுதாயத்தின் அடித்
தளத்தில் உள்ள மக்களின் வறுமையை ஒழிக்க, ஏற்றத்தாழ்வு
களைப் போக்க திட்டங்களை நிறைவேற்றுவோம் என்று சொல்லி
யிருக்கிறார்களே தவிர அதற்கான உருப்படியான திட்டங்கள்
ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதா என்று திரும்பத் திரும்ப
மூன்று தடவை படித்துப் பார்த்தேன். ஒன்றையும் காணோம்.

ஒரு நாடு முன்னேற தொழில் வளர்ச்சி பிரதானமாகும். அது
சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கைகள் எடுக்க இந்த அரசு முயற்
சித்திருக்கிறதா அல்லது மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி
இன்னின்ன தொழில்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று வற்
புறுத்தியிருக்கிறதா, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்
திருக்கிறார்களா அல்லது மாநில அரசின் அதிகாரத்திற்குட்பட்ட
தொழில்களை ஆரம்பிக்க ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறார்களா
என்று பார்த்தால் ஒன்றுமே கிடையாது.

தொழில் சம்பந்தமாகச் சொல்லியிருப்பது, கிராமங்களில்
பட்டுப்பூச்சி வளர்த்தல், நூல் நூற்பது இவைகள் பற்றித்
தான். அதனால் எந்த அளவிற்கு தொழில் வளர்ச்சி
ஏற்படமுடியும், இவை மற்றத் தொழில்களோடு போட்டி
போட்டு எந்தளவிற்கு வேலைவாய்ப்புத் தரமுடியும் என்பதை
கடந்த கால அனுபவத்தை வைத்துப் பார்த்தால் தெரியும்.
பல தொழில்களை நம் மாநிலத்தில் அமைப்பதற்கான
வாய்ப்புகள் இருக்கின்றன, அதற்கான மூலப்பொருள்களும் உள்
ளன. இப்போது சிமென்ட் பற்றாக்குறை இருக்கிறது. சிமென்ட்
தொழிற்சாலைகள் ஆரம்பிக்கலாம். வேறு பல ரசாயனத் தொழிற்
சாலைகள் ஏற்படுத்தலாம். இப்போது விவசாயிகளுக்கு வேண்டிய
பூச்சி மருந்துகளை விவசாயிகள் தனியார் கம்பெனிகளிடமிருந்து
தான் அதிகமாக வாங்குகிறார்கள். அதை, பூச்சி மருந்துகள்
தயாரிக்க, அரசாங்கத் துறையில் அல்லது மத்திய அரசின்
கூட்டோடு ஒரு தொழிற்சாலை தொடங்க முயற்சிக்கிறோம் என்று
சொல்லியிருக்கிறார்களா என்றால் இல்லை. இயந்திரக் கலப்பைகள்
தயாரிக்கும் தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம். அப்படி ஏதாவது
செய்திருக்கிறார்களா என்றால் இல்லை.

கிராமப் புறங்களில் உள்ள எளிய மக்களின் வறுமையை
ஒழித்து, ஏற்றத்தாழ்வுகளை அகற்றி, ஏழைகளின் வாழ்க்கைத்
தரத்தை உயர்த்துவதற்காக பாடுபடுவதாகச் சொல்லக்
கூடிய இந்த அரசு கிராமமக்களின் வாழ்க்கையில் மறு
மலர்ச்சி ஏற்படும் வகையில் ஏதாவது திட்டம் போட்டிருக்
கிறார்களா என்றால் ஒன்றுமே கிடையாது. இன்றிருக்கிற நிலச்
சீர்திருத்தச் சட்டங்களை முறையாக அமல்படுத்தினாலே, அதற்கு
வேண்டிய நடவடிக்கைகள் எடுத்தாலே ஓரளவு நிலைமை சீரடை

யும், அவர்களை நிலங்களிலிருந்து வெளியேற்றுவதைத் தடுத்து
பாதுகாக்க முடியும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்
படவேண்டும். பதினைந்து ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்று சட்டத்
திருத்தம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டும் நூற்றுக்கணக்கான
ஏன் ஆயிரக்கணக்கான ஏக்கர்களை வைத்துக்கொண்டிருக்கிற பண்
ணையார்கள் இருக்கிறார்கள். பினாமி நிலங்களை யெல்லாம் கண்டு
பிடித்து அதற்கு வேண்டிய திருத்தங்கள் கொண்டுவரப்படும்
என்று வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சொன்னதாக ஞாப
கம். அதை கைவிட்டுவிட்டார்களா, அப்படிக் கொண்டுவர
எண்ணம் இருக்கிறதா என்று சந்தேகப்படும் நிலை இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: சந்தேகப்படத்
தேவையில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். பினாமி நிலங்களை
விரைவில் எடுப்பதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுத்
துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள்,
ஆளும்கட்சி உறுப்பினர்களும்—எங்கெங்கே பினாமி நிலங்கள் இருக்
கின்றன, யார் யார் வைத்திருக்கிறார்கள் என்ற தகவல்களை உங்
களிடமிருந்து கேட்டறிய இருக்கிறேன். கூடியவிரைவில் அது
சம்பந்தமான நடவடிக்கைகள் எடுக்க இருக்கிறது என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-10].

திரு. சோ. அழகர்சாமி: மிக்க நன்றி. பினாமி நிலங்கள் எங்
கெங்கே இருக்கின்றன என்பதை யெல்லாம் எடுத்துச்சொல்லி எங்
கள் கட்சி 1972-ம் ஆண்டில் ஒரு பெரிய போராட்டத்தையே
நடத்தி, அடையாளம் காட்டி, இன்னின்ன இடங்களில் யார் யாரி
டத்தில் பினாமி நிலங்கள் இருக்கின்றன என்று எடுத்துச் சொன்
னோம். இப்போதும் விவரங்களை வைத்திருக்கிறோம். அவற்றை
எடுத்துக் காட்டுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அதன்
பேரில் நடவடிக்கை எடுத்து பினாமி நிலங்களை எல்லாம் எடுத்து
கிராமப் பகுதியிலுள்ள ஏழை மக்களுக்கு கொடுக்கவேண்டும்.
அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இந்த
அரசுக்கு தைரியம் இருக்கிறதா என்பதை பார்த்துத்தான் தெரிந்து
கொள்ளவேண்டும். போகப் போகத்தான் தெரியும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இந்த அரசைப்
பொறுத்தவரையில் தைரியம் என்பது மட்டுமல்ல, பினாமி நிலங்
களை எடுப்பதில் எவ்வளவு தைரியமாக இருக்கிறது என்பதை
இப்போது வரப்போகின்ற மசோதாவிலிருந்து தெரிந்து கொள்ள
லாம். இந்தக் கூட்டத்தொடரிலேயே இதற்கான மசோதாக்கள்
வரவிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: மிக்க நன்றி. ஆனால் பல இடங்
களில் விவசாயிகள் வெளியேற்றப்படுகிறார்கள். எங்கள் மாவட்
டத்தில் வேளார்குளம் கிராமத்தில் போலீஸ் உதவியுடன், 100

ஆண்டு 50ஆண்டு என்று அனுபவித்துக்கொண்டிருந்த விவசாயிகள்
எல்லாம் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற பயங்கர
மான நிலைமை இருந்து கொண்டு வருகிறது. அது மட்டுமல்ல,
அவர்கள் மீது பல கேஸ்களும் போடப்படுகின்றன. இதைப்பற்றி
அமைச்சர் அவர்களுக்கு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். இவற்றை
கவனித்து, விவசாயிகளை நிலத்தை விட்டு வெளியேற்றக்கூடாது
என்பதோடு விவசாயிகளுக்கு நல்ல பாதுகாப்பையும் அளிக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றன்.

அடுத்தபடியாக, தொழில் சம்பந்தமான பிரச்னை. சக்தி பைப்ஸ்
தொழிற்சாலையை அரசு ஏற்றெடுத்த பின்னால் இப்போது அங்கே
ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலையிழப்பு ஏற்பட்டி
ருக்கிறது. இப்போது இரண்டு ஆண்டு காலமாக தொழிற்சாலை
மூடிக்கிடக்கிறது. அதற்காக மாதந்தோறும் ஒரு லட்சம் ரூபாய்
அங்குள்ள மற்றச் செலவினங்களுக்காகச் செலவழித்துக் கொண்டி
ருக்கிறார்கள். ஆனால் வேலை இழந்து நிற்கும் தொழிலாளிகளுக்கு
அரைச்சம்பளம் அதாவது லே ஆப் சம்பளம் வழங்குவதில்லை. அது
மட்டுமல்ல. தொழிலாளர்கள்மீது பல வழக்குகள் போடப்பட்டு
அவர்கள் பொன்னேரி மாஜிஸ்ட்டிரேட் கோர்ட்டுக்கு மாதந்
தோறும் நடந்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் குறைகளைப்பற்றி
தொழிலாளர்கள் தூதுகோஷ்டியாக இங்கு வந்து அமைச்சர்
அவர்களிடம் கோரிக்கை சமர்ப்பித்து இருக்கிறார்கள். அரசாங்கம்
இந்தத் தொழிலை ஏற்று எடுத்தாகிவிட்டது. இந்தத் தொழிற்
சாலையைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் இந்த ஒரே தொழிற்
சாலைதான் இருக்கிறது. நமக்கு, நமது நாட்டுக்கு மிகவும்
அவசியமான பைப்களை உற்பத்தி செய்யக் கூடிய நல்ல தொழிற்
சாலை. இதை உடனடியாகத் திறந்து செயல்படுத்துவதற்கு அர
சாங்கம் ஏன் தயக்கம் காட்டுகிறது. இதில் லாப நஷ்டத்தைப்
பார்க்காமல் அரசாங்கம் உடனடியாக ஏற்று, அங்குள்ள ஆயிரம்
தொழிலாளர்களுக்கும் வேலையளிக்க முன்வர வேண்டும்.
அரசாங்கம் தொழிலாளர்களின் கோரிக்கையை மனிதாபி
மானத்தோடு கவனித்து, உடனடியாக மேற்கொள்வதற்கு நட
வடிக்கை எடுக்கவேண்டும். இப்போது மாதாமாதம் ஒரு லட்சம்
ரூபாய் கொடுத்துக் கொண்டிருப்பதோடு மேலும் 50 ஆயிரம்
ரூபாய் செலவழித்தால் இந்தத் தொழிலாளர்களைப் பாதுகாக்க
முடியும். இதில் அரசாங்கம் மிக விரைவில் நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று மூடிக்கிடக்கும் டி. ஐ. சைக்கிள்ஸ் தொழிற்
சாலையிலுள்ள தொழிலாளிகள் அவர்களுடைய கோரிக்கைக்காக
AITUC தலைவர் கோபு அவர்கள் உண்ணாவிரதம் இருந்
தார்கள். அமைச்சர் வாக்குறுதி கொடுத்தும் அதிலும் போதிய
நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தொழிலாளி சம்பந்தப்பட்ட
விஷயத்தில் அரசாங்கம் மிகக் காலதாமதமாக இருந்து வருகிறது.
அவர்களைப் பட்டினி போட்டு அவர்களைப் பணிய வைக்கவேண்டும்
என்று நினைக்கின்ற முறையைக் கடைபிடிப்பது சரியல்ல.

தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்காமல் அவர்களை பட்டினி போட்டு பணிய வைக்கவேண்டும் என்று நினைக்கின்ற போக்கைவிட்டுவிட்டு தொழிலாளர் பிரச்னை என்று வரும்போது அவைகளை அனுதாபத்துடன் அணுகி பிரச்னைகளை உடனுக்குடன் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்றுதான், கல்லூரி ஆசிரியர்கள் சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் இங்கே வாக்குறுதி தந்தார்கள் ஆனால் ஆசிரியர்களுக்கு வேலையிழப்பு என்பது ஏற்படாது அவர்களை கல்லூரிகளிலிருந்து வெளியேற்றக் கூடாது என்று வாக்குறுதி தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தும் கூட, நேற்றுகூட அமைச்சர் அவர்கள் இங்கு இதுபற்றி பேசும்போது, இவர்களுடைய பிரச்னையை அனுதாபத்துடன் கவனிக்கலாம் என்றுதான் சொல்லியிருக்கிறார்களே தவிர ஆசிரியர்கள் எந்தவிதத்திலும் வேலையிழக்கமாட்டார்கள் என்று உறுதிமொழி கொடுக்கவில்லை. நான்கைந்து ஆண்டுகளாக பணிபுரிந்த ஆசிரியர்கள் எல்லாம் இன்றைக்கு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இதை எதிர்த்து ஆசிரியர்கள் பெரிய போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். திருச்சியில் எல்லாக் கல்லூரிகளும் மூடப்பட்டிருக்கின்றன. மாணவர்களும் ஆசிரியர்களுக்காக ஆதரவு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். சென்னையிலும் இந்தப் போராட்டம் பரவிக் கொண்டிடிருக்கிறது. ஆகவே இதில் அரசு உறுதியான உத்தரவைப் பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, தனியார் பள்ளி ஆசிரியர்கள் சம்பந்தமாக அரசாங்கம் பல உத்திரவுகளைப் போட்டிருக்கிறது. இப்படி பல உத்திரவுகளை போட்ட பிறகும் கூட மானேஜ்மென்டார் அதை ஒப்புக் கொள்வதில்லை. அதை அமல்படுத்துவதும் இல்லை. ஆசிரியர்களை வேலையை விட்டு நீக்குகிறார்கள். பத்து ஆண்டுகளாக வேலை செய்த ஆசிரியர்களை எல்லாம் கூட வெளியேற்றக் கூடிய நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே இதுசம்பந்தமாக அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ் அடக்குமுறை மிக மோசமாக நடந்து கொண்டிருக்கிறது. மிக அதிகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. இதன் காரணமாக மக்களிடத்தில் பெரிய ஆத்திரமான, பயங்கரமான ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

டால்மியாபுரத்திலுள்ள தொழிலாளிகள் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய ஊதியத்தை அளிக்க வேண்டுமென்று உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து அவர்களைச் சேர்ந்த குடும்பத்தினர், குழந்தைகள் ஊர்வலம் வந்தபோது. பாலீஸ் அடக்குமுறை நடத்தியது. அவர்களுடைய வீடுகளிலே

எல்லாம் புகுந்து, அங்குள்ள சாமான்களை எல்லாம் நொறுக்கியது. மேலும், சர்க்கார் காதி டிப்போவிற்குள் புகுந்து, அங்குள்ள விற்பனைப் பொருள்கள் மீதெல்லாம் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். இவ்வளவு அக்கிரமங்கள், கொடுமைகள் அங்கே நடத்தப்பட்டிருக்கின்றன. அதேமாதிரி, பழனி, இன்னும் இப்படிப்பட்ட ஊர்களிலெல்லாம் அடக்கு முறைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

நெல்லை மாவட்டத்திலே, பணகுடி போலீஸ் ஸ்டேஷனிலே, ஆவரைக்குளம் என்னும் ஒரு கிராமத்திலிருந்து ஒரு வாலிபனை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போயிருக்கிறார்கள். அங்கே அடைத்து வைத்திருக்கிறார்கள். அந்த வாலிபன் இறந்துவிட்டான் என்று ஊர் மக்கள் சொல்லுகிறார்கள். அவன் ஓடிவிட்டான் என்று காவல் துறையினர் கூறுகின்றனர். இது சம்பந்தமாக அந்த ஊர் மக்கள் கேட்டபோது, ஒரு வாரம் தொடர்ந்து அந்த ஊரை போலீசார் ரெயிட் செய்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அடித்து, நொறுக்கி துன்பப்படுத்தியிருக்கிறார்கள். இப்படி போலீஸ் அடக்குமுறை எங்கும் தொடர்ந்து பயங்கரமாக நடந்து கொண்டிருக்கிறது. இதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கல்வி சம்பந்தமாக குறிப்பிட விரும்புகிறேன். கல்வி இலாகாவிலே ஒரு உத்திரவு போட்டிருக்கிறார்கள். அதாவது இன்றைக்கு பாடப் புத்தகங்களிலே பாடக் குறைப்பு என்று அரசாங்கம் 13 (ஏ), தேதி 5—4—1978 அன்று ஒரு ஜி. ஓ. போட்டிருக்கிறது. அதிலே, 6-வது வகுப்பிலே 8-வது பாடமாகிய பால கங்காதரர் பாடத்தை எடுத்திருக்கிறார்கள். அதேபோல், 8-வது வகுப்பிலே பகத் சிங் பாடத்தையும், 9-வது வகுப்பிலே வாஞ்சிநாதன், சித்தரஞ்சன் தாஸ் பாடங்களையும், அதேபோல், 10-வது வகுப்பில் சாமிநாத அய்யர் பாடத்தையும் எடுத்திருக்கிறார்கள். இன்னும் அதேபோல் ஜவஹர்லால் நேரு, மற்றும் சில பாடங்களையும் நீக்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட உத்திரவு கல்வி இலாகாவால் போடப்பட்டு, புத்தகங்களிலே பாடக் குறைப்பு செய்யப்பட்டிருக்கிறது. ஏன் ? இந்தமாதிரி சரித்திரப் பாடங்களை அவர்கள் படிக்கக் கூடாதா? அப்படிப் படித்தால் அவர்களுடைய வாழ்க்கை மோசமாகிவிடுமா ? சுதந்திரப் போராட்டங்களைப் பற்றி அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா ? இப்படிச் செய்தது கண்டிக்கத்தக்கது. எனவே, இந்தப் பாடங்களைச் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரியாக, நம்முடைய ஆளும் கட்சியினுடைய தலையீடு உள்ளது என்பதற்கு ஒரு சில விவரங்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். அவர்கள் தலையீடு அதிகமாக இருந்தாலும் கூட, நேரம் அதிகமில்லாத காரணத்தால், சுருக்கமாகவே சொல்கிறேன். இன்றைக்கு நம்முடைய மதுரை மாவட்டத்திலே,

[திரு. சோ. அழகர்சாமி] [1978 செப்டம்பர் 9

மயிலாடுதுறையிலே கங்கா நாயுடு குடும்பம் என்ற பழைய ஜமீன்
தார் குடும்ப நிலத்திலே சிலர் வசித்துக் கொண்டு வந்தார்கள்.
அவர்கள் எல்லாம் 1942-லே இருந்து வீடுகள் கட்டிக் கொண்டும்,
1956-லே பஞ்சாயத்து ஏற்பட்டபோது பஞ்சாயத்துத் தீர்வை
எல்லாம் செலுத்தியிருக்கிறார்கள். அந்த இடத்தை, இந்த
கங்கா நாயுடு குடும்பம் ஆளும் கட்சியைச் சேர்ந்த அரசியல்
பிரமுகர் ஒருவருக்கு விற்று, அவர் அந்த நிலத்திலே வீடு கட்டு
வதற்காக அந்த இடத்தைச் சுற்றியுள்ள மக்களை அங்கே குடி
யிருக்க விடாமலும், அந்த மக்கள் அங்கே தண்ணீர் எடுக்க
விடாமலும், பொது உபயோகத்திற்குப் பிரயோஜனப்படாமலும்
தடுக்கப்படுவதோடு மட்டுமல்லாமலும், போலீஸ் சப்-இன்ஸ்
பெக்டர் மற்றும் போலீஸ் அதிகாரிகளைக் கொண்டும், அவர்
களைத் துன்புறுத்துவதும், அவர்கள் மீதுபொய் கேஸ்கள் போடு
வதுமாக இருந்து வருகிறது. இதைத் தொடர்ந்து புகார்கள்
அரசாங்கத்திற்கு தொடர்ந்து அனுப்பப்பட்டிருக்கிறது. சம்பந்
தப்பட்டவர்கள் நேரடியாகவும் சொல்லியிருக்கிறார்கள். இருந்
தாலும், அங்கே எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல்
இருக்கிறது.

அதேமாதிரி, பல்லாவரத்திலே கல்லுடைக்கும் குவாரியிலே
எங்கள் கட்சியைச் சேர்ந்த ஏ. ஐ. டி. யு. சி. யைச் சேர்ந்த 1,000
பேர்கள் ஒரு சங்கம் வைத்திருந்தார்கள். அங்கே மற்றொரு
கூட்டுறவு சங்கமும் இருந்தது. அந்த இடத்தில் இரண்டு சங்கங்
கள் இருந்தால் ஒற்றுமை இல்லாமல் தகராறு ஏற்படும் என்ற
காரணத்தைச் சொல்லி அங்கே உள்ள உயர்மட்ட அதிகாரிகள்
நேரே சென்று ஒரே சங்கமாக அமைக்கப்பட்டது. ஆனால், இன்
றைக்கு ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்தச் சங்கத்தில்
தங்களுக்குள்ள செல்வாக்கு காரணமாக. எங்கள் சங்கத்தைச்
சேர்ந்த ஏ. ஐ. டி. யு. சி. யைச் சேர்ந்தவர்களைச் சேர்க்காமல்
அதனால் அவர்களுக்கு வேலை கிடைக்காமல் இருக்கின்றார்கள்.
தவிர, அவர்கள் இன்னொரு கண்ட்ராக்டருக்குச் சொந்தமான
இடத்தையும் ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். இது
சம்பந்தமாக கலெக்டர் அவர்கள், அங்குள்ள தாசில்தார் அவர்
கள், இன்னும் மற்றுமுள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்
கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய உத்திரவுகளுக்கெல்லாம்
அத்துமீறி, எதிராக நடவடிக்கைகள் நடந்து கொண்டு வருகின்
றன.

[முற்பகல் 11-20]

அதிலே அத்துமீறி கல் எடுத்ததற்காக 30,000 ரூபாய்க்கு
மேல் அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத்தைக் கட்டவில்லை.
மேலும் அந்தக் காரியம் நடந்து வருகிறது. கலெக்டர் முயற்
சித்தும், போலீஸ் இலாகா தலையிட்டும் ஒன்றும் செய்ய முடிய
வில்லை. எவ்வளவு மோசமான தலையீடு? ஆயிரம் தொழிலாளர்

1978 செப்டம்பர் 9] [திரு. சோ. அழகர்சாமி]

கள், கல் உடைக்கும் தொழிலாளர்கள் பட்டினி கிடக்கும் பரிதாப
நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தலையீட்டைப் போக்க உடன
டியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் பெயரைச் சொல்ல
வில்லை. பெயர் சொன்னால் பிரச்சினை வரும். அமைச்சர் கேட்
டால் தனியாகப் பெயரைச் சொல்லுகிறேன். அதுபற்றி முதல்
அமைச்சர் அவர்களிடம் மனு கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கொடுக்கப்பட்ட
மனுவின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : அடுத்து, நாம் எல்லாம் மிகவும்
கவலைப்படக்கூடியது விழுப்புரத்தில் நடைபெற்ற சாதிக் கலவரம்
சாதிச் சண்டை பல நாட்களாகப் புகைந்து கொண்டிருந்திருக்
கிறது. சமூக விரோதிகளால் கலவரம் ஏற்பட்டது என்பதெல்
லாம் யாரும் ஒப்புக்கொள்ள முடியாதது. பொதுவாக ஹரி
ஜனங்கள் வசிக்கும் பகுதிகள் ஒதுக்குப்புறமாகவே இருக்கின்றன.
ஆனால், அங்கே ஊரின் நடுப்புறமாக அவர்கள் வசிக்கும் பகுதி
அமைந்து விட்டது. அந்த இடத்தை விட்டு அவர்களை வெளி
யேற்ற வேண்டுமென்ற முயற்சிகள் நாளாவட்டத்தில் நடை—
பெற்று வந்திருக்கின்றன. அது குமுறி இப்படி பயங்கரமான
கலவரமாக வெடித்துவிட்டது. 12 அரிசன மக்கள் கொல்லப்
பட்டார்கள். அதற்கு ஒரு அனுதாபம், நாட்டில் இரக்க
வுணர்ச்சி ஏற்பட வேண்டாமா? அதைத் தொடர்ந்து தமிழகம்
பூராவும் சாதிப் பிரச்சினைகள் கிளப்பி விடப்பட்டு பெரிய கொந்
தளிப்பான நிலைமைகள் ஏற்பட்டு வருகின்றன. இந்த நிலைமை
யைத் தடுக்க சர்வ கட்சிக் குழுக்களை அமைத்து நடவடிக்கை
எடுக்க முயற்சி செய்திருக்கிறீர்களா ?

இந்த சாதிக் கலவரங்கள் ஆரம்பத்தில் வட நாட்டில் நடந்து
வந்தன. அரிசனங்கள் மீது நடந்த தாக்குதல்கள் பற்றி பாராளு
மன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. 1977 ஏப்ரல் முதல் ஒரு
வருஷகாலத்தில் 17,750 பேர் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.
இ. பி. கோ. பிரிவில் 7,000 குற்ற வழக்குகள் போடப்பட்டிருக்
கின்றன. 223 கொலைகள், 733 வன்முறைச் செயல்கள், 240
கற்பழிப்புக்கள், 530 தீவைப்புக்கள் நடந்திருக்கின்றன. வட
நாட்டில் நடந்தது தற்போது தமிழ்நாட்டில் தீ போல் பரவிக்
கொண்டிருக்கிறது. இதைத் தடுக்க முயற்சி செய்திருக்கிறீர்களா?
சர்வ கட்சிக் குழுக்கள் அமைத்திருக்கிறீர்களா? ஆரம்ப காலத்
திலேயே, சிறு பொறியாகத் தோன்றுகிற காலத்திலேயே
அரசாங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தால் இத்தகைய
கலவரம் ஏற்படாமல் தடுத்து நிறுத்தியிருக்க முடியும். இந்த

மாதிரிக் கலவரங்கள் பின்னணியில் செல்வாக்குள்ள பெரிய மனி தர்கள் சிலர் இல்லாமல் நடந்திருக்காது. அரசியல் செல்வாக்கு உள்ளவர்கள், பணபலம் உள்ளவர்கள், இயக்கிவிடும் காரண மாகத்தான்இந்தமாதிரிக் கலவரங்கள், கொலைகள் நடக்கின்றன. அதிலே இறந்தவர்கள்., பாதிக்கப்பட்டவர்கள் யார்? ஏழை எளிய மக்கள்தான். உழைக்கக்கூடிய மக்கள்தான், உயிரிழந் திருக்கிறார்கள், உடைமைகளை இழந்திருக்கிறார்கள்.

சாதி உணர்வைத் தூண்டிவிடுகிற அமைப்புகள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது. சாதி உணர்வுகளைத் தூண்டக்கூடிய அமைப்புகளை நொறுக்கித் தள்ள என்ன முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. சாதி உணர்வைத் தூண்டுகின்ற பல அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் மீதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

விழுப்புரம் சம்பவத்தைப் பொறுத்து பாராளுமன்றக்குழு அங்கு சென்று பார்த்தால் என்ன? அதிலே என்ன தவறு? அவர்கள் வரவே கூடாது என்று ஏன் சொல்ல வேண்டும். அதிலே எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் தானே இருக்கிறார்கள். அவர்கள் அந்த இடத்தில் சென்று பார்த்து நல்ல ஆலோசனைகளைச் சொல்லியிருக்க முடியும். அவர்கள் வரக் கூடாது என்று சொன்ன முறையை நான் கண்டிக்கிறேன். அது சரியல்ல.

அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு, வீடிழந்தவர்களுக்கு உடனடியாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும். அர சாங்கத்தில் கடன் வாங்கி 100, 150 பேர் சைக்கிள் ரிக்ஷா வாங்கி அவற்றை இழந்துவிட்டார்கள். அவர்களுக்கெல்லாம் புதிதாக சைக்கிள் ரிக்ஷா வாங்கிக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் குடியிருந்த இடங்களுக்குப் பட்டாக்கூடக் கொடுக்கவில்லை. உடனடியாகப் பட்டா கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். உடனடியாக பாதிக்கப் பட்டவர்களுக்கு அனைத்து நிவாரணமும் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி தொடர்ந்து பல இடங்களிலே செங்கல்பட்டு மாவட்டத்திலே செங்களுங்குப்பம் என்ற இடத்திலே கூலி உயர்வு கேட்டதற்காக போலீஸ் உதவியோடு அரிசனங்கள் துன்புறுத்தப் பட்டிருக்கிறார்கள். அதைப்போலவே கருப்பூர்தட்டிமால் என்ற பகுதியில் விவசாயிகள் சங்கம் அமைத்ததற்காக போலீஸ் உதவியோடு வழக்கு போடப்பட்டிருக்கிறது. அவர்கள் சாப்பாடு கூட இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படி உழைக்கின்ற மக்களுக்குத் தொடர்ந்து தொந்தரவுகள் கொடுக்கப் படுகின்றன.

அடுத்து விவசாயிகளின் பிரச்சினை, அவர்கள் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கிறார்கள், நேற்றுகூட திரு. மாரிமுத்து அவர்கள் பேசினார்கள், மற்றவர்களும் பேசினார்கள், தமிழ்நாடு பூராவும் மழை பெய்துவிட்டால் விவசாயிகள் கடன் வசதி யில்லாமல் பயிர் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. தனியார்கள் யாரும் கடன் கொடுப்பதற்கு தயாராக இல்லை கூட்டுறவு வங்கிகளிலேயும் கொடுப்பதற்கு தயாராக இல்லை ஏற்கனவே கடன்களை செலுத்திவிட்டவர்களுக்குங்கூட இல்லை யென்று சொல்லுகிறார்கள், காரணம் பேங்க் ஓவர் ட்யூ, ரிசர்வ் பாங்கிற்கு அவர்கள் கட்டவேண்டிய பணத்தை கட்ட வில்லை, ஆகவே கொடுக்கவில்லை. இன்றைக்கு ஒரு மழைபெய்து விட்டால் விவசாயிகள் விவசாயம் செய்யமுடியாது, உரம், விதை வாங்கமுடியாத பயங்கரமான நிலைமை இருக்கிறது. இது குறித்து பலவிதமான சங்கங்களும் போராடுகிறார்கள். கட்டியவர்களுக்கும் மேலும் கடன் கிடைக்கவில்லை. ஏற்கனவே 1,000 ரூபாய் கடன் வாங்கியவர்கள் 2,000 ரூபாய் வட்டி கட்டவேண்டிய நிலைமை இருக்கிறது. சட்டம் போடுகிறோம் ஆனால் அது பயனளிக்கவில்லை, ஆயிரத்துக்கு இரண்டாயிரம் வட்டி போடலாமா? 2 ஆயிரத்தை கட்டிவிட்டார்கள், 1 ஆயிரம் தான் பாக்கி. அதை கட்டவில்லை என்றால் கூட கடன் இல்லை யென்று சொல்லுகிறார்கள். இந்த கொடுமை கூட்டுறவுத் துறையிலே நடக்கக்கூடாது. 1968—69 இல் கொடுக்கப்பட்ட கடன் பாக்கியே இருக்கிறது, வட்டி இரண்டு பங்காகிக் கொண்டிருக்கிறது, ஆகவே வட்டியை தள்ளுங்கள், கட்டமுடியாத வர்களுக்காவது கடனை தள்ளுங்கள். புதிய கடன்களைக் கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள், 12% 13% என்று வட்டி கொடுக்க முடியாது ரிசர்வ் பாங்க் 6%க்கு கொடுத்தால் கமிஷன் என்ற முறை யிலே 3 சதவீதம் வைத்துக்கொள்ளுங்கள் அதற்கு மேலே வட்டி வாங்கக் கூடாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு கடன்களை கொடுக்க வேண்டும் அப்போதுதான் விவசாயிகள் விவசாயம் செய்யமுடியும். அப்படியில்லையென்றால் எதிர்காலத்திலே பயங்கரமான பஞ்சம் ஏற்படும், விலைகள் ஏறும்.

அடுத்து உற்பத்திப் பொருட்களுக்கு விலை கொடுக்கவேண்டு மென்று எல்லோரும் கேட்கிறார்கள், ஆனால் கவர்னர் உரை யிலே தனி இயக்குநர் அலுவலகம் திறக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள், திறந்துவிட்டால் விலை கிடைக்குமா? கேரளத்திலே கொடுக்கிறார்கள, எப்படி கொடுக்கிறார்கள்? அவர்களும் மாநில அரசு தானே, அந்த மாநில அரசு கொடுக்கிறபோது நீங்கள் கொடுக்கக்கூடாதா? அவர்களுக்கு அதிகாரமிருக்கிறபோது அந்த அதிகாரம் உங்களுக்கு இல்லையா? அதேமாதிரி வேலையில்லாதவர்களுக்கு கேரளத்திலே பஞ்சாபிலே, வங்கத்திலே உதவித் தொகை கொடுக்கிறார்கள், நீங்கள் கொடுக்கவில்லை, மாதம் ஒன்றுக்கு 40, 50 ரூபாய் என்று

[திரு. சோ. அழகர்சாமி] [1978 செப்டம்பர் 9

வேலையில்லாதவர்களுக்கு நீங்கள் கொடுக்கக்கூடாதா? மத்திய
அரசாங்கத்தோடு வேண்டுமானால் சண்டை போட்டு
வாங்குங்கள், நாங்கள் உங்களோடு ஒத்துழைக்க தயாராக
இருக்கிறோம், மத்திய அரசாங்கத்தை எதிர்த்து நீங்கள்
போராடினால் நாங்கள் சேர்ந்து போராட்டம் நடத்த தயார்.
மற்ற மாநிலங்களிலே கொடுக்கக்கூடிய அளவிற்கு இங்கேயும்
நீங்கள் கொடுக்கவேண்டும். இந்த கவர்னர் உரையை பூராவும்
படித்துப் பார்த்தால் உங்களுக்கு ஆளுங்கட்சிக்கே மக்கள்
ஓட்டுப்போட்டு அனுப்பி நமக்கு நன்மைகள் செய்வார்கள்
என்று உங்களை அனுப்பியவர்களுக்கு உங்களை நம்பிய மக்களுக்கே
மிகப் பெரிய ஏமாற்றமாக இருக்கும். தொழில் எதுவும்
இல்லையென்றால் கதர் நூற்க வேண்டுமென்றும் பட்டுப்பூச்சி
வளர்க்க வேண்டுமென்றும் சொல்கிற நிலைமை இருக்கிறது.
வேலை கிடைக்கவில்லை. வாத்தியார் வேலைக்குப் படித்துவிட்டு
வேலை கேட்டால் 5 ஆயிரம் ரூபாய் கொடுத்துவிட்டு வாங்கிக்
கொண்டு போய்விடுகிறான், சீனியாரிட்டி அடிப்படையில் வேலை
கிடைக்கவில்லை.

அடுத்து வீட்டுமனைகள் அரிசனங்களுக்குக் கொடுக்கப்படவில்லை
அங்கே கேட்டால் 4 தாலுக்காக்களுக்கு 1 தாசில்தார் 2
ரெவின்யூ இன்ஸ்பெக்டர் தான், ஜீப் கிடையாது, பஸ்ஸிலே
தான் போக வேண்டும், இப்படி இருந்தால் நாங்கள் எப்படி
சீக்கிரம் கொடுக்கமுடியும் என்று சொல்கிறார்கள். நாம்
சட்டம் போட்டிருக்கிறோம், வீட்டு மனைகள் இல்லாதவர்களுக்கு
2 ஆண்டுகளிலே 3 ஆண்டுகளிலே அல்லது உங்கள் ஆட்சி முடிகிற
5 ஆண்டுகளுக்குள்ளே அரிசனங்களுக்கும் அரிசனங்கள் அல்லாதவர்
களுக்கும் வீட்டுமனை இல்லாதவர்களுக்கும் எல்லாம் வீட்டு
மனை கொடுக்கப்படும் என்று நீங்கள் உத்தரவைப் போடலாம்.
அதற்காக சர்வக் கட்சி கமிட்டிகள் ஆங்காங்கே போடப்பட
வேண்டும். எங்கள் பகுதியிலே எட்டயபுரத்திலே உச்ச வரம்பு
சட்டப்படி 2 ஆயிரம் ஏக்கர் எடுத்திருக்கிறார்கள். அங்கே
2 சர்வே நம்பர்கள்தான் அளந்து பிரித்து கொடுத்திருக்கிறார்கள்,
இன்னும் 4 சர்வே நம்பர்கள் இன்னும் அளக்கவில்லை.

[முற்பகல் 11-30]

ஒரு சர்வே நம்பரில் 600 ஏக்கர் 700 ஏக்கர் இருக்கிறது,
ஆளுக்கு இரண்டு ஏக்கர் பட்டா என்று வந்திருக்கிறது. ஆனால்
எந்த இடத்திலே நிலம் இருக்கிறது என்று தெரியவில்லை.
மூன்னால் ரெவின்யூ அமைச்சரவர்கள் உத்தரவிட்டு இரண்டு
நம்பர்களில் பிரித்து கொடுத்தாகிவிட்டது. இன்னும் 4 நம்பர்
களில் பிரித்து கொடுக்கப்படவில்லை, நிலம் எங்கே இருக்கிறது
என்று தெரியவில்லை. எனவே, சர்வ கட்சி குழு போட்டு
எந்த ஊரிலே யார் யாருக்கு நிலம் இல்லை, ச்உசவரம்புச்

1978 செப்டம்பர் 9] [திரு. சோ. அழகர்சாமி]

சட்டத்தின் கீழ் எவ்வளவு மிச்சம் இருக்கிறது என்று
ஆலோசனை செய்யுங்கள். கேரளாவிலேயும், பெங்காலி
லேயும் அப்படிப் போட்டிருக்கிறார்கள். அதற்கு இங்கே ஏன்
தயக்கம் என்று கேட்க விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்லாமல், விலை நிர்ணயத்தை எடுத்துக்
கொண்டால், 400 ரூபாய் விலையுள்ள பருத்தியை 150
ரூபாய்க்குக் கொடுத்தால் வாங்குவதற்கு ஆள் இல்லை.
மகாராஷ்டிரத்திலே கேட்டார்கள், பெடரேஷன் மூலமாகத் திட்ட
மிட்டு கூட்டுறவு மூலம் செய்வதற்கு யோசனை செய்து கொண்டி
ருக்கிறார்கள். இங்கேயும் ஏன் அப்படி செய்யக்கூடாது.
எனவே விலை நிர்ணயத்திற்கு தனிக்கமிஷன் அதற்கு நியமிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாநிலத்திற்கு விளை
பொருள் விலை நிர்ணயக் கமிஷன் நியமித்து, சரியான விலை
கிடைக்க உத்தரவாதம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். விவசாயிகளுக்கு உள்ள நெருக்கடியின் காரண
மாக அவர்கள் தங்கள் கடனை திருப்பி கொடுக்க வேண்டு
மென்று விரும்பினாலும்கூட கட்ட முடியாத நிலை இருக்கிறது.
இந்த விஷயத்தில் காலாகாலத்திலே சரியாக அணுகவில்லை
என்றால் எரிமலையாக வெடிக்கும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.
விவசாயிகள் பிரச்சினையானாலும் ஆசிரியர்கள் பிரச்சினையானாலும்
தொழிலாளர்கள் பிரச்சினையானாலும் ஏழை எளிய மக்களின்
பிரச்சினைகளிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கூறிக்
கொண்டு அதுபற்றி இதில் ஒன்றும் கூறப்படவில்லை என்பது
எனக்கு மட்டும் ஏமாற்றத்தை அளிக்கவில்லை, உங்களுக்கு
வாக்களித்த மக்களுக்கும் ஏமாற்றத்தை அளிக்கிறது என்று கூறி
முடித்துக்கொள்கிறேன்.

தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின்
*திரு. ஜே. ஜேம்ஸ்: இங்கே வந்திருக்கிற
உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் சிலகருத்துக்களைக்
தீர்மானத்தின் மீது ஜனதா கட்சியின் சார்பில் இந்திரா
கூற விரும்புகிறேன். நேற்றைய தினம் உரையாற்றிய மதிப்பிற்
காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்னுடைய பெரும் இங்கே
குரிய மாரிமுத்து அவர்கள் சில அரசியல் விமரிசனங்களை கூறக்
முன் வைத்தார்கள். நான் அரசியலை அவருக்கு எடுத்துக் என்றாலும்
கூடிய அளவிற்கு அறிவும் ஆற்றலும் பெற்றிருக்கவில்லை புரிந்துகொள்வார்கள்
சில விளக்கங்களைக் கூறினால் அவர்கள் சிலவற்றைக்
என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்பதால்
கூற விரும்புகிறேன்.

கழகத்
ஏதோ ஆளுகின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் முறித்துக்கொண்டதாக
தோடு அவர்களுக்கு இருந்த உறவை வைத்துக்
இங்கே அறிவித்தார்கள். அவர்கள் அவர்களோடு உறவு முறித்துக்
கொள்கிறார்களா அல்லது அவர்களோடு உறவை

கொள்கிறார்களா என்பதைப்பற்றி எனக்கோ, ஜனதா கட்சிக்கோ அக்கறை இல்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் அதற்கு அவர்கள் அளித்த காரணத்தை எண்ணும் பொழுது சற்று வியப்பாகவும், வருத்தமாகவும் இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

தமிழ்நாட்டில் ஆளும் பொறுப்பேற்றிருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்தியில் ஆளும் ஜனதா அரசோடு நெருங்கி விட்டது என்ற காரணத்தைக் கூறி, ஆகவே எங்கள் உறவை முறித்து விட்டோம் என்று கூறுகிறபொழுது அது பொருத்தமாக இல்லை என்பதை நான் கூற விரும்புகிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மத்தியில் இருக்கிற அரசோடு மோதிக் கொள்ள வேண்டும், அதனால் இந்த மாநிலத்திற்கும் மாநில மக்களுக்கும் ஏற்படக்கூடிய பல நன்மைகள் வரக் கூடாது என்ற எண்ணத்தோடு அவர்கள் அதனைச் சொல்லியிருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இன்னொன்றைக் கூறினார்கள். மத்தியில் இருக்கும் ஜனதா அரசுக்கு இந்த அரசு ஆதரவு காட்டுகிறது, ஆகவே எங்கள் உறவை முறித்துக் கொள்ளுகிறோம் என்றும் சொன்னார்கள். சாதாரணமாக, ஒருவரோடு வாழ்க்கை நடத்தப் பழக்கம் இல்லாத சில பெண்கள், கோர்ட்டில் அவர்கள வாழ்க்கை ஒப்பந்தத்தை ரத்து செய்யக் கோரி மனுத்தாக்கல் செய்யும்பொழுது, ஏற்கனவே அவர்கள் வேறு ஒருவரோடு கள்ளக் காதல் கொண்டிருந்தாலும், அதைச் சொல்லாமல் வேறுபல காரணங்களைக் கூறுவதுபோல இங்கே தலைவர் மாரிமுத்து அவர்கள் எங்கோயோ காதல் கொண்டிருக்கிறார்கள், எங்கேயோ உறவு வைக்கப் போகிறார்கள், அவற்றைக் கூறி உண்மையிலேயே உறவை முறித்திருந்தால் நாடு பாராட்டியிருக்கும். அதற்கு மாறாக பழியை எங்கள் மீது சுமத்துவது நிச்சயமாக உகந்தது அல்ல என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் அவருடைய தலைவி இந்திரா காந்தி அம்மையார் ஆட்சியிலிருந்த பொழுது இந்த நாட்டில் எந்தவிதமான விளம்பரம் செய்தார்கள் என்பதை நிச்சயமாக இந்த மாமன்றம் மறந்திருக்க முடியாது. அவர்களுடைய கோஷம் இந்திராவைக் காப்போம் என்று மட்டுமே இருந்ததே தவிர, அதற்குப் பதிலாக பெருந் தலைவர் காமராஜ் அவர்கள், இந்தியாவைக் காப்போம், ஜனநாயகத்தைக் காப்போம் என்று அறைகூவிக் கொண்டிருந்தபொழுது இந்த நாட்டில் என்னென்ன காரியங்கள் நிகழ்ந்தன என்பதை நிச்சயமாக இந்த மாமன்றம் மறந்திருக்காது. ஆக, பெரு[illegible] தலைவர் காமராஜ் அவர்கள் வழியில் நின்று மக்களைக் கா[illegible] [illegible], இந்தியாவைக் காப்போம், ஜனநாயகத்தைக் கா[illegible]

போம் என்று இந்த அரசு கூறுகின்ற காரணத்திற்காக மட்டும் தமிழ் நாடு அரசைப் பகைத்து இவர்கள் தங்கள் உறவை முறித்துக்கொள்வது நிச்சயமாகப் பொருத்தம் அல்ல என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, ஜனதா கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்ற பொழுது காங்கிரஸ் கட்சி ஏதோ கள்ளக் காதல் வைத்திருப்பதாகச் சொன்னார்கள். அவரும் காங்கிரஸ் கட்சியிலே இருந்தவர் தான். அந்தத் தவறான செய்கை நிச்சயமாக இராது என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். இந்தக் குற்றச்சாட்டு மிகத் தவறானது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அதனைக் காலம் தெளிவுபடுத்தும் என்பதை இந்த மாமன்றத்திற்குக் கூறிக் கொள்வேன். நாம் பொறுத்திருந்து அதைப் பார்ப்போம்.

அடுத்து, இந்த அரசு மத்திய அரசோடு நல்லுறவைக் கொண்டிருக்கிறது. அதற்காக உண்மையிலேயே நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதே வேளையில், உறவுக்காக கரத்தைக் கொடுக்கின்றபொழுது, உரிமைக்காக குரல் எழுப்புவதையும் நாம் பார்க்கிறோம். பல்வேறு கோரிக்கைகளை மத்திய அரசிடம் வைத்து வாதாடி, அவற்றை மத்திய அரசு ஏற்று வருகின்ற சூழ்நிலையையும் நாம் இங்கே பார்த்து வருகிறோம். ஆனால், மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவருக்கு ஒன்றை நான் நினைவூட்ட விரும்புகிறேன். தமிழ்நாட்டில் இதற்கு முன்னதாக ஆட்சி நடத்திய திராவிட முன்னேற்றக் கழக அரசு, அன்றிருந்த மத்திய அரசாங்கம் கொண்டு வந்த, இந்திரா காந்தி அம்மையாருடைய 20 அம்ச திட்டத்தையும் சஞ்சய் காந்தியினுடைய 5 அம்சத் திட்டத்தையும் நெருக்கடி நிலையையும் ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றவில்லையென்ற ஒரே காரணத்திற்காக, அந்த அரசு கவிழ்க்கப்பட்டது என்பதை நிச்சயமாக நீங்கள் மறந்திருக்க முடியுமா ?

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நண்பர் ஜேம்ஸ் அவர்கள் ஒரு தவறானத் தகவலைத் தருகிறார். திராவிட முன்னேற்றக் கழகம் இந்திரா காந்தி அம்மையார் கொண்டு வந்த அவசரநிலைப் பிரகடனத்தை எதிர்த்துத்தான் தீர்மானம் நிறைவேற்றியது. 20 அம்சத் திட்டமும் 5 அம்சத் திட்டமும் ஏற்கனவே கழக அரசால் இங்கே நடைமுறைப்படுத்தப்பட்டு, அமுல் நடத்தப்படுகிறது என்றுதான் நாங்கள் வாதாடினோமே தவிர, எதிர்க்கவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : எதிர்த்ததாக நான் சொல்லவில்லை]
அம்மையார் அவர்கள் விரும்பியபடி நெருக்கடி நிலையை ஆதரிக்காத காரணத்திற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு கவிழ்க்கப்பட்டது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். ஒரு வேளை, இப்போதாவது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எனது மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சித் தலைவர் மாரிமுத்து அவர்கள் இன்னும் ஒன்று கூறினார்கள். மத்தியிலிருக்கிற தலைவர்கள் எல்லாம் மாறி, மாறி குற்றச்சாட்டுக்களைக் கூறுகிறார்கள் ; ஆகவே, ஜனதா கட்சி அழிந்து விட்டது என்ற அளவுக்கு அவர்கள் மனப்பாலைக் குடிக்கிறார்கள். நிச்சயமாக அவர்கள் ஏமாற்றம் அடைந்து விடுவார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்பொழுது குற்றச்சாட்டைக் கூறுகிறார்கள், கருத்துக்களை எடுத்துக் கூறுகிறார்கள். ஆனால், அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் கட்சியிலே கருத்துக் கூறக்கூட உரிமையில்லை. பாராளுமன்றத்தில் நடக்கிற நடவடிக்கைகள்கூட பத்திரிகைகளில் வரமுடியாத சூழ்நிலைகள் எல்லாம் இருந்தன. தன்னோடு அமைச்சராக இருந்தவர், கருத்துக்களைச் சொன்னார்கள் என்ற காரணத்திற்காக சிறையிலே அடைக்கப்பட்டார்கள் என்ற நிகழ்ச்சியைக் கூட நம்முடைய மாண்புமிகு மாரிமுத்து அவர்கள் நிச்சயமாக மறந்திருக்க மாட்டார்கள்.

(முற்பகல் 11.40.)

ஆனால் இன்றையதினம் நிலைமை மாறிவிட்டது. ஜனநாயகத்தை மீட்டுத் மீண்டும் தந்திருக்கிறோம். பேச்சுரிமை இருக்கிறது, பத்திரிகை உரிமை இருக்கிறது. கருத்துக்களை வெளியிடுகிறார்கள், அது பத்திரிகையிலே வருகிறது. ஆனால் நீங்கள் நினைக்கிறபடி ஜனதா அரசு நிச்சயமாக அழிந்து விடாது. அதைக் கவிழ்க்க முடியாது. இவர்கள் ஏன் மக்கள் அவையில் கொண்டு வந்த தீர்மானத்தை வாபஸ் வாங்கினார்கள் என்பதைக் கொஞ்சம் எண்ணிப்பார்க்கட்டும். கட்சியில் கட்டுப்பாடு இருக்கிறது. கட்சி உடையவில்லை. அந்தத் தீர்மானம் தோற்கடிக்கப்படும் என்றுதான் அந்தத் தீர்மானத்தை வாபஸ் வாங்கினார்கள் என்று நினைக்கிறபோது கட்சி பலவீனமாக இல்லை என்பதை உணர்வார்கள். வருகிற பல ஆண்டுகளிலும் ஜனதா கட்சிதான் இந்த நாட்டை ஆளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு இன்னும் கூறிக் கொண்டிருக்கிறார்கள். பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்களை கூறிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒன்றைச் சிந்திக்க வேண்டும். நமது தேசத்தின்

கூறினார்கள். அதாவது
பிரதமர் தேசாய் அவர்கள் ஒன்றைக் கூறினால், உயர் நீதிமன்ற
குறிப்பிட்டக் குற்றச்சாட்டைக் கூறினால், உயர் நீதிமன்ற
நீதிபதியை வைத்து விசாரணை செய்கிறேன் என்று அவர்கள்
விளக்கம் கொடுத்தார்கள் என்று சொன்னால் அவர்களைப்
பொறுத்தவரையில் நீதிமன்றத்தை மதிக்கிறவர்கள். இந்திரா
காந்தி அம்மையார் ஆட்சிகாலத்தில் இருந்ததைப் போல
Committed Judiciary அல்ல இப்போது இருப்பது. அதுமட்டு
மல்ல தனது தேர்தல் செல்லவேண்டும் என்பதற்காக கான்ஸ்டி
டூஷனையே மாற்றக்கூடிய அளவுக்கு சூழ்நிலை இப்போது இல்லை
என்று அருமை மாரிமுத்து அவர்கள் நன்றாக அறிவார்கள்.

அதுமட்டுமல்ல. திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் கூறிய
தையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்பு
கிறேன். யார் அவர் மீது ஊழல் குற்றச்சாட்டினைக் கூறி
னார்களோ, அவர்களையே கமிஷனைப் போட்டு அவர்கள்
முன்னாலேயே நான் விசாரணைக்குத் தயாராக இருக்கிறேன்
என்று கூறுகிற அளவுக்கு களங்கமற்ற ஊழலற்ற ஆட்சி நடக்
கிறது என்று பொருள். ஆனால் இந்த மாநிலத்தைப் பொறுத்த
வரையில் காங்கிரஸ்தான் டிசைடிங் பேக்டர் என்று சொல்
வது நிச்சயமாக உண்மையில்லை. உங்களைப் பற்றி இந்த
நாட்டு மக்கள் நன்றாக அறிந்து வைத்திருக்கிறார்கள். இந்திரா
காந்தி இங்கே ஆட்சி செய்யாத காரணத்தினால் நெருக்கடி நிலை
யின் பாதிப்பு பெரும் அளவுக்கு இல்லாமல் இருந்தது. ஆனால்
இந்த மாநிலத்தைத் தவிர மற்ற மாநிலங்களில் இந்திரா காந்தி
ஆட்சி நடைபெற்றது. அப்போது எந்த அளவுக்கு ஊழல்
தாண்டவம் ஆடியது, சர்வாதிகாரம் நடைபெற்றது என்பதைப்
பற்றி நாட்டு மக்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள். யாருடன்
கூட்டு சேர்ந்தாலும் நிச்சயமாக இந்திரா காங்கிரஸ் மீண்டும்
ஆட்சிக்கு வராது என்பதை நான் அழுத்தமாகக் கூறிக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு
ஜனதா கட்சி தலைவர் அவர்கள் கவர்னர் உரைக்குப் பதில்
சொல்லுவதைவிட்டு என்னுடைய உரைக்குப் பதில் சொல்லிக்
கொண்டிருக்கிறார், கடந்த 15 நிமிடமாக.

திரு. ஜே. ஜேம்ஸ் : எனக்கு உங்கள் பேரில் அவ்வளவு
பிடித்தம். அடுத்து ஆளுநர் உரையில் பல்வேறு கருத்துக்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்குள்ள கவலை,
கொடுத்த நேரத்தில் உரையை முடித்துக் கொள்வார்களா
என்பதுதான்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நீங்கள் நேற்றைய தினம் சொன்ன வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள் என்று நான் எண்ணுகிறேன்.

திரு. ரா. உமாநாத் : என்ன ஒப்பந்தம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கூடுதலாக 5 நிமிடம் வேண்டுமானால் அனுமதிக்கிறேன் என்று சொன்னேன். அவர் அதைவிட்டு மேலேபோகக் கூடாது என்பதுதான் பொருள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நாட்டில் ஏற்பட்டுள்ள வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை ஒழிப்பு ஆகிய பல முக்கியமான பிரச் சினைகளைத் தீர்ப்பதற்கு, ஆளுநர் உரையில் பல திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதை வரவேற்கக் கடமைப்பட் டிருக்கிறேன். அத்தோடு விலைவாசி, இந்த நாட்டில் பல்வேறு அத்தியாவசியமான பண்டங்கள் மீதான விலைவாசிகள் கட்டுப் படுத்தப்பட்டு, ஏழை எளிய மக்கள் வாங்கக்கூடிய அளவு பொருள்கள் கிடைக்கின்றன என்று சொன்னால், மத்தியிலே உள்ள ஜனதா அரசும், மாநிலத்திலே உள்ள ஏ.ஐ.எ.டி.எம்.கே. அரசும் பல்வேறு திட்டங்களை போட்டிருப்பதன் காரணமாக, மத்திய மாநில அரசுகளைப் பாராட்டுவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்கிறேன்.

நிர்வாகத்தில் ஊழல் அற்ற ஒரு நிர்வாகம் இருக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் அவர்கள் விரும்புவது நிச்சய மாக வரவேற்கத்தக்கது. ஆனால் எந்த அளவிற்கு முதலமைச்சர் விரும்புகிறாரோ அந்த அளவு நிர்வாகத்தில் ஊழல் இல்லாமல் இருக்கிறதா என்பதை ஒரு கணம் சிந்திக்க வேண்டும் என்று இந்த அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன். ஊழல் என்பது நேற்றைக்கோ இன்றைக்கோ வந்தது அல்ல. இருந் தாலும், ஊழல் அற்ற நிர்வாகத்தை அமைக்க வேண்டும் என்று முதலமைச்சர் எண்ணினாலும் நாட்டிலிருந்து ஊழல் ஒழியவில்லை. ஆகவே, இன்னும் ஆங்காங்கு காணப்படும் ஊழல்கள் நிச்சயமாக அகற்றப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வேலை வாய்ப்புக்களுக்காக பல்வேறு திட்டங்கள் ஆளுநர் உரையில் காணப்படுகின்றன. ஆனால், ஆளுநர் உரையில் எடுத்துக் காட்டப்பட்டு இருக்கும் புள்ளி விவரங்களைப் பார்க்கிறபோது பல லட்சம் ஏழைகளுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆளுநர் உரை 6 மாதம் கழிந்து வந்து இருக்கிறது. நிதிநிலை அறிக்கை வழங்கப்பட்டு 6 மாதம் கழிந்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்த 6 மாத காலத்தில் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு, தொழில் வாய்ப்பு

கிடைத்து இருக்கிறது என்ற விவரம் கொடுத்து இருந்தால், உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருந்து இருக்கும். ஆனால், இந்த அரசு தந்து இருக்கும் புள்ளி விவரங்கள் ஏமாற்றம் தரக்கூடிய தாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே ஆளுநர் உரையில் எடுத்துக் காட்டியிருக்கிற அள விற்கு நிச்சயமாக வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. வேலை இல்லாத் திண்டாட்டம் பெரும் அளவிற்கு இருக்கிறது என் பதை நாம் இன்னும் இங்கே காண்கிறோம். வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு மத்திய அரசு கொண்டு வந்த திட்டத்தின்கீழ் 8 மாவட்டங்களில் டிஸ்டிரிக்ட் இன்டஸ்டிரியல் சென்டர் ஆரம்பித்து இருக்கிறீர்கள். அது எந்த அளவில் இருக்கிறது என்றால்ஏற்கனவேஇருந்த காரியாலயங்கள், ஆபீஸ்கள் ஏற்கனவே இருந்த அசிஸ்டென்ட் டைரக்டர் ஆப் இண்டஸ்டீரிஸ் என்ற போர்டுக்கு பதிலாக, மாவட்ட தொழில் மைய அலுவலகம் என்று மாற்றப்பட்டு இருக்கிறதே தவிர, 6 மாதம் ஆகியும் எந்த விதமான திட்டமும் செயல் படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், மத்திய அரசு திட்டங்கள் கொண்டு வந்து இருக்கிற போது, மாநில அரசு அதை நிறை வேற்ற உடனடியாக மாவட்ட மைய தொழிற் கூடங்கள் நல்ல வகையில் செயல்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காவிரி நீர் சம்பந்தமாக இந்த அரசு எவ்வளவு முனைப்பாக உண்மையிலேயே செயல்படுகிறது என்பதை எண்ணுகிறபோது, இது வரையிலும் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். எந்த அரசும் எண்ணிப் பார்க்காத, வறட்சி மிகுந்த தென் மாவட்டங்களுக்கு தண்ணீர் வரவேண்டும் என்பதற்காக இந்த அரசு அந்தப் பிரச்சினையில் முழு கவனம் செலுத்தி வருகிறது என்பதற்காக நான் பாராட்டுகிறேன். கருநாடக மாநிலத் தோடு ஒரு ஒப்பந்தத்தை, இந்த நாட்டில் குடியரசு ஆட்சி இருந்த போது குடியரசுத் தலைவரின் பிரதிநிதியாக இந்த மாநிலத்தில் இருந்து வந்த கவர்னர் சுகாதியா அவர்கள் தமிழக மக்களுடைய நலனுக்கு எதிராக செய்து கொண்டுள்ளதாகக் கூறப்படும் ஒப்பந்தத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாமல், அது இந்த மாநில மக்கள் நலனுக்கு எதிராக இருக்கிறது, அது மக்களாட்சி இந்த மாநிலத்தில் இல்லாத போது நடைபெற்ற நிகழ்ச்சி என்று சொல்லி, ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்று எடுத்துள்ள நிலையை நான் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே' 1976-ம் ஆண்டு ஆளுநர் ஆட்சி காலத்தில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதாகச் சொல்லப்படுகிறதே தவிர, அன்று இருந்த

ஆளுநர் அவர்கள் அதில் கையெழுத்து இடவில்லை. அது ஒரு
உடன்பாடு என்கிற அளவில் பேசப்படுகிறதே தவிர, ஒப்பந்தம்
என்ற அளவில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் திருத்திக் கொள்கிறேன்.
இருந்தாலும்கூட, அந்த அளவிற்கு பொறுப்பில் இருந்தவர்கள்
மக்கள் நலனுக்கு பாதகமான விதத்தில் அன்றைக்கு நடந்து
கொண்டு இருந்து இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்
கொள்கிறேன். ஆகவே, இன்றைய தினம் கருநாடக மாநிலத்
திற்கு 100 டி.எம்.சி. தண்ணீர் நாம் கொடுக்கப் 'போகிறோம்
என்றால் அந்த மாநிலத்தில் டெவலப் செய்யப்படாத பகுதி
களுக்குத்தான் அவை பயன்படுத்தப்படப்போகிறது என்ற
அடிப்படையில் நாம் அதைக் கொடுக்கிறோம். ஆகவே அதைப்
போல் தமிழ் நாட்டில் டெவலப் செய்யப்படாது இருக்கின்ற
திருநெல்வேலி, இராமநாதபுரம், கோவை போன்ற மாவட்டங்
களில் டெவலப் செய்வதற்காக கேரள மாநிலத்தில் மேற்கு
நோக்கி பாயும் நதிகளில் இருந்து தண்ணீர் கடலில் வீணாகப்
போய் சேர்கிறதே அந்தத் தண்ணீரை, தமிழ் நாட்டில் உள்ள
வறட்சி பகுதிகளுக்குத் தர வேண்டும் என்ற கோரிக்கை மிக
நியாயமானது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்
கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

ஒரு வேளை கேரள அரசுக்குத் தேவையான அரிசியை நாம் அந்த
அடிப்படையில் கொடுத்தால் கூட அதில் தவறு இல்லை. எப்படி
யும் இந்த நியாயமான கோரிக்கைக்கு கேரளம் இசைவு தர
வேண்டும். இன்னும் பிடிவாதமாக தமிழ் நாட்டிற்குத் தண்ணீர்
கொடுக்க கேரளம் மறுப்பதாக இருந்தால், கேரளாவில்
மேற்கு நோக்கி பாயும் நதிகள் உற்பத்தியாகின்ற பிரதேசத்தில்
எல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்கள் ; நெய்யாற்றங்கரை,
பீரிமேடு, தேவிகுளம் போன்ற பகுதிகள் தமிழ்ப் பகுதிகளாகும்.
ஏற்கனவே அந்தப்பகுதிகளை தமிழ் நாட்டோடு சேர்க்க வேண்டு
மென்று போராட்டங்கள் எல்லாம் நடத்தினோம் ; பல்வேறு
காரணங்களால் அந்தப் பகுதிகள் கேரளத்தோடு சேர்ந்து
விட்டன ; அந்தப் பகுதிகளை மீண்டும் தமிழ் நாட்டோடு சேர்க்க
வேண்டுமென்ற கோரிக்கையை நாம் மீண்டும் வலியுறுத்த
வேண்டியதுதான். நெய்யாற்றங்கரை, தேவிகுளம், பீரிமேடு,
சித்தூர் போன்ற பகுதிகளை தமிழ் நாட்டோடு சேர்க்க வேண்டு
மென்ற கோரிக்கையை இந்த மாநில அரசு வலியுறுத்தவேண்டும்,
அதற்கு மக்கள் ஆதரவு தருவார்கள் என்பதை நான் இந்தச்
சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நெய்யார் இடதுகரை கால்வாய் தண்ணீர் சம்பந்தமாக கேரள அரசுக்கும் தமிழ் நாடு அரசுக்கும் ஏற்கெனவே ஒரு ஒப்பந்தம் இருக்கிறது. அந்த உடன்பாட்டின்படி 160 சி.எஃப்.டி. தண்ணீர் நமக்குக் கிடைக்க வேண்டும். ஆனால் இப்போது 60 சி.எப்.டி. தண்ணீர் தான் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, ஏற்கெனவே உள்ள உடன்பாட்டின்படி நமக்குத் தண்ணீர் கிடைக்கவேண்டுமென்று இந்த அரசு கேரள அரசை வற்புறுத்திப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர் சம்பந்தமாக கிட்டத்தட்ட 147 கோடி ரூபாய் செலவில் பல திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பதாக ஆளுநர் உரையில் கூறப்பட்டிருக்கிறது. இந்த நாடு சுதந்திரம் பெற்று ஏறத்தாழ 30 ஆண்டுகள் ஆகியும் பல்வேறு கிராமங்களுக்கு இன்னும் குடி தண்ணீர் இல்லை. எங்கள் மாவட்டத்தில் கிள்ளியூர், முஞ்சிறை, மேல்புறம், திருவட்டாறு, தக்கலை போன்ற வட்டாரங்களில் குடிதண்ணீர் கிடைக்காமல் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதைப் போலவே தமிழ் நாட்டில் பல்வேறு வட்டாரங்களிலும் இன்னும் குடிநீர் கிடைக்காமல் இருக்கிறது. இந்தப் பிரச்சனையை உடனடியாகத் தீர்க்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : குடிநீர் பிரச்சனை தீரவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அவர்களுடைய தொகுதிக்கு நான் சென்றிருந்த போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேரளத்திற்குச் சென்றுவிட்டார்கள். அங்குள்ள ஏதோ ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காகப் போய்விட்டு வந்தார்கள். அதன் பிறகு சில கிராமங்களுக்கு குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. டைப் 1 அண்டு 2 பகுதியைச் சேர்ந்த எந்த கிராமத்திற்காவது இன்னும் குடிநீர் வசதி இல்லை என்று அவர்கள் இங்கே எழுதிக் கொடுத்தால் கூட உடனடியாக அந்த கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் எழுதிக் கொடுக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் குடி தண்ணீர் வசதி இல்லாத கிராமங்கள் ஏராளம் இருக்கின்றன. பல கிராமங்களுக்குத் தண்ணீர் கிடைக்கின்ற வாய்ப்பே இல்லாமல் இருக்கிறது. அந்த நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று 'கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு அங்கே ஏற்கெனவே அமைத்திருக்கிற பல 'டியூப் வெல்ஸ்' இயங்காமல் பழுதடைந்துவிட்டன. சில டியூப் வெல்களில் கிடைக்கும் தண்ணீர் 'அயர்ன் கன்டன்ட்' உள்ளதாக இருக்கிறது. அதனால் அதைப் பயன்படுத்த முடியவில்லை.

ஆகவே, பழுதடைந்த டியூப் வெல்களை சீர் செய்தும், அயர்ன் கன்டன்ட் உள்ள தண்ணீரை மாற்றி, சுத்தமான தண்ணீர் கிடைக்கவும் தேவையான ஏற்பாடுகளை இந்த அரசு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கல்வி சம்பந்தமாக இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் ஒன்றைக் கூறினார்கள். புத்தகங்கள் நோட்டு புத்தகங்கள் தயாரிக்கின்ற காகிதம் மத்திய அரசிலிருந்து தேவையான நேரத்தில் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை ; ஆகவே, புத்தகங்கள் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டு விட்டது என்று சொன்னார்கள். அவர்கள் யார் மீது பழியைப் போட்டாலும் மாணவர்களுக்கு தக்க சமயத்தில் புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும் கிடைக்கச் செய்ய இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது. எதிர்காலத்திலாவது, பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் திறக்கப்பட்ட உடனேயே மாணவர்களுக்குத்தேவையான பாடப் புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் ஆசிரியர்கள் பிரச்சனை மிகவும் முக்கியமானது. கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், நேற்று கல்வி அமைச்சரவர்கள் இங்கே ஒரு அறிக்கையை வைத்தார்கள். பல்வேறு பிரச்சனைகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன. ஆனால், உயர் நிலைப் பள்ளிகளிலிருந்து பிரித்துவிடப்பட்ட ஆசிரியர்களுக்கும் கல்லூரிகளிலிருந்து பிரித்துவிடப்பட்ட ஆசிரியர்களுக்கும் பிரச்சனை தீர்வு காணப்படவில்லை. அந்த ஆசிரியர்களின் வேலைக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டியது இந்த அரசின் கடமை. அதற்கு உடனடியாக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 'எ' விங், பி' விங் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் பிரச்சனை நீண்டகாலமாக இருந்து கொண்டிருக்கிறது. இனி மேலும் இதில் காலம் தாழ்த்தக் கூடாது. அது சம்பந்தமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசிரியர்களும் உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சனையை அரசு கவனித்து, ஒரு நல்ல தீர்வு காண வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து மொழிப் பிரச்சினை. இந்த மொழி சம்பந்தமான பிரச்சினை தமிழகத்தில் ஒரு பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. அது இன்று நேற்றுள்ள பிரச்சினை அல்ல. ஆனால் இந்தி திணிப்பு என்று கூறுகிறபோது நிச்சயமாக அதை யாரும் ஆதரிக்கவில்லை. யார் மீதும் இந்தியை மட்டும் அல்ல, வேறு எந்த மொழியையும் கூட திணிக்க மாட்டோம் என்று

நம்முடைய தேசத்தின் பிரதமர் அவர்கள் கூட அடிக்கடி வலியுறுத்திச் சொல்லுகிறார்கள். எந்த மொழியும் யார் மீதும் திணிக்கப்பட மாட்டாது என்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் கொடுத்த உறுதி மொழியைக் காப்பாற்றிக் கொண்டு தான் வருகிறது. அப்படி பயப்பட வேண்டிய அளவுக்கு ஆபத்தில்லை. ஆனால், இந்தி வெறியர்கள் சிலர் ஆங்காங்கே இருந்து கொண்டு சில காரியங்களைச் செய்வதையும் நான் அறிந்து தான் இருக்கிறேன். ஆனால், நம்முடைய ஜனதா அரசு நம்முடைய பிரதமரின் வாக்குறுதியை நிச்சயம் காப்பாற்றும் என்று நான் உறுதி கூறுகிறேன்.

ஆனால், இங்கே இந்தி மொழியை திணிக்கக் கூடாது என்று சொல்கின்ற நாம் மக்கள் விரும்புகின்ற எந்த மொழியினையும் படிப்பதற்கு வசதி செய்து கொடுப்பதுதான் ஒரு ஜனநாயக அமைப்பில் இருக்கக்கூடிய அரசாங்கத்தின் கடமை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு வேளை நாம் கூறலாம், இந்தி மொழியினைப் படித்தால் தமிழ் மொழி அழிந்து விடும், தமிழ் கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றுக் கெல்லாம் குந்தகம் ஏற்பட்டுவிடும் என்று பயப்படக்கூடும். நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். தமிழ் மொழியின் உதிரத்தில் பிறந்த கவின் கன்னடம், கவின் தெலுங்கு, கவின் மலையாளம், துளு போன்ற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கின்ற அந்த மாநிலங்களில் இந்தி மொழி கட்டாயப்பாட மொழியாக இருக்கின்றது. ஆனால் இந்தி மொழியால் கன்னட மொழிக்கோ, தெலுங்கு மொழிக்கோ, மலையாள மொழிக்கோ எந்தவித ஆபத்தும் இதுவரையில் வரவில்லை. அது மட்டுமல்ல, தமிழ் மொழிக்கு எந்தக் காரணம் கொண்டும் இந்தியால் ஆபத்து வரும் என்பதை நிச்சயமாக என்னால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. சிலர் வேண்டுமானால் அரசியல் லாபத்திற்காக இந்தி மொழியைக் காட்டி அரசியல் லாபம் பெற முயற்சிக்கலாமே தவிர வேறல்ல என்பதையும், மக்கள் நலனைக் கருதிச் செயல்பட வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ப. சந்திரன் : தலைவரவர்களே, இங்கே, மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள், இந்தி மொழி எந்த மக்கள் மீதும் திணிக்கப்படாது என்று நாட்டினுடைய பிரதமர் அவர்கள் சொன்னதாகச் சொன்னார்கள். நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். அந்த உறுதியினை அரசியல் ரீதியாக அரசியல் அமைப்புச் சட்டத்திலேயிருந்து நம்முடைய மக்களுக்கு உறுதியளிக்கின்ற வகையிலே தமிழ்நாடு மாநில ஜனதாக் கட்சி அவர்களுக்கு எடுத்துக் கூறுமா என்று கேட்க விரும்புகிறேன்.

[1978 செப்டம்பர் 9

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய உணர்வை நான் பாராட்டுகிறேன். மத்திய அரசு தமிழ் நாட்டில் இந்தி மொழியை திணித்தால் தமிழ்நாடு ஜனதாக் கட்சி நிச்சயமாக இந்தி எதிர்ப்பில் முன்னணியில் நிற்கும் என்பது மட்டுமல்ல, தமிழ் நாட்டின் பிரதிநிதியாக மத்திய அமைச்சரவையிலே இருக்கின்ற திரு. பா. ராமச்சந்திரன் தனது பதவியினை ராஜினாமா செய்து விட்டு இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடுவார்கள் என்பதை இந்த அவையில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பல்கலைக் கழகம் என்று........

திரு. துரை முத்துசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தியை எதிர்த்து மத்தியிலே இருக்கக் கூடிய அமைச்சரவர்கள் ராஜினாமா செய்வார்கள் என்று சொன்னார்கள். இங்கே உள்ள ஜனதாக் கட்சி உறுப்பினர்கள் ராஜினாமாச் செய்வார்களா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அடுத்து அரசு அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் என்றும், காமராஜ் பல்கலைக் கழகம் என்றும் பல்கலைக் கழகங்களுக்குப் பெயர் சூட்டி இருப்பதை உண்மையிலேயே நான் வரவேற்கிறேன். ஜனதாக் கட்சியின் சார்பில் நான் பாராட்டுகிறேன். பெருந் தலைவர் காமராஜ் அவர்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் உயிரோடு இருந்தபோது அவர்களுடைய பெயரை அழித்து விட வேண்டும், அவருடைய அரசியலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட வேண்டும் என்றெல்லாம் சில அரசியல் கட்சிகள் முயற்சிகள் செய்தன என்பதை மக்கள் அறிவார்கள். அது மட்டுமல்ல. அவருடைய கல்லறையின் மீது இருந்த இராட்டைச் சின்னத்தைக் கூட அகற்றிவிடக்கூடிய அளவுக்கு துணிச்சல் வாய்ந்தவர்கள் கூட இன்றையதினம் காமராஜ் அவர்களின் பெயரைச் சொல்லாமல் இந்த நாட்டில் அவர்களால் அரசியல் நடத்த முடியாது என்ற சூழ்நிலை ஏற்பட்டு இருப்பதைக் காணலாம். அவர் உயிரோடு இருந்தபோது அரசியல் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் கூட, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இன்றைய தினம் பெருந் தலைவர் காமராஜர் அவர்களின் தியாகத்தை மதித்து அவருக்கு மரியாதை செலுத்துகின்ற வகையில், அவர்கள் வாழ்ந்த வீட்டை அவர்களது நினைவுச் சின்னமாக ஆக்கியும், மதுரையிலிருக்கின்ற 'பல்கலைக் கழகத்தை காமராஜ் பல்கலைக் கழகம் என்று பெயர் சூட்டியும் இருக்கிறார்கள் என்றால், உண்மையிலேயே இந்த அரசின் நல்லெண்ணத்தை நான் பாராட்டுகிறேன்.

1978 செப்டம்பர் 9] [திரு. ஜே. ஜேம்ஸ்]

[நண்பகல் 12—00]

திரு. காமராஜ் அவர்களுடைய பெயரை மதுரைப் பல்கலைக் கழகத்திற்குச் சூட்டியதால் அந்த பல்கலைக்கழகத்தின் புகழ் ஓங்கியுள்ளது. காமராஜ் அவர்கள் அகில உலகத் தலைவர்களில் ஒருவராக இருந்து, அவர்கள் உயிரோடு இருந்த போதிருந்ததை விட இறந்த பிறகு அவர்களுடைய புகழ் எந்தளவிற்கு உலகம் எங்கும் பரவி இருக்கிறது என்பதை நாம் நன்கு உணர்வோம். ஆகவே, அவர்களது பெயரை மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு சூட்டியதால், காமராஜ் பல்கலைக்கழகம் என்று பெயர் மாற்றப் பட்டதால், காமராஜ் பல்கலைக் கழகம் இன்று உலகப் புகழ் பெற்றிருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மதுவிலக்கு கொள்கை. மதுவிலக்குக் கொள்கையில் முதல் அமைச்சர் அவர்கள் உண்மையிலேயே நல்ல பிடிப்பான எண்ணம் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களது எண்ணம் நிறைவேறுகிறதா என்று பார்க்கிறபோது உண்மையில் அது ஏமாற்றத்தை அளிக்கிறது. சூலையில் நடந்த நிகழ்ச்சியைப் பார்க்கிறபோது நியாயமான, நல்ல நடுநிலைப் பத்திரிகைகள் எல்லாம், தேசியப்பத்திரிகைகள், என்ன எழுதியது என்றால் இந்த நிகழ்ச்சிக்குப்பின்னால் இரண்டு அரசியல் கட்சிகள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இனிமேலாவது மதுவிலக்குக் கொள்கை நல்ல முறையில் நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொன்னால், அரசியல் தலையீடு அதில் இருக்கக்கூடாது என்று கூறி மதுவிலக்குத் திட்டத்தை நல்லமுறையில் நிறைவேற்ற வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தென் மாநில முதல்வர்கள் மாநாடு பற்றி ஒருசில வார்த்தைகள் கூறிக் கொள்ள விரும்புகிறேன். தென் மாநில முதல் அமைச்சர்கள் மாநாட்டில் என்னென்ன பிரச்னைகள் எழுப்பப்பட்டன, என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டன என்ற விவரங்களையெல்லாம் ஆளுநர் அவர்களது உரையில் அளித்திருந்தால், அது நிறைவு பெற்றிருக்கும். நாமும் மகிழ்ச்சி அடைந்திருப்போம். ஆனால், இன்றையதினம் இந்த அறிக்கையில், அந்த மாநாடு நாட்டுக்கு வழிகாட்டியாக இருக்கக்கூடிய, நாட்டின் ஒற்றுமைக்கு ஏற்ற பல காரியங்களை உருவாக்கும் என்று எதிர்பார்ப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால், நடைபெற்ற அந்த மாநாட்டில் எந்த நல்ல காரியமும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. தென் மாநிலங்களைப் பொறுத்த மட்டில் தமிழ் நாட்டுக்கு எவ்வளவோ பிரச்னைகள் இருக்கின்றன. தென்மாநிலங்கள் ஒத்துப் போகக்கூடிய நிலையில் பல காரியங்கள் இல்லாமல் இருக்கின்றன. அந்தப் பிரச்னைகளுக்கு இந்த மாநாடு ஏதாவது உதவி புரிந்திருக்குமா என்றால், நிச்சயமாக இல்லை. குறிப்பாக, காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு தனித்து நிற்கிறது. கேரளா, கர்நாடகா மாநிலங்கள் சேர்ந்து

நிற்கின்றன. மொழிப் பிரச்னையைப் பொறுத்த மட்டில் மற்ற அத்தனை மாநிலங்களிலும் இந்தியைக் கட்டாயமாகப் படிக்கிறார்கள். தமிழ் மாநிலத்தில் இந்தியைக் கட்டாயமாக எதிர்க்கிறார்கள். உணவுப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் மற்ற மாநிலங்கள் இந்தியா முழுவதும் ஒரே மண்டலமாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். ஆனால், நாம் விரும்புவது தனி மண்டலமாக தமிழ்நாடு இருக்க வேண்டும் என்று எண்ணுகிறோம். அதேபோல் கல்வியை எடுத்துக் கொண்டால் அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா மாநிலங்கள், கல்வி கன்கரன்ட் லிஸ்டில் இருக்க வேண்டும் என்று எமர்ஜென்ஸி காலத்தில் தீர்மானம் நிறைவேற்றினார்கள். கேரளா மாநிலத்தை ஆளுகிறவர்கள் கூட எமர்ஜென்ஸியை ஆதரித்தனர். ஆனால், இன்றையதினம் அவர்களோடு நாம் ஒரு மாநாடு நடத்தி நமக்கிருக்கிற பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று சொன்னால், நிச்சயமாக எந்தளவிற்கு நாம் வெற்றி பெறுவோம் என்பதில் எனக்கு ஐயப்பாடு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தொழிலாளர்கள் சம்பந்தமாக இன்றையதினம் பல்வேறு வழக்குகள் வாபஸ் வாங்கப்பட்டிருக்கின்றன. மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில் மின்சாரத் துறையிலுள்ள தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தபோது, போடப்பட்ட வழக்குகள் இன்னும் வாபஸ் வாங்கப்படாமல் இருக்கின்றன. இதைப்பற்றி மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களிடத்தில் பல்வேறு நேரங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இன்னும் வாபஸ் பெறப்படவில்லை. ஆகவே, அரசு இனிமேலாவது உடனடியாக அதை வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் தோட்டத்தில் வேலைசெய்கின்ற தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்கப்படவில்லை. அதே நேரத்தில் தனியார் ரப்பர் தோட்டங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு 20 சத விகிதம் போனஸ் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, அரசு இதில் கவனம் செலுத்தி அரசு ரப்பர் தோட்டங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, டிப்பார்ட்மென்ட் நடத்துகிற தொழி... ருக்க... லைகளிலுள்ளவர்களுக்கு போனஸ் கொடுத்துவிட வேண்... என்று மத்திய அரசு போனஸ் சட்டத்திற்குத் திருத்தம் ... என்று ...நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ...ய ...க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : எக்ஸ்-கிரேஷியா வாக கொடுக்கலாம் என்று மத்திய சட்டத்திலேயே இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : எக்ஸ்-கிரேஷியா என்ற முறையில் கொடுக்கலாம் எனறிருக்கிறது. போக்குவரத்துத் துறைகளில் கூட இந்த விதத்தில்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, இதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் கே. டி. சி. தொழிலாளர்கள் எமெர்ஜென்ஸி காலத்தில் இதிலுள்ள பல தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டார்கள். பல தொழிலாளர்கள் இட மாற்றம் செய்யப்பட்டார்கள். பல தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். இதையெல்லாம் நிவர்த்தி செய்வதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த அளவில் இப்போது மழை குறைவாகப் பெய்கிறது. ஒரு பூ கூட பயிரேற்ற முடியாதநிலை இருக்கிறது. அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லை. காரணம் காடுகள் எல்லாம் அழிக்கப்பட்டு விட்டதின் காரணமாக மழை வளம் குன்றி விட்டிருக்கிறது. ஆகவே, காட்டு வளத்தை அங்கே அதிகமாகப் பெருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இருக்கின்ற தண்ணீரை நல்ல முறையில் விநியோகம் செய்வதற்கு கால்வாய்களை எல்லாம் செப்பனிட வேண்டும், சிமின்ட் லைனிங் செய்யப்படவேண்டும். கால்வாய்களில் எல்லாம் சில்ட் எடுக்கப்பட வேண்டும். மடைகள் பழுது பார்க்கப்பட வேண்டும். இவைகளை எல்லாம் செய்து கால்வாய்களை சீராக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெய்யாறு இடதுகரை சானலில் தண்ணீர் கொடுக்காமலேயே தண்ணீர் வரி வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். தண்ணீர் கொடுக்காத நேரத்தில் இப்படிப்பட்ட தீர்வை வசூல் செய்யக் கூடாது. இதை நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் நீண்டகாலமாக ஒரு கால்வாய் விஸ்தரிப்புத் திட்டம் நிறை வேற்றப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. திற்பரப்பு அணையை உயர்த்தி திற்பரப்பு வலதுகரை கால்வாயை விஸ்தரிக்க வேண்டும். இதற்கான இன்வெஸ்டிகேஷன்எல்லாம் முடிக்கப்பட்டிருப்பதாகத்தெரிகிறது. இதை நிறைவே...னால் குடிதண்ணீர் பிரச்சினையும் தீரும். அருகிலுள்ள சி...ப் பே... வள்ளாங்கோடு, அருமனை போன்ற கிராமங்களில் பாசன...றன. ...ம் கிடைக்கும். ஆகவே, திற்பரப்பு வலதுகரை கால்வா...ரிந்தி...ரிப்பு திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்... என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர் பெண்கள் கைத்தொழிலாக வலை பின்னும் தொழில் ஒன்றை வைத்துதான் தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தார்கள். இப்போது மெக்கனைஸ்டு முறையில் வலை பின்னும் தொழிலை நடத்துவதற்கு தனியார்களுக்கு லைசன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் மீனவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த லைசன்ஸை கேன்ஸல் செய்து மீனவத் தொழிலாளர்களைக் காப் பாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, டெண்டல் சர்ஜன்களுக்கு வேலை அளிக்கப்படும் என்று நிதி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இவ்விதம் தெரி விக்கப்பட்டு ஓராண்டுக்கு மேலாகியும் இதுவரை அத்தனைபேர் களுக்கும் வேலை கிடைக்கவில்லை. 20 பேர்களுக்கு மட்டும் தான் வேலை கிடைத்திருக்கிறது. இன்னும் 100 டெண்டல் சர்ஜென்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அது போன்று இளைஞர் அணியின் மூலமாக வேலை பார்த்து வந்தவர்கள் இப் போது சர்வீஸ் கமிஷன் பரீட்சையில் தேறி இப்போது வேலைக் காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆயிரம் பட்டதாரிகள் நான்கைந்து ஆண்டுகளாக வேலை பார்த்தவர்கள் இப்போது வேலை இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர் ள் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்கிறார் கள். இவர்களுக்கு வேலை கொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த்து எங்கள் மாவட்டத்தில் லாண்ட் டாக்ஸ் அதிகமாக விதிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி நிதி அமைச்சர் அவர் களிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். கன்னியாகுமரி மாவட் டத்தில் ஏக்கர் ஒன்றுக்கு 140 ரூபாய் வரை நிலவரியாகப்போடப் பட்டிருக்கிறது. அங்குள்ள மக்களின் சக்திக்கு மீறிய அளவில் இது அமைந்திருக்கிறது. ஆகவே இதைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் வீட்டுவரி அதிகமாகப் போடப்பட்டிருக்கிறது. எக்ஸிக்யூட்டிவ் ஆபீசரையோ அல்லது பஞ்சாயத்தையோ கலந்து கொள்ளாமல் ஸ்பெஷல் ஆபீசரே வீடு களுக்கு முன்பு இருந்த வரியை பல மடங்கு கூட்டியிருக்கிறார்கள். இது பெரியதொரு பிரச்சினையாக வந்திருக்கிறது. ஆகவே இதை உடனடியாகக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் கேட்டுக்கொள்வது, மதுரையில் உயர்நீதி மன்றத்தின் பிரிவு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று நீண்ட நாள் பிரச்னையாக இருந்து வருகிறது. இதற்காக மதுரையி லுள்ள வழக்கறிஞர்கள் பலர் உண்ணாவிரதம் இருந்து வருவதும் அரசாங்கத்திற்குத் தெரியும் என்று நம்புகிறேன். ஆகவே இதை யெல்லாம் தவிர்த்து, மதுரையில் உயர்நீதி மன்றத்தின் பிரிவு ஒன்றை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

6. ஒழுங்குப்பிரச்னைகள்—தொடர்ச்சி.

(ஆ) மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத துணை வினாவை அனுமதிப்பது குறித்து.—

[பிற்பகல் 12–10.]

திரு. ரா. உமாநாத் : பாயின்ட்ஆப் ஆர்டர், அவைத் தலை வர் அவர்களே, சாதாரணமாக நான் இந்த அவையை பாதிக் காத பிரச்னையாக இருந்தால் கிளப்ப மாட்டேன். ஆகவே தான், இந்த பாயின்ட் ஆப் ஆர்டர். கேள்வி நேரத்திலே தாங் கள் திட்டவட்டமாக ஒரு குறிப்பிட்ட தீர்ப்பைக் கூறியிருக்கி றீர்கள். மாண்புமிகு சபாநாயகர் அவர்கள், ஒரு மாவட் டத்திலே, ஒரு கிராமத்திலே உள்ள தொழிற்சாலையைப் பற்றிய கேள்வியாக இருந்தால், அதே மாதிரி மற்ற மாவட்டங்களிலே, மற்ற ஊர்களிலே உள்ள தொழிற்சாலைகளைப் பற்றி கேள்விகள் கேட்கக் கூடாது என்று தீர்ப்புக் கூறியிருக்கிறீர்கள். நேற்று கூட அந்தமாதிரி........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து, நான் அப் படிச் சொல்லவில்லை. குறிப்பிட்ட ஒரு தொகுதியைப் பற்றி ஒரு உறுப்பினர் கேள்வி கேட்டால், அதையொட்டிய கேள்வி களைக் கேட்க வேண்டுமே தவிர, மற்ற மாவட்டங்களிலுள்ள தைப் பற்றிய துணைக் கேள்விகளைக் கேட்கக் கூடாது என்று சொன்னேனே தவிர, அவரவர் தொகுதியிலுள்ள கிராமங்கள், அதைச் சுற்றியுள்ள இடங்களைப் பற்றிக் கேட்கும்போது, மற்ற வர்கள் வேறு இடங்களைப் பற்றி, மாவட்டங்களைப் பற்றிக் கேட்க வேண்டாம் என்றுதான் சொன்னேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, உப கேள்விகள் கேட்கும்போது, உறுப்பினர்கள் மற்ற இடங்களைப் பற்றி கேட் கக் கூடாது என்று சொல்லுகிறீர்கள். அதை நீங்கள் கறாராக அமுல் நடத்துகின்றீர்கள். ஆனால், இன்று கேள்வி எண். 114-ல், தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள, வடலூரில் இருக் கக்கூடிய தொழிற்சாலை சம்பந்தமானது. ஆனால் உறுப்பினர் சுப்பு அவர்கள் அந்தக் கேள்விக்குத் துணை கேள்வியாக இந்துஸ் தான் டெலிபிரின்டர்ஸ் அக்கிரிமெண்டு பற்றிக் கேட்டார். உங் களுடைய ரூலிங்படி அனுமதிக்க மாட்டீர்கள். நான் அப்படிக் கேட்கவில்லை. ஆனால் அவர் அப்படிக் கேட்டிருக்கிறார். அதை நீங்கள் அனுமதித்து, அமைச்சர் அவர்களும் பதில் சொன்னார் கள். எனக்கு இதிலிருந்து என்ன தெளிவாகத் தெரிகின்றது என்று சொன்னால், உங்களுடைய ரூலிங்கிற்கு கட்டுப்படுகின்ற வர்களுக்கு தண்டனை, கட்டுப்படாமல் நடப்பவர்களுக்கு பரிசு இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. நான் ஒரு கால் அட்டென் ஷன் கொடுத்திருக்கிறேன்........

திரு. க. சுப்பு : நானும் கொடுத்திருக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : நான் இப்போது நிற்கிறேன். I am on my legs நான ஒரு கால் அட்டென்ஷன் கொடுத்திருக்கிறேன். அதன் கதி என்னவாகும் என்பது ஒன்று. அந்த ரூலிங்கிற்கு மேல் பேசினுல், அதை 'எக்ஸ்பஞ்' செய்து விடுவீர்கள் என்பது இரண்டாவது. மூன்ருவது, இதே மாதிரி மற்ற அங்கத்தினர்கள், அவர்கள் எந்தக் கட்சியாக இருந்து கேட்டாலும், அதைத் தடுக்கக் கூடாது.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, என்னைப் பற்றி அவர்கள் பேசியதால், நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் டி.வி.எஸ். பற்றி ஒரு கேள்வி கேட்டார்கள். அதை உமாநாத் அவர்கள் அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகுதான் நான் கேட்டேன். ஏதோ, எங்கள் கட்சிக்கு சலுகைகள் கொடுத்துவிட்டு, கம்யூனிஸ்டுகளுக்கு சலுகைகள் கொடுக்காததுபோல் திரு உமாநாத் அவர்கள் பேசுவது முறையா என்று நான் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு சுப்பு அந்தக் கேள்வியை எழுப்புகின்ற போதே, இது சம்பந்தமில்லாத கேள்வி என்பது தெரிந்தது. உண்மையிலேயே நான் அப்போதே நிறுத்த வேண்டுமென்று இருந்தேன். பிரச்னை அதிகமாகப் போகக் கூடாதே என்று இருந்தேன். உண்மையிலேயே, அவர் கேட்டது மூல கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்விதான். இருந்தாலும், அப்படி இனிமேல் அனுமதி தராமல் பார்த்துக் கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் எழுப்பியுள்ள பிரச்னை ஏற்றுக்கொள்ளக் கூடியது மட்டுமல்ல ; நன்கு ஆராயப்பட வேண்டிய ஒன்ருகும். அதே பிரச்னை குறித்து 41-வது விதியின் கீழ் நீங்கள் ஒரு அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு நான் பதில் சொல்லாவிட்டால், நன்ருக இருக்காது. உங்களுடைய குறிப்பிட்ட பிரச்னையை, விதி 41-ன்கீழ் கொடுத்துள்ள அறிவிப்புக்கு அனுமதிகொடுக்கிறேன்.

திரு. க. சுப்பு : 41-வது விதியின்கீழ் நானும் இந்துஸ்தான் டெலிபிரிண்டரைப்பற்றி ஒரு அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது உங்களுக்கும் சேர்த்துத்தான்.

*திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தாங்கள் ஒரு
முடிவு சொன்னதற்கு நான் ஒரு விளக்கம் தங்களிடமிருந்து அறிய
விரும்புகிறேன். 41-வது விதியின்கீழ் யார், எதைப் பற்றி
அறிவிப்புத் தந்திருந்தாலும்கூட, அது அவை முன்னே வருமா,
வராதா என்று தெரியாது. இந்த மாதிரி ஒரு கேள்வி இருக்கு
மாஞல், 41-வது விதியின்கீழ் அதே பிரச்னை எழுப்பப்பட்டி
ருக்கிறது என்பதால் கைவிட முடியாது. மேலும், அதை
தொடர்ந்து 41, 42 விதிகளின்கீழ் ஒரு பிரச்னையை எழுப்பு
கிறபோது, முன்கூட்டியே வந்த அந்தக் கேள்வியை நிறுத்த
முடியாது. கேள்வியிஞல் இது பாதிக்கும் என்று கருதி,
அவ்வாறு சொல்வது இந்த அவைக்கு ஏற்புடையது அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத்
தலைவர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். 41-வது
விதியின்கீழ் யார் என்ன கொண்டு வந்தார்கள் என்பது அவை
யில் உள்ள உறுப்பினர்களுக்குத் தெரியாது. ஆனுல் அதை எழுப்பி
யவருக்குத் தெரிந்திருக்கும். 41–வது விதியின்கீழ் அவர் குறிப்
பிட்ட தொழிற்சாலை பற்றிக் கிளப்பியிருக்கிருர். மூலக் கேள்வி
சேஷசாயி கம்பெனியைப் பற்றி, அதிலே இந்துஸ்தான் டெலி
பிரிண்டர்ஸ் பற்றிக் கேட்கக் கூடாது.

திரு. க. அன்பழகன்: தாங்கள் அடிப்படையாக அறிவுறுத்த
வேண்டிய ஒன்று இது. தொடர்பு இல்லாத கேள்வி என்ற அடிப்
படையில் ஒரு கேள்வி மறுக்கப்பட வேண்டுமே தவிர 41–வது
விதியில் வருகிறது, 42–வது விதியில் வருகிறது என்ற அந்த
அடிப்படையில் மறுக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் மூலக் கேள்வி
சம்பந்தப்பட்ட பிரச்சினையை துணைக் கேள்வியாக எழுப்புவதில்
பிரச்சினை இல்லை. திரு. உமாநாத் அவர்கள் எழுப்பிய பிரச்சினை
42-வது விதியின்கீழ் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த
பிரச்சினை குறித்து கேள்வியாக அனுமதித்ததால் பாதிக்கப்பட்டு
விட்டதாகக் கூறினுர்கள். இதிலே மேலும் விவாதம்
வேண்டாம். இதற்கு இதோடு முற்றுப்புள்ளி வைத்து விடுகிறேன்.

9. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்
விவாதம்—தொடர்ச்சி

*திரு. மு. கருணுநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, மன்றத்
தில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது திராவிட முன்
னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை
எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலில் அவைத் தலைவராகிய தங்களுக்கு நான் ஒரு வேண்டு
கோள் விடுக்க விரும்புகிறேன். அவையினுடைய நிகழ்ச்சிகள்
தவிர்க்க முடியாத முறையாக வகுக்கப்படுகின்றன என்ருலும் கூட,

சூழ்நிலையால் சில நேரங்களில் அந்த நிகழ்ச்சிகளில் மாறுபாடுகள் ஏற்படுகின்றன. ஆனால் ஒவ்வொரு தடவையும் நாம் எடுத்துக் கொள்கிற நிகழ்ச்சிகள் குறித்த காலத்திலே நடைமுறைப்படுத்த முடியாமல் காலம் தள்ளிக் கொண்டே போகிற ஒரு நிலைமை இந்த மாமன்றத்தில் அடிக்கடி ஏற்படுவதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையின்மீது நேற்றோடு விவாதம் முடிவு அடைவதாக இருந்தது. நேற்று மற்றவர்கள் எல்லாம் பேசி, எதிர்க்கட்சியின் சார்பில் நானும் பேசி, முதல்வர் அவர்கள் பதிலளிப்பது என்று ஏற்கனவே முடிவு எடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு ஆளும் கட்சியிலும் எதிர்க்கட்சிகளிலுமுள்ள உறுப்பினர்கள் தங்களுக்குப் பேச வாய்ப்பு இல்லையென்று எடுத்துச் சொன்ன முறையீட்டின் காரணமாகவும், எதிர்க்கட்சியிலுள்ள வேறு சில தலைவர்கள் நேற்றையதினம் நீண்ட நேரம் பேசவேண்டிய சூழ்நிலை இருந்த காரணத்தாலும், நான் கோவை மாவட்டத்தில் ஏற்கனவே ஒப்புக் கொண்ட சுற்றுப் பயண நிகழ்ச்சிகளை எல்லாம் நாளையதினம் தள்ளிவைத்து இன்றையதினம் இங்கே கலந்துகொண்டு கழகத் தின் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பளிக்க வேண்டுமென்று தங்களையும் அவை முன்னவரையும் கேட்டுக்கொண்டு பிறகு முதலமைச்சருடன் கலந்து பேசி, இன்று கட்சித் தலைவர் களும், நானும் பேசிய பிறகு முதல்வர் அவர்கள் பதிலளிப்பதாக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் எனக்குச் சந்தேகம்— பல தடவை முதலமைச்சருடைய பதில் தள்ளிப் போடப்பட்டுக் கொண்டே போவது இந்த அவையிலே வாடிக்கையாக ஆகிவிட்ட ஒன்று என்ற காரணத்தால் நான் நேற்று மீண்டும் தங்களைக் கேட்டேன். பிறகு தொலைபேசி மூலமாகத் தங்களோடு தொடர்பு கொண்டு கேட்டேன். இன்றைக்குச் சட்டமன்றச் செயலாளர் அவர்கள், காலையிலேயே எதிர்க்கட்சியினுடைய தலைவர்களுடைய கருத்துரைகளும், முதல்வர் அவர்கள் பதிலும் இன்று காலையோடு முடிந்து விடுகிறது என்ற செய்தியை எனக்குச் சொன்னார்கள்.

எதிர்பாராமல் கலை உலகத்தினுடைய பெரும் புள்ளிகளில் ஒருவரான புகழ் பெற்ற சின்னப்ப தேவர் அவர்கள் மறைந்து விட்ட காரணத்தால் அதற்குச் சென்றுவிட்டு முதல்வர் அவர்கள் இன்று காலையில் வந்துவிடுவார்கள் என்றும் எதிர்க்கட்சியி னுடைய தலைவர்கள் பேசுகிற நேரத்தில் இங்கு இருப்பார்கள் என்றும் எனக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் காலையில் பத்திரிக் கையைப் பார்த்த பிறகு இன்று காலையில்தான் முதல்வர் அவர்கள் கோவைக்குச் செல்லுகிறார் என்றும், எப்போது வருகிறார் என்றும் தெரியாத சூழ்நிலையில் மீண்டும் நான் தங்களுக்குத் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு கேட்டேன். தாங் கள் அவை முன்னவரைக் கலந்துகொண்டு சொல்வதாகச் சொன் னீர்கள். காலையில் பேசிவிட்டால் முதல்வர் அவர்கள் வந்து பதில் சொல்லுவார் என்று தாங்கள் குறிப்பிட்டீர்கள்.

[பிற்பகல் 12-20]

ஒருவேளை நான் பேசுகின்ற நேரத்திலே இடையிலே அவர் வந்தாலும் வந்துவிடக் கூடும் என்ற நம்பிக்கையோடு நான் இங்கே பேசத் தொடங்குகிறேன். எனினும், அவையினுடைய நடவடிக்கைகள் அவை முன்னவருக்கும் எதிர்க்கட்சிகளில் உள்ள தலைவர்களுக்கும், எனக்கு மாத்திரமல்ல, மன்றத் தலைவர்களும் கலந்துபேசி ஒரு உடன்பாட்டின் படி நடைபெறுமானால் அவையை சுமுகமாக நடத்திச் செல்லவும் வகுக்கப்பட்ட நிகழ்ச்சிகள் ஒழுங் காக, செம்மையாக நடைபெறச் செய்யவும் வழிவகுத்தவர் களாக நாம் ஆவோம், அதற்கு இனியாவது வேண்டிய ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று தங்களையும் அவை முன்னவர் அவர்களையும் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

<u>மாண்புமிகு திரு கி. மனோகரன்</u>: பேரவைத் தலைவர் அவர் களே, நேற்றைக்கு நான் எதிர்க்கட்சித் தலைவரவர்கள், உங்கள் அறையிலிருந்து தொலைபேசியில் என்னோடு பேசியபோது இன் றைக்குக் காலையில் குறிப்பிட்ட இரண்டு எதிர்கட்சித் தலைவர்கள் பேசியதற்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் நீங்கள் காலையிலே பேசுவதும், மாலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்குப் பதிலுரை தருவதுமான சூழ்நிலையை ஏற்படுத்துவது சரியாக இருக்குமா என்று கேட்டபொழுது எனக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை என்று எதிர்கட்சித் தலைவர் சொன்னார் என்பதை நான் அவருக்கு நினைவுபடுத்த விரும்பு கிறேன்.

<u>திரு மு. கருணாநிதி</u>: நேற்றல்ல, முந்தாநாள்.

<u>மாண்புமிகு திரு கி. மனோகரன்</u> : 9—ஆம் தேதி பேசுவதாக அவர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

<u>திரு மு. கருணாநிதி</u> : நான் அவை முன்னவரோடு தொடர்பு கொண்டது நேற்றல்ல, நேற்று முன் தினம் தொடர்புகொண் டேன், நேற்று நேரடியாக தங்களிடத்திலே பேசினேன். நான் சொல்வது, நிகழ்ச்சி நிரலில் வகுக்கப்பட்டதற்கு மாறாக, தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டாலன்றி, அடிக்கடி மாற்றம் ஏற்படக் கூடாது, அதை நாம் கண்காணித்துக் கொள்ளவேண்டுமென்ற முறையிலே நான் இந்த வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையிலே இங்கே பேசிய பல நண்பர் களும் எடுத்துக் காட்டியதைப்போல் காவிரிப் பிரச்சினைப்பற்றி தமிழக அரசு கொண்டுள்ள முடிவும் நிலையும் வரவேற்கத்தக்க ஒன்றாக அமைந்து இருப்பதை நான் பாராட்டக் கடமை

பட்டிருக்கிறேன். ஏனென்றால் காவிரிப் பிரச்சினையில் முன்பு
இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏதோ தவறு
விளைவித்து விட்டது என்ற பரவலான பிரச்சாரத்தை அன்று
ஆளுங்கட்சியினர் நாடு முழுவதும் செய்துவந்தார்கள். ஆனால்
அண்மையிலே டெல்லிப் பட்டணத்திலே நடைபெற்ற முதல்
வர்கள் மாநாட்டிற்குப் பிறகு நம்முடைய முதல்வர் அவர்கள்
நிருபர்களிடத்திலே அளித்துள்ள செய்தியிலோ அல்லது விடுத்த
அறிக்கையிலோ திட்டவட்டமாகக் கூறியுள்ளார்கள். ஏற்கனவே
மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கழக அரசு இருந்த காலத்
திலே காவிரிப் பிரச்சினையில் என்ன நிலையைக் கொண்டிருந்ததோ
அதே நிலையைத்தான் இன்றைக்குள்ள இந்த அரசும் கொண்டிருக்
கிறது என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள்.
எனவே அந்த அறிவிப்பின் மூலமாகவே காவிரிப் பிரச்சினையில்
முன்பிருந்த கழக அரசு எந்தவிதமான தவறினையும் செய்யவில்லை
என்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

அதே நேரத்திலே கவர்னர் அவர்களுடைய உரையிலே 9 ஆம்
பக்கத்திலே ''குடியரசுத் தலைவர் ஆட்சியின்போதும், அதற்கு
முன் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்
பட்ட அரசும் நடத்திய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து
காவிரி நீர் பங்கீடு பற்றி இந்த அரசும் முனைப்பாக பேச்சு
வார்த்தைகள் நடத்தி வருகின்றது'' என்று உள்ள வாக்கியம்
கொஞ்சம் அச்சத்தை எனக்குத் தரத்தான்செய்கிறது. ஏனென்றால்
குடியரசுத் தலைவர் ஆட்சியின் போதும் அதற்கு முன்பு
மக்களாட்சி முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்பட்ட
அரசும் என்று இரண்டையும் இணைத்திருக்கிறார்கள். மக்களால்
தேர்ந்தெடுக்கப்பட்ட கழக அரசு இருந்தபோது அனைத்துக்
கட்சித் தலைவர்களையும் இங்கே அடிக்கடி கூட்டி அவர்களுடைய,
அரிய ஆலோசனைகளையும் கருத்துரைகளையும் பெற்று அவர்களு
டைய ஆலோசனைகளை மாத்திரம் அல்ல, முன்னாள் முதல்வர்கள்,
பெருந்தலைவர் காமராஜ் அவர்களை அணுகியும் பெரியவர்
பக்தவச்சலம் அவர்களை அணுகியும் காவிரிப் பிரச்சினைப்பற்றி
அரிய யோசனைகளையெல்லாம் கேட்பதை தமிழக அரசு
அன்றைக்கு தன்னுடைய நிலையாகக் கொண்டிருந்தது. ஆனால்
1976 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் ஆட்சியின்பொழுது, நம்
முடைய மின்துறை அமைச்சர் குறிப்பிட்டார்கள், ஒப்பந்தம் அல்ல
என்று, ஆனால் ஏதோ ஒருவிதமான உடன்பாடு ஏற்பட்டு,
அதை இன்றைக்குக் கர்நாடக அரசு வலியுறுத்திக் கொண்டிருக்
கிறது என்பதைப் பத்திரிக்கைகளிலே நாம் செய்தியாகப்
பார்க்கிறோம். அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும்
அது விளக்கப்பட்டதாக நான் அறிகிறேன். இங்கே தந்த
உரையிலே, குடியரசுத் தலைவர் ஆட்சியின் போதும், அதற்கு
முன் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்
பட்ட அரசும் நடத்திய பேச்சு வார்த்தைகள் தொடரும் என்று
இந்த இரண்டு ஆட்சியின்பொழுதும் எடுக்கப்பட்ட முடிவுகளை

அல்லது பேசப்பட்ட கருத்துக்களைத் தொடர்ந்து என்று கவர்
னர் உரையிலே இருப்பது எங்கே ஆபத்தை விளைவித்து விடக்
கூடுமோ என்று அஞ்சுகிறேன். குடியரசுத் தலைவர் ஆட்சியின்
போது எடுக்கப்பட்ட உடன்பாடு அல்லது பேச்சு வார்த்தை
தமிழ்நாட்டு மக்களுக்குப் பாதகமான முறையில் அமைந்தது
என்பதை அன்றைக்கு நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

இங்கே அரசு இன்றைக்கு எடுத்திருக்கின்ற காவிரி பிரச்சினை
பற்றிய முடிவு, முதலமைச்சர் அறிவித்திருப்பதைப்போல
அரசாங்கத்தினுடைய நிலையை எல்லாக் கட்சித் தலைவர்களும்
ஏற்றுக்கொண்டார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
அதற்கு மாறாக, அதே கருத்தை வேறுவிதமாகக்கூடச்
சொல்லியிருக்கலாம். தமிழ்நாட்டிலே உள்ள அனைத்துக்
கட்சிகளுனுடைய கருத்துக்களை இந்த அரசு ஏற்றுக்
கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டால் அது அரசின் கரத்தைப்
பலப்படுத்துவதற்குக் கூடப் பயன்படும் என்று நான் நம்புகிறேன்.
கர்நாடகத்திலே அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சரவர்கள்
அங்குள்ள எதிர்கட்சிகளையெல்லாம் பார்த்துச் சொல்கிறார்கள்,
''நீங்களெல்லாம் காவிரிப் பிரச்சினைமீது வேகமாகப் பேசுவதை
நான் வரவேற்கிறேன், அப்பொழுதுதான் அதை வைத்துக்
கொண்டு நான் போராட முடியும்'' என்றெல்லாம் அவர் பேசு
கிறார். அதைப்போலவே, காவிரிப் பிரச்சினையிலே தெளி
வான முடிவெடுக்க வேண்டிய கட்டத்தில் தாமதமாக இருக்
கிறது என்று எதிர்க்கட்சிகளின் சார்பில் குறைகள் கூறப்பட்ட
தாலும் அவைகளை நீங்கள் முதலமைச்சர்கள் மாநாட்டிலே
நடத்துகின்ற பேச்சுவார்த்தைக்கு ஏற்ற போர்க் கருவிகளாக
ஏற்றுக்கொண்டு நம் மாநிலத்திற்கு நன்மைகள் விளையும் வகை
யில் இந்தப் பிரச்சனையில் நல்ல தீர்வு காண வேண்டுமென்று
நான் இந்த அரசை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் இந்தித் திணிப்பு எதிர்ப்பு முழக்கம் இடம்
பெற்றிருப்பதை நான் வரவேற்கிறேன். பாராட்டுகின்றேன்.
அதே நேரத்திலே, இங்கு காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயும்,
ஜனதாக் கட்சியின் சார்பிலேயும் பேசிய தலைவர்களும்,
உறுப்பினர்களும் இந்தித் திணிப்பு இல்லை என்று பிரதமர்
அறிவித்துவிட்ட பிறகு அதைப்பற்றி நீங்கள் ஏன் சந்தேகப்பட
வேண்டும் என்று கேட்கிறார்கள். இந்தித் திணிப்பு இல்லை என்று
சொல்லிக் கொண்டே இந்தியைப் படித்தால்தான் எதிர்காலம்
ஒளிமயமாக இருக்கும் என்று நாட்டு மக்களைப் பார்த்துச் சொல்
வது ஒருவகையான திணிப்பே தவிர வேறல்ல. இந்தக் காரணத்
தாலேதான் இந்தித் திணிப்பை எதிர்ப்போம் என்ற முழக்கத்தை
கூட மாற்றி இந்தியை எதிர்ப்போம் என்று சொல்ல வேண்டிய
அளவிற்கு இன்றைக்குத் தமிழ்நாட்டிலே நிலைமைகள் ஏற்பட்டிருக்
கின்றன. இந்தியைத் திணிக்க மாட்டோம், ஆனால் எதிர் காலத்
தில் ஆட்சிமொழியாக, தொடர்பு மொழியாக இந்திதான்

[திரு மு. கருணாநிதி] [1978 செப்டம்பர் 9

இருக்கும் என்று சொல்கிறார்கள். வெளியிலே வீசுகின்ற வாடை
காற்று உள்ளே நுழையாது என்று உத்தரவாதம் அளித்துவிட்டு,
ஆனால் ஜன்னலைத் திறந்து வை என்று சொல்வதைப் போல்,
இந்தியைத் திணிக்க மாட்டோம், ஆனால் இந்தி படிக்காவிட்டால்
எதிர்கால வாழ்வு நன்றாக இருக்காது என்று கூறுவது மறைமுக
மான இந்தித் திணிப்பு என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம்
கருதுகிறது. அந்தக் கொள்கைச் சார்புடைய மற்றக் கட்சிகளும்
கருதுகின்றன. இந்தியாவிலே உள்ள 14 தேசிய மொழிகளும்
ஆட்சி மொழியாக வேண்டுமென்பது திராவிட முன்னேற்றக்
கழகத்தினுடைய குறிக்கோள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அதைப் பலமுறை எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்தக் குறிக்கோளை விரைவிலே
எட்டுவது சாத்தியமா என்ற கேள்வி எழுகின்ற நேரத்தில் அந்தக்
குறிக்கோளை நாம் எட்டுகின்ற வரையில் ஒரு சமரச ஏற்பாடாக
ஆங்கிலம் நீடித்தே தீர வேண்டுமென்ற கொள்கையை நாம்
எடுத்துச் சொல்லி வருகிறோம்.

(பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கைகள்
வீசப்பெற்றன.)

இரு மொழிக் கொள்கை இன்றைக்குத் தமிழ்நாட்டிலே நடை
முறையிலே இருந்து வருகிறது.

[பிற்பகல் 12—30.]

அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில்,
1968-ஆம் ஆண்டு மீண்டும் மொழிப் போராட்டத்திற்கான
நிலைமை உருவானபொழுது இந்தச் சட்டமன்றத்திலே அவர்கள்
அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின்படி தமிழ் நாட்டில் பள்ளிக்
கூடங்களில் தமிழ், ஆங்கிலம் இரண்டும் தான்; இந்திக்கு இடம்
இல்லை. இந்திக் கற்றுத் தருகின்ற ஆசிரியர்களுக்கு மாற்று
வேலை தரப்படும் என்கின்ற அறிவிப்பை இந்த மாமன்றத்திலே
அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

இந்த இரு மொழிக் கொள்கை தமிழ் நாட்டிலே மாத்திரம்
அல்ல, இந்தியா முழுமையும் கடைபிடிக்கப்பட வேண்டுமென்று
நான் கூற விரும்புகிறேன். சிலர் தவறாக எண்ணக் கூடும்,
இந்தியா முழுமையும் இரு மொழிக் கொள்கை கடைபிடிக்கப்பட
வேண்டுமென்று சொன்னால் ஆங்கிலம், இந்தி என்ற இருமொழிக்
கொள்கையா என்ற கேள்வி எழக்கூடும். நான் அதற்குத் தரு
கின்ற விளக்கம் எல்லாம் தமிழ் நாட்டிலே தமிழும் ஆங்கிலமும்
என்று இருப்பது போல், ஆந்திராவிலே தெலுங்கும் ஆங்கிலமும்
என்று கர்நாடகத்திலே கன்னட மொழியும் ஆங்கிலமும் என்றும்

1978 செப்டம்பர் 9] [திரு மு. கருணாநிதி]

கேரளாவிலே மலையாள மொழியும் ஆங்கிலமும் என்றும் மேற்கு
வங்கத்திலே வங்க மொழியும் ஆங்கிலமும் என்றும் உத்தரப்
பிரதேசத்திலே இந்தியும் ஆங்கிலமும் என்றும் மத்திய பிரதேசத்
திலே இந்தியும் ஆங்கிலமும் என்றும் இருந்து விடுமேயானால்
இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் பல்வேறு சலுகை
களைப் பெறவும் வேலை வாய்ப்புகளிலே முதலிடத்தைப் பெற்றுக்
கொள்ளவும் தேர்வுகளிலே அதிக எண்களைப் பெற்று ஆதிக்க
சக்தியாக உருவெடுக்கவுமான சூழ்நிலை நிச்சயமாக மாற்றப்படும்.

(திரு. பி.எச். பாண்டியன் தலைமை.)

இல்லையேல் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் ஆங்
கிலத்தை இரண்டாவது மொழியாக எடுத்துக் கொண்டு இந்தி,
படிக்காவிட்டால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லையென்கின்ற
மறைமுகமான கட்டாயத்திற்கு— நேரடியான கட்டாயம் அல்ல,
நேரடியான திணிப்பு அல்ல, மறைமுகமான திணிப்புக்கு ஆளாக்கி,
இந்தி பேசாத மாநில மக்கள், அதுவும் குறிப்பாக 40 ஆண்டுகால
மாக மொழிப் போராட்ட வரலாற்றுக்கு உரியவர்களாக இருக்
கிற தமிழ் நாட்டு மக்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கப்
பட்டு விடுவார்கள் என்கின்ற ஐயப்பாட்டின் காரணமாகத்தான்—
ஐயப்பாடு என்று கூடச் சொல்லமாட்டேன்,— உறுதியாக எதிர்
காலத்திலே நடைபெறக்கூடிய அந்த ஆபத்தை உணருகிற
காரணத்தாலேதான் நாம் இந்தியை எதிர்க்கிறோம். இந்தித்
திணிப்பை எதிர்க்கிறோம் என்பதைக் கூட மாற்றிக் கொண்டு,
இந்தியை எதிர்க்கிறோம் என்று சொல்லக்கூடிய நிலைக்கு நாம்
தள்ளப்படுகிறோம்.

இரண்டொரு உதாரணங்களைச் சொல்வோமானால், எனக்குச்
சென்னையில் நடைபெற்ற 'மெட்ராஸ் பீச் ரெயில்வே ஸ்டேஷன்'
அங்கே 'நவஜீவன் எக்ஸ்பிரஸ்' என்கின்ற ஒரு புகை வண்டியி
னுடைய 'இனாகுரேஷனுக்கு' அழைப்பிதழ் எனக்கு வந்தது.
அந்த அழைப்பிதழில் முதல் பக்கத்திலே இந்தியிலே அச்சடிக்கப்
பட்டிருக்கிறது. அதை பார்த்தால், 11 என்கின்ற எழுத்தையும்
1978 என்கின்ற எழுத்தையும் தவிர வேறு எதுவும் எனக்குப்
புரியவில்லை. இரண்டாவது பக்கத்திலும் இந்தியிலேதான் அச்
சடிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது பக்கத்தில் ஆங்கிலத்திலே
அச்சடிக்கப்பட்டிருக்கிறது. நிகழ்ச்சி நடைபெறுகிற இடம் தமி
ழகத்தினுடைய தலைநகரமான சென்னைப்பட்டினம். சென்னை
நகரிலே நவஜீவன் எக்ஸ்பிரஸ் தொடக்க விழா நடைபெறுகிறது.
இதிலே ஆளுநர் தலைமை வகித்து அந்த விழாவை நடத்தி வைக்கி
றார். ஆனால், இதிலே தமிழுக்கு இடம் இல்லை. முதல்
இடத்தை, முக்கியமான இடத்தை, முதல் பக்கத்தை, இரண்டா
வது பக்கத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது இந்தி, அதிலாவது

[திரு மு. கருணாநிதி] [1978 செப்டம்பர் 9

ஆங்கிலத்திற்கு இன்னொரு பக்கம் ஒதுக்கியிருக்கிறார்கள். எனக்கு இன்னொரு தகவல் சான்றாகக் கிடைத்திருக்கிறது. அதை இந்த அவையிலே நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

மண விழாக்களுக்கு வாழ்த்து மடல், 'கிரீட்டிங்ஸ்' அனுப்புவதற்கு அஞ்சல் நிலையங்களில் இப்படிப்பட்ட வாழ்த்து மடல்களை விற்பனை செய்கிறார்கள். இதுவரையிலே இந்த வாழ்த்து மடல்கள் ஆங்கிலத்திலே அச்சடிக்கப்பட்டு வந்தன. ஏதோ தமிழிலே அச்சடிக்கப்பட்டு விட்டது என்று நான் மகிழ்ச்சியாகச் சொல்லப் போகிறேன் என்று யாரும் எண்ணி மகிழ்ந்து விட வேண்டாம். இப்பொழுது அது அறவே மாற்றப்பட்டு வாழ்த்து மடல்கள் முழுக்க, முழுக்க இந்தியிலே அச்சடிக்கப்பட்டு அவைகள் அஞ்சலகங்களிலே விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

மெல்ல மெல்ல ஆனால் மறைமுகமாக எப்படியும் உறுதியாக தமிழகத்திலே இந்தி பேசாத மக்களிடையே இந்தியை நுழைப்பதற்கு சூழ்ச்சி வலை பின்னப்படுகிறது என்கின்ற குற்றச் சாட்டை நான் இந்த அவையிலே சொல்லாமல் இருக்க முடியாது. எனவேதான் எந்த வகையிலாவது எதிர்காலத்திலே இந்தியா முழுமையும் இந்தி மொழியைத் தொடர்பு மொழியாக ஆக்கியே தீரவேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கின்ற மத்திய அரசும், மத்திய அரசுக்கு ஆதரவு தருகிற வடபுலத்து மாநிலங்களிலே உள்ளவர்களும் திட்டத்தை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தித் திணிப்பு இல்லை என்ற பேரால் இபபடிப்பட்ட மறைமுகமான காரியங்கள் நாட்டிலே நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழ் நாட்டிலே பிறந்த தமிழன் இப்படி ஒரு இந்தி வாழ்த்து மடலை வாங்கி இன்னொரு தமிழனுக்கு வாழ்த்து அனுப்ப வேண்டிய சூழ்நிலை இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்தியை எதிர்ப்பதே தவறு என்று சில பேர்கள் பேசினார்களே, அது பொருள் பொதிந்த வாதமா என்பதை அந்த நண்பர்களே சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அவை கூடி இருக்கும் இந்த நேரம் பெரியாருடைய நூற்றாண்டு விழாவை நாம் அண்மைக்காலத்திலே கொண்டாட இருக்கின்ற நேரம் ஆகும். பெரியாருடைய 100-வது பிறந்த நாள் விழா, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய 70-வது பிறந்த நாள் விழா இவைகளை எல்லாம் கொண்டாடுகின்ற சூழ்நிலையிலே இந்த அவை கூடியிருக்கிறது. எனவே அதற்குள்ளாக அவையினுடைய நிகழ்ச்சிகள் எல்லாம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதிலே அவைத் தலைவர் மாத்திரம் அல்ல, அவை முன்னவர் மாத்திரம் அல்ல, நாங்களும் கூடத் துடிப்பாக இருக்கிறோம்.

1978 செப்டம்பர் 9] [திரு. மு. கருணாநிதி]

இப்போது பெரியாருடைய நூற்றாண்டு விழாவை ஒட்டி சில கருத்துக்களை நான் இங்கே எடுத்து வைப்பது முறை என்று கருது கிறேன். அதிலே எனக்குள்ள குறைபாடு ஒன்றைத் தெரிவிக்காமல் இருக்க இயலாது. பல குழுக்கள்—அனைத்துக் கட்சிக்களின் குழுக் கள்—அரசின் சார்பிலே அமைக்கப்படுகிறது. அப்படி அமைக் கப்படுகிற நேரத்தில் இந்தக் குழுக்களில் உங்களின் கட்சியின் சார்பாக யார் இடம் பெறுகிறார் என்கின்ற கேள்வியை அந்தக் கட்சியினுடைய தலைவருக்கோ அல்லது பொதுச் செயலாளருக்கோ அல்லது கட்சியினுடைய தலைமை நிலையத்திற்கோ அரசின் சார் பிலே எழுதி, அவர்கள் யார் இதிலே இடம் பெறுகிறார்கள் என்று அறிவித்து, அவர்களை இடம் பெறச் செய்வதுதான் முறையான காரியமாக இருக்க முடியும். ஆனால் பெரியார் நூற்றாண்டு விழாக்குழு என்று ஒன்று அமைக்கப்பட்ட பொழுது எங்களுடைய கட்சியினுடைய தலைமையைக் கலந்து கொள்ளாமலேயே ஒரு உறுப்பினருடைய பெயர் அதிலே குறிப்பிடப்பட்டது. அதற்குப் பிறகு அந்த உறுப்பினர் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இல்லை. அதன் பிறகு கூட நண்பர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களுக்கு தனியாக ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. பெரி யாருடன் நீங்கள் நீண்டகாலம் பழகியவர்கள், எனவே அந்தக் குழுவிலே நீங்கள் அங்கம் வகிக்கவேண்டும் என்று ஒரு கடிதம் செய்தித் துறை வாயிலாக அனுப்பப்படுகிறது, அதற்கு அவர் எழுதிய பதில் நீங்கள் தலைமைக் கழகத்திற்கு எழுதிக் கேட்டால் அவர்கள் மூலமாகத்தான் அவர்கள் என்னை நியமிக்க முடியுமே தவிர, நான் தனிப்பட்ட ஆள் அல்ல, அந்தக் கட்சியிலே ஒரு அங்கம் வகிக்கிறேன், எனவே தலைமைக் கழகத்திற்கு எழுதிக் கேளுங்கள் என்று பதில் அனுப்பினார், அது கூட பத்திரிகைகளிலே செய்தியாக வந்திருக்கின்றது. முறைப்படி இது நடைபெறு மானல் அது பாராட்டத் தக்கதாக இருக்கும். ஆனால் அந்தக் குழுக்களில், அந்தக் கட்சியின் உறுப்பினர் இன்னார் தான் இருக்க வேண்டும் என்று சொல்கிற அந்த உரிமையும் அரசாங்கத்தி னுடைய செய்தித் துறையோ அல்லது அரசாங்கமோ எடுத்துக் கொள்வது நல்லதல்ல என்பதை எடுத்துக் காட்ட நான் இதைக் குறிப்பிடுகிறேன்.

பெரியாருடைய நூற்றாண்டு விழாவைக்கொண்டாடுகிற நேரத்தில் நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புவது எல்லோரும் பல நண்பர்கள் எங்கள் கட்சியின் சார்பிலேயும், மற்ற நண்பர்களும் எடுத்துக் காட்டியதைப் போல இந்த மன்றத்தில் ... பெரியார் அவர்களுடைய படம் திறந்து வைக்கப்பட வேண்டும் என்கின்ற வேண்டுகோளை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக் கின்றேன்.

V211,31N78
V79.20
122132

[திரு. மு. கருணாநிதி] [1978 செப்டம்பர் 9

[பிற்பகல் 12-40]

சிலர் சொல்லக்கூடும், பெரியார் இந்த மன்றத்திலே இருந்தவர் இல்லை. எந்தப் பொறுப்பிலும் இந்த மன்றத்திலே இருந்தவர் இல்லை என்று. வள்ளுவர் இந்த மன்றத்தில் இருந்தவர் இல்லை. எந்தப் பொறுப்பிலும் இந்த மன்றத்தில் இருந்தவர் இல்லை. இங்கே அவைத் தலைவருக்கு மேலே இருக்கிற காந்தி அடிகளும் இந்த மன்றத்தில் இருந்தவர் இல்லை. இந்த மன்றத்தில் எந்தப் பொறுப்பிலும் இருந்தவர் இல்லை. ஆனால் அவர்கள் நம்முடைய மன்றத்தில் இருக்கிற எல்லோருடைய உள்ளத்திலும் இருப்பதைப் போலத்தான் தந்தை பெரியார் அவர்களும் இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்களின் உள்ளத்திலே இடம் பெற்று இருக்கிறார். நம்முடைய உள்ளத்திலே இடம் பெற்று இருக்கும் தந்தை பெரியார் தமிழ் சமுதாயத்தை விழிப்புறச் செய்யவேண்டும் என்று காலமெல்லாம் கடுமையான பிரச்சாரம் செய்தவர், தன்மான உணர்வு தமிழனுக்குத் தேவை என்று எடுத்துச்சொல்லி, அதற்காக எண்ணற்ற இன்னல்களை ஏற்றுக்கொண்ட அந்தக் கிழச் சிங்கத்தின் படம் இந்த மன்றத்தில் திறந்து வைப்பதன் மூலம் பெருமை அடையும், அந்த பணியைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பெரியாரின் 100-வது விழா அன்று சிறைச்சாலையில் இருக்கிற தூக்கு தண்டனை பெற்ற கைதிகளுக்கு, அவர்களுடைய தண்டனையை ஆயுட் கால தண்டனையாக மாற்றலாம். அதைப் போலவே, ஆயுட்கால தண்டனை பெற்ற கைதிகளுக்கு தண்டனை குறைப்புச் செய்யலாம். இந்த இரண்டு தண்டனை இல்லாது வேறு தண்டனை பெற்ற கைதிகளுக்கும் ஓரளவு தண்டனை குறைப்பதன் மூலம் பெரியார் 100-வது விழாவில் ஒரு அடையாளமாக நாம் அந்தக் காரியத்தைச் செய்தோம் என்ற நிலைமை ஏற்படும். அதையும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் அண்மைக்காலமாக விரும்பத்தகாத சில காரியங்கள், சாதிப் பூசல்கள், வகுப்புக் கலவரங்கள், பழனி, விழுப்புரம், பேரணாம்பட்டு, ராணிப்பேட்டை, புதுக்கோட்டை, கோவை போன்ற பல இடங்களில் நடைபெற்று இருப்பது மிக மிக வருந்தத்தக்க ஒன்றாகும். அவற்றைத் தவிர்க்க எல்லாக் கட்சிகளுடைய ஒத்துழைப்பையும் அரசு பெற்றிடவேண்டும். விழுப்புரத்தில் நடைபெற்ற சம்பவம் மிகவும் கோரமான சம்பவம் ஆகும். பன்னிரெண்டு தாழ்த்தப்பட்ட மக்களின் உயிர் பறிக்கப்பட்டது. பல ஏழை எளியவர்களின் வீடுகள் தகர்க்கப்பட்டன. பல பெண்கள் நடுத்தெருவில் நிற்கும் அளவிற்கு அவர்களுடைய உடைமைகளை இழந்து விட்டனர். அவர்களுடைய கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன. அவைகளைத் தடுக்க தக்க நேரத்தில காவல் துறையினர் முன் ஜாக்கிரதையோடு நடவடிக்கை எடுத்து

1978 செப்டம்பர் 9] [திரு. மு. கருணாநிதி]

இருப்பார்களானால் தவிர்த்து இருக்க முடியும் என்ற கருத்தை எதிர்க் கட்சியின் சார்பில் நானும் சரி, மற்ற எதிர்க்கட்சித் தலைவர்களும் சரி எடுத்துக் காட்டி இருக்கின்றோம். நான் விழுப்புரத்திற்குச் சென்றபோது, நான் தங்கி இருந்த விடுதியைச் சுற்றி ஏராளமான பேர் வந்து அவர்களுடைய குறைகளை எடுத்துச்சொன்னபோது நான் அவர்களுக்கு விடுத்த வேண்டுகோள் அமைதியாக இருங்கள், அதிலும் குறிப்பாக நம்முடைய கழகத்தைச் சேர்ந்த நண்பர்களுக்கு நான் சொல்வது எல்லா வகைகளிலும் ஒத்துழைப்பையும், அமைதியையும் ஏற்படுத்துவதற்கு நாம் அரசுக்கு உதவியாக இருக்கவேண்டும் என்ற கருத்தை நான் எடுத்துச் சொல்லி விட்டு வந்தேன். சென்னைக்கு வந்த உடனே நிருபர்கள் கூட்டத்திலே அதே கருத்தைத்தான் நான் எடுத்துச்சொன்னேன். ஆனால் எதற்கெடுத்தாலும் எதிர்க்கட்சியைக் குறை சொல்லவேண்டுமென்று ஆளும் கட்சியில் உள்ள அமைச்சர்கள் அல்லது ஆளும் கட்சியில் உள்ள முன்னணி நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் விழுப்புரம் நிகழ்ச்சியில் திராவிட முன்னேற்றக் கழகம் தூண்டிவிடுகிற போக்கில் நடந்து கொண்டது என்ற நிலையிலே அவர்களுடைய கருத்தை அமைத்துப் பேசினார்களே அல்லாமல் நாங்கள் எடுத்துச்சொன்ன நிலை என்ன என்பதை அவர்கள் புரிந்து கொள்ளத் தவறி விட்டார்கள் என்பதை நான் இங்கே வருத்தத்தோடு மறுபடியும் சொல்லாமல் இருக்க முடியாது.

விழுப்புரம் சம்பவத்தை நேரில் கண்டறிவதற்காக எங்கள் கழகத்தின் சார்பாக பொருளாளர் சாதிக் பாட்சா அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் க. பாலன் அவர்களும் சென்றார்கள். அதற்குப் பிறகு நானும் மற்றவர்களும் விழுப்புரம் சம்பவத்தைப் பார்த்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறச்சென்றோம். செல்வதற்கு முன்பே எங்களுடைய கழகத்தின் விவசாய அணிச் செயலாளர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்களை முன் கூட்டியே விழுப்புரத்திற்குச் சென்று — நாங்கள் திடீரென்று பாதிக்கப்பட்ட இடத்திற்குச் செல்வதால் ஏதாவது சிறு அசம்பாவிதம் ஏற்படுமானால் அதனால் மீண்டும் ஒரு அமளிக்கு வித்திட்ட நிலைமை ஏற்பட்டு விடக்கூடாது என்று — விழுப்புரத்தில் தங்கி இருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் துறை அதிகாரி ஆகியோரை சந்தித்து, நான் வருவதாக எடுத்துச்சொல்லி, அவர்கள் தங்கி இருக்கும் அந்த இடத்திற்கே நான் வந்து சந்திப்பதாகச் சொல்லி, அவர்கள் ஏற்பாடு செய்து இருந்தார்கள். நான் போய் தங்கி இருக்கிற இடத்திற்கு மாவட்ட ஆட்சி தலைவர் வரவேண்டுமென்று நான் சொல்லவில்லை; அப்படி வர வேண்டுமென்று நான் எதிர்பார்ப்பவனும் அல்ல; அப்படி எதிர் பார்ப்பதற்கு நான் ஏமாளியும் அல்ல. எனவே, நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்களை சொல்லி அனுப்பி, அன்று காலையிலே விழுப்புரம் சென்று, அங்கே தங்கியிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைப் பார்த்து, '' எதிர்க்கட்சித் தலைவர் வருகிறார். உங்களிடத்திலே சில விவரங்களைக் கேட்டு, அதன் பிறகு பாதிக்கப்பட்ட இடத்திற்குச் செல்லலாம் என்று இருக்கிறார் '' என்று

சொன்னபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் ''நான் அவர்களுக்கு அனுமதி தர இயலாது, நான் ரவுண்ட் போகிற இடத்தில் வேண்டுமானால் சந்திக்கிறேன்'' என்று நண்பர் கிருஷ்ணமூர்த்தியிடம் சொல்லிவிட்டார்.

அதற்குப் பிறகு இன்னொரு இடத்தில் தங்கி இருந்த எஸ்.பி. அவர்களிடம் கிருஷ்ணமூர்த்தி போய் சொல்லி, ''உங்களைச் சந்திக்க எதிர்க்கட்சித் தலைவர் வருகிறார், அதற்கு வசதி செய்து கொடுங்கள்'' என்று சொன்னபோது, அதற்குப் பதில் சொல்லாமல் அங்கே இருந்து — கருணாநிதி வந்தால் என்ன நடக்குமோ என்ற அச்சத்தின் காரணமாக எப்படியாவது அதைத் தவிர்க்க வேண்டுமென்ற எண்ணத்தில் — ஜீப்பை எடுத்துக்கொண்டு போய் விட்டார். இப்படி மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல் துறை அதிகாரியும் நடந்து கொண்டது மிக மிக வருந்தத்தக்கது, கண்டிக்கத்தக்கது. அரசு நேரடியாக அவர்கள் செய்கையை கண்டிக்காவிட்டாலும், அல்லது ஒப்புக்கொள்ள மறுத்தாலும், அந்த அதிகாரிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று நினைத்தாலும், அவர்களிடம் தனிப்பட்ட முறையிலே எடுத்துச்சொல்லி, இப்படிப் போகக் கூடாது என்ற நிலையை அரசு எடுக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

விழுப்புரத்தில் நடந்ததுபோன்று வேறு பல இடங்களிலும் நடைபெற்றிருக்கின்றன. வடாற்காடு மாவட்டத்தில் பேரணாம்பட்டில் நடந்திருக்கிறது. இப்படிப்பட்ட வகுப்பு கலவரங்கள் இந்துக்களையும் முஸ்லீம்களையும் பொறுத்தவரையில் தமிழகத்தில் அவர்கள் அண்ணன் தம்பிகளாக, சகோதரர்களாக, நல்ல நட்புறவு கொண்டவர்களாக வாழ்ந்துவந்து கொண்டிருக்கிறார்கள். பெரியாருடைய பிரச்சாரத்தாலும் பேரறிஞர் அண்ணா அவர்கள் பணியினாலும், அவர்கள் இருவரோடும் சேர்ந்திருந்த பண்பாளராக கண்ணியமிக்க காயிதே மில்லத் அவர்களின் பெரும் முயற்சியாலும் தமிழ்நாட்டில் இந்து — முஸ்லீம்களிடையே நல்ல சகோதரத்துவம் நிலவி வருகிறது. அது கெடக்கூடிய நிலையில் பேரணாம்பட்டு சம்பவம் நடந்திருக்கிறது. நான் அந்தச் சூழ்நிலைகளைத் திரும்பவும் சொல்லி பிரச்சனையை மேலும் மோசமானதாக ஆக்கிவிட விரும்பாத காரணத்தால் அதன் தொடர்பாக வேறு பிரச்சனைகள் உருவாகக் கூடாது என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பேரணாம்பட்டில் நடந்த கலவரத்தை அடுத்து வடாற்காடு மாவட்டம் முழுவதும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்பே திருவண்ணாமலையில் 27-8-1978-ம் நாளன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்தை நடத்த வேண்டுமென்று அங்குள்ள திராவிட

முன்னேற்றக் கழக நகர அமைப்பு வேண்டுகோள் விடுத்தது அதிகாரிகளிடத்தில், உள்ளூர் அதிகாரிகள் ஒத்துக்கொண்டால் ஏற்றுக்கொள்ளலாம் என்று மேலதிகாரிகள் தெரிவித்தார்கள். உள்ளூர் அதிகாரிகள் அதற்கு ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்ததாக எனக்கு நம்பகமான தகவல் வந்தது. ஆனால் மலதிகாரிகள் கூட்டம் நடைபெற அனுமதிக்கவில்லை. எனவே, 144 தடை உத்தரவை மீறி திருவண்ணாமலையிலே திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம் நடைபெற்று, கோவை இராமநாதன், தேவகி பாண்டியன், முருகையன், தர்மலிங்கம் உட்பட 35 பேர் கைது செய்யப்பட்டு, சம்மன் வரும்போது நீங்கள் வரவேண்டும்; உங்கள் மீது வழக்கு தொடரப்படும் என்று சொல்லி அவர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

நான் இங்கே எடுத்துச்சொல்ல முற்படுவது என்னவென்றால் அப்படியே திருவண்ணாமலையில் திராவிட முன்னேற்றக் கழகக்கூட்டம் நடைபெற்றிருந்தாலும் நான் இங்கே எடுத்துச்சொன்னதைப் போல இந்துக்களும் முஸ்லிம்களும் சகோதரர்களாக வாழ்ந்து வருகிறார்கள்; அந்தச் சூழ்நிலை கெட்டுவிடக்கூடாது என்ற அடிப்படையிலே அந்தக் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் நிச்சயமாகப் பேசியிருப்பார்கள்; அமளியை உருவாக்குகின்ற தன்மையிலும், கலவரம் நடக்க வேண்டுமென்ற தன்மையிலும் பேசியிருக்கமாட்டார்கள். இருந்தாலும் 144 தடை உத்தரவைக் காட்டி 35 பேர்களைக் கைது செய்திருக்கிறார்கள்.

வேடிக்கை என்னவென்றால், அதே நாளில் வந்தவாசியில் பாதிரி என்ற கிராமத்தில் அண்ணா தி.மு.க.வினர் கூட்டம் நடத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கூட்டத்தினுடைய விளம்பர துண்டுத்தாள் என்னிடத்தில் இருக்கிறது. 27—8—1978, வந்தவாசி—அந்தக் கூட்டம் பாதிரி கிராமத்தில் அதே நாளில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆளுக்கொரு நீதி. ஒரு கட்சிக்கு தடை, இன்னொரு கட்சி கூட்டம் நடத்தலாம் என்று அனுமதி. இது அரசின் தலையீடு, அரசியல் நோக்கத்தோடு திட்டமிட்டு செய்யப்பட்டது என்று நான் சொல்லமாட்டேன். அங்கு இருக்கிற அதிகாரிகள் அப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள்; அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய கடமை என்பதால் இங்கே எடுத்துக்காட்டுகிறேன்.

[பிற்பகல் 12—50]

திரு. அ. கு. அரங்கநாதன்: பேரவைத் தலைவரவர்களே, அதே 27 ஆம் தேதி நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் திருவண்ணாமலையில் பேசுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்த நேரத்திலே 144 தடை உத்தரவு போடப்பட்டிருந்தது. கூட்டம் நடத்தக்கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொன்னதன் பேரில் அன்றைக்கு உணவு அமைச்சர் அவர்களின் கூட்டமும் ரத்து செய்யப்பட்டது. ஆனால் அதே

[திரு. அ. க. அரங்கநாதன்] [1978 செப்டம்பர் 9

நேரத்தில் வேலூரிலே ஒரு திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் கூட்டம் ஞானமேடு என்ற பகுதியில் அன்றைக்குக் கூட்டப் பட்டிருக்கின்றது. ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவு சரிவர பல இடங்களுக்கும் செல்லாத காரணத்தாலேயே சில இடங்களில் திராவிட முன்னேற்றக் கழக மற்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள் 27 ஆம் தேதி கூட்டப்பட்டன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: என்னுடைய கருத்துக்கும், என்னுடைய வாதத்துக்கும் வலு சேர்க்கின்ற அளவிற்கு உறுப்பினர் அவர்கள் விளக்கம் அளித்ததற்காக அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். ஒரே மாவட்டத்தில் 144 தடை உத்தரவு போட்டுவிட்டு ஒரு இடத்திலே கூட்டம் நடத்தியவர்களைக் கைது செய்வதும் இன்னொரு இடத்திலே கூட்டம் நடத்தியவர்களைக் கைது செய்யாமல் இருப்பதுமான இந்தப் போக்கு சட்டம், ஒழுங்கு அமைதியைக் காப்பதற்கு அடையாளமாக இருக்குமா என்ற கருத்தைத்தான் சொன்னேன். அரசாங்கத்திலிருந்து அப்படிப்பட்ட ஆணைகள் போனதாக நான் சொல்லவில்லை. அதிகாரிகள் முரண்பாடான போக்குகளை வட ஆர்க்காடு மாவட்டத்திலே கடைப்பிடித்தார்கள் என்றுதான் சொன்னேன். ஒரே மாவட்டத்திலே தடை உத்தரவு என்று போட்டு விட்டு ஒரு இடத்திலே கூட்டம் நடத்துவதும் இன்னொரு இடத்திலே கூட்டம் நடத்தாமல் இருக்கவுமான சூழ்நிலையினை உருவாக்கி இருக்கிறார்கள். அது முறையல்ல என்பதைத்தான் சொன்னேன்.

ஆளுநர் உரையில் மிக முக்கியமாக இந்த ஓர் ஆண்டு காலத்தில், இந்த ஆட்சியில் எந்தத் தலையீடுகளும் கிடையாது, குறுக்கீடுகளும் கிடையாது, முறைகேடுகளும் கிடையாது, ஊழலை எதிர்ப்பதில் ஒரு பெரும் போராட்டமே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பன போன்ற மையக் கருத்துக்கள் எல்லாம் எடுத்துக் கூறப்பட்டு அதை வைத்து ஆளும் கட்சியிலே உள்ள அருமை நண்பர்கள் எல்லாம் இங்கே மிக விரிவாகப் பேசி இருக்கிறார்கள். இங்கே உரையாற்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. அழகர்சாமி அவர்கள் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் பிறப்பித்த ஆணை ஒன்றை மிகச் சுருக்கமாக இங்கே சுட்டிக் காட்டினார்.

தலைவரவர்களே, பெயர்கள் எதுவும் குறிப்பிட்டால் அது இந்த அவையின் மரபுக்கு ஒத்ததாகாது என்று அவைத் தலைவர் ஒரு தீர்ப்பு அளித்திருக்கின்ற காரணத்தால், ஏற்கனவே அளிக்கப் பட்ட தீர்ப்பினை கட்டுக்கொட்டு இருக்கின்ற காரணத்தால் நான் பெயர் எதையும் குறிப்பிட விரும்பவில்லை. ஆனால் நடைபெற்ற முறைகேடு எப்படிப்பட்டது என்பதை நான் இந்த அவைக்கும் நாட்டு மக்களுக்கும் உணர்த்த வேண்டிய இடத்திலே இருக்கி

1978 செப்டம்பர் 9] [திரு. மு. கருணாநிதி]

றேன். 21-6-1978-லே செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் பிறப்பித்த ஆணை இது. அதிலே அவர் சொல்கிறார் 'நேரிலே சென்று பார்வையிட்ட வகையிலேயும் (நான் முழுவதும் படிக்கவில்லை, ஆங்காங்கே இருக்கின்ற குறிப்பிட்ட இடங்களை மாத்திரம் மொழி பெயர்த்துப் படிக்கின்றேன்) நேரிலே சென்று பார்வையிட்ட வகையிலேயும் விசாரித்த வகையிலேயும் இப்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள திரிசூலம் அண்ணா அரிசன் புளூ மெட்டல் வொர்க்கர்ஸ் கோ-ஆப்பரேடிவ் சொசைட்டியினர் அதனுடைய தலைவரின் சொற்படி சர்வே நம்பர் 25/2பி என்ற அரசாங்க நிலத்தில் அரசாங்கத்தின் ஒப்புதலோ கலெக்டரின் ஒப்புதலோ இல்லாமல் கல் வெட்டத் தொடங்கி இருக்கிறார்கள். அஃதன்னி யில் திரு. வி. குப்புசாமி ஐயர் என்பவர் குத்தகைக்கு எடுத்துள்ள இடத்திலேயும் அந்த சொசைட்டியினர் கல்லை வெட்டி இருக்கி றார்கள். இந்தத் தவறு நடைபெற்றது என்பதை துணைத் தலைவர் விசாரணையில் ஒப்புக்கொண்டிருக்கிறார். இப்படி அந்த சொசைட்டியின் தலைவர் நடந்து கொண்டது டிரஸ்பாஸ்—

The quarrying is illegal and illicit. Nothing prevented the President of the Society.

கலெக்டர் மேலும் சொல்கிறார்,

The President has allowed his people to commit the offence of illicit quarrying and trespass. The offence committed is grave and taking law into one's hands should not be encouraged.

நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அடிக்கடிச் சொல் கிறார்கள். சட்டம் அதன் கடமையைச் செய்யும், சட்டத்தை யாரும் தன் கையில் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று. ஆனால் கலெக்டர் தன் உத்தரவில் சொல்கிறார்,

the offence committed is grave and taking law into one's hands

இந்தக் குற்றத்திற்கு எதிராக கலெக்டர் அவர்கள் முக்கியமாக என்ன குறிப்பிடுகிறார்கள் என்பதை, அதை ஆங்கிலத்தில் படிக்கி றேன், taking a lenient view.

இந்தக் குற்றத்திற்கு எதிராக அவர்கள் எடுக்கிற ஆக்ஷன், நட வடிக்கைகள், lenient view.

2,470 லாரி லோடுகள் இல்லிஸிட் முறையில் எடுக்கப் பட்டிருக்கின்றன,

Pending decision on the offence and trespass, I compound the offence of illicit quarrying of blue metal jelly of 2,470 lorry loads and order recovery of Rs. 33,345.

அதற்கு அபராதம், 'லீனியன்ட் வ்யூ' எடுத்த காரணத்தால், ஏன், 'லீனியன்ட் வ்யூ' எடுத்தார்கள் என்று தெரியவில்லை—ஒரு சொசைட்டி, அங்கீகரிக்கப்படாத சொஸைட்டி, அங்கீகரிக்கப்படாத சொஸைட்டியின் தலைவர் அங்குள்ள எல்லா நிலங்களிலும் புகுந்து விளையாடிச் செல்கிறார். எல்லாக் கற்களையும் எடுக்கச் சொல்கிறார்கள். அரசாங்க நிலங்களிலுள்ள கற்களை மட்டும் அல்ல, இன்னொருவர் குத்தகைக்கு எடுத்திருக்கிற நிலங்களிலும் இவர்களது ஆட்கள் தங்குதடையின்றி செல்கிறார்கள். அவரை எதுவும் தடுக்க முடியாது என்று கலெக்டரே கண்ணீர் விடுகிறார். இந்த ஆர்டரை போட்டு விட்டு கலெக்டர் இந்தப் பணத்தை 15 நாட்களுக்குள் கட்டவேண்டும் என்று அண்ணா ஹரிஜன ப்ளூ மெட்டல் கூட்டுறவு சொஸைட்டி தலைவருக்கு உத்தரவிட்டிருக்கிறார். இந்த உத்தரவு 21—6—78-ல் இடப்பட்டு இருக்கிறது. பணம், ரூ. 33,000, 2,470 லாரி லோடுகள். உரிய விலைதானா என்று எனக்குத் தெரியாது. 'லீனியன்ட் வ்யூ' எடுத்திருக்கிற காரணத்தால் குறைந்த விலையாகக்கூட இருக்கலாம். அதுவும் கட்டப்பட்டதா இல்லையா என்று தெரியவில்லை. யார் அந்த சொஸைட்டியின் தலைவர்? அவர்கள் ஆளும்கட்சியின் ஒரு பொறுப்பான பதவியில் இருப்பவர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்று சொல்லப்படுகிற நிலையில் நான் கேட்க விரும்புகிறேன். கவர்னர் அவர்களது உரையில், நிர்வாகத்தில் எந்தவிதமான தலையீடும் இல்லை, எந்தவிதமான ஊழலும் இல்லை, ஊழலை எதிர்த்துப் போராடுகிறோம் என்று சொல்லி, 2,470 லாரி லோடுகளை அவருக்கு உரிமை இல்லாத அரசாங்கத்தினுடைய இடத்திலும், இன்னொருவர் குத்தகைக்கு எடுத்திருக்கிற இடத்திலும் நுழைந்து அவற்றை திருட்டுத்தனமாக, 'இல்லீகல்', 'இல்லிஸிட்' என்று கலக்டரே ஒத்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு எடுத்திருக்கும் முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன என்று நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கழக ஆட்சிக் காலத்தில் மருத்துவக் கல்லூரியிலோ அல்லது என்ஜினீயரிங் கல்லூரியிலோ அட்மிஷன் விஷயத்தில் யாராவது ஒரு மாணவர் வழக்குமன்றத்திற்கு சென்றுவிடுவாரேயானால், நீதிமன்றத்திற்கு சென்றுவிடுவாரேயானால் அது பெரிய பூதாகாரமாகப் பேசப்பட்டு பார், பார், ஊழல், ஊழல் என்று சொல்லி முழக்கமிடுவது இன்றைக்கு ஆளும் கட்சி எதிர்க்கட்சியாக இருந்தபோது வாடிக்கையாகக் கொண்டிருந்த ஒரு விவகாரம். நான் தங்களிடம் இன்றைக்கு சுட்டிக்காட்ட விரும்புவது, மருத்துவக் கல்லூரி மாணவர்களுடைய தேர்வெண்கள் சென்ற ஆண்டு

திருத்தத்தோடு வெளியிடப்பட்டன. டைப் செய்யும்போது இது தவறாகச் செய்யப்பட்டு விட்டது என்று கூறி திருத்தத்தோடு சென்ற ஆண்டு வெளியிடப்பட்டன. அதைப்பற்றி பிரச்னைகள் அப்போது எழுந்தன. அதற்கு சில விளக்கங்கள், சமாதானங்கள் தரப்பட்டன. அதே தவறு இந்த ஆண்டும் நடைபெற்றிருக்கிறது. அந்தத் தவறை விட்டுவிடுவோம். அதற்கு அரசாங்கச் சார்பில் என்ன சமாதானம் வேண்டுமானாலும் சொல்லட்டும், மருத்துவக் கல்லூரி மாணவர்களின் தேர்வுப் பட்டியல்கூட வெளியிடப்படுவதில் தாமதம். இந்த அரசாங்கம் தாமதத்தில் ஒரு மிக முக்கியமான இடத்தை வகித்து வருகிறது. அதற்காக அவசரம் வேண்டும் என்று சொல்லமாட்டேன். தாமதத்திற்கும் அவசரத்திற்கும் இடையில் விரைவு என்று ஒன்று இருக்கிறது. அதை இந்த அரசு கடைப்பிடிக்கவில்லை என்பதுதான் என்னுடைய குறைபாடு, என்னுடைய குற்றச்சாட்டு விரைவாக முடிவுகள் எடுக்கப்படாமல் பல்கலைக் கழக துணை வேந்தர்கள் பதவிகள், சென்னைப் பல்கலைக் கழகமானாலும் சரி, மதுரைப் பல்கலைக் கழகமானாலும் சரி இவற்றிற்கு யாரை நியமிப்பது என்பதிலிருந்து மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பட்டியல், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் பட்டியல் வெளியிடுகிற வரையில் பெரும் தாமதத்தை நாம் இன்றைக்குக் காண்கிறோம். அதிலும் மருத்துவக் கல்லூரி தேர்வு பெறாத சில மாணவர்கள் நாங்கள் அதிக எண்களைப் பெற்றிருக்கிறோம், நாங்கள் தகுதி படைத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று கூறி நீதி மன்றத்தில் வழக்காடச் சென்றிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-00).

என்ஜினீயரிங் கல்லூரியை எடுத்துக் கொண்டால் ஒரு பெரிய விபரீதமான வேடிக்கை நடைபெற்றிருக்கிறது. என்ன வேடிக்கை என்றால் முதலில் தேர்வுப் பட்டியல் வெளியானது. அதில் 95 சதவிகிதம் மார்க்குகள் வாங்கிய ஒரு இஸ்லாமிய மாணவன் தன்னை தேர்ந்தெடுக்கவில்லை என்று வழக்கு போட்டார். அந்த வழக்கு நீதிமன்றத்திற்கு வந்தபோது, அரசாங்கத்தின் சார்பில் வாதாடிய அரசாங்க வக்கீல் என்ன கூறினார் என்றால், அரசாங்கத்தின் சார்பில் என்ன எடுத்து வைக்கப்பட்டது என்றால், 'இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட்' எழுதியவர்கள் அதிக மார்க்குகள் வாங்கியிருக்கலாம். நாங்கள் வைத்திருக்கின்ற தேர்வு கமிட்டியினுடைய கொள்கை என்னவென்றால், இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க்குகள் வாங்கியவர்களைத் தேர்ந்தெடுப்பதில்லை என்பது தேர்வு கமிட்டியினுடைய கொள்கை என்று அரசாங்க சார்பில் வாதாடிய அரசாங்க வக்கீல் எடுத்துக் கூறியிருக்கிறார். இவ்விதம் வாதாடி முடித்துவிட்ட பிறகு தான் உண்மை தெரிந்திருக்கிறது. இதே போன்று இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க் வாங்கிய இன்னொரு மாணவரைத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். அவர் யார் என்றால், ஜி. கோவர்த்தனன். என்ப

வர், தேர்ந்தெடுக்கப்பட்ட எண். 13793. இந்த எண்ணுள்ளவர் 'இம்ப்ரூவ்மெண்ட் டெஸ்ட்' எழுதி அதிக மார்க்கு வாங்கியவர் அவர் எஞ்சினீயரிங் காலேஜ்-க்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்- தேர்ந்தெடுத்துவிட்ட பிறகு, இம்ப்ரூவ்மெண்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க்கு வாங்கிய மாணவன் தான் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று உயர்நீதிமன்றத்திற்கு வந்த பின்னால், அதன் மீது அரசாங்க வக்கீல் இம்ப்ரூவ்மெண்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க்கு வாங்கியவர்களைத் தேர்ந்தெடுப்பதில்லை என்பது தேர்வுக் கமிட்டியின் கொள்கை என்று நீதிமன்றத்தில் வாதாடுகிறார்கள். தீர்ப்பு வேறு விதமாக அமைந்தது. அது வேறு விஷயம்.

இருப்பினும் நீதிமன்றத்தில் அரசாங்க வக்கீல் உண்மைக்கு மாறாக சொல்லி விட்டதால், அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக கோவர்த்தனன் என்பவர் 13703 என்ற எண் வெற்றி பெற்றுள்ளதாக பத்திரிகையில் வெளிவந்துவிட்ட பிறகு, சேலம் எஞ்சினீயரிங் கல்லூரியில் சேர்வதற்காகச் செல்கிறார். ஆனால் அங்கே இவரை சேர்க்காதே என்று உத்தரவு போகிறது. என்ன காரணம் தெரியுமா? இம்ப்ரூவ்மெண்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க்கு வாங்கியவர்களைத் தேர்ந்தெடுப்பதில்லை என்பது தேர்வு கமிட்டியினுடைய கொள்கை, இது அரசாங்கத்தினுடைய கொள்கை என்று நீதிமன்றத்தில் அரசாங்க வக்கீல் வாதாடி இருக்கிறார். ஆனால் இம்ப்ரூவ்மெண்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க் வாங்கிய ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். தேர்ந்தெடுத்த பிறகு சேலம் எஞ்சினீயரிங் கல்லூரியில் சேருவதற்கு அவர் செல்லும் போது, அவரை அங்கே சேர்க்காதே என்று சொல்லுவதற்கு காரணம் ஏற்கனவே இம்ப்ரூவ்மெண்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க் வாங்கியவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் இம்ப்ரூவ்மெண்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க் வாங்கியவரை சேர்த்துக்கொள்ள முடியாது. இதன் அடிப்படையில் அரசாங்க வக்கீல் நீதிமன்றத்தில் வாதாடியிருக்கிறார். அந்த வாதத்திற்கு முரணாக அமைந்துவிடக் கூடாது என்பதற்காக இம்ப்ரூவ்மெண்ட் டெஸ்ட்டில் அதிக மார்க்கு வாங்கிய மாணவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். ஆகவே இடித்துக் கொண்டு போய் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த மாணவரைத் தடுத்திருக்கிறார்கள். இப்படி பெரிய குழப்பம், துக்ளக் தர்பார் என்று சொல்வார்கள். ஆனால் சரித்திர ஆசிரியர்கள் அதற்கு மாறுபடுகிறார்கள். ஆனால் இங்கே அதற்கு வியாக்கியான வடிவமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மாணவனும் இப்போது தன்னை செலக்ட் செய்ய வேண்டும் என்று நீதிமன்றத்திற்குச் சென்றிருப்பதாகக் கேள்வி.

இப்படிப்பட்ட பெரியதொரு குழப்பம், நிர்வாகத்தில் நேர்வு முறையில் ஏற்பட்டிருக்கிறது. இவைகளை நான் இந்த அவையில் எடுத்துச் சொல்வதின் மூலமாக பொதுமக்களுக்கு மட்டுமல்ல, அரசாங்கத்திற்கும் எடுத்துச் சொல்லிக்கொள்வதோடு, இவ்வளவு தவறுகளையும் வைத்துக் கொண்டு எதிர்க்கட்சியிலுள்ளவர்களைப் பார்த்து, அடிக்கடி ஊழல் ஊழல் என்றும், முறைகேடு முறைகேடு என்றும் சொல்லிக் கொண்டிருப்பதில் பொருள் இருக்க முடியுமா என்று எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக மிக முக்கியமான ஒரு விஷயத்தை, உடனடியாக நடவடிக்கை எடுத்து பரிசீலிக்க வேண்டிய விஷயத்தை ஒரு விசாரணைக் கமிஷன் வைத்தால் அந்த விசாரணை கமிஷனில் நானே சாட்சியங்களை கொண்டு வந்து நிரூபிக்க முடியும் என்கிற ஒரு விஷயத்தை இந்த அவைமுன் எடுத்து வைக்க விரும்புகின்றேன். செங்கற்பட்டு மாவட்டத்தில் புட்லூர் என்கிற கிராமம். திருவள்ளூர் தாலூகாவில் இருக்கிற கிராமம். இதன் அருகாமையில் முருக்கஞ்சேரி இடத்தில் கூவம் ஆறு இருக்கிறது. இங்கு மணல் குத்தகை விடுகிற முறை முன்னால் இருந்து வந்தது. இந்த முறையை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் நிறுத்திவிட்டோம். ஏனென்றால், குத்தகை மூலம் மணலை ஏராளமாக கொண்டு போய் விடுவதால், அங்கேயுள்ள பம்பு செட்டுகளுக்கு வரவேண்டிய நீரோட்டம் கெட்டு விடுகிறது என்று விவசாயிகள் முறையிட்டார்கள். அதற்காக கழக அரசு காலத்தில் அந்த முறை தடை செய்து நிறுத்தப்பட்டது. ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பதவிக்கு வந்த பிறகு 15-7-1977-ல் முன்பு கழக அரசால் விவசாயிகளுக்கு சாதமாக எடுக்கப்பட்ட முடிவை மாற்றி விவசாயிகளுக்கு பாதகம் ஏற்படும்படியான அளவில், இந்த முருக்கஞ்சேரி பகுதியில் மணல் எடுக்கின்ற குத்தகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை டி.எம். தண்டபாணி என்பவர் 30,100 ரூபாய்க்கு ஏலம் எடுத்திருக்கிறார்.

அவர் இப்போது இல்லை; இறந்து விட்டார். அவர் அகில இந்திய அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்தவர். கொல்லப்பட்டு விட்டார் என்பதை நான் எடுத்துச் சொல்லும்போது, அவர் தி.மு.க. வாக இருந்தாலும் அல்லது அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வாக இருந்தாலும் அல்லது வேறு எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், கொல்லப்பட்ட ஒருவர் எந்தச் சூழ்நிலையில் கொல்லப்பட்டார்? ஆனால் அந்தக் கொலை எந்த அளவிற்கு மறைக்கப்பட்டிருக்கிறது என்பதை இம் மாமன்றத்தின் மூலமாக அரசுக்கு எடுத்துச் சொல்வதன் மூலம், பரிகாரம் கிடைக்கும் என்பதற்காக எடுத்துச் சொல்கிறேன். அந்த தண்டபாணி என்கிற ஏலம் எடுத்தவருக்கும், ஆளும் கட்சியிலே உயர்பதவியில் இருக்கும் எம்.எல்.ஏ. -க்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அந்தக் குத்தகை சம்பந்தமாக, பண தொடர்புகளும் இருந்திருக்கின்றன. அதற்கு என்னிடத்தில் ஏராளமான ஆதாரங்கள்

[திரு. மு. கருணாநிதி] [1978 செப்டம்பர் 9

இருக்கின்றன. தண்டபாணி அனைத்திந்திய அண்ணா தி.மு.க.
வின் ஆதரவாளர் என்பதற்கு அவரே அனைத்திந்திய அண்ணா
தி.மு.க.வில் சந்தா செலுத்தி, ரசீது பெற்றிருக்கிறார். அனைத்
திந்திய அண்ணா தி.மு.க. தலைமைக் கழகத்தின் காசாளர்
கையெழுத்திட்டு, ரசீதும் கொடுத்திருக்கிறார். அந்த அளவிற்கு
இறந்துவிட்ட தண்டபாணி அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆதர
வாளர்தான். திடீரென்று அவர் அந்த மணல் குத்தகை எடுத்து,
நிறையப் பணம் சம்பாதித்தார். ஒரு நாள், 6–5–1978 அன்று
வெளியே சென்றவர் வீட்டுக்கு திரும்பவில்லை. இரண்டு நாட்
கள் காணவில்லை. வீட்டிலே உள்ளவர்கள் போலீஸாரிடம் முறை
யிடுகிறார்கள். பிறகு, 9-ஆம் தேதி 'மாலை முரசு' பத்திரிகையில்,
அந்தப் பகுதியில் குளத்திலே ஒரு பிணம் மிதந்தது, அது
ஜி.எச். க்கு கொண்டு வரப்பட்டு அடையாளம் தெரியாத பிணம்
என்ற செய்தி வருகிறது. 9–5–1978 அன்று அந்தச் செய்தியைப்
படித்தவுடன், தண்டபாணி குடும்பத்தினர் ஆவடி போலீஸ்
ஸ்டேஷனுக்குச் சென்று விசாரிக்கிறார்கள். அவர்கள் சொல்
கிறார்கள் பிணம், ஜி.எச். -லே இருக்கிறது, அங்கே போய் பாருங்
கள் என்று சொல்லுகிறார்கள். உடனடியாக, தண்டபாணியின்
உறவினர்கள் ஜி.எச். -க்குச் சென்று, சவத்தைப் பார்த்து, அது
தண்டபாணி தான் என்று அடையாளம் கண்டுபிடிக்கின்றார்கள்.
பிறகு, சவம் அவர் வீட்டாரிடம் ஒப்படைக்கப்படுகிறது. அதைக்
கொண்டுவந்து, அவர் கிராமமான புட்லூர் கிராமத்தில் தகனம்
செய்துவிடுகிறார்கள்.

அதற்குப் பிறகு, அவர்கள் ஜி.எச். க்குச் சென்று
அவரது உறவினர்கள் தண்டபாணி பிரேத பரிசோதனையின்
சர்டிபிகேட் கேட்கின்றார்கள். அதற்கு ஜி.எச். தந்த பதில் என்ன
தெரியுமா? அடையாளம் தெரியாத பிணங்களுக்கு, விதிப்படி
சர்டிபிகேட் கொடுப்பது பழக்கமில்லை என்று சொல்லிவிடுகிறார்
கள். நான் எழுப்புகின்ற கேள்வியெல்லாம், அச்சவத்தை குறிப்
பிட்ட அந்த வீட்டாரிடம் எப்படிக் கொடுத்தார்கள்? அவர்கள்
அடையாளம் கண்டு பிடித்த பிறகு, அவர் என்னுடைய கணவன்,
அவர் என்னுடைய அண்ணன், மாமன், மைத்துனர் என்றெல்
லாம் சொல்லிய பிறகு, அச்சவத்தைக் கொடுத்துவிட்ட பிறகு,
ஜி.எச்.-லே சர்டிபிகேட் கேட்கும்போது, அடையாளம் தெரியாத
பிணத்திற்கு விதிப்படி சர்டிபிகேட் தரமாட்டோம் என்று
சொல்லுகிறார்கள். பிறகு 10 நாட்கள் கழித்து, தண்டபாணி
யின் விதவை மனைவி சக்குபாய் அவர்தம் வீட்டிலே இருக்கின்ற
பீரோவிலே சில கடிதங்களைக் காண்கிறார். அந்தக் கடிதங்கள்
எல்லாம் தண்டபாணி கைப்பட எழுதப்பட்டவை. அதிலே
என்ன எழுதியிருக்கிறது என்றால், தான் எடுத்த மணல் குத்தகை
விவரத்தையும் தனக்கும் ஆளும் கட்சி எம்.எல்.ஏ. -க்கும்
இடையே இருந்த பணத் தொடர்பு பற்றியும், தனக்கும் அந்த
எம்.எல்.ஏ. -க்கும் ஏற்பட்ட பகை பற்றியும் குறிப்பிட்டு, கைப்
பட கடிதம் எழுதியிருக்கிறார், கவர்னர் அவர்களின் விலா
மிட்டு.

1978 செப்டம்பர் 9] [திரு. மு. கருணாநிதி]

ஆளும் கட்சி எம்.எல்.ஏ. வுக்கு முதலில் கார் வாங்க 20,000
கொடுத்தேன் என்று கைப்பட எழுதியிருக்கிறார்கள். அதன்
போட்டோ-ஸ்டாட் காப்பியும், கடிதமும் என்னிடம் இருக்
கின்றன. அடிக்கடி மிரட்டியதன்பேரில், ரூபாய் 8,000-ம்,
அதற்குப் பிறகு ரூபாய் 2,000-ம் ஆகமொத்தம் ரூ. 30,000
தான் ஆளும் கட்சி எம்.எல்.ஏ. வுக்கு கொடுத்திருக்கிறேன் என்று
தண்டபாணி கைப்பட எழுதியிருக்கிறார். பணவிவகாரத் தகராறு
ஏற்பட்டு, இந்தக் கடிதம் 30–1–1978-ல் அவர் கைப்பட
எழுதப்பட்டு, பீரோவில் இருக்கிறது. அந்த எம்.எல்.ஏ. வினால்
தன் உயிருக்கு எந்த நேரத்தில் ஆபத்து ஏற்படலாம் என்று அவர்
கைப்பட எழுதியிருக்கிறார். அவர் பயந்தவாறு, அவர் உயிருக்கு
ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. மேலும், அவர் துண்டுத் தாளில்
சில கணக்குகளை எழுதியிருக்கிறார். அதைப் படித்தால், எப்படி
ஊழலற்ற ஆட்சி நடைபெறுகிறது என்ற உண்மையை உணர்ந்து
கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

(பிற்பகல் 1–10)

கணக்குப் பட்டியல்—

1–4–1978—திருப்பதிக்கு 6,000 ரூபாய்; அது ஆள் பெயரோ
அல்லது திருப்பதி உண்டியலில் போட்டாரோ எனக்குத்
தெரியாது. எம்.பி.-க்கு 4,000 ரூபாய்; எந்த எம்.பி. தெரியாது,
பெயர் இல்லை. எங்கள் கட்சியில் ஒரே ஒரு எம்.பி. தான் இருக்
கிறார்—ஆசைத்தம்பி. ஆர்.டி.ஓ. வுக்கு 1,750 ரூபாய்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> தலைவர் அவர்களே,
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில விவரங்களை
இங்கே தருகிறார்கள். அவை குற்றச்சாட்டுகள் என்ற வகையில்
அமைகின்றன. நேற்றையதினம் மாண்புமிகு அமைச்சர் சோம
சுந்தரம் அவர்கள் சில விவரங்களைச் சொல்கிறபோது அந்த
விவரங்களை அவர் நம்புகிறாரா என்பதுதான் முக்கியம் என்
கிறார்கள். ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
யார் வேண்டுமானாலும் எதையாவது ஒன்றை எழுதி வைத்து
விட்டால் அதை இங்கு வந்து படிப்பது சரிதானா?

<u>திரு. மு. கருணாநிதி :</u> இறந்து போனவருடைய மரண
வாக்கு மூலம் போல் இருக்கிறது. அவருடைய கைப்பட எழுதிய
கடிதத்தைத்தான் படிக்கிறேன். ஃபோட்டோஸ்டட் காப்பி
யைக் கூட நம்பாமல், அவர் கைப்பட எழுதிய கடிதத்தையே
வாங்கி, அவர் டில்லிக்குச் சென்றிருந்தபோது மனைவிக்கு எழுதிய
கடிதம், தபாலில் வந்த கடிதத்தோடு ஒத்திட்டுப்பார்த்து இவ்வளவு
ஆதாரங்களோடு வைத்திருக்கிறேன். நான் அதற்குப் பொறுப்
பேற்றுக் கொள்கிறேன். அவருடைய துணைவியாரும், சகோதர

ரும் வந்து என்னிடத்தில் ஒரு மனுவைக் கொடுத்து இதை அரசாங்கத்திடம் சொல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். உங்கள் மீது குற்றம் சொல்லவில்லை. எந்தக் கட்சியிலும் தவறு செய்பவர்கள் இருக்கக்கூடும். நான் இதற்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். ஒரு விசாரணை வைக்கப்படுமானால் அந்த விசாரணையில் இவ்வளவு சாட்சியங்களையும் கொண்டு வந்து தந்து பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஹெட் கிளார்க்கு 150 ரூபாய் ; தாலூகா ஆபீசில் 500 ரூபாய் ; தாலூகா ஆபீஸ் ஹெட் கிளார்க்குக்கு 200 ரூபாய். இதெல்லாம் லஞ்ச ஊழல் இல்லையா, ஆட்சியின் தலையீடு இல்லையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

திருப்பதிக்கு 6,000 ரூபாய் ; எம்.பி.க்கு 4,000 ரூபாய்; ஆர்.டி. ஓ. வுக்கு 1,750 ரூபாய் ; ஹெட் கிளார்க்குக்கு 150 ரூபாய் ; தாலூகா ஆபீசில் 500 ரூபாய் ; தாலூகா ஆபீஸ் ஹெட்கிளார்க்குக்கு 200ரூபாய். இப்படியெல்லாம்மணல் குத்தகை விஷயமாக பல பண புழக்கங்களைச் செய்யவேண்டிய அவசியத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள்.

8-6-1978 அன்று ஐ.ஜி. ஆப் போலீசுக்கு இறந்த தண்டபாணியின் மனைவி சக்குபாய் நீண்ட கடிதம் எழுதி யார் கொலை செய்திருக்கக்கூடும் என்று குறிப்பிட்டிருக்கிறார். இறந்த தண்டபாணி மனைவி சக்குபாய், கொலைக்கு யார் காரணமாக இருக்கக் கூடும் என்று கூறுகிற விஷயம் பற்றி, கைப்படக் கடிதம் எழுதி இதுவரை ஐ.ஜி. ஆப் போலீஸ் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? ஏன் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை?

ஒருவர் கொலை செய்யப்பட்டார் அல்லது தற்கொலை செய்து கொண்டார். பிணம் குளத்தில் மிதந்தது ; சந்தேகங்கள் எழுகின்றன என்ற உடனே அந்த வீட்டைப் போலீசார் சோதனையிட்டிருக்க வேண்டாமா? தடயங்கள் கிடைக்குமா என்று பார்த்திருக்க வேண்டாமா? அப்படிப் பார்த்திருந்தால் தடயங்கள் கிடைத்திருக்காதா? ஆனால் பார்க்காததும் நல்லது என்று கருதுகிறேன். பார்த்து தடயங்கள் கிடைத்திருந்தால் என்ன கதியாகி இருக்குமோ தெரியாது. இப்போது தடயங்கள் என்னிடத்தில் இருக்கின்றன. இந்த நேரத்தில் இதற்காக விசாரணை வைக்கப்படுமானால் அவற்றைத் தரத் தயாராக இருக்கிறேன்.

அதே நேரத்தில் நம்முடைய அவை முன்னவர் மூலமாக நம்முடைய முதலமைச்சர் அவர்களையும் போலீஸ் இலாகாவையும் கேட்டுக்கொள்ள விரும்புவது இந்தப் புகாரை இறந்த தண்டபாணியின் மனைவி என்னிடத்தில் கொண்டுவந்து கொடுத்து விவரங்களைக் கூறிய காரணத்தால் சக்குபாய் குடும்பத்திற்கு என்ன ஆபத்து ஏற்படுமோ என்ற பெரும் அச்சத்திற்கு ஆளாகியிருக்

கிறார்கள். அவர்களுடைய அச்சத்தைப் போக்கும் வகையில் இந்த அரசு அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் அந்தக் குடும்பத்திற்கே கூட பல தொல்லைகள் இந்த விவரங்கள் இங்கே கொடுக்கப்பட்ட காரணத்தால் ஏற்படக்கூடும் என்பதால் அந்தக் குடும்பத்தைப் பாதுகாக்கக்கூடிய பொறுப்பை ஐ. ஜி. ஆப் போலீஸ் மூலமாக அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே, ஊழலற்ற ஆட்சி, முறைகேடு எதுவும் இல்லாத ஆட்சி. புனிதமான ஆட்சி, உத்தமமான ஆட்சி என்றெல்லாம் கூறி, அடிக்கடி, கவர்னர் உரையாக இருந்தாலும் சரி, பட்ஜட் பிரசங்கமாக இருந்தாலும் சரி, எந்த நேரத்திலும் ஊழலை எதிர்த்துப் போராடுகிறோம், போராடுகிறோம் என்று கூறிக் கொண்டு இவ்வளவு ஊழல்களை தன்னகத்தே வைத்துக் கொண்டு இருக்கும் ஆட்சி இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை இங்கே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்
ஒன்றைச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியும் திராவிட முன்
னேற்றக் கழகமும் இணைந்து விட்டதைப் போல் அவர்களாகவே
கற்பனை செய்து கொண்டு " இணையலாமா ? " என்று கேட்டார்
கள். வேடிக்கை என்னவென்றால் அவர்களும் எங்களோடு சேர
மாட்டார்களாம், நாங்களும் யாரோடும் சேரக்கூடாதாம். இது
என்ன வாதம் ? அதற்குப் பெயர் விதண்டாவாதம் தானே
தவிர வேறு பெயர் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் ஒன்று,
கொள்கை ரீதியில் திராவிட முன்னேற்றக் கழகமும், மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சியும் முரண்பாடு கொண்டவையல்ல. டெல்லி
மாநிலங்கள் அவையிலே நண்பர் ராமமூர்த்தி அவர்களும் திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாறனும் மற்றவர்களும் ஒரு
திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். அது 356-வது பிரிவு
அரசியல் சட்டத்திலே இடம் பெறக் கூடாது என்ற திருத்தமாகும்.
356-வது பிரிவின்படி எந்த நேரத்திலேயும் மாநில அரசைக்
கலைத்துவிட்டு—கவர்னர் சிபாரிசு செய்தாலும் செய்யாவிட்டா
லும் கூட—குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தலாம்
என்ற நிலை இருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்திலே இருந்த
நிலை இப்போதும் நீடித்துக் கொண்டிருக்கிறது. அந்த 356-வது
பிரிவு இருந்து கொண்டிருக்கிறது. நினைத்தாலும் குடியரசுத்
தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தலாம் என்ற நிலை இருக்கக்
கூடாது என்ற திருத்தத்தை அளித்து, அந்தத் திருத்தத்தை
திராவிட முன்னேற்றக் கழகம், முஸ்லீம் லீக், மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பார்வர்ட் பிளாக்
கட்சி, ஆதரித்து வாக்களித்திருக்கிறார்கள். மாநிலங்களுக்கு அதிக
அதிகாரங்கள் வேண்டுமென்ற கோரிக்கை எழுப்புவதிலே தன்னை
யும் ஈடுபடுத்திக் கொண்டிருக்கிற அகில இந்திய அண்ணா திராவிட

[திரு. மு. கருணாநிதி] [1978 செப்டம்பர் 9

முன்னேற்றக் கழகம் அந்தத் திருத்தத்தை ராஜ்ய சபாவிலே, மாநிலங்கள் அவையிலே, எதிர்த்து இருக்கிறது, இதை நான் ஆளுங்கட்சிக்கு அல்ல, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு நினைவு படுத்தி இந்த அளவில் என்னுடைய உரையை முடிக்கிறேன்.

10. அரசினர் தீர்மானம்.

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, இன்று பகல் 12-30 மணி அளவில் பார்வையாளர் மாடத்திலிருந்து பேரவைக்குள் துண்டு பிரசுரம் வீசி குரல் எழுப்பிய (1) திரு. அப்புக்குட்டன், மற்றும் (2) திரு. அனந்தபத்மநாபன் ஆகியோரின் செயல் கண்டிக்கத்தக்கதும், அவையை அவமதிப்பதும் ஆகும். எனவே இது குறித்து தீர்மானத்தை முன்மொழியும்படி மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

இன்று, 9-9-1978, பகல் 12-30 மணியளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டறிக்கைகளை பேரவைக்குள்ளே வீசி எறிந்து, குரல் எழுப்பிய காரணத்தால் காவலில் வைக்கப்பட்டுள்ள அம்பத்தூரைச் சேர்ந்த திரு. ராமன் குட்டி என்பவரின் மகன் திரு. ஆர். அப்புக்குட்டன். என்று கூறிக்கொள்பவரும், அம்பத்தூரைச் சேர்ந்த திரு. சங்கரன் என்பவரின் மகன் திரு. அனந்தபத்மநாபன் என்று கூறிக்கொள்பவரும் பெருங் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச் செயல் பேரவையை அவமதிக்கும் பெருங் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது. அவர்கள் இருவரும் ஏழு நாட்கள் வெறுங்காவல் தண்டனை (Simple imprisonment) அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்றும் இப்பேரவை தீர்மானிக்கிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, 7 நாட்கள் சிம்பிள் இம்பிரிசன்மெண்ட் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நேற்று இதே மாதிரி சம்பவம் நடைபெற்றபோது நேற்றும் குரல் எழுப்பட்பட்டது, துண்டுப் பிரசுரம் போடப்பட்டது, நேற்றைக்கு நான் புரிந்துகொண்டவரைக்கும் நேற்றைய தினம் சாயங்காலம் வரைக்கும் தான் தண்டனை என்று. இன்றைக்கும் அதே மாதிரி நடந்திருக்கிறபோது அதே நபர் அல்ல, அதே நபராக இருந்தால் புரிந்துகொள்ளலாம்—வேறு நபர் அப்படிச் செய்கிறபோது 7 நாட்கள் சிம்பிள் இம்பிரி

1978 செப்டம்பர் 9] [திரு. ரா. உமாநாத்]

சன்மெண்ட் என்று சொல்வது பாகுபடுத்துவது ஆகும். தீர்மானத்தை வைத்திருக்கிறார்கள், அதை எதிர்ப்பதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. இந்த அவையே பாகுபடுத்தி நடத்துகிறது என்ற முறையிலே அப்படிப்பட்ட இம்பரஷனை, இமேஜை வெளியே இருக்கக்கூடிய மக்களுக்கு ஏற்படுத்தும், இந்தத் தீர்மானத்தைத் திருத்தினால் நான் ஏற்றுக்கொள்கிறேன், இல்லாவிட்டால் என் கட்சியின் சார்பாக நான் இதை எதிர்க்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நம்முடைய மன்றத்தில் இப்படிப்பட்ட முறைகள் ஏற்கத்தக்கவையல்ல. ஆனால் இந்த முறைகளை மேற்கொண்டவர்கள் இந்த மன்றத்திலே மிக முக்கியமான இடங்களில் இன்றைக்கு வீற்றிருக்கிறார்கள். நேற்றைய தினம் நம்முடைய அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்தபோது அதை அனைவரும் ஆதரித்தோம். ஆனால் தொடர்ந்து இதே காரியம்—மாலை 5 மணி வரைக்கும் தானே நமக்குத் தண்டனை, மாலை 5 மணிக்கு மேல் நாம் வீட்டுக்கு செல்லலாம்—என்ற முறையிலே இதே மாதிரி நடைபெற்றுக் கொண்டிருப்பது முறையானதல்ல, அனுமதிக்கத்தக்கதும் அல்ல.

[பிற்பகல் 1-20.]

இன்று துண்டு நோட்டீஸ் விழும், நாளை வேறு ஏதாவது விழும். ஆகவே, இதை ஆளுங்கட்சி கொண்டுவந்த தீர்மானம் என்று எடுத்துக் கொள்ளாமல் அனைவருக்கும் ஏற்புடைய ஒன்று என்ற அளவிற்கு நம்முடைய மாண்புமிகு முன்னவரவர்கள் என்னுடைய கருத்துக்களையும், திரு. உமாநாத் அவர்களின் கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டு, இந்த ஏழு நாட்கள் என்பதை மூன்று நாட்கள் என்று குறைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிந்த பொழுது எனக்கு ஏற்பட்ட உணர்வுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று திரு. உமாநாத் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நேற்றைக்கு நடந்த சம்பவத்திற்கு மாலை ஐந்து மணி வரை என்று தண்டனை விதித்துவிட்டு, அதே குற்றத்தைச் செய்த அவர்கள் அல்ல வேறு நபர்களுக்கு ஏழு நாட்கள் தண்டனை வழங்குவதா என்று கேட்டு, இப்படிப் பிரித்துப் பார்ப்பது நல்லது அல்ல என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பிரச்னை அதுவல்ல.

பிரச்னை, நமது எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எடுத்துச் சொன்னபடி நேற்றைக்கு ஐந்து மணியோடு இந்த விஷயம் முடிந்துவிட்டது என்ற உணர்வைப் பெற்றுக் கொண்டு இருக்கின்ற நண்பர்கள் தொடர்ந்து, ஐந்து மணியோடு விட்டு விடுவார்கள் என்று கருதிகொண்டு இந்தக் காரியத்தில் முழு மூச்சோடு பல்வேறுபட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் ஈடுபடுவார்களேயானால் இந்த அவை எங்கே சென்று நிற்கும்? இதற்கு

எப்படிப்பட்ட ஒரு முடிவு கிடைக்கும்? கடமைகளை நாம் எப்படி ஆற்றப் போகிறோம்? சில பேர்களுக்காக வாதாடுவதை நான் கூடாது என்று சொல்லவில்லை. ஆனால் அவையை அவமதிக்கும் அளவிற்கு நடைபெறுகின்ற பயங்கரமான இப்படிப் பட்ட குற்றங்களைக் கண்டிப்பதற்கு நாம் தயங்கவே கூடாது, அப்படிக் கண்டிப்பதற்கு நாம் தயங்கி, அவர்களுக்குப் பாது காப்பு அளிக்கின்ற முயற்சியில் ஈடுபடுவோமேயானால் நிச்சயமாக இந்தக் குற்றம் புரிபவர்கள் மேலும் ஊக்கம் பெற்று இந்தக் காரியத்தில் ஈடுபடுவதற்கு அது வழிவகையாக அமைந்துவிடும் என்பதை உமாநாத் அவர்களுக்குச் சொல்லி, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசும் பொழுது, பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவில் என்னென்ன சலுகைகளைக் கைதிகளுக்கு வழங்க வேண்டுமென்பதைப்பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்கள், அதை அப்படியே நான் ஏற்றுக்கொண்டு பேசுகிறேன் என்று அருள் கூர்ந்து கருதிவிடாதீர்கள்; அவரது கருத்து முதலமைச்சருக்குத் தெரிவிக்கப்படும், அந்த உணர்வோடு நான் ஒன்றுகின்ற நேரத்தில் காம்ப்ரமைஸ் ஃபார்முலாவாக, ஏழு நாட்கள் என்பதை மூன்று நாட்களாகக் குறைத்து, அந்த மூன்று நாட்கள் வெறும் காவல் தண்டனை விதிக்க வேண்டுமென்று நான் முன்மொழிவதை அவை வரவேற்க வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவை முன் உள்ள கேள்வி : "இன்று 9-9-1978, பகல் 12-30 மணியளவில சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டறிக்கைகளை பேரவைக்குள்ளே வீசி எறிந்து, குரல் எழுப்பிய காரணத்தால் காவலில் வைக்கப்பட்டுள்ள அம்பத்தூரைச் சேர்ந்த திரு. ராமன் குட்டி என்பவரின் மகன் திரு. ஆர். அப்புக்குட்டன் என்று கூறிக்கொள்பவரும், அம்பத்தூரை. சேர்ந்த திரு. சங்கரன் என்பவரின் மகன் திரு. அனந்தபத்மநாபன் என்று கூறிக் கொள்பவரும் பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச் செயல் பேரவையை அவமதிக்கும் பெருங்குற்றம் என்று இப் பேரவை தீர்மானிக்கிறது.

அவர்கள் இருவரும் மூன்று நாட்கள் வெறுங்காவல் தண்டனை (Simple Imprisonment) அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டுமென்றும் இப்பேரவை தீர்மானிக்கிறது."

தீர்மானம் திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> கவர்னர் உரை மீதான பொது விவாதத்தில் இறுதிக் கட்டமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 12 ஆம் தேதி மாலை 4 மணி அளவில் பதில் உரைப் பார்கள்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 1978ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11-ஆம் நாள் திங்கட் கிழமை காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-23 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும் : இல்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்:

28. மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. சி. மனோகரன் அவர்கள் 1978ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 8ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 1978-79 ஆம் ஆண்டின் முதலாம் துணை மதிப்பீடுகளை அளித்து ஆற்றிய உரை. (தமிழ்—ஆங்கிலம்).

*29. 1978–79 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ்—ஆங்கிலம்).

*30. 1978–79 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைகள் பற்றிய அறிவிப்பு (தமிழ்—ஆங்கிலம்).

---

*8–9–1978 அன்று பேரவைமுன் வைக்கப் பெற்றது.

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட் கிழமை, 1978 செப்டம்பர் 11

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

அண்ணா சிலை அலங்காரம்

* வினா எண் 126—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அண்ணா பிறந்த நாள் விழாவின் போது அண்ணாசாலையிலுள்ள அறிஞர் அண்ணா சிலை தமிழக அரசின் செலவில் அலங்காரம் செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதற்கு ஏற்பட்ட செலவு என்ன?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டில் மேடை அலங்காரத்திற்காக ரூ. 2,200-ம் மின் அலங்காரத்திற்காக ரூ. 6,074-ம் ஆக மொத்தம் ரூ. 8,274 செலவிடப்பட்டது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய 70-வது பிறந்தநாள் விழாவும் அண்மையிலே நடைபெற இருக்கிறது. எனவே, நமது அரசு அந்தப் பெரியவர்கள் இருவருடைய சிலைகளும்—தமிழகத்திலே உள்ளவை அரசு பராமரிப்பிலே உள்ளன; அதைப் போலவே ஸ்தல ஸ்தாபனங்களுக்குட்பட்டுள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய சிலைகளுக்கும் இந்த நூற்றாண்டு விழாவை யொட்டி, பல பகுதிகளிலும் அலங்காரங்கள் செய்திட அரசு ஆவன செய்திட முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

[1978 செப்டம்பர் 11

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, அண்ணு பிறந்த நாள் விழாவின்போது அண்ணு சாலையிலுள்ள அண்ணு சிலை தமிழக அரசின் செலவில் அலங்காரம் செய்யப்பட்டதா என்பது மூலக் கேள்வி. ஆதலால், தனிக் கேள்வி போட்டவும்.

திரு. பொ. விஜயராகவன்: பேரவைத் தலைவரவர்களே, இதுபோல் வருகின்ற அக்டோபர் 2-ஆம் தேதி தேசத் தந்தை காந்தியடிகளுடைய பிறந்தநாள் விழா வருகின்றது. இதற்கு முன்னுலே பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய பிறந்தநாள் விழாவும் வந்திருக்கிறது. அவைகளுக் கெல்லாம் அரசு செலவில் அலங்காரம் செய்யப்பட்டதா? இனிமேல் செலவு செய்யப்படுமா? அவ்வாறு செலவு செய்யப்பட்டால், செலவுத் தொகை எவ்வளவு என்பதைத் தெரிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, நடப்பு ஆண்டுகளில் அண்ணு பிறந்த நாளை முன்னிட்டு அண்ணு சாலையிலுள்ள அண்ணுசிலைக்கும், காந்தி ஜயந்தியை முன்னிட்டு மெரிஞவில் உள்ள காந்தி சிலைக்கும் மூன்று நாட்களுக்கு ஒவ்வொரு முறையும் அதாவது செப்டம்பர் 14-லிருந்து 16 வரையிலும் அக்டோபர் 1-லிருந்து 3-வரையிலும் மின்விளக்கு அலங்காரம் செய்ய ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ரூ. 5,000-க்கு உட்பட்டு செலவு செய்ய அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய, அண்ணு அவர்களுடைய சிலைகளை அலங்காரம் செய்வது வரவேற்கத்தக்கது. தந்தை பெரியார் அவர்களுடைய நூற்றுண்டு விழாவையொட்டி, சிறையில் இருக்கும் மரண தண்டனை பெற்றிருக்கிற கைதிகளின் மரண தண்டனையைக் குறைத்து, ஆயுள் தண்டனையாக ஆக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகின்றேன்.

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணு அவர்கள் பெருந்தலைவர் என்பதோடு முன்னுள் முதலமைச்சர் என்கின்ற அடிப்படையிலே அவருடைய சிலையை அலங்காரம் செய்வது வரவேற்கத்தக்கது. அதேபோல் முன்னுள் முதலமைச்சர்கள் பி. எஸ். குமாரசாமி ராஜா, ராஜாஜி போன்றவர்களுடைய சிலைகளையும் அரசாங்கச் செலவிலே—எங்கே இருந்தாலும்—அலங்காரம் செய்ய அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

978 செப்டம்பர் 11]

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, அவர்களுடைய விழாக்களையும் அரசே ஏற்று நடந்த முயற்சி எடுத்தால், இந்தச் செலவையும் அரசே ஏற்றுக் கொள்ளும்.

Allotment of houses for Legislators.

* Q. No. 127 THIRU—K. SUPPU : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(a) whether it is a fact that the houses available for Legislators within the Government Estate have been allotted to Government Officials ; and

(b) if so, the reasons therefor ?

திரு. எம். வின்செண்ட : (அமைச்சரின் பேரவைச் செயலர்)

(அ) இல்லை.

(ஆ) பிரச்சினை எழவில்லை.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்ற
உறுப்பினர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட வீடுகள் இப்பொழுது அரசு
அதிகாரிகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரே வித்தியாசம்
இப்பொழுது எதிர்க் கட்சியிலே நாங்கள் இருக்கிருேம்.
எங்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகள் எமர்ஜன்சியின்போது அதிகாரி
களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் இல்லை யென்று
சொல்கிருர்கள். கிச்சன் பிளாக்கில் வி-2 எண்ணுள்ள வீடு
அதிகாரிக்கு ஒதுக்கப்பட்டிருப்பது அமைச்சருக்குத் தெரியுமா?
ஆகவே, மறுபடியும் லெஜிஸ்லேட்டர்களுக்கு ஒதுக்க அரசாங்கம்
முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்):
பேரவைத் தலைவரவர்களே, சென்னை அண்ணு சாலையிலுள்ள
அரசினர் தோட்டத்தில் 231 குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் 155
குடியிருப்புகள் கடைநிலை ஊழியருக்கும், ஒரு குடியிருப்பு சபாநாய
கருக்கும் உரியவை. எஞ்சியுள்ள 75 குடியிருப்புகளில், 10 குடி
யிருப்புகள் சட்டமன்றப் பேரவை/மேலவை உறுப்பினர்களுக்கென
அரசாணை (நிலை) எண். 1634, பொதுப்பணித் துறை, நாள்
27—5—1959-ல் ஒதுக்கப்பட்டுள்ளன.

சட்டமன்ற மேலவை/பேரவை உறுப்பினர்களுக்கென ஒதுக்கப்
பட்ட 10 குடியிருப்புகளும் கீழ்க்கண்ட உறுப்பினர்களுக்கு
வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா,
மாண்புமிகு திரு. ஏ. ஆர். மாரிமுத்து, மாண்புமிகு
திரு. மார்க்கபந்து மாண்புமிகு திரு. ஏ. திராவிடமணி.
மாண்புமிகு திரு. ஜி. சுவாமிநாதன், மாண்புமிகு திரு. துரை
கோவிந்தராசன், மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்,

[1978 செப்டம்பர் 11

மாண்புமிகு திரு. ஏ. கே. வில்வம், மாண்புமிகு திரு. ஜே. ஜேம்ஸ், திருமதி ருக்மணி வரதராஜுலு, ஆகிய 10 பேர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

மற்றும் அரசு அலுவலர்களுக்குள்ள வீடுகளில்தான் 4 வீடுகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. அவை திரு. கூத்தகுடி சண்முகம், திரு. பி. எலயந்தா, எம்.எல்.சி., திரு. ஏ. தங்கவேலு, எம். எல். சி., மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, துணை சபாநாயகர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட சில வீடுகள் அதிகாரிகளின் வீடுகளுக்கு இடையிடையே மாட்டி நிற்கிறது. அது இருவருக்கும் அசௌகரியமாக இருக்கிறது. ஆகவே அதிகாரிகளுக்குத் தனியாகவும், சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தனியாகவும், அவரவர்களுடைய வேலைகள் ஒழுங்காக நடைபெறுவதற்கு வசதியாக ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் இந்த வீடுகளைச் சட்டமன்ற உறுப்பினர்கள் எடுக்கிறபோது பழைய எலக்டிரிசிடி அரியர்ஸ் யாராவது வைத்திருந்தால் அது புது ஆக்குபன்டிடம் வசூலிக்கப்படுகிறது. அது நிறுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உள்ளங்கள், உணர்வுகள் பரிசீலிக்கப்படும்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினர் தோட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிற வீட்டிற்கு சட்டமன்ற உறுப்பினராகிய, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நானும் அதற்கான விண்ணப்பத்தைப் போட்டிருக்கிறேன். அதுகுறித்து பரிசீலனை செய்யப்படுமா? காரணம் அந்த வீடு என்னுடைய சேப்பாக்கம் தொகுதியிலே இருக்கிறது. ஆகவே அரசு இதைப் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, கட்சியின் அடிப்படையில் கட்சியின் தலைவர்கள் கேட்டுக் கொள்வதற்கிணங்க வீடுகள் வழங்கப்படுகின்றன. அந்த அளவில் அந்தந்தக் கட்சியின் உறுப்பினர்களின் எண்ணிக்கை விகிதத்தில் வழங்கப்படுகிறது. அதன்பேரில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அந்தப் பரிசீலனையில் வந்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.

திரு. துரை முத்துசாமி: தலைவர் அவர்களே, அரசினர் தோட்டத்தில் வீடு ஒதுக்கப்பட்டதிலே மேலவை உறுப்பினர் ஒருவர் வசித்துள்ள வீட்டினை அவருடன் இன்னொருவர் தங்கியிருக்

1978 செப்டம்பர் 11]

கிறார் என்பதற்காக ரத்துசெய்ய உத்தரவிடப்பட்டதாக அறிகிறேன். அதைப்போல திரு. துரை கோவிந்தராசன் அவர்களுடன் பால்ராஜ் என்பவரும், மார்க்கபந்து அவர்களுடன் துரைசாமி என்பவரும் தங்கியிருப்பதாக அறிகிறேன். அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி தகவல் இல்லை, விசாரிக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, அண்ணாசாலையில் உள்ள அரசினர் தோட்டத்தில் நமது மாண்புமிகு அமைச்சரின் பேரவை செயலர் அறிவித்ததுபோல கட்சித்தலைவர்களுக்கு மட்டும் வீடுகள் வழங்கப்பட்டிருப்பதைப் போல அல்லாமல் உறுப்பினர் களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தவறு என்று சொல்ல மாட்டேன். ஆளுங்கட்சிக் கொரடாவுக்கும் கூட வீடு வழங்கப் பட்டிருக்கிறது.

எதிர்க்கட்சியை மதிப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே எதிர்கட்சிக் கொரடாவுக்கும்—ஏனென்றால் வேறு யாரும் கேட்க வில்லை ஆகையால் நானே கேட்கிறேன்—வீடு அளிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, கட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்றுநான் கூறவில்லை. கட்சித் தலைவர்களுடைய வேண்டுகோளுக் கிணங்க அந்தக் கட்சியின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது என்றுதான் குறிப்பிட்டேன்.

கோடாறங்குளம், சிவந்திபுரம் இனாம் கிராமங்கள்.

*வினா. எண்128—திரு. மெ. ஆண்டி அம்பலம் திரு. சோ. அழகர்சாமி மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுக்கா இனாம் கோடாறங்குளம் கிராமம், சிவந்திபுரம் கிராமங்கள் அரசினரால் இனாம் ஒழிப்பு சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டபின் கோர்ட்டு மூலம் கமிஷனர் நியமிக்கப்பட்டு குடிகளிடம் மேல் வாரம் வசூலிக்கப்பட்டு வருவது சம்பந்தமாக அரசு பரிசீலனை செய்ததா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை,

[1978 செப்டம்பர் 11

திரு. மெ. ஆண்டி அம்பலம்: இனிமேலாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, கேள்விக்கே இடம் இல்லை என்று சொல்லியிருக்கிறேன். இனி மேல் அதைப் பற்றி நடவடிக்கை எடுக்கும் நிலை வரவில்லை. இருந்தாலும் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இரண்டு கிராமங்களைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் தாலுகாவில் இனும் கோடாறங்குளம், சிவந்திபுரம் என்ற இரு கிராமங்களைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். இந்தக் கிராமத்தில் இனாமை ரத்து செய்து முன்னாலேயே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதிலும் கோடாறங்குளம் என்ற கிராமத்தை அரசு எடுத்துக் கொண்டு எல்லோருக்கும் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. சிவந்திபுரம் என்னும் கிராமத்தை அரசு எடுத்துக் கொள்ள முடியாமல் உயர்நீதி மன்றத்தில் வழக்கு இருக்கிறது. அதைப்பற்றி நடவடிக்கை எடுப்பதற்கு அரசுக்கு உத்தேசம் இல்லை.

[முற்பகல் 9-10]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கிராமங்களிலே கமிஷன்கள் மூலம் வாரம், குத்தகை வசூலிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அவர்களுக்குத் தவறான தகவல் அளிக்கப்பட்டு இருக்கிறது. அந்த இரண்டு கிராமங்களிலும் கமிஷன் நியமிக்கப்பட்டு வாரங்கள் வசூலிக்கப் பட்டு வருகின்றன. அது என்னுடைய தொகுதியில் இருக்கிறது. கோடாறங்குளம் முன்னாள் உறுப்பினர் சங்குமுத்துத் தேவர் அவர்களின் சொந்த ஊர். சிவந்திபுரம் என்னுடைய சொந்த ஊர். நேரடியாகவே நாங்கள் பல முறை எடுத்துச் சொல்லி இருக்கிறோம். சட்டப்படி அங்கே சரியாகச் செய்யப்படவில்லை. பல கொடுமைகள் நடந்து இருக்கின்றன. இந்தச் சம்பவத்தைப் பற்றி விசாரித்து அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, அங்கே வாரம் வசூலிப்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவரவர்களே, பழைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களிடத்திலும், தற்போதைய சட்ட அமைச்சர் அவர்களிடத்திலும் அது சம்பந்தமாக முறைகேடுகள் இருக்கின்றன என்று மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே, அதற்கான பைல்களை வரவழைத்து அவைகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

1978 செப்டம்பர் 11]
மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர
வர்களே, கொடுக்கப்பட்ட மனுக்கள் எல்லாம் பரிசீலனைக்கு அனுப்
பப்பட்டு இருக்கின்றன. அவை மீது விரைவில் முடிவு எடுக்கப்
படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன்,

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவரவர்களே, கோடாறங்
குளம் என்ற ஊர் இனும் ஒழிப்பின் கீழ் அரசு எடுத்துக்
கொண்டதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். சிவந்திபுரம்
என்ற ஊர் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதையும் குறிப்
பிட்டார்கள். மேல்வாரம் வசூலிப்பதாக எங்கள் கட்சித் தலைவர்
திரு. சோ. அழசர்சாமி அவர்கள் கூட எடுத்துக் கூறியிருக்கிறார்
கள். ஆகவே, மேல்வாரம் வசூலிக்கப்படுகிறதா இல்லையா
என்பதை அமைச்சரவர்கள் தெளிவுபடுத்த வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு
தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிடுகிறபோது அதை
விளக்கமாகத் தெரிவித்து இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்
அதைச் சரியாக கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். இரண்டு
கிராமங்களைப் பற்றியும் சொல்லி, ஒரு கிராமம்—கோடாறங்குளம்
எடுத்துக்கொள்ளப்பட்டது என்றும், வேறொரு கிராமம் எடுத்துக்
கொள்ளப்படவில்லை என்றும்— அதன் மீது வழக்கொன்று உயர்
நீதிமன்றத்தில் இருக்கிறது என்றும் தெரிவித்து இருக்கிறேன்.
துணைக்கேள்வி கேட்கிறபோது மேல் வாரம் வசூலிக்கப்படுகிறதா
என்று கேட்டார்கள். மேல்வாரம் வசூலிக்க அதிகாரம் இல்லை
என்றும், அப்படி வசூலித்தால் தகவல் கொடுத்தால் நடவடிக்கை
எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டேன். தகவல் கொடுக்கப்பட்டு
இருக்கிறது என்று சொன்னார்கள். அதைப் பற்றி நடவடிக்கை
எடுத்துக்கொண்டு இருக்கிறேன் என்றும் சொன்னேன். அதற்கு
மேலும் என்ன பதில் தேவை என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத்
தலைவரவர்களே அப்படி ஏற்கனவே கொடுக்கப்பட்ட மனுவின்
காப்பி ஒன்றை உங்கள் மூலமாக நான் அமைச்சர் அவர்களிடத்
தில் கொடுத்து விடுகிறேன். உடனடியாக அரசு நடவடிக்கை
எடுக்கமுன் வருமா என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே,
முதலிலே கொடுக்கப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்
பட்டு வருகிறது. மீண்டும் மனுக்கள் கொடுத்தாலும் அதை
ஆராய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியில் நிலவரி நிலுவை

*வினா எண் 129—திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை மாநகராட்சியிலிருந்து பத்து பசலி ஆண்டுகளுக்கும் மேலாக நிலவரி ரூ. 2.85 லட்சம் வர வேண்டுமென்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் என்றால், அதை வசூலிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகராட்சி அரசுக்குச் செலுத்த வேண்டிய பாக்கி கணக்கிடப்பட்டு வருகிறது. அதற்காக 10-7-1978 அன்று அங்கே உள்ளவர்கள், எல்லாம் கூடிப் பேசி ரூ. 2 லட்சம் முன் பணமாக கொடுக்கவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. அவர்களும் செலுத்தி இருப்பார்கள் என்று கருதுகிறேன். அதைப் பற்றி மற்றவைகளை எல்லாம் ஆராய்ந்து, எவ்வளவு வர வேண்டும் என்பதைக் கணக்கிட்டு, அரசுக்கு வர வேண்டிய பணத்தை நிச்சயமாக வசூல் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான காலி இடங்களில் வீட்டு மனை இடங்கள் அதிகமாக இருக்கின்றன. அதற்குரிய நில வரியை அரசுக்குச் செலுத்தாமல் மாநகராட்சி கடந்த 10 ஆண்டுக் காலமாக இருந்து வருகிறது. ஆகவே, அந்த இடங்களைக் கைப்பற்றி வீடு இல்லாதவர்களுக்கும், நிலம் இல்லாதவர்களுக்கும் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. என்றாலும், மாநகராட்சி மூலம் அரசுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது, எவ்வளவு வீடு கட்டியிருக்கிறார்கள், எவ்வளவு மனை காலியிருக்கிறது என்பதற்குத் தனியாகக்கேள்வி கேட்டால் அதற்குப் பதில் சொல்ல முடியும். எப்படியிருந்தாலும், அரசு அவற்றை ஆராய்ந்து, அரசுக்கு வர வேண்டிய பணத்தை வசூல் செய்யத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன்: தலைவரவர்களே, மாநகராட்சியிலிருந்து வர வேண்டிய நிலவரியைப் பொறுத்தவரையில் இரண்டு இலட்சம் ரூபாய் வர வேண்டியதிருப்பதாகவும் அது கிடைத்து விடும் என்றும் மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதுபற்றி மாநகராட்சியைக் கேட்டபோது அவர்கள் என்ன பதில் கொடுத்திருக்கிறார்கள் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, அவர்கள் தருவதாக ஒப்புக்கொண்டதாக பதில் இன்னும் வரவில்லை.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, சாதாரண ஜனங்கள் இடத்தில் இப்படி வரி பாக்கியிருந்தால் ஜப்தி நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கிறார்கள். இந்த பாக்கி 10 வருஷமாக இருக்கிறது. இப்படி 10 வருஷமாக விட்டு வைத்திருப்பதற்கு எந்த அதிகாரி பொறுப்பு? ஏன் இப்படி 10 வருஷமாக விட்டுவைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது? அதற்கு எந்தச் சர்க்கார் காரணம்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, 10 வருஷம் ஏன் விட்டு வைத்தார்கள், யார் பொறுப்பு என்று கேட்கிறார்கள். அதிகாரிகள் இப்போது பல்வேறு இடங்களில் இருக்கிறார்கள்; சென்னையிலும் இருக்கிறார்கள். இருந்தாலும் இப்படி எதிர்காலத்தில் நடக்கக் கூடாது என்று சொல்லப் பட்டிருக்கிறது. அவர்களுடைய குற்றம் பெரிதாக இருந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடம்.

*வினா எண் 130—திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சியில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: ரூ. 41.85 இலட்சம் மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்ட வருவாய் வாரியம் அனுப்பியுள்ள செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. சதாசிவம்: தலைவரவர்களே, இந்தச் செயற்குறிப்பை உடனடியாகப் பரிசீலித்து, விரைவில் கட்டடத்தைக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, ஆண்டுதோறும் புதிதாக வருவாய்த் துறையில் கட்டடம் கட்ட அரசுக்குக் குறிப்பு அனுப்பப்படுகிறது. வருவாய்த் துறைக்கு எவ்வளவு பணம் ஒதுக்குகிறார்களோ அதைப் பொறுத்து, எந்த எந்த இடத்தில் உடனடியாகக் கட்டடம் கட்ட வேண்டிய தேவை இருக்கிறதோ அதை உத்தேசித்து கட்டடம் கட்ட அரசு முயற்சி செய்யும்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, புதிய கட்டடம் அதே சுற்றமைக்குள் கட்டப்பட இருக்கிறதா அல்லது வேறு இடத்தில் கட்டப்பட இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அது பற்றி விபரம் இல்லை.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, புதிதாகக் கட்டப்படும் இந்தக் கட்டடம் 'காண்ட்ராக்ட்டுக்கு' விடப்படுமா அல்லது அரசுத் துறையிலிருந்து கட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இன்னும் பணமே ஒதுக்கப்படவில்லை. பணம் ஒதுக்கீடு செய்த பிறகு அது பற்றி யோசிக்கப்படும்.

திரு. கூ. ச. முருகேசன் : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சி மன்றம் அங்கே அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அதைப் போல, திருச்சியில் தாலுக்கா அலுவலகம் மங்கம்மா காலத்தில் கட்டப்பட்ட கட்டடத்தில் இருக்கிறது ; அதையும் மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அங்கு மட்டுமல்ல, மாநிலத்திலே பல இடங்களில் தாலுக்கா அலுவலகங்கள் பழைய கட்டடங்களில் இருக்கின்றன. அவையெல்லாம் 10 ஆண்டு, 20 ஆண்டு, 30 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டவைகள். அப்படிப்பட்ட பழைய கட்டடங்களை எல்லாம் அரசு ஆராய்ந்து பார்த்து, எந்தக் கட்டடம் மிகப் பழையதாக இருக்கிறது ; எந்தக் கட்டடம் போதுமான அளவில் இல்லை ; எந்தக் கட்டடம் புயல் வந்தால் விழுந்து விடும் என்பதைப் பார்த்து, அதற்கு முதலில் கட்டடம் கட்ட முன்னுரிமை அளிக்கப்படும். இதற்கு, முன்னால் இருந்த அரசும் அந்த வகையில் நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று நினைக்கிறேன். இந்த அரசு வந்தவுடனேயே, எல்லாத் தாலுக்கா அலுவலகங்களையும் ஒரே நேரத்தில் புதுப்பிப்பது என்பது முடியாத ஒன்று என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் 40 லட்சம், ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டிருப்பதை விட முதலில் பல்வேறு வட்டாரங்களில் குறைந்த செலவில் புதிய கட்டடங்களைக் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா? இப்போது பல புதிய வட்டாரங்களை அமைத்து இருக்கிறோம். அவைகளுக்கு எந்தவிதமான அலுவலகமும் இல்லாமல் 15 மைல், 20 மைல் தூரத்திலிருக்கிற பழைய அலுவலகத்திலேயே பணிகள் நடைபெறுகின்றன. அதனால் முறை

யாக வேலை நடக்கவில்லை. ஆகவே, தாலுக்காவில் அல்லது அந்தந்த வட்டாரத்தில் அலுவலகமும், பணியாளர் குடியிருப்பும் கட்ட 5 லட்சம், 10 லட்சம் ரூபாய் ஒதுக்கி செயல்படுத்தும் திட்டத்தை இந்த அரசு உருவாக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அலுவலர்கள் எல்லாம் அலுவலகத்திற்குப் பக்கத்திலேயே குடியிருக்க வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையில் அலுவலர்களை— மாவட்ட அலுவலகம், வட்டார அலுவலகம் அல்லது பிர்க்கா அலுவலகம் போன்றவைகளில் பணியாற்றக்கூடியவர்களை அவர்கள் பணியாற்றும் அலுவலகத்திற்குப் பக்கத்திலே குடியிருக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் இன்று அல்ல 10, 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழக்கத்தின் காரணமாக பல்வேறு இடங்களிலிருந்து அலுவலகங்களுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அதை உடனடியாக மாற்ற முடியாது. இருந்த போதிலும் மாற்ற முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இடத்தைப் பொறுத்தவரையில் அரசுக்கு இருக்கும் நிதி வசதியைப் பொறுத்து ஒன்றன்பின் ஒன்றாக அலுவலர்களுக்குக் குடியிருப்பு கட்டிக் கொடுக்க இந்த அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Air-strip near Palani.

* Q. No. 131—THIRU S. GANESAN : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state :—

(a) whether the Hindu Reglgious and Charitable Endowments Administration has incurred expenditure for laying an air-strip near Palani during February-March, 1977; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

அரசுத்தரப்பு நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள்.

* வினா எண் 132—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசுத் தரப்பில் பிரச்சார நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்துபவர்களை தேர்ந்தெடுக்கப் பின்பற்றப்படும் நடைமுறை விதிகள் யாவை ?

[1978 செப்டம்பர் 11

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அரசின் சார்பாக நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான குழுக்களி டமிருந்து விண்ணப்பங்கள் கேட்டு தினசரி பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிடப்பட்டது. மேற்படி விண்ணப்பங்கள் நேரடியாக இயல் இசை, நாடக, மன்றச் செயலாளருக்கு வரப்பெற்றன. அவரது பரிந்துரைகளின் அடிப்படையில் நாடகக் குழுக்களின் பட்டியலை அரசு முடிவு செய்தது.

[முற்பகல் 9-20]

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இதற்கு முந்தைய ஆட்சியிலே கூட அரசுத் தரப்பிலே பிரச்சார நாடகங்களை நடத்து பவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போது புதிதாக உருவாகி இருக்கின்ற இந்த அரசு முந்தைய அரசு கொடுத்திருந்த அனுமதி ரத்து எதையேனும் செய்து விட்டதா? ஆமெனில் அதற்கான காரணம் என்ன என்பதை அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, அனுமதி என்பது எப்போதுமே நிரந்தரமாக எந்தக் குழுக்களுக்கும் தரப்பட்டிருக்கவில்லை. அவ்வப்போதுதான் தேர்ந்தெடுக்கப்பட்டு தரப்படுகிறது. அந்த முறையிலே இப்போது பல்வேறு குழுக் களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்ததில் அவற்றைப் பரிசீலனை செய்து இயல், இசை, நாடக மன்றச் செயலாளர் 40 குழுக் களின் பெயர்களைத் தந்தார்கள். அவற்றில் 20 குழுக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே, அரசு தரப்பில் பிரச்சார நாடகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு அதன் மூலம் இதுவரை எத்தனை நாடகங்கள் அனுமதி பெற்று இருக்கின்றன என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, சென்ற ஆண்டு 20 குழுக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, ஒரு குழுவுக்கு 5 நாடகங்கள் வீதம் 100 நாடகங்கள் அனுமதி பெற்றிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்த மாதிரி அரசுத் தரப்பிலே நடத்தப்படும்போது மதுவிலக்கு பிரச்சாரத் திற்காக பேரறிஞர் அண்ணா எழுதிய நல்லதம்பி, போன்ற கதைகள் பயன்படுத்தப்பட்டன. அது போன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் இயற்றிய நாடகங்களை நமது அரசுத் தரப்பிலே நடத்துவதற்கு, நடித்துக் காண்பிப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1978 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, நிச்சயமாக அறிஞர் அண்ணாவினுடைய நாடகங்களில் இது போன்ற குறிப்பிட்ட கருத்துக்களைக் கொண்ட பிரச்சார நாடகங்கள் பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆலயங்களில் உயிர்ப்பலி

* வினா எண் 133—திரு என். பழனிவேல்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்திலுள்ள சிறு சிறு கோவில்களில் சில முக்கிய நாட்களில் உயிர்ப்பலிகள் (ஆடு, மாடு, எருமை, கோழி) செய்யப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு?

(இ) அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:

(அ) கோயில்களிலும், கோயில்களைச் சார்ந்த இடங்களிலும் உயிர்ப்பலி செய்யப் படுவதில்லை.

(ஆ) & (இ) வினாக்கள் எழவில்லை.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவரவர்களே, பொதுவாக நமது நாட்டிலுள்ள கிராமங்களில் பல கோயில்களில் பரவலாக இன்றையதினம் உயிர்ப்பலிகள் கொடுப்பது என்பது சர்வ சாதாரணமாக நடந்து கொண்டு வருகிறது. அமைச்சரவர் கள் பதில் சொல்லும்போது அப்படி ஒன்றுமே இல்லை என்று சொல்கிறார். இது நமக்குப் பெரிய ஆச்சரியமாக இருக்கின்றது. ஆகவே இந்த உயிர்ப் பலி என்பது நம் எல்லோருக்கும் தெரியும். ஆடு, எருமை இன்னும் பல மிருகங்களைக் கொலை செய்யக் கூடிய நிலைமைகள் பல கோயில்களில் இருக்கின்றன....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கோயிலில் அந்தமாதிரி நடைபெறுகிறது என்று குறிப்பிட்டு அமைச்சரிடத்திலே சொன்னால், அமைச்சர் நடவடிக்கை எடுப்பது குறித்து பதில் சொல்வார். ஆகவே குறிப்பிட்டுச் சொல்லுங்கள்.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, உயிர்ப்பலி இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால் உண்மையிலேயே உயிர்ப் பலி கொடுக்கப்படுகிறது என்பது மனசாட்சியைப் பொறுத்த

வரையில் எல்லோருக்கும் தெரியும். ஆகவே அதைப் போக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர வர்களே, தமிழ்நாடு பறவைகள், விலங்குகள் உயிர்ப்பலித் தடைச் சட்டத்தின் (1950) படி கோயில் மற்றும் திருத்தேர் இருக்கும் இடம், கோயிலுக்கு உள்ளும், வெளியேயும், வழிபாடு நடக்கக் கூடிய இடங்கள், கோயிலைச் சார்ந்த மண்டபங்கள், பிரகாரங்கள் அதற்கு முன்னும் பின்னும் உள்ள இடங்கள் ஆகியவற்றில் ஆலய தேவதையைத் திருப்தி செய்யும் நோக்கத்துடன் எந்தவிதமான உயிர்ப்பலியும் செய்யக் கூடாது என விதிக்கப்பட்டுள்ளது.

அப்படி அந்தச் சட்டத்தை மீறினால் 300 ரூபாய் வரையில் அபராதமோ அல்லது மூன்று மாதம் வரையான காலத்திற்கு வெறுங்காவல் தண்டனையோ அல்லது இவ்விரண்டும் விதிக்கப் படலாம் எனவும் இச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்தச் சட்டத்தைப் பொருட்படுத்தாமல் கோயிலைச் சார்ந்த இடங்கள் தவிர பொது இடங்களிலே உயிர்ப்பலி கொடுப்பதை இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது எல்லோரும் அறிந்ததுதான். ஆனால் அதைத் தடுப்பதற்கு சட்டத்திலே இடம் இல்லை. ஆகவே இந்த அரசு அந்த மாதிரியான இடங்களிலே உயிர்ப்பலி நடப்பதைத் தடுக்க வேண்டும் என்று தீவிரமாக ஆராய்ந்து இந்தச் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன் : அறநிலையங்களில் திருமணம் செய்து கொள்ளப்போகிற மணமக்களிடத்தில் ஒரு பாரம் கொடுக்கிறார்கள். அந்த மனுவில் எம். எல். ஏ. கையெழுத்து இட்டுத் தரவேண்டும் என்று சொல்கிறார்கள். எந்த உறுதியின் அடிப்படையில் எம். எல். ஏ. கையெழுத்து இடவேண்டும் என்று சொன்னால் மணமகன் செய்து கொள்கிற திருமணம் முதல் திருமணம் என்று உறுதி தரவேண்டும் என்ற வாசகங்களைப் பொறித்திருக்கிறார்கள். அதனால் எம். எல். ஏ.க்களுக்கு பலவிதமான தொல்லைகள் ஏற்படுகின்றன. அவருக்கு அது முதல் திருமணம்தான் என எப்படி உறுதி கொடுக்கமுடியும்? அவர் வேறு எங்கேயாவது எதையாவது செய்திருந்தால் எப்படி எங்களுக்குத் தெரியமுடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் கொடுக்காமல் இருப்பது நல்லது. இரண்டாவதாக, இந்தக் கேள்வி, ஆடு கோழிகள் ஆகியவற்றை பலியிடுவதுபற்றியதாகும். இதில் போய் பாவம் திருமணம் செய்து கொள்பவர்களை ஒப்பிட்டுக் கேள்வி கேட்பது என்பது சரிதானா? வேண்டுமானால் கேளுங்கள்.

அப்படி கொடுக்கக் கூடாது என்று
திரு. மு. அரங்கநாதன் : பெற்று வந்திருப்பதால்
சொல்வது, நாம் மக்கள் வாக்குகளைப் இருக்கிறது. கடமையைச்
மக்களுக்காக செய்ய வேண்டிய கடமை இப்படி, ''அவர் செய்து
செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, அறநிலைய அதிகாரிகள்
கொள்கிற முதல் திருமணமா'' என்று ஆணையிட வெண்டும்
கேட்கக்கூடாது என்று அமைச்சர் அவர்கள் கொண்டுவருகிறேன்.
என்பதை நான் அவர்கள் கவனத்திற்குக்

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இந்தக் கேள்வி மாறான கேள்வி. ஆனால் இதற்
மூலக் கேள்விக்கு முற்றிலும் தகவல்கள் எல்லாம் அரசிடம்
கான மிக்க ருசிகரமான என்னிடத்தில் இல்லை. மாண்பு
இருக்கின்றன. ஆனால் இப்போது கேள்வி போட்டால் இந்த
மிகு உறுப்பினர் தனியாக ஒரு சில சுவையான தகவல்களை
மன்றமும் நாடும் புரிந்துகொள்கிற என்று தெரிவித்துக்
அந்தக் கேள்விக்குப் பதிலாகத் தர முடியும்
கொள்கிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : கோவில்களில் ஆடுமாடுகள், கொடுப்பது என்பது தொன்று
கோழிகள் முதலியவை பலி சில சாமிகளுக்கு அதை
தொட்டு நடைபெற்று வருகின்றது. அவசியம் இருக்கிறது.
அவசியம் செய்ய வேண்டும் என்கிற சொல்கிறார்கள். ஆகவே
சாராயம் கூட வைத்து படைப்பதாகச் தனி அனுமதி இந்த
அதுமாதிரியான காரியங்கள் செய்வதற்கு
அரசால் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : எந்தக் காரணத் கொடுக்கக் கூடாது. என்பது
தைக் கொண்டும் உயிர்ப்பலி நம்பிக்கையும், வேண்டு
தான் இப்போதிருக்கிற எல்லோருடைய சட்டத் திருத்தம்
கோளும். அதற்குத்தான் சட்டம் கொண்டுவர, கொண்டிருக்கிறது.
கொண்டுவர இந்த அரசு முயற்சி எடுத்துக் * * *

திரு. கே. பண்ணை சேதுராம் : * * *

* *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பண்ணை சேதுராம்
அவர்களின் கேள்வி, அதற்களித்த பதில் இவற்றை அவைக்
குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும என்று உத்தரவிடுகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : சென்னைக்குப் பக்கத்தில்
பொன்னேரிக்கு அருகிலுள்ள ஒரு கோவிலில் விழா நடக்கிற
போது பெண்கள் வேப்பிலையை சுற்றிக் கொண்டு போகிறார்கள்.
இந்த க்காட்சி இந்த நாட்டில் காணப்படுகிறது. மூடநம்பிக்கைகளை

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க திருத்தப்பெற்றது.

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

வேண்டும் என்று சொல்கிற இந்த அரசு அதைத் தடுப்பதற்கு பிரச்சாரம் செய்வது அல்லது அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இதுபோன்ற சம்பவங்கள், செய்கைகள் எல்லாம் சில மத நம்பிக்கைகளின் அடிப்படையில் செய்யப்பட்டு வருகின்றன, அது அவரவர்கள் விருப்பத்தைப் பொறுத்தது, அரசாங்கம் பொது அமைதிக்கு அல்லது பொதுத் தன்மைக்குப் பாதகம் ஏற்படுகிற போதுதான் அதில் தலையிடுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கும் அல்லது இங்குள்ள அங்கத்தினர்கள் சார்ந்திருக்கிற இயக்கங்கள் எல்லாம் சேர்ந்து இது மூட நம்பிக்கை என்று அவர்கள் கருதுவார்களானால் அந்த மூட நம்பிக்கையின் அடிப்படையில் இப்படிப்பட்ட செயல்கள் நடைபெறக்கூடாது என்று பிரச்சாரத்தில் ஈடுபட்டுத்தான் அவர்களைத் திருத்த முடியும், சட்டத்தின் மூலம் திருத்த முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து பெண்கள் வேண்டிக்கொண்டு வேப்பிலையைச் சுற்றிக்கொண்டு போகிறார்கள் என்று போடுவது நல்லது.

(முற்பகல் 9-30)

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள பல கோயில்களில் கடவுளர்களின் பெயரால் உயிர் வதை என்ற முறையில் ஆடு, மாடு கோழி, எருமை போன்றவைகளை உயிர்ப்பலி செய்து கொண்டிருக்கிறார்கள். இதை யாரும் ஒத்துக்கொள்வதில்லை என்று தடுப்பதற்கு வழி செய்யப்பட்டாலும் இந்த வகையில் அலகு குத்திக்கொண்டு அதாவது ஜீவ இம்சை செய்துகொண்டு கடவுளின் பெயரில் திரிவதை நாம் பார்க்கிறோம். அதைத் தடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அதற்கான விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. அலகு குத்திக்கொள்வதும் தடுக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். அப்படியில்லையென்றால் இதற்கான சட்டதிருத்தம் வரும்போது இதுவும் பரிசீலனையில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Hill Allowances for teachers in Cumbum Range.

* Q. No. 134—THIRU K. KANDASAMY : Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether the teachers working in the aided Schools are demanding Hill Allowance and Winter Allowance for working in hill stations such as "Pachaikkomachi Hills" or Manalaru, Megamalai, Evamgallar, Maharajamettu and Venniyar in Cumbum Range, Madurai district; and

(b) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) ஆம்.

(ஆ) மலைப்படியும், குளிர்காலப்படியும் குறிப்பிடப்பட்ட பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு இப்பொழுது வழங்கப்பட்டு வருகின்றன.

பொது நூலகங்களுக்குப் புத்தகங்கள்

* வினா எண் 135—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிடும் நூல்கள் எல்லா பொது நூலகங்களிலும் இருக்குமாறு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 1975 ம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் வெளியீடுகளில், ஒன்பது தலைப்புகளில், 2,300 படிகள், ரூ. 20,817·30 செலவில் வாங்கி பொது நூலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டன. சென்னைப் பல்கலைக்கழகம் மற்றெல்லாப் பல்கலைக் கழகங்களைப் போல் நூல்களின் நிர்ணயிக்கப்பட்ட விலையில் 25% தள்ளுபடி தர முன் வராததால், 1975க்கு மேல் இவ்வெளியீடுகளை வாங்க இயலவில்லை. சென்னைப் பல்கலைக் கழகம் தற்போது உரிய தள்ளுபடி தர ஒப்புக்கொண்டு உள்ளதால், இனிமேல் இப்பல்கலைக் கழக வெளியீடுகளும் பொது நூலகங்களில் இருக்குமாறு செய்ய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. போ. கோபாலன் : தலைவர் அவர்களே, சென்னைப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியிடப்படும் நூல்கள் அழகாக இருந்தாலும் இதன் விலைகள் அதிகமாக இருப்பதால் தனிப்பட்டவர்கள் இதை வாங்கிப் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகவே இவற்றின் விலையைக் குறைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

[1978 செப்டம்பர் 11

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது தள்ளுபடியைத் தருவதற்கு இசைவு கொடுத்து, நாமும் வாங்கிக் கொண்டு விநியோகிக்கின்ற நிலையில் இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* வினா எண் 136—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பொது நூலகங்களுக்கு நூல்களைத் தேர்வு செய்ய ஒரு மாநிலக் குழுவை அமைக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசாணை (நிலை) எண். 856, கல்வி, நாள் 11-5-1978 ன் படி 1978-1979 ஆம் ஆண்டு மாவட்ட நூலக ஆணைக் குழுக்களுக்கு 25 விழுக்காடு இணை மானியத்தை நூல்களாக வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கப் படும் நூல்களைத் தேர்வு செய்ய கல்வி அமைச்சரின் தலைமையில் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது;

அரசு துணைச் செயலர் (நூலகங்கள்) கல்வித் துறை செயலர் உறுப்பினர்; பொது நூலக இயக்குநர்—உறுப்பினர்; கல்லூரிக் கல்வி இயக்குநர் — உறுப்பினர்; பள்ளிக் கல்வி இயக்குநர்—உறுப்பினர்; தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்—உறுப்பினர்; தமிழ் வளர்ச்சி இயக்குநர்—உறுப்பினர்.

திரு. போ. கோபாலன் : தலைவர் அவர்களே, இத்தகைய நூலகக் குழுக்கள் அமைக்கும்போது, சிறப்பான நூல்களை எழுதி யுள்ள எழுத்தாளர்கள், இலக்கிய அறிஞர்கள் இவர்களுக் கெல்லாம் இந்தக் குழுவில் இடம் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போது அமைக்கப் பட்டிருக்கின்ற குழுவிலேயே இருக்கின்ற பலரும் இத்தகைய சிறப்பான தகுதியுடையவர் என்று அரசு கருதுகிறது.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் ; பொது நூலகங்களுக்கு—பொதுவாக அந்தந்த ஆட்சியிலுள்ளவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நூல்கள் தினசரிகள் வைக்கப்பட்டு வந்ததாகத் தெரி கிறது. அதைப் போக்கி சர்வ கட்சியினரும் சேர்ந்த முக்கியஸ் தர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தக் குழு எந்தக் கட்சியின் அடிப்படையிலும் அமைக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1978 செப்டம்பர் 11]

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் நோக்கத்தோடு சில பத்திரிகைகள் பொது நூலகங் களில் போடலாம், அல்லது போடப்படலாம் என்ற முறை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கையாளப் பட்டு வந்தது. இதன் காரணமாக ஜனசக்தி, தாமரை போன்ற பத்திரிகைகள் நிறுத்தப்பட்டு வந்தன. ஆகவே இந்த அரசு இதை அரசியல் நோக்கத்தோடு பார்க்காமல் அனைத்துக் கட்சியைச் சேர்ந்த செய்தித் தாட்களும் பொது நூலகங்களில் போடப்படு வதற்கு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நிச்சயமாக முன் வரும என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநில குழுவைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது போல் மாவட்ட மத்திய நூலகக் குழுக்கள் இயங்கி வருகின்றனவா? இயங்கவில்லை என்றால், இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதுபற்றி ஒரு குழுவின் அறிக்கை தரப்பட்டு ஆலோசனை முடிக்கப்பட்டிருக்கிறது. விரைவில் இதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

ராஜாஸ்கட்டளை கிராமத்தில் பள்ளிக் கட்டிடம்.

* வினா எண் 137—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த பாலக் குறிச்சி பஞ்சாயத்தில் உள்ள ராஜாஸ்கட்டளை கிராமத்தில் பள்ளிக்கூட கட்டிடம் அடிமட்டம் போடப்பட்டும் நீண்ட நாளாக முடியாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முடியும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இந்த கிராமத்தில் பள்ளிக்கூட கட்டிட வேலை நடைபெறவே இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊருக்கு நானே சென்றிருந்தேன். என் தொகுதியிலே இருக்கிற ஊர். அங்கே பள்ளிக்கூடம் கட்டப்பட்டு, பேஸ்மெண்ட் மட்டும் போடப்பட்டிருந்தது. அதை வைத்துதான் வேலைகள்

[1978 செப்டம்பர் 11

துரிதமாக நடைபெற வேண்டுமென்கின்ற முறையிலே இந்தக் கேள்வியை நான் கேட்டிருந்தேன். அமைச்சர் அவர்களுக்கு இந்தத் தகவலை அதிகாரிகள் கொடுத்திருக்கிறார்கள். மீண்டும் இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இதைப் பரிசீலிக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிட்ட ராஜாஸ் கட்டளை கிராமத்தில் பள்ளிகூட வேலை ஏதும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதே ஊராட்சியைச் சேர்ந்த இளைமதுச்சூர் என்ற கிராமத்தில் 24,000 ரூபாய் மதிப்பில் பள்ளிக்கூட வேலை நடந்து வருகிறது. அந்த வேலையை ஏற்றுக் கொண்ட ஒப்பந்தகாரர் குறித்த காலத்தில் முடிக்கவில்லை என்று சொல்லப்பட்டது. ஆனால் இப்போது சுவர் எழுப்பி, கூரை மூடப்பட்டிருக்கின்றது என்ற தகவல் வந்திருக்கிறது.

மகனூர்பட்டி ஊராட்சி சாலை.

*வினா எண் 138.—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், மகனூர்பட்டி ஊராட்சிக்குட்பட்ட தாவுத்கொட்டாய், ஒதட்டன்கொட்டாய், பாபீபாஸ் கொட்டாய், முசிலிக் கொட்டாய், பட்லாஸ் கொட்டாய் ஆகிய கிராமங்களுக்கு போடப்பட்ட ஊராட்சிப் பாதை போக்குவரத்துக்கு ஏற்ப செப்பனிடாமலும், பட்டா தாரர்கள் ரோட்டை ஆக்கிரமித்துள்ளதாலும் லாரி வண்டி போக்குவரத்து வெகுவாக பாதிக்கப்பட்டு உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுத்த நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்புகளை அகற்றி சாலையை மேலும் சீராக்கி செப்பனிட ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றிய ஆணையரால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, மகனூர்பட்டி ஊராட்சியில் தாவுத் கொட்டாய் மற்றும் உள்ள கிராமங்களுக்குச் செல்லும் சாலையை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களை அப்புறப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி நடவடிக்கை எடுத்துக் கொண்டதற்கு நன்றி. இந்த நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும்.

078 செப்டம்பர் 11]

ஏனென்றால், உள்ளபடியே அந்த ஐந்து கிராமங்களிலும் முஸ்லீம் மக்களே பெரும்பாலும் இருக்கின்றார்கள். அந்த கிராம மக்களுக்கு அங்கே போக்குவரத்துத் தடையாக இருப்பதால், பெண்கள் கொடுக்கல் வாங்கல் பாதிக்கப்படக்கூடிய நிலை அனுதாபத்திற் குரியதாக உள்ளது. ஆகவே, உடனடியாக அங்கே போக்கு வரத்துக்கு துரித நடவடிக்கை எடுப்பதோடு, இடையேயுள்ள காட்டாறுக்கு மத்தியிலே ஒரு பாலம் கட்டுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கின்ற காரணத்தால் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. பாலம் கட்டுவதற்கும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

குலசேகரன்பட்டணம் பேரூராட்சி.

* வினா எண் 139—திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி மாவட்டம் குலசேகரன் பட்டணம் பேரூராட்சி மன்றம் இரண்டு ஊராட்சி மன்றங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், வரும் பேரூராட்சி மன்றத் தேர்வில் எந்த அடிப்படையில் தலைவர் தேர்வு நடைபெறும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம். தேர்தலுக்கு பின் நடைமுறைக்கு வரும்.

(ஆ) ஒவ்வொரு ஊராட்சிக்கும் தலைவர் தேர்ந்தெடுக்கப் படுவர்.

புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள்.

* வினா எண் 140:—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளைக் கட்டித் தர மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி கார்ப்பரேஷனிடமிருந்து (ஹட்கோ) உதவியினை தமிழ்நாடு அரசு கோரியுள்ளதா?—

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[1978 செப்டம்பர் 11

திரு. அ. செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ளுவதற்காக தமிழக அரசு 500 ரூபாய் கடன் கொடுத்ததாகச் சொல்லப்பட்டது. அவ்வாறு கொடுக்கப்பட்டதா? எத்தனை பேர்களுக்கு அவ்வாறு கொடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இதுவரையில் வீடுகளுக்குக் கடன் பட்டுவாடா ஒன்றும் செய்யப்படவில்லை.

* வினா எண் 141—திரு. சு. பாலன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு குடிசை மாற்றுவாரியம் மூலம் கட்டப்பட்ட வீடுகளில் குடியேறி உள்ள மக்களிடத்தில் தற்காலிகமாக குடிக்கூலி வசூல் செய்யப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அவர்களை நிரந்தரமாக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) அதற்கு அரசு ஒப்புதல் தேவை இல்லை.

திரு. மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தில் கட்டப்படும் கட்டிடங்கள் முழுமையாக முடியாமல், அதாவது குடிநீர், வடிகால், இன்னும் மற்ற வேலைகள் முடிவுபெறுமல், வீடுகள் பூட்டப் பட்டிருக்கும்போது, பூட்டை உடைத்துக் கொண்டு குடியேறி இருக்கின்றார்கள். அவர்களை அகற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, அப்படி நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வரும்போது, சட்ட மன்ற உறுப்பினர்கள் முழுமையாக ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டு, அவர்களை வெளியேற்ற துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே இப்படிப்பட்ட வீடுகளில் குடியேறி உள்ள மக்களிடத்தில் தற்காலிகமாக குடிக் கூலி வசூல் செய்யப்படுவது அரசுக்குத் தெரியுமா என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள்.

1978 செப்டம்பர் 11]

ஒருவர் பெயரில் இந்தக் குடிசை மாற்று வாரியத்தில் வீட்டை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இன்னொருவர் அந்த வீட்டில் குடியிருக்கிறார். இப்படிப்பட்ட தவறைப் போக்குவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இதுமாதிரி தவறுகள் நடந்திருப்பது பற்றித் தகவல் கொடுத்தால் அவர்களை வெளியேற்றுவதோடு கடுமையான நடவடிக்கை எடுப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. மு. அரங்கநாதன்: சட்டமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பு கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பு கொடுப்பதோடு மட்டுமல்லாமல் 48 வீடுகளில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் புகுந்து குடியேறியிருக்கிறார்கள் என்பது பற்றிக் குடிசை மாற்று வாரியத் தலைவருக்குப் புகார் கொடுக்கப்பட்டும் அந்தப் புகார் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதே மன்றத்தில் திரு. ப. உ. ச. மீது குற்றச்சாட்டுச் சொல்லும்போது அந்தக் குற்றச்சாட்டின்மீது பதில் அளிக்கும்போது அதைப் பற்றித் தெரிவித்திருப்பதோடு அதற்கான ஆதாரத்தையும் நிதியமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். இதுவரை அதன் மீது ஏன் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(பதில் இல்லை)

திரு. மு. அரங்கநாதன்: நான் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதில் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதில் சொல்ல வேண்டுமென்று வற்புறுத்த முடியாது.

திரு. மு. அரங்கநாதன்: * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள். வேறு கேள்விக்குப் போயாகிவிட்டது. தயவு செய்து விதிகளைப் படித்துவிட்டு வந்து கேள்விகளைக் கேளுங்கள்.

இதுபற்றி திரு. அரங்கநாதன் பேசிய பேச்சுக்கள் அனைத்தும் நீக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. மு. அரங்கநாதன்: * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அரங்கநாதன் சட்டமன்ற உறுப்பினராக நடந்து கொள்ளவேண்டும். விதிகளைப் படித்துவிட்டு வரவேண்டும். நான் நிற்கும்போது முதலில் உட்கார வேண்டும்.

குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு.

* வினா எண் 142—திரு. டி. கே. கபாலி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குடிசை மாற்று வாரியம் கட்டிய வீடுகளில் குடியிருப்பவர்கள் தங்களது வீட்டிற்கு மின்சாரம் அமைத்துக் கொள்வதற்கு அனுமதி அளிக்கப்படுகிறதா?

(ஆ) இல்லை எனில், அதற்கான காரணம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) குடிசைப்பகுதி மாற்று வாரியக்குடியிருப்புகளில் வசித்து வரும் ஒதுக்கீடுதாரர்கள், வாடகை பாக்கி ஏதும் இல்லாமல் இருந்தால், அவர்களது சொந்த செலவில் குடியிருப்புக்கு மின் வசதி செய்து கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா: குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக சென்னை மாநகரில் கட்டப்பட்ட வீடுகள் போதிய பராமரிப்பு இல்லாமல் பல இடங்களில் இருந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக சென்னை பட்டினப்பாக்கத்தில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பாகக் கட்டப்பட்டுள்ள வீடுகளைப் பராமரிக்க அலுவலர்கள் இருந்தும் கூட பராமரிக்கப்படவில்லை என்பதைத் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அமைச்சர் அவர்கள் தயவு செய்து அந்தப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டு இனியேனும் பழுது பார்க்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொள்வது போல் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இன்று நான் போவதற்கு முன்னால் குடிசை மாற்று வாரியத் தலைவரை அனுப்பி வைக்கிறேன். தேவைப்பட்டால் நானும் போய் ஆவன செய்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

சேரன் போக்குவரத்தின் பணி விதிகள்.

* வினா எண் 143—திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேரன் போக்குவரத்துக் கழகத்தில் தொழிலாளர்களுக்கு நிரந்தர விதிகள் அமுலாக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவைகளை அரசு பரிசீலித்து ஒப்புதல் அளித்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) குடிசை மாற்று வாரியம் மூலம் கட்டப்பட்ட வீடுகளில் அனுமதியின்றி குடியேறி உள்ள மக்களிடத்திலிருந்து குடிக்கூலி 5-6-1978-க்கு முன்புவரை வசூலிக்கப்பட்டு வந்தது. அத் தேதிக்குப்பின் இக் குடிக்கூலி வசூலிக்கப்படுவதில்லை.

(ஆ) இது பற்றிய செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். வரதராஜன்: இந்தச் சேரன் போக்குவரத்துக் கழகத்தில் ஸ்டாண்டிங் ஆர்டர் இன்று இருந்தும் 4,500 மொத்தத் தொழிலாளர்களில் 2,500 பேர் வரையில் காஷுவல் தொழிலாளர்களாக வைத்திருக்கிறார்கள் என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அவ்வாறு இருந்தால் அதை மாற்ற அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; மாண்புமிகு உறுப்பினர் வினாவுக்கும் ஸ்டாண்டிங் ஆர்டருக்கும் தொடர்பு இல்லை என்று சொன்னாலும் கூட அதுபற்றிய தகவல் கொடுப்பார்களானால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. அ. செல்லப்பா: சேரன், சோழன் போன்ற போக்குவரத்துக் கழகங்களில் அப்பரண்டிசாக வேலை பார்ப்பவர்கள் இரண்டாண்டுகள் கழித்து வீட்டுக்கு அனுப்பப்படுகிறார்கள். அவர்கள் நலனைக் கருதி அவர்களை நிரந்தரமாக வேலையில் அமர்த்திக் கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அப்பரண்டிஸ் காலம் முடிவுற்ற பிறகு அவர்கள் எல்லோருக்கும் போக்குவரத்துக் கழகங்களில் வேலை கொடுப்பது என்பது இயலாத காரியம். அப்பரண்டிஸ் பணியை முடித்தவர்கள் 2,500 பேருக்கு மேல் இருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அதன் அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகத்திலே மட்டுமல்லாது எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் சேர்ந்து ஒரு நிரந்தரமான அடிப்படையிலேதான் தொழிலாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் அவர்களுடைய பணி நிரந்தரமாக்கப்படும் என்பதற்கு ஆன உத்தரவுகளை இந்த அரசாங்கம் அறிவிக்குமா? அத்துடன், வேலூரிலே இருக்கிற தொழிலாளர்கள் டெம்பரரியாக இருக்கிறவர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படாமல் விடப்பட்டு அதே நேரத்திலே புதிய புதிய ஆட்களைச் சேர்த்து வருகிறார்கள், இது போன்ற முறைகேடுகளை நீக்குவதற்கு அரசாங்கம் வழிவகை, செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, 240 நாட்கள் பணிக்காலம் முடிந்த பிறகு அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்பது நடைமுறையில் இருந்து வருகிறது. மற்ற சில போக்குவரத்துக் கழகங்களிலே 3 ஆண்டுக்காலம் ஆகியும் நிரந்தரமாக்கப்படவில்லையென்ற குற்றச்சாட்டு வந்து அவர்களையெல்லாம் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, லாபத்தில் ஓட்ட வேண்டும் என்ற பெயரால் சேரன் போக்குவரத்து கழகத்திலே நிரந்தரமாக உள்ள டிரைவர்கள் கண்டக்டர்களையெல்லாம் திடீரென்று சாதாரணக் காரியங்களுக்காகக்கூட வெளியே போகச் சொல்லிவிட்டு அதற்குப் பதிலாக அவர்கள் பார்க்கிற வேலைகளை அப்பரன்டீஸ் ஆக இருக்கிறவர்களுக்குக் கொடுத்து குறைந்த சம்பளத்தில் அவர்களிடமிருந்து வேலை வாங்கிக் கொள்ளக்கூடிய நிலைமைகள் சட்டத்திற்கு முரண்பாடாக எல்லாம் இருக்கின்றன. அந்த நிலைமைகளை நிவர்த்திப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும். அந்த விதமான குறைபாடுகள் இருந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக விடப்படுகின்ற பேருந்துகள் அனைத்தும் மழைபெய்கிறபோது அதிலே பிரயாணம் செய்கிற பயணிகள் எல்லாம் மழையிலே ஒழுகுவதால் நனைந்து கொண்டு வரக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் அந்தப் பயணிகள் எல்லோருக்கும் குடையோ அல்லது மழைக் கோட்டோ வாங்கிக் கொடுப்பதைப்பற்றி ஆலோசிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகைப்படுத்திக் கூறுகின்றபோதிலும் அப்படிப்பட்ட குறைகள் எல்லாம் இல்லாத வகையிலே புதிய பேருந்துகளை விரைவுப் பேருந்துகளாக விடுவதற்கு பல வழித்தடங்களிலே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் அவைகளை விடுவதற்கு நிதிநிலைமைக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, அதே மாதிரி தனியார் பஸ்களிலே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற டிரைவர்கள் கண்டக்டர்கள், எல்லாம் இருக்கிறார்கள், அந்த ரூட்டை அரசாங்கம் ஏற்றுக்கொண்ட பிறகு அந்த பஸ்களிலே சென்ற டிரைவர்கள், கண்டக்டர்கள் பலரும் இன்றைக்கு வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு அரசு பஸ்களிலே வேலைவாய்ப்புக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையிலே உள்ள பஸ்களை அரசு நாட்டுடைமையாக்கும்போது சியாப்டர் 4-ஏ விதிகளின் அடிப்படையிலே அந்தப் பணியாளர்களை அரசுப் பணியிலே அமர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. தனியார் பஸ்காரர்கள் பஸ்களை விடுகிறபோது சியாப்டர் 4 அடிப்படையில் தொழிலாளர்களின் தகவல்களை அரசுக்குத் தராத காரணத்தால்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன, அதையும் அரசு ஆராய்ந்து வருகிறது.

திரு. த. இராமசாமி : தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து இராமேஸ்வரம் வரைக்கும் செல்லுகின்ற பல்லவன் போக்குவரத்துக் கழக வண்டிகள் 3 வண்டிகளும் பழுது அடைந்த நிலையிலே நல்ல கண்டிஷனில் இல்லாத வண்டிகளாக விடப்படுகின்றன. இதன் காரணமாக காட்டுப் பகுதிகளிலே இடையிலே வண்டிகள் நின்றுவிடுகின்றன, 10, 12 மணிநேரம் கழித்து ஊர் போய் தாமதமாகச் சேரக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அந்த வழித்தடத்தில் புதிய வண்டிகளை விடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதில் கூறியிருக்கிறேன், அதுபற்றிக் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. கந்தசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் கேட்க நினைத்ததை மாண்புமிகு உறுப்பினர் சொன்னாலும், நானும் வேதனையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சமீபத்திலே

பி. டி. சி. பஸ்ஸிலே நானும் எனது கட்சித் தலைவரும் வந்தோம். மதுரையிலிருந்து பல்லாவரம் வரையிலே மழை இருந்தது. நனைந்துகொண்டே தான் வந்தோம், பல்லாவரத்திலே மழை யில்லை, ஆனால் பல்லாவரத்திலே பஸ் ஓடாமல் நின்றுவிட்டது, அதற்குப் பிறகு வேறு பஸ்ஸிலே தான் வந்தோம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அதைப்பற்றி வாக்குறுதி தந்த பிறகு நேரத்தை தாங்கள் வீணாக்க வேண்டாம்.

திரு. கே. கந்தசாமி: நேரத்தின் புனிதத் தன்மையை உணர்ந்துதான் சொல்கிறேன், ஆனால் வேதனையோடு சொல் கிறேன், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே பணியை ஆற்ற முடியாத நிலைமையிலே அன்றைக்கு பூராவும் தலைவலி இருந்தது, மறுநாளும் தலைவலி இருந்தது. சட்டமன்ற நடவடிக்கைகளில் நாங்கள் சுறுசுறுப்பாக ஈடுபடுவதற்கு நம்முடைய பஸ்களின் சௌகரியக் குறைவு இடையூறாக இருப்பதால் சபாநாயகர் அவர்களும் எங்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டும், அவை முன்னவரவர்களும் இப்படிப்பட்ட இடையூறு வரும்பொழுது......

[முற்பகல் 9-50]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய அபிப்பிரா யத்தை எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து விட்டீர்கள். நடந்த நிகழ்ச்சியை இழுத்துக் கொண்டே போனால் என்ன அர்த்தம்?

திரு. கே. கந்தசாமி: இனிமேல் அப்படி ஏற்படாமல் இருக்கப் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எல்லோருக்கும் தெரிந்தாகிவிட்டது, அமைச்சருக்கும் தெரிந்தாகிவிட்டது, நடவடிக்கை எடுப்பார்கள், நீங்கள் உட்காருங்கள்.

சிதம்பரம் வட்டத்தில் சாலைப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு.

*வினா எண் 144— திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம் சி. முட்லூர் முதல் கிள்ளை வரை உள்ள நெடுஞ்சாலையில் வீடு கட்டியுள்ள விவசாய மக்கள் அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு மாற்று மனை கொடுக்கப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) ஆக்கிரமிப்பாளர்கள் எவரும் அகற்றப்படவில்லை.

(ஆ) இதனால் மாற்று மனை வழங்க வேண்டிய அவசியமும் எழவில்லை.

திரு. துரை கலியமூர்த்தி: பேரவைத் தலைவரவர்களே, சிதம்பரம் வட்டம் சி. முட்லூர் முதல் கிள்ளை வரை உள்ள நெடுஞ் சாலையில் ஏழை மக்கள், விவசாய மக்கள் வீடு கட்டி வந்துள்ளார் கள். சென்ற ஆண்டு அதை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து, இப்பொழுது அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி நடவடிக்கை எடுத்தால் மாற்று மனைகள் கொடுத்து அவர்களை அப்புறப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு அரசு 15-3-1976 ஆம் தேதி அந்த நோட்டீஸ் கொடுத்தது. ஆனால் ஆக்கிரமிப்பாளர்கள் அந்த இடங்களிலிருந்து நகர மறுத்ததன் காரணத்தால் மேற்கொண்டு மறுபடியும் ஒரு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அப்பொழுது, ஓராண்டு அவகாசம் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஓராண்டுக் காலம் கழித்து மாற்று மனைகள் கொடுப்பது பற்றியும் பரிசீலிக்கப் அதன் அடிப்படையில் அகற்றப்பட இருக்கிறார்கள். படும்.

சக்கரக்கோட்டை கண்மாய்.

* வினா எண் 145.— திரு. த. இராமசாமி: மாண்புமிகு 'வேளாண்மை' பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இராமநாதபுரத்தில் உள்ள சக்கரக்கோட்டை கண்மாய் 'வைகை' பாசனத்தில் இணைக்கப்படாததால் அந்தக் கண்மாயை நம்பியுள்ள 8 ஆயிரம் ஏக்கர் தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) 'வைகை' பாசனத்தில் இக் கண்மாயைச் சேர்த்து நிரந்தரமாக விவசாயத்திற்கு தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) சக்கரக்கோட்டை கண்மாயின் பாசனப்பரப்பு நிலம் 1679.32 ஏக்கர் ஆகும். 8,000 ஏக்கர் சக்கரக்கோட்டை கண்மாயின் பாசனப் பரப்பில் இல்லை. இராமநாதபுரம் தென் கலிங்கின் மூலம் மூன்று நாட்களுக்கு 25 மில்லியன் கன அடி தண்ணீர் இப்பாசனத் திற்கு இவ்வாண்டு விடப்பட்டது.

(ஆ) வைகை அணையில் உள்ள நீர் அதன் பாசன ஆயக் கட்டுகளுக்கே போதுமானதாக இல்லை. இருந்தாலும் வைகை சீரமைப்புத் திட்டம் வேலை முடிந்த பின் இது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. த. இராமசாமி: பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரத்தில் இரண்டு கண்மாய்கள் இருக்கின்றன. ஒரு கண்மாய் பெரிய கண்மாய். அது வைகைப் பாசனத்தோடு இணைக்கப்பட்டது. அதனுடைய பாசன ஏக்கர்கள் 2,600. இராமநாதபுரத்திலே உள்ள இன்னொரு கண்மாய் சக்கரக்கோட்டை கண்மாய். அந்தக் கண்மாய் வைகைப் பாசனத்தில் சேர்க்கப்படாததால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களும், விவசாயிகளும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏராளமான மழை பெய்தாலொழிய தண்ணீர் கிடைப்பது கஷ்டமான காரியமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடுகிறபொழுது சொன்னார்கள், தென் கலிங்கின் மூலம் தண்ணீர் திறந்து விடப்பட்டது என்று. அதற்குத் தண்ணீரைப் பெரிய கண்மாயில் தண்ணீர் வந்தால்தான் பெரிய கண்மாயிலிருந்து திறந்து விடுகிறார்கள். எனவே, இது வைகை பாசனத்தில் இணைக்கப்பட்டால் நல்லது. இல்லையென்றால் பெரிய கண்மாயில் தண்ணீர் இல்லை என்றால் திறந்து விடுவதில் சிரமம் இருக்கிறது. ஆகவே, வைகைப் பாசனத்தில் சக்கரக்கோட்டை கண்மாய் சேர்க்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே பதில் கூறியிருக்கிறேன், சக்கரக்கோட்டை கண்மாயின் பாசனப் பரப்பு நிலம் 1,679 ஏக்கர் 32 செண்ட் ஆகும், மேலும் வைகை அணையிலே ஏற்கனவே கொடுக்கப்பட வேண்டிய பாசனப் பயிர்களுக்குப் போதுமான நீர் இல்லாத நிலைமை இருக்கிறது. இன்று சீரமைப்புத் திட்டத்தின் மூலமாக விஸ்தரிப்புக் குண்டான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன, 41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைப்புத் திட்ட வேலை நடந்து கொண்டிருக்கிறது. அது முடிகின்ற நேரத்தில் இன்னும் எவ்வளவு நிலங்களுக்குப் பாசன வசதி விஸ்தரிக்கப்பட முடியும் என்பது இந்த அரசின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வால்பாறை பகுதியில் பாசன வசதி.

*வினா எண் 146—திரு. ர. ச, தங்கவேல்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வால்பாறை தொகுதியிலுள்ள வால்பாறை கீழ்பகுதியில் உள்ள பூமிகள் டேம்களுக்கு அருகில் இருப்பதால், புஞ்சை நிலமென அறிவிக்கப்பட்டுள்ளதை மாற்றி நஞ்சை என அறிவித்து அந்நிலங்களுக்கு நீர் வழங்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இல்லை.

திரு. ரா க. சு. தண்டபாணி : தலைவரவர்களே, இந்தக் கேள்வி பரம்பிக்குளம்-ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டம் சம்பந்தப்பட்ட கேள்வி என்று நினைக்கிறேன். இந்தத் திட்டம் பற்றி பட்ஜெட்டில் கூறப்பட்டிருந்தாலும் திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பதையும், எவ்வளவு பணம் இத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புவதுடன், இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்பாகச் சில * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * * என்பதை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு ஆணையிடுகிறேன்.

திரு. ரா. க.சு. தண்டபாணி: இந்தத் திட்டத்திற்குக் குறுக்கே நின்றவர்களை எல்லாம் எப்படி அமைச்சரவர்கள் நீக்கினார்கள் என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்-ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டம் இந்த ஆண்டு கூடிய சீக்கிரத்திலே எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. ஏற்கனவே 2,50,000 ஏக்கர் பாசன வசதியிலே இருந்து கொண்டிருக்கிறது. மேலும் 1,15,000 ஏக்கர் விஸ்தரிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. அந்த வேலைக்காக இந்த ஆண்டில் ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டு அந்த வேலைகள் இன்னும் ஓரிரு மாதங்களிலே தொடங்கப்பட இருக்கிறது.

இந்த விஸ்தரிப்புத் திட்டத்தைக் கூடாது என்று பலபேர் எதிர்த்தாலும் புரட்சித் தலைவருடைய புனித ஆட்சியிலே எல்லோருக்கும் பாசன வசதியை விஸ்தரிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு நாம் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிளவக்கல் அணைப்பகுதியில் விதைப் பண்ணை.

*வினா எண் 147—திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருவில்லிபுத்தூர் தொகுதியில் பிளவக்கல் அணைக்கட்டுப் பகுதியில் உள்ள 600 ஏக்கர் புல்வெளிக் காட்டில் அரசு விதைப் பண்ணை துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இல்லை.

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, இந்த விதைப் பண்ணை வருவதால் அரசுக்கு வருவாயும் அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பும் இருப்பதாலே இந்தத் திட்டத்தை மேற்கொண்டு அரசு பரிசிலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். தமிழ் நாட்டில் விதைப் பண்ணைகள் எங்கெங்கே இருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே திருவில்லிபுத்தூர் தொகுதியிலே பிளவக்கல் அணைக்கட்டு பகுதியில் தற்பொழுது எந்தவிதமான அரசு விதைப் பண்ணையும் ஏற்படுத்துவதாக வேளாண்மைத் துறையின் செயற்குறிப்பிலே இல்லை. ஆனாலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லக் கூடிய யோசனையை ஏற்றுக் கொண்டு அது பரிசிலனையிலே எடுத்துக் கொள்ளப்படும். தமிழகத்திலே 49 இடங்களிலே அரசு விதைப் பண்ணைகள் இருக்கின்றன. அந்த விதைப் பண்ணைகள் மூலமாக, நெல் போன்ற பயிர்களுக்கான விதைகளை யெல்லாம் கொடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, திருவில்லிப்புத்தூர் பகுதியிலே தேவதானத்தில் விதைப் பண்ணை இருக்கிறது. அது முறையாக இயங்காமல் இருக்கிறது. அவ் விதைப்பண்ணை முறையாகச் செயல்பட, சரியாகச் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கும்.

தமிழ்நாடு வக்பு போர்டு.

*வினா எண் 148—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாடு வக்பு போர்டு திருத்தி அமைக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

(இ) அதன் உறுப்பினர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ),(ஆ),(இ) 1976-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நியமிக்கப்பட்ட தமிழ் நாடு வக்ஃபு வாரிய உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் பதவிகளை இராஜினமா செய்து விட்டதால் அவர்களுக்குப் பதிலாக 11 உறுப்பினர்களை அரசு நியமித்துள்ளது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, வக்ஃப் வாரிய உறுப்பினர்களாக நியமிபபதற்கு சட்டபூர்வமான அடிப்படை யோக்கியதாம்சங்கள் யாவை? புதிதாக நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு அந்த யோக்கியதாம்சங்கள் இருக்கின்றனவா? ஸ்டாச்சுட்டரி ரிக்கொயர்மெண்ட்ஸ் என்று சொல்கின்ற அளவுக்கு யார், யாரை நியமிக்க வேண்டுமென்று சட்டம் குறிப்பிடுகிறதோ அந்த வகையில், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உலிமாக்கள் இவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுகின்ற வகையில் இவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, சட்ட விதிகளுக்குட்பட்டு வக்ஃப் வாரிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதைப் போல் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் நியமித்துத்தான் ஆக வேண்டுமென்று எந்தக் கட்டாயமும் இல்லை. ஆகவே, அவர்களை நியமிக்கவில்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எம் ஏ. ரசாக்: பேரவைத் தலைவரவர்களே, கடையநல்லூரில் முறையாகச் சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டி, வக்ஃப் போர்டால் அனுமதி கொடுக்கப்பட்டு நிறுவப்பட்ட கமிட்டி கலைக்கப்பட்டு காதர்மொய்தீன் கொத்துவாப்பள்ளியில் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நியமிக்கப்பட்ட இந்த ஒரு வார காலத்தில் அந்தக் கமிட்டி உறுப்பினர்கள் என்ன தவறு செய்தார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன். இது அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி தமிழ்நாடு வக்ஃப் வாரியம் திருத்தி அமைக்கப்பட்டதா, உறுப்பினர்கள் எத்தனை பேர் என்பதுதான். எனவே மூலக் கேள்விக்கு இது தொடர்புடையதாக இல்லாததால், தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசினுடைய கொள்கை மதுவிலக்கை அமுல் நடத்த வேண்டுமென்பது. ஆனால் வக்ஃப் வாரியத்தில் நியமிக்கப்பட்டிருக்கிற உறுப்பினர்களில் யாராவது 'லிக்கர் பர்மிட்' வைத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, வக்ஃப் வாரிய உறுப்பினர்களில் யாராவது லிக்கர் பர்மிட் வைத்துக்கொள்ள அனுமதி பெற்றிருக்கிறார்களா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள்....

[1978 செப்டம்பர் 11

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, மது விலக்கை இந்த அரசு அமுல் நடத்துகிறது. வக்ஃப் வாரியத்தில் நியமிக்கப்பட்டிருக்கிற உறுப்பினர்கள், தலைவர் இவர்களில் யாருக்காவது லிக்கர் பர்மிட் இருக்கிறதா? அந்தத் தகவல் அரசுக்குத் தெரிந்திருக்கிறதா? அப்படி தெரிந்தே அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா, இல்லையா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: அப்படிப்பட்ட தகவல் அரசின் கவனத்திற்கு இதுவரை வரவில்லை.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தை இன்னும் சிறிது நேரம் நீட்டிக்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்த வக்ஃப் போர்டு பல லட்சம் ரூபாய்கள் மதிப்புள்ள சொத்துக்களைப் பாது காக்க வேண்டியிருக்கிறது. அது திருத்தி அமைக்கப்பட்ட போது இன்று தமிழகத்திலே இருக்கக்கூடிய எந்த மதத்தையும் சேர்ந்த எல்லா பிரதிநிதிகளையும் உட்கொண்டு சொத்துப் பாதுகாப்புக்கும் அதே சமயத்தில் அரசினுடைய நன்மைக்காகவும் இந்த வக்ஃப் போர்டு இன்னும் திருத்தி அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, அரசுக்கு அப்படிப்பட்ட ஆலோசனை இல்லை.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு ஒட்டியதாகவே நான கேட்கிறேன். ராஜினாமா செய்ததன் காரணமாக புதிய போர்டு அமைக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ராஜினாமா செய்த அங்கத்தினர்கள் பேரிலே அந்த போர்டிலே பல குற்றச்சாட்டுக்கள் இருப்பதாக பல பத்திரிகைகளில் அறிக்கைகள் அமைச்சர் சொன்னதாக நான் படித்திருக்கிறேன். ஆகவே அந்த ராஜினாமா செய்த அங்கத்தினர் கள் பேரிலே கூறப்படும் குற்றச்சாட்டு என்ன என்று தெரியுமா, அப்படியானால் அந்தக் குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஏதாவது குழு போடப்பட்டிருக்கிறதா? அந்தக் குற்றச்சாட்டுகளின் நேச்சர் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்குத் தொடர்பு இல்லை என்றாலும், சில தகவல்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த வக்ஃப் வாரியம் இயங்கி வந்த முறை, சில வழக்குகளில் காலதாமதம் ஏற்படுத்தியது, முறையிடுவதற்கு வருகின்ற உறுப்பினர்களை திருப்பி அனுப்பியது, உறுப்பினர் களிலே பலபேர்கள் 40 கூட்டங்களிலே 32 கூட்டங்களில் கலந்து கொள்ளாததன் காரணங்கள், இப்படி பலதரப்பட்ட புகார்களை

1978 செப்டம்பர் 11]

நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட நேரத்தில் அவர்கள் ராஜினாமா செய்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு, ஒட்டு மொத்தமாக அந்த வாரியத்திலே முன்பிருந்தவர்கள் மீது 55 குற்றச்சாட்டுக்களை அரசினுடைய கவனத்திற்கு அனுப்பி வைத்து, அதன் பேரில் ஸ்பெஷல் என்குயரி செல் போட்டு அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரம் இருக்கிறதா என்று ஆராயச் சொல்லி, ஒரு ரிப்போர்ட்டு வந்திருக்கிறது. அதன் மீது பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது. விரிவாக, விரைவாக அரசு எந்தவிதமான நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிவிக்கும்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, இன்றைக்கு வக்ப் போர்டு திருத்தி அமைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ராஜினாமா செய்ததால் வேறு அங்கத்தினர்களைப் போட்டிருப்ப தாகச் சொன்னார்கள். ஆனால் இப்போது வக்ப் போர்டை போடும் போது யார் யாரைப் போட வேண்டும் என்று பரிசீலிக்கிறபோது, மாவட்டத்திற்கு ஒருவரைப் போட இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, வக்ப் வாரியத்தில் மொத்தம் 11 உறுப்பினர்கள்தான் தலைவர் உட் பட இருக்க முடியும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு உறுப்பினர் போட வேண்டும் என்று சொன்னால் எண்ணிக்கை அதிகமாகும் என்ற காரணத்தினால் அதிகமான உறுப்பினர்களைப் போடுவதற்கு வாய்ப்பு வசதி இல்லை என்ற காரணத்தினாலே நாம் எல்லா மாவட்டங்களிலேயும் இப்படிப்பட்ட வாய்ப்பு ஏற்படுத்த முடிய வில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே கேள்வியில் உலிமாக்கள் சார்பில் யாராவது நியமிக்கப்பட்டார்களா என்று கேட்டேன். அதை நியமிப்பது சட்டப்படி தேவையான ஒன்று. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் பதில் ஒன்றும் சொல்ல வில்லை. இப்போது கேட்ட கேள்விக்கு 55 குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன என்று சொன்னார்கள். அவை நிர்வாகத் திறமை யின்மை, தாமதப்படுத்துவது என்ற வகையிலே அமைந்ததா அல்லது, கையாடல் செய்தார்கள், லஞ்சம் வாங்கினார்கள் என்ற வகையிலே அடங்கியிருக்கிறதா, இது எந்த வகையிலே 55 குற்றச் சாட்டுக்கள் என்று விளக்குவார்களா? அந்த உறுப்பினர்களுடைய பெயர்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, 55 குற்றச்சாட்டுக்கள் மீது அதிகாரப்பூர்வமாக விசாரணை நடத்தி அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. இந்த 55 குற்றச்சாட்டுகளும் ஒரே மாதிரியான குற்றச்சாட்டுக்கள் அல்ல. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன், ஒரு வக்ப் 4 லட்சம் ரூபாய் பெறுமான சொத்தை 30 ஆயிரம் ரூபாய்க்கு விற்கலாம்

[1978 செப்டம்பர் 11

என்று போர்டின் அனுமதியைப் பெற்றிருக்கிறது. போர்டு எந்த அதிகாரத்தின் கீழ் இந்த அனுமதியைக் கொடுத்திருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. தனிப்பட்ட முறையிலே உறுப்பினர்கள் இதற்கு எந்த முறையிலே உறுதுணையாக இருந்திருக்கிறார்கள் என்பதை நாம் வழக்கிற்காக எடுத்துக் கொண்டு விசாரணை செய்யும்போதுதான் தெரியுமே தவிர, இதிலே யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த இடத்திலே அறிவிப்பது முறையல்ல என்ற காரணத்தினாலே அறிவிக்க விரும்பவில்லை. வக்ப் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்டிருப்பதற்கு மாறாக, 4 லட்சம் பெறுமான சொத்தை 30 ஆயிரம் ரூபாய்க்கு விற்கலாம் என்று அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது, அந்த அனுமதியைக் கொடுத்ததற்கு யார் யார் பக்கபலமாக இருந்திருக்கிறார்கள், என்பது குறித்து அந்தத் தீர்மானங்களின் நகல்களை எல்லாம் எடுத்துப் பார்த்தால்தான் நாம் ஒரு முடிவுக்கு வர முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

திரு. எம். எம். ஏ. ரசாக்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா மாவட்டத்திற்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். சமீபத்தில் கூட அறநிலையத் துறையின் சார்பில் அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டபோது 2 பேரை அரசாங்கம் நியமிக்கலாம் என்று சட்டம் கொண்டுவந்து இருக்கிறார்கள். அதைப்போல் வக்ப் வாரியத்திற்கும் அதிகமான உறுப்பினர்களை நியமிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, அனைத்து மாவட்டங்களில் உள்ள பிரச்சினைகளை ஆங்காங்கு தீர்க்கப் பட வேண்டும் என்ற அடிப்படையில் தான் வட்டாரக் குழுக்களை நியமிக்கலாமா என்பதைப் பற்றி அரசாங்கம் தற்போது பரிசீலித்து வருகிறது. அப்படி வட்டாரக் குழுக்கள் அமைக்கப்பட்டால், நான்கு பிரிவுகளாகப் பிரித்து அமைத்து அதில் மேலும் 20-30 பேர் நியமிக்க வாய்ப்பு இருக்கிறது. அப்போது அந்தந்த மாவட்டத்திலுள்ள பிரதிநிதிகளை தமிழ்நாடு வக்ப் வாரியத்தில் நியமிக்கப் படாமல் இருப்பவர்களை, அந்த வட்டாரக் குழுவில் நியமிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவரவர்களே, 4 லட்ச ரூபாய் சொத்தை 30,000 ரூபாய்க்கு விற்பதற்கு அனுமதி அளிக்கப் பட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அப்படி 4 லட்சம் ரூபாய் பெறுமான சொத்தை ரூ. 30,000-க்கு விற்பனை செய்வதற்கு அனுமதி அளித்த அந்த போர்டில் உள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? இல்லை என்றால், இதற்குப் பிறகாவது எடுக்கப்படுமா? அதற்கான சட்டம் ஏதாவது இருக்கிறதா? இது போன்று மேலும் எத்தனை சொத்துக்கள் இப்படி விற்கப்பட்டு இருக்கின்றன? சென்ற 10 ஆண்டு காலத்தில்......

1978 செப்டம்பர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் இடையில் வந்தார்கள். ஒரே ஒரு கேள்வியைக் கேட்டு அமைச்சரிடத்தில் பதில் பெறலாம், ஆனால் அவர்கள் ஏற்கனவே அமைச்சர் சொல்லி முடித்த விவரங்களையே கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறோம் என்று சொல்லிவிட்டாரே? மேலும் நேரத்தை வீணாக்க வேண்டுமா? சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: நேரத்தை வீணாக்கவில்லை. அமைச்சர் திறமையானவர், எத்தனை கேள்விகள் கேட்டாலும் பதில் சொல்லும் சாமர்த்தியம் உடையவர். ஆகவே நீங்கள் தடுக்காதீர்கள். இந்த 10 வருஷ காலத்தில் மேலும் இதுபோன்ற எத்தனை சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டு இருக்கின்றன என்பதைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, மூலக் கேள்வி கேட்டவரே திரும்பவும் துணை வினா கேட்கிறார் என்ற காரணத்தால் ஏற்கனவே சொன்ன பதில் என்றாலும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்கிறேன். 55 குற்றச்சாட்டுகள் சம்பந்தப்பட்ட சொத்தின் மதிப்பு ரூ. 7 கோடி. ரூ. 2 கோடி அளவிற்கு உள்ள சொத்துக்கள் அதனுடைய மார்க்கெட் நிலவரப் படி விற்பனை செய்யப்படவில்லை; அல்லது மாற்றம் செய்யப்பட வில்லை என்று புகார் வந்து இருக்கிறது. அது குறித்து தீவிரமாக இன்று நாம் பரிசீலனை செய்து வருகிறோம். அதற்குச் சம்பந்தப் பட்டவர்கள் யார் என்பது அந்த விசாரணையின் முடிவில்தான் நமக்குத் தெரியும். அதற்குப் பிறகுதான் தீவிரமாக நடவடிக்கை எடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செயற்கை வைரம் தயாரிப்பு

*வினா எண் 149—திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) செயற்கை வைரம் தயாரிக்கும் தளம், டப்பிகள், செயற்கை வைரத் தொழிலாளருக்குக் கிடைக்காமல் இடைத்தரகர்கள் இலாபம் பெறுவது இந்த அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் போக்கிட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ)-(ஆ) செயற்கை வைரம் தயாரிப்பாளருக்கு தளம் என்ற கச்சாப்பொருள் கிடைப்பதில் உள்ள சிரமங்கள் குறித்து தொழில் வணிகத் துறை அதிகாரிகள் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து இப்பொழுது அந்தப் பொருளை ஒழுங்கான முறையில் விநியோகம் செய்யும்படி செய்திருக்கின்றனர்.

தேசிய பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு மிகை ஊதியம்.

*வினா எண் 150— திரு. கு. ரமணி : மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976-ஆம் வருடத்திற்கான போனஸ், பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு 1977-ம் வருட தீபாவளி பண்டிகையின்போது கொடுத்த நேரத்தில் தேசிய பஞ்சாலைக் கார்ப்பரேஷன் கீழுள்ள பஞ்சாலைகளில் எல்லாம் கொடுக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், தனியார் பஞ்சாலைகளில் கொடுக்கப்பெற்ற விகிதப்படி கொடுக்கப்பட்டதா? அல்லது குறைவாகக் கொடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்.

(ஆ) தேசிய பஞ்சாலை கழகத்தின் கீழுள்ள பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு 1976-77 ஆண்டுக்கு போனஸ் சட்டத்தின் கீழ் குறைந்த பட்ச போனஸ் 8.33 சதம் கொடுக்கப்பட்டது என தேசிய பஞ்சாலைக் கழகம் (தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி) அறிவித்திருக்கிறது.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

சென்னையில் மழையினால் பாதிக்கப்பட்ட குடிசைகள்.

வினா 301— திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கடந்த 1976 அக்டோபர், நவம்பர் மாதங்களில் பெய்த மழையினால், சென்னை நகரில் எத்தனைக் குடிசைகள் பாதிக்கப்பட்டன?

(ஆ) பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்ட உதவிகள் யாவை?

விடை—(அ) 69,596 குடிசைகள்,

2,46,176 நபர்கள்.

(ஆ) வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியாக அளிக்கப்பட்ட தொகை மொத்தம் ரூ. 47,64,325

வழங்கப்பட்ட லுங்கிகள் .. 95,701

வழங்கப்பட்ட புடவைகள் .. 95,701

கிண்டியிலுள்ள கிங் நிறுவனம்.

வினா 302— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிண்டியில் உள்ள கிங் நிறுவனத்தில் மருந்துப்பொருள் சோதனை ஆய்வுக் கூடத்தை விரிவுபடுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—(அ) & (ஆ) : கிங் நிலையத்தில் மருந்து மாதிரிகளை ஆராய்வதற்கு போதுமான வசதிகள் இல்லாதிருப்பதால் வருடத்திற்கு 2,000 மருந்து மாதிரிகளை ஆராய்வதற்கு எல்லா வசதிகளையும் கொண்ட மருந்து ஆய்வுக்கூடம் கட்ட அரசு அனுமதித்துள்ளது. இதற்கான இரண்டு மாடிக் கட்டிடம் சென்னை தேனாம்பேட்டையிலுள்ள மருத்துவப் பணி இயக்குநரக வளாகத்தில் கட்டப்பட்டுள்ளது. இது விரைவில் செயல்படத் துவங்கும்.

போக்குவரத்துக் கழகங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பணியாளர்கள்.

வினா 303—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழ் நாட்டிலுள்ள ஏழு போக்குவரத்து வாரியங்களிலும் பணிபுரியும் பணியாளர்களில் தாழ்த்தப்பட்டோர் எத்தனை சதவீதம்?

விடை : தமிழ் நாட்டில் பயணிகள் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் மொத்தத் தொழிலாளர்கள் 40,152. இவர்களில் தாழ்த்தப்பட்டோர் எண்ணிக்கை 4,016. இது பத்து சதவீதம் ஆகும். இதை 18 சதவீதம் ஆக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

வினா 304—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் (தமிழ் நாட்டின்) மொத்த ஊழியர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதில் தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர்?

[1978 செப்டம்பர் 11

விடை—(அ): தமிழ்நாட்டின் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் மொத்த ஊழியர்கள் 40,152.

(ஆ) அவர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் 4,016.

சிறைகளில் தேவைப்படும் வேளாண்மைப் பொருட்கள்.

வினா 305—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வேளாண்மைப் பொருட்களில் சிறைகள் தன்னிறைவு காண அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

விடை: பதிலுக்கான ஒரு விவர* அறிக்கை பேரவை முன் வைக்கப்படுகிறது.

தருமபுரி மாவட்டத்தில் அரிசன நலப்பணிகள்.

வினா 306—திரு. கா. அப்புனு கவுண்டர்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1977-78-ம் ஆண்டில் அரிசன நலப்பணிகளுக்காக தருமபுரி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) கட்டப்பட்ட வீடுகள் எத்தனை?

விடை—(அ): 1977–78-ம் ஆண்டில் அரிசன நலப்பணிகளுக்காக தர்மபுரி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 30.66 இலட்சம் ஆகும்.

(ஆ) 1977-78-ம் ஆண்டில் தர்மபுரி மாவட்டத்தில் அரிசனங்களுக்காக 154 வீடுகள் கட்ட அரசாங்கம் உத்திரவிட்டது. அவைகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

முகையூர் தொகுதியில் துணைக்காவல் நிலையங்கள்.

வினா 307—திரு. கோ. ராகோத்தமன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

முகையூர் தொகுதியில் வீரபாண்டி, முகையூர் இடங்களில் துணைக் காவல் நிலையம் அமைக்கும் திட்டம் உண்டா?

விடை: இல்லை.

*268-270-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

1978 செப்டம்பர் 11]

ஆனந்தல் அரிசனக் குடியிருப்பில் தெரு விளக்குகள்.

வினா 308—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) துரிஞ்சாபுரம் ஒன்றியம், பூதமங்கலம் ஊராட்சி, ஆனந்தல் அரிசன காலனிக்கு மின்சார தெரு விளக்குகள் போடப் படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு இதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—(அ): துரிஞ்சாபுரம் ஒன்றியம், பூதமங்கலம் ஊராட்சி, ஆனந்தல் அரிசன குடியிருப்பு பகுதியில் தெரு விளக்குகள் போடுவதற்கான பணிகள் தொடங்கப்பட்டு 18—7—78 அன்று முடிக்கப்பட்டன.

(ஆ) வினா எழாது.

உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டடங்கள்.

வினா 309—திரு. மொ. பரமசிவம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வானூர் ஒன்றியத்திலுள்ள புதுக்குப்பத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—(அ) & (ஆ): புதுக்குப்பம் உயர்நிலைப் பள்ளிக்கு வெள்ள நிவாரண திட்டத்தின் கீழ் ரூ. 20,000 மதிப்பீட்டில் கல்நார் கூரை (ஏ. சி. ஷீட்) வேய்ந்த மூன்று வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிக்கு மேலும் புதிய கட்டிடம் கட்டும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

வினா 310 திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் பெரிய கிருஷ்ணபுரம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு, ஏதேனும் அரசிடம் உள்ளதா?

விடை: இப்பள்ளிக்குச் சொந்தமான நிலம் பெறுவது குறித்து வருவாய்த் துறையுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. நிலம் கிட்டிய பின் கட்டிடம் கட்டுவது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

[1978 செப்டம்பர் 11

வினா 311— திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பெரியகுளம் தாலூகா, பெரியகுளம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டிடம் அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை : இதுவரை கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு எதுவும் பள்ளிக் கல்வி இயக்குநரால் பெறப்படவில்லை.

வினா 312—திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நெல்லிக்குப்பத்திலுள்ள அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் அமைத்துத் தரும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

விடை : இல்லை. இப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குப் போதிய வகுப்பறைகள் உள்ளதால் கட்டிடம் கட்டும் பிரச்சனைக்கு தற்போது இடமில்லை.

திருப்பூரில் பல்துறை தொழிற் பயிற்சிக் கல்லூரி.

வினா 313— திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருப்பூர் நகரத்தில் ஒரு பாலிடெக்னிக் அமைத்திடும் செயற்குறிப்பு அரசுக்கு இருக்கிறதா?

விடை : திருப்பூர் நகரத்தில் பாலிடெக்னிக் அமைத்திடும் கருத்து ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

சலவைத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர்.

வினா 314— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 'வண்ணான்' அல்லது 'வண்ணார்' என்ற சொல்லை நீக்கம் செய்து பதிலாக சலவைத்தொழிலாளர் என்று அரசுப் பதிவேடுகளில் குறிப்பிட வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு விடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றி மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

விடை—(அ). இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1978 செப்டம்பர் 11]

தருமபுரி மாவட்டத்திலுள்ள ஓரப்பம், குந்தாரப்பள்ளி சந்தைகள்.

வினா 315—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா: —

(அ) தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஓரப்பம், குந்தாரப்பள்ளி ஆகிய இரு சந்தைகள் எந்த அடிப்படையில் நடைபெறுகின்றன?

(ஆ) எந்த நிர்வாகத்தின்கீழ் நடைபெறுகிறது?

விடை—(அ) & (ஆ) : இரு சந்தைகளும் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியத்தின் உரிமத்துடன் தனியார் இடங்களில் தனியாரால் நடத்தப்படுகின்றன.

தருமபுரி மாவட்டத்தில் வீட்டு வசதி வாரியப்பணிகள்

வினா 316—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தருமபுரி மாவட்டத்தில் வீட்டு வசதி வாரியம் எத்தனை கட்டிடங்கள் கட்ட திட்டமிட்டுள்ளது?

எங்கெங்கு கட்டப்படவுள்ளன?

(ஆ) எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

(இ) அதற்காக அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

விடை ; விவர * அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

பரசனூரிலுள்ள ஒன்றிய மருத்துவ மனை.

வினா 317—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செம்பனூர் கோவில் ஒன்றியம் பரசனூர் ஊராட்சியில் இயங்கிவரும் ஒன்றிய மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக எடுத்துக் கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை : இல்லை.

[*271ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

[1978 செப்டம்பர் 11

சாலை ஆய்வாளர்களுக்கு மாதாந்திரப் பயணப்படி.

வினா 318—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) நெடுஞ்சாலைத் துறையில் உள்ள சாலை ஆய்வாளர்களுக்கு மாதாந்திரப் பயணப்படி வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இது அமுல்படுத்தப்படும்?

விடை—(அ) ஆம்.

(ஆ) அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

தென்னாற்காடு மாவட்டத்தில் முந்திரித் தொழிற்சாலை.

வினா 319—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென் ஆற்காடு மாவட்டத்தில் முந்திரிக் கொட்டை உடைக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை: இல்லை.

சேத்தியா தோப்பில் பத்திரப்பதிவு அலுவலகக் கட்டிடம்.

வினா 320—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சிதம்பரம் வட்டத்தில் சேத்தியா தோப்பில் பத்திரப்பதிவு அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை: இல்லை

பூமலைக்காடு ஏரி பழுது பார்த்தல்.

வினா 321—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செங்கம் வட்டம், சே, கூடலூர் மதுரா, காமாட்சி அந்தல் கிராம நிலங்களுக்கு பூமலைக்காட்டில் உள்ள ஏரியின் மூலம் தண்ணீர் பாய்வதை அதிகரிக்க, காட்டிலாக்காவால் ஏரியைப் பழுது பார்க்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை: இல்லை.

1978 செப்டம்பர் 11]

வட ஆற்காடு மாவட்டத்தில் மதிய உணவு எடுத்துச் செல்லும் வண்டிகள்.

வினா 322 திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் ஒன்றிய மத்திய சமையல் கூடங்களில் சமைக்கும் உணவை எடுத்துச் சென்று விநியோகிக்க எத்தனை வேன்கள் உள்ளன?

(ஆ) அவற்றுள் தற்சமயம் எத்தனை உபயோகத்தில் உள்ளன?

விடை—(அ) 76. (ஆ) 54

சுருட்டு, பீடி தொழிலில் ஈடுபட்டுள்ளோர்.

வினா 323—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ் நாட்டில் சுருட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் எண்ணிக்கை என்ன?

(ஆ) மொத்தமுள்ள சுருட்டுத் தொழிற்சாலைகள் எத்தனை?

விடை—(அ) 1760

பிரிவு.	ஆண்.	பெண்.	மொத்தம்.	
தொழிற்சாலை ஊழியர்கள்	1675	47	1722	1760
இல்லப் பணியாளர்கள்	38	..	38	

(ஆ) 171.

வினா 324—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ் நாட்டில் பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் எண்ணிக்கை என்ன?

(ஆ) எத்தனை பாக்டரிகளில் இவர்கள் வேலை செய்கிறார்கள்?

விடை—(அ) 77,472.

பிரிவு	ஆண்	பெண்	மொத்தம்	
தொழிற்சாலைப் பணியாளர்கள்	9546	19	9565	77472
இல்லப் பணியாளர்கள்	28,063	39844	67907	

(ஆ) 1319.

தருமபுரி மாவட்டத்திற்கு சூப்பிரெண்டிங் என்ஜினியர் அலுவலகம்.

வினா 325—திரு. க. இரா. சின்னராசு: மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தர்மபுரி மாவட்டத்துக்கென தனியாக ஒரு சூப்பிரெண்டிங் என்ஜினியர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை: இல்லை.

அம்மாபேட்டை ஒன்றியத்திலுள்ள தொடக்கப்பள்ளிக் கட்டிடங்கள்.

வினா 326—திரு. அ. செல்லப்பா: மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள அம்மாபேட்டை ஒன்றியத்திலுள்ள எல்லாத் தொடக்கப்பள்ளிகளுக்கும் சொந்த இடமும் சொந்த கட்டிடமும் இருக்கிறா?

(ஆ) இல்லை எனில், எந்தெந்த ஊர்களில் தொடக்கப் பள்ளிகளுக்கு சொந்த இடமும் கட்டிடமும் இல்லை?

விடை: (அ) மொத்தம் 67 பள்ளிகளில் 58 பள்ளிகள் சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகின்றன.

(ஆ) கீழ்க்கண்ட 9 பள்ளிகளுக்குச் சொந்தக் கட்டிடம் இல்லை:—

1. காவளூர்.
2. மலையநத்தம்.
3. மலையபுரம்.
4. கரம்பை.
5. மணப்படுகை.
6. பொற்றியாகுளம்.
7. குரப்பாளக்குடி.
8. எடவாக்குடி.
9. திருனயிருப்பு.

தேனுஞ்சேரி கிராமத்தில் உபரி நிலங்கள்.

வினா 327—திரு மு. அம்பிகாபதி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கும்பகோணம் தாலுக்கா, தேனுஞ்சேரிப் பகுதி குமரக் குடி வட்டத்தில் தனியாரது நிலம் ஏதும் 16—2—76ல் உபரி நிலம் என்று அறிவிக்கப்பட்டதா?

(ஆ) அந்த நிலத்தை அரசு மேற்கொண்டுள்ளதா?

விடை: (அ) வினாவில் குறிப்பிட்ட கிராமத்தின் பெயர் தேனுஞ்சேரியாக இருக்க வேண்டும். இக்கிராமத்தில் உபரி நிலமேதும் அறிவிக்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தமிழ்நாட்டில் திறக்கப்பட்ட கால்நடை மருத்துவமனைகள்.

வினா 328—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1967-ம் ஆண்டு முதல் 1977ம்ஆண்டு-வரை தமிழ் நாட்டில் எத்தனை கால்நடை மருத்துவ மனைகள் திறக்கப்பட்டன?

(ஆ) நடப்பாண்டில் எத்தனை திறக்க அரசிடம் திட்டமுள்ளது?

விடை: (அ) 1967-68 முதல் 1977-78 ஆண்டு வரை 284 கால்நடை மருந்தகங்கள் துவக்கப்பட்டன.

(ஆ) 1978-79 ஆம் ஆண்டில் 10 கால்நடை மருந்தகங்கள் துவக்கப்படுவதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி மன்றக் காவலர்கள் ஊதியம்.

வினா 329—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

நகராட்சி மன்றங்களில் பணியாற்றும் காவலர்களுக்கு அளிக்கப்படும் அடிப்படைச் சம்பளம் என்ன?

விடை: ரூ. 130-3-160-4-180-5-195 சில்லரை சிலவினங்களிலிருந்து கீழ் பணிபுரியும் காவலர்களும் உள்ளனர். இவர்களுக்கு மாவட்ட ஆட்சியாளர் நிர்ணயிக்கிற மார்க்கெட் நிலவரப்படி ஊதியம் வழங்கப்படுகிறது.

திருச்சி மத்திய சிறையிலிருந்து தப்பியோடிய கைதிகள்.

வினா 330—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1977-ம் ஆண்டில் திருச்சி மத்திய சிறையிலிருந்து தப்பி ஓடிய கைதிகள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டார்களா?

[1978 செப்டம்பர் 11

விடை: (அ) 1977-ம் ஆண்டில் மூன்று சிறைவாசிகள் திருச்சி மத்திய சிறையிலிருந்து தப்பியோடினர்.

(ஆ) தப்பி ஓடிய மூவரும் மீளப் பிடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

மாவட்ட வட்ட அளவில் நிரந்தரப் பொருட்காட்சிகள்.

வினா 331—திரு. என். கிட்டப்பா; மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மாவட்டந்தோறும் அல்லது வட்டம் தோறும் நிரந்தரப் பொருட்காட்சி ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை: மாவட்டந்தோறும் நிரந்தரப் பொருட்காட்சி ஏற்படுத்த வேண்டுமென அரசு கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது. இப்பொழுது மாவட்டங்களில் முக்கிய நகரங்களில் நடைபெறும் பொருட்காட்சிகளை அரசும் அரசைச் சார்ந்த வாரியங்கள், நகராட்சி ஆகியவை ஏற்று நடத்தும் திட்டம் செயல்பட்டு வருகிறது.

வாம்பன் அருகே பழத்தோட்டப் பண்ணை.

வினா 332—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் வாம்பன் அருகே பழத் தோட்டப் பண்ணை ஒன்று நிறுவிடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றி விவரம் யாது?

விடை: ஒரு விவர * அறிக்கை அவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

கிராம விவசாய வளர்ச்சித் திட்டம்.

வினா 333—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தர்மபுரியில் 'கிராம விவசாய வளர்ச்சித் திட்டம்' அமுலாக்கப்பட்டுள்ளதா!

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

[*272-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]

1978 செப்டம்பர் 11]

விடை: (அ) & (ஆ) விவர * அறிக்கை அவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

ஆயத்த ஆடை தயாரிக்கும் நிலையங்கள்.

வினா 334—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கைத்தறி, பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் ஆயத்த ஆடை தயாரிக்கும் நிலையங்களை ஏற்படுத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுவரை எங்கெங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன?

விடை: (அ) ஆம்.

(ஆ) சென்னை, திருச்சி மற்றும் மதுரையில் நிறுவ திட்டமிடப்பட்டு முதலில் சென்னையில் ஆடை தயாரிக்கும் நிலையம் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

வெளி மாநிலங்களில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள்.

வினா 335—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கைத்தறி, பஞ்சாலைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா; --

(அ) கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மற்ற மாநிலங்களில் விற்பனை நிலையங்களை அமைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், 1976-77 ம் ஆண்டில் அதன் மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு?

விடை: (அ) ஆம். 30—6—77-ந் தேதி முடிய 111 இடங்களில் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) 1976-77-ஆம் ஆண்டில் மேலே குறிப்பிட்ட 111 கோ-ஆப்டெக்ஸ் கடைகளின் மூலம் ரூ. 479·47 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதனால் 1976-77-ல் கோ-ஆப்டெக்ஸின் சராசரி வருமானம் ரூ. 1.40 இலட்சம் (நிகர இலாபம்) ஆகும்.

ஏற்காட்டிலுள்ள தோட்டத் தொழிலாளர் ஊதியம்

வினா 336—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;—

(அ) அண்மையில் ஏற்காடு காப்பித் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

*273-274-ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]

விடை : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வாளையாறு பகுதியில் உணவு பிரிவுப் போலீசாரால் லாரி பரிசோதனை.

வினா 337 — திரு. என். கிட்டப்பா; மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1978-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 6-ம் தேதியன்று கோவை உணவுப் பிரிவு போலீசார் வாளையாறு பகுதிக்கு அருகில் லாரி ஒன்றினை பரிசோதனை செய்தனரா?

(ஆ) ஆம் எனில், அதன் மூலம், எத்தனை மூட்டை கடத்தல் அரிசி கைப்பற்றப்பட்டது?

விடை: (அ) & (ஆ) ஆம். வாளையாறு பகுதியில் லாரி ஒன்றினை பரிசோதித்ததில் 18 மூட்டை (19.85 குவிண்டால்கள்) அரிசி, மைதா மூட்டைகளுக்கடியில், கண்டுபிடிக்கப்பட்டது. பட்டியல்கள் இல்லாததாலும் லெவி கொடுக்கப்படாததாலும், 18 மூட்டைகளும் கைப்பற்றப்பட்டன. இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வழக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பு விசாரணையிலுள்ளது.

கடல் நீரை குடிநீராக்கும் திட்டம்.

வினா 338—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு செலவு செய்யப்பட்டது?

விடை: (அ) இல்லை. (ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

தாயகம் திரும்பும் இலங்கை அகதிகள்.

வினா 339—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

நடப்பு ஆண்டில் இலங்கையிலிருந்து அனுப்பப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கும் அகதிகள் எத்தனை பேர்?

விடை: நடப்பு 1978–79-ம் ஆண்டில் 63,800 அகதிகள் உள்ளடங்கிய சுமார் 14,500 குடும்பங்கள் இலங்கையிலிருந்து அனுப்பப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பத்தூரில் வணிகவரி அலுவலகக் கட்டிடம்.

வினா 340—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகரில் வணிக வரி அலுவலக கட்டிடம் ஒன்று புதியதாகக் கட்டும் உத்தேசம் உண்டா?

(ஆ) இத்திட்டம் எப்போது எடுத்துக் கொள்ளப்படும்?

விடை—(அ) இல்லை. (ஆ) எழவில்லை.

மாநில மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

வினா 341—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1975 ஏப்ரல் முதல் 1978 மார்ச் மாதம் முடிய மாநிலத்திலுள்ள மாவட்ட ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் செஸ் மூலம் வந்த தொகை எவ்வளவு?

(ஆ) இந்த ஆண்டுகளில் உதவித் தொகையாக அல்லது நிவாரணப் பணிக்கென தொகை ஏதும் கொடுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில் அதன் விவரம் என்ன? மாவட்ட வாரியாக.

(ஈ) கட்டிடங்கள் அல்லது மனைகள் வாங்கப்பட்டவை குறித்த விவரம் யாது? மாவட்ட வாரியாக:

விடை: விவர * அறிக்கை அவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

புதுப்பாளையம் உயர்நிலைப் பள்ளிக்கு விஞ்ஞானக்கூடம்

வினா 342 —திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) வட ஆற்காடு மாவட்டம், புதுப்பாளையம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு விஞ்ஞானக்கூடம் கட்டப்படாமல் இருந்து வருவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் கட்டித்தர அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

[*274-ம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]

[1978 செப்டம்பர் 11

விடை: (அ) ஆம்.

(ஆ) 1978-79-ம் ஆண்டிலும் இனிவரும் ஆண்டுகளிலும் அறிவியல் ஆய்வுக்கூட மானியம் பெறுவதற்கான உயர்நிலைப் பள்ளிகளின் பட்டியலைத் தயாரிக்கும்பொழுது (பிற பள்ளிகளின் தேவைகளோடு) இப்பள்ளியின் தேவையும் கருத்திற் கொள்ளப் படும்.

வடஆற்காடு மாவட்டத்தில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்.

வினா 343—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) வடஆற்காடு மாவட்டத்தில் செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சி முடித்து, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளவர்கள் முறையே எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் அரிசனங்கள், மலைவாழ் தாழ்த்தப் பட்டவர்கள் எத்தனைபேர்?

விடை—(அ) 1547 பேர்கள்.

(ஆ) அவர்களில் அரிசனங்கள் (Scheduled castes) 248 பேர் கள் ஆகும். மலைவாழ் தாழ்த்தப்பட்டவர்கள் (Scheduled Tribes) யாரும் இல்லை.

சேரன் போக்குவரத்துக் கழகத்தில் மினி பேருந்துப்பணி.

வினா 344—திரு. ஆ. நடராசன்; மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா;

(அ) சேரன் போக்குவரத்துக் கழகம் 'மினி' பேருந்துப் பணியினை மேற்கொண்டுள்ளதா?

(ஆ) பேரூர் தொகுதியில் எங்கெங்கு இப்பணி மேற் கொள்ளப்பட்டுள்ளது?

விடை—(அ) சேரன் போக்குவரத்துக்கழகம் 'மினி' பேருந்து பணியினை மேற்கொண்டு, நீலகிரி மாவட்டத்தில் பதினொரு பேருந்துகளை ஓட்டி வருகிறது. வால்பாறை தாலுக்காவில் ஒரு மினி பேருந்தும் நீலகிரி மாவட்டத்தில் கூடுதலாக ஒரு மினி பேருந்தும் கூடிய விரைவில் விட ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

(ஆ) பேரூர் தொகுதியில் இப்பணி மேற்கொள்ளப்பட வில்லை.

1978 செப்டம்பர் 11]

கொட்டப்பட்டியில் அகதிகளுக்குப் புதிய கட்டிடங்கள்.

வினா 345—திரு. என். கிட்டப்பா; மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) திருச்சி அருகே கொட்டப்பட்டி என்ற இடத்தில் அகதிகளுக்காக புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில் அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

விடை—(அ) ஆம்.

(ஆ) மதிப்பீட்டுத் தொகை ரூ. 26·46 லட்சம்.

சென்னை மாநகராட்சி பள்ளி ஆசிரியர்களுக்கு வீடுகள்.

வினா 346—திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா;

(அ) சென்னை மாநகராட்சியின் பள்ளிகளில் ஆசிரியர், ஆசிரியைகளாகப் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு வீடுகட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—(அ) இல்லை.. (ஆ) கேள்விக்கு இடமில்லை.

தமிழ் நாட்டில் பால்பவுடர் தொழிற்சாலை.

வினா 347—திரு. ஆ. நடராசன்; மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ் நாட்டில் பால்பவுடர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) கோவை மாவட்டத்திலும் ஒரு தொழிற்சாலை துவங்க, செயல் குறிப்பு உள்ளதா?

விடை—(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தில், ஈரோடு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தின்கீழ் தினமும் ஒரு லட்சம் லிட்டர் பாலை பவுடராக்கும் திறன் கொண்ட ஒரு பால் பவுடர் கூடம் நிறுவ ஒப்புக்கொள்ளப்பட்டு அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பால்பவுடர் தொழிற்சாலை தேவையா என்பது ''பால் பெருக்குத் திட்டம் 2''ன் முடிவுகளைப் பொறுத்து இருக்கிறது.

[1978 செப்டம்பர் 11

கும்பகோணத்தில் குத்தகை நிலம் வாங்கக் கடன் பெற்றவர்கள்.

வினா 348—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) 1977–78 ஆம் ஆண்டு கும்பகோணம் தாலுகா பிரதம நிலவள வங்கியில் குத்தகை நிலத்தை வாங்குவதற்கென கடன்பெற்றவர்கள் எத்தனைபேர்?

(ஆ) அவர்களுள் சிறிய விவசாயிகள் எத்தனை பேர்?

(இ) வழங்கப்பட்ட மொத்த கடன் தொகை எவ்வளவு?

விடை—(அ) 1977-78 ஆம் ஆண்டில் கும்பகோணம் பிரதம நிலவள வங்கியில் குத்தகை நிலத்தை வாங்குவதற்கென கடன் பெற்றவர்கள் பத்து பேர்கள்.

(ஆ) அவர்களுள் சிறிய விவசாயிகள் ஒன்பது பேர்.

(இ) வழங்கப்பட்ட மொத்த கடன் தொகை ரூ. 61,000.

வெள்ள நிவாரணப் பணிகளின் கீழ் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் பழுது பார்த்தல்.

வினா 349—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் வெள்ள நிவாரணப் பணிகளின் கீழ் எத்தனை உயர்நிலைப் பள்ளிக்கட்டிடங்கள் எவ்வளவு ரூபாயில் பழுது பார்க்கப்பட்டன?

(ஆ) பழுது பார்க்காமல் விடப்பட்டுள்ள பள்ளிகள் எத்தனை?

விடை (அ) வட ஆற்காடு மாவட்டத்தில் 18 உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் வெள்ள நிவாரணப் பணியின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. ஜூன் 1978 முடிய மேற்படி வேலைகளுக்கு செலவிடப்பட்ட தொகை ரூ. 1,79,714.

(ஆ) 48 உயர்நிலைப்பள்ளி கட்டிடங்கள் இன்னும் மராமத்து செய்யப்படாமல் உள்ளன.

காஞ்சிபுரத்தில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம்.

வினா 350—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) காஞ்சிபுரத்தில் பாதாளச்சாக்கடை அமைக்கும் திட்டம் எந்த ஆண்டில் துவக்கப்பட்டு எப்போது முடிவு பெற்றது?

(ஆ) இதற்கு ஆன மதிப்பீட்டுத்தொகை எவ்வளவு?

(இ) செலவு ஆன தொகை எவ்வளவு?

1978 செப்டம்பர் 11]

விடை—(அ) ஜனவரி 1971-ல் துவக்கப்பட்டு 1977-ஆம் ஆண்டு முடிவு பெற்றது.

(ஆ) 105.44 லட்ச ரூபாய்கள்.

(இ) 124.08 இலட்சம் ரூபாய்கள்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்.

(அ) அரைமணி விவாதம் குறித்து.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, பேரவை நிகழ்ச்சி நிரலில் 6-வது பாராவில் ஒரு பொருள் குறித்து ½ மணி நேரம் விவாதம் என்று ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த நிகழ்ச்சி வருகிறபோது சொல்லுங்கள். ஏற்கனவே அது அனுமதித்தாகிவிட்டது. அந்த நிகழ்ச்சி எடுத்துக் கொள்ளப்படுகிறபோது அதன் மீது ஒழுங்குப் பிரச்னை அல்லது தங்களுடைய விளக்கம் தெரிவிக்கலாம். இப்போது தேவையில்லை.

(ஆ) ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, அருப்புக் கோட்டை தொகுதியில் காரியாபட்டி என்ற இடத்தில் அனைத்துக் கட்சிகளைச்சேர்ந்தவர்களும் சேர்ந்து 4—9—78-ல் இருந்து பஸ் விடவேண்டும் என்று கோரி போராட்டம் நடத்துவதால் அங்கே போக்குவரத்து பாதிக்கப்பட்டு மாணவர்கள் கல்லூரிக்குப் போகக் கூட முடியாத ஒரு பதட்டநிலை இருப்பதால், நான் 42-வது விதியின்கீழ் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு ஒரு நோட்டீஸ் கொடுத்து இருந்தேன், அது எப்போது எடுத்துக்கொள்ளப்படும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறுபடியும் திரு. சுப்பு அவர்கள். இந்தப் பிரச்னையை இங்கே எழுப்ப ஆரம்பித்து விட்டார். (குறுக்கீடு) தயவுசெய்து நான் அவர்களுக்குச்

சொல்லிக்கொள்கிறேன். இந்தப் பிரச்னையைப் பற்றி அறையில் வந்து கேட்டால் எப்போது, என்றைக்கு எடுத்துக் கொள்ளப் படும் என்பதைப் பற்றி விளக்கமாக நான் சொல்ல முடியும்.

[முற்பகல் 10-10]

(இ) சட்டமன்றப் பேரவை அலுவலகத்திலுள்ள இட நெருக்கடி குறித்து.

* திரு. பொ. விஜயராகவன்: தலைவரவர்களே, இங்கே நம்முடைய சட்டமன்றத்தில் ஆர். ஆர். செக்ஷனுக இருந்தாலும் மற்ற செக்ஷன்களாக இருந்தாலும் அங்கே போக, வர மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஏனென்றால் இடநெருக்கடி கடுமையாக இருக்கிறது. மேசைகளையும், நாற்காலிகளையும் நெருக்கமாகப் போட்டுக் கொண்டு, அலுவலர்களும் இடநெருக்கடியில்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் 4, 5 பேர் போய்விட்டால் அங்கே நிற்கக்கூட முடியாத சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஏற்கெனவே சட்டமன்றத்திற்கு இடம் ஒதுக்கீடு செய்ய உறுதிமொழி அளித்தார்கள். இப்போது இட நெருக்கடி மிகவும் அதிகமாக இருப்பதால், உடனடியாக அளிக்கப்பட்ட உறுதிமொழியை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகளை நான் ஒத்துக்கொள்கிறேன், சட்ட மன்றத்திற்கு இருக்கின்ற பல பிரச்னைகள் தீர்க்கப்படாமலிருப் பதை நாங்கள் உணர்கிறோம். திரு. விஜயராகவன் அவர்களு டைய கோரிக்கை மிகவும் நியாயமானது, அந்த நியாயத்தை உணர்ந்து இருக்கிற நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களை இந்த குறைபாட்டைத் தீர்த்துவைக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். துறைச் செயலாளர் மூலமாக கோரிக்கையை அனுப்பி வைக்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: திரு. விஜயராகவன் அவர்களின் கோரிக்கை நிச்சயம் பரிசீலிக்கப்படும் என்று சொல்லுகின்ற அதே நேரத்தில் அதை நிறைவேற்றுகின்ற உணர்வைத் தூண்டுகின்ற சபாநாயகர் அவர்கள் என்னை காட்டிக் கொடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் காட்டிக்கொடுக்க வில்லை; இது கோரிக்கை.

(ஈ) வெள்ளத்தால் பாதிக்கப்பெற்றுள்ள வட மாநிலங்களுக்கு உதவுவது குறித்து

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, இன்றைக்கு வட மாநிலங்களில் குறிப்பாக டில்லி, பீகார், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் கடுமையான வெள்ளச் சேதம் ஏற்பட்டு, கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. மனிதாபி மான அடிப்படையில் தமிழகத்திலிருந்து நம்மால் இயன்ற உதவிகளை அவர்களுக்கு செய்ய வேண்டும் என்பது நம்முடைய கடமை. அந்த அடிப்படையில் இந்த அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்ல விரும்புவதாக இருந்தால் சொல்லலாம்.

(பதில் இல்லை)

(உ) உரிமைப் பிரச்னை குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, நான் ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்திருந்தேன்; அது மிகவும் முக்கியமானது. அதை தாங்கள் எடுத்துக்கொள்ள . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லத்தீப் அவர்கள் எழும்பும்போதே நினைத்தேன், என்ன கேட்கப் போகிறார்கள் என்று. அது ஆய்வில் இருக்கிறது. இரு தரப்பினரையும் வைத்துப் பார்க்க வேண்டும். நிச்சயம் நாளை அல்லது மறுநாள் எடுத்துக் கொள்ளப்படும்.

(ஊ) மகாகவி பாரதியார் பிறந்தநாள் விழா குறித்து

திரு. எம். எ. லத்தீப்: தலைவரவர்களே, இன்றைக்கு மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா நாடெங்கும் கொண் டாடப்படுகிறது. இன்றைக்கு நம்முடைய சட்டமன்றம் இங்கே நடைபெற்றுக்கொண்டிருப்பதால் பாரதியாரை இங்கே நினைவு படுத்துவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். நாடெங்கும் பாரதி விழா கொண்டாடும்போது நாமும் அவருக்கு இங்கே மரியாதை செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காலையிலேயே இங்கே வந்திருந்து, 9 மணிக்கு இந்தப் பிரச்னையை எழுப்பியிருந்தால் நல்லது. இருந்தாலும் தாங்களே சொல்லி முடித்துவிட்டீர்கள். அது எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்று. அதை ஏற்று, பாரதியாருக்கு தகுந்த வணக்கத்தை யும் மரியாதையையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

(3) அறிவிப்புகள்

(அ) 1978-79-ஆம் ஆண்டின் கூடுதல் மானியக் கோரிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1978-79 ஆம் ஆண்டின் கூடுதல் மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:—

In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India, I, Prabhudas Balubhai Patwari, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further Grants for the year 1978-79.

(4) 1978–79-ஆம் ஆண்டுக்கான முதல் துணை மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, 1978-79 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கையின் மீது பொது விவாதம். முதலில் திரு. சொக்கலிங்கம்.

திரு. கெ. சொக்கலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, இன்றைய தினம் அவை முன்னவர் அவர்களால் கோண்டுவரப் பட்டிருக்கிற துணை மானியக் கோரிக்கைகள்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எனக்குப் பேச வாய்ப்பளித் தமைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் சார்பாகவும் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய, சாலைகள் பராமரிப்புக்காக 8.5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக நிதியமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் என்னுடைய தொகுதியான திருப்போரூர் தொகுதியில் சாலைகள் பராமரிக்கப் படாமல் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்; இந்த நிதியிலிருந்து அந்தச் சாலை பராமரிப்புப் பணிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களுக்கு அங்குள்ள நிலைமைகள் நன்றாகத் தெரியும். அங்கே இருக்கின்ற கிராமங்கள் — குறிப்பாக தையூர் என்ற ஒரு பெரிய காலனி இருக்கிறது. அதில் 7 அரிசனக் காலனிகள் இருக்கின்றன. அங்கு மருத்துவம் பார்க்கக் கூட வசதி இல்லை. அதாவது மருத்துவ மனைக்கு செல்வதற்குக்கூட சாலை வசதி இல்லாமல் மிகவும் மோசமான நிலையில் படுமோசமான நிலையில் சாலைகள் இருக்கின்றன.

அதற்கடுத்ததாக காட்டான்குளத்தூரிலே பொத்தேரி என்ற பெரிய கிராமம் இருக்கின்றது. அங்கே தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் சாலைகள் வசதி எதுவும் இன்றி மிகவும் கடுமையாக கஷ்டப்

நிலைமை இருக்கின்றது. ஆகவே நான்
பட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலைமை இருக்கின்றது. ஆகவே நான்
பேரவை முன்னவர் அவர்களை பேரவைத் தலைவரின் மூலமாகக்
கேட்டுக்கோள்கிறேன். நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின்
உறுப்பினர் என்று பாராமல் என்னுடைய தொகுதியாகிய அந்தத்
தொகுதி மக்களுக்கு அவர்கள் பயன் அடையக்கூடிய வகையிலே,
ஒதுக்கப்படுகின்ற நிதியிலே பெரும்பாலான பங்குத் தொகையை
திருப்போரூர் தொகுதிக்கு ஒதுக்கித் தர வேண்டும் என்று நான்
நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைய தினம் அகில இந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழக அரசு நியாய விலைக் கடைகள்
16 ஆயிரம் திறப்போம் என்று அறிவித்திருந்தார்கள். ஓர் ஆண்டுக்
காலம் ஆகியும் இன்னும் திறந்தபாடில்லை. குறிப்பாக என்னு
டைய தொகுதி, சென்னையைச் சுற்றி இருக்கின்ற பகுதியாக
இருப்பதன் காரணத்தால் கூடுவாஞ்சேரி மற்றும் மணக்காடு
போன்ற இடங்களில் வாழ்கின்ற மக்கள் வசதியுடன்
வாழ்வதற்காக அங்கே நியாய விலைக்கடைகளை இந்த அரசு
திறக்க வேண்டும் என்று நான் மிகவும் பணிவன்போடு கேட்டுக்
கொள்கிறேன். நியாய விலைக் கடைகள், நியாயவிலைக் கடைகள்
என்று சொல்லிக்கொண்டு ஓராண்டுக் காலம் ஆகியும் இன்னும்
என்னுடைய பகுதியிலே ஒரு கடை கூட திறந்தபாடில்லை.

(திரு. துரை முத்துசாமி தலைமை.)

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியிலே கடந்த 7-8-1978
அன்று நடந்த ஒரு நிகழ்ச்சியைப் பற்றிச் சொல்ல விரும்பு
கிறேன். பாராளுமன்ற உறுப்பினர்கள் பற்றி இங்கே நான்
பேசுகின்றேன் என்று வைத்துக் கொண்டாலும் ஒரு சம்பவம்
நடந்ததை சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 7-8-1978
அன்று அங்கே ஒரு தொகுதியைச் சுற்றிப்பார்க்க பாராளுமன்ற
உறுப்பினர் ஒருவர் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். 3-8-1978
அன்று நானும் சுற்றுப் பயணம் மேற்கொண்டேன். 7-ஆம்
தேதி அவர் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அவர் மேற்
கொண்ட அந்த சுற்றுப் பயண வைபவத்தை இன்றைய தினம்
சொல்கிறேன். அது ஒரு ராஜபவனி வருவது போல் இருந்தது.
அமைச்சர்கள் வந்தால் கூட அந்த நிலைமை இருக்காது.
மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்களுக்கே தெரியும், அமைச்
சர்கள் வந்நால்கூட அந்த நிலைமை இருக்காது. அமைச்சர்
களுக்குக்கூட அந்த அளவுக்கு வரவேற்பு இல்லை. அங்கே
மக்களிடம் மனுக்களை வாங்க வந்த அவர் பவனி வந்திருக்கிறார்.
அப்படி பவனி வந்த அவர் தன்னுடைய கட்சிக்காரர் ஒருவரு
டைய வீட்டில் ஒரு ஆட்டை வெட்டி விருந்து நடத்திக்
கொண்டிருந்தாரே தவிர மக்களுக்கென்று வரவில்லை. இது
தொகுதி மக்களுக்கு உள்ளபடியே ரொம்பவும் வேதனையாக
இருந்தது. இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால்,
இந்த அரசினுடைய பணம் எந்த வகையில் பாழ்படுத்தப்படுகிறது
என்பதைச் சுட்டிக் காட்டத்தான்.

[திரு. கெ. சொக்கலிங்கம்] [1978 செப்டம்பர் 11

அதற்கடுத்தாற்போல் சிறு விவசாயிகள் மேம்பாடு திட்டம். அந்த சிறு விவசாயிகள் மேம்பாடு திட்டத்திற்கு நில வள வங்கியில் இருந்து கடன் கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அந்த சிறு விவசாயிகளுக்குத் தமிழினத்தின் தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்த நேரத்தில் அந்தச் சிறு விவசாயிகள் கிணறு வெட்டுவதற்கு கடன் வழங்கப்பட்டது, கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு கடன் வழங்கப்பட்டது. பம்ப் செட்டுகள் போடுவதற்குக் கடன் வழங்கப்பட்டது. ஆனால் இவற்றில் ஏதேனும் ஒன்றுகூட இப்போது வழங்கப்படவில்லை. ஆகவே இது ஏழைகளின் அரசா? அல்லது ஏழைகளை ஏமாற்றுகின்ற அரசா என்பதை நான் ரொம்ப வேதனையோடு கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆட்சியில் ஏழைகளுக்கு கடன் கிடைக்க வழியில்லை. ஆனால் கடன் கொடுக்கிறார்கள், எதற்கு? தென்னை மரம் வளர்க்கக் கடன் கொடுக்கிறார்கள். பட்டுப்பூச்சி வளர்க்கக் கடன் கொடுக்கிறார்கள். டிராக்டர்கள் வாங்கக் கொடுக்கிறார்கள். விசைக் கருவிகள் வாங்கக் கடன் கொடுக்கிறார்கள். கதிர் வெட்டும் இயந்திரம் வாங்கக் கடன் கொடுக்கிறார்கள். ஏழைகளுக்குத் தரப்படுகின்ற உதவியா இது? கிணறு வெட்டுவதற்குக் கொடுக்கப்படவில்லை. கிணறுகளை ஆழப்படுத்துவதற்குக் கொடுக்கப்படவில்லை. பம்ப் செட் வைப்பதற்குக் கடன் கொடுக்கப்படவில்லை. ஆகவே சாதாரண ஒரு ஏழை விவசாயி பயன் அடைகின்ற கடன்களை வழங்கவில்லை. இப்போதைய அரசு அவைகளுக்கெல்லாம் ஆவன செய்யவில்லை. என் தொகுதியைப் பொறுத்தவரையில் இந்த விவச்சாயிகள் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 10-20]

அடுத்தபடியாக, ஒரு சம்பவத்தைப் பற்றிச் சொல்கிறேன். புதுக்கோட்டை மாவட்டத்தில் செங்கீரை தாலுக்காவில் உள்ள ஆயங்குடி என்ற கிராமத்தில் வசித்துவந்த சுவாமிநாதன் சகோதரர் பழனி என்பவரை 22-4-1978 அன்று அவரையும் மற்றவர்களையும் கூட்டமாகக் கூடி பழனிமீது சாராயத்தை ஊற்றிவிட்டு அவரை அங்கே கொலை செய்திருக்கிறார்கள் 22-4-1978 அன்று அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அந்தக் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் யார் யார் தெரியுமா? அதே மாவட்டத்தைச் சேர்ந்த சூளைவாரி கிராமம் துரைக்கண்ணு மகன் முத்து, ராஜகோபால ஐயர், நாராயணன், முருகன், பழனி என்பவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முத்துசாமி)</u> : கோர்ட்டில் வழக்கு இருப்பதால் அதைப் பற்றிப் பேசக் கூடாது

<u>திரு. கெ. சொக்கலிங்கம்</u> : வழக்கு கோர்ட்டுக்குப் போகவில்லை. எப். ஐ. ஆர். கூட போடவில்லை.

978 செப்டம்பர் 11]

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முத்துசாமி :)</u> உறுப்பினர் அவர்கள் இதற்கு பொறுப்பேற்றுக் கொள்கிறார்களா ?

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்</u> : தலைவர் அவர்களே, பயங்கரமான குற்றச்சாட்டு ஒன்றை உறுப்பினர் அவர்கள் அவை முன் வைக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டில் கொலை என்ற ஒரு குற்றச்சாட்டும் வருகிறது. நான் தெரிந்து கொள்ள விரும்புவது நேற்று முன் தினம் இதேபோல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஆதாரமில்லாமல் இங்கே பேசுகிறீர்களா அல்லது ஆதாரத்தோடு பேசுகிறீர்களா என்று கேட்டபோது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று இங்கே பொறுப்புணர்ச்சியோடு பேசியதைச் சுட்டிக்காட்டி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு பொறுப்பேற்றுக்கொள்கிறார்களா என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. கெ. சொக்கலிங்கம்</u> : இதன் மீது மனுக்கள் கொடுக்கப்பட்டும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவரை நடவடிக்கைகள் எடுக்கவில்லை யென்பதைத்தான் நான் பேரவைத் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்</u> : நான் கேட்டுக்கொள்வதெல்லாம். அவர்கள் இதை ஒரு பெரிய குற்றச்சாட்டாக வைக்கிறார்கள். குற்றச்சாட்டாக வைக்கிறபோது இதை நம்பி இந்தக் கருத்தை இந்த அவையில் வெளியிடுகிறார்கள் என்று பொருள். அது உண்மையானால் அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ள அவர்கள் தயாரா? தயார் என்று சொன்னால் விஷயம் முடிந்து விடும்.

<u>திரு. க. அன்பழகன்</u> : இதிலே சொல்லப்படுவது, ஒருவர் கொலை செய்யப்பட்டு அது குறித்த புகார் காவல் துறையினருக்கும் மற்றவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது, அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுதான் அவர்கள் சொன்னது. பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்று சொன்னால், வேண்டுமென்றே மறைக்கப்பட்டது அல்லது கைவிடப்பட்டது என்று அவர்கள் சொல்வார்களேயானால் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்வதற்கான அவசியம் ஏற்படுகிறது. இந்தப் புகார் விசாரிக்கப்படவில்லை, அது விசாரிக்கப்பட வேண்டும் என்று தான் உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்</u> : அப்படிச் சொல்வதில் எனக்கொன்றும் ஆட்சேபனையில்லை. நான் சொல்வது அப்படி ஒரு குற்றச்சாட்டினை வைக்கிறபோது ஏதோ நடந்த ஒன்றைப்

போலவும் அதற்குப் பரிகாரம் காணுவதற்கு இந்த அரசு
தயங்குவதைப் போலவும் அப்படி ஒரு உணர்வு ஏற்படு
வதாக அந்தப் பேச்சு அமைவதால் நான் அதைக் குறிப்
பிட்டேனே தவிர மற்றபடி, இப்படி ஒன்று நடந்திருப்பதாகத்
தெரிகிறது, இதில் இந்த அரசு உடனடியாக நடவடிக்கைகள்
எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன் என்ற
அளவிற்கு உறுப்பினர் அவர்களது வாசகங்கள் அமைந்திருக்குமே
யானல், பேச்சு அமைந்திருக்குமேயானல் இந்தப் பிரச்சினைக்கு
இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்க
லிங்கம் அவர்கள் சொல்வதற்கு வந்தது, குறிப்பிட்ட நான்கு
பேர்கள் மீதும் போலீஸ் இலாகாவிடம் புகார் கொடுக்கப்பட்டிருக்
கிறது, அது விசாரணைக்கு வரவேண்டும் என்றளவில்தான் குறிப்
பிட்டதாக நான் கருதுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முத்துசாமி) :
பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று சொன்னல் பிரச்சனை
தீர்ந்துவிட்டது.

திரு. க. அன்பழகன் : பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று
சொல்கிற பிரச்சனைக்கும், எழுப்பிய பிரச்சனைக்கும் இடையே
வேறுபாடு இருக்கிறது. அவர்களது குற்றச்சாட்டு, புகார்
கொடுக்கப்பட்டிருக்கிறது, அதன்பேரில் சரியான புலன்விசாரணை
நடைபெறவில்லை என்றுதான் சொல்கிருர்களே தவிர அவர்கள்
தான் செய்தார்கள் என்று சொல்லவில்லை, ஆகவே அதோடு
இதை இணைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம் : தலைவர் அவர்களே, இன்ஞெரு
விவகாரத்தைச் சொல்ல விரும்புகிறேன். இதை நான்
குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. நடந்த சம்பவத்தைச் சொல்லு
கிறேன். இங்கு கவர்னர் உரையில் ஜாதி, சமய, வேறுபாடற்ற
சமதர்ம அரசு என்று சொல்லியிருக்கிருர்கள். ஆனல் இந்த
அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு
வந்த பிறகு தான் தாழ்த்தப்பட்ட மக்கள் தாக்கப்படுகிருர்கள்.
கொலை செய்யப்படுகிருர்கள். எத்தனையோ கலவரங்கள் நடை
பெற்றுக் கொண்டிருக்கின்றன. முன்னல் பேசிய எங்கள் கழகத்
தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல், விழுப்புரம், பேரணம்
பேட்டு, ராணிபேட்டை இந்த இடங்களில் எல்லாம் தாழ்த்தப்
பட்ட மக்கள் தாக்கப்படுகின்ற நிலைமையும், ஜாதி கலவரங்களும்
நடந்து கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முத்துசாமி) : இது
கவர்னர் உரை மீது நடைபெறக் கூடிய விவாதம் அல்ல-துணை
மானியக் கோரிக்கை மீதுள்ள விவாதம்.

திரு. கெ, சொக்கலிங்கம் : இதிலும் எல்லா விஷயங்களையும்
சொல்லலாம் என்று நினைக்கிறேன், நான் எதற்காகச் சொல்லு
கிறேன் என்ருல், இப்படிப்பட்ட கலவரங்கள் எல்லாம் நடந்து
கொண்டிருக்கின்ற நிலைமையில், ஜாதி வேறுபாடு அற்ற அரசு
என்று சொல்லிக் கொண்டிருக்கிற அரசு ஆட்சி நடத்துகின்ற இந்த
வேளையில் தான் இப்படிப்பட்ட கொடுமையான கொலைகளும்
குழப்பங்களும் நடைபெறுகின்றன. இவைகளை எல்லாம் இந்த
ஆட்சி போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக
இவைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்த இன்ஞென்றை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின்
கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். என்னுடைய தொகு
தியில் கொளத்தூர் கிராமத்தில் ரெவன்யூ வசூல் செய்கின்ற
நேரத்தில் ஒரு கிராம அதிகாரி, அங்கேயிருக்கின்ற போஸ்ட் மேன்
ஞல் அடிக்கப்பட்டிருக்கின்ருர். இதைப்பற்றி நான் சம்பந்தப்
பட்ட எஸ்.பி. அவர்களுக்குப் பல தடவையும் தகவல் கொடுத்திருக்
கிறேன். வரி வசூல் செய்கின்ற கிராம அதிகாரியை தனிப்
பட்டவர் அடித்துத் தாக்கியும் இதுவரை எந்தவிதமான நட
வடிக்கையும் எடுக்கப்படவில்லை. போலீஸ் இலாகாவையே நமது
முதலமைச்சர் அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிருர்கள், இருந்தும்
நடவடிக்கை எடுப்பதற்கு காலதாமதம் ஆகிறது என்பதை
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதைப்பற்றி சம்மந்தப்பட்ட
அதிகாரிகளுக்கு எல்லாம் சொல்லப்பட்டிருந்தும் இதுவரை
நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவை முன்னவர் அவர்கள்
இதைப் பற்றி விசாரித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு
வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்
கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்
களே ,1978-79-ம் ஆண்டு கூடுதல் செலவுக்கான நிதி அறிக்கை
மீது காங்கிரஸ் கட்சியின் சார்பாக சிலவற்றை பேச விரும்புகிறேன்.
இந்த முதல் துணை மதிப்பீட்டு அறிக்கையில் சில புதிய பணி மதிப்
பீட்டுகளுக்காக ஒதுக்கீடுகள் தரப்பட்டுள்ளன. மானியக் கோரிக்
கையில் முக்கியமாக நிலவரி, மாவட்ட நிர்வாகம், மருத்துவம், சுகா
தாரம் ஒபான்றவைகளுக்கு எல்லாம் துணை மதிப்பீடு தயாரிக்கப்
பட்டுள்ளன. இந்த மதிப்பீடுகளை எல்லாம் பார்த்தால்
நகரப் பகுதிகளுக்குத்தான் இருக்கிறதே தவிர கிராமப்
பகுதிகளுக்கு எந்தவிதமான சலுகையும் தரப்படவில்லை, மேலும்
மலைவாழ் மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் அரிசனங்கள்,
ஏழை எளியவர்கள் இவர்களுடைய மேம்பாட்டுக்காக புதிய பணி
களுக்காக எந்தவிதமான ஒதுக்கீடும் இதில் இல்லை.

மேலும் பழங்குடி மக்கள் அரிஜனங்கள் இவர்கள் இறந்து
போனல் இறந்துபோன உடன் அந்தக் குடும்பத்திற்கு 50
ரூபாய் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருந்தது, ஆனல்
இதில் எந்த நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. இதுவரை
அந்த உதவியும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

[1978 செப்டம்பர் 11

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இதற்காக ஆணையிடப்பட்டு, தற்போது இந்த உதவி வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. பழனிமுத்து : அரிசன மாணவர் விடுதிகளில், மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாகியிருப்பதால், தாலூகா மட்டத்தில் விடுதிகள் அதிகமாக்கப்பட்டு அரிசன மாணவர்களின் எண்ணிக்கையையும் உயர்த்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், மேல் மட்ட உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்துகின்ற இந்த நேரத்தில் பி.யு.சி. வகுப்புகள் அதிகமாக இல்லாத காரணத்தால், மேல்மட்ட உயர்நிலைப்பள்ளியில் அதிகப்படியான அளவு மாணவர்கள் சேருவதற்குத் தகுந்தபடி அதிகபடியாக மாணவர் விடுதியில், எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் துணை மதிப்பீட்டில், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில் 1975 மார்ச் முதல் நடைபெற்று வந்ததில் இதுவரை 77 லட்சத்து 22 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் மோட்டார் பட்டறை ஏற்படுத்துவதைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவும் நகரப் பகுதிகளில்தான் ஏற்படுத்தப் போவதாக தெரிகிறது. கிராமப் பகுதிகளில் எதுவும் ஒதுக்கவில்லை என்று தெரிகிறது. எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சேலம் மாவட்டத்தில் இருந்து வருகிற ஸௌத் இந்திய கிளாஸ் பாக்டரி கடந்த இரண்டு ஆண்டுகளாக மூடப்பட்டு இருக்கிறது. அரசாங்கம் இதை விரைவில் திறக்கும் என்று வாக்குறுதி அளித்தும், அந்த வாக்குறுதியை இந்த அரசாங்கம் இதுவரை நிறைவேற்றவில்லை. இதன் காரணமாக 509 குடும்பங்கள் பலவிதமான இன்னல்களுக்கும் துன்பங்களுக்கும் ஆளாகி பட்டினி கிடந்து வருகிறார்கள். ஆகவே இந்த கிளாஸ் பாக்டரியைத் திறப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பலமுறை வற்புறுத்தி கேட்டும் அந்த கிளாஸ் பேக்டரியைத் திறக்கிறோம், திறக்கிறோம் என்று கூறுகிறார்கள். ஆனால் இதுவரை அது திறக்கப்படவில்லை.

(முற்பகல் 10-30)

இன்றைய தினம் சேலம் மாவட்டத்திலே மருத்துவக் கல்லூரி நிறுவ வேண்டும் என்பதற்காக, ரயில்வேயிலே செஸ் நிதி ஏ[illegible] லட்சம் ரூபாய் வரையில் வைத்திருக்கிறார்கள். ஆகவே, அங்[illegible] இந்த மருத்துவக் கல்லூரியை நிறுவுவதற்கு அரசு துணை [illegible] வேண்டுமென்றும், அங்கே மருத்துவக் கல்லூரியை ஏற்படு[illegible] வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

1978 செப்டம்பர் 11] [திரு. ஏ. பழனிமுத்து]

மேலும், சேலம் மாவட்டத்திலே கிழங்கு வகைகள் அதிக
மாக இருக்கின்றன. அங்கே மரவள்ளிக் கிழங்கு, குச்சிக் கிழங்கு
அதிகமாக விளைவதாலே அங்கே ஒரு குளுகோஸ் தொழிற்சாலையை
நிறுவ வேண்டும். அவ்வாறு அங்கே அந்தத் தொழிற்சாலையை
நிறுவுவதால், அங்குள்ள மக்களுக்கு அதிகமான வேலைவாய்ப்பும்
நன்மைகளும் கிடைக்கும். எனவே, அங்கே ஒரு குளு
கோஸ் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்
கொள்கிறேன்.

மற்றும், அங்குள்ள பேரூராட்சிகளுக்கு 1-1-78 முதல் 31-6-78
வரை சினிமாக் காட்சி வரி, அதாவது தமாஷா வரி கொஞ்சமும்
கிடைக்கவில்லை. அந்த வரி அங்குள்ள பேரூராட்சிகளுக்குக் கிடைப்
பதற்கு இந்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை மேற்
கொள்ள வேண்டும். காரணம் என்னவென்றால், பேரூராட்சிகள்
மிகவும் பற்றாக்குறை, நிதி போதாமல் நடைமுறைச்செலவுகளுக்கே
மிகவும் கஷ்டப்படக்கூடிய நிலைமையில் உள்ளன. இந்த வரியானது
1-4-75 முதல் 30-6-75 காலாண்டு காலத்திற்கும் கிடைக்கவில்லை.
ஆகவே இந்தத் தமாஷா வரி அவர்களுச்கு கிடைக்க, இந்த அரசு
வழிவகைகள் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரம் கொடுப்பதிலே, சீனியாரிடிபடி கொடுக்கிறோம் என்று
சொல்லுகிறார்கள். இந்த சீனியாரிடி முறையைப் பின்பற்றுவது
சாலச் சிறந்தாகும். இதே முறையை இந்த வேலை வாய்ப்பைத்
தேடிக் கொடுக்கும் எம்பிளாய்மெண்டு எக்சேஞ்சுகளிலும்
பின்பற்ற வேண்டும். அப்படிப் பின்பற்றி சீனியாரிடி முறைப்படி
வேலை கொடுத்தால், எந்த விதமான லஞ்ச லாவண்யமும் இல்லா
மல் நேர்மையான முறையிலே வேலை கொடுப்பதற்கு முடியும்.
எனவே, சீனியாரிடி முறைப்படி வேலைவாய்ப்புகளைக்
கொடுப்பதற்கு எம்பிளாய்மெண்டு எக்சேஞ்சுகளுக்கு உத்தரவிடு
வது சாலச் சிறந்ததாக இருக்கும்.

கடந்த ஏப்ரல் மாதத்தில், சேலம் மாவட்டத்தில் பெரும்
பாலான இடங்களில் விவசாயிகள் போராட்டம் நடைபெற்றது.
அப்போது நிறைய இடங்களில் இந்தச் சட்டம், ஒழுங்கு கெட்டு
போய்விட்டது. ஏப்ரல் 8, 9, 10 தேதிகளில் இந்தப் போராட்டம்
நடைபெற்றது. 11 ஆம் தேதியன்று, ராசிபுரத்திலே உள்ள பல கிரா
மங்களுக்கு அதிகாரிகள் ஜீப்பிலே சென்று, அவர்களுடன் அங்குள்ள
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்
பாளரும் எல்லா இடங்களுக்கும் சென்று கிட்டத்தட்ட 30 வைக்
கோல் போர்களுக்கு நெருப்பை வைத்திருக்கிறார்கள். அப்போது
அந்தத் தீயை அணைப்பதற்காக அங்குள்ளவர்கள் தீயணைப்பு
நிலையங்களுக்கு தகவல் கொடுத்தனர். அதன் பேரில் தீயணைப்பு
வண்டிகள் வந்தன. அவைகளை, அந்த அதிகாரிகளை, அங்குள்ள
அமைப்பாளர் தடுத்து நிறுத்தி, தீயணைப்பு வண்டிகளைச் செல்ல
வேண்டாம் என்ற அக்கிரமும், அநியாயமும் அந்தப் பகுதியிலே

நடந்தது. இதற்கெல்லாம் ஆளுங்கட்சியைச் சேர்ந்த அங்குள்ள அமைப்பாளர் பொறுப்பு. அவர்தான் அந்த வண்டிகளில் உட்கார்ந்துகொண்டு, எல்லா இடங்களுக்கும் சென்று இத்தகைய கொடுமைகளை அங்குள்ள ஏழை எளிய விவசாயிகளுக்குச் செய்தார். இதற்குக் காரணம், அந்தப் பகுதியிலே உள்ள ஏழை எளிய விவசாயிகள் ஒன்றும் இல்லாதவர்கள். அதேபோல், பஞ்சாயத்து ஒன்றியத்திலே வேலை செய்கின்றவர்கள், மின்சார இலாகாவிலே பணியாற்றுகின்ற எஞ்ஜினீயர்கள், கிராமக் கர்ணங்கள் இந்த இழி நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டனர். இந்தப் பிரச்சனைகளுக்குக் கெல்லாம், போலீஸ் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்களைக் கேட்டால், எங்களுக்கு எவ்விதமான உத்தரவும் வரவில்லை, ஆகவே நாங்கள் வாய்மூடி மவுனிகளாக இருக்கிறோம் என்று சொன்னார்கள். எங்களுக்கு எவ்விதமான அதிகாரமும் இல்லை, பெயரளவிற்குத் தான் போலீஸ் என்றிருக்கிறோம், அந்த வகையில் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை என்று கூறுகிறார்கள்,

அதேபோன்று, விவசாயிகளுக்கு கூட்டுறவுக் கடனிலே கூட்டு வட்டியை உடனடியாகக் கட்ட வேண்டுமென்பதை நிறுத்தி, அப்படிப்பட்ட வட்டியைப் போடாமல் கடனை மட்டும் வரிவசூல் செய்யவேண்டும். மேலும், இந்த ஊராட்சியிலே வேலை செய்கின்ற நகரசுத்தித் தொழிலாளர்கள் இறந்தால், அவர்களுக்கு குடும்பநல திட்டத்தின் கீழ் 10,000 ரூபாய் கொடுப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் அரசு இதுபோன்று 10,000 ரூபாய் கொடுக்கும்போது அங்கு வேலை செய்கின்ற இந்த நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வயது வரம்பைக் குறிப்பிடவில்லை.

என்னுடைய பேரூராட்சியில்கூட ஒருவர் இறந்துவிட்டார். அவருடைய வீட்டாருக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டு மென்று கேட்டால் 58 வயதுக்கு மேல் இறந்துவிட்டால் பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதற்கில்லை என்று லோகல் பண்ட் ஆடிட்டர் கூறுகிறார்கள். கர்ணத்திற்கும் குடும்ப நலத் திட்டத் தின்கீழ் இந்த உதவியைப் பெற வயதை நிர்ணயிக்க வேண்டும். என்னுடைய ஊரில் இறந்துவிட்ட ஒரு கர்ணத்தைப் பொறுத்த வரை வயது வரம்பு தாண்டிவிட்டது என்று கூறுகிறார்கள். இந்த வயது வரம்பை மாற்றி நிர்ணயித்தால் இவர்களைப் போன்றவர்கள் இந்தத் தொகையைப் பெற வசதியாக இருக்கும்.

என்னுடைய தொகுதியில் பெத்தநாயக்கன்பாளையத்தில் உள்ள மருத்துவமனை அரசு மருத்துவமனையாக எடுத்துக் கொள்ளப்பட்டு நான்கு ஆண்டுகள் ஆகியும், அதற்குப் புதுக் கட்டடம் கட்ட வேண்டு மென்று மாவட்ட சுகாதார அதிகாரி சிபாரிசு செய்தும் இதுவரை மருத்துவ மனைக் கட்டிடம் கட்ட எந்தவிதமான ஏற்பாடும் செய்ய வில்லை.

என்னுடைய பகுதியில் யானைக்கால் வியாதி அதிகமாக இருக் கிறது. அதைத் தடுக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறோம். என்டமாலஜிஸ்டு என்னு டைய பகுதியில் ஆய்வு செய்தார்கள். அந்த இடத்தில் யானைக் கால் வியாதி வருவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று கூறியிருக்கிறார்கள். அந்த வியாதியைப் போக்கும் வகையில் அரசு அதற்கான மருந்துகளை மானியமாகத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆத்தூர் தொகுதியில் மலைவாசிகள் வாழ்கிறார்கள். நான்கு பக்கமும் மலைகளாக உள்ள பைத்தூர் பகுதியை வன இலாகா வினர் எடுத்துக் கொள்வதாகச் சொல்லுகிறார்கள். ஏதாவது ஒரு பகுதியையாவது அந்த மலைவாழ் மக்களுக்காக விட்டு வைத்தால் ஆடுமாடுகளை மேயவிட வசதியாக இருக்கும். பெருமாள் கோயில் மலைப்பகுதியை விட்டு வைத்தால் ஏழை ஆதிவாசிகளுக்கும், பாமர மக்களுக்கும் வசதியாக இருக்கும். வன இலாகாவினர் இந்தப் பகுதிகளை எடுத்துக் கொண்டு காடுகளை வளர்க்கப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். இருக்கின்ற காடுகளையே வன இலாகா அதிகாரிகள் அழித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் புதி தாக இதுபோன்ற காடுகளை வளர்க்கிறோம் என்று சொல்லி ஏழை எளியவர்களிடமும், ஆதிவாசிகளிடமும் முறையில்லாமல் நடந்து கொள்கிறார்கள்.

ஆத்தூரில் இருந்து மற்ற ஊர்களுக்குச் செல்ல பஸ்போக்கு வரத்து மிகவும் இன்றியமையாதது. என்னுடைய பெத்தநாயக் கன்பாளையம் பகுதியிலிருந்து 17 கிராமங்களுக்குச் செல்ல சாலை போக்குவரத்து இல்லை. சாலைப் போக்குவரத்தை ஏற்படுத்தித்தர ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் மேல் மட்ட உயர்நிலைப் பள்ளி அமைக்க எஸ்டிமேட் போடப்பட்டு எக்சிக்யூட்டிவ் எஞ்சினீயர் பார்வை யிட்டும் கூட கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்யப்படவில்லை. புதிதாக கட்டடம் கட்ட இந்த அரசு கல்வி மானியத்தின் கீழ் நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை எளிய மக்கள், ஆதிவாசிகள் வாழும் ஆத்தூர் பகுதியில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொடுக்கப்பட்ட கடனை வசூலிப்பதற் காக தண்டோரா போட்டு, டாம் டாம் போட்டு வசூல் செய்கிறார் கள். இந்த நிலைமையைப் போக்கியாக வேண்டும். நீண்ட காலத் தவணை முறையில் கடனை வசூலிக்க நோட்டீஸ் கொடுத்து வசூல் செய்ய வேண்டுமே தவிர டாம் டாம் போட்டு வசூலிக்கக் கூடாது. தற்போது கடனை வசூலிப்பதற்காக அவர்களுடைய உழவு மாடுகளை, பம்ப் செட் மோட்டார்களை எல்லாம் ஜப்தி செய் கிறார்கள். இதுபோன்று ஜப்தி செய்வதை எல்லாம் நிறுத்து வதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. பழனிமுத்து] [1978 செப்டம்பர் 11

இந்த மாதம் 1-9-78ல் ஆத்தூர் தாலுக்காவில் இருக்கிற ஸ்டேட் பாங்கில் பஞ்சாயத்து ஒன்றியங்கள், மற்ற அமைப்புகளின் 'செக்குகளை 'டிஸ் ஆனர்' செய்துவிட்டார்கள். சென்னையிலிருந்து வரக் கூடிய தபால் வந்து சேரவில்லையாதலால் தாலுக்காவில் எந்த ஒரு அமைப்பிலும் சம்பளம் அன்று பட்டுவாடா செய்யப்படவில்லை. இது போன்ற நிலைமைகள் எல்லாம் ஏற்படாதவாறு அரசு தனிக் கவனம் செலுத்தி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமருகின்றேன்.

[முற்பகல் 10-40]

* திரு. என். பழனிவேல்: பேரவை தற்காலிகத் தலைவர் அவர்களே, இந்த இடைக்கால மானியக் கோரிக்கையின்மீது கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பாக எங்கள் தலைவர்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும், நானும் சில வார்த்தைகளைச் சொல்வதற்கு வந்திருக்கிறேன். இன்றைய தினம் நம்முடைய அரசிலே புயல் வெள்ள நிவாரண வேலைகளுக்காக 8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே சென்ற ஆண்டு புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் சரியான அளவிற்குப் பணம் ஒதுக்கப்படாமல், ஏதோ சம்பிரதாயமாகக் கட்டிக்கொடுக்கப்பட்ட காரணத்தாலே ஒரு வருடம் ஆவதற்குள்ளாகவே அந்த வீடுகளை மழையும், காற்றும் பிய்த்துக் கொண்டு போய்விடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு பக்காவாக நிரந்தரமான முறையிலே வீடுகளை கட்டிக்கொடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு குடும்பநலத் திட்டம் என்ற பெயரால் அவர்கள் காலமாகிவிட்டால் 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகத் தெரிகிறது. அதை வாங்குவதற்குள்ளாக அவர்கள் படுகிற துன்பங்களும் செய்யக்கூடிய செலவுகளும் கொஞ்சநஞ்சமல்ல. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் ஒரு நகரசுத்தித் தொழிலாளருடைய மனைவி இறந்து விட்டால், அவருடைய கணவன் $3\frac{1}{2}$ ஆண்டுகாலமாக காத்துக் கொண்டிருக்க வேண்டிய நிலைமை வந்தது. ஆயிரம் ரூபாய்க்குப் பக்கத்திலே செலவு செய்திருக்கிறார். அரிசன மக்கள் சாதாரணமான இந்த உதவிகளைக்கூட பெறுவதிலே தாமதம் ஏற்படுகிறது. ஆகவே இறந்தவுடனே, அவர்களுடைய குடும்பங்களுக்கு இந்த உதவித் தொகை கிடைக்குமாறு செய்ய வேண்டும், அது மட்டுமல்ல, ஓய்வு ஊதியம் 1985 ஆம் ஆண்டுதான் அவர்களுக்குக் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. அப்படியில்லாமல் ஓய்வுபெற்றவுடனே அவர்களுக்குக் கிடைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அன்றைய தினம் என்னுடைய தொகுதியிலே ஒரு சம்பவம் நடந்தது. சட்டமன்றத்திலே நான் அதைப்பற்றி ஒரு தீர்மானம் கொடுத்ததற்கு அது விசாரணையில் இருக்கிறது என்று சொல்லப்பட்டுவிட்டது. பழனியிலே இப்ராகிம் என்ற நபரை போலீஸார்

1978 செப்டம்பர் 11] [திரு. என். பழனிவேல்]

அடித்துக் கொன்றிருக்கிறார்கள், ஆனால் இங்கே பேசியவர்கள் ஏதோ ஜாதிக்காரணமாக நடந்தது போல் பேசினார்கள். ஆனால் உண்மையிலேயே அது ஜாதிக் கலவரமல்ல, ஏற்கனவே கடந்த காலத்திலே போலீஸ் நிர்வாகம் ஏழை எளிய மக்களை போலீஸ் ஸ்டேஷனிலே அடித்துக் கொன்ற வழக்கத்தின் காரணமாக வந்திருக்கிறதே தவிர வேறு இல்லை. அது போன்றதான் இப்போதும் அடித்துக் கொன்றிருக்கிறார்கள். இப்போது அதைப்பற்றி இலாகா விசாரணை நடக்கிறது. அப்படி இருக்கக் கூடாது. பெரிய போலீஸ் அதிகாரி சம்பந்தப்பட்ட பிரச்சினை அது, ஆகவே ஓய்வு பெற்ற நீதிபதியை கொண்டே விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று தாழ்த்தப்பட்ட மக்கள் எங்கு பார்த்தாலும் கொடுமைப் படுத்தப்படுகிறார்கள். அதற்குக் காரணம் இந்த அரசு தான் என்று சொல்லவில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் சமுதாயத்திலே உயர்வதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் கடந்த கால அரசுகள் எடுக்காமல் அதைச் செய்யத் தவறியதன் காரணமாகத் தான் அவர்களுடைய வாழ்க்கை நிலை பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக அவர்கள் சமூகத்திலே எந்தவிதமான அந்தஸ்தும் இல்லாத சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் அவர்களை மற்றவர்கள் கொடுமைப்படுத்துகிறார்கள், இழிவுபடுத்துகிறார்கள், அவர்களை சமூகத்திலே உயர்த்துவதற்கு பொருளாதார ரீதியிலே அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஏதோ சில காரியங்கள் அல்லது சடங்குகள் என்ற முறையிலே சில வீடுகளைக் கட்டிக் கொடுப்பது சில வீட்டுமனைகளைக் கொடுப்பது என்பது எல்லாம் வெறும் கண் துடைப்பு வேலையாகத்தான் இருக்கும். அவர்கள் வாழ்க்கையிலே உடனடியாக முன்னேறக்கூடிய வகையிலே அது உதவியாக இருக்காது. எதிர்காலத்திலே அவர்களுக்குப் போதுமான அளவு உதவிகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, மருத்துவமனைகளை எடுத்துக் கொண்டால் சாதாரண ஏழை எளிய மக்கள் நாட்டிலே என்ன நடக்கிறது? ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் என்று கியூவிலே நின்று சில மாத்திரைகளையும், மருந்துகளையும் வாங்கிக்கொண்டு வரும் நிலைமை இருக்கிறது. இதனால் வியாதியாவது தீர்ந்து விடுகிறதா என்று கேட்டால் நிச்சயமாகக் கிடையாது என்று சொல்ல முடியும். பல ஆஸ்பத்திரிகளில் தேவையான மருந்துகள் கிடையாது. வியாதியஸ்தர்களைச் சரிவரக் கவனிப்பதும் கிடையாது. வசதி படைத்தவர்களுக்கு ஒரு மாதிரியும், சாதாரண ஏழை எளிய மக்கள் போனால் என்ன செய்வது என்றே தெரியாமல் அவர்கள் திரும்பி வருகிறார்கள், அவர்களுடைய நடையிலேயே அந்த நோய் தீர்ந்து நன்றாக ஆகிவிடுகிறார்கள். அந்த அளவிற்கு அரசு மருத்துவமனைகள் இருக்கின்றன. ஆகவே, அதற்குத் தேவையான மருந்துக்களை

[திரு. என். பழனிவேல்] [1978 செப்டம்பர் 11

வாங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். மேலும் குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு மருத்துவமனைகளில் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேலையற்ற ஆசிரியர்கள் என்று எடுத்துக் கொண்டால் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் இருக்கிறார்கள், ஒவ்வொரு ஊரிலேயும் நாற்றுக்கணக்கான பேர் படித்து விட்டு 3 வருடம், 4 வருடம், 5 வருடம் என்று வேலையில்லாமல் இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறார்கள். எங்கு பார்த்தாலும் அவர்கள் எம். எல். ஏக்களை, அல்லது எம். எல். ஏ க்குத் தெரிந்தவர்களை அணுகி வேலைக்குச் சிபார்சு செய்யச் சொல்கிறார்கள். நாங்கள் என்ன செய்வது? எனவே, அவர்களுக்கு வேலை போட்டுக்கொடுக்க வேண்டும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன், எங்கள் ஊரிலே ஒரு பெண்மணி இருக்கிறார், அவர் ஆசிரியர் வேலைக்குக் படித்துவிட்டு மூன்றரை ஆண்டுகாலமாக வேலையில்லாமல் இருக்கிறார்கள், அவர்களுக்குக் கல்யாணமாகி இரண்டு குழந்தைகளும் பெற்றுவிட்டார்கள். ஆனால் எந்தவொரு பள்ளியிலும் லீவ் வேகன்சியில்கூட வேலைபார்க்கவில்லை என்று கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒரு ஊரில் மட்டுமல்ல, எல்லா ஊர்களிலும் நிலைமைகள் இருக்கின்றன. எனவே படித்துவிட்டு மூன்று, நான்கு ஆண்டுகள் என்று வேலையில்லாமல் இருப்பவர்களை, அவர்கள் விண்ணப்பிக்க வேண்டுமென்றுகூட கூறாமல், நேரடியாகவே அழைத்து வேலை கொடுக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்ற விவரங்களெல்லாம் ஆங்காங்குள்ள அதிகாரிகளிடத்தில் இருக்கும். எனவே, அவர்களுக்கு உடனடியாக வேலை போட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படியில்லாமல் 30,000 பேர்களுக்கு வேலை, 40,000 பேர்களுக்கு வேலை என்று நான் புள்ளி விவரங்களைக் காட்டுவதால் மட்டும் பிரயோசனம் இல்லை, அவர்களுக்கு உருப்படியான நல்ல வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க முயற்சியெடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைய தினம் கல்லூரி ஆசிரியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய போராட்டம் நீண்ட நாட்களாக நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அவர்களுடைய பிரச்சனைகளுக்கு உடனடியாக அரசு அவர்களோடு பேச்சு வார்த்தைகள் நடத்தி, அவர்கள் என்ன கோரிக்கைகளை வைக்கிறார்களோ அதை ஏற்று சீக்கிரம் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, இன்றைக்கு நகரசபைகளிலே, எங்கு பார்த்தாலும் பஸ் நிலையங்களிலே கக்கூஸ்கள் இருக்கின்றன. அந்தக் கக்கூஸ்களில் சென்று மலஜலம் கழிக்க வேண்டுமென்று 10 பைசா கட்டணம் என்று வசூலிக்கிறார்கள். இது எதற்காக வசூலிக்கப்

1978 செப்டம்பர் 11] [திரு. என். பழனிவேல்]

படுகிறது என்று ஒன்றுமே விளங்கவில்லை. அல்லது அதற்கு ரசீது கொடுக்கிறார்களா என்றால் இல்லை, வாளி வைத்திருப்பார்கள், அதில் பத்து பைசாவைப் போட வேண்டும். போடாவிட்டால் விட மாட்டார்கள். உடனடியாக நாடு முழுவதும் இப்படி பத்து காசு வசூலிப்பதைத் தயவு செய்து இந்த அரசு நிறுத்திவிட வேண்டும். அதற்குக் கணக்கு வழக்கு இல்லை. யார் வசூல் செய்கிறார்கள், யார் எடுத்துக் கொள்கிறார்கள் என்று பலர் என்னிடத்தில் கேட்டார்கள். அதை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முதியோர் பென்ஷனைப் பற்றி எடுத்துக்கொண்டால் குறிப்பாக வயதான தாய்மார்கள் எம். எல். ஏ. விடத்தில் சென்றால் எப்படியாவது இருபது ரூபாய் கிடைக்கும் என்று வருகிறார்கள். அவர்கள் உண்மையிலேயே தகுதி உடையவர்கள்தான், தகுதி இல்லாதவர்கள் அல்ல. அப்படிப்பட்டவர்கள் ஒவ்வொரு நாளும் எட்டுப் பேர், பத்துப்பேர் என்னிடத்திலே வந்து கையெழுத்து வாங்கிச் செல்கிறார்கள். ஆனால் இந்த ஓராண்டு ஆகியும் நான் கையெழுத்து இட்டவர்கள் யாருக்கும் பணம் கிடைத்ததாகத் தெரியவில்லை. இதுபற்றித் தாசில்தாரிடத்தில் கேட்டால் தாலுக்காவிற்கு 300 பேர்கள் தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லி யாராவது இறந்தால்தான் மற்றவர்களுக்கு கொடுக்கிறார்கள். யாரைப் போய்க் கொன்று பணத்தை வாங்கித் தருவது? ஆகவே, எந்தப் பகுதியிலும் முதியோர் பென்ஷனுக்கு உண்மையிலேயே தகுதி உடையவர்கள் யார் யார் விண்ணப்பிக்கிறார்களோ அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அப்படியில்லாமல் கண்துடைப்பிற்காக நாங்களும் கொடுக்கிறோம் என்று ஏற்கனவே இருந்த அரசாங்கம் ஏமாற்றியதைப்போல் இந்த அரசும் செய்யாமல் தகுதியுள்ள வயது முதிர்ந்த பெரியவர்களுக்கு அந்தத் தொகையைக் கொடுக்க வேண்டும். அதற்கு எல்லா மாவட்டங்களிலும், எல்லா வட்டங்களிலும் அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலத்தான் விதவைகள் எந்த பாரத்தில் விண்ணப்பிப்பது என்று தெரியாமல் இருக்கிறார்கள். வயதானவர்களாகவும், விதவைகளாகவும் இருக்கிறார்கள். அவர்கள் எப்படி எழுதிப் போட்டாலும் அவர்களுக்கு பணம் வரவில்லை. என்னிடத்தில் ஒரு தாய் சொன்னார், நான் முதியோர் பென்ஷனுக்கும் போட்டேன், விதவை பென்ஷனுக்கும் போட்டேன். இரண்டுமே கிடைக்கவில்லை, ஏதாவது சொல்லக் கூடாதா என்று. இது உண்மையிலேயே பரிதாபமாக இருக்கிறது. இதிலெல்லாம் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

அதைப்போல அதிகாரிகளுக்கு எம்.எல்.ஏக்கள், குறிப்பாக நான் ஏதாவது பிரச்சனை என்று தபால் எழுதினால் அந்தத் தபாலுக்குப் பதிலே வருவது கிடையாது. திரும்பவும் 10, 20

நாள் அல்லது ஒரு மாதம் கழித்து நானே போய், ஐயா, நான் எழுதிய தபால் என்ன ஆயிற்று என்று கேட்டால் பார்த்துச் சொல்கிறேன் என்று சொல்கிறார்கள். அப்பொழுது எம்.எல்.ஏ.க்களுக்கு என்ன மதிப்பு, மரியாதையை இலாக்கா அதிகாரிகள் கொடுக்கிறார்கள் என்பதை நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். சட்ட மன்ற உறுப்பினர் ஒரு பிரச்னை சம்பந்தமாக கடிதம் எழுதினால் குறைந்தபட்சம் ஒரு வாரத்திற்குள்ளாக இன்ன நிலைமையிலிருக்கிறது என்ற பதில் வந்தாக வேண்டும், அந்த முறையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10—50)

அதேபோல், பழனி தேவஸ்தானத்திலே 500-க்கு மேற்பட்டவர்கள் வேலை செய்கிறார்கள். அதில், அரிசனங்கள் எந்த வேலையிலும் அமர்த்தப்படுவது கிடையாது. குறிப்பாக, தோட்டி வேலைதான் அரிசனங்களுக்குக் கொடுக்கிறார்கள். மற்ற வேலைகள் அந்தச் சமூகத்திற்கு, பழனி தேவஸ்தானத்தில் கொடுப்பதில்லை: கேட்டால் நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். என்ன நடவடிக்கை? வேலைக்கு எடுத்துக் கொள்வதில்லை என்ற நடவடிக்கை எடுக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவே, உரிய விகிதத்தின்படி அவர்களுக்கு வேலைகள் கொடுக்க வேண்டும். அதற்கு நமது மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், பள்ளி மாணவர்கள், அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய ஸ்காலர்ஷிப் உதவித் தொகைக்குப் பதிலாக கடந்த 2 ஆண்டுக் காலமாக புத்தகங்கள் கொடுக்கிறார்கள். அந்தப் புத்தகங்கள் இன்று பல இடங்களிலே போய்ச் சேர வில்லை. ஆகவே, அதை நிறுத்திவிட்டு முன்பு கொடுத்தமாதிரி, ஏதோ பத்து ரூபாயோ, இருபது ரூபாயோ, முப்பது ரூபாயோ கொடுத்தால் உதவியாக இருக்கும். அவர்களுக்குப் புத்தகங்கள் கிடைப்பதற்கு முன்னாலே 1/2 பரீட்சை முடிந்து விடுகிறது. வசதியுள்ளவர்கள் புத்தகங்கள் வாங்கிப் படிக்கிறார்கள். ஏழைக் குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள். இதிலே ஊழல் நடக்காது. ஆகவே, புத்தகம் கொடுப்பது என்பதை விட்டுவிட்டு—எதற்கு அரசாங்கத்திற்குச் சிரமம்—உதவித் தொகையே கொடுக்கலாம். இலாகாவிலே கேட்டால், புத்தகம் அச்சடிக்கக்கூடிய மெஷின் ரிப்பேர் ஆகிவிட்டது என்று கூட ஒரு அதிகாரி சொன்னார். ஆகவே, புத்தகம் வழங்குவதை நிறுத்திவிட்டு, பணமாகக் கொடுக்கவேண்டுமேன்று கேட்டுக்கொள்கிறேன்.

வாசுதேவநல்லூரிலே சர்க்கரை ஆலை வைக்க நீண்ட நாள் கோரிக்கை இருந்து வருவதாக அருமை நன்பர் கிருஷ்ணன் கூறினார்கள். அதற்காக ரூ. 3 இலட்சம் சர்க்கரை வாரியம் வசூல் செய்திருப்பதாகவும் தெரிகிறது. பணம் வசூல் செய்யப்பட்டிருப்ப

கூடப் பிரச்சனை அல்ல. 1980-ஆம் ஆண்டுக்குள்ளாக சர்க்கரை ஆலையை நிறுவ அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்காக மத்திய அரசு கூட ரூ. 2 கோடி மானியம் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். எனவே, காலதாமதமின்றி அதனை நிறைவேற்ற இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த மாற்றுத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, 1978-79 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மானியக் கோரிக்கை 3-ல் முதலமைச்சர் நிவாரண நிதிக்கு 50 லட்சம் ரூபாய் துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. விவசாயத் தொழிலாளி—பூச்சி மருந்து அடித்தால் அந்தப் பூச்சி மருந்து அடிக்கும்போது அவன் மரணமடைந்தால் அவனுடைய குடும்பத்திற்கு இந்த அரசு உதவித் தொகை வழங்குகிறது. அதேபோல் மின்சார மோட்டாரை இயக்கும்போது, ஒருவன் ஆக்சிடென்ட் ஆகி இறந்துவிட்டால், அவனுடைய குடும்பத்திற்கும் இப்படிப்பட்ட உதவித் தொகை அளிக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் எனது கருத்தை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மானியக் கோரிக்கை 9-லே மாநில ஆட்சித் தலைவர்கள், தலைமையிடப் பணியாளர்கள் கோரிக்கை என வருகிறது. சட்ட மன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கையும் இதிலே வருகிறது. இதற்கு முன்பெல்லாம் பாஸ்கள் கொடுத்தார்கள். ஆனால் இப்போது நின்றுவிட்டிருக்கிறது. நீங்கள் ரூபாய் கணக்கில் அல்லது கிலோ மீட்டர் கணக்கில் இதை எந்தக் கணக்கில் வைத்துக் கொண்டாலும் உடனடியாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பாஸ்கள் வழங்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். காரணம் சட்டமன்ற உறுப்பினர்கள் பல இடங்களுக்குப் போக வேண்டியவர்கள். எனக்குப் பரவாயில்லை, இதோ இருக்கிற அரக்கோணம்தான். ஆனால் தொலை தூரத்தில் இருந்து வருகின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உடனடியாக பாஸ்கள் வழங்க முடிவு செய்யவேண்டும் என்று நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

17-வது மானியக் கோரிக்கையிலே கல்விக்காக மானியம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வரவேற்க வேண்டியதுதான். ஆனால் போன வருடம் பெய்த மழையில் ஏராளமான பள்ளிக்கூடங்கள் கலனாகிப் போய்விட்டன. அவைகள் ரிப்பேர் செய்யப்படவில்லை: அவைகள் ரிப்பேர் செய்ய வேண்டும் என்று கோரிக்கை எடுத்து வைத்திருக்கிறோம். ஆனால் அரசு என்ன காரணத்தாலோ அதை ஏற்றுக்

கொள்ளவில்லை. தலைமைச் செயலகத்திலே உள்ள செயலாளருக்கு ரிப்பேர் செய்யக்கூடிய பள்ளிக்கூடங்களை ரிப்பேர் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். மற்ற கட்டடங்களை ரிப்பேர் செய்தாலும் செய்யாவிட்டாலும் பள்ளிக் கட்டடங்களை ரிப்பேர் செய்ய வேண்டியது மிகவும் அவசியம். சென்ற புயலில் ஏற்பட்ட சேதத்தில் அதிகமான இடங்களில் பள்ளிக்கூடங்கள் கலனுகி விட்டன. கூரைகள் எல்லாம் போய்விட்டன. என்னுடைய தொகுதியிலே உள்ள சோளிங்கபுரம் போன்ற இடங்களில் 5, 6 பள்ளிக்கூடங்கள் சேதமடைந்திருக்கின்றன. கல்வி இலாக்கா டைரக்டருக்கு நான் எழுதிய கடிதத்திற்குப் பதில் வந்திருக்கிறது. அதிலே சொல்லியிருக்கிருர்கள், இப்போது போதுமான பணம் இல்லை, அடுத்த வருடம் பார்த்துக் கொள்ளலாம் என்று. சமீபத்திலே கூட கரூரிலே ஒரு பள்ளிக்கூடம் இடிந்து 3 மாணவிகள் மாண்டு போனுர்கள் என்று பத்திரிகையிலே பார்த்தோம். எந்த வேலை எப்படி இருந்தாலும் பள்ளிக் கட்டடங்களை ரிப்பேர் செய்வதை உடனடியாக இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து டிமாண்டு 30லே, சமூக நலத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை 12 லட்சம் ரூபாய் என்றிருக்கிறது. இது நல்ல ஏற்பாடு. வரவேற்கத் தகுந்ததாகும். அப்போது இருந்த காலத்தில் பென்சன் தொகையை நிர்ணயம் செய்தார்கள். அதே தொகையை இப்போதும் கொடுத்தால் நன்ருக இருக்காது. அப்போது இருந்த வாழ்க்கைச் செலவுகள் வேறு, இப்போதுள்ள வாழ்க்கைச் செலவுகள் வேறு. இப்போது அவைகள் அதிகமாகிப் போய்க் கொண்டே இருக்கின்றன. 12 லட்சம் ரூபாய் ஒதுக்கியதே பெரிய தொகை. ஆனுல் இந்த உதவித் தொகையைக் கொஞ்சம் உயர்த்தி 20, 30 ரூபாயில் இருந்து உயர்த்தி இன்னும் கூடுதலாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னும் ஒன்று, மோட்டார் வாகனப் போக்கு வரத்துக்கு இன்றைக்கு நிதி வழக்கப்பட்டிருக்கிறது. ஆனுல் மோட்டார் போக்குவரத்து நிலைமையிலே பார்க்கப்போனுல் இன்றைக்கு டிராக்டர்களுக்காக நாம் ஆர். டி. ஓ. ஆபிசுக்குப் போனுல் அதிகமான கட்டணம் வசூலிக்கிருர்கள். 200, 250 ரூபாய் விவசாயத்திற்கு உபயோகப்படுத்துகின்ற டிராக்டர்களுக்கு வசூலிக்கிருர்கள். அதைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளலாம். நாம் பட்ஜெட் அதிகமாகப் போடுகிறேம். இதிலே இருந்து வருகின்ற வருமானம் அதிகமாக இருக்காது. எனவே இந்த டிராக்டர் வாடகைக்கு விடுகின்ற விஷயத்தில் கொஞ்சம் சலுகை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒழுக்கக் கண்காணிப்புக்கு 2 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்படுகிறது. அதில் அம்பாசிடர் கார்கள் வாங்குவதற்கு என்று அரசு குறிப்பிட்டிருக்கிறது. இப்போது நம்முடைய அரசாங்கத்தில் எவ்வளவோ கார்கள் இருக்கின்றன.. இன்னும்

கார்கள் அவசியம்தானு என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். எத்தனையோ டிப்பார்ட்மென்டில் கார்கள் வீணுகக் கிடக்கின்றன. அப்படி வீணுகக் கிடக்கின்ற கார்களை எத்தனை என்று கணக்கெடுத்து, எந்த டிப்பார்ட்மென்டில் கூடுதலாக இருக்கிறதோ அந்த டிப்பார்ட்மென்டில் இருந்து அதை எடுத்து இன்னொரு டிப்பார்ட்மென்டிற்குக் கொடுக்கலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

சாலைப் போக்குவரத்துக்கு இன்று அரசாங்கம் மிக நல்ல முறையிலே சுமார் 3 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது, இது வரவேற்கத் தகுந்த ஒன்ருகும். காஞ்சீபுரத்தில் இருந்து திருப்பதிக்குச் செல்லும் பாதை ஒரு முக்கியமான பாதை ஆகும். பக்தர்கள் போனுலும்சரி, ஆந்திராவில் இருந்து இந்தப் பக்கம் வருபவர்களானுலும் சரி, வடநாட்டில் இருந்து இந்தப் பக்கம் வருபவர்களாக இருந்தாலும் சரி, வடக்கில் இருந்து தெற்கே வரவேண்டியவர்கள் யாராக இருந்தாலும் அந்தப் பாதை வழியாகத்தான் வர வேண்டும். அந்தப் பாதை மிகவும் சீர்கெட்டு, மோசமான பாதையாக இருக்கிறது. அது போன மழையில் அப்படி ஆனது. இன்னும் கூட அந்தப் பாதை சீர்செய்யப்படாமல், குழியும் பள்ளமுமாக மேடும் பள்ளமுமாக இருக்கிறது. மேலும் பக்கத்திலே ரயில்வே லைன் போகிறது. அதன் காரணமாகத்தான் அந்தப் பாதை சீர்கெடுகிறது என்று சொல்கிருர்கள். ஆகவே, அந்தப் பாதையைச் சீர்செய்ய கூடுதலாக நிதி ஒதுக்கம் செய்து, அதை நல்லமுறையில் சரிசெய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

கிராமங்களில் உள்ள சாலைகளை நாம் கட்டாயம் மேற்கொள்ள வேண்டும். சில ஊர்களுக்குப் பஸ் போக பாதை இல்லை. பஸ்ஸை காணுத கிராமங்கள் நிறைய இருக்கின்றன. ஆகவே, கிராமப் பாதைகளை சீர்படுத்தி எந்தெந்த ஊர்களோடு தொடர்பு கொள்ள வேண்டுமோ அந்தந்த ஊர்களுக்கு தொடர்பு ஏற்படுத்திக் கொடுத்து பாதை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய சோளிங்கர் தொகுதியில் பல கிராமங்களுக்கு பாதை சரியாக அமைக்கப்படவில்லை. எந்தக் காலத்திலேயோ அமைக்கப்பட்ட வண்டிப் பாதைகள்தான் இன்னமும் இருக்கின்றன. இன்னும்கூட அவைகள் சரியான பாதைகளாக அமைக்கப்படவில்லை. ஆகவே, அதனை செப்பனிடவும், வடாற்காடு மாவட்டத்தில் உள்ள மற்ற சாலைகளைச் செப்பனிடவும் கூடுதலாக நிதி உதவி வடாற்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கி இந்த நிலைமையைப் போக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப் போனுல், காஞ்சீபுரத்திலே பாதாள சாக்கடை திட்டம் போடுவதற்காக குழி தோண்டப்பட்டு, அதை மூடியுள்ளது. மேடும் பள்ளமுமாக, குண்டும் குழியுமாக இருக்

கிறது. பாதாளச் சாக்கடை திட்டம் காஞ்சீபுரத்தில் கொண்டு வந்தது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த அந்த புனித ஊரிலே பாதாள சாக்கடை திட்டம் அமல் செய்ய கொண்டு வந்தது வரவேற்கத்தக்கதே. ஆனாலும் பாதாள சாக்கடை பைப்புகள் அமைக்க வேண்டி குழி தோண்டப்பட்டவைகள் சரிவர மூடப்படாமல் அதுகுண்டும் குழியுமாக இருந்து, புழுதியும் சகதியுமாக அந்தப் பகுதிகள் இருக்கின்றன. காஞ்சீபுரம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள சாலைகளையும் உடனடியாக அரசாங்கம் பழுதுபார்த்து, அதைச் சரியான முறையில் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சீபுரம் நகராட்சி எல்லையில் இருக்கக்கூடிய ஒரு இடம் நெசவாளர் அதிகம் வசிக்கும் இடம், பிள்ளையார் பாளையம் ஆகும். அங்கேயிருப்பவர்கள் எல்லாம் ஏழைகள், வீடுகளுக்குத் தனியாக குடிநீர் குழாய் அமைத்துக் கொள்ள வசதி இல்லாதவர்கள். அந்தப் பகுதியில் பொதுக் குழாய் இல்லை. காஞ்சீபுரத்தில் வீட்டிற்கு வீடு குழாய் இணைப்பு கொடுத்துள்ளதால் பொதுக் குழாய் எடுத்து விட்டார்கள். இந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு அந்த வசதி இல்லாததால் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களுக்குப் பொதுக் குழாய் வைக்க வேண்டும் என்று கேட்டு, இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, ஆவன செய்யவேண்டும் என்று கேட்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மன்றத்தின் முன் வைக்கப்பட்டு இருக்கின்ற முதல் துணை மானியத்தின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்தத் துணை மானியத்தின் மீது சில கருத்துக்களைக் கூறுவதற்கு முன்னதாக இரண்டு நாட்களுக்கு முன்பாக இந்த அவையில் வைக்கப்பட்ட 5-வது பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையில் இருக்கின்ற சில கருத்துக்களைக் கூறுவதற்கு விரும்புகிறேன். பொதுவாக நாம் வரிப் பணத்தைச் செலவு செய்கிறபோது மிகுந்த அளவிற்கு கவனம் செலுத்த வேண்டும். கடந்த சில ஆண்டுகளில் கவனம் செலுத்தப்படாத காரணத்தால் என்னென்ன ஒழுங்கீனங்கள் ஏற்பட்டு இருக்கின்றன என்பதைப் பொதுக்கணக்குக் குழு சுட்டிக்காட்டியிருக்கிறது. அவற்றைப் பார்க்கிறபோது, உண்மையிலேயே நாம் வேதனைப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது.

குறிப்பாக, பல்வேறு வகைகளில் வசூல் செய்யவேண்டிய பல கோடி ரூபாய் இன்னும் வசூல் செய்யப்படவில்லை. அதாவது சேல்ஸ் டாக்ஸிலே 1974-ம் ஆண்டு முடிய 6 கோடி ரூபாய் வசூல் செய்யாமல் பாக்கி நின்று இருக்கிறது. அதிலே 1 லட்சம் ரூபாய்க்கு மேலே அடைக்க வேண்டிய நபர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் யார் யார் என்றுகூட அரசாங்கத்தில் இப்போது கணக்கு இல்லாத நிலை இருக்கிறது என்றால் அந்த அளவிற்கு முறைகேடுகள் ஏற்பட்டு இருக்கின்றன என்பதை நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

எக்சைஸ் டியுடி சம்பந்தமாக 1974 மார்ச் 31-ம் தேதி வரையில் ரூ. 5.84 கோடி வசூலிக்க வேண்டியிருக்கிறது.

இதில் இருக்கிற விசித்திரம் என்னவென்றால் அன்றைய தினம் கள்ளுக்கடைகளை ஏலம் விட்டபோது, தொகை கட்டுவதற்கு சிரமம் ஏற்பட்டதன் காரணமாக பல குத்தகைதாரர்களுக்கு சில சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் யார், யார் அந்தச் சலுகைகளைப் பெற்றார்கள்? எவ்வளவு சலுகை கொடுத்தால் அரசுக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டது என்ற ரெக்கார்டுகள் கூட அரசாங்கத்தில் இப்போது இல்லாத சூழ்நிலை இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது இது நிச்சயமாக வரவேற்கத்தக்கதல்ல; இனிமேலாவது இம்மாதிரியான குறைபாடுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இந்தக் குத்தகைதாரர்கள் 'சால்வன்சி சர்டிபிகேட்' கொடுக்க வேண்டாமா? பலரிடமிருந்து சால்வன்சி சர்டிபிகேட் வாங்கப்படவில்லை. சலுகைகள் எல்லாம் கொடுத்தும் கூட, இன்னும் பாக்கி இருக்கும் தொகை பலரிடமிருந்து வசூல் செய்ய முடியாத நிலை இருக்கிறது என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

அடுத்து, 'வெகிகிள்ஸ் டாக்சேஷன் டிப்பார்ட்மென்டை' பார்க்கும் போது, ஒரு தனியார் கம்பெனியிலிருந்து 60.16 லட்சம் ரூபாய் வசூல் செய்யப்பட வேண்டியிருக்கிறது. ஆனால் அந்த அறிக்கையைப் பார்க்கும்போது இந்தப் பணத்தை வசூல் செய்ய இப்போது இருக்கிற சட்டம் இடம் தரவில்லை என்றிருக்கிறது. இந்தவகையில் பொதுமக்களின் பணம் எந்த அளவுக்குப் பாழாக்கப்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து, 'சேல்ஸ் டாக்ஸ் சர்சார்ஜ்' வகையில் 1971-72 ஆம் ஆண்டில் கணக்கை கூட்டியதில் 36,492 ரூபாய்க்குப் பதிலாக 3,983 ரூபாய் என்று கூட்டியதின் காரணமாக 31,509 ரூபாய் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. நான் இதைக் கூறும்போது இது ஒரு ஐட்டமாக இருந்தாலும் கூட இதுபோன்று எத்தனையோ அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கக்கூடும். ஆக இதைப் போன்ற குற்றம் செய்திருக்கிற அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், இங்கே முதல் நாள் துண்டுத்தாள் வீசியவருக்கு ஒரு நாள் காவல் தண்டனை, அடுத்த நாள் துண்டுத்தாள் வீசியவர்களுக்கு 8 நாள் காவல் தண்டனை கொடுத்திருக்கிறோமே, அப்படி லிபரலாக நடத்தினால் பிற்காலத்தில் பெரிய ஒழுங்கீனங்கள் ஏற்பட்டுவிடும். ஆகையால் இத்தகைய தவறு செய்த அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 செப்டம்பர் 11

1973 ஆம் ஆண்டு விளம்பரத்திற்காக ஒருவருக்கு விளம்பரம் கொடுத்ததில் 15,374 ரூபாய் பாக்கி இருக்கிறது. அவரிடமிருந்து வசூல் செய்ய முடியவில்லை. ஏனென்றால் 'whereabouts are not known' என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அவர் யார் என்று தெரியாமல், அவருக்கு இந்தப் பணத்தைத் திருப்பிச் செலுத்த திராணி இருக்கிறதா, சக்தி இருக்கிறதா என்று பார்க்காமல் இம்மாதிரி ஒப்பந்தம் செய்து கொண்டதில் அரசுக்கு இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. எதிர் காலத்தில் இத்தகைய தவறுகள் நேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இன்னொன்று. 1973 ஆம் ஆண்டு 'ரயத்வாரி ஆக்ட் 31/73'-ஐ நிறைவேற்றினோம். அதற்குக் காரணம் இனாம் நிலங்களை அரசு பொறுப்பில் எடுத்துக் கொள்ள வேண்டும்; சரியாக வரி வசூல் செய்ய வேண்டும் என்பதுதான். ஆனால் சட்டம் நிறைவேற்றப்பட்டும் வடாற்காடு மாவட்டத்தில் பெரும்பகுதி நிலங்கள் இந்தச் சட்டத்தின் வரம்பிற்குள் வராமல், இப்போதும் வரி வசூல் செய்ய முடியாமல் இருக்கிறது என்று பொதுக் கணக்குக் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. இந்தச் சட்டத்தால் மேலும் வரி வசூல் செய்ய முடியாமல் இருக்கிறது என்று 1973 ஆம் ஆண்டில் கூறியிருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் இந்தச் சட்டத்தைத் திருத்தி, உரிய முறையில் வரி வசூல் செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைப் பார்க்கும்போது மிகவும் வேதனைப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். மேலும் இதில் காலம் கடத்தாமல் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த துணை மானியக் கோரிக்கைகளை இங்கே கொண்டு வரும்போது இந்த அரசு மூன்றாவது 'பே கமிஷன்' அறிக்கையை பரிசிலனை செய்து கொண்டிருக்கும்போது இந்த அறிக்கையினால் அரசுக்கு இவ்வளவு பணம் தேவைப்படும் என்று கேட்டிருப்பார்கள் என்று எண்ணியிருந்தோம். லட்சக் கணக்கான அரசு ஊழியர்கள் எல்லாம் பே கமிஷன் அறிக்கை வரும் வரும், அரசு நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இதுவரை அரசு கவனம் செலுத்தாமல் காலம் தாழ்த்திக்கொண்டிருப்பது நிச்சயமாக விரும்பத்தக்கதல்ல; உடனடியாக மூன்றாவது பே கமிஷன் அறிக்கையை அமல்படுத்த வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இன்னொன்று. இப்போது ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் ஏற்கெனவே பல்லாண்டுக் காலமாக அரசுப் பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்கள்-வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஏன் இந்த நிலை என்று தெரியவில்லை. குறிப்பாக சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மென்டில், தற்போதைய உணவுக் கட்டுப்பாடு கொள்கை தளர்த்தப்பட்டதால் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் அரசுப் பணிக்கு நியமிக்கப்பட்டு, பல ஆண்டுகளாக வேலை செய்த

1978 செப்டம்பர் 11] [திரு. ஜே. ஜேம்ஸ்]

ஊழியர்கள், ஆயிரக்கணக்கான ஊழியர்கள் இன்றைக்கு வேலை யிழந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க உடனடியாக அரசு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். இதுவரை செய்யாதது வருந்தத்தக்கது என்பதை வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

தற்காலிக இளநிலை உதவியாளர்கள் 9971 பேர் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் நியமனம் செய்யப்பட்டு பத்தாண்டுக் காலம் வரையிலும் தற்காலிகமாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். வான்ட் ஆஃப் வேக்கன்சி என்ற காரணத்தினால் அவர்கள் திரும்ப அனுப்பப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கெல்லாம் மீண்டும் வேலை கொடுப்பதற்கு அரசு முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த அரசு ஆர்ஜிதம் செய்த நிலங்களுக்கு காம்பன்சேஷன் என்ற வகையில் கொடுப்பதற்கு நிதி ஒதுக்கம் செய்திருக்கிறோம். அக்கொயிசிஷன் ப்ரொசிடிங்ஸ்-இல் கால தாமதம் ஏற்படுவதால் அரசுக்குப் பணச் சேதம் ஏற்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எஸ்ட்டிமேட் செய்து வேலை ஆரம்பித்து நடந்து முடிகின்ற வரையில் காலதாமதம் ஏற்படுகின்ற காரணத்தால் அது முடிகின்ற நேரத்தில் 10 லட்சம் என்ற அளவில் ஆரம்பிக்கப்பட்டது டபுள், ட்ரிபிள் ஆகக் கூட ஆகக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே அக்கொயிசிஷன் ப்ரொசீடிங்ஸை எமர்ஜென்சி ப்ரொவிஷனில் அக்கொயர் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கோர்ட்டுகளுக்கு அதிகாரிகளை நியமிக்கின்றபோது அங்கே விதி முறைகள் ஃபாலோ செய்யப்படுவதாகத் தெரியவில்லை. தங்கள் இஷ்டம் போல அங்கே இருக்கக் கூடிய ஆபீஸர்கள் நியமனம் செய்கிறார்கள். குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கன்னியாகுமரி மாவட்ட நீதி மன்றத்திற்கும் அங்கே இருக்கின்ற பல்வேறு நீதி மன்றங்களுக்கும் நியமனம் ஆகின்ற ஊழியர்களைப் பார்க்கின்றபோது கம்யூனல் ரெப்ரசென்டேசன் என்பது ஒழுங்காக அனுஷ்டிக்கப்படவில்லை என்பது தெரிகிறது. ஆகவே அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து கல்விக்காக நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது. அதை இன்றைய தினம் பார்க்கின்ற போது மாநிலங்களில் இருக்கக் கூடிய பள்ளிக்கூடங்களுக்கான கட்டிடங்கள் பல ஒழுங்கான முறையில் இல்லாத காரணத்தால் உடனடியாக அதற்குத் தேவையான கட்டிடங்களை கட்டித்தர ஏற்பாடு செய்ய வேண்டும் என்று

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 செப்டம்பர் 11

கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் பிச்சானூர் இன்டர்நேஷனல் ஹைஸ்கூலைப் பொறுத்த வரையில் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. அது ஆசிரியர்களின் பாதுகாப்புக்காக பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், கடந்த இரண்டாண்டுகளாக அந்த உயர்நிலைப்பள்ளி ஒழுங்காக இல்லாத காரணத்தால் அதன் லைசன்சு ரத்து செய்யப்பட்டிருக்கின்றது. அதில் பணியாற்றிக் கொண்டிருந்த ஆசிரியர்கள் கடந்த 21 மாத காலமாக வேலையிழந்து தவிக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் வாக்குறுதி தந்தார்கள், டைரக்டர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால், அவர்களுக்கு உடனடியாக எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வேலை கொடுக்கப்படவில்லை. ஆகவே வேலை கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக நெருக்கடி காலத்தில் ஒன்று நிறுத்தப்பட்டது. அதாவது மொழிவழி மாகாணங்கள் அமைப்பதற்கான நேரத்தில் கன்னியாகுமரியை தமிழகத்தோடு இணைக்க வேண்டும் என்ற போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு இதற்கு முன் இருந்த அரசு போனஸ் வழங்கியது. ஆனால், நெருக்கடி காலத்தில் ஆளுநர் அவர்களால் அந்த போனஸ் ரத்து செய்யப்பட்டது. அதனைப் பெற்றுக் கொண்டிருந்த மக்கள் எல்லாம் இன்றைக்கு வேதனைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ வழியின்றி இருக்கிறார்கள். ஆகவே இந்த அரசு மனம் உவந்து ஏற்கனவே அளிக்கப்பட்டு வந்த அந்த போனஸை அவர்களுக்குக் கிடைப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சத்திய மங்கலம் என்ற ஊரில் மைனாரிட்டிக்குச் சொந்தமான கொஞ்சம் நிலத்தில் ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆக்கிரமிப்புச் செய்து குடிசைகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இது கிறிஸ்ட்டியன் மிஷனுக்குச் சொந்தமான இடம். கோர்ட் உத்தரவு இருக்கின்றது. இது விஷயம் குறித்து இதற்கு முந்திய சட்டமன்றக் கூட்டத்திலே கூட நான் சொல்லி இருக்கின்றேன்: இருந்தாலும் இது மைனாரிட்டி சமுதாயத்தினர் பாதிக்கப்படக்கூடிய விஷயம். எனவே இந்தப் பிரச்சினையில் அரசு கவனம் செலுத்தி அந்த மைனாரிட்டி மக்களுக்குச் சொந்தமான பூமியில் யாரும் ஆக்கிரமிப்புச் செய்யக் கூடாது என்று விதிமுறைகளை வகுத்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எங்கள் பகுதியில் பல்வேறு மருத்துவ மனைகளில் டாக்டர்கள் இல்லாத சூழ்நிலை இருக்கின்றது. அது மட்டுமல்ல; குலசேகரத்தில் ஐம்பது படுக்கைகள் கொண்ட

1978 செப்டம்பர் 11] [திரு. ஜே. ஜேம்ஸ்]

வேண்டும் என்ற கோரிக்கை
ஒரு மருத்துவமனை அமைக்கப்பட
நீண்ட நாட்களாக இருக்கிறது. குழித்துறை அரசு மருத்துவ
மனை, தக்கலை அரசு மருத்துவ மனை இவற்றிற்கு டாக்டர்கள்
தேவை, கட்டடங்கள் தேவை. ஆகவே அரசாங்கம் அதற்குத்
தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அது மட்டுமல்ல.
தென் மாவட்டங்களைப் பொறுத்தவரையில் பொதுவாக ஒரு
டி. பி. ஆஸ்பத்திரி தான் கன்னியாகுமரி மாவட்டத்தில்
இருக்கிறது. இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, கன்னியா
குமரி மாவட்டங்களிலுள்ள அத்தனை டி. பி. நோயாளிகளும்
அந்த டி. பி. ஆஸ்பத்திரிக்குத்தான் வருகிறார்கள். ஆனால்,
கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற அந்த டி.பி. ஆஸ்பத்திரி
யில் அவ்வளவு பேர்களுக்கும் போதுமான வசதி இல்லாமல் இருக்
கிறது. ஆகவே அந்த ஆஸ்பத்திரி நல்ல முறையில் விஸ்தரிக்கப்
பட வேண்டும். அங்குள்ள அந்த ஆஸ்பத்திரியில் நோயாளிகள்
அதிக அளவில் வெயிட்டிங் லிஸ்டில் இருக்கிறார்கள், கடந்த
மூன்று ஆண்டுகளாக பராமரிப்பு வேலைகள் எதுவும் அந்த
ஆஸ்பத்திரியில் செய்யப்படவில்லை. அதையும் அரசாங்கம்
கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்
கிறேன்.

பேரவை மாற்றுத் தலைவர்
*திரு. பொ. உத்திராபதி: துணை நிதிநிலை அறிக்கையை
அவர்களே, 1978-79ம் ஆண்டுக்கான இந்தச் சட்ட மன்றத்தின்
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிறார்கள். அந்த நிதிக்
முன் வைத்து அனுமதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில
கோரிக்கைமீது வந்திருக்கிறேன். சென்ற ஆண்டு
கருத்துக்களைச் சொல்ல முன் ஜில்லாவில் பெரும்பகுதி
புயல் அடித்தபோது தஞ்சை , அனைவருக்கும் தெரியும்.
பாதிக்கப்பட்டது உறுப்பினர்கள் சாலைகள், பாலங்கள் இவற்றில்
அந்தப் புயலால் பாதிக்கப்பட்ட செப்பனிடப்படவில்லை. அந்தப்
பெரும் பகுதி இன்னும் சரியாக ஒதுக்கப்பட்ட, தமிழக அரசால்
புயல் நிவாரணத்திற்காக உண்மையில் புயலால் பாதிக்கப்பட்ட
ஒதுக்கப்பட்ட நிதிகொண்டு அத்தனையையும் ஒழுங்கான முறையில்
சாலைகள், பாலங்கள் என்ற நோக்கோடு பெரும்
செப்பனிட வேண்டும் செயல்படவில்லை. குறிப்பாகச் சொல்லப்
பகுதி அதிகாரிகள் வேதாரண்யம் பகுதியில் ஒரு ரோடு
போனால் திருத்துறைப்பூண்டி, அனுமதி பெற்றிருந்தால் இரண்
செப்பனிடப்பட ரூ. 10,000 மண்ணைப் போட்டுவிட்டு பத்தாயிரம்
டாயிரம் ரூபாய் அளவிற்கு கணக்கு எழுதி முடித்து விட்டார்கள்.
ரூபாய் செலவு செய்ததாக படுமோசமாக இருக்கிறது. இதை
அந்தப் பாதை இப்போது வேண்டும். எவ்வளவுதான் சட்ட
யெல்லாம் அரசு கவனிக்க அந்த நிதியை அந்தந்த இலாகாக்
மன்றத்தில் நிதி ஒதுக்கினாலும், அங்கிருக்கக்கூடிய அதிகாரிகள்—
களுக்குக் கொடுத்தாலும் சொல்லவில்லை—பெரும்பகுதி அதிகாரி
நான் பூரா அதிகாரிகளையும் தொடர்பு வைத்துக் கொண்டு
கள் காண்ட்ராக்ட்காரர்களோடு

சரிவர வேலைகளைச் செய்யாத நிலையில் சாலைகள் எல்லாம் படு மோசமாக இருக்கின்றன. இனிமேலாவது அந்தச் சாலைகள் சரியாகச் செப்பனிடப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என் தொகுதியில் இடும்பாவனம், தொண்டுமேடு, ஜாம்புவானோடை, குன்னனூர் என்ற கடலோரப்பகுதி இருக்கிறது. அங்கு சாலைகள் சரியாகச் செப்பனிடப்படவில்லை. வீடுகள் கட்டிக் கொள்ள கடன் கொடுப்பதாக அறிவித்தார்கள். அந்த வீடுகள் கட்டுவதற்காக ஆயிரக்கணக்கான மனுக்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ரூ. 5,000 ஹரிஜனங்களுக்குக் கொடுத்தால் வட்டி இல்லை என்று சொன்னார்கள். ஹரிஜனங்கள் பெருவாரியானவர்கள் மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். ரூ. 200, ரூ. 300 செலவழித்திருக்கிறார்கள், அவற்றைக் கொடுப்பதற்கு முன். அந்த மனுக்கள் இன்னும் சரியான முறையில் பரிசீலிக்கப்படவில்லை. ஆகவே, உடனடியாக அந்த மனுக்கள் எல்லாம் பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்குத் தக்க உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பர்மா காலனி, அரிஜன காலனி என்றிருக்கின்றன. பர்மாவிலிருந்து வந்தவர்களுக்காக காலனி கட்டிக் கொடுத்தும் தேக்கநிலை உள்ளது. ஹரிஜனங்களுக்கு 1967—ல் இருந்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி முடிகிற வரையில் காலனிகள் கட்டிக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அவற்றில் பெரும் பகுதி காலனிகள் புயலால் பாதிக்கப்பட்டு சுவர்கள் எல்லாம் இடிந்து விழுந்திருக்கின்றன. அதைப்பற்றி இங்கு சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறோம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் சொல்லியிருக்கிறோம். அந்தக் காலனிகள் பழுது பார்க்கப்படாமல் மோசமான நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. காலனிகளில் குடியிருந்தவர்களுக்கு அத்தனை பேர்களுக்கும் புயல் நிவாரணம் கொடுக்கப்படவில்லை. ஆனால் இந்தக் காலனியில் குடியிருந்தவர்கள் என்ன பாவம் செய்தார்கள் என்று தெரியவில்லை, அவர்களுக்கு எந்தவிதமான உதவியும் கொடுக்கப்படவில்லை. அந்தக் காலனி இன்னும் சீர் செய்யப்படவில்லை. உடனடியாக அந்தக் காலனியைச் சீர் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

அதேபோல் சென்ற சட்ட மன்றக் கூட்டத் தொடரிலேயே சொன்னேன். அரசில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை எல்லாம் தமிழக மக்களுக்கு எடுத்துச் சொல்லக் கூடியவர்கள் நமது பத்திரிகைகள். அந்தப் பத்திரிகை நிருபர்களுக்கு தமிழ் நாடு முழுவதும் அவர்களுக்கு இலவச மருத்துவமனைகளில் சிகிச்சை பெறக்கூடிய வசதி செய்து கொடுக்க வேண்டும். வீட்டு வசதியைப் பொறுத்த வரையில் அரசு பெரும் பகுதியினர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறது. இந்தப் பத்திரிகை நிருபர்களுக்கு வாடகை வீடுகள் கொடுக்கப்படுகிறது என்றாலும் இவர்

களுக்குக் கடன் கொடுத்து, அந்த கடன் தொகை மூலமாக அவர்களே சொந்த வீடு கட்டிக் கொள்வதற்கும் வசதி செய்து கொடுக்க வேண்டும், அது வரையிலும் அவர்களுக்கு வாடகை வீடுகள் கொடுத்து வரலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அவர்களுக்கு சம்பள போர்டு சிபாரிசுகள் பல செய்திருக்கின்றன. அந்தச் சம்பள போர்டின் சிபாரிசின் அடிப்படையில் அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறதா என்பதை இந்த அரசு கண்காணிக்க வேண்டும். மேலும் பத்திரிகை நிருபர்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் அவர்கள் திடீரென்று மரணம் அடைந்து விட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் நிதி வழங்குவதற்கு அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் மாவட்டம் முழுவதும் இருக்கின்ற பத்திரிகை நிருபர்களுக்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு மனைப் பட்டா, நிலப்பட்டா கொடுப்பதில் எந்த ஆட்சி வந்தாலும், நாங்கள் ஒரு லட்சம் பட்டா கொடுத்தோம், நாங்கள் இரண்டு லட்சம் வீட்டு மனைப் பட்டா கொடுத்தோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் கொடுக்கப்படுகின்ற பட்டாவின் இடம் ஒரு செண்ட், இரண்டு செண்ட், மூன்று செண்ட் என்று இருக்கும், அதுவும் எங்கேயிருக்கிறது என்று தெரிவதில்லை......

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இதுவரையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்த வரையில், லட்சக் கணக்கில் பட்டா கொடுத்து விட்டோம் என்று எங்கும் அறிவிக்கவில்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். லட்சக் கணக்கில் பட்டாக்கள் வழங்க வேண்டியதில்லை. 10 கொடுத்தாலும் சரி, 15 கொடுத்தாலும் சரி, கொடுக்கப்படுகின்ற நிலம் அல்லது மனை மறுநாளே அவர்களிடம் ஒப்படை செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். பட்டா கொடுக்கிறபோதே விவசாயிகள் அல்லது ஏழை மக்கள் தாங்கள் தெரிந்து கொள்கிற வகையில், நான்கு எல்லைகள் என்ன, சர்வே நம்பர் என்ன, இன்னொருடைய நிலத்தின் பக்கத்தில், கிழக்கு, மேற்கு என்று நான்கு எல்லைகளைப்பற்றியும் சொல்லி சரியாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். முதல் நாள் பட்டா கொடுத்தால் மறுநாளே அவர்களுக்கு ஒப்படை செய்யப்படுகிறது. அதேபோல் வீட்டுமனைப் பட்டாவாக இருந்தால், அதை சப் டிவிஷன் செய்து, வரைபடமும் கொடுத்து, நம்பர் போட்டு கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு கொடுக்கப்பட்ட பட்டாக்கள் எல்லாம் நல்ல முறையில் இடங்களும் ஒப்படை செய்யப்பட்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி: பாயின்ட் ஆப் ஆர்டர், சிதம்பரம் வட்டத்தில் அளிக்கப்பட்ட பட்டாக்களுக்கு இன்னும் கல் போடாமல் இருக்கிறது. அவைகள் இன்னும் ஒப்படைக்கப் படாமல் இருந்து கொண்டிருக்கிறது என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: சிதம்பரத்தில் பட்டாக்கள் கொடுக்கிற பொழுது தான் இந்த எண்ணத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவித்தேன் என்பது மாண்பு மிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும், அது செய்தித் தாள் களிலும் வந்திருப்பதையும் பார்த்திருப்பார்கள் என்று நம்பு கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: இந்த ஆட்சி லட்சக்கணக்கில் பட்டாக்கள் கொடுத்திருக்கிறது என்று நான் சொல்லவில்லை. பொதுவாக காங்கிரஸ் ஆட்சி காலத்திலும் சரி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலும் சரி, இந்த நிலைமை தான் இருந்தது. இதை மாற்றி இந்த தமிழகத்திலுள்ள ஏழை எளிய மக்களுக்கு பின் தங்கிய மக்களுக்கு, அரிசன மக்களுக்கு இத்தனை ஆண்டுக் காலத்தில், குறிப்பிட்டு இரண்டு ஆண்டுக் காலத்தில் சொந்தமாக மனைப்பட்டா கொடுத்து விடுவதாக அறிவிக்க வேண்டும். குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் இந்தப் பட்டாக்கள் அனைத்தும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சென்ற ஆட்சியில் கொடுக்கப்பட்ட பட்டாவில் இரண்டு சென்ட் மனை இருக்கும். அதில் ஒருவன் வீடு கட்டியிருப்பான், அதிலுள்ள ஒரு தென்னை மரத்திலிருந்து தேங்காய் வீட்டின் மேல் விழும். இருந்தாலும் இன்னொருவர் இது எனக்குத் தான் சொந்தம் என்று வருவார். இதன் காரணமாக போலீஸ் ஸ்டேஷன் வரை செல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே இந்த நிலைமையைப் போக்க குறுகிய காலத்தில் மனை, நிலமற்ற எல்லா மக்களுக்கும் பட்டா வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசனங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க அரிசன நல ஆபீசர்கள் மூன்று தாலுக்காவுக்கு ஒருவர் என்றும், நான்கு தாலுகாவுக்கு ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் என்றும் போட்டிருக்கிறார்கள். ஆனால், இவர்களுக்கு ஜீப் கிடையாது. இப்படியிருந்தால் அவர்கள் தாலூகாவிலுள்ள பல இடங் களுக்கும் சென்று எப்படி மனைகளைக் கொடுக்க முடியும். ஆகவே இவர்களுக்கு ஜீப் கொடுத்து அங்குள்ள மக்களுக்கு வசதி செய்து கொடுக்க உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முதியோர் பென்ஷனைப் பொறுத்த வரையில், 67-ம் ஆண்டில் துவங்கப்பட்ட நேரத்தில் 20 ரூபாய் கொடுத்து வந்தது, இப் போதும் 78-ம் ஆண்டிலும் 20 ரூபாய் என்ற அளவில் தான் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த 11 வருடத்தில் விலைவாசி எவ்வளவோ ஏறியிருக்கிறது. இந்த 11 வருடங்களில் விலைவாசி

எந்த அளவுக்கு ஏறியிருக்கிறது என்பதை ஒப்பிட்டுப் பார்த்தால் இப்போதுள்ள நிலைமையில் 100 ரூபாய் கொடுக்கலாம். அந்த அளவுக்குக் கொடுக்கா விட்டாலும், 50 ரூபாய் அளவுக்குக் கொடுப் பதற்கு அரசு முன் வர வேண்டும். மேலும் கோட்டா என்கின்ற அடிப்படையில் இல்லாமல் பாதிக்கப் பட்டிருக்கின்ற அத்தனை பேருக்கும் இந்த உதவியை செய்து கொடுக்க அரசு முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் கல்வியை பொறுத்தளவில், 178 கல்லூரிகள் இருக்கின்றன. இதில் 140 கல்லூரிகள் தனியார் கையில் இருக்கின்றன.

இப்படிப் பார்ப்போமானால், கல்வி தனியார் ஆதிக்கத்திலே சிக்கிக் கொண்டிருக்கிறதே தவிர, அரசு ஆதிக்கத்தில் இல்லை யென்பது இதிலிருந்து நிருபிக்கப்படுகிறது. ஆகவே, இந்த அரசாங்கம் உடனடியாக எல்லாக் கல்லூரிகளையும் அரசுக் கல்லூரி களாக ஆக்க வேண்டும். இந்தத் தனியார் கல்லூரிகளிலே இருந்து 220 ஆசிரியர்கள் வெளியேற்றப்பட்டு, இன்றைக்கு 6—வது நாளாக போராட்டத்திலே அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக் கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த அரசு உடனடியாக வேலை கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கோவில், மடம் ஆகியவைகளிலிருந்து நிலங்களை குத்தகை எடுத்துள்ள விவசாயிகள் தமிழகத்திலே புயலால் பெருவாரியாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டு தினங்களுக்கு முன்புகூட, விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் கோவில் வருவாயை எடுக்க முடியாது என்று சொன்னார்கள். கோவில், மடம், பெரிய மிராசுதாரர்கள் போன்றவர்களிடம் லட்சக்கணக்கான குத்தகை விவசாயிகள் மூன்று ஆண்டுக் காலமாக நெல்லை அளக்க முடியாமல், ஆயிரக்கணக்கான வழக்குகள் முன்சீப் கோர்ட்டுகளிலும், ரெவின்யூ கோர்ட்டுகளிலும் காத்துக் கொண்டிருக்கின்றன. இப்போது சட்டம் வருகிறது. குத்தகை பாக்கியை ஒத்திவைப்பதற்கு மசோதா வருகிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், இப்படி ஒத்திவைப்பதால் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு ஏற்படாது. மடங்கள், கோவில்கள் ஆகியவைகள் எப்படியும் பாக்கியை வசூலித்து விடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, ஒரு சட்டம் கொண்டுவந்து இப்படிப்பட்ட குத்தகை பாக்கிகளை எல்லாம் ரத்து செய்து, விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளித்தார்கள். அதேபோல், இன்றைக்கு இருக்கின்ற அரசும் செய்யும் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே, இப்படி ஒத்திவைத்துக் கொண்டு போகாமல், இருக்கக் கூடிய அத்தனை குத்தகை பாக்கிகளையும் ரத்து செய்ய வேண்டு மென்றும், அதே போல் அத்தனை வழக்குகளையும் வாபஸ் வாங்க வேண்டுமென்றும்,

[திரு. பொ. உத்திராபதி] [1978 செப்டம்பர் 11

கோவில், மடங்கள் ஆகியவற்றின் நிலங்களிலே குத்தகை இருக்கின்ற விவசாயிகளுக்கு, அந்த நிலங்களைச் சொந்தமாக்க வேண்டுமென்றும் நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே மேல்நிலைத் தொட்டிகள் கட்டி 4,5 ஆண்டுகள் ஆகியும் அப்படியே இருக்கின்றன. நல்ல தண்ணீர் கிடைக்கின்றதா என்பதைக்கூடப் பார்க்காமல், அந்த ஆட்சியிலே இருந்தவர்கள் அப்படிக் கட்டிவிட்டார்கள். திருத்துறைப்பூண்டியில் இப்படி 34 தொட்டிகள் கட்டப்பட்டு 6, 7 தொட்டிகளிலேயே நல்ல தண்ணீர் வருகின்றது. பாக்கி தொட்டிகள் நல்ல தண்ணீர் கிடைக்காமல் இருக்கின்றன. இவைகளையெல்லாம் பரிசீலனை செய்து, எல்லாக் கிராமங்களிலேயும் நல்ல தண்ணீர் கிடைப்பதற்கான முயற்சிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, திருத்துறைப்பூண்டி மருத்துவ மனையில் இருக்கக் கூடிய இரத்த பரிசோதனை செய்பவர்கள், இன்னும் அங்கிருக்கக் கூடிய ஸ்டாப் நர்சுகள் 8, 10 ஆண்டுகளாக அப்படியே இருக்கிறார்கள். அங்கு வரக்கூடிய நோயாளிகளுக்கு தக்கபடி அவர்களால் சிகிச்சை அளிக்க முடியவில்லை. உடனடியாக அதை அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், முத்துப்பேட்டைக்கு ஒரு பேருந்துநிலையம் வேண்டுமென்பது நீண்ட நாள் கோரிக்கை. முத்துப்பேட்டை பஸ் நிலையத்தில் நிற்கிறபோது மழை, வெய்யில் கொடுமை தெரியும். எனவே, முத்துப்பேட்டையிலே ஒரு பேருந்து நிலையம் அமைத்துக் கொடுக்கவேண்டும். அதேபோல், குன்னலூர், இடும்பாவனம், ஜாம்புவானோடை, தொண்டியகாடு ஆகிய பகுதிகளுக்கு டவுன் பஸ் வசதி செய்து கொடுக்க இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தக் கோரிக்கைகளையெல்லாம் உடனடியாக அவசரமாக செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச சந்தர்ப்பம் கொடுத்த மாற்று சபாநாயகர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. க. அன்பழகன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, 1978-79 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைமீது சில கருத்துக்களை எடுத்துவைக்க சந்தர்ப்பம் கொடுத்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

துணை மானியக் கோரிக்கை பல்வேறு தலைப்புகளில், பல்வேறு மானியங்களில் புதிதாக ஏற்றுக்கொள்ளக்கூடிய புதிய பல செலவினங்களையும், புதிதாக ஏற்றுக்கொள்ளக்கூடிய செலவினங்கள் என்ற தலைப்பில் ஏற்கனவே நாம் இழந்துவிட்ட அழப்புக்களை ஈடுகட்டுகின்ற குறிப்புகள் காணப்படுகின்றன. இதிலே ஒன்று, நுகர் பொருள் வழங்குதல் என்ற தலைப்பில், குஜராத்தில் வாங்கிய கடலை எண்ணெயை 77 மார்ச்சு 11 ஆம் [illegible]

1978 செப்டம்பர் 11] [திரு. க. அன்பழகன்]

தேதியிலிருந்து, டிசம்பர் 31ஆம் தேதி வரை பொது விற்பனை உடன்பாட்டின்கீழ் விற்பனை செய்ததில் ஏற்பட்ட நிகர இழப்புக்காக, தமிழ் நாடு நுகர் பொருள் விநியோக கழகத்திற்கு 70,71,115 ரூபாய் உதவித் தொகைக்கு அனுமதி வழங்கியுள்ளதாக ஒரு குறிப்பு காணப்படுகிறது.

[முற்பகல் 11-30]

இழப்பாக, 70 லட்சம் ரூபாய் அளவுக்கு ஆகிற அளவுக்கு பொதுமக்களுக்குச் செய்திருக்கிற நன்மையின் மதிப்பு மிகப் பெரிதாக இருக்குமானால் 70 லட்சம் ரூபாய் மதிப்பைக்கூட மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்பட்ட பெரிய நன்மை என்ன என்பதைவிட ஏதோ ஓரளவுக்கு விலையைக் கட்டுப்படுத்திக் கொடுக்க 70 லட்சம் ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்படத்தான் வேண்டுமா? அப்படி ஏற்படுவது அரசாங்கத்தின் நீண்ட கால நோக்கத்திற்கு ஏற்றதா? இந்த முறையில் ஆண்டுக்கு இரண்டு கோடி, மூன்று கோடி என்று பல கோடி ரூபாய்களைச் செலவு செய்ய அரசாங்கம் முன் வந்திருக்கிறதா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மத்திய அரசாங்கத்திடம் இருந்து கடன் உதவி பெற்று சில துறைகளில் சில காரியங்கள் எடுக்கப்படுவது என்ற மரபு. அமெரிக்காவில் கடன் வாங்குகிறபோது எப்படி 'டைட் அப் லோன்ஸ்' என்று வழங்குகிறார்களோ அந்த முறையிலா? சிறைச் சாலையில் சீர்திருத்தங்களைச் செய்ய கடன் உதவி இவ்வளவு, சுகாதாரத் துறையில் புதிய திட்டங்களை நிறைவேற்ற கடன் உதவி இவ்வளவு, என்று இப்படி ஒரு முறையை மத்திய சர்க்கார் வைத்திருப்பது ஒரு வகையில் மாநில அரசாங்கத்தின் பொறுப்புணர்ச்சியை மத்திய அரசாங்கம் உணராமல் செய்கிற ஒரு காரியமாகக் கூடத் தோன்றுகிறது.

இருந்தாலும், அப்படியே அவர்கள் செய்தாலும்கூட இங்கே சிறைச்சாலைகளில் சில பொதுப்பணிகளை மேற்கொள்வது பற்றி பக்கம் 22-ல் தெரிவிக்கப்படுகிற கருத்து வரவு - செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படுகிற ஒன்றாக ஆகிறது. மற்றொன்று, அதே பணி குறித்து 30-வது பக்கத்தில் பொதுப்பணிகள் என்ற அந்தத் தலைப்பில் அதே திட்டம் மூலதன செலவு என்ற பெயரால் செலவு செய்யப்படுகிறது. 22-வது பக்கத்தில் 'பொதுப்பணிகள் கட்டடங்கள்' என்ற தலைப்பின்கீழும், 30-வது பக்கத்தில் பொதுப் பணிகள் கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு' என்ற தலைப்பின் கீழும் ஒரே குறிப்பு இரண்டு பக்கத்திலும் அல்லது இரண்டு இடத்திலும் இருப்பதைப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

[திரு. க. அன்பழகன்] [1978 செப்டம்பர் 11

"தமிழ் நாட்டிலுள்ள சிறைச்சாலைகளை மேம்படுத்திப் புதுமைப் படுத்துவதெற்கென 6,00,000 ரூபாய் கடனுக்கும் 6,00,000 ரூபாய் உதவி மானியத்திற்கும் மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்தக் கடனையும் உதவி மானியத்தையும் அரசு ஏற்றுக்கொண்டு, துணைச் சிறைச்சாலைகள் சிலவற்றிலும் மத்திய சிறைச்சாலைகள் சிலவற்றிலும் நீரடிக் கழிப்பிடங்கள்(Flush-out latrines) அமைக்கவும் மின் இணைப்புக் கொடுக்கவும் 12,68,460 ரூபாய் செலவிட அனுமதி வழங்கியுள்ளது''

என பக்கம் 22-இலும், பக்கம் 30-இலும் ஒரே மாதிரியாக கூறப்பட்டிருக்கிறது. ஒரு வரி கூட அதிலே மாற்றம் இல்லை. மத்திய அரசாங்கம் தருகிற தொகை இரண்டு விதமான தலைப்பில் - ஒன்று மூலதனச் செலவு மற்றொன்று நடை முறைச் செலவு என்ற வகையில் இரண்டு இடங்களிலும் வரவேண்டிய நிலைமை ஏன் ஏற்பட்டிருக்கிறது?

மற்றொன்று, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து 6,83,000 ரூபாய் முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது என்று 30-ம் பக்கத்திலும், 22-வது பக்கத்தில் 5,86,000 ரூபாய் முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது என்று வேறுபடுத்திக் காண்பதில் என்ன பலன் இருக்கிறது என்று விளங்கிக் கொள்ள முடியவில்லை.

செய்யப்பட இருக்கிற பணிகளென இரண்டு இடத்திலும் ஒரே காரியத்தைத் தான் சொல்லியிருக்கிறார்கள். அங்கே ஃபிளஷ் அவுட் லெட்ரின் கட்டுவதற்காக என்று சொல்லி இங்கே வேறு விதமான காரியங்களைச் சிறைச்சாலையில் செய்வதற்காக என்று சொல்லியிருந்தால் பரவாயில்லை. அடிப்படையில் மாறுதல் இல்லாத காரியங்களுக்கு வேறு வேறு தலைப்பில் வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டிருப்பது குறித்து தெளிவுபடுத்த வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பஸ் போக்குவரத்து அதிகமாகும் நேரத்தில் விபத்துக்கள் அதிகமாகும் என்ற காரணத்தால் விபத்துக்கள் ஏற்படுகிறபோது அதனால் பாதிக்கப்படுகிற மக்களுக்கு உடனடியாக உதவி செய்வதற்காக, விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்குப் பெயர் 'Chief Ministers Accident Relief Fund' என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் என்ற பெயரில் வைக்கப்பட்டிருக்கிறது என்பதற்காகச் சொல்லவில்லை. அதைப் படிக்கிறபோது விபத்து முதலமைச்சருக்கு என்ற கருத்து வரக் கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன், எல்லா முதலமைச்சர்களுக்கும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். முதலமைச்சர் விபத்து நிவாரண நிதி என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு நல்ல கருத்தோட்டத்துடன்

1978 செப்டம்பர் 11] [திரு. க. அன்பழகன்]

அமைய வேண்டும். மொழி பெயர்ப்பு எண்ண ஓட்டத்தைப் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும். சொல்லுக்குச் சொல் மொழி பெயர்ப்பது சிறந்ததாக இருக்காது. Chief Minister's Accident Relief Fund என்பதை விட தெளிவாக 'Tamil Nadu State Accident Relief Fund' என்று வைக்கலாமா என்று யோசிக்க வேண்டும். பெயரை யாவது மாற்றுங்கள் அல்லது தொடரையாவது மாற்றுங்கள். இல்லையானால் ஆக்சிடெண்ட்டுக்காவது தயாராகுங்கள் என்று கேட்டுக்கொள்வதைத் தவிர, அந்தப் பெயரைப் படிக்கிறபோது எனக்குத் தோன்றுகிற கருத்தை வேறு விதமாகச் சொல்லத் தோன்றுது.

(பேரவைத் தலைவர் தலைமை)

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே அத்தனை துறைகளிலேயும் போராட்டம் போராட்டம் என்று அறிவிக்கிறார்கள். அத்தனை துறைகளிலேயும் போராட்டங்கள் துவங்குவதற்கு முன் கூட்டியே அரசாங்கம் நிலைமைகளைப் பரிசீலிப்பதில்லை. ஆசிரியர்கள் போராட்டம், மாணவர்கள் போராட்டம், கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம், தொழிலாளர்கள் போராட்டம், விவசாயிகள் போராட்டம், கம்யூனிஸ்ட் நண்பர்கள் நடத்துகிற போராட்டம், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் நடத்துகிற போராட்டம் என்ற முறையிலே போராட்டங்கள் நடைபெறுகின்றன. அரசாங்கம் பிரச்சினைகளை அணுகுகின்ற முறையிலே உடனுக்குடன் முடிவு காண்கின்ற நிலைமையில்லை என்பதைத் தான் காட்டுகின்றன, அரசாங்கம் பிரச்சினைகளை நல்லமுறையிலே அணுகுகிறது என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஏற்படுத்தவில்லை என்ற காரணத்தாலும் தெளிவும் திட்டவட்டமும் அரசாங்கத் திடத்திலே இல்லாத காரணத்தாலும் சொல்லுகின்ற உறுதிமொழிகளை அரசாங்கம் நிறைவேற்றுகிறது என்று எதிர்பார்க்கிற நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தத் தவறியிருக்கிறார்கள் என்ற காரணத்தினாலும் இப்படிப்பட்ட நிலைமைகள் தோன்றுகின்றன.

கடந்த ஆண்டு கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினார்கள், நான் அதை ஊக்குவிக்கவில்லை, ஆனால் அரசாங்கம் அவர்களுடைய பிரச்சினைகளை பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆனால் அவர்கள் இப்போதும் போராடிக் கொண்டிருக்கிறார்கள், அதுபற்றி இங்கே அமைச்சர் அவர்கள் அறிக்கையைப் படித்தார்கள். அப்படி அவர்கள் படித்த போது முழு மன நிறைவோடு நல்ல முடிவு ஏற்படுத்தப்பட்டு விட்டது என்றால் நான் மகிழ்ச்சியடைவேன். அரசாங்கத்தை எதிர்க்க இப்படிப்பட்ட போராட்டங்கள் தான் வழி என்று கருதுகிறவன் அல்ல நான். அளித்த வாக்குறுதிகளை அரசு மீறுகிறது, கொடுக்கப்பட்ட அஷ்யூரன்ஸ்கள் எல்லாம் மீறப்படுகின்றன, அரசாங்கம் கொடுக்கிற உறுதிமொழிகளை நிர்வாகம் நிறைவேற்றுவதில்லை; அரசாங்கம் போடுகிற உத்திரவுகளை நிர்வாகம் மீறுகிறது, அவைகளுக்குப் புறம்பாக நடக்கிறது என்ற நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன.

அரசாங்கம் கொடுக்கின்ற உறுதிமொழிகளை நிர்வாகம் நிறைவேற்றாத காரணத்தால் போராட்டங்கள் நீடிக்கின்றன என்ற நிலைமை இருக்கிறது, ஆசிரியர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளுக்கு முடிவு காணுவதைவிட அவர்களைக் கைது செய்வது மிக எளிதாக இருக்கிறது என்ற நிலைமைதான் காணப்படுகிறது. 250 ஆசிரியர்களுக்கு மீண்டும் வேலை தரப்படவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அதே இடத்திலே இடம் தரப்படவேண்டும் என்ற நிலைமை இல்லை, ஒரு பள்ளிக்கூடத்திலே தரப்படமுடியாத நிலை ஏற்பட்டு இன்னொரு இடத்திலே வேலை வாங்கித் தரப்படும் என்று சொல்லப்படுகிறது. கல்லூரி ஆசிரியர்களுக்கு அந்த அளவிற்கு உறுதிப்பாடு ஏற்படவில்லை, அவர்களுக்குப் பணி பாதுகாப்பு இல்லை என்று சொல்கிறார்கள், அவர்களுக்கு ஊதியம் நேரடியாக வழங்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள், பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று கோருகிறார்கள், இவைகளுக்கு எல்லாம் ஆசிரியர்களுக்கு மனநிறைவு அளிக்கவேண்டுமென்ற முறையிலே திட்டவட்டமாகப் பேசி நல்ல முடிவுக்கு வந்திருக்க வேண்டும், அப்படி வராத காரணத்தாலே தான் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வளர்கின்ற நிலைமை இருக்கிறது.

மாணவர்களுக்கு பாஸ் கொடுப்பது பற்றி மாணவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கே பாஸ் கிடைக்காத காலம் இது, மாணவர்களுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்ட பாஸ், முதலிலே காட்டப்பட்ட தாராள மனப்பான்மை பின்னாலே காட்டப்படாத காரணத்தால் மாணவர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டார்கள். அவரவர்களின் பிரச்சினைகள் தீராத நிலையில் வேலைநிறுத்தம்தான் வழி என்று கருதுகிற நிலை மாறவேண்டுமானால் நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது, அடிக்கடி அமைச்சர்களைச் சந்திக்கின்ற வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படவேண்டும், முதல் அமைச்சரைச் சந்திக்க முடியாது, அது வேறு, ஆனால் மற்ற அமைச்சர்கள் ஒரு நாளைக்கு மற்றவர்களைச் சந்திக்கக்கூடிய வாய்ப்புக்களை அதிகமாக ஏற்படுத்த ஏற்படுத்தத் தான் பிரச்சினைகள் குறையும். அதன் மூலமாக 100-க்கு 50 போராட்டங்களைத் தவிர்க்கலாம், அதேபோல் தொழிலாளர்களுக்குக் குறைகள் இருக்கின்றன என்றால் தொழிற்சாலைகள் திறக்கப்படவில்லை என்பதால் ஏற்பட்ட குறைகள், போனஸ் தரப்படவில்லை என்பதினாலே ஏற்பட்ட குறைகள், வேலைப் பளு குறைக்கப்படவில்லை, அல்லது, பளு அதிகமாகிறது என்பதனால் ஏற்பட்ட குறைகள் இவைகளினால், அண்மையிலே கோயம்புத்தூரிலே உள்ள தொழிலாளர்கள் இன்னும் ஒரு வார காலத்திலே வேலை நிறுத்தம் செய்கிற அளவிற்கு நோட்டீஸ் தந்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வது, வேலை நிறுத்தங்கள் அடிக்கடி ஏற்படக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. வேலை நிறுத்தம் செய்வதற்காக வருத்தப்படவில்லை நின்ற நிலைமை இல்லாவிட்டாலும், வேலை நிறுத்தம் செய்தா

லொழிய அரசாங்கம் அவர்களுடைய பிரச்சினைகளைக் கவனிக்காது என்ற நெருக்கடிக்கு அரசாங்கம் வந்தது தான் அதற்குக் காரணம் என்று நினைக்கிறேன். வேலைநிறுத்தங்கள் அதிகமாக, ஒரு நாளைக்கு 4 பிரச்சினைகள் என்று வைத்துக்கொண்டாலும்கூட அதன் காரணமாக அரசாங்கம் மற்றப் பிரச்சினைகளைக் கவனிக்க முடியாத நிலைமை, தாமதமாகின்ற நிலைமை ஏற்பட்டு, நிர்வாகத்தின் வேகம் தடைபட்டு, மக்களின் பிரச்சினைகளை போக்கக்கூடிய நிர்வாகத்தின் திறன் மங்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, 10,347 நிறுவனங்களில் 15,16 நிறுவனங்களில்தான் வேலைநிறுத்தங்களும், கதவடைப்புகளும் நடந்து இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். conciliation proceedings, சாதாரணமாக நடக்கிறது, வேலை நிறுத்தம் நடந்த பிறகும் நடக்கிறது. வேலைநிறுத்தம் நடந்த பிறகுதான் conciliation proceedings, எடுத்துக்கொள்கிறார்கள் என்ற நிலை இல்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, 15,16 என்ற எண்ணிக்கைக்கூட எனக்குத் தெரியாது. அமைச்சரவர்கள் சொன்னதற்கு மிகவும் நன்றி. வேலைநிறுத்தங்கள் ஏன் நடக்கின்றன என்பதைப் பற்றிப் பொதுவான காரணங்களை நான் பேசினேனே தவிர, தொழிலாளர் நல அமைச்சர் அக்கறை காட்டவில்லை என்று சொல்லவில்லை. சில நேரங்களில் அவர்கள் காட்டும் அக்கறையில் தான் வேலைநிறுத்தம் நடக்கிறது. ஆனால் நான் சொன்ன பொதுவான கருத்து என்னவென்றால் எப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இவைகள் உருவாகின்றன என்பதை இந்த அரசாங்கம் எண்ணிப்பார்க்க வேண்டும். முக்கியமாக எந்தச் சூழ்நிலைகளில் குறைகள் வந்து கொண்டிருக்கின்றன என்பதை அரசாங்கம் உன்னிப்பாகப் பார்க்க வேண்டும். சமூகத்தில் மக்களின் தேவைகள் வளர்ந்து வருவதன் காரணமாகவும், உரிமை உணர்வை அனைவரும் பெறுவதன் காரணமாகவும், அதைப்போல தங்கள் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டியது அரசுதான் என்று தீர்மானிக்கின்ற நிலைக்குச் சூழ்நிலைகள் இடம் தருவதாலும், குறைகளை முழுக்க நிவர்த்திக்க வேண்டிய அளவிற்கு அரசுக்கு ஆற்றல் இல்லாத காரணத்தாலும் இப்படிப் பல்வேறு காரணங்களினாலும் மொத்தத்திலே ஒவ்வொரு சூழ்நிலையிலேயும் குழப்பங்கள் அதிகமாகும் நிலைமை ஏற்படுகிறது. அதிலும் குறிப்பாக இளைய தலைமுறையைச் சேர்ந்த மாணவர்கள் இப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்கு ஆளாகாமல் இருக்க இந்த அரசாங்கம் அதிக அக்கறை காட்ட வேண்டும்.

இன்றைக்குக் கல்வித் துறையை எடுத்துக்கொண்டு பார்த்தால் கல்வித்துறையிலே மிக நல்ல சீர்திருத்தம் என்று எண்ணிக்கொண்டு செய்ய ஆரம்பித்த சீர்திருத்தங்கள் முறைப்படியும், திட்டமிட்டும், முன்கூட்டியும் செய்யப்படாத காரணத்தால் இன்றைக்கு மேல் உயர்நிலைக் கல்வியில் படிக்கும் மாணவர்கள் தாங்கள் சரியாகக் கல்வி பெறாத நிலைமைக்கு ஆளாகியிருக்கிறார்கள், அவர்களுக்குத் தேவையான பாடப்புத்தகங்கள் கிடைக்க வில்லை என்ற குறை இருக்கிறது. முதலில் 400 பள்ளிகள் தொடங்கப்படும் என்று சொல்லப்பட்டது. அப்பொழுதே நான் சொன்னேன். எண்ணிக்கை குறைவு என்று. 500 என்றும் பிறகு 600 என்றும், 700 என்றும், 800 என்றும் சொல்லப்பட்டு 850 ஆயிற்று, பிறகு ஏறக்குறைய 900 ஆக ஆகியிருக்கிறது. ஆனால் எண்ணிக்கை எவ்வளவு ஆனாலும் கூட அந்தப் பள்ளிக்கூடங்களி லெல்லாம் அந்த வகுப்புகளை நடத்துவதற்கு வேண்டிய போதுமான ஆசிரியர்கள் முறையாக நியமிக்கப்படவில்லை. இன்னும்கூட ஒரு பள்ளியிலே உள்ள தகுதியுள்ள ஆசிரியர்கள் இன்னொரு பள்ளிக்குச் சென்று வேலை பார்க்கும் நிலைமை இருக்கிறது. டிரான்ஸ்ஃபர்கள் முறைப்படி போடப்படவில்லை. போதுமான வகுப்புகளுக்கு இடம் இல்லை. பாடப்புத்தகங்கள் அச்சிட்டு அனுப்பிய பிறகு புத்தகத்தில் தவறாக இருக்கிறது என்று அவைகள் திரும்பப் பெறப்பட்டு இருக்கிறது. அது எந்தப் புத்தகம் என்று நினைவில் இல்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மேல் நிலைப் பள்ளிக் கல்விக்கான ஆயத்தங்கள், தேவையான நடவடிக்கைகள் எல்லாம் போதுமான அளவு செய்யப்பட்டு வருகிறது. இன்னும் முழுமையாகக் கொஞ்ச நாட்களிலே செய்யப்பட்டு விடும். வரலாறு புத்தகம் அச்சாகி வந்ததற்குப் பிறகு அதிலே ஒரு பாடம் இன்றைய மனப்போக்கிற்குச் சரியாக இல்லை என்பதால் திரும்பப் பெறப்பட்டு அந்தப் பாடத்தை நீக்கி மறுபடியும் புத்தகங்கள் அனுப்பப்பட்டு விட்டன.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மேல்நிலைப் பள்ளிப் படிப்பு தொடங்கப்பட்ட மூன்று மாத காலத்திற்கு முன்னால் அந்தப் புத்தகங்கள் முறையாகப் பரிசீலிக்கப்பட்டிருக்க வேண்டும். ஓராண்டுக்கு முன்னாலேயே இந்தத் திட்டம் கொண்டுவரப்படும் என்ற நிலைமை இருந்தது. இது இரண்டாண்டுகளாக இருந்த ஆலோசனை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, புத்தகங்களைப் போடுவது, பரிசீலிப்பது என்று அதைப் பார்ப்பதற்கு என்று இருந்த கமிட்டி போட்டுப் பார்த்த பிறகுதான், அச்சிட்டு வந்த பிறகு என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டபோது நான் அதில் தலையிட்டு அதைத் திரும்பப் பெற

வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால் அரசாங்கம், பள்ளிக் கூடப் புத்தகங்களில் தலையிடுகின்ற நிலைமைகள் இருக்கக்கூடாது என்பதும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே. அமைச்சர் மீது அந்தப் பொறுப்புச் சுமையைச் சுமத்துவதாகக் கருதக்கூடாது. கடைசி யாகத்தான் எனக்குத் தெரியும், முன்கூட்டியே எப்படித் தலையிடு வது என்று கேட்கிறார்கள். நான் அந்தக் குழுவையே குற்றம் சொல்லுகிறேன். யாராக இருந்தாலும் சரி, ஒரு வரம்பு முறையை, ஒரு செயல் முறையை, ஒரு பொறுப்பு முறையை, அதன் விளைவுகளைப் பற்றிய அக்கறையைக் கொள்ள வேண்டும். யாராக இருந்தாலும் சரி, அது அரசாங்க அதிகாரிகளாக இருந்தாலும் சரி; இந்த அக்கறையைக் கொள்ள வேண்டும். அதில் ஓரளவுக்குக் குறைபாடுகள் இருக்கின்றன. அதன் விளைவாகத்தான் பொது மக்களும், மாணவர்களும் பாதிக்கப்படுகின்றனர். பள்ளிகளில் நடைபெறுகின்ற நிலைமை இன்றைக்கு நாட்டில் திருப்திகரமான நிலைமையில் இல்லை. ஏற்கனவே அரசாங்கம் தொடங்குகிற பொழுதே நான் சொன்னேன். முன் கூட்டியே தகுந்த தகவல் களை அந்த இலாக்காவைச் சேர்ந்தவர்கள் உங்களுக்குத் தருவது இல்லை.

அவர்களிடத்திலே நீங்கள் உங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி, அவர்களுடைய தவறான எண்ண ஓட்டங்களை மாற்றுகிற அளவுக்கு உங்களாலே செயல்பட முடியவில்லை அவர் களை மாற்ற முடியவில்லை. அதிகாரிகளைக் நம்பி அரசாங்கம் நடப்பது என்றால், மக்களுக்குத் தேவையான காரியங்களை நடத்த முடியாது. அரசாங்கம் அதிகாரிகளைக் கருவியாக வைத்து, துணை யாக வைத்து செயலாற்றலாமே தவிர, அதிகாரிகளுக்கு மக்களைத் தெரியாது. மக்களுடைய தேவைகளைத் தெரியாது. படித்தவர் களுக்குக் கூட தாம் படித்தவைதான் தெரியுமே தவிர, எதைப் படிக்கச் சொல்ல வேண்டுமென்பதிலே அவர்களுக்குத் தெளிவான ஆற்றல் இருக்க முடியாது. ஆகவே, கல்வி அமைச்சர் அவர்கள் இப்பொழுது இருப்பதை விட இன்னும் சுறுசுறுப்பாக இருந்திருக்க வேண்டும். இந்தச் சுறுசுறுப்பு காணாது. சுறுசுறுப்பு காணாது என்றால் அவருடைய ஆற்றலைத் தனிப்பட்ட முறையிலே சொல்வது அல்ல. முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்து, இந்த இலாகாவை நிர்வகிக்க இன்னும் இரண்டு அமைச்சர்களைத் தாங்கள் சேர்த்துக் கொள்ளுங்கள். அல்லது இருக்கிற அமைச்சர்களிலே, என்ன வேலை செய்வது என்று தெரியாமல் இருப்பவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுங்கள். உங்களுடைய தகுதியைக் குறைப்பதற்காக நான் சொல்லவில்லை. எல்லோருடைய தகுதியும் ஒன்றுதான், அதை நான் குறைத்துச் சொல்லவில்லை. மேல்நிலைக் கல்விக்குக் காட்டப்பட வேண்டிய முழு கவனம் செலுத்தப்படாத காரணத்தாலே இன்றைக்கு ஏறத்தாழ 1 லட்சம் மாணவர்களுடைய எதிர்காலம் நான் எதிர்பார்க்கிற அளவு ஒளிமயமாக இருக்குமா என்ற ஐயப் பாட்டினைச் சொல்ல விரும்புகிறேன்.

'ஒக்கேஷனல் ஜாப் ஓரியன்டட்' என்று சொல்லக்கூடிய வகையில் தொழில் முறையில் இருக்கின்ற வகையில் அல்லது வேலை வாய்ப்பு பின்னலே தேடிக் கொள்கிற அடிப்படையிலே இந்த இரண்டாண்டுக் கல்வி வருகிறது என்று சொன்னார்கள். அதை எந்த அளவு அனுக முடிந்தது. பழைய எஸ். எஸ். எல். சி. போலவே மறுபடியும் ஒரு பாடத் திட்டம்.....

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஏறத்தாழ 20,000 மாணவர்கள் இந்தத் தொழிற் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்புக்களைப் பெற்றிருக்கிறார்கள். இந்தியாவிலே, தமிழ் நாட்டிலேதான் இந்த அளவு வெற்றிகரமாக இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் வெற்றிகரமாக நடைபெற நடவடிக்கைகள் எடுப்போம். அமைச்சர் சுறுசுறுப்பாயில்லை என்று பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள். பலபேர் பேசிக்கொள்வது அமைச்சரா, இயக்குநரா என்றுதான் பேசிக்கொள்கிறார்கள்.

திரு. க. அன்பழகன்: இரண்டு பேரிடத்திலே, அமைச்சர் மீது பலகீனத்தைச் சொன்னால்தான் இங்கே குறை இருக்கிறது என்பதை அவர் சொல்லக்கூடிய நிலை ஏற்படும். நான் முன்னாலேயே சொன்னேன். அமைச்சருடைய தனி சுறுசுறுப்பைப்பற்றிச் சொல்லவில்லை. அமைச்சர் இயக்குகிற துறையினுடைய சுறுசுறுப்பு, அதிகப்படியான ஆற்றலும், ஃபோர்சும் தேவைப்படுகிறது என்றுதான் குறிப்பிட்டேன். ஒரு அமைச்சரால் முடியாவிட்டால், இரண்டு மூன்று அமைச்சர்களைச் சேர்த்துக் கொண்டு இந்தத் துறையை வேகமாக வளருங்கள் என்ற கருத்திலேதான் நான் சொன்னேன்.

20,000 மாணவர்கள் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், தொழிற்கல்வி அல்லது, தொழில் நுட்பக் கல்வி அல்லது பயிற்சிக்கல்வி, எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் அந்தக் கல்வி திறமையாகத் தரப்படுகிற வாய்ப்பில்லை. நீங்கள் குறிப்பிட்ட துறைகளிலே 6,7 துறைகளிலேதான் இப்பொழுது பயிற்சி தரப்படுகிறது. ஏட்டிலே எழுதுகிற பொழுது விரிவாகத் தரப்பட்டது. ஆனால், எடுத்துக் கொள்ளப்பட்டது 6,7 தான். எல்லாவற்றையும் சேர்த்து பயிற்சி கொடுக்கிற நிலைமை ஏற்படவேண்டுமானால், இன்னும் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து அம்முயற்சியில் வேகமாக ஈடுபட்டாக வேண்டும். மிகத் தீவிரமாகப் போதுமான நிதி அதற்காக ஒதுக்கி இந்தக் காரியத்திலே ஈடுபடவேண்டும்.

பொதுவாகவே, தமிழ் நாடு முழுவதும் பாடநூல்கள் சரியாகக் கிடைக்கவில்லை என்ற கருத்துக்கள் எழுகின்றபொழுது, நோட்டுப் புத்தகங்கள் உரிய காலத்திலே கிடைக்கவில்லை, அல்லது அதிக விலையிலே கிடைக்கிறது. அதற்கான காரணம், மத்திய அரசாங்கம் தருகிற இலவசத் தாள்கள் அல்லது குறைந்த விலையிலே தருகிற தாள்கள் உரிய காலத்திலே தரப்படவில்லை என்று அமைச்சராலே பதில் அளிக்கப்பட்டிருந்தாலும் முன்கூட்டியே மத்திய அரசிட

மிருந்து கிடைக்கிற உதவியாக இருந்தாலும், வெளிநாட்டிலே
இருந்து கிடைக்கிற உதவியாக இருந்தாலும், உரிய காலத்திலே
அவற்றைப் பெற்றுக் கொடுத்தால்தான், உரிய காலத்திலே கல்வி
யைப் பயிற்றுவிக்கத் தொடங்க அரசாங்கத்திற்கு உறுதுணையாக
இருக்கும் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

அதே போல் மருத்துவ துறையைப் பொறுத்த வரையில்,
நம்முடைய முதலமைச்சரவர்கள் நிதிநிலை அறிக்கை வந்தபொழுது
மருத்துவ மானியக் கோரிக்கை மீது பேசுகிற பொழுது, சித்த
மருத்துவத்திற்கென்று ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.
அன்பழகன் மகிழ்ச்சி அடைவார் என்று அந்தக் குழு உறுப்பினர்
களாக 5 பேர் பெயரைச் சொன்னார்கள். எனக்கு அதிலே கருத்து
வேறுபாடு இருந்தாலும், ஏதோ நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.
மகிழ்ச்சி அடைய வேண்டும் என்று பேசாமலிருந்து விட்டேன்.
அந்தக் குழு உறுப்பினர்களுக்கு 15 நாட்களுக்கு முன்னாலேதான்
செய்தியே போகிறது. For memb:rs who are appointed :n the Siddha
Advisory Committee 15 நாட்களுக்கு முன்னாலேதான் செய்தி
போகிறது இன்னும் முதல் கூட்டம் கூட நடைபெற்றதாகத்
தெரியவில்லை, அப்புறம் முதலமைச்சர் அறிவிப்பானேன்.
யாராவது வெளியிலே போகிறவன் அறிவித்தாலும், இதே நிலை
தான் ஏற்பட்டிருக்கும். 3 மாதங்களுக்கு முன்னால் அறிவித்தது.
அதுவும் பல்வேறு குறைபாடுகளுக்கு ஆளான ஒரு துறையைப்
பற்றி, பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு துறையைப் பற்றி, நொந்து
போன ஒரு துறையைப் பற்றி ஒரு ஆணையில், முதலமைச்சர்
கையெழுத்து போடுவதிலே தாமதம் ஆயிற்றே என்னவோ—இங்கே
சொன்னார்கள், கையெழுத்துப் போடாமல் இருந்திருக்கக்கூடும்—
அல்லது துறைச் செயலாளரோ, தொடர்புடையவர்களோ, தாமத
மாக நடவடிக்கை எடுத்திருக்கக்கூடும்.

(முற்பகல் 11-50)

இதே அவையிலே ஒரு கேள்வி கேட்டபோது தமிழ்நாட்டிலே
உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 40 ஆரம்ப சுகாதார
நிலையங்களில் மருத்துவர்கள் இல்லை என்று சொல்லப்பட்டது.
இரண்டு மருத்துவர்கள் பணியாற்றுகிற மருத்துவமனைகள் தமிழ்
நாட்டில் 375 நிலையங்கள் இருக்கின்றன. அதில் இன்னும் ஒரு
மருத்துவரைச் சேர்த்து 3-வது மருத்துவரை போடுவதற்காக,
ஏற்கனவே நான் அமைச்சராக இருந்தபோது 30, 40 இடங்களிலே
தொடங்கி அடுத்த இரண்டு ஆண்டுகளிலே 100 இடங்களில்
விஸ்தரிக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டபோது ஆட்சி நீக்கப்
பட்டு, அதன் தொடர்பாகக் கைவிடப்பட்டது, அண்மையிலே இதே
முயற்சி மீண்டும் தொடங்கப்பட்டு 100 ஆரம்ப சுகாதார
நிலையங்களில் 3-வது மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று
அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இங்கே பொறுப்பேற்றுக்
கொண்டிருக்கும் அமைச்சர் தெரிவித்தால் டாக்டர்கள் இந்தக்

கிராம மருத்துவ மனைகளில் பணிபுரிய முன் வராததால் இந்த இடங்கள் காலியாக இருக்க வேண்டியிருக்கிறது. அந்த இடங்களில் யாரைப் போடுவது என்று ஆலோசிக்கவேண்டியிருக்கிறது என்று சொன்னார். ஆரம்ப சுகாதார நிலையங்களில் டாக்டர்கள் தொடக்க நிலையில் பணி ஆற்ற வேண்டிய ஒரு கட்டம். தொடக்க காலங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றுவது என்பது முறை, வாடிக்கை. தற்போது 3,000 டாக்டர்கள் இன்றைக்கு பணி கிடைக்காமல் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிலே 30 பேர்களை நியமித்தால் 2 பேர்களாவது சேருவார்கள். மீண்டும் 30 பேர்களைப் போட்டால் அவர்களில் 20 பேர்களாவது சேருவார்கள். எனவே, இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் டாக்டர்கள் இல்லாமல் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே, அரசாங்கத்தில் இன்றைக்கு இருக்கின்ற கொள்கை சரியானதாக இல்லை. இயக்குநர் அலுவலகத்தில் இருந்து வருகின்ற பட்டியலை அரசாங்கத்தில் உள்ள செக்ரட்டேரியட் அப்ரூவ் செய்யாமல் இருக்கலாம். அல்லது அமைச்சர் அவர்கள் கையெழுத்துப் போடாமல் இருக்கலாம். இந்தக் காரணத்தினால்தான் தற்காலிகமாக நியமிக்கப்படவேண்டிய மருத்துவர்களுக்குத் தவக்கம் ஏற்பட்டிருக்கிறது. எனவே தான் 40 ஆரம்ப சுகாதார நிலையங்களில் டாக்டர்கள் இல்லை என்பதை அரசாங்க சார்பிலே சொல்ல வேண்டியிருக்கிறது. இதற்கு என்ன அவசியம்.

அடுத்து, நிதி அமைச்சர் அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்னையிலே 1974ஆம் ஆண்டு திட்டம் இட்டு 1975ஆம் ஆண்டில் முக்கால் பங்கு முடிக்கப்பட்டுள்ள இரண்டு பெரிய மருத்துவமனைகள்-பெரிபரல் ஆஸ்பிட்டல்கள்-ஒன்று அண்ணா நகரில் 24 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு, இன்னொன்று தண்டையார்பேட்டையில்—எந்தப் பகுதி தெரியுமா, சென்னை நகரின் ஓரப் பகுதியில்—மக்கள் பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை இராயப்பேட்டை மருத்துவமனைக்கு அடிக்கடி போக முடியாதவர்களுக்காக, சென்னை நகருக்கு அருகாமையில் உள்ள ஊர்களில் வசிப்பவர்களுக்காக நெடுஞ்சாலையில் வந்து போகிறவர்களுக்கு அந்தப்பகுதி மக்கள் சிகிச்சை செய்து கொள்வதற்கு ஒவ்வொன்றும் 30 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட மருத்துவமனைகள் இன்றைக்கு இயங்காமல் இருக்கின்றன. கட்டி முடிக்கப்பட்டு ஓராண்டுக் காலம் ஆகின்றன. அது யாருடைய தொகுதி என்று அருள் கூர்ந்து நீங்கள் எண்ணிப்பார்க்க மாட்டீர்கள் என்று நான் நினைக்கிறேன். சென்னை நகர மக்களுக்குப் பயன்படுகிற இடத்திலே அமைந்திருக்கின்ற, மருத்துவமனைகள் 30 லட்சம் ரூபாயில் கட்டப்பட்டு, ஓராண்டுக் காலமாக இயங்காமல் இருப்பதற்கு என்ன காரணம். ஒரு அரசாங்கம் நிறைவேற்றிய திட்டத்தை இன்னொரு அரசாங்கம் கைவிடுவது இந்த நாட்டுக்குப் பெரிய இழப்பு. ஒரு அரசாங்கம் 75 பங்கு சரியாக இருந்து 25 பங்கு சரியாக இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த 75 பங்கு சரியாக இருந்து 25 பங்கு சரியாக இல்லை ஆகவே, அந்தத் திட்டத்தை கைவிட்டு

விடுகிறோம் என்று சொன்னால் நாட்டு மக்களுக்கு 75 பங்கு இழப்பு ஏற்பட்டுவிடும். அப்படிப்பட்ட தவறான போக்கு இந்த அரசுக்கு இருக்கக்கூடாது. அந்த மருத்துவமனைகள் எப்போதோ தொடங்கப்பட்டிருக்க வேண்டும். இந்த 6 மாத காலத்தில் செயல்படும் என்று எதிர்பார்த்தேன். அப்படிச் செயல்படாத காரணத்தினாலே நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

அதேபோல் இன்றைக்கு எண்ணிப்பார்த்தால் கிருஷ்ணா நதி தண்ணீர் சென்னைக்குக் கொண்டு வரப்படும் என்ற அரசாங்கத்தின் ஆலோசனையை நான் வரவேற்கிறேன். கிருஷ்ணா நதி நீர் மட்டும் அல்ல, கோதாவரி நீர் வந்தாலும் வரவேற்கிறேன். கங்கை தண்ணீர் வரக்கூடிய நிலை இருந்தாலும் நான் வரவேற்கத்தான் போகிறேன். ஏறத்தாழ 40ஆண்டுகளுக்கு முன்னால் சர் சி.பி.இராமசாமி ஐயர் அவர்கள் அட்வைசராக இருந்தபோது ஒரு ஆலோசனை சொல்லியிருக்கிறார். கங்கை, காவிரி இணைப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை, நீண்டகால திட்டத்தை, நீண்ட கால திட்டம் என்றால் 100 ஆண்டுகாலத் திட்டம், அது நூறு ஆண்டு காலத்திலே முடிப்பீர்களோ என்னவோ எனக்குத் தெரியாது. நாம் அதைப் பார்க்க மாட்டோம். இந்தத் திட்டத்தை 100 ஆண்டு காலத்திலே முடிக்க வேண்டுமானால் இப்போது ஆரம்ப நிலை இருந்தால்தான் எதிர்காலத்திலே நீர் பற்றாக்குறை நீங்கும் என்று சி.பி. இராமசாமி அவர்கள் அன்றைக்குத் தெரிவித்தார்கள். அந்தக் கருத்து அதற்குப் பின்னாலே வற்புறுத்தப்பட்டதா? காங்கிரஸ் ஆட்சி காலத்தில் அந்தத் திட்டம் வற்புறுத்தப் பட்டதா? இன்று நாம் வடக்கே பார்க்கிறபோது 100-ஆண்டு காலத்தில் ஏற்படாத வெள்ளம் கங்கையில் ஏற்பட்டு இருக்கிறது. அதன் காரணமாக, உத்திரப் பிரதேசம், பீஹார், மேற்கு வங்கம், இன்னும் சில பகுதிகளில் பெருத்த அளவிற்கு பாதிப்பு ஏற்படுத்தி, ஏறத்தாழ 20 கோடி மக்கள் பாதிக்கப்படும் அளவில் அந்தப் பகுதி முழுவதும் வெள்ளக்காடு ஆகியிருக்கிறது. அதற்காக, 5 ஆண்டு காலத்தில் ரூ. 700 கோடி அளவில் வெள்ளத் தடுப்பு நிவாரணப் பணிகள் செய்வதற்கு ஒரு ஆலோசனையை மத்திய அரசு மேற்கொண்டு இருப்பது வரவேற்கத்தக்கது. நமக்கு அனுதாபம் எவ்வளவுதான் அவர்களோடு அவர்கள் பேரில் இருக்கிறது. அவர்களுடைய இந்தி ஆதிக்க நமக்கு வேறுபாடு இருந்தாலும், முதன்மையாக இருந்தாலும், திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதில் ஏற்பட்டு இருக்கும் இழப்பு இந்த வெள்ளத்தால் அவர்களுக்கு நம்முடைய இரங்கலை இந்தச் சட்ட பெருத்த இழப்பு, அதற்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மன்றத்தின் மூலம் கூட நான் திட்டத்தை 5 ஆண்டு காலத்தில் அந்த 700 கோடி ரூபாய் மேற்கொண்டாலும், அந்த நிறைவேற்ற அரசு முயற்சிகளை முழுமையாகத் தடுத்து விடுமா? பாதிக்கப் வெள்ளச்சேதத்தை அது நிவாரணம் அளிக்கலாம். பட்ட மக்களுக்கு தற்போது அது அடிப்படையில் அந்த மக்களுக்கு ஆனால் நீண்ட காலத் திட்டத்தின்

நிரந்தர நிவாரணம் தரும் வகையில், நம்முடைய தமிழ்நாடு அரசாங்கம் அந்த கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தை தகுந்த பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிருஷ்ண தண்ணீர் சென்னை நகருக்குக் கொண்டு வரப் போவதாக சொன்னபோது, வீராணம் திட்டம் அடியோடு அழிக்கப் பட்டு விட்டது. அதை தூக்கி எறிந்து விட்டார்கள் என்று சொல்லப்பட்டது. அவர்களுக்கு உண்மை சரியாகத் தெரிய வில்லை என்று கருதுகிறேன். அதைத் தெரிந்து கொள்ள எனக்கு வாய்ப்பிருக்கிறது என்ற காரணத்தால் தெரிவித்துக்கொள்கிறேன். கிருஷ்ண நதி நீர்த் திட்டத்திற்காக ஆந்திர அரசோடு கையெழுத் திட்டு, அதற்குப் பிறகு அவர்களுக்கு நாம் செலுத்த வேண்டிய பணத்தை, தொகையைச் செலுத்திய பிறகு அதை ஆரம்பித்தால்-இதை நான் 1978-ல் சொல்கிறேன்—கி. பி, 2000-ஆண்டில் தான் அது நிறைவேற்றப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள் கிறேன். நான் சொல்வதை விட விரைவாக, குறைந்த காலத்தில் முடிக்க முடியும் என்று யாராவது சொல்வார்களானல் அவர்களை நான் பாராட்டுகிறேன். இரண்டாண்டுக் காலமாக இயற்கை யாகவே ஓரளவிற்கு அதிகமாக மழை பெய்து இருக்கிற காரணத்தால் சென்னை நகருக்குக் குடிநீர் பிரச்னை அதிகமான அளவிற்குப் பாதிக்காமல் இருந்தாலும் கூட, இனி ஏதாவது ஒரு ஆண்டில் மழை குறைவாக இருந்தால் நிச்சயம் சென்னை நகர மக்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே நான் கேட்டுக் கொள்கிறேன், இப்போதே அதற்குத் திட்டமிட்டு அந்த வீராணம் திட்டத்தை நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு அமைச்சர் கூடக் குறிப்பிட்டார் என்று கருதுகிறேன். கலைஞர் கருணநிதி அவர்கள் ஆட்சிகாலத்தில் சைதாப்பேட்டை யில் ஒரு காவிரி மாதா உருவத்தை வைத்துவிட்டு, அதன் கையில் ஒரு குடத்தைக் கொடுத்து விட்டு, தண்ணீர் வரும் என்று சொன்னர் என்று குறிப்பிட்டார். அதைச் செய்தது கலைஞர் கருணநிதி அல்ல. ஆளும்கட்சியால் அதிகம் மதிக்கப்படுகிற அறிஞர் அண்ண அவர்கள் காலத்தில் செய்யப்பட்டது. அறிஞர் அண்ண அவர்கள் காலத்தில்தான் அது துவக்கி வைக்கப் பட்டது. குடத்தைக் கையில் வைத்து அவர் தான், அப்போது தான் வீராணத்தில் இருந்து தண்ணீர் கொண்டு வரவேண்டும் என்று தீர்மானம் போட்டார்கள். அண்ணவின் கொள்கையைத் தொடர்ச்சியாகப் பின்பற்றிவருகிறேம் என்று சொல்லிக்கொண்டு இருப்பவர்கள் இந்தப் பிரச்னையில் எந்த வகையில் அண்ண அவர்கள் துவக்கி வைத்த காரியத்தைத் தொடர்ந்து செய்கிருர்கள் என்பதை நான் மட்டும் அல்ல நாட்டுமக்களும் தெரிந்து கொள்ள ஆவலோடு இருக்கிருர்கள். அறிஞர் அண்ண அவர்கள் செய்த காரியத்தில் தவறு இருக்கலாம். அவர் தொடங்கி

வைத்த காரியத்தில் தவறு இருக்கிறது என்று சொன்னல், அந்தத் தவறு எங்கே இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டி, அதைப்போக்கி அந்தத் திட்டத்தை நல்ல முறையில் நடை முறைப்படுத்தவேண்டும்,

ஆனல் நடைபெற்றுவிட்ட சில தவறுகளுக்காக, அந்தத் தவறுகளையே சொல்லிக்கொண்டு, நடை பெறவேண்டிய காரியத்தைக் கட்டுப்படுத்துவது அதை விடப் பெரிய குற்றம். அது பெரிய குற்றம் என்று 78-ம் ஆண்டில் சொல்கிறபோது, 81-82-ம் ஆண்டில் நிலைமைகள் மாறுமானல், அந்தக் குற்றச்சாட்டு இன்னும் பெரிது என்று சொல்கின்ற வாய்ப்பு யாருக்கும் ஏற்படும். யார் ஆட்சிக்கு எதிராக யார் ஆட்சிக்கு வருகிருர்களோ அவர்கள் முன் ஆட்சிக் காலத்தில் செலவு செய்யப்பட்ட பணம் வீணகச் செலவிடப்பட்டது என்று சொல்வது மரபாக, நாகரீகமாகப் போய்விட்டது. அதுவே ஆட்சியில் இருப்பவர்களின் பெரும் பணியாக இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன், இந்தத் திட்டத்தை இந்த இடைக்காலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியில் சில குறைகள் இருக்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தடை ஏற்பட்டு இருக்கிறது. எனக்கு வீராணம் திட்டத்தைப் பற்றி அக்கறை இல்லை. சென்னை நகர மக்களுக்கு நல்வாழ்வு கொடுக்கவேண்டும். அந்த மக்களுக்குக் குடிநீர் நல்ல வகையில் கொடுக்கப்படுமானல் அது வரவேற்கத் தக்க ஒன்ருகும். ஆகவே, அதிலே ஏற்பட்ட குறைகளை நீங்கள் தனியாகஎடுத்து எப்படி பரிசீலனை செய்யவேண்டும் என்று விரும்பு கிறீர்களோ அப்படிச் செய்யுங்கள்.

ஆனல் கிருஷ்ணநீர் வருகிறது என்று சொல்லி, சென்னை நகர மக்களை ஏமாற்ருதீர்கள். 'ஆனந்தவிகடன்' ஒரு படம் போட்டு இருந்தார்கள். தண்ணீர் தேவை என்று கேட்கிற மக்களுக்கு முன்பு ஒரு பெரிய குழாயைப் போட்டு, அதற்கு முனையிலே ஒரு சுருளை வைத்துக்கொண்டு ஒரு அதிகாரி வருகிருர். வருகிற அந்த அதிகாரி மக்களைப் பார்த்த உடனே, தண்ணீர் வருகிறது நான் முன்னே வந்து விட்டேன் என்று சொல்லியது போல் படம் போடப்பட்டு இருந்தது. அந்த கிருஷ்ண நீர் வரும் காலம் வரும். வரவே வராது என்பது அல்ல. அப்போது நம்முடைய ஆட்சி இருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனல் அந்த 20 ஆண்டுகாலம் ஆகும் வரையில் நாம் காத்து இருக்காமல், இந்த அரசாங்கத்தை நான் கேட்டுக் கொள்கிறேன், உடனடியாக அந்த வீராணம் திட்டத்தை நிறை வேற்றவேண்டும். ஏற்கனவே செலவு செய்யப்பட்டவைகளை, அந்தத் திட்டத்தைக் கைவிடுவதன் மூலம் பாழாக்கி விடாமல், அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தத் திட்டம் பயன் உள்ள திட்டம் என்று 'பீசிபிளிடி ரிப்போர்ட்டும்' கொடுத்து இருக்கிற காரணத்தால், அதை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்காரியா ரிப்போர்ட் தண்ணீர் தர முடியாது. யார் மீதாவது நடவடிக்கை எடுக்க உதவலாம். ஆகவே, நான் கேட்டுக்கொள்கிறேன், அந்த வீராணம் திட்டத்தை நீங்கள் பயன் உள்ள திட்டமாக மாற்றுங்கள். இன்றைக்கு நீங்கள் ஆட்சியில் இருக்லாம். நாளைக்கு வேறு கட்சி வரலாம். ஏதோ நான் சொல்வதால் இதை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று நீங்கள் நினைக்கக் கூடாது. நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் கூடப் பேசியிருக்கிறார். பதவி என்பதும் பணம் என்பதும் நிரந்தரம்

(நண்பகல் 12-00)

அல்ல; மக்களுக்குச் செய்யும் தொண்டுதான் என்றைக்கும் நிரந்தரமானது என்று சொன்ன கருத்தை நான் வரவேற்கிறேன். ஏனென்றால் இதைச் சொல்லியவர் வேறு யாரும் அல்ல; நம்முடைய முதலமைச்சரே சொல்லியிருக்கிறார். முதலமைச்சரவர்கள் சொன்ன இந்தக் கருத்தை நான் வரவேற்கிற அதே நேரத்தில் முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் இந்த வீராணம் திட்டத்தை ,சென்னை மாநகர மக்களின் நன்மையைக் கருதி. அதற்காக ஏற்கெனவே ஏற்பட்டுள்ள செலவு வீணாகிவிடாமல் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் விரைவில் வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிருஷ்ணா நதி நீர் வரட்டும். ஆனால் அதற்காக வீராணம் திட்டத்தை நிறுத்த வேண்டாம். கிருஷ்ணா நதிநீர் வரும்போது வரட்டும். அது இப்போதைக்கு வரப்போவதில்லை. இன்றைக்குத் தொடங்கினாலும் 20 ஆண்டு காலம் ஆகும் என்ற அடிப்படையிலே வீராணம் திட்டத்தை இந்த அரசு நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:</u> தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்தலைவரவர்கள் குடிநீர்ப் பிரச்சனையைப்பற்றிக் குறிப்பிடுவதால் குறுக்கிடுகிறேன். கிருஷ்ணா நதி நீர்த் திட்டம், வீராணம் திட்டம் ஆகிய திட்டங்களை விரைவுபடுத்த முயற்சி செய்து கொண்டிருக்கிற அதே நேரத்தில் இங்கேயே, சென்னை மாநகர எல்லைக்குள்ளேயே இருக்கக்கூடிய தண்ணீரைப் பயன்படுத்திட மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களும் நானும் திட்டம் வகுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த அரசு செப்டம்பர் 30 ந் தேதிக்குள்—அதாவது இந்த மாதம் 30ந் தேதி தென்சென்னைக்கு அதிகமாகவும், அடுத்த 6 மாதத்திற்குள் வடசென்னைக்கு அதிகமாகவும் குடிநீர் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக குடிநீரைப் பொறுத்தவரையில் தேவையான அளவுக்குத் தேவையான நேரத்தில் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்தலைவரவர்களுக்குத்தெரிவித்துக் கொள்கிறேன்,

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> வெட்டுத் தீர்மானங்கள் நிறைய இருக்கின்றன. தாங்கள் அதிகமான நேரம் எடுத்துக் கொண்டீர்கள். அதனால் சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

 தலைவரவர்களே, தொழிலாளர் நல

<u>திரு. க. அன்பழகன்:</u> தலைவரவர்களே, தொழிலாளர் நல அமைச்சர் குடிநீர் வாரியத்திற்கும் பொறுப்பேற்றிருக்கிற காரணத்தால் விளக்கம் சொன்னார்கள்; நான் அதை வரவேற்கிறேன், நம்முடைய முயற்சியிலே இங்கே இருக்கிற தண்ணீரை இப்போது பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால் வறட்சி ஏற்படுமானால் இது போதாது. ஆகவே, அந்த நிலைமையைச் சமாளிக்க முன்கூட்டியே நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்; அதற்கு வீராணம் திட்டம் தேவை என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் கடந்த ஆயிரம் ஆண்டுக் காலமாக போக்குவரத்தில் ஒரு செம்மை அடைந்த மாநிலம் நம்முடைய மாநிலம் என்பதைத் தமிழ்நாட்டின் கல்வெட்டுக்கள், சாலைகள் பற்றிய குறிப்புகளிலிருந்து நம்மால் காணமுடிகிறது. தொடர்ந்து, அண்மைக் காலம் வரையில் சாலை வளர்ச்சி பெருமளவில் நடந்திருந்தாலும் வரவர தமிழ்நாட்டில் போக்குவரத்து—பண்டம் போக்குவரத்து மக்கள் போக்குவரத்து காரணமாக—முழு தேவைக்கும் போதுமானதாக இல்லை. அது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் போக்குவரத்தில் ஏற்படுகின்ற காலதாமதத்தின் காரணமாக பண்டங்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் குறிப்பிட்ட நேரத்தில் போய்ச் சேராத நிலைமை ஏற்படுகிறது. அதனால் தொழில்வளர்ச்சியில் மந்தம் ஏற்படுகிறது.

நேற்றைய தினம் மதுரையில் நடந்த மாநாட்டில் அவர்கள். தூத்துக்குடி துறைமுகத்தை முழு அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பையும் சேலம் இரும்பாலையின் முழுத் திறனையும் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பையும் எய்துவதற்கு சேலம், ஈரோடு, திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி வரையில் அகலப்பாதை [ப்ராட்கேஜ்] அமைக்க வேண்டும் என்று இந்த அமைச்சரவை மூலமாக நான் வலியுறுத்த விரும்புகிறேன். அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள கூறியிருப்பதைப் போல வேண்டும்.

கடந்த 30, 40 ஆண்டு காலமாக இரயில்வே போக்குவரத்தில் தமிழ்நாடு போதுமான வளர்ச்சியடையவில்லை. இரயில்வே மேம்பாட்டுப் பணிகளுக்குச் செய்யப்படும் ஒதுக்கீடு குறைந்துகொண்டே வருகிறது. இந்த அரசு மத்திய அரசிடமும், சம்பந்தப்பட்ட அமைச்சரிடமும் இதை எடுத்துக் காட்டி, பெரும் தொகை ஒதுக்கீடு செய்வதற்கு வற்புறுத்த வேண்டும். ஏனென்றால் பஸ் போக்குவரத்து, லாரி போக்குவரத்து மட்டும் பெருகிவரும் தேவையைப் பூர்த்திசெய்துவிட முடியாது. மிகப் பெரிய இயந்திரங்களைக் கொண்டு செல்ல வேண்டுமானால் இரயில் மூலமாகத்தான் முடியும். திருச்சி ஹெவி பாயிலர் தொழிற்சாலைக்குத் தேவையான பெரிய பெரிய இயந்திரங்களை லாரி மூலமாக எடுத்துச்செல்வது மிகவும் கடினம். திருச்சி-ஈரோடு அகலப்பாதை இருந்தாலும் சென்னையிலிருந்து நேரடியாக இல்லாத

குறைபாடு இருந்து கொண்டிருக்கிறது. ஆகையால் தூத்துக்குடியிலிருந்து சென்னை வரையில், அதைப்போல தூத்துக்குடியிலிருந்து சேலம் வரையில் அகலப்பாதை ஏற்படுத்த வேண்டும் என்பதை இந்த அரசு வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகரின் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கணக்கில் கொண்டு பெருகிவரும் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் திட்டம் ஒன்றைத் தயாரிக்க 1968 ஆம் ஆண்டு 'மட்சு' மெட்ராஸ் ஏரியா ட்ரான்ஸ்போர்ட் ஸ்டடி யூனிட்—என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. அவர்கள் 10 ஆண்டு, 15 ஆண்டு, 20 ஆண்டுகளில் போக்குவரத்து வளர்ச்சி எப்படி இருக்கும் என்று ஆராய்ந்து அதற்குத் தேவையான என்னென்ன புதிய திட்டங்களை உருவாக்கலாம் என்று ஆராய்ந்து, 'ரேபிட் ட்ரான்சிட் சிஸ்டத்தை' கொண்டுவரலாம் என முடிவு செய்திருக்கிறார்கள்.

அந்த அடிப்படையில் 1973-வது ஆண்டு மத்திய அரசிடம் வற்புறுத்திய பிறகு 1971-வது ஆண்டு முதற்கொண்டு மத்திய அரசின் இரயில்வே இலாக்கா மூலமாக சென்னையில் ஒரு ரேப்பிட் ட்ரான்சிட் சிஸ்டம் ஏற்படுத்துவதற்கு ஆராய்ச்சிக்குழு சென்னையிலே பணியாற்றியது. அந்தக் குழு பணியாற்றி பல ஆலோசனைகளை வழங்கிற்று. அதனுடைய அடிப்படையான கருத்து என்னவெனில் சென்னை நகரத்தினுடைய போக்கு வரத்து இன்னும் 15 ஆண்டுகளில் இப்போது இருப்பதைப்போல் 4 மடங்காக நிச்சயமாக உயரும். மக்கள் தொகைப் போக்கு வரத்து மட்டுமல்ல, வண்டி வாகன போக்குவரத்தும் அதிகமாகும். அப்படி ஆகிறபோது வடக்கு தெற்கு போக்குவரத்தாக இருக்கின்ற கிழக்கு கடற்கரைச் சாலையில் ஒருமுகமாக அந்த போக்குவரத்தை தாங்கமுடியாததாக இருக்கும். இப்போது இருக்கும் கடற்கரைச் சாலையை நான்கு மடங்கு அகலமாக்கினால் கூட அந்தப் போக்குவரத்தை ஈடுகட்ட முடியாது. திருவல்லிக்கேணியிலிருந்து எண்ணூர் வரையில் அந்தப் போக்குவரத்து அதிகமாகக்கூடிய நிலைமை இருப்பதன் காரணமாக சென்னை பெருநகரம் என்ற அடிப்படையில் அதற்கான வரைவு திட்டத்தை அமைக்கின்றபோது வளைவு சாலைகள் சுற்றுப்புற சாலைகள் அமைத்தாலும் கூட மிக அதிகமான போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்ற அடிப்படையில் அன்டர் கிரவுன்ட் ஏற்படுத்தலாம் என்ற ஆலோசனை வழங்கப்பட்டது. அன்டர் கிரவுன்ட் எல்லாப் பகுதிகளுக்கும் இல்லை, சில பகுதிகளுக்கு மட்டும்தான் என்று சொன்னார்கள். பக்கிங்ஹாம் கால்வாயில் ஒருமுகமாகவும் அதற்கடுத்து கூவம் கால்வாய்ப் பகுதி வழியாகவும், திருவல்லிக்கேணி வழியாகவும் போக்குவரத்து ஏற்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அப்படி எல்லாம் சொல்லி மூன்று நான்கு முறை ஆலோசிக்கப்பட்டு அதற்குப் பிறகு திட்டக்குழுவிடத்திலே கொடுக்கப்பட்டது. அந்தத் திட்டக்குழுவிலே காரியக் கமிட்டி போல் ஏற்படுத்தி அதாவது ஸ்டடி க்ரூப் போல ஏற்படுத்தி

அவர்கள் பரிசீலனை செய்து கஸ்தூரிபாய் நகரிலே இருந்து திருவல்லிக்கேணி வரையில் ஏறத்தாழ 150 கோடி ரூபாயில்—அன்டர்கிரவுன்ட் அல்ல—மேலே நிலமட்ட இரயில்வேயும், மேல் நிலை இரயில்வேயும் அமைக்கக்கூடிய முறையில் அதாவது ஆன் தி கிரவுண்ட், அன்ட் அப்ஆன் தி கிரவுன்ட் என்ற வகையில் இரயில்வே போக்குவரத்து ஏற்படுத்த முடியும் என்று சொல்லி அதிலே முதல் கட்டமாக பாரதி சாலை என்ற பைகிராப்ட்ஸ் சாலையையும் பீச் இரயில்வே ஸ்டேஷனையும் இணைக்கக்கூடிய ஒரு ப்ராட்கேஜ் இரயில்பாதை 25 கோடி ரூபாயிலே அமைக்கக்கூடிய வகையில் ஒரு திட்டம் தந்தார்கள். அந்தத் திட்டத்தைத் திட்டக் குழுவிலே நிராகரித்துவிட்டார்கள் என்பது நிதியமைச்சர் அவர்களுக்குக்கூடத் தெரியும். திட்டக்குழு எதையும் நிராகரிக்கிறார்கள்; எதையும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

இப்படிப்பட்ட திட்டம் 10 ஆண்டுக் காலம் தொடர்ந்து நடந்தால் ரூபாய், 150 கோடி செலவழித்து 1991-லாவது முடிய வேண்டிய ஒரு முயற்சியாகும் இது. இப்படி பத்தாண்டுக் காலம் தொடர்ந்து நடைபெற வேண்டிய திட்டம் சென்னைப் போக்கு வரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கு மிகவும் முக்கியமாகும். இந்த நெரிசலைத் தவிர்ப்பதற்கு வேறு எந்த உபாயமும் இல்லை. வேறு ஆல்டர்நேட்டிவ் திட்டம் எதுவும் கிடையாது என்றெல்லாம் எண்ணப்பட்டு அதற்குப் பின்னாலே வழங்கப்பட்டது. இப்படிப்பட்ட திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லி திட்டக்குழு கைவிட்டுவிட்டது என்று சொன்னால் அது மிகவும் வருந்தத்தக்கது, என்று அமைச்சரவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இரயில்வே இலாக்கா செய்து வருகிற புதிய திட்டங்கள் வேறு எதுவுமே இல்லை என்ற அடிப்படையில் இருக்கின்ற இந்த ஒரே திட்டத்தைக்கூட கைவிட்டு விட்டது மிகவும் வருந்தத்தக்கது. வருங்காலத்தில் நெரிசல் ஏற்படும் என்பது எல்லாத் துறைகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:</u> தலைவரவர்களே, அதற்கு வேண்டிய நிலத்தையும் தமிழக அரசு கொடுக்க ஒப்புதல் தந்து விட்டது. இந்தத் திட்டத்தைக் கை விட்டுவிடவில்லை. தமிழக அரசு சிறப்பு பிரதிநிதியின் மூலமாக வேண்டிய ரிக்கார்டுகள் கொடுத்து வலியுறுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. க. அன்பழகன்:</u> இந்தத் திட்டத்திற்குரிய நிலத்தின் மதிப்பு 65 இலட்ச ரூபாய் என்று நான் சொல்வதாக இருந்தேன்.

65 இலட்ச ரூபாய் மதிப்புள்ள நிலத்தைக் கொடுத்த நமக்கு மதிப்பில்லாத காரணத்தால்—என்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்—இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து கேட்டுக் பெறக்கூடிய வலிமை நமக்கு இல்லாத காரணத்தால் வலுவான முறையில் குரலை எழுப்புவதற்கு இன்றைய ஆட்சியாளர்களுக்குத் துணிவு இல்லாத காரணத்தால் பிரதமரை அணுக இயலாத நிலையில் இருக்கின்றனர். அப்படி அவரை அணுகினாலும் குழைந்து போகிற நிலைமை ஏற்படுகிற காரணத்தால்—மாண்புமிகு நிதியமைச்சர் மனோகரன் சிரித்துக் கொண்டே காரியம் சாதித்து விடலாம் என்கிறார். அவர் வேறு எங்காவது காரியம் சாதித்திருக்கலாம்.

(பிற்பகல் 12-10)

ஆனால் இதில் சாதிப்பாரா என்று தெரியவில்லை. அப்படிச் சாதிப்பாரானால் திரு. கி. மனோகரன் அவர்களை நான் பாராட்டுவேனே தவிர எப்படியோ காரியம் ஆக வேண்டுமே தவிர, சாதிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நான் வாழ்த்துவேனே தவிர குறை காண மாட்டேன். மத்திய அரசு இத் திட்டத்தைக் கைவிட்டுவிடுகிற அளவிற்குத் திட்டக்குழு ஆலோசனையை ஏற்றுக்கொண்டால்—இந்த மெட்ரோபலிட்டன் டிரான்ஸ்போர்ட் ப்ராஜக்ட் ரெயில்வே துறையால் அமைக்கப்பட்டது—குழு தன் பணியை 31-3-79 அன்று முடித்துக் கொண்டு சென்னையை காலி செய்து விடவேண்டும் என்ற முடிவிற்கு வந்திருக்கிறது. ஏற்கெனவே 1975-லும் இப்படி ஒரு நெருக்கடி ஏற்பட்டது. அப்போது முயற்சி எடுத்து அதைத் தொடர வைத்தோம். அமைப்பு முறையை மாற்றித் தந்தோம். அந்த முழு விவரமும் அரசாங்கத்தினிடம் தந்திருப்பதால் முழு ஏமாற்றத்திற்கு அரசாங்கம் வழி விட்டு விடாது என்று நான் நம்புகிறேன்.

அதே நேரத்தில் நான் இன்னொன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அரசாங்கத்திலுள்ள ஊழியர்களுக்குப் போதுமான அளவிற்கு நம்பிக்கை தர நாம் கடமைப்பட்டிருக்கிறோம். என்.ஜீ.ஓ. க்களுக்கு புதிய ஊதிய விகிதத்தை அமல்படுத்துவதற்கு ஒரு குழுவை நியமித்தோம். அந்தக் குழுவின் அறிக்கை வந்திருக்கிறது. அதில் என்ன இருக்கிறது என்பதைச் சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிந்துசொள்வதில் தவறு இல்லை. அப்படித் தெரிந்திருப்பது நல்லது கூட. ஆலோசனைகள் கூட வழங்கலாம்; ஒரு வேளை அரசு முடிவு எடுக்காமல் எப்படித் தெரிவிப்பது என்ற எண்ணத்தில் முடிவு எடுக்காமல் இருக்கலாம். தாமதம் நல்லதல்ல. ஊதிய உயர்வை எதிர்பார்த்து அவர்கள் சோர்ந்து போகக்கூடிய அளவிற்கு நாம் தாமதப்படுத்துவது எந்த வகையிலும் பயன் தராது—எப்படியும் அரசாங்கம் பணம் தரப்போகிறார்கள். எவ்வளவு என்பதைத்தான் தீர்மானிக்க வேண்டும். தீர்மானிக்க

அதை விரைவாகத் தருவதாக அறிவிப்பதில் ஏற்படக்கூடிய மன
நிறைவு அரசாங்கத்திற்கு உறுதுணையாக இருக்கும். அதே
நேரத்தில் அரசாங்கத் துறைகளில் ஏற்படக்கூடிய குறைகள்
இருக்கின்றன.

நான் ஒன்றை நிதி அமைச்சர் அவர்களின் கவனத்
திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பவானிசாகரில் ஒரு பயிற்சி
முகாம். அந்தப் பயிற்சி முகாமின் தலைவராக இருக்கிற அல்லது
நிர்வாக அதிகாரியாக இருப்பவர் ஒருவர் அங்கு பயிற்சிக்கு
வந்திருந்த இளநிலை எழுத்தர்களிடம் நடந்து கொண்ட முறை
பற்றி ஒரு மனு முதல் அமைச்சர் அவர்களிடம் தந்திருக்கிறார்கள்.
அதுபற்றி மேல் உள்ள அதிகாரிள் விசாரித்திருக்கிறார்கள்.
விசாரித்து அவரை மாறுதல் செய்திருக்கிறார்கள். மாறுதல்
செய்தார்களே தவிர அவர் நடந்துகொண்ட முறைபற்றிச்
சொல்லப்படுகிற குற்றச்சாட்டுக்களின் அளவைப் பார்த்தால்,
அவை உண்மையாக இருந்தால் அவர் அரசுத் துறையில் இருப்
பதற்கே தகுதி உள்ளவர் அல்ல. அது உண்மை அல்ல என்றால்
அது வேறு. ஒரு அமைச்சர் அதைப் பற்றி அறிந்திருப்பார்
என்று நம்புகிறேன். இல்லாவிடில் அந்தப் புகாரை தர இருக்
கிறேன். இளநிலை எழுத்தர்கள் பயிற்சிக்காக ஏறத்தாழ 200
பேர்கள் சென்றிருக்கிறார்கள். இரண்டு மூன்று மாத கால பயிற்சி.
அதில் பெண்களும் இருந்திருக்கிறார்கள். அந்தப் பெண்கள்
தங்களுடைய மானத்திற்குக் குறை ஏற்பட்டு விட்டதாக எண்ணு
கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. விளக்கங்கள் உள்ளன. அவற்றை
நான் பேசுவது தேவையில்லை. அப்படி ஏற்பட்டதற்குப் பின்னால்
அரசாங்க உத்தரவு ஒன்று போகிறது. என்ன உத்தரவு, ஐந்து
நாட்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள், அதற்காக அவர்களது
ஊதியம்—அந்த வேலைநிறுத்தத்திற்கான நாட்களின் ஊதியம்—பிடிக்
கப்பட வேண்டும் என்று அவர்கள் பணியாற்றுகிற துறைகளுக்கு
உத்தரவு சென்றிருக்கிறது.

அவ்வளவு சர்வாதிகாரமாக மேல் அதிகாரிகள் நடந்து
கொள்வது நல்லதல்ல. தவறு செய்தவர்கள்யார் என்பதை
எண்ணிப்பார்த்து அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்குப்
பதிலாக குறைபடுகிற 200 பேர்கள் மீது விசாரணை என்றால்,—
எந்த விசாரணையும் இல்லாமல் உண்மை ஓரளவு கைவிடப்பட்டு—
ப்ரொபேஷன் பீரியேட் இரண்டு ஆண்டுகள் முடிந்து
நிரந்தரமாக்கப்பட வேண்டிவர்களுக்கு நிரந்தரமாக்கப்படும்
உத்தரவைத் தராதீர்கள் என்று சொல்கிற நிலை இருந்தால் எதை
நம்பி இந்த நாட்டில் குறை உள்ளவர்கள் மீது குறைகளை
அரசிடம் எடுத்துச் சொல்வார்கள்? அரசிடம் மக்கள் சொல்கிற
கருத்துக்கள், ஆங்காங்கு அதிகாரிகளால் கவனிக்கப்படாத
கருத்துக்கள் பல உள்ளன.

ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
எவ்வளவோ நகரசபைகளில் ஆலோசனைக் குழுக்கள் போடுகிற
போது ஆளும் கட்சியைச் சார்ந்த 10, 12 பேர்கள்

எதுவும் தெரியாதவர்கள் கூடப் போடப்பட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நகரமன்றங்களில் தலைவர்களாக இருந்தவர்கள். உறுப்பினர்களாக இருந்தவர்கள், எம். எல். ஏ. க்களாக இருப் தவர்கள், வணிக சங்கத் தலைவர்களாக இருந்தவர்கள் இவர்களைப் போட வேண்டிய குழுக்களில் அவர்களில் ஓரிருவரைப் போட்டு விட்டு ஆளும் கட்சியைச் சார்ந்த ஏழெட்டுப் பேர்களைப் போட்டு விடுகிறார்கள். போடக் கூடாது என்பதல்ல. என்ன நியாயத்தைச் சொல்லமுடியும். அதனால் பல குறைபாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆக பவானிசாகரில் நடைபெற்ற வேலை நிறுத்தம் முதல் அமைச்சர் அவர்களின் காதுக்குப் போய் விசாரிக்கச் செய்து பின்னால் மறுபடியும் அவர்களுக்குத் தொல்லை தருகிற முறையில் அரசு உத்தரவுகள் சென்றிருப்பதை, அந்த உத்தரவுகளை வாபஸ்பெற வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். மதுரையில் ஆளும் கட்சி வெற்றி பெற்றது. மாநகராட்சித் தேர்தலில் நீங்கள் வெற்றி பெற்றதைப் பாராட்டுகிற அதே நேரத்தில் நான் கூற விரும்புவது வெற்றி பெறலாம் என்ற எண்ணம் வந்ததால் தான் மதுரை தேர்தலே வந்தது. இல்லையென்றால் சென்னையில் அல்லவா தேர்தலை ஆரம்பித்திருப்பார்கள் அவர்களுக்கே நம்பிக்கை யில்லை, வெற்றி பெறுவோம் என்று. அவர்கள் வெற்றி பெற மாட்டார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கும் இருக்கிறது, மட்டு மல்ல, நாங்கள் நம்பிக்கையை பெற்றிருக்கிறோம். என்னவென்றால் ஆளும் கட்சி செல்வாக்கை இழந்து வருகிறது என்பதற்கு எங்களுக்கு ஆதாரம் இருக்கிறது. மதுரையில் ஒரு நேரத்தில் தேர்தல், சென்னை மாநகரதற்கு இன்னொரு நேரத்தில் தேர்தல், ஊராட்சி ஒன்றியங் களுக்கு இன்னொரு நேரத்தில் தேர்தல் என்று இல்லாமல் ஒரே நேரத்தில் அவர்களால் தேர்தலை நடத்த முடியவில்லை. செல்வாக்குப் பெற்றிருக்கின்ற அரசாங்கமாக இருந்தால், ஒரே நேரத்தில் இந்த தேர்தல்களை எல்லாம் நடத்த முன் வரலாம், செல்வாக்கு இழந் திருக்கின்ற காரணத்தால் தான், தஞ்சாவூர் இடைத்தேர்தல் கூட வரக் கூடாது என்று எண்ணிக் கொண்டிருக்கிறது....

திரு. பி. முசிரிபுத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் ஆண்ட காலத்தில் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட தேர்தல்களை எல்லாம் நடத்தியிருக் கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு இருக்கிற குறை. சீக்கிரமாக விவாதத்தை முடிக்கவேண்டும் என்பதுதான்.

திரு. க. அன்பழகன் : அது தான் தவறு என்றால், நாங்கள் தோற்றுப்போய் இங்கே வந்திருக்கிறோம். அதே போல் அவர்களும் அதே தவறைச் செய்து தோற்று எப்போது இங்கே வரப் போகிறார்கள் ? அவர்களும் இந்த தவறை செய்யாமல் இருந்தால்

இங்கே வராமல் இருக்க முடியும், இல்லையென்றால் அவர்களும் இப்படி வரப்போகிறவர்கள் தான் என்பதைத்தான காட்டுவதாக அமையும். இல்லையென்றால் இந்த ஐந்து ஆண்டுக் காலமல்ல, அதற்கு மேலும் அதிகமாக அவர்கள் ஆட்சியில் இருந்தாலும நாங்கள் வரவேற்போம். அந்த அளவுக்கு திரு. உமாநாத் அவர் களுடைய கட்சி ஆட்சிக்கு வந்தாலும், காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அதை வரவேற்க நான் தயாராக இருக் கிறேன். என்னதான் இருந்தாலும், இவர்களைப்பற்றி நாங்கள் நன்கு தெரிந்திருக்கின்றோம். அவர்களைப்பற்றித் தெரிந்தவர்கள் நாங்கள், பாம்பின் கால் பாம்பு அறியும் என்று சொல்வார்கள், அந்த நிலையில் இவர்களைப்பற்றி நாங்கள் நன்கு அறிவோம்.... அதே போன்று எங்களைப்பற்றியும்அவர்கள் அறிந்திருக்கிறார்கள்..

திரு. ரா. உமாநாத் : இரண்டு பேர்களைப்பற்றியும் எங்களுக்குத் தெரியும்....

திரு. க. அன்பழகன் : அதனால்தான் இவர்கள் ஆளும் கட்சியாகவில்லை. நான் கூற விரும்பியது....

திரு. துரை முத்துசாமி : எங்களுக்கும் அவர்கள் கட்சிக்கும் சம்பந்தம் இல்லை. அப்படி எதுவுமே இல்லாதபோது காங்கிரஸ் கட்சியைப்பற்றி ஏன் பேசவேண்டும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களைப்பற்றி ஒன்றும் பேசவில்லை, தயவு செய்து உட்காருங்கள்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நான் கூற விரும்புவது, நாட்டில் அவ்வப்போது சில கட்சிகள் ஆட்சிக்கு வரும். சில கட்சிகள் ஆட்சியிலிருந்து போகும். சில கட்சிகள் மறைந்தே போகும். ஆனால் நாட்டில் ஜனநாயக நம்பிக்கை என்பது எப்போதும் அழுத்தமாக இருக்க வேண்டும் என்பது தான். ஜனநாயகத்தைக் கடைப் பிடிக்கின்ற அரசு, ஜனநாயக இயந்திரத்தை ஒழுங்காக சுழற்றுவதற்கு முன்வர வேண்டும். இன்னொரு கட்சி ஆளும் கட்சியாக வருவதாக இருந்தாலும் கூட, அல்லது நாங்களே மீண்டும் ஒரு முறை ஆளும் கட்சியாக வருவதாக இருந்தாலும் இதே கருத்தை வலியுறுத்தியிருப்பேன். அதே நேரத்தில் ஜனநாயக நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கின்ற வகையில், ஜனநாயக சுழற்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற வகையில், பஞ்சாயத்துத் தேர்தல்கள், பஞ்சாயத்து ஒன்றியத் தேர்தல்கள், நகரசபைத் தேர்தல்கள், மாநகராட்சித் தேர்தல்கள் இவைகள் நடைபெற வேண்டும். இல்லையென்று சொன்னால் தேர்தல் நடைபெறாத ஒரு நிலைமை இருந்துகொண்டிருந்தால் பொது மக்களுடைய குறைகள் அரசாங்கத்தினிடத்தில்தான் வந்து மோதும், அமைச்சர்களிடம் தான் வந்து மோதும். இதன் காரணமாக மத்திய அரசாங்கத்தின் சில தவறுகள் மாநில

அரசாங்கத்தைச் சாருவது போல், பல பகுதியிலுள்ள குறைகளும் தவறுகளும் அரசாங்கத்தை வந்து சாரும். எனவே ஜனநாயக முறைகளைக் கடைப்பிடிக்கின்ற வகையில் ஒரே நேரத்தில் பஞ்சாயத்துத் தேர்தல்கள், ஒன்றியத் தேர்தல்கள் நகரசபைத் தேர்தல்கள், இவை அனைத்தும் ஒரே நேரத்தில் நடைபெறு வதற்கு, அதற்கான ஜனநாயக உரிமையைக்காக்கின்ற வகையில் இந்த அரசு செயல்பட வேண்டும். இந்திராகாந்தி அம்மையார் கூட ஒரே நோத்தில் தேர்தலை நடத்த முன்வந்தார்கள். அப்படியில் லாமல் எப்போது பஞ்சாயத்து ஒன்றியத் தேர்தலை நடத்தலாம் ? எப்போது நகரசபைத் தேர்தல்களை நடத்தலாம் ? தனியாக கோயம்புத்தூர், சேலம், நீலகிரி இந்த மாவட்டங்களைச் சேர்த்து நடத்தலாமா, தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களைச் சேர்த்து நடத்தலாமா, கன்னியாகுமரி திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்த்து ஒன்றாக நடத்தலாமா என்றெல்லாம் ஆலோசனை இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இது உண்மையாக இருக்குமானால், இந்த அரசுக்கு ஜனநாயகத்தின்மீது நம்பிக்கை யில்லை என்பது தான் பொருள். ஜனநாயக முறைப்படி இந்த அரசுக்கு ஆட்சியை நடத்தத் தெரியவில்லை என்பது தான் பொருள். இன்னும் சொல்லப்போனால் பொது மக்களுடைய நம்பிக்கையை இந்த அரசு இழந்து விட்டது என்பது தான் பொருள் என்பதைக் கூறி, இந்த அளவில், நிதிநிலை அறிக்கையின்மீது இந்தக் கருத் துக்களைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978-79-ம் ஆண்டின் முதலாம் துணை மதிப்பீடுகளை இந்த அவைமுன் வைத்திருப்பதையொட்டி இங்கேபல கட்சிகளின் சார்பில் பல உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை உரிமையோடு, கடமையோடு எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-20.)

பேசிய ஒவ்வொரு மாண்புமிகு உறுப்பினரும், எந்த அளவிற்குத் தங்களது பேச்சுக்களில் கடுமைகளைக் குறைக்க வேண்டுமோ, எந்த அளவிற்குக் கருத்துக்களை வழங்க வேண்டுமோ, அந்த அளவிற்கு வழங்கி, ஆட்சிக்கு ஒத்துழைப்பாக இருந்தமைக்கு, நான் இந்த விவாதத்தில் பங்குபெற்ற அத்தனை பேர்களுக்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு நல்ல மகிழ்ச்சியான செய்தியையும் நான் இங்கே குறிப் பிட்டாக வேண்டும். இதற்கு முன்பு நடைபெற்ற தொடர் கூட்டங்களில் நடந்த நிகழ்ச்சிகள் போலன்றி, இந்தத் தொடர் கூட்டத்தில் பரிபூரணமாக இல்லாவிட்டாலும், பெரு மளவிற்கு அமைதி நிலவியதும், அனல் அதிகமாக இல்லாமல், பெருமளவிற்குத் தென்றல் வீசாவிட்டாலும், வெப்பம் பெருமள விற்குக் குறைக்கப்படுகின்ற அளவிற்கு எனது அருமை துரை முருகன், ரகுமான்கான் போன்ற நண்பர்களும், இன்னும் சொல்லப்

போனால், திரு. சுப்பு போன்ற நண்பர்களும், தங்களது கருத் துக்களை எடுத்துவைத்து, உதவியிருக்கிறார்கள் என்பதில் நான் பெருமைப்படுகிறேன். சில நேரங்களில் கோபதாபங்கள் ஏற்படக் கூடும். அவைகள் எல்லாம் கொள்கைகளை வலியுறுத்துவதற்காக ஏற்படுகின்ற கோபதாபங்களே தவிர, இந்த அரசு இவை இவைகளைச் செய்யவேண்டுமென்று சுட்டிக்காட்டுவதற்காக எடுத்துச் சொல்லப் படுகின்ற வாதங்களே தவிர, யோசனைகளே தவிர, வேண்டு மென்றே இந்த ஆட்சியைக் களங்கப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு யாரும் பேசவில்லை, பேசியிருக்க மாட்டார்கள். பேச வேண்டுமென்று நினைத்தவர்கள்கூட, பேச ஆரம்பித்த சில நிமிடங்களில் கருத்துக்களை மாற்றியிருக்கக் கூடுமென்று நான் நம்புகிறேன்.

(திரு. பி. எச். பாண்டியன் தலைமை)

இன்றைக்கு இங்கே பேசி, கருத்துக்களைத் தெரிவித்தவர்களில் நமது எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நல்ல பல கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவரைப் பொறுத்தவரை வயது கொஞ்சம் அதிகமானாலும், நமது கல்வி அமைச்சரைவிட அதிக மான சுறுசுறுப்பானவர். அவரது சுறுசுறுப்புக்கு என்ன காரணம் என்பதை நான் ஆராய விரும்பவில்லை. அவர் ஒவ்வொரு முறை பேசுகின்றபோதும், எனக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிறது. எடுத்துக் கொண்ட பொருளில் நின்று, தொடுக்கின்ற வாதங்கள் அத் தனையும், விடுக்கின்ற வேண்டுகோள் அத்தனையும், எடுத்துக் கொள்ளப்பட்ட ஒன்றாக அமைந்திருப்பதைக் கண்டு நான் மெத்தவும் மகிழ்ச்சி அடைகிறேன். சில நேரங்களில் அவரது வார்த்தைகளில் கிண்டல் இருக்கும். அது அவரது இயற்கை. அதே போல் எனது பேச்சில் கிண்டல் வந்தால், அவர் அதை மகிழ்ச்சி யோடு, மன நிறைவோடு ஏற்றுக்கொள்வதும் அவரது இயற்கை. ஆனால், அவர் சில கருத்துக்களை எடுத்து வைத்துப் பேசும்போது, ஒன்றைத் தெரிவித்தார். அவருக்கு மிகப் பிடித்தமானது, சித்த வைத்தியம். இந்த வைத்தியத்தை வளர்ப்பதற்காக, சித்தத்தைச் செழுமைப்படுத்துவதற்காக ஒரு குழு அமைக்க வேண்டுமென்றும், அந்தக் குழுவை அமைப்பதன் மூலம், அதற் குரிய காரியங்கள் உடனடியாக நடைபெற வேண்டுமென்றும் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். நான் சென்ற தடவை பேசும் போது குழு அமைக்கப்பட இருக்கிறது என்று சொன்னேன். குழு அமைக்கப்பட்டது என்பதை அப்போது நல்வாழ்வுத் துறை பொறுப்பினை ஏற்றிருந்த முதல் அமைச்சர் அவர்கள் அக்குழுவில் உள்ளடங்கிய பெயர்களை இந்த அவையில் சொன்னார்கள். ஆனால், 'இப்போது நமது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அதிர்ச்சி தரத்தக்க வகையில் ஒரு குறிப்பை வெளியிட்டார்கள். பெயர்களை அறிவித்தார்களே தவிர, 15 நாட்களுக்கு முன்னால்தான் அவர்களுக்கு நீங்கள் எல்லாம் உறுப்பினர்கள் என்று ஒரு கடிதம் போயிருக்கிறது. இன்னும் ஒரு கூட்டம்கூட நடைபெறவில்லை என்ற கருத்தைத் தெரிவித்தார்கள்.

பத்து நாளைக்கு முன்னால் ஒரு கூட்டம் நடந்தது என்பதை நான் சொன்னதற்குப் பிறகு இப்போது அவர்கள் சொல்கிறார்கள். நான் தெரிவித்துக் கொள்வது, கூட்டம் ஒன்று நடந்திருக்கிறது: அடுத்த கூட்டம் நடைபெற இருக்கிறது, தொடர்ந்து கூட்டம் நடைபெறும் என்பதை இந்த மருத்துவத்தை வளர்க்க வேண்டுமென்று அல்லது செழிக்க வைக்க வேண்டுமென்று எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் ஆசைப்படுகிறார்களே அதைச் செய்வதற்கு இந்த அரசு எப்போதும் தயங்காது என்பதை, நான் இந்த நேரத்தில் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டாவது, பெரிய குற்றச்சாட்டு என்ற முறையில் ஒன்றைச் சொன்னார்கள். நுகர்பொருள் கழகத்திற்கு 70 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது என்றும் அது குறித்து தனது கவலையைத் தெரிவித்து இப்படியே இந்த நஷ்டங்கள் வந்து கொண்டிருந்தால் அது ஒரு கோடி, 2 கோடி, 3 கோடி என்ற அளவுக்குக் காலம் செல்லச் செல்லக் கூடாதா என்ற கவலையைத் தெரிவித்தார்கள். நான் நமது எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கடலை எண்ணெய், மிக முக்கியமாக அந்த எண்ணெயை வாங்கிய நேரம், ஆளுநர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த காலம், அப்போது அதற்கு அதிகப்படியான கிராக்கி இருந்த நேரம், ஆகையால் அதிகமாக விலை கொடுத்து வாங்க வேண்டிய ஒரு துர்பாக்கியம் ஏற்பட்ட சந்தர்ப்பம், அந்தக் காரணத்தால் வாங்கிய பிறகு, ஓரளவுக்கு விலைவாசி வீழ்ச்சி அடைய ஆரம்பித்த பிறகு குறைந்த விலையில் விற்க வேண்டிய நெருக்கடிக்கு அரசு ஆளாக்கப் பட்ட பிறகு அவர்களும் குறைந்த விலைக்கு விற்றார்கள், இந்த ஆட்சியும் குறைந்த விலைக்கு விற்றுத் தீரவேண்டிய நெருக்கடி ஏற்பட்ட காரணத்தால் தான் அந்த நஷ்டம் ஏற்பட்டதே தவிர இது ஒரு தொடர் கதையாக இருக்காது என்பதை நான் பேராசிரியர் அவர்கள் கவனத்திற்கு இந்தச் சந்தர்ப்பத்தில் வைக்க விரும்புகிறேன்.

அவர்கள் சில தத்துவங்களைக் கூடச் சொன்னார்கள். ஆட்சி மாறும்—அப்படியெல்லாம் சொன்னார்கள். அது ஒன்றும் பெரிதாகக் கண்டு பிடித்துச் சொன்னது அல்ல. ஆட்சி மாறியிருக்கிற காரணத்தால் தான் நான் இங்கு நின்று கொண்டிருக்கிறேன், மாறியிருக்கிற காரணத்தால்தான் அவர்கள் அங்கே உட்கார்ந்து கருத்துக்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) இதுவும் மாறும்; நான் மாறக் கூடாது என்று வாதாடவில்லை. இது நம் கையில் இல்லை என்பதை மட்டும் அருள் கூர்ந்து உறுப்பினர்கள் மறந்துவிடக் கூடாது. இதை நிர்ணயிக்க வேண்டியவர்கள் நாலே முக்கால் கோடி தமிழ்ச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அருள்கூர்ந்து மறந்து விடக் கூடாது என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்

கிறேன். (திரு. ரகுமான்கான் எழுந்து நின்றார்) திரு. ரகுமான் கான் அவர்கள் எனக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு வேறு ஒரு கருத்தை நமது மதிப்பிற்குரிய எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கருத்து வேறு ஒன்றுமல்ல, இந்த 20-ம் பக்கத்திலும் 30-ம் பக்கத்திலும் இருக்கிற ஒன்றை எடுத்துக் காட்டி இது எப்படி இரண்டு பக்கத்திலும் ஒரே மாதிரி இருக்கிறது என்றார்கள். ஒன்றில் 6.83 லட்சம் ரூபாய் என்றும், இன்னொரு பக்கத்தில் 5.86 லட்சம் ரூபாய் என்றும் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டி இரண்டும் ஒரே மாதிரியாக சிறை சீர்திருத்தத்தைப் பொறுத்துத்தானே என்று குறிப்பிட்டார்கள்.

திரு. க. அன்பழகன் : நான் அதிலே குறிப்பிட்டது-மத்திய அரசு கடன் பெற்று செலவு செய்யப்படுகிற 12 லட்சம் ரூபாய் தொகை ஒரே பணிக்காக பொதுப் பணிகள் என்ற தலைப்பிலும், பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவுகள் என்ற தலைப்பிலும் இரண்டு இடத்திலும் இடம் பெற வேண்டிய அளவுக்கு என்ன நிலை என்றுதான் கேட்டேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் ; பேராசிரியர் அவர்கள் கேட்ட கேள்விக்கு எனது பதில்— செலவினங்களின் வரம்புகளின் நிலையை ஒட்டி சிறு கட்டுமானச் செலவினங்கள் வருவாய்க் கணக்கிலும், பெரிய கட்டுமானச் செலவுகள் மூலதனக்கணக்கிலும் கணக்கு வைக்கப்பட வேண்டுமென்ற விதியை நாம் மேற்கொண்டு கையாண்டுக் கொண்டிருக்கிறோம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சிறிய கட்டுமானச் செலவினங்கள் வருவாய்க் கணக்கிலும், மற்றவை மூலதனக் கணக்கிலும் கணக்கு வைக்க வேண்டுமென்ற அடிப்படையில் வைத்திருக்கிற விதியைச் சொல்லுகிறேன். அது ஏதோ புதிதாகச் சொன்ன தாகக் கருதவில்லை என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர

இன்னொன்றை எடுத்துச் சொன்னார்கள், Chief Minister's Accident Relief Fund என்று குறிப்பிடுகிற போது முதலமைச்சருக்கு விபத்துப் போல் ஆகிவிடாதா, இது சரிதானா என்று கேட்டார்கள். இது புதிதாக உருவாக்கப்பட்ட நிதி என்பது உங்களுக்குத் தெரியும்.

(பிற்பகல் 12-30)

இதற்கு முன்பு இருந்தது Chief Minister's Public Relief Fund முதலமைச்சரின் பொது நிவாரண நிதி என்பது, இப்போது Chief Minister's Accident Relief Fund

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எடுக்கப்பட வேண்டிய முறை
யிலே எடுக்கப்பட வேண்டிய நோக்கத்தோடு கருத்துக்கள் எடுக்கப்
பட்டால் அதிலே விபத்து வராது. ஆனால் எடுக்கப்பட வேண்டிய
முறையில் எடுக்காமல், வேறுவகையில் எடுக்கப்பட்டால் அப்படி
எடுத்துச் சொல்பவரின் கருத்துக்குத்தான் விபத்து ஏற்படுமே
தவிர பிரச்சினைக்கு விபத்து ஏற்படாது. (THIRU A. RAHMAN
KHAN : Th xpr ssi n is wrc.g) இதனால் ஒன்றும்—Chief Minis-
t r's Accident R lief Fund என்பதால் ஒன்றும் சீப்மினிஸ்டருக்கு
ஆபத்து வந்துவிடுமோ அல்லது விபத்து வந்துவிடுமோ என்று
எதிர்க் கட்சித் துணைத் தலைவர் கருத வேண்டியதில்லை.

திரு. துரை முருகன் : முன்னாலே இருந்ததை இப்போது
பெயர் மாற்றுவதிலே என்ன மிகப் பெரிய சாதனை வந்தது
என்று அரசாங்கம் கருதுகிறது ?

திரு. பி. முசிரிபுத்தன் : (அமைச்சரின் பேரவைச் செயலர்)
முதலமைச்சர் நிவாரண நிதி என்று வைத்தார்கள், முதலமைச்
சருக்கு நிவாரணமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஏற்கனவே இருந்தது
Chi f Mi ist r's Pu lic Reli f Fu d என்பது. இப்போதும் இருக்
கிறது. இது இரண்டாவதாக உருவாக்கப்பட்டது. ஆகவே
இரண்டையும் போட்டு திரு. துரை முருகன் அவர்கள் குழப்பிக்
கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய சர்க்காருடைய டைட் அசிஸ்டென்ஸைப் பற்றிக்
குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்சினைப் பற்றி தேசிய வளர்ச்சிக்
குழுவிலேயும் அதற்குப் பின்னாலே உருவாக்கப்பட்ட தனிக் குழுவி
லேயும் வலியுறுத்தியிருக்கிறோம் என்பதை நான் எதிர்க் கட்சித்
துணைத் தலைவரின் கவனத்திற்கு வைக்கிறேன்.

இன்னொன்றையும் அவர்கள் சொன்னார்கள். இதையெல்லாம்
தட்டிக் கேட்கிற தைரியம் இந்தச் சர்க்காருக்கு இல்லாமல்
இருக்கலாம், இந்தச் சர்க்கார் அங்கே போகும் போது பிரதம
அமைச்சரைப் பார்க்கும் போது கொஞ்சம் குழைந்து போகலாம்,
வளைந்து போகலாம், நெளிந்து போகலாம் என்று குறிப்பிட்
டார்கள். என்னை எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத்
தெரியும் என்று கருதுகிறேன். எனக்கு இருக்கிற பெயர் வளையா
தவன் என்பது தான், எதிர்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் கூட
நீங்கள் கொஞ்சம் வளைந்து போகவேண்டும் என்று சொல்லியிருக்
கிறார். வளையவேண்டிய இடத்திலே வளைவதும், நிமிர்ந்து நிற்க
வேண்டிய இடத்திலே நிற்பதும் என்னுடைய இயல்பு. வாதாட

வேண்டிய நேரத்திலே வாதாடுவேன், மாண்புமிகு குடியரசுத்
தலைவர் அவர்களிடத்திலேயும் சரி, பிரதம அமைச்சரிடத்தி
லேயும் சரி, நிதியமைச்சரிடத்திலேயும் சரி, மாண்புமிகு முதல
மைச்சர் அவர்களின் சார்பாக என்பதை இந்த மன்றத்திலே
இருக்கிற நண்பர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்,
ஆக இது குறித்து எந்தவிதமான சந்தேகமும் எதிர்கட்சித்
துணைத்தலைவருக்கு வரவேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அதற்குப் பிறகு அவர்கள் பேசும்போது இந்த ஆட்சியின்
அணுகுமுறை சரியாக இல்லை என்ற கருத்தைத் தெரிவித்தார்கள்.
அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.
இந்தியத் துணைக் கண்டத்துள் இருக்கிற பத்திரிகைகள், மற்றவர்கள் எல்லாம்
ஊரெல்லாம் பேசுவது ஒரு பக்கம் இருக்கட்டும். எல்லாம் இருக்கட்டும்,
என்ன எழுதியிருக்கிறார்கள் என்பது எல்லாம் இருக்கட்டும்,
மனசாட்சியோடு பிரச்சினைகளை அணுகவேண்டும் என்று கேட்டுக்
கொண்டு உங்களைச் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன். இந்த அரசு தனக்கென தனி பாணியை அணுகு
முறையாகக் கொண்டிருக்கிறது. மாணவர்கள் போராட்டம்
நடந்தால் மாணவர்கள் அணி அணியாகத் தலைமைச் செயலகம்
நோக்கி வருவார்களானால் உள்ளே இருந்து கொண்டு நான்
அவர்களைப் பார்க்கமாட்டேன் என்று சொல்கிற அணுகுமுறை
புரட்சித் தலைவருக்கு இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன். (கைதட்டல்). கைதட்டுவதற்காக இதைச் சொல்ல
வில்லை, கைதட்டினால் பிரச்சினையைக் கிளப்புவார்கள். திரு. துரை
முருகன் பார்த்துக் கொண்டிருக்கிறார். இன்னும் ஒன்று நான்
கூற விரும்புகிறேன். மாணவர்கள் இங்கே வந்து முதலமைச்சரைப்
பார்த்துப் பேசவேண்டுமென்று தெரிவித்தபோது முதலமைச்சர்
அவர்கள் மிக முக்கியமான விவாதத்திலே ஈடுபட்டிருந்தபோதும்
கீழே இறங்கி வந்து மாணவர்கள் நின்று கொண்டிருந்த இடத்
திற்குச் சென்று அவர்களோடு ஒரு மணி நேரம் நின்று
கொண்டே பேசிய பிறகு வேகத்தில் வந்த மாணவர்கள் திரும்பிப்
போகும்போது எம். ஜி. ஆர். வாழ்க என்று சொல்லிக்
கொண்டு போனார்கள் என்பதை நான் நினைவுபடுத்த விரும்பு
கிறேன்.

திரு. அ. ரகுமான் கான் : *** ***

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான் கான்
தயவு செய்து உட்கார வேண்டும். எதையும் என்னிடம் அனுமதி
கேட்டுப் பேசுங்கள்.

THIRU A. RAHMAN KAHN : With your permission....

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதி கொடுக்க
வில்லை. ஆகவே, நான் அனுமதி கொடுக்காமல் அவர்
பேசியது அனைத்தையும் நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அணுகுமுறை என்று
வரும்பொழுது......

திரு. அ. ரகுமான்கான் : பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன்.

THE HON. THIRU K. MANOHARAN : I am not yielding.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் yield செய்ய
வில்லை. உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அணுகுமுறை என்று
வரும்பொழுது அது விவசாயிகளானாலும் சரி, ஆசிரியர்களானாலும்
சரி, மாணவர்களானாலும் சரி, மற்றவர்களானாலும் சரி, அவர்
களை அழைத்துப் பேசப் பழக்கப்பட்டு, பரிகாரம் காணும்
போக்கினைத்தான் அணுகுமுறையாக இந்த அரசு ஏற்றுக் கொண்
டிருக்கிறது. உங்களை இரும்புக்கரம் கொண்டு தாக்குவோம் என்று
பயமுறுத்துகின்ற போக்கில் இந்த ஆட்சி நிச்சயமாக எந்தக்
காலத்திலும் இருக்காது என்பதை அவைக்கு அடக்கத்தோடு நான்
எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஜனநாயக அணுகுமுறையாக இருக்க வேண்டுமென்று
கேட்டுக்கொண்டு, அதைச் சொல்லிக் கொண்டு வந்த நேரத்தில்
எதிர்க் கட்சித் துணைத் தலைவர் இங்கே குறிப்பிட்டார்.
நமது ஆசிரியர்களை அழைத்துக் கல்வியமைச்சரவர்கள் இன்னும்
பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஆக,
பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்பதை
ஒத்துக்கொண்டு பேசிய நமது எதிர்க் கட்சித் துணைத் தலைவர
வர்களுக்கு நன்றி தெரிவிக்கின்ற அதே நேரத்தில் நமது
அணுகுமுறை, அழைத்துப் பேசுவதன் மூலம், உட்கார்ந்து
பேசுவதன் மூலம், விவாதங்களை எழுப்பி அதன் மூலம் பரிகாரம்
சாண்பது என்பதுதான் என்பதை ஒத்துக் கொண்டமைக்காக—
கத்துக்கொள்ள ஓரளவிற்கு மனம் தயங்கினாலும், மறு வார்த்
தையின் மூலம் ஒத்துக் கொண்டமைக்காக — எதிர்க் கட்சித்
துணைத் தலைவரவர்களுக்கு என்னுடைய நன்றியை இந்த நேரத்
தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே முதலில் பேசிய திரு. சொக்கலிங்கம் அவர்கள்
திருப்போரூர் தொகுதியினைப் பற்றிப் பேசினார்கள். அங்கே
தையூர் என்ற அரிசனக் காலனி இருக்கிறது, அந்தக் காலனி
கவனிக்கப்படவில்லை என்றும், அந்தக் காலனிக்குப் போதுமான
அளவிற்கு எதையும் இந்த அரசு செய்யவில்லை என்றும், சாட்சிக்கு
இங்கே உட்கார்ந்திருக்கின்ற நமது பேரவைத் தலைவரவர்

களையேகூட அழைத்து அவருக்கே இந்த விஷயங்களெல்லாம்
தெரியும் என்றும் குறிப்பிட்டார்கள். நிச்சயமாக நான் அவர்
களுக்கு இதுகுறித்து இந்த அரசுகவனிக்கும் என்று தெரிவித்
துக்கொள்கிறேன்.

திரு. பழனிமுத்து அவர்கள் ஆத்தூர் தொகுதியில் மலைவாழ்
பகுதி மக்களுக்கும், ஆதிவாசி மக்களுக்கும் மாடு ஆடுகளை
மேய்க்க மேய்ச்சல் நிலம் தரப்படவில்லை என்றும் அதற்கு
முயற்சி எடுக்க வேண்டுமென்றும் சொல்லி அரசுக்குச் சில
யோசனைகளைக் கூறினார்கள். யோசனைகளை இந்த அரசு பரிசீ
லிக்கும் என்பதை அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு இங்கே பேசியவர்கள் ஓய்வு ஊதியம் பற்றி
எடுத்துச் சொன்னார்கள், நான் இந்த நேரத்தில் அவர்களுக்குத்
தெரிவித்துக்கொள்ள விரும்புவது, ஏற்கனவே பத்தாண்டுக் காலம்
பணியாற்றியவர்களுக்கு நிச்சயமாக அது உண்டு. அதற்கு
குறைந்த காலமாகப் பணியாற்றியவர்களுக்குக் ''கிராசுவிட்டி''
கிடைக்கும் என்பது நாம் இதுவரை கையாளும் முறை. அதை
அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்,

இன்னுமொருவர் பேசியபொழுது, விதவைகளுக்குப் பணம்
தருவோம் என்று சொல்லிவிட்டுப் பல இடங்களில் தரவில்லை
என்றும், அதுமட்டுமல்ல, அவர்கள் வயது முதிர்ந்தவர்களாக
ஆகி வயது வந்து விட்டவர்கள் என்ற முறையிலேயும், விதவை
கள் என்ற முறையிலேயும் கேட்டதற்குப் பிறகும் அவர்
களுக்குப் பணத்தை இந்த அரசு வழங்கவில்லை என்றும் எடுத்துக்
காட்டினார்கள். நான் அந்த மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத்
தெரிவித்துக்கொள்கிறேன், எந்தெந்த இடங்களில் தரப்படவில்லை
என்பதை அவர்கள் எனக்குச் சுட்டிக் காட்டுவார்களேயானால்
அதற்கு உடனடியாக நிச்சயமாகப் பரிகாரம் காணுகின்ற
முயற்சியை நாங்கள் மேற்கொள்வோம் என்பதை அவர்களுக்கு
இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்,
பெட்டிஷன்களை எனக்கே கூட அனுப்பலாம், முதலமைச்சருக்கும்
அனுப்பலாம், அமைச்சராக இருக்கின்ற யாருக்கும் அனுப்பலாம்.
ஏனென்றால் பேராசிரியர் அமைச்சராக இருந்தபொழுது பல
பெட்டிஷன்களை வாங்கியிருக்கிறார்கள். எனவே, யாருக்கும்
அனுப்பலாம், கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிட்டி. அதிலே ஒன்றும்
தப்பு இல்லை.

திரு. க. அன்பழகன் : காரியம் எங்கே நடக்கிறது ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : காரியம் எங்கே நடக்
கிறது என்று கேட்டார்கள். இது தான் குத்தலாகப் பேசுகிற
பேச்சு. இங்கே சொல்லியிருக்கிறேன். நீங்கள் சொல்லித்தான்
அந்தக் கமிட்டி போடப்பட்டது, சித்த வைத்தியம் ஒழுங்காக
நடக்கிறது என்று சொன்னதற்குப் பிறகு அதைப் பாராட்டு

[திரு. கி. மனோகரன்] [1978 செப்டம்பர் 11

வதற்குப் பதிலாக எங்கே நடக்கிறது, கூட்டமே நடக்கவில்லை
என்று சொன்னார்கள். 15 நாட்கள்தான் ஆகின்றன கடிதம்
போய்ச் சேர்ந்து என்று சொல்லியபிறகு. நான்கூட விசாரித்
தேன், ஒரு கூட்டம் நடந்து முடிந்த பிறகு அடுத்த கூட்டத்திற்குச்
செல்ல, தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வதைப்
பேராசிரியர் அவர்கள் மறுக்கிறார்கள் என்றால் நாங்கள் எவ்வளவு
ஆசையோடு உங்கள் கருத்துக்களைக் கேட்டு நடவடிக்கை எடுக்
கிறோம். அதை உற்சாகப் படுத்துவதைவிட்டு விட்டு உள்ளத்தை
நோக வைக்கும் அளவிற்குக் கருத்துக்களைப் பேச வேண்டா
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12–40)

அதற்குப் பிறகு இன்னொன்றைச் சொன்னார், அது அவருக்குக்
கைவரப்பெற்ற கலை. சிரிப்பின் நுணுக்கத்தைப் பற்றியெல்லாம்
அவர்கள் சொன்னார்கள். அதற்கும் இந்த நிதிநிலை அறிக்கைக்
கும் சம்பந்தம் இல்லை. காரியங்களை நிறைவேற்ற வேண்டு
மென்பதில் நாம் அனைவரும் ஒன்றாக இருக்கிறோம் என்பதை இந்த
நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்,

திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசும்பொழுது கன்னியாகுமரி
மாவட்டத்திலே போராட்ட வீரர்களுக்கு பென்ஷன் கொடுக்கப்
பட்டது என்றும் தாய்த் தமிழ்நாட்டுடேநாடு இணைய வேண்டுமென்று
வீரமாகப் போராடிய அந்த வீரர்களுக்குப் பென்ஷன் கொடுக்கப்
பட்டுக் கொண்டிருந்ததை ஆளுநர் ஆட்சியின்பொழுது நிறுத்தி
விட்டார்கள் என்றும் வேதனையோடு சொன்னார்கள். ஆகவே,
அவர்களுக் கெல்லாம் பென்ஷன் கொடுக்க வேண்டுமென்று எனது
அருமை நண்பர் ஜேம்ஸ் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்.
திரு, ஜேம்ஸ் அவர்களுக்கு இருக்கிற ஒரு தலை சிறந்த பண்பு என்ன
வென்று சொன்னால் சட்டமன்றத்திலே பேசிவிட்டு அதற்குப்
பிறகு பேசாமல் இருப்பது வாடிக்கையாக இருக்கிறது. ஒரு
சமயத்திலே நானே தெரிவித்தேன், பனைமரத்திலேயிருந்து கீழே
விழுந்து இறந்தவர்கள் பட்டியலைக் கொடுங்கள், அந்தப் பட்டி
யலை வைத்து நானே சர்க்காரின் உதவித் தொகை வழங்கத்
தயாராக இருக்கிறேன் என்று சொல்லி இத்தனை மாதங்கள் ஓடிய
தற்குப் பிறகும் இதுவரை அவர்கள் பட்டியல் தரவில்லை.
திரு. சுவாமிதாஸ் அவர்களைக் கூட நான் கேட்டேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு நிதி
அமைச்சரவர்கள் கேட்டது உண்மை. ஆனால், மாவட்டத்தில்
இறந்து போனவர்களுடைய பட்டியல் என்னுடைய கைவசம்
இல்லை. எல்லா பெயர்களும் அம்மாவட்ட அதிகாரிகளால்
அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அனுப்பப்பட்டு பல
மாதங்களான பிறகும் இதுவரை கொடுக்கப்படவில்லை.

1978 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மன்னிக்க வேண்டும்.
எல்லா பெயர்களும் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது
என்று எந்த அடிப்படையில் ஜேம்ஸ் அவர்கள் பேசுகிறார்கள்
என்று எனக்குத் தெரியவில்லை. அப்படி எல்லாப் பெயர்களும்
அனுப்பப்பட்டிருக்குமானால் அது எனது பார்வைக்கும்
பரிசீலனைக்கும் வந்திருக்கும், வரவில்லை. ஒருவேளை நீங்கள்
சொல்லக் கூடும். அனுப்பிய இடத்திலே அது தேங்கிக் கொண்டி
ருக்கிறது என்று சொல்லக் கூடும். நேற்றைக்கு முன்தினம் கூட
நான் கேட்டபொழுது, நீங்கள் சொன்னது பத்மனாபபுரம், நாகர்
கோயில் ரெவின்யூ டிவிஷன் ஆஃபீஸில் லிஸ்ட் வந்திருக்கிறது
என்றும் நீங்களே பார்த்து கேட்கக் கூடாதா என்றும் கேட்டதாக
எனக்கு நினைவு. இனிமேல் முடிவும் ஜேம்ஸ் அவர்களைப் பொறுத்த
வரை நானே எடுத்துக்கொள்வேன். அவர் சொன்ன கருத்துக்களை
நான் எடுத்துக் கொள்வேனே தவிர, நிறைவேற்றுகிற பொறுப்பை
நானே எடுத்துக் கொள்வேன் என்பதை ஜேம்ஸ் அவர்களுக்கு
இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு கருத்தை இங்கே சொன்னார்கள், நிச்சய
மாக பவானிசாகரைப் பற்றிப் பேசியபொழுது,......

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அப்படியென்றால்
தியாகிகளுடைய கோரிக்கைகளையும் மாண்புமிகு அமைச்சரவர்கள்
நிறைவேற்றிக் கொள்வார்கள் என்பதை நான் ஏற்றுக் கொள்ள
லாமா?

மாண்புமிகு திரு, கி. மனோகரன்: ஏதோ பென்ஷனைக் கேட்டு,
வாக்குறுதி வாங்கியவுடன், உடனடியாக என்னிடமிருந்து
வாங்கி வந்து விட்டேன் தொகுதிக்குப் போய், பார்த்தாயா நான்
என்று கடமையாற்றுகிற நல்லெண்ணத்தில் அவர் கேட்கிறார்.
அதுபற்றி நிச்சயமாக நான் பரிசீலிப்பேன் என்று தெரிவித்
திருக்கிற காரணத்தாலே தயவு செய்து இப்பொழுதே இந்தப்
பேச்சு முடிந்தவுடன் எனது அறைக்கு வந்து பணத்தைக்
கொடுங்கள் என்று கேட்க மாட்டார் என்று கருதுகிறேன்.

அதற்குப் பிறகு இங்கே பேசிய எதிர்கட்சிதுணைத் தலைவர்தான்
பவானி கேட்டார்.... (திரு. க. அன்பழகன்: பவானிசாகர்பற்றி) பவானி
சாகரை நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லியிருக்
கிறேன்.

இந்தத் தேர்தல்களை எல்லாம் நீங்கள் நடத்தாமல் இருக்கிறீர்
களே, மதுரையைத் தேர்ந்தெடுத்தீர்கள், அதற்கான காரணம்
எனக்குத் தெரியும் என்று சொன்னார் எதிர்க்கட்சித்துணைத்தலைவர்
நாங்கள் தோற்றத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை என்று சொன்
னார்கள். தோல்வியும் வெற்றியும் சகஜம் என்று தத்துவம்
சொன்னார்கள். நான் அதை முழுமையும் ஏற்றுக் கொள்கிறேன்.

மதுரையை ஏன் நீங்கள் தேர்ந்தெடுத்தீர்கள் என்று கேட்டார்.
நாளைக்கு, கோவையை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள் என்று கேட்கிற
வாய்ப்பும் வரும். அதற்குப் பிறகு சென்னையையும் ஏன் தேர்ந்
தெடுக்கிறீர்கள் என்று கேட்கிற வாய்ப்பும் வரும். ஆகவே குறிப்
பிட்ட பகுதி அந்தப் பகுதி, எங்களுக்குச் சாதகமான பகுதி என்ப
தால் தேர்ந்து எடுக்கப்படவில்லை யென்று தெரிவித்து, ஏற்கனவே
உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களால் தெரிவிக்கப்பட்டதைப்
போல், எல்லா தேர்தல்களும் ஒன்றாகவே நடத்தப்படும் என்று
சொன்னதற்குப் பிறகு, இந்தச் சந்தேகம் எதிர்கட்சித் துணைத்
தலைவருக்கு வந்திருக்க வேண்டிய அவசியம் இல்லையென்று நான்
கருதுகிறேன்.

இப்போது உங்கள் முன்னாலே மற்றபடி சொன்னவர்கள்
அத்தனை பேர்களும் தெரிவித்த கருத்தையே திருப்பித் திருப்பிச்
சொன்னார்களே தவிர, புதியகருத்து எதையும் தெரிவிக்கவில்லை.
திரு. எஸ்.ஜெ. இராமசாமி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள், கட்
டப்படுகின்ற பள்ளிக்கூடங்கள் எல்லாம் கொஞ்சம் பலமாக இருக்
கட்டும் என்று தெரிவித்தார். நான் சொல்லுகிறேன், கட்டப்
படுகின்ற கட்டடங்கள் அது பள்ளிக் கட்டடங்கள் ஆனாலும்,
மருத்துவமனைக் கட்டடங்கள் ஆனாலும், எந்தக் கட்டடங்களானா
லும் ஒழுங்காக, முறையோடு கட்டப்படுகின்ற அளவிற்கு உன்னிப்
பாகவும், கவனிப்பாகவும் இந்த அரசு இருக்கும் என்பதை இந்த
நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்குப் பிறகு கடைசியாக நான் தெரிவித்துக் கொள்ள
விரும்புவது ஒன்றே ஒன்றுதான். என்னைத் தவறாக யாரும் கருத
மாட்டார்கள் என்று நம்புகிறேன். தயவு செய்து உணர்வுகளைப்
புரிந்து உங்களது கருத்துக்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். இந்த ஆட்சி பொறுப்பேற்று $1\frac{1}{2}$ ஆண்டுக் காலத்
திற்குள், இந்த ஆட்சியைப் பார்த்து 7 ஆண்டுகள், 5 ஆண்டுகள்
ஆட்சிப்பொறுப்பிலே இருந்த எதிர்கட்சி துணைத்தலைவர் அன்பழ
கன் போன்றவர்கள் தொடுக்கின்ற கேள்விகளை பார்க்கின்றபோது,
ஏதோ நாங்கள் 15 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்தவர்கள்
போலவும், அப்பேர்ப்பட்ட நீங்கள் இதை எல்லாம் செய்யக்
கூடாதா என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு அவர்கள்
கேட்டதற்கு நன்றி. ஏனென்றால் ஓராண்டுக் காலத்திற்குள் செய்
கின்ற திறமை உங்களுக்கு இருக்கிறபோது ஏன் நீங்கள் செய்ய
வில்லை என்று எங்களுக்கு சூட்டப்பட்ட ஆரமாக நான் ஏற்றுக்
கொள்கிறேனே தவிர, என்னென்ன செய்திருக்கிறோம் என்பதைப்
பற்றி தயவு செய்து சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

சாலை பராமரிப்புப் பற்றிச் சொன்னார்கள் சென்னையிலே எதிர்
கட்சி துணைத்தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். வெள்ளத்
தின் மூலம் ஏற்பட்ட பெரும் சேதத்தி சாலைகள் பழுதடைந்த
நேரத்தில், போர்க்கால நடவடிக்கைகளைப்போல இந்த அரசு

நடவடிக்கை எடுத்து சென்னையிலும், மற்ற இடங்களிலும்
செப்பனிடப்பட்டிருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்கின்ற
யாருக்கும் தெரியும். இவைகளை சாதனை என்று சொல்வதைவிட
நாங்கள் செய்கின்ற கடமை என்று சொல்லும்போது, அதனைப்
பாராட்டுகின்ற நல்ல பண்பு இங்கே இருக்கிற எதிர்கட்சித்
தலைவர்களுக்கு இருப்பது நல்லது. இன்னும் கொஞ்சம் அதிக
மாகவே இருக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன். குறைகள் நடந்தால் தயவு செய்து சுட்டிக்காட்டுங்கள்
என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அப்படிக் குறைகளை
நீங்கள் சுட்டிக் காட்டாமல் இருப்பீர்களேயானால், பேராசிரியர்
அவர்கள் சொன்னதைப் போல நீங்கள் இந்த இடத்திலே
வருவீர்கள், தாங்கள் அந்த இடத்திற்கு வருவோம் என்றுசொல்லி
விட்டு, திரு. உமாநாத் அவர்கள் கட்சியையும், மற்றக் கட்சி
களையும் ஒரு பக்கத்தில் தள்ளி விட்டார்கள், நான் அந்த அளவுக்கு
ஜனநாயகத்தை சுருக்கிக் கொள்ள விரும்பவில்லை. உமாநாத் கட்சி
கூட வரலாம், ஜனநாயகத்திலே, இந்திரா காங்கிரஸ் கட்சியின்
தலைவர் நமது மாரிமுத்து அவர்கள் கூட இதே முதலமைச்சர்
பதவியிலே உட்கார்ந்து தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கிற
காலம் வந்தாலும் வரலாம். வராது என்று நான் சொல்லவில்லை.
அதற்கு மக்கள் தயாராக இருக்கிறார்களா என்பதுதான் கேள்வியே
தவிர, அவர்கள் வரக் கூடாது என்று வாதாடவில்லை. திரும்பவும்
தெரிவித்துக் கொள்கிறேன், மக்கள் என்ன கருதுகிறார்கள். மக்கள்
என்ன சொல்லுகிறார்கள் என்று எதிர்கட்சிதுணைத்தலைவர் என்னைப்
பார்த்துக் கேட்கக் கூடும். அவரவர்களுக்குச்சில அபிப்பிராயங்கள்
இருக்கக்கூடும். என்னைப் பொறுத்த வரையில் மக்கள் என்ன
நினைக்கிறார்கள் என்றால், குறைந்த பட்சம் ஒரு 15 ஆண்டுக்காலம்,
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி
யிலே இருக்கட்டும் என்று மக்கள் கருதுகிறார்கள் என்பதை நான்
மிக அடக்கத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்கட்சித்
துணைத்தலைவர் அவர்களுக்குக் கூட இதிலேமகிழ்ச்சி. ஏனென்றால்
அவரே சொன்னார், எங்களுக்குள்ளே உள்ள உறவு எங்களுக்குத்
தான் தெரியும். பாம்பின் கால் பாம்புதான் அறியும் என்று
சொன்னார்கள். உள்ளங்களை உள்ளங்கள்தான் அறியும் என்று
சொல்லியிருக்கலாம். என்ன காரணத்தாலோ அவருக்குப்
பிடித்தமான உதாரணத்தை அவர் சொல்லியிருக்கிறார்,
அதைப் பற்றி நான் வருத்தப் படவில்லை.

[பிற்பகல் 12-50]

திரு. எஸ். கணேசன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்பு
மிகு நிதி அமைச்சர் பதில் உரையில் 3-வது ஊதியக் குழுவின்
அறிக்கையைப் பற்றிக்குறிப்பிடுவார்கள் என்று எதிர்பார்த்தேன்.
ஒன்றும் இல்லை. அது மிகவும் ஏமாற்றம் தருகிறது. மற்றொன்று
தற்போது ஒரு புதிய அணுகுமுறையை அரசாங்கம் மேற்கொண்டு
வருகிறது. எந்தப் போராட்டமாக இருந்தாலும் சரி, அது
விவசாயிகள் போராட்டமாக இருந்தால் அந்தப் போராட்டம்

உருவாகிற நேரத்தில் வண்டிகளை உடைப்போம், மாடுகளை ஏலம் போடுவோம் என்று ஒரு புதிய அணுகு முறையை முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அதைப் பற்றி நிதி அமைச்சர் அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்பிமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் எனக்கு நீண்ட கால நண்பர். ஆகையால் தான் அவர் நல்ல பொறுப்பான கேள்வியைக் கேட்டு இருக்கிறார். அவர் கேட்டதிலே ஒன்று, 3-வது சம்பளக் குழுவின் அறிவிப்பு எப்போது வரும் என்று கேட்டார்கள். நான் 3 நாட்களுக்கு முன்பு என்று கருதுகிறேன், இங்கே தலைமைச் செயலகத்தில் சிறப்பாக நடைபெற்ற கூட்டத்தில் பேசுகிறபோது, நிச்சயமாக இந்த அறிக்கை விரைவில் வரும், அந்த அறிக்கையை வெளியே விடாமல், பதுக்கி குளிர்சாதனப் பெட்டியில் வைப்பதன் மூலம் எந்தப் பலனையும் இந்த அரசு அடையப் போவது இல்லை என்றும், அது குறித்து ஆழ்ந்து பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது என்றும் அந்தப் பரிசீலனை விரைவில் முடியும் என்றும், ஆகவே, விரைவிலேயே நாங்கள் அறிவிப்போம் என்றும் நான் அவர்களுக்குச் சொன்னேன். சொல்லி, அவர்கள் கேட்பார்கள் என்று நானாகவே கருதிக் கொண்டு ஒரு கேள்வியைக் கேட்டு, விரைவில் என்று சொன்னால் அது ஒரு மாதமா, 2 மாதமா, 6 மாதமா என்று நீங்கள் கேட்கக் கூடும் என்று அவர்கள் கேட்க நினைத்த அந்தக் கேள்வியை நானே அவர்கள் கேட்காமல் இருக்கிறார்கள் என்று கேட்டு, அதைக் கேட்கிற உணர்வு அவர்களுக்கு இருக்கிறது என்று தெரிந்து, 'விரைவில்' என்று சொல்கிறபோது இரண்டு வாரத்திற்குள் அந்த அறிக்கை வெளியிடப்படும் என்று அவர்களுக்குத் தெரிவித்து இருக்கிறேன். ஆகவே, திரு. கணேசன் அவர்கள் கேட்ட இந்தக் கேள்விக்குக் கூட நான் நன்றி தெரிவிக்கிறேன். அது ஒரு இரண்டு வாரத்திற்குள் நிச்சயமாக வெளியிடப்படுகிற சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : அது அண்ணா பிறந்த நாள் பரிசாக இருக்கும் என்று எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : திரு. இளங்கோவன் அவர்களுக்கு எப்போதும் ஆசை அதிகம். அந்த ஆசையின் அடிப்படையில் அண்ணா பிறந்த நாள் என்று கருதுகிறார்கள். இரண்டு வாரங்கள் என்று நான் குறிப்பிட்டு இருக்கிறேன். அண்ணா பிறந்த நாள் என்று சொல்கிறபோது இடையில் எத்தனை நாட்கள் இருக்கின்றன என்பதைக் கணக்கிட்டுப் பார்க்க மட்டும் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, இன்னொரு கேள்வியைத் திரு. கணேசன் அவர்கள் கேட்டார்கள். அணுகு முறையைப் பற்றிப் பேசுகிற போது, விவசாயிகள் வண்டிகளைக் கொண்டு வந்து குறுக்கே

நிறுத்தி வைத்தால், போலீஸ்காரர்கள் பிடித்துக் கொண்டு போவார்கள், விட்டால், மாடுகளைக் கொண்டு வந்து குறுக்கே (குறுக்கீடு) இருக்கட்டும், நான் நம்முடைய வரிப் பணத்திற்கு....(குறுக்கீடு) இருக்கட்டும், நான் விரும்புவது, முதலமைச்சர் உங்களைப் பார்த்து கேட்டுக் கொள்ளக் விரும்புவது, முதலமைச்சர் இப்படிச் சொல்லி விட்டார் என்று இப்படி வேதனைப் படுகிறீர்களே, சங்கடப்படுகிறீர்களே, ஐயோ பாவம் என்று கண்ணீர் விடுகிறீர்களே, உங்களைப் பார்த்துக் கேட்கிறேன், பொது மக்களுக்கு அந்த அளவிற்கு, தொல்லை செய்கிற அளவிற்கு மாடுகளை, வண்டிகளைக் கொண்டு வந்து நிறுத்துவது என்ற அந்தச் சூழ்நிலை இருக்குமானால், எனது எதிர்க் கட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்து இருப்பார்களானால், அனுமதித்து இருப்பாரா, சகித்துக் கொண்டு இருந்து இருப்பாரா என்பதை அருள் கூர்ந்து சிந்திக்க வேண்டுகிறேன். இதிலே கட்சி வேறுபாடு இல்லை. நான் திருப்பித் திருப்பித் தெரிவித்துக்கொள்கிறேன், பொது மக்களுக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில்......

திரு. துரை முருகன் : எதிர்க் கட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்தால் அனுமதித்து இருப்பாரா என்று நிதி அமைச்சர் கேட்டார்கள். எதிர்க் கட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்த நேரத்தில் இப்படி......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அனுமதி இல்லாமலேயே நீங்கள் பேசிக் கொண்டு இருக்கிறீர்கள். உங்கள் அணுகுமுறையை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அந்த அணுகு முறை எனக்குப் பிடிக்காத ஒன்று.

திரு. துரை முருகன் : உங்கள் அனுமதியோடு பேசலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது பேசுங்கள்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்தால், இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வந்தால் அதைச் சகித்துக் கொண்டு இருப்பாரா என்று கேட்டார்கள். இதே போன்று ஒரு சூழ்நிலைதான் கோயம்புத்தூரில் ஏற்பட்டது. ஆனால், அப்போது அதைச் சகித்துக் கொண்டுதான் இருந்தார். இருந்தார், அதை அவர் பொறுத்துக்கொண்டுதான் நொறுக்குகிறேன், மாடுகளை ஏலம் போடுகிறேன், வண்டிகளை முதுகெலும்பைப் பதம் போலீஸ்காரர்களை விட்டு அவர்களுடைய பொறுத்துக் கொண்டு, பார்க்கிறேன் என்று சொல்லாமல் இருந்தார்கள் எபைதை நான் மாண்பு சகித்துக் கொண்டுதான் தெரிவித்துக் கொள்கிறேன். மிகு நிதி அமைச்சர் அவர்களுக்குத்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒரு மணிக்கெல்லாம் முடிக்க வேண்டும். அதன் பிறகு வெட்டுத் தீர்மானங்கள் இருக்கின்றன என்பதைத் தங்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : எனக்கு ஞாபகம் இருக்கிறது; அதற்குள் முடித்துவிடுகிறேன்.

இங்கே இரண்டு நிமிடங்களுக்கு அருமையான ஒரு வசனம் நம்முடைய துரைமுருகன் அவர்களால் வழங்கப்பட்டது! அவர் எங்கோ இருக்க வேண்டியவர் இங்கே இருக்கிருரோ என்ற சந்தேகம் எனக்கு. அவர் தெரிவித்தார், ஏதோ நாங்கள் ஏலம் விட்டதைப் போலவும், வண்டிகளைக் கொண்டுபோய் எங்கோ விற்றுவிட்டதைப் போலவும் பேசிக் கொண்டிருக்கிருர். நாங்களும் அதைச் செய்யவில்லை.

முதலமைச்சர் அவர்கள் அப்போது சொன்ஞர்கள், பொது மக்களுக்குப் பங்கம் விளைவிக்கின்ற, அரசாங்கத்திற்கு நஷ்டம் உண்டாக்குகிற இப்படிப்பட்ட காரியங்கள் தேவையா? இது நியாயம் தாஞ என்று கேட்டார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். தவறுகளுக்கு சம்பந்தப்பட்டவர்கள் யார், யார்? விவசாயிகள் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய மாட்டார்கள். இது இந்த அரசின் நிச்சயமான நம்பிக்கை. விவசாயிகள் பாலங்களை உடைக்கமாட்டார்கள், விதை தூவுகின்ற விவசாயிகள் நிச்சயமாகக் குண்டுகளைக் வீசமாட்டார்கள், கதிர் அறுக்கும் விவசாயிகள் தலை அறுக்கும் போராட்டத்தில் ஈடுபடமாட்டார்கள். அப்பேர்ப்பட்ட விவசாயிகள் வழிமறித்து, பஸ்களை நிறுத்தி,. பயணிகளைக் கீழே இறக்கி, ஆண்கள் வேறு, பெண்கள் வேருகப் பிரித்து, அதிலும் இளம் பெண்களைத் தனியாகப் பிரித்து, காட்டுக்கு அழைத்துச் சென்று, எதையும் இழக்கத் தயாராக இருந்தாலும் ஒன்றை மட்டும் நாங்கள் இழக்க மாட்டோம் என்ற தாய்மார்களைப்பற்றி..

திரு. துரை முருகன் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். நிதியமைச்சர் கூறுவதை நான் வன்மையாக மறுக்கிறேன். அப்படி எங்கும் நடக்கவில்லை; அப்படிச் சொல்லப்பட்டது ஏற்கெனவே மறுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான் சொல்வதை முழுவதும் கேட்டு விட்டு அப்புறம் சொல்லுங்கள். இப்படிப்பட்ட செய்திகள் எல்லாம் வந்தன அல்லவா ! நான் சொல்வது செய்திகள். அது மறுக்கப்பட்டிருக்கிறது. ஆக, இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கின்றவர்கள் விவசாயிகளாக இருக்க முடியாது; அவர்களை ஆட்டக்காய்களாகப் பயன்படுத்துகிருர்கள். அது கூடாது. இந்த நாட்டிலே விவசாயிகளை வாழ வைக்கவும், தொழிலாளர்களை வாழ வைக்கவும், நடுத்தர மக்களை வாழ வைக்கவும் இந்த அரசு எப்போதும் தயாராக இருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்து, உங்கள் முன்ஞல் சமர்ப்பித்திருக்கின்ற இந்த 1978-79 ஆம் ஆண்டு துணை மதிப்பீடுகளை ஏற்றுக்கொண்டு, நீங்கள் எல்லாம் அதற்கு ஒத்துழைப்பு தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : சார், பாயின்ட் ஆஃப் கிளாரிஃபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள். இந்த அவையில் இருக்கிற 235 உறுப்பினர்களும் இப்படிக் கேட்டுக்கொண்டிருந்தால் நேரத்தை எப்படிச் சுருக்க முடியும்? எப்படி அவையை நடத்திச் செல்ல முடியும்? ஒரே உறுப்பினருக்குப் பல வாய்ப்புகள் தரும் அளவுக்கு நேரம் இல்லை; விவாதம் முடிவுற்றது. இனி வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டி வரிச் சட்டங்கள் - நிர்வாகம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 3 - மோட்டார் வண்டி வரிச் சட்டங்கள் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 50,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மானியக் கோரிக்கை எண் 9 - மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 9 - மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே, லஞ்ச ஒழிப்புப் பணியாளர்கள் கூடுதலாக நியமனம் செய்யப்பெற வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும், அவர்களின் பணிகளின் முக்கியத்துவத்தைப்பற்றியும் விவாதிக்க-

''மானியக் கோரிக்கை எண் 9 - மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,09,000 இல் ரூ. 1 குறைக்க வேண்டும்'' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1978 செப்டம்பர் 11

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி - ''மானியக் கோரிக்கை எண் 9 - மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,09, 000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மானியக் கோரிக்கை எண் 11 - மாவட்ட நிர்வாகம்

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 11 - மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 39,60,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: தலைவரவர்களே, தற்சமயம் கிராம அதிகாரிகள், கிராமப் பணியாளர்கள் ஆகியவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் இடைக்கால நிவாரணத்தை அதிகரிக்க வேண்டும் என்பது பற்றியும், நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்காகவும் நில எடுப்பு செய்வதற்கும் அனல் மின் நிலையத்திற்கும் எடுக்கப்படும் புதிய பணியாளர்களை நிரந்தரம் ஆக்க வேண்டும் என்பது பற்றியும் விவாதிக்க-

''மானியக் கோரிக்கை எண் 11 - மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 39, 60, 000 இல் ரூ.1- குறைக்க வேண்டும்'' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண் 11 - மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 39,60,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

1978 செப்டம்பர் 11]

[பிற்பகல் 1-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் ஒரு மணியாகி விட்டது. இனிமேல் வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி; ''மானியக் கோரிக்கை எண். 14- சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 15, 00, 000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 17—கல்வி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண். 17 - கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ.25,58,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 18—மருத்துவம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,99,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண் 19 -பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 71, 91, 000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 20—வேளாண்மை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 21—மீனளம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ், ரூ. 21, 39, 000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 23—கூட்டுறவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண். 23 - கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 21,98,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 24—தொழில்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 66, 88,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 25—சின்கோனா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி ''மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ரூ. 2, 50, 000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 27—கதர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண் 27—கதர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2, 53, 000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 30—சமூக நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண் 30—சமூகநலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 18, 25, 000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 31—பழங்குடியினர், அரிசனங்கள் முதலியவர்களின் நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடியினர், அரிசனங்கள் முதலியவர்களின் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,90, 00-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியவர்களின் நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: '' மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியவர்களின் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,91,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றுப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி மேம்பாடு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி மேம்பாடு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,25,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 70,72,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 36—பாசனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,50,00,000 - க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 37—பொதுப்பணிகள் - கட்டடங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 37 - பொதுப்பணிகள் - கட்டடங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,00,00,000 - க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' மானியக் கோரிக்கை எண் 40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 25,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 43—பல்வகை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 41,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண் 45—காட்டுவளத்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,71,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

[1978 செப்டம்பர் 11

கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப் படத் தொழில் நுட்பவியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 47 செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,42,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பி. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.

கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 50 வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,31,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,90,45,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 53—பொதுப் பணித்துறை கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 53 பொதுப் பணித்துறை கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 21,26,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

1978 செப்டம்பர் 11]

கோரிக்கை எண் 54—சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 54—சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 28,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 56—காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 56—காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 23,10,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,73,72,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

ஸி. கடன்களையும் முன்பணங்களையும் வழங்குதலும், கடனைத் திருப்பிச் செலுத்தலும்.

கோரிக்கை எண் 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,21,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

[1978 செப்டம்பர் 11

(3) அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஆ) 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகபடுத்தப் பெற்றிருக்கிறது.

[பிற்பகல் 1-10]

(ஆ) தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பெற்றிருக்கிறது.

1978 செப்டம்பர் 11]

(இ) தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பெற்றிருக்கிறது.

(ஈ) தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

6. ஒழுங்குப் பிரச்சினை

நிகழ்ச்சி நிரல்படி தனித்தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பொருள்பற்றிய அரை மணி நேர விவாதத்தை எடுத்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : கொடுக்கப்பட்டிருக்கின்ற அஜெண்டாவில் குறிப்பிட்டிருப்பதுபோல் 142-வது விதியின்படி கொடுக்கப் பட்டிருக்கின்ற தீர்மானம்தான் வரவேண்டும். அதை எடுத்துக் கொள்வதுதான் நல்லது.

திரு. துரை முருகன் : நானும் அதைப்போன்று ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன் என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அஜெண்டாவின்படி பார்த்தால் இதில் இருக்கின்ற மசோதாக்களை எல்லாம் எடுத்துவிட்டு உங்கள் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளவேண்டும். இப்போது நேரமில்லை. இவையெல்லாம் நாளை எடுத்துக்கொள்ளப்படும். நிகழ்ச்சி நிரலில் சேர்ந்து விட்டபடியால் இவையெல்லாம் தள்ளுபடி செய்யப்பட மாட்டாது. இப்போது அரை மணி நேர விவாதத்தை மட்டும் எடுத்துக் கொள்ளலாம்.

7. அரைமணி விவாதம்.

முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி 1977-ல் தமிழகத் திற்குத் தேர்தல் பிரச்சாரத்திற்காக வந்தபோது ஏற்பட்ட செலவு குறித்து.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே......

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : பாயிண்ட் ஆப் ஆர்டர், மதிப்பிற்குரிய உமாநாத் அவர்கள் ஒரு பொருள் குறித்து அரை மணி நேர விவாதம் வேண்டுமென்று கொடுத்திருக்கின்ற தீர்மானத்தை நான் ஆட்சேபிக்கின்றேன். சட்டமன்ற விதிகள் 40-வதின் விதியின்கீழ் சொல்லப்பட்டிருப்பதை எடுத்துக் கொண்டால் இந்தத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கின்ற விஷயம், நிர்வாக நடைமுறைபற்றிய ஒன்று. வேறு ஏதாவது இதில் முக்கியத்துவம் இருந்தால் அனுமதித்திருக்கலாம். இந்த விஷயத்தைப் பொறுத்த அளவில் தாங்கள் இதை அனுமதித் திருக்கக்கூடாது. இது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று அல்ல. ஆகவே இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளக்கூடாது என்பது தான் என்னுடைய ஆட்சேபணை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதித்திருக்கக் கூடாது என்று நீங்கள் சொல்ல முடியாது. அனுமதித்திருக்க வேண்டிய தேவையில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். 40-வது விதியில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், "The Speaker may allot half an hour on three sittings in a week for raising a discussion on a matter of sufficient public

importance which has been the subject matter of a question, oral or written, the answer to which was given within five days prior to the date of notice and which needs elucidation on a matter of fact"

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : "On a matter of sufficient public importance" என்றிருக்கிறது. இது நடைமுறையைப் பற்றியது. முன்னாள் பிரதமர் தேர்தல் பிரசாரம் செய்வதற்காக வந்த போது, இந்த அரசு செலவழித்த தொகை எவ்வளவு என்பதைப் பற்றியும், அந்த தொகையை வசூலிப்பதற்கான நடைமுறையைப் பற்றியதும் ஆகும். இதை அவசரமாக எடுத்துக்கொள்ள வேண்டிய தேவையில்லை. நடைமுறை சம்பந்தப்பட்டது. எப்போது வேண்டுமானாலும் நடவடிக்கை எடுக்கலாம். அரசு இதனை நடைமுறைப்படி, புரொசிஜர்படி செய்யலாமே. தவிர, இதை இவ்வளவு முக்கியமாக விவாதிக்க அனுமதிக்கக் கூடாது என்பது என்னுடைய வாதம்.

திரு. க சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் பிரசாரத்திற்கு முன்னாள் பிரதமர் வந்தபோது, செலவழிக்கப் பட்ட தொகை எவ்வளவு என்பதாகும். இது ஒரு ஜாயிண்ட் கமிஷன். மதுரையிலே முதல் அமைச்சர் அவர்களும் சேர்ந்து பேசியிருக்கிறார்கள். எனவே, இரண்டு கட்சிகளும் பணம் கொடுக்க வேண்டிய நிலைமை வருகிறது. இந்தத் தீர்மானத்தை கம்யூனிஸ்டு கட்சி கொண்டுவந்து, அதைத் தாங்கள் அனுமதித் திருப்பது முறைதானா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கட்சியல்ல, தயவுசெய்து உட்காருங்கள். பாராளுமன்றத்திலேயும் சரி, மற்ற சட்ட மன்றங்களிலேயும் சரி இது கடைப்பிடிக்கின்ற ஒன்றாகும். திரு. உமாநாத் அவர்கள் முன்னாள் பிரதமர் தமிழ்நாட்டிற்கு வந்த போது, அரசாங்கப் பணத்திலே இருந்து எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டிருக்கின்றார்களே தவிர, கட்சிப் பணத்தைப் பற்றி ஒன்றும் கேட்கவில்லை. இரண்டாவது, அரசாங்கத்தினுடைய பணம் எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக் கின்றது என்பதைப் பற்றி கேட்க இந்த அவையிலே உள்ள உறுப்பினருக்கு உரிமை உண்டு. அதன்மேல் விவாதிப்பதற்கு இடமுண்டு. மக்கள் வரிப் பணத்திலே இருந்து எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கின்றது என்று கேட்பது 'பப்ளிக் இம்பார்டென்சு' ஆகும். ஆகவே, திரு. உமாநாத் அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்னை நியாயமானது என்று நான் தீர்ப்பளிக்கிறேன்.

திரு. ஏ. ஆர் மாரிமுத்து : தலைவர் அவர்களே, இதேமாதிரி நட்சத்திரக் குறியிடப்படாத கேள்வி ஒன்றுக்கு பதில் வைக்கப் பட்டிருக்கிறது. இந்தப் பதிலைப் பார்த்த பிறகு, திரு. உமாநாத் அவர்கள் இந்த வாதத்தை எழுப்பியிருக்கிறார்கள். எனவே, இதிலே sufficient public importance என்ற கேள்வி இல்லை என்பது என் விவாதம். தயவுசெய்து........

[1978 செப்டம்பர் 11

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் ஆட்சேபணை தெரிவித்திருக்கிறீர்கள். தீர்ப்பு கொடுத்தாகிவிட்டது. அதோடு விட்டு விடுங்கள்.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து :</u> உங்கள் தீர்ப்பை நான் எதிர்க்கிறேன். உங்கள் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யுங்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஏற்கனவே நான் தெளிவாக ஆராய்ந்து பார்த்த பிறகுதான் என் தீர்ப்பைச் சொல்லியிருக்கிறேன். இதோடு விட்டு விடுங்கள். இதைப் பற்றி மீண்டும் பரிசீலனை செய்வதற்கு இடமில்லை.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து :</u> இதை எதிர்த்து நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

<u>திரு ரா. உமாநாத் :</u> அவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் வந்திருக்கக்கூடிய ஒரு கேள்வியில் 1977 மார்ச்சு மாதம் முன்னாள் பிரதமர் திருமதி காந்தி அவர்கள் தேர்தல் பிரசாரத்திற்காக தமிழகத்திற்கு வந்தபோது, எவ்வளவு பணம் இந்த அரசாங்க கஜானாவிலிருந்து செலவு செய்யப்பட்டது? அதில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> சீக்கிரமாக முடியுங்கள். இன்னும் இதன்மேல் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

<u>திரு ரா. உமாநாத்:</u> அப்படிப் பிரதமர் அவர்கள் வந்தபோது, அரசாங்கப் பணத்திலேயிருந்து எவ்வளவு செலவழிக்கப்பட்டது என்றும், அதில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தரவேண்டிய பொறுப்பு எவ்வளவு என்றும் கேட்டபோது, அந்தக் கேள்விக்கு வந்த பதிலில் 13 லட்சத்து சொச்சம் ரூபாய் அரசாங்கம் செலவு செய்ததாகவும், அதில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி 69,000 ரூபாய் சொச்சம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள் என்றும், இன்னும் அந்தத் தொகை கொடுக்கப்படவில்லை என்றும் அரசாங்கத்தின் சார்பில் பதில் கூறப்பட்டது. நான் கூறுவேன். அப்படிச் செய்ததே 'எமர்ஜன்சி எக்செஸ்' என்று நான் கூறுவேன். முதல் பாயிண்ட் இப்படி 13 லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டது என்பது. எந்தெந்த ஐட்டத்திற்கு எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது? இரண்டாவது, இப்படி மிக்ஸ் அப் ஆகும்போது, கட்சி கொடுக்க வேண்டியது எவ்வளவு? மொத்தம் 13 லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டதில் எந்தெந்த ஐட்டத்திற்கு, எவ்வளவு எவ்வளவு செலவழிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன். அதில் இந்த 69,000 ரூபாய் மட்டும்தான் காங்கிரஸ் கட்சி கொடுக்கவேண்டுமென்பது, எந்த அடிப்படையில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது? ஒருகால், இந்த 13 லட்சத்தில் 69,000 கொடுக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டது, இந்த சர்க்கார் வருவதற்கு முன்பிருந்த, ஜனாதிபதி ஆட்சி சர்க்கார் இந்த கணக்கைப்போட்டு வைத்திருக்கலாம்.

1978 செப்டம்பர்11] [திரு. ரா. உமாநாத்]

(பிற்பகல் 1-20)

அப்படிக் கணக்கைப் போட்டு வைத்திருந்தால், ஒரேகட்சி மத்திய சர்க்கார், அந்தக் கட்சிப் பிரதிநிதி மாநிலத்தில் இருக் கும்போது கணக்கிடும்போது குறைத்து மதிப்பிட்டிருக்கலாம். இன்றைய சர்க்கார் கூர்ந்து கவனித்தால் இன்னும் கூடுதலாகப் பணம் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி கொடுக்க வேண்டியிருக்கும்.

(திரு. பி. எச். பாண்டியன் தலைமை)

முன்னாள் பிரதமர் வருகிறபோது சில ஊர்களில் 'ஹெலிபாட்' கன்ஸ்ட்ரக்ட் பண்ணியிருக்கிறார்கள். அது அவசியமே இல்லை. தேர்தல் கூட்டத்திற்கு அவர்கள் வருவதற்காக கன்ஸ்ட்ரக்ட் பண்ணப்பட்டிருக்கிறது. பிரதமருடைய செக்யூரிடிக்காக அல்ல. எதற்காக கன்ஸ்ட்ரக்ட் பண்ணப்பட்டிருக்கிறது? சாதாரணமாக காரில் போனால் நான்கு கூட்டங்களில் பேச முடியும். ஹெலி பாட்டில் போனால் ஒரு நாளில் பத்துப் பதினைந்து கூட்டங்களில் பேச முடியும். கட்சியின் சார்பாக நடத்தப்பட்ட அந்தக் கூட்டங் களில் கலந்து கொண்டு பேசுவதற்கு ஹெலிபாட் அமைக்கப்பட் டிருக்கின்றன. அதற்கு அரசாங்கப் பணம் செலவாகியிருக்கிறது. அட்மினிஸ்ட்ரேட்டிவ் பிராப்ளம் என்று திரு. மாரிமுத்து அவர்கள் சொல்லுகிறார்கள்-- "What is the morality involved in this expen- diture" என்ன ஒழுக்க நெறி இதிலே இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். பிரதமர் அவர்கள் வருகிறபோது-திருமதி காந்தி கட்சித்தலைவராக வருகிறார்கள். தங்களுடைய கட்சிக்கு ஓட்டுப் போடு என்று கேட்க வருகிறார்கள். எதிர்த்து நிற்கக்கூடிய கட்சிக்கு ஓட்டுப் போடாதே, தோற்கடிக்க வேண்டுமென்று கேட்க வரு கிறார்கள். அப்படி வருகிறபோது அந்தக் கட்சியின் தேவைக்காக, ஓட்டு கான்வாசிங்குக்காக ரூ. 69,000 என்று அரசாங்கம் சொல்லு கிற கணக்கையே எடுத்துக் கொண்டாலும் கூட அந்தக்கட்சிக்கு 69,000 ரூபாய் அரசாங்க கஜானாவில் இருந்து அட்வான்ஸ் கொடுக் கிறோம் என்று அர்த்தம். That is long and short of it. ஒரு அட்வான்ஸ் கேட்டு அரசாங்க கஜானாவில் இருந்து கொடுப் பதாக அர்த்தம். இதில் என்ன நியாயம் இருக்கிறது? அதுமற்றக் கட்சிகளுக்கு இல்லாத ஒரு சலுகை. தேர்தலில் எல்லாக் கட்சி களும் பங்கிடும்போது காங்கிரஸ் கட்சிக்கு சர்க்கார் கஜானாவில் இருந்து அட்வான்ஸ் அனுமதிப்பதா? என்ன ஒழுக்க நெறி?

சிறு கட்சிகள் இந்த நாட்டில் இருக்கின்றன. சமாளிப்பதே கஷ்டமாக இருக்கிறது. உதவி அவர்களுக்குத் தேவை. சிறுகட்சிகள் எவ்வளவோ கஷ்டப்பட்டு தேர்தலில் நின்று சமாளித்துக் கொண்டிருக்கும் போது பிரம்மாண்டமான ஆளும் கட்சி, அந்தக் கட்சிக்கு இப்படி அரசாங்க கஜானாவில் இருந்து இப்படி பணம் கொடுக்கப்பட்டிருப்பது மொராலிடியாக இருக்குமா?

ஒரு கோர்ட் தீர்ப்பே இருக்கிறது. அலகாபாத் கோர்ட் தீர்ப்பில் அரசாங்க உத்தியோகஸ்தரை மேடை போட உபயோ கித்ததே சட்ட விரோதமானது-- Mal practice under the Election Law. என்று தீர்ப்புக் கூறப்பட்டிருக்கிறது. அதே தேர்தல் வேலைக்கு

[திரு. ரா. உமாநாத்] [1978 செப்டம்பர் 11

அரசாங்க கஜானாவில் இருந்து பணத்தை உபயோகப்படுத்தியது தவறு இல்லையா? அதிகாரியை உபயோகப்படுத்தியதே தப்பு என்று சொல்லி எலக்ஷன் வாய்டு ஆக்கப்பட்டிருக்கும்போது அரசாங்க கஜானாவில் இருந்து பணத்தைச் செலவு செய்வது -- Unfair Practice.

பார்ட்டி செலவுகள் பிரதமர் சுற்றுப்பயணத்தில் மிக்ஸ் அப் ஆகிறது என்று சொன்னால் அந்தப் பார்ட்டியிடத்திலிருந்து ஏன் அட்வான்சாகப் பணத்தைச் சர்க்கார் வாங்கி வைத்துக் கொள்ளக் கூடாது? மின்சாரத்திற்கு கனெக்ஷன் வேண்டுமென்றால் அட்வான்ஸ் கேட்கிறீர்கள். கட்சிச் செலவும், பிரதமர் என்ற முறையில் செக்யூரிடி செலவுகளும் மிக்ஸ் அப் ஆகும் இடத்தில் சம்பந்தப்பட்ட கட்சியினிடத்தில் அட்வான்சாகப் பணம் வாங்கியிருக்கவேண்டும்.

திரும்ப வசூல் செய்வது பற்றி, ரெகவரி சம்பந்தமாக நியாயப் படி பார்த்தால் உண்மையில் -- The congress party shouid have come forward to shell out the money Whatever it is இதற்குள் தீர்த்திருக்க வேண்டும். அப்போதே முடித்திருக்க வேண்டும். அவர்களே முன்வந்திருக்க வேண்டும் அவர்கள் மறுத்து விட்டனர். இது என்ன நெறி என்று கேட்க விரும்புகிறேன். மக்கள் வரிப்பணத்தில் இருந்து காங்கிரஸ் கட்சி ஆட்சி அதிகாரத்தில் இருந்ததால் எப்படி வேண்டுமானாலும் செலவு செய்யலாம் என்று அவர்கள் நினைக்கிறார்களா என்பது தெரிய வேண்டும்.

எமர்ஜென்சி என்று ஒன்று சொல்லப்பட்டது.- - To maintain the discipline within the country and the people. இது என்ன டிசிப்ளின்? அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய பணத்தை இன்றைக்கும் கொடுக்க மறுப்பது என்பது - - - Most indiscipline. இந்த 'இன்டிசிப்ளின்' எப்போ நடக்கிறது? அவசர காலப் பிரகடனம் அமலில் இருக்கும்போது ஜனங்களுக்கு டிசிப்ளின் அந்தக் கட்சிக்கு டிசிப்ளின் வேண்டியதில்லை. ஆளும் காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் டிசிப்ளின் வேண்டியதில்லை என்ற விஷயம் - - It is not moral என்று சொல்ல முடியும்.

அடுத்து ரெக்கவரியைப் பொறுத்தவரைக்கும் சர்க்காருக்கு பொறுப்பு உண்டு. ஜனதிபதி சர்க்கார் இருந்தபோது அவர்கள் வசூல் செய்திருக்க வேண்டும், வசூலிக்கவில்லை. பெர்ஹேப்ஸ், அவர்கள் என்ன நினைத்தார்களோ, தங்கள் கட்சி வெற்றிபெறும், ஆகவே காலப்போக்கில் பைய பைய அது கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துபோகும் என்று நினைத்தார்களோ என்னவோ தெரியவில்லை,

ஆனால் நம்முடைய அரசு தேர்ந்தெடுக்கப்பட்டு வந்ததற்குப் பிறகு, வந்து 14 மாதங்கள் ஆயிற்று, என்ன நடவடிக்கை எடுத்தது, ஏன் வசூலிக்கவில்லை? காங்கிரஸ் கட்சிக்கு பணம்

1978 செப்டம்பர் 11] [திரு. ரா. உமாநாத்]

இல்லையா? 30 ஆண்டுகாலமாக சென்ட்ரல் கவர்ன்மென்டில் இருந்து ஆட்சி செய்த கட்சி. That is the one party which has got the biggest financial recources?

கம்பெனிகளின் பேலன்ஸ்ஷீட்டிலே கோடிக்கணக்கான ரூபாய்
அந்த பார்டிக்கு கொடுக்கப்பட்டதாக கொடுக்கப்பட்டிருக்கிறது.
கம்பெனிகளிடமிருந்து சாவ்யனீர் என்ற பெயரால் கோடிக்
கணக்கான ரூபாய்கள் அந்தப் பார்டிக்குக் கொடுக்கப்பட்டிருக்
கிறது. வசூல் செய்திருப்பதாக கணக்கிலே இருக்கிறது, ஆகவே
பணம் இல்லையென்று சொல்ல முடியாது. ஏன் நம்முடைய
சர்க்கார் ரெக்கவரி செய்யவில்லை. கொடுக்க மறுக்கிறார்களா?
கொடுக்க மறுத்தால் ஏன் ஜப்தி செய்யவில்லை. ஜப்தி செய்ய
வேண்டியது தானே. தமிழ்நாடு கட்சித்தலைவர் இருக்கிறார்,
அவருக்கு ஜப்தி வாரண்ட் விட்டுவிட வேண்டியதுதானே எவ்வளவு
அமவுண்ட் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறதோ அந்த
அமவுண்டுக்கு ஜப்தி வாரண்ட்டு விட்டு வசூலிக்கவேண்டும்,
இல்லாவிட்டால் திருமதி இந்திரா காந்திக்கே நோட்டீஸ் விட்டு
வசூல் செய்ய வேண்டும். மின்சாரக் கட்டணம் கட்டத் தவறினால்
நாம் பியூஸையே எடுத்துவிடுகிறோமே, கோவாப்ரேட்டிவ் லோன்ஸ்
கட்டவில்லையென்றால் ஜப்தி செய்கிறோம் அல்லவா? இந்தக் கட்சி
69 ஆயிரத்து சொச்சம் ரூபாய் - கிட்டத்தட்ட 3/4 லட்சம்ரூபாய்
கொடுக்கவேண்டியிருக்கிறது. ஜப்தி செய்யாமல் விட்டுவைப்பது
தவறு.

இறுதியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். இதிலே
காலதாமதத்தை அரசாங்கம் அனுமதித்தால் அந்தப் பணமே
போய்விடும். ஏனென்றால் மத்திய சர்க்காருக்கே அந்த அம்மா
பிரதமராக இருந்தபோது தேர்தல் செலவு செய்தவகையில்
பணம் கொடுக்கவேண்டியிருக்கிறது, அதனாலே தான் அங்கே
அந்தக் கேள்வியே வந்தது. விஷயம் வெளியே வந்தது. அந்தக்
கட்சியினுடைய செயலாளர் மரகதம் சந்திரசேகருக்கு நோட்டீஸ்
விட்டுக் கேட்டதற்கு அந்தச் செலவு செய்த கணக்கு எங்களுக்கு
இல்லை, ரெட்டி காங்கிரஸிலே கேளுங்கள் என்று சொல்லி
விட்டார்கள், பிறகு ரெட்டி காங்கிரஸுக்கு நோட்டீஸ் விட்டார்
கள். அவர்கள் இந்திராகாந்தி காங்கிரஸைத்தான் கேட்கவேண்டும்,
எங்களுக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்று சொல்லி விட்
டார்களாம்; ஆகவே இங்கேயும் தாமதம் செய்தால் லாக் அப்
ரூபிஸ் கையைவிட்டுப் போய்விடப் போகிறது. அதற்குப் பிறகு
அங்கே பார்லிமெண்டிலே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து
அந்தச் சுற்றுப்பயணத்தைச் செய்தது, அந்த அம்மாதான் செய்
தது, ஆகவே அந்த அம்மாவிற்கே நோட்டீஸ் விட வேண்டுமென்று
முடிவு செய்யப்பட்டது.

ஆகவே இதிலே இரண்டு விஷயங்கள் இருக்கின்றன, ஒன்று
69 ஆயிரம் ரூபாய் என்பது உண்மைதானா என்பதை அமைச்சரவை
பார்த்து நிர்ணயிக்க வேண்டும். இரண்டு, இறுதியிலே நிர்ணயிக்கக்
கூடியதொகையை தயவுதாட்சண்யம் இல்லாமல் ஜப்தி வாரண்ட்

[திரு ரா. உமாநாத்] [1978 செப்டம்பர் 11

விட்டு வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசாங்கத்தின் நிலை அதிலே என்ன என்பதைச் சொல்லவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. KANDASAMY: We must also be given an opportunity, because it is a matter of great public importance.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கே. கந்தசாமி அவர்கள் தயவுசெய்து கொஞ்சம் ஒத்துழைக்கக் கேட்டுக்கொள்கிறேன். மணி 1½ ஆகிறது. இனியும் இதைத் தொடர்ந்து கொண்டுபோனால் வெறும் காலி அறையை நோக்கி நான் பேச வேண்டிய துர்பாக்கியம் எனக்கு ஏற்பட்டுவிடும் என்று நினைக்கிறேன்.

THIRU M.A. LATHEEF: Mr. Chairman, it is a matter of public importance.

THE HON. THIRU K. MANOHARAN: It is a matter of public importance. That is why, with all respects I am answering the question. please sit down.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. பி. எச். பாண்டியன்):- பேரவையில் அனுமதியோடு அவையை நீட்டிக்கிறேன்.

திரு. க. சுப்பு: நான் பேசிய பிறகு அமைச்சர் பதில் சொல்லட்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): இப்பொழுது எதில் பேசுகிறீர்கள்?

திரு. க. சுப்பு: பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். தலைவரவர்களே, இது 'சஃபிசியண்ட் பப்ளிக் இம்பார்ட்டன்ஸ்' என்று எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. யாரும் பேசாமல் பதில் சொல்வோம் என்றால், It is not at all public importance என்றால் you should not have not allowed.

அலவ் செய்த பிறகு எங்களைப் பேச அலவ் செய்யாமல் இருப்பது என்ன முறை? எங்களைப் பேச அழைக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: 'சஃபிசியண்ட் பப்ளிக் இம்பார்ட்டன்ஸ்' இல்லை என்று அவை கருதுமானால் தள்ளி விடலாம்.

திரு. க. சுப்பு: சபாநாயகரவர்கள் அதை அனுமதித்து விட்டார்கள்.

1978 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: உங்கள் அனைவரின் சார்பாகவும் திரு. உமாநாத் அவர்கள் பிரச்னையைத் தெளிவாக எடுத்து வைத்திருக்கிறார்கள்.

திரு. க. சுப்பு: இப்பொழுது மாரிமுத்து வெளியே போய் விட்டார், அவர் சார்பில் பேசியதாக எடுத்துக் கொள்ள முடியுமா? நாங்கள் பேசித்தான் ஆகவேண்டும். If it is clarification I will sit down.

THE HON. THIRU K. MANOHARAN: I am clarifying the position....

திரு. க. சுப்பு: ஒருவருக்கு ஐந்து ஐந்து நிமிஷம் கொடுங்கள், பேசுகிறோம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாற்றுத்தலைவரவர்களே...

திரு. க. சுப்பு: இப்பொழுது கால்மணி நேரம் தான் ஆகிறது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாற்றுத் தலைவரவர்களே, இப்பொழுது இது மிக முக்கியத்துவம் பொருந்திய ஒரு பெரிய பிரச்னை என்று கருதிய காரணத்தினாலே தான் நமது மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களும் அரை மணி நேர விவாதத்திற்கு இதை எடுத்துக் கொண்டார்கள் என்று இங்கே நண்பர்கள் கூறியதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அரைமணி நேர விவாதத்திற்கு இது எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதை ஒருமுறை வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே இருபது நிமிடங்கள் முடிந்து விட்டன, அல்லது இருபத்து ஐந்து நிமிடங்கள் முடிந்து போயிற்று. அதற்குப் பிறகு மீண்டும் ஒரு விளக்கத்தைத் தருவதன் மூலம் கேள்வி கேட்க வேண்டுமென்று விரும்புகின்றவர்களுக்கு நிச்சயமாக அது ஒரு பதிலாக அமையும் என்று கருதுவதால், நீங்கள் எதைக் கேட்கப் போகின்றீர்களோ அதை நானும் எண்ணிப் பார்த்துப் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்து, தயவுசெய்து என்னை அதற்குப் பதில் சொல்ல அனுமதிக்குமாறு அவை உறுப்பினர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே,....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): ஏற்கனவே இருபது நிமிடங்களாகி விட்டன, இன்னும் பத்து நிமிடங்கள்தான் இருக்கிறது. எனவே, அதற்குள் மினிஸ்டர் பதில் சொல்லட்டும்.

THIRU M. A. LATHEEF: We must also be given an opportunity to express our views....

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்):</u> அரை மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, ஏற்கனவே இருபது நிமிடங்கள் ஆகிவிட்டன, இன்னும் 10 நிமிடங்கள்தான் இருக்கின்றன. Let the Hon. Minister reply.

<u>திரு. க. சுப்பு:</u> அது டிஸ்கஷன் ஆகவில்லை.

THIRU A. RAHMANKHAN: On a point of order ....

MR. CHAIRMAN (THIRU P. H. PANDIAN): There shall be no formal motion before the House nor voting the discussion shall terminate at the end of half an hour என்று இருக்கிறது.

<u>திரு. க. சுப்பு:</u> அது தான் இல்லை. டிஸ்கஷன் நடக்கவே இல்லையே.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச் பாண்டியன்):</u>- பேசுவது தான் டிஸ்கஷன், நீங்கள் உட்காருங்கள்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்:</u> நேரத்தை வீணாக்கிக் கொண்டு இருக்கிறீர்களே தவிர பதில் சொல்ல என்னை அனுமதிக்கக் கேட்டுக்கொள்கிறேன். நான் திரு. சுப்பு அவர்களுக்காகவும் பேசுகிறேன். உங்கள் உணர்வுகள் எனக்குத் தெரியும், என்ன கேட்கப் போகிறீர்கள் என்று தெரியும். திரு. உமாநாத் கேட்டதை விட ஒன்றும் அதிகமாகக் கேட்கப் போவதில்லை என்பதும் தெரியும்.

<u>திரு. ஏ. ரகுமான்கான்:</u> தலைவரவர்களே, ...

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச் பாண்டியன்)</u> இருபது நிமிடங்களுக்கு மேலாகி விட்டது, இப்பொழுது ஐந்து நிமிடங்கள் ஆகிவிட்டன.

<u>திரு. க. சுப்பு:</u> இதில் ஒவ்வொருவருக்கும் ஐந்து நிமிடங்கள் கொடுத்திருக்கலாம்.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்):</u> நீங்கள் உட்காருங்கள், மாண்புமிகு அவை முன்னவரவர்களை ப[illegible] அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். டிஸ்கஷன் ஓவர், இன்னும் 5 நிமிஷம் டைம் இருக்கிறது. அதற்குள் அவை முன்னவர் பதில் சொல்ல வேண்டும்.

(கூச்சல் குழப்பம்)

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்:</u> மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சனைக்கு இவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறது என்பதை நமது உறுப்பினர்கள் ஒவ்வொருவரும்

எழுந்து நின்று 2 நிமிடத்திற்குள், 3 நிமிடத்திற்குள் முடித்துக் கொள்கிறோம் என்று சொன்னதிலிருந்து நான் புரிந்துகொள்கிறேன். ஆகவே தயவு செய்து அதிகமாக நீட்டாமல் சில விஷயங்களைத் தெரிந்து கொள்கிற முறையில், கேள்வியாக ஒன்றிரண்டைக் கேட்டு, எனது பதிலைப் பெறுவதன்மூலம், அவையைச் சீக்கிரமாக முடிக்க உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப் பேச விரும்புகிற நண்பர்கள் இரண்டு மூன்று பேர்கள்தான் இருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆக, அவர்களெல்லாம், 2 நிமிட, 3 நிமிட நேரத்திற்குள் முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அவர்கள் நல்ல விவரம் தெரிந்தவர்கள் என்ற காரணத்தினால் சீக்கிரமாகக் கேள்விகளைப் போட்டு, எனக்கு பதில் சொல்ல அனுகூலமாக இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

<u>திரு. க. சுப்பு:</u> முன்னாள் பிரதமர் அவர்கள் இங்கே பிரச்சாரத்திற்கு வந்த நேரத்தில், அவர் பிரதமராக வரவில்லை, கட்சிக்காரராகத்தான் வந்தார் என்று சொல்ல முடியாது. கட்சிக்காரரையும் பிரதமரையும் வெவ்வேறாகப் பிரித்துப் பார்க்க முடியாது. முன்னாள் பிரதமர் கட்சிக்காரராக வந்தார் என்று சொன்னால், மதுரை தேர்தலுக்கு அமைச்சர்கள் வந்து பிரச்சாரம் செய்ததை எந்தக் கணக்கிலே வசூலிப்பது என்பதற்குப் பதில் சொல்லியாக வேண்டும். தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்ததால் அந்தப் பணத்தை வசூலித்திருக்க வேண்டும், அதில் அரசு தவறியிருக்கிறது என்ற காரணத்தாலே.......

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:</u> தலைவரவர்களே, மதுரை மாநகராட்சித் தேர்தலுக்கு அமைச்சர்கள் செய்த பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திய கார், தங்கிய இடத்திற்கான வாடகை எல்லாம் கட்சியிலே இருந்து கட்டப்பட்டிருக்கிறது.

<u>திரு. க. சுப்பு:</u> வாங்கியிருக்கிற படி, அதுவும் கட்சியிலே இருந்து கட்டியிருக்கிறார்களா? நான் கேட்க விரும்புகிறேன், முழுமையான விவரத்தை இந்த அவையிலே சொல்லத் தயாரா? (கூச்சல் குழப்பம்).

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> முன்னாள் பிரதமர் வந்து போனதற்கான செலவைப் பற்றிப் பேசுகிறோம். (கூச்சல் குழப்பம்) உங்களை மாதிரி இருந்தால் என்ன செய்ய முடியும்?

<u>திரு. க. சுப்பு:</u> சபாநாயர் அவ்வாறு சொல்வது தவறு.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> நான் நிற்கும்போது நீங்கள் நிற்கக் கூடாது. (கூச்சல் குழப்பம்) நீங்கள் பேசுகிற குரல் எதிரொளிக்கும் உண்டு. தயவுசெய்து சுப்பு, ரகுமான்கான் இரண்டு பேர்தான் இந்த அவையிலே இருக்கிறார்கள் என்று நினைக்கக்

[பேரவைத் தலைவர்] [1978 செப்டம்பர் 11

கூடாது. (கூச்சல் குழப்பம்) தயவு செய்து எல்லோருக்கும் தெரிகிறது, உட்கார வேண்டும். மற்றவர்களைப் பற்றி கேட்க உங்களுக்கு அதிகாரம் கிடையாது. **யாரைப்** பார்த்து நான் உட்கார் என்று சொல்கிறேனோ அவர் உட்கார வேண்டும், மற்றவர்களைப் பற்றி கேட்க அவருக்கு அதிகாரம் கிடையாது. எல்லோரும் எழுந்து பேசினால் என்ன அர்த்தம்? உங்களுக்கு அனுமதி கொடுக்க முடியாது, உட்காருங்கள், அமைச்சர் பதில் சொல்லப்போகிறார்.

(பிற்பகல் 1-40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் மதுரை மாநகராட்சித் தேர்தலில் அமைச்சர்கள் கலந்து கொண்ட நேரத்தில் கலந்து கொண்ட பல்வேறு நிகழ்ச்சிகளுக்கான செலவு பற்றிக் கேட்டார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பணத்தை எல்லாம் கட்சியே செலுத்தி விட்டது என்பதை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இது 7 ஆண்டுக் காலம் தி.மு.க. ஆட்சி நடத்திய நேரத்தில் அந்த அமைச்சர் பெருமக்கள் செய்த செலவுகளைப் பார்க்கின்ற நேரத்தில் அவைகளைவிட இது கொஞ்சம் சிறப்பாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

திரு. க, அன்பழகன்: அமைச்சராக இருக்கிறபோது அரசியல் கட்சிப் பணியிலே ஈடுபடுவதற்காக ஏற்படுகின்ற செலவுகள் பற்றி அமைச்சர் பொறுப்பிலே இருக்கிற காரணத்தாலே அதைப் பிரித்துப் பார்க்க முடியாது என்று காரணம் காட்டித்தான் அவர் வாதம் செய்கிறாரே தவிர, திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தபோது செய்ததை சுட்டிக்காட்டுவதற்காக அவர் சொல்லவில்லை. அப்போது அரசாங்கத்திலே இருந்த பெருந்தலைவர் காமராஜர் முதல் பக்தவச்சலம் வரையில் அரசியல் செய்திருக்கிறார்கள் இந்திரா காந்தி பிரதமர் என்ற முறையில் வந்து தேர்தல் பிரச்சாரம் செய்ததால், கட்சி என்கிற முறையிலே நீங்கள்தான் பிரித்துச் சொல்லி இருக்கிறீர்கள். பிரதமராக செய்த செலவு, கட்சிக்காக செய்த செலவு என்று அரசாங்கம் பிரித்துச் சொன்னதால் வருகிற வாதமே தவிர, அமைச்சராக இருக்கிறபோது அரசியல் நிகழ்ச்சிகளிலே கலந்து கொள்ளக் கூடாது என்றோ கலந்து கொண்டு அரசியல் பேசக் கூடாது என்றோ சொல்லவில்லை.

THIRU J. JAMES: Point of Order, Sir, I wish to bring to your kind attention Clause (2) of Rule 40 which states as follows:

"A member wishing to raise a matter shall give notice in writing to the Secretary two days in advance of the date on which the matter is desired to be raised, and shall briefly specify the point or points that he wishes to raise, together with the reasons for raising the discussion on the matter in question

1978 செப்டம்பர் 11] [Thiru J. James]

Also Clause (5) of the same Rule 40 states that, "There shall be no formal motion before the House nor voting and the discussion shall terminate at the end of half an hour".

May I submit that there is no motion before the house. The Hon. Member who raised the issue is entitled to point out certain matters. The Hon. Minister can reply. Nobody else has got any right to enter into a discussion on this matter.

THIRU K. KANDASAMI: May I, point out a clarification Sir. The same rule says that the "dicussion shall terminate at the end of half an hour". Discussion means others participation. It does not mean only the concerned member raising the issue and the Minister alone replying or giving the answer.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே,

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து திரு. சுப்பு பேசிய அனைத்தையும் நீக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

* * *

திரு. உமாநாத் அவர்கள் முன்னாள் பிரதமர் வருகையின்போது எந்தெந்த பெருந்தலைப்புகளின் கீழ், எவ்வளவு தொகை செலவிடப்பட்டது என்பது குறித்துத்தான் கேட்டிருக்கிறார். தயவு செய்து திரு. சுப்பு அவர்கள் பேரவைத் தலைவர் அவர்களுக்கோ, அவைக்கோ ஒன்றும் தெரியாது, தமக்குத்தான் தெரியும் என்று பேசக் கூடாது. அவைகளைப் பேசாமல் இந்தப் பிரச்சினைக்கு அவர்கள் விளக்கம் கொடுக்க வேண்டும்.

திரு. க. சுப்பு: எக்ஸ்பிளநேஷன் கொடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களைப்போல 234 பேர்களுக்கு ½ மணி நேரம் கொடுக்க வேண்டும். திரு. சுப்புவுக்கு மட்டும் அல்ல. அதை ஒட்டி ஒரு நிமிடம் தருகிறேன். தயவு செய்து சொல்லுங்கள்.

THIRU M. A. LATHEEF: Sir, may I submit that it is a comment the hon. Member has made. A matter has been raised and ther is a discussion and while there is a discuss on the Membre is entitled to make comments politically. He shall not be precluded from doing so. I do not know how he could be precluded from making comments politically. It is a *bona fide* comment. He has not mentioned any particular person or party.

** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து திரு. லத்தீப், உட்காருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: நீங்கள் எதை வேண்டுமானாலும் சொல்லலாம். நாங்கள் எதையும் சொல்லக் கூடாது என்றால் என்ன அர்த்தம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லத்தீப், நீங்கள் உட்காருங்கள். என்னைப் பேசவிடுங்கள். அவர் என்ன சொல்ல வேண்டுமோ அவற்றை மட்டும் சொல்லவேண்டும். எல்லாவற்றையும் சொல்கிறார்கள். (குறுக்கீடு) திரு. லத்தீப் அவர்களைப் பற்றி ப்ரோசீடிங்க்ஸ் எடுத்துப் பார்த்தால் தெரியும். நான் திரு. சுப்பு அவர்களோடு வாதாடுகிறேன். நான் அவர் பேச்சை தடை செய்வதற்கும், நீக்குவதற்கும் உரிமை உண்டு. அதில் குறுக்கீடுவதற்கு உங்களுக்கு உரிமை இல்லை. உங்கள் பிரச்னை வருகிற போது பேசுங்கள், உட்காருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: நான் அதை ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வழக்கறிஞர் என்பதால் நீங்கள் சொல்வதை எல்லாம் நான் ஏற்றுக்கொள்ள முடியாது. (குறுக்கீடு) தாங்கள் பேசுகிறபோதே அவையில் ஏதாவது உண்டாக்க வேண்டும் என்று பேசுகிறீர்கள். ப்ரொசீடிங்க்சைப் பார்த்தாலே திரு. லத்தீப் அவர்கள் நீண்டகாலமாக இந்த அவையில் எப்படி நடந்து கொண்டு இருக்கிறார் என்பது தெரியும். திரு. லத்தீப்: நீங்கள் உட்காருங்கள். திரு. க. சுப்பு......

திரு. எம். ஏ. லத்தீப்: நீங்கள் அவையில் தலைவராக இருக்கிறீர்கள். உறுப்பினரைப் பற்றிக் குற்றம் சொல்ல உங்களுக்கு உரிமை கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்னை மீது விவாதம் ஆரம்பித்து, ½ மணி நேரம் ஆகிவிட்டது. ஆகவே, அதன் மீது விவதாம் முடிந்து விட்டது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.46 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(8) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

88. தமிழ்நாடு 1960-ஆம் ஆண்டு மதுபான (உரிமம்-அனுமதிச் சீட்டு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 17-6-1978-ஆம் தேதியிடப்பெற்ற 1387-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண். 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

89. ஈரோடு வட்டத்திலுள்ள காளிங்கராயன்பாளையம் சோதனைச் சாவடியை, சூரியம்பாளையம் என்னுமிடத்திற்கு மாற்றுவது குறித்து, வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 23-6-1978 ஆம் தேதியிடப் பெற்ற 819-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1949-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண்.1/1959 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

90. 1974-76-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மை பண்ணைக் கழகத்தின் முதலாம் ஆண்டு அறிக்கையும் அதன்மீது அரசின் ஆய்வுரையும் [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

*31. 1973-74-ஆம் ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் இனங்கள்) குறித்த பொதுக் கணக்குக் குழுவின் ஐந்தாவது அறிக்கை.

† 32. 1971-72-ஆம் ஆண்டிற்கான வணிகத்துறை தவிர்த்த பிற துறைகள் பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை.

† 33. 1972-73-ஆம் ஆண்டிற்கான, வணிகத்துறை தவிர்த்த பிற துறைகள் பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை.

† 34. 1972-73-ஆம் ஆண்டிற்கான வணிகத்துறைகள் பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை.

---

* 8-9-1978 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றது.

† 9-9-1978 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றது.

இணைப்பு I

160-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 305க்கான விடையைக் காண்க.

பதில்.

தரிசாக உள்ள நிலங்களைத் தீவிர சாகுபடிக்கு கொண்டு வருவதற்காக, தண்ணீர் வசதியைப் பெருக்க குழாய்க் கிணறுகள் தோண்டப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1. திருச்சி மத்திய சிறையில் மூன்று குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. ஒரு ஆழ்கிணறு இயந்திரம் பம்ப் செட் வாங்குவதற்கான செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது. மேலும் ஒரு பம்ப் செட் பொருத்தப்படவிருக்கிறது.

2. தஞ்சாவூர் திறந்த வெளிச் சிறையில் இதுவரை நான்கு ஆழ்கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. இரண்டு ஆழ் கிணறு இயந்திரப் பம்பு செட்டுகள் பொருத்துவதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

3. சேலம் மத்திய சிறையில் மூன்று குழாய்க் கிணறுகள் தோண்டப் பட்டுள்ளன. இந்திய அரசு, தமிழ்நாட்டில் சிறைத் துறையைச் சார்ந்த விவசாய அபிவிருத்திக்கென, இணைப்பில் காட்டியபடி, மூன்று லட்ச ரூபாய் மதிப்பில் 16 குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கு உதவ முன் வந்துள்ளது. எல்லா குழாய்க் கிணறுகளும் செயல்படத் தொடங்கினால், விவசாய உற்பத்தி பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே சிறைச் சாலைகளில் காய்கறி மற்றும் தினை வகைகளில் தன்னிறைவு காண வாய்ப்பு உள்ளதாக இருக்கும். கூடுதலாக நீர் கிடைக்குமாயின் நெல் உற்பத்தியை பெருக்குவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படும்.

இணைப்புகள்

மத்திய சிறைகளிலுள்ள நிலங்களில் தோண்டப்படவிருக்கும் தேவைப்படும் குழாய்க் கிணறுகள்பற்றிய பட்டியல்.

	சிறைகளின் பெயர்.	சாகுபடிக்கான நிலத்தின் மொத்த பரப்பு.	தற்சமயம் சாகுபடியின் கீழுள்ள நிலத்தின் பரப்பு.	தரிசாக உள்ள நிலத்தில் தீவிர சாகுபடிக்கான பரப்பு.	தோண்டப்பட விருக்கும் குழாய் கிணறுகளின் எண்ணிக்கை.
	(1)	(2)	(3)	(4)	(5)
1	மத்திய சிறை, சேலம்.	29 ஏக்கர்	9 ஏக்கர்	20 ஏக்கர்	2
2	மத்திய சிறை, மதுரை.	11 ஏக்கர்	5 ஏக்கர்	6 ஏக்கர்	2
3	மத்திய சிறை, பாளையங் கோட்டை.	24 ஏக்கர், 3 சென்ட்.	10 ஏக்கர் 21 சென்ட்	13 ஏக்கர், 82 சென்ட்	2
4	மாநில மகளிர் சிறை, வேலூர்.	14 ஏக்கர்	14 ஏக்கர்	..	1
5	மத்திய சிறை, கடலூர்.	37 ஏக்கர், 30 சென்ட் (33 ஏக்கர், 18 சென்ட் சாகுபடிக்கானது)	8 ஏக்கர்	25 ஏக்கர் 18 சென்ட்	2

6	மத்திய சிறை, வேலூர்.	24 ஏக்கர், 66 சென்ட்	24 ஏக்கர் 66 சென்ட் (காய்கறிக்காக 3 எக்கர் மற்றும் சோளத்திற்காக 21 ஏக்கர்)	..	2
7	மத்திய சிறை, திருச்சி.	79 ஏக்கர், 41 சென்ட்	14 ஏக்கர், 60 சென்ட்	64 ஏக்கர், 72 சென்ட்	3
8	திறந்தவெளிச் சிறை, தஞ்சாவூர்.	114.18 ஏக்கர்	100 ஏக்கர்	14.18 ஏக்கர்	2
					16

இணைப்பு II

[163ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 316 க்கான விடையைக் காண்க.]

பதில்

தர்மபுரி மாவட்டத்தில் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படவிருக்கும் வீடுகளின் எண்ணிக்கையும் அதன் திட்ட மதிப்பீடும்.

வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும் இடமும். (1)		திட்டமிடப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை (2)	திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சங்களில்). (3)
I.	குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம்.		
1	தர்மபுரி	67	9.00
2	கிருஷ்ணகிரி நகரசபை ஊழியர்களுக்கு	30	5.40
3	கிருஷ்ணகிரி ஆசிரியர்களுக்கு	100	18.00
4	பாலகோட்டில் சர்க்கரை ஆலை தொழிலாளர்களுக்கு	24	4.50
5	ஓசூர்	37	6.66
II	நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம்		
1	தர்மபுரி	16	4.32
2	பாலக்கோடு சர்க்கரை ஆலை தொழிலாளர்களுக்கு	24	9.00
III	மிகக்குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம்.		
1	பாலக்கோடு சர்க்கரை ஆலை தொழிலாளர்களுக்கு	100	10.50
2	ஓசூர்	19	2.00
IV	தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கான வீட்டு வசதித் திட்டம்.		
1	ஊத்தங்கரை	18	5.91
2	ஓசூர்	6	1.22
		441	76.51

மொத்த திட்ட மதிப்பு .. ரூ. 76.51 இலட்சம்

இவ்வாண்டில் ஒதுக்கப்பட்ட தொகை .. ரூ. 16.10 இலட்சம்.

[1978 செப்டம்பர் 11

இணைப்பு III

168 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத விஞ எண் 332 க்கான விடையைக் காண்க.]

விடை

(அ) புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வாம்பன் பயறு வகை ஆராய்ச்சி நிலையத்தையொட்டி உள்ள 1000 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு பெரும் (G ant பழத் தோட்டம், ரூபாய் 12·25 இலட்சம் செலவில் அரசு ஒப்பளிப்புடன் 21-10-77 முதல் அமைந்து செயல்பட்டு வருகிறது.

(ஆ) பெரிய அளவில் பழத் தோட்டங்கள் அமைக்கும் திட்டம் இதுவரை தமிழகத்தில் செயல்படுத்தியது கிடையாது. மா, பலா, எலுமிச்சை, கொய்யா போன்ற பழங்களின் உற்பத்தியைப் பெருக்கி ஏழை மக்களுக்கு நிறைய பழங்கள் குறைந்த விலையில் கிடைக்கச் செய்யவும், வேளாண் மக்களுக்குத் தரமான பழக் கன்றுகள் கிடைக்கவும் வறண்டு கிடக்கும் பயனற்ற நிலங்களை உபயோகப்படுத்தி நல்லூதியம் தரும் பழத் தோட்டங்களைப் பெரும் பரப்பில் உண்டாக்குவதுமே இத் திட்டத்தின் சீரிய குறிக்கோளாகும்.

இதுவரை இந்தப் பழப் பண்ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 671 ஏக்கர் நிலங்களில் 443 ஏக்கர் நிலங்கள் திருத்தியமைக்கப்பட்டு பயிரிடத் தகுதி வாய்ந்ததாக மாற்றப்பட்டுள்ளன. ஏற்கனவே 58 ஏக்கர் நிலப்பரப்பில் 43,000 ஒட்டு ரக நீலம், பங்களூரா, பங்கனப்பள்ளி, செந்தூரா, பீத்தர் போன்ற மாஞ்செடி வகைகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. சுமார் 200 ஏக்கர் பரப்பில் மண்வளப் பாதுகாப்பு ஏற்கனவே செய்யப்பட்டுள்ளது. இப் பண்ணையில் செயல் திட்டங்கள் படிப்படியாக விரிவடைந்து இத்திட்டக்கால இறுதிக்குள் அது 1000 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகவும் மிகவும் பயன் தருவதாகவும் அமையும். ஐந்து வருடங்களுக்குப் பின இப் பண்ணையின் மூலம் ஆண்டுதோறும் ரூபாய் 10 இலட்சமும், 10 வருடங்களுக்குப் பிறகு ஆண்டுதோறும் ரூபாய் 20 இலட்சமும் வருவாய் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பண்ணையில் பணிபுரியும் பணியாளர்களுக்குக் குடியிருப்பு வசதிக்காகவும், கிடங்குகளுக்காகவும் ரூபாய் 2 இலட்சம் மொத்த வரவு செலவு மதிப்பீட்டின் கீழ் அரசு ஆணை வழங்கியுள்ளது.

1978 செப்டம்பர் 11]

இணைப்பு IV

[169-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத விஞ எண் 333 க்காண விடையைக் காண்க]

விடை

மத்திய அரசு, தமிழ் நாட்டில் உள்ள குறிப்பிட்ட
(அ) மற்றும் (ஆ) மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டுத் திட்டத்தை
அமுலாக்க உத்தேசித்தது. அதன் அடிப்படையில் தமிழ்நாட்டில்
தருமபுரி மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு, திட்டங்களை செயல்
படுத்தும் வகையில் அறிக்கை ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பப்
பட்டது. இத்திட்டத்தை செயல்படுத்த ரூபாய் 69.665 இலட்சம்
செலவில் கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்த இந்திய அரசு
அனுமதி வழங்கியுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

திட்டத்தின் பெயர்/ பகுதி.	திட்டக் குறிப்பு.	ஒதுக்கப்பட்ட தொகை.
(1)	(2)	(3)
		0.04
நில மேம்பாடு	1 கழிவுநீர் வசதி திட்ட மாதிரிக்கு	0.20
பயிர் மேம்பாடு	1. சூரியகாந்தி பூ செய் முறைக்கு	
	2. 500 ஏக்கர் பரப்பளவில் விரிவாக்க பகுதிக்கு	0.93
	3. உயர் ரக நவதானியங்களை வழங்கி செய் முறைக்கு	1.30
		1.04
தோட்டக்கலை	1. காய்கறி பயிரிடுதலுக்கு	0.20
	2. வீட்டு தோட்டப் பயிரிடுதலுக்கு	0.09
	3. காளான் பயிர் வளர்ப்புக்கு	1.15
பட்டுப் புழு வளர்ப்பு	1. செய்முறை	
கால்நடை பராமரிப்பு மற்றும் பால் மேம்பாடு.	1. 50 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் ..	2.24
	2. இரண்டு குளிரூட்டு நிலையங்கள் விரிவாக்கம் ..	22.25
	3. பால் கொண்டு போகும் வாகனம் வாங்க ..	4.50
	4. செயற்கை கருவூட்டு முறையில் கலப்பு உற்பத்தி..	19.935
	5. பசு மாடுகள் வாங்க ..	7.11
	6. ஆடு வளர்ப்பு	3.00

சட்டத்தின் பெயர்/பகுதி.	திட்டக் குறிப்பு.	(ரூபாய் இலட்சத்தில்) ஒதுக்கப்பட்ட தொகை.
மீன்வளத் திட்டம்.	1. மீன் வளர்ப்புத் தொட்டி/குளங்கள் விரிவாக்கம், கண்டுவலை	1.88
சமூகக் காடு வளர்ப்பு.	1. காடு வளர்ப்பு	1.00
	2. கால்நடைத் தீவனம் ..	1.00
	3. சாலை மரம் நடுதல் ..	0.90
	4. மத்திய நாற்றங்கால் உண்டாக்குதல்	0.90
	மொத்தம் ..	69.665

இத்திட்டம் தர்மபுரி மாவட்ட மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் இவ்வாண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இணைப்பு V

[171ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண், 341க்கான விடையைக் காண்க]

விடை:

(அ) 1975 ஏப்ரல் முதல் 1978 மார்ச் மாதம் முடிய, மாநிலத்திலுள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் பெறப்பட்ட விற்பனைக் கட்டணம் ரூபாய்: 4, 35, 36, 278.

(ஆ) இந்த ஆண்டுகளில் நிவாரணப் பணிக்கென, விற்பனைக் குழுக்களால் தொகை கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) நிவாரணப் பணிக்கென கொடுக்கப்பட்டுள்ள தொகையின் விவரம் மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

விற்பனைக் குழுவின் பெயரும், வரிசை எண்ணும்.	உதவித் தொகையின் நோக்கம்.	இணைப்புகள் தரப்பட்ட தொகை வருட வாரியாக 1975-76	1976-77	1977-78	மொத்தம்.
		ரூபாய்.	ரூபாய்.	ரூபாய்,	ரூபாய்.
(1)	(2)		(3)		(4)
1 செங்கை விற்பனைக் குழு, காஞ்சீபுரம்.	வறட்சி நிவாரணம் (1975-76) வெள்ள நிவாரணம் (1977-78)	25,000	இல்லை	10,000	35,000
2 வட ஆற்காடு விற்பனைக் குழு, வேலூர்.	வறட்சி நிவாரணம் (1975-76) வெள்ள நிவாரணம் (1977-78)	5,05,001	,,	2,50,000	7,55,001
3 தென்னாற்காடு விற்பனைக் குழு, கடலூர்.	வறட்சி நிவாரணம் (1975-76) வெள்ள நிவாரணம் (1977-78)	5,00,000	,,	2,50,000	7,50,000
4 திருச்சிராப்பள்ளி விற்பனைக் குழு, திருச்சிராப்பள்ளி.	வறட்சி நிவாரணம் (1975-76) வெள்ள நிவாரணம் (1977-78)	2,25,000	,,	2,00,000	4,25,000
5 கோவை விற்பனைக் குழு, கோவை.	வறட்சி நிவாரணம் (1975-76) வெள்ள நிவாரணம் (1977-78)	இல்லை	,,	6,00,000	6,00,000
6 தருமபுரி விற்பனைக் குழு, தருமபுரி.	வறட்சி நிவாரணம் (1975-76) வெள்ள நிவாரணம் (1977-78)	5,001	,,	10,000	15,001

மதுரை விற்பனைக் குழு, மதுரை.	வெள்ள நிவாரணம் (1977-78)	இல்லை	,,	2,00,000	2,00,000
8 திருநெல்வேலி விற்பனைக் குழு, திருநெல்வேலி.	வறட்சி நிவாரணம் (1975-76) வெள்ள நிவாரணம் (1977-78)	1,00,001	,,	2,00,000	3,00,001
9 தஞ்சை விற்பனைக் குழு, தஞ்சாவூர்.	வெள்ள நிவாரணம் (1977-78)	இல்லை	,,	2,00,000	2,00,000
10 இராமநாதபுரம் விற்பனைக் குழு, விருதுநகர்.	வெள்ள நிவாரணம் (1977-78)	,,	,,	2,00,000	2,0,0000
11 கன்னியாகுமரி விற்பனைக் குழு, நாகர் கோவில்.	வறட்சி நிவாரணம் (1975-76) வெள்ள நிவாரணம் (1977-78)	5,000	,,	10,000	15,000

ஈ. கட்டிடங்கள் அல்லது மனைகள் வாங்கப்பட்டவையும் குறித்த விவரங்கள் மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

விற்பனைக் குழுவின் பெயர்.	வருடம்.	கட்டப்பட்ட கட்டிடங்களின் விவரம்.	வாங்கப்பட்ட நிலங்களின் விவரம்.
1 செங்கை விற்பனைக் குழு, காஞ்சீபுரம்.	75-76	இல்லை	இல்லை
	76-77	,,	,,
	77-78	,,	,,
2 வட ஆற்காடு விற்பனைக் குழு, வேலூர்.	75-76	,,	1.16 ஏக்கர் (செங்கம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம்).
	76-77	,,	இல்லை
	77-78	,,	,,

விற்பனைக்குழுவின் பெயர். (1)	வருடம். (2)	கட்டப்பட்ட கட்டிடங்களின் விவரம். (3)	வாங்கப்பட்ட நிலங்களின் விவரம். (4)
3 தென்னாற்காடு விற்பனைக்குழு, கடலூர்.	1975-76	விழுப்புரம் ஒழுங்கு முறைக்கூட அலுவலக கட்டிடம்.	இல்லை
	1976-77	உளுந்தூர் பேட்டை ஒழுங்கு முறைக்கூட சிற்றுண்டிசாலை.	,,
	1977-78	இல்லை	,,
4 திருச்சி விற்பனைக் குழு, திருச்சி.	1975-76	ஜெயம்கொண்டான் ஒழுங்கு முறைக்கூட அலுவலகக் கட்டிடம்.	9 ஏக்கர் (துவரங்குறிச்சி ஒழுங்கு முறைக் கூடம்).
	1976-77	ஜெயம்கொண்டான் ஓய்வு விடுதி.	8.493/4 ஏக்கர் (கரூர் ஒழுங்கு முறைக்கூடம்)
	1977-78	இல்லை	இல்லை
5 கோவை விற்பனைக் குழு, கோவை.	1975-76	,,	,,
	1976-77	,,	,,
	1977-78	,,	,,
6 தருமபுரி விற்பனைக் குழு, தருமபுரி.	1975-76	,,	,,
	1976-77	,,	3.87 ஏக்கர் (தருமபுரி ஒழுங்கு முறைக்கூடம்)
	1977-78	,,	இல்லை

இணைப்புகள்

7 மதுரை விற்பனைக் குழு, மதுரை.	1975-76	இல்லை	(12.49 ஏக்கர் (திண்டுக்கல் ஒழுங்கு முறைக் கூடம்)
	1976-77	,,	இல்லை.
	1977-78	திருமங்கலம் ஒழுங்குமுறைக் கூட கட்டிடம்.	,,
8 திருநெல்வேலி விற்பனைக்குழு, திருநெல்வேலி.	1975-76	கடம்பூர் ஒழுங்குமுறைக்கூடக் கட்டிடம். புதூர் ஒழுங்குமுறைக்கூடக் கட்டிடம். கடம்பூர் ஒழுங்குமுறைக் கூடக் கிடங்கு கட்டிடம்.	0.82ஏக்கர் (தென்காசி ஒழுங்கு முறைக் கூடத்திற்கு).
	1976-77	திருநெல்வேலி ஒழுங்குமுறைக் கூட கட்டிடம்.	7.25 ஏக்கர் கடம்பூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம். வள்ளியூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 8.95 ஏக்கர்.
	1977-78	தூத்துக்குடி ஒழுங்குமுறைக் கூட கட்டிடம்	இல்லை.
9 தஞ்சை விற்பனைக் குழு, தஞ்சை.	1975-76	வல்லம் ஒழுங்குமுறைக் கூடக் கட்டிடம்.	,,
	1976-77	இல்லை.	,,
	1977-78	வல்லம் ஒழுங்குமுறைக்கூட ஓய்வு கூடம்	,,

இணைப்புகள்

(1)	(2)	(3)	(4)
10 இராமநாதபுர விற்பனைக்குழு, இராமநாதபுரம்	1975-76	விருதுநகர் ஒழுங்கு முறைக் கூட கிடங்கு. ராமநாதபுர அலுவலக கட்டிடம் ராமநாதபுர கிடங்கு கட்டிடம் அருப்புக்கோட்டை கிடங்கு.	கமுதி ஒழுங்குமுறைக் கூடம் 1.16 ஏக்கர், பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு 5.82 ஏக்கர்.
	1976-77	சாத்தூர் ஒழுங்குமுறைக் கூட கிடங்கு; சிங்கம்புணரி ஒழுங்குமுறைக் கூட அலுவலகக் கட்டிடம். கமுதி அலுவலகக் கட்டிடம். அருப்புக்கோட்டை அலுவலகக் கட்டிடம்.	இல்லை
	1977-78	இல்லை.	இல்லை
11 கன்னியாகுமரி விற்பனைக் குழு, நாகர் கோவில்.	975-76	இல்லை.	திங்கள் சந்தை ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு 1.26½ ஏக்கர்.
	1976-77	வடசேரி ஒழுங்குமுறைக் கட்டிடம் கிடங்கு கட்டிடம்.	இல்லை
	1977-78	இல்லை.	0.83 ஏக்கர் (திங்கள் சந்தை ஒழுங்குமுறை கூடத்திற்கு).

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1978 செப்டம்பர் 12.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. டி. இராமலிங்க் ரெட்டியார் அவர்கள் 8—9—1978-ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. இராமலிங்க ரெட்டியார் 1937-ஆம் ஆண்டிலிருந்து 1939-ஆம் ஆண்டுவரை செய்யார் பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராகப் பணியாற்றி உள்ளார்கள்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌனமாக நின்றனர்.)

2: வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

புதுக்கோட்டைக்குத் தனி மின் பிரிவு.

*வினா எண் 151—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு தனியாக மின்சார சிஸ்டம் (Pudukkottai Electricity System) அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 1—6—78 முதல் புதுக்கோட்டை மாவட்டத்திற்கென்று தனியாக மின்சார சிஸ்டம் அமைக்கப்பட்டுள்ளது.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, புதிதாக அங்கே ஒரு சிஸ்டத்தை ஆரம்பித்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்த சிஸ்டத்திற்கு அதிகமாகப் பணியாளர்கள்—குறிப்பாக கணக்காயர்கள் தேவைப்படுவதால் திருச்சி சிஸ்டத்திலிருந்து மாற்றம். செய்யப்படுகிறார்கள். அப்படி மாற்றம் செய்யும்போது ஒரே இடத்தில் வேலை செய்து வருகின்ற கணவன், மனைவி இருவரையும் பிரிக்கின்ற முறையிலே விருப்பத்திற்கு மாறாக மாற்றம் செய்கிறார்கள் என்று புகார் சொல்கிறார்கள். ஆகவே, இந்தத் தவறான நடைமுறையை கைவிட்டுவிட்டு, யார், யார் மாற்றம் செய்ய விரும்புகிறார்களோ அவர்களை மட்டும் மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அத்தகைய தகவல் அரசுக்கு இல்லை.

திருநெல்வேலி—தூத்துக்குடி மின் பிரிவு.

*வினா எண் 152—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-தூத்துக்குடி மின்சார விநியோக கம்பெனியை தமிழ்நாடு மின்சார வாரியம் கையகப் (acquisition) படுத்தி ஆண்டுகள் பல ஆகியும் மின் வாரிய தொழிலாளர்களுக்கும், கம்பெனி தொழிலாளர்களுக்கும் வேலைப்பளு சலுகைகளில் வித்தியாசம் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில் அதை நீக்க அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இப் பிரச்னை தமிழ்நாடு மின் வாரியத்தின் அதிகாரத்திற்குட்பட்டது. சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்களோடு வாரியம் செய்துகொண்ட முடிவின்படி அந் நிறுவனத்திலுள்ள ஊழியர்கள் அனைவரையும் வாரியம் எடுத்துக்கொண்டுள்ளது. இருப்பினும் வேலைப்பளுவில் வித்தியாசம் இருந்து வருகிறது. இதை நீக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட மேற்பார்வை பொறியாளரோடு மின்சார வாரியம் கலந்து ஆராய்ந்து வருகிறது. விரைவில் இக் காரியத்தில் வாரியம் முடிவெடுக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்த டி.டி.எஸ். கம்பெனியை (திருநெல்வேலி—தூத்துக்குடி மின்சார விநியோக கம்பெனி) அண்டர்டேக்கிங் செய்து கிட்டத்தட்ட 5 ஆண்டுகள் ஆகின்றன. இதற்குள் ஒர்க்கர்ஸ் யூனியனுடன் பிரச்சினைகளைப் பேசி முடிவு செய்திருக்கலாம். இப்போது இருக்கிற பிரச்சினை என்னவென்றால் வேலைப் பளு அதிகமாக இருப்பதால் அவர்களுக்கு பல சங்கடங்கள் ஏற்பட்டு, வேலை நிறுத்தம் கூட ஏற்படும் அபாயம் இருக்கிறது. இது சம்பந்தமாக தொடர் உண்ணாவிரத இயக்கம் கூட நடத்தியதாகக் தெரிகிறது. இதைக் கண்டிக்கும் வகையில் அங்கே இருக்கிற டிவிஷனல் என்சினியர் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார். ஏற்கெனவே அவர் மீது எமர்ஜன்ஸி எக்ஸஸ் புகார் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. அப்படிப்பட்டவரை மாற்றம் செய்யாமல் இருப்பதும் அரசுக்குத் தெரியுமா? தெரிந்திருந்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இத் திட்டம் திருநெல்வேலி—தூத்துக்குடி மின்சார நிறுவனத்தாரிடம் இருந்து கையகப்படுத்தப்பட்டு நான்காண்டுகளுக்கு மேல் ஆகின்றன. மின்சார வாரிய ஊழியர்களுக்குத் தரப்படுகின்ற இலவச மின்சாரம், சைக்கிள் அலவன்ஸ், உணவுப்படி போன்றவைகள் இந்தக் கையகப்படுத்தப்பட்ட தனியார்க் கம்பெனி பணியாளர்களுக்கும் தரப்படுகின்றன. மற்ற வேலை நிலைமைகள் குறித்து அவற்றுடன் பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன. கூடிய விரைவில் ஒரு முடிவு எடுத்து அந்தக் குறைபாடுகளைகளைந்தெரிய அரசு முயற்சிக்கும்.

திரு. ந. தனசேகரன்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூடிய விரைவில் அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்று அறிவித்தார்கள். கூடிய விரைவில் என்று சொல்லப்படும்போது குறிப்பாக எவ்வளவு காலகட்டத்தில் முடியும் என்பதை அறிவிப்பார்களா? ஏனென்றால் காலதாமதத்தால் அங்கே உள்ள பணியாளர்கள் மாற்றாந்தாய் பராமரிப்பிலே இருப்பது போன்ற

நிலைமை இருக்கின்றது. அந்த நிலையினைப் போக்குகின்ற வகையில் எவ்வளவு காலத்தில் அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்பதை அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஐந்தாண்டுகளாக இருக்கின்ற ஒரு பிரச்சினையாகும் இது. ஆகையினால் இன்னும் கொஞ்சம் நாட்கள் பொறுத்து இருப்பது ஒன்றும் கடினமான காரியம் அல்ல. ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறுக்கலாம். இதிலே மாற்றாந்தாய் என்கின்ற நிலைமை கிடையாது. இப்போது இருப்பது ஒரே தாய்தான். அதனால்தான் பிரச்சினையே வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இன்னும் தமிழ் நாட்டில் தனியார் வசம் உள்ள மின்சார வினியோகக் கம்பெனிகள் எத்தனை இருக்கின்றன? அவற்றினையும் கையகப்படுத்துவதற்கு அரசினிடம் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அனைத்துத் தனியார் நிறுவனங்களும் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே இனி வேறு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே, திருநெல்வேலி, தூத்துக்குடி மின்சாரத் திட்டத்தை தமிழ்நாடு மின்சார வாரியம் கையகப்படுத்திய போது எடுத்துக் கொண்ட ஊழியர்கள் எத்தனை பேர்? கிட்டத்தட்ட நான்காண்டுகள் ஆகியும் இன்னும் அவர்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இருப்பதைப்போல் பணி நடை முறைகள் செய்யப்படாமல் இருப்பதன் காரணம் என்ன? அதிலே அமைச்சரவர்கள் தலையிட்டு பிரச்சினையைத் தீர்த்து வைப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இதிலே, பணியாற்றுகின்ற, ஊழியர்கள் 353 பேர். அவர்களுடைய பணி நிலைமைகள், மின்சார வாரியத்திலே பணியாற்றுகின்ற பணி நிலைமைகள் ஆகிய இரண்டும் வேறுபட்டிருக்கின்றன. ஆகவே இதிலே எது ஆதாயம் தரத்தக்கது என்பதைப் பார்த்து அது குறித்து நன்கு பேசி முடிவினை எடுக்க வேண்டிய நிலைமை இருக்கின்றது. ஆகவே இதிலே அமைச்சரவர்கள் தலையிட வேண்டும் என்ற அவசியம் இல்லை. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்வியே போதுமானதாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். எம். ஏ. ரசாக் : தலைவரவர்களே, அனைத்துப் பிரிவுகளும் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டன என்று அமைச் சரவர்கள் கூறினார்கள். செங்கோட்டையைப் பொறுத்தவரையில் முன்னாள் தனியார் கம்பெனியிடத்திலே இருக்கின்றபோது அமைக்கப்பட்ட மின்சாரக் கம்பங்களே இன்னும் இருந்து வருகின்றன. அவற்றினை மாற்றியமைத்து அங்கே சிமெண்ட் கம்பங்களையும், இரும்புக் கம்பங்களையும் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்படும்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, இந்த நிறுவனத்தை வாரியம் எடுத்து நான்காண்டுகள் ஆகிவிட்டன என்று அமைச்சர் அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். கொஞ்சம் பொறுத்திருக்க வேண்டும் என்ற முறையில் அமைச்சரவர்கள் சொன்னார்கள். இது அரசு நிறுவனம். அதற்கு ஒரு அமைச்சரும் இருக்கிறார்கள். அமைச்சரவர்கள் தீர்த்து வைக்க வேண்டிய சூழ்நிலைக்கு இது ஆகிவிட்டது. நான்காண்டுகளாக இந்தப் பிரச் சினையை பற்றி தொழிற்சங்கங்களுடன் பேசிக்கொண்டிருக் கிறார்கள். நானும் மின்வாரியத்திலுள்ள ஒரு தொழிற்சங்கத் தின் தலைவன் என்ற முறையில் கேட்க விரும்புகிறேன். அமைச்சர வர்கள் ஆக்கப் பொறுத்தது ஆறப்பொறுக்கக் கூடாதா என்று கேட்டார்கள். ஆக்கி நீண்ட காலம் ஆகிவிட்டது. ஆறட்டும் ஆறட்டும் என்றுபொறுத்துக் கொண்டே இருந்துவிட்டோமானால் பிறகு சாப்பிடுவதற்குப் பயன்படாதநிலை ஏற்பட்டு விடக்கூடாது. ஆகவே இந்த அளவுக்கு வந்துவிட்ட பிறகு விரைவில் இதனை முடிப்பதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தொழிலாளர்களும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையிலும் அதே நேரத்தில் நிர்வாகத் திலுடைய பணி நிலைமைகளிலேயும் வேறு எந்தச் சிக்கல்களும் எழாத வகையிலும் முடிவினை மேற்கொள்வதுதான் பொருத்தம் என்பதை தொழிற்சங்கத்திலே தலைவராக இருந்து நீண்ட அனுபவம் பெற்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராசன் அவர்கள் அறிவார்கள். ஆகவே அதிலேதான் சிக்கல்கள் இருக்கின்றன. இருந்தாலும் இந்தப் பிரச்சினையை விரைவில் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1978 செப்டம்பர் 12

[முற்பகல் 9-10]

திரு. ரா. கிருஷ்ணன் : இந்தப் பிரச்சினையைத் தீர்க்கிற விதத்தில் ஆதாயம் இருக்கக்கூடிய நிலையில் கவனிக்கப்படும் என்று கூறப்படுகிறது. ஆனுல் அதை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்வதால் பல்வேறு சிக்கல்கள் உருவாகும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். காரணம் என்னவெனில், இந்தக் கம்பெனியைப் பொறுத்தவரையில் மிக அதிகமான வேலைப் பளு இருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்பதோடு, அந்த வேலைப் பளுவைக் கட்டாயமாக வாங்குகிற போக்கு அந்த டி.இ. யிடம் இருப்பதையும் அதனுல் பல்வேறு சிக்கல்கள் உருவாவதையும் கவனித்து இதற்கு உடனடியாகத் தீர்வு காண ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பிரச்சினை பேசித் தீர்க்கப்பட வேண்டிய ஒன்று.

விக்கிரமசிங்கபுரம் கூட்டுறவு நாணய சங்கம்.

* வினு எண். 153—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம், விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சி மன்ற பகுதியில் உள்ள கூட்டுறவு நாணய சங்கத்தில் பணம் கையாடல் நடைபெற்றுள்ளது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : (அ) திருநெல்வேலி மாவட்டம் விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சி மன்றப் பகுதியில் உள்ள கூட்டுறவு நாணய சங்கங்களில் கையாடல் ஏதும் நடைபெறவில்லை.

(ஆ) கையாடல் ஏதும் இல்லாததால் நடவடிக்கை ஏதும் இல்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : இந்தச் செய்தி பத்திரிகையில் வெளிவந்துள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பத்திரிகை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னுல் அது பரிசீலிக்கப்படும்.

1978 செப்டம்பர் 12]

கூட்டுறவுச் சங்கக் கணக்குகள் தணிக்கை.

* வினு எண் 154—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கோவாப்பரேடிவ் சொசைட்டிகளை ஆடிட் செய்வதற்காக தனியாக ஒரு அமைப்பை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) அரசின் ஆய்வில் உள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கான தணிக்கைக் கட்டணம்.

* வினு எண் 155.—திரு. பெ.சு. திருவேங்கடம் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களுக்கு ஆண்டு தணிக்கை கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு முதல்?

(இ) அதனுல் அரசுக்கு ஆண்டுக்கு எவ்வளவு ரூபாய் இழப்பு ஏற்படுகிறது?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) 1963-64-ம் ஆண்டு முதல் விவசாயக் கடன் சங்கங்களுக்குத் தணிக்கைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

(இ) 1976-77-ம் ஆண்டிற்கு மட்டும் ரூ. 11.1[illegible] இலட்சமாக இருக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டணத்திலிருந்து விலக்கு அளித்திருப்பதாகச் சொல்கிறார்கள். பல்வேறு சங்கங்கள் நல்லமுறையில் மிக லாபகரமாக ஓடுகின்றன. சில சங்கங்கள் நஷ்டத்தில் ஓடுகின்றன. ஆகவே, லாபத்தில் இயங்குகின்ற சங்கங்களிடமிருந்து வசூலித்து நஷ்டத்தில் ஓடுகின்ற சங்கங்களுக்கு மானியம் அளிக்க அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாட்டிலிருக்கிற 4,594 விவசாய நாணய கூட்டுறவுச் சங்கங்களுக்கும் முழுவதுமாகவும் இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ அந்தத் தொகை தான், 11.13 லட்சமாக வந்திருக்கிறது. எல்லாச் சங்கங்களுக்கும் விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. ப. சந்திரன் : விவசாயக் கடன்களை வசூலிப்பதில் கெடுபிடி இருக்கக்கூடாது என்று அரசு அறிவித்திருக்கிறது. அப்படி அறிவித்திருக்கிற நிலையில் அப்படி கெடுபிடி செய்து வசூலிக்க எக்ஸிக்யூஷன் ஆபீசர் என்ற அலுவலர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர்கள், இப்போது இந்த அறிவிப்பின் காரணமாக வேலையில்லாமல் இருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அப்படி ஒரு அரசாங்கப் பதவி தேவைதானா, அதனால் அரசாங்கத்திற்கு ஏற்படுகிற செலவு எவ்வளவு என்பதைத் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களுக்கு ஆண்டு தணிக்கைக் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதா என்பதாகும். ஆகவே, மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை என்ற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் அதற்கான விவரங்கள் நிச்சயமாக அளிக்கப்படும்.

திரு. வி.கே. கோதண்டராமன் : கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களுக்குத் தணிக்கைக் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். இதேபோல் கூட்டுறவுத் தொழிலாளர் கடன் சங்கங்களுக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதா? இல்லை என்று சொன்னால் கூட்டுறவுத் தொழிலாளர் கடன் சங்கங்களுக்கும் தள்ளுபடி செய்ய உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு வகையான சங்கங்களுக்கு மட்டுமே இந்த விதிவிலக்கு பொருந்தாது. ஒன்று, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கும், இன்னொன்று கூட்டுறவு நூற்பு ஆலைக்கும். மற்ற ஏழு வகையான சங்கங்களுக்கு இந்த விதிவிலக்கு பொருந்தும் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தொழிலாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்களைப் பொறுத்தவரையில் இந்தச்சங்கங்கள் தொடங்கப்பட்ட முதல் மூன்று ஆண்டுகளுக்கு இந்த விலக்கு உண்டு.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1963–64-ம் ஆண்டிலிருந்து கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். 1976–77-ல் 11·13 லட்சம் இழப்பு ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படியானால் 1963–64-லிருந்து இதுவரை ஆண்டு தோறும் எவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : இதற்குத் தனியாகக் கேள்வி போடுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கொடைக்கானலில் அமுதம் அங்காடி.

* வினா எண் 156— திரு. கே. பண்ணை சேதுராம்— மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானலில் சிவில் சப்ளை கார்ப்பரேசன் மூலம் அமுதம் ஸ்டோர்ஸ் நிறுவக் கோரி மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) ஆம்.

(ஆ) கொடைக்கானலில், கூட்டுறவு சிறப்பங்காடிகள், பண்டகசாலைகள் இயங்கி வருவதால், மேலும் ஒரு 'அமுதம்' பண்டகசாலை அவசியம் தானா என்பதை நுகர்பொருள் வாணிபக் கழகம் பரிசீலித்து வருகிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் : பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் தாலூகாவில் மினி சூப்பர் மார்க்கெட் கூட இல்லாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இங்கு

ஒரு மினி சூப்பர் மார்க்கெட்டாவது வேண்டும் என்று மனு கொடுக்கப்பட்டிருந்தது. இதற்குப் பதிலாக அமுதம் ஸ்டோர்ஸ் ஒன்று துவக்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். இதல்லாமல் அங்கே ஒரு மினி சூப்பர் மார்க்கெட் ஆரம்பிப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக அமுதம் அங்காடிகள் திறக்கப்படுகின்றன. மினி சூப்பர் மார்க்கெட் கூட்டுறவுத் துறையால் துவக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடியில் முத்துக் குளிப்பு

*வினா எண் 157—திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் முத்துக்குளிப்பு கடைசியாக எந்த ஆண்டு நடைபெற்றது ?

(ஆ) அதன் மூலம் அரசுக்குக் கிடைத்த லாபம் எவ்வளவு ?

(இ) மீண்டும் சமீபத்தில் முத்துக் குளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) மீனளத் துறையினால் தூத்துக்குடியில் முத்துக்குளிப்பு கடைசியாக 1961-ம் ஆண்டு நடத்தப்பட்டது.

(ஆ) இதன் மூலம் அரசுக்குக் கிடைத்த நிகர இலாபம் ரூ. 1,98,100.

(இ) முத்துச் சிப்பிகளைப் பற்றி இதுவரை அறியப்பட்ட வளர்ச்சி விபரங்களிலிருந்து, அண்மைக்காலத்தில் முத்துக்குளிப்பு நடத்துவதற்கான வாய்ப்பில்லை என்று தெரிகிறது.

திரு. ந. தனசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சற்றேறக் குறைய 16 ஆண்டுகளாகியும் முத்துச் சிப்பிகள் வளர்ச்சி அடையாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? கடந்த ஆட்சி காலத்தில் முறைகேடாக எடுக்கப்பட்டு முத்துச் சிப்பிகள் அகற்றப்பட்டனவா ? அப்படியானால் எந்த அளவுக்கு நட்டத்தப்பட்டது ? அப்படிப்பட்ட முறைகேடு இல்லாமல் இப்போது முத்துச் சிப்பிகள் எடுக்க, ஆய்வு நடத்தப்படுமா ? முத்துச் சிப்பிகளை முறையாக எடுக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

1978 செப்டம்பர் 12]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, முத்துச்சிப்பிகள் முழுமையாக வளர்ச்சி பெறாமல் இருப்பதற்கான காரணம் என்னவென்று தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் இப்போதைக்கு முத்துக் குளிப்பதற்குத் தேவையான அளவு முத்துக்கள் முதிர்ச்சி அடையவில்லை என்றுதான் துறையிலிருந்து தகவல்கள் கிடைத்துள்ளன.

திரு. ஒ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் வலம்புரி சங்கு ஒன்று கடலிலிருந்து எடுக்கப்பட்டது. அந்த வலம்புரிச் சங்கின் மதிப்பு 40 ஆயிரம் ரூபாய் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டதாகவும், இதை எடுத்தவருக்கு 1,000 ரூபாய் சன்மானமாகக் கொடுக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இது மிகவும் குறைவாக இருப்பதால், அதிகமான அளவில்—தகுந்த சன்மானம் கொடுத்தால் மேலும் மேலும் இப்படிப்பட்ட வலம்புரி சங்கு எடுக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படும். இதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தகுந்த சன்மானம் கொடுப்பதினாலேயே இந்த வலம்புரிச் சங்குகள் கிடைப்பதில்லை. சாதாரண சங்குகளுக்கு 2 ரூபாய் இரண்டரை ரூபாய் என்று மீனளத்துறை விலை நிர்ணயம் செய்திருக்கிறது. ஆகவே தான் இந்த வலம்புரி சங்கு எடுத்தவருக்கு 1,000 ரூபாய் கொடுப்பது என்று இந்தத் துறை முடிவு எடுத்திருக்கிறது.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்கு இருந்துவந்த உரிமை ரத்து செய்யப்பட்டிருப்பதால், அவர்களுக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக மண்டபம், இராமேஸ்வரம் போன்ற இடங்களில் இந்தத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கு குளிப்புத் தொழில் தேசியமயமாக்கப்பட்டிருப்பது நாட்டின் நலனைக் கருதித்தான். சிலர் போராட்டம் நடத்துகிறார்கள் என்பதற்காக அரசு தன்னுடைய கொள்கையை மாற்றிக் கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : நான் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மீண்டும் ஒரு கேள்வி கேட்க வேண்டும் என்பதற்காக இப்படி நீங்களாகவே எழுந்து கேள்வி கேட்டால் அது முறை தானா ? சரி கேளுங்கள்.

[1978 செப்டம்பர் 12

திரு. க. சுப்பு : சங்கு குளிப்பதற்கு தொழிலாளர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீண்டநாள் கோரிக்கைக்குப் பின்னால்தான் இந்த உரிமை கொடுக்கப்பட்டது. அந்த உரிமையை இப்போது அவர்களிடமிருந்து எடுத்துக் கொள்வதாக இருப்பதால்தான் அந்தத் தொழிலாளர்கள் அந்த உரிமை தங்களுக்குத் தரப்படவேண்டும் என்று போராடுகிறார்கள். இந்தச் சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்கு இதை விட்டால் வேறு வாழ வகை கிடையாது. ஆகவே இந்த உரிமையைக் கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20).

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான எண்ணத்தில் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். சங்குகள் வாங்குவதுதான் தேசீய மயமாக்கப்பட்டிருக்கிறதே தவிர சங்கு குளிப்பதற்கு யார் யார் உரிமம் பெற்றிருக்கிறார்களோ, அந்தத் தொழிலாளர்கள் அந்தத் தொழிலில் பயன்படுத்திக் கொள்ளப்படுவார்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, வலம்புரிச் சங்கு எங்கெங்கெல்லாம் இருக்கின்றதோ, அங்கெல்லாம் அமைதியும், சுபீட்சமும் இருப்பதாக தமிழக மக்கள் நம்புகிறார்கள். ஆகவே இந்த வகையில் இந்த வலம்புரிச் சங்கை, தலைவர் அவர்களின் மேலே உள்ள மாடத்திலே வைத்து, இந்த அவை அமைதியாகவும், சுபீட்சமாகவும் நடைபெற இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை நானும் வரவேற்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐதீகத்திலே நம்பிக்கை உள்ளவர்களுக்கு இந்த நம்பிக்கை இருக்கிறது. இந்த அவையிலே உள்ள எல்லோருக்கும் இந்த நம்பிக்கை இருக்கிறதா என்பதை இனி மேல்தான் பார்க்க வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சங்கு குளிப்பது சம்பந்தமாக, அந்தச் சங்குகளை அரசே கூட்டுறவு முறையில் வாங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளதை நான் வரவேற்கிறேன். ஆனால் அப்படிச் சங்குகளை விலைக்கு வாங்கும்போது, ஒவ்வொரு சங்கிற்கும் 75 பைசா அல்லது ஒரு ரூபாய் விலை குறைவாக தூத்துக்குடி, மற்றும் சில இடங்களில் கொடுப்பதாகச் சொல்லப்படுகின்றதே, அதைத் தவிர்த்து

1978 செப்டம்பர் 12]

தனியார்கள் அந்தச் சங்குகளை வாங்குவதற்குக் கொடுக்கப்படும் விலையைக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் இந்தச் சங்குகளை வாங்கி, மேற்கு வங்காளத்தில் சங்கு வளையல்கள் செய்கின்ற தொழில் அதிபர்களுக்கு விற்கின்ற நேரத்தில், இரண்டேகால் அரைக்கால் சைஸை குறைந்த அளவாக வைத்து, அதற்கு மேற்பட்ட சங்குகளுக்கு 2½ ரூபாய் என்று கொடுக்கின்றார்கள். இப்போது தேசீய மயமாக்கப்பட்ட பிறகு, பல்வேறு அளவு உள்ள சங்குகளுக்கு பல்வேறு விலையை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இது தவிர, தொழிலாளர்களையும், தலைவர்களையும் அழைத்துத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டு இருக்கின்றன.

திரு. ந. தனசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சங்கு குளிப்பது தேசீய மயமாக்கப்பட்ட காரணத்தினால், அந்தத் தொழிலிலே ஈடுபட்டுள்ள தொழிலாளர்களையும் அரசு ஊழியர்களாக ஏற்று, அவர்களுக்கு சங்கு பாங்கு அமைப்பது பற்றி தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளதா? அப்படி ஒன்றை அமைத்து, இந்தத் தொழிலாளர்களை வாழ வைக்க இந்த அரசு முன்வருமா எனறு அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அரிய யோசனை இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், தேசீய மயமாக்கப்பட்டாலும், சங்கு குளிப்பதற்கு உரிமம் பெற்றுள்ளவர்கள், சங்கு குளிக்கும் தொழிலில் ஈடுபடுத்தப்படுவார்கள். அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட ஊதியத் தொகையும் கொடுக்கப்படும். இதுபோக, ஆண்டுதோறும் மீதமுள்ள லாபத்திலே ஒரு பகுதியை, இந்தச் சங்குத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கலாம் என்பதைப் பற்றி இந்தத் துறை ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

[1978 செப்டம்பர் 12

1978 செப்டம்பர் 12]

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் இலக்கியம் பண்பாட்டு நிகழ்ச்சிகள்.

*வினு எண் 158—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா?

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் அரசியல் சார்பற்ற இலக்கிய, பண்பாட்டு நிகழ்ச்சிகளுக்கு வாடகை அடிப்படையில் இடமளிக்க அனுமதி வழங்குவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: சென்னை, வள்ளுவர் கோட்டத்தின் அரங்க மண்டபத்தை அரசுத்துறைகளுக்கும், பொது மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் அரசியல் சார்பற்ற கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், மாநாடுகள் முதலியன நடத்துவதற்கு வாடகைக்கு ஒதுக்கீடு செய்வதற்கான வகையில், அரசு ஏற்கனவே, பரிசீலனை செய்து, ஆணை பிறப்பித்திருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் அரசு இலக்கிய, பண்பாடு 'சம்பந்தமான அரசியல் சார்பற்ற விழாக்களுக்கு வாடகை அடிப்படையில் அனுமதி அளித்து வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆயினும், அங்கே நடைபெற்ற சிலபல நிகழ்ச்சிகளில் வள்ளுவர் கோட்பாட்டிற்கு புறம்பாக-அவர் விரும்பாத, எதிர்பார்த்ததற்கும் மாறான நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, சில அடிப்படை நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் வள்ளுவர் கோட்டம் அனுமதிக்கப்பட வேண்டுமென்று கண்டிப்பாக நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அதையும் மீறி ஏதாவது இப்படி நடைபெற்றிருக்குமானுல், அது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் இதுவரை அப்படி ஒன்றும் வரவில்லை, அதற்குத் தகுந்தாற்போல் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்து, இனிமேல் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெருமல் தடுக்கப்படும்.

திரு. ரா. மார்க்கபந்து : தமிழக அரசின் சார்பில் டைரக்டரேட் ஆப் திருக்குறள் பிராபகன்டா என்ற முறையில் அமைத்து திருக்குறளைத் தமிழகம் பூராவும் பரப்புவதற்கான முயற்சியை இந்தத் தமிழக அரசு எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : வேறு தனிக் கேள்வி போட்டால் இதற்கு விவரமான விடை அளிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : கட்சி அரசியல் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும் இந்த நாட்டில் எந்த நிகழ்ச்சி நடந்தாலும் அரசியல் சார்பு இல்லாததாக இல்லை, ஆகவே, எல்லாவிதமான நிகழ்ச்சிகளுக்கும் பணத்தை வாங்கிக்கொண்டு கொடுக்க அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டு வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : எல்லாவிதமான நிகழ்ச்சிகளுக்கும் என்று எந்த இலக்கணத்தின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிருர்கள் என்று தெரியவில்லை. அதைத் தெரிவித்தால் எந்த அடிப்படையில் தரலாம் என்று அரசு பரிசீலிக்கும்.

திரு. என். கிட்டப்பா : தற்போது வள்ளுவர் கோட்டத்தில் அனுமதிக்கப்படுகிற நிகழ்ச்சிகளுக்கு நாள் ஒன்றுக்கு வசூலிக்கப் படுகிற கட்டணத் தொகையை அறிய இயலுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அரசுத் துறை நிகழ்ச்சிகளுக்கு முழு நாளைக்கு 1,000 ரூபாய்; பிற அரசு சார்பு நிறுவனங்களுக்கு 1,500 ரூபாய் ; மற்றவர்களுக்கு 2,000 ரூபாய். காலை 8 மணி முதல் 1 மணி வரை அரசுத் துறை நிகழ்ச்சிகளுக்கு 500 ரூபாய் ; பிற அரசு சார்பு நிறுவனங்களுக்கு 750 ரூபாய் ; மற்றவர்களுக்கு 1,000 ரூபாய். மாலை 2 மணி முதல் இரவு 10 மணி வரை அரசுத் துறை நிகழ்ச்சிகளுக்கு 750 ரூபாய் ; பிற அரசுத் துறை சார்பு நிறுவனங்களுக்கு 1,125 ரூபாய் ; மற்றவர்களுக்கு 1,500 ரூபாய்.

திரு. க. சுப்பு : அப்போது கேட்ட கேள்விக்கு விளக்கம் சொல்லுகிறேன். பொதுவான சில விழாக்கள் ஆசிரியர் தின விழாக்கள், குழந்தைகள் தின விழாக்கள், பெரியவர்கள் தின விழாக்கள் நடைபெறுகின்றன. இவற்றில் அரசியல் கலக்காமல் இருக்க முடியாது. காமராஜ் விழா, ராஜாஜி விழா என்றும் அரசியல் இல்லாமல் இருக்க முடியாது. இப்படிப் பொதுவாக விழாக்களுக்குக் கொடுப்பதோடு கட்டணம் வாங்காமல் கொடுக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு பிரச்சினைகளை ஒரு கேள்வியில் கேட்டிருக்கிருர். அனுமதிப்பது என்பது ஒன்று. அனுமதிக்கப்பட வேண்டுமென்று சொல்லும்போது கட்டணம் இல்லாமல் அனுமதிக்க வேண்டுமென்பது இரண்டாவது. அனுமதிப்பது என்பது பொதுவாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. அப்படி அனுமதிக்கப்பட்டால் கட்டணம் இல்லாமல் அனுமதிக்கப்பட வேண்டுமென்ருல் அந்தத் திருவள்ளுவர் கோட்டத்தை எப்படி நடத்துவது என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழி சொன்னுல் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

Janatha Hotel for Madras

Thiru S. M. VASAN * Q.No. 159— Thiru Salem M. ARUMUGAM: Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state:

(a) whether officials of the Central Government visited Madras City recently in connection with selection of sites for the construction of 'Janatha Hotels' in Madras city;

(b) whether the Centre has sought lands from the State Government; and

(c) If so, the details thereof?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) & (ஆ) ஆம்.

(இ) இந்திய அரசு சுற்றுலாத்துறை, சென்னையில் சுமார் ரூ. 2.5 கோடி செலவில் 1,250 படுக்கைகள் கொண்ட ஒரு ஜனதா விடுதியை அமைக்க திட்டம் தீட்டியுள்ளது. இதனை அடுத்து சென்னை கன்னப்பர் திடலுக்கு எதிரே சர்வே எண் 1267-ல் அமைந்துள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான சுமார் 3 ஏக்கர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் முடிவான கருத்தை அறிந்தபின் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: இந்த ஜனதா ஓட்டலை அமைக்க மூன்று ஏக்கர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். சென்னை மாநகரின் மையமான பகுதியிலுள்ள டிரைவ் இன் ரெஸ்டாரண்ட் ஓட்டலை உட்லண்ட்ஸ் ஓட்டல்காரர்கள் அரசுக்குச் சொந்தமான அக்ரோ ஹார்டிகல்சுரல் சொசைட்டிக்கான பொடானிகல் கார்டன்சைக் குத்தகைக்கு எடுத்து குத்தகை விதிகளுக்கு மாறாக உணவு விடுதியை நடத்துகிறார்கள். அரசு அவசரச் சட்டத்தின் மூலம் அந்த இடத்தை எடுத்து ஜனதா ஓட்டலை மையமான அந்தப் பகுதியில் அமைக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: உறுப்பினர் அவர்களுடைய கேள்வியின் முதல் பகுதிக்குத் தனிக் கேள்வி போட்டால் சம்பந்தப்பட்ட அமைச்சரிடமிருந்து பதில் கிடைக்கும். இரண்டாவது பகுதிக்குப் பதில் இந்த இடம் தான் சென்னை சென்ட்ரல், எக்மோர் ரயில் நிலையங்களுக்கு அருகிலும், பொதுவாக

சென்ட்ரல் பஸ் ஸ்டாண்டுக்கு மத்தியில் இருக்கும் இடம் என்பதோடு தென் சென்னையையும் வட சென்னையையும் இணைக்கும் முக்கியமான பகுதி என்றும் கருதி மத்திய சுற்றுலாத் துறை நேரில் பார்வையிட்டு இதுவே சிறந்த இடமெனத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. சி. மு. வாசன்: இப்படி அமைக்கப்பட்டிருக்கும் அந்த ஜனதா ஓட்டலுக்கு வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தின்கீழ் குறைந்த வாடகைக்கு விட வேண்டுமென்று அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: ஓட்டல்களில் அறை வாடகை, வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தின்கீழ் வராது. ஜனதா ஓட்டல் என்ற அடிப்படை லட்சியமே சாதாரண நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்காகக் கட்டப்படுகிற ஓட்டல் என்பதுதான். ஒரு படுக்கைக்கு ஒரு நாளைக்கு 15 ரூபாய்க்கு மேற்படாமல் கட்டணம் விதிக்கப்பட வேண்டுமென்பதுதான் ஜனதா ஓட்டல் அமைப்பதன் அடிப்படை லட்சியம்.

[முற்பகல் 9–30]

திரு. கே. எம். அப்துல் ரசாக்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும் தமிழக சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும் ஏழைகளினுடைய கோடை வாசஸ்தலமாக விளங்குகின்ற குற்றாலத்திற்கு வருகை தந்திருந்தபோது அங்கே இருக்கிற சூழ்நிலையை நேரிலே கண்டறிந்தார்கள். அப்படிப்பட்ட குற்றாலத்தை அபிவிருத்தி செய்வதற்கு மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் அமைச்சர் அவர்கள் தமிழக அரசு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களிடம் உறுதி கூறிச் சென்றிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சுற்றுலாத் துறை அமைச்சரிடம் நம்முடைய கருத்தைத் தெரிவித்து இருக்கிறோம். அதனுடைய முடிவு எப்படியிருக்கும் என்று இனிமேல்தான் தெரியும்.

திரு. க. சுப்பு: எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற கொள்கையை வைத்திருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்தில் ஜனதா என்ற பெயர் பொருத்தமானதுதானா என்று பார்த்து மக்கள் விடுதி என்று வைக்கலாமே அல்லது வியட்நாம் வீடு போன்று இதற்கும் வியட்நாம் விடுதி என்று பெயர் வைக்கலாமே, இதைப்பற்றி அரசாங்கம் என்ன கருதுகிறது?

[1978 செப்டம்பர் 12

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்
களே, தமிழக அரசால் நடத்தப்படுகிற அல்லது ஏற்படுத்தப்படு
கிற விடுதியல்ல இது. இந்திய அரசின் சுற்றுலா கழகத்தின்
சார்பில் இப்படிப்பட்ட விடுதிகளை இந்தியாவின் முக்கியமான
நான்கு நகரங்களில், டெல்லி, கல்கத்தா, பம்பாய், சென்னை
ஆகிய நான்கு நகரங்களிலே கட்டுவதற்குத் தீர்மானித்திருக்கி
ருர்கள். ஆகவே பெயரை அவர்கள் வைத்திருக்கிருர்கள். தமி
ழக அரசை கேட்கிறபோது நம்முடைய யோசனையாக அவர்க
ளுக்குச் சொல்லிப் பார்க்கலாம்.

திரு. மு. அம்பிகாபதி : வியட்நாம் இன்றைக்கு அமைதி
மிகுந்த நாடாக இருக்கிறது, ஜனதா விடுதி என்று சொல்லி
விட்டு அதற்கு வாடகை 15 ரூபாய் இருக்கும் என்று அமைச்சர்
அவர்கள் சொன்னர்கள். 15 ரூபாய் என்பது ரொம்ப காஸ்ட்லி
யாக இருக்கும், ஆகவே 5 ரூபாய்க்குள் இருக்கும்படி அரசாங்கம்
பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : நான் முன்னலே
சொன்னதைப் போல, நம்முடைய அரசின்கீழ் இது ஏற்படுத்தப்
படவில்லை, அமைக்கப்படவில்லை; மத்திய அரசின் சுற்றுலாக் கழ
கம்தான் இதை அமைக்கிறது. அதைக் கட்டி முடித்ததற்குப்
பிறகு அதனுடைய மூலதனம், அதனுடைய செலவுகள் இவை
களை அடிப்படையாக வைத்துதான் வாடகை நிர்ணயிக்கப்படும்.
15 ரூபாய்க்கு மேற்படாமல், 15 ரூபாய் என்பதை மேக்ஸிமம்
ரேட்டாகத்தான் வைத்திருக்கிருர்கள்; அதைக் குறைப்பதற்கும்
அதிலே வாய்ப்பு இருக்கிறது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, ஜனதா
ஹோட்டல் என்பது மிகவும் குழப்பமான பெயராக இருப்ப
தால் மக்கள் அதை விரும்பவில்லை என்ற காரணத்தாலும் வேறு
பெயர் வைத்துக்கொள்ளுமாறு மத்திய அரசுக்குத் தமிழக அரசு
சொல்வதற்குப் பதில் நாமே அதற்காகப் போராட்டம் நடத்தி
அந்தப் பெயர் கூடாது என்று தெரிவிப்பதற்கு அரசு முன்வருமா !

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே,
$2\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவிலே அந்தத் திட்டம் இங்கே வருகிறது.
அதற்கு முதலிலே வழிவிட்டு அது இங்கே அமையட்டும். அதற்கு
முன்னலே மாண்புமிகு உறுப்பினர் போராட்டத்தைப் பற்றி
பேசவேண்டாம். இப்போதே போராட்டத்தைப் பற்றி பேசி
ஞல் திட்டமே வராமல் போய்விடலாம். ஆகவே மாண்புமிகு
உறுப்பினரின் கேள்வியால் தமிழகத்திற்கு நட்டம்தான் வரலாமே
தவிர லாபம் வராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 செப்டம்பர் 12]

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இதற்கு முன்னலே ஒரு வருஷம் ஜனதா சாப்பாடு, அதுதான் மக்கள் சாப்பாடு, என்று 1 ரூபாய்க்கு ஹோட்டல்களில் போடப்பட்டது. இப்போது ஜனதா ஹோட்டல் என்ற முறையிலே சொல்லிவிட்டு 15 ரூபாய் வாடகை என்று சொன்னுல் பணக்காரர்கள் தங்கக் கூடிய முறையிலே தான் இது அமையும். இதற்கு ஜனதா என்று பெயர் வைக்காமல் பணம்தா என்ற பெயர் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் முயற்சிகளின் மேல் இதுபோன்ற ஹோட்டல்கள் கட்டப்படுமானுல் அதுபோன்ற ஆலோசனைகள் சொல்லப்படலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, ஜனதா விடுதிகள் பரவலாக ஏற்படுத்தப்படுகிற வகையில் நீலகிரி மாவட்டத்திலே உள்ள உதகைப் பகுதியிலேயும் அங்கே மிகுந்த கூட்டம் இருப்பதால் ஒரு படுக்கைக்கு 100 ரூபாய் வாங்குகிற நிலைமை இருக்கிறது. அங்கே ஜனதா ஹோட்டல்களை மத்திய அரசு ஏற்படுத்த இந்த அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, நீலகிரியைப் போன்ற மலைவாழ் நகரங்களிலே நம்முடைய மாநிலத்தின் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், டார்மெட்ரி சிஸ்டம் போன்ற வகையிலே குறைந்த செலவிலே அமைப்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. மத்திய அரசும் நீலகிரி போன்ற பகுதிகளிலே அதுபோன்ற குறைந்த செலவிலே வீடுகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிருேம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, ஜனதா என்ற பெயர் நெருக்கடி நிலை காலத்திலே இந்திரா காங்கிரஸ் ஆட்சியிலே இருந்தபோது தோன்றியது. இப்போதுள்ள மத்திய அரசாங்கத்தால் ஜனதா விடுதிகள் ஏற்படுத்தப்படுகின்றன. இன்றைய தினம் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு ஜனதா என்ற பெயரைக் கேட்டதும் ஒரு அலர்ஜி ஏற்படுகிறதே என்ன காரணம் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, இந்தப் பெயர் ஆராய்ச்சியைப்பற்றி வெளியிலே மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஏதாவது கருத்தரங்கு நடத்தி அதிலே முடிவு செய்து கொள்வது நல்லதென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[1978 செப்டம்பர் 12

திரு. சி. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த ஜனதா சுற்றுலா மாளிகை என்று சொல்லும்பொழுது ஒரு அரசியல் கட்சிக்கு அந்தப் பெயர் உள்ளது. அதை மாற்றி தந்தை பெரியார் சுற்றுலா மாளிகை என்று வைப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, நான் முன்பே பதில் சொல்லிவிட்டேன். முதலில் அந்த விடுதி வரட்டும். அதற்குப் பிறகு பெயரைப் பற்றி யோசிப்போம். ஏனென்றால் சென்னை மாநகரத்திலே அந்த விடுதி அமைக்கப்படவிருக்கிறது. இங்கேதான் இருக்கும். எனவே பின்னால் பார்த்துக் கொள்ளலாம்.

பொன்னமராவதியில் முகாம் நீதிமன்றம்.

*வினா எண். 160—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பொன்னமராவதி நகரில் முகாம் நீதி மன்றம் (Camp Court) அமைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : The suggestion to constitute a Camp Court at Ponnamaravathi in Pudukottai district was considered in detail by the Committee on Jurisdiction of Courts. The Committee recommended that there was no need to constitute a Camp Court at Ponnamaravathi. The Government also accepted the recommendation of the Committee. Therefore there is no proposal to constitute a Camp Court at Ponnamaravathi.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் இந்திய யூனியனுடன் இணைவதற்கு முன்பாக சமஸ்தானமாக இருந்த காலத்தில் பொன்னமராவதியில் கேம்ப் கோர்ட் அமைக்கப்பட்டு வாரத்திற்கு இரண்டு நாட்களில் நீதிபதி சென்று வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கப் பட்டிருக்கிறது. இந்திய யூனியனுடன் இணைந்ததற்குப் பிறகு அந்த நிலைமைகள் மாறிவிட்டன. அந்தப் பகுதியில் பல்வேறு வழக்குகள் இருப்பதால்—பெரும்பாலானவை பொன்னமராவதியிலிருந்து வருகின்றன. அந்தக் காரணத்தால் பொன்னமராவதிக்கு வாரத்திற்கு இரண்டு நாட்களுக்கு நீதிபதி சென்று வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்குவதற்கு மீண்டும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: The Committee's recommendation is as follows :

"Cases arising from Ponnamaravathi area are not sufficient for constituting a sub-magistrate's court there". Further the constitution of a sub-magistrate's court at Ponnamaravathi would very much affect

1978 செப்டம்பர் 12]

the working in the existing sub-magistrate's court at Tirumayam. The suggestion to constitute a Camp Court at Ponnamaravathi is also not acceptable. The Committee on Jurisdiction of Courts, who have made recommendations, appears to have taken into consideration various aspects of the matter. Therefore it is not possible to constitute a camp Court at Ponnamaravathi.

Vehicles for Judicial Officers.

* Q. No. 161—THIRU S. M. VASAN : Will the Hon. the Minister for Law be pleased to state—

(*a*) whether Cars and Station Wagons are provided to Judicial Officers in this State ;

(*b*) if so, the details of the Judicial Officers to whom the vehicles are provided ; and

(*c*) the grounds on which they are provided ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR :

(*a*) No.

(*b*) and (*c*) Do not arise.

திரு. சீ.மு. வாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பணி செய்வதற்கு நீதிபதிகள் வக்கீல்களின் வாகனங்களில் அரசு ஊழியர்களுக்கு தடுக்க அரசு முன்வருமா? ஏனைய வாகனங்கள் அளிக்க அரசு உள்ளதைப்போல நீதிபதிகளுக்கும் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: My answer is that the Government's finances do not permit the supply of vehicles to judicial officers.

திரு ரா. மாணிக்கம்: பேரவைத் தலைவரவர்களே, நீதி மன்றங்களிலேயும், டவுன் பஸ் ஸைத் தருகின்ற ... போன்ற ... அவல நிலைமை இருக்கிறது. பட்டுக்கொண்டு ... குற்றவாளிகளைத் தண்டிக்க நீதியைத் ... அவர்கள் இருக்கிறார்கள். பல வேண்டிய நிலைமையில் ... தரவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். சிவில் வழக்குகளில் தீர்ப்புத்

பாதிக்கப்பட்ட மக்களும் பஸ்களில் பயணம் செய்யும் பொழுது அதே பஸ்ஸிலே இவர்களும் செல்லவேண்டிய நிலை இருப்பதால் அவர்களுக்குப் பாதுகாப்பு தரும் வகையில் பொதுவாக ஒரு காரை வைத்து காலையிலே அவர்களை வீட்டிலேயிருந்து கோர்ட்டுக்குக் கொண்டு போய் விட்டும், மாலையிலே கோர்ட்டிலேயிருந்து வீட்டில் கொண்டுவந்து விட்டும் செய்கின்ற நிலைமையை அரசாங்கம் எடுத்துக் கொள்ளுமா? அப்படிச் செய்வது நலமாகவும் இருக்கும்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: I may welcome the suggestion. But as I have already said, Government's finances do not permit such facility at the present stage.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, நிதி நிலையைக் காட்டி நீதிபதிகளைத் தெருவில் நிறுத்துவது சரியாக இருக்காது. இன்றைக்கு உயர்நீதிமன்ற நீதிபதிகள், இரண்டு பேர் ஒரே வாகனத்தில் போக வேண்டியிருக்கிறது. சாதாரணமாக அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதைப்போல, நிதி நிலையைப் பார்க்காமல் எல்லா நீதிபதிகளுக்கும் கொடுங்கள், டிஸ்ட்ரிக்ட் முன்சீப்புக்கும் கொடுங்கள், சப்- மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கும் கொடுங்கள். எல்லோருக்கும் கார் வாங்கிக் கொடுத்தால் கார் தேங்கியிருக்கும் பிரச்சினைகள் தீரும். எனவே, நிதிநிலையைப் பார்க்காமல் எல்லோருக்கும் கார் வாங்கிக் கொடுக்க தைரியமாக இந்த அரசு முன் வருமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: The supply of vehicles to all the Judicial Officers in every hierarchy is not permitted by the State's finances. But when the finances improve, certainly the suggestion may be considered by the Government in all its earnestness. So far as the High Court Judges are concerned, I can assure the hon. Member that some times three or four Judges pool their resources and even travel together, because they are all living in one particular area. So, there is no difficulty in such pooling and that does not necessarily mean that the Government should be in a position to supply or furnish every Judicial Officer with a vehicle.

(முற்பகல் 9-40)

THIRU J. JAMES: Sir, in the District Headquarters, the Judges draw salary much less than what the several leading lawyers get every month. So, the District Judges are not able to maintain cars. Therefore they depend upon the Advocates for the cars and that will lead to even so many complaints also. Just to avoid all these things, may I request the Hon. Law Minister to think about it and try to provide cars atleast for the District Judges in District Headquarters.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: So far as I know, all the District Judges own cars. Chief Judicial Magistrates and District Judges do really own cars. There is no difficulty. Any self-respecting Judicial Officer will not accept any lift from any member of the Bar.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீதிபதிகள் பெரும்பாலும் சுற்றுப்பயணம் செய்யவேண்டிய அவசியமற்றவர்கள். அவர்களுடைய கோர்ட்டுகளுக்குப் பக்கத்திலேயே வீடுகளை அமைத்துக்கொடுத்தால், மன்னார்குடியில் முனிசிஃப் கோர்ட்டுக்குப் பக்கத்திலேயே முனிசிஃப் வீடு இருக்கிறது. அந்த முறையில் எல்லா பகுதிகளிலும் கோர்ட்டுகளுக்குப் பக்கத்திலேயே நீதிபதிகளுக்கு வீடு கட்டிக்கொடுக்க அரசாங்கம் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Such a factor has been taken into consideration in constructing quarters for Judicial Officers at present and it will be done so in future also.

அவிநாசி பஞ்சாயத்து யூனியன்.

* வினா—162 திரு. சொ. நா. பழனிசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

அவிநாசி பஞ்சாயத்து யூனியனை இரண்டாக பிரிப்பதற்கான உத்தேசம் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இது பற்றிய கருத்துரு மாவட்ட ஆட்சித் தலைவரால் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

திரு. சொ. நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவிநாசி ஊராட்சி ஒன்றியம் மிக அதிகமான பஞ்சாயத்துக்களைக் கொண்டதாக இருப்பதாலே நிர்வாக சௌகரியத்திற்காக அதைப் பிரித்தால் மிக நலமாக இருக்கும். ஆகவே, அமைச்சரவர்களை தயவுசெய்து பிரித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, ஊரக வளர்ச்சி இயக்குநர் அதை அரசுக்கு அனுப்பியவுடன் அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

பேரூராட்சிகளில் வருவாய் வளர்ச்சி ஆய்வுக் குழு.

* வினா எண் 163— திரு. யா.சை.மு. யூசுப்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1974-ல் அமைக்கப்பட்ட பேரூராட்சி மன்றங்களின் வருவாய் வளர்ச்சி ஆய்வுக் குழுவின் (Committee on the Financial Resources of Town Panchayats) அறிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் பேரூராட்சிகளின் தகுதி (grade) மாற்றம் குறித்து அக்குழு ஏதேனும் பரிந்துரை செய்துள்ளதா?

(இ) அக்குழுவின் பரிந்துரையை செயல்படுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஈ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) ஆம்.

(ஆ), (இ) & (ஈ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

சேலம் நகர் வளர்ச்சித் திட்டம்.

* வினா எண் 164— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சேலம் நகர் வளர்ச்சிக்கு ரூ. 10 கோடியில் திட்டம் ஒன்று பரிசீலனையிலுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) ஆம். சேலம் நகர் வளர்ச்சிக்கென ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (Integrated urban Development Programme) ரூ. 44.27 கோடி மதிப்பீட்டில் ஓர் பூர்வாங்க திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இத் திட்டத்தின் கீழ் தண்ணீர் மற்றும் வடிகால், வசதிகளுக்கு ரூ. 18.29 கோடியும், சாலை மற்றும் போக்குவரத்து அபிவிருத்

திக்கு ரூ 4·99 கோடியும், வீட்டு வசதிக்கு ரூ. 20.39 கோடி மற்றும் நகராட்சி திட்டங்களுக்கு ரூ. 60 லட்சமும் ஒதுக்கீடு செய்ய இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்தத் திட்டம் எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும் என்பதனை அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மத்திய அரசிடமிருந்து இதற்கு வேண்டிய நிதி ஒதுக்கீடு கிடைத்த பின்னர், 10 ஆண்டுகளுக்குள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி முடிப்பதாக இருக்கிறது.

Labour legislations for circus artistes

* Q. N. 165 Thiru M. ARUMUGAM: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) Whether the Labour legislations to benefit the workers, have been extended to circus artistes in the state, and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) & (இ) சர்க்கஸ் நிறுவனங்களுக்கு 1947-ம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம், 1958-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை) விடுமுறைகள் சட்டம், 1972-ம் ஆண்டு பணிக்கொடை சட்டம் (Payment of Gratuity Act, 1972) மற்றும் 1923-ம் ஆண்டு தொழிலாளர் இழப்பீடு சட்டம் (Workmen's Compensation Act, 1923) முதலியன ஏற்கனவே அமுலாக்கப்பட்டு வருகின்றன.

திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் தகராறு சட்டமானது சர்க்கஸ் நிறுவனங்களுக்குப் பொருந்துமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, அண்மையிலே இந்திய உச்ச நீதி மன்றம் கொடுத்த தீர்ப்பில் (Bangalore Water Supply and Sewerage Board vs Royappa and others) என்ற வழக்கின்படி கொடுத்ததீர்ப்பின்படி இது அடங்கும் என கருதுகிறேன்.

[1978 செப்டம்பர் 12

திரு. அ. செல்லப்பா: பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களும் சிறுவர்களும் சில பயங்கரமான விளையாட்டுகளில் ஈடுபடுகின்றபோது தவறி விழுந்து உயிரிழக்க நேரிடுகிறது. அவ்வாறு உயிரிழக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு 10,000 ரூபாய் நஷ்ட ஈடு வழங்கவேண்டும் என முதலாளிகளை வற்புறுத்த இந்த அரசு முன்வருமா என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சர்க்கஸ் நிறுவனம் பற்றி கேட்கப்பட்ட கேள்விக்கு Workm n s Corp o A , தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் பொருந்தும் என கூறியிருக்கிறேன்.

திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு யானையை வைத்துத் தீனி போடுவதே பெரிய பிரச்சினை. பல யானைகளையும் மிருகங்களையும் வைத்து அவற்றை நல்லவிதமாக பழக்கி பல அரிய வித்தைகளைக் காட்டக்கூடிய நிறுவனங்களுக்கு நகராட்சி, பேரூராட்சி நிலங்களை வாடகை இன்றி இலவசமாகக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: He i dialing wrong number. எனக்கு சம்மந்தமில்லாத கேள்வி.

பேருந்து ஓட்டுவதற்கான உரிமம்.

* வினா எண்.— 166; திரு. கு. ரமணி, திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பேருந்து ஓட்டுநர்களின் லைசென்ஸ் புதுப்பிக்க மூன்று வருடங்களுக்கு ரூ. 9 கட்டணம் இருந்ததை ரூ. 15 ஆக உயர்த்தப்பட்டுள்ளதா ?

(ஆ) லைசென்ஸ் புதுப்பிக்க தாமதமானல் அபராதம் போடப் படுகிறதா ?

(இ) ஆம், எனில் அபராதம் எவ்வளவு ?

(ஈ) லைசென்ஸ் புதுப்பிக்க வேறு என்னென்ன நிபந்தனைகள் உள்ளன ?

1978 செப்டம்பர் 12]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) & (ஆ) ஆம்

(இ) லைசென்ஸ் புதுப்பிக்க 30 நாட்களுக்கு மேல் தாமதமானல் அபராதத் தொகை ரூ. 5 செலுத்த வேண்டும்.

(ஈ) நிபந்தனைகள் ஏதும் இல்லை. ஆனல் லைசென்ஸ் புதுப்பிக்க படிவம் ''பி'' பூர்த்தி செய்து லைசென்ஸ்சுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, தொழிலாளர்கள், மோட்டார் ஓட்டுகின்ற ஓட்டுநர்கள் அவர்களுடைய லைசென்சுகள் புதுப்பிப்பதற்கு 9 ரூபாயிலிருந்து 15 ரூபாய்க்கு லைசென்சு கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் காலம் தாழ்ந்து புதுப்பித்தால் அவர்கள் மீது அபராதம் விதிக்கப்படுவதாக அமைச்சர் சொல்லுகிறார். பலவீனமான பகுதி மக்களுக்கு உதவி செய்கின்ற முறையில் அரசின் கொள்கை அமைந்திருக்கும்போது ஒரு தொழிலாளி தொழில் செய்ய, லைசென்சு எடுக்க அபராதம் விதிப்பதை ரத்து செய்யவேண்டும். பெயரளவுக்கு ஒரு கட்டணம் என்று போடுவதற்குக் பதிலாக இந்தக் கட்டணத்தை உயர்த்தி அரசாங்கத்திற்கு வருவாய் தேடுவது என்பதிலிருந்து மாறி இந்த அதிகக் கட்டணத்தை ரத்து செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அரசுக்கு அப்படிப் பட்ட எண்ணம் எதுவும் இல்லை. காரணம் லைசென்சு காலம் பூர்த்தியான 30 தினங்களுக்குள் அது புதுப்பிக்கப்பட வேண்டும். அப்படி லைசென்சை புதுப்பிக்காமல் பேருந்துகளை ஓட்டினல் அது சட்டத்திற்கு அப்பாற்பட்டு இருக்கிற காரணத்தால்தான், அந்தத் தவறுக்குக் குறைந்த தண்டனையாக இந்த 5 ரூபாய் அபராதம் விதிக்கப்படுகிறது.

திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டண உயர்வால் சாதாரண தொழிலாளர்களுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படும். அத்தோடு இந்தக் கட்டண உயர்வு எப்போதிலிருந்து அமுல்படுத்தப்படுகிறது என்பதை [அறிய விரும்புகிறேன். அதேபோல, வெளி மாநிலங்களில் போய் கண்டக்டர் லைசென்சு பெறுவதற்கு நிரம்பவும் செலவு செய்கிறார்கள். அதைப்போக்க அரசாங்கம் நம்முடைய மாநிலத்திலேயே கண்டக்டர் லைசென்சு கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, புதுப்பிப்பதற்கு 9 ரூபாயிலிருந்து 15 ரூபாய் உயர்த்தியது 1—1—1978 முதல் அமுலுக்கு வந்திருக்கிறது.

[1978 செப்டம்பர் 12

நடத்துநர்களுக்கு நமது மாநிலத்தில் உரிமை வழங்குவது நிறுத்தப் பட்டதற்குக் காரணம் ஏராளமான பேர்கள் வெயிட்டிங் லிஸ்டில் ஏற்கனவே இருக்கிற காரணத்தால் புதிதாக யாருக்கும் கொடுக்க வேண்டாமென்று நிறுத்தப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 9–50]

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவரவர்களே, பேருந்து லைசென்சு பெற்றவர்கள் ஏராளமானவர்கள் இருப்ப தாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி எத்தனை பேர் இருக்கிறார்கள் ? அவர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர் களே, ஏராளமான பேர் இருப்பதாக நான் கூறியது நடத்து நர்கள், ஓட்டுநர்கள் அல்ல.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர்களே, இப் போது அந்த லைசென்சை ரின்யூயல் செய்வதற்கு தனியாக ஒரு கட்டணம் வசூலித்து, புதுப்பிக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். ஒரு தடவை லைசென்சு எடுத்துவிட்டால், எப்படி ஒரு கல்வி படித்து பட்டம் பெற்றவர்கள் மறுமுறை தேர்வு எடுக்க வேண்டும் என்று சொல்வது இல்லை, அவர்கள் அந்தத் தொழிலில் தேர்ச்சி பெற்றவர்கள். ஆகவே, மறுபடியும் ரின்யூ செய்வதற்கு ரூ. 15 வசூலிப்பது ‘ ரூபாய் 9 வசூலிப்பது என்பது சரிதானா ? அதை நீக்கி விட்டு ஒரு, தடவை வாங்கினால் போதும் என்று அரசு அறிவிக்குமா ? அப்படிப்பட்ட நடைமுறை கொண்டுவர அமைச்சர் முயற்சிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, அப் படிப்பட்ட நடைமுறை கொண்டு வருவதற்கு இயலாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அந்த உரிமம் கொடுக்கப்பட்ட காலம் முடிந்த பிறகு, அந்த ஒட்டுநர்கள் அந்த உரிமகாலத்தில் தவறு இழைத்து இருப்பார்களானால் அந்த உரிமத்தை [illegible] செய்யக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அவைகளை யெல்லாம் பரிசீலிக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் உரிமம் புதுப்பிக்கப் பட வேண்டும் என்ற அடிப்படை வைக்கப்பட்டு இருக்கிறது.

1978 செப்டம்பர் 12]

தொண்டி துறைமுகச் சீர்திருத்தம்

* விஞ எண். 167.—திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட விஞக்கு விடையளிப்பாரா :—

முகவை மாவட்டத்திலுள்ள தொண்டியை துறைமுகமாக சீர்திருத்தம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, முகவை மாவட்டத்தில் உள்ள தொண்டி துறை முகத்தைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று இதே சட்ட மன்றத்திலும் கோரிக்கைகள் வைக்கப்பட்டு உள்ளன, ஆகவே, இனிமேலாவது மறு பரிசீலனை செய்து அந்தத் துறைமுகத்தை சீர்திருத்த அரசு ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, தொண்டி துறைமுகத்தைப் பொறுத்த வரைக்கும் அங்கே எந்த விதமான போக்குவரத்தும் இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு நடைபெறாத காரணத்தாலும், எதிர்காலத்தில் அந்தத் துறைமுகத்தில் போக்குவரத்து நடைபெறும் சாத்தியக்கூறு இல் லாத காரணத்தாலும் 23—12—1975-ல் அந்தத் துறைமுகத்தை மூடிவிட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, மத்திய அரசுக் கும் அது பற்றி தெரிவித்து, நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக் கிறது.

திரு. ஒ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு அந்தத் துறைமுகத்தில் போக்குவரத்து இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் காலத்தில் பர்மாவில் இருந்து கொண்டுவரப்பட்ட தேக்கு மரம் அந்தத் துறைமுகத்தில் தான் இறக்கப்பட்டது. இன்றும் வெளிநாட்டு நாணயத்தைச் சம்பாதித்துக் கொடுக்கும் இறால் போன்ற மீன் வகைகள் அங்கே தான் அதிகமாகக் கிடைக்கின்றன. ஆகவே, அந்தத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, ஒரு துறைமுகத்[illegible] மீண்டும் புதுப்பித்து, அதை நடைமுறையில் கொண்டு [illegible]து என்றால் ஏகப்பட்ட பொருள் செலவு செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. இத் துறைமுகத்தைப் பொறுத்த வரையில் தேவையான போக்குவரத்து இல்லை என்று ஏற்கனவே

அளிக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. போக்குவரத்து மிகுதியாகும் வாய்ப்பு இருந்தால் மீண்டும் அதை புதுப்பிப்பதைப் பற்றி ஆய்வு செய்யலாம்.

அண்ணா விவசாயப் பண்ணையில் பழச் செடிகள் கொள்முதல்.

* வினா எண். 168—திரு. துரை முருகன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம் குடுமியான் மலையில் உள்ள அறிஞர் அண்ணா விவசாயப் பண்ணைக்கு நடப்பாண்டில் (1977–78) பழச் செடிகள் ஏதேனும் வாங்கப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய்க்கு வாங்கப்பட்டது ?

(இ) அப்படி வாங்கி இருந்தால் வாங்குவதில் எந்த முறை கையாளப்பட்டது?

(ஈ) தனியார் நர்சரிகளில் அப்பழச் செடிகள் வாங்கப்பட்டனவா ?

(உ) ஆம் எனில், யார் யாரிடத்தில் எந்த அடிப்படையில் எவ்வளவு செடிகள் வாங்கப்பட்டன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :—(அ) ஆம்.

(ஆ) ரூ. 8,580க்கு, 7,800 மாங்கன்றுகள் ஒட்டு செய்வதற் காக வாங்கப்பட்டன.

(இ) தனியார் நாற்றுப் பண்ணைகளிலிருந்து விலைப்பட்டியல் வாங்கப்பட்டன. விலை குறைவான விலைப் பட்டியலை ஏற்றுக் கொண்டு அதைக் கொடுத்த நிறுவனத்திடமிருந்து மாங்கன்றுகள் வாங்கப்பட்டன.

(ஈ) ஆம்.

(உ) குறைந்த விலைப் பட்டியலைக் கொடுத்த திருப்பத்தூர் வி. சிவராம் பிரசாத் நிறுவனத்திடமிருந்து 7,800 மாங்கன்றுகள் வாங்கப்பட்டன.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டைமான் : பேரவைத் தலைவரவர்களே, முதலில் நான் தெரிவிக்க விரும்புவது, அண்ணா பண்ணை புதுக்கோட்டை ஜில்லாவில் இருக்கிறது. திருச்சி ஜில்லா வில் இருப்பதாக இந்தக் கேள்விப் பட்டியலில் போட்டு

இருக்கிறார்கள். அதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதே நேரத்திலே, இவ்வளவு பெரிய பண்ணையிலே அங்கேயே உற்பத்தி செய்து சப்சிடி ரேட்டில் விவசாயிகளுக்குக் கொடுக்கிற நிலைமையை அரசாங்கம் ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர வர்களே, பேரறிஞர் அண்ணா விவசாயப் பண்ணை, குடுமியான்மலை பண்ணை, புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கிறது. தவறாக திருச்சி மாவட்டம் என்று அந்தக் கேள்வியில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. தரமான பழச்செடிகள் உற்பத்தி செய்வதற்கு இந்த ஆண்டிலே மட்டும் 293 ஏக்கரில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. ஆகவே விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்ல பழச்செடிகள் கொடுக்கும் திட்டத்தைத் தீட்டி அரசு செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பயிர் காப்புத் திட்டம்.

* வினா எண் 169—திரு. மா. மணிமாறன், திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பயிர் காப்புத் (Insurance) திட்டத்தினை செயல் படுத் துவது குறித்து மைய அரசிடம் இருந்து குறிப்பு ஏதேனும் வந் துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆம். பயிர்காப்பு பற்றி முன்னோடித் திட்டமொன்றினை இவ்வரசின் கருத்தினைக்கோரி மத்திய அரசு 1978ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அனுப்பி வைத் துள்ளது. அதன் மீது அரசின் கருத்து இன்னும் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, நம்முடைய முத லமைச்சர் அவர்கள் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தில் ஆர்வம் அதிகம் உள்ளவர்கள். ஆகையால் இந்த மாநில ஏழை விவசாயி களின் துயர் துடைக்க அரசு விரைவிலே நடவடிக்கை எடுத்து, இந்தப் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தைச் செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க இருக்கிறது ; அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

[1978 செப்டம்பர் 12

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, '' நாங்கள் ஆட்
சிக்கு வந்தால் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தைச் செயல்படுத்து
வோம் '' என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர்
தேர்தல் பிரகடனத்தில் கூறியிருந்தார்கள். அரசு பொறுப்பை
ஏற்றுக்கொண்ட பின்னரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தை மத்திய அரசுக்குப் பரிந்துரை
செய்கிறோம் என்று சொன்னார்கள். அதன் அடிப்படையிலேதான்
மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று கருது
கிறேன். மத்திய அரசிடமிருந்து அது சம்பந்தமாக குறிப்பிடத்
தகுந்த அளவுக்கு செயல்படுத்த குறிப்பு ஏதேனும் இந்த அரசுக்கு
வந்துள்ளதா ? அந்தக் குறிப்பிலிருந்து பயிர் இன்ஷூரன்ஸ்
திட்டத்தைச் செயல்படுத்த எவ்வளவு காலம் ஆகும் என்பதை
அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே,
பயிர் காப்புறுதித் திட்டத்தை ஏற்கெனவே அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலும் சொன்னோம்;
அதன் பிறகு—ஆட்சிக்கு வந்த பின்னரும் கொண்டுவருவோம்
என்று அறிவித்துள்ளோம். அதுபற்றி மத்திய அரசின் உதவியை
நாடினோம். ஏற்கெனவே பொருளாதார தத்துவ மேதை
தாண்டேகர் ஒரு முன்னோடித் திட்டத்தைத் தெரிவித்துள்ளார்கள்.
அதன்படி இத் திட்டம் ஒரு மாவட்டம் அல்லது வருவாய்க்
கோட்டத்தை ஒரு யூனிட்டாகக் கொண்டு இணைந்த முறையில்
நிறைவேற்றப்படும். முதலாண்டில் தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்
வொரு பகுதியிலும் ஒன்று அல்லது இரண்டு முக்கிய பயிர்கள்
இத்திட்டத்தின்கீழ் வரும். உணவுப் பயிர்கள் அல்லாத பிற
பயிர்களுக்காக, முந்திய 10 ஆண்டுகளுக்கான பயிர் பதிவு பற்றிய
புள்ளி விவரங்கள் போதிய அளவுக்குக் கிடைக்கப்பெற்றால், அத்
தகைய பயிர்களை இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவர வகை செய்
யப்படும். ஒவ்வொரு பயிருக்கும் ஒவ்வொரு பருவக் காலத்திற்கும்
இத்திட்டம் தனியானதொரு சிறப்புத் திட்டமாக செயல்படுத்தப்
படும். மேலும், இது தாமாகவே முன்வந்து செயல்படுத்தப்
படும் திட்டமாகும். வறட்சி, வெள்ளம், பனி, புயல், பயிர்
பூச்சிகள், பயிர் நோய்கள், கலவரம், வேலை நிறுத்தங்கள் முதலிய
வற்றால் ஏற்படும் இழப்புகளை இத் திட்டம் ஈடுசெய்யும். ஆனால்
போர், அணுகுண்டு ஆபத்துகளால் ஏற்படும் இழப்புகளை இது
ஈடு செய்யாது. கடன் பெற்றவரது பயிர்கள் மற்றும் கடன்
பெற்றவர்கள் அல்லாத பிற உறுப்பினர்களது பயிர்கள் ஆகியவை
இத் திட்டத்தின் கீழ் வரும். இத் திட்டத்தை உடனடியாகச்
செயல்படுத்துவதற்கு அரசு கடந்த 26—6—1978 அன்று பரி
சிலனைக்கு எடுத்துக் கொண்டது; இத்திட்டம் தொடர்ந்து அரசின்
பரிசீலனையில் இருக்கிறது.

1978 செப்டம்பர் 12]

திரு. ரா. க. சு. தண்டபாணி : தலைவரவர்களே, இத்திட்டத்
தின் அடிப்படையில் உயர்ந்தபட்சம் எவ்வளவு கொடுக்கப்படும் ?
அதோடு, என்னுடைய காங்கேயம் தொகுதியில் கால்நடைகளின்
மதிப்பு மிக அதிகமாக இருக்கிறது ; ஒரு ஜோடி மாடு
சுமார் 10,000 ரூபாய் கூட விலை போகும் ; ஆகவே கால்நடை இன்
ஷூரன்ஸ் திட்டத்தையும் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்
குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இத்திட்டத்தின் கீழ்
உழவர் ஒருவர் காப்புறுதி செய்யவேண்டிய அதிகப்பட்சத்
தொகை ஆண்டு ஒன்றுக்கு 2,000 ரூபாய் என்று வரையறை
வைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே கால்நடைகள் இன்ஷூ
ரன்ஸ் திட்டம் அமலில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்..

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு
அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலுரையில் கடன்பட்டவர்கள்
பெயர் இந்தத் திட்டத்தில் அடங்கும் என்று குறிப்பிட்டார்கள்.
அதற்கான விளக்கத்தை அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அது
பற்றிய விளக்கத்தை படித்துக் கொண்டே போகலாம் ; நேரம்
போதாது. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் விளக்கம் அளிக்
கத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள்
நேரம் முடிவுற்றது. மற்ற கேள்விகளுக்கான பதில்கள் நடவடிக்
கைக் குறிப்பில் அச்சிடப்பெறும்.

திரு. என். கிட்டப்பா : கேள்வி நேரத்தையே நீக்கிவிட்டு,
எல்லாவற்றையும் அச்சிட்டுக் கொடுத்துவிடலாமே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபை அனுமதித்தால் அதை
யும் செய்யலாம்.

* வடகரை கிராமத்திலுள்ள கரிசல்குளம்.

* வினா எண் 170—திரு. மு. மு. அ. ரசாக்: மாண்புமிகு
வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) தென்காசி தாலுகா வடகரை கிராமம் கரிசல்
குளத்தை விவசாய முக்கியத்துவம் கருதி விஸ்தரிக்கும்
எண்ணம் அரசுக்கு உண்டா ?

---

*170 முதல் 175 வரையிலான வினாவும் அவற்றுக்கான விடை
களும் பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அச்சிடப்
பெற்றுள்ளன.

(ஆ) குளத்திலுள்ள தனியார் இடங்களை அரசுக்குத் தர உரிமையாளர்கள் சம்மதித்திருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம், என்றால் எப்பொழுது வாங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :—(அ) தென்காசி வட்டம், வடகரை கிராமத்தைச் சேர்ந்த கரிசல் குளம் கண்மாய் மேம்பாட்டிற்கான திட்டங்கள் எதுவும் கிடையாது.

(ஆ) நில உடமையாளர்கள் இக்கண்மாய் கீழுள்ள தங்கள் நிலங்களை அரசுக்குக் கொடுக்க ஒத்துக்கொண்டமை சம்பந்தமாக இத்துறையுடன் ஏதும் கடிதப்போக்குவரத்து இல்லை.

(இ) வினா எழவில்லை.

பெரியப்புலியூர் சாராயத் தொழிற்சாலையின் கழிவு நீர்.

* வினா எண் 171— திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி வட்டம் பெரியப்புலியூர் அருகில் கட்டப்பட்டுள்ள எரி சாராயத் தொழிற்சாலையின் கழிவு நீரால் ஆற்று நீர் கெட்டு மக்கள் உபயோகிக்க முடியாமற் போனது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) அதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் எதிர்த்ததால் ஊராட்சி ஒன்றியம் லைசன்ஸ் வழங்க மறுத்ததா ?

(இ) ஆம் எனில், இது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன் : (அ) தெரியும்.

(ஆ) காமதேனு பானம் என்ற தொழிற்சாலை 1976 பிப்ரவரி மாதம் மத்தியிலிருந்து இயங்கவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மேல் சித்தாமூர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம்.

* வினா எண் 172— திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், வல்லம் ஒன்றியத்தைச் சேர்ந்த மேல் சித்தாமூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நிரந்தர கட்டிடம் கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்தரராஜன் :

(அ) ஆம்.

(ஆ) இவ்வாரம்ப சுகாதார நிலையத்திற்கு நிரந்தர கட்டிடம் கட்டுவதற்கு குறைந்த பட்ச தேவைத் திட்டத்தின் கீழ் பொதுப் பணி மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர், வரைபடம் மற்றும் மதிப்பீடு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அவைகள் கிடைத்த பின் இந்த ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கான கட்டிடங்கள் கட்ட அனுமதி வழங்குவது பரிசீலிக்கப்படும்.

Candidates admitted to M. D. Course.

* Q. No. 173— Thiru K. SUPPU : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) whether the Government are aware of the fact that candidates who have been admitted to M. D. (Preventive Medicine) course in Madras Medical College are working and drawing full salary from the Department ; and

(b) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்தரராஜன் :(அ) ஆம். தற்போது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது.

(ஆ) சென்னை மருத்துவக் கல்லூரியில் கீழ்க்கண்ட இருவர் எம். டி. (சமூக மற்றும் தடுப்பு மருந்து) படிப்பு படித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

(1) டாக்டர் கமால் ஷெரிப்.

(2) டாக்டர் உதய சங்கர்.

உதவிப் பேராசிரியராக பணியாற்றும் டாக்டர் கமால் ஷெரிப்பை பொறுத்தவரையில், உதவிப் பேராசிரியர் பதவியில் இருந்து கொண்டு சம்பளம் பெற்றுக் கொண்டு எம்.டி. (சமூக மற்றும் தடுப்பு மருந்து) படிப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

டாக்டர் பி.எம். உதய சங்கர் என்பவர் நல்வாழ்வு அலுவலர் பதவிக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் சென்னை மருத்துவக் கல்லூரியில் கொள்ளை நோய்ப் பிரிவில் நல்வாழ்வு அலுவலராக நியமிக்கப்பட்டார். அவர் 21-9-77 அன்று இந்த பணியில் சேரும் போது எம்.டி. (சமூக மற்றும் தடுப்பு மருந்து) படிக்கும் விஷயத்தை இவர் இயக்குநருக்கோ, அரசாங்கத்துக்கோ தெரிவிக்கவில்லை.

அரசின் ஒப்புதல் பெறாமல் இவர் இந்தப் படிப்பு, கொள்ளை நோய் பிரிவில் நல்வாழ்வு அலுவலராக வேலை செய்துக் கொண்டே படிப்பதினால், அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கைத்தறி நெசவாளர் முன்னேற்றத்திற்குச் சிறப்புத் திட்டம்.

* **வினா எண். 174—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கைத்தறி நெசவாளர்களின் முன்னேற்றத்திற்காக மாஸ்டர் பிளான் போடப்பட்டுள்ளதா?

(ஆ) மாவட்ட வாரியாக எங்கெங்கே போடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்.

(ஆ) மாநிலம் முழுவதிலும் கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக உள்ள இடங்களைக் கருத்திற் கொண்டு இந்தத் திட்டங்கள் போடப்பட்டுள்ளன. மாவட்ட வாரியாக போடப்படவில்லை.

அவினாசி வட்டத்திலுள்ள தமிழ்நாடு நூற்பு ஆலைகள்.

* **வினா எண். 175— திரு. சொ. ந. பழனிசாமி:** மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அவினாசி தாலுக்காவிலுள்ள தமிழ்நாடு நூற்பு ஆலை கடந்த ஒரு வருடமாக மூடிக்கிடப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை அரசு எடுத்து நடத்தும் உத்தேசம் உண்டா?

(இ) பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு இதுவரை ஏதேனும் நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) & (ஆ) நிதி நெருக்கடியின் காரணமாக 25-10-1976 முதல் 16-4-1978 வரை அவினாசி தாலுக்காவிலுள்ள தமிழ்நாடு நூற்பு ஆலை மூடப்பட்டிருந்தது. 17-4-1978 முதல் திருப்பூரிலுள்ள சென்கோ டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனத்தினர் இந்த ஆலையை குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகிறார்கள்.

(இ) இல்லை.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை, உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(3) ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) ஓர் உறுப்பினர் வீட்டில் காவல் துறையினர் சோதனையிட்டதாகச் சொல்லப்பெறுவது குறித்து.

திரு. க. சுப்பு : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பேசும்போது, எங்களுக்கு கிடைக்கின்ற தகவல்களை வைத்துப் பேசுகிறோம். கிடைக்கின்ற தகவல்களை வைத்துக்கொண்டு பேசுவதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. அந்த உரிமை பறிக்கப்படுமானால் அதைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தங்களுடையது ; இல்லை என்றால் அவைக்கு வருவதில் பிரயோஜனம் கிடையாது. அந்த வகையிலே, கிடைத்த ஒரு தகவலை வைத்து, எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் இங்கே பேசினார்கள். புட்லூர் மர்ம கொலையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி எங்கள் தலைவர் இங்கே குறிப்பிட்ட பின்னால் இன்றைக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அபாயம் ஏற்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. இராசரத்தினம் அவர்களுடைய வீட்டை காவல் துறையினர் திடீரென்று போய் சோதனை போட்டிருக்கிறார்கள் ; $4\frac{1}{2}$ மணி நேரம் சோதனை போட்டு, அங்கே இருந்த பல்வேறு விதமான ரிக்கார்டுகளை எல்லாம் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருந்தால் உறுப்பினர்கள் எப்படி இங்கே தகவல்களைத் தெரிவிக்க முடியும்? இது உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதிப்பதாகும். ஆகவே, இது அவை உரிமையை மீறிய ஒரு செயல் என்பதை தங்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

[முற்பகல் 10-00].

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து அவை உரிமை மீறல் என்பதைத் தாங்கள் எழுத்து மூலமாகத் தந்திருக்கலாம். இவ்வளவு மிகுந்த அக்கறையுடன் உரிமைப் பிரச்சினை எழுப்ப நினைக்கும் தாங்கள் எழுத்து மூலமாகத் தந்திருக்கலாம். தாங்கள் காலையிலேயே தந்திருக்கலாம். காலையிலே பத்திரிகையில் வந்திருக்கும். ஆகவே நீங்கள் காலையிலே என்னிடம் எழுதிக் கொடுக்காமல் இப்போது எழுப்பும்போது அதற்கு அமைச்சரவர்களிடம் பதில் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : சரி, எழுதித் தருகிறேன்.

(4) தகவல் கோரல்

வினா நேரம் நீட்டிக்கப் பெறுமை குறித்து

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, சட்டசபையின் ஜீவநாடியைப் போன்றது இந்தக் கேள்வி நேரம் தான். ஆகவே இந்த ஒரு மணி நேரம் என்பதை மேலும் ஒரு கால் மணி நேரம் அதிகமாக்கிக் கொடுப்பதால் ஒன்றும் குடிமுழுகிவிடாது. அது ஒன்றும் ரொம்ப பெரிய பிரச்சினை அல்ல. இந்தக் கேள்வி நேரம் மட்டும் அல்ல. அதை ஒட்டி வரக்கூடிய பல விதமான தீர்மானங்கள் மற்றும் இப்பேர்பட்ட ஜீவநாடி போன்ற ஒரு நிகழ்ச்சியைத் தடை செய்வது என்பது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் அவர்கள் ஒன்றை உணர வேண்டும். எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற நிகழ்ச்சி நிரல்படி ஒவ்வொன்றுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கின்ற நேரத்திற்குள்தான் நான் அத்தனையையும் முடித்தாக வேண்டும். அதிலே மசோதாக்களை அவசரமாகவும் அவசியமாகவும் நிறைவேற்றியாக வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. எல்லாமே முக்கியத்துவம் வாய்ந்ததுதான். பேரவைகூடும் ஒவ்வொரு நாளும் இந்த $4\frac{1}{2}$ மணி நேரமும் முக்கியத்துவம் வாய்ந்தது தான். ஆகவே எல்லாவற்றையும் முடிக்க வேண்டிய கட்டாயமும் அவசியமும் இருக்கின்றது. எனவே கேள்வி நேரத்தை மேலும் ஒரு மணி நேரம் என்று நீட்டிக்க அலுவல் ஆய்வுக்குழுவிலே முடிவு எடுத்தால் அந்த வகையிலே நடத்துவதற்கு எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆகவே இருக்கின்ற சூழ்நிலையை அனுசரித்து குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு இருக்கின்றது. ஒரு கேள்விக்கு பலபேர் துணைக் கேள்வி கேட்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அதையும் அனுமதிக்க வேண்டியிருக்கிறது. எனவே இந்த ஒரு மணி நேரம் போதாதுஎன்றால் இதனை நீட்டிக்க அலுவல் ஆய்வுக்குழுவிலே முடிவு எடுத்தால் அதன்படி நடப்பது குறித்து ஆட்சேபணை ஒன்றும் இல்லை.

(திரு. கோதண்டராமன் பேச எழுந்தார்)

திரு. கோதண்டராமன் அவர்கள் உட்கார வேண்டும். திரு. மாரிமுத்து அவர்கள் பேசலாம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, மசோதாக்களை அவசர அவசியமாக நிறைவேற்ற வேண்டும் என்று சொன்னீர்கள். அவசியமாக நிறைவேற்ற வேண்டும் என்பது சரியாக இருக்கலாம். ஆனால் அவசரமாக நிறைவேற்றிட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரம் என்ற பிரச்சினையும் இருக்கின்றது. அவசியம் என்ற நிலைமையும் இருக்கின்றது. நான் இரண்டையும் ஒரே சமயத்தில் இணைந்த பொருளில் சொல்லவில்லை. அவசியம் உள்ளவைகளும் இருக்கின்றன. அவசரம் உள்ளவைகளும் இருக்கின்றன என்ற பொருளில்தான் சொன்னேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், அவசரம், அவசியம். என்பதை உணருகிறேன். அவசரம், அவசியம் என்று சொல்லக் கூடிய அத்தனைக்கும் சிகரம் வைத்தாற்போல் இருப்பது இந்தக் கேள்வி நேரம். மற்ற மோஷன்களை நான் சொல்லவில்லை. சென்ற காலங்களில்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து நீண்ட விவாதம் வேண்டாம். உங்களுடைய தலைவர் அவர்கள் அலுவல் ஆய்வுக்குழுவிலே இரண்டு மணி நேரம் கொடுக்க வேண்டும் என்று கேட்பார்களேயானால் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆகவே, அவர்களை அலுவல் ஆய்வுக் குழுவிலே கேள்வி நேரத்திற்கு நேரம் போதாது, மேலும் ஒதுக்க வேண்டும் என்று சொல்லச் சொல்லுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, அலுவல் ஆய்வுக்குழுவிலே ஒரு மணி நேரத்திற்கு மேற்கொண்டு கேள்வி நேரத்தை நீட்டிக்கக்கூடாது என்று சொன்னதாக எனக்கு ஞாபகம் இல்லை. 10 மணியோடு இந்தக் கேள்வி நேரத்தை முடித்துவிட வேண்டும் என்று பேசியதாக நினைவு இல்லை. சீக்கிரமாக நீங்கள் முடிக்க வேண்டும் என்று நினைத்தால் நிகழ்ச்சி நிரலை சரியான முறையில் தயாரித்திருக்கலாம். முக்கியமில்லாத கேள்விகளைக் குறைத்திருக்கலாம். சில முக்கியமான கேள்விகள் வரும்போது அதை ஒட்டிய சில உப கேள்விகள் விவரங்களை அறிந்து கொள்கின்ற வகையிலே கேட்கப்படலாம். ஆகவே, உடனடியாக 10 மணிக்குக் கேள்வி நேரத்தை முடித்துவிட வேண்டும் என்று தாங்கள் நினைக்கிற வகையில்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னால் முடிந்த அளவு எனக்கு இருக்கின்ற ஆற்றலைப் பொறுத்து நிகழ்ச்சி நிரல் தயாரித்திருக்கின்றேன். ஒரு வேளை திரு. அழகர்சாமி அவர்கள் என்னைவிட மிகுந்த திறமையாக காரியம் ஆற்றும் செயல் திறன் உடையவராக இருக்கலாம். ஆனால், அடுத்து இருக்கின்ற நிறைய மசோதாக்களை நிறைவேற்ற வேண்டிய நிலை இருக்கின்றது. ஆகவே, நிறைவேற்ற இருக்கின்ற அந்த மசோதாக்களை ஒட்டித்தான் இந்தக் கேள்வி நேரத்தை இன்று நீட்டிக்க முடியாத நிலையில் இருக்கின்றேனே தவிர, வேறல்ல.

திரு. கே. கந்தசாமி : ஒழுங்குப் பிரச்னை மூலம் தங்களிடம் ஒரு விளக்கம் கோர விரும்புகிறேன். நேற்று இந்த அவை முன்பு மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் 40-வது விதியின்கீழ் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று அவர்கள் எழுப்பிய பிரச்சினை, அரை மணி நேர விவாதம் நேற்றே முடிந்து விட்டது. தயவுசெய்து உட்காருங்கள். அதற்குமேல் அப்பிரச்னை எழக் கூடாது. உட்காருங்கள்.

அடுத்து, அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை.

(5) உரிமைப் பிரச்சினை.

ஊரகத் தொழில்துறை அமைச்சர்மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை 184-வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கீழ்க்கண்ட உரிமை மீறல் குறித்த பிரச்னைக்கு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள்.

"That the Hon'ble Minister twished and misrepresented my speech on the floor of the House on 30-3-1978 dur ng a press conference in Madura on 18-6-1978 where in the Minister has stated wrongly and contrary to truth that I had demanded the constitution of an enquiry commiss on to probe into the corruption charges against the then wakf Board thereby giv ng impression with ulterior motive that I charged the wax Board of corrupt practice which stands contrary to the tenor language in pith and substance of my speech and as such, the Min ster had committed a breach of privilege and hence, this motion".

இது எப்படி அவை உரிமை மீறிய செயல் என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். திரு. லத்தீப்.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30-ஆம் நாள் அன்று துணை மானியக் கோரிக்கை பற்றிய விவாதத்தில் கலந்து கொண்டு நான் பல கருத்துக்களைச் சொல்லும்போது வக்ப் வாரியம் எப்படி செம்மையாகச் செயல்பட வேண்டும் என்ற கருத்தையும் சொல்லியிருக்கிறேன். அப்படிச் சொல்லும்போது வக்ப் வாரியத்தில் தேவையில்லாத தாமதங்களும் வக்ப் வாரியத்தின் சார்பாக நீதிமன்றங்களில் நடத்தப்படுகிற வழக்குகளில்

கவன இன்மையும் அங்கு நிலவுகிறது. ஆகையால், அந்தத் துறை செம்மைப்படுத்தப்படவேண்டும். என்ற கருத்தை நான் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன்.

அப்படிச் சொல்லவில்லை என்று எப்போதும் நான் மறுக்க
வில்லை. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன
காரணத்திற்காக என்று அவர்களுக்குத் தெரியும்.
அவர்கள், என்ன காரணத்திற்காக இப்படிப் பேசினார்
என்பது அரசியலில் பங்கு கொண்டவர்கள் அத்தனை பேர்களுக்கும்
தெரியும். என்னுடைய பேச்சை முழுமையாக மாற்றி நான்
வக்ப் வாரியம் இன்எபிஷியன்ட் என்றளவிற்குச் சொல்லியிருக்
கிறேன், டிலே செய்கிறார்கள் என்றளவிற்குச் சொல்லியிருக்கி
றேன், வக்ப் வாரியத்தில் ஊழல்கள் நடந்ததாகவும், அதிலே
ஐம்பதுக்கு மேற்பட்ட ஊழல்கள் நடந்ததாக நான் சொன்ன
தாகவும், அதை விசாரணை செய்வதற்கு இங்கே அரசு ஒரு
விசாரணைக் கமிஷனை நியமிக்க வேண்டும் என்று நான் அவையில்
கேட்டுக் கொண்டதாகவும், என்னுடைய வேண்டுகோளுக்கு
இணங்கத்தான் அரசாங்கம் விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்க
இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தன்னுடைய பேட்டி
யில் மதுரையில் சொல்லியிருக்கிறார்கள்.

இது, வக்ப்வாரியத்தில் இருக்கக்கூடியவர்கள் மீது நான் லஞ்ச
ஊழல் குற்றச்சாட்டு சுமத்தியிருக்கிறேன், என் வேண்டுகோளுக்கு
இணங்கத்தான் விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட இருக்கிறது,
ஐம்பதுக்கு மேற்பட்ட குற்றச்சாட்டுக்களை நான் வக்ப் வாரியத்
தின்மீது சுமத்தியிருக்கிறேன் என்று சொல்வதன் வாயிலாக நான்
பேசாத ஒன்றை நான் பேசியதாகவும், என்னுடைய பேச்சில்
இல்லாத பொருளை தவறான எண்ணத்தோடும், உள்நோக்கம்
கொண்டும், எனக்கு பொது மக்களிடையே ஒரு களங்கத்தை
ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு, எனக்கும் வக்ப்
போர்டில் அன்றைக்கு இருந்த உறுப்பினர்களுக்கும் தப்பபிப்
பிராயம் ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்தோடும், எனக்கும்
மற்ற பொது வாழ்க்கையில் ஈடுபட்டவர்களுக்கும் இடையே
ஏதோ ஒரு பிளவை ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தோடும்,
இதை வைத்துக்கொண்டு ஏதோ ஒரு அரசியல் ஆதாயம் தேட
வேண்டும் என்ற ஒரு கெட்டம் நோக்கத்தோடும் அமைச்சர்
அவர்கள் சபையில் சொல்லப்படாத ஒரு விஷயத்தை நான்
சொன்னதாகக் கூறியிருக்கிறார்கள். இது உள்நோக்கம் கொண்டு
செய்யப்பட்டது, சபை நடவடிக்கைகளை மாற்றிச் சொல்வது.
அதன் வாயிலாக நான் சபையில் பணியாற்றக்கூடிய முறையை
என்னுடைய நிலையை மாற்றி, என்னுடைய உரிமையைப் பாதிக்
கிற, வகையில் சபையின் உரிமையைப் பாதிக்கக்கூடிய வகையில்
அமைச்சர் அவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 செப்டம்பர் 12

நான் தங்களின் கவனத்திற்காகக் கொண்டுவர விரும்புவது, நான் சபையில் என்ன பேசினேன் என்பதைப் படித்துச் சொல்கிறேன். நான் அத்தனையையும் படித்தால் நேரமாகும் என்ற காரணத்தால், சபையில் 1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் நாள் அன்று நான் பேசியது சபைக் குறிப்பேட்டில் இருக்கிறது, நான் தங்களைக் கேட்டுக்கொள்வது எங்கேயாவது ஒரு இடத்தில் ஐம்பதுக்கு மேற்பட்ட குற்றச்சாட்டுகளை வக்ப் போர்ட் உறுப்பினர்கள்மீது சுமத்தி இருக்கிறேனா, அப்படிச் சொல்லியிருக்கிறேனா என்று தாங்கள் தயவு செய்து பார்க்கவேண்டும். விசாரணைக் கமிஷன் வைக்க வேண்டும் என்று நான் சொல்லியிருக்கிறேனா என்று தயவு செய்து நீங்கள் பார்க்கவேண்டும்.

(முற்பகல் 10-10)

ஆனால் ஒன்று, இதை மறுத்து பத்திரிகையில் ஒரு அறிக்கை விட்டேன். அப்போதே அமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் சொல்லியிருக்கலாம். நான் கொடுத்த அறிக்கை மதுரை, திருநெல்வேலி பத்திரிகைகளில் வந்திருக்கிறது. நான் வெளியிட்ட அறிக்கை 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21 ஆம் நாள் திருநெல்வேலி பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் சென்னையில் பத்திரிகை நிருபர்களை இரண்டு தினங்களுக்குப் பின் கூட்டியிருக்கிறார். அதில் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், நான் சொன்னதைத் திரித்துக் கூறுகிற முறையில் அமைச்சர் அவர்கள் கூறி, நான் பேசிய பேச்சுக்களையும் மாற்றி சொல்லியிருக்கிறார். அமைச்சர் அவர்கள் என்ன சொல்லுகிறார் ? என்னுடைய பேச்சின் பகுதியை எடுத்து வைத்துக்கொண்டு— பத்திரிகை நிருபர்களிடம் காட்டி அவர் உண்மைக்கு மாறாகச் சொல்லுகிறார், உண்மைக்கு மாறாகச் சொல்லுவது எப்படி குரானை படிப்பவர்களுக்கு பொருந்தும் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார். இவரிடத்தில் போய் நான் குரான் படிக்க வேண்டிய துர்ப்பாக்கியம், ஏற்பட்டிருக்கிறது ; என்ன செய்வது நான் உண்மைக்கு மாறாகச் சொல்லுகிறேனாம், அமைச்சர் சொல்லுகிறார். (குறுக்கீடு) நான் * * * என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. அமைச்சர் சொன்னதைத்தான் சொல்லுகிறேன். இப்படி நான் பேசியதை மாற்றி உண்மைக்கு மாறாகச் சொல்லியிருக்கிறார். சட்டசபை நடவடிக்கைகளையே மாற்றிச்சொல்லி விட்டு, சபை உரிமைகளை மீறுகின்ற வகையில், வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு, கெட்ட எண்ணத்தோடு, சபை நடவடிக்கைகளை மாற்றிச் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தோடு திட்டமிட்டுச் சொல்ல வேண்டும் என்ற அடிப்படையில், அதே நேரத்தில் இதனால் என்னுடைய புகழை, என்னுடைய நண்பர்

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1978 செப்டம்பர் 12] [திரு. எம். ஏ. லத்தீப்]

களிடையே இருக்கின்ற தொடர்பைக் கெடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, சபையில் நடைபெறாததை நடந்தது என்று அமைச்சர் சொல்லிவிட்டு, நான் உண்மைக்கு மாறாகச் சொல்லுகிறேன் என்று சொல்லி பத்திரிகை நிருபர்களை ஏமாற்றியிருக்கிறார்கள். * * * என்ற வார்த்தையை நான் பயன்படுத்தவில்லை, அமைச்சர் சொன்ன அந்த வார்த்தையைத் தான் நான் இங்கு சொன்னேன். இவ்விதம் நான் பேசாததைப் பேசினேன் என்று உண்மைக்கு மாறாகச் சொல்லியிருக்கிறார். நான் என்ன பேசினேன் என்பது சபை நடவடிக்கைக் குறிப்பில் இருக்கிறது. தாங்கள் தயவு செய்து பார்க்க வேண்டும். அதில் எங்காவது ஒரு இடத்தில் விசாரணைக் கமிஷன் நியமிக்க வேண்டும் என்று பேசியிருக்கிறேனா என்பதைத் தாங்கள் கவனிக்க வேண்டும். அதே போன்று 50-க்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுக்களை நான் சொல்லியிருக்கிறேன் என்பதும் இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். Inefficiency, Ineffectiveness இதைத்தான் நான் சொல்லியிருக்கிறேன். ஆனால் 'கரப்ஷன்' என்ற வகையில் அமைச்சர் அவர்கள் உள்நோக்கத்தோடு, கெட்ட எண்ணத்தோடு... அவர் வகிக்கின்ற பதவிக்கு * * * அவர்கள் இந்த முறையில் நான் சபையில் பேசாததைப் பேசினேன் என்று சொல்லியிருக்கிறார்......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பல முறை நீங்கள் எனக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பமே இல்லை என்று சொல்லுகிறீர்கள், இப்போது சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்....

<u>மாண்புமிகு திரு. க. உ ரா. எட்மண்ட் :</u> மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் பேசும்போது குறிப்பிட்ட * * * என்ற வார்த்தையை சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவர் பேசிவிட்டு முடிக்கட்டும் என்றுதான் இருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற வேகத்தில் குறிப்பிட்ட * * * என்ற வார்த்தை எப்போதாவது பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதையெல்லாம் பார்க்கவேண்டும் * * * என்ற வார்த்தையைச் சபைக் குறிப்பேட்டிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகின்றேன். சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

* * * மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. எம். ஏ. லத்தீப் : அந்த வார்த்தையை எடுத்து விடலாம், எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால், நான் உண்மைக்கு மாறாகச் சொல்லுகிறேன் என்று அமைச்சர் சொல்லியிருப்பதால் தான் அந்த வார்த்தையை நான் பயன்படுத்தினேன். நான் கூறாததை கூறினேன் என்று—'போன ஃபைட்' என்று சொல்லி விட்டு, 'மால பைடி'யாகச் சொல்லி, வேண்டுமென்றே திட்டமிட்டுச் சொல்லியிருப்பது அவை உரிமையை மீறுகின்ற செயலாகும். ஆகவே, இதை அவை உரிமைக் குழுவுக்கு அனுப்பி நியாயம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் (குறுக்கீடு) ஜனாப் என்று அழைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள் — மாண்புமிகு ஜனாப் லத்தீப் அவர்கள் இங்கே 30—3—78-ஆம் நாளன்று சட்டசபையில் பேசிய பேச்சுக்களை அதற்குப் பிறகு பத்திரிகை நிருபர்களிடம் பேசியபோது நான் திரித்துக் கூறியதாகவும், உண்மைக்குப் புறம்பான கருத்துக்களைச் சொன்னதாகவும் அதற்காக என்மீது உரிமைப் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அவர்கள் அன்றைய வக்ப் போர்டு எவ்வாறு செயல்பட்டது என்பதைப்பற்றி பேசியதாகவும், மற்றபடி விசாரணைக் கமிஷன் என்பதைப் பற்றியோ, அல்லது வக்ப் வாரியத்தில் 55 வகையான குற்றச்சாட்டுகள் கூறினார்கள் என்பதைப் பற்றியோ குறிப்பிடவில்லை என்றும் சொன்னார்கள். இங்கே என்னுடைய நிலையைத் தெளிவுபடுத்த நான் விரும்புகிறேன். இந்த வக்ப் வாரிய பிரச்னையே, மாண்புமிகு ஜனாப் லத்தீப் அவர்கள் இங்கே பேசியதற்குப் பிறகு, அந்தக் குறிப்பை.........................

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, 'ஜனாப்' என்ற வார்த்தையை இந்த அவையில் பயன்படுத்துவது எந்த அளவிற்குப் பொருத்தம் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். 'ஜனாப்' என்ற வார்த்தைக்குப் பொருள் 'தோழர்' என்பதாகும். சட்ட மன்றத்திலே 'தோழர்' என்ற வார்த்தையை உபயோகிப்பது முறையல்ல என்று நான் கருதுகிறேன். இதில் உங்கள் கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு எம். ஏ. லத்தீப் : 'ஜனாப்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தக் கூடாது என்று விதிமுறை, நியதி இருக்குமானால் அதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், 'ஜனாப்' என்பது ஒரு மரியாதைக்குரிய வார்த்தை.

மாண்புமிகு திரு கி. மனோகரன் : 'ஜனாப்' என்ற வார்த்தைக்கு 'தோழர்' என்று பொருள் எனத்தான் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். எனக்கு உருது தெரியாது. ஆனால் திரு லத்தீப் அவர்களுக்குத் தெரியும். மரியாதைக்குரிய வார்த்தையாக இருக்குமானால், ஆட்சேபணை இல்லை. அந்த மரியாதைக்குரிய என்பதற்குத்தான், 'மாண்புமிகு' என்ற அருமையான தமிழ் வார்த்தையை அவர்கள் சொன்னார்கள். அதுவே அவருக்குப் பிடிக்கவில்லை என்றால், திரு லத்தீப் எந்த அடிப்படையில் இதை அணுகுகிறார்கள் என்பது புரியவில்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : 'மாண்புமிகு' என்று சொல்வதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. 'ஜனாப்' என்று எங்களைச் சொல்லுவார்கள். அப்படிச் சொல்வதற்கு ஏதாவது ஆட்சேபணை இருந்தால், வேண்டாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : எனக்கும் அப்படியிருந்தால் ஆட்சேபணை இல்லை. எனக்குத் தெரிந்தவரையில், 'ஜனாப்' என்ற வார்த்தைக்குப் பொருள் 'தோழர்'. அந்தப் பதத்தைச் சட்டமன்றத்தில் பயன்படுத்தக் கூடாது என்பது முறை, மரபு. ஆனால், இது மரியாதைக்குரிய வார்த்தை என்று சொல்கிறார். அது உண்மையிலேயே மரியாதைக்குரிய வார்த்தையாக இருந்தால், 'ஜனாப்' என்பதைத் தாராளமாகப் பயன்படுத்தலாம்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நமது நிதியமைச்சர் அரவர்கள் 'ஜனாப்' என்ற வார்த்தைக்கு 'தோழர்' என்று பொருள் கூறினார்கள். அது 'மாண்புமிகு' என்ற பொருளிலே வரும். 'பாய்' என்றால் தான் சகோதரர். 'ஜனாப்' என்பது 'மாண்புமிகு' என்றும் பொருள், உருது தெரியாத நமது நிதியமைச்சர் அவர்களுக்கு தெரியாது. உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் உருது கற்றவர்கள். ஆகவே' அவர் சொல்லியதை எடுத்துக் கொள்ளலாம்.

திரு எம். ஏ. லத்தீப் : சபாநாயகர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் பேசும்போது 'பாய்' என்று கூப்பிட்டார். (சிரிப்பு)

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே 'ஜனாப்' என்பதைப் பற்றிய சுவையான ஆராய்ச்சி நடந்திருக்கிறது. இங்கே நமது நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல் 'ஜனாப்' என்பது 'தோழமை' என்ற கருத்திலே சொல்லுகிறார்கள். ஆனால், அது மரியாதைக்காக அழைக்கப்படுவது. அவர் என்னைவிட வயதிலும், அனுபவத்திலும் கொஞ்சம் மூத்தவர்.... இரண்டு முறை மாண்புமிகு என்று சொல்வதுபோல், 'மாண்புமிகு' ஜனாப்' என்று அமைப்

பதை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். அது ஒரு முக்கியமான விஷயமல்ல.

ஆனால், அவர்கள் அன்றைக்குப் பேசிய பேச்சுக்களின் குறிப்புகளிலே சில முக்கியமானவற்றை நான் வாசிக்க விரும்புகிறேன். அது இந்த இடத்திலும் இடம்பெற வேண்டும். நான் முடித்த பிறகு, இரண்டையும் ஒப்பிட்டு மேலான உங்கள் தீர்ப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10–20].

சட்ட மன்றத்தில் மாண்புமிகு ஜனாப் எம். ஏ. லத்தீப் அவர்கள் 30—3—78 அன்று கூறிய கருத்துக்களை நான் இங்கே வாசிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''இன்றைக்கு வக்ப் நிர்வாகத்தைப் பற்றி ஒன்றைக் கூறுவது என் கடமையாக நான் கருதுகிறேன். வக்ப் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு பிரச்சினைகள் வக்ப் வாரியத் தீர்ப்புக்கு, விசாரணைக்கு வருகின்றன. ஆனால் பல பிரச்னைகள் சில சமயங்களில் வழக்கு மன்றங்களுக்குப் போகுமானால் வக்ப் வாரியத் தீர்ப்புக்கு விரோதமாக வருகின்றன. அதற்கு முக்கிய காரணம் அங்கே உரிய முறையில் விசாரணைகள் செய்யப்படுவது இல்லை. உரிய நோட்டீஸ் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களுக்கு அனுப்பப்படுவது இல்லை. முக்கியமானவர்களுக்கு வாய்ப்புத் தரப்படுவது இல்லை என்று தெளிவாகத் தெரிகிறது. இதைப் பற்றிய குறிப்புகளும், எண்ணங்களும் நீதிமன்றத்தில் பல தடவைகளில் வழங்கி இருப்பதால் அந்த வக்ப் வாரியம் இயங்கும் தன்மையில், முறையில் மாற்றம் தேவை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, பல கட்சிக்காரர்கள் வெளியூரில் இருந்து திருநெல்வேலி, ராமனாதபுரம் போன்ற தூரப் பகுதிகளில் இருந்து எல்லாம் விசாரணைக்கு வருகிறார்கள். ஆனால் அவர்கள் 11 தடவை, 12 தடவை வந்தாலும் கூட அவைகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவது இல்லை. அது எந்த நோக்கத்தோடு என்றும் நமக்குத் தெரியவில்லை. கோரம் இல்லை என்றும் மீட்டிங் நடைபெறுவது இல்லை. ஆகவே, எந்தப் பிரச்சனைகளையும் அவர்கள் எடுத்து விவாதிக்க முடியவில்லை. இப்படிப்பட்ட நிலை வக்ப் நிர்வாகத்திற்குப் பெரிய சவாலாக அமைந்து இருப்பது மட்டுமல்ல, அதற்குப் பெருத்த பாதகமாகவும் இருக்கிறது, என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.

எமர்ஜன்சி இருந்த நேரத்தில் அந்த நிறுவனத்தில் யார் யாரையோ அவர்கள் வக்ப் வாரிய உறுப்பினர்களாகப் போட்டு விட்டார்கள். அவர்களிலே கூட 8 பேர் சென்னையிலே இருக்கக் கூடியவர்கள். சென்னையில் இருக்கக்கூடிய 8 பேர் கூட கூட்டங்களுக்கு வருவதில்லை என்ற நிலை இருக்குமானால் கோரம் இல்லை என்று வெகு தூரத்திலிருந்து வரக்கூடியவர்கள் எல்லாம் அடிக்கடி வந்து திரும்பிச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகையால் இருக்கக்கூடிய கமிட்டியைத் திருத்தி அமைக்க வேண்டாமா என்று சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது மிக முக்கியமான பிரச்சனை, வாய்ப்பு கிடைக்காமல் இருக்கலாம். இருந்தாலும் இருக்கின்ற நிலையை நான் எடுத்துச் சொல்லியாக வேண்டும்.''

'திருத்தி அமைக்க வேண்டாமா?' — ரி–கான்ஸ்டிடியூட் செய்ய வேண்டுமென்று அவர்கள் பேசியதைக் கருப்பொருளாக வைத்து துறை இதுபற்றி ஆய்வு செய்து இது குறித்த குறிப்புகளை அமைச்சரவைக்கு அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டிருந்தேன்.

சுற்றுப் பயணத்தை மேற் கொண்டிருந்த நேரத்தில் வக்ப் வாரிய உறுப்பினர்கள் ராஜினாமா செய்து விட்டார்கள் என்ற நிலைமையில் என்னைச் சந்தித்த நிருபர்கள் 'ஏன் அவர்கள் ராஜினாமா செய்து விட்டார்கள்' என்ற கேள்வியைக் கேட்டார்கள். அப்போது அவர்களிடத்தில் சொன்னேன். அவர்கள் ராஜினாமா செய்ததற்கான காரணங்களைக் கேட்ட போது, அது தெரியாது, காரணங்கள் கொடுத்திருக்கிறார்களா இல்லையா என்பது தெரியாது. காரணம்—நான் இங்கே மதுரையில் இருக்கிறேன். அங்கு சென்ற பிறகுதான் விரிவாகப் பார்க்க முடியும் அந்தக் கடிதங்களை என்று சொன்னேன்.

ஆனால், 30 ஆம் தேதியன்று மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் சட்டசபையில் பேசியதன் விளைவாக, இந்த வக்ப் வாரியம் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் துறை விரிவாக ஆராய்ச்சி செய்து குறிப்புகளை அமைச்சரவைக்கு அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்ட பிறகு, அதைக் கேள்விப்பட்டு அவர்கள் ராஜினாமா செய்திருக்க வேண்டுமென்பது ஒன்று.

அப்படி ராஜினாமா செய்து விட்ட பிறகு என்ன செய்யப் போகிறீர்கள் என்ற கேள்விக்குப் பதில் — வக்ப் வாரியம் புதிய உறுப்பினர்களை வைத்து திருத்தி அமைக்கப்படும். புதிய உறுப்பினர்களை வைத்து திருத்தி அமைக்கப்படும்போது — ஏற்கனவே இருந்த வக்ப் வாரிய உறுப்பினர் பெயரைக் கூறுவதில்

[திரு. கே. இராஜா முகமது] [1978 செப்டம்பர் 12

தவறு இல்லை—ஏற்கனவே இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் காஜா மொய்தீன் அவர்கள் வக்ப் வாரியத்திலுள்ள முறைகேடுகள் குறித்து 55 வகையான குற்றச் சாட்டுகள் கொடுத்து, என்குயரி செல் நிறுவி, அதனுடைய ரிப்போர்ட் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. ஒன்றிலிருந்து ஒன்றாக, படிப்படியாக இவர் பேசியது ஒன்று, அடுத்து இதுபற்றி துறை விரிவாக ஆராய்ந்து அமைச்சரவைக்குக் குறிப்பு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொண்டது ஒன்று, அதை அறிந்த அவர்கள் ராஜினாமா செய்து விட்டது ஒன்று, அப்படி ராஜினாமா செய்துவிட்ட பிறகு அரசு என்ன செய்யப் போகிறது என்று என்னைக் கேட்டது—இப்படி எல்லாம் சேர்த்து பத்திரிக்கையில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

நான் சொல்ல விரும்புவது—'' விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டுமென்று சட்டசபையில் அவர்கள் பேசினார்கள் ; அதனால் தான் நான் சொன்னேன்'' என்பதாகக் குறிப்பிடப்பட்டிருப்பதை நானும் ஏற்றுக்கொள்ளவில்லை.

வக்பு வாரியத்தை '' ரி-கான்ஸ்டிடியூட் '' செய்ய வேண்டும்—திருத்தி அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு காரணங்கள் என்ன என்று வருகிறபோது காரணங்களைச் சொன்னேன். திருத்தியமைக்கப்பட்ட வாரியம் என்னென்ன நடவடிக்கைகளில் இறங்கும் என்று கேட்டபோதுதான் இன்னின்ன காரியங்களைச் செய்தாக வேண்டும் ; காரணம் அந்த வாரியத்தில் உறுப்பினராக இருந்த ஒருவரே 55 வகையான குற்றச் சாட்டுக்களைக் கொடுத்து, ஆளுநர் ஆட்சி இருந்தபோது என்குயரி செல் போடப்பட்டு, விசாரிக்கப்பட்டிருக்கிறது. பல கோடிக் கணக்கான ரூபாய்கள் மோசடி நடந்திருக்கிறது என்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள். நிருபர்களைக் கூட்டி வைத்து இவர் பேசிய பேச்சை அவர்களிடம் காட்டாமல் ஏதோ உண்மைக்கு மாறான கருத்தைச் சொன்னதாகச் சொல்கிறார்கள். அன்றைக்கு வந்திருந்த நிருபர்களிலே பல பேர்கள் இங்கே தான் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினரின் அச்சடிக்கப்பட்ட பேச்சை ஆங்கிலப் பத்திரிகைகளின் சார்பாக வந்திருந்தவர்களுக்கு அதனுடைய ஆங்கில நகலையும், தமிழ்ப் பத்திரிகைகளின் சார்பாக வந்திருந்தவர்களுக்கு அதனுடைய தமிழ் நகலையும் அவர்களிடத்திலே கொடுத்து விட்டுத்தான் அந்தப் பிரச்சனையே ஆரம்பமாயிற்று.

அன்று திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று பேசிவிட்டு நான் அப்படிச் சொல்லவில்லை என்று சொல்வது சரியல்ல. இஸ்லாமிய சமய நம்பிக்கையின்படி மனசாட்சிப்படி ஒன்றைச் சொல்லிவிட்ட பிறகு, அதற்கு மாறுபட்டுப் பேசுவது குற்றமாகும், அதற்குப் பெரிய தண்டனை அளிக்கப்பட வேண்டுமென்று கூறுகிறது. அவர்

[1978 செப்டம்பர் 12] [திரு. கே. இராஜா முகமது]

[illegible] நான் பேசியதை அவர்கள் மாண்புமிகு உறுப்பினருக்குச் [illegible]லியிருப்பார்கள், அவர்களுக்கு வேண்டிய சில நிருபர்களும் [illegible] வந்திருக்கிறார்கள் என்று அறிகிறேன், மகிழ்ச்சியடை[illegible]றேன்.

ஆகவே, பேசிய பேச்சை மூடி மறைத்து வைத்துக் கொண்டு பேசவேண்டிய அவசியம் எனக்கு அப்போதும் ஏற்படவில்லை, இப்போதும் ஏற்படவில்லை. ஆகவே, மனதிலே வைத்துக் கொண்டு நான் பத்திரிகையாளர்களிடம் சொன்னேன் என்று அவர் சொன்னதை நான் ஏற்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் பேசிய பேச்சின் விளைவாக நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தோம். அதன் காரணமாக ராஜிநாமா செய்தார்கள். இனி அது புதிதாகத் திருத்தியமைக்கப்பட இருக்கிறது. தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் மீது நடவடிக்கை எடுக்க இருக்கிறோம், ஏற்கெனவே 55 குற்றச்சாட்டுகள் இருப்பதாக தகவல் வந்திருக்கிறது என்று இதையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகத் தெரிவித்தேன். பத்திரிகையாளர்கள் அவரவர்கள் நிலைமைகளுக்கு ஏற்ப தொடர்புப்படுத்தி கோர்வையாகப் போட்டிருக்கிறார்கள். ஒன்றுக்கொன்று குழப்பி கலந்து போட்டிருக்கவும் கூடும் என்று நினைக்கிறேன். இது தான் நிலைமை ; மேலும் ஜனாப் உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது ** உண்மைக்கு மாறானதைச் சொன்னார் என்று சொல்லி, அதைப்பற்றி விளக்கம் சொன்னார்கள். பத்திரிகை நிருபர்களிடத்திலே தகவல் தெரிவித்தேனே தவிர நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு திருமறை விளக்கத்தைச் சொல்லியிருக்கவே மாட்டேன். என்னைவிடத் தெளிந்த ஆய்ந்த புலமையுடையவர், சிந்தனையுடையவர் அவர். அவர்களுக்குச் சொல்ல வேண்டிய துர்பாக்கியமான நிலைமை எனக்கு வராது. தெரிந்த ஒன்றைப் பற்றி ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்வது காலத்தை விரையமாக்குவது ஆகும். உண்மை இது தான். எனவே தாங்கள் தீர்ப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இதில் அவை உரிமை மீறல் பிரச்சனையில்லை என்று கூறி தள்ளுபடி செய்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு மேல் ஒன்றுமில்லை.

திரு. க. சுப்பு : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்,

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். அவருக்கும் எனக்கும் உள்ள பிரச்சனை, இதிலே நீங்கள் ஒன்றும் பேச முடியாது. தயவு செய்து மசோதாக்களை நிறைவேற்ற வேண்டுமென்ற துடிப்போடு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : என்னுடைய பேச்சை அமைச்சர் அவர்கள் இங்கே படித்துக் காட்டினார்கள். நான் சொன்னது எல்லாம் பத்திரிகையிலே வந்திருக்கிறது. தங்களிடத்திலே அதைக் கொடுத்திருக்கிறேன். விசாரணைக் கமிஷன் நியமிக்க வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நியமிக்கப்பட்டது என்று................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் அப்படிச் சொல்லவில்லை என்று மறுத்துவிட்டார். அப்படிப் போட்டது பத்திரிகையினுடைய குறையாக இருக்கலாம், அதைப்பற்றிச் சொல்ல முடியாது.

திரு. சு. சுப்பு : மாண்புமிகு அமைச்சர் ** உண்மைக்கு மாருகச் சொல்கிருர் என்று பேசியிருக்கிருர். அது அன்பார்லிமெண்டரி, ஆகவே உண்மைக்கு மாருனது என்று திருத்திக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு பேர்களும் பேசியிருக்கிருர்கள். திரு. சுப்பு எனக்கு உதவியதற்காக நன்றி அவைக் குறிப்பிலே உண்மைக்கு மாருக என்று திருத்திக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இங்கே **உண்மைக்கு மாருனதைப் பேசியதாக யாருமே பேசிவிடவில்லை, வெளியே பத்திரிகை நிருபர்களிடத்திலே பேசியதைத்தான் சொன்னேம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **உண்மைக்கு மாருனது என்று அவைகளை திருத்திக் கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.

[முற்பகல் 10–30]

6. ஒத்திவைப்புத் தீர்மானம்.

பாட நூலில் மார்க்ஸிசீய தத்துவம் எழுதப்பெற்றுள்ள தன்மை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 42-வது விதியின் கீழ், திரு. ரா. உமாநாத் அவர்கள் கீழ்க்கண்ட ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிருர் :—

" மேல்நிலைப் பள்ளி முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசு தயாரித்துள்ள ' அரசியல் ' என்று தலைப்பிட்டுள்ள நூலின் 1978 ஆம் ஆண்டின் முதல் பதிப்பின் 135 ஆம் பக்கத்தில் மார்க்கசீயப் பொருளாதாரமும் தத்துவமும் கோட்பாடுகளும் திருத்திக் கூறப்பட்டுள்ளதாலும், அவதூறுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாலும், கேவலப்படுத்தப் பட்டுள்ளதாலும் அந்தப் பகுதி மாணவர்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க "

இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்துச் சுருக்கமாக விளக்கும்படி திரு. உமாநாத் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : அவைத் தலைவர் அவர்களே, நான் சுருக்கமாக பாயிண்ட்ஸ்ஸோடு முடித்து விடுகிறேன். பாடப் புத்தகத்தில் வரும் பாடங்கள் அரசியல் சம்பந்தமான பாடங்களாக இருந்தாலும், மற்றச் சித்தாந்தங்களைப் பற்றி அந்தப் பாட புத்தகத்தில் சொல்லும் பொழுது அந்தச் சித்தாந்தங்களை ஃபேக்சுவலாக அப்படியே சொல்லுவதுதான் பாடப்புத்தகங்கள் செய்ய வேண்டிய கடமை. ஒரு கட்சியின் சொந்த அரசியல் கருத்துக்களைப் பாடப்புத்தகங்களின் மூலமாக மாணவர்களுக்குப் புகுத்தக் கூடாது என்பது ஒரு மரபு. ஆனால், குறிப்பிட்ட இந்த போர்ஷனிலே பாடம் எழுதியவர்களுடைய சொந்தக் கருத்தை, மார்க்கசீயத்தைப் பற்றி அவர் கொண்டுள்ள சொந்தக் கருத்தை இதிலே புகுத்தியிருக்கிருர்கள் என்பது நான் சொல்லக் கூடிய விஷயமாகும். " அரசு மறைந்துபடும் என்ற கருத்து நடை முறையில் நிலைக்கக்கூடியது அல்ல. அரசு மறைந்துபடுமுன் மார்க்ஸ் உழைப்பாளிகளின் வல்லாட்சி நடைபெற வேண்டும் என்ற முறையினை வலியுறுத்துகிருர் ; எந்தவித வல்லாட்சியும் கொடுங்கோலாட்சியில் விளையும்." இது அவருடைய சொந்தக் கருத்து. ஜார் ஆட்சியின் கொடுங்கோலாட்சி மாதிரி என்பது அவருடைய கருத்து. அதைப் புகுத்துகிருர்கள். மேலும்,

''எனவே உழைக்கும் வர்க்கத்தின் வல்லாட்சியும் ஒப்புக்கொள்வதற்கில்லை.'' அவர் ஒப்புக்கொள்வதற்கில்லை என்பதை, படிக்கும் மாணவர்களிடத்திலே கூறுகிறார்கள்.

இரண்டாவதாக, அவருக்கு மார்க்கசீயத்தின்மீது உள்ள காழ்ப்புணர்ச்சியையும் அவர் காட்டியுள்ளார் என்பது கடைசிப் போர்ஷனைப் படித்துப் பார்த்தால் தெரியும். அதிலே, '' மார்க்ஸின் 'அபரிமிதமான வருவாய்' கொள்கையும் தவறு என நிரூபிக்கப்பட்டுள்ளது.'' என்று கூறுகிறார். அபரிமிதமான வருவாய் என்ற இந்த டிரான்ஸ்லேஷனே தப்பு. சர்ப்ளஸ் வேல்யூ என்றால் உபரி மதிப்பு என்பது. மேலும், அவர் கூறுகிறார், '' லாஸ்கி சொல்வது போல பொது உடைமை தத்துவத்தில் அறிவாய்ந்த தவறுகளும் ஒழுக்கமின்மை என்ற குருட்டுத்தனமும் சமூகத்தைப்பற்றி வேண்டத்தகாத கோளாறான எண்ணங்களும் உள்ளன.'' most Slanderous Statement இளம் ஸ்டேஜிலே மாணவர்களிடத்திலே இப்படிப்பட்ட கருத்துக்களைக் கொண்டு வருவதா? இன்னொரு காண்ட்ரடிக்ஷன் இருக்கிறது. மார்க்கசீயத்தை ஒரு பாடமாகக் கற்றுக்கொடுக்கலாம் என்று மதுரை யூனிவர்சிட்டியிலே டிசைட் செய்திருப்பதாகும். அப்படி நம் மாநிலத்திலே ஒரு டிசிஷன் இருக்கும்பொழுது, அதற்கு நேர் முரணான விஷயத்தைப் பாடப் புத்தகத்தில் புகுத்துவது கல்வி ஒழுங்கு நெறிகளுக்கு முரணானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் இதற்கு மாறான கருத்து உடைய டீச்சர்கள் அவர்களுடைய கருத்துக்களைக் கற்றுக்கொடுக்க ஏதுவாகும். மார்க்கசீயத்தில் சரியான கருத்துக்களை உடையவர்கள் இதற்கு எதிராகக் கருத்துக்களைச் சொல்லி அதனால் ஒரு இன்டிசிப்பிளின், கசமுசா ஏற்படும். கசமுசா என்பது சாதாரணமாகத் தமிழிலே சொல்வது.

இந்தப் பாடத்தை உருவாக்கியதற்கு யார்தான் ரெஸ்பான்சிபிலிட்டி? கைட்லைன்ஸைச் சர்க்காரிலிருந்து கொடுக்கவில்லையா? கொடுத்து இது மீறப்பட்டதா? இந்தப் பாடத்தை உடனடியாக ரிமூவ் செய்ய வேண்டி இருக்கிறது. இதற்கு யார் பொறுப்பு என்று விசாரணை நடத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே, இது சம்பந்தமாக விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலாம் ஆண்டுக்கான அரசியற்கலை புத்தகம் தயாரிப்பதற்கு கீழ்க்காணும் பேராசியர்கள் நியமிக்கப் பெற்றனர். டாக்டர் எஸ். சுப்பிரமணியம், அரசியல் பேராசிரியர், மதுரை பல்கலைக் கழகம், திரு. ஆல்பர்ட் ஜான்சன், அரசியல் கலை விரிவுரையாளர், மதுரை பல்கலைக் கழகம், திரு. ஜே. இராஜகோபால்,

அரசியல் கலை விரிவுரையாளர், மதுரை பல்கலைக் கழகம்—இவர்கள் ஆங்கிலத்தில் எழுதியவர்கள். திரு. ம. சூரியநாராயணன், அரசியற்கலை பேராசிரியர், அழகப்பா கல்லூரி, காரைக்குடி, திருமதி. அருணா சிவகாமி, அரசியற்கலை விரிவுரையாளர், சென்னை பல்கலைக் கழகம், திரு. எஸ். இளங்கோவன், உதவிப்பேராசிரியர், கலை, மாநிலக் கல்லூரி, சென்னை—இவர்கள் தமிழாக்கம் செய்தவர்கள். திரு. ஜே. இராமச்சந்திரன், முதல்வர், மாநிலக் கல்லூரி, டாக்டர் சி. ஏ. பெருமாள், பேராசிரியர், அரசியற்கலை, சென்னை பல்கலைக் கழகம், டாக்டர் எம். ஆபேல், பேராசிரியர், அரசியற்கலை, சென்னை கிருத்துவக் கல்லூரி, சென்னை—இவர்கள் பரிசீலனைக் குழுவினர். மாநிலக் கல்லூரி முதல்வர் திரு. ஜே. இராமச்சந்திரன் அவர்கள்தான் இக்குழுவின் தலைவராகும்.

இவர்கள் அனைவரும் இத்துறையில் தேர்ந்த வல்லுனர்கள். கொள்கைகளைத் திறனாய்தல் என்ற முறையில் குறை, நிறை இரண்டினையும் குறிப்பிட்டிருக்கின்றனர். 135 ஆம் பக்கத்தில் கடைசி பத்தியில் இக்கோட்பாட்டின் சிறப்பினையும் எடுத்துக் காட்டியுள்ளனர். மேலும் மேல்நிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வியை விட உயர்மட்டமாகையால் கோட்பாடுகள் பற்றி நிலவும் கருத்துக்கள் யாவற்றையும் சொல்ல வேண்டியதாகிறது. இதனால் இக்கருத்து அரசின் கருத்து என்று கொள்வது தவறு. பாடப் புத்தகங்களில் உள்ள கருத்துக்கள் எல்லாம் Review Committee யினால் பார்க்கப்பட்டு பின்னரே அச்சுக்கு அனுப்பப்படுகின்றன. மாநிலக் கல்லூரியின் முதல்வர் திரு. ஜே. இராமச்சந்திரன் அவர்கள் இந்தப் புத்தகங்களைப் பரிசீலனை செய்த குழுவின் தலைவர்.

ஆட்சேபிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் திறனாய்தல் என்ற உட்பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது. திறனாய்வு என்ற உட்பிரிவின் கீழ் குறை, நிறை இரண்டையும் கூறுவதுதான் பொருத்தமானதாகும்.

மேலும் இக்கருத்துக்கள் மற்ற மேல் நாட்டு பேரறிஞர்களின் கருத்துக்களே ஒழிய, புத்தக ஆசிரியர்களின் சொந்தக் கருத்தாகக் கொள்வதற்கு இல்லையென தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அவையை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை.

திரு. க. சுப்பு: பாயின்ட் ஆஃப் ஆர்டர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்ப்புக் கொடுத்து விடுகிறேன்.

திரு. க. சுப்பு: தீர்ப்புக் கொடுத்தால், நான் ஒன்றும் சொல்ல முடியாது. அதை ஒட்டியே கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதை எடுத்தாலும் அதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுந்து கொள்வது திரு. சுப்புவினுடைய வழி என்பது பேரவைத் தலைவருக்குத் தெரியும். ஆகவே, நேரத்தை கருத்தில் கொண்டு உறுப்பினர் அமர வேண்டும். என்னுடைய தீர்ப்பை நான் அளிக்கிறேன்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத் தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியைப் பெற்று இந்த ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்புகிறேன். அம்பத்தூரிலிருக்கிற சதர்ன் சுவிச்கியர் தொழிற்சாலை கடந்த 7 மாதங்களாக மூடப்பட்டிருக்கிறது. அதனால் 600-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கிறார்கள். தொழிற்சாலையைத் திறக்கக் கோரி அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் நீண்ட காலமாக உறுப்பினராக இருக்கிறார். இதுபற்றி என்னுடைய அறையிலே வந்து கேட்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : நான் நீண்ட காலமாக உறுப்பினராக இல்லை. இப்பொழுதுதான் உறுப்பினராக ஆகியிருக்கிறேன்.

திரு. செ. சதாசிவம் : பாயின்ட் ஆஃப் ஆர்டர். நான் இம்மாதம் 1-ஆம் தேதியன்று 41-வது விதியின் கீழ் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தேன். அந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே இன்றிருக்கக்கூடிய விவசாயிகளுடைய நிலையைப் பற்றிக் கூறியிருந்தேன். வெங்காயத்தினுடைய விலை மிகக் குறைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி விதி 42-ன் கீழே அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்று நோட்டீஸ் கொடுத்தேன். ஆனால் இதுவரையில் அதை எடுத்துக் கொள்ளவில்லை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்கள் எழுப்பியது நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

அடுத்து, விதி 41-ன் கீழ், திரு. மு. ஆறுமுகம், ஒரு கவன ஈர்ப்புப பிரச்சினையைக் கொண்டு வருவார். . . . . .

திரு. ப. பொன்னுரங்கம் : பாயின்ட் ஆஃப் ஆர்டர். இது என்னுடைய தொகுதியைப் பற்றியது. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து ஆரம்பித்ததற்குப் பின்னாலே எழுப்பாதீர்கள். என்னுடைய பதிலைக் கேளுங்கள். தாங்கள் நின்று கொண்டு பேசுவதைப் பார்த்தால் ' நான் உட்காரவே மாட்டேன் ' என்று நிற்பீர்கள், அப்படித் தானே (குறுக்கீடு) தாங்கள் வற்புறுத்த முடியாது. உட்காருங்கள். திரு. ஆறுமுகம் படிக்கட்டும், பிறகு பாருங்கள். . . .

(முற்பகல் 10-40)

7. கவன ஈர்ப்புகள்.

(அ) வடசென்னை காசிமேடு பகுதியிலுள்ள குடிசைகள் கடலரிப்பால் பாதிக்கப் பெற்றுள்ளமை.

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ,, வட சென்னை காசிமேடு பகுதியில், கடலரிப்பால் மீனவர்கள் குடிசைகள் அடித்துச் செல்லப்படுவதால், மீனவ குடும்பங்களின் உடைமைக்கும் தொழிலுக்கும் சேதம் ஏற்படுதல் '' என்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை மாண்புமிகு உணவு அமைச்சர் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, வடசென்னை காசிமேடு பகுதியில் கடலரிப்பு அநேகமாக ஆண்டுதோறும் நிகழ்ந்து வருகிறது. ஆனால் இம்மாதிரி கடலரிப்பு ஏற்படுவதற்குச் சரியான காரணங்கள் இவைதான் என்று குறிக்க முடியாது.

இப்பொருள், பொறியியல் பணித்துறை அலுவலர்கள் மற்றும் பூண்டி நன்னீர் உயிரியல் ஆய்வுக் கூட அலுவலர்கள் ஆகியோர் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. கடலரிப்பு பற்றிய காரணங்களை நன்கு ஆராயாமலும், இதைத் தடுப்பதற்குத் தொழில் நுட்பம் வாய்ந்த திருப்திகரமான திட்டத்தை வகுக்காமலும், பெரும் நிதி செலவிடுவது உசிதமல்ல என்று முடிவெடுக்கப்பட்டது. இக்கூட்டத்தில், இப்பொருள் குறித்து சில ஆராய்ச்சிகளை ஏற்கனவே மேற்கொண்ட, பூனேவில் உள்ள, மத்திய நீர் மற்றும் சக்தி ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பப்பட வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டது. எனினும், மேலும் கடலரிப்பு ஏற்படாமல் தடுக்க, இப்பகுதியில் சென்னை துறைமுக பொறுப்புப் கழகத்தால், கற்பாறைகள் கொட்டப்படுகின்றன. வடசென்னையில் கடலரிப்பைத் தடுப்பதற்கு, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி பொதுப் பணித்துறை ஆராய்ந்து வருகிறது.

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1978 செப்டம்பர் 12

கடலரிப்பு ஏற்பட்டு அதனால் நிலம் கடலால் கொள்ளப் படும் சமயங்களில், இப்பகுதியில் வாழும் மீனவர்கள் பத்திர மான பகுதிக்கு அப்புறப்படுத்தப்படுகிறார்கள். இவர்கள் மாற்றிடங்களில் குடிசைகளை அமைத்துக் கொள்ள ஒவ்வொரு குடிசைக்கும் ரூ. 50 வீதம் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இங்கே கேள்வி நேரத்தைக் கூட சுருக்கிக் கொண்டீர்கள், காரணம் நேரம் வேண்டும் என்பதற் காக. நான் 41-வது விதியின்கீழ் ஒரு கால் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்திருந்தேன். இது என்னுடைய தொகுதி யைச் சேர்ந்தது. இந்த இடத்தில் கடல் அரிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லை. பக்கத்தில் உள்ள ராதாகிருஷ்ணன் நகரில், எனது அருமை நண்பர் ஐசரிவேலன் தொகுதியிலும், சிகாமணி தொகுதியிலும் கடல் அரிப்பு ஏற்படுகின்றது என்பதைப் பற்றி கால் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். இங்கே இல்லாத ஒன்றைப் பற்றிச் சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை அந்த உறுப்பினர் தான் எழுப்ப வேண்டும். அதுதான் உரிமை. கடல் அரிப்பு இருக்கிறதா இல்லையா என்பதைத்தான் அமைச்சர் சொல்ல வேண்டும். உங்களுடைய பிரச்னை நாளை வருகிறது.

திரு. மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறக்கூடிய நேரத்தில் ஆண்டு தோறும் இந்தக் கடல் அரிப்பு ஏற்படுவதாகக் கூறியிருக்கிறார்கள். கடல் அரிப்பு ஒவ்வொரு ஆண்டும் ஏற்படுவதால், நூற்றுக் கணக்கான குடும்பங்கள் தங்கள் வீடுகளை இழந்து நடுத்தெருவில் வாழ்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. காசிமேடு 23-வது வட்டத் தைச் சேர்ந்த, சீனிவாச நகர், மாயாண்டி நகர், அண்ணா நகர், பூங்காவனக் குப்பம், பல்லவன் நகர் போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் 500-க்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வீடுவாசல்களை இழந்து நடுத்தெருவில், நின்று கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, தங்கம்மாள் குடியிருப்பு என்ற பகுதியில் மீனவர் களுக்காகக் கட்டப்பட்டுள்ள வீடுகளில், தற்போது மீனவர்கள் அடையாளச் சீட்டு இல்லாதவர்கள் வசித்துக் கொண்டிருக் கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; தயவு செய்து குறைத்துக் கொள்ளுங்கள். இதில் தாங்கள் பேசுவதற்கு வாய்ப்பில்லை. சுருக்கமாகக் கேளுங்கள்.

1978 செப்டம்பர் 12]

திரு. மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, 1978-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 11-ம் நாளன்று ஏற்பட்ட கடல் அரிப்பின் காரணமாக நூற்றுக்கணக்கான குடும்பங்கள் நடுப்பாதையிலே வசித்துக் கொண்டிருக்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் இருந்த காலத்தில், இந்தக் காசிமேடு பகுதி கடல் அரிப்பால் சேதமடையாமல் இருக்கும்பொருட்டு, பலமான சுவர் எழுப்பினார்கள்....

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆண்டுதோறும் கடல் அரிப்பு ஏற்படுகிறது என்று சொல்லவில்லை. அநேகமாக ஆண்டு தோறும் ஏற்படுகிறது என்றுதான் சொன்னேன். இருந்தாலும் கடல் அரிப்பைத் தடுப்பது என்பது இயற்கையை எதிர்த்துப் போராடுவதற்குச் சமமாகும். ஆகவே இப்படிப்பட்ட கடல் அரிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கொடுக்கத் தான் அரசாங்கத்தாலே ஏற்பாடுகளைச் செய்ய முடியும். தடுப்புச் சுவர் கட்டும் கருத்து அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை. காரணம் பலகோடி ரூபாய்கள் செலவு செய்ய வேண்டிய சூழ் நிலை இருக்கிறது. இருந்தாலும் அரசு இந்த நிலையை உன்னிப் பாக கவனித்து வருகிறது.

(ஆ) அபிஷேகபுரம் பகுதியிலுள்ள தனியார் பள்ளி ஒன்றின் நிர்வாக நிலை.

திரு. கோ. இளங்கோவன் :
திரு. கூ. ச. முருகேசன் :
பேரவைத் தலைவரவர்களே,
"திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் ஒன்றியம், அபிஷேகபுரம் பேரூராட்சி எல்லைக்குள் அமைந்த 'அலெக்ஸ்' தனியார் தொடக்கப்பள்ளியினை நிர்வாகம் தொடர்ந்து நடத்தாததால் ஆசிரியர்களும் மாணவர்களும் அவதியுறுகின்ற" என்ற அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை மாண்புமிகு கல்வி அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

திரு. என். கிட்டப்பா : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், இங்கே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் காணோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் வந்து விட்டார்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்தில், அபிஷேகபுரம் பேரூராட்சி சுந்தர் நகரில், திரு. அடைக்கலராஜ் என்பவரால்

அலெக்ஸ் ஆரம்பப்பள்ளி என்ற பெயரில் ஒரு தனியார் ஆரம்பப்பள்ளி நடத்தப்பட்டு வந்துள்ளது. 1978-ம் ஆண்டு மே திங்கள் 31-ம் தேதிக்கு மேல் இப்பள்ளிக்கு தொடர் அங்கீகாரம் கோரி, அங்கீகார மனுவை உரிய காலத்தில் அனுப்பத் தவறியதாலும், பள்ளியின் கட்டிட உரிமம் அனுப்பாததாலும், மேலும் பழைய உரிமம் 1977-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22-ம் தேதி வரைதான் செல்லுபடியில் இருந்ததாலும், புதிய கட்டிட உரிமத்தை முன்னிலைப்படுத்தாததாலும், இப்பள்ளியின் செயலர் பள்ளிக்கென ஒதுக்கப்பட்ட இடவசதியின் ஒரு பகுதியை தன் சொந்த குடியிருப்புக்காக உபயோகித்ததாலும், இச்செயல்கள் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளின் விதிமுறைகளுக்கு புறம்பானதால் அப்பள்ளியின் அங்கீகாரத்தை 1978-ம் ஆண்டு ஜூன் திங்கள் 1-ம் தேதி முதல் திருச்சி மாவட்டக் கல்வி அலுவலர் ரத்து செய்துவிட்டார். அலெக்ஸ் ஆரம்பப்பள்ளியின் அங்கீகாரத்தை ரத்து செய்த பின்னரும், நிர்வாகி அப்பள்ளியை 10 மாணவர்களைக் கொண்டும், பயிற்சி பெறாத ஒரு ஆசிரியரை வைத்தும் தொடர்ந்து நடத்தி வருகிறார். அப்பள்ளியின் நிர்வாகி, பள்ளி, இந்திய அரசியல் சாசனம் 30-வது பிரிவின்கீழ் சொல்லப்பட்ட சிறுபான்மையினரால் நடத்தப்படும் பள்ளி என்றும், தமிழ்நாடு தனியார் பள்ளிகளைக் கட்டுப்படுத்தும் சட்டம் 1973-ன் பல பிரிவுகள் இப்பள்ளியினைக் கட்டுப்படுத்தாது என்றும், மாவட்ட கல்வி அலுவலர் இப்பள்ளியின் அங்கீகாரத்தை ரத்து செய்து வெளியிட்ட ஆணை செல்லாது எனவும் இதுகுறித்து நீதி மன்றம் தீர்ப்பு கூறும் வரை மாவட்ட கல்வி அலுவலரின் ஆணைக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டுமென்று சென்னை 11-வது மாநகர் உரிமை இயல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். இடைக்கால தடை பெற்றுள்ளதாக நிர்வாகி குறிப்பிட்டுள்ளார். வழக்கு நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது. இதற்கிடையில் சுந்தர் நகரில் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி 28-8-78 முதல் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அப்பள்ளியில் 138 மாணவர்கள் பயிலுகின்றனர். எனவே மாணவர்கள் அவதியுறும் நிலைமை நேரிடவில்லை.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவரவர்களே, மாணவர்களுக்காக ஒன்றியப் பள்ளி ஒன்று தொடங்கப்பட்டு இருக்கிறது என்று அமைச்சர் சொன்னார்கள். நன்றி, இருந்தாலும், ஏதோ சாக்குபோக்குச் சொல்லி இதுபோல் தனியார் பள்ளி நிர்வாகிகள் பல நேரங்களில் அவர்கள் விருப்பத்திற்கு அடிக்கடி பள்ளிக்கூடத்தை இழுத்து மூடிவிடுகிறார்கள். வகுப்புகளைக் குறைத்து விடுகிறார்கள். வகுப்புகளைக் குறைத்தாலும் குறைக்காவிட்டாலும் ஆசிரியர்களைக் குறைக்கிறார்கள். கல்வித் துறை ஆணை பிறப்பித்தும் கூட அந்த

ஆணைக்கு மதிப்பளிக்காது இருக்கிறார்கள். அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆசிரியராக இருந்தவர்கள். ஆகவே, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, கல்லூரி ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் பிரச்சினைகளை காலதாமதம் இல்லாமல் உடனடியாகத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? மேலும், அந்தப் பள்ளியில் பணியாற்றிய ஆசிரியர்களின் நிலை என்ன என்று தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அந்தப் பள்ளியில் பயிற்சி பெறாத ஒரு ஆசிரியரை வைத்துக் கொண்டு நடத்தியதாகத்தான் இங்கே விவரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. கோ. இளங்கோவன் : ஏற்கனவே பணிபுரிந்துள்ள ஆசிரியர்கள் நிலைபற்றி தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுமாதிரி வாருங்கள் கவனத்திற்குக் கொண்டு இருந்தால் அரசின் தனியார் பள்ளிகளைப் பொறுத்த என்று கேட்டுக்கொள்கிறேன். பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், வரையில், தொடக்கப் பள்ளிகள், எங்கே இருந்தாலும், தனியார் துறை கல்லூரிகள் என்று நடத்துவார் நிர்வாகம் ஆசிரியர்களை தங்கள் இஷ்டம்போல் நீக்குதல் களானல், தங்கள் இஷ்டம்போல் அவர்களை மேற்கொள்வார்களானால், போன்ற நடவடிக்கைகளை இப்போது அரசு உத்தரவு அவற்றைப் போக்கும்வகையில் அதை மீறுபவர்கள் மீது களைப் போட்டு வருகிறது. எடுக்கும் என்பதை நான் மேற்கொண்டு நடவடிக்கை ஆசிரியர்களின் நன்மையில் இந்த சொல்லிக் கொள்கிறேன். அரசு மிகச் சிறந்த அக்கறையை எடுத்துக்கொண்டு இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50.)

திரு. கூ. ச. முருகேசன் : தலைவரவர்களே, இந்தப் பள்ளி என்னுடைய ஒன்றியத்தில் இருப்பதால் இதன் முழு விவகாரமும் எனக்குத் தெரியும். 1978-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24-ம் தேதியில் பள்ளி நிர்வாகி மாவட்ட கல்வி அதிகாரிக்கு இந்தப் பள்ளியை மூடிவிடுவதாகக் கூறியிருக்கிறார். அதனால் மாவட்ட கல்வி அதிகாரி ஊராட்சி ஒன்றியத்திற்கு 1978-ம்

ஆண்டு மே 3-ம் தேதி அன்று அதுபற்றி கடிதம் எழுதியிருக்கிறார். இதை உங்களால் எடுத்து நடத்த முடியுமா என்று கேட்டிருக்கிறார். பள்ளி நிர்வாகத்தை ஊராட்சி ஒன்றியம் ஏற்றுக்கொள்ள தீர்மானம் போட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பியது. அதற்குப் பின்னால் அங்கே உள்ள பொது மக்கள் அந்தப் பள்ளியை 4 ஆசிரியர்களை வைத்து ஒரு கோயிலில் 3, 4 மாதங்களாக நடத்திக் கொண்டு வந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள்; அதன் ஹிஸ்டரி முழுவதையும் சொல்ல வேண்டாம்.

திரு. கூ. ச. முருகேசன் : இப்போது ஊராட்சி ஒன்றியம் பள்ளியை நடத்திக்கொண்டிருக்கிறது. ஆனால் ஆசிரியர்களை அந்த நிர்வாகத்திலிருந்து எடுத்துக்கொள்ளவில்லை. ஆகையால் அவர்கள் 6 மாதமாக சம்பளம் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, முந்தைய நிர்வாகத்தில் இருந்த ஆசிரியர்களை ஊராட்சி ஒன்றியமே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஆணையிட வேண்டும். அடுத்து, பள்ளியை நடத்துவதற்கு அங்கே கட்டிட வசதி இல்லாததால், இப்போது கோயிலில் நடந்துக் கொண்டிருக்கும் பள்ளிக்கூடத்திற்கு கட்டிடம் கட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அங்கே யார், யார் ஆசிரியர்களாகப் பணியாற்றினார்களோ அவர்களை மீண்டும் கல்வித் துறையில் ஆசிரியர்களாக நியமிப்பதற்கு இந்த அரசு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கட்டிடத்தைப் பொறுத்த மட்டில் அதை ஊராட்சி ஒன்றியம் பார்த்துக் கொள்ளும்.

(8) அறிக்கை அளித்தல்

(அ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவரவர்களே, 1978–79 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் மூன்றாவது (ஆறாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை குழுவின் சார்பில் அவைமுன் வைக்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1972–73 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகளின் மீதும், இந்திய தணிக்கைத் துறை தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கையின் மீதுமான பொதுக் கணக்குக் குழுவின் நான்காவது அறிக்கையை குழுவின் சார்பில் அவைமுன் வைக்கிறேன்.

(9) அரசினர் தீர்மானங்கள்

(அ) சில குழுக்களின் உறுப்பினர்களுடைய பணிக்காலத்தை நீட்டித்தலும், வெற்றிடங்களை நிரப்புதலும் குறித்து.

மாண்புமிகு திரு. ஸி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவையின் 244-வது விதியின்கீழ் பின்வரும் தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

" 1977-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அமைக்கப்பெற்ற

(1) மதிப்பீட்டுக் குழு,

(2) பொதுக் கணக்குக் குழு,

(3) பொது நிறுவனங்கள் குழு

ஆகிய குழுக்கள் எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. ஆதலால் ஒவ்வொரு ஆண்டின் இறுதியில் மேற்படி குழுக்களின் பதவிக்காலம் முடிவடையும் என்னும் பேரவை விதிகள் முறையே 164 (2), 173 (3) மற்றும் 182 (அ) (3) ஆகியவற்றைத் தளர்த்தி, அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் தேதி முடிய பணியாற்ற வேண்டும்.

மேலும் பொது நிறுவனங்கள் குழுவில் ஏற்பட்டுள்ள நான்கு வெற்றிடங்களில்,

(1) திரு. எஸ். முத்துசாமி,

(2) திரு. டி. இ[illegible]மசாமி,

(3) திரு. இ. தமிழரசன்,

(4) திரு. எம். எம். ஏ. ரசாக் ஆகியோரையும்,

பொதுக் கணக்குக் குழுவில் ஏற்பட்டுள்ள இரண்டு வெற்றிடங்களில்

(1) திரு. பி. எச். பாண்டியன்,

(2) திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா ஆகியோரையும் உறுப்பினர்களாக பணியாற்ற வேண்டுமென்று கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 174-வது விதியின்கீழ் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்களை பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

(10) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு, வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களை திருத்தி அமைத்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1978).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ''தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தியமைத்தல் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1978.) பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1978—ம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பெற்றிருக்கிறது.

(11) தனித் தீர்மானம்

1978 ஆம் ஆண்டு அத்தியாவசியப் பணிகளை நிர்வகிக்கும் அவசரச் சட்டத்தை நிராகரிக்கக் கோருதல்.

திரு. க. சுப்பு தலைவரவர்களே, '' 15—5—78-ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு அத்தியாவசியப் பணிகளை நிர்வகிக்கும் அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/1978) இப்பேரவை நிராகரிக்கின்றது '' என்ற தீர்மானத்தை முன்மொழிந்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அவசரச் சட்டம் எப்போது பிறப்பிக்கப்பட்டது என்றால்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாராவது ஒருவர் வழிமொழிய வேண்டும். அதன் பின்னர் தாங்கள் பேசுங்கள்.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே, '' 15—5—1978 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு அத்தியாவசியப் பணிகளை நிர்வகிக்கும் அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/1978) இப்பேரவை நிராகரிக்கின்றது '' என்ற தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தீர்மானத்தின்மீது திரு. சுப்பு அவர்கள் பத்து நிமிடங்களும், திரு. ரமணி அவர்கள் ஐந்து நிமிடங்களும், திரு. மாரிமுத்து அவர்கள் ஐந்து நிமிடங்களும் பேசுவதற்கு அனுமதி கொடுக்கிறேன். அமைச்சரவர்கள் 15 நிமிடங்கள் பேசுவார்கள்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, அந்தச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது எப்போது என்ற விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். மின்சார ஊழியர்கள் போராட்டம், போக்குவரத்து ஊழியர்கள் போராட்டம், ஆசிரியர்கள் போராட்டம் ஆகிய போராட்டங்கள் ஏற்பட்ட நேரத்திலேதான் இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு உழைக்கின்ற மக்கள் அத்தனைபேரும் தங்களது நியாயமான கோரிக்கைகளை வைத்துப் போராட்டம் நடத்துகின்ற சூழ்நிலையில் இந்த அவசரச் சட்டம் போடப்பட்டது. குறிப்பாக போக்குவரத்துத் தொழிலாளர்கள் தங்களுடைய

[திரு. க. சுப்பு] [1978 செப்டம்பர் 12

கோரிக்கைகளை முன் வைத்து அரசுடன் போராட்டம் நடத்திக்
கொண்டிருந்த நேரத்தில் இந்தச் சட்டம் அதாவது இந்தத் தடை
உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்தச் சட்டம் போடுவதற்கு
முன்பாக தொழிற்சங்கப் பிரதிநிதிகளை அழைத்து பேச்சுவார்த்தை
நடத்தப்பட்டது. அப்போது, அந்தப் பேச்சுவார்த்தை நடந்து
கொண்டிருந்தபோது, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை
அமைச்சர் அவர்கள் வெளிநடப்புச் செய்தார்கள். சாதாரண
மாக மற்றவர்கள்தான் வெளிநடப்புச் செய்வது உண்டு. ஆனால்
அமைச்சர் அவர்களே வெளிநடப்புச் செய்தார்கள்.

(மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் பேசுவதற்கு
எழுந்தார்.)

எனக்குக் கொடுக்கப்பட்டிருப்பது பத்து நிமிடம்தான், ஆகவே
நான் பேசி முடிக்கும் வரை...............

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர்
அவர்களே, ஒரு விளக்கம்தான் சொல்லப் போகிறேன். அங்கே
தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் பேசிக்கொண்டிருக்கும்போது
முதல்வர் அவர்கள் அழைத்தார்கள். ஆகவே போய்விட்டு வரு
கிறேன் என்று சொல்லிவிட்டுத்தான் சென்றேன். நான் வெளி
நடப்புச் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, அவர்களிடம் நீங்கள்
வெளிநடப்புச் செய்கிறீர்களா என்று கேட்டபோது, ஆம் என்று
அறிவித்துவிட்டு வெளியே போனார்கள். ஆகவே பத்திரிகை
களிலே கூட பேச்சுவார்த்தையை அரசாங்கம்தான் முறித்தது
என்ற விவரங்களை தொழிற்சங்கத் தலைவர்கள் சொன்னார்கள்.
அதைத் தொடர்ந்துதான் இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்
பட்டது. இங்கே தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு
வார்த்தை நடத்துகின்ற முறையில் ஏற்பாடு செய்துவிட்டு, அவர்
கள் தங்களுக்குள்ளாக ரகசியமாகப் பேசி இந்தச் சட்டத்தைக்
கொண்டு வருகின்ற வகையில் இந்தப் புரட்சி அரசாங்கம் ஒருவரை
மத்திய அரசுக்கு அனுப்பி அங்கேயிருந்து உத்தரவு வாங்கிக்
கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. ஆகவே
அவசரச் சட்டம் போடுவதற்கு ஒருவரை டெல்லிக்கு அனுப்பி
வைத்துவிட்டு இங்கே தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை
நடத்தப்படுவது என்பதற்கு என்ன பொருள் என்பது தெரிய
வில்லை. அப்படி தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடந்து
கொண்டிருக்கும்போது அமைச்சர் அவர்கள் வெளிநடப்பு செய்
தார்கள். அதற்கான விளக்கத்தை அவர்கள் தந்தாக வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதை எல்லோருமே
கண்டித்தார்கள். எல்லாத் தொழிற்சங்கங்களும் கண்டித்தன.
இந்த அவசரச் சட்டம் பஸ் தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல,

1978 செப்டம்பர் 12] [திரு. .க. சுப்பு]

தொழிலாளர் சமுதாயம் முழுமைக்கும் விடப்பட்டிருக்கக்கூடிய
ஒரு சவாலாகும் என்று அனைவரும் கண்டனம் தெரிவித்தார்கள்.
திரு. எஸ். சி. சி. அந்தோணிப் பிள்ளை, திரு. கே. எம். சுந்தரம்,
திரு. வி. பி. சிந்தன், திரு. காட்டூர் கோபால், திரு. டி. பி.
ஏழுமலை, திரு. ரங்கராஜன் குமாரமங்கலம், ஆகிய அனைத்துத்
தொழிற்சங்கத் தலைவர்களுமே எதிர்த்தார்கள். இந்தச்
சட்டத்தை அவர்கள் அனைவரும் தொழிலாளர்களுக்கு விரோத
மானது என்று எதிர்த்தார்கள்.

அடுத்து, இந்தச் சட்டம் போட்டதற்கு பின்னாலே பஸ் தொழி
லாளர்களுக்கு 62 ரூபாய் ஊதிய உயர்வும் மற்றும் 24 சலுகை
களும் கொடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதைக்கூட ஒரு
சாதனையாகச் சொல்லி விளம்பரப்படுத்திக்கொள்கிறார்கள்.
தொழிலாளர்களை தங்களது நியாயமான கோரிக்கைகளுக்காகப்
போராட விடாமல் செய்துவிட்டு இதனைக்கூட தங்களது
ஓராண்டுக் காலச் சாதனைகளிலே ஒன்றாகப் போட்டு விளம்பரம்
செய்து கொள்கிறார்கள்.

[முற்பகல் 11-00]

அடுத்து தொழில் அமைதி நிலவுகிறதாம். டி. ஏ. சைக்கிள்ஸ்,
ரைட் சேட்ல்ஸ் போன்ற நிறுவனங்களிலே மயான அமைதிதான்
நிலவுகிறது. நீங்கள் விரும்புவது மயான அமைதியையா அல்லது
மன நிறைவான அமைதியையா என்பதைத் தெளிவுபடுத்த வேண்
டும். இன்னொன்று, தொழிற்சாலைகளை மூடுவது, கதவடைப்பு செய்
வது என்பதைத் தூண்டிவிட்டு, அரசியல் நோக்கோடு தூண்டி
விட்டு, அரசு தலையிட்டு போராட்டங்களை நிறுத்தி வைத்திருக்கிறது
என்று சொல்லி அதையும் ஓராண்டுச் சாதனையாக ஓராண்
டுச் சாதனை என்ற விளம்பரத்தில் விளம்பரம் செய்யப்படுகிறது.
சி.ஐ.டி.யு., எ.ஐ.டி.யு.சி., தோழர்களோடு, போராட்டம்
நடத்திய தோழர்களோடு, எல்லோரையும் சேர்த்துக்கொண்டு
மதுரை மாநகராட்சித் தேர்தலில் கூட்டு வைத்துக்கொண்டு
இப்படி ஒருபுறம் நடக்கிறது. ஒரு பக்கத்தில் போராட்டம்,
இன்னொரு பக்கத்தில் மாலை போடுவது, கை குலுக்குவது, இது
என்னவென்று எனக்குப் புரியவில்லை. இது ஒருவேளை இரட்டை
இலைக் கொள்கையா அல்லது இரண்டு நிலைக் கொள்கையா என்
பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
எஸென்ஷியல் சர்வீஸ் குறித்து கொண்டுவரப்பட்டுள்ள இந்தச்
சட்டம் வரலாறு காணாத புதுமையான சட்டமாகும். 1968ல்
ஒரு சட்டம் போடப்பட்டது மத்திய அரசாங்கத்தினால். அந்தச்
சட்டமானது போஸ்ட் ஆன்ட் டெலகிராப்ஸ்க்கு மட்டும் அப்ளை
யாகக் கூடிய விதத்தில் போடப்பட்டது. ஆனால் இப்போது
கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தச் சட்டமானது எல்லோரையும்
சேர்த்துக்கொண்டு வரக்கூடிய அளவிற்கு, மருத்துவ ஊழியர்கள்.

ஆசிரியர்கள் என்று யாரை வேண்டுமானாலும் சர்க்கார் நினைத்தால் அவர்கள் சட்ட வலையில் சிக்க வைக்கக்கூடிய அளவிற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு இந்தச் சட்டம் பரந்து விரிந்து செல்கிறது. யாரை வேண்டுமானாலும் இந்தச் சட்டத்தின்படி, இதன் விதிகளை மீறினால் ஒரு ஆண்டு சிறை, ஆயிரம் ரூபாய் அபராதம் என்று போடலாம் என்றிருக்கிறது. போராட்டத்தைத் தூண்டிவிட்டார், ஆகவே ஓராண்டு சிறை, ஆயிரம் ரூபாய் அபராதம் என்று போடலாம். போராட்டத்தில் இறங்கினால் இரண்டாண்டு சிறை, இரண்டாயிரம் ரூபாய் அபராதம். கிரிமினல் ப்ரொஸீஜர் கோடைத் தூக்கி எறிந்துவிட்டு, இந்தச் சட்டத்தின்படி ஒரு கான்ஸ்டபிள்கூட கைது செய்யலாம் என்ற நிலைமைதான் இருக்கிறது. யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம் என்றளவிற்கு சட்டம் போடப்பட்டிருக்கிறது. இதுதான் தொழிலாளர் நல அரசு என்பதன் இலட்சணமா, இலக்கணமா என்பதை அமைச்சர் அவர்கள் பேசும்போது தெளிவுபடுத்த வேண்டும்.

எஸென்ஷியல் சர்வ்ஸ் என்று போட்டுவிட்டு, சர்க்கார் சர்வீஸில் இருப்பவர்களைச் சாக விடுகிறார்கள். சர்க்கார் சிப்பந்திகள், தொழிலாளர்கள் சாகடிக்கப்படுகிறார்கள். ஸ்விச்கியர், டி.ஐ. சைக்கிள்ஸ் இவற்றில் உள்ள தொழிலாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள். அவர்களின் பிரச்னையை உடனடியாகத் தீர்த்து வைப்போம் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்னும் 'அந்தத் தொழிலாளர்கள் பட்டினியாகக் கிடக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்களைச் சந்திக்க முடியவில்லை. இங்கே மார்க்ஸிஸ்ட் கட்சித் தோழர்கள் கூடப் பேசினார்கள். அவசர நிலை நாட்டில் இருந்தபோது, இந்த நாட்டிலுள்ள பாஸிஸ சக்திகளை எதிர்த்து ஒரு மாநாடு போட்டு கலைஞர் அவர்களும், ஈ.எம்.எஸ். அவர்களும் ஒரே மேடையில் பாசிஸ்ட் சக்தியை எதிர்த்துப் பேசினார்கள். இன்னொரு மேடையில் அன்றிருந்த ஆளும் கட்சியினரும் மற்றவர்களும் சேர்ந்து பாஸிஸத்தை எதிர்த்து மாநாடு நடத்தினார்கள். அதில்தான் முதல்வர் அவர்கள் கலந்து கொள்கிறார்கள். இன்றைய நிலையில் அவர்கள் மாறியிருக்கிறார்கள். அதை 'பாஸிஸம்' என்று சொல்கிறார்களா அல்லது 'பாச இஸம்' என்று சொல்கிறார்களா? அந்தளவிற்கு ஒரு கொள்கையைக் கொண்டவர்கள்தான் இன்று இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். தொழிற்சங்கங்களின் குரல்வளையை நெறிக்கும் அளவிற்குத்தான் நிலை இருக்கிறது. திரு. ரமணி அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். தொழிற் சங்கங்கள் இடையே போட்டிச் சங்கங்களை உருவாக்குவதுதன் விளைவுதான் உடுமலைப்பேட்டையில் நடந்த மரணம். திராவிட முன்னேற்ற கழகச் சங்கத்தைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவர்கள் ஒரே நாளில் மாற்றப்பட்டிருக்கிறார்கள். இது தொழிற்சங்கத்தில் தலையீடு இல்லையா? பல்லவன் போக்குவரத்து ஊழியர்கள்

மன்றத்தில், அங்கீகரிக்கப்படாத சங்கத்தின் வரவேற்பை போக்கு
வரத்துத் துறை அமைச்சர் திரு. பொன்னையன் அவர்களும்,
தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்
களும் பெற்றிருக்கிறார்கள். அங்கீகரிக்கப்படாத சங்கத்தைச்
சேர்ந்தவர்கள் அவர்களுக்கு ஒரு வரவேற்பு கொடுத்தார்கள்.
அந்தச் செலவை வாரியமே ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழ்
நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அண்ணா போக்குவரத்துக்
கழகம், பல்லவன் போக்குவரத்துக் கழகம் இவற்றில் அங்கீ
கரிக்கப்படாத தொழிற்சங்கங்களை நுழைப்பதில் இந்த அரசு
அக்கறை காட்டியிருக்கிறது. அரசிதழ் பதவி பெறாத ஊழியர்
சங்கத்தை உடைக்க முனைந்து செயல்படுகிறார்கள். சேலத்தில்
உள்ள கலெக்டர் ஆபீஸில் வேலை பார்க்கும் ஒருவரை........

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பெர்ஸனல் இம்ப்
யுட்டேஷன் கூடாது. எனக்கும் மாண்புமிகு போக்குவரத்துத்
துறை அமைச்சர் அவர்களுக்கும் ஏற்பாடு செய்த வரவேற்பு
அண்ணா தொழிற் சங்கத்தால் செய்யப்பட்டது என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை]

திரு. க. சுப்பு : அதைத்தான் சொல்கிறேன். அங்கீகரிக்கப்
படாத சங்கங்களோடு பேசுவது என்பது, அதில் உள்ளவர்களை
அழைத்து அதிகாரிகள் பேசுவது என்பது சரியல்ல. 1974-ல்
போடப்பட்ட ஜீ. ஓ. வில். அப்படி இருக்கிறது. வேண்டுமானால்
காட்டுகிறேன். அரசாணையை அரசே மீறுவதா? அரசாணையை
அமைச்சர்களே மீறுவது என்றால் அந்த அரசாணைக்கே அவசிய
மில்லை. என்.ஜி.ஓ.-க்களின் அங்கீகரிக்கப்படாத ஒரு சங்கத்தை
ஊக்குவித்துக் கொண்டிருக்கிறீர்கள். அந்தச் சங்கத்திற்கு அங்கீ
காரம் வழங்கப்பட வேண்டும் என்று பைல் சென்றிருக்கிறது.
தலைமைச் செயலாளர் முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள்.
மறுபடியும் அது போகிறது அங்கீகாரம் கொடுப்பதற்காக.
க்ரேட்வாரியாக வைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். நான்
விரிவாக இதைப்பற்றிப் பேசவில்லை. காரணம் நேரமில்லை.
ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த
அரசே அரசாணையை மீறுகிறது. அப்படி அரசே மீறுமானால்
பின்னர் அலுவலர்கள் அரசாணைகளை பகிரங்கமாகவே மீறு
வார்கள். ஒன்று கூற விரும்புகிறேன், புள்ளியியல் துறையில்
ஏற்பட்டுள்ள ஊழல்கள் பற்றி. அரசாங்க ஆணையை எப்படி
நிராகரித்திருக்கிறார்கள் என்று பாருங்கள். இயக்குநரை மாற்றி
டெப்டி டயரக்டரை இயக்குநராகப் போட்டார்கள். அவர்
சரியாக இருக்கமுடியாது என்று வேறு ஒருவரை கமிஷனர்
போட்டார்கள் அரசாங்க விருப்பத்திற்கு மாறாக........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. பி. எச். பாண்டியன்) : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தயவுசெய்து ஆர்டினன்ஸ்மீது பேசுங்கள். வேறு விஷயங்களில் பேச வேண்டாம். Do not g:neral s: th ngs.

திரு. க. சுப்பு : இதுவும் எஸன்ஷியல் சர்வீஸை சேர்ந்தது தான். It is essent al serv ce இந்த ஆக்டின்படி நான் சொல்கின்ற விஷயமும் வருகிறது. அரசு அலுவலர்களையும் சேர்த்துத்தான் இதில் சொல்லப்பட்டிருக்கிறது. டைரக்டருக்குத்தான் அதிகாரம் இருக்க வேண்டும் என்று ஜி.ஓ. போடுகிறீர்கள். போட்டு விட்டு, டெப்டி டைரக்டரிடம் அதிகாரத்தை அலாட் செய்கிறார்கள். அரசாங்கம் எப்படியோ அதே வழியில் அதிகாரிகளும் நடக்கிறார்கள். உங்களுடைய அடிச்சுவட்டை நாங்களும் பின்பற்றுகிறோம் என்று சொல்லி அதிகாரிகளும் நடந்து கொண்டிருக்கிறார்கள். அங்கீகரிக்கப்படாத சங்கங்களுக்கெல்லாம் சலுகைகளைக் கொடுக்கிறீர்கள். பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் என்ன நடக்கிறது? அங்கீகரிக்கப்படாத சங்கத்தின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசுகிறீர்கள், அவர்களுக்கு எல்லாவித கமிட்டியிலும் உரிமை கொடுப்பதும், அவர்கள் சொன்னதை நோட்டீஸ் போடுகிறீர்கள். சந்தா வசூலிக்கின்ற முறையும் செய்து, அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களை முடமாக்கிவிட்டு, பொம்மை சங்கங்களை எல்லாம் ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கின்ற நிலைமையை நாம் காண்கின்றோம். அண்ணா போக்குவரத்துக் கழகத்தில் — அங்குள்ள தொழிலாளர் சங்கத்தில் கொடியேற்றுவதற்காக எங்கள் கழகத் தலைவர் சென்ற போது—1978 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 11-ம் தேதியில் கொடியேற்றுகிறார் என்றால், 1978 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 12-ந் தேதி அன்றோ மறுநாளே சில தொழிலாளர்களை வெவ்வேறு ஊர்களுக்கு மாற்றுதல் செய்கிறார்கள். இதை அமைச்சர் அவர்களிடம் சொல்லுவதற்காக நான்கு நாட்களாக அலைந்தோம். அவர் அகப்படவில்லை. பின்னால் அந்த உத்தரவு நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிந்தது. இது என்ன நடவடிக்கையோ தெரியவில்லை. இப்படி போக்குவரத்து அமைச்சர் அவர்களின் நடவடிக்கை விசித்திரமாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அண்ணா போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கிருந்து சில தொழிலாளர்கள் மாற்றப்பட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். அங்கு சில தொழிலாளிகள் எப்.ஐ. வழக்கு என்ற முறையில் போக்குவரத்துக் கழக பணம் திருட்டுக் குற்றச்சாட்டு, வேறு பல ஒழுங்கீனங்கள்

இவைகளுக்கு உட்பட்டவர்கள் என்ற காரணத்தின் மீது, அட்மினிஸ்ட்ரேடிவ் ரீஸன்ஸ்—என்ற முறையில் தான் மாற்றம் செய்யப்பட்டார்கள்.

திரு. க. சுப்பு : நாளைக்கே நான் இதன்மீது உரிமைப் பிரச்னை கொண்டு வருகிறேன். அங்குள்ள தொழிலாளர்களை மாற்றம் செய்ததை அங்குள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களே கண்டித்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சங்கம் அண்ணா போக்குவரத்துக் கழகத்தில் கிடையாது.

திரு. க. சுப்பு : அங்கு மட்டுமல்ல, எங்குமே கிடையாது என்பது எனக்குத் தெரியும். அங்கீகரிக்கப்பட்ட சங்கத்திலுள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தொழிலாளர்கள் இதையும் கண்டித்தார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இம்புட்டேஷன் கூடாது, எங்குமே உங்கள் சங்கம் கிடையாது என்று சொல்வதெல்லாம் சரியல்ல. நாம் மக்களுக்கு தொண்டு செய்வதற்காக இங்கே வந்திருக்கிறோம். போட்டி போட்டுக் கொண்டு நாம் வேலை செய்ய வேண்டுமே தவிர இப்படிச் சொல்வது முறையல்ல, உங்களைவிட வயதானவன் என்ற முறையில் வேதனையோடு இதைச் சொல்கிறேன்.

திரு. க. சுப்பு : இம்புட்டேஷன் கூடாது தான், ஆனால் போக்குவரத்துக் கழகங்களில் அங்கீகரிக்கப்படாத சங்கங்களிலேயே இவ்வளவு சண்டையும் நடந்து கொண்டிருக்கிறது. இதில் அரசாங்கத்தினுடைய நிலை என்ன, தொழிலாளர்கள் பிரச்னையைப் பொறுத்த அளவில், என்ன முறையை கையாளுகிறீர்கள். கல்லக்குடியில் தொழிலாளர்கள் போராட்டம் நடக்கிறது என்றால், அதைத் தீர்த்து வைப்பதற்கு அரசு அதிகாரிகளை அனுப்ப வேண்டும். அதிகாரிகளுக்குப் பதிலாக லேபர் டிப்பார்ட்மென்ட் அதிகாரிகளை அனுப்புவதற்குப் பதிலாக மலபார் ஸ்பெஷல் ஆர்ம்டு போலீஸை அனுப்பலாமா? போலீசை அனுப்பினால் அவர்களுக்கு என்ன தெரியும்? சுடத் தான் தெரியும். துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். 200 பேர்களுக்கு காயம் ஏற்பட்டது. சுடப்பட்டது குண்டினால் அல்ல, துண்டினால் தான் என்று டி.ஐ.ஜி. அறிக்கை விடுகிறார்கள். இதற்கெல்லாம் உதவி செய்யக்கூடிய நிலையில் இருப்பது இந்தக் கருப்புச் சட்டம் தான்........

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கல்லக்குடியில் பிரச்னை ஏற்பட்டதும், லேபர் டிப்பார்ட்மெண்ட் சார்பாக பேச்சுவார்த்தை நடந்தது. கன்சிலியேஷன் நடந்தது.....

[1978 செப்டம்பர் 12

திரு. க. சுப்பு : இதெல்லாம் துப்பாக்கிச் சூடு நடந்ததற்குப் பின்னால். அதற்கு முன்னால் அங்கு தொழிலாளர் அமைச்சர் போகவில்லை, அவர்கள் வேறு ஊர்களுக்கு வேறு வேலைகளைப் பார்க்கச் சென்றுவிட்டார்கள் என்பதும் எங்களுக்குத் தெரியும். தொழிலாளர் நல இலாகா இருக்கின்ற வேலைகளைச் செய்திருக்கிறார்களா என்று பார்த்தால்—என்ன நடக்கிறது? டி.ஐ. சைக்கிள்ஸ் கம்பெனியில் என்ன நடக்கிறது? அப்படித் தொழிலாளர் நல இலாகா நல்ல முறையில் வேலை செய்தது என்றால், கல்லக்குடியில் தொழிலாளர்கள் மீது சுட்டது ஏன்? தொழிலாளர்களுடைய உரிமைகளையெல்லாம் தடுப்பதற்கு Essential Service Maintenance Ordinance என்ற சட்டத்தைக் கொண்டு வந்து விட்டால், தொழிலாளர் அமைச்சர் எதற்காக இருக்க வேண்டும், இந்த இலாகா எதற்காக இருக்க வேண்டும்? இதற்காக மக்களுடைய வரிப் பணத்தை எதற்காக கொடுக்க வேண்டும்? இவற்றையெல்லாம் பார்த்தால், இந்த அரசாங்கம் தொழிலாளர் நலத்திற்கு விரோதமாக போகிற வகையில் இருக்கின்ற இந்த அவசரச் சட்டம் அவசியமற்றது, தேவையற்றது என்பதைக் கூறிக் கொள்ளுவதோடு, ஆளுநர் அவர்களை * * * தொழிலாளர்களுக்கு அடிப்படையாக இருக்கின்ற உரிமைகளைப் பறிப்பதற்கு வகை செய்யும் இந்தச் சட்டத்தை எதிர்ப்பதோடு ....

[முற்பகல் 11-10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சுப்பு அவர்கள் பேசுகிற வாக்கில் ஆளுநர் அவர்களையும் இழுத்து வைத்துப் பேசுகின்றார்கள். அந்தக் குறிப்பை நீக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : அவர் நல்ல மனிதர். அவர் பெயரை நான் கெடுக்கவில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : உறுப்பினர் சுப்பு அவர்கள் முறையாகப் பேசுவதற்கு கற்றுக் கொள்ள வேண்டும். நான் அவருக்கு கற்றுத்தர முடியாது; ஆளுநர் அவர்களை * * * என்று பேசுவது முறையா என்பதைப் பற்றி அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இனிமேல், பேசுகின்றபோது தயவு செய்து ஒழுங்காக, முறையாகப் பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்.

---

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1978 செப்டம்பர் 12]

திரு. க. சுப்பு : ஆளுநர் அவர்களின் அனுமதி பெற்று, இந்த அவசரச் சட்டம் வந்திருப்பதாலேதான், நான் அவரைப் பற்றிச் சொல்லுகின்றபோது, ஆளுநர் அவர்களை * * * என்றுதான் நான் சொன்னேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : அவர்களைப் பற்றி அப்படிப் பேசவேண்டிய அவசியம் இல்லை. எனவே, சுப்பு அவர்கள் ஆளுநர் அவர்களைப் பற்றிப் பேசிய ஆங்கிலம், தமிழ் ஆகிய வார்த்தைகளை அவைக் குறிப்பேட்டிலே இருந்து நீக்கிவிட உத்திரவிடுகிறேன்.

திரு. க. சுப்பு : நான் சொன்ன வார்த்தைகள் "அன்—பார்லிமெண்டரியா" என்று சொல்லுங்கள். நான் சபாநாயகர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆளுநர் அவர்களின் அனுமதி பெற்று, ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதனால், நான் அவரைப் பற்றி எப்படிப் பேசாமல் இருக்க முடியும்? நான் அவரது கேரக்டரைப் பற்றிப் பேச வில்லை..........

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அதைத்தான் நானும் சொல்கிறேன். நீங்கள் ஆளுநர் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டது, not only unparliamentary, but most objectionable statement.

திரு. க. சுப்பு : இன்னும் சொல்லப் போனால், இந்த அவசரச் சட்டத்திற்கு ஆளுநர் அவர்கள் அனுமதி கொடுத்து, அதை நீங்கள் அங்கீகரித்திருக்கிறீர்கள். உறுதி செய்திருக்கிறீர்கள்,

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): (மணியடித்து) திரு. கு. ரமணி.

திரு. க. சுப்பு : I stand incomplete.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான் சுப்பு போன்றவர்களின் கவனத்திற்கு 67-வது விதியைப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

*** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

"A member, while speaking must not—
பல விஷயங்கள் போக

(vi) use the Governor's or President's name for the purpose of influencing a dabate: or

(vii) use his right of speech for the purpose of obstructing the business of the Assembly.
என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. க. சுப்பு : விளக்கம் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. பி.எச். பாண்டியன்.)
விளக்கம் தேவையில்லை. திரு. ரமணி.

[திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர், பாயின்ட்
ஆப் ஆர்டர்.]

திரு. கு. ரமணி : தற்காலிகத் தலைவர் அவர்களே, இந்த
எஸ்ஸென்சியல் சர்வீஸ் மெயின்டனென்ஸ் சட்டம் மே மாதம்
15-ம் தேதி அன்றைக்கே பிறப்பிக்கப்பட்டது. இப்போது நான்கு
மாதங்கள் ஆகின்றன. இப்போது இந்தச் சட்டம் அரசாங்கத்
தின் கையிலே இருந்துகொண்டு வருகிறது. இந்தச் சட்டம் பிறப்
பிக்கப்பட்ட பிறகு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில்
இந்தச் சட்டம் மிகவும் தப்பான ஒரு சட்டம், தொழிலாளர்
களுடைய உரிமைகள், ஸ்டிரைக் செய்தல் போன்ற உரிமைகள்
போன்றவற்றிற்கு எந்தவிதமான ஒரு கட்டுப்பாடும் விதிக்கப்
படாமல் Unfetered right of the working class to strike—
அவர்களை அடக்குகின்ற முறையிலே உள்ளது—
என்பதைக் கண்டித்து, இதைத் தப்பு என்று அன்றைக்கே
நாங்கள் எடுத்துச் சொன்னோம். எனவே, இந்தச் சட்டத்தை
ரத்து செய்ய வேண்டும் என்று நாங்கள் அன்றைக்கே சொன்
னோம்.

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்):
நோ, பாயின்ட் ஆப் ஆர்டர், உட்காருங்கள்.

திரு. கு. ரமணி : ஆனால், இதுவரையிலே இந்தச் சட்டம்
ரத்து செய்யப்படவில்லை. ஆறு மாத காலம் இந்தச் சட்டத்தைப்
புதுப்பிக்காமல் விட்டால், அது ரத்தாகி விடும் என்பது உண்மை.
அதுவும் சட்டமன்றம் கூடி ஆறு வார காலம் அல்லது ஆறு மாத

காலத்திற்குள் நடவடிக்கை எடுக்காவிட்டால், ரத்தாகிவிடும்—
என்பது உண்மை. ஆனால், இந்த சட்டமன்றக் கூட்டம் 16
நாட்கள்தான் நடைபெறுகின்றது. இதற்குப் பிறகும், இந்தச்
சட்டம் ரத்து செய்யப்படாவிட்டால், மேலும் ஒரு மாத காலத்
திற்கு நீடிப்பதாக இருக்கும்.

(திரு. ரகுமான்கான் நின்று கொண்டே மேஜையைத் தட்டிக்
கொண்டும் பேசிக் கொண்டும் இருந்தார்.)

ஆகவே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான்
வேண்டிக் கொள்வது—இந்தச் சட்டத்தை இப்போதே அரசு
ரத்து செய்ய வேண்டும். இந்தச் சட்டமன்றத்தில் எந்தநடவடிக்
கையும் இதுபற்றி வராமல் இருப்பதால் ஒரு சமயம் இது தொட
ருமோ என்பதற்கு எடுத்துக் காட்டாக அமைந்திருக்கிறது.
அப்படி இருக்கக் கூடாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வேறு ஒன்றையும் சொல்ல
விரும்புகிறேன். தொழிலாளர் வர்க்கத்தின் ஸ்ட்ரைக் உரிமை
களில் தலையிட்டு அதன் மீது இப்படிப்பட்ட சட்டங்களை உரு
வாக்கி அரசு கையில் வைத்துக்கொண்டிருப்பது சரியல்ல. பஸ்
தொழிலாளர்கள் பிரச்சினையைப் பொறுத்தவரை தகராறு ஏற்
பட்டபோது ஸ்ட்ரைக்கிற்கு இரண்டு நாளைக்கு முன்னாலேயே
இச்சட்டம் பிறப்பிக்கப்பட்டு, பிறகு ஒப்பந்தம் செய்து முடிக்கப்
பட்டுவிட்டது. இதை நடைமுறைப்படுத்த வேண்டிய நிலைமை
ஏற்படவில்லை. ஆனால், இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கையில்
வைத்துக்கொண்டிருப்பதால் தொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினை
களில் கொந்தளித்துக் கொண்டிருக்கும்போது உபயோகப்படுத்தக்
கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே, அரசு இந்தச் சட்டத்தை உட
னடியாக ரத்து செய்ய வேண்டுமென்பது என்னுடைய கருத்து.

இந்தச் சட்டத்தை டிஸ்-அப்ரூவ் செய்ய வேண்டுமென்று
மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் பிரச்சினையைக் கிளப்பி
யிருக்கிறார்கள். அவர் கிளப்பியிருக்கிற அம்சம் நல்ல அம்சம்.
ஆனால் ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.
நண்பர் சுப்பு அவர்கள் கட்சி ஆட்சியில் இருந்த நேரத்தில்
எப்படி எல்லாம் ஸ்ட்ரைக்குகளைத் தடை செய்ய சட்டங்கள்
பயன்படுத்தப்பட்டன. எசன்ஷியல் செர்வீஸ் மெயின்டனன்ஸ்
ஆக்ட் என்ற பெயரில் இல்லாமல், மிசாவின்கீழ் டி. ஐ. ஆர்.
மூலம் பல ஸ்ட்ரைக்குகளை அவர்கள் சட்ட விரோதமானது என்று
சொன்னார்கள். எம். ஆர். எஸ். ஸ்ட்ரைக்கைத் தடை செய்
தார்கள். எலக்ட்ரிசிடி போர்ட் ஊழியர்கள் ஸ்ட்ரைக் செய்யக்
கூடாது என்று தடை செய்தார்கள். டி. ஐ. ஆர். ன் கீழ் அதற்
கான அதிகாரத்தை எடுத்துக் கொண்டார்கள். இதே போன்று
பல தொழிற் சங்கங்களை அடக்கிக் கொண்டே வந்தார்கள்.
வால்பாறை தோட்டத் தொழிலாளர்கள் ஸ்ட்ரைக்கைத் தடை
செய்தார்கள். ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களில் 1,000

பேர்களைக் கைது செய்தார்கள். நெய்வேலி ஸ்ட்ரைக்கைத் தடை செய்தார்கள். துப்பாக்கிச் சூடு நடந்தது இவை எல்லாம் அவர்களுடைய அரசாங்கம் இருந்தபோது நடந்தது (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): தயவு செய்து அனைவரும் முதலில் உட்கார வேண்டும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, உங்களது கவனத்திற்கு நான் இரண்டு விதிகளைக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு—தலைவிதி) அதுதான் இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த அவையின் தலைவிதி அப்படி ஆகிக் கொண்டிருக்கிறது.

Rule 84.—"The Speaker shall have all powers necessary for the purpose of enforcing the rules and preventing disorder".

Rule 85.—"The Speaker, after having called the attention of the House to the conduct of a member who persists in irrelevance or in tedious repetition either of his own arguments or of the arguments used by other members in debate or is speaking for the purpose of obstructing business, may direct him to discontinue his speech."

[முற்பகல் 11-20]

அதற்குப் பிறகு கடைசியாக இருக்கின்ற ஒன்றையும் படித்து விட்டால் திரு. ரகுமான்கானுக்கு உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன், 86-வது விதி

"The Speaker may direct any member whose conduct is, in his opinion, grossly disorderly to withdraw immediately from the House, and any member so ordered to withdraw shall do so forthwith and absent himself during the remainder of the day's meeting. If any member is ordered to withdraw a second time in the same session, the Speaker may, direct the member to absent himself from the meetings of the Assembly for any period not longer than the remainder of the session, and the member so directed shall absent himself accordingly. If such member Sergeant to withdrawthe Speaker may order his removal by force by the oforeant of the Assembly. The member so directed to be absent shall net be deemed to be absent for the purposes of clause (4) of Article 190 of Constitution."

Rule 87.—The Speaker may, in case of grave disorder arising in the House, adjourn the House to the next sitting or suspend a sitting until a specified hour on the same day." என்று கூறுகிறது.

இத்தனை அதிகாரங்களையும் பெற்றிருக்கிற நீங்கள் இந்த அவையிலே இப்படிக் கூச்சலும் குழப்பமும் தேவையற்ற நிலையில் நேரத்தைப் பாழாக்குகின்ற முறையில் பயிற்சிபெற்றவர்களின் கூடாரமாக மாற்றுகின்ற வகையில் சென்று கொண்டு இருப்பதை நீங்கள் எந்த வகையிலே கொண்டு வந்தால் இந்த அவை நல்ல முறையிலே செயல்படுமோ அந்த வகையிலே கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இங்கே பிரச்சினை எப்படி வந்தது என்று சொன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார். ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது இந்தச் சபையிலே மரபாக இருந்து வந்திருக்கிறது. ஆனால், நீங்கள் அதை அனுமதிக்கவில்லை. விதி 83-இல்

(Mr. Speaker in the Chair)

"83. (1) Any member may at any time submit a point of order for the decision of the Speaker but in doing so shall confine h meself to stating the point."

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணுவதற்கு உரிமை இருக்கிறது. அந்த உரிமையின் பேரிலே அவர் ரெயிஸ் பண்ணினார். அதைக் கேட்டுக் கொள்ளாமல் உட்கார் என்று சொன்னால் எப்படி இந்தச்சபையில் அமைதியைக் காப்பாற்ற முடியும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, விதி 83-ஐப் படித்துக் காட்டினார்கள். பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்புகிறபோது 'It must be heard' என்று எனக்குத் தெரியும். ஆனால், பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற பெயரால் குழப்பங்களை உருவாக்குகின்ற முயற்சிகளைச் சில பேர்கள் எடுக்கின்ற முறையிலே, பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற பெயரால் நடக்கின்ற செயலை இந்த அவை அனுமதிக்கத் தயாராக இல்லை, அதற்கேற்ற வகையில் தங்களுடைய ரூலிங் அமைய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : Points of Order will be submitted to the Chair. பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்கிறதா இல்லையா என்பதை நாங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும், அந்த உரிமை எங்களுக்கு இருக்கிறது. குழப்பம் என்று சொல்கிறார், அவர் குழப்பத்தில் இருக்கிறாரா....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். திரு. சாதிக் பாட்சா சொன்னதற்கு நான் பதில் சொல்லிவிடுகிறேன். "Provided that the Speaker may permit a member to raise a point of order during the interval between the termination of one item of business and the commencement of another if it relates to maintenance of order, in, or arrangement of business before the House."

ஆகவே ரமணி பேசி முடித்த பிறகு அவர் பிரச்சினையைக் கிளப்பியிருந்தால் சொல்லலாம்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திரு. ரமணி பேசுவற்கு முன்பே அவர் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார்.

திரு. சி. ஆறுமுகம் : முன்பே எழுப்பிவிட்டார் திரு. ரகுமான் கான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்கார்ந்து கொண்டே பேசுவது எப்படி முறையாகும் ?

திரு. சி. ஆறுமுகம் : முன்னாலே எழுப்பியிருக்கிறபோது...

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைத்தான் நான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் தலைவர் நிற்கிறார், அங்கே திரும்பி பாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் நிற்பீர்களா? அவர்கள் நின்றாலும் நானும் நிற்பேன் என்று சொன்னால் ஒத்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சாதிக் பாட்சா அவர்கள் அதிலுள்ள நியாயம் என்னவென்று சொல்வதற்காக நின்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர் நின்றாலும் பரவாயில்லை, நான் நிற்பேன் என்று நின்று கொண்டிருந்தால் என்ன பொருள்? உட்காருங்கள்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தங்களுக்கு உதவுவதற்காகச் சொல்கிறேன். முதலில் ரகுமான்கான் பிரச்சினையைக் கிளப்பினார்கள். திரு. ரமணி பேசுவதற்கு முன்பு திரு ரகுமான்கான் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டுக்கொண்டிருக்கும்பொழுது தலைவரவர்கள் திரு. ரமணியை அழைத்தார்கள். திரு. ரகுமான்கானுக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை. ஏற்கனவே கிளப்பப்பட்ட அந்தபாயின்ட் ஆப் ஆர்டருக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை என்பதுதான் குறை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்புவதற்கு உரிமை இருக்கிறது என்பதை ஒத்துக்கொண்டீர்கள். அந்த உரிமையை அனுமதித்து இருந்தால் இந்தப் பிரச்னைக்கு இடம் இருந்திருக்காது என்பதுதான் என்னுடைய கருத்து.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணுவதற்கு எல்லா உறுப்பினர்களுக்கும் உரிமை இருக்கிறது என்கின்ற அந்தக் காரணத்தை வைத்துக் கொண்டு எதிர்க்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்த திரு சுப்பு அவர்களே நீண்ட நேரம் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களே மீண்டும் மீண்டும் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று உருவாக்கிக்கொண்டிருந்தால் சபையின் நடவடிக்கைகளை நடத்துவதற்கு அது எப்படி உதவும் என்பதைத்தான் நான் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : தலைரவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அனுமதியைக் கேட்டு பெற்ற பிறகுதான் பேச வேண்டும். இப்படி என் அனுமதியின்றி தாமே எழுந்து பேசும் இந்த வழக்கம் வேண்டாம் நீங்கள் முதலில் உட்காருங்கள். திரு. சாதிக்பாட்சா. அவர்கள் சொன்னதற்கு நான் பதில் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்களை மனந்திறந்து கேட்கிறேன், பாயின்ட் ஆப் ஆர்டர் என்று 235 உறுப்பினர்களும் எழுந்து கேட்பதற்கு உரிமை உண்டு. ஆனால் நிகழ்ச்சி நிரலில் உள்ளபடி நிகழ்ச்சியையும் நடத்தியாக வேண்டும்; அதுவும் நம்முடைய கடமை. ஆனால் ஒரே உறுப்பினர் எழுந்து எழுந்து பாயின்ட் ஆப் ஆர்டர், பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்பது, அதை ஏற்றுக்கொள்வதாக இருந்தாலும் அதை அவையிலுள்ள நடவடிக்கைகளை நடத்துவதற்கு எப்படிப் பயன்படுத்த முடியும் ? இருக்கின்ற நிகழ்ச்சி நிரலை எப்படி முடிக்க முடியும் ?

திரு. அ. ரகுமான்கான் : தலைரவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி நான் பேசிக் கொண்டிருக்கிறபொழுதே அவர் எழுந்திருக்கிறார். இதற்கு திரு. சாதிக் பாட்சா அவர்கள் சொல்லட்டும். இப்படி நான் பேசிக் கொண்டிருக்கிறபொழுது எழுந்து பேசுவது அவையின் மரபுகளுக்கும், விதிகளுக்கும் பொருத்தமானதுதானா ? இப்படி எழுந்து நின்று பேசுவதும், ஒலிபெருக்கி இல்லாமல் பேசுவதும், என்னுடைய அனுமதியில்லாமல் பேசுவதும் முறையா ? இதுபற்றி சாதிக் பாட்சா சொன்னால் நலமாக இருக்கும். எல்லோருக்கும் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப அனுமதி தருகிறேன், ஆனால் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப இருக்கின்ற உரிமையினாலேயே ஒவ்வொருவரும் கேட்டால் நிகழ்ச்சி நிரலில் உள்ள நிகழ்ச்சிகளை திருத்த வேண்டிய அளவிற்கு அமையும். நிகழ்ச்சி நிரலில் உள்ளபடி நடத்துவதற்கு அது இடையூறாக அமையாதா ? இதற்கு அனுமதிக்க வேண்டுமா ? நிகழ்ச்சி நிரலை என்ன செய்வது ? நாம் கண்கூடாகப் பார்க்கிறோம், திரு. சுப்பு அவர்களையும், திரு. ரகுமான்கான் அவர்களையும் தவிர வேறு உறுப்பினர்கள் யாராவது இப்படி அடிக்கடி எழுந்து பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்கிறார்களா ? நீங்கள் சொல்லுங்கள். இதற்கு உதவி செய்யுங்கள். என்னை நட்டாற்றில் விட்டு விடாதீர்கள், உதவுங்கள்;

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, நட்டாற்றில் நான் விட மாட்டேன், நட்டாற்றில் போகின்றவர்களை நான் காப்பாற்ற முடியாது என்பதை மிகுந்த பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைச் சொல்லுங்கள், போதும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, பேரவைத் தலைவருக்கு உள்ள சங்கடத்தை உணர்கிறேன். நேரம் போதவில்லை, பல மசோதாக்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அதனால் தங்களுக்குள்ள சங்கடத்தை உணர்கிறேன். மாண்புமிகு அவைத் தலைவரவர்கள், ஒரு உறுப்பினருக்கு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப உரிமை உண்டு என்று சொன்னதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இதை இதோடு விட்டுவிட்டு, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அடக்குமுறைச் சட்டங்களைப் பயன்படுத்தி தொழிலாளர் வர்க்கத்தின் ஸ்டிரைக் செய்யும் உரிமை பறிக்கப்பட்ட நிகழ்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில் நடந்திருக்கிறது என்று உதாரணத்திற்காக நான் எடுத்துச் சொன்னேனே தவிர வேறு

நோக்கத்தோடு சொல்லவில்லை. எம்.ஆர்.எஃப். ஸ்டிரைக் செய்வதைத் தடுப்பதற்கும் இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. எலக்ட்ரிசிட்டியில் ஸ்டிரைக் வரக்கூடாது என்பதற்கும் இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. அதே மாதிரி டி.ஐ. ஆரின் விதிகளைப் பயன்படுத்தினார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக சென்னை நகரத்தில் ஸ்டிரைக்குகளைத் தூண்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று எங்கள் சி.ஐ.டி.யூ., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் நான்கு பேர்களை மிசாவில் கைது செய்து சிறையில் அடைத்தார்கள். அதற்காக ஹைகோர்ட்டிலே எங்கள் சி.ஐ.டி.யூ., அகில இந்தியப் பொதுச் செயலாளர் இராமமூர்த்தி அவர்கள் வாதாடி அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். இப்படியெல்லாம் நடந்திருக்கிறது. ஆனால் அதை அவர்கள் மாற்றிக்கொள்ளக் கூடாதா என்று கேட்டால் அது நல்லதுதான். மாற்றிக்கொள்வதை வரவேற்கிறோம். இன்றைக்குச் சுப்பு கிளப்பிய பிரச்னை சரியா என்று கேட்டால் சரிதான். இந்தச் சட்டத்தை உடனடியாக வாபஸ் பெற வேண்டுமென்று கேட்பதில் குறை இருக்க முடியாது. ஆனால் ஊருக்கு மட்டும்தான் உபதேசம், உனக்கு இல்லையடி கண்ணே என்ற நிலைமைகள் ஏற்படக்கூடாது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அவர்களுடைய சர்க்கார் இருந்த காலத்தில் தொழிலாளர்களின் தங்குதடையற்ற வேலை நிறுத்த உரிமையை அடக்கியதுண்டு. 'Unfettered rights of the working class to strike தடுத்ததுண்டு இதை அவர்கள் தடை செய்ததை உணர்ந்து இந்தச் சர்க்காரும் அப்படிப் போகக் கூடாது என்று சரியான விமர்சனங்களை முன் வைத்தால் சென்ற காலச் சரித்திரத்தின் மூலம் பாடம் கற்று எதிர்காலத்திற்கு வழிகாட்டியவர்கள் ஆவார்கள்.

(முற்பகல் 11-30)

அது இல்லாவிட்டால் நான் சொன்ன பழமொழிதான் இருக்குமே தவிர வேறல்ல. இதைச் சொல்லிக் கொண்டு இந்தச் சட்டத்தை இந்த அரசு ஒரு நிமிஷம்கூட வைத்திருக்காமல், இதை இப்பொழுதே ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்யவில்லையென்று சொன்னால் இன்னும் ஒரு மாதத்திற்கு இந்தச் சட்டம் நீடித்து உயிரோடு இருக்கும் என்று சொல்லி நான் அமர்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தின் பேரில் நான் எனது கருத்தைச் சொல்ல முன் வந்திருக்கிறேன். இன்றைக்கு ஜனநாயக உணர்வு தழைத்திருக்கக்கூடிய இந்த நேரத்திலே, அதுவும் முதலாளித்துவ சமூக அமைப்பு இருக்கக்கூடிய நமது நாட்டிலே, தொழிலாளிகளுடைய உரிமை, ஸ்டிரைக் செய்யும் உரிமை, அவர்களுடைய கோரிக்கைகளை நெகோஷியேஷன் மூலம் தீர்த்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பை எந்த வகையிலும் தாம் தடை

செய்வது அவர்களுடைய உரிமை, அவர்களுடைய வளர்ச்சியைப் பாதிக்கும் என்ற வகையிலே, அவர்களுக்கு எந்தவிதமான தடையும் இல்லாமல், நெகோஷியேஷன் அல்லது மானேஜ்மெண்ட்டோடு பேசுவதிலே, கோரிக்கை நிராகரிக்கப்படுமானால் ஸ்டிரைக் செய்வது கடைசி ஆயுதம் என்ற வகையிலே, தொழிலாளிகளுடைய நலனுக்கு, முன்னேற்றத்திற்குப் பாதகமாக இந்தச் சட்டம் இருக்கும் என்பதை நாம் உணரவேண்டும். அரசு இந்தச் சட்டத்தைப் போட்டிருக்கக் கூடாது. போட்டாலும் பயன்படுத்தவில்லையென்றாலும் கூட பி.டி.சி. ஸ்டிரைக்கை பேச்சு மூலம் தொடர்ந்து முடித்திருக்கக்கூடிய முயற்சியை எடுத்திருக்குமானால் அரசுக்கு இன்னும் மரியாதை வந்திருக்குமே தவிர, அரசின் பேரிலே இவ்வளவு குற்றச்சாட்டுகள் வந்திருக்காது. ஆகவே, இன்றிருக்கக்கூடிய முறையிலே இந்தச் சட்டத்தை இன்னும் உயிரோடு வைத்திருப்பது சரியாகாது. அதை உடனடியாக ரத்து செய்யவேண்டுமென்ற கருத்தைநான் கூறி அமர்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்த அவசரச் சட்டம் தேவையற்றது என்பதில் எனக்குக் கருத்து வேறுபாடில்லை. தொழிலாளிக்கு கடைசியாக, தனது உரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக இருக்கிற ஒரு உரிமை வேலை நிறுத்தம், மற்ற அத்தனை முயற்சியும் பலனற்றுப் போனால், கடைசியாக வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது, நிச்சயமாக அது அங்கீகரிக்கப்பட்ட ஒரு உரிமை. அதுவும் குறிப்பாக, நெருக்கடி நேரத்தில், தொழிலாளிகள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டார்கள், நெருக்கடி காலத்திலிருந்த மத்திய அரசால் தொழிலாளர்கள் உரிமைகள் எந்த அளவு பாதிக்கப்பட்டது என்பதை எல்லாம் இந்த நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே தான், மீண்டும் தொழிலாளர்கள் இழந்த உரிமைகளைப் பெறவேண்டும், அவர்களுக்கு அத்தனை உரிமைகளும் வழங்கப்பட வேண்டுமென்ற உத்தரவாதத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

மத்திய ஜனதா அரசு கூட இந்த வேலைநிறுத்த உரிமை தொழிலாளர்களுக்குஇருக்கிறது என்பதை இப்பொழுது ஆணித்தரமாகக் கூறியிருக்கிறது. ஆகவே, வேலை நிறுத்த அவசரச் சட்டம் நிச்சயமாக வரவேற்கத்தக்கது அல்ல. ஆகவே அரசு அதனை ரத்து செய்ய வேண்டுமென்று கூறி நான் அமர்கிறேன்.

*திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தொழிலாளர் நல அரசு என்று பேசுகிறார்கள். தொழிலாளர் நல அரசு என்று சொன்னால், தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

செய்யும்போது பாதுகாப்புக் கொடுப்போம் என்கிற சட்டத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டும். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால் ஓராண்டு சிறை என்று சட்டம் கொண்டு வந்தவர்கள், முதலாளிகள் கதவடைப்பு செய்தால், சாத்திவிட்டு ஓடினால், அவர்கள் கைது செய்யப்பட்டு ஓராண்டுகாலம் சிறையில் இருப்பார்கள் என்று சட்டம் கொண்டு வந்திருக்கவேண்டும். வேலைநிறுத்தம் செய்கிறான் தொழிலாளி என்றால், தெரிந்துதான் செய்கிறான். வேலை நிறுத்தம் செய்தால், பட்டினியால் வாடுவோம், அடுப்பு எரியாமல் இருக்கும் என்ற நிலையில்தான் வேலை நிறுத்தம் செய்கிறான். ஆனால், எந்த முதலாளியும் சாத்தி விட்டு ஓடுவதாலோ மூடிவிடுவதாலோ அவர்கள் பட்டினியால் கிடப்பதில்லை என்பதை இன்றைக்கு இருக்கிற அரசாங்கம் புரிந்து கொள்ளவேண்டும். அதனைப் புரிந்துகொண்டு, இன்றைக்கு டி.ஐ. சைக்கிள் தொழிற்சாலை சாத்தியிருக்கிறதா, அந்த முதலாளிக்கு 2 ஆண்டுகாலம் கடுங்காவல் என்று சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்.

அதேபோல் சதர்ன் சுவிச்கியர் தொழிற்சாலையை மூடியவர்களுக்கு ஓராண்டு கடுங்காவல் தண்டனை, சக்தி பைப் தொழிற்சாலை, சேலம் கண்ணாடி ஆலைமூடப்பட்டதற்கு யார் பொறுப்போ, அவர்களுக்கு ஓராண்டு கடுங்காவல்—இப்படி செய்திருப்பவர்கள் இனிமேல் செய்ய முயற்சி செய்பவர்கள் ஆகியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் வண்ணம் சட்டம் கொண்டு வரப்பட்டிருந்தால் சரியானதாக இருக்கும். (மணி அடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூன்று நிமிடத்தில் முடித்துக் கொள்ளவேண்டும். திரு. ஜேம்ஸ் அவர்களும், திரு. மாரிமுத்து அவர்களும் எவ்வளவு அருமையாக முடித்தார்களோ அப்படி முடித்துக் கொள்ளவேண்டும்.

திரு மு. அம்பிகாபதி: சுருக்கமாக பேசிவிடுகிறேன். இந்தச் சட்டம் தமிழக வரலாற்றிலேயே ஒரு களங்கம். அதிலும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இதைக் கொண்டு வந்திருப்பது வரவேற்கத்தக்கது அல்ல. அந்த அவசர சட்டத்தைத் திரும்பப்பெறுவது மட்டுமல்ல, அதைக் கருவிலேயே அழிக்க வேண்டும். சட்டப் புத்தகத்திலே இருந்தே எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, மூடியிருக்கிற ஆலைகளை திறப்பதற்கும், மூடிவிட்டு ஓடிவிட்ட முதலாளிகளுக்கு ஓராண்டுகாலம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும் என்று அவசர சட்டத்தை அகில இந்திய அண்ணா தி.மு.க. அரசு கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே Tamil Nadu Essential Services Maintenance Ordinance, 1978 (Tamil Nadu Ordinance No. 2/1978.)

ரத்து செய்யவேண்டுமென்று கோரி கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் மீது பல கட்சிகளைச் சேர்ந்த நண்பர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். அருமை நண்பர் ரமணி அவர்கள் பேசும்போது ஆர்டினன்ஸ் பிறப்பிக்கப்பட்டாலும், இந்த அரசு தொழிலாளர்களுக்கு எதிராக அதைப் பயன்படுத்தவில்லை என்பதை இங்கே எடுத்துக் கூறியதற்காக நான் முதன் முதலில் ரமணி அவர்களுக்கு நன்றியை ஆட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்த நம்பிக்கையோடு பேசிய ரமணி அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த ஆட்சி அந்தச் சட்டத்தை— அந்த அவசரச் சட்டத்தை— பயன்படுத்தாது என்ற உறுதியை நான் இந்த அவைக்கு அரசின் சார்பாகவும், முதலமைச்சர் அவர்கள் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப்பிறகு பேசிய திரு. அம்பிகாபதி அவர்கள் சற்று ஆவேசத்தோடு எடுத்துச் சொல்லி, இப்படிப்பட்ட இந்தக் கருவி, களங்கம் அல்லது கரு இருக்கவே கூடாது என்றும், அதை அழிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். இப்படிப் பிரகடனம் செய்யப்படுகின்ற ஒன்றை கூர்மை மிக்க கத்தி என்று யாராவது வர்ணிப்பார்களானால் அந்தக் கத்தி, தொழிற் சங்கத் தலைவர் சிந்தன் அவர்கள் மார்பிலே பாயக்கூடிய கத்தியாக இருக்காது ; மருத்துவர்கள் பயன்படுத்துகிற கத்தியாக அமையும் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

டி.ஐ. சைக்கிள், சுவிச்கியர் போன்ற தொழிற்சாலைகளில் நடைபெறுகின்ற வேலைநிறுத்தத்தையும், அதற்குப் பரிகாரம் காண்பதற்காக நமது முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதற்குப் பரிகாரம் நிச்சயமாக நடந்தே தீரும், அதுவும் விரைவிலே நடக்கும் எப்பதை நான் அம்பிகாபதி அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொடர்ந்து சுருக்கமாக ஆனால் விளக்கமாகப் பேசிய அருமை இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் நமது அருமை மாரிமுத்து அவர்கள் பேசும்போது தொழில் உரிமையை எந்தக் காரணத்தைக் கொண்டும் பறிக்கக்கூடாது என்றும் பறிக்கின்ற வகையில் அரசு செயல்படக்கூடாது என்றும் யோசனை கூறியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நிச்சயமாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த அரசு அந்த உரிமைகளைத் தடுக்கும் பணியில் ஈடுபடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதை ஒட்டிப் பேசிய, சுருக்கமாகப் பேசி கருத்துக்களை வெளியிட்ட திரு ஜேம்ஸ் அவர்கள் கூட இப்படிப்பட்ட சட்டத்தை, அவசரச் சட்டத்தைக் கொண்டு வராமல் இருந்து இருக்கலாம் என்று சொல்லி அவைகளைக் பயன்படுத்தாமல் இருந்ததைப் பாராட்டி தொழிலாளர்களின் நலன் பேண வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார். அதைப் போலவே தான் இந்தத் தீர்மானத்தை முன் மொழிந்து பேசிய அருமை மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்களும் இந்த அவசர கால சட்டத்தைக் கடுமையாகத் தாக்கி, அதை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

(முற்பகல் 11-40)

ஒன்றை, இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த அவசர கால சட்டம் எந்த அடிப்படையில் பிறப்பிக்கப்பட்டது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதை, பேசிய அத்தனை நண்பர்களும் இங்கே மனதார ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். தொழிலாளர் தலைவர்களோடு கலந்து முதலமைச்சர் அவர்களும், மற்ற தொடர்புடைய அமைச்சர்களும் பேசிக்கொண்டு இருக்கிற நேரத்தில் திடீரென்று 16—ஆம் தேதி நள்ளிரவுக்குப் பிறகு ஒரு பெரிய போராட்டம் ஒன்று உருவாகும் என்று அறிவித்த பிறகுதான் இப்படிப்பட்ட காரியத்தில் ஈடுபடவேண்டிய நிலை, நெருக்கடி இந்த ஆட்சிக்கு ஏற்பட்டது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்க கடமைப்பட்டு இருக்கிறேன். அப்படிப் பட்ட சட்டம் அறிவிக்கப்பட்டாலும், திரும்பவும் திரும்பவும் நான் வலியுறுத்துகிறேன், அந்தச் சட்டத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் நாங்கள் பயன்படுத்த மாட்டோம் என்று முதலமைச்சர் அவர்கள் தொழிற்சங்க தலைவர்கள் முதலமைச்சரைச் சந்தித்துப் பேசிய போது அவர்களிடத்தில் கொடுத்த வாக்குறுதியை இந்த நேரத்தில் நினைவுகூறுதல் நல்லது என்று நான் கருதுகிறேன்.

அதற்குப் பிறகு இன்னொன்றையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். அருள் கூர்ந்து ஒத்துழைப்புத் தருகின்ற மனப்பான்மை நம் அனைவருக்கும் தேவை. தொழிலாளர்களின் கோரிக்கைகள் ஒரு குறிப்பிட்ட கட்சிகளின் கோரிக்கைகளாக யாரும் கருத மாட்டார்கள். தொழிலாளர்களின் நல் வாழ்வில் எந்த அளவிற்கு அருமை நண்பர் ரமணி அவர்களுக்கு அக்கறை இருக்கிறதோ, திரு அம்பிகாபதி அவர்களுக்கு அக்கறை இருக்கிறதோ, நண்பர் ஜேம்ஸ் அவர்களுக்கு அக்கறை இருக்கிறதோ அதே போன்ற அக்கறை இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கும் இருக்கிறது என்பதை நான் இந்த நல்ல நேரத்தில் வலியுறுத்தித் தெரிவிக்க விரும்புகிறேன். ஆனால் கடைசியாகப் பேசிய அத்தனை பேரும் அந்த அவசரச் சட்டத்தை ரத்து செய்யவேண்டும்

[திரு. கி. மனோகரன்] [1978 செப்டம்பர் 12

என்று கேட்டார்கள். எனது நினைவு சரியாக இருக்குமானால் ஒரு நான்கு நாட்களுக்கு முன்பு இந்தப் பிரச்னைப் பற்றி எழுப்பிய நண்பர் சுப்பு அவர்கள் பேசியபோது, திரு சுப்பு அவர்களிடத்தில் சொன்னேன், அதைப் பயன்படுத்தப் போவது இல்லை. அதன் ஆயுட் காலம் 6 வார காலம் தான். வருகின்ற அக்டோபர் மாதத்திற்குள் அதன் ஆயுள் அப்படியே போகப் போகிறது. ஆகவே, 'We have decided to allow it to lapse' என்று குறிப்பிட்டேன். நான் அதை இங்கே திரும்பவும் வலியுறுத்துகிறேன். அதிலே இருக்கும் சட்டச் சிக்கலை அடிப்படையாக வைத்துச் சொல்கிறேன், அந்தக் காலம் வரையில் நீங்கள் தாராளமாக இந்த ஆட்சியின் நல்லெண்ணத்தை, தொழிலாளர்களின்பால் கொண்டு இருக்கிற இந்த ஆட்சியின் நல்ல தூய்மையான இதயத்தைப் பாராட்டி, அருள் கூர்ந்து இங்கே கொண்டு வந்து இருக்கிற இந்தத் திருத்தத்தை, தீர்மானத்தை வாபஸ் வாங்கி அக்டோபர் 15ஆம் தேதிக்குள்ளாக இயற்கையிலேயே இயற்கை அடையப் போகிற இந்தச் சட்டத்தை இப்போது ரத்து செய்யவேண்டுமென்ற தீர்மானத்தை வலியுறுத்தாமல், நான் தந்து இருக்கிற வாக்குறுதிகளை நினைவில் வைத்துக்கொண்டு, எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்தச் சட்டத்தை பயன்படுத்த மட்டோம் என்ற உறுதியை மேலும் ஒரு முறை தெரிவித்துக்கொண்டு, இதை வற்புறுத்த வேண்டாமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தானாகவே அது சாகும் என்று சொன்னார்கள். அது தானாகவே சாகாவிட்டாலும் ஒன்று பட்டு தொழிலாளர் போராட்டம் அதைச் சாகடிக்கும் என்று தெரியும். நாங்கள் கொடுத்திருக்கும் தீர்மானம், அதைக் கொண்டு வந்ததே தவறு என்று அதை 'டிஸ்அப்ரூவ்' செய்யச் சொல்கிறோம். சர்க்கார் அதை ஒப்புக்கொள்ளவேண்டும். அப்படி ஒப்புக்கொள்ளவில்லை. ஆகவே நான் தீர்மானத்தை வலியுறுத்துகிறேன். டிவிஷன் கேட்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டம் தானாகவே இயற்கை எய்திவிடும் என்று சொன்னார்கள். அந்த இடத்தில்தான் எனக்கு ஏற்படும் ஒரு பிரச்சினை என்னவென்றால், ஏன் அரசே அந்தச் சட்டத்தை ரத்து செய்யக்கூடாது? அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கக்கூடாது? எந்த காரணத்தைக்கொண்டும் அந்தச் சட்டத்தின் ஷரத்துகளை உபயோகிக்க மாட்டோம் என்று உறுதி தரக்கூடிய அரசுக்கு இதை ரத்து செய்ய என்ன கஷ்டம்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : தீர்மானத்தைக் கொண்டு வந்தவருக்குத் தான் மறுபடியும் பேசுவதற்கு வாய்ப்பு உண்டு ஆகவே, திரு. ரமணி அவர்கள் தயவு செய்து உட்காரவேண்டும்.

1978 செப்டம்பர் 12]

பேரவை முன்னுள்ள கேள்வி ''தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு அத்தியாவசியப்பணியின் நிர்வகிக்கும் அவசரச் சட்டத்தை (த.நா. அ. ச. எண். 2/78) இப்பேரவை நிராகரிக்கிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நான் 'டிவிஷன்' வேண்டுமென்று கேட்கிறேன்; டிவிஷன் வேண்டும்.

திரு. க. அன்பழகன் : டிவிஷன் வைக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் காப்பாற்றுவார்கள் என்று எதிர் பார்த்தேன். ஆனால் அவர்களும் டிவிஷன் வைக்கலாம் என்கிறார்கள். டிவிஷன் வைப்பதுபற்றிக் கவலையில்லை; ஆனால் நீண்ட நேரமாகும்; அவையின் நேரம் வீணாகும். இன்னும் 6 மசோதாக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருக்கின்றன. அதனால்தான் டிவிஷன் வேண்டாம் என்று சொல்கிறேன். தாங்கள் வற்புறுத்துவதானால் வேறு வழியில்லை.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த அவையில் நேரம் வீணாகும் என்று குறிப்பிடுவது அவ்வளவு பொருத்தமாக இல்லை. ஒரு பிரச்சனை வரும்போது யார் யாருடைய முடிவு எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்துக்கொள்வதற்காகதான் டிவிஷன் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஏனென்றால் ஒவ்வொரு கட்சியினரும் ஒவ்வொரு கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் நேரத்தை கடத்துவது என்பதோ ஒரு தவறான பதோ அல்லது காலத்தை வீணாக்குவது என்பதோ ஒரு தவறான எண்ணத்தை ஏற்படுத்திவிடக்கூடும். அப்படிப்பட்ட தவறான நோக்கம் எங்களுக்கு இல்லை. பல்வேறு கட்சிகளின் முடிவு எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்துக்கொள்வதற்காகதான் வலியுறுத்துகிறார். சபாநாயகர் அவர்கள் வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொண்டால் விட்டுவிடுகிறோம்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : ஏற்கனவே வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொண்டேன். மீண்டும் ஒருமுறை வலியுறுத்த வேண்டாமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு ; நான் வலியுறுத்தவில்லை.

திரு. சுப்பு அவர்களது தனித் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தை வலியுறுத்தப்போவதில்லை என்று கூறியதற்காக சபாநாயகரின் வேண்டுகோளின்படி என்றாலும் சரி அல்லது எதிர்க் கட்சி துணைத்தலைவரவர்கள் பெருந்தன்மையோடு எடுத்து காட்டிய கருத்துகளின் அடிப்படையில் என்றாலும் சரி நான் அரசின் சார்பாக எனது இதயப்பூர்வமான நல்வாழ்த்துக்களைத் துணைத்தலைவரவர்களுக்கும் அவரைச் சார்ந்து இருக்கின்ற கட்சி நண்பர்களுக்கும் அதிலும் குறிப்பாக திரு. சுப்பு அவர்களுக்கும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : இந்த தீர்மானத்தில் பேரவையில் முடிவு தெரிந்து விட்டதால் திரு. துரைமுருகன் அவர்கள் கொடுத்துள்ள தீர்மானத்தை, 72-வது விதியின்கீழ் தள்ளுபடி செய்கிறேன்.

(10) அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி).

(இ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்தம், தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 27/1978).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, 1978-ம் ஆண்டு, வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்தம், தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 27/1978) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்'' என்று முன்மொழிகிறேன்.

அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்ல இருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால் ஒருசில குறிப்புகளை அவைமுன் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த வேளாண்மை விளைபொருள் விற்பனைக் குழுவின் முன்னாள் தலைவரும் உறுப்பினர்களும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை புரிய போதிய ஆர்வம் காட்டவில்லை. விவசாயக் காரியங்களுக்கும், விவசாயிகளுக்கும் அவர்கள் ஊக்கம் அளிக்கவில்லை. காலகெடு முடிந்துவிட்ட பின்பும் அவர்கள் தொடர்ந்து பதவியில் இருந்து வந்தார்கள். கெடு முடிந்த பின்பும் அவர்கள் குழுவில் தொடர்ந்து பதவி வகிப்பது உகந்ததல்ல என்று அரசு கருதியது.

*1978, ஆகஸ்டு 31 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

எனவே, சென்ற ஜூன் மாதம் ஆளுநர் அவர்கள் 1978-ம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் விற்பனை (திருத்தம், தனி விதித் துறைகள்) என்ற அவசரச் சட்டத்தை வெளியிட்டார்கள். அதன்படி 6-6-1978 முதல் விற்பனைக் குழு பதவியிலிருந்து அவர்கள் விலக்கப்பட்டார்கள். ஆயினும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும், விவசாயக் காரியங்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு, ஆளுநர் அவர்களால் வெளியிடப்பட்ட அவசரச் சட்டத்திற்குப் பதிலாக இப்போது இந்தச் சட்டம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரின் அரிய கருத்துக்களை எல்லாம் இதன்பேரில் இங்கே எடுத்துச் சொன்னால் கடைசியில் நான் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, விவசாய விளைபொருள் விற்பனை சங்கத்தினுடைய சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த பலர் இன்றைக்கு இருக்கிறார்கள் என்ற அடிப்படையில் தான் ஏதோ திருத்தம் என்ற முறையில் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கின்றது என்பதை முதற்கண் நான் சார்ந்திருக்கின்ற கழகத்தின் சார்பாகச் சொல்லி இதனை எதிர்க்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு வேளாண்மை விற்பனைச் சங்கங்கள் நல்லமுறையிலே திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகளால் நடத்தப்படுகிறது என்றாலும்கூட சில பல குறைபாடுகளை எடுத்துக் காட்டி நிர்வாகங்களைக் கலைத்து விடுவது பற்றிய கருத்தினைக் கொண்டிருக்கிறார்கள். ஜனநாயகத்தைக் காக்கின்ற வகையிலே அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்திருக்க வேண்டுமேயல்லாமல், ஒருவேளை யாராவது தவறு செய்திருந்தால் யார் யார் தவறு செய்தவர்கள் என்பதைக் கண்டுபிடித்து தண்டிக்க வேண்டுமே அல்லாமல் இந்த மாதிரிச் சட்டங்கள் கொண்டுவருவது வரவேற்கத்தக்கது அல்ல.

அடுத்து இன்றைக்கு அட்வைசரி போர்டு என்ற ஒன்றை ஏற்படுத்துகிறார்கள். அதன்மூலம் எப்படியாவது அதாவது கொல்லைப்புற வழியாகவாவது ஆளும் கட்சியினைச் சேர்ந்தவர்களை நுழைப்பதன்மூலம் அந்த நிர்வாகத்தைத் தன்கைவசம் கொண்டுவர வேண்டும் என்பதற்காகத்தான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அடுத்து செக்ஷன் 12-ன் படி எந்த ஒரு அமைப்பின் கால வரையறை முடிந்து விட்டாலும் கூட தேர்தல் நடைபெற்று புதிய அமைப்பு வருகின்ற வரை அந்த அமைப்பே தொடர்ந்து

இருந்து வரலாம் என்ற சட்ட அமைப்பு தெளிவாக இருந்தாலும் கூட, ஜனநாயகத்தைக் காப்பதில் அண்ணு வழியில் செயல்படுவோம் என்று சொல்லிக் கொண்டு ஜனநாயகத்தைக் குலைக்கின்ற வகையில், ஜனநாயக முறைகளை மாற்றுகின்ற வகையில் இப்படிப்பட்ட சட்ட திருத்தங்கள் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்றது என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்தில் குறிப்பாக தென்னுற்காடு விவசாய விற்பனைக் கழகம் 1940-ம் ஆண்டு முதல் நல்ல முறையில் நடைபெற்று மற்ற பல சங்கங்களுக்கு முன்னேடியாக இருந்து வருகின்றது. அது மிக நல்ல முறையிலே சுறுசுறுப்பாக செயல்படுகின்ற ஒரு அமைப்பாக இருப்பதைப் பார்த்து வெளி மாநிலங்களிலே உள்ளவர்கள் பாராட்டுகின்ற நிலைமையிலே இயங்கி வருகின்றது. மத்தியிலே உள்ள விவசாயத்துறையைச் சேர்ந்த செயலாளர் இங்கே வந்து பார்த்து அது நல்ல முறையிலேயும் சிறப்பான முறையிலேயும் செயல்படுகின்ற இந்தச் சங்கத்தை எல்லா மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்று சொல்லி இருக்கிறுர். அந்த அளவுக்குப் பாராட்டினைப் பெற்ற அந்தச் சங்கத்தின் நிர்வாகம் தவறுக நடந்து கொண்டிருக்கிறது என்று குற்றம் சாட்டியிருக்கிறுர்கள். இது ஒரு ஒரவஞ்சனையான போக்கு என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து அட்வைசரி போர்டில் அதிகமாக அக்ரிகல்சர் ஆபீஸர்களைப் போட்டிருக்கிறுர்கள். அவர்கள் அங்கே இருக்கின்ற விவசாய விற்பனைச் சங்கத்தின் கார்களைத் தாராளமாகப் பயன்படுத்துகிறுர்கள். அவையெல்லாம் அந்தச் சங்கத்தின் நிதியிலிருந்து வாங்கப்பட்டவையாகும். ஆகவே அதைச் சேர்ந்த அந்தக் கார்களை அந்த அதிகாரிகள் பயன்படுத்துவதற்குத் தடைவிதிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் வேளாண்மை விற்பனைக் கழகத்தினுடைய ஊழியர்களை அரசு ஊழியர்களாகக் கருத வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அந்தக் கழகத்தின் ஊழியர்களாக இருந்தாலும் அரசு ஊழியர்களுக்கு எந்த அளவுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படுமோ அந்த அளவுக்கு ஏற்பாடுகளைச் செய்வதற்கு சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள், எங்களுடைய ஆட்சி ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் என்ற அளவில் ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னுர்கள். ஆனல் அவை ஒழுங்குமுறை விற்பனைக் கூடமாக இல்லாமல் ஒழுங்கு இல்லாத கூடங்களாக ஆக்குவதற்கான காரியங்கள்தான் இப்போது ஆளும் கட்சியினரால் செய்யப்பட்டு வருகிறது என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்தில் மார்க்கட்டிங் கமிட்டியைப் பொறுத்தவரையில் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு செஸ் இருக்கின்றது. சிவில் சப்ளைஸ் கார்ப்ரேஷன், மார்க்கட்டிங் கமிட்டியிடம் இருந்து வாங்குகிறுர்கள். அதற்கு செஸ் விதி தேவையில்லை என்ற விதிவிலக்கினை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கமிட்டி நல்லமுறையிலே நிர்வாகம் செய்வதற்கு போதுமான நிதிவசதி இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

* <u>திரு. நா. சுந்தரராஜ்:</u> தலைவர் அவர்களே, இன்றைய தினம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்ற வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்தம், தனி விதித்துறைகள்) மசோதாவின் மீது என் கட்சி சார்பில் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக, இந்த மார்க்கெட்டிங் கமிட்டிகள் கலைக்கப்பட்டிருப்பதை உண்மையிலேயே நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், பல்வேறு இடங்களில் பலவகையான கொள்ளை என்று சொல்வதை விட மோசடிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக இந்த மன்றத்தில் பல்வேறு நேரங்களில் பேசப்பட்டிருக்கிறது. குறிப்பாக, புதுக்கோட்டை மாவட்டமும், சார்ந்திருக்கிற திருச்சி மாவட்ட மார்க்கெட்டிங் கமிட்டி பல ஊழல்களுக்கு ஆள்படுத்தப்பட்டது. அது குறித்து பல்வேறு விதமான புகார்கள் சொல்லப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படாமல் கடைசியாக ஒட்டு மொத்தமாக எல்லா மார்க்கட்டிங் கமிட்டிகளைக் கலைக்கும்போது இதையும் கலைத்திருக்கிறுர்கள். இந்தச் சட்டத்தில் பல்வேறு நல்ல அம்சங்கள் இருந்தாலும் அதில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதையும் நான் சுட்டிக் காட்டக்கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக தனி அதிகாரிகள் நியமனத்தை எடுத்துக் கொண்டால், இரண்டாண்டு வரை நீடிக்கும் என்ற திருத்தம் அதில் இருப்பது சற்று வியப்பாக இருக்கிறது. காரணம் அதிக காலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜனநாயக நாட்டில் எந்த ஒரு தனி அதிகாரியும் இரண்டு ஆண்டுக்காலம் இருப்பது என்பது சாலச்சிறந்ததாக இருக்க முடியாது. ஆகவே இரண்டு ஆண்டுகள் என்பதற்குப் பதிலாக ஆறு ஆறு மாதங்கள் என்று போடவேண்டும். அப்படி ஆறு மாதங்களுக்குள் தேர்தல்களை நடத்தி வைத்து யார் யார் பொறுப்பு ஏற்கிறுர்களோ அவர்கள் கையில் நிர்வாகம் ஒப்படைக்கப்படவேண்டும். அப்போதுதான் விளைபொருள்களை சரியான முறையில், நியாயமான முறையில் விற்பனை செய்வதற்கும், அதை விளைவிப்பவர்களுக்கும், அதை வாங்கி விற்பனை செய்யக்கூடிய வியாபாரிகளுக்கும் நியாயமான முறையில் லாபம் கிடைக்கக்கூடிய வகையில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

அடுத்தபடியாக, ஆலோசனைக் கமிட்டிகள் போடுவதில் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களை அதிகமாகப் போட்டு விட்டு மற்றவர்களைப் புறக்கணிப்பதால் சிலருக்கு அச்சம் ஏற்படுகிறது.

[திரு. நா. சுந்தரராஜ்] [1978 செப்டம்பர் 12

சணித்து விடுவார்களோ அல்லது அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுக்கக்கூடிய அதிகாரிகளை அதிகமாகப் போட்டு விட்டு தங்களுக்குச், சாதகமாகச் செய்துகொண்டு விடுவார்களோ என்ற அச்சம் பரவலாக இருக்கிறது. அந்த அச்சத்தைப் போக்கும் வகையில் நியாயமான முறையில் யார் யார் உண்மையான வியாபாரிகள், யார் யார் உண்மையான விவசாயிகள் என்று அறிந்து, அரசியல்வாதிகள் என்பதை விட்டு, கூட்டுறவாளர்களை தயவுசெய்து நியமனம் செய்யுங்கள். அப்படி கூட்டுறவாளர்களை ஆலோசனைக் கமிட்டிகளில் போட்டு தமிழ் நாட்டில் கூட்டுறவுத் துறை நல்லமுறையில் முன்னேறுவதற்கு உங்கள் காலத்திலாவது நீங்கள் முயற்சி செய்யுங்கள்.

சென்ற ஆட்சிக் காலத்தில் அரசியல் பின்னணியில் அமைக்கப்பட்டு, நிர்வாகம் செய்தவர்கள் எந்தளவிற்கு நிர்வாகம் செய்தார்கள் என்பதை இன்றைய தினம் காலம் நமக்குக் காட்டிக் கொடுத்திருக்கிறது. அப்படிப்பட்ட நிலையையெல்லாம் போக்கி நியாயமாக நடப்பவர்களை வைத்து, கூட்டுறவாளர்களை வைத்து இந்த அமைப்பை உருவாக்குங்கள்.

அடுத்து, சம்பளத்தைப் பொறுத்தவரையில் அந்த அதிகாரிகளுக்கு கடந்த காலத்தில், மார்க்கெட்டிங் கமிட்டி சேர்மனுக்கு அதிகப்படியான சம்பளம், அமைச்சரை விட அதிகப்படியான சம்பளம், மற்றும் ஏனைய அலவன்ஸ் கொடுக்கப்பட்டு வந்தது. சாதாரண மக்களுக்குப் பயன்படக் கூடிய அளவிற்கு மார்க்கட்டிங் கமிட்டி அமையவேண்டும் என்று சொன்னால், சாதாரணமானவர்களுக்கு கிடைக்கக் கூடிய அளவில்தான் கிடைக்கவேண்டும். ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு எவ்வளவு சலுகைகள் இருக்கின்றனவோ அவற்றைக் கொடுத்தால் போதும், ரூ. 2,000, ரூ. 3,000, கார், பங்களா, ப்யூன்ஸ் என்று வைத்துக்கொண்டு ஆயிரக் கணக்கான ரூபாய்களைத் தவறான வழியில் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்நிலை நீக்கப்படவேண்டும்.

புதுக்கோட்டைக்கு தனி ஒரு மார்க்கட்டிங் கமிட்டி அமைத்துத் தரவேண்டும். புதுக்கோட்டையை திருச்சி மாவட்டத்தோடு இணைக்க வேண்டாம். புதுக்கோட்டை ஒரு தனிப்பட்ட மாவட்டமாக இருப்பதால் புதுக்கோட்டைக்கு என்று, எங்களுக்கு என்று தனியாக ஒரு மார்க்கெட்டிங் கமிட்டி அமைத்துத் தாருங்கள். புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கியில் நான்கு மாதங்களாகப் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. அதற்கு, பல்வேறு காரணங்களைச் சொல்கிறார்கள். ஆறு மாதத்தில் தேர்தல் நடத்தி சீரான முறையில் நிர்வாகம் இயங்க அரசாங்கம் மூலம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 செப்டம்பர் 12]

* திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, இந்த மசோதா கொண்டுவருவதன் நோக்கம் குறித்து சற்று முன்பு அமைச்சர் அவர்கள் விளக்கமாகக் குறிப்பிட்டார்கள். ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அன்ட் ரீஸன்ஸ்-ல் கூட குறிப்பிட்டிருக்கிறது. ''......members of the market Committee under Section 12 aforesaid, were not showing adequate enthusiasm in the developmental activities of the market Committee'' அது ஒன்று. 'There were also some intances of misuse of powers by certain members' இந்தக் காரணத்திற்காக அந்தக் கமிட்டியைக் கலைத்து அதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கலைப்பது சரி. ஆனால் அதற்கு மாற்று ஏற்பாடு ஸ்பெஷல் ஆபீசர் நியமிப்பது என்பது சரியல்லவென்று கூறிக்கொள்ள விரும்புகின்றேன். ஸ்பெஷல் ஆபீசரின் காலம் ,Each Special Officer shall hold office for such period or periods not exceeding two years......என்று இருக்கிறது.

[நண்பகல் 12.00]

இதைக் கலைத்துவிட்டுத்தான் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்றால் உடனடியாகத் தேர்தலை வையுங்கள் என்பது தான் எனது வேண்டுகோள். அப்படிச் செய்ய முடியவில்லை என்றால் இந்தஸ்பெஷல்ஆபீசருடையஆயுட்காலத்தையாவதுகுறைப்பதற்கு வழி செய்யுங்கள். இவர்களுக்கு ஆறு மாதம் அல்லது மூன்று மாதம் என்று வரையறை வகுத்து, அதன் அடிப்படையில் அதிகாரிகளை நியமித்துவிட்டு பின்னால் உடனடியாகத் தேர்தலை நடத்துவது உசிதமாக இருக்குமே தவிர இரண்டு ஆண்டு காலம் அவர்களுக்கு ஆயுட் காலத்தைக் கொடுப்பது சரியல்ல. மேலும் கமிட்டியை ரீகான்ஸ்டிட்யூட் செய்வது எப்போது என்று சொல்லும்போது, 5-வது கிளாசில் சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால்.... "Sub-clause (6) of clause 5 says 'that the new market committee may be constituted and the members thereof come into office at the expiry of the period of appointment of the Special Officer" இப்படி ஸ்பெஷல் ஆபீசர்களுடைய ஆயுட் காலத்தை நீண்ட நாட்கள் கொடுப்பதும் அதன் பின்னால் குழுக்களை அமைப்பதும் மிகவும் வேதனையைத் தரக்கூடியது என்பது அனைத்து உறுப்பினர்களுடைய கருத்து என்பதை கருதி அரசு தீவிரமாக அக்கறை எடுத்துக்கொண்டு, அரசு இதில் நடவடிக்கை எடுத்து ஸ்பெஷல் ஆபீசர்களுடைய ஆயுட் காலத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று இதில் செக்ஷன் 5-(4)-ல் அட்வைசரி போர்டு என்று ஒன்றை போடுகிறார்கள். இந்த அட்வைசரி போர்டில் உறுப்பினர்கள் யார் யார் இருப்பார்கள் என்று பார்க்கும்போது, உற்பத்தியாளர்கள் மூன்று பேர்கள், உரிமைதாரர்கள் மூன்று பேர்கள், அக்ரிகல்சரல் ஆபீஸர் ஒருவர், மற்றும் அரசு உத்தியோகஸ்தர்கள் இருவர் இப்படி உறுப்பினர்கள் போடப்படுவார்

கள் என்று சொல்லப்படுகிறது. இப்போதுள்ள நிலைமையை
எடுத்துக்கொண்டால், நிலசுவான்தார்களின் ஆதிக்கத்தில்தான்
மார்க்கெட்டிங் கமிட்டி இருந்து வருகிறது. இந்தக் கமிட்டி
யின் மூலமாக ஏழை எளிய மக்களுடைய விளைபொருட்களுக்கு
நல்ல விலை கிடைக்கிறதா என்ருல் அதுவும் இல்லை. தென்ஞற்
காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இவர்கள் மோச
மாகத்தான் நடத்தப்படுகிருர்கள். இந்த நிலைமை தான்
எங்கும் பரவலாக இருந்து வருகிறது. நான் கூறிக்கொள்ள
விரும்புவது, இந்த அட்வைசரி போர்டுக்குப் பதில் அனைத்து
அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் போடவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள்
என்று சொல்லும்போது, பஞ்சாயத்து யூனியன்களில் குழுக்கள்
அமைத்த நேரத்தில் எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளும் இடம்
பெறவில்லை. சில இடங்களில் ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கு
மட்டுமே இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படியில்லாமல்
அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடம் கொடுத்து,
அட்வைசரி போர்டு போடுவதாக இருந்தால் அரசாங்கத்திற்கு
உதவிகரமாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல
விரும்புகிறேன்.

மார்க்கெட்டிங் கமிட்டியைப் பொறுத்தவரையில், தனி
யார்துறையைச் சேர்ந்தவர்கள்தான் வந்து கொள்முதல்
செய்கின்ருர்கள். அதே நேரத்தில், மார்க்கெட்டிங் கமிட்டிக்கு
வராமலேயே மணிலா விவசாயிகள் தனியார்களிடத்தில்
கொண்டு போய்க் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது.
காரணம் விவசாயிக்கு தேவைப்படும் முன்பணத்தை அவர்கள்
கொடுக்கிருர்கள். அதுமட்டுமல்ல விவசாயி விளைபொருட்
களைக் கொண்டுவந்த பிறகும் அவர்கள் 75 சதவ்தம் விலையில்
பணம் கொடுக்கிருர்கள். ஆகவே தனியார்களிடத்தில் போவது
தான் ஆதாயம் என்று விவசாயிகள் கருதுகிருர்கள். காரணம்
மார்க்கெட்டிங் கமிட்டியில் ஒரு விலையை நிர்ணயிப்பதில்லை.
விவசாயிகளுடைய பொருட்களுக்கு விலையை நிர்ணயித்து, விவ
சாயிகளுக்கு வசதி செய்து கொடுக்கின்ற முறையில் கையாளக்
கூடிய அடிப்படையான ஷரத்துக்களை சேர்த்துக் கொண்டு திருத்
தத்தைக் கொண்டு வந்தால் நலமாக இருக்கும் என்பதைக் கூறி
நான் அமருகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே,
இந்த வேளாண்மை விளைபொருள் விற்பனைத் திருத்தச் சட்டத்
தில் கொண்டு வருகிற திருத்தம் நிர்வாக போர்டைக்கலைத்துவிட்டு
தனி அதிகாரியையும் ஆலோசனைக் குழுவையும் அமைக்கப்போவ
தாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆலோசனைக் குழு அவசியம்
தான். ஆனல் உடனடியாகத் தேர்தலை ஏன் வைக்கக் கூடாது என்
பதை அரசு சிந்திக்க வேண்டும். இப்போது இருக்கின்ற மார்க்
கெட்டிங் கமிட்டியின் மூலம், விவசாயிகள் கொடுக்கக்கூடிய
பொருட்களுக்கு விலையை பெற்றுக் கொள்ள முடியாது. வியா

பாரிகள் அங்கு வந்து வாங்கிக் கொண்டு போவதற்கு வசதியாகத்
தான் மார்க்கெட்டிங் கமிட்டி இருக்கிறதே தவிர விவசாயிகளுக்கு
நியாயமான விலை கிடைக்க உதவி செய்வதாக இல்லை. அதிலும்
வியாபாரி கொடுக்கின்ற விலையில் 100-ரூபாய்க்கு 40 பைசா செஸ்
என்று மார்க்கெட்டிங் கமிட்டி வசூலித்து லட்சக்கணக்கான
ரூபாயை வைத்துக்கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் விவ
சாயப் பொருட்களுக்கு அட்வான்ஸ் கொடுக்கிருர்களா என்ருல்,
அப்படிப்பட்ட அட்வான்ஸ் ஒன்றும் கொடுப்பதில்லை. காரணம்
விலை நிர்ணயிப்பதும் இல்லை. ஸ்டேட் லெவலில் ஒரு பொரு
ளுக்குக் குறைந்த பட்ச விலை இவ்வளவு என்று எந்த நிர்ணயமும்
கிடையாது. நெல்லைப் பொறுத்தவரையில் குறைந்தபட்ச விலை
நிர்ணயம் செய்திருப்பது போல், மற்ற விளைபொருட்களுக்குஇல்லை.
பருத்தி இருக்கிறது, வற்றல் இருக்கிறது, கடலை இருக்கிறது.
இவைகளுக்கெல்லாம் பாதுகாப்பான ஒரு விலை நிர்ணயம் இல்லை.
இவற்றுக்கு முன்பணமும் கிடையாது, அதே சமயத்தில் தனிப்
பட்ட வியாபாரிகள் 100-க்கு 80 ரூபாய் என்று நிர்ணயித்துக்
கொண்டு அவர்களுக்குள்ளேயே சீட்டு போட்டுக்கொண்டு இன்ஞர்
பொருளை இன்ஞர் வாங்குவது என்று அவர்களுக்குள்ளே பங்கு
போட்டுக்கொண்டு வாங்கிக்கொள்வதற்குத்தான் இந்த மார்க்
கெட்டிங் கமிட்டி உதவி செய்கிறதே தவிர விவசாயிகளுக்கு மார்க்
கெட்டிங் கமிட்டியினுல் எந்தவித பிரயோசனமும் ஏற்படுவதில்லை.
தமிழ்நாட்டில் முக்கியமாக விவசாயிகளுக்கு இன்றைக்கு இருக்
கின்ற குறை என்னவென்று சொன்ஞல், தங்களுடைய விளை
பொருட்களுக்கு நியாயமான விலையில் உடனடியாகப் பணம்
கிடைக்க வேண்டும்.

இன்றைக்கு மார்க்கெட்டிங் கமிட்டியிலே பணம் இல்லை
என்று சொன்ஞல், அரசாங்க பாங்கி, ரிசர்வ் வங்கி அல்லது
எல்.ஐ.சி. மூலமாக அல்லது அரசாங்கம் காரண்டி கொடுத்து,
பணம் பெற்று,விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நல்லவிலையை
நிர்ணயம் செய்யலாம். அதற்குப் பதில், நாங்கள் வியாபாரி
களுக்கும், விவசாயிகளுக்கும் மத்தியிலே இருந்து கொண்டு, அவர்
கள் என்ன விலைக்குப் பேசுகிருர்களோ, அதை வாங்கிக்
கொடுக்கிறோம் என்று சொல்வதில் பிரயோஜனமில்லை. அப்படி
யென்ருல், 100-க்கு 40பைசா செஸ் எதற்காக? அப்படி வாங்கத்
தேவையில்லையே? ஆகவே, இந்த மாதிரி ஒரு திருத்தம் கொண்டு
வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் கூட்டுறவு வங்கியிலே ஏற்கெனவே வாங்கிய
கடனைத் திருப்பிக் கட்ட இயலாமல் இருக்கிருர்கள். அதற்காக
அவர்களிடம் ஜப்திக்குச் செல்லும்போது, அவர்களிடம் உள்ள
பருத்தியை எடுக்காமல், பண்டம் பாத்திரங்களை ஜப்தி செய்கிருர்
கள். விளைபொருட்களை எடுத்தால், அதற்குப் போதுமான விலை
கிடைப்பதில்லை. எனவே, பண்டம் பாத்திரங்கள் எடுக்கிருர்
கள். எனவே மார்க்கெட்டிங் கமிட்டி என்பது வியாபாரி
களுக்குத் துணை போகாமல், அரசாங்கமே இந்த மார்க்கெட்டிங்

கமிட்டிகளின் மூலமாக விவசாயிகளின் விளைபொருட்களை வாங்கி, வியாபாரிகளிடம் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்வதற்குப் பணம் வேண்டாமா என்று கேட்கப் படுமானல், நான் கேள்விப்படுகிறேன், செஸ் மூலமாக நிறையப் பணம் வந்திருப்பதாக அறிகிறேன். அந்தப் பணத்தோடு, மேற்கொண்டு கடனும் வாங்கி, விவசாயிகளுக்கு மார்க்கெட்டிங் கமிட்டியே கடனும் கொடுத்து, அவர்களுடைய விளைபொருட் களுக்கு நல்ல விலையையும் நிர்ணயம்செய்யலாம். (மணியடிக்கப் பட்டது). இதற்காக அவசரச் சட்டம் கொண்டு வந்தாலும் கூட, அதிலே இவ்வாறு ஒரு திருத்தத்தையும் கொண்டு வர லாம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> 3 நிமிடங்கள் ஆகிவிட்டது. சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> இன்றைக்கு இருக்கக்கூடிய இந்தச் சட்டத்திலே கோளாறுகள் இருக்கின்றன. பெரிய பெரிய கட்டிடங்கள் எல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, அந்த இடத்திலே வரக்கூடிய பொருட்களை யெல்லாம் வெளியே கொண்டு போகாமல், வியாபாரிகள் வாங்கும்வரை அங்கேயே வைத்திருக்கலாம். இப்போது வங்கிகளுக்குச் செல்லுகிறார்கள், இல்லையேல் திருப்பி எடுத்துக் கொண்டு போகிறார்கள். ஆகவே, இந்தச் சட்டத்தில் ஆலோசனைக் குழு நியமனம் செய்யப்படு வதற்குப் பதில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நிர்வாக அமைப்பை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு தேர்ந்தெடுப்பதற்கு, ஓட்டர் களை நாம் எப்படி நிர்ணயிக்கிறோம் என்று பார்க்கும்போது பஞ்சாயத்து மெம்பர்கள், பிரசிடெண்டு போன்றவர்கள் மூலமாக ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அத்தனை ஜனங்களையும் கொண்டு தேர்ந்தெடுக்க வேண்டியதில்லை. தவிர, வியாபாரிகள் பிரதிநிதி யாரும் இந்த மார்க்கெட்டிங் கமிட்டி யில் இருக்கத் தேவையில்லை. நியமனம் செய்யும் ஆலோசனைக் குழு என்பதை நான் எதிர்க்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இருக்க வேண்டும். இப்போது தனி அதிகாரிகள் போட்டிருக்கிறீர்கள். எனவே, 6 மாதங்களுக்குள் தேர்தல் நடத்தி, தேர்ந்தெடுத்த அமைப்பை ஏற்படுத்த வேண்டும். அந்த அமைப்பின்மூலம் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைத்து, அப்படிப் பொருள்களை வாங்கக் கூடிய வகையிலே சட்டத் திலே திருத்தம் கொண்டுவந்து, நிதி ஆதாரங்களை ஏற்படுத்தி, நியாயமான விலையிலே வாங்கக்கூடிய அமைப்பு முறையை ஏற்படுத்த வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* <u>திரு. ர. ஜெபமணி :</u> சபாநாயகர் அவர்களே, ஜனநாயக நாட்டில் தனி அதிகாரிகள் எந்த இடத்தில் போட்டாலும், அங்கே தவறு நடக்கும் என்பது தங்களுக்கும் தெரியும். இந்த நாட்டு மக்கள் எல்லோருக்குமே தெரியும். இப்போது தனி அதிகாரிகள்

போட்டிருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பது நம் ஆளுங் கட்சிக்கும் நன்கு தெரியும். அதிலும் அமைச்சர் அவர்களுக்கு அதைவிட நன்கு தெரியும். இருந்தும், இந்தத் தவறுகளை நாம் ஏன் செய்கிறோம் என்பதை அவர்கள் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

விவசாயிகளுக்கு நன்மைகளையெல்லாம் செய்கிறோம். ஆலோ சனைக் குழு நியமிக்கிறோம் என்று சொல்வதெல்லாம், இப்போது மக்கள் குழு நியமிக்கின்றது போல்தான் வந்துமுடிந்து விடும். ஆகவே, இதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டி இருக்கவேண் டுமே தவிர, அதை இன்னொருவர் நியமிப்பதாக இருக்கக் கூடாது. தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டி தவ்று பண்ணுவார்களானால், அவர் களுடைய தவறுகளின் மேல் நடவடிக்கை எடுப்பதிலே எந்தவித மான தவறும் கிடையாது. தேர்ந்தெடுக்கக்கூடியவர்கள் தவறு செய்கிறார்கள் என்ற அந்தக் கருத்திலே, நீங்கள் ஆலோ சனைக் குழுவை நியமிக்கிறோம் என்று சொல்வது தவறு. சட்ட மன்ற உறுப்பினர்கள் நான்கு பேர்கள் தவறு செய்கிறார்கள் என்ப தற்காக, சட்டமன்றத்தையே கலைத்துவிட்டு, ஆளுநர் ஆட்சி நடத்தலாம் என்று சொன்னால், அது எந்த அளவுக்கு நம்மைப் பாதிக்குமோ, அதைப் போன்ற ஒரு பெரிய காரியமாகும் இது. விவசாயிகள் என்று வரும்போது இது மிகச் சிறியதாகத் தெரி கிறது.

[பிற்பகல் 12-10]

விவசாயிகள்தான் இந்த நாட்டின் முதுகெலும்பு என்றால் அவர்களுடைய வியாபாரப் பொருள்கள் எப்படி விற்கப்பட வேண்டும். அவர்களுக்கு என்ன விலை கிடைக்க வேண்டுமென் பதை இந்த அரசு புரிந்திருக்குமானால் நிச்சயமாக இப்போர்ப்பட்ட காரியங்களைச் செய்ய முன்வந்திருக்க மாட்டார்கள். ஆகையால் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்-எல்லாவற்றுக்கும் தேர்தல் முறைப் படிதான் கமிட்டிகள் அமைக்கப்படவேண்டும் ; அவ்வாறு செயல்படுவது நாட்டுக்கு நலமாக இருக்குமென்று கூறி அமை கிறேன். ஜெய் ஹிந்த்.

<u>திரு. ரா. மார்க்கபந்து :</u> இந்த மசோதாவிலே இரண்டு திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று இரு திருத்தங்கள் கொடுத் திருக்கிறேன். ஏற்கெனவே அதிகாரிகளுடைய போக்கு கட்டுக்கு அடங்காமல் போய்க்கொண்டிருக்கிறது என்பது எல்லோரும் உணர்ந்த ஒன்று. அந்த நிலையில் ஏற்கெனவே மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட சேர்மன்களை நீக்கிவிட்டு ஸ்பெஷல் ஆபீசர்களை இரண்டாண்டுக் காலம் போட வேண்டுமென்று நினைப்பது சரி யாக இருக்க முடியாது. ஆகவே, 'நான்-அபிஷியல்' சேர்மனைப் போட வேண்டுமென்ற திருத்தத்தைத் தந்திருக்கிறேன். 'நான்-அபிஷியல்' சேர்மன் என்று சொல்லும்போது ஒரு சிலவற்றை நாம் சிந்திக்காமல் இருக்க முடியாது.

சில தவறுகள் தேர்ந்தெடுக்கப்பட்ட சேர்மன்களால் கூட
நடைபெறுகிறது. இந்த மசோதா கூட எங்கள் மாவட்டத்தைப்
பொறுத்துத்தான் வந்ததோ என்ற ஐயப்பாடு கூட ஏற்
படுகிறது. அங்கு ஒரு மார்க்கட்டிங் கமிட்டி இருந்தது. பல்
லாண்டுக் காலமாக ஒருவரே தலைவராக இருந்தார். மகனுடைய
திருமணத்தை விற்பனைக் கூடத்தில் நடத்தினார், அதற்காக 3,000
ரூபாய்க்கு மேற்பட்டு மின்சாரக் கட்டணம் ஆகி இருக்கிறது.
இதுவரை அவர் கட்டவில்லை. மார்க்கட்டிங் கமிட்டியே அதை
இப்போது கட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சேர்
மனாக வருகிறவர்களுக்கு நாட்டு மக்களுக்குச் சேவை செய்ய வேண்
டும் என்ற எண்ணம் இல்லாமல் தனக்கே சேவை செய்துகொள்ளு
கின்ற மனப்பான்மை இருப்பதாகத் தெரிகிறது. திருவண்ணா
மலையில் சேர்மனாக இருந்தவர் சேர்மனாக ஆன பிறகு தன்னுடைய
வருமானத்திற்கு மீறின சொத்துக்களைச் சேர்த்திருக்கிறார்கள்.
அதையும் இந்த அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். மார்க்கெட்டிங் கமிட்டி சேர்மனாக இருக்கக்
கூடியவர்கள் பொதுமக்களுக்குச் சேவை செய்வதற்காக கார்
வசதி தரப்படுகிறது. ஆனால் சொந்த உபயோகத்திற்குத்தான்
அது பயன்படுகிறது. கார்களையும் பயன்படுத்திவிட்டுப் பயணப்
படியும் எழுதிப்பெற்றுக்கொள்ளக்கூடிய நிலைமையும் இருக்கிறது.
இதையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
ஒரு அதிகாரம் கிடைத்து விட்டால் எது வேண்டுமானாலும்
செய்யலாம் என்ற நிலைமை இருப்பதாகச் தெரிகிறது.

செல்வி கிரிஜா என்பவரை தட்டெழுத்தராக எந்த அரசாங்க
அனுமதியும் இல்லாமல் நியமித்திருக்கிறார்கள். அதிலிருக்கும்
பின்னணியையும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் இதுபோன்ற மார்க்கெட்டிங் கமிட்டிகளை உடனடி
யாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்டு
அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரியார்அவர்கள் சொன்னதுபோல் இதுவிவசாயிகளுக்கு இல்
லாமல் வியாபாரிகளுக்கான சங்கங்களாக மாறிவிடக்கூடாது. விவ
சாயி பயிரிடுகிறான். விவசாயி பயிரிடுகிற நெல்லானாலும் சரி
மற்ற விளைபொருள்களானாலும் விவசாயிகள் குறைந்த
விலைக்குக் கொடுத்துப் பாதிக்கப்படுகிறார்கள். அவ்வாறு பாதிப்
பான நிலையில் இருந்து வரும் விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு
இதுபோன்ற மார்க்கட்டிங் கமிட்டிகள் முன்வந்து இன்டரஸ்ட்
ப்ரீ லோன் என்ற முறையில் அவர்களுடைய பொருள்
களுக்கு 50 சதவிகிதம் மதிப்புள்ள தொகையை முன்னதாகவே
கொடுத்து அவர்களுடைய பொருள்களை விற்க வாய்ப்பு ஏற்
படுத்திக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

மற்றொரு திருத்தத்தைத் தந்திருக்கிறேன்—
"In places where the marketing committee is not constituted
Government can sponsor private marketing committee subject to
the supervision of Government"

அரசாங்கம் எல்லா இடங்களிலும் மார்க்கட்டிங் கமிட்டிகளை
நிறுவிக்கொண்டிருக்கிறது. படித்த வாலிபர்கள், வேலையற்ற
வாலிபர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய சேவையைப் பயன்
படுத்திக்கொள்ள வேண்டுமென்ற வகையில் எந்தெந்த இடங்
களில் படித்த பட்டதாரிகள் முன்வருகிறார்களோ அவர்களை
என்கரேஜ் பண்ணுகிற முறையில் அவர்கள் இதை நடத்த
வாய்ப்புத் தந்து சூப்பர்வைசர்களை வைத்து அவர்களை
சூப்பர்வைஸ் செய்யலாம்.

வருகின்ற பொருளிலே ஓரளவிற்கு கமிஷன் தருவதன் மூலமாக
படித்து வேலையில்லாமல் இருக்கின்ற வாலிபர்களுக்கு வேலை
வாய்ப்புத் தருவதாக இருக்கும். ஆகவே அதிகாரிகளுக்கு அதிக
மான அதிகாரங்களைத் தந்து விடாதீர்கள். உடனடியாகத்
தேர்தலை நடத்தி அங்குள்ள எல்லா பொதுமக்களும் பங்கு
கொள்ளச் செய்யவேண்டும், பொருள்களுக்கு விலையை நிர்ண
யிக்கிறபொது மார்க்கெட்டிங் கமிட்டியிலே உள்ள விவசாயப்
பிரதிநிதிகள் சேர்ந்து அதை நிர்ணயிக்கக்கூடிய வழிவகை
செய்யவேண்டுமென்று கூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த வேளாண்மை விளைபொருள் தனித்
திருத்தச் சட்டத்தின் மேல் 6 உறுப்பினர்கள் தங்களுடைய
மேலான கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். வேளாண்மை
விளைபொருட்களை வாங்குவதையும் விற்பதையும். மேலும்
சிறந்த முறையிலே முறைப்படுத்துவதற்கும், வேளாண்மை
விளைபொருட்கள் விற்பனைச் சட்டத்தை 1959-ஆம் ஆண்டு அரசு
இயற்றியது.

இந்தச் சட்டத்தின்கீழ் பல்வேறு மாவட்டங்களில் விற்பனைக்
குழுக்களை அரசு அமைத்துள்ளது. தரகர்களின் குறுக்கீடு இல்
லாமல் உற்பத்தியாளர்கள் தங்களுடைய பொருட்களை நல்ல
விலையில் விற்பதற்கும், விற்பனைக்காக உபயோகப்படுத்தப்
படும் எடைக்கற்கள், தாரசு போன்றவைகளால், விவசாயிகள்
ஏமாற்றப்படாமலிருப்பதற்கும், பொருள்களை விற்றவுடன்
உடனடியாக விவசாயிகள் பணம் பெறுவதற்கும் தேவையான
வசதிகளை விவசாயிகளுக்கு அளிப்பதே விற்பனைக் குழுக்களின்
நோக்கங்களாகும். இதற்காக ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்
களை அமைப்பது விற்பனைக் குழுக்களின் கடமையாகும்.
வேளாண்மை விளைபொருள்கள் விற்பனைச் சட்டம் பல ஆண்டு
களாக அமலில் இருந்தபோதிலும், இதுநாள் வரை 170
ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களே அமைக்கப்பட்டுள்ளன.

விற்பனைக் குழுக்களின் தலைவர்களாகவும் உறுப்பினர்களாகவும் பணியாற்றி வந்தவர்கள் புதிய விற்பனைக்கூடங்களை, மேலும் அதிக அளவில், அமைப்பதற்குத் திட்டம் எதுவும் தீட்டவில்லை. அவர்கள் விற்பனைக் குழுக்களின் முன்னேற்றத்திற்கான வளர்ச்சித் திட்டங்களில் போதிய கவனம் செலுத்தவில்லை.

மாவட்ட ஆட்சியாளர்களின் முன் அனுமதி பெற்று விற்பனைக் கூடங்களுக்குத் தேவையான நிலங்களையும், கட்டடங்களையும் வாங்குவதற்கு விதித்துறைகளில் வகை செய்யப்பட்டிருந்தும் விற்பனைக் குழுக்களின் முன்னாள் தலைவர்களும் உறுப்பினர்களும், விற்பனைக் கூடங்களின் வளர்ச்சியில் போதிய அளவிற்கு ஆர்வம் காட்டவில்லை. 1975-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் விற்பனைக் குழு அமைக்கப்பட்டது. ஆனால் இது நாள் வரை அந்த மாவட்டத்தில் ஒரு விற்பனைக்கூடத்தையும் அமைப்பதற்கு சேலம் விற்பனைக்குழு எந்தவிதமான முயற்சியையும் எடுத்துக்கொள்ளவில்லை. மற்ற மாவட்டங்களிலும் குறிப்பாக செங்கல்பட்டு, வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தர்மபுரி, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவாகவே இருக்கிறது.

ஏற்கனவே அமைக்கப் பெற்றுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் போதிய வசதிகள் செய்யப்படவில்லை. விவசாயிகளின் நன்மைக்காக கிடங்குகளை அமைப்பது, அவர்கள் தங்குவதற்கு வசதி செய்து கொடுப்பது, அவர்கள் கொண்டுவரும் பொருள்களுக்கும், அவர்கள் பெறும் பணத்திற்கும் போதிய பாதுகாப்பு அளிப்பது, அவர்களுக்கு சிற்றுண்டிசாலைகளை அமைத்துக்கொடுப்பது அவர்களுடன் வரும் கால்நடைகளுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுப்பது போன்றவற்றில் விற்பனைக் குழுக்களின் முன்னாள் தலைவர்களும், உறுப்பினர்களும் எந்த விதமான கவனமும் செலுத்தவில்லை. விவசாயிகளுக்கும், விற்பனையாளர்களுக்கும் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தால்தான் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் அதிக அளவில் வேளாண்மை விளைபொருள்கள் விற்பனைக்குக் கொண்டுவரப்படும் என்ற அடிப்படை உண்மையை விற்பனைக் குழுக்களின் தலைவர்களாகவும் உறுப்பினர்களாகவும் பணியாற்றி வந்தவர்கள் உணரவில்லை. அவர்கள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் இருக்கும் வசதிகளைப் பெருக்குவதற்கு ஓர் ஒருங்கிணைந்த திட்டத்தைத் தீட்டவில்லை.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலமாகப் பொது வசதிகளைப் பெருக்குவதற்குப் பதிலாக அவர்கள் தங்களுடைய வசதிகளைப் பெருக்கிக் கொண்டார்கள். விற்பனைக் குழுக்களின் தலைவர்கள் தங்களுடைய சுயநலத்திற்காகச் செயல்பட்டுச் சொத்து சேர்த்துக் கொண்டார்கள் என்ற புகார்கள் வந்திருக்கின்றன.

விற்பனைக் குழுவிற்கு உரிய முறையில் உரிமையாக்கிக் கொடுக்கப்படாத நிலத்தின் பேரில் எந்த வேலையும் தொடங்கலாகாது என்று தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனை விதித்துறைகள் கூறுகின்றன. ஆனால் வட ஆற்காடு விற்பனைக் குழு, செங்கம் விற்பனைக்கூடத்திற்காக வாடகைக்கு எடுத்த நிலத்தில் ரூ. 48,000 மதிப்புள்ள கட்டடங்கள் கட்டியுள்ளது. அந்தக் குழுவின் செயல் தவறானது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

[பிற்பகல் 12-20]

அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் மார்க்கபந்து அவர்கள் சொன்னதைப்போல, வடாற்காடு மாவட்டத்தில் பழைய தலைவராக இருந்தவர் தன்னுடைய மகளின் திருமணத்தை விற்பனைக் கூட அலுவலகத்திலேயே வைத்து நடத்தியிருக்கிறார்கள். அதற்கு மின்சாரத்தைப் பயன்படுத்தி அலங்கார விளக்குகளைப் போட்டு, அதற்கு ஏறக்குறைய 3,000 ரூபாய்க்கு மேற்பட்ட பணத்தைச் செலவழித்திருக்கிறார்கள். அந்தப் பணத்தைத் திரும்பச் செலுத்த வேண்டுமென்று குழு கேட்டுக்கொண்டும் தலைவர் செலுத்தாமல் வைத்துக்கொண்டிருக்கிறார். அதற்காக விற்பனைக்குழு அவர் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கார்களைத் தங்களுடைய இல்லத்திலேயே வைத்துக்கொண்டு தங்கள் சொந்த வசதிகளுக்காக உபயோகித்துக்கொண்டிருந்தார்கள், வேறு இடங்களுக்குச் சென்றிருக்கின்ற நேரத்திலும் பயணப்படி பெற்றிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டும் வந்தது.

தஞ்சாவூர் விற்பனைக் குழுவின் தலைவராக இருந்தவர், விற்பனைக் குழுவிற்குச் சம்பந்தப்பட்ட ஜீப்பை எடுத்துக் கொண்டு தானாகவே ஓட்டிச் சென்று, விபத்திற்குள்ளாக்கியதாகப் புகார் வந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, விற்பனைக் குழுவுக்குச் சேர்ந்த ஒரு காரை விற்பனைக்குழுத் தலைவருடைய மகன் எடுத்துப்போய் விபத்திற்குள்ளாக்கியிருக்கிறார் என்ற புகாரும் வந்திருக்கிறது. வடார்க்காடு விற்பனைக் குழுவில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல், செல்வி கிரிஜா என்பவரைச் சுருக்கெழுத்தாளராக, தகுதியில்லாதவரை நியமித்திருக்கிறார்கள்.

விதிமுறைகள் இருந்தும் அவைகளுக்கு எதிராக இப்படி அவர்களுக்கு என்று விதிமுறைகளை வகுத்துக்கொண்டு தலைவர்கள் நடத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

விற்பனைக் குழுக்களின் முன்னாள் தலைவர்களின் மீது பலவிதமான குற்றச் சாட்டுக்கள் அரசுக்கு வந்த வண்ணமாக இருந்தன. குறிப்பாக பயணப்படி வாங்குவதிலும், விற்பனைக் குழுவிற்குச் சொந்தமான மோட்டார் வண்டிகள் மற்றும் தொலை

[திரு. ப. குழந்தைவேலு] [1978 செப்டம்பர் 12

பேசிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதிலும், அக் குழுக்களுக்கு ஊழியர்களை நியமிப்பதிலும் முறை கேடுகள் நடைபெற்றுள்ளதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. வட ஆற்காடு மற்றும் தஞ்சாவூர் விற்பனைக் குழுக்களின் முன்னாள் தலைவர்களின் மீது வந்துள்ள குற்றச்சாட்டுகளை விசாரணை செய்து ஓர் அறிக்கை அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று காவல் துறையினர் கேட்டுக் கொள்ளப்பட்டனர். வட ஆற்காடு விற்பனைக்குழு சம்பந்தமாகக் காவல் துறையிடமிருந்து இன்னும் அரசுக்கு அறிக்கை வரவில்லை. தஞ்சாவூர் விற்பனைக் குழுவின் தலைவராக இருந்தவரைக் குறித்து காவல் துறையிடமிருந்து அரசுக்குச் சில குறிப்புகள் கிடைத்துள்ளன. அவர் விற்பனைக் குழுவிற்குச் சொந்தமான மோட்டார் வண்டியையும், தொலைபேசியையும் தவறாகப் பயன்படுத்தினார் என்றும், விற்பனைக்குழுவின் அலுவலகத்தில் இருந்த சமயத்தில் மது அருந்துவார் என்றும் காவல் துறையின் குறிப்புகள் கூறுகின்றன.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ஒரு கருத்தைச் சுட்டிக் காட்டினார்கள். யார் தவறு செய்திருக்கிறார்கள் என்று இந்த அரசு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு ஏற்கனவே என்னுடைய பதிலிலே சொல்லி விட்டேன். யார் யார் தவறு செய்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் வரிசையாகச் சொல்ல வேண்டுமென்றால் இன்னும் ஒரு மணி நேரம் சொல்லிக்கொண்டே இருக்கலாம். தவறு செய்திருப்பவர்கள் யார் என்று அவருக்கு விளங்கும் என்று நினைக்கிறேன்.

அவர் ஏதோ இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவது ஆளுங்கட்சிக்காரர்களைக் கொண்டு வர வேண்டுமென்ற எண்ணத்தோடு என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட எண்ணம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு இல்லை என்பதை இந்த நேரத்தில் தெளிவாக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இன்று ஆலோசனைக் குழுவிற்கு உறுப்பினர்கள் போடுவதில் மூன்று பேர் விவசாயிகளாக இருக்கின்றவர்கள், மூன்று பேர்கள் வியாபாரிகளாக இருக்கின்றவர்களைத்தான் நியமிக்க இருக்கிறோம் என்பதைத் தெளிவாக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

வேளாண்மை விற்பனைக் கழகத்தின் ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டுமென்று செஞ்சி இராமச்சந்திரன் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது ஏற்கனவே அரசினுடைய கவனத்திலே இருக்கிறது என்பதனை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 செப்டம்பர் 12] [திரு. ப. குழந்தைவேலு]

அடுத்து தொட்டும் தொடர்ந்தும் பேசிய அருமை மாண்பு
மிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் கலைக்கப்பட்ட
தீர்மானத்தைப் பொறுத்தவரையில் வரவேற்கிறேன் என்று
சொன்னார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியை அவர்
களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இன்று விவசாயிகளிடத்தில் இருக்கின்ற அச்சத்தைப்
போக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.
வேளாண்மை விளைபொருள் விற்பனைச் சட்டத்தைத் திருத்து
வதற்கான முக்கியமான நோக்கமே, விவசாயிகள் மத்தியில்
இருக்கும் சங்கடங்களையும், சந்தேகங்களையும் போக்க வேண்டு
மென்றுதான் இந்த நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்
கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்துப் பேசிய கோவிந்தராசன் அவர்கள் தேர்தல் குறு
கிய காலத்தில் நடத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்
டார்கள். அது அரசின் கவனத்திலே இருக்கிறது என்பதனை அவர்
களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அனைத்துக் கட்சி நண்பர்கள் இதிலே இடம் பெற
வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதையும்
அரசு பரிசீலனை செய்யும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கி
றேன்.

அடுத்துப் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த
மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் ஒரு சில கருத்
துக்களை எடுத்துச் சொன்னார்கள். விவசாயிகளுக்கு நியாயமான
விலை கிடைப்பதற்குண்டான வழிகளை இந்த அரசு செய்து
கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இந்த
அரசைப் பொறுத்தவரையிலே இடைத் தரகர்களை ஒழிக்க
வேண்டுமென்ற எண்ணத்திலே தான் வேளாண்மை விளைபொருள்
விற்பனைக் கூடங்களை வைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

45 பைசா வரி வாங்குகிறார்கள். இதன்மூலம் இலட்சக்
கணக்கிலே பணம் சேர்ந்திருக்கிறது, கோடிக்கணக்கிலே பணம்
சேர்ந்திருக்கிறதென்றெல்லாம் குறிப்பிட்டார்கள். வேளாண்மை
விற்பனைக் கூடங்கள் மூலமாகப் பெறுகின்ற 45 பைசா வரி
உண்மையிலே, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டால் குறைந்த
அளவிலேயே நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதை
நான் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். பஞ்சாப், அரியானா
மாநிலங்களில் ரூ. 100க்கு ரூ. 1, ரூ.2 என்று வரி வாங்குகிறார்
கள். ஆனால், தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, 45 பைசா
என்பது குறைந்த கட்டணம் என்று குறிப்பிட்டுச் சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ப. குழந்தைவேலு] [1978 செப்டம்பர் 12

மேலும் அடுத்துப் பேசிய திரு. ஜெபமணி தனி அலுவலர்கள் தவறு செய்வார்கள். ஆகவே, அவர்களைப் போடுவது சரியல்ல என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் எங்கே தவறு செய்யக் கூடுமோ என்ற ஐயப்பாட்டின் காரணமாகத்தான் அதற்காக ஆலோசனைக் குழுவை நாம் நியமிக்கிறோம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, திரு. மார்க்கபந்து அவர்கள் இரண்டு திருத்தங்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்த அளவிலே, அந்தத் திருத்தங்கள் தேவையில்லையென்று நான் நினைக்கிறேன். இப்பொழுதிருக்கிற திருத்தமே சரியாக இருக்கிறது. எனவே, உறுப்பினர் தான் கொண்டு வந்த திருத்தங்களை வாபஸ் பெற்றுக் கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன்.

மேலும், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு, வேளாண்மை விளை பொருட்கள் விற்பனைச் சட்டத்தை விரிவாகத் திருத்துவது குறித்து அரசு விரிவாகப் பரிசீலித்து வருகிறது. இதற்குத் தனி அடங்கல் சட்டம் ஒன்றை 'காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன்' கொண்டு வர உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்த அடங்கல் சட்டம் நிறை வேற்றப்பட்டவுடன், விற்பனைக்குழு உறுப்பினர்கள் பதவி களுக்குத் தேர்தல் நடத்தப்படும். ஆகவே, இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் திருத்தங்களை வாபஸ் பெறவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, வேளாண்மை விளை பொருள் விற்பனை (திருத்தம், தனி விதித்துறைகள்) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1978) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய சட்டப் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 5

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவை முன்னுள்ள கேள்வி : "பிரிவு 5 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

1978 செப்டம்பர் 12]

THIRU R. MARGABANDU : Sir, I move the following amendment "in Clause 5, in sub-clause 1 (a), for the words 'Special Officer', *Substitute* the words 'non-official Chairman'."

The amendment was duly seconded.

<u>திரு ரா. மார்க்கபந்து :</u> இதிலே 'ஸ்பெஷல் ஆபீசர்கள்' நியமிக்கிற காலத்தை இரண்டு வருஷம் என்று சொல்லியிருக் கிறார்கள். அந்தக் கால வரையறை அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தால்தான், இந்தத் திருத்தத்திலே 'நான்-அஃபி ஷியல் சேர்மன்' போட வேண்டுமென்ற திருத்தத்தைச் சொல்லி யிருக்கிறேன். அதற்கு அரசாங்கம், குறுகிய காலத்திலே தேர்தலை நடத்துவோம் என்று ஏதாவது உத்தரவாதம் தருவார்களானால், நான் இந்தத் திருத்தத்தை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> மாண்புமிகு உறுப் பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. ரா. மார்க்கபந்து அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

THIRU R. MARGABANDU : Sir, I move the following amendment: "after sub-Clause (6) of clause 5, add the following as sub-clause (7) namely— 'In places where Market Committee is not constituted. Government can sponsor Private Market Committees subject to supervision of Government'."

The amendment was duly seconded.

<u>திரு. ரா. மார்க்கபந்து :</u> இதை ஒரு நல்ல திருத்தமாக நான் கருதுகிறேன். காரணம், அரசாங்கமே எல்லாவற்றை யும் எடுத்து நடத்த சாத்தியக் கூறுகள் இல்லையென்கிறபொழுது, தனியார் மூலமாக வாய்ப்புகளை ஏற்படுத்துவது சாலச் சிறந்த தாக இருக்கும் என்று அரசாங்கத்திற்கு உதவுகின்ற வகையிலே தான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அதையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இதற்கும் உத்தரவாதம் தருவார்களானால் வாபஸ் பெறத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> பேரவைத் தலைவரவர் களே, ஏற்கெனவே விற்பனைக் கூடங்களுக்கென்றுத் தனியாகக் குழுக்களை ஏற்படுத்திச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே, தனியார் மார்க்கெட்டிங் கமிட்டிகள் தற்போதுள்ள நிலையிலே தேவையில்லை. தனியார் மார்க்கெட்டிங் கமிட்டிகள்

இருந்தால் அது விவசாயிகளுக்கு ஊறு விளைவிக்கும் என்கின்ற காரணத்திற்காக இதை மீண்டும் வலியுறுத்தாமல் திரும்பப் பெறுமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : அமைச்சரவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அதை வலியுறுத்தவில்லை.

திரு. ரா. மார்க்கபந்து அவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(பிற்பகல் 12–30)

பிரிவுகள் 6 முதல் 9 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்தம், தனி விதித்துறைகள்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 27/1978) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) 1978 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (மூன்றுவது திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன் வடிவு எண். 28/1978).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1978 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (மூன்றுவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 28/1978). இதிலே என்னுடைய வேண்டுகோள், அடுத்து சென்னை மாநகராட்சி குறித்து வருவதாலே இரண்டையும் சேர்த்துப் பேசி விட்டால் மசோதாக்களைத் தனித்தனியாக நிறைவேற்றிவிடலாம்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, '' 1978 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (மூன்றுவது திருத்த) சட்ட முன் வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 28/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்'' என்று முன் மொழிகிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டையும் சேர்த்து எடுத்துக் கொள்வதாகக் கூறினீர்கள். நான் ஏற்கெனவே ஒரு டிஸ்அப்ருவல் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். அப்படி இரண்டையும் சேர்த்து எடுத்துக் கொண்டால் நான் முதலிலே பேச வேண்டிவரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி என்றால் மதுரை மாநகராட்சியை மட்டும் எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்தச் சட்ட திருத்தத்தைப் பொறுத்தவரையிலே மதுரை மாநகராட்சியிலே அரிசனப் பெருமக்கள் அல்லது அரிசனப் பழங்குடியினர், மகளிர் அவர்களுடைய எண்ணிக்கை 3 என்று இருந்ததை 5 என்று மாற்றுவதற்காக கொண்டுவரப்பட்ட சட்ட திருத்தம் என்பதனை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதிலே மற்றொன்று, மேயர், துணை மேயர் பொறுப்பில் இல்லாதபோது, மாவட்ட ஆட்சித் தலைவரே அந்தப் பொறுப்பை வகிக்கலாம் என்கின்ற வகையிலே செய்கின்ற சட்ட திருத்தம். இதுதான் நான் முன் மொழிந்திருக்கிற சட்ட முன்வடிவைப் பற்றிய அம்சங்கள். அடுத்து ஆய்வுக்கு வரக்கூடிய சென்னை மாநகராட்சியைப் பற்றியும் சொல்லிவிட்டால் பேசுவதற்கு வாய்ப்பாக இருக்கும். மதுரை, சென்னை ஆகிய இரண்டு மாநகராட்சிகளிலே செய்யப்படுகின்ற சட்ட திருத்தம், மேயர், துணை மேயர் ஆகியோரின் பதவிக் காலத்தை இரண்டாண்டாக ஆக்கவும், மாநகராட்சிகளின் பதவிக் காலத்தை 6 ஆண்டுகள் என்று ஆக்கவும் ஆகிய வகையிலே செய்கின்ற சட்ட திருத்தம். ஆகவே, இந்த அம்சங்களைக் கருத்திலே கொண்டு உறுப்பினர்கள் தங்கள் கருத்தை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் கொண்டு வருவதற்கு அடிப்படையாக இருப்பதைப் பார்க்க வேண்டும். அவசரச் சட்டமாகப் போட்டிருக்கிறார்கள். எதை எடுத்தாலும் இந்த ஆட்சியிலே அவசரம்தான். நிதானமே கிடையாது. ஆகவேதான் மதுரை மாநகராட்சித் தேர்தல் நடைபெறுகிறபோது, தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு, வேலைகள், தொடங்கி நடைபெறுகின்ற நேரத்திலே அவசரச் சட்டம் போட்

---

* 1978, செப்டம்பர், 1-ஆம் தேதிய, தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

டிருக்கிறார்கள். அரிசன உறுப்பினர்களை 3லிருந்து 5 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். பெண் உறுப்பினர்களை 3லிருந்து 5 ஆக ஆக்கியிருக்கிறார்கள். இதை விட்டுவிட்டு, அந்தந்தக் கட்சியிலே பிரதிநிதித்துவம் கொடுத்திருந்தாலாவது கொஞ்சம் மரியாதை இருந்திருக்கும். ஒரு பெண்ணையாவது நிற்க வைத்திருந்தால் நன்றாக இருக்கும் என்று அங்கே இருக்கிறவர்கள் சொல்கிறார்கள். யாரையோ நிற்க வைத்து ஜெயிக்க வைத்து விட்டு, பிறகு பெண்களை நியமித்துக்கொள்கிறோம் என்று சொல்லுகிறார்கள்.

சட்டநாதன் குழு என்று ஒரு கமிட்டியைப் போட்டார்கள். அந்தச் சட்டநாதன் கமிட்டியைக் கேலிக்கூத்தாக்கியிருக்கிறீர்கள். மேல்நிலை நிபுணர் குழு என்று அந்தக் குழுவிற்குப் பெயர். ஆனால் அந்தக் குழுவை கீழ்நிலைக் குழுவாக ஆக்கிவிட்டார்கள். சட்டநாதன் நிபுணர் குழுவைப் போடுவதற்கு எவ்வளவு செலவாயிற்று? எவ்வளவு காலம் ஆயிற்று? 8 மாத காலம் ஆயிற்று. அந்த அறிக்கையை அங்கத்தினர்களுக்குத் தராமலேயே அவசரச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். நூலகத்திலே கூட அந்த அறிக்கை வைக்கப்படவில்லை. அவ்வளவு என்ன அவசரம்? அவ்வளவு என்ன அவசரம் என்பது எனக்குப் புரியவில்லை. தவிர்க்க முடியாத அவசரம் இருக்குமானால், இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதைப் பற்றி ஆட்சேபணை இல்லை.

சர்க்காரின் நடவடிக்கை எப்படி இருக்கிறது என்றால் குதிரையை வண்டிக்குப் பின்னாலே கட்டுவது போல் இருக்கிறது. அந்த அறிக்கையை சட்ட மன்றத்தில் வைத்து விவாதித்து இருக்கலாம். சட்ட மன்ற உறுப்பினர்களின் மேலான கருத்துக்களைக் கேளாமல் இப்படி அவர்கள் சட்டம் கொண்டு வந்து இருக்கிறார்கள். இங்கேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் படிக்கமாட்டார்கள் என்று நினைத்து விட்டார்களா? அந்த அறிக்கையை இங்கே வைத்து விட்டு, இந்தச் சபை அதன் மீது என்ன சிபார்சுகளை செய்கிறது என்பதைப் பார்த்து விட்டுச் செய்து இருக்க வேண்டும். சட்டநாதன் கொடுத்த அறிக்கையைப் படித்து விட்டு, ஒரு காம்பிரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டு வந்து இருந்தால் நன்றாக இருந்து இருக்கும்.

அந்தக் கமிட்டியின் சிபார்சுப்படி சட்டம் கொண்டு வந்து இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கமிட்டியின் சிபார்சு என்ன கூறுகிறதோ அந்த நோக்கம் இந்தச் சட்டத்தில் நிறைவேற்றப்படவில்லை. ஏதோ இடையில் சொல்லி இருக்கிற ஒரு கருத்தை எடுத்துக்கொண்டு சட்டம் கொண்டு வந்து இருக்கிறார்கள். ஒரு ஆண்டுக்கு ஒரு மேயர் என்று இருப்பதை விட $2\frac{1}{2}$ ஆண்டுக்கு ஒரு மேயர் என்று இரண்டு மேயர் இருந்தால் போதும் 5 ஆண்டுகளுக்கு 5 மேயர் தேவை இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதை மட்டும் எடுத்துக்கொண்டு அந்த சிபார்சை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம், ஆனால், அதிலே ஒரு சிறு திருத்தம் என்று சொல்லி, 2 ஆண்டுகளுக்கு ஒரு மேயர்

என்று திருத்தம் கொடுக்கிறோம், $2\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு ஒரு மேயர் என்பதற்காக என்று சொல்லியிருக்கிறீர்கள். இரண்டு மேயர் என்பதற்குப் பதிலாக 3 மேயர் என்று சொல்லி, சட்டம் கொண்டு வந்து இருக்கிறீர்கள். அவர்கள் ஒன்று அறிக்கையில் கண்டபடி சட்டம் கொண்டுவந்து இருக்க வேண்டும் அல்லது சபையின் கருத்தை அறிந்து கொண்டு வந்து இருக்க வேண்டும். நீங்கள் சட்டநாதன் கமிட்டி அறிக்கையைச் சட்டை செய்யவில்லை. அப்படிப்பட்ட அறிக்கையை வைத்து இங்கே 2 ஆண்டுக்காலம் என்று போடப்பட்டு இருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு மேயர் வரவேண்டும் என்பதற்காக 6 ஆண்டுக்காலம் என்று ஆயுட் காலத்தை உயர்த்தியிருக்கிறார்கள். அவர்களுடைய ஆயுட்காலமே 6 ஆண்டுக் காலம் இல்லை என்று இருக்கிறபோது, ஆயுள் இல்லாத ஒருவர் எப்படி வேறு ஒருவருக்கு ஆயுள் கொடுக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை.

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து</u>: ஆயுட்காலம் இல்லை பதவிக்காலம்.

<u>திரு. க. சுப்பு</u>: ஆயுள் என்று அந்தப் பதவியின் ஆயுள் தான் நான் குறிப்பிடுவது. இவர்களுடைய ஆயுள் கெட்டியாக இருக்க வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு மேயர் வர வேண்டும் என்று கொண்டுவந்து இருக்கிறார்கள். அதே போல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மேயர் மாற வேண்டும் என் பதை சென்னை மாநகராட்சிக்கும் பொருந்துவதாகச் செய்ய இருக்கிறார்கள். அந்தக் கமிட்டி கொடுத்திருக்கிற வேறு சிபார்சைப் பற்றி அவர்கள் கருத்து செலுத்தவில்லை. மேயர் பதவி காலம் மட்டும் சொல்லிவிட்டால் போதுமா? மற்ற நிர்வாகக் கமிட்டிகள் இருக்கின்றனமவ அவற்றின் கால வரம்பு என்ன என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டாமா? இப்படிச் செய்வதால் நீங்கள் எந்த சமதர்ம சமுதாயத்தையும் அமைத்துவிடப் போவது இல்லை. ஆகவே, இப்படிப்பட்ட சட்டம் கொண்டு வருவதற்கு முன்னால் எல்லாவற்றையும் பரிசீலித்துப் பார்த்துவிட்டு கொண்டு வந்து இருக்க வேண்டும்.

சட்டநாதன் அவர்கள் எத்தனைப் பிரச்னைகளைப் பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். அவற்றையெல்லாம் விட்டுவிட்டார்கள். சென்னைக்கு 120 டிவிஷன் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த அறிக்கை வருவதற்கு முன்பே 120 என்று இருந்ததை 150 என்று ஆக்கிவிட்டார்கள். இப்படி ஒரு கருத்தையும் வைத்துக்கொண்டு, ஒரு கமிட்டியையும் போட்டு விட்டு, அது அறிக்கை தருவதற்கு முன்னேயே சட்டத்தையும் போட்டு விட்டு, காரியங்களைச் செய்வதால், அந்தக் கமிட்டியை அவமானப்படுத்தியதாக அது ஆகாதா? ஆகவே, சர்க்கார் எடுக்கின்ற நடவடிக்கைகள் நியாயமானதாக இருக்க வேண்டும்.

[திரு .க. சுப்பு] [1978 செப்டம்பர் 12

மதுரை மாநகராட்சி மேயர் தேர்தல் நடப்பதற்கு முன்பே
அந்த மேயருக்கு உண்டான அதிகாரத்தை நீங்கள் எடுத்துக்
கொண்டு இருக்கிறார்கள். மேயரோ, துணை மேயரோ இல்லை
என்று சொன்னால், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமை வகிப்பார்
என்று சொல்லியிருக்கிறார்கள். மக்களாட்சித் தத்துவத்தின்
மாண்பை வளர்ப்பவர்களா இவர்கள்? மேயரோ, துணை மேயரோ
இல்லை என்றால், அங்கே வேறு மாநகராட்சி உறுப்பினர் இருக்க
மாட்டாரா? அவர்களில் ஒருவர் தலைமை தாங்க தேர்ந்தெடுக்
கப்பட்டு அந்த மன்றத்தின் நிகழ்ச்சியை நடத்த முடியாதா?
இங்கே சபாநாயகர் இல்லை என்றால் சீப் செக்ரடரி வந்து அவை
யை நடத்த வேண்டும் என்று வைத்தால் அது சரியாக இருக்குமா
என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இங்கே நாம் பேனல்
ஆப் சேர்மன் என்று வைத்து இருப்பதைப் போல், அங்கேயும்
பேனல் ஆப் சேர்மன் என்று வைத்து, மேயரோ, துணை மேயரோ
இல்லாதபோது மன்றத்தின் நிகழ்ச்சிகளை நடத்தச் சொல்லலாம்.
அப்படியில்லாமல், இப்படிப் போட்டு இருப்பது வருந்தத்
தக்கது என்று சொல்லிக்கொள்கிறேன்.

சட்டநாதன் கொடுத்த சிபாரிசை எல்லாம் சர்க்கார் ஏற்றுக்
கொள்ளவேண்டும் என்று இல்லை. அந்த அறிக்கை சட்டமன்றத்
தில் வைத்தபின், அதன் மீது விவாதம் நடத்தி, அந்த வாய்ப்பைப்
பயன்படுத்தி எல்லோருடைய கருத்துக்களையும் கேட்டறிந்த
பின்பு அதற்குச் சட்டம் கொண்டு வந்து இருக்க வேண்டும்.
இதற்கு என்ன அவசரம் என்று எனக்குத் தெரியவில்லை. 5
உறுப்பினர், 10 உறுப்பினர் என்று தெரிவித்து விட்டால் மதுரை
யில் இருக்கும் வாக்காளர் பூராவும் ஆளும் கட்சிக்கு வோட்டுப்
போடுவார்கள், அதிலே 10 பேரை நியமிக்கலாம் என்று
அதிகாரம் இருப்பதால் நாமும் அவர்களோடு இருப்போம் என்று
எல்லோரும் கருத வேண்டும் என்ற அடிப்படையில் அந்த
எண்ணத்தில் இந்தச் சட்டத்தை உருவாக்கி அறிவித்து இருக்
கிறார்கள். வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் சென்னையில் வைத்து
இருக்கிறார்கள். மதுரையில் வைக்கவில்லை. இப்படி பல்வேறு
பிரச்னைகள் குறித்து இங்கே ஆலோசனை வழங்க வேண்டியிருக்
கிறது. அப்படி ஆலோசனைகளை வழங்க, ஆலோசித்து ஆராய்ந்து
பார்க்க வாய்ப்பு கொடுத்து இருந்தால் நன்றாக இருந்து இருக்கும்.
(மணியடிக்கப்பட்டது) கொஞ்சம் டைம் கொடுங்கள் முடித்து
விடுகிறேன். அங்கத்தினர்களுக்கு வாய்ப்புக் கொடுக்காமல்
அவசரச் சட்டம் கொண்டு வந்தது கண்டிக்கத்தக்கது; வருந்தத்
தக்கது. அரசாங்கம் ஜனங்களிடத்தில் நம்பிக்கை வைத்து
சட்டங்களைக் கொண்டு வருவது பாராட்டத்தக்கது என்று
சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

* * *

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.

1978 செப்டம்பர் 12]

(பிற்பகல் 12-40)

திரு. ஓ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே மாநகராட்சி
யின் பதவி காலத்தை 5 ஆண்டிலிருந்து 6 ஆண்டாக மாற்ற
வேண்டிய அவசியம் இல்லை. காரணம் பாராளுமன்றத்தின்
காலத்தையும் சட்டமன்றத்தின் காலத்தையும் ஏற்கனவே 5
ஆண்டுகளாக இருந்ததை எமர்ஜன்சி காலத்தில் 6 ஆண்டுகளாக
மாற்றினார்கள். மீண்டும் அது இப்போது 5 ஆண்டுகளாகக்
குறைக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது இந்த நேரத்
தில் மாநகராட்சிக்கு 6 ஆண்டு என்று பதவி காலத்தை நீட்டிப்பதுக்
பொருத்தமுடையதல்ல ; அது விரும்பத்தக்கதுமல்ல.

ஒருவேளை 'மா' என்று சிறப்புப் பெயர் பெற்றிருப்பதால்
6 ஆண்டாக உயர்த்தலாம் என்று சொல்கிறார்களோ என்னவோ
தெரியவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லா ஸ்தாபனங்களுக்கும்
பாராளுமன்றம், சட்டமன்றங்களுக்கு இருப்பதைப்போல 5
ஆண்டுகள்தான் இருக்க வேண்டும் என்பது என்னுடைய
கோரிக்கை.

15 நாட்களுக்கு மேயர் இல்லாமல் இருந்தால், உதவி
மேயரும் இல்லாமல் இருந்தால் தலைமைப் பொறுப்பை கலெக்ட
ரிடம் ஒப்படைக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது
நியாயமல்ல. ஜில்லா போர்டில் தலைவரோ, உப தலைவரோ
இல்லாவிட்டால் பிரசிடென்டுக்கு ஒருவரை நியமிக்க அதிகாரம்
கொடுக்கப்பட்டிருந்தது. 'பிரசிடென்ஷியல் டெலிகேஷன்'
ஜில்லா போர்டில் இருந்ததைப் போல் மேயருக்கு டெலிகேட்
அதிகாரத்தைக் கொடுக்கலாம். மேயர் இல்லாவிட்டால், உதவி
மேயர், அவரும் இல்லாவிட்டால் மேயராக நியமிக்கப்பட்டவர்
இருக்கலாம். அது அல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு
சபையில் சர்க்கார் அதிகாரி தலைமை தாங்குவது அல்லது சர்க்கார்
அதிகாரியைத் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயருக்குப் பதிலாக,
நியமிப்பது விரும்பத்தக்கதல்ல. அது ஜனநாயகத்தைப் பாது
காப்பது ஆகாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன்.

அடுத்தபடியாக நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கையை
அவசரம் அவசரமாக மதுரை மாநகராட்சிக்குத் தேர்தல் நடக்கும்
போது அவசரச் சட்டம் மூலம் அதிகரித்ததற்கு என்ன காரணம்
என்று தெரியவில்லை. அதையும் அப்போது தேர்தல் முடிவு
தெரிவதற்கு முன்னால் அவசியம் இருந்தது என்று நினைத்தாலும்
இப்போது அது தேவையில்லை. மீண்டும் பழைய நிலைமையைக்
கொண்டு வரலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. வி. கே.
கோதண்டராமன் 2 நிமிடங்களில் முடித்துக் கொள்ளவேண்டும்.

1978 செப்டம்பர் 12]

திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தலைவரவர்
களே, மேயர் நியமனத்தைப் பற்றியும், அதே நேரத்தில் இந்த
கார்ப்பரேஷன் காலம் எத்தனை வருஷம் என்பதைப் பற்றியும்
உயர்திரு. சட்டநாதன் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு
சொல்லியிருக்கிறது. எந்தக் குழு சொல்லியிருந்தாலும் அதை
அப்படியே எந்த அரசும் ஏற்றுக் கொள்வதில்லை என்பது நமக்குத்
தெரியும். குழு சொல்வதைக் கூட்டுவதும், குறைப்பதும், ஏற்றுக்
கொள்வதும் மாற்றிக் கொள்வதும் அந்தந்த அரசாங்கத்தின்
விருப்பத்திற்கேற்பச் செய்து கொள்வார்கள்.

ஏற்கனவே நகரசபையாக இருந்தாலும் சரி அல்லது பஞ்
சாயத்து யூனியனாக இருந்தாலும் சரி அல்லது கார்ப்பரேஷனாக
இருந்தாலும் சரி பதவிக் காலம் 3 வருஷமாக இருந்தது 5 வருஷ
மாகியிருக்கிறது. அதன் பிறகு இப்போது 6 வருஷம் ஆக்கப்
பட்டிருக்கிறது என்று சொல்லும்போது இந்தச் சட்டசபை
காலம் கூட 6 வருஷம் என்று ஆளுநர் காலத்தில் ஆக்கப்பட்டது
5 வருஷமாக மாற்றி திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது ; இந்த
நிலைமையில் மறுபடியும் கார்ப்பரேஷனுக்கு 6 வருஷம் என்று
சொல்வது சரியல்ல.

ஒவ்வொரு மேயரும் 2 வருஷம் பதவி வகிப்பார்கள் என்பதால்
6 வருஷம் என்று சொல்கிறார்கள். சட்டநாதன் குழுவில் மேயர்
பதவி காலம் $2\frac{1}{2}$ வருஷம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது
$2\frac{1}{2}$ வருஷமாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எப்படி இருந்தா
லும் சரி, கார்ப்பரேஷன் காலத்தை 6 வருஷமாக ஆக்கினால்
அது மேலும் சிக்கலை உண்டாக்கும். ஏனென்றால் அதைப்போல
சட்டசபைக்கு 6 வருஷம், பஞ்சாயத்து யூனியனுக்கு 6 வருஷம்,
நகரசபைக்கு 6 வருஷம் ஆக்க வேண்டுமென்ற சூழ்நிலை ஏற்படக்
கூடும். ஆகவே, கார்ப்பரேஷன் பதவிக் காலம் 6 வருஷம்
என்பது நிச்சயமாக கூடாது ; இப்போது இருக்கிற 5 வருஷமே
போதுமானது. $2\frac{1}{2}$ வருஷத்திற்கு ஒரு மேயர் என்ற முறையிலே
5 வருஷ காலத்தில் இரண்டு மேயர்கள் இருந்தாலும் போது
மானது. ஆகவே, கார்ப்பரேஷன் பதவிக் காலம் 5 ஆண்டுக்கு
மேல் போகக் கூடாது.

அடுத்து, 5 பெண் உறுப்பினர்கள், 5 அரிசன உறுப்பினர்கள்
அதில் உறுப்பினர்களாக இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்
டிருக்கிறது. இப்போதே நடைமுறையில் நகரசபைத் தேர்தலில்
அரிசன மக்களுக்கு தனி வார்டு பிரிக்கப்பட்டு, தேர்தலிலே
அவர்கள் போட்டியிட்டு வருகிறார்கள்.

அதேபோல் செய்து இருக்கலாம்.
கலாம். அது ஏன் பிறப்பிக்கப்படவில்லை என்பது நமக்குத்
தெரியாது. அதற்கான காரணம் சொல்ல வேண்டும். ஆகவே
3 பேர், 5 பேர் என்கிற அளவு வருகிறது. அதைப் பிறப்பித்திருக்
செய்யுங்கள். ஆனால் அதே நேரத்தில் ஒன்றை அரசின் கவனத்
திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதைத் தாராளமாகச்

1978 செப்டம்பர் 12] [திரு. வி. கே. கோதண்டராமன்]

அந்த நகர சுத்தி தொழிலாளி இருக்கின்றானே தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தாழ்த்தப்பட்டவனாக, அவனும் தேர்தலிலே பங்கு எடுக்கக் கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்யவேண்டும், ஸ்தல ஸ்தாபனங்களிலே தேர்தல் வரக்கூடிய காலங்களிலே அந்த நகரசுத்தித் தொழிலாளி லீவு போட்டுவிட்டு வரக்கூடிய அளவுக்குஅனுமதிக்க வேண்டும். அந்த நேரத்திலே லீவு போட்டுவிட்டு வந்து தாராளமாகப் போட்டியிட வேண்டும். அவனும் மேயராக வரட்டுமே, சேர்மனாக வரட்டுமே. உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட மக்களுக்குத்தான் இந்த அரசு என்று சொல்லப்படுகின்ற நிலையில் இதனைச் செய்ய வேண்டும். அந்தச் சுகாதாரத் தொழிலாளர்கள் மிகவும் முக்கியமானவர்கள். கார்ப்பரேஷனின் அடிப்படையானதொரு பிரச்சினை சுகாதாரமாகும். அந்தச் சுகாதாரத்தைப் பாதுகாக்கக்கூடிய தொழிலாளியினுடைய பிரச்சினைகளில் பல ஆண்டுக் காலமாக பேச்சு வார்த்தை நடந்து வருகின்றது. பல கோரிக்கைகள் இருக்கின்றன. இவைகளைப் பற்றி சுகாதார அமைச்சர் அவர்களிடமே சொல்லப் பட்டிருக்கின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலேயும் சொல்லப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட இலாக்கா விசாரிக்க வேண்டும். லேபர் கமிஷனர் விசாரிக்க வேண்டும். மற்ற இலாக்காக்களைச் சேர்ந்தவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள். ஆனால் சுகாதார இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் அதைக் கொஞ்சம் கூட சட்டை செய்யாமல் இருந்துவிட்டார்கள். அதன் காரணமாக இன்றையதினம் அவர்களுடைய அடிப்படையான கோரிக்கைகளை முன் வைத்து 18-ம் தேதி சி.டி.யூ. மற்றும் ஏ.டி.யூ. ஆகிய இரண்டு பேரும் சேர்ந்து வேலை நிறுத்தம் செய்யப் போகின்ற அளவுக்கு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. போராடினால்தான் பிரச்சினை தீரும், போராட்டத்திலே இறங்கினால்தான் நமது பலம் அவர்களுக்குத் தெரியும், அதைப் பார்த்த பிறகு அரசு கவனம் செலுத்தும் என்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே அந்தத் தொழிலாளர்களின் பிரச்சினையைப் பொறுத்த மட்டிலே உரிய கவனம் செலுத்த வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொண்டு இந்த இரண்டு திருத்த மசோதாக்களையும் ஆதரித்து என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மதுரை கார்ப்ப
ரேஷன் சென்னை கார்ப்பரேஷன் பற்றிய திருத்த மசோதாக்
கள் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கார்ப்பரேஷ
னில் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயரும் துணை மேயரும் இல்லாத
நிலையில் கலெக்டர் தலைமை வகிக்க வேண்டும் என்று ஏற்பாடு
செய்கின்ற இந்த மசோதா உண்மையிலேயே வரவேற்கத்தக்க
தல்ல.

இப்போது வளர்ச்சி மன்றங்களுக்கு கலெக்டர்கள் தலைமை வகிக்கிறார்கள். அந்த முறை கூட இல்லாத நிலை ஏற்படவேண்டும் என்று பெரும்பாலானோர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கலெக்டர் தலைமை வகிக்கக் கூடாது, தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட
மன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தான் தலைமை
வகிக்க வேண்டும் என்ற நிலை வேண்டும் என்கின்ற போது
ஏற்கனவே இருந்த மேயர், துணை மேயர் என்ற நிலைமையை
மாற்றி .கலெக்டர் தலைமை வகிக்கின்ற நிலையை உருவாக்குவது
நிச்சயமாக ஜனநாயகத்துக்கு முரண்பட்டது என்பதைக்
கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து Sec. 40-A லே "District Collector to perform functions
of a Mayor" என்று இருக்கிறது. இது ஒரு லேகுனா. கடைசியில்
"Until a new Mayor is elected or the Mayor returns to the City or
recovers from his incapacity, as the case may be." என்று இருக்
கிறது.

[பிற்பகல் 12-50].

மேயர் அல்லது டெப்டி மேயர் இரண்டு பேர்களும் இல்லா
மலிருக்கிற சூழ்நிலையில் கலெக்டர் தலைமை வகிப்பதற்குள்ள ஏற்
பாடு இருக்கிறது.

"Until a new Mayor is elected or the Mayor returns to the City
or recovers from his incapacity, as the case may be." என்றிருக்
கிறது.

I would like to know what is the provision when Mayor is
absent but the Deputy Mayor returns from his illness or absence.

இந்தக் கிளாஸைப் பார்க்கிறபோது மேயர் அல்லது டெப்டி
மேயர் இல்லாமலிருந்து பிறகு டெப்டி மேயர் வந்து விட்டார்
என்று சொன்னால் கூட கலெக்டர்தான் தலைமை வகிக்க வேண்டிய
நிலைமை ஏற்படக் கூடும். ஆகவே, Until a new Mayor is
elected or the Mayor or the Deputy Mayor returns to
the City or recovers from his incapacity as the case may be
என்று திருத்திக் கொண்டால் முறையாக இருக்கும். இல்லை
யென்றால் டெப்டி மேயர் வந்தாலும் கலெக்டரே தலைமை
வகிக்கக் கூடிய நிலை உருவாகும். ஆகவே Sec. 40-A கடைசி லைனில்,
"or the Mayor returns" என்பதோடு "or the Mayor or the Deputy
Mayor returns" என்று சேர்த்துக் கொண்டால் குழப்படி நீங்கும்.

அடுத்து. சட்ட நாதன் அறிக்கைபடி இரண்டரை ஆண்டுக்
காலம் ஒரு மேயர் பதவிக் காலம் என்றிருக்கிறது. ஆனால் இப்
போது திருத்தப்பட்டுள்ள இந்த சட்டத்தில் கார்ப்பரேஷன் ஆயுள்
காலம் ஐந்தாண்டுகளிலிருந்து ஆறு ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டி
ருக்கிறது. ஏற்கனவே சென்ற நெருக்கடி காலத்தில் சட்டமன்றங்
கள், பாராளுமன்றம் இவற்றிற்கு ஆயுட்காலம் 5 ஆண்டுகள்
என்றிருந்ததை 6 ஆண்டுகள் என்று செய்ததை மாற்றி இப்
போது பாராளுமன்றத்தில் அரசியல் சட்டம் திருத்தியமைக்கப்
பட்டிருப்பதை நாம் அறிவோம். ஆகவே, 6 வருடங்கள் என்பதை

5 வருடங்கள் என்று மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிற
இந்த சூழ்நிலை ஆறு ஆண்டுகளுக்கு வாக்களித்தவர்கள் கூட
மன்றத்தில் இந்த மசோதா மீது கருத்துக்கள் தெரிவிக்கையில்
ஐந்தாண்டுகள் என்றுதான் இருக்க வேண்டும் என்று இந்திரா
காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூடக் கூறுகிறார்கள்.
அந்தளவிற்கு அவர்களுக்கு ஜனநாயகத்தில் இப்போது நம்
பிக்கை வந்திருக்கிறது. அந்தச் சூழ்நிலையில் நிச்சயமாக நம்
அரசு அந்த ஆறு ஆண்டுகள் என்பதை மாற்றி ஐந்தாண்டுகள்
என்று அமைத்து ஒரு மேயரின் பதவிக் காலம் இரண்டு ஆண்டு
கள் என்றிருப்பதற்குப் பதிலாக இரண்டரை ஆண்டுகள் என்று
வைத்து, ஐந்தாண்டுகளில் இரண்டு மேயர்களின் பதவிக் கால
இருக்கும் வகையில் மாற்றுவது முறையாக இருக்கும். ஆகவே
இரண்டாண்டுகள் என்பதை இரண்டரை ஆண்டுகள் என்றும்,
ஆறு ஆண்டுகள் என்பதற்குப் பதிலாக ஐந்து ஆண்டுகள் என்றும்
மாற்றியமைப்பது நலமாயிருக்கும் என்று என் கருத்தைக் கூறிக்
கொள்ள விரும்புகிறேன்.

திரு எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, சென்னை மாநக
ராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவின்மீது
நான் என் கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.
நாமெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்ட அன்றிருந்த சட்டநிலையில்
ஆறு ஆண்டுகளுக்கு என்று தேர்ந்தெடுக்கப்பட்டும் இன்று சட்ட
மன்ற உறுப்பினர்களாக வந்திருக்கிறோம் என்று சொன்னால்,
தேர்ந்தெடுக்கும்போது ஆறு ஆண்டுகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்
பட்டோம். ஆனால் ஆறு ஆண்டுகளுக்கு என்று தேர்ந்தெடுக்கப்
பட்ட நாமே ஆறு ஆண்டுகள் இருக்கக் கூடாது, ஐந்தாண்டுகள்
தான் இருக்க வேண்டும் என்று பாராளுமன்றத்தில் ஒரு திருத்தம்
கொண்டுவரப்பட்டு, அரசியல் சட்ட ரீதியாக ஐந்தாண்டுகள்
என்று குறைக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிற
இந்த நேரத்தில் மக்களைக் கேட்காமலேயே இப்படிப்பட்ட
மன்றங்களின் ஆயுட் காலத்தை ஆறு ஆண்டுகள் என்று உயர்த்திக்
கொண்டு போவது எந்தளவிற்கு ஜனநாயகத்தைக் காக்கும் என்
பதை இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். சட்ட மன்றங்கள், பாராளுமன்றம்
இவற்றின் பதவிக் காலத்தை ஐந்து ஆண்டுகள் என்று நிர்ணயித்
திருக்கும்போது நாம் மாநகராட்சி மன்றங்கள் நகராட்சி மன்றங்
கள் இவற்றின் பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகள் என்று செய்வது
அவ்வளவு நல்லதல்ல. மக்கள் ஒப்புதல் பெறாமல் இவ்வளவு
பெரிய மாறுதலைக் கொண்டுவருவது அரசுக்கு நல்லதல்ல. ஜன
நாயகத்திற்கும் நல்லதல்ல என்ற வகையில் இது ஐந்தாண்டுகள்
ஆகத்தான் இருக்க வேண்டும் என்ற என் எண்ணத்தைச் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். அதோடு, இன்று மேயர் அல்லது உதவி
மேயர் இல்லாதபோது கலெக்டர் மேயராக பணியாற்றலாம் என்
றிருக்கிறது. இன்னொன்று, கலெக்டர் எக்ஸ்-அபிஷியோ மெம்ப
ராக இருப்பார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. தேர்ந்
தெடுக்கப்பட்ட ஒரு அமைப்பில் கலக்டர் எக்ஸ்-அபிசியோ மெம்ப

ராக கொண்டுவரப்படுவார்கள் என்று சொன்னால் இதில் இருக்கிற
உள்நோக்கம் என்ன, இது ஜனநாயகத்தைக் காப்பாற்றுகிற
செயலா என்பதை அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

By virtue of his being an ex-office member he becomes
Mayor for a specific period. என்ற வகையில் போட்டிருக்கிறோம்.
ஆனால் கலெக்டர் என்ற முறையில் அவர் மேயராகிறாரா அல்லது
கலெக்டர் எக்ஸ்-அபிஷியோ மெம்பரான பிறகு அவர் மேயராகி
றாரா? அப்படி மேயர் பணியைத் தொடர்ந்து செய்யும்போது,
ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு மேயர் தேர்ந்தெடுக்கப்
படும்போது அல்லது மேயர் தம் டணிக்கு மீண்டும் வந்து சேர்ந்
தால் அல்லது டெப்டி மேயர் தம் பணிக்கு மீண்டும் வந்து சேர்ந்
தால் கலெக்டரின் நிலை என்ன? அவர், எக்ஸ்-அபிஷியோ மெம்ப
ராக தொடருகிறாரா என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிய
வில்லை.

தேர்தல் நடத்தப்பட்டு ஜனநாயக அமைப்பில், இயங்கி
வருகின்ற அமைப்பில், இப்படி எக்ஸ்-அபிஷியோ மெம்பர் என்று
போட்டிருப்பது அரசியல் ரீதியாக எடுக்கப்பட்டிருக்கின்ற
முடிவு தான் என்று எண்ண வேண்டியிருக்கிறது. இத்தகைய
பலப் பரீட்சைகளை ஜனநாயகத்திற்கு ஏற்படுத்தக் கூடாது என்று
கேட்டுக்கொள்ளவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.
இந்த ப்ரொவிஷனை உடனடியாகத் திருத்த வேண்டும். கலெக்டர்
போன்ற அதிகாரிகளுக்கு இப்பேர்ப்பட்ட அதிகாரங்களைத் தரக்
கூடாது. மேயர், துணை மேயர் இல்லாவிட்டால், இருக்கின்ற
உறுப்பினர்களிலேயே குறிப்பிட்ட காலத்திற்கு ஒருவரை
மேயராகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

பொதுவாக கம்யூனல் ரொட்டேஷனில் மேயர் பதவி
வருகின்ற நேரத்தில், எல்லாச் சமுதாயத்தினருக்கும் ஒவ்வொரு
ஆண்டுக்கு இந்த முறை கிடைத்து வருகிறது. அதையும் இரண்டு
ஆண்டுகள் என்று மாற்றுவதால் எல்லாச் சமுதாயத்தினருக்கும்
இந்த வாய்ப்புக் கிடைக்க முடியாமல் போகும். ஆகவே ஓராண்டு
என்ற முறையில், ஐந்து ஆண்டுகளில் ஐந்து மேயர்கள் என்று
வருவதற்குப் பதிலாக இரண்டு ஆண்டுகள் என்று கொண்டுவந்து
ஆறு ஆண்டுகளில் மூன்று மேயர்கள் என்று கொண்டு வருவதால்
பல வகுப்பினர்களுக்கும் இந்த வாய்ப்புக் கிடைக்காமல் போகும்
என்பதைச் சொல்லிக்கொள்வதோடு, இப்போது சென்னையில்
இருப்பது போலவே, ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒவ்வொரு மேயர்
என்ற முறை மதுரைக்கும் இருக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

(3) ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி

(ஆ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப்பெற்றது குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, இதை நான்
ஒரு ஒழுங்குப் பிரச்னையாகக் கூட எழுப்ப விரும்புகிறேன். ஒரு
வார காலத்திற்குள் மூன்றாவது முறையாக இப்படிப்பட்ட சம்ப
வம் நடக்கிறது. இப்படித் தொடர்ந்து நடந்து கொண்டிருப்பது
நம்முடைய சபையின் ஒழுங்கு முறையை எங்கு கொண்டு போய்
விடும் என்பதை நாம் ஆலோசனை செய்தாகவேண்டும். இப்படிப்
பட்டவர்களுக்கு யார் அனுமதிச் சீட்டு கொடுக்கிறார்கள் என்பதை
யும் தாங்கள் அறிவிக்க வேண்டும். அப்படி அறிவிப்பதின் மூல
மாக மேலும் ஜாக்கிரதையாக இருப்பதற்கு வழிகோலுவதாக
அமையும். இப்படிப்பட்டவர்களுக்கு இரண்டு நாட்கள், மூன்று
நாட்கள் என்று தண்டனை அளிக்கப்பட்டும் ஏன் இப்படி நடந்து
கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை. ஆகவே இதன் மீது
உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் அவர்க
ளுடைய உணர்வை நானும் உணர்கிறேன். அனுமதிச் சீட்டுக்கு
கையொப்பம் இடுகின்ற உறுப்பினர்கள் தாங்களாகவே தங்க
ளுடைய பொறுப்புகளை உணர்ந்திருக்கிறார்கள். தாங்கள் அனு
மதிச் சீட்டு வழங்குபவர்களுக்குப் பொறுப்பேற்றுதான் கை
யொப்பம் இடுகிறார்கள். இதையெல்லாம் தெரிந்து தான் உறுப்
பினர்கள் கையொப்பம் இடுகின்றார்கள். ஆகவே இனிமேலாவது
கையொப்பம் இடுகின்றவர்கள் இதையெல்லாம் கருத்தில்
கொண்டு பொறுப்போடு கையொப்பம் இடுவார்களேயானால்
இப்படிப்பட்ட பிரச்னை வராது. ஏற்கனவே இதற்காக
தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது, எல்லா எதிர்க்கட்சித்
தலைவர்களும், இவ்வளவு பெரிய தண்டனை வேண்டுமா
என்றெல்லாம் கேட்டார்கள். திரு. உமாநாத் அவர்கள் உட்பட
எல்லோரும் கேட்டார்கள். ஆகவே இதையெல்லாம் ஆலோசித்து
நீங்கள் எல்லோரும்தான் ஒரு முடிவு எடுத்து, இந்த அவைக்குப்
பாதுகாப்பு தரவேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப் : மேலும் காகிதம் எதுவும் பார்வை
யாளர்கள் கொண்டுவரக் கூடாது என்று செக்யூரிட்டியில் இருப்ப
வர்கள் சோதனை செய்து அனுப்ப வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சோதனை செய்துதான்
அனுப்புகிறார்கள். இன்று காலையில் கூட இப்படி சோதனை
போட்டதில் மூன்று பேர்களிடம் இப்படிப்பட்ட காகிதம் இருந்த
தற்காக அவர்களை வெளியே அனுப்பிவிட்டார்கள். அதையும்
மீறித்தான் இந்தப் பிரச்னை வந்திருக்கிறது. கூடுமானவரை
எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.

(10) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(ஈ) 1978-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு—தொடர்ச்சி.

திரு. எம். ஏ. லத்தீப் : அடுத்ததாக கோ-ஆப்ட்ஸ் செய்யப்படுகின்ற மெம்பர்களைப்பற்றிக் குறிப்பிடுவதாக இருந்தால், இவர்களுடைய எண்ணிக்கை உயர்த்தப்படுகிறது. அதுவும் எப்போது உயர்த்தப்படுகிறது. மதுரையில் தேர்தல் நடக்கிறது. அப்போது போய் கோப்.ஆப்ட் மெம்பர்களின் எண்ணிக்கையை உயர்த்துகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஏனென்றால் தாங்கள் மதுரை தேர்தலில் வெற்றியடையமாட்டோம். அப்படி வந்தால் கோ-ஆப்ட் செய்யப்படுகின்ற மெம்பர்களின் உதவியோடு, மெஜாரிட்டியோடு இருக்கலாம் என்ற எண்ணத்தோடுதான் இதைக் கொண்டு வந்தார்கள் என்று சொன்னால் என்ன தவறு?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மேயர் தேர்தலுக்குப் பிறகுதான் இப்படி .விரும்பிச் சேர்த்துக்கொள்ளப்படும் உறுப்பினர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்

(பிற்பகல் 1-00)

திரு. எம். ஏ. லத்தீப் : மதுரைத் தேர்தலுக்கு முன்னாலே அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்கவில்லையா? அப்படி மதுரைத் தேர்தலுக்கு முன்னாலே அவசரச் சட்டம் பிறப்பிக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கோ-ஆப்ட் செய்வதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மேயர் தேர்தலுக்குப் பிறகுதான் அவர்கள் அப்படிச் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : மேயர் தேர்தல் முடிந்த பிறகு கோ-ஆப்ட் செய்வது என்பது ஒரு விஷயம். ஆனால், அவசர அவசரமாக, தேர்தலுக்கு முன்னால் அவசரச் சட்டம் பிறப்பிக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதை அரசாங்கம் தெளிவாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தேர்தல் நடக்கும் போது, அரசு ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்ததாக இருந்தாலும், அரசுக்குத் தேர்தலை நடத்துகின்ற ஒரு பொறுப்பு இருக்கிறது. அந்த உணர்விலே அரசாங்கம் செயல்பட வேண்டும். ஆனால், அப்படியில்லாமல் தேர்தல் நடப்பதற்கு முன்னாலேயே அமைச்சர் அவர்கள் அங்கு சென்று உட்கார்ந்து கொண்டு, தனக்குக் கீழே தன்னால் நியமிக்கப்படுகின்ற அதிகாரிகளை வைத்துக்கொண்டு தேர்தல் நடத்துவது ஒரு நல்ல ஜனநாயக முறையா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று என்னுடைய மதிப்பிற்குரிய

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மதுரைத் தேர்தல் நடைபெறுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே, உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் மதுரையிலே உட்கார்ந்து கொண்டு கலெக்டர், கமிஷனர் ஆகியவர்களை . . . .

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நகராட்சி சட்டத் திருத்தத்தைப் பற்றிப் பேசுகின்ற உறுப்பினர் வழிதவறிச் செல்வதாகக் கருதுகிறேன். இந்தக் குற்றச்சாட்டுக்கு ஏற்கனவே நான் பதில் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும், இப்போது பேசுகின்ற நேரத்திலும் இதற்கு பதிலளிக்கும்போது விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அளவோடு முடித்து விடுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : இதையெல்லாம் முடித்து விட வேண்டுமென்றுதான் நானும் சொல்கிறேன். மதுரை நகராட்சித் தேர்தல் நடக்கும்போது, சுமார் 30, 40 ஆயிரம் கள்ள நோட்டுகள் போடப்பட்டிருக்கின்றன. வெளியேயிருந்து ஆட்கள் கொண்டு வரப்பட்டு, இப்படி கள்ள நோட்டுகள் போடப்பட்டிருக்கின்றன. (சிரிப்பு) முதலிலே நோட்டுகள் வேலை செய்தது பின்னாலே வோட்டு. . . . .

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த இரண்டு சட்டத் திருத்தங்களின் மூலம் தங்களுடைய மேலான கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள்.

திரு. மு. அரங்கநாதன் : இரண்டு திருத்தங்கள்மீது அல்ல. மதுரை நகராட்சியைப் பற்றியது மட்டும். இரண்டையும் சேர்த்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னோம். ஆனால் திரு. சுப்பு அவர்கள். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என் கவனத்திற்கு கொண்டு வந்தால் மட்டும் போதும். உங்களுக்குப் பேசுகின்ற வாய்ப்பு போய்விடாது. தாங்கள் இப்போது மதுரை நகராட்சியைப் பற்றிப் பேசவேண்டும். சென்னை மாநகராட்சி பற்றி திரு. சுப்பு அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அதையொட்டி அவர்கள் 5 நிமிட நேரம் பேசுவார்கள். எனவே, அந்த மசோதா தனியாக எடுத்துக்கொள்ளப்படும். இப்போது மதுரையைப் பற்றிப் பேசுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : எங்கள் கட்சியில் இன்னும் திரு. சிவசாமி பேசவில்லை.

[திரு. கா. காளிமுத்து] [1978 செப்டம்பர் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருக்கும் அடுத்து, இதந்
'பில்'லிலேயே பேச வாய்ப்புத் தருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே,
மதுரை நகராட்சி சட்டத் திருத்தங்களைப் பொறுத்தவரையில்
அரிசன பழங்குடியினர், அரிசன மகளிர் 5 பேர்களை சேர்த்துக்
கொள்வது என்று செய்யப்படுகின்ற திருத்தம். மேயர், துணை
மேயர் பொறுப்பு வகிக்காத நேரத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர்
பொறுப்பு வகிக்க வேண்டும் என்பது. இந்த இரண்டு திருத்தங்
களின் மூலம் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்
திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்
ஜேம்ஸ் அவர்களும், மாண்புமிகு சுப்பு அவர்களும், இதற்குப்
பின்னாலே வரக்கூடிய சட்ட திருத்தத்தைப் பற்றியும் தங்கள்
கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆறு ஆண்டுகளாக ஆக்கு
வது என்பது ஜனநாயகத்திற்குப் புறம்பானது என்கிற அவர்களது
உணர்வினை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

நான் இங்கே குறிப்பாகச் சொல்ல விரும்புவது, உள்ளாட்சி
அமைப்பு என்பது சட்ட மன்றங்கள், பாராளுமன்றத்தைப்
போல் கொள்கைகளை வகுக்கும் அமைப்புகள் அல்ல என்பதையும்,
சட்டங்களை உருவாக்குகின்ற அமைப்புகள் அல்ல என்பதையும்
மக்களுடைய அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அவர்
களுக்குத் தேவையான பணிகளை நிறைவேற்றுவதற்கு செயல்படக்
கூடிய அமைப்புகள் என்பதையும் நாம் அனைவரும் தெளிவாக
அறிவோம். அந்த வகையில் ஓராண்டு காலம் மட்டுமே மேயர்
பதவியில் இருப்பதால், பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு
அல்லது பணிகளை முழுமையாகச் செய்வதற்கு வழி வகுக்காது
என்ற வகையிலேதான் சட்டநாதன் குழு தமது அறிக்கையிலே
2½ ஆண்டு காலம் பதவி வகிக்கலாம் என்று பரிந்துரை தந்திருக்
கிறார்கள்.

அந்தக் குழுவின் அறிக்கையிலே உள்ள பரிந்துரைகள் எல்லா
வற்றையும் நிறைவேற்றுவீர்களா என்று மாண்புமிகு உறுப்பினர்
கள் கேட்கலாம். திரு. கோதண்டராமன் அவர்கள் குறிப்பிட்டுச்
சொன்னதைப்போல், ஒரு குழு தருகின்ற பரிந்துரைகள் அப்
படியே எழுத்துக்கு எழுத்து, அட்சரத்திற்கு அட்சரம் நிறை
வேற்ற முடியும் என்று யாரும் நிச்சயமாகக் கருதமாட்டார்கள்.
ஆனால், சட்டநாதன் குழு கோடிட்டுக் காட்டியுள்ள அந்த உணர்
வினை இந்த அரசு புரிந்து கொண்டிருக்கிறது. ஓராண்டுக் காலத்
திலே மேயர் முழுமையான பொறுப்பை, கடமையை நிறைவேற்ற
இயலாது.

ஆகவேதான் இரண்டாண்டுக் காலமாவது இருக்க வேண்டு
மென்ற வகையிலேதான் இந்தத் திருத்தம் செய்யப்பட்டிருக்
கிறதே தவிர, வேறு எந்த வகையான நோக்கமும் அல்ல. இது
இரண்டு மாநகராட்சிகளுக்கும் செய்யப்பட்ட சட்டத் திருத்தம்
என்பதை அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

1978 செப்டம்பர் 12] [திரு. கா. காளிமுத்து]

கலெக்டர் அவர்கள் பொறுப்பு வகிப்பது எப்படி ஜன
நாயகம் ஆகும் என்று திரு. லத்தீப் அவர்கள் கேட்டார்கள்.
மாவட்ட ஆட்சித் தலைவர், மேயர், துணை மேயர் தேர்தலை நடத்து
கிற வகையில் பொறுப்பு ஏற்கிறாரே தவிர, மற்றபடி
அவர் அந்தப் பீடத்தில் அமர்ந்து நிர்வாகம் செலுத்த வேண்டு
மென்ற அடிப்படையில் அல்ல. ஜனநாயகத்தை நாம் எந்
நிலையிலும் காப்பாற்ற தேர்தலை முறையாக நடத்தி தவிர்க்க
முடியாத சூழ்நிலை ஏற்பட்டு மேயர், துணை மேயர் இருவரும்
இல்லாத நிலையில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்ற கால
அவகாசத்தில், இடைவெளியில் பொறுப்புக்களை நிறைவேற்றும்
பயன்பட வேண்டுமென்ற வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர்
பதவி வகிக்கிறார். இது நல்ல நோக்கத்தோடு, தூய நோக்கத்
தோடு செய்யப்படுகிற சட்டத் திருத்தங்கள் ஆகும்.

பெண்கள், தாய்மார்கள் மாமன்றத்தில் உறுப்பினர்களாக
இருப்பதற்கு அதிக முக்கியத்துவம் இருக்க வேண்டும். அரசியல்
கட்சிகளின் சார்பாக நின்று வெற்றிபெற முடியாத நிலை ஏற்
பட்டாலும், நிறுத்தப்படுகிற வாய்ப்பே பெறாவிட்டாலும் அவர்
களை விரும்பி சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய நிலைமை இருக்க
வேண்டுமென்றுதான் அவர்களில் ஐந்து பேர்களைச் சேர்த்துக்
கொள்ள வேண்டுமென்று திருத்தம் சேர்க்கப்பட்டிருக்கிறது.
மேலும் அரிசனப் பெருமக்கள் 5 பேராவது இருக்க வேண்டுமென்ற
வகையில் திருத்தம் வகை செய்கிறது. ஆகவே, மன்ற
உறுப்பினர்கள் இதனை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் ஏற்கனவே எடுத்துச் சொன்னேன்.
கிளாஸ் 40-ஏல் ஆங்கிலத்தில் இருக்கிற பில்லில்—

'until a new Mayor is elected or the Mayor returns to the City or
recovers from his incapacity. as the case may be'

I would like to know from the Hon. Min ster what will be
the posit on if the Deputy Mayor returns. In case when the
Mayor and the Deputy Mayor, both are absent, the Collector
w ll be n charge Suppose, if the Deputy/Mayor returns first,
will the Deputy Mayor take charge of the Corporation, or the
Collector will continue even when the Deputy Mayor has come
back.

அதற்கு ப்ரொவிஷன் இல்லை.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மேயர், துணை மேயர்
பொறுப்பில் இல்லாதபோது என்று மேலேயே குறிப்பிட்டிருக்
கிறது. அதை மீண்டும் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம்
இல்லையென்று சொல்லவில்லை.

[1978 செப்டம்பர் 12

திரு. எம். ஏ. லத்தீப் : காலம் என்று ஒரு காலத்தைக் குறிப்பிட வேண்டும். வெகு காலத்திற்கு வராமல் இருக்க லாம். எவ்வளவு காலத்திற்கு கலெக்டர் அவர்கள் மேய ராகப் பணியாற்றலாம் என்று காலத்தைக் குறிப்பிட வேண் டும்.

until such time-not more than two months-not more than three months

என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : 15 நாட்களுக்கு மேற் பட்டு தொடர்ந்தாற் போல் இல்லாத வகையில் என்று சொல் லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட வாய்ப்பு இல்லை. தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்கள் ஏற்படும்போது அந்தச் சட்ட விதிகள் பொருந்தும்.

* திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மேயர், டெபுடி மேயர்—

absent or incapacitated

என்று சொல்லியிருக்கிறார்கள். மேயரும், டெபுடி மேயரும் செயல்பட முடியாத நிலை ஏற்பட்டால் குறிப்பிட்ட கால அளவுக்குள் மேயர், டெபுடி மேயர் தேர்தல் நடை பெற வேண்டு மென்று நண்பர்கள் கேட்கிறார்கள். கலெக்டர் இன்டெப ணிட்டாக அந்தப் பொறுப்பில் இருக்கக் கூடாது. பத்துப் பதினைந்து நாட்கள்தான் இருக்க வேண்டுமென்பதை மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் கொள்கை அளவிலாவது ஒப்புக் கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : கொள்கை அளவில் ஒப்புக் கொள்கிறேன். அதற்கேற்ற வகையில் பின்னால் சட் டத் திருத்தம் செய்ய வேண்டுமென்றாலும் செய்து கொள்ள லாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சட்டத்தை உருவாக்கக் கூடிய சட்டப் பேரவை, பாராளுமன்றம் என்ற அடிப்படையில் ஐந்து வருஷம் என்று ஆக்கப்பட்டது என்று கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆகவே, சட்டத்தை உரு வாக்காததால் அவற்றுக்கு ஆறு வருஷம் இருக்கட்டும் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். நகரசபைகள், பஞ்சா யத்து யூனியன்கள் சட்டத்தை உருவாக்கவில்லை. சட்டத்தை உருவாக்குகின்ற நமக்கு 5 வருஷம் ; இந்தக் குப்பைத் தொட்டி முனிசிபாலிடி, கார்ப்பரேஷன், பஞ்சாயத்து யூனியன்களுக்கு

6 வருஷம். இது களங்கத்தை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு சூழ்நிலைகள் ஏற்படாதா என்று சிந்தித்துப் பார்த்து ஏற் கனவே காபினெட் முடிவுக்கு வந்திருந்தாலும் மீண்டும் மறு பரிசீலனை செய்து சரியான முடிவுக்கு வருவார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

[பிற்பகல் 1-10]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதிலே நகரவைத் தலைவர் தொடர்ந்தாற்போல் 5 ஆண்டு களுக்குத் தலைவராக இருக்கலாம், இதிலே மேயராக இரண் டாண்டுக் காலத்திற்கு இருக்க முடியாது, ஆகவே தான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருகிறோம்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மேயர், டெபுடி மேயர் ராஜினாமா செய்துவிட்டால், இப்போது இருக்கிற

If the Mayor or Deputy Mayor is out of city or is incapacitated என்பதோடு or in case of resignat on என்பதையும் சேர்த்துக்கொண்டால் நல்லதாக இருக்கும்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதைச் சேர்த்துக் கொள்வதிலே ஆட்சேபனையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"1978 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன் வடிவு எண் 28/1978) ஆய்வுக்கு . எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

[1978 செப்டம்பர் 12

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே,
" 1978 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த)
சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்
வடிவு எண் 28/1978) சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற
வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட
முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

**(உ) 1978 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மதுரை மாநக
ராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச்
சட்ட முன்வடிவு எண் 29/1978).**

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்
மானத்தை முன்மொழிகிறேன் :

" 1978 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 26 ஆம் நாளன்று
ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1978 ஆம் ஆண்டு சென்னை
மாநகராட்சி மற்றும் மதுரை மாநகராட்சி (திருத்த) அவசரச்
சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 9/1978) இப்
பேரவை நிராகரிக்கின்றது ".

தீர்மானம் வழி மொழியைப்பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே,
கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

" 1978 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மதுரை மாநக
ராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவைச் சட்ட
முன்வடிவு எண் 29/1978) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற
வேண்டும். "

திரு. மு. அரங்கநாதன்: திரு. சுப்பு அவர்களுடைய
தீர்மானத்தை வழிமொழிந்து பேசுகிறேன். சென்னை மாநக
ராட்சியினுடைய 1919-ம் ஆண்டுச் சட்டத்தினுடைய 4-வது
சட்டத்தின் 6-பி பிரிவிலே திருத்தம் செய்கின்ற முறையிலே
திருத்தச் சட்டம் என்ற பெயரால் இங்கே கொண்டுவந்து
இருக்கிறார்கள். இப்போது சென்னை மாநகராட்சியினுடைய
ஆயுட்காலம் 5 ஆண்டுக் காலமாக இருக்கிறது. இந்த 5 ஆண்டுக்
காலத்தில், மேயருடைய பணியை ஒட்டி, மேயருக்கு வாய்ப்பு
அளிக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலே

* 1978, செப்டம்பர் 1-ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு
அரசிதழில் வெளியிட்டப்பெற்றுள்ளது.

1978 செப்டம்பர் 12] [திரு. கா. காளிமுத்து]

மேயரின் பதவிக் காலத்தை 2 ஆண்டு காலமாக ஆக்கவேண்டு
மென்ற திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். சட்ட
நாதன் குழு அறிக்கையிலே கொடுத்த சிபாரிசின் அடிப்படை
யிலே மேயரின் பதவிக் காலம் $2\frac{1}{2}$ ஆண்டுக் காலமாக இருக்க
வேண்டுமென்ற சிபாரிசை இவர்கள் மாற்றி 2 ஆண்டுக்
காலமாக கொண்டுவந்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக்
கழகத்தின் சார்பிலே நான் சொல்லிக்கொள்வேன், ஏற்கனவே
5 ஆண்டுக் காலம் என்பது முறையாக இருக்கிறது, 6 ஆண்டுக்
காலம் என்பது தேவையில்லை. சட்டங்களை இயற்றுகின்ற சட்ட
மன்றத்திற்கே 5 ஆண்டுக் காலம் என்று சொன்னால் சட்ட
மன்றத்திற்குட்பட்ட உள்ளாட்சித் துறைக்கு உட்பட்ட மாநக
ராட்சிக்கு 6 ஆண்டுக்காலம் கொடுப்பது ஒழுங்காக இல்லை என்
பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 5 ஆண்டுக் காலத்திற்கு
5 மேயர்கள் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது, 5 மேயர்கள்
குறிப்பாக, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்
வருவதற்கு வாய்ப்பு இருந்தது, ஒருமுறை உயர்ந்த வகுப்பைச்
சேர்ந்தவரும், ஒருமுறை வன்னியர் வகுப்பைச் சேந்தவரும்,
ஒருமுறை முஸ்லீம் வகுப்பைச் சேர்ந்தவரும் ஒரு முறை அரிசன
வகுப்பைச் சேர்ந்தவநம் வகுப்புவாரி அடிப்படையில் மேயர்
களாக வருவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன, அந்த
விதிகள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பெருமை தேடித்
தருவதாக இருக்கின்றன, அந்த வாய்ப்புக்களை மாற்றிவிடுவது
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இருக்கின்ற வாய்ப்புகளை இழக்
கின்ற நிலைமையை உருவாக்கிவிடும் என்பதால் நான் இதை
வன்மையாக எதிர்க்கிறேன்.

அடுத்தபடியாக, மேயரின் தேர்தல் முடிந்தவுடனே முதல்
கூட்டத்திலேயே நியமிக்கப்படும் நிலைக் குழுக்களுக்கான
தேதியை நிர்ணயிக்கும் வாய்ப்பு மேயர் தேர்தல் முடிந்த முதல்
கூட்டத்திலே அறிவிக்க வேண்டுமென்று இப்பொழுதிருக்கின்ற
சட்ட விதியிலே இருக்கிறது. அதை மாற்றி அரசு தெரிவிக்கும்
அந்தத் தேதியிலேதான் மேயர் அறிவிக்க வேண்டும், நிலைக் குழு
வின் தலைவராகத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு இருக்க வேண்டும்
என்று இந்தத் திருந்தச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது.
மாநில அரசுக்குக் கொடுக்க வேண்டிய உரிமைகளை மத்திய
அரசு பிடுங்கிக் கொண்டிருக்கிறது, எடுத்துக் கொண்டிருக்கிறது,
எனவே மாநிலத்திற்குச் சுயாட்சி தேவை என்று எல்லா மாநில
அரசுகளும், மக்களும் கூறிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்
திலே உள்ளாட்சித் துறையிலே ஏற்கனவே இருக்கின்ற அதி
காரத்தை, மாநில அரசின் அதிகாரத்தை மத்திய அரசு பறிப்
பதைப் போல, மாநில அரசு பறிப்பது வன்மையாகக் கண்டிக்
கத்தக்கது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்ற திருத்தங்களை
ஏற்றுக் கொள்ள முடியாத நிலையிலே இருக்கிறோம். அதுமட்டு
மல்லாமல் சட்டநாதன் குழு இரண்டரை ஆண்டுக் காலம் என்று

சொன்னதை நாங்கள் இரண்டாண்டுகளாக ஆக்கியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். சட்டநாதன் கமிட்டியை நியமித்த முறையே தவறு என்று நான் சொல்ல விரும்புகிறேன். மாநகராட்சியிலுள்ள நிலைகளைப்பற்றி ஆராய, நிர்வாகத்திலே உள்ள வேலைத் தன்மையைப் பற்றி ஆராய, மேலும் இப்பொழுது இடைக்காலத்திலே மாநகராட்சி கலைக்கப்பட்ட பிறகு இருக்கும் ஸ்தம்பித்த நிலையைப்போக்க, பெருநகர வளர்ச்சி அடிப்படையிலே விரிவுபடுத்தி சென்னை நகர மக்களுக்குப் பல்வேறு தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்ய என்று இப்படிப்பட்ட வகைகளிலே ஆய்ந்து அறிய வேண்டுமென்று நியமிக்கப்பட்ட குழு அது. ஆனால் அவைகளுக்காக நியமிக்கப்பட்ட அந்தக் குழு ஆலோசனைக் குழுவாக அல்லாமல் நீதி விசாரணைக் குழுவைப் போல, இந்த அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட அந்தக் குழுவின் அறிக்கை சட்ட மன்றத்தின் முன் வைக்கப்படுவதற்கு முன் சட்டநாதன் அவர்கள் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்து, திராவிட முன்னேற்றக் கழகம் தவறு செய்த காரணத்தினால் இந்த நிலையிலே இருக்கிறது என்று அறிக்கை விடுகிறார்கள். இந்த முறை வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும். அது அபிவிருத்திக்காக ஆலோசனை சொல்ல நியமிக்கப்பட்ட குழுவே தவிர என்ன தவறு நடந்திருக்கிறது என்று அறிக்கை விட்டு சித்தாப்பைக் காட்டிக் கொள்வதற்காக நியமிக்கப்பட்ட குழு அல்ல. இவ்வாறு அந்தக் குழு செய்தது கண்டிக்கத்தக்கதாகும்.

இரண்டாவதாக, சட்டநாதன் குழுவில் அமைக்கப்பட்ட சட்டநாதன் அவர்களுக்கு மாநகராட்சியைப் பற்றி ஒன்றும் தெரியாது. இந்த மாநகராட்சியின் நிர்வாகத்தைப் பற்றி தெரிந்து அறிந்து, பக்குவப்பட்ட முதிர்ந்த பெரும் தலைவர்கள் இங்கேயிருக்கிறார்கள். இப்படிச் சென்னை நகரத்திலே இருப்பவர்களைக் கொண்டு, மாநகரத்தை, வளர்ந்து வரும் சமுதாயத்திலே எந்த நிலைக்கு மாற்றியமைக்க வேண்டுமென்று குழுவை நியமிக்க வேண்டுமே தவிர, ஆளுங்கட்சி கட்சிக் கண்ணோட்டத்தோடு நடந்தது என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் சட்டநாதன் தலைவர். ஏற்கெனவே இருந்த மேயர் அப்துல் காதர் உறுப்பினர். அவர் இன்று ஆளுங்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்; ஆளுங்கட்சியைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினரை நியமித்திருப்பதைப் போல எதிர்க்கட்சியிலே இருக்கின்ற ஒருவரையும் நியமிக்கத் தவறிவிட்டார்கள். ஒருவர் மருத்துவ நிபுணர், இன்னொருவர் நிர்வாக நிபுணர், மற்றும் நகராட்சி நிர்வாகத்திலே இருந்த—மாநகராட்சி நிர்வாகத்திலே இருந்தவர் அல்ல—அவரைச் செயலாளராகப் போட்டிருக்கிறார்கள். நகராட்சி நிர்வாகத்தின் நிலைமை வேறு, மாநகராட்சி நிர்வாகத்தின் நிலைமை வேறு. நகராட்சியின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிலைமை வேறு, மாநகராட்சியிலே தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிலைமை வேறு. நகராட்சி நிர்வாகத்தில் இருந்தவரை மாநகராட்சியில் போட்டதால் அங்கேயிருக்கின்ற

நிலைமைகளின் அடிப்படையிலே மாநகராட்சி நிர்வாகத்தின் நிலைமைகளையும் பார்த்ததால் பல்வேறு கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன.

இதே சட்டமன்றத்தில் சென்னை பெருநகர குடிநீர் வடிகால் வாரியம் பற்றிய சட்டம் வந்த பொழுது இதனால் சென்னை நகரம் பாதிக்கப்படும், சென்னை நகர மக்களுக்கு குடிநீர் வடிகால் பணிகளால் பாதிக்கப்படுவார்கள் என்று சொன்னேன். இதை மறு பரிசீலனை செய்யுங்கள் என்று நான் அமைச்சரை வேண்டிக் கொண்டேன். ஆனால் அவர்கள் மறுத்தார்கள். சட்டத்தை நிறைவேற்றினார்கள். அந்த குடிநீர் வடிகால் வாரியத்தைப்பற்றி சட்டநாதன் குழு வன்மையாகக் கண்டித்து இருக்கிறார்கள். இது தேவையற்ற ஒன்று, மக்களுக்குந் தொல்லை கொடுக்கும் ஒன்று. மாநகராட்சியை இரண்டாகப் பிரித்து நிர்வாகத் தொல்லைகளை உண்டாக்கி, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. குழப்பத்தை உண்டாக்கும், அத்துடன் உலக வங்கியிலிருந்து பெறப்படும் கடனுக்கு சென்னை நகர மக்களை அடகு வைக்கும் அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்—கொள்கிறேன்.

(பிற்பகல் 1.20)

நான் அல்ல, சட்டநாதன் குழுவினுடைய அறிக்கையிலிருப்பதைச் சொல்கிறேன். அவர் கண்டித்திருக்கிறார். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், ஓட்டலிலே பார்த்தால், ஒரு போர்டு வைத்திருப்பார்கள். இன்றைய ஸ்பெஷல் என்று போட்டு அந்த போர்டில் ஐட்டம்களை எழுதி இருப்பார்கள். அதைப் போல், ஒவ்வொரு மாநகராட்சி வட்டங்களிலே........

திரு. செ. கிருஷ்ணன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய கருத்துக்களைக் கூறுகின்ற நேரத்தில் இந்த சட்டநாதன் அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு அவரையே மேற்கோள் காட்டுவது பொருத்தமானதா என்று கேட்கிறேன்,

திரு. மு. அரங்கநாதன்: சட்டநாதனுக்கு மாநகரத்து தொல்லைகள் அதிகமாகத் தெரியாது என்று சொன்னேன். அவர் வடபுலத்திலே அலுவலராக இருந்தார். அதைத்தான் சொன்னேன்.

ஓட்டலிலே இன்றைய ஸ்பெஷல் என்று போர்டு போடுவதைப் போல், ஒவ்வொரு வட்ட அலுவலகத்திலும் ஒவ்வொரு போர்டு வைத்திருக்கிறார்கள். குடிநீர்—வடிகால் சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கவனிக்க தனிவாரியம் நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்திற்குச் செல்லுங்கள். இங்கே குறை சொல்லாதீர்கள், என்று டெலிபோன் நெம்பரைப் போட்டிருக்கிறார்கள். இதனால் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னொரு வேடிக்கை என்னவென்றால், மாநகராட்சியிலே இருக்கிற அலுவலர்கள், குடிநீர்—வடிகால் வாரிய அலுவலகத்திற்குப் போய் கையெழுத்துப் போட்டுவிட்டு, மீண்டும் மாநகராட்சி வேலையில் ஈடுபட வேண்டுமென்று சொல்கிறார்கள். சென்னை மாநகராட்சி குடிநீர் வடிகால் வேலைகளுக்காக 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அந்த அலுவலகங்களிலே—கையெழுத்துப் போட்டுவிட்டு, நகராட்சி வேலைகளைக் கவனிக்க திரும்புவதற்குள் அரை நாள் போய்விடுகிறது. அப்படி இருக்கும் போது நகராட்சி வேலைகளை எப்படிக் கவனிக்க முடியும்? எனவே, இப்படிப்பட்ட நிலைமைகள் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u> : அது குடிநீர் வடிகால் வாரியம் அல்ல ; குடிநீர் வழங்குதல்—கழிவு நீர் அகற்றுதல் வாரியம்.

<u>திரு. மு. அரங்கநாதன்</u> : குடி நீர் வழங்குதல் வடிகால் வாரியம் என்று நான் சொல்லவில்லை. அறிக்கையிலே இருக்கிறது. அது உங்கள் தப்பு. அறிக்கையிலே இவ்வாறு போடப்பட்டிருக்கிறது.

நான் சொல்வது. இன்றைக்குச் சென்னையிலே பல்வேறு தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. அதைச் சொல்லும்போது ஏதோ கட்சிக் கண்ணோட்டத்திலே சொல்லவில்லை. பொதுவாக, மக்களின் நன்மையைக் கருதித்தான் சொன்னேன். இன்றைக்கு மிக மோசமான நிலையிலே மாநகராட்சி இருந்து கொண்டிருக்கிறது.

இந்தச் சட்டத் திருத்தங்கள் தேவையற்றவை. ஏற்கெனவே இருக்கிற சட்டத்தில் பிற்பட்ட சமுதாய மக்களுக்கு நல்ல வாய்ப்புக்கள் கிடைக்கும் என்பதோடு மட்டுமல்லாமல், இப்போது திருத்தப்பட்ட சட்டத்தில் இருக்கிறவாய்ப்பைப் பறிக்கும் என்பதோடு மட்டுமல்லாமல் பெருநகர குடிநீர் வழங்குதல் வடிகால் வாரியத்தால் மாநகராட்சியின்கீழ் உள்ள மக்களுக்கு பல தொல்லைகள் வருவதோடு மக்களுடைய வரிப் பணம் வீணாகிறது என்று சொல்ல விரும்புகிறேன். இதற்கு முன்னால் சுட்டிக் காட்டியதைப்போல் மக்களுக்கு வரிச் சுமை கூடுதலாகும். சென்னை நகர மக்களுக்கு வரி கூடுதலாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. தீ. சு. நல்லதம்பி</u> : பேரவைத் தலைவரவர்களே' சென்னையைப் பற்றி வருவதால் நான் என்னுடைய சந்தேகத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று நம்புகிறேன். இன்றைய தினம் ஒரு சர்க்கிளுக்கு ஒரு அரிசன சேர்மகன் இருக்க வேண்டுமென்பது நடைமுறையில் இருக்கிறது. அப்படியானால் 12 அரிசன மக்கள் இதிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும். இன்றைக்கு இங்கே கொண்டு வந்து வைக்கப்பட்டிருக்கிற இந்த

நடைமுறையைப் பார்க்கிறபொழுது 5 என்று வைத்திருப்பதானால் (குறுக்கீடு) மதுரைக்கு என்றால், இதில் அதை வலியுறுத்தி சட்டதிட்டத்தில் அறுதியிட்டுச் சொல்ல வேண்டும். ஏற்கெனவே சர்க்கிளில் ஒன்று என்று இருப்பதை தொடர்ந்து நடத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து</u> : மாண்புமிகு உறுப்பினர் அரங்கநாதன் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில் 6 ஆண்டுகளில் 3 மேயர்கள் என்று கொண்டு வருகிறபோது, பிற்பட்ட சமுதாயத்தில் இருப்பவர்களுடைய வாய்ப்புக்கள் பறிக்கப்படுமோ என்கிற அச்சத்தைத் தெரிவித்தார்கள். அந்த அச்சம் நிச்சயமாக அவர்களுக்குத் தேவையில்லை என்பதையும் அந்த சமுதாய மக்கள் ஓராண்டுக்காலம் பதவி வகிப்பது இரண்டாண்டுக் காலம் என்று அதிகமாகுமே தவிர, தொடர்ந்து அவர்களுக்குள்ள வாய்ப்புக்கள் அதிகரிக்குமே தவிர, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய வாய்ப்புகள் நிச்சயமாக பாதிக்கப்படாது என்கிற கருத்தினை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. மு. கருணாநிதி</u> : தலைவர் அவர்களே, அவர்களுடைய வாய்ப்பு ஓராண்டிலே இருந்து இரண்டாண்டாக நீட்டிக்கப்படும் என்றும் பிற்பட்ட மக்களுக்குப்பாதகம் ஏற்படாதுஎன்றும் பொதுவாக அமைச்சர் அவர்கள் கூறிவிட்டார்கள். ஆனால், சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், பிராமணர், கிருத்துவர், தாழ்த்தப்பட்டவர், பிராமணர் அல்லாதார், முஸ்லீம்கள் என்று இந்த 5 பேர்களும் வகுப்பு வாரியாக ஒவ்வொரு ஆண்டும் வர வேண்டும் என்றிருக்கிறது. இரண்டாண்டு என்று வைத்துவிட்டால் அவர்கள் வருகின்ற காலம் தள்ளிப் போடப்பட்டு வருகிறது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. ஏதோ மதுரைக்கு இரண்டாண்டுகள் என்று வைத்திருக்கிறார்கள். பல காரணங்களினால் அப்படிச் செய்யப்பட்டிருக்கக்கூடும். சென்னையிலே இருக்கிற நிலைமையை மாற்றாமல் இருப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். வருகின்ற மேயர்கள் எல்லாம் சொல்வார்கள். எங்களுக்கு ஓராண்டுக்காலம் போதாது, அதனால் வேலைகள் செய்ய முடியவில்லை என்று. சென்னையிலே இருக்கிற நிலை, இங்கே குழுக்கள்தான் நிர்வாகப் பொறுப்பிலே ஈடுபடுகின்றன. மேயர் பதவி என்பது அலங்காரப் பொம்மையாகத்தான் இருந்து வரு

கின்ற பதவி. அது ஒரு கௌரவமான பதவியாதலால் எல்லோரும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதில் அதிகமாக ஈடுபடுத்தப்பட வேண்டிய நோக்கத்தோடுதான் சொல்லுகிறேன். மதுரைக்கு இருப்பதை அப்படியே சென்னையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதில்லை. ஏனென்றால், சென்னையிலே இருக்கிற வகுப்புவாரி முறையை நாம் மதுரையிலே அமுல் படுத்தவில்லை. சென்னையைத் தனியாக வைத்துக் கொண்டு ஓராண்டுக்கு ஒரு மேயர் என்று இருந்தால், நான் முதலிலேயே சொன்னதைப் போல பிராமணர் சமூகத்தைச் சேர்ந்தவர் ஓராண்டும், கிறித்துவ சமூகத்தைச் சேர்ந்தவர் ஓராண்டும், அரிசன சமூகத்தைச் சேர்ந்தவர் ஓராண்டும், பிராமணர் அல்லாதவர் சமூகத்தைச் சேர்ந்தவர் ஓராண்டும், முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்தவர் ஓராண்டும் என்கிற அந்த ரொட்டேஷன் நிச்சயமாக வர இயலும் இது பிற்பட்ட மக்களுக்கு அனுகூலமாக இருக்கும். எனவே இரண்டாண்டுக் காலம் என்று போடுகின்ற காரணத்தால் பிற்பட்ட மக்களுக்கு நிச்சயமாக நம்மை அறியாமலேயே தவறிழைக்கிறோம் என்று ஆகிவிடும். ஆகவே அரசு இதை ஆழ்ந்து யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மேயர் பதவி என்பது ஒரு கௌரவமான பதவி, அலங்காரமான பதவி என்று குறிப்பிட்டார்கள். ஒரு காலத்தில் அப்படி இருந்திருக்கலாம். ஆனால் வரக்கூடிய காலத்தில் மிகச் சீரிய முறையிலே பணியாற்றக்கூடிய முறையிலே மாற்றப்பட வேண்டும் என்று தான் அரசு கருதுகிறது. பிற்படுத்தப்பட்ட மக்களின் கால அளவு தள்ளப்படுகிறது என்று கூறினார்கள். ஆனால் அவர்கள் வந்து பணிபுரியும் கால அளவு நீட்டிக்கப்படுகிறது என்ற வகையிலே நான் அதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "1978 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி மற்றும் மதுரை மாநகராட்சி (திருத்த) அவசரச் சட்டத்தை (த.நா. அ.ச. எண் 9/78) இப்பேரவை நிராகரிக்கிறது."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிராகரிக்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "1978-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி மதுரை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

திருத்தங்கள் கொடுத்த உறுப்பினர்கள் இருக்கையில் இல்லாததால் அவை திரும்பப்பெறப்பட்டனவையாகக் கருதப்பெற்றன.

பிரிவு 2 முதல் 13 வரை, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1978 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1978) சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

9. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி).

(ஆ) பார்வையாளர்கள் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை.

(பிற்பகல் 1-30).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று பகல் 12·55 மணி அளவில் பார்வையாளர் மாடத்திலிருந்து குரல் எழுப்பிய ஒச்சாத் தேவர் மகன் தவசித் தேவர் என்பவர் செயல் கண்டிக்கத்தக்கதும், அவையை அவமதிப்பதும் ஆகும்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, பெயர் அறிவிக்காமல் விட்டு விடவேண்டும். பெயர் அறிவிக்கிற காரணத்தால் தான் இப்படி அடிக்கடி நிகழ்கிறது. ஆகவே, பெயர் அறிவிப்பது தவிர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தண்டனை கொடுக்கிற போது பெயர் சொல்லித்தான் ஆகவேண்டும். எனவே இது குறித்த தீர்மானத்தை முன்மொழியும்படி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவையின் அனுமதியோடு நேரத்தை நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"இன்று 12— 9 —1978 பகல் 12.55 மணியளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து குரல் எழுப்பிய காரணத்தால் காவலில் வைக்கப்பட்டுள்ள மதுரை மாவட்டம் கன்னியம்பட்டியைச் சேர்ந்த ஒச்சாத் தேவர் மகன் தவசித் தேவர் என்று கூறிக் கொள்பவர் பெருங் குற்றம் புரிந்துள்ளார், அவருடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெருங் குற்றமென்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர் ஏழு நாட்கள் வெறும் காவல் (சிம்பிள் இம்பிரசன்மென்ட்) தண்டனை அளிக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டுமென்றும் இப்பேரவை தீர்மானிக்கிறது."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பேரவையால் ஒருமனதாக ஏற்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மாலை 4 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மாலை 4.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் மீண்டும் பேரவை கூடியது.

12. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி).

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தின் ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களின் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது இந்த அவையிலுள்ள பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை மிகுந்த ஆர்வத்தோடும் அக்கறையோடும், தமிழக மக்களுடைய நல்வாழ்விற்கு எந்தெந்த வகையில் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதன் மூலம் உதவி செய்ய முடியுமோ அந்தந்த வகையிலே முயற்சி செய்து தெரிவித்துள்ளார்கள். அவர்கள் நல்லெண்ணத்திற்கு நான் முதலிலே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு எதிர்க்கட்சிகளின் பிரதான தலைவராக இருக்கின்ற டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் பேசும்போது நான் அவையிலே இருக்க முடியாமல் வெளியூருக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது : அதேபோல் இன்னும் பல தலைவர்கள் பேச்சை நான் கேட்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது என்றாலும் அவர்கள் பேசியதைக் குறிப்பிலிருந்து தெரிந்துகொள்ள முடிந்தது என்று சொல்லி அவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும், என்னைப் பற்றி அதிகமாக நன்கு தெரிந்திருப்பதன் காரணத்தால்—நான் நிச்சயமாகச் சொல்கிறேன்—அவர்கள் தவறாகக் கருத மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அந்த வகையில் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்களும் தலைவர்களும் வேறு பல கருத்துக்கள் கொள்ள மாட்டார்கள் என்பதை எண்ணி நான் பேச விரும்புகிறேன்.

இந்த உரையின் மீது பல்வேறு கருத்துக்களையும் ஒவ்வொரு விதமான கொள்கைக்குச் சொந்தக்காரர்களாக இருக்கின்றவர்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு, தங்களுக்குக் கிடைத்த ஆதாரங்களை எல்லாம் சேர்த்து வைத்து, தங்களுக்குத் தெரிந்தவைகள் எல்லாம் அரசுக்கும் தெரிய வேண்டும் என்கிறவிதத்தில் இங்கே தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்து, புரியாத என்னைப் போன்றவர்களுக்குக் புரிய வைக்கின்ற வகையில் பேசி இருக்கிறார்கள் என்பதையும் நான் உண்மையிலேயே எண்ணி மகிழ்கிறேன். அவர்களுக்கு எல்லாம் நான் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஒரு நாட்டினுடைய வாழ்வைப் பற்றி எண்ணும்போது பல ஆண்டுகளுக்குப் பின்னால் நடந்தது என்னென்ன என்பதையும் இப்போது நடப்பது என்ன என்பதையும் இனிமேல் எப்படி நடந்தால் நன்மை பயக்கும் என்பதையும் சிந்தித்து முடிவு செய்ய

வேண்டிய நிலையிலே இருக்கின்ற நாங்கள் இங்கே ஏதோ மனத்தாங்கல் இல்லாவிட்டாலும், வார்த்தைகளிலே கடுமையாகப் பேசி இருக்கலாம். அப்படிக் கடுமையாகப் பேசி இருந்தாலும் கூட அவைகளை எல்லாம் எங்களுடைய கடமையை ஆற்றுவதற்கு நல்ல மருந்துகள் என்றுநான் கருதுகிறேன். அவைகள் எப்படி எங்களுக்குப் பயன்படுகின்றன என்பதை நாங்கள் செயல்படுகின்ற விதத்திலேதான் எடுத்துக் காட்ட முடியுமே தவிர வெறும் வார்த்தை நிலையிலே சொல்லிவிட்டால் மட்டும் அது நம்பிக்கைக்குரியதாக ஆகிவிடாது என்பதை நாங்கள் நன்கு உணர்ந்து இருக்கிறோம்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் பலருக்குப் பலவிதமான சந்தேகங்கள் ஏற்பட்டிருக்கின்றதா என்றால் அப்படிப்பட்ட சந்தேகங்கள் ஏற்படவில்லை என்பதும் குறிப்பாக இந்த அரசு எந்தத் தவறையும் செய்யவில்லை என்பதையும் அல்லது சொந்தக்காரர்கள் என்ற உணர்வோடு வேறுபாடான சூழ்நிலையில் செயல்படவில்லை என்பதையும் எவ்வளவு கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தி இருந்தாலும் கூட அப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்லவில்லை என்பதை அறிந்தபோது நான் உண்மையிலேயே அவர்களுக்கெல்லாம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நல்லெண்ணத்தை உணர்ந்தேன். இன்னமும் உணருகிறேன். குற்றச்சாட்டுகள், குறைகள் கூறுகிறார்கள் என்பதற்காக அவர்களை எல்லாம் எதிரிகள் என்று நினைப்பதற்கு நாங்கள் தயாராக இல்லை. எதிர்க்கட்சி என்ற வகையில் பல நல்ல அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இந்த அவையிலே இல்லாமல் இருப்பார்களேயானால் எங்களுடைய பணி எதேச்சகாரமான பணியாக முடிந்துவிடும் என்பதையும் தட்டி கேட்க ஆள் இல்லாவிட்டால் நாங்கள் எவ்வளவு தான் நல்லெண்ணத்தோடு செயல்பட விரும்பினாலும் கூட தவறு நேர்ந்துவிடும் என்பதில் நாங்கள் வேறு கருத்துக்கொள்ளவில்லை என்பதையும் முதலிலேயே சொல்ல நான் விரும்புகிறேன்.

ஆகவே, கருத்துக்களை வைத்திருக்கிறவர்கள் மீது இன்னும் அதிகமான மதிப்பும் மரியாதையும் தான் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கே முதலிலே சொல்ல வேண்டியது எனது நீங்காக் கடமை என்று வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு பிரச்னைகளை எடுத்து வைத்துப் பேசியிருக்கிறார்கள். திரு கூத்தக்குடி சண்முகம் அவர்கள், முன்னாலே வெளியிட்ட அறிக்கைக்கும் இதற்கும் பெரிய மாற்றம் இல்லை என்று சொன்னார்கள். அப்போது நான் அவையில் இருந்தேன். மாற்றம் கொள்கையில் வர முடியாது என்பதையும், ஒரு செயலைத் தொடங்கிய பிறகு அது நாம் நினைத்தபடி நடப்பதற்கு இடையூறு ஏற்பட்டாலும் அல்லது அவைகள் முழுமையாக நிறைவேற்றப்படாமல் இருந்தாலும்

அல்லது அந்தக் காலகட்டத்தில் முடியாது, இன்னமும் கொஞ்சம் நேரம் வேண்டும் என்றிருந்தாலும் அல்லது அந்தத் திட்டங்கள் இவ்வளவு மாதத்திற்குள் தான் நிறைவேறும் என்றிருந்து அந்தத் திட்டங்கள் தொடர்ந்து நடைபெறுமானால் அவற்றை மேலும் வற்புறுத்திக்கூறுவது எங்களைப் பொறுத்தவரையில் எங்கள் கடமை என்று கருதுகிறோம்.

முடித்துவிடாத ஒன்றை முடித்து விட்டதாகச் சொல்ல நாங்கள் விரும்பவில்லை. அப்படிச் சொல்லி இங்கேயிருக்கிற அனுபவமிக்கவர்களை யெல்லாம் நாங்கள் ஏமாற்றிவிட முடியும் என்று கனவில் கூட உழன்றுகொண்டிருக்கவும் இல்லை. அதோடு, பிரச்னைகளை எடுத்து வைக்கிறவர்கள் எதை எதைச் சொன்னார்கள், சொன்னவர்களுடைய பெயர்கள் எல்லாம் குறிப்பிட்டு அவற்றிற்கு நான் பதில் சொல்வது என்று சொன்னால், அப்படி பதில் சொல்வதற்கு நேரத்தை எடுத்துக் கொண்டால், எனக்கு ஓதுக்கப்பட்டிருக்கிற நேரம் அல்லது சட்டப் பேரவைத் தலைவர் அவர்களால் தரப்பட்டிருக்கும் நேரம் போதுமா என்பதில் எனக்கு நிறைய ஐயம் இருக்கிறது. ஏனென்றால் குறைத்துக் குறைத்து நான் பேசவேண்டும் என்று எண்ணினாலும் இவ்வளவையும் நான் இங்கே படித்தாக வேண்டும் என்பதை நான் முதலிலேயே சொல்லிவிடுகிறேன். இல்லாவிட்டால் கேள்வி கேட்டவர்கள், அவர்களுக்கு வந்திருக்கிற செய்திகளை வைத்துப் பேசியவர்களுக்கு மனநிறைவு ஏற்படாது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். பூர்வாங்கப் பீடிகை பலமாக இருக்கிறதே என்று சந்தேகப்பட வேண்டாம். எந்தளவிற்கு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதிக்கிறார்களோ அந்தளவிற்குதான் என் பேச்சு தொடர்ந்து இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் ஆட்சிக்கு வரும்போது மக்களிடம் வாக்குகள் கேட்டநேரத்தில் சில உறுதிமொழிகளைத் தந்திருக்கிறோம். அந்த உறுதிமொழிகளில் நான் முதலில் எடுத்துக்கொள்ள விரும்புவது, பயிர் பாதுகாப்புக் கழகம் ஆரம்பிப்பது பற்றி, இத்தகைய கழகம் ஒன்றை அமைக்க வேண்டும் என்பது எங்கள் ஆசை. எவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய் அதற்குச் செலவாகும் என்று எண்ணிப் பார்த்து, உள்ளத்தில் அது நடைபெறுமா மாநில அரசால் மட்டும் என்ற சந்தேகம் இருந்தாலும் கூட, அந்தக் கொள்கை இந்திய துணைக்கண்டம் பூராவும் கூட பரவினால் நல்லது, அப்போதுதான் விவசாயிகளுக்குப் பாதுகாப்புத் தர முடியும், தந்தாக வேண்டும் என்ற வகையில் நாங்கள் அதைச் சொல்லியிருந்தோம். ஆனால் அதே கொள்கையை இப்போது மைய அரசில் ஆட்சியில் இருக்கிறவர்கள் ஏற்றுக்கொள்கிறவிதத்தில்——முழுமையாக அல்ல, நூற்றுக்கு இருபத்தைந்து என்கிற வகையில் அவர்களே அப்படி ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முயன்று கொண்டிருக்கிறார்கள் என்கிற தகவல் வந்திருக்கிறது என்பதை மாத்திரம் மேலெழுந்தவாரி

யாகக் குறிப்பிடவிரும்புகிறேன். அது போதாதுதான். ஆனு
லும் எங்களுடைய இந்த ஆசை, நாங்கள் நிறைவேறச் செய்
வதற்கு முன்பாகவே மைய அரசு தொடங்கியிருப்பதன் காரண
மாக அவர்கள் நினைத்தால் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும்
இப்படிப்பட்ட ஒரு பாதுகாப்பு கிடைக்கும் என்ற நிலை ஏற்படும்
என்பதையும், அது விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மிகப்
பெரிய நன்மையைத்தரும் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய எண்ணத்
தில் கால் பாகம் நிறைவேறுவதற்கு இந்திய அரசினுடைய கருத்து
உதவியிருக்கிறது என்பதையும் அவர்களுடைய விருப்பம் அப்படி
இருக்கிறது என்பதையும் நான் இங்கே சொல்வதில் மனநிறைவு
பெறுகிறேன்.

[மாலை 4-10]

குறைகள் சொல்லுவதினுல் ஆத்திரம் வரும் என்ருே நாங்கள்
குறைகளே இல்லாதவர்கள் என்ருே எங்கள் மீது குறைகளே
கிடையாது என்ருே நாங்கள் நினைக்கிருேம் என்று யாரும் கருத
மாட்டார்கள் என்று நினைக்கிறேன். சில சமயம் தவருன
செய்திகள் பல அங்கத்தினர்களுக்கு—ஒரு சில அங்கதினர்களுக்குக
கொடுக்கப்படுகிறது என்பதும், ஏன் இப்படி அவர்களுக்கு
கொடுக்கப்படுகிறது என்பதை எங்களால் புரிந்து கொள்ளமுடிய
வில்லை என்பதையும் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.
சில நேரங்களில் நான் பேசுகின்ற பேச்சு புரியாத புதிராக
இருக்கின்றது என்ற எண்ணம் யாருக்காவது இருக்குமானுல்,
நான் தவருகப் பேசும்போது குறுக்கிட்டுச் சொன்னுல் நான்
எங்கே முற்றுப்புள்ளி, எங்கே கமா போட வேண்டும் என்று
கவனித்து அந்த அளவுக்கு என்னுடைய பேச்சை ஆற்றி என்
னுடைய கடமையை நிறைவேற்ற முயலுவேன் என்பதைப் பணி
வோடு தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் அதிகம் படித்தவன் அல்ல. ஆங்கிலமானுலும் சரி,
தமிழானுலும் சரி, மற்றவர்கள் பேசக்கூடியதைப் புரிந்து
கொள்ளுகின்ற அளவுக்குத் தமிழைக் கற்று இருக்கின்றேன்.
நான் கவிஞனும் அல்ல, மிகப் பெரிய எழுத்தாளனும் அல்ல;
பெரிய கதைகள் எழுதி மக்கள் மத்தியில் மக்கள் பாராட்டு
கின்ற வகையில் பெரியவனும் அல்ல. அந்த அளவில் திறமை
யில்லாத—தெரியாத—வகையில் எப்படியோ ஒரு வகையில் என்
னுடைய உணர்ச்சியை, மனதில் ஏற்படுகின்ற உணர்வை
வெளிப்படுத்துவதற்குச் சொல்ல விரும்புகிறேன். வார்த்தை
களைத் தேடி அலைந்தாலும், தவருன வகையில் மற்றவர்களைப்
புண்படுத்துகின்ற வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் எந்த
அளவுக்கு இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு ஜாக்கிரதையாக
இருக்க நான் முயலுவேன் என்பதை இந்த மன்றத்தில்
தலைவராக அமர்ந்து அனுபவத்தைப் பெற்றிருக்கின்ற தங்க
ளுக்குத் தெரிவித்துக்கொள்வேன்; இந்த சட்டமன்ற பேரவை

யில் பொறுப்போடு பணியாற்றுகின்ற மாமன்ற உறுப்பினர்
களுக்கும் —நான்என்ன பேசுகிறேன் என்பது அவர்களுக்குப்
புரியாமல் இருக்குமானுல், அவர்களுக்கு—தலைவர் அவர்களே
மன்னிக்க வேண்டும்—மீண்டும் அதைத் திரும்ப சொல்கிறேன்—
புரிய வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாமன்றத்தில் நான் எடுத்துச்சொல்ல விரும்புவது,
நான் முதலமைச்சராக ஆகி ஒன்றேகால் ஆண்டுகள் ஆகியிருக்
கிறது. முழுமையாகி விட்டதா என்றும் நான் கணக்குப் பார்க்க
வில்லை. இப்படிப்பட்ட நிலைமை இருந்தாலும் ஒன்று சொல்ல
விரும்புகிறேன். அரசு ஒன்று ஏறபட்டு மக்களின் நம்பிக்கையைப்
பெற்றதின் காரணமாக—அதை அளவுகோலாகக் கொண்டு
பதவிக்கு வந்துவிட்டு நாங்கள் எங்கள் பணிகளைச் செய்யும்போது
எப்படிச் செயல்படுகிருேம் என்பதை நாங்கள் சுட்டிக்காட்டுவது
எங்களுடைய கடமை என்று கருதுகிறேன்.

நாட்டிலுள்ள ஏழை. மக்கள், நடுத்தர மக்கள், உயர்குடியில்
உள்ள மக்கள்—நான் ஜாதியின் அடிப்படையில் குறிப்பிடவில்லை—
வசதி பெற்றவர்கள் என்ற அடிப்படையில் குறிப்பிடுகிறேன்—
பொருளாதாரத்தில் அப்படியிருக்கின்றவர்கள்—எப்படிப்பட்ட
மாற்றங்கள் ஏற்பட்டால் எல்லா மக்களும் வாழ்வதற்கு வசதி
யான சூழ்நிலை ஏற்படும் என்பதை எண்ணிப் பார்ப்பதற்கு
நாங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிருேம். அப்படி எண்ணிப்
பார்க்கின்றபொழுது எங்களுக்குத் தெரியாமல் சொல்லித் தெரி
வதற்கும், எங்களுக்கு முன்னுல் பல ஆண்டுகளாக அரசை—
ஆட்சியை கையில் வைத்துக்கொண்டு ஆட்சி செய்து மக்களுக்கு
நன்மைகளைச் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் செய்த
பல காரியங்கள் பற்றிய விவரங்கள் இந்த அரசுக்குச் சொந்த
மாக வைக்கப்பட்டிருக்கின்ற ஆவணங்களில் இருக்கின்றன
என்பதும் அந்தக் குறிப்பேடுகள் எல்லாம் நமக்குச் தெளிவாகச்
சொல்வதனுல் சில விஷயங்கள் தெளிவாகின்றன என்பதையும்
குறிப்பிட வேண்டியவனுக இருக்கிறேன்,

அதைப் பார்த்து நாங்கள் செயல்படுவதிலே அக்கறை
காட்டுகிருேம். முன்னுலே எங்களைவிட அனுபவம் பெற்றவர்கள்
பதவியிலிருந்து பணியாற்றிய நேரத்தில் என்னென்ன நன்மைகள்
செய்திருக்கிருர்கள் என்பதை எடுத்துப் பார்த்து, அதைத்
தொடருவதும், அதே நேரத்தில் எங்கெங்கே
தவறுகள் செய்தார்கள் என்று தெரிந்தால் ஒதுங்கிப் போவதற்
கும், அதன்மூலம் நாங்கள் பயன் அடைவதற்கும் உதவியாக
இருக்கின்றது என்று சொல்வதோடு மட்டுமல்லாமல், அதிகாரி
களும் அந்த வகையிலே எங்களுடன் ஒத்துழைக்கிருர்கள்.
நாங்கள் ஏதாவது சந்தேகப்பட்டு, இந்தப் பிரச்னைக்கு இதற்கு
முன் எப்படி இதை அணுகினுர்கள், இந்தப் பிரச்னையில் முடி
வெடுத்தார்கள், இந்தப் பிரச்னையை வேண்டாம் என்று ஒதுக்கி
னுர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுவதற்கு அவர்களைக் கேட்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 12

டால், அனுபவமிக்க அதிகாரிகள், ஆதாரங்களோடு எடுத்துக் காட்டுகின்றார்கள். அதிலே எங்கள் மனதிற்கு எது நியாயம் என்று தோன்றுகிறதோ, எங்கள் கொள்கைக்கு எது ஒத்து வரும் என்று நாங்கள் நம்புகிறோமோ, அதைச் செயல்படுத்த நாங்கள் முனைகின்றோம். அந்த வகையில் பயிரிடும் குத்தகை தாரர்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று இங்கே கருத்து சொல்லப்பட்டிருக்கிறது.

1976-ம் ஆண்டு ஜுன் மாதம் 30-ம் தேதியோடு முடிவடையும் ஆண்டிற்கும், அதாவது 1385-வது பசலி ஆண்டிற்கும், அதற்கு முந்திய பசலி ஆண்டிற்கும் நிலச் சொந்தக்காரர்கள் குத்தகை செலுத்த வேண்டிய பாக்கிக்காக, பயிரிடும் குத்தகை தாரர்கள் வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு அளிப்பதற்கு தமிழ்நாடு 1977-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்புத் தர திருத்தச் சட்டத்தின் மூலம், குடியரசுத் தலைவர் அவர்களால் சட்டம் செய்யப்பட்டு, தமிழ்நாடு 1977-ம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் வெளியேற்றப் பாதுகாப்புச் சட்டம் 3/1976 -ல் வகை செய்கிறது. 1978-ஆம் ஆண்டு ஜனவரி 15-ஆம் தேதி உட்பட அந்நாள் வரை செயலில் இருந்த இச்சட்டம், மீண்டும் 1978 திருத்தப்பட்ட 3-வது பிரிவின்படி, 1978-ம் ஆண்டு ஜுலை மாதம் 15-ம் தேதி உள்பட நீடிக்கப்பட்டது. மேலும், குத்த கைக்காரர்களுக்கு நிவாரண ஏற்பாடு செய்து கொடுக்கின்ற வகையில், மேற்படி பாதுகாப்புச் சட்டத்தை 15-1-79 வரையில் வரையில் நீடிப்பது என்று கருதப்பட்டு, இந்தச் சட்டமன்றத் திலே உங்கள் முன் சமர்ப்பிக்கப்பட்டிருப்பது உங்கள் நினைவிலே இருக்கும்.

இந்த குத்தகைக்காரர்கள் வெளியேற்றப்படுவதிலிருந்து காப்பாற்றப்பட வேண்டுமென்ற எண்ணம் எல்லோர் உள்ளத் திலும் இருக்கின்றது என்பதும், இதிலே கட்சி வேறுபாடில்லாமல் ஒரே வகையில் அந்த எண்ணம் நிலவுகிறது என்பதையும் அறிவதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆனால் அதே நேரத்தில் அறநிலையங்களைப் பாதுகாக்கின்ற அளவிலே இருக்கின்ற இந்தப் பாதுகாப்புக்கு உட்பட்ட கோவில் களுக்கு சொந்தமான நிலங்களை குத்தகை எடுத்திருப்பவர்கள் வெளியேற்றப்பட வேண்டுமென்று நாங்கள் விரும்பவில்லையானு லும், அவர்கள் கொடுக்க வேண்டிய பாக்கிகளைக் கொடுக்க வேண்டுமென்பதில், இந்தச் சட்டப் பேரவை நிச்சயமாக வேறு கருத்துக் கொள்ளாது என்று நான் நம்புகிறேன். ஏனெனில் அது ஒரு மனிதருக்குப் போகின்ற பணம் இல்லை. அது அரசுக்கு நேரடியாக வந்து, அரசு செலவு செய்ய வேண்டிய பணமல்ல. கோவில் நிர்வாகம் நடத்தப்பட வேண்டும். எதிர்க்கட்சித் தலை வர்கள் பலர் வெளியே பேசியிருப்பதாக நான் கேள்விப்பட்டேன். அங்கே வேலை செய்கின்றவர்களுக்கு எல்லாம் வசதியும், வாய்ப்பும்

978 செப்டம்பர் 12] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

வேண்டும். ஒரு வேளை உணவு கூட இன்றி, அங்கே வேலை செய்
கின்ற பணியாளர்களும் மற்றவர்களும் கஷ்டப்படுவதாக எடுத்
துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கும் வாழ்வளிக்க
வேண்டுமென்ற கருத்து பரவலாக இருக்கின்றது என்ற நம்பிக்கை
யில் நாங்கள் இதைப் பற்றியும் சிந்தித்து, உங்கள் அனுமதிக்காக
இங்கே வைத்திருக்கிறோம்.

[மாலை 4–20]

திரு. ரா. உமாநாத் : கோவில் குத்தகை பாக்கி என்று
குத்தகைக்காரர்கள் கொடுப்பது பற்றிய
சொல்லுகிற போது, முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்
பாக்கியை மட்டுந்தான் உண்மையில் கொடுக்கக்கூடிய
கிறார்கள். குத்தகைக்காரர்கள் ஆபீசர்களும், டிரஸ்டிகளும்
குத்தகையை எக்சிக்யுட்டிவ் கொண்டிருக்கிறது. அங்கும் பாதுகாப்புத்
அமுக்குவது நடந்து
தேவையாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர்
அவர் வாயிலாக
கருத்தை உறுப்பினர்
அவர்களே, எங்கள் மாண்புமிகு இதிலே
வெளிப்படுத்தியதற்காக கூறிக் கொள்கிறேன். இல்லை.
உமாநாத் அவர்களுக்கு நன்றி மாறுபாடு
யாருக்கும் வேறுபாடு இல்லை. கருத்து போகக் கூடாது
இடையிலே யாரும் கொள்ளை அடித்துக் கொண்டு கொண்டு
என்பதால் தான் இப்படிப்பட்ட சட்டங்களைக் சொல்வதும்,
வருவதும், இப்படிப்பட்ட கருத்துக்களைச் வெளியே
மக்களுக்கு இவை தெரிய வேண்டுமென்பதற்காக அறிக்கைகள்
பொதுக்கூட்டங்களில் பேசுவதும், பத்திரிகைகளில் அக்கறை
வெளியிடுவதும் கடமையாகக் கருதி நல்லவர்கள், சொல்லும்
யுள்ளவர்கள் செயல்படுகிறார்கள் என்பதைச் இருக்கும்
போது இந்த அரசு அதில் மிக மிக எச்சரிக்கையாக என்பதை
என்பதையும், நடவடிக்கை எடுப்பதில் பின்வாங்காது இங்கே
யும், யாருக்கும் விட்டுக் கொடுக்காது என்பதையும் நான்
உத்தரவாதமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாய விளைப் பொருட்களுக்கு
விவசாயச் செலவுகளுக்கேற்ப நிர்ணயம் செய்வது பற்றி
கட்டுப்படியான, குறைந்த பட்ச விலை வேண்டிய அளவில்
ஆராயும் ஒரு குழுவின் பரிந்துரைகள் கிடைக்க அந்தக் குழு
உச்சமட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. செய்து முடித்து
வின் பரிந்துரைகள் கிடைத்த பின் அரசு பரிசீலனை செய்து —நெல்லுக்கு
விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு பற்றியும்
கொள்முதல் விலை பற்றியும், கொள்முதல் கொள்கை
அவ்வப்போது அறிக்கை வெளியிடப்படும்.

பயிர் பாதுகாப்புக் கழகம் பற்றி நான் முதலிலேயே குறிப்
பிட்டேன். இம்மாநில அரசு ஏற்றுக் கொண்டால் இரண்டு
மூன்று ஆண்டுகளுக்கு 1978-ம் ஆண்டை முன்னோடி என்ற அடிப்
படையில் வைத்து பயிர் காப்புறுதி திட்டத்தைப் புதிதாக கொண்டு

வரை பொதுக் காப்புறுதிக் கழகம் முன்வந்துள்ளது. அதன் முக்கிய அம்சங்கள் முதல் ஆண்டில் ஒன்று அல்லது இரண்டு முக்கிய பயிர்கள் வரும். பிறகு உணவுப் பயிர்கள் அல்லாத பயிர்களுக்கு 10 ஆண்டுகளுக்கான புள்ளி விவரம் போதிய அளவு கிடைக்கப் பெற்றால் அத்தகைய பயிர்கள் இத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும். இவ்வாறு ஒவ்வொரு பயிருக்கும் சிறப்புத் திட்டமாகச் செயல்படுத்தப்படும். விவசாயிகள் இஷ்டப்பட்டால் தாமாகவே முன்வந்து செயல்படுத்தும் திட்டம் வைத்து வெள்ளம், பூச்சி நோய் முதலியவற்றால் ஏற்படும் இழப்புகளைத் இத்திட்டம் நிறைவு செய்யும். முழு இழப்புக்கு இத் திட்டம் வகை செய்யவில்லை. 20 சதவீதம் முதல் 50 சத வீத இழப்புக்கு நிவாரணம் இராது. உழவர் ஒருவர் காப்புறுதித் தொகையாக அதிகப்பட்சத் தொகையாக ஆண்டு ஒன்றுக்கு பெறுவது ரூபாய் இரண்டாயிரம் என்று வரையறை செய்யப் பட்டிருக்கிறது.

மாநில அரசின் பங்கு, செலுத்த வேண்டிய தவணை குறித்து மாநில அரசு 25 % ஏற்க வேண்டுமென்று இருப்பதால் இதைக் குறைக்க வேண்டுமென்பதால் மத்திய அரசு பங்கேற்க வேண்டுமென்றும் அப்படிச் செய்தால் இந்த முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்த இந்த அரசு தயங்காது என்றும் இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கடிதமும் எழுதப்பட்டிருக்கிறது.

வேளாண்மை உற்பத்திப் பெருக்கம் குறித்து திரும்பத் திரும்ப நான் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அதைப் பற்றிய புள்ளி விவரங்கள் உங்கள் அனைவருக்கும் தெரியும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பேசும்போது சிரித்துக் கொண்டே பேசினாலும் மிகக் கேலி செய்கிற அளவில் அந்த வார்த்தைகள் வெளிவந்தன என்பதை நினைத்துப் பார்க்கிறேன். ''அரிசி விலை குறைவு என்றால் நீங்கள் தான் காரணம் என்கிறீர்கள்; நெல் விலை குறைந்தது என்றால் நீங்கள்தான் காரணம் என்கிறீர்கள்; எண்ணெய் விலை உயர்வு, பருப்பு விலை உயர்வு என்று சொன்னால் மத்திய அரசு காரணம் என்கிறீர்கள். அது மாத்திரம் எப்படி நியாயம்'' என்று சொன்னார்கள்.

திரு ரா. உமாநாத் : அரிசி விலைக்கு மட்டும் நான் சொல்லவில்லை. அத்தியாவசியப் பண்டங்கள் விலை உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் அவர்கள் தான் காரணம் என்று சொல்ல வேண்டிய நீங்கள் இப்படிச் சொல்லியிருக்கிறீர்களே என்றுதான் குறிப்பிட்டேன். எல்லாப் பொருள்கள் பற்றியும் சொன்னேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : எப்படிச் சொன்னாலும் அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா என்பது போல் அப்படித்தான் அமைகிறது. ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். அரிசி விலை உயர்கிறது, அரிசி விலை உயர்கிறது என்று சொன்னபோது அதற்குரிய காரணங்களைப் பல்வேறு நேரங்களில் பல்வேறு அமைச்சரவைகள் பல்வேறு அதிகாரிகள் அவர்கள் எல்லாம் தங்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அதேபோல் இங்கே நாங்கள் குறிப்பிட விரும்புவது, நாங்கள் பதவியேற்றதற்குப் பிறகு என்ன செய்தீர்கள் என்று கேட்டால் இதையாவது நாங்கள் செய்யவில்லையா என்று கேட்பதற்காகத்தான் கேட்டோம்.

அதே நேரத்திலே அங்கே மத்திய அமைச்சர் திரு. மோகன் தாரியா அவர்களைச் சந்தித்து எண்ணெய் விலையைப்பற்றிப் பேசி இங்கிருந்து நிலக்கடலையை வெளியே கொண்டுபோவதற்கு அனுமதிக்காமல் இந்த மாநிலத்திலே உற்பத்தியாகிற நிலக்கடலையை நாங்களே எண்ணெயாக்கி அதை இந்த மாநிலத்திலே பயன்படுத்திக்கொள்ள அனுமதி தரவேண்டுமென்று சொன்னபோது அவர்கள் சொன்னது எனக்குப் பசுமையாக நினைவில் இருக்கிறது, அதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் சொன்னார்கள், நாங்கள் ஒரு மாநிலத்தை மட்டும் கவனித்துவிட்டால் போதாது, அதுபோல் உங்களுக்கு ஏதாவது பொருள்கள் தேவைப்படுகிறது என்றால் அவை இன்னொரு மாநிலத்திலே இருக்குமானால், அதை அவர்கள் எங்களுக்குத் தேவைப்படுகிறது. நாங்களே வைத்துக் கொள்வோம் என்று சொன்னால் அதை அனுமதித்தால் உங்களுக்குக் கஷ்டம் இருக்கும், ஆகவே இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் ஒட்டுமொத்தமாக கஷ்டங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டும், லாபத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்'', என்றவகையில் அவர்கள் சொல்லி அதைப்போல், வெளிநாட்டிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்யத் துணிந்து பணியாற்றிக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள், அந்த முறையிலே அவர்கள் பணியாற்றுகிறபோது எண்ணெய் விலை குறைந்தது.

ஆனால் ஏதோ தேங்காய் எண்ணெய் விலை அதிகமாகிவிட்டது என்று திரு. உமாநாத் அவர்கள் சொன்னார்கள். கேரளத்திலிருந்து தேங்காய் வரவழைப்பதற்குப் பதில், 5 ஆண்டுக் காலத்திலே நாமே இங்கே தென்னையை உற்பத்தி செய்கின்ற பணியிலே தீவிரமாகச் செயல்பட்டால், தமிழகம் யாரையும் எதிர்பார்க்காமல், திரு. உமாநாத் அவர்கள் எதிர்பார்ப்பது போல் அப்படிப்பட்ட நிலைமையை ஏற்படுத்துவதற்கு பணி புரியலாம்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 12

ஆனால், இனி எப்போது தென்னை வைத்து எப்போது தேங்காய் காய்த்து எப்போது மக்களுக்குப் பயன்படும், அது வரையில் யார் கஷ்டப்பட முடியும் என்று கேட்டுவிடக் கூடாது. நான் அரிச்சுவடி படித்திருக்கிறேன் என்று நினைவு. ஒன்றும் இரண்டாம் வகுப்பிலே ஒரு கதை படித்ததாக எனக்கு நினைவு உண்டு. வயது முதிர்ந்த ஒரு கிழவர், வயோதிகர் 60, 70 வயதுக்கு மேலே இருக்கும். 80 இருக்கும் என்று வைத்துக் கொள்ளுங்களேன், அவர் தோட்டத்திலே வேலை செய்து கொண்டு இருந்தாராம், அப்போது மன்னர் தன்னுடைய அமைச்சரோடு அங்கே சென்று பார்த்தபொழுது அந்த வயோதிகர் பள்ளம் தோண்டுவதற்குக்கூட முடியாமல் கஷ்டப் பட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்து மன்னர் கேலியாகக் கேட்டாராம். ''உன்னாலேயோ முடியவில்லை, எப்போது சாவு வரப்போகிறது என்று தெரியவில்லை, நீ எப்போது தென்னை கன்று வைத்து அது எப்போது மரமாக ஆகி எப்போது அனுபவிக்கப் போகிறாய்?'' என்று, அதற்கு அந்த வயோதிகர் ''நான் தென்னை வைப்பது எனக்காக அல்ல, எனக்குப் பின்னாலே வருகின்ற சந்ததியார்கள் பயன்படுத்திக் கொள்வதற்காகச் செய்கிறேன்'' என்று சொன்னாராம். இடையிலே கஷ்டங்கள் இருந்தால் வேறு வகையில் பார்த்துக் கொள்ளலாம், என்ன இருந்தாலும், தமிழ் மக்கள் கஷ்டப்படக்கூடாது என்ற வகையிலே அந்தப் பணியைச் செய்வதில் தவறில்லை என்று கருதுகிறோம். அதற்கு எந்த எந்த வகையிலே ஆக்கமும் ஊக்கமும் அளிக்க முடியுமோ அதைச் செய்ய நாங்கள் முயன்று கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உற்பத்தியைப் பெருக்குவதில் விவசாயிகளுக்கு அரசு வேளாண்மைத் துறை மூலமாக உறுதுணையாக நின்று இடு பொருட்களை வழங்கி, பயிர்ப் பாதுகாப்புத் தேவைப்படுகிற பூச்சிகொல்லி மருந்துகளை வழங்கி, அவைகளைப் பயன் படுத்தும் முறையை விவசாயிகளுக்கு விளக்கி, விஞ்ஞான ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்புகளை யெல்லாம் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் மூலம் அளித்து வருகிறது. 1974–75 ஆம் வருடம் 18.60 லட்சம் ஹெக்டேரில் பயிரிடப்பட்ட உயர்விளைச்சல் நெல் ரகம் 1977–78 ஆம் ஆண்டில் 24.36 லட்சம் ஹெக்டேரில் பயிரிடப்பட்டது. அதேபோல் உயர் விளைச்சல் சிறுதானியங்கள் பயிரிடப்பட்ட பரப்பு 3.56 லட்சம் ஹெக்டேரிலிருந்து 5.39 லட்சம் ஏக்கராக 1977–78 இல் உயர்ந்துள்ளது.

[மாலை 4.30]

இதைச் சொல்லும்பொழுது, ''இந்த ஓராண்டிலே இவ் 'வளவும் செய்து விட்டாயா? நீ வந்து தானா'' என்று கேட்கக் கூடாது. இதற்கு முன்னால் இருந்தவர்கள் முயற்சி செய்திருக்க லாம், தொடர்ந்து நாங்கள் பணியாற்றி மேலும் அது விரி வடைய வாய்ப்புக் கிடைத்திருக்கலாம். ஆகவே எல்லாவற்

1978 செப்டம்பர் 12] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

றையும் நாங்கள் செய்தோம் என்று சொல்லவில்லை. ஓராண்
டில் எவ்வளவு முடியுமோ, இருந்த சூழ்நிலையில் எந்த
வகையில் செய்ய முடியுமோ, ஏற்பட்ட நெருக்கடியில் எந்த
வகையில் செய்ய முடியுமோ அந்த வகையில் அனைத்துப் பணி
களையும் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்.

இதற்குத் தேவையான நல்ல விதைகள் அரசுப் பண்ணை
யிலும், அரசு விதைகள் நிலையங்களிலும் சேகரிக்கப்பட்டு,
சுத்தம் செய்து, பரிசோதனை செய்து அரசு விற்பனை நிலையத்
திற்குக் கிடைக்க வகை செய்து உள்ளது. விதைச் சான்றிதழ்
நிறுவனம் 1977–78-இல் நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம்
வேளாண்மைப் பெருமக்களுக்கு சான்றிதழ் பெற்ற விதைகள்
அதிக அளவிற்குக் கிடைக்க வகை செய்யப்படும். உர
விநியோகத்தைப் பொறுத்தவரையிலும்கூட நல்லமுறையில்
செய்யப்பட்டிருக்கிறது.

இது ஒரு மகத்தான சாதனை என்று நாங்கள் சொல்லிக்
கொள்ளவில்லை. நாங்கள் இதையும் செய்ய முயற்சித்திருக்
கிறோம். அதிகாரிகளிடத்தில் எந்த அளவிற்குக் கருத்துக்களைச்
சொல்லி அவர்களுடைய திறமையைப் பயன்படுத்தி இருப்
போம் என்பதை அனுபவப்பட்டுள்ள இங்கேயுள்ள உறுப்பி
னர்கள் தெரிந்து கொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன்.

நடப்பு ஆண்டிலே இதேபோல் அளவு உரம் தேவைப்படும்
என்று கருதி, அதற்குக் கொஞ்சம் அதிக அளவிற்குப் பலவித
தனியார் மூலம் விற்பனை செய்து விவசாயிகளுக்குக் கிடைக்க
ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

தேவையான பூச்சி மருந்து அரசு விற்பனை நிலையங்களில்
கிடைக்க வகை செய்து வருகிறது. 1977–78-இல் 62 இலட்சம்
டன்னாக இருந்தது, 1978–79-ஆம் ஆண்டு 64 இலட்சம் டன்னாக
உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அட்டவணை
களையெல்லாம் நான் இப்போது படிக்க விரும்பவில்லை.
ஆனால் பயிர் வகைகளைப் பொறுத்தவரையில் உற்பத்தி
நம் தேவைகளைவிடக் குறைவாக இருக்கிறது.

அண்டை மாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்ய
வேண்டிய நிலையைப் போக்க அரசு பல திட்டங்களை உடனடி
யாக மேற்கொண்டுள்ளது.

தரமான விதைகள் வழங்குவதைப் பொறுத்தவரையில்
1978–79-இல் 1,700 டன் அளவிற்கு வழங்க இன்றைக்குத்
திட்டமிடப்பட்டுள்ளது.

எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி நமது தேவைக்குச்
சற்றுக் குறைவாக இருக்கிறது. இதிலும் தன்னிறைவு காண்
பதற்குப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.
நிலக்கடலையின் விளைச்சலைப் பெருக்க நுண் ஊட்டச் சத்துக்
கள், வேளாண்மைத் துறையின் மூலம் விநியோகிக்கப்பட்டது.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 12

இது ஒரு புதிய முயற்சியாகும். எங்களுடைய அறிவிற்
கேற்ப நாங்கள் மற்றவர்களுடைய அறிவைப் பயன்படுத்தி
செய்த ஒரு கடமையாகும். இதன் மூலம் நிலக்கடலை உற்
பத்தி பெருமளவிற்குப் பெருகும் என்று கருதப்படுகிறது.
நிலக்கடலைப் பயிரில் பிற பயிர்களைப் போல் அதிக விளைச்சல்
தரும் அளவில் டி.எம்.சி. 11, டி.எம்.சி. 12 ஆகிய ரகங்கள்
கண்டுபிடிக்கப்பட்டன.

தரமான நிலக்கடலை விதைகள் போதிய அளவு விவசாயி
களுக்குக் கிடைப்பதில்லை என்ற குறையை நீக்க 1977–78-ல்
தனித் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்
மூலம் நடும் விதைகள் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள
துடியலூர் அரசு விதைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டு,
இதற்கென விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு, விவசாயி
களுக்கு விதைகள் விநியோகிக்கப்படுகின்றன.

சூரியகாந்தி எண்ணெ உற்பத்தியை மேலும் பெருக்கு
வதற்காக தரமான விதைகள் உற்பத்தி திட்டம் ஒன்று
மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் 13.5 டன் சிறப்பு
விதைகள் 1977–78-ல் வழங்கப்பட்டது. இவைகள் நமது
மாநிலத்திற்குத் தேவையான வித்துக்களை உற்பத்தி செய்ய
வழிவகுக்கும். மேலும் புதிய ஆராய்ச்சித் திட்டம் திண்டி
வனம் ஆராய்ச்சிப் பண்ணையில் மேற்கொள்ளப்பட்டது.

தென்னை அபிவிருத்தித் திட்டத்தில் இதுவரை பெரும்
பாலும் நெட்டை ரகங்களே அதிகமாக விநியோகிக்கப்
பட்டது. நெட்டை–குட்டை ரகங்கள் 1977–78-ல் 28,000
வழங்கப்பட்டன. மேலும் 1 இலட்சம் இந்த ரகங்
களிலுள்ள கன்றுகள் உற்பத்தி செய்ய புதுத் திட்டம்
ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை சாகுபடியை
அழிக்கக்கூடிய வாத நோய் அண்டை மாநிலத்திலேயிருந்து
பரவியது. அந் நோயைத் தடுப்பதற்கான ஆராய்ச்சி மேற்
கொள்ளப்பட்டது. கோவை, கன்னியாகுமரி மாவட்டங்
களில், புதிய தென்னை அபிவிருத்தித் திட்டம் 1977–78-ல்
செயல்பட்டது.

விநியோகத்தைப் பொறுத்தவரையில், நிலக்கடலை 4,320
டன்கள் எண்ணெ 50 டன்கள், சூரிய காந்தி 900 டன்கள்
விநியோகிக்கப்பட்டிருக்கின்றன.

நடப்பு ஆண்டில் பருத்தி 4.05 இலட்சம் பேல் உற்பத்தி
செய்யப்பட்டுள்ளது. தற்போது பருத்தி சாகுபடி 3.20
இலட்சம் ஹெக்டேரிலிருந்து 3.50 இலட்சம் ஹெக்டேருக்கு அதி
கரிக்கப்படும். பருத்திப் பயிரில் நோயால் பாதிக்கப்பட்ட நிலங்
களில், ஒட்டு மொத்தமாக மருந்து தெளிப்பு பணி மேற்
கொள்ளப்படும். வீரிய வகை பருத்தி வகைகள் தமிழகத்திலே

1978 செப்டம்பர் 12] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

உற்பத்தி செய்யப்பட்டு கிலோ 60 முதல் 70 என்ற விலையில்
விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. முன்பு கிலோ 200 என்ற
வீதத்தில் கர்நாடகத்திலே வாங்கிய நிலைமை இப்பொழுது
மாறி இருக்கிறது. இந்த ரகம் 31,515 ஹெக்டேரில் 1977–78-ல்
பயிரிடப்பட்டது. இதன் மூலம் 1 இலட்சம் பேல்கள் கூடுதலாகக்
கிடைக்கும்.

கரும்பு சாகுபடி சென்ற ஆண்டு 1.45 இலட்சம்
டன் இருந்தது. நடப்பு ஆண்டில் 1,000 ஹெக்டேரில் கூடுத
லாகப் பயிரிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. தரமான கரணை
கள் உற்பத்திக்காக 1,000 நாற்றங்கால் பண்ணைகள் அமைக்க
அரசால் உத்தேசிக்கப்பட்டது. காஞ்சிபுரம் வட்டம், மாமண்
டூர், ஒட்டப்பள்ளி, கிருஷ்ணகிரி போன்ற பகுதிகளில் இந்தப்
பண்ணைகள் அமைக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு
வருகின்றன.

அடுத்து பழத் தோட்டங்கள். பெரிய அளவில் பழத்
தோட்டங்கள் அமைக்கும் திட்டத்தை இதுவரை தமிழகத்தில்
செயல்படுத்தவில்லை. பழங்களின் உற்பத்தியைப் பெருக்க, 400
ஹெக்டேர் பரப்பில் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு பழத்
தோட்டம் அமைக்க அரசு உத்தேசித்து, அதற்கான வேலைகள்
நடந்து வருகின்றன.

ரொபஸ்டா வாழையைப் பெருக்குவதில் அரசு தீவிர நட
வடிக்கைகள் எடுத்திருக்கிறது. தென் ஆற்காடு மாவட்டம்
நாவலூரில் வாழைப் பண்ணை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப்படி விவசாயத்தைப் பொறுத்தவரையில், எந்தெந்த
வகையில் இந்த உணவுப் பொருள்களை நாங்கள் தயாரித்து மக்
களுக்கு அதிகமாகத் தந்திட, எந்த அளவு ஏற்பாடு செய்ய
முடியுமோ அதைச் செய்வதற்கு நாங்கள் முயன்று கொண்
டிருக்கிறோம்.

தமிழ் நாட்டில் 1974–75 ஆம் ஆண்டிலிருந்து வறட்சி
நிலைமை நிலவி வருகிறது. 1974-ல் வறட்சி நிலைமை கூடுதலாக
இருந்து வந்தது. 1974–75-ல் பருவ நிலைமைகள் சீரமைந்
தாலும் அங்கங்கே சில பகுதிகளில் வறட்சி நிலவியது. 1976
ஆம் ஆண்டில் வட கிழக்குப் பருவமழை நிறைவு அளிக்கத்தக்க
வகையில் பெய்த போதிலும் பரவலாகப் பெய்யவில்லை. குறிப்
பிட்ட ஒரு சில இடங்களில் பாசன வாயில்களின் நிலைமைகள்
சீரடைகின்ற அளவுக்கு மழை போதுமானதாக இல்லை.
மேலும், காவிரி நீர்நிலைப் பகுதிகளில் வடவாறு, லோயர்
அணைக்கட்டுப் பகுதிகளில் தண்ணீர் விடப்படவில்லை. இதனால்,
விவசாயப் பணிகள் பெரும் அளவுக்கு மோசமாகப் பாதிக்கப்
பட்டதுடன் கூட, 1976–77-ல் சென்னை, செங்கல்பட்டு, தஞ்
சாவூர், கன்னியாகுமரி மாவட்டங்களில், உற்பத்தியில் வளர்ச்சி
இல்லை.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 12

[மாலை 4-40].

1976–77 ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணப் பணிகளுக்கு 29.41 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. இதில் முன் உதவி என்னும் வகையில் மத்திய அரசு அளித்த உதவி 15.70 கோடி ரூபாய் ஆகும். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு, வயலுக்கு வயல் நேரடியாகச் சென்று ஆய்வு நடத்தி அதன் அடிப்படையில் அரசுக்குச் சேர வேண்டிய வரி நிலுவையைத் தள்ளுபடி செய்வதற்கும் நிலுவை வசூலைத் தள்ளிப் போடுவதற்கும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

ஒவ்வொரு வயலின் விளைச்சல் 20 சதவிகிதமும், அதற்குக் குறைவாகவும் இருந்தால் கூடுதல் தண்ணீர் தீர்வை, உள்ளூர் செஸ், மேல் தீர்வை உட்பட 1385 ஆம் பசலி ஆண்டுக்கான நிலவரி 1—7—1975 முதல் 30—7—76 வரையில் தள்ளுபடி செய்யப்பட்டது. மேல் வரி வசூலிக்கவேண்டாம் என ஊராட்சி ஒன்றியங்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஓர் உழவனுக்குச் சொந்தமான நிலங்களை 50 சதவீதத்திற்கு மேற்பட்ட நிலங்கள், நிலுவை தள்ளுபடி பெறுவதற்குத் தகுதி பெற்றிருந்தால் கடன் தவணைகள் வசூலிப்பது அடுத்த பசலி ஆண்டுக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. நிலவரி தள்ளுபடி செய்வதற்குத் தகுதி உள்ள நிலங்களுக்கு வேளாண்மை வருமான வரி தள்ளுபடி செய்து ஆணையிடப்பட்டிருக்கிறது. விளைச்சல் குறைவாக உள்ள நிலங்களுக்கு அனுவாரி சான்றிதழ் வழங்கப்படுவதன் மூலம், குறுகிய காலக் கடன்கள், நடுத்தர காலக் கடன்களாக மாற்றப்பட்டன. சென்னை, செங்கற்பட்டு மற்றும் பிற மாவட்டங்களைப் பொறுத்த வரையில் மேற்சொன்ன சலுகைகள் 1386 ஆம் பசலி ஆண்டுக்கும் 1976 முதல் 1977 வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர கல்லணைக் கால்வாய்ப் பகுதியின் மூலம் நேரடிப் பாசன வசதி பெறும் நிலங்களுக்குத் தண்ணீர் வரித் தீர்வை, கூடுதல் தண்ணீர் வரி, உள்ளூர் செஸ், மேல் வரி முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டது. இயல்பான அளவில் விளைச்சல் 25 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தால் முழு வரி தள்ளப்படும். விளைச்சல் இயல்பான அளவுக்கும் அதிகமாகப் பாதிக்கப்பட்டு இருந்தால் 50 சதவீதம் தள்ளுபடி செய்ய ஆணையிடப்பட்டிருக்கிறது.

வறட்சி நிவாரணப் பணிகளுக்கு 1975–76-ல் 15·71 கோடி ரூபாயும் 1976–77-ல் 29·41 கோடி ரூபாயும் செலவிடப்பட்டது. வறட்சி நிவாரணப் பணிகள் துரிதமாக நடைபெற எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே வறட்சி நிவாரணப் பணிகள் சரிவர நடைபெறவில்லை என்ற கூற்றுக்கே இடம் இல்லை.

1978 செப்டம்பர் 12] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

நிதிப் பற்றுக்குறை என்கின்ற நிலையிலே இருக்கின்ற இந்த மாநிலத்தில் இந்த அளவுக்கு இப்படி ஒரு பணியை நாங்கள் மேற்கொண்டு, எங்களாலானவைகளை நாங்கள் விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் செய்தோம் என்பதைக் கூறுவதற்காக இதை இங்கே படித்துக் காண்பித்தேன். நாங்கள் எதையுமே செய்யவில்லை, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, அவர்கள் எதைக் கேட்டாலும் ஒத்துக் கொள்வதில்லை என்பதைப் போன்ற ஒரு கருத்து பரப்பப்படுகிறது என்பதை எண்ணி, அதைப் போக்கும் வகையில் அவர்கள் எப்படி அதைப் புரிந்து கொள்ள முடியுமோ அப்படிப் புரிந்துகொள்ள வழிவகை செய்ய வேண்டும் என்றுதான் நான் இதை எழுதி இங்கே படித்திருக்கிறேன்.

விவசாயிகள் தங்களுடைய பல்வேறு பிரச்சினைகளை அரசின் முன் வைத்ததினால், தமிழக அரசு ஒரு உயர்மட்டக் குழுவை அமைத்து அப் பிரச்சினைகளை ஆராய்ந்து அரசுக்கு சிபாரிசு செய்ய பணித்தது. அந்தக் குழு 5 முறை கூடியது. அத்தோடு விவசாயிகளுடன் நேரடியாகப் பேச்சு வார்த்தை நடத்தியது. இந்தக் கூட்டங்கள் என்னுடைய தலைமையில் ஏப்ரல் 19, மே 3, 10 தேதிகளில் நடந்தன. விவசாயச் சங்கத் தலைவர் நாராயணசாமி நாயுடு அந்தச் சங்கத்தின் பொதுச் செயலாளர் பாலசுப்பிரமணியம் ஆகியோரும் கலந்து கொண்டனர். கைது செய்யப்பட்ட விவசாயிகளை ஜாமீனில் விடுதலை செய்ய வேண்டும் என்றும், அரசு அலுவலகங்களுக்கு முன்னால் மறியல் செய்தவர்களை நிபந்தனை இன்றி விடுதலை செய்ய வேண்டும் என்றும் அரசுத் தரப்பில் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்றும் கூறினார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று அரசு விடுதலை செய்தது.

சங்கப் பிரதிநிதிகளை 10—5—78-ல் சந்தித்த நேரத்தில் அவர்கள் பெரிய விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தை யூனிட்டுக்கு 16 பைசாவை 14 பைசாவாகக் குறைக்க வேண்டும் என்றும், சிறிய விவசாயிகளுக்கு 16 பைசாவை 12 பைசாவாகக் குறைக்க வேண்டும் என்றும் கேட்டதற்கிணங்க அரசு முடிவு எடுத்தது.

இதை நான் இங்கே குறிப்பிடும்போது, ஒரு சில விவசாய நண்பர்கள் நான் திருச்சிக்குச் சென்ற போது என்னை வந்து கண்டார்கள். இந்த 14 பைசா, 12 பைசா என்று இல்லாமல் ஒட்டு மொத்தமாக 14 பைசா என்று வைத்து விடலாம் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏன் என்று கேட்டேன். "நாங்கள் சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று பிரித்துப் போட்டு இருக்கிறீர்கள், அதனால் எங்களுக்குள்ளே போட்டி ஏற்படுகிறது. எங்களுக்குள் தகராறு ஏற்படுகிறது. பிரிவு ஏற்படுகிறது. ஆகவே, அதைக் கைவிட்டு விடவேண்டும்," என்று சொன்னார்கள்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 12

நான் அவர்களிடத்தில் சொன்னேன், ''எங்களுக்கு அந்த நோக்கம் இல்லை. எப்படியாவது வசதி அற்றவர்களுக்குக் கொஞ்சம் வசதி செய்து கொடுக்கலாம் என்று செய்கிறோமே தவிர உங்களுக்குள் பிரிவு ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்தில் செய்யப்படவில்லை'' என்று எடுத்துக் கூறி, அதை நாங்கள் மாற்ற இயலாது என்று சொல்லிவிட்டு வந்தேன்.

மற்ற விவரங்கள் அத்தனையும் முன்பே சொல்லி இருப்பதால் மீண்டும் அவற்றைப் படித்துக் காட்ட வேண்டிய தேவையில்லை என்று சொன்னாலும், விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய கடன்களைப் பொறுத்தவரையில் என்ன சலுகைகளைச் செய்து உள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1978 மே திங்களில் விவசாயிகள் போராட்டத்தில் கூட்டுறவுக் கடன்கள் முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டும். கடன் வசூல் ஒத்தி வைக்கப்படவேண்டும். ஜப்திசெய்வது நிறுத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை எழுப்பப்பட்டன. அந்தக் கோரிக்கைகளில் கடனைத் தள்ளுபடி செய்வதைத் தவிர மற்றக் கோரிக்கைகள் எல்லாவற்றின் மீதும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. விவசாயச் சங்கம் எழுப்பியுள்ள அந்தக் கோரிக்கை குறித்து மத்திய அரசு ஒப்புக் கொள்ளவில்லை. எங்களால் அறிவிக்கப்பட்ட சலுகைகள்—வட்டி விகிதத்தைக் குறைத்தும், சிறிய விவசாயிகள்மீது ஜப்தி நடவடிக்கை எடுக்காமல் இருக்கவும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

சில இடங்களில் ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது என்றும், அதிகாரிகள் சாதாரண ஏஊழக் குடியான வர்கள் வீட்டில் புகுந்து அவர்களுடைய பொருள்களை ஜப்தி செய்திருக்கின்றனர் என்றும் சில குறைகள் சொல்லப்பட்டன. அவைகளை உடனுக்குடன் கவனித்து அப்படி அதிகாரிகள் யாரும், கட்டளையை மீறிச் செயல்பட்டு இருப்பார்களானால் உடனே அவர் களை சஸ்பெண்டு செய்யவேண்டும் என்றும், அவர்களை வேறு இடத்திற்கு மாற்றம் செய்யவேண்டும் என்றும் சொல்லி இருக் கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெல் விளைவிக்கின்ற விவசாயிகளுக்கு இப்போது தரப்படுகின்ற ரூ.77 போதாத்து என்று கூறியதற்கு நாங்கள் ரூ.90-95 தரலாம் என்பதற்காக நா கள் மத்திய அமைச்சர்களை நேரில் பார்க்கிற போதும், அமைச்சர்களோடு விவாதிக்கிறபோதும், அதுகுறித்துப் போராடுவதும், கடிதம் எழுதுவதும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது என்பதைச் சொல்கிற அதே நேரத்தில், எங்கள் கடமை அதோடு முடிந்து விட்டது என்று பேசாமல் இருக்கவில்லை. வருகின்ற 22-ம் தேதி அது பற்றிப் பேச இந்த அரசின் சார்பாக என்னையும். விவசாயத் துறை அமைச்சரையும் மத்திய அமைச்சரவையில் இருக்கிற விவசாயத்துறை அமைச்சர் அழைத்து இருக்கிறார் என்பதையும், அந்த 22-ம் தேதி பேச்சு வார்த்தையில் என்ன முடிவு எடுக்கப்போகிறோமோ அந்த முடிவு

1978 செப்டம்பர் 12] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

சட்டசபை அப்போது கூடாமல் இருந்
உறுப்பினர்களுக்கு-இந்த தெரிவிக்கப்படும். பத்திரிகைகளுக்குக்
தாலும்-கடிதம் வாயிலாகத் தெரிவிக்கப்படும் என்று நான்
கொடுக்கப்படும்—செய்தி மூலமும்
தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த வகையில் நாங்கள் எங்கள் வேலை முடிந்து விட்டது
என்று பேசாமல் இருக்கவில்லை, நடவடிக்கைகளை எடுத்துக்
கொண்டுதான் வருகிறோம் என்பதை நான் மாண்புமிகு உறுப்
பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளவேண்டும் என்பதற்காகவே
நான் இதை இங்கே சொல்லியிருக்கிறேன்.

நாங்கள் மைய அரசோடு அதற்காகப் போராடிக் கொண்டு
இருக்கிறோம். கோதுமைக்கு நீங்கள் ரூ.112 கொடுக்கிறபோது,
இங்கே மட்டும் ரூ.75 கொடுப்பது என்ன நியாயம் என்று
கேட்டோம். அவர்கள் பல்வேறு காரணங்களைக் கூறினாலும்,
நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று எடுத்துக்காட்டி,
இங்கே இருக்கும் விவசாயிகளுக்கு ஏற்பட்டு இருக்கும் தொல்லை
கள், வறட்சியாலும், வெள்ளத்தாலும், அதற்குப்பிறகு கடனாலும்
பாதிக்கப்பட்டவர்கள் எத்தகைய தவிப்பிற்கு உள்ளாக்கப்பட்டு
இருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லி, நாங்கள் கடிதப்
போக்குவரத்து மூலம் எங்கள் நிலைமையை எடுத்துச்சொல்லி
வருகிறோம். 22-ம் தேதி நடக்க இருக்கும் கூட்டத்தில் நிச்சயமாக
மைய அரசு வேறு தவறான முடிவு எடுக்காது என்ற நம்பிக்கையோடு
சொல்லிக்கொள்கிறேன். இங்கே இருக்கும் மாண்புமிகு உறுப்
பினர்கள் அனைவரும் ஒரே கருத்தை எடுத்து வைத்த நிலைமையில்,
அதை அறிகிற மைய அரசு நிச்சயமாக ஒரு தவறான முடிவுக்குப்
போகாது என்ற நம்பிக்கையோடு நான் சொல்ல விரும்புகிறேன்.
நம்பிக்கை சில சமயம் தோல்வி அடைவதும் உண்டு. என்றாலும்,
இதற்கு வழி இல்லாமல் போகுமானால் முயற்சி திருவினை ஆக்கும்
என்று சொல்லியிருக்கிறார்கள்—மீண்டும் முயற்சித்துப் பார்ப்போம்.
வேறு வழி இல்லை என்றால் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்
களையும், ஆராய்ச்சி வல்லுநர்களையும், நிபுணர்களையும் அழைத்து
அவர்களுடைய கருத்துக்களைக்கேட்டு, எந்த வகையில், எப்படி
எல்லாம் மைய அரசுக்கு எடுத்துக் கூற முடியுமோ அப்படி
எடுத்துக் கூறி அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து என்ன முடிவை
எடுக்கிறார்களோ அதை ஏற்று, அதன்படி இந்த அரசு மத்திய
அரசோடு அந்த நடவடிக்கைகளில் இறங்கி, ஒரு நல்ல முடிவு
காணப் பாடுபடும் என்பதை நான் இங்கே தெளிவாகச் சொல்லிக்
கொள்கிறேன்.

(மாலை 4—50)

இந்திய ரிசர்வ் வங்கியால் நியமிக்கப்பட்ட குழு கடன் நிலு
வையை ரத்து செய்ய வேண்டுமென்ற இந்த அரசின் பரிந்
துரையைப் பரிசீலித்துள்ளது. இந்தக் குழுவின் பரிந்துரை வர
வேற்கத்தக்கது. ஆயினும் சில பணச் சலுகைகளை மனதிற்
கொள்ள வேண்டும். இந்தக் குழுவின் பரிந்துரையில் கடன்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 12

நிலுவையை ரத்து செய்வதால் ஏற்படும் இழப்பை எவ்வாறு
ஈடுகட்டுவது என்பது பற்றியோ மத்திய மாநில அரசுகள் பகிர்ந்து
கொள்வதா அல்லது ரிசர்வ் வங்கி பகிர்ந்து கொள்வதா அல்லது
மாநில அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமா என்பது பற்றியோ
தெளிவாக்கப்படவில்லை. மத்திய விவசாய அமைச்சரிடம் சமீ
பத்தில் பேசும்போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சலுகைகள்
அளிக்க வேண்டும்; அதற்கு எல்லா மாநிலங்களையும் கலந்து
ஆலோசிக்க வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறோம்.

இந்த வகையில் நாங்கள் எங்கள் கடமைகளைச் செய்யும்போது
இங்கே இருக்கின்ற மாமன்றத்து உறுப்பினர்களைக் கேட்டுக்
கொள்கிறேன். இந்த உண்மைகளை மக்களிடம் சொல்லுங்கள்.
நாங்கள் விவசாயிகள் பக்கம் இல்லை என்றோ, விவசாயிகளுக்குக்
கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் அவர்களைப் பழி
வாங்கும் நோக்கத்தோடு செயல்படுகிறோம் என்றோ அவர்கள்
நினைக்காத வகையில் உண்மைகளை எடுத்துச் சொல்லுங்கள். தவ
றான எண்ணத்தை அவர்களிடையே பரப்புவதைத் தடுக்கின்ற
முறையிலே நீங்கள் அவர்களுக்குச் சொல்லுங்கள் என்று உங்களை
நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கக் கடன் நிலுவைகளைப் பெருமளவில் நாம்
எதிர்நோக்கியுள்ளோம். காலம் கடந்த நிலுவைகள் ஆண்டுக்
காண்டு நம் மாநிலத்தில் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது.
கடன் வசூலும் திருப்திகரமாக இல்லை. குறுகிய காலக் கடன்
என்றும் நீண்டகாலக் கடன் என்றும் பல்வேறு கடன் நிலுவை
களின் விவரங்களை நான் இங்கே வெளியிட வேண்டுமென்ற
கட்டாயத்தில் இருக்கிறேன்.

30-6-1974-ல் 17·5 சதவிகிதம் : 7.2 சதவிகிதம்
30-6-1975-ல் 20 5 சதவிகிதம்; 30-6-1976-ல் 24.8 சத
விகிதம் ; 30-6 1977-ல் 27.9 சதவிகிதம். 30-6-1978-ல்
இன்னும் சரியான விவரம் கிடைக்கவில்லை.

ஆனால் இந்த ஆண்டு 15 மத்திய வங்கிகளில் 8 மத்திய வங்கி
கள்தான் 'ஏ' பிரிவை அடைந்திருக்கின்றன. ஆனால் சென்ற
ஆண்டு 14 வங்கிகள் 'ஏ' பிரிவை அடைந்திருந்தன.

நீண்டக் காலக் கடன் வழங்கும் நிலையில் 273 தலைமை நில
வள வங்கிகளில் 93 வங்கிகள் இருந்தன. ஆனால் இந்த ஆண்
டில் நான்கு வங்கிகள் மட்டுமே கடன் வழங்கும் தகுதி
பெற்றிருக்கின்றன.

தக்க நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதன்
மூலம் கடன் வசதி செய்ய வேண்டிய சூழ்நிலைகளை உருவாக்க
முடியும். என்பதன் தற்போதுள்ள நடைமுறையே தொடர்ந்து
நீடிக்க வேண்டுமென்று மத்திய அமைச்சர்களிடம் இருந்து,

1978 செப்டம்பர் 12] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

நீர்ப்பாசனம் மற்றும் விவசாய அமைச்சரிடமிருந்து எங்களுக்குத்
தகவல் வந்திருக்கிறது. நாங்கள் திரும்ப அவர்களுக்குச்
சொல்லியிருக்கிறோம். தொடர்ந்து வரும் இயற்கை இன்னல்
களால், வறட்சி, வெள்ளம் போன்றவைகளால்தான் இந்த
அளவுக்குக் காலம் கடந்த நிலுவைகள் ஏற்பட்டிருக்கின்றன
என்றும் சமீபத்தில் ஏற்பட்ட விவசாயிகள் போராட்டத்
தினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறியிருக்
கிறோம்.

இதே முறையில் சாதாரணமாகக் கடன் வசூல் பாதிக்கப்
படுமானால் மத்திய அரசு ரிசர்வ் வங்கிக்கு விதிமுறைகளைச் சிறிது
தளர்த்தி தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வசதி
அளிக்க வேண்டுமென்று நாங்கள் பரிந்துரை செய்திருக்கிறோம்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேஷனல் டெவலப்
மென்ட் கவுன்சில் கூட்டத்திலும் தெரிவித்திருக்கிறேன்.

அடுத்து, கூட்டுறவுத் துறை மூலமாகத் தரப்படுகின்ற கடன்
களை விவசாயிகள் திரும்பச் செலுத்தாத காரணத்தால் அவர்
களுக்குக் கடன் கொடுக்கப்படவில்லை. கடன்களைத் திருப்பிச்
செலுத்த முடியாததற்கு ஏதோ காரணங்களையும் சட்டக்கார
ணங்களையும் காட்டி அவர்கள் திருப்பிச் செலுத்தாத காரணத்
தால் அவர்கள் மீது ஜப்தி போன்ற நடவடிக்கைகள் எல்லாம்
எடுத்துக் கொண்டிருக்கிறார்கள், கூட்டுறவுத் துறை புதிதாகச்
சட்டத்தை எல்லாம் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றெல்லாம்
பேசினார்கள் இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள். கூட்டுறவுத்
துறையின் 'ஏ' வங்கி, 'பி' வங்கியாக மாறி இருக்கின்றது
என்பதையும் சொல்லி இருக்கிறார்கள். இங்கே நான் ஒன்றைச்
சொல்ல விரும்புகிறேன்.

வெள்ளம், புயல் போன்ற பலவிதமான காரணங்களால் பயிர்
பாதிக்கப்பட்டு அதற்காக வழங்கப்பட்ட குறுகிய காலக் கடன்
களை விரைவில் அவர்கள் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில்
நடுத்தரக்காலக் கடன்களாக மாற்றியமைத்து கிராமக் கூட்டுறவுச்
சங்கங்கள் வழங்கி வருகின்றன. பயிர்ப்பாதிப்பிற்கு ஆளான
விவசாயி தனக்குக் கொடுக்கப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்த
முடியாத நிலையில் அவர்களுக்கு மேலும் புதிய கடன்களைக்
கொடுக்க வேண்டும் என்பதற்கு எந்தவித நியாயமும் இல்லை.
திருப்பிச் செலுத்த முடியும் என்ற நிலையிலே உள்ளவர்கள் கூட
திருப்பிச் செலுத்தாத வகையில் சிலரால் தடுக்கப்பட்டு அந்தக்
கடன்கள் வசூலிக்கப்படாமல் கடன் நிலுவை அதிகரித்து
விட்டது.

அதனால் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதுபோல் 'ஏ' வகுப்
பில் இருந்த 14 மாவட்ட மத்திய வங்கிகளிலே 5 மாவட்ட
மத்திய வங்கிகளை 'பி' வகுப்பிலும் ஒரு வங்கியை 'சி' வகுப்
பிலும் சேர்க்கப்பட்டுள்ளது.

[திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 12

இங்கே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான்
முன்பே சொன்னேன். விவசாயப் போராட்டம் நடந்த சம
யத்திலேயும் இதே அவையிலே நான் குறிப்பிட்டது உண்டு.
இப்போது விவசாயிகளுக்குரிய இந்தப் போராட்டங்களைத்
தூண்டிவிடுபவர்கள் யாராவது வெற்றி பெறுவார்களே
யானால் அதனால் கஷ்டப்படப் போகின்றவர்கள் நிச்சயமாக ஏழை
விவசாயிகள்தான் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். இருப்பினும் கடன்களைத் திருப்பிச் செலுத்தி விட்டால்
மறுநாளே திரும்பப் பெறலாம் என்றும் நான் சொன்னேன்.
அப்போதிருந்த உண்மை நிலைமைகளை உணர்ந்துதான் நாங்கள்
அவற்றை வெளியிட்டோம் என்பதை அவர்கள் கவனிக்கவில்லை
என்பதை எண்ணும்போது உண்மையிலேயே ஏமாற்றமாக இருக்
கின்றது. இதற்கு மேலும் நாங்கள் விட்டுக் கொடுக்க முடி
யாது என்பதையும் ஆனாலும் அதற்காக நாங்கள் மத்திய அரசி
டம் நிச்சயமாக வற்புறுத்தி அவர்கள் இந்தப் பணியை, இந்த
உதவியைச் செய்தாக வேண்டும் என்று நிர்பந்திக்கிற அள
வுக்குக் கூட நாங்கள் எங்கள் கடமையைச் செய்வோம் என்று
இங்கே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு நான் உறுதியாகக் கூறக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இங்கே திரு. உத்திராபதி அவர்கள் கூட ஒரு கருத்
தைச் சொல்லி இருக்கிறார்கள். 1977 ஆம் ஆண்டு மத்திய
சர்க்காரிலிருந்து பெரிய சிறிய விவசாயிகள் 1333 கோடி ரூபாய்
தான் பெற்றிருக்கிறார்கள். 1977 ஆம் ஆண்டு பெரிய நடுத்தர
முதலாளிகள் 5539 கோடி ரூபாய் கடன் பெற்றிருக்கிறார்கள் என்று
அவர்கள் குறிப்பிட்டுக் காட்டி இருக்கிறார்கள். தமிழக
விவசாயிகள் 1977 ஆம் ஆண்டு பெற்றிருக்கக்கூடிய கடன் ரூபாய்
120 கோடிதானே, இதை ஏன் தள்ளுபடி செய்யக் கூடாது என்று
கேட்டிருக்கிறார்கள். அது நியாயமான வாதம் என்பதை நான்
மறுக்கவில்லை.

ஆனால் ஒன்றை நான் சொல்லியாக வேண்டும். இப்படிப்
பட்ட ஒரு நிலைமையினை முன்னாலே இருந்தவர்கள் கொண்டு
வந்திருக்கிறார்கள். முன்னாலே இருந்தவர்கள் என்று சொல்
லும்போது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளை மட்டுமோ
அல்லது குடியரசுத் தலைவர் ஆட்சியை மட்டுமோ எடுத்துச்
சொல்கிறேன் என்று எண்ண வேண்டாம். நீண்டகால
மாகவே ஆரம்பத்திலேயே இருந்து இப்படிப்பட்ட ஒரு நிலை
மையைக் கொண்டு வந்து விட்டதன் விளைவையே அவர்கள்
பின்பற்றுகிறார்கள் என்ற உண்மையை நான் சொல்லும்போது
அதை மாற்ற வேண்டும் என்ற எங்கள் விருப்பத்தோடு உங்கள்
விருப்பமும் சேரும்போது இந்திய அரசு நிச்சயமாக அதைச்
செய்யும் என்பதை மீண்டும் நான் வற்புறுத்திக் கூற விரும்பு
கிறேன். அந்தப் பணியினை நாம் செய்ய வேண்டியவர்களாக
இருக்கின்றோம். அப்படி நடைமுறையில் இருக்கின்ற நேரத்தில்
எங்களுடைய திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் தடுக்கப்

1978 செப்டம்பர் 12] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

படுகின்ற நேரத்தில் நாங்கள் ஆட்சிக்குவருவதற்கு முன்பு மக்களி
டம் என்ன தெரிவித்துவிட்டு வந்தோமோ அது நிறைவேற்றப்பட
முடியாமல் தடுக்கப்படுகின்றது. அதைப் பார்த்துக்கொண்டு
நாங்கள் பேசாமல் இருக்க முடியாது என்பதை மாண்புமிகு
உறுப்பினர்கள் நன்கு உணருவார்கள் என்று கருதுகிறேன்.

[மாலை 5—00.]

ஆகவே நிச்சயமாக மைய அரசு விதிகளைத் தளர்த்தி
விவசாயிகளுக்கு வசதி செய்து தரவேண்டும் என்று இந்த மாமன்
றத்தின் சார்பாக என் கருத்தை நான் இங்கே வெளியிடுகிறேன்.
அந்த வகையில் நிச்சயமாக இந்த தமிழக அரசு எந்த வகையி
லும் தன் கடமையைச் செய்யும் என்பதையும், அந்தக் கட
மையை நிறைவேற்றும்போது பிரச்னைகள் எங்கே கொண்டு
போய் விடும் என்பதை இப்போது நான் சொல்ல முடியாவிட்
டாலும் ஒன்றை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லலாம்.

நாங்கள் கடன் வசூலிப்பதில் அக்கறை செலுத்துகிறோம் என்
றாலும் ஏதோ எந்த வேலையையும், நாங்கள் இந்த விவசாயப்
பெருங்குடி மக்களுக்கு அல்லது விவசாய உற்பத்தியைப் பெருக்கு
வதற்காகச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அதற்
காக அவையின் நேரத்தை நான் எடுத்துக் கொள்வேன் என்றால்
யாரும் வருத்தப்படமாட்டார்கள் என்று கருதுகிறேன்.
அந்தக் குறிப்பில் ஒன்றிரண்டை மட்டும் நான் படித்துக் காட்ட
விரும்புகிறேன்.

1976—77-ல் மொத்த உற்பத்தி நிலக்கடலையில், 8.29 லட்சம்
டன். 1977—78-ல் 11 லட்சம் டன். பருத்தி, 1976—77-ல்
3.9 லட்சம் டன், 1977—78-ல் 4.4 லட்சம் டன். எதற்காக
இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் நாங்கள் எதையுமே செய்ய
வில்லை, ஒன்றுமே செய்யவில்லை, என்றும் ஆட்சிக்கு வந்து
ஓராண்டுகாலம் ஆகியும் என்ன செய்தீர்கள் என்றும் கேட்பவர்
களுக்கு, இவைகளை எல்லாம் நாங்கள் வெளியிடாத காரணத்
தால் அவர்களுக்குத் தெரிய முடியாமல் போயிருக்கும் என்ற
எண்ணத்துடன் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்ப
தற்காகத்தான் இதை நான் உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

கீழ்க்கண்ட புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக நட
வடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

புதுக்கோட்டையில் ஒரு விதைப் பரிசோதனை நிலையம் ;

தென்னை விளைச்சலைப் பெருக்க கன்னியாகுமரி மாவட்டத்தில்
தீவிர அபிவிருத்தித் திட்டம் ;

கொல்லி, கல்ராயன் மலைப்பகுதிகளில் பழத்தோட்டங்கள்
அமைத்தல் ;

திருச்சி மாவட்டத்தில், தரக்கட்டுப்பாடு, பிரிவு ஒன்றை
அமைத்தல் ;

இதை நான் இங்கே குறிப்பிடுவது விவசாயத் துறையில் இவை போன்ற பல பணிகளை நாங்கள் செய்ய இருக்கிறோம் என்பதையும் உணர்த்துவதற்குத்தான். இதை எல்லாம்பற்றி, மேலும் இங்கே புள்ளி விவரங்கள் படிப்பது என்றால் அவையின் நேரத்தை வீணாக்குவதாகக் கருதுவீர்களோ என்ற அச்சம் இருக்கிறது. எனவே அடுத்ததாக கைத்தறிபற்றி ஒருசில வார்த்தைகள் குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும் என்று நான் கருதுகிறேன்.

கைத்தறி பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் ஒரு கருத்துச் சொன்னார்கள். 'தீபாவளிவரை காத்திராமல் வருகிற அண்ணா, பெரியார் இவர்கள் பிறந்த தின விழாவினையொட்டி, அவற்றைச் சிறப்பிக்கும்பொருட்டு கைத்தறித் துணிக்கு சிறப்புத் தள்ளுபடி அளிக்க வேண்டும்' என்று சொன்னார்கள்.

சென்ற வருடம் 3–9–1977 முதல் 17–9–1977 வரை அண்ணா மற்றும் பெரியார் பிறந்த நாள் நினைவாக கைத்தறித் துணிகள் விற்பனைமீது தள்ளுபடி 10 சதவீதம் எல்லா ரகங்களுக்கும் அரசாங்கம் அளித்தது. இந்த வருடம், 1978–79-ல் மத்திய அரசாங்கம் குறிப்பிட்டுள்ள ரகங்கள்தவிர மற்ற எல்லாக் கைத்தறித்துணி விற்பனைமீதும் 20 சதவீதம் சிறப்புத் தள்ளுபடி அளிக்க சம்மதித்திருக்கிறோம் என்பதைத் தெவித்துக்கொள்கிறேன். அதற்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இதில் 10 சதவீதம் மத்திய அரசும் மீதியை மாநில அரசும் ஏற்றுக்கொள்ளும். 30—நாட்களில்— 1–8–1978 முதல் 7–8–1978 முடிய மறைந்த திரு. காமராஜ் அவர்களின் நினைவாக 20 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்பட்டது. மீதியுள்ள 23 நாட்களுக்கு இந்தச் சிறப்புத் தள்ளுபடி அளிப்பதுபற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறதுஎன்பதோடு இந்த முடிவு விரைவில் வெளியிடப்படும், இப்போதே வெளியிடுகிறேன், இதையே எடுத்துக்கொள்ளலாம்.

இங்கே இப்போது மற்றொன்றையும் சொல்லிவிடுவது நல்லது என்று கருதுகிறேன். இந்த மாமன்றத்தில் அய்யா பெரியார் அவர்களுடைய ஓவியத்தை திறந்து வைக்க வேண்டும் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பல நண்பர்களும் திரு. கிட்டப்பா போன்றவர்களும் சொன்னார்கள். நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். வருகிற 17-ம் தேதியன்று இந்த விழாவை சிறப்பாக நடத்த முடியாத நிலையிலிருப்பதால், நாங்கள் தீர்மானித்துள்ளபடி 12-வது மாதம் முழுமையாக சென்னையில் விழா கொண்டாடி ஐயா அவர்களுடையவும், டாக்டர் அம்பேத்கார் அவர்களுடையவும் படங்களை இங்கே திறந்து வைப்பது என்று நாங்கள் முடிவு எடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ....(பலத்த கரவொலி)....இதை உடனடியாகச் செய்யக்கூடாது என்பதல்ல ; நாங்கள் திட்டம் போட்டது 12 மாதங்கள் அய்யா அவர்களுடைய பிறந்த நாள் விழாவை

ஒவ்வொரு மாவட்டத்திலும் கொண்டாடிவிட்டு இறுதியாக 12-வது மாதம் சென்னையில் கொண்டாடுவது என்றும் முடிவு எடுத்ததற்கு ஏற்ப இதை நாங்கள் கருத்தில் வைத்துக்கொண்டு இருந்தோம், இப்போது யாருக்கும் பிரச்சினையில்லாத வகையில் இதை ஏற்றுக்கொள்வதில் உண்மையிலேயே நான் நன்றியும் தெரிவித்துக்கொள்வதோடு மகிழ்ச்சியும் கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர் பாலகிருஷ்ணன், எம்.எல்.ஏ. அவர்கள், 'பரமக்குடியில் கைத்தறிச் சங்கங்களில் ஏராளமான கைத்தறித் துணிகள் தேங்கிக்கிடக்கின்றன என்றும், பெரிய கைத்தறிச்சங்கங்களில் பல ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன. பெண் தொழிலாளிகளின் நிலைமையை மேம்படுத்தவேண்டும், என்றும் சொன்னார்கள். கைத்தறித் துறையை நாங்கள் எந்த அளவுக்கு ஜாக்கிரதையோடு செயல்படுத்த முடியுமோ அந்த அளவுக்குச் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம் என்றாலும், ஒன்றைக் கூற விரும்புகிறேன்.

பரமக்குடி பகுதியிலுள்ள 35 கூட்டுறவு கைத்தறிச் சங்கங்களில் 31–7–1978-ல் எல்லா கைத்தறி சங்கங்களிலுமாகச் சேர்ந்து 38·88 லட்சம் ரூபாய் பெறுமான அளவுக்கு கைத்தறித் துணிகள் தேங்கி இருந்தன. இவற்றை 1–8–1978 முதல் 7–8–1978 வரை 20 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடி அளித்து விற்பனை செய்ததன் மூலமாக 15·32 லட்சம் ரூபாய் அளவுக்கு விற்பனையாகியிருக்கிறது என்பதையும் இன்னும் இதுபோன்ற சிறப்புத் தள்ளுபடி கொடுப்பதின் மூலமாகச் குறிப்பிட்ட கால வரையறைக்குள் கையிருப்பிலுள்ள துணிகளை விற்பனை செய்ய முடியும் என்றும், இப்போது 27·36 லட்சம் ரூபாய் அளவுக்கு மட்டுமே இருப்பில் உள்ளது என்றும், இந்த இருப்பு சாதாரணமாக இரண்டு மூன்று மாதங்களுடைய உற்பத்தி அளவு தான் என்றும் இந்த இருப்பும் தீபாவளி காலத்தில் விற்பனையாகிவிடும் என்றும் நம்பப்படுகிறது.

பெரிய கைத்தறிச் சங்கங்களில் ஊழல் என்று சொல்வதைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கம் இவற்றைக் கவனித்து, எங்கு பண கையாடல்கள் நடைபெறுகின்றதோ, எங்கு ஒழுங்கீனங்கள் நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு என்று இருக்கும் சட்டங்களைக் கொண்டு முறைப்படி நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்துடன், கைத்தறி-நூல் துணை இயக்குநரால் இது போன்ற நிலைமைகளை ஆராய்ந்து அறிந்து, எந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை விசாரணை செய்து, தேவைப்பட்டால் நிர்வாகத்தைக் கூடக் கலைத்துவிட்டு நடவடிக்கை எடுப்பதற்கும் இடமிருக்கிறது.

மேலும் பெண்கள், தாய்மார்கள் இவர்களுடைய நிலைமையை ஆராய்வதற்கும், துணைத்தொழிலாளர் ஆணையாளர் திரு. ராஜா சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைத்து, அக்குழு இதைப்பற்றி விசாரித்து அறிந்து அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்திருக்கிறது. அந்த அறிக்கையில் பல பரிந்துரைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதில் பெண் தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில் ஐந்து வயதுக்குக்கீழ் உள்ள குழந்தைகளைப் பராமரிப்பதற்குப் பராமரிப்பு நிலையம் ஏற்படுத்தவேண்டும் என்று சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அந்தக் குழு சிபாரிசின் அடிப்படையில் ஒரு மசோதா தயாரிக்கப்பட்டுள்ளது. அதுவும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

நவீன விற்பனை நிலையங்களை அதிகரிப்பது என்ற முறையில் தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் ஆண்டு ஒன்றுக்கு 43 கோடி ரூபாய் அளவுக்கு கைத்தறித் துணிகள் விற்பனை ஆகின்றன; இதில் பாதி அளவு கோ-ஆப்டெக்ஸ் மூலமாகக்கொள்முதல் செய்யப்பட்டுத் தமிழ்நாட்டில் 364 விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றன ; மேலும் விற்பனையைப் பெருக்குவதற்காக 1977–78-ல் 56 புது விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன அதில் 14 விற்பனை நிலையங்கள் நவீனப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு புதிய ரகங்களாக பிரின்டட் துணிகள், பாலிஸ்டர் துணிகள் போன்றவை உற்பத்தி செய்யப்பட்டு, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சுபோன்ற நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன மேலும் தூதுக் குழுக்கள் மூலம் கைத்தறித் துணிக்கு ஆதரவு பெறப்பட்டு வருகிறது. மேலும் ஆஸ்திரேலியா, பிரான்சு, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கெல்லாம், குறிப்பாக அலங்காரத் துணிகள், பெட்ஷிட்கள், தலையணை உறைகள் போன்றவைகள் அனுப்பப்படுகின்றன. மேலும் துணி அணி வகுப்பு மூலமாகவும் விற்பனை அதிகரிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட முயற்சிகளின் மூலமாக 1976-ல் 17 கோடியாகவும், 1977-ல் 19 கோடியாகவும், 1977–78 ல் கோடியாகவும் விற்பனை 23 உயர்ந்துள்ளது.

(மாலை 5–10).

1975–76 ஆம் ஆண்டிலே 50 லட்சமும், 1976–77 ஆம் ஆண்டிலே ஒரு கோடியாகவும் இருந்தது. 1977–78-லே 1·50 கோடியாக உயர்ந்துள்ளது. கைத்தறிப் பொருள் உற்பத்திக்கு ஏற்றவாறு, விற்பனை ஆகாததால் 31–7–1978-லே நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலே 10 கோடி அளவிற்கும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திலே 14 கோடி அளவிற்கும் பெறுமான கைத்தறிப் பொருள்களின் தேக்கம் இருந்தது. எனவே, இதற்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசின் உதவியுடன் 1–8–1978 முதல் 7–8–1978 வரை விற்பனை ஆன கைத்தறிப் பொருள்களுக்கு விற்பனையில் 20 சதவீதம் தள்ளுபடி வழங்கப்பட்டது. இதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், நாங்கள் நெசவாளர்களுக்கு எதையும் செய்யவில்லை.

என்று யாரோ கொடுக்கின்ற தவறான புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு, எங்கள் மீது தவறான எண்ணம் கொண்டிருக்கின்றவர்களுக்கு, எங்களால் முடிந்த பணியை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை இப்போதாவது ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையில், நான் இந்தக் குறிப்புகளைச் சொல்லி இத்தை முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை

தூத்துக்குடியில் ஏற்படுத்த இருக்கின்ற தூத்துக்குடி ஆல்காலி கெமிகல் லிமிடெட் நிறுவனத்தைப் பற்றிய விவரங்களை நான் சொல்லியாக வேண்டும். இப்படிப்பட்ட ஒரு புதிய அமைப்பை நாங்கள் ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். சோடா ஆஷ், அம்மோனியம் குளோரைட் உற்பத்தி செய்வதற்கு தூத்துக்குடி ஆல்காலி கெமிகல் லிமிடெட் நிறுவனம் ஒன்றைத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம், ஸ்பிக் உரத்தொழிற்சாலைக்கு அருகாமையிலேயே அதோடு சேர்த்து ஏற்படுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு 30 கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்லப்படுகிறது. இதற்கு ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் டன் உப்பு மூலப் பொருளாகத் தேவைப்படுகிறது. இந்த உப்பை உற்பத்தி செய்வதன் மூலம், 1,500 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதன் மூலம், சுமார் 500 பேர்களுக்கு நேரடியாக வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தொழிற்சாலை அம்மோனியாவை மூலப்பொருளாகக் கொண்டு, அந்த அடிப்படையில் இயங்கும் ஸ்பிக் அமைப்பிலே அதிகமாக உற்பத்தியாகும், அம்மோனியா இதற்குப் பயன்படுத்தப்படும். இதனால்தான் இந்த அமைப்பை ஸ்பிக் அமைப்பிற்கு அருகாமையிலேயே அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலையை அங்கே அமைக்கலாம் என்று முன்பே ஸ்பிக் நிறுவனம் கேட்டுள்ளது. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் அதாவது டிட்கோ நிறுவனம் ஒன்று சேர்ந்து இந்த நிறுவனத்தை அமைப்பதற்கு ஒப்புதல் அளித்தது. ஆனால், இந்தத் தொழில் நிறுவனத்தை ஏற்படுத்துவதற்கு ஸ்பிக் பங்கு மூலதனம் போடக்கூடிய நிலைமையில் இன்றில்லை. எனவே, தனிப்பட்டவர்கள் நிறுவனத்தோடு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ஒன்றாகச் சேர்ந்து செயல்படுவது பற்றி 1–11–1977 ஆம் தேதி நடைபெற்ற டிட்கோ நிர்வாகக் குழுவில் இதுபற்றி விவாதிக்கப்பட்டு, இத்திட்டம் பொருளாதார ரீதியாக கட்டுபடியாகக் கூடிய திட்டமென்றும், தனிப்பட்டவர்களோடு சேர்ந்து செயல்படலாம் என்றும் முடிவெடுத்தது. இதனால் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ரூ. 33·84 கோடி செலவாகும் என்று கோரி, டிட்கோ அரசின் அனுமதியைக் கேட்டது. அரசு அந்தச் செயற்குறிப்பைப் பரிசீலித்து, இத் திட்டம் டிட்கோ நிறுவனத்தின் மூலமாகச் செயலாக்கப்படுவதற்கு அனுமதி அளித்து, அதற்காக 5·75 கோடி ரூபாயை அளிப்பதென்று முடிவுசெய்து, அதற்கான

அரசு ஆணையை 12–7–1978 அன்று பிறப்பித்தது. இதற்கு திரு. பி.என். வேதநாராயணன் தலைமை இயக்குநராக 6–7–1978 அன்று பொறுப்பேற்றுள்ளார். தற்போது இதற்கான செயலாக்கப் பணிகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் ஆண்டு ஒன்றிக்கு 66,000 டன் சோடா ஆஷ், 66,000 டன் அமோனியம் குளோரைடும் ஆகும். பெரும்பாலான மக்களுக்கு, குறிப்பாக கிராமங்களிலே பொருளாதார வசதி குறைந்தவர்களுக்கு இதனால் வேலைவாய்ப்பு கிடைக்கும். இவ்வாறு இங்கே கிடைக்கக்கூடிய மூலப் பொருள்களை வைத்துக்கொண்டு, நம் மாநிலத்தில் பெருவாரியான சிறுதொழில்களை ஏற்படுத்தும் முயற்சியை ஊக்குவிப்பதற்காக இந்த அரசு தகுந்த உதவிகள் அளிக்கும் வகையில் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. சிறிய தொழிற்சாலைகளில் உற்பத்தியாகக்கூடிய பொருட்களை அடிப்படையாகக் கொண்டே பெரிய தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டு வருகின்றன. எனவே, இப்படி ஒன்றோடொன்று இணைந்து செயல்படக்கூடிய சிறிய தொழிற்சாலைகள் இந்த நாட்டிலே ஏற்படுவதற்கான முயற்சிக்கு இந்த அரசு ஊக்கம் அளித்து வருகிறது.

இக்கொள்கையின் அடிப்படையில் மூன்று பெரும் தொழில்களைத் துவக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ஆஸ்பஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் தயாரிக்கும் தொழிற்சாலை 16.6 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட இருக்கிறது. இதன் மூலம் 226 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். சுங்கப்பா காகித ஆலை 350 லட்சம் ரூபாய் செலவில் துவங்கப்பட இருக்கிறது. இதன் மூலம் 300 பேருக்கு வேலைவாய்ப்பு ; ஆயிரம் பேருக்கு சார்பு வேலை வாய்ப்புக் கிடைக்கும் ; தூத்துக்குடியில் ஆல்காலி கெமிகல்ஸ் என்ற தொழிற்சாலை 33.84 கோடி ரூபாயில் அமைக்கப்பட இருக்கிறது. இதன் மூலம் 500 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு, 1,500 பேருக்கு சார்பு வேலைவாய்ப்புக்கிடைக்கும்: அந்த அளவில் பெருந் தொழில்களைப் பொறுத்தும், சிறு தொழில்களைப் பொறுத்தும் நாங்கள் எங்கள் கடமைகளை எங்களால் உரிய அளவுக்குச் செய்து கொண்டிருக்கிறோம் என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு சுப்பு அவர்கள் ஆளுநர் உரையில் பேசும்போது— மத்திய அரசு கடன் உதவி பெறுவதற்காக கதர் மற்றும் கிராமத் தொழில்களுக்கு மாநில அமைச்சரவையில் இரண்டு அமைச்சர்கள்—ஒருவர் கிராமத் தொழில்களுக்கும் மற்றவர் கதருக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தன்னிச்சையோடு பணியாற்ற முடியுமா என்பது சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது என்ற வகையில் குறிப்பிட்டிருக்கிறார். தவறான தகவலைக் கொடுத்ததாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

பெருமளவில் வேலை வாய்ப்பை
கிராமப்புற மக்களுக்குப் வாழ்வை வளம் பெறச் செய்ய
ஏற்படுத்தி அம்மக்களுடைய தொழில்களைப் பேணி வளர்க்கவும்
வேண்டுமென்றும், கிராமத் அவசியமாகிறது. மத்திய அரசு
ஊக்குவிக்கவும் தனி வாரியம் வளர்ச்சிக்குப் பேருதவியாக
அளிக்கும் கடன் கிராமத் தொழில் தமிழ்நாட்டில் கதர் கிராமத்
இருக்கும். நடப்பு ஆண்டில் கோடி ரூபாய் அளவுக்குக்
தொழில் அபிவிருத்திக்காக ஐந்து கொடுத்து வருவதால்
கடன் உதவியை குறைந்த வட்டிக்குக் விற்பனையும், லாபமும் அதி
உற்பத்திச் செலவுகள் குறைந்து
கரிக்க வாய்ப்பு ஏற்படும்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில் தமிழக அரசு கிராமத் தொழில்களுக்கு என்று தனி வாரியம் அமைக்க மத்திய அரசின் இசைவைக் கோரியுள்ளது. கிராமத் தொழில்கள் மட்டு மல்லாது தொழில்கள் என்று சொல்லும்போது சிறு தொழில் களும் சேர்ந்து தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் கீழ் அமைந்துள்ளது. கிராமத் தொழில்களுக்கு என்று தனியாக வாரியத்தை அமைத்து தனி அமைச்சரை நியமிப்பதன் மூலந் தான் பின்தங்கிய கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பளிக்கக் கூடிய திட்டங்களை முழுமையாகச் செயல்படுத்த முடியும்.

நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். தொழில் மையங்கள் தமிழகத்தில் அமைக்கப்படும் என்று கூறியிருக் கிறேன். அதில் சிறு தொழில்கள், கிராமத் தொழில் களுக்கு வேண்டிய எல்லா வசதிகளும் ஒருங்கிணைந்த முறையில் கொடுக்க வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

சிறு தொழில்கள் வளர 8 மாவட்டங்களில் தொழில் மையங் கள் நிறுவ அரசு முடிவு செய்து 1-6-1978 முதல் செயல் படத் தொடங்கியுள்ளன. பெருவாரியான மக்களுக்கு ஆதாயம் தரத்தக்க வகையில் சுய வேலை வாய்ப்புக்கு வழிவகுக்க சிறு தொழில்களும், கிராமத் தொழில்களும் மாநிலத்தின் பொருளா தாரத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றது. இத்தகைய தொழில்களுக்குத் தேவைப்படும் எல்லா வசதிகளும், உதவிகளும் ஒரே இடத்தில் கிடைப்பதற்கான வகையில் லாபகரமாகச் செயல் படுகிற முறையில் தொழில் திட்டங்களைத்தயாரித்து தேவையான மூலப் பொருள்களைக் குறித்த நேரத்தில் குறித்த விலையில் வழங்கி தொழில் திறம்பட நடக்க தொழில் நுட்ப முறைகள் பற்றி ஆலோசனைகளும் வழங்கப்பட்டு நல்ல முறையில் செயல் படுவதற்கு இது வகை செய்யும்.

(மாலை 5–20)

போதுமான மூலப்பொருட்களைத் தேவையான நேரத்தில் தந்து உதவுதல், உற்பத்தி செய்த பொருள்களை விற்பதில் உதவு தல் ஆகியவை இச்செயல் திட்டத்தில் அடங்கும். மாவட்டத் தொழில் மையங்களை நிறுவுவதன் நோக்கமே அதுதான். எல்லாம் ஒரே கூரையின் கீழே வெறும் விளம்பரத்திற்காக செய்யப் படவில்லை.

[திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 12

1978 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 18-ஆம் தேதியிலிருந்து மாவட்டத் தொழில் மையங்களின் மூலம் ஆகஸ்டு திங்கள் 20 ஆம் தேதி வரையில் 718 சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்டு 300 சிறு தொழில்கள் இப்போது தொடங்கப்பட்டுள்ளன. ஆயிரம் தொழிற் கூடங்களிலிருந்து நிதி உதவி கோரி வந்த மனுக்கள் வங்கிகளுக்குப் பரிநதுரைக்கப்பட்டிருக்கின்றன. 3 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் தொழில்களை ஊக்குவிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக, பட்டுத் தொழிலிலும், தீப்பெட்டித் தொழிலிலும், 35 ஆயிரம் பேர்ளுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. மேற்குறிப்பிட்ட 8 மாவட்டங்களிலே தொழில் மையங்கள் நிறுவும் திட்டங்களின் வாயிலாக இவ்வாண்டு இறுதிக்குள் 1 லட்சத்து 20 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

திரு. க. சுப்பு:—பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தொழில் மையங்கள் இப்போது மாவட்டங்களில் நிறுவப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே மாவட்டங்களிலே அஸிஸ்டெண்ட் டைரக்டர் ஆப் இன்டஸ்ட்ரீஸ் அன்ட் காமர்ஸ் என்ற அலுவலகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன, இந்த இரண்டையும் ஒன்றாக இணைக்க முடியாதா? ஜார்ஜ் பெர்னான்டஸ் அறிவித்த திட்டத்தை செயல்படுத்துகிறார்கள். அவர் மத்திய அமைச்சர், அதை மத்திய தொழில் அமைச்சரே அறிவித்திருக்கிற காரணத்தால் மத்திய அரசின் இலாகாவோடு இங்கே இருக்கக்கூடிய இலாகாவையும் இணைத்துச் செயல்படக் கூடாதா? இரண்டையும் ஒன்றாக்கிச் செயல்படச் செய்தால் எஸ்டாபிளிஷ்மெண்ட் செலவுகளும் குறையுமே.

இன்னொன்று கதர், கைத்தொழிலை மத்திய அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் பிரித்திருக்கிறார்கள், இரண்டையும் தனித் தனியாகப் பிரித்து கதருக்கு ஒரு வாரியம் என்றும் கைத்தொழிலுக்கு ஒரு வாரியம் என்றும் போட்டு, இரண்டு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், இரண்டு வாரிய உறுப்பினர்கள், இரண்டு எஸ்டாபிளிஷ்மெண்ட்கள் ஏன் ஏற்படுத்த வேண்டும்? இது வேலையில்லாமல் இருக்கக்கூடியவர்களுக்கு வேலை வாய்ப்பு தருவதல்ல. வாரியங்களை ஏற்படுத்தி அரசியல்வாதிகளுக்கு வேலைவாய்ப்புத் தருவது ஆகாதா? மத்திய காதி கமிஷனருடைய அனுமதி வாங்காமல் ஏன் கொண்டு வர வேண்டும்? சென்ட்ரல் கமிஷனுடைய அனுமதி பெற்றுத்தான் செய்யவேண்டும், இப்போது கேட்டு இருக்கிறார்கள். ஏன் அனுமதி பெற்றுச் செய்திருக்கக் கூடாது? அதோடு இந்த இரண்டையும் இணைத்துச் செயல்படுத்தக் கூடாதா என்பதுதான் என்னுடைய கேள்வி.

1978 செப்டம்பர் 12]

மாண்புமிகு திரு எம்.ஜி. இராமச்சந்திரன்: மாநில சுயாட்சி
யைப் பற்றி அதிகமாகத் தெரிந்துவைத்திருக்கிற உறுப்பினர்
திரு. சுப்பு அவர்கள் என் பக்கமாகப் பேசுவார், என் அரசின்
பக்கமாகப் பேசுவார்கள் என்று நினைத்தேன். அவர்களைக் கேட்
காமல் ஏன் ஆரம்பித்திருக்கிறீர்கள் என்று கேட்பது ஆச்சரிய
மாக இருக்கிறது, அப்படிப்பட்ட உரிமை நமக்கு இருக்கிறது.
இதைச் செய்தாக வேண்டும், காதித் தொழிலையும் அதை
யொட்டி சிறு தொழில்களையும் பிரிக்காமல் இருந்தால் என்ன
என்ன விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை முன்னாலேயே குறிப்
பிட்டிருக்கிறேன். ஊழல்கள் எப்படி நடைபெறுகின்றன, கை
வினைப்பொருட்கள் கணக்கிலே மட்டும் இருந்தன. யார் என்ன
செய்தார்கள் என்பதையெல்லாம் உங்களுக்குச் சொல்லியிருக்
கிறேன். இதைச் செய்தாக வேண்டும். திட்டம் போடுகிறோம்;
ஏதோ வேடிக்கைக்காகப் போடுகிறோம் என்று நினைக்க வேண்
டாம். மாவட்ட வாரியாக, தாலூகா வாரியாக இப்படிப்பட்ட
திட்டங்களைப் போட்டுக் கொண்டிருக்கிறோம் என்று சொல்வ
தன் மூலம் ஏதோ ஆசைக்காகவோ, புகழுக்காகவோ, பெருமைக்
காகவோ செயல்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்
புரிந்துகொள்வார் என்று நம்புகிறேன். அவர்கள் புள்ளி
விவரங்களைத் தெரிந்துகொள்வதற்கு நல்ல கல்வி அறிவைப்
பெற்று இருக்கிறார்கள். ஆகவே இதை யெல்லாம் பார்க்கும்
போது அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். எனவே ஆசைக்
காக அவ்வப்போது செய்யவேண்டுமென்று செய்யாமல் நாங்கள்
திட்டமிட்டுச் செய்கிறோம் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல
விரும்புகிறேன்.

கதர் வாரியம், கைத்தொழில் வாரியம் என்று பிரித்து இருப்
பது துணிகளை, மக்களுக்குத் தேவைப்படுகிற டிசைனில் செய்
வது, அவைகளை அப்படி உற்பத்தி செய்வதன் மூலம் நாட்டுக்குப்
பயன்படும் வகையில் இந்தத் தொழிலாளர்களுக்குப் பயன்
படுகிற வகையில் ஏற்படுத்திக் கொடுப்பதற்குத்தான். ஒரு பக்கம்
கதர், கிராமத் தொழில்கள் ஆகியவை ஒன்றாக இருந்தால்
என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை உறுப்பினர்கள் புரிந்து
இருப்பார்கள். இரண்டையும் தனியாகப் பிரித்து தொழில்களை
ஒரு அமைச்சரிடம் ஒப்படைத்து நாங்கள் செயல்படுத்தி
வருகிறோம்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, அவருக்கு உதவி செய்
வதற்காகத்தான் கேட்கிறேன். நல்ல நோக்கத்தில் கிராமத்தில்
வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று உருவாக்கப்பட்டிருக்
கிறது. கிராமத்திலே உள்ளவர்கள், தாய்மார்களுக்கு வேலை
கொடுக்க வேண்டுமென்று ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம்
இராமத்தேவன்பட்டி என்ற கிராமப் பகுதியில் ஆரம்பிக்கப்
பட்டிருக்கிறது. அதுவும் காளிமுத்து ஊர். மற்றபடி நகரப்
பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அருப்புக்கோட்டை,
விருதுநகர் எல்லாம் பட்டிக்காடா? இப்படி நகர்ப்புறங்களில்
தானே வந்திருக்கிறது?

[1978 செப்டம்பர் 12

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர் களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதில் ஓரளவிற்கு உண்மையிருக்கிறது. கட்டிடங்களைக் கட்டுவதற்கு முன் கிரா மங்களில் அவற்றை நிறுவ இயலாது. எனினும் தொடர்பு கொள்ள வேண்டிய அதிகாரிகள் மக்களிடமும், தாய்மார்களிட மும் தொடர்பு கொண்டு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து அதன் மூலம் எங்கள் உணர்வுகளை, இந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியுமென்று எண்ணிக் கொண்டிருக்கிறோம்.

இங்கே பேசியவர்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் பட்டுத் தொழில் வளர்ச்சிபற்றிப் பேசும்பொழுது மிகவும் கேலியாகவும், கிண்டலாகவும், நல்ல நகைச்சுவை தோன்றும்படியாகவும் பேசி னார்கள். திரு. சுப்பு அவர்கள் திறமையோடு சொல்லியிருக்கிறார் கள் என்று கருதுகிறேன். ஆனால் ஒரு உண்மையைச் சொல்லி யாக வேண்டும்.

இதே அவையில் இருக்கின்ற, எதிரிலே இருக்கின்றவர்களும், நாங்களும்—நாங்கள் என்று சொல்லக் கூடாது—நாம் எல்லோரும் ஒன்றாக இருந்த காலத்தில் அப்பளத் தொழிற்சாலை பற்றிப் பேசியிருக்கிறோம். இப்பொழுது அதை விட்டுவிடவில்லை. அது தேவைதான் என்று சொல்கிறோம். சில நேரங்களில் நாம் நினைப்பது வேறு. அதை ஏற்றுக்கொண்டு செயல்படும்பொழுது வேறுவிதமாக இருக்கிறது. பட்டுத் தொழில் என்று சொல்வது கேலியாக இருக்கும். ஆனால் நிலைமைகளைப் பார்த்தால், இதனால் எவ்வளவு இலாபம், எத்தனை பேருக்கு வேலை என்று புள்ளி விவரங்களைப் பார்த்தால் மாண்புமிகு உறுப்பினர் கேலி செய்ததை கேலியாக எண்ணாமல் உண்மையை வரவழைக்கத் தந்திரமாக அமைந்துள்ளது என்று நான் எண்ணுகிறேன்.

குறிப்பாகக் கிராமப்புறங்களில் பட்டுப்புழு வளர்க்கும் தொழி லுக்கு ஊக்கம் அளிப்பதன் மூலம் அதிக வேலைவாய்ப்பு உரு வாவதற்கு வழி ஏற்படும். கடந்த ஓராண்டில் பட்டுப்புழு வளர்ப்பதில் 60 சதவீதம் உயர்வும், பட்டு உற்பத்தியில் 75 சதவீதம் உயர்வும் பெறப்பட்டுள்ளன. 1978–79-ல் மேற் கொண்டுள்ள திட்டங்களைச் செயல்படுத்தும்பொழுது 20,000 பேர்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு ஏற்படும் என்று திட்டங்கள் நமக்குச் சொல்லுகின்றன. சிட்கோவும் பல திட்டங்களை மேற் கொண்டிருக்கிறது.

அகதிகள் முன்னேற்றத்தின்கீழ் சிறு தொழில்கள் திட்டங் களுக்கு உதவி வழங்கும் திட்டம் இருக்கிறது. ஜனவரி 1978-ல் தொடங்கப்பட்ட இத் திட்டத்தின்கீழ் அகதிகள் சிறு தொழில்கள் தொடங்க, ஒவ்வொரு வேலைக்கு அமர்த்தப்பட்ட நபருக்கும் ரூ. 10,000 வீதம் கடன் உதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப் பட்டிருக்கிறது. இதன்கீழ் 4 தொழிற்சாலைகளுக்கு ரூ. 2.8 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது.

1978 செப்டம்பர் 12] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

[மாலை 5-30]

தீப்பெட்டித் தொழிற்சாலைகள், இராமநாதபுரம், திருநெல் வேலி ஆகிய மாவட்டங்களிலுள்ள சிவகாசி, கோயில்பட்டி ஆகிய இடங்களில் நடந்து வந்தன. இம்மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதால் அநேக மக்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. எனவே, 100 தீப்பெட்டித் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதில் 50 நடப்பாண்டில்—1978–79-ல் தொடங்கப்படும். மீதி 50 சங் கங்கள் அடுத்த ஆண்டு இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும். நடப் பாண்டில் ஆரம்பிக்கப்படும் 50 சங்கங்களுக்குப் பங்கு மூலதன மாக ரூ. 3.75 இலட்சம் அளிக்க அரசு ஆணையிட்டுள்ளது. அத்துடன் அரசு அலுவலர்களை அளிக்கவும் அரசு ஆணையிட்டு உள்ளது. தீப்பெட்டிகளை விற்பனை செய்ய வசதி செய்யும் பொருட்டு இரண்டு தீப்பெட்டி தொழில் கூட்டுறவுச் பணிச் சங்கங்களை அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. இவற்றிற்கு அரசு பங்கு மூலதனமாக ரூ. 50,000 அளிக்கவும், அரசு அலுவலர் களின் பணியை அளிக்கவும் அரசு ஆணையிட்டுள்ளது.

கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு பெருக முழுமூச்சுடன் அரசு ஈடுபட்டுள்ளது. கிராம எண்ணெய்த் தொழில், கைமுறை காகிதத் தொழில், சத்துள்ள அரிசி, பனைவெல்லத் தொழில், கிராம மண்பாண்டத் தொழில், தேனி வளர்ப்புத் தொழில், சுண்ணாம்பு உற்பத்தித் தொழிற்சாலை ஆகியவற்றுக்கு 1977–78-ல் அரசு மேலும் ஊக்கமளித்துள்ளது.

1978–79-ல் மாபெரும் வேலை வாய்ப்புத் திட்டங்கள் அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. அவற்றின் புள்ளிவிவரங்கள் ஒன்றி ரண்டை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். கிராம எண்ணெய்த் தொழிலுக்கு 1977–78-ல் ரூ. 350.50 இலட்சம் செலவிடப்படும், வேலைவாய்ப்பு 1,370 பேருக்குக் கிடைக்கும். உற்பத்தி 756.50 இலட்சம் டன்னாக இருக்கும்.

1977–78-ல் கைமுறை காகிதத் தொழில் ரூ. 14.39 இலட்சம் செலவில் நிறுவப்படும். வேலை வாய்ப்பு 358 பேருக்கு கிடைக் கும்; 1978–79-ல் ரூ. 15.82 இலட்சம் செலவிடப்படும்; 382 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.

கிராம மண் பாண்டத் தொழில், இதில் 4,300 பேருக்கு வேலை வாய்ப்பு தரப்படும். 1978–79-ல் ரூ. 10.18 இலட்சம் செலவிடப்படும்.

இப்படி புள்ளி விவரங்களை நான் சொல்லிக் கொண்டே போனால் அது நீண்டு கொண்டே போகும். ஆகவே, அதை நிறுத்திக் கொண்டு எப்படி உங்களுக்கு இந்த விவரங்களை அனுப்ப வேண்டுமோ அப்படி அனுப்பி வைக்கிறேன் என்று கூறி . . . . .

திரு. ரா. உமாநாத் : ஒரே ஒரு விஷயம். கிராமப்புறங்களில் அதிகமான வேலை வாய்ப்புத்தரும் விஷயம் விவசாயம். அதற்கு அந்த விவசாயிகளுக்கு நிலம் சம்பந்தமாக, பினாமி நிலமாக மறைக்கப்பட்டுள்ளதுபற்றி முதலமைச்சர் உணர்ந்து இருக்கிறார். இரண்டு மூன்று தரம் வற்புறுத்தியிருக்கிறார். ஆகவே, அந்த நிலங்களைப் பிடித்துக் கொடுப்பதற்கு பெரிய அளவில் வேலை வாய்ப்புக் கொடுக்க என்னென்ன திட்டங்களை வைத்திருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டால் நல்லது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நாட்டின் நடப்பு தெரிந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன், நாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்று இப்படி வெட்ட வெளிச்சமாகச் சொல்லிவிடுவோமானால், பினாமியை உருவாக்கிக் கொண்டிருக்கிறவர்கள் எவ்வளவு எச்சரிக்கை அடைவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஆகவே அதைத் தடுப்பதற்காக நாங்கள் எந்த முறையில் சட்டத்தை இங்கே கொண்டு வந்து, உங்கள் அனுமதியைப் பெற வருகின்றோமோ, அப்போதுதான் அது வெளிவர வேண்டும். அது வெளிவருகின்ற நேரத்தில் அது எப்படி இருக்கும் என்பதை நான் இப்போது சொல்லக் கூடாது. முன்பு இருந்தவர்கள் எப்படி நல்ல எண்ணத்தோடு கொண்டு வந்தாலும் ஏமாந்து விட்டார்களோ, அதைப்போல் நாம் ஏமாந்து விடக் கூடாது. அந்த அனுபவங்களை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்கிற காரணத்தினால், எப்படி அந்தத் திட்டத்தைக் கொண்டு வரப் போகிறோம் என்பதை இப்போது சொல்ல முடியவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வித் துறையைப் பற்றி மாண்புமிகு சுப்பு அவர்கள் ஒரு கருத்தை இங்கே வெளியிட்டிருந்தார்கள். 400 உயர்நிலைப் பள்ளிகளைப்பற்றியும், அவற்றை எப்படி மாற்றுவதாக அறிவிக்கப் பட்டது என்பதையும் அதனால் அவை பயன் தரத்தக்க விதத்தில் உள்ளதா என்பது பற்றியும், ஹையர் செகண்டரி பள்ளிகளாக உயர்த்திவிட்டால். போதுமா, லைப்ரரி, லேபரட்டரி இவை ஏதுவும் போடவில்லையே என்றெல்லாம் சொன்னார்கள்.

இம்மாநிலத்தில் இன்னும் கிராமப்புற வளர்ச்சியை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு வசதி கிட்டவேண்டும் என்ற அடிப்படையில் 916 பள்ளிகளில் மேல்நிலைப் படிப்பு தொடங்க அரசு அனுமதித்துள்ளது. கல்வியைப் பரவலாக்கிட இது வகை செய்திடும். இப்பள்ளிகளுக்கு ஜுனியர் காலேஜ் என்று பெயர் இல்லை, மேல்நிலைப் பள்ளிகள் என்றுதான் பெயர். தேவையான விஞ்ஞானக்கூடம், கட்டிட வசதி ஆகியவற்றை அளிக்க அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்து வருகிறது. அரசு, மேல்நிலைப் பள்ளிகளில் 133 பள்ளிகளுக்கு மொத்தம் 2 கோடி ரூபாய்

வருகின்றது. இவ்வாறு அரசு மேல்
செலவில் கட்டடம் கட்டி
நிலைப் பள்ளிகளில் 2 கோடி ரூபாய் கட்டிடங்களுக்கும், 1 கோடி
ரூபாய் அளவுக்கு ஆய்வுக்கூடத் தளவாடங்களுக்கும் செலவிட
ஏற்பளித்துள்ளது.

ஆசிரியர்கள் நியமனத்தைப் பொறுத்தவரையில் உயர்நிலைப்
பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களில், மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்
களாகத் தகுதி பெற்றவர்களை எந்த அளவு நியமிக்க முடியுமோ
அந்த அளவுக்கு நியமனங்கள் முடிந்து விட்டன. 31—8—1978
முடிய, மேல்நிலைப் பள்ளிகளில் நியமிப்பதற்கு வேண்டிய பல்
வேறு ஆசிரியர்களுக்கான புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு
தேவையான பதவிகளுக்கான ஏற்பளிப்பு விரைவில் வழங்க
நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(மாண்புமிகு மாற்றுத்தலைவர் தலைமை)

(மாண்புமிகு சவுந்திரராஜன் அவர்கள்
மாண்புமிகு உறுப்பினர் ஆர். வி. சம்பள விகிதங்களைச் செயல்
பல்கலைக் கழக ஆணைக்குழுவின் புதிய சம்பள விகிதங்களைச் செயல்
படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது பற்றியும், ஆசிரியர்களின்
நியமனம் பற்றியும் கருத்துத் தெரிவித்தார்கள். பல்கலைக் கழக
ஆணைக்குழுவின் சம்பள விகிதங்களைப் பொறுத்தவரையில் விதி
களை அரசு நிர்ணயித்துள்ளது. இவ்விதிகளை ஒத்துக்கொள்ள
மைய அரசு முடிவெடுத்துள்ளது. தனியார் கல்லூரிகளில்
ஆசிரியர்கள் நியமனத்தைப் பொறுத்தவரை அக்கல்லூரிகளின்
சங்கங்கள், அதிலுள்ள சங்கடங்களை அரசின் கவனத்திற்குக்
கொண்டு வந்து, அரசு கொள்கையைச் செயல்படுத்துவதில் நிய
மனம் பற்றிய கட்டுப்பாடே இருக்கக் கூடாது என்று முறையிட்டு
உள்ளது. அதிலுள்ள சட்டப் பிரச்சினையை ஆராய்ந்து மத்திய
அரசுக்கு அனுப்புவதற்கு தமிழக அரசு பரிசீலித்துக் கொண்டு
இருக்கிறது. [மாலை 5-40]

இவைகளையெல்லாம் நான் குறிப்பிடுவதற்குக் காரணம், எல்
லாவற்றிற்கும் பதில் சொல்லிக் கொண்டே இருக்க முடியுமா
என்ற கேள்வி பிறக்கும்; நியாயமும் கூட.

சில நேரங்களில் துணை வேந்தர்களை நியமிப்பதில் தாமதம்
ஏற்படுகிறது என்று சுட்டிக் காட்டப்பட்டது கவனத்தில் இருக்
கிறது. சில தவிர்க்க முடியாத நிலைமையில் யாரைத் தேர்ந்
தெடுக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ அவர்கள் ஏற்றுக்
கொள்வதற்கு பதில் அளிப்பதில் சில நேரங்களில் தாமதம்
ஏற்பட்டு விடுகிறது. அதை ஒட்டி சில காரியங்களைச் செய்
வதற்கும் தாமதம் ஏற்படுகிறது. அந்த வகையில் தான் சில
தாமதங்கள் பல்கலைக் கழக துணை வேந்தர்களை நியமிப்பதில்
ஏற்படுகிறதே தவிர வேறு அல்ல; வேண்டுமென்று வேறு
ஏதோ பல்வேறு காரணங்களுக்காக, அல்லது அவரவர்களுடைய
எண்ணப்படி யாரைப் போடுவது என்பதில் தங்களுடைய சுய

நலத்திற்காகத் தாமதப்படுத்தப்படுகிறது என்ற எண்ணம் யாருக்
கும் வேண்டாம். தயவு செய்து அப்படி யாரும் எடுத்துக்
கொள்ளவேண்டாம் என்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்
கிறேன்.

அந்த வகையில் காமராஜ் பல்கலைக்கழகத்தின் முன்னாள்
துணை வேந்தர் சிட்டிபாபு அவர்கள் பதவிக் காலம் 23—8—1977
பிற்பகல் முடிவு அடைந்தது. அதற்குப் பிறகு புதிய துணை
வேந்தரைத் தேர்ந்தெடுக்க மூவர் கொண்ட குழு ஒன்று
2—2—1978 அன்று நியமிக்கப்பட ஆணைகள் பிறப்பிக்கப்
பட்டன. அந்தக் குழுவில் கீழ்க்கண்டவர்கள் இடம் பெற்றனர்.
டாக்டர் மணவாள ராமானுஜம்; திரு. அம்பாசங்கர், ஐ.ஏ.எஸ்.;
திரு. அழகுசுந்தரம் செட்டியார், வழக்கறிஞர்; இந்தக் குழு
டாக்டர் குழந்தைசாமி அப் பல்கலைக்கழக துணைவேந்தராக
நியமிக்கப்படலாம். அவர் பொறுப்பேற்றுக்கொண்ட
நாளில் இருந்து 3 ஆண்டுக் காலம் அவர் பதவி வகிக்கலாம்
என்று 30—3—1978 அன்று வேந்தருக்குப் பரிந்துரைத்தது.
அதற்கு இணங்க 30—3—1978 அன்று டாக்டர் குழந்தைசாமி
அவர்கள் காமராஜ் பல்கலைக்கழக துணை வேந்தராக நியமிக்கப்
பட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

இதேபோன்ற நிலைமைகளை எல்லாம் நான் சொல்லிக்
கொண்டே போவதற்கு நேரம் இல்லை. ஒன்றை மட்டும்
சொல்கிறேன். தாமதம், தாமதம் என்று இங்கே பேசிக்கொண்டே
இருக்கிறார்கள். வெளியில் இன்னும் அதிகமாகப் பேசுகிறார்கள்.
குறிப்பாக, நான் கோப்புகளைப் பார்ப்பதே கிடையாது; கோப்
புகள் ஆயிரக்கணக்கில், பதினாயிரக் கணக்கில் தேங்கிக்கிடக்கின்றன
என்று எல்லாம் குற்றம் சாட்டப்படுவதை நான் கவனிக்
கின்றேன். அவைகளைப் பற்றி நான் இங்கே பணிவோடு
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஏறத்தாழ இதுவரையில் என் பார்வைக்கு அனுப்பப்பட்ட
கோப்புகள் 12,700—12,600-க்குள் இருக்கும். அதில் நான்
கையெழுத்துப்போட்டு திருப்பி அனுப்பியது 11,800-க்குள்
இருக்கும். ஆக மொத்தம் ஏதோ ஒரு 600 அல்லது
500-க்குள் பாக்கி இருக்கின்றன. அதற்கான காரணம், அந்தக்
கோப்புகளில் நான் கையெழுத்திடுவதற்கு முன்னால் இன்னும்
பல்வேறு நூற்றுக்கணக்கான கோப்புகளை வரவழைத்துப்
பார்க்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். ஆகவேதான்
இவை தாமதப்பட்டு இருக்கின்றன; இதை நானே சொல்ல
வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்று கருதுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

ஆனால், பதினைந்தாயிரம், பதினேழாயிரம் கோப்புகள்
தேங்கியிருக்கின்றன என்று எந்த அடிப்படையில் சொல்கிறார்கள்
என்று எனக்குப் புரியவில்லை. இதை அவர்கள் தயவுசெய்து

கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு வேளை இலாகா
அதிகமாக இருந்து அதனால் ஏற்பட்டு இருக்குமோ என்று
பார்த்தால், அதுவும் இல்லை அதைப் பற்றி எல்லாம் நினைத்துப்
பார்த்து அவர்கள் சொல்லியிருப்பார்களா என்று அவர்களுக்கு
அறை கூவல் விடுவதற்கு நான் தயாராக இல்லை.

குறிப்பு இங்கே இருக்கிறது. எனக்கு வந்த கோப்புகள்
12,412. திருப்பி அனுப்பப்பட்டவை 11,751. மீதம் உள்
ளவை 661. இதற்குக் காரணம் நான் முன்னே சொன்னதுதான்.
சம்பந்தப்பட்ட மற்ற கோப்புக்களை வரவழைத்துப்
பார்க்க வேண்டியிருப்பதால் இவை திருப்பி அனுப்பப்பெறாமல்
இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைச் சொல்லுகிற நேரத்தில் நான் வேறு ஒன்றையும்
சொல்ல விரும்புகிறேன். யாரும் தவறாக நினைக்கக் கூடாது.
இன்னும் பல பிரச்சினைகளுக்கு பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.,
என்றாலும் இங்கே சில கோப்புகளைப் பற்றிச் சொல்ல விரும்பு
கிறேன். எனக்குக் கிடைத்திருக்கிற கோப்புக்களை வைத்துச் சொல்
லுகிறேன். 14—1—1970 முதல் 31—1—1976 வரை ''கோப்பு
கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டிருக்கிறது'' என்பதைப்
போல அவை எங்கே போக வேண்டுமோ அங்கே போகவே
இல்லை. ஒரு மாதம், இரண்டு மாதம் அல்ல; 6 ஆண்டுகள்
போகவில்லை.

மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலைக்குச் சலுகை கட்டணம்
16—1—1970-ல் முடிந்துவிட்டன. 17—1—1970 முதல்
மின்சாரக் கட்டணம் மாற்றியமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
1970 ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே புதிய கட்டண விகிதத்தைப்
பற்றி அறிவித்திருக்க வேண்டும். ஏறத்தாழ இரண்டரை ஆண்
டுக்குப் பிறகுதான் 12—8—1972-ல் மால்கோ நிறுவனத்
திற்கு புதிய கட்டணம் விதிக்க வேண்டுமென்று அன்றைய மின்
சார அமைச்சர் ஓ.பி. இராமன் அவர்கள் அன்றைய தொழில்
அமைச்சர் மாதவன் அவர்கள் மூலமாக முன்னாள் முதலமைச்சர்
அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார். மேலும் இரண்டாண்
டுகளுக்கு அந்தக் கோப்பின் மீது எந்தவிதமான நடவடிக்கையும்
எடுக்கப்படவில்லை. 1974 ஆம் ஆண்டு இறுதியில் எவ்வித
முடிவும் எடுக்கப்படாமல் அந்தக் கோப்பு திருப்பி அனுப்பப்பட்டி
ருக்கிறது.

1975-ல் ஓ.பி. இராமன் அவர்களிடமிருந்து, மின்சார இலாகா
இங்கே உட்கார்ந்திருக்கிற திரு சாதிக் பாட்சா அவர்களுக்கு
மாற்றப்பட்டது. மீண்டும் அந்தக் கோப்பை திரு. சாதிக் பாட்சா
அவர்கள் முன்னாள் முதலமைச்சருக்கு அனுப்பியிருக்கிறார்கள்.
தி.மு.க. ஆட்சி கலைக்கப்படும் வரை அந்தக் கோப்பின்
மேல் எந்தவிதமான உத்தரவும் இல்லை. ஆட்சி கலைக்கப்பட்ட
பிறகு எந்தவிதமான உத்தரவும் இல்லாமல் இலாகாவுக்கு இந்தக்

கோப்பு திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. 17—1—1970 முதல் விதிக்கப்பட்டிருக்க வேண்டிய புதிய மின்கட்டணம் 31—1—1976 வரை விதிக்கப்படவில்லை என்ற குறிப்பு இங்கே இருக்கிறது. நான் இதை ஒரு குற்றச்சாட்டிற்காகச் சொல்லவில்லை. என்ன காரணத்தால் தாமதம் ஏற்பட்டது என்பது தெரியாது. ஆனல் 6 ஆண்டுக் காலம் அந்தக் கோப்பு அங்கேயே சுற்றிக்கொண்டிருந்திருக்கிறது; எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை.

அதைப்போல இந்தக் கோப்புக்களைப்பற்றிப் பேசுவதற்கு முன்னல் நாங்கள் செய்திருக்கின்ற பணிகளைச் சொல்லிவிட்டு பிறகு கோப்புகளுக்குப் போகலாம் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு சுப்பு அவர்கள் இங்கே இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் எழுப்பியிருக்கிற ஒரு பிரச்சினைபற்றி முதலில் குறிப்பிட விரும்புகிறேன். அரக்கோணம்-சோளிங்கர்பாதை. அந்த பாதையில் ஒருவளைவு இருக்கிறது என்றும் அந்தஇடத்தில் போகின்ற கார்கள் வண்டிகள் சிலநேரங்களில் விபத்துக்குள்ளாகின்றனஎன்றும், ஆகவே அந்த வளைவு இருக்கக் கூடிய இடத்தை அரசு எடுத்துக்கொண்டு, அந்தப்பாதையை வளைவு இல்லாமல் நேர் பாதையாக அமைக்க வேண்டுமென்று விரும்பி, திட்டமிட்டிருக்கிற நேரத்தில் மாண்புமிகு சுப்பு அவர்கள் அந்தப் பாதையை நேர் செய்ய எடுத்துக் கொள்ளக்கூடாது என்றும் அதை சினிமா கொட்டகைக்குக் கொடுக்க வேண்டுமென்றும் சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர் ஒரு தொழில் உற்பத்தியாளர் என்ற அளவில் அவரிடம் வேலை கொடுக்கப்படும் என்று எண்ணி இருக்கலாம். அதைப் பற்றி நான் குற்றம் சொல்லவில்லை. ஆனல் அந்த இடம் போக்குவரத்திலே மக்கள் போகும்போதும் வரும்போதும் ஆபத்து விளைவிக்கக்கூடிய வகையிலே இருக்கின்றது என்பதை எண்ணிப் பார்த்து அந்த வளைவை நேராக்குவதற்கு அந்த நிலத்தை எடுத்துக்கொண்டு இப்போது அது புறம்போக்கு நிலமாக இருக்கின்றது— அது யாருக்குச் சொந்தமாக இருந்தாலும் அந்தப் பணி செய்யப்பட்டிருக்கும். அந்த நிலத்தை எடுத்துக் கொண்டு அந்தப் பாதையை நேர் செய்ய வேண்டும் என்ற நிலை இருக்கும்போது, அங்கே திரு. சஞ்சீவி நாயுடு என்பவருக்கு சினிமா கொட்டகை கட்ட கொடுக்க வேண்டும் என்று திரு. சுப்பு அவர்கள் சிபாரிசு செய்தார்கள் என்ற பிரச்சினை வந்தது.

(மாலை 5-50)

நான் திரு. சுப்பு அவர்களுக்குப் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். சினிமா கொட்டகைகளை நிறைய கட்ட வேண்டும், அதனல் அந்த தொழில் செய்பவர்களுக்குப் பணம் வரவேண்டும். தொழிலாளர்களுக்கு நிறைய வரவு வரவேண்டும், புதிய தொழில் நிபுணர்கள் எல்லாம் உருவாக்கப்படவேண்டும்,

நிறைய வரி வரவேண்டும் என்பதில்
அதனல் சர்க்காருக்கும் இதை எல்லாம் ஒரு குற்றம்
மாறுபட்ட கருத்தில்லை. ஆனல் இதை வெளியிலும்
போல் கருதி நான் இங்கே பேசி, பின்னர் இதை வெளியிலும்
போய்ப் பேசிக்கொண்டிருந்தால் இது நியாயமாக நம் உள்ளத்தில்
எந்த எண்ணம் இருக்கிறதோ அந்த எண்ணத்திற்குப்
பொருத்தமாக நாம் செயல்பட்டதாக ஆகாது. அது எந்த
நோக்கத்தோடு சிபாரிசு செய்திருந்தாலும் இதை நாங்கள்
வெளியே போய் பொதுக்கூட்டம் போட்டு, இவர் சினிமா
கொட்டகைக்கு சிபாரிசு செய்கிறார். மக்களைப் பற்றிக்
கவலைப்படவில்லை என்று சொன்னல் அது சரியாக இருக்காது.
இதுவும் ஒரு பிரச்சினைதான். என்றாலும் இதைப் போய் ஒரு
பெரிய பிரச்சினையாகக் கருதி பெரிய பிரச்சினையை உருவாக்
கக் கூடாது. ஆகவே நல்லெண்ணத்திலேதான் சொல்கிறேனே
தவிர, எதையும் குறைவாகக் குற்றமாக எடுத்துக் கொள்ளக்
கூடாது என்பதற்குத்தான் இங்கே சொல்கிறேனே தவிர
இவர் தவறு செய்து விட்டார், இந்த அளவுக்குச் சிபாரிசு
செய்கிறார் என்ற நோக்கத்தோடு நான் சொல்லவில்லை என்
பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, முதலமைச்சர்
அவர்களிடத்திலே கோப்புகள் இருக்கும் என்று நினைக்கிறேன்.
அதை அவர் சட்டமன்றத்திலே வைக்கலாம். நான் சொன்னது
என்னவென்றால் ஏற்கனவே சினிமா தியேட்டர் கட்டுவதற்கு
அனுமதிவழங்கப்பட்டது. ஆனல் மீண்டும் அரசின் தலையீடு காரண
மாக அதாவது அவசர காலத்தில் ஏற்பட்ட தலையீடு காரணமாக
அது வேறு ஒருவருக்கு மாற்றப்பட்டிருக்கிறது என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். திரு. சஞ்சீவி நாயுடு திராவிட
முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்ற ஒரே காரணத்
திற்காக இந்தக் காரியத்தில் தலையிட்டிருக்கிறார்கள். அந்த சினிமா
கொட்டகை கட்டுவதில் அரசியல் நோக்கம் என்ற வகையில்
அரசியல் தலையீடு ஏற்பட்டிருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டு
வதற்காகத்தான் நான் சொன்னேனே தவிர சிபாரிசு செய்ய
வில்லை. முதலில் போடப்பட்ட உத்தரவு அரசியல் தலையீடு
காரணமாக மாற்றப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான்
சொன்னேன். வேண்டுமானல் முதலமைச்சரவர்கள் விசாரணைக்
கமிஷன் அமைக்கட்டும். நான் விவரங்களைத் தருவதற்குத்
தயாராக இருக்கிறேன். அதிலே யார் யார் தலையிட்டிருக்கிறார்கள்,
எந்தெந்த அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தலையிட்டிருக்
கிறார்கள், யார் யார் கடிதங்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பதை
எல்லாம் அரசாங்கமும் வெளியிட வேண்டும் என்று சொல்ல
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே,
அந்தக் குறிப்பிட்ட வழித்தடத்தை நான் கூடச்
சென்று பார்வையிட்டேன். அந்த இடம் உண்மையிலேயே

[திரு. சி. பொன்னையன்] [1978 செப்டம்பர் 12

போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கிறது. என்று பொது மக்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் கூடக் கூறினார்கள். திரு. சஞ்சீவி நாயுடு அவர்களுக்கு சினிமா கொட்டகை கட்டுவ தற்காகக் கொடுக்கப்பட இருந்த அந்தப் பாதையை சீர் செய்ய வேண்டும் என்று அப்போதுள்ள ஆளும் கட்சியைச் சேர்ந்த அந்தத் தரப்பிலே இருந்து கூட எழுத்து மூலமாகத் தெரிவித்திருக் ரூர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : புறம்போக்கு நிலத்தை எடுத்துவிட்டு பார்த்தால் கூட அவருடைய இடத்திலேயே கூட அதனைக் கட்ட முடியும். அவர் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருக்கின்ற ஒரே காரணத்தால்தான் அந்த விஷயத்தில் தலையீடு செய்யப்பட்டு அதிலே மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அது குறித்து வந்திருக்கின்ற பல கடிதங்களை எல்லாம் முதலமைச்சர்அவர்கள் இங்கே வைப்பதற்குத் தயாரா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சொன்னது என் தொகுதி சம்பந்தப்பட்டது, நான் அடிக்கடி போகக்கூடிய வழி. திரு. சஞ்சீவி நாயுடு அவர்களை எனக்கு நன்றாகத் தெரியும். அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் அல்ல. 1962 தேர்தலில் நான் நிற் கும்போது அவர்கள் தி. மு. க. விற்காக வேலை செய்ய வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் சந்தர்ப்ப வாதி, சந்தர்ப்ப கட்சி......

திரு. க. சுப்பு : திரு. எஸ். ஜே. இராமசாமி * * * என்று நான் கருதவில்லை. அவர்கள் ஆற்காடு வீராசாமிக்காக....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மன்ற உறுப்பினர்களைப் பற்றி அப்படிச் சொல்லாதீர்கள். வெளியே மனு போட்டவர் பற்றிச் சொல்லும்போது உறுப்பினர் அவர்களைப் பற்றி அப்படிச் சொல்வது சரியல்ல. திரு. இராமசாமி * *, என்று சொன்னதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. எம் ஜி. இராமச்சந்திரன் : போக்கு வரத்து பிரச்சனை பற்றிச் சொன்னேன்.

1971-ம் ஆண்டு ஜுலை 1-ந்தேதி முதல் 1978-ம் ஆண்டு ஜுலை 31-ந் தேதி வரை அரசாங்கப் பேருந்துகளின் எண்ணிக்கை 4,859-ல் இருந்து 5,223 ஆக உயர்ந்துள்ளது. இந்தக் காலம் வ[illegible]ரயில் 827 புதிய பேருந்துகள் போக்குவரத்துக் கழகங்களில்

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்ற [illegible]பட்டது.

1978 செப்டம்பர் 12] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

இயங்கின. இவ்ற்றில் 265 கூடுதல் பேருந்துகள் 602 பேருந்து களுக்குப் பதிலாக விடப்பட்டன. 163 புதிய வழித் தடங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

கிராமச் சாலைத் திட்டம். பயன் அடைந்த கிராமங்கள் 149. பயன் பெற்ற மக்கள் தொகை 1·50 லட்சம். சிறப்புத்திட்டம் 360. பயன் அடைந்த கிராமங்கள் 323. பயன் பெற்றமக்கள் தொகை 3·20 லட்சம். மத்திய அரசு பொறுப்பேற்கும் கிராம இணைப்புச் சாலைத் திட்டம் 100. பயன் அடைந்த கிராமங்கள் 50. மக்கட் தொகை 50 லட்சம். கரும்பாலைச் சாலை மேம் பாட்டுத்திட்டம் 53; சிறுபாலங்கள் 53, பாலங்கள் 16. பயன் அடைந்த கிராமங்கள் 97, மக்கள் தொகை 1 லட்சம். மலை வாழ் சாலை மேம்பாட்டு திட்டம், 50. பயன் அடைந்த கிராமங் கள் 26. மக்கள் தொகை 25 லட்சம். மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம். 10. பயன் அடைந்த கிராமங்கள் 5. மக்கள் தொகை 5 லட்சம். பழங்குடிமக்கள் மேம்பாட்டுத்திட்டம் 40. மக்கள் தொகை 3 லட்சம்.

இப்படிச் சில புள்ளிவிவரங்களை இங்கே சொல்வதன்மூலம் எங் களால் முடிந்த அளவிற்கு எந்தெந்த வகையில் எங்கள் பணியினைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டினேனே தவிர ஆளுநர் அவர்களது உரையில் இவைகள் எல்லாம் இல்லை என்ற காரணத்தால் நாங்கள் எதையுமே செய்யவில்லை என்று யாரும் இனிமேல் கருதமாட்டார்கள் என்று கருதுகிறேன். எங் களால் முடிந்ததை, நிதியைப் பொறுத்து, வசதியைப் பொறுத்து, அந்த இடங்களைப் பொறுத்து, நாங்கள் எங்களது கடமையைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை நான் இங்கே வெளிப் படுத்த விரும்புகிறேன். சென்னை நகரில் பல்வேறு வகையில் பலயிடங்களில் வழித்தடங்கள் போடப்பட்டு வருகின்றன, போடப் பட்டிருக்கின்றன என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[மாலை 6-00]

குறிப்பாக அண்மையில் ஏர்-கண்டிஷன்டு கோச் என்று சொல் வார்களே அந்தக் குளிர்சாதன வசதியுள்ள பஸ்கள் விடுவதற்கு இங்கே ஏற்பாடு செய்து நிறைவேற்றி ஒரு வாரத்திற்குள், 15 நாட்களுக்குள் மக்களுக்குப் பயன்படும் அளவில் துவக்கப்படும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்படி மீண்டும் மீண்டும் சொல்வது—அரசு வேண்டுமென்றே எதையும் செய்யவில்லை என்று சொல்லப்பட்டதற்காகத்தான் ; அதற்காகத்தான் அவையின் நேரத்தையும் எடுத்து, புரியாத புள்ளி விவரங்களையெல்லாம் தர வேண்டியிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சாதிப் போராட்டங்களைப் பற்றி நான் சிலவற்றைச் சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன். சாதிப் போராட்டங்கள் எப்படி
ஏற்படுத்தப்படுகின்றன என்பதை நான் இங்கே சொல்லுவதால்,
நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வழக்குகளுக்குப்
பாதகம் இல்லாத வகையிலும், அதே சமயத்தில்
சட்டப்படி குற்றங்கள் தண்டிக்கப்படும் என்றிருந்தாலும்,
எப்படி இவையெல்லாம் ஏற்படுகின்றன என்பதற்கு
என்னிடம் இருக்கின்ற சில ஆதாரங்களைக் கொண்டு
விளக்கம் தருவதற்கு முயலும்போது, அதன் வாயிலாக சாதிப்
போராட்டம் இன்னும் தோன்றுவதற்கு இடம் அளிக்கக் கூடாது
என்பதும், நிச்சயமாக அதற்கு உதவி செய்யக் கூடாது என்கின்ற
வகையில் என்னுடைய பேச்சு அமையும் என்பதை மாண்புமிகு
உறுப்பினர்கள் நம்புவார்கள் என்று நான் நிச்சயமாக எதிர்
பார்க்கிறேன்.

பெரும்பாலும் எல்லா உறுப்பினர்களும், குறிப்பாக அனைத்
துக் கட்சி உறுப்பினர்களும் காவல்துறை இன்னும் விரைவாக
பணியாற்றியிருக்கலாம் என்று சொல்லியிருக்கின்றார்கள்.
அந்தப் பிரச்சனை பற்றி விரிவாக நான் பேச விரும்பவில்லை
என்றாலும், இந்த விழுப்புரத்தைப் பொறுத்தவரையில் இது
சாதிப்போராட்டம் அல்ல என்பதும், இது பற்றி
தனியாகத் தீர்ப்புக் கூற இருப்பதால்—நமக்குத் தெரிந்த
வரையில்—வன்முறையில் இறங்கிவிட்டு, மக்களிடையே தனிப்
பட்ட போராட்டங்களை நடத்திவிட்டு—சாதிப் போராட்டமாக
மற்றவர்களால் சொல்லப்படுகிறது என்பதையும் இங்கே
வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

சாதிப் போராட்டங்கள் என்று நம்புவதற்குக் காரணங்கள்
இருக்கின்றனவா என்றால், அதைப்பற்றி என்னால் என்னிடமுள்ள
ஆதாரங்களை வைத்துக் கொண்டு பேச முடியாது.

ஆனால் ஒன்றைச் சொல்லுகிறேன். இதனுடைய துவக்கம்
எப்படியிருந்தது என்பதைப் பத்திரிகை வாயிலாக நாமெல்லோரும்
அறிந்திருக்கிறோம். சில அளவுக்கு உட்பட்ட இந்த மாமன்றத்
தில் உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்
கிறார்கள். இது விழுப்புரத்தில் மட்டுமல்ல. சில வன்முறை
யாளர்கள் சில அரசியல் கட்சிகளைப் பயன்படுத்திக் கொண்டு தங்
களை வளர்த்துக் கொள்வது என்கின்ற நிலை இருக்கிறது என்று
சொல்லிக் கொள்வதோடு, எந்தக் கட்சியாக இருந்தாலும் யார்
இதைப் பயன்படுத்திக் கொண்டாலும், யார் வன்முறைக்கு இடம்
கொடுத்தாலும், சிலர் இதனால் தங்களை வளர்த்துக் கொள்கிறார்
கள் என்பதும் இங்கு இருக்கின்றவர்கள் தெரிந்து கொள்ளாத
ஒன்று அல்ல.

அப்படியிருந்தாலும் கூட, டெல்லி பாராளுமன்றத்திலும்
அங்கேயுள்ள சிலருக்கு இது சாதி சண்டையோ என்று சந்தேகம்
வருகின்ற அளவில், பத்திரிகையில் பரவலாக வருகின்ற செய்திகளை

அடிப்படையாக வைத்துக் கொண்டு, பல கேள்விகளை நாடாளு
மன்றத்தில் கேட்டார்கள். நாடாளுமன்றப் பிரதிநிதிகளை
இங்கே அனுப்பலாமா என்றும் கேட்டார்கள். நான் "இது
தேவையில்லை, இங்கே வழக்குமன்றத்தில் வழக்குகள் இருக்
கின்றன; நீதிபதியை நியமித்து விசாரணை ஆரம்பித்து இருக்கிறது;
வழக்கு மன்றத்தில் நீதி விசாரணை நடந்து முடிந்த பிறகு அவர்
களது தீர்ப்புக்கேற்ப அவற்றைப் பரிசீலனை செய்து நடவடிக்கை
எடுக்கலாம்" என்று சொன்னேன். அதைத்தான் இங்கேயும்
சொல்லுகிறேன்.

ஆனால் வேதனையோடு நான் சிலவற்றை இங்கே சொல்லாம
லும் இருக்க முடியாது. இதில் யாருக்கும் மனத்தாங்கலோ
வருத்தமோ ஏற்பட வேண்டிய தேவையில்லை. எனக்குத் தெரிந்
ததை, எனக்குக் கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில் சொல்ல
விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு லத்தீப் அவர்கள் இருக்கிறார்கள் என்று
கருதுகிறேன். அவர்கள் என்னை வந்து பார்த்தார்கள். முஸ்லீம்கள்
கொண்டாடுகின்ற விழா தினத்திற்கு, இரண்டு மூன்று நாட்
களுக்கு முன்பு என்று நினைக்கிறேன். எங்கள் கட்சிக்காரருடன்
வந்து சந்தித்தார்; அப்படிச் சந்தித்த போது, நிலைமைகளைச்
சொல்லி, இதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டுமென்றும்,
அதற்கு அடுத்த நாள் விநாயக சதுர்த்தி, இரண்டு நாட்களும்
முஸ்லிம்களும், இந்துக்களும் போராட்டம் நடத்தாமல் தடுக்க
வேண்டும், அதற்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றும்
சொன்னார். நான் "அப்படியானால், அந்த முஸ்லீம் சகோ
தரர்கள் மகிழ்ச்சியோடு கொண்டாடும் விழாவிலேயும் நான்
கலந்து கொள்கிறேன். விநாயக சதுர்த்தியிலே எனக்கு நம்
பிக்கை இல்லாவிட்டாலும், அதிலும் கலந்துகொள்ள உங்களோடு
வருகிறேன்," என்று சொன்னேன். அப்போது நண்பர் மாண்பு
மிகு லத்தீப் அவர்களும் சொன்னார். அவரோடு வந்த நண்பரும்
சொன்னார். இவர்கள் 10 மணிக்கு அந்தத் தொகுதியிலே மக்கள்
எப்படி அமைதியாக இருக்கிறார்கள் என்று பார்க்கச் சென்றபோது,
ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்த ஒருவர்-பெயரை குறிப்பிட
நான் விரும்பவில்லை, நீங்களும் வற்புறுத்த வேண்டாம் என்று
பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், அந்த நண்பர் இருந்தார்
என்றும், அவர் இருந்த ஊருக்கும் இந்த ஊருக்கும் சில மைல்கள்
இருக்கின்றன என்றும், 10, 20 இந்துக்கள் இருந்தார்கள் என்றும்,
ஏன் கூட்டமாக இருக்கிறார்கள் என்றும் கேட்டபோது, அவர்கள்
கீழ்த்தரமாகப் பேசி, அவமானப்படுத்தினார்கள் என்றும், இப்படித்
தூண்டி விடுவதற்கு அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் இருந்தார்கள்
என்றும், அவர்கள்தான் அதற்கு மூலக்காரணம் என்றும்
சொன்னார்கள்.

ஒவ்வொரு கட்சியிலும், ஒவ்வொரு கூட்டத்தை இப்படி
ஆரம்பித்தால், நிலைமை என்னவாகும் என்பதைப்பற்றி அவர்கள்
சொன்னார்கள். நான் வேண்டிக் கேட்டுக் கொள்வதெல்லாம், நான்

(திரு. எஸ் ஜே. இராமசாமி) [1978 செப்டம்பர் 12

எவ்வளவுதான் பொதுமனத்தோடு இந்த மன்றத்திலே இருந்தா
லும், வெளியே இருக்கின்ற எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களானா
லும் சரி, மற்றக் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் சரி, இப்படிப்
பட்ட நிலைமைகளை உருவாக்குகின்றவர்கள் யாராக இருந்தாலும்
சரி, அவர்களைக் கட்சியிலிருந்து விலக்க வேண்டும். நல்ல ஆதாரங்
களைத் திரட்டி, தகவல்களைச் சேகரித்து சட்டப்படி தண்டிக்கவும்,
வழிவகை காண வேண்டும் என்று நான்பணிவோடு சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

இதைச் சொல்லும்போது, இன்னும் கொஞ்சம் அழுத்தமாகச்
சொல்ல விரும்புகிறேன். ஆங்காங்கே குழுக்கள் அமைக்கின்
றோம். அப்படிக் குழுக்கள் அமைப்பதன் மூலம் அனைத்துக் கட்சிப்
பிரதிநிதிகளையும் ஒன்றுகூட்டி, இதுபோன்ற நிலைமைகள் உரு
வாகும்போது, அது மாணவர்கள் போராட்டமாக இருந்தாலும்
சரி, தொழிலாளர்கள் போராட்டமாக இருந்தாலும் சரி,
விவசாயிகள் போராட்டமாக இருந்தாலும் சரி அல்லது எந்தப்
போராட்டமாக இருந்தாலும் சரி, அந்தப் போராட்டங்களைப்
பற்றியெல்லாம் பேசி ஒருமித்த கருத்தோடு முடிவெடுத்து,
எல்லோரும் ஒருமித்து பணி செய்தால், இவைகளைத் தடுக்க
முடியும் என்ற கருத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு இப்படிப்பட்ட குழுக்கள்
அமைக்க வேண்டுமென்ற பணியை—நாங்கள் எதிர்க்கட்சியாக
மற்றவர்களால் மதிக்கப்பட்ட போதே செய்ய விரும்பினோம்.
ஆனால் எங்களால் நிறைவேற்ற முடியவில்லை. ஏனென்றால், அப்
போதைய அரசு எங்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்கவில்லை.
ஆகவே, நான் இப்போது வேண்டிக் கொள்வதெல்லாம், இந்த
அரசு நிச்சயமாக அப்படிப்பட்ட குழுக்களை அமைக்க இருக்கிறது.
அப்படிப்பட்ட குழுக்களை அமைக்கும்போது, எந்த எதிர்க் கட்சி
யாக இருந்தாலும், வேறுபட்ட கருத்தோடு பார்க்காமல்,
அனைவரையும் அழைத்துப் பேசத் தயாராக இருக்கிறோம். ஆகவே
அனைத்துக் கட்சியினரும் ஒன்றுகூடி ஒரு முடிவுக்கு வந்தால், இந்த
நாட்டிலே அமைதி ஏற்பட்டு, இந்தத் தமிழகம் முழுவதும்,
இதற்குமுன் எப்படி அமைதியாக இருந்ததோ, அப்படிப்பட்ட
ஒரு அமைதியை இந்த நாட்டிலே ஏற்படுத்த முடியும் என்று
நான் நம்புகிறேன்; இதே நேரத்தில் இங்கே நான் இன்னொரு
கருத்தையும் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

ஐயா அவர்கள் விழாவில் கலந்து கொள்ளுவதற்காக, அனைத்
துக் கட்சித் தலைவர்களையும் அழைக்கும் நேரத்தில், பிரதான
எதிர்க் கட்சித் தலைவர் அவர்களை கட்சியின் சார்பாக அழைக்க
வில்லை என்றோ அல்லது அவர் மூலமாக பிறர் அழைக்கப்பட
வேண்டுமெனறோ, நாங்கள் அலட்சியப்படுத்துகிறோம் என்றோ
கருத்து இருக்குமானால், அதை அவர்கள் தயவு செய்து
மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
காரணம், அதே 17 ஆம் தேதியன்று இங்கே ஒரு விழா

1978 செப்டம்பர் 12] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

இருப்பதாக அறிந்தேன். அதனால்தான், இது சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவித்துக் கொளகிறேன. கட்சியின் கட்டுக்கோப்பை, ஒரு கட்சியின் முறையை, அமைப்பை அலட்சியப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் எனக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இப்போதுகூட இந்த அரசின் சார்பாக 17 ஆம் தேதியன்று நடைபெறவிருக்கும் விழாவிற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்துகொள்ள இசைந்திருப்பதுபோல், பிரதான எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கலந்துகொள்ள வேண்டுமென்றும், அதற்கு அவர்கள் வரவேண்டும் என்றும் நான் இந்த அரசின் சார்பாகக் கேட்டுக்கொள்ள விரும்';கிறேன்.

காரணம் அவரை ஒதுக்கி வைக்கும் எண்ணம் எங்களுக்கு நிச்சயமாக இல்லை. கருத்து வேறுபாடு இருக்கலாம்; ஆனால் ஐயாவைப் பொறுத்தவரை, அண்ணாவைப் பொறுத்தவரை, அது போன்ற கொள்கைகளைப் பொறுத்தவரை எங்களுக்குள் மாறுபட்ட கருத்து இருக்காது என்று இன்னும் நம்!கிறேன்: சம்பவங்கள், சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஆகியவற்றால் நாங்கள் எதிர் எதிராக உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். அந்த இடத்திற்குள் நான் புக விரும்பவில்லை.

(மாலை 6-10)

ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன. இந்த அரசு எந்தக் காரியத்தைச் செய்வதாயினும்—முன்பே குறிப்பிட்டிருக்கிறேன்—தமிழக அரசில் பொறுப்பேற்றுப் பணியாற்றிக் கொண்டிருந்தாலும், சட்டமன்றத்திலுள்ள அனைவருக்கும் அதிலே பொறுப்பு உண்டு என்பதைப் பன்னிப் பன்னிச் சொல்லியிருக்கிறேன். அந்த நிலைமையில்தான் இப்போதும் சொல்லுகிறேன். ஆகவே, எந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டாலும் எல்லாரையும் அழைக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய எண்ணம் என்பதும், இதற்கு முன்புகூட நதி நீர்ப் பிரச்சினையில் அழைத்தும் அவர்களுக்கு வர நேரம் இல்லையென்ற காரணத்தால் இன்னொரு பிரதிநிதியை அனுப்பி வைத்தார் என்பதையும் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். இதில் தப்பெண்ணம் இருக்குமானால் தயவுசெய்து மாற்றிக் கொள்ள வேண்டும். அது வேண்டுமென்றே செய்த காரியமல்ல என்று நம்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல் பழனியில் ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அது விசாரணையில் இருக்கிறது. கொலை செய்யப்பட்டாரா, எப்படி என்பதைப் பற்றி இப்போது நான் சொல்லக்கூடாது. சொல்லவும் தலைவர் அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்பது தெரியும். இருந்தாலும் ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்றவுடன் அவருக்கு யார் சொந்தக்காரர்கள், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று பார்த்து அவர்கள் வீட்டைத் தாக்குவது, இடத்தைத் தாக்குவது, சொந்தக்காரர்களைத் தாக்குவது, போலீஸ் காவல் நிலையத்தைத் தாக்குவது என்பதை எல்லாம் எப்படி முறையானதாக ஏற்றுக் கொள்ள முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்,

இங்கு பேசும்போது பல்வேறு கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மூன்று பிரச்சினைகளில் மாறுபட்ட கருத்துக்களை அவர்களே சொன்னார்கள். நான் பெயர் குறிப்பிட விரும்பவில்லை; மறைத்துவிட வேண்டுமென்பதற்காக இல்லை;—குறிப்பில் இருக்கின்றன.

'போலீசார் சரியாகக் கவனிப்பதில்லை, அவர்கள் அலட்சியமாக இருக்கிறார்கள்' என்பது ஒரு தரப்பு குற்றச்சாட்டு. இன்னொரு தரப்பு—'போலீசார் அடித்துக் கொல்லுகிறார்கள், அனாவசியமாகத் தலையிடுகிறார்கள்' என்பது குற்றச்சாட்டு. இன்னொரு புறத்தில் எம்.எல்.ஏ.க்கள் சொன்னால் கேட்பதில்லை, மக்கள் பிரதிநிதிகளை மதிப்பதில்லை', என்ற குற்றச்சாட்டு. இன்னொரு புறத்தில், 'மக்கள் பிரதிநிதிகள் சொன்னால் அதைத்தான் மதிக்கிறார்கள், மற்றவர்களை மதிப்பதில்லை', என்ற குற்றச்சாட்டு. இப்படி பல்வேறு குற்றச்சாட்டுகள் ஒன்றோடொன்று மோதி என் முன்னால் வந்து நிற்கின்றன—நீதிபதியாக இருப்பவர்களே குழம்பிப் போகின்ற நிலைமை—ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். நடவடிக்கை எடுக்கும்போது குற்றம் கூற ஆரம்பிக்கிறார்கள்; நடவடிக்கை எடுக்காமல் இருக்கும்போதும் குற்றம் கூறுவது எப்படி என்று புரியவில்லை. அவசரமாக நடவடிக்கை எடுத்தால், ஏன் இவ்வளவு அவசரம், விசாரித்து நடவடிக்கை எடுக்காமல் இப்படி அவசரமாக எடுக்கலாமா என்கிறார்கள். தாமதமாக நடவடிக்கை எடுத்தால் இவ்வளவு தாமதம் ஏன் என்று கேட்கிறார்கள். இது என்ன நியாயம் என்று புரியவில்லை. அதைவிட சில யோசனைகளை அவர்களே சொல்வார்களானால் நிச்சயமாகக் கவனித்து பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறேன்.

காவல் துறையைச் சேர்ந்தவர்கள் தங்கள் கடமையைச் செய்யச் செல்லும்போது—இங்கே சொன்னார்கள்—அடிவாங்கிக் கொண்டு ஓடுகிறார்கள். சாராயத்தால் ஏற்படுகிற விளைவுகள் எவ்வளவு மோசமாக இருக்கின்றன என்பதைச் சொல்லும்போது—காவல் துறையினருக்குப் பாதுகாப்பு இல்லை; அவர்களை நம்பி எப்படி மக்கள் வாழ்வது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். நான் பணிவோடு சொல்லுகிறேன். இதற்கெல்லாம் என்ன காரணம்? யாராவது, எப்படியாவது இறந்து விட்டால் உடனே காவல் துறையின்மீது பழி போடுவது என்ற நிலைமை வந்து விடுமானால் அவர்கள் துணிந்து எந்த நிலையிலும் நடவடிக்கை எடுக்க முடியாமற்போகும் என்று சொல்வதைத்தவிர வேறு வழி இல்லை.

காவல் துறையினர், வேண்டுமென்றே தவறு செய்வார்களானால் ஆதாரத்தோடு சொன்னால், எவ்வளவு பெரிய அதிகாரியானாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு பின் வாங்காது,

கேட்கலாம், 'இஸ்மாயில் கமிஷன் அறிக்கையில் குற்றம் செய்தார்கள் என்று குறிப்பிடப்பட்டவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்', என்று கேட்கலாம். குற்றம் செய்தார்கள் என்பதற்கு யார் மீது—ஆதாரம் இருந்ததோ அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தோம்; மற்றபடி விசாரித்து வருகிறோம். மற்றவற்றைப் பற்றி விசாரித்து பிறகு வழக்குமன்றத்திற்குச் செல்ல வேண்டும்.

விசாரணை தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே யாரையும் நாங்கள் விட்டுவைப்பதாக இல்லை. இங்கே கிருஷ்ணசாமி என்ற ஒருவரை பதக்கத்திற்காக சிபாரிசு செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். நீங்கள் சொல்லியிருப்பது என்.கிருஷ்ணசாமியை, அனுப்பியிருப்பது ஆர். கிருஷ்ணசாமியை, தயவுசெய்து தெரிந்து கொள்ள வேண்டும். பெயர் ஒன்று தான் பொது, அது என். இது ஆர்.......

<u>திரு. அ. ரகுமான்கான் :</u> தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மன்னிக்க வேண்டும் குறுக்கிடுவதற்காக. குற்றச்சாட்டை எழுப்பியது நான்தான். இஸ்மாயில் கமிஷன் தீர்ப்புப்படி குற்றவாளி என்று சொல்லியிருக்கக்கூடிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் சொல்லிவிட்டு பிறகு அடிஷனல் ஐ. ஜி. கிருஷ்ணசாமி என்று குறிப்பிட்டேனே தவிர என். கிருஷ்ணசாமியா, ஆர். கிருஷ்ணசாமியா என்ற குறிப்பை நான் சொல்லவில்லை என்பதை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> மீண்டும் சொல்கிறேன். அப்படிச் சிபாரிசு அளிக்கப்பட்டவர் இந்தக் குற்றச்சாட்டிலே ஈடுபட்டவர் என்று தயவு செய்து கருதவேண்டாம். அது வேறு கிருஷ்ணசாமி, அவரைப்பற்றி விசாரித்துக் கொண்டிருக்கிறோம். எந்த அதிகாரியாக இருந்தாலும் நாங்கள் இந்த ஆட்சியிலே இருந்தாலும்கூட, மாண்புமிகு ரகுமான்கான் போன்றவர்கள் அன்று கட்சியிலே இருந்தாரா இல்லையா என்று எனக்குத் தெரியாது. அன்று பள்ளிக்கூடத்திலே இருந்திருக்கலாம், அப்போது நான் சென்ட்ரல் ஜெயிலிலிருந்து பிணமாகத் தரப்பட்ட கோ. சி. மணியினுடைய சவத்தோடு நடந்துசென்றவன் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்றைக்கு எவ்வளவு கண்ணீர் விட்டிருப்போம், அவரது தாய்மார்களைப் பார்த்து எவ்வளவு சங்கடப்பட்டு, கஷ்டப்பட்டு இருப்போம் என்பது உங்களுக்குத் தெரியாது. இங்கே உள்ள தலைவர்களுக்கும், மற்றவர்களுக்கும் தெரியும்.

காவலில் அடித்துக் கொல்வதை நாங்கள் ஆதரிப்போம், அதற்கு நாங்கள் ஆதரவு கொடுப்போம் என்று யாரும் நினைக்கவேண்டாம். அதுபோல் எந்தச் சட்டத்தின் கீழ் தண்டனை கொடுக்கப் பெற்று சிறையில் வைக்கப் பெற்றிருந்தாலும், சிறையிலே உள்ளவர்களை துன்புறுத்துவதை, அடிப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்வோம்

என்ற எண்ணத்தை உங்கள் நெஞ்சிலே நீங்கள் ஏற்றிக்கொண்டு
விடாதீர்கள். அதற்கு நிச்சயமாக நாங்கள் ஒத்துழைக்க மாட்
டோம். தண்டனை கொடுப்பது நீதிமன்றத்திலே நீதிபதி;
நீதிபதி என்ன தண்டனை கொடுக்கிறாரோ, சாட்சிகளின்படி
குற்றவாளியாக்கப்பட்ட நிலையில், நிரபராதியாக
இருந்தாலும் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டிருந்
தாலும், அல்லது உண்மையாகவே குற்ற வாளியாக
இருந்து குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப்பட்டிருந்தாலும்
என்ன தண்டனை வழங்கவேண்டுமென்று நீதிபதி தீர்ப்புச்
சொல்கிறாரோ அதன்படி நடப்போம், சிறையிலே அடிப்பதை
நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம். இன்றும் ஏற்றுக்கொள்ள
வில்லை, என்றும் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

ஆளை அழைத்துச் செல்வதும், சட்டையைக் கழற்றச்
சொல்வதும், குனியச் சொல்வதும் குனியும் போது பூட்ஸ் காலால்
அடிப்பதும் போன்ற நிலைமைகள் இருக்குமானால் அதை நாங்கள்
எப்போதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அப்போது
எவ்வளவு துன்பத்தை அனுபவித்தார்கள் என்பதை அந்தச் சவத்
தோடு நடந்துசென்றவர்களிலே, அவர்களுக்கு உதவி ஏதாவது
செய்வதாக இருந்தால் செய்வதிலும் நானும் இருந்தேன்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன்: தலைவர் அவர்களே, கோ. சி. மணி
யோடு நானும் சிறையிலே இருந்தவன். கோ. சி. மணி இறந்த
தற்கும், சிட்டிபாபு இறந்ததற்கும் வேறுபாடு இருக்கிறது.
தலைவரின் பிறந்தநாளைக் கொண்டாடியதற்காக நிர்வாணமாக
சிறையிலே ஓடவிட்டார்கள் என்னை, இப்படிப்பட்ட கொடுமை
வேறு சுதந்திரம் பெற்ற எந்த நாட்டிலேயும் நடந்திருக்காது.
விசாரணை நடத்தப்பட வேண்டுமென்பதற்காகத் தான்
சொன்னேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மீண்டும்
தெரிவித்துக் கொள்கிறேன். நீதிபதி இஸ்மாயில் தீர்ப்பிலே
கடைசியிலே சொல்லி இருக்கிறார்கள்—சிட்டிபாபு சாவுக்கும் அப்
படித் துன்புறுத்தப்பட்டதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லி
யிருக்கிறார்கள். (திரு. மு. அரங்கநாதன் கையை ஆட்டினார்
கள்). இல்லையென்று சொல்கிறார்கள். நீதிபதி அவர்கள்
தீர்ப்பு எழுதியிருக்கிறார்கள். சிட்டிபாபுவினுடைய டயரியைக்
கொண்டு வந்து இருக்கிறேன், டயரி அல்ல நோட்டுப் புத்தகம்,
அதிலே கிழிக்கப்பட்ட பக்கங்கள் கிடைத்து படித்துப் பார்க்கப்
பட்டால்தான் நியாயம் வழங்க முடியும். அந்தக் குறை நமக்கு
இருக்கிறது. அது ஏன் கிழிக்கப்பட்டது என்பது பற்றி என்ன
காரணம் சொன்னாலும் அது மனத்திற்கு வேதனைதரத்தக்கது
தான் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

[மாலை 6-20]

இது தான் அவர் எழுதிய டயரி என்று சொல்கிறார்களே
அந்தப் புத்தகம். இந்தப் புத்தகத்திலிருந்து பக்கங்கள் கிழித்
தெடுக்கப்பட்டிருக்கின்றன.

(ஒரு புத்தகத்தை எடுத்துக் காண்பித்தார்.)

அதிலே என்ன எழுதியிருந்தது என்பதைப் படிப்பதற்கு முன்பு,
என்னைப்போல் அரிச்சுவடிகூடப் படித்திருக்கிறேனே என்னவோ
தெரியாது, நான் எப்படித் தீர்ப்பு சொல்ல முடியும்? பிறருடைய
தீர்ப்பைக் கேட்டுத்தான் பதில் சொல்ல முடியும் அந்த நிலையில்
தான் இருக்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, எக்சி
பிட்டாக மார்க் செய்யப்பட்டு நீதிபதி கருத்துத் தெரிவித்து
விட்டார்கள். அந்த ரிப்போர்ட்டின் மீது எப்பொழுது நட
வடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்
களே, மாண்புமிகு நண்பரவர்கள் வழக்கறிஞர், அவருக்குத் தெரி
யும், அதிலும் அமைச்சராக இருந்தவர்கள். குற்றம் சாட்டப்
படுகின்றவர்களிடம் கேள்வி கேட்டாக வேண்டும். விசாரணைக்
கமிஷன் முடிந்த பிறகு அவர்களிடம் கேள்வி கேட்டு, இப்படித்
தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது, பதில் சொல்லுங்கள் என்று
கேட்டு பதிலைப் பெற்றாக வேண்டும். அப்படிப் பதிலைப் பெற்ற
பிறகு நமக்கு நியாயமான பதிலாக இருந்தால் அதன் மீது முடி
வெடுக்க வேண்டும், சட்டப்படி என்ன செய்ய வேண்டுமென்று
பார்க்க வேண்டும். பதில் சரியாக இல்லை என்றால் சட்ட நிபுணர்
களைக் கேட்டுச் சொல்ல வேண்டும், அதற்கு நடவடிக்கை எடுக்க
வேண்டும்.

இந்த நிலையில் என்னைப் பொறுத்தவரையில் சொல்கிறேன்,
நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். இப்படி எந்தக் கார
ணத்தை அடிப்படையாக வைத்து அவர்கள் ஏற்றுக்கொண்ட
தாகச் சொன்னாலும்கூட, இப்படி புத்தகத்திலிருந்து கிழித்து
எடுக்கப்பட்டு, மீதத்தைப் படிக்க வைத்து, அதைத் தீர்ப்பு சொல்
வதற்கு நல்ல ஆதாரமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று
சொல்லும்பொழுது, நான் எதிர்க்கட்சியிலே இருந்தாலும்
இதைத்தான் சொல்வேன், இங்கே இருந்தாலும் நான் இதைத்
தான் சொல்வேன், முதலமைச்சர் பதவியில் இருந்தாலும் சரி,
வெளியிலே இருந்தாலும் சரி, நான் இதைத்தான் சொல்வேன்.

[1978 செப்டம்பர் 12

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, எக்சி
பிட்டாக மார்க் செய்யப்பட்டிருக்கிறது. சிட்டிபாபு அடிக்கப்
பட்ட விவரம் இருக்கிறது. சிட்டிபாபு அடிபட்டார் என்ற
பிரச்னையில் நீதிபதி ரிப்போர்ட் கொடுத்து இருக்கிறார்கள். நீதி
பதி கொடுத்த ரிப்போர்ட்டைத் தவறு என்று சொல்கிறார்களா
என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்
களே, நீதிபதி அவர்கள் கொடுத்த தீர்ப்பு சரியா, தவறா என்பது
அல்ல. எனக்குள்ள சந்தேகம், கிழிக்கப்பட்ட பக்கங்களில்
என்ன எழுதியிருந்தது என்று தெரிந்து கொண்டால் ஒருவேளை
இங்கே எழுதப்பட்டிருப்பதை போல அவர் தாக்கப்பட்டது
உண்மையாக இருந்தாலும்— இங்கே மாண்புமிகு உறுப்பினர்
அரங்கநாதன் சொன்னார்கள், நான் நம்பவில்லை என்று சொன்னார்
கள், அது அவருடைய உரிமை, இஸ்மாயில் தீர்ப்பை நான் சொன்ன
தற்கு அவர்கள் நம்பவில்லை என்று சொன்னார்கள்.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே,
இஸ்மாயில் தீர்ப்பை நான் நம்பவில்லை என்ற பிரச்னைக்குப் போக
வில்லை. நான் சொன்னது, கோ. சு. மணி சாவை ஒப்பிட்டுச்
சொன்னால், அப்பொழுது நான் சிறையில் இருந்தேன். தவறான
ஊசி போடப்பட்டு, இரத்த வாந்தி எடுத்து மாரடைத்து அழுத
பொழுது ஆஸ்பத்திரியிலே சேர்த்தார்கள். ஆனால் இங்கு என்ன
நடந்திருக்கிறது என்றால், ஷூவால் உதைத்து தொப்புள் வெளியே
வந்து, அடி வயிற்றில் உதைத்து, சிறுநீர்க்குழாய் பாதிக்கப்பட்டு
மலம் போகும் குழாயிலே இரண்டு முறை ஆப்பரேஷன் செய்யப்
பட்டு, இப்படியெல்லாம் சித்திரவதை செய்யப்பட்டிருக்கிறார்.
சுதந்திரம் பெற்ற இந்தியாவிலே இந்தக் கொடுமைகள்
நடந்தபிறகு, அறிக்கை கிடைத்த பிறகும்கூட நடவடிக்கை எடுக்க
இவ்வளவு காலதாமதமாகிறது ஏன் என்றுதான் கேட்கிறோம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்
களே, முதலில் குறிப்பிடுகிறபொழுது, இதே இஸ்மாயில் அவர்கள்
நீதிபதி என்ற வகையில் அவர் சொல்லிய தீர்ப்பைச் சொன்னேன்,
கடைசிப் பகுதியில் அவருடைய சாவுக்கும் தாக்கப்பட்டதற்கும்
சம்பந்தம் இல்லை என்று எழுதி இருக்கிறார்கள்; இதைச் சொன்ன
பொழுது நான் நம்பவில்லை என்று அவர்கள் சொன்னார்கள்.
அதைப் போல, அதற்குப் பிறகு என்ன நடந்தது? அவருக்கு
என்னென்ன பிரச்சினைகள் உருவாகி இருந்தன, என்னென்ன மன
வேதனைகள் ஏற்பட்டன என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ள
கிழிக்கப்பட்ட பக்கங்கள் கிடைக்காததால் நமக்கு வாய்ப்பில்லா
மல் போய் விட்டது என்றும் சொல்லும் பொழுது..........

1978 செப்டம்பர் 12]

திரு க. சுப்பு : தலைவரவர்களே, இஸ்மாயில் கமிஷனில்
கிழிந்து போன பக்கங்களைப் பற்றிய பிரச்சினை எழுப்பப்பட்டு
குடும்ப விஷயமாக இருப்பதால் அதைக் கொண்டு வரவில்லை
என்று சொல்லி, அவர் திருப்தி அடைந்து, வேண்டியதில்லை என்று
எழுதியிருக்கிறார்கள். வேண்டுமென்று சொன்னால், கோர்ட்டில்
கிரிமினல் கேஸ் போட்டு சம்மன் அனுப்புங்களேன், சும்மா வாய்ப்
பேச்சு பேசி என்ன பிரயோசனம்.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்
களே, நல்ல யோசனைகளை அவ்வப்பொழுது மாண்புமிகு சுப்பு
அவர்கள் எனக்கு சொல்லுகின்றார்கள், நான் வரவேற்கின்றேன்.
எப்படி அதை வரவழைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்.
அதுபோல் அவர் சொன்ன அந்தச் சட்ட நுணுக்கத்தை நான்
ஆராய்ந்து பார்க்கச் சொல்லி, எப்படி இந்தப் பகுதியைக் கிழித்து
இருக்கிறார்கள், யார் அதை வைத்திருக்கிறார்களோ, அவர்கள்
அதைத் தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டு, அதில் என்ன குறிப்
பிட்டிருக்கிறார்களோ அதைக் கண்டிப்பாக வரவழைக்க
செய்து பார்க்க முயல்வேன் என்பதை மாண்புமிகு சுப்பு அவர்
களுக்கு உறுதி மொழியாகக் கூறுகிறேன்.

திரு எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, நீதிபதி இஸ்மாயில்
அவர்களே, அடித்ததால் அந்த மரணம் ஏற்படாவிட்டாலும்,
அதுதான் 'டைரக்ட் பிரைமரி காஸ்' என்ற நிலை இல்லா
விட்டாலும், அந்தச் சிறைச்சாலையிலே அவ்வாறு அவர் நடத்தப்
பட்ட காரணத்தாலே அவருடைய மரணம் துரிதப்படுத்தப்
பட்டது என்ற குறிப்பையும் நீதிபதி இஸ்மாயில் அவர்கள் தெளி
வாகக் குறிப்பிட்டிருக்கிறார். அதையும் நாம் கவனிக்க வேண்
டும்.

மேலும் டையரியைப் பற்றி முதலமைச்சரவர்கள் கிழிக்கப்
பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஏதோ ஒரு உள்
நோக்கத்திலோ அல்லது தகவலின் அடிப்படையிலோ பேசிக்
கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றி அவர் என்ன நினைக்கிறார்
என்பதையும் தெரிவிக்க வேண்டும். யார் அதைக் கிழித்தார்
என்று நினைக்கிறார். யாரிடத்திலேயிருந்து அந்த டையரியை
போலீஸ் கைப்பற்றியது, எவ்வாறு அது எக்சிபிட்டாக கமிஷன்
முன் வைக்கப்பட்டது என்பதையும் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்
களே, நல்லவேளையாக என்னைப் போன்ற ஒருவனுக்கு சட்ட
நுணுக்கம் தெரிந்தவர் யோசனை சொல்லுகின்ற வாய்ப்பு
இங்கு அதிகமாகக் கிடைக்கிறது, மகிழ்ச்சி. அவர் வழக்
குரைஞர். இந்தச் சட்டமன்றத்தில் நானே கற்பனை செய்து
இன்னார் இப்படிச் செய்திருக்கலாம். ஆகவே இன்னார் மீது நான்

நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்ல வேண்டுமென்று சொல்கிற அந்த யோசனை ஒரு வழக்குரைஞர் சொல்லக் கூடிய யோசனைதானா என்பதிலே எனக்குச் சந்தேகம்; சட்டமன்றத்திலே இப்படிச் சொல்லலாமா என்பதும் எனக்குத் தெரியாது.

ஆனால் ஒன்றைச் சொல்கின்றேன் பணிவோடு. சிட்டிபாபு அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டார் என்று சொல்வதைக் கேட்டு மற்றவர்கள் அவருக்கு நெருங்கிய நண்பர்கள் என்று யார் தங்களைக் கருதுகிறார்களோ அவர்கள்— எவ்வளவு வேதனை படுவார்களோ அந்த அளவுக்குக் கொஞ்சங்கூடக் குறையாமல் நான் வேதனைப்படுகிறேன் என்பதை மட்டும் நான் சொல்ல முடியும்.

ஏனெனில் காஞ்சிபுரத்தில்—மன்னிக்க வேண்டும்—செங்கற்பட்டில் ஒரு பொதுக்கூட்டத்தில் முதன்முதலாக திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கும்போது, நூறு ரூபாய் நோட்டுக்களையே செல்லாததாக்கிவிட வேண்டுமென்ற பிரச்னை உருவாகி நான் சொல்லியபொழுது, என்கூட இருந்து ஆதாரங்களை எ[illegible]த்துச் சொல்லி, இந்தந்தக் கமிஷன்கள் எல்லாம் இப்படி, இப்படியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்; ஆகவே, அதையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று புள்ளி விவரத்தோடு, என் கருத்துக்களுக்கெல்லாம் ஆதாரம் கொடுத்துப் பேசியவர் அவர் என்பதை நான் மறந்திடவில்லை. ஆகவே அவர் எனக்கு நெருங்கிய நண்பராக இருந்தவர்தான் என்பதையும், அவருடைய மரணத்திலே எனக்கு மகிழ்ச்சி இல்லையென்பதையும்—அது மட்டுமல்ல, யாருடைய மரணத்திலும் எனக்கு மகிழ்ச்சி இல்லையென்பதையும்—தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இதனால் எல்லாம், பிரச்சினை என்று சொல்லும்போது, இடம் விட்டு இடம் மாறி அவர் குறிப்பிட்டுள்ளது அனுமதிக்கக் கூடியதா என்றால் நிச்சயமாக இல்லை.

(மாலை 6-30)

யாராக இருந்தாலும் ஏற்றுக் கொள்ள முடியாது. நான் முன்னமே சொன்னதுபோல் நீதிபதியின் தீர்ப்பு என்னவோ அதைத்தான் நிறைவேற்ற முடியுமே தவிர, அதற்கு மீறி எந்தக் காரியத்தை எந்த அதிகாரி செய்தாலும் அதை ஏற்றுக் கொள்ள முடியாது, அனுமதிக்க முடியாது என்ற கருத்தை —உங்களுடைய கருத்தோடு ஒத்த கருத்து என்றுதான்—நான் சொல்கிறேன்.

இன்னொன்றைச் சொல்கிறேன். இங்கே இன்ஜினியரிங் கல்லூரி அட்மிஷன் பற்றி எதிர்கட்சித் தலைவர்கள் பேசிய அந்தக் கருத்தைச் சொல்லி, எனக்குத் தரப்பட்டிருக்கிற குறிப்

புக்களையும் எடுத்துச் சொல்வது என் கடமை என்று நான் குறிப்பிடுகிறேன்.

'இன்ஜினியரிங் கல்லூரியை எடுத்துக் கொண்டால் ஒரு பெரிய விபரீதமான வேடிக்கை நடைபெற்றிருக்கிறது. என்ன வேடிக்கை என்றால் முதலில் தேர்வுப் பட்டியல் வெளியானது. அதில் 95 சதவீதம் மார்க்குகள் வாங்கிய ஒரு இஸ்லாமிய மாணவன் தன்னைத் தேர்ந்தெடுக்கவில்லை என்று வழக்குப் போட்டார். அந்த வழக்கு நீதிமன்றத்திற்கு வந்தபோது, அரசாங்கத்தின் சார்பில் .வாதாடிய அரசாங்க வக்கீல் என்ன கூறினார் என்றால், அரசாங்கத்தின் சார்பில் என்ன எடுத்து வைக்கப்பட்டது என்றால், இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதியவர்கள் அதிக மார்க்குகள் வாங்கியிருக்கலாம். நாங்கள் வைத்திருக்கிற தேர்வு கமிட்டியினுடைய கொள்கை என்னவென்றால் இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க்குகள் வாங்கியவர்களைத் தேர்ந்தெடுப்பதில்லை என்பது தேர்வு கமிட்டியினுடைய கொள்கை என்று அரசாங்க சார்பில் வாதாடிய அரசாங்க வக்கீல் எடுத்துக் கூறியிருக்கிறார்.

"இவ்விதம் வாதாடி முடித்துவிட்டபிறகு தான் உண்மை தெரிந்திருக்கிறது. இதே போன்று இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க் வாங்கிய இன்னொரு மாணவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அவர் யார் என்றால் ஜி. கோவர்தனன் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்ட எண். 13703. நீதி மன்றத்தில் அரசாங்க வக்கீல் உண்மைக்கு மாறாகச் சொல்லிவிட்டதனால் அதிலிருந்து தப்பித்து கொள்வதற்காக, கோவர்தனன் என்பவர்—எண். 13703 என்ற எண் வெற்றி பெற்றுள்ளதாக பத்திரிகையில் வெளி வந்துவிட்ட பிறகு, சேலம் என்ஜினியரிங் கல்லூரிக்குச் சேருவதற்காக செல்லுகிறார். ஆனால் அங்கே அவரை சேர்க்காதே என்று உத்தரவு போகிறது. அந்த மாணவரும் இப்போது தன்னை செலக்ட் செய்ய வேண்டும் என்று நீதிமன்றத்திற்குச் சென்றிருப்பதாகக் கேள்வி."

இது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் சொல்லப்பட்ட குறை. எம். கோவர்தனன் பிரிவு 3-இல்—92 சதவீத மார்க்குகள் வாங்கியுள்ளார். பின்தங்கிய வகுப்பினர். இருமுறை தேர்வெழுதி மார்க்குகளை இம்ப்ரூவ் செய்துள்ளார். இந்த விவரம் அவரது விண்ணப்பத் தாளில் குறிப்பிடவில்லை. 1978-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26-ஆம் தேதி வெளியிடப்பட்ட பட்டியலில் அவர் பெயர் இடம் பெற்றிருந்தது. தேர்வுக் குழு கொள்கைப்படி இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதிப் பெற்ற மார்க்குகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாததால், பின்னர் அது தெரிந்தவுடன் தேர்வு ரத்து செய்யப்பட்டது. இது தந்தி

[திரு. எம். ஜீ. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 12

மூலம் 1978-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29-ஆம் தேதி அன்று அனுப்பப்பட்டது. அரசுக்கு எதிராக ரிட் மனு தாக்கல் செய்யப் பட்ட தேதி 1978-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2-ஆம் நாள் அரசு வழக்கறிஞர் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொள் கிறார். இது முன்னரே கவனிக்கப்பட்டு ரத்து செய்யப்பட்டது என்று கூறப்படுகிறது. அது பின்னர் தான் கவனிக்கப்பட்டு ரத்து செய்யப்பட்டு விட்டது என்பது சரியல்ல. 1978-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30-ஆம் நாள் அன்று அந்த மாணவ னுடைய தந்தை கோபாலகிருஷ்ணன், தன்னுடைய மகன் ஜெயின் கல்லூரியிலிருந்து டி.சி. வாங்கி வந்துவிட்டதால் மீண்டும் அக்கல்லூரியில் சேர்க்க அந்த முதல்வர் மறுத்து விட்டார் என்று சொன்னபோது தொழில் நுட்பக் கல்லூரி இயக்குநர் அந்தக் கல்லூரி முதல்வரோடு தொடர்பு கொண்டு மீண்டும் அந்த மாணவனை திரும்ப அக்கல்லூரியில் சேர்ப்பித்தார்.

முகமது ஷெரீப் தாக்கல் செய்திருந்த ரிட் மனுவின்மீது இம்ப்ரூவ்மெண்ட் டெஸ்ட் மூலம் எடுத்த மார்க்குகளைத் தேர்வுக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று உயர்நீதி மன்றம் தீர்ப்புக் கொடுத்ததால், திரு. கோவர்தனன் மீண்டும் சேலம் என்ஜினியரிங் கல்லூரியில் அனுமதிக்கப்பட1978-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ஆம் நாள் அன்று அவனுடைய தந்தை நேரிலே வந்து ஆணையை பெற்றுச் சென்றிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய உறுப்பினர் ரகுமான்கான் பேசியதைப்பற்றி யும் சொல்லி, பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

> "1978-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25-ஆம் தேதி எம்.பி. பி.எஸ். பட்டியல் வெளியிடப்பட்டது. அந்தப் பட்டி யல் மருத்துவக் கல்லூரி நோட்டீஸ் போர்டிலும் ஒட்டப் பட்டது. பத்திரிகையிலேயும் வெளி வந்திருக்கிறது. மூன்று நெம்பர்கள் 5227 என்கிற எண் 5827 ஆகவும். 5085 என்ற எண் 5785 ஆகவும், 3520 என்ற எண் 3320 என்றும் திருத்தப்பட்டுள்ளது. இவைகள் டைபோகிரா பிகல் எர்ரர் என்ற காரணத்தால் திருத்தப்பட்டு அதுவும் 1978-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26-ஆம் தேதிய இந்துப் பத்திரிகையில் வந்திருக்கிறது"

என்பது குற்றச்சாட்டு.

இது குறித்து தேர்வுக் குழு செயலாளர் பின் வருமாறு பதில் எழுதியுள்ளார். தர்ந்தெடுக்கப்பட்ட எண், 5785 பிரசுரிக்கப் பட்ட எண். 5085, தேர்ந் தெடுக்கப்பட்ட எண். 5827, வெளியிடப்பட்ட, எண். 5227 தேர்ந்தெடுக்கப்பட்ட எண். 3320—பிரசுரிக்கப்பட்ட எண். 3520

1978 செப்டம்பர் 12] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

மேற்கண்டவை உண்மை. இது தட்டச்சுத் தவறே அன்றி வேறெ துவும் இல்லை. எண். 5785 செல்வி பாரதி நஞ்சப்பர் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்; மார்க் 159·25, நேர்முகத் தேர்வு மார்க் 35, மொத்தம் 194·25. தேர்ந்தெடுக்கப்பட்டார் 5085 சாந்தகுமாரி முற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். மார்க் 161, நேர்முகத் தேர்வு மார்க் 29—மொத்தம் 190. தேர்ந்தெடுக்கப்படவில்லை. மொத்த மதிப்பெண்களின் அடிப் படையில் செல்வி பாரதி நஞ்சப்பர் என்ற மாணவிதான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மேலும் முற்பட்ட வகுப்பைச் சேர்ந்த சாந்தகுமாரி பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த செல்வி பாரதி நஞ்சப்பரை விடக் குறைவாக மதிப்பெண் பெற் றுள்ளார். ஆகவே, அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

5227 என்ற எண் பொதுப்போட்டியிலும், தாழ்த்தப்பட்ட வகுப்பிலும் காணப்பட்டது. 5227 என்ற மாணவர் மதன் குமார் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். தாழ்த்தப்பட்ட வகுப்புக்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்தில் தேர்ந்தெடுக்க பட்டார். பொதுப் போட்டியில் 5827 என்ற எண்ணுள்ள மாணவி ஆர். ரெங்கநாயகி தாழ்த்தப் பட்ட வகுப்பு, பொதுப்போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டார். 5827 என்று தட்டச்சு செய்வதற்குப் பதிலாக 5227 என்று தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டது. அந்த மாணவர்கள் வாங்கிய மதிப்பெண்கள் வருமாறு :—5227—மதன் குமார் —மார்க் 125, நேர்முகத் தேர்வு மார்க் 35, மொத்தம் 160. எண். 5827—செல்வி ரங்கநாயகி—மார்க் 163·50—நேர்முகத் தேர்வு மார்க் 37, மொத்தம் 200·50. ஆகவே, செல்வி ரங்கநாயகி, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் மொத்த மதிப்பெண் அடிப்படையில் பொதுப்போட்டியில் தேர்ந்தெடுக் கப்பட்டார்.

3320 என்ற எண்ணுள்ள மாணவி பெயர் செல்வி தங்கத் தாய். பிற்பட்ட வகுப்பு. 3520 என்ற எண்ணுள்ள மாணவன் பெயர் திரு. ஷேக் உதுமன், திருநெல்வேலியைச் சேர்ந்தவர். பிற்பட்ட வகுப்பு. மேற்கண்ட இருவரும் பெற்ற மதிப்பெண்கள் பின்வருமாறு :—பதிவு எண். 3320—செல்வி தங்கத் தாய்— மார்க் 157·75, நேர்முகத் தேர்வு மார்க் 37— மொத்தம் 194·75. பதிவு எண். 3520— திரு. ஷேக் உதுமன்—மார்க் 142, நேர்முகத் தேர்வு மார்க் 32—மொத்தம் 174. அதிகமாக மொத்த மதிப்பீடுகள் பெற்ற செல்வி தங்கத் தாய் பிற்பட்ட வகுப்பு பட்டியலில் தேர்ந்தெடுக்கப்பட்டார். — ஆகவே குறைந்த மதிப்பெண்கள் பெற்ற திரு ஷேக் உதுமன் தேர்ந் தெடுக்கப்படவில்லை. மேற்கூறிய 3 பிழைகளும் தட்டச்சு பிழை யால் ஏற்பட்டன. அதற்கான திருத்தம் பத்திரிகைகளில் அறிவிக்கப்பட்டு அவைகள் வெளிவந்தும் இருக்கின்றன.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 12

1645 என்ற எண் 1646 என்றும், 411 என்ற எண். 417
என்றும், 2373 என்ற எண் 2537 என்றும் மாற்றப்பட்டதாகத்
தெரிவிக்கப்பட்டது. அந்த எண்கள் மாற்றப்படவில்லை. அவை
கள் தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டது என்று முன்னரே
கண்டுபிடிக்கப்பட்டு, ஸ்டென்சில் தாளிலேயே வெளியிடுவதற்கு
முன்பே திருத்தப்பட்டு விட்டது. வெளியிட்ட பிறகு அது
திருத்தப்படவில்லை. ஒவ்வொரு ஸ்டென்சில் தாளிலும் குழு
வின் செயலாளர் கையெழுத்துப் போட்டு இருப்பதால் ஒவ்வொரு
திருத்தத்திற்கும் கையெழுத்துப் போட வேண்டிய அவசியம்
இல்லை.

மேற்கூறிய எண்கள் பெற்ற மதிப்பெண்கள் வருமாறு :—
எண். 2373—பெற்ற மதிப்பெண் 155·25—நேர்முகத் தேர்வு
மார்க் 37, மொத்தம் 192·75—தேர்வு செய்யப்பட்டார்.
எண். 2537 என்ற எண் பொதுப்போட்டித் தேர்வில், ஜெனரல்
பூலில் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனல் 2373 என்ற எண்
பிற்பட்ட வகுப்பிற்குண்டான இடத்தில் தேர்ந்தெடுக்கப்
பட்டார். இரண்டு நபர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நபர்
கள்;

அதைப்போலவே, கோபி என்ற மாணவர் எண். 411
பின்தங்கிய வகுப்பு பெற்ற மதிப்பெண்கள் 146 நேர்முகத்
தேர்வு மார்க் 33, மொத்தம் 179. தேர்ந்தெடுக்கப்படவில்லை.
எண். 417 மத்தாய் தாமஸ் மதிப்பெண்கள் 166.50 நேர்
முகத் தேர்வு மார்க் 32, மொத்தம் 198·50 தேர்ந்தெடுக்கப்
பட்டார். எண். 1645 பெயர் எம். டி. ஷாமுல் ஆசன்
தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஹைதராபாத்தில் இருந்து விண்
ணப்பித்துள்ள மாணவர். நிலையான விலாசம், சான்று முதலியன
கொடுக்கவில்லை. அதனல் நேர்முகத் தேர்வுக்குத் தகுதி பெற
வில்லை.

எண்: 1646— பெயர் ஷேக்தாவூது — பின்தங்கிப வகுப்
பைச் சேர்ந்தவர் — பெற்ற மதிப்பெண்கள் 174.25 — நேர்
முகத் தேர்வு மார்க் 35 — மொத்த மார்க்குகள் 209.25 பிற்
பட்ட வகுப்புப் பட்டியலில் தேர்ந்தெடுக்கப்பட்டார். எண்
2373 — பெயர் சுந்தரராஜன் — பெற்ற மதிப்பெண்கள்
155.25 — நேர்முகத் தேர்வு 37 — மொத்தம் 192.25 —
பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர் — தேர்ந்தெடுக்கப்பட
டார். எண் 2537 — எஸ். அறிவழகன் — முற்பட்ட வகுப்
பைச் சேர்ந்தவர் — பெற்ற மதிப்பெண்கள் 167 — நேர்முகத்
தேர்வு 40 — மொத்தம் 207 — பொதுப்போட்டி பட்டியலில்
தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்கெல்லாம் இங்கே ஆதாரங்கள்
இருக்கின்றன.

1978 செப்டம்பர் 12]

[மாலை 6.40]

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் நான் எழுப்பிய குற்றச் சாட்டுக்குப்
பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனல் எந்தெந்த நம்பர்களுக்கு
எந்தெந்த மார்க்குகள் என்று சொல்லும்போது அதை நான்
தொடர்ந்து வர முடியாத அளவுக்கு வேகமாகச் சொல்லியிருக்
கிறார்கள். இருந்தாலும் நான் எழுப்பியதில் 3 நம்பர்கள் ஏற்
கெனவே வந்துவிட்டன. 3 நம்பர்கள் டைபோகிராபிக்கல் எரர்
என்று சொல்வதென்றால் நோட்டீஸ் போர்டில் போட்ட நம்பர்
கள் அடிக்கப்பட்டு, புதிதாக இணைக்கப்பட்டிருக்கின்றன.
அது ஏன்? எப்படி ஏற்பட்டது?

டைபோகிராபிக்கல் எரர் என்று இந்துப் பத்திரிகையிலும்
மற்ற பத்திரிகையிலும் கமிட்டி உறுப்பினர்கள் வருத்தம் தெரி
வித்து, இந்த இந்த நம்பர்கள் திருத்தப்பட்டன என்று அறிவிப்புக்
கொடுத்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரியும் கையெழுத்
திட்டிருக்கிறார். மற்ற நம்பர்கள் — 411 என்ற எண் அடிக்கப்
பட்டு 417 என்று போடப்பட்டிருக்கிறது. 1515 என்ற நம்பர்
1546 என்று மாற்றப்பட்டிருக்கிறது. 5423 என்ற நம்பர் 5418
என்று போடப்பட்டிருக்கிறது. இதை ஏன் டைபோகிராபிக்கல்
எரர் என்று சொல்லவில்லை. ஆகையால்தான் எங்க
ளுக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. அதை ஏன் டைபோகிராபிக்கல்
எரர் என்று சொல்லவில்லை; அதிகாரி ஏன் அதில் கையெழுத்துப்
போடவில்லை என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டிருந்
தேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : திரும்பத்
திரும்பச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமென்று நான் விரும்ப
வில்லை. மீண்டும் சொல்கிறேன். எண்கள் இங்கே எழுதி
வைக்கப்பட்டிருக்கின்றன. புரிந்து கொள்ள முடியாமல் வேக
மாகப் படித்துவிட்டேன் என்ற சந்தேகம் இருநதால், இந்தக்
குறிப்பை தலைவரிடம் கொடுக்கிறேன்; வாங்கி பார்த்துவிட்டு,
நாளைக்கு வேண்டுமானல் இந்தப் பிரச்சனையை எழுப்பலாம்.

மாண்புமிகு திரு. திருவேங்கடம் அவர்கள், '' என் தொகுதி
யில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மூன்றுவது டாக்டர் நிய
மிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்; ஓராண்டு காலத்திற்கு
முன்பே மருத்துவ அதிகாரி அங்கு இல்லை என்று முதலமைச்ச
ரிடம் மனுக் கொடுத்தேன்; இன்றைய தேதிவரையில் மருத்துவ
மனைகளில் டாக்டர்கள் போடப்படவில்லை; இது நிர்வாக கேடு
இல்லையா,'' என்று கேட்டார்கள்.

இவரது சட்டமன்றத் தொகுதியில் கீழ்க்கண்ட 3 ஆரம்பச்
சுகாதார நிலையங்கள் உள்ளன:— (1) கடலாடி; (2) நார்த்
தம்பூண்டி; (3) மங்கலம்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 12

கடலாடியில் இரண்டு மருத்துவர்கள் பணியில் உள்ளனர்.
மூன்றாவது மருத்துவர் நியமிக்கப்பட்டு இருப்பினும் அவர் மேல்
பட்டப்படிப்பு படிப்பதன் காரணமாக தாமதித்து பதவியில்
சேர அனுமதி கோரியுள்ளார். அவர் நவம்பர் மாதத்தில் பணி
ஏற்பார்.

நார்த்தம்பூண்டி ஆரம்பச் சுகாதார நிலையத்தில் ஏற்படுத்தப்
பட்ட மருத்துவப் பணியிடங்கள் இரண்டு. இரண்டிலும் மருத்
துவர்கள் உள்ளனர். மூன்றாவது பதவி ஏற்படுத்தப்படவில்லை.

மங்கலத்தில் ஒரு மருத்துவர் பணியில் உள்ளார். பெண்
மருத்துவர் பதவி அண்மையில் நிரப்பப்படும். மூன்றாவது
மருந்துவர் 18—9—78 வரை பணியில் சேர அனுமதி கொடுக்
கப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் மொத்தம் 383 ஆரம்பச் சுகாதார நிலையங்
கள் உள்ளன. அவைகளில் 230 ஆரம்பச் சுகாதார நிலையங்களில்
3 மருத்துவப் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எஞ்சி
யுள்ள 153 இடங்களில் மூன்றாவது மருத்துவர் 1979–80-ல் நிய
மிக்கப்பட இருக்கிறார்கள்.

அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் பாலகிருஷ்ணன் அவர்
கள், 'பாபநாசம் பகுதியில் ஏராளமான மக்கள் தொகை இருக்
கிறது. அதனால் அங்கு அதிகமான டாக்டர்களைப் போட வேண்
டும்' என்று கேட்டிருக்கிறார்கள். அந்த பாபநாசம் மருத்துவ
மனையில் 16 படுக்கைகள் உள்ளன. சராசரி வருகை தந்த
நோயாளிகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

புற நோயாளிகள் 1974-ல் 266; 1975-ல் 272; 1976-ல்
296.

உள் நோயாளிகள் 1974-ல் 5; 1975-ல் 5; 1976-ல் 10.

சிறு காய அறுவை சிகிச்சை செய்தது — 1974-ல் 367;
1975-ல் 378; 1976-ல் 381.

பெரிய காய அறுவை சிகிச்சை செய்தது — ஒன்றும் இல்லை.

பாபநாசம் மருத்துவ மனையிலிருந்து 10 முதல் 15 கிலோ
மீட்டர் தூரத்தில் உள்ள மற்ற மருத்துவ மனைகள் கீழேகொடுக்
கப்பட்டுள்ளன:— கும்பகோணம் அரசு மருத்துவமனை, சுவாமி
மலை அரசு மருத்துவமனை, சுந்தரபெருமாள்கோவில் அரசு மருத்
துவமனை, பண்டாரவாடை அரசு மருத்துவமனை, கபிஸ்தலம்
ஆரம்ப சுகாதார நிலையம்.

1978 செப்டம்பர் 12] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

மருத்துவப்
இந்த மருத்துவ மனைக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள
பணியிடங்கள் இரண்டு. மேலே கூறப்பட்டுள்ள அனைத்து வசதி
களையும் இம் மருத்துவமனை பெற்றிருப்பதால் அதிகமான மருத்
துவர்கள் தேவையில்லை என்று கருதப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வேணுகோபால் அவர்கள் ஒரு
குறையைச் சொல்லியிருக்கிறார்கள்: அதாவது ஆறு மாதங்
களுக்கு முன் நடத்திய திருவண்ணாமலை கண் சிகிச்சை முகாமில்
சிகிச்சை பெற்ற நோயாளிகளுக்குக் கண்ணாடிகள் வழங்குவதில்
தாமதம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்கள். இது தொடர்
பாக சென்னை அரசினர் கண் மருத்துவ மனையில் கண்காணிப்பா
ளர் கீழ்க்கண்ட விவர அறிக்கையை அளித்துள்ளார்:—

1978ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அரசின் இலவச கண்
சிகிச்சை முகாம் திருவண்ணாமலையில் நடத்தப்பட்டது. கண்
சிகிச்சை முகாம் நடந்த ஆறு வாரம் கழித்து, மாநில மருத்துவர்
வழக்கம்போல் திருவண்ணாமலை வட்டார வளர்ச்சி அலுவலரை
கண் சிகிச்சை முகாமில் அறுவை செய்து கொண்டோர்களுக்கு
கண்ணாடிகள் வழங்குவதற்குத் தேவையான மறு ஆய்வு செய்
யும்படி கேட்டுக் கொண்டார்.

ஆயினும் வட்டார வளர்ச்சி அலுவலர் அங்கு மறு ஆய்வுக்கு
ஆகஸ்ட் மாதம்தான் ஏற்பாடு செய்தார். கண் சிகிச்சை மருத்
துவ குழுவினர் நோயாளிகளை பரிசோதனை செய்த பின்னர்
புரை அறுவை செய்து கொண்ட நோயாளிகளுக்குத் தேவை
யான கண்ணாடிகளை திருவண்ணாமலை வட்டார வளர்ச்சி அலுவல
ருக்கு வழங்குமாறு திருவாளர்கள் அசோக் ஆப்டிகல் கம்பெனி
யாருக்கு ஆணை பிறப்பித்தார்கள். இந்த நிறுவனத்திடமிருந்து
கண்ணாடிகள் பெறப்பட்டவுடன் பிரிவு மருத்துவ அலுவலர்
அவைகளைச் சோதனை செய்து அவற்றைத் திருவண்ணாமலை வட்
டார வளர்ச்சி அலுவலருக்கு அனுப்பி வைப்பார். திருவண்
ணாமலை கண் சிகிச்சை முகாம் அறுவை செய்து கொண்டோர்
களுக்கு உயர்தர கண்ணாடிகள் இந்த மாத இறுதிக்குள் வழங்கப்
பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது போல் பல்வேறு குற்றச்சாட்டுகள் மருத்துவத் துறை
யைப் பற்றி சொல்லப்பட்டன.

"மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தேர்வுப் பட்டியல்
வெளியிடப்படுவதில் தாமதம். இந்த அரசாங்கம்
தாமதத்தில் மிகு முக்கியமான இடத்தை வகித்து
வருகிறது. அதற்காக அவசரம் வேண்டும் என்று
சொல்ல மாட்டேன். தாமதத்திற்கும், அவசரத்திற்
கும் இடையில் விரைவு என்ற ஒன்று இருக்கின்றது,
அதை இந்த அரசு கடைப்பிடிக்க வில்லை" என்பது
தான் என்னுடைய குறைபாடு என்னுடைய குற்றச்
சாட்டு"

என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். 1977–78 ஆம் ஆண்டில் எம்.பி.பி.எஸ். தேர்வுக் கான பட்டியல் 1977 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 30 ஆம் தேதி அன்று வெளியிடப்பட்டது. 1978–79 ஆம் ஆண்டுக்கான பட்டியல் இப்போது ஆகஸ்ட் மாதம் 25 ஆம் தேதி வெளியிடப் பட்டது. மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்க அமைக்கப்பட்ட தேர்வுக்குழு மருத்துவக் கல்லூரியைப் பொறுத்த வரையில் ஒரு நாளைக்கு 60, 70 மாணவர்களைத் நேர்காணல் செய்து, மாணவர்களைத் தேர்ந்தெடுத்தது. தொழில் நுட்பக் கல்வித் தேர்வுக்கான வழக்கொன்றில், புகுமுக வகுப்பில் மாண வர்கள் இம்ப்ரூவ்மென்ட் டெஸ்டில் பெற்ற மொத்த மதிப்பெண் களின்படி தேர்ந்தெடுக்கப்படலாம் என்று மாநில உயர்நீதிமன் றம் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 23 ஆம் தேதி அன்று தீர்ப்பு வழங்கியது. அத்தீர்ப்பின் அடிப்படையில் மாணவர்களின் தேர்வுப் பட்டியல் மிகக் குறுகிய கால அளவில் தயாரிக்கப்பட்டு, வெளியிடப்பட்டுள்ளது. ஆகவே, காலதாமதம் வேண்டுமென்றே துறையினரால் செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

இவற்றை எல்லாம் நான் இங்கே தெரிவிப்பதற்குக் காரணம் சில சந்தர்ப்பங்களில் நாம் எவ்வளவுதான் திட்டமிட்டு விரைவாக செயல்பட முயற்சித்தாலும் தாமதம் ஏற்படுகிறது என்பதையும் அடுத்து நாம் நீதிமன்றத்திலே இருக்கின்ற வழக்கின் முடிவை எதிர்பார்த்துக் காரியங்கள் ஆற்ற வேண்டியிருப்பதாலும், மேலும் அதிலே இருக்கும் சில டெக்னிகல் நிலைமைகளினாலும் இப்படிப் பட்ட காலதாமதம் ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுத்து என்னுடைய பிரதிநிதியாகப் பணியாற்றுகின்ற திரு. பஞ்சவர்ணம் என்பவரைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் ஒரு கருத்தினைச் சொல்லி இருக்கிறார்கள்—

> ''முன்னாள் ராணுவத்தினர் சுப்புராமன் என்பவரின் மனைவி சுப்புலட்சுமி ஆசிரியையாகப் பணியாற்றிக் கொண்டி ருந்தார். அப்போது திரு. பஞ்சவர்ணம் தலையிட்டு அவரை வேறு ஊருக்கு மாற்றுகிறார். அதற்குப் பின் னால் அவ்வாறு ட்ரான்ஸ்பர் செய்தது சரியில்லை என்று அவர் கலெக்டருக்கு மனு கொடுக்கிறார். அதன் பின் னர், அவரை பழைய இடத்திற்கு மாற்றுவதற்கு ஆணை யிடப்படுகிறது. அப்போது முதலமைச்சரின் பிரதிநிதி தலையீட்டில் அந்த உத்தரவு நிறுத்தி வைக்கப்படுகிறது''

என்று திரு. சுப்பு அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

திருமதி சுப்புலட்சுமி ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளியில் முதுநிலை ஆசிரியையாக ஜூன் 1977 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21 ஆம் தேதி வரை பணியாற்றி வந்தார். முதுநிலை ஆசிரியரின் முன்னுரிமைப் பட்டியலில் இவர் எண். 44 ஆகும்.

(மாலை 6-50)

1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 29 ஆம் தேதியில் திருமதி
சீனிவாச சுப்புலட்சுமி ஆணையருக்கு எழுதிய கடிதத்தில், வாகைக்
குளத்திலிருந்து முத்துராமலிங்கபுரத்திற்கோ அல்லது ரெட்டியா
பட்டிக்கோ மாற்றினால் தமது பணி மூப்பு முன் உரிமையை
விட்டுக் கொடுக்கலாம் என்று எழுதியிருக்கிறார். 1977ஆம்
ஆண்டு ஜூன் திங்கள் 22ஆம் தேதியில் ஆறாண்டுகள் பணி
யாற்றிய பிறகு, இவர் முதுநிலை ஆசிரியர் உரிமை பெற்று அந்தப்
பட்டியலில் 44-வது இடத்தைப் பெற்றிருக்கிறார். பணி முதிர்ச்சி
அடிப்படையில் அவருக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது.
திருமதி சீனிவாச சுப்புலட்சுமி தலைமை ஆசிரியர் பதவிக்கு பூராத்
தகுதி வாய்ந்தவராக மாவட்ட ஆட்சித் தலைவரால் இசைவளிக்
கப்பட்டு தலைமை ஆசிரியையாக வாகைக்குளத்திற்கு நியமிக்கப்
பட்டிருக்கிறார். ஆனால், முதலில், அவர் மாற்றப்படுவதற்கு
முன்னர் தமது பணி மூப்பு முன் உரிமையை விட்டுக்கொடுக்க
வில்லை. ஆகவே, அவர்கள் மாற்றப்பட்டது அரசாணைப்படி
தவிர்க்கப்பட முடியாத செயல்.

திரு. க. சுப்பு: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்
அவர்களுக்குத் தரப்பட்ட தகவலை இங்கே சொல்லியிருக்கிறார்
கள். அதிகாரிகள் முழுமையான தகவல்களைத் தர வேண்டும்.
பணி மூப்பு முன் உரிமையை ஆசிரியர் விட்டுக் கொடுத்தால்
ரூபாய் 5 இழப்பு ஏற்படும். அப்படி விட்டுக்கொடுத்துவிட்டால்
தலைமை ஆசிரியராக இருக்க வேண்டிய அவசியமில்லை. வேறு
ஒருவரைப் போட்டுக் கொள்வார்கள். பி.டி.ஓ. கட்டாயம்,
கொடுக்க வேண்டும் என்ற விதிமுறை இருக்கிறது. அந்த விதி
முறை பின்பற்றப்படவில்லை. எனக்கு பணி மூப்பு முன் உரிமை
வேண்டாம், திருச்சுழி யூனியனிலேயே இருக்கிறேன் என்று சொல்
லியிருக்கிறார். ஆகவே, மாற்றல் செய்ய வேண்டிய அவசியமில்லை.
அவர்கள் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறார். இரண்டு ஆசிரியர்
கள் உள்ளனர் வாகைக்குளத்தில். இவர் போனவுடன் சர்ப்
ளஸ் என்று சொல்லி ஒருவரைப் போகச் சொல்லிவிட்டு இவரைப்
போடுகிறார்கள். டெப்டி இன்ஸ்பெக்டர் அந்த பள்ளிக்குச் சென்று
பார்த்துவிட்டு, செய்தது தவறு என்று எழுதி வைக்கிறார். கலெக்
டர் கவனத்திற்கு அது வருகிறது. டி.இ.ஓ.வை அனுப்புகிறார்
கலெக்டர். மீண்டும் அவரை அங்கே போடுகிறார்கள். இவையெல்
லாம் பஞ்சவர்ணம் கொடுத்த கடிதத்தின் பேரில், அந்த யூனியன்
ஆபீஸில் பெரியண்ணன் என்ற கிளார்க் இருக்கிறார். அவர்
கடிதத்தைக் கிழித்துப் போட்டிருக்கிறார் என்று தகவல். மாவட்ட

ஆட்சித் தலைவர் நாராயணன். அவரை திருச்சுழி பஞ்சாயத்து
யூனியனில் போடக் கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறார்
கள். இருந்தும் திரும்பவும் திருச்சுழி பஞ்சாயத்து யூனியனுக்கே
வந்திருக்கிறார். சட்டமன்ற உறுப்பினர்கள் யார் யார் தலை
யிட்டிருக்கிறார்கள் என்று கேட்டால் நான் சொல்கிறேன். தொலை
பேசி மூலம் கோர்ட் உத்தரவை மீறி இப்படிப் போடப்பட்டதாகத்
தெரிகிறது. உங்கள் நேரடி உதவியாளர் தலையீட்டின்பேரில்தான்
சுப்புலட்சுமியை அங்கே போட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : திரும்பவும்
சொல்கிறேன். 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 29 ஆம்
தேதியில் திருமதி சீனிவாச சுப்புலட்சுமி ஆணையருக்கு எழுதிய
தமது கடிதத்தில், வாகைக்குளத்திலிருந்து முத்துராமலிங்கபுரத்
திற்கோ அல்லது ரெட்டியாப்பட்டிக்கோ மாற்றினால் தமது பணி
மூப்பு முன் உரிமையை விட்டுக் கொடுக்கலாம் என்று எழுதியிருக்
கிறார். 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 22ஆம் தேதியில்
ஆறாண்டுகள் பணியாற்றிய பிறகு இவர் முதுநிலை ஆசிரியர் உரிமை
பெற்று அந்தப் பட்டியலில் 44வது இடத்தைப் பெற்றிருக்கிறார்.
பணி முதிர்ச்சி அடிப்படையில் அவருக்கு பதவி உயர்வு அளிக்கப்
பட்டிருக்கிறது. திருமதி சீனிவாச சுப்பலட்சுமி தலைமை ஆசிரியர்
பதவிக்கு பூராத் தகுதி வாய்ந்தவராக மாவட்ட ஆட்சித் தலைவ
ரால் இசைவளிக்கப்பட்டு தலைமை ஆசிரியராக வாகைக்குளத்
திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆனால், முதலில், அவர் மாற்
றப்படுவதற்கு முன்னர் தமது பணிமூப்பு முன் உரிமையை விட்டுக்
கொடுக்கவில்லை. ஆகவே, அவர்கள் மாற்றப்பட்டது அரசாணைப்
படி தவிர்க்கப்பட முடியாத செயல்.

இதில் பஞ்சவர்ணம் தலையிட்டு மாறுதல் செய்தார் என்பதற்கு
நிச்சயமாக இடமில்லை. கடிதம் கிழித்துப் போடப்பட்டது என்று
சொல்லுகிறார்களே தவிர, கடிதம் இப்போது உங்கள் கையில்
இல்லை. (திரு. க. சுப்பு : கிழித்துப் போட்டால் எப்படி இருக்
கும் ?) அதைத்தான் சொல்கிறேன். ஆதாரம் என்பது நம்
கையில் கொஞ்சமாவது இருக்கவேண்டும்.

திரு. க. சுப்பு : இருக்கின்ற சூழ்நிலையை வைத்துக் கொண்டு
தான் நிரூபிக்க முடியுமே தவிர, உடனடியாக எதையும் சொல்லி
விட முடியாது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : யாரோ
சொன்னார்கள் என்பதை வைத்துக்கொண்டு இங்கு பேசுவது
சரியல்ல. இவர் 1977-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 29-ம் நாள்
பஞ்சாயத்து ஒன்றிய ஆணையாளருக்கு எழுதிய கடிதத்தில் வாகைக்
குளத்திலிருந்து முத்துராமலிங்கபுரத்துக்கோ அல்லது ரெட்டி
யாபட்டிக்கோ மாற்றுவதாக இருந்தால் தன்னுடைய பணி

மூப்பு முன் உரிமையை விட்டுக் கொடுக்கலாம் என்றும் தெரி
வித்திருக்கிறார். பின்னால் 1977-ம் ஆண்டு டிசம்பர் திங்கள்
)-ம் நாள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பிய கடிதத்தில்
தம்முடைய கணவர் சுப்புராமன், தமது தாய் குழந்தைகளைக்
கவனித்துக் கொள்ள வசதியாக தன்னை முத்துராமலிங்கபுரம்,
ரெட்டியாபட்டி, சபாஷ்புரம் போன்ற இடங்களில் ஒன்றுக்கு
மாற்றும்படி கேட்டுக் கொண்டார். இவ்வாறு கேட்டுக் கொண்ட
தற்கு இணங்கத் தான் இவர் மாற்றப்பட்டிருக்கிறார். அப்படி
யில்லாமல் யார் யாரெல்லாமோ தலையிட்டார்கள் என்று சொல்லு
கிறார்கள். யார் யார் தலையிட்டார்கள் அல்லது யார் யார்
இதில் தொலைபேசி மூலம் பேசினார்கள் என்கின்ற விவரங்களை
எல்லாம், தொடர்புடைய எல்லா விவரங்களையும் ஆதாரத்
துடன் திரு. சுப்பு அவர்கள் தருவார்களேயானால் அதன் மீது
நிச்சயமாக நடவடிக்கை எடுக்க நான் தயாராக இருக்கிறேன்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : மாவட்ட ஆட்சித் தலைவர் என்ன உத்தரவு
பிறப்பித்திருக்கிறார் என்றால், அவருடைய கடிதம் எண் 287160/
77-தேதி 27—1—1978 என்ற கடிதத்தில் ராமநாதபுரம் மாவட்ட
ஆட்சித் தலைவர் அவர்கள், சுப்புலட்சுமி என்பவரை சி.ஈ.ஒ.
அல்லது டி.இ.ஒ. இவர்களைக் கலந்து கொள்ளாமல் மாற்றுதலுக்
கான உத்தரவை பிறப்பித்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல
இதைப் பொறுத்தவரையில் ஆணையாளரோடு தொலைபேசி
யிலும் பேசியிருக்கிறார். சி.இ.ஒ. அல்லது டி.இ.ஒ. இவர்களைக்
கலந்து கொள்ளாமல் உத்தரவு போடப்படுகிறது, இவ்விதம்
போடப்படுகிற உத்தரவு சரியல்ல என்றும் கூறப்படுகிறது.
இதன் மீது இப்போது நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள்.
கடிதத்தில் என்ன இருக்கிறது என்றால், அதாவது பி.டி.ஒ.,
போட்ட ஆணையில் ந.க. எண். 1—6767/78-தேதி 10—8—1978
திருச்சுழி ஆணையாளரின் உத்தரவு என்ற முறையில், அதில்
சொல்லப்பட்டிருப்பது, பார்வையில் கண்டுள்ள மாவட்ட
ஆட்சித் தலைவரின் ஆணை தொடர்பாக கீழ்க்கண்ட ஆசிரியர்கள்/
அல்லது ஆசிரியைகள் மாற்றம் செய்யப்படுகிறார்கள். இவர்
களில் சீனுவாச சுப்புலட்சுமி சொந்த விருப்பப்படி மாறுதல்
செய்யப்பட்டிருப்பதால், மாற்றுதல்படியோ அல்லது பணி
விடுப்போ கிடையாது என்றும், பொறுப்பை உதவி ஆசிரியை
யிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று உத்தரவில் போடப்
பட்டிருக்கிறது. பின்னால் இந்த உத்தரவு பற்றி பெரியவர்
பக்தவத்சலம் போன்றவர்கள் வெளியில் பேச ஆரம்பித்த
பின்னால் உத்தரவு மாற்றப்படுகிறது...

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இங்கேயில்
லாத பெரியவர்களின் பெயர்களை எல்லாம் இங்கே இழுக்க
வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 12

திரு. க. சுப்பு : இந்த உத்தரவு பிறப்பித்தது தவறு என்று இப்போது எல்லோருக்கும் தெரியும். அந்த பலவீனத்தைத் தெரிந்து கொண்டு தான் இப்போது ஐக்கோர்ட்டில் ரிட் பெட்டிஷன் போடப்பட்டிருக்கிறது. இவ்விதம் உத்தரவு போடும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் பி.டி.ஓ.க்கு தொலைபேசி மூலமாக சொன்ன விவரங்கள் எல்லாம் முதலமைச்சருக்கு வந்திருக்கும். இதில் தலையீடு எந்த விதத்தில் எல்லாம் நடை பெற்றது என்கின்ற எல்லா விவரங்களும் ஆதாரங்களுடன் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதையே தான் மீண்டும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் சொல்ல விரும்புவது இந்த நேரத்தில் இதைப் பற்றி அதிகமாக விவாதித்து தப்பித்துக் கொள்வதற்கு அவசியம் இல்லை என்றாலும், இதுபோன்ற விஷயம் விவாதிக்க வேண்டியது அவசியம் என்றிருந்தாலும், நான் முடிவைச் சொல்லுகின்றேன். இங்கே அரசிடம் இருக்கின்ற ஆதாரங்களை எல்லாம் தலைவரிடம் கொடுப்போம். அது போல் உங்களிடம் இருக்கின்ற ஆதாரங் களை எல்லாம் இங்கு சொல்லிய விவரங்களை எல்லாம் தலைவர் அவர்களிடம் கொடுங்கள். தலைவர் என்ன தீர்ப்புத் தெரிவிக் கின்றார்களோ அதை ஏற்றுக் கொள்ளலாம்.

திரு. க. சுப்பு : சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கமிட்டியையே இதற்குப் போடுங்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இதற்கு சட்டமன்ற உறுப்பினர்களின் கமிட்டி தேவையில்லை, சட்ட மன்றத் தலைவரே போதும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அனுமதியைக் கேட்காமலேயே திரு சுப்பு அவர்கள் இப்படிக் குறுக்கிட்டுப் பேசிக் கொண்டிருந்தால் என்ன பொருள்? தயவு செய்து முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல், இந்தப் பிரச்சினையைப் பார்த்துக் கொள்ளலாம். தயவு செய்து உட்காருங்கள். இதுவரை நீங்கள் சொன்னது போதும்,

1978 செப்டம்பர் 12]

[இரவு 7—00]

திரு. எம். ஏ. லத்தீப் : பஞ்சவர்ணம் என்பவர் முதல் அமைச்சர் அவர்களின் பிரதிநிதி என்று சொல்கிறார்கள். எந்த வகையில் பிரதிநிதி என்பது எங்களுக்குத் தெரியவில்லை. அவர் தொகுதிப் பிரதிநிதியா, தொழில் வகையில் பிரதிநிதியா, அரசியல் ரீதியாகப் பிரதிநிதியா அல்லது சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலே பிரதிநிதியா என்பது எங்களுக்குத் தெரியவில்லை. இதை முதல் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு லத்தீப் அவர்கள் எந்த விஷயத்தையும் தெளிவாகப் புரிந்து கொள்ள விரும்புகிறார்கள். ஒன்றை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். நான் அடிக்கடி என் தொகுதிக்குச் செல்ல முடியாது. ஆகவே, தொகுதியிலுள்ள மக்களைச் சந்தித்து, அவர்களுடைய குறைகளை எழுதி அனுப்பு வதற்காக நான் அவருக்கு ஊதியம் கொடுத்து, அவர் அங்கே பணி செய்து கொண்டிருக்கிறார். இப்போது புரிந்திருக்கும் என்று கருதுகிறேன். இவ்வளவுதான் என்னால் புரிய வைக்க முடியும்.

திரு. எம். ஏ. லத்தீப் : இதனால்தான் இவ்வளவு குழப்பங் கள். தாங்கள் அதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அந்தப் பிரதிநிதித்துவம் உங்களுக்கு மக்கள் இங்கே கொடுத்திருக் கிறார்கள். தாங்கள் அவருக்குக் கொடுக்கக் கூடாது என்பது என் கருத்து.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் என்பிரதி நிதி என்று அழைக்கவில்லை. மற்றவர்கள் அப்படிச் சொல்கிறார் கள். அதற்கு நான் பதில் சொல்ல வேண்டி வருகிறது.

திரு. மு. கருணாநிதி : பஞ்சவர்ணம், அவர் அடித்துள்ள லெட்டர் பேடில் அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் என்று போட்டுக் கொண்டிருக்கிறார். அது மாத்திரமல்ல. முதல் அமைச்சர் அவர்களுக்கு அவர் கையெழுத்து தெரியும் என்று கருதுகிறேன். தன்னுரிமை துணைத் தாசில்தார், திருச்சுழி முகவரியிட்டு, அவர் எழுதியுள்ள கடிதத்தைத் தங்க ளுக்குத் தருகிறேன். அதில் அவர், "ஐயா, மறையூர் கர்ணம் (ஹெட்மென்) ஆக பணியாற்றும் திரு. போஸ் அவர்களுடைய பேப்பரை திரு. கோட்டாட்சித் தலைவர் அவர்கள் முகவரிக்கு சிபார்சு செய்து, சிவகாசிக்கு அனுப்பும்படி வேண்டுகிறேன். இன்னும் எனக்கு நல்லமுறையில் குணம் அடையவில்லை. மற்றவை தங்களை நேரில் சந்தித்துப் பேசும்போது கூறுகிறேன்.

தங்கள் அன்புள்ள, பஞ்சவர்ணம்'' என்று எழுதியிருக்கிறார். அதைத் தங்கள் கவனத்திற்குத் தருகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தக் கடிதத்தைப் பற்றி விசாரித்து, உடனடியாக நான் நடவடிக்கை எடுப்பேன் என்பதை நான் இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நெருக்கடி கால நிலைமை பிரகடனப்படுத்திய பிறகு கன்னியாகுமரி மாவட்டத்தில் 5 ரூபாய் நில வரி செலுத்திக் கொண்டிருந்தவர்கள், 200 ரூபாய் கட்ட வேண்டிய நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் ஊராட்சி ஒன்றியத்தின் வரி 2.50 சதவீதத்திற்கு கூட்டப்பட்டிருக்கிறது என்றும், ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 வரி செலுத்த வேண்டியிருக்கிறது என்றும், அரசாங்கம் இதைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்கள்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை இதுபற்றித் தொலைபேசி மூலம் கேட்டதில் கீழ்க்கண்ட விவரங்களைக் கொடுத்திருக்கிறார். கன்னியாகுமரி மாவட்டத்தில் நெருக்கடி பிரகடனப்படுத்திய பிறகு ஊராட்சி வரிகள் ஏன் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று கேட்டபோது அப்போது உயர்த்தப்படவில்லை, தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக் குழுக்களால் விதிக்கப்பட்டுள்ளது. நிலவரி ஒவ்வொரு ரூபாய் வசூலிக்கப்படுவதுடன், மேல்வரியாக ரூ. 2·50 விதிக்க அக்குழுக்களுக்கு 1958-ஆம் ஆண்டு சட்டம் பிரிவு 114 அதிகாரம் அளிக்கிறது.

ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்திலே எந்த ஒரு ஊராட்சி ஒன்றியத்திலும் லோகல் சர்சார்ஜ் ரூ. 2.50க்கும் கீழ்தான் இருக்கிறது. அந்த மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் மேல்வரியின் விவரம்—தோவாளை ரூ. 1·50 அகஸ்தீசுவரம் ரூ. 1.55; ராஜாக்கமங்கலம் ரூ. 2.10; குருந்தன்கோடு ரூ. 1.53; தக்கலை ரூ. 2.15; திருவட்டாறு ரூ. 2.05; கிள்ளியூர் ரூ. 2.05.

ஆகவே, திரு. சுவாமிதாஸ் அவர்களுடைய புகாருக்கு எந்தவிதமான, நியாயமான அடிப்படைக் காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை..........................

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நெருக்கடி காலத்தில் நிலவரிச் சட்டம் இயற்றப்பட்டு இதுவரை அந்தச் சட்டப்படி வசூல் செய்யப்படவில்லை. இப்போதுதான் வசூல் ஆரம்பமாகிறது. இப்போது அந்த வரிப் பளுவை மக்கள் மீது சுமத்தக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதுவரை வசூல் செய்யப்படாத நிலையில் மக்கள் அதைப்பற்றி அறியாமல் இருந்தார்கள். இப்போது ஏற்பட்டிருக்கும் வரிப் பளு மக்களால் தாங்க முடியாத அளவுக்கு இருக்கிறது. ஆகவேதான் இதைப் பற்றி அரசு மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று திரு. சுவாமிதாஸ் அவர்கள் பேசும்போது எடுத்துரைத்தார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு உத்திராபதி அவர்கள் திருத்துறைப்பூண்டி பற்றி ஒரு பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார்கள், திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் 15 லட்சம் ரூபாய் செலவில் சாலைகள் பாலங்கள் கட்ட, குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பி இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அதைப்பற்றிக் கேட்கும்போது ஒன்றிய ஆணையர் சொல்லுகிறார்; அந்தத் தீர்மானங்களை அனுப்பி வைத்துவிட்டோம்; அந்தப் பேப்பர்கள் திரும்பி வரவில்லை என்பதாகக் கூறியிருக்கிறார்கள்.

அந்தத் திட்டங்களுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் அரசுக்குத் தெவித்துள்ளார்.

மதிப்பிற்குரிய கூத்தக்குடி சண்முகம் அவர்கள் ஒரு பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். நம் அனைவரின் உள்ளத்தில் இருக்கிற எண்ணத்தின் பிரதிபலிப்பு என்கிற வகையில் ஒரு கருத்தை இங்கே வெளியிட்டார்கள். இராமநாதபுரம் முன்சீப் கோர்ட்டில் தமிழில் கொடுத்த தீர்ப்பு உயர்நீதிமன்றத்தால் 'செல்லாது' என தீர்ப்புக் கூறியது பற்றிக் குறிப்பிட்டார். 1978ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14—ம் தேதி இந்து பத்திரிகையில் வெளி வந்த செய்தியை எடுத்துக் கூறினார்.

1978-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14-ம் நாளிட்ட 'ஹிந்து' பத்திரிக்கையில் தமிழில் மாவட்ட உரிமையியல் நீதிபதி எழுதிய தீர்ப்பு செல்லாது என்று சென்னை உயர்நீதி மன்றம் கூறியுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. காரணம் தமிழ் தீர்ப்பு மொழியாக இன்னும் அரசால் பிரகடனப்படுத்தவில்லை என்று கூறியுள்ளது.

[திரு. எம், ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 12

1976-ஆம் ஆண்டு குடியரசுத் தலைவரால் திருத்தப்பட்ட 41 எண்ணுள்ள சட்டத்தில் தமிழ்நாடு ஆட்சி மொழிச் சட்டம் 1956-ன் பிரிவு 4-பி (1)-ல் திருத்தப்பட்டதற்கிணங்க, கீழ்க்கண்ட நீதிமன்றங்களில் தமிழ் தீர்ப்பு மொழியாக விளங்கும் :—

(1) உயர்நீதிமன்றத்திற்குக் கீழுள்ள உரிமையியல் நீதி மன்றங்கள் (Civil Courts).

(2) உயர்நீதிமன்றத்திற்குக் கீழுள்ள குற்றவியல் நீதி மன்றங்கள் (Criminal Courts.)

(3) தீர்ப்பாயம் (Tribunal).

(4) வரி, வருவாய் நீதிமன்றங்கள் (Rent Courts and Revenue Courts).

ஆனல் பிரிவு 4-பி (1)-ன் கீழ் மேற்கூறிய நீதிமன்றங்களில் தமிழ் என்று முதல் தீர்ப்பு மொழியாகும் என்று அறிக்கையின் மூலம் நிர்ணயிப்பதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

(இரவு 7–10).

அதன்படி, இந்தப் பிரிவின்கீழ் 1976, அரசு ஆணை 191, சட்டத் துறை 1976-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 13-ம் தேதியின் படி தமிழ்த் தீர்ப்பு மொழியாக உயர்நீதி மன்றத்தின் கீழ் உள்ள குற்றவியல் நீதிமன்றங்களில் பயன்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த ஆணை 1976-ல் குடியரசுத் தலைவர் ஆட்சி இருக்கும்போது வெளியிடப்பட்டது.

ஆனல் உரிமையியல் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் தமிழ் தீர்ப்பு மொழியாக இன்னும் பிரகடனப்படுத்தப்படாததற்குக் காரணம் உரிமையியல் நீதிமன்றங்களில் வழங்கப்பெறும் சட்டங்கள் இன்னும் தமிழில் மொழிபெயர்க்கப்படாததே, இப்போது அரசு ஆட்சி மொழிச் சட்டக் குழு குற்றவியல் சட்டங்களை மொழிபெயர்த்துக் கொண்டிருக்கிறது.

1976-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 21-ம் தேதியில் சட்டத் துறையால் பிறப்பிக்கப்பட்ட 10-வது அரசு ஆணையில் 2 அறிக்கைகள் வெளியிடப்பட்டன. அவற்றின்படி, உயர்நீதி மன்றத்தின்கீழ் உள்ள உரிமையியல் நீதிமன்றங்களிலும்

1978 செப்டம்பர் 12] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

குற்றவியல் நீதிமன்றங்களிலும் தமிழ்த் தீர்ப்பு மொழியாகும் என்று பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனல் நீதிபதிகள் விரும்பினல் அவர்கள் ஆங்கிலத்திலேயே தீர்ப்பு வழங்கலாம் என்று வகைசெய்யப்பட்டது. ஆனல் இந்த இரண்டு அறிக்கைகளும் குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது 1976-ம் ஆண்டு மார்ச் திங்கள் 24-ம் தேதியில் ரத்து செய்யப்பட்டன. காரணம் வேண்டிய சட்டங்கள் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யப்படவில்லை என்பதாகும். ஆனல் குடியரசுத் தலைவர் 1976-ல் 41-வது சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட பிறகு உயர்நீதி மன்றத்தின் கீழுள்ள குற்றவியல் நீதிமன்றங்களில் 1976-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 13-ம் தேதியிலிருந்து தமிழ் தான் தீர்ப்பு மொழியாகும் என்று பிரகடனப்படுத்தப்பட்டது.

உரிமையியல் நீதிமன்றங்களில் தமிழ் தீர்ப்பு மொழியாக வேண்டுமென்று இன்னும் பிரகடனப்படுத்தப்படவில்லை. இவ்வாறு பிரகடனப்படுத்துவதற்கு முன் உரிமையியல் நீதிமன்றங்களில் பயன்படும் சட்டங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டாக வேண்டும். குறைந்த அளவு போதிய சட்டங்கள் தமிழில் மொழி பெயர்த்த பிறகுதான் உரிமையியல் நீதிமன்றங்களில் தமிழ் தீர்ப்பு மொழியாக பிரகடனப்படுத்த இயலும். எனவே அவர்களுக்கு நாங்கள் சொல்லிக்கொள்வது இந்த அரசைப் பொறுத்த வரையில் எல்லா நீதிமன்றங்களிலும்.........

திரு. ரா. மார்க்கபந்து : உயர்நீதி மன்றத்திலே கொடுக்கப்பட்ட தீர்ப்பு Official language Act–இல் Judgement should be delivered in English. என்று இருக்கிறது. அந்த முறையிலே அதற்கு மாறுபட்ட முறையில் தமிழிலே தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்று தீர்ப்புத் தந்திருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பிலே, ஆங்கிலத்திலே எழுதியிருந்தால் தீர்ப்பு தவறு என்று சொல்லவில்லை அந்த தீர்ப்பைத் தமிழில் எழுதியது தவறு என்று தான் It is in Contravention of the Official languages Act. என்று தான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அதை ஆங்கிலத்திலே சொல்லிவிட்டால் சரியாகிவிடும்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : சொல்வது எளிது. ஆனல் நிறைவேற்றுவது அவ்வளவு எளிதல்ல. பல நண்பர்கள் இன்னும் வாதாட முடியாமல் பல வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். நான் அவர்களைக் குறைத்து மதிப்பிடவில்லை. ஆங்கிலத்திலேயே அவர்கள் பேசிப் பழகிவிட்டதுதான் காரணம். எவ்வளவு விரைவாக நீதிமன்றங்களிலே தமிழ் ஆட்சிமொழியாக வரமுடியுமோ அவ்வளவு விரைவாக வர வேண்டும் என்பது தான் எண்ணம். அவ்வளவு விரைவாகக் கண்டிப்பாகச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 12

மொழிப் பிரச்சினை வந்துவிட்ட நிலைமையில் மொழியைப்
பற்றி இங்கே நான் சில குறிப்புகளைச் சொல்ல வேண்டியது எனது
கடமை என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு.
கிட்டப்பா அவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட
வர்களுக்குக் கொடுக்கப்பட்ட பென்ஷன் தொகை நெருக்கடி நிலை
காலத்திலே நிறுத்தப்பட்டது மீண்டும் கொடுக்கப்பட நட
வடிக்கை எடுக்கப்படவில்லை. நடவடிக்கை எடுக்கப்பட வேண்டு
மென்ற குறையைக் கூறினார். நாங்கள் அதற்காகத் திட்டமிட்டு,
எல்லோருக்கும் தெரிந்த காரணத்தால், சுப்ரீம் கோர்டி
னுடைய தீர்ப்பைப்பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை.
எல்லோருக்கும் தெரியும், ஆனாலும் ஒரு மொழியை எதிர்த்துப்
போராடச் சென்ற காரணத்தால் என்ற அந்த நிலையை வைத்துக்
கொண்டு, தீர்ப்பு பாதகமாக வழங்கப்பட்டிருக்கிறது.

இங்கே தமிழ் மொழியைக் காப்பதற்காக ஆபத்துக்களை ஏற்
படுத்திக்கொண்டு அல்லது ஆபத்துக்களைச் சந்தித்து உயிர் துறந்த
வர்களுக்கு ஓய்வூதியம் போல ஊதியம் அளிப்பது என்பதை இந்த
அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. விரைவில் அது சட்டமாக
வரும் என்பதை மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த
தியாகிகளுக்குச் சில வரைமுறைகள் வைத்து அதுவும் தடுக்கப்
பட்டிருக்கிறது, பலர் சேர்க்கப்படவில்லை, அதையும் சேர்த்து
நாம் கடமைகளை நிறைவேற்றுவோம் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அதே வேளையில் மொழி
வழி மாகாணங்கள் அமைகின்ற போராட்டத்தில் ஈடுபட்ட,
கன்னியாகுமரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட தியாகிகளுக்கும்
அவர்கள் குடும்பங்களுக்கும் ஏற்கனவே கொடுக்கப்பட்ட
பென்ஷன் நிறுத்தப்பட்டது. அதையும் அரசு கொடுக்க முன்
வருமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்
களே, குமரி மாவட்டம் திருவாங்கூர் கொச்சியிலிருந்தபொழுது
போராடித் தாய்த் தமிழகத்தோடு இணைந்த அளவிற்கு உழைத்த
வர்களுக்கு, உயிர்களைப் பறிகொடுத்து, கஷ்டப்படும் இளைஞர்
களுக்கும், பெரியவர்களுக்கும் முன்னாலிருந்த அரசு உதவிகளும்,
சலுகைகளும் கொடுத்து வந்தது. அவசர நிலை வந்தபொழுது
நிறுத்தப்பட்டது. அதையும் மீண்டும் பரிசீலனை செய்து வழங்கு
வதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 செப்டம்பர் 12] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

இங்கே மொழியைப்பற்றிப் பேசும்பொழுது நான் ஒரு சில
கருத்துக்களைச் சொல்வதை என்னுடைய கடமையாக கருது
கிறேன். பலமுறை சொல்லி இருக்கிறார்கள் ; நானும் சொல்லி
யிருக்கிறேன். தமிழகத்தைப் பொறுத்த வரையில் தமிழ்தான்
ஆட்சிமொழியாக இருக்கும், தமிழ்தான் இங்கே ஆட்சிபுரியும்
என்பது மட்டுமல்ல, இந்தி ஆட்சிமொழியாவதை இந்த அரசு
ஒருபோதும் அனுமதியாது. அதற்கு ஒத்துழைக்காது என்பதையும்
நாங்கள் பலமுறை கூறியிருக்கிறோம். எப்படியெல்லாம் எங்க
ளுடைய கருத்துக்களை எடுத்துக் கூற முடியுமோ அந்த வகையிலே
நாங்கள் எடுத்துக் கூறி வந்திருக்கிறோம். நான் அவ்வப்பொழுது
பிரதம அமைச்சரைச் சந்திக்க நேரும்போதெல்லாம் இதைப்பற்றி
எடுத்துக் கூறுவதும் உண்டு, அவர் குறித்து வைத்துக்கொண்டு
உடனடியாக எந்த இலாக்காவிலிருந்து இப்படிப்பட்ட கடிதங்கள்
அனுப்பப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் அவர்கள் விசா
ரிக்க முற்படுவதும் உண்டு என்பதையும் நான் இங்கே சொல்லக்
கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அதோடு, நான் கருத்துக்களை மிகவும் அவசியமாக, அவர்
களுக்குப் புரிகின்ற அளவிற்கு, வெவ்வேறு மாநில முதலமைச்சர்
களையும், அமைச்சர்களையும் சந்திக்கும்போதெல்லாம் தமிழ் மக்க
ளுடைய உணர்வுகள், எங்கள் முடிவு என்ன என்பதையெல்லாம்
அவ்வப்பொழுது எடுத்துரைப்பதற்குத் தவறியது இல்லை. அந்த
வகையில் நான் சொல்லியதன் விளைவை எடுத்துக்காட்ட விரும்பு
கிறேன். இப்படி ஒரு கடிதம் இந்தியில் எனக்கு எழுதப்பட்டிருக்
கிறது. ஆனால் அதே நேரத்தில் அதைத் தமிழாக்கி அனுப்பி
வைத்திருக்கிறார்கள். இதுவரையில் ஆங்கிலத்தில் எழுதுவது
தான் வழக்கம். தமிழில் எழுத வேண்டுமென்று கேட்டுக்கொண்
டேன். ஆகவே, தமிழிலே அவர்கள் எழுதி அனுப்பி இருக்கிறார்
கள். பீகாரிலிருந்து வந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக்கொள்கிறேன்.

(இரவு 7-20)

இந்திக் கடிதத்துடன் வந்த தமிழ் மொழிபெயர்ப்பில் குறிப்
பிடப்பட்டுள்ளதாவது :—

அன்பார்ந்த இராமச்சந்திரன் அவர்கள்,

தங்கள் உதவி நிதியிலிருந்து ரூ. 50,000 (ரூபாய் ஐம்பதாயிரம்)
வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளித்த
தற்கு மிகமிக நன்றி. ....பீகாரில் வெள்ளத்தால்
பாதிக்கப்பட்ட கொடுமை இதுவரை நடைபெறாத அளவு
இம்முறை நிகழ்ந்தது.......... இந்த வெள்ளத்தால்
இலட்சக்கணக்கான மக்கள் வீடிழந்தனர்.............

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 12

நிவாரண வேலை பெரும் அளவில் நடந்தது, பல நாள்
தொடர்ந்து நடந்தது. நாங்கள் அனைவரும் இவ்வேலையில்
ஈடுபட்டுள்ளோம்.......... தாங்கள் நிதி உதவி அளித்த
தற்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். மீண்டும்
நன்றி.

(ஒம்.) கர்ப்பூரி தாக்கூர்.

எம். ஜி. இராமச்சந்திரன்.

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆகவே, நாங்கள் மற்ற மாநில முதலமைச்சர்களோடு,
அமைச்சர்களோடு கருத்தை வெளியிடும்போது எவ்வளவு ஆழ
மாகவும் அழுத்தமாகவும் தமிழ்நாடு தமிழைத் தவிர வேறு
மொழியை ஆட்சிமொழியாக ஏற்றுக் கொள்ளாது என்று சொல்லி
வருகிறோம் என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன்.
ஆங்கிலத்தில் எழுதினால், அது ஆட்சிமொழியாக இந்தியத் துணைக்
கண்டத்திற்கு வருமானால், பிறகு 14 மொழிகள், 18 மொழிகள்
என்று ஆகி, அந்த அளவிற்கு அந்த மொழிகள் தேசிய மொழிகள்
என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு அத்தனை மொழிகளும் இந்திய
நாட்டின் ஆட்சிமொழி என்று வருகின்ற நாள் அருகில் வர
வேண்டுமென்கிற ஆர்வம் மிகுந்த நிலையில் நம்மைவிட
வேகமாக மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பேசினார்
கள். முன்பெல்லாம் அவர் பேசியதை நான் கேட்டிருக்கிறேன். இப்
பொழுது இந்த மாற்றம் நல்ல மாற்றம். அவர்கள் இதைப்
போல் தொடர்ந்து இந்தப் பணியிலே இறங்கினார்கள் என்றால்.....

திரு. ரா. உமாநாத் : இது மாற்றம் என்று முதலமைச்சர்
சொன்னார். நான் கூறியிருக்கக்கூடிய கருத்துக்கள் அனைத்துக்கும்
எங்களுடைய கட்சியினுடைய திட்டத்திலேயே, கொள்கை
அறிக்கையிலேயே ஆதாரமாக 'பாரகிராப்' இருக்கிறது.
அந்த 'பாரகிராபின்' அடிப்படையில் ஜெனரல் செக்கரட்டரி
ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாத் விளக்கி எழுதிய கட்டுரைகள் இருக்
கின்றன. ஆகவே, அந்த பேஸிஸில்தான் இது பேசப்
பட்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய முதலமைச்
சர் அவர்கள் மாற்றம் என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன்
ஏமாற்றமும் உள்ளது. எப்படி என்று சொன்னால் இராணுவத்
திலே தமிழ்நாட்டிலே உள்ள தமிழர்கள் சேர்ந்திருக்கிறார்கள்.
...ர்க்கத்திலேயிருந்து ஒருவன் இராணுவத்திலே சேர்ந்திருக்
... அவனிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது.

1978 செப்டம்பர் 12] [திரு. வி. கே. கோதண்டராமன்]

அந்தக் கடிதம் இப்பொழுது என்னிடம் இல்லை, நாளைய மறு
தினம் தருகிறேன். அதிலே என்ன சொல்லியிருக்கிறது என்றால்,
இராணுவத்திலே அவரைப் பார்த்து, உனக்கு இந்தி தெரியுமா
என்று கேட்டு, இவன் தனக்குத் தெரியாது என்று சொன்னதால்,
அவனை வீட்டுக்கு அனுப்ப வேண்டிய நிலைமை இருக்கிறது.
ஆகவே, இராணுவத்திலே தமிழர்கள் சேர்ந்து பணிபுரிய முடி
யாத அளவு மிகப் பெரிய நெருக்கடி இருக்கிறது என்பதையும்
கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்
களே, பெரியவரவர்கள் இந்தக் கருத்தை இங்கே எடுத்து வைத்த
தற்காக அரசின் சார்பாக நன்றி கூறிக் கொள்கிறேன். இந்தச்
செய்தி இந்திய துணைக் கண்டத்தை ஆளுகின்ற பிரதம அமைச்ச
ருக்கும் அவரோடு இருக்கிற அமைச்சர்களுக்கும், அவரது கட்சி
யைச் சேர்ந்தவர்களுக்கும் தெளிவாகப் புரிந்து கொள்கிற வகை
யில், ஏடுகளிலே வெளியிடப்படும் என்பதையும் நாங்களும் நிச்சய
மாக இதைப்பற்றிப் பிரதம அமைச்சருக்கு எழுதுவோம் என்பதை
யும் இங்கே கூறிக்கொள்கிறேன். இந்த நிலைமை ஏற்பட்டதைத்
தவிர்ப்பது அவர்களுடைய கடமை என அவர்கள் எடுத்துக்
கொள்ள வேண்டும். இல்லையென்றால் ஏற்படுகின்ற விபரீத
மான விளைவுகளுக்கு இன்றைக்கு ஆட்சியிலே இருப்பவர்கள்தான்
மத்தியிலே ஆட்சியிலே இருப்பவர்கள்தான் பொறுப்பேற்க
வேண்டுமென்பதையும் தமிழக மக்களின் சார்பாகவும் இந்த
மன்றத்தின் சார்பாகவும் அமைச்சர்களின் சார்பாகவும் தெரி
வித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏனெனில் இராணுவத்திற்கு இங்கிருந்து ஆட்கள் சேர்க்கப்
படுவதும் அங்கே போன பிறகு 'இந்தி தெரியாது, திரும்பிப்
போ' என்று சொல்வதென்றால், அவர்களே தமிழகத்தைத்
தனியாகப் பிரிக்கின்றார்கள் என்ற கேள்வியை நம்மவர்களாலே
நாடாளுமன்றத்திலே வைக்க வேண்டிய அவசியம் ஏற்படுத்தப்
பட்டிருக்கிறது என்ற அளவில் இந்தக் கருத்தை இங்கே வெளியிட
வேண்டியவனாக இருக்கிறேன் என்று வேதனையோடு சொல்
கிறேன்.

நாம் எந்த அளவு ஒருமைப்பாடாக, ஒற்றுமையாக இருக்க
வேண்டுமென்று சொல்கிறோமோ அதற்கு நேர் மாறாக செய
லாக்கப்படுமானால் நிச்சயமாக அதற்கு முழுப் பொறுப்பையும்
மத்திய ஆட்சியிலே இருப்பவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டு
மென்று சொல்லும்போது இங்கே ஜனதா கட்சி பிரதிநிதிகளாக
இருக்கிறவர்கள் — மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் — உறுதி
கூறியிருக்கிறார்கள். நிச்சயமாக இந்தி ஆட்சிமொழியாகத்
திணிக்கப்பட்டால் அதை எதிர்ப்போம் என்றும், இன்னும்
கடுமையாக எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதையும் அங்கே
ஆட்சியிலே இருப்பவர்கள் நன்றாகப் படித்துப் புரிந்துகொள்
வார்கள் என்று நான் நம்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மத்திய அரசிலே பணியாற்றுகிறவர்கள் கட்டாயம் இந்தி படித்தாக வேண்டும் என்ற விதிமுறையைக் கொண்டு வந்தது இப்போது மத்தியிலே ஆட்சி செய்கிற ஜனதா அரசு அல்ல. நெருக்கடி காலத்தில் இருந்த அரசுதான் அந்த விதிமுறையைக் கொண்டு வந்தது. அந்த விதிமுறையில்தான் இப்போது காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் சொன்ன அந்த விதி முறை தமிழ் நாட்டில் கிடையாது. அப்போது கூட தமிழ் நாட்டிலே இந்தி படிக்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. அண்ணா அவர்கள் அறிவித்த இருமொழிக் கொள்கைதான் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : மத்திய அரசில் பணிபுரிகின்ற அரசு ஊழியர்கள் கட்டாயம் இந்தி படிக்க வேண்டுமென்று எமர்ஜென்சி காலத்தில் மத்திய அரசால் கொண்டுவரப்பட்டது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எமர்ஜென்சி காலத்தில் கொண்டு வந்தவைகளை எல்லாம் ஜனதா அரசு மாற்றுவோம் என்ற நோக்கத்தோடுதான் மக்களை அணுகியது. எமர்ஜென்சி காலத்தில் கொண்டு வந்த இந்த திட்டத்தையும் ஜனதா அரசுதான் மாற்ற வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ். : தலைவர் அவர்களே, எமர்ஜென்சி காலத்தில் கொண்டுவரப்பட்ட இந்தக் கொள்கையை நிச்சயமாக ஜனதா அரசு மாற்றும், அதை மாற்றுவதற்கு நிச்சயமாக ஜனதாவின் சார்பில் நான் முயற்சி எடுப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு ஜேம்ஸ் அவர்களுக்கு நன்றி சொல்வதற்கு முன், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. ஜேம்ஸ் வக்கீலாக இருக்கிறார். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் சொன்னவுடன் அவர் விரைவில் சம்மதம் கொடுத்து ஏற்றுக் கொண்டிருப்பதற்கு உண்மையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

இந்தச் சூழ்நிலையில் நான் இன்னும் இங்கே பல பிரச்சினைகளைப் பற்றிப் பேச வேண்டும், இப்போது மணி 7-30 ஆகிறது (குறுக்கீடு) நான் இன்னும் பல பிரச்சினைகளைப் பற்றிப் பேச வேண்டியிருப்பதாலும், எதிர்க்கட்சித் தலைவர் இன்னும் சில கருத்துக்களைச் சொல்லுவதற்குத் தயாராக இருப்பதாலும், நான் அதற்கும் பதில் சொல்ல வேண்டி இருப்பதாலே, பேரவைத் தலைவர் அனுமதித்தால் நாளைய தினம் இந்தப் பதிலைத் தொடரலாம் என்றிருக்கிறேன். நாளைக் காலையில் நான் மேலவையிலே பதில் சொல்ல வேண்டியிருப்பதால் நாளை மாலை இந்த அவையில் என்னுடைய பதிலுரையைத் தொடரலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, அவசரமும், அத்தியாவசியமுமான மிக மிக முக்கியமான ஒரு செய்தியைத் தங்கள் மூலமாக நான் மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். குடியாத்தம் நகரிலே இன்றைய தினம் பகல் 11 அல்லது 12 மணிக்கு டௌன் பஸ் விட வேண்டும் என்பதற்காக வேண்டி, அந்த நகரிலே இருக்கின்ற அத்தனைக் கட்சிகளும் சேர்ந்து.......... .... (மணி அடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

13. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

*91. தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத் திற்கான விதிகளை வகுப்பது குறித்த தொழில் துறையின் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ந் தேதியிடப்பெற்ற 392-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1975) 58 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

† 35. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 30/1978).

[1978 செப்டம்பர் 12

† 36. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 31/1978).

† 37. 1978 ஆம் ஆண்டு, மதுரைப் பல்கலைக் கழக (திருத்த- சிறப்பு விதித்துறைகள்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 32/1978).

† 38. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு. (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 33/1978).

† 39. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 34/1978).

‡ 40. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன் வடிவிற்கான இணைப்பு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 25/1978).

‡ 41. தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவிற்கான இணைப்பு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 26/1978).

‡ 42. தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, வேளாண்மை விளை பொருள் விற்பனை (திருத்தம், தனி விதித்துறைகள்) சட்ட முன் வடிவிற்கான இணைப்பு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 27/1978).

§ 43. 1978 ஆம் ஆண்டு. மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன் வடிவிற்கான இணைப்பு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 28/1978).

§ 44. 1978 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவிற்கான இணைப்பு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 29/1978).

‖ 45. தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவிற்கான இணைப்பு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 30/1978).

¶46. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவிற்கான இணைப்பு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 31/1978).

1978 செப்டம்பர் 12]

¶ 47. 1978 ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழக (திருத்த- சிறப்பு விதித்துறைகள்) சட்ட முன் வடிவிற்கான இணைப்பு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 32/1978).

** 48. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த சட்டமுன்வடிவிற்கான இணைப்பு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 33/ 1978).

** 49. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவிற்கான இணைப்பு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 34/1978).

†† 50. உடுக்குறியிடாத வினாப் பட்டியல் (301 முதல் 350 வரை) (1978 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ந்தேதி அன்று பேரவை முன் வைக்கப் பெற்றது).

---

* 22—8—1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.

† 11—9—1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.

‡ 30—8—1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.

§ 31—8—1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.

‖ 1—9—1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.

¶ 4—9—1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.

** 7—9—1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.

†† 11—9—1978 அன்று பேரவை முன் வைக்கப் பெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை, 1978 செப்டம்பர் 13

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவை தலைவர் திரு. மு. ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

கொடுமுடியாறு அணைக்கட்டம்

*குறுகிய கால வினா எண் 2—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல்லை மாவட்டம் இராதாபுரம் துணை வட்டத்தில் பாசன வசதியைப் பெருக்கும் வண்ணம் திட்டமிடப் பட்ட 'கொடுமுடியாறு' அணைக்கட்டு திட்டம், 47 இலட்சம் ரூபாய் செலவு செய்த பிறகு, தொடர்ந்து நடத்தப் படாதது உண்மையா?

(ஆ) அப் பகுதி குளங்களுக்கு ஏற்கனவே பாசனம் தரும் 'வள்ளியூரான் காலின்' குறுக்கே இத் திட்டம் மேற்கொண்ட போது வாணம் தோண்டப்பட்டதால் வழக்கமாக வரும் வெள்ளம் தடைப்படும் நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில் அத்தகைய நிலையை தவிர்க்க அரசு மேற் கொள்ளும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) கொடுமுடியாறு திட்டத்திற்கு 1976-ம் ஆண்டிலிருந்து 1978-ம் ஆண்டு ஜூலை திங்கள் வரை செலவிடப்பட்ட தொகை ரூ. 29.62 இலட்சம். இத் திட்டம் மறு பரிசீலனைக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) வள்ளியூரான் காலின் குறுக்கே வாணம் எதுவும் தோண்டப்படவில்லை. ஆகையால் நீர்வரவு தட்டுபடுவதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவரவர்களே, வல்லுநர்களால் அந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்கான வழிமுறைகளும் கடைபிடிக்கப்பட்டு, மத்திய திட்டக் கமிஷனுல் அதற்கான நிதியும் வழங்கப்பட்டு, இரண்டாண்டுக் காலம் அதற்கான வேலைகள் தொடங்கப்பட்ட பிறகும், அந்தத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பதற்குக் காரணம் என்ன? அதற்கான காரணம் ஒரு சில அரசியல் வாதிகளின் குறுக்கீடுகள் என்று சொல்கிருர்கள். அது உண்மை தானு? அத்துடன் மறுபரிசீலனைக் குக் காரணம் என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர் களே, வள்ளியூரான் காலின் குறுக்கே வாணம் தோண்டப்படுகின்ற அந்தத் திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. மேலும் அதை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமா, வேண்டாமா என்பது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் வள்ளியூரான் காலின் குறுக்கே எந்தவிதமான வாணமும் தோண்டப்படவில்லை என்று சொன்னுர்கள். ஆனல் அங்கே சென்று பார்த்த அளவில் 30-40 வாணம் தோண்டப்பட்டு இருக்கிறது. அதனல் தண்ணீர் வரத்து தடைபட்டு இருக்கிறது. ஆகவே, உடனடியாக இங்கே இருந்து தனியாக ஒரு தனி நபரை அனுப்பி நிலைமையை அறிந்து விரைவில் அரசு நடவடிக்கை களை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, வாணம் ஒரு சில இடங்களில் தோண்டப்பட்டிருந் தாலும், அதனல் நீர் வரத்து தடைபடுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. ஆனலும் மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கோரிக்கை சீக்கிரமாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, நெல்லை மாவட்டம் இராதாபுரம் துணைவட்டத்தில் முக்கியமாக உள்ள இந்த கொடுமுடியாறு திட்டம் ஏற்கனவே தொடங்கப்பட்டு, அதற்காக கிட்டத்தட்ட ரூ. 30 லட்சம் வரையில் செலவு செய்யப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள்? அதை மறு பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் என்ன? அந்தத் திட்டத்தை நிறைவேற்றினுல் மேலும் ஒரு வட்டம் நீர் பாசன வசதியைப் பெறும் வாய்ப்பு இருக்கிற காரணத்தால் அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் அதை மறு பரிசீலனை செய்யக் காரணம் யாரோ ஒரு சிலரின் தலையீடு!

அவருடைய நிலம் பாதிக்கப்படுவதால் நிறுத்தி வைக்க வேண்டும் என்று தலையிடுவதாகத் தெரிகிறது. அதற்காக அதைத் தள்ளி வைக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, உடனடியாக அதிலே விசேஷ கவனம் செலுத்தி அந்தத் திட்டத்தை நிறைவேற்றி அந்த வட்டார மக்களுக்குப் பாசன வசதி செய்து தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர் களே, விவசாயிகளின் நன்மையைக்கருதி பாசனவசதியை அதிகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அந்தக் கொடுமுடியாறு திட்டத்தை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு இருக்கிறேம். மேலும் 1975-லே போடப்பட்ட திட்டம் அது. இப்போது இருக்கின்ற செலவிற்கும், திட்டம் தீட்டப்பட்ட காலத்தில் இருந்த செல விற்கும் கணக்கிட்டுப் பார்த்து, அது சரியாக உள்ளதா, ''வயபிள் ஸ்கீமா'', ''எகனுமிகல் ஸ்கீமா'', ''ரெமுயூனரேடிவ் ஸ்கீமாக'' இருக்குமா என்று எல்லாம் பார்க்க வேண்டிய சூழ்நிலை இருப்பதால் மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது. ஆனலும் அங்கே இருக்கும் பாசன வசதியை அதிகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இது பரிசீலனை செய்யப்படும். இதை மறு பரிசீலனை செய்வதற்கு எந்தவிதமான அரசியல் நோக்கமும் இல்லை, அதனல் இது நிறுத்தி வைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : தலைவரவர்களே, கிட்டத்தட்ட 40 லட்சம் ரூபாய் வரை செலவு கொடுமுடியாறு திட்டத்திற்கு செய்த பிறகு அதற்காக கொண்டுவரப்பட்ட இயந்திரங்கள் அங்கிருந்து அகற்றப்பட்டு, அலுவலகங்களும் மாற்றப்பட்டிருப் பதாக அறிகிறேம். சுமார் 56,000, ஏக்கர் நிலம் இத் திட்டத் தினல் பாசனவசதி பெற்று விவசாயிகள் பயனடைவார்கள். ஆகவே, இந்த அரசு தகுந்த நடவடிக்கை எடுத்து, மீண்டும் இத் திட்டத்தைச் செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, விவசாயிகளுடைய நன்மையைக் கருதித்தான் இத் திட்டம் மீண்டும் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவரவர்களே, இந்த நீர்ப் பாசனத் திட்டங்களைப் போடும்போது கட்டுபடி ஆகுமா? ஆகாதா என்று பார்க்க 'வயபிள் ஸ்கீமுக்கு' ஒரு 'யார்டு ஸ்டிக்' வைக்கப்பட்டிருக்கிறது. அது முந்திய சூழ்நிலைக்கேற்ப வைக்கப் பட்டது. இப்போது இருக்கிற சூழ்நிலைகளை மனதிற் கொண்டு 'யார்டு ஸ்டிக்கை' மறுபரிசீலனை செய்து 'ரேட் பர் டன்' என்ற முறையை மாற்றி, புதிய முறையை ஏற்படுத்தி, அந்தவகையில் ஒரு 'ஸ்டான்டிங் மானியுமென்ட்' என்ற முறையில் நீர்ப்பாசனத் திட்டங்களை ஏற்படுத்த இந்த அரசு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1978 செப்டம்பர் 13

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, திட்டங்களைத் தீட்டுகிற நேரத்தில் இவைகளை எல்லாம் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அதே நேரத்தில், எத்தனை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எத்தனை ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என்ற கணக்கையும் பார்க்க வேண்டும். பாசனத் திட்டங்களுக்குச் செலவிடும்போது, செலவிட்ட பணம் வீணாகி விடக்கூடாது என்பதில் இந்த அரசு சிரத்தை எடுத்துக் கொண்டு, இவைகளைப் பரிசீலித்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இப்போது ஒரு பாலம் கட்டுகிறோம் அல்லது ஒரு ரோடு போடுகிறோம் என்றால் அது கட்டுபடி ஆகுமா ஆகாதா என்ற கணக்கைப் பார்ப்பதில்லை. அதைப்போல பாசனவசதித் திட்டங்களுக்கும் செய்யலாம். மேலும் பாசன வசதித் திட்டங்களைப் பார்க்கும் போது அந்தக் காலத்தில் போடப்பட்ட கணக்கின் அடிப்படையிலேயே இப்போதும் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த முறையை மாற்றி, இந்தப் பாசன வசதியை ஏற்படுத்துவதன் மூலமாக நீண்டகாலப் பயன், மக்கள் வாழ்க்கையின் முன்னேற்றம், குடிநீர் பிரச்சனை, ஏனைய பிற வசதிகள் எல்லாம் ஏற்படுவதை கருத்திற்கொண்டு அணுகுமுறையை மாற்ற இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, தற்கால நிலவரப்படி பார்க்காமல் நீண்டகால — "லாங் டெர்ம்", பாசன வசதியை ஏற்படுத்துவதற்கும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நீண்டகாலப் பயன் ஏற்படுவதற்கும் ஏற்றவகையில் திட்டங்களைப் போடுவதில் இந்த அரசு அக்கறை காட்டி வருகிறது.

திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, கொடுமுடியாறு திட்டத்தை உருவாக்குகிற நேரத்தில் வல்லுநர்களால் போடப்பட்ட திட்டத்திற்கும் இப்போதுள்ள திட்டத்திற்கும் என்ன வேறுபாடு என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அந்தக் காலத்தில் 'வயபிளாக' இருந்த திட்டம் தற்போது 'நான்-வயபிளாக'ப் போவதற்கு என்ன காரணம்? எப்படி இருந்தாலும் இவைகளை எல்லாம் பார்க்காமல் விவசாயிகளின் நன்மையைக் கருதி, இத்திட்டத்தை விரைவில் நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, 1975-ல் திட்டம் போடும்போது ஏற்பட்ட மதிப்பீடு, 1978-லே தொடர்ச்சியாக ஏற்பட்ட மதிப்பீடு இவைகளை எல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. அதன் காரணமாகத்தான், மீண்டும் இத் திட்டத்தை அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1978 செப்டம்பர் 13]

கள்ளக்குறிச்சியில் நவீன அரிசி ஆலை

*வினா எண் 176—திரு. துரை முத்துசாமி :— மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கள்ளக்குறிச்சி கூட்டுறவு விவசாய விற்பனைச் சங்கத்திற்கு நவீன அரிசி ஆலை கட்ட ஆன செலவு எவ்வளவு?

(ஆ) இதற்கு தென்னாற்காடு கூட்டுறவு மத்திய வங்கி ஏதும் முன்பணம் வழங்கியுள்ளதா?

(இ) ஆம் எனில் அதில் எவ்வளவு தொகை திரும்பச் செலுத்தப்பட்டது?

(ஈ) கூட்டுறவுச் சங்கத்தால் கட்டப்படும் நவீன அரிசி ஆலைகளுக்கு அரசு மானியம் ஏதாவது வழங்கப்படுகிறதா?

(உ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ரூ. 17,53,655 ஆகும்.

(ஆ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

(ஈ) & (உ) : கள்ளக்குறிச்சி அரிசி ஆலையைப் பொறுத்தமட்டில் அரசு மானியம் ஏதும் இல்லை. எனினும், ஆலையைப் பராமரிக்க அமர்த்தப்பட்ட சிப்பந்திகளுக்கான முதல் மூன்று ஆண்டுகளுக்கு மானியமாக ரூபாய் 76,784.50-ஐ அரசு அளித்தது.

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, கள்ளக்குறிச்சி கூட்டுறவு விவசாய விற்பனைச் சங்கத்தின் முன்னாள் தலைவர்மீது ஊழல் சம்பந்தமாக வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. அந்தக் கூட்டுறவு விவசாய விற்பனைச் சங்கம் தற்போது யாருடைய தலைமையில் இயங்குகிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வேதாரண்யம் தொகுதியில் இறைவைப் பாசனத் திட்டம்

*வினா எண் 177—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் தொகுதியில் இறைவைப் பாசனத் திட்டத்தின் கீழ் மனுக்கள் எத்தனை வந்து உள்ளன?

(ஆ) திட்டம் எந்த அளவில் உள்ளது?

[1978 செப்டம்பர் 13

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மனு எதுவும் பெறப்படவில்லை.

(ஆ) திட்டமெதுவும் அமுலிலில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, இந்த வேதாரண்யம் தொகுதி கடலோரப் பகுதியாக இருப்பதால்-இறைவைப் பாசனத் திட்டம் இல்லாவிட்டாலும் - மேல் நாடுகளில் கடல் நீரிலிருக்கிற உப்பை நீக்கி, விவசாயக் காரியங்களுக்குப் பயன் படுத்துவதைப்போல, நம்முடைய அரசும் வேதாரண்யம் பகுதியில் கடல் நீரிலுள்ள உப்பை நீக்கி, நீர்ப்பாசன வசதிக்கு ஏற்பாடு செய்து, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை செய்யும் திட்டத்தை உருவாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; உறுப்பினர் அவர்களுடைய நல்ல ஆலோசனைகள் அனுதாபத்தோடு பரிசீலிக்கப் படும்.

[முற்பகல் 9.10]

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வேதாரண்யம் பிரசித்தி பெற்ற ஒரு ஸ்தலம். அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் தண்ணீர் இன்றி பெரிதும் சிரமப் படுகிறார்கள். எனவே அரசாங்கம் அந்தப் பகுதியிலுள்ள தண்ணீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு தனியாக ஒரு குழு அமைத்து பரிசீலித்து அவர்களுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கான வழிவகை செய்ய முன் வருமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை நல்லதொரு யோசனையாக இருக்கின்றது. ஆகவே, அவர் தனிக் கேள்வி ஒன்று போடுவாரேயானால் அது குறித்து ஆய்ந்து ஆவன செய்ய தமிழக அரசு உறுதியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரதம வங்கிகளிலிருந்து கடன் வழங்கல்

வினா எண் 178— திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பிரதம வங்கிகளில் கடன் வழங்க பிரதம வங்கி ஊழியர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மதிப்பீட்டு அதிகாரிகளை நியமிக்க 1976-ம் ஆண்டில் அரசு அனுமதித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அந்த உத்திரவு அமுலாக்கப்பட்டுள்ளதா?

1978 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம். இத் திட்டம் தென்னாற்காடு மாவட்டத்தில் மட்டும் முன்னோடி திட்டமாக நடத்த ஆணையிடப்பட்டுள்ளது.

(ஆ) ஆம். இந்த உத்தரவு அமுலாக்கப்பட்டுள்ளது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1976-ஆம் ஆண்டில் அரசு பிறப்பித்த ஆணையின் விளைவாக நியமிக்கப்பட்டு இருக்கின்றவர்களுடைய எண்ணிக்கை எத்தனை? அவர்கள் எந்தெந்த பகுதிகளில் பணியாற்றுகிறார்கள் என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, இத் திட்டம் முன்னோடி திட்டமாகத் தென்னாற்காடு மாவட்டத்தில் மட்டும் இம்முறைக்கு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தென்னாற்காடு மாவட்டத்தில் தற்போது பணிபுரியும் 21 கூட்டுறவு சார் பதிவாளர்கள், 4 கடைநிலை ஊழியர்கள், இவர்களில் 17 கூட்டுறவு சார் பதிவாளர் பதவிகளை ஒழித்து விட வேண்டும். மீதம் உள்ள 4 கூட்டுறவு சார் பதிவாளர்களையும் நான்கு கடைநிலை ஊழியர்களையும் வைத்து தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள ஒரு கூட்டுறவுத் துணைப் பதிவாளர் வட்டத்துக்கும் ஒரு சிறு ஆய்வுக்குழு ஏற்படுத்த வேண்டும். இந்த நான்கு கூட்டுறவு சார் பதிவாளர்கள், நான்கு கடைநிலை ஊழியர்கள் ஆகியோருக்கான செலவு முழுவதையும் மாநில நிலவள வங்கி ஏற்றுக்கொள்ளும். வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழக உதவி பெறும் திட்டங்களைச் செயல் படுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள தொழில் நுட்ப மேற்பார்வையாளர், வங்கி மேற்பார்வையாளர் ஆகியோருக்கான செலவை தற்போது வழக்கிலுள்ள முறைப்படி அரசே மானியமாக வழங்கும். இத் திட்டம் தென்னாற்காடு மாவட்டத்தில் 4-5-78லிருந்து செயல்படுத்தப்படுகிறது. மாநில நிலவள வங்கி முதலாவதாக பல பிரதம நிலவள வங்கியிலிருந்து 12 நில மதிப்பீட்டு அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்து தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள பிரதம நிலவள வங்கிகளில் நியமித்துள்ளது. நேர் காணலில் அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்களையும், மாநில நிலவள வங்கியின் கிளை மேலாளர்கள் பரிந்துரை செய்துள்ளதையும் அடிப்படையாக வைத்து இந்த நில மதிப்பீட்டு அதிகாரிகளை மாநில நிலவள வங்கி நியமித்துள்ளது. நாளாவட்டத்தில் மாநில நிலவள வங்கி தேவையானால் நில மதிப்பீட்டு அதிகாரிகளின் எண்ணிக்கையைத் தக்கவாறு அதிகமாக்கும்.

[1978 செப்டம்பர் 13

கோவையில் நிலுவையிலுள்ள குத்தகை வழக்குகள்

*வினா எண் 179—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை தாசில்தார் அலுவலகத்தில் குத்தகை நிலம் சம்பந்தமான வழக்குகள் எத்தனை முடிவடையாமல் உள்ளன?

(ஆ) இவைகளை விரைவுபடுத்த தனித் தாசில்தார் ஒருவரை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டத்தின்படி கோயம்புத்தூர் தாசில்தார் அலுவலகத்தில் 134 வழக்குகள் முடிவடையாமல் உள்ளன.

(ஆ) இல்லை.

திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த வழக்கு குத்தகைதாரர்களைக் காலி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு நில உரிமையாளர்களால் வேண்டுமென்று போடப் பட்டிருக்கின்றது. நீண்டகாலமாகவே இந்த வழக்கு முடியாமல் இருந்து வருகிறது. இதற்கு அதிகாரிகள் ஏராளமான லஞ்சம் கூட வாங்குகின்ற சூழ்நிலை இருக்கின்றது. எனவே, இதற்கு ஒரு காலவரையறை செய்ய அரசு முன் வருமா? அதாவது கூடிய விரைவில் இதற்கொரு முடிவு காணுகின்ற வகையில் ஒரு காலத்தை நிர்ணயிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, அவர்களுடைய மூலக்கேள்வியில் குத்தகை நிலம் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். குத்தகை நிலத்திற்குரிய வரி பாக்கியா அல்லது நிலத்தை குத்தகைதாரருக்கு என்று பதிவு செய்வது சம்பந்தப்பட்டதா என்பதை அவருடைய கேள்வியில் விளக்க மாகக் கொடுக்கவில்லை. இருந்த போதிலும், அவர் அவ்வாறு விளக்கமாகக் கொடுக்காவிட்டாலும், இப்போது குத்தகைப் பதிவு என்பதைப் பார்ப்போமேயானால் குத்தகைப் பதிவு என்பதை ஒவ்வொரு தாசில்தாரும் அந்தந்த இடங்களில் வேளாண்மை செய்யும் குத்தகைதாரர்களைப் பதிவு செய்து இருக்கிறார்கள். அவர்கள்தான் மேற்பார்வையிடுகிறார்கள். இந்தக் குறிப்பிட்ட இடத்தில் 34 வழக்குகள் இருப்பதாலும், அந்த வழக்கு களை தாசில்தாரே பார்த்து முடிக்க இருக்கின்ற காரணத்தால், தனி யாக அதற்கொரு தாசில்தார் போடத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் குத்தகை என்றால், குத்தகை பாக்கி இருக்கிற வழக்குகளை எல்லாம் விசாரிக்க ஆர். டி. ஓ.

1978 செப்டம்பர் 13]

லெவலில் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒவ்வொரு ஆபிசர் போடப் பட்டிருக்கிறார். அவர், காம்பிங் ஆபிசர். ஒவ்வொரு இடமாகச் சென்று அங்குள்ள குத்தகை பாக்கிகளைக் கேட்டு, வழககுகளைப் பார்த்து அந்த வழக்குகளில் தீர்ப்புக் கூறுகிறார். ஆனால் இப் போதுள்ள சட்டப்படி குத்தகை பாக்கி இருந்தால் அவர்களை வெளியேற்றக்கூடாது என்று சட்டம் இருப்பதால் இப்போது யாருக்கும், எந்தக் குத்தகைதாரருக்கும் எந்தக் கஷ்டமும் இல்லை யென்று கருதுகிறேன்.

திரு. கு. ரமணி: கோவையில் தாசில்தார் அவர்கள் விசாரணை செய்து முடிக்க வேண்டிய இந்த வழக்குகள் பல நீண்ட நாட் களாக முடிக்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே, குறிப்பிட்ட காலவரம்பிற்குள் அந்த வழக்குகளை முடிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அதோடு, குத்தகைதாரர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் பதிவு செய்ய வேண்டும் என்று ஏற்கனவே அர சாங்கம் உத்தரவிட்டு அந்தக் காலத்திற்குள் குத்தகைதாரர்கள் பதிய முடியாமல் விட்டுப்போன குத்தகைதாரர்கள் இருக்கிறார் கள், அந்தமாதிரி வழக்குகளில் சிக்கல்கள் வருகின்றன. ஆகவே, குத்தகைதாரர்கள் முழுவதையும் பதியவைப்பதற்கான நட வடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: எந்தெந்த இடங் களில் குததகைதாரர்கள் பதிவு செய்யவில்லை என்பதைத் தொடர் புள்ள தாசில்தாரிடம் தெரிவித்தால் அவர்கள் குத்தகைதாரர்களைப் பதிவு செய்ய ஆவன செய்வார்கள். வழக்குகள் என்றால் மட்டும் தீர விசாரித்து அவர்கள் பரிசீலனை செய்கிறார்கள். கோவை தாலுகாவில் 134 வழக்குகள்தான் இருக்கின்றன. அவற்றை உடனடியாக முடிவு செய்ய வேண்டும் என்று அரசு விரும்பு கிறது. இதையும் நான் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. க. மருதாசலம்: இந்த 134 வழக்குகளில் இருக்கிற நபர்களுடைய பெயர்களை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அரசைப் பொறுத்தவரையில் பெயர்களுக்கு முக்கியத்துவம் இல்லை. யார் யார் அந்த வழக்குகளில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதில் முக்கியத்துவம் இல்லை. வழக்குகளின் உண்மையைப் பற்றித்தான் கவலைப்படுகிறோமே தவிர பெயர்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை யென்பதால் பெயர்களைப்பற்றிக் கேட்பதில்லை.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 134 வழக்குகள் என்று சொன்னார்கள். அந்த வட்டத்தில் எட்டு, ஒன்பது, பத்து ஆண்டுகளாக ஆண்டுக் கணக்கில் அந்த வழக்குகளை வட்டாட்சியர் விசாரிக்க முடியாமல் இருப்பதை அமைச்ச

அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எண்ணிக்கை சிறிதாக இருந்தாலும் அங்குள்ள விவசாயிகள் இந்த வழக்குகள் நீண்ட நாட்களாக இருப்பதால் அவர்கள் குத்தகை நிலத்தை விட்டுச் செல்கிற சூழ்நிலையெல்லாம் ஏற்பட்டிருக்கிறது என்பதால் இதைத் தீர்த்து வைக்க முன்வருவார்களா?

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u>: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எட்டு, பத்து ஆண்டுகள் என்று சொன்னார்கள். எட்டு, பத்து ஆண்டுகள் என்பது நீண்டகாலம் என்பதை ஒத்துக் கொள்கிறேன். மிகக் குறுகிய காலத்தில் அதை முடிக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கும்படி அறிவுறுத்தப்படும்.

(திரு. என். பழனிவேல் எழுந்தார்)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: எல்லோரும் கேள்விகள் கேட்கவேண்டும் என்றால் எப்படி முடியும்? மற்ற நிகழ்ச்சிகளுக்கும் வாய்ப்புத் தரவேண்டும். என்ன செய்வது? எல்லோரையும் கூப்பிட வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை.

<u>நகர்புற நில உச்சவரம்புச் சட்டம்</u>

*வினா எண் 180—<u>திரு எஸ். ஜே. இராமசாமி</u>: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் இதுவரை சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களில், கைப்பற்றப்பட்ட நிலங்களின் அளவு என்ன?

(ஆ) அவைகள், எந்தெந்த வகையில் விநியோகிக்கப்பட்டுள்ளன?

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u>:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

<u>திரு. இரா. தாமரைக்கனி</u>: நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் நிலங்களைக் கைப்பற்றும்போது அரசு எவ்வளவு தொகை கொடுக்கிறது?

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u>: நகர்புற உச்சவரம்பில் வகை I, II, III, என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. சென்னை வகை 'I' பிரிவைப் பெறுகிறது. சேலம், கோவை, திருச்சி, மதுரை, வகை 'II' பிரிவில் வருகிறது. திருநெல்வேலி வகை 'III' பிரிவில்

வருகிறது. அப்படி வருகிறபோது அந்தந்த நகர்ப்புறங்களுக்குத் தக்கபடி அவர்களுக்கு அந்தக் கிரயத்தை நாங்கள் நிர்ணயம் செய்கிறோம். சென்னை என்றால் not exceeding Rs. 50 per square metre சேலம், கோவை, திருச்சி, மதுரை, இவற்றில் not exceeding Rs. 25 per square metre. திருநெல்வேலியில் ஒரு சதுர மீட்டருக்கு 15

[முற்பகல் 9-20]

ரூபாய்க்கு மேற்படாமல் ஆனால், இந்தப் பணத்தைக் கொடுப்பதில் அதாவது நிலச் சொந்தக்காரர்களுக்குத் திருப்பிக் கொடுப்பதில் அவர்களுக்கு 25 சதவீதம் பணத்தை உடனடியாகக் கொடுக்கிறோம். இதில் 25 சதவீதம் அல்லது 25 ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் இருக்க வேண்டும். 25 ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருந்தால் 25 சதவீதம் உடனடியாகப் பணம் கொடுக்கப்படுகிறது. மீதிப் பணம் 15 ஆண்டுகளில் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்கப்படுகிற பணத்திற்கு 6 சதவீதம் வட்டியும் கொடுக்கப்படுகிறது.

<u>திரு. செ. சிவசாமி</u>: தலைவர் அவர்களே, கோயம்புத்தூர், மதுரை போன்ற இடங்களில் இந்தச் சட்டம் வந்ததின் காரணமாக இதுவரை எந்த நிலமும் கிடைக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். மிச்ச நிலம் கிடைக்கவில்லையாதலால் டிஸ்ட்ரிபூஷன் என்ற கேள்விக்கு இடமில்லை. இப்படி மிச்ச நிலம் இல்லாத போது . . . . .

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u>: மிச்ச நிலம் இல்லை என்று சொல்லவில்லை. மிச்ச நிலம் இன்னும் வரவில்லை. இதற்கான காலக்கெடு 121 நாட்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. 14-9-78 வரை கெடு கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்று 120 நாளாகிறது. 121 நாட்கள் ஆவதற்கு இன்னும் ஒரு நாள் இருக்கிறது. கடைசி நேரம் வரையில் காத்திருந்து விட்டு அதற்குப்பின் தான் கணக்கைக் கொடுப்பார்கள். ஆனால், அவர்கள் கொடுத்ததை எல்லாம் சரிதானா என்பதைப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்துவிட்டு எவ்வளவு நிலம் எந்தெந்த நகரங்களில் கிடைத்திருக்கின்றன என்று கணக்கெடுக்க வேண்டும். அப்படிக் கணக்கு எடுத்த பின்னால் நிலச் சொந்தக்காரர்களுக்கு உங்களுடைய நிலம் இவ்வளவு எடுக்கப்பட்டிருக்கிறது என்று அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்ப வேண்டும். ஆகவே, கணக்கு வருவதற்கு இன்னும் காலக்கெடு இருக்கிறது, இன்னும் 24 மணி நேரம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜவ்வாது மலைப் பகுதியில் 'செட்டில்மென்ட்'

*வினா எண் 181—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டம், ஜவ்வாது மலையின் 1902 செட்டில்மென்டினை திருத்திபுதிய செட்டில்மென்டு ஏற்படுத்த கோரி ஜவ்வாது மலைவாழ் முன்னேற்ற சங்கம் அரசுக்கு விண்ணப்பம் செய்து கொண்டுள்ளதா?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைஎன்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இப்படிப்பட்ட ஒரு விண்ணப்பத்தை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள், அதனுடைய நகல் எனக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த செட்டில்மென்ட்டை மாற்றி அமைப்பதின் மூலமாக அங்குள்ள மலைவாழ் மக்கள் பல்வேறு வகையில் நல்லமுறையில் வாழ வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இதை மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அந்த மனு அரசுக்கு வரவில்லை என்பதற்காக இதிலிருந்து அரசு தப்பித்துக் கொள்ள நிச்சயமாக எண்ணவில்லை. இப்படிப்பட்ட நிலங்கள் ஜவ்வாது மலையாக இருந்தாலும் சரி, வேறு எந்த இடமாக இருந்தாலும் சரி, இவற்றை எப்படியெல்லாம் சீர்செய்வது என்று அரசு ஆலோசித்து வருகிறது. இதற்கான நடவடிக்கைகளையும் அரசு உடனடியாக எடுத்து வருகிறது. அந்த முறையில் ஜவ்வாது மலையிலும் நடவடிக்கைகள் எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்லணை அருகில் முதலைகள் ச[illegible]லயம்

* வினா எண் 182—திரு. கோ. இளங்கோ[illegible]ன்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்க[illegible] வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கல்லணைக்கு அருகில் கிளிக்கூடு கி[illegible]மத்தில் முதலைகள் சரணாலயம் தற்போது உள்ளதா?

(ஆ) இல்லையெனில் அதனை ஏற்படுத்து[illegible] உத்தேசம் அரசிற்கு உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:

(அ) இல்லை.

(ஆ) இங்கு ஒரு மேம்பாடு திட்டத்திற்காக 30 ஆயிரம் ரூபாய் செலவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவர் அவர்களே, காவிரியில் உடைப்பு எடுத்ததின் காரணமாக அங்குள்ள முதலைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன என்பது உண்மையா? அதன் காரணமாக கிளிக்கூண்டின் கீழ் உள்ள ஊர்களில் கொள்ளிடத்தில் முதலைகளின் தொல்லைகள் இருக்கின்றன என்று அங்குள்ள மக்கள் அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இதற்கான குறிப்பு இங்கேயில்லை. ஆனால் கிளிக்கூண்டு பகுதியில் இருக்கின்ற பெரிய முதலைகள் 21, சிறிய முதலைகள் 60 இருப்பதாகத் தெரிகிறது.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விடையிலிருந்து அந்தப் பகுதியில் முதலைகள் மிகுதியாக இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அங்கு முதலைகள் சரணாலயம் ஒன்று அமைத்து முதலைகளைப் பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: சரணாலயம் துவக்க இயலாத நிலையில் அது சிறிய இடமாக இருப்பதால், அங்கு தேவையில்லை என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அங்கு முதலைகளைப் பாதுகாப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

ரப்பர், கிராம்பு பயிரிடல்

*வினா எண் 183—திரு வி.கே. கோதண்டராமன்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) தமிழ் நாட்டில் ரப்பர், கிராம்பு பயிரிடுவதை விரிவாக்கும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(ஆ) ஆம் [illegible]ல் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு [illegible] ஆர். எம். வீரப்பன்:

(அ) ஆம்.

(ஆ) தமிழ[illegible] கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழக வனத் துறையின[illegible] 1978-79-ல் மேலும் 200 ஹெக்டேரும், 1979-80-ல் 300 [illegible]ஹெக்டேரும் ரப்பர் பயிரிட உத்தேசிக்கப்

பட்டுள்ளது. மத்திய அரசு உதவி பெற்ற மேற்குத் தொடர்ச்சி மலை முன்னேற்ற திட்டத்தின்கீழ் 1978-79-ல் 35 ஹெக்டேர் பரப்பில் கிராம்புத் தோட்டத்தை விரிவுபடுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிராம்பு பயிரிடுவதால் வெளிநாட்டுச் செலாவணி சம்பாதித்துக் கொடுக்கின்றது. கொடைக்கானல் மலையிலே முடிக்கொத்து நோயால் வாழை அழிந்துவிட்டது. அதற்கு மாற்றாக, இந்த கிராம்பைப் பயிரிட்டு, விவசாயிகளுக்கு உதவக்கூடிய நிலையிலே அரசாங்கம் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, மத்திய அரசு மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஐந்தாண்டுக் காலத்தில் 100 ஹெக்டேர் பரப்பளவில் கிராம்பு பயிரிடும் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையும் கருத்தில் கொண்டு, அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஓ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் போல் கொக்கோ பயிரிடுவதற்கு உதவி செய்ய எந்தெந்த வகையில் அரசு முன்வரும் என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தனியாகக் கேள்வி போட்டால் தகவல் சேகரித்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இந்த ரப்பர், கிராம்பு பயிரிடுவதற்குத் தேவையான மண் வளம், மழை வளம் எங்கெங்கே இருக்கின்றது என்பதை அறிவிக்க இயலுமா? தமிழகத்திலே வேறு எங்கேனும் அப்படிப் பட்ட திட்டத்தை விரிவாக்குவதற்கான முயற்சி இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு நான் முன்னரேயே விடை அளித்தேன். 100 ஹெக்டேர் நிலத்தில் பயிரிடுவதற்கான திட்டம் இப்போது நிறை வேற்றப்பட்டு வருகிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்கலைக்கழக மானியக்குழு பரிந்துரைத்துள்ள சம்பள விகிதங்கள்.

*வினா எண் 184—திரு. அ. ப. பழனியப்பன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கல்லூரி ஆசிரியர்களுக்கு U.G.C. Scales கொடுப்பதால் அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவு தொகை எவ்வளவு?

(ஆ) இதனால் பயன்பெறும் கல்லூரி ஆசிரியர்கள் எவ்வளவு பேர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்த ஊதிய விகிதங்களை 1—4—1976 முதல் அமுல்படுத்துவதற்கும், 1—1—1977 முதல் அதற்கான பணப்பயன் அளிப்பதற்கும் அரசு முதற்கண் முடிவு செய்திருந்தது. ஆயின் கல்லூரி ஆசிரியர்களின் முறையீடுகளைக் கருத்தில்கொண்டு இவ்வூதிய விகிதங்களை 1—1—1974 முதல் அமுல்படுத்துவதென்றும், அதற்கான பணப் பயன் 1—1—1977 முதல் வழங்குவதென்றும், 27-3-78 அன்று அரசினர் ஆணை பிறப்பித்துள்ளனர். எனவே, இவ்வூதிய விகிதங்களை அமுல்படுத்துவதனால் ஏற்படக் கூடிய கூடுதல் செலவின விவரம் இவ்வாண்டு முடிவில் இறுதியாக்கப்படும்.

(ஆ) சுமார் 15,000 கல்லூரி ஆசிரியர்கள் பயன் பெறுவர்.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளிலே உள்ள ஆசிரியர்களுக்கு இன்னும் அந்த ஊதியம் வழங்கப்படவில்லை. அரசு கல்லூரிகளிலேயும்கூட, டியூடர், டெமான்ஸ்ட்ரேட்டர்கள் போன்றவர்களுக்கு இன்னும் இந்த ஊதியம் வழங்கப்படவில்லை என்றெல்லாம் சொல்லப்படுகின்றதே, இது அரசுக்குத் தெரியுமா? அரசின் கருத்து என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதற்குத் தேவையான விவரங்கள் வராததால், அந்த ஊதிய உயர்வு இன்னும் அவர்களுக்குத் தரப்படவில்லை. வந்தவுடன் தரப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த யு. ஜி. சி. ஸ்கேல் கல்லூரிகளில் கொடுக்கப்படுவதுபோல், என்ஜினியரிங் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்றவைகளில் மேல் பட்டப் படிப்பு படித்துள்ள ஆசிரியர்களுக்கு இந்த ஊதியக் குழுவின் சிபார்சுபடி கொடுக்கப்படவில்லை என்று சொல்லப் படுகிறது; அவர்களுக்கும் சேர்த்து வழங்குவதற்கு இனி முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1978 செப்டம்பர் 13

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பரிந்துரையை ஏற்று கல்லூரி ஆசிரியர்கள், தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியர்கள், இன்னும் பல்வேறு ஆசிரியர்களுக்கு ஊதிய விகிதத்தை மாற்றியமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த யு. ஜி. சி. சம்பளத்தை ஆசிரியர்களுக்கு நேரடியாக வழங்குவதற்கான நடவடிக்கை என்ன? ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகச் சொல்கிறார்கள். இதற்கான நடவடிக்கை என்ன என்பதையும், அதோடு கல்லூரி ஆசிரியர்கள் நிர்வாகத்திற்குப் பிடிக்கவில்லை என்றால், உதாரணத்திற்கு குமாரசாமி ராஜா கல்லூரியிலே முதலாண்டு பி.யூ.சி. வகுப்பையே அபாலிஷ் செய்துவிட்டு, வேண்டுமென்றே 26 ஆசிரியர்களை நீக்குவதற்கு இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றியமைக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

[முற்பகல் 9–30]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நான் இன்றைய தினம் இந்தப் பேரவையில் முழுமையான அறிக்கையைத் தர இருக்கிறேன். அதிலே மேற்கொண்டும் பல விவரங்களைச் சொல்லுகிறேன்.

தாகூர்-பாரதி கலையரங்கம்.

*வினா எண் 185— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் தாகூர்–பாரதி கலையரங்கம் கட்டுவதற்காக மாநில அரசு நிதி உதவியளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) & (ஆ) ஒரு விவர அறிக்கை* சபையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கையிலிருந்து இரவீந்திரநாத தாகூர் நினைவாக 1961 ஆம் ஆண்டில் இந்தப் பணி அவருடைய பெயரால் துவக்கப்பட்டு பின்னால் சில பல காரணங்களால் கட்டி முடிக்கப்படாமல் பிறகு இரவீந்திரநாத் தாகூர் பெயரோடு மகா கவி பாரதியார்

[*696-697-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

1978 செப்டம்பர் 13]

பெயரையும் இணைத்து அந்தக் கலையரங்கைக் கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது அது தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திடம் ஒப்படைப்பது பற்றிப் பரிசீலனையில் இருப்பதாகக் கூறி இருக்கிறார்கள். இந்த அரசு இரவீந்திரநாத் தாகூர், பாரதியார் பெயர்களோடு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெயரையும் இணைத்து நினைவு அரங்கம் என்ற பெயரில் உருவாக்கி விரைவில் முடிக்க செயல்முறைகளை வகுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை அரசின் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. மு. அம்பிகாபதி: இரவீந்தரநாத் தாகூர்-பாரதியார் பெயரில் கலை அரங்கு கட்டுவது பற்றிக் குறிப்பிட்டார்கள். அதே போல் மறைந்த தொழிலாளர் தலைவர் ஜீவானந்தம், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் ஆகியவர்களின் பெயரிலும் மக்கள் தொகை நிறைந்த சென்னை நகரில் ஆங்காங்கு கலை அரங்குகள் உருவாக்க தமிழக அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

துலையானூர் பஞ்சாயத்து

*வினா எண் 186—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம் துலையானூர் ஊராட்சியை, தலையானூர், மலைக்குடிபட்டி என்று இரண்டு ஊராட்சியாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. நா. சுந்தரராஜ்: அந்தக் குறிப்பிட்ட ஊராட்சி மன்றம் தன்னுடைய தீர்மானத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி அவர் மூலம் அரசுக்கு அனுப்பியிருப்பதாகவும் தெரிகிறது. மக்கள் இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அரசு இதுபற்றி இனியாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா?

[1978 செப்டம்பர் 13

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அப்படிப்பட்ட குறிப்பு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வந்திருக்கிறது. ஆனால் 28-2-78-க்குப் பிறகு ஊராட்சிகளைப் பிரிக்க அரசு தடை விதித்திருக்கும் காரணத்தால் அவர் அந்தக் குறிப்பை ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பவில்லை.

திரு. நா. சுந்தரராஜ்: தேர்தல் தள்ளிப் போடுவதன் காரணமாக அந்தத் தடையை நீக்கிவிட்டு இன்னும் காலம் தாழ்த்தாது அந்தப் பணியைச் செய்த பிறகு தேர்தலை நடத்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அந்தத் தடையை நீக்க உத்தேசம் இல்லை.

தூத்துக்குடி நகராட்சி.

*வினா எண் 187—திரு. ந. தனசேகரன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடிக்கு அருகில் அமைந்துள்ள புதிய துறைமுகம், கனநீர் தொழிற்சாலை, உரத் தொழிற்சாலை ஆகிய பஞ்சாயத்துப் பகுதிகளை தூத்துக்குடி நகராட்சியுடன் இணைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: தூத்துக்குடி நகராட்சி நிதிப் பற்றாக்குறையால் பலகீனப்பட்டுள்ளதால், புதிய துறைமுகம், கனநீர் தொழிற்சாலை, உரத் தொழிற்சாலை ஆகிய பஞ்சாயத்துப் பகுதிகளை தூத்துக்குடி நகராட்சியுடன் இணைப்பது குறித்து அரசு மீண்டும் பரிசீலனை செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அவற்றை ஊராட்சி நகரியமாக ஆக்குகின்ற செயற்குறிப்பு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருக்கிறது.

வட ஆற்காடு மாவட்டத்தில் தொழிலாளர் நலப்பணிகள்.

*வினா எண் 188—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ல் தொழிலாளர் நல நிதியிலிருந்து வட ஆற்காடு மாவட்டத்தில் தொழிலாளர் நலப்பணிக்காக எவ்வளவு செலவு செய்யப்பட்டது?

(ஆ) அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகள் யாவை?

1978 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) வட ஆற்காடு மாவட்டத்தில் 1977-78-ல் தொழிலாளர் நலப்பணிக்காக தொழிலாளர் நல நிதியிலிருந்து செலவழிக்கப்பட்ட தொகை 57,442.93 ரூபாய் ஆகும்.

(ஆ) தொழிலாளர் நலப் பணிக்காக குடியாத்தம் மற்றும் வாணியம்பாடி ஆகிய இடங்களில் முறையே தையல் பயிற்சி நிலையம் ஒன்றும் குழந்தைகள் காப்பகம் ஒன்றும் 1-1-76 முதல் நடைபெற்று வருகிறது.

சென்னை— மகாபலிபுரம் பகுதியில் ஹைட்ரோலாஜிகல் சர்வே.

*வினா எண் 189—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் சென்னையிலிருந்து மகாபலிபுரம் வரையில் ஹைட்ரோலாஜிகல் சர்வே நடந்துள்ளதா?

(ஆ) அதன் விளைவாக அமைக்கப்பட்ட குழாய்களில் நல்ல தண்ணீர் கிடைப்பது உண்மையா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) சென்னைக்கு தெற்கே திருவான்மியூரிலிருந்து கோவளம் வரை (பக்கிங்காம் கால்வாய் கடலுடன் முகக்குமிடம் வரை) ஹைட்ரோ லாஜிகல் சர்வே நடத்தப்பட்டுள்ளது.

(ஆ) உண்மை.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து மகாபலிபுரம் வரை ஹைட்ரோலாஜிக்கல் சர்வே, பூகர்ப்ப இயல் ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது. இது மத்திய அரசாங்கத்தின் உதவியோடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த இடங்களில் பெரிய குழாய்களை அமைத்து இருக்கிறார்கள், அங்கே மிகவும் நல்ல தண்ணீர், குடிப்பதற்கு லாயக்கான தண்ணீர் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. அரசாங்கம் அதைப் பரிசீலித்து அந்தத் தண்ணீரை சென்னைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவல் அப்போது இருந்த மாநில அரசே அதைச் செய்ததாகத்தான் இருக்கிறது. மத்திய அரசு செய்ததாக மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறார்கள், அந்தத் தகவலைக் கொடுத்தால் நல்லதாக இருக்கும். அங்கே கிடைக்கிற தண்ணீரைப் பரிசீலித்து அங்கே இருந்து நிரம்பத் தண்ணீரை கொண்டு வரலாமா என்று ஆலோசித்துக் கொண்டு இருக்கிறோம். அநேகமாக 30 ஆம் தேதியிலே இருந்து கூட தென் சென்னைக்குக் கொண்டு வருகிறோம், அதற்காக ஒரு விழாவையே கூட நடத்தி கண் அதித் தணீர் கொடுக்கலாம் என்று இருக்கிறோம்.

[1978 செப்டம்பர் 13

'அண்ணா' 'பெரியார்' கப்பல்கள்.

*வினா எண் 190— திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 'அண்ணா', 'பெரியார்' என்ற இரு கப்பல்களை தமிழ்நாடு அரசு என்ன விலைக்கு வாங்கியது ?

(ஆ) அவற்றைப் பழுது பார்க்க எவ்வளவு செலவாயிற்று ?

(இ) அதன் மூலம் கிடைத்த லாபம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) 'எம். வி. தமிழ் அண்ணா' கப்பல் சுமார் ரூ. 109 லட்சத்திற்கும், 'எம். வி. தமிழ் பெரியார்' என்ற கப்பல் ரூ. 75 லட்சத்திற்கும் வாங்கப்பட்டன.

(ஆ) இரு கப்பல்களையும் பழுது பார்ப்பதற்கான செலவினங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஆண்டு	எம்.வி. தமிழ் அண்ணாவிற்கு ஆன செலவு.	எம்.வி. தமிழ் பெரியாருக்கு ஆன செலவு.
(1)	(2)	(3)
1974-75	25,01,428	6,96,020
1975-76	5,19,497	9,48,622
1976-77	27,40,688	8,11,637
1977-78	4,61,340	5,12,802

மேலே குறிப்பிட்ட செலவுகளைத் தவிர, ரூ. 53,02,625 எம். வி. தமிழ் பெரியாருக்கு சிறப்பு மதிப்பீட்டாய்வின் (special survey) அடிப்படையில் பழுது பார்க்க செலவிடப்பட்டது.

(இ) 1975 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதியுடன் முடிந்த ஆண்டில் வருமான வரி விதிகளின்படி தேய்மான செலவுகளுக்கு நிதி ஒதுக்கிய பிறகு, மொத்தத்தில் ரூ. 21·90 இலட்சம் இழப்பு ஏற்பட்டது.

1976 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் தேதியுடன் முடிந்த ஓர் ஆண்டில் தேய்மான செலவுகளுக்காக ரூ. 31·18 இலட்சம் நிதி ஒதுக்கிய பின்னரும் ரூ. 5·29 இலட்சம் நிகர லாபம் கிட்டியது.

1977 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் தேதியுடன் முடிந்த ஆண்டில், தேய்மான செலவுகளுக்காக ரூ. 31·24 இலட்சம் ஒதுக்கிய பின்னர், ரூ. 60·37 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டது.

1978 செப்டம்பர் 13]

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு கப்பல்களும் யாரிடமிருந்து வாங்கப்பட்டன? அவைகளை வாங்கியதற்குப் பிறகு லட்சக்கணக்கான ரூபாய் பழுது பார்ப்பதற்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. 109 லட்சம் ரூபாய்க்கு வாங்கி 25 லட்சம் ரூபாய் பழுது பார்ப்பதற்காகவே செலவு செய்யப்பட்டிருக்கிறதே, எனவே யாரிடமிருந்து என்ன நோக்கத்திலே இவை வாங்கப்பட்டன ? வாங்கிய நோக்கம் நிறைவேறியதா ? இந்தக் கப்பல்களின் மூலமாக ஆண்டுக்கு ஆகும் செலவு எவ்வளவு ? ஆண்டுக்கு இவைகளின் மூலமாக வருகின்ற வருமானம் எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, செலவு, வருமானம் பற்றிக் கூறிவிட்டேன். இவைகள் வாங்கப்பட்டதன் நோக்கம், தமிழ்நாடு மின்சார வாரியம் எண்ணூர், பேஸின்பிரிட்ஜ் மின்நிலையத்திற்குத் தேவையான பெங்கால், பீகார் பகுதியிலே இருந்து நிலக்கரியை எடுத்து வருவதற்காக வாங்கப்பட்டது. அப்போது ரயில்வே வேகன்கள் இல்லாத காரணத்தாலே தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு உடனடியாக நிலக்கரி தேவைப்பட்டதாலும் எதிர்காலத்திலே தூத்துக்குடி அனல் மின்நிலையத்திற்கு பயன்படுத்தப்படவும் 1974 ஆம் ஆண்டிலே வாங்கப்பட்டன.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து அந்தக் கப்பல் கம்பெனி நட்டத்தில் தான் வேலை செய்கிறதே தவிர லாபத்தில் வேலை செய்யவில்லை, நட்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிற கப்பலை விற்பதற்கு அல்லது அதைத் தீர்த்துக் கட்டுவதற்காவது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அந்தக் கப்பல்கள் தொடர்ந்து நட்டத்தில் ஓடவில்லை, 1976 ஆம் ஆண்டிலே 5 லட்சம் ரூபாய் லாபத்தில் ஓடியிருக்கிறது. ஆனால் மத்திய அரசினுடைய சில நடைமுறைகள் காரணமாக இந்தக் கப்பல்களுக்குப் போதுமான சரக்குகள் கிட்டாத நிலைமை ஏற்பட்டது.

[முற்பகல் 9–40]

தமிழ்நாடு மின் வாரியத்திற்குச் சொந்தமான எண்ணூர், பேசின்பிரிட்ஜ் மின் நிலையங்கள் பெங்கால், பீகார் நிலக்கரி சுரங்கங்களுடன் இணைக்கப்பட்டிருந்தன, மத்திய அரசு மாற்றி சந்தாலிலுள்ள நிலக்கரி சுரங்கங்களுடன் இணைத்தது. இக்கப்பல்களைத் தொடர்ந்து நிலக்கரி எடுத்து வருவதற்காகப் பயன்படுத்தியதில் நஷ்டம் ஏற்பட்டது. இந்தக் கப்பல் தானியங்களை ஏற்றிக்கொண்டு வந்த பொழுது உராய்வு ஏற்பட்டதன் அடிப்படையில் செலவு சற்று மிகையாக ஏற்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்தின் கொள்கையினால் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். இது கப்பல் போக்குவரத்துத் துறை என்பதால் கமர்ஷியல் அண்டர்டேக்கிங் என்று எண்ணுகிறேன், எனவே எங்கே இலாபம் கிடைக்கிறதோ அந்தத் திசையை நோக்கி அந்தத் தொழிலை நடத்தினால் மத்திய அரசாங்கத்தின் மீது பழி போடும் சூழ்நிலை ஏற்படாது. இருந்தாலும் இப்பொழுது வரும் நிலைமைகளைப் பார்க்கும்பொழுது நான் ஒன்றை அமைச்சரிடம் கேட்க விரும்புகிறேன். இதை வாங்கும்பொழுது பழைய கப்பலாக வாங்கப்பட்டதா அல்லது புதிய கப்பலாக வாங்கப்பட்டதா? பழைய கப்பலாக வாங்கப்பட்டது என்றால் புதிய கப்பல் கிடைக்காத சூழ்நிலை இருந்ததா? இதை வாங்கும்பொழுது டெண்டர் அல்லது கொடேஷன்கள் கேட்டு வாங்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, இந்தக் கப்பல்களை வேறு பணிகளுக்குப் பயன்படுத்தினால் இலாபத்தில் நடக்கும் என்று சொன்னார்கள். அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி கொண்டு வரப்பட்டது. மற்றவைகளுக்கு இதைப் பயன்படுத்தக் கூடிய அமைப்பு அதில் இல்லாததால் பெங்கால், பீகாரில் உள்ள நிலக்கரி தரமான நிலக்கரி என்பதால் அது தமிழ்நாட்டில் எண்ணூர், பேசின்பிரிட்ஜ் மின் நிலையத்திற்கும், தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கும் தரப்பட்டால் பணி சிறப்பாக இருக்கும் என்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டு, இப்பொழுதுதான், பெங்கால், பீகார் நிலக்கரியைக் கேட்டு, இசைந்துள்ளார்கள்.

புதிதாக வாங்க வேண்டுமென்றால் 1974ம் ஆண்டில் ரூபாய் 5 கோடி முதல் 6 கோடிவரை ஆகியிருக்கும். சரக்குக் கட்டணம் மிகவும் குறைவான பொருளான நிலக்கரியை ஏற்றி வருவது மட்டுமே முக்கிய குறிக்கோளாய் இருந்தால், புதிய கப்பல் வாங்க உத்தேசிக்கப்படவில்லை. கப்பல் வாணிபத்தில் டெண்டர்கள் விட்டு, கப்பல் வாங்கும் முறை வழக்கத்தில் இல்லை. கப்பல் விற்பனையும், வாங்குதலும், தரகர்களின் மூலமே நடைபெறுவது வழக்கமாயுள்ளது. 'பெரியார்' கப்பல் புதுடெல்லியிலிருக்கும் இண்டர் ஓஷியன் தரகர்களின் (Inter-Ocean Brokers of New Delhi) மூலமும், 'அண்ணா' கப்பல் கல்கத்தாவிலுள்ள சிங்க்லேர் (Sinclair) நிறுவனத்தின் மூலமும் வாங்கப்பட்டன.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கப்பல் வாங்கியதன் நோக்கம் நிலக்கரியை ஏற்றிவர என்று குறிப்பிட்டார்கள். அப்படி நிலக்கரியை ஏற்ற முடியவில்லை என்றால் சட்டமன்ற உறுப்பினர்களையாவது அந்தக் கப்பலில் ஏற்றி சிங்கப்பூர், மலேசியா போன்ற இடங்களைக் காட்டிக்கொண்டு வர அரசிடம் திட்டமிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே' சட்டமன்ற உறுப்பினர்கள் உல்லாசப் பயணம் செய்ய எனத் தனியாக உல்லாசப் படகுகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆட்டோரிக்ஷா கட்டணங்கள்.

* வினா எண் 191—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆட்டோ ரிக்ஷா கட்டணத்தை உயர்த்தக் கோரி அரசுக்கு ஆட்டோ ரிக்ஷா சங்கம் கோரிக்கை விடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது பற்றி மேற்கொண்டுவரும் நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) போக்குவரத்து ஆணையாளருடன் கலந்தாலோசித்து, தற்போது, ஆட்டோ ரிக்ஷா கட்டணத்தை உயர்த்துவதில்லை என அரசு தீர்மானித்துள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, டாக்சியிலே போவதை விட இத்தகைய ஆட்டோ ரிக்ஷாக்களில் செல்வதால் செலவு மிகவும் குறைவாக இருப்பதால் ஆட்டோ ரிக்ஷாக்களை மிக அதிகமாகப் பயன்படுத்தும் சூழ்நிலை இருக்கிறது. எனவே அரசு இன்னும் அதிகமான அளவில் சென்னை நகரத்தில் ஆட்டோ ரிக்ஷாக்களை விடுவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; தலைவரவர்களே, ஆட்டோ ரிக்ஷாக்கள் சற்று வேகம் குறைவாகச் செல்லுகின்ற வாகனமாக இருப்பதால் எல்லாத் தடங்களிலும் ஆட்டோ ரிக்ஷாக்களை அதிக அளவிற்கு விடுவது போக்குவரத்திற்கு இடையூறை ஏற்படுத்தும் என்று ஆய்வில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அதிக ஆட்டோ ரிக்ஷாக்களை விடுவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது, இருந்தாலும் மெயின் ரோடுகள் போகும் பகுதிகள் அல்லாமல் மற்றப் பகுதிகளில் ஆட்டோ ரிக்ஷாக்களை விடுவதற்கான பரிசீலனையை அரசு செய்து வருகிறது.

திரு. கே. புண்ணை சேதுராம் : தலைவரவர்களே, மதுரை, கோவை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஓடும் ஆட்டோ ரிக்ஷாக்களில் மீட்டர் சிஸ்டம் இல்லை. சில ஆட்டோ ரிக்ஷாக்களில் மீட்டர் வைத்திருந்தாலும் அதைப் பயன்படுத்துவதில்லை. அதைப் பயன்படுத்த வேண்டும் என்று உத்தரவுகளை அரசு பிறப்பிக்குமா? ஏன் அவைகளை வைத்தும் பயன்படுத்தாமல் இருந்து வருகிறது என்பதையும் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி, பொன்னையன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும், மீட்டர் இருந்தபோதும் ஏன் பயன்படுத்துவதில்லையென்றால் அதனால் அந்த உரிமை

யாளர்கள் இலாபம் கிடைக்கும் என்ற நோக்கோடு தவறாக அதைச் செய்து வருகிறார்கள். அதை நடைமுறைப்படுத்த அரசு ஆணையிட்டிருக்கிறது. தக்க நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவரவர்களே, கோவை நகரத்திலே சகல பகுதிகளுக்கும் ஆட்டோரிக்ஷா ஓட்டுபவர்கள் மீட்டர் போடாமலேயே காசு வாங்கிக் கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தி மீட்டர் போட்டுத்தான் காசு வாங்க வேண்டுமென்ற நடைமுறையை அமுலுக்குக் கொண்டுவர கறாரான நடவடிக்கையை எடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, அங்குள்ள காவல் துறையிடமோ அல்லது ஆர்.டி.ஓ.விடமோ, அல்லது மோட்டார் இன்ஸ்பெக்டர்கள் என்று சொல்லப்படுகிறவர்களிடமோ மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி தவறாக மீட்டர் அல்லாது வசூல் செய்கின்றவர்களைப் பற்றி முறையீடு செய்வார்களானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. சதாசிவம்: தலைவரவர்களே, சென்னையிலே இந்த ஆட்டோ ரிக்ஷாக்கள் மீட்டர் போடுவதோடு மட்டுமல்லாமல் அதற்கு மேல் அதிகமாகக் கொடுத்தால்தான் வருவேனென்ற கட்டாயமான சூழ்நிலையை ஏற்படுத்தி வருகிறார்கள். இந்த ஆட்டோ ரிக்ஷாவிலே செல்வதால் மக்களுக்குச் சிரமமான சூழ்நிலை ஏற்படுவதைத் தடுப்பதற்கு போலீசை வைத்து தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, இது போன்ற முறையீடுகள் ஏற்கனவே அரசுக்கு வந்திருக்கின்றன. பொதுமக்களுடைய ஒத்துழைப்பு நல்முறையில் இருந்தால் கண்டிப்பாக இதில் செம்மையான நடவடிக்கைகள் எடுக்க அரசுக்கு ஏதுவாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல், இந்த ஆட்டோக்காரர்கள் மீட்டருக்கு மிகையான ரேட் கேட்கிறார்கள் என்பதை உடனடியாக எழுத்து மூலமாக, காவல் துறைக்கோ அல்லது மண்டல போக்குவரத்து துறை அதிகாரிக்கோ எழுதுவார்களானால் நடவடிக்கை எடுக்க அது மிக வாய்ப்பாக இருக்கும். பொதுமக்களுடைய நலனுக்கும் உகந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சொ. ந. பழனிசாமி: பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்றம் நடக்காதபொழுது இங்கே தலைமைச் செயலகத்திற்கு வருவீர்களா என்று ஆட்டோ டிரைவர்களைக் கேட்டால் அவர்கள் வருவதில்லை. இதுபற்றி அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, சென்ற சட்டமன்ற கூட்டத்திலே இதுபற்றி கூறப்பட்டது. யார் அந்தத் தவறினைச் செய்கிறார்கள் என்ற தகவல் அரசுக்கு வராத காரணத்தினால்தான் குறிப்பிட்ட யார் மீதும் நடவடிக்கை எடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. எந்த, ஆட்டோ ரிக்ஷாக்காரர் இப்படிச் செய்கிறார் என்று எழுத்து மூலமாகத் தெரிவித்தால் கண்டிப்பாக, கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. துரை முத்துசாமி: தலைவரவர்களே, ஆட்டோ ரிக்ஷாக்கள், டாக்சிகளுக்கு லைசென்ஸ்கள் வழங்குவது, நகராட்சிகளாலே மட்டும் கொடுக்கப்படுகிறது. அதுபோல், பேரூராட்சிகளாலே லைசென்ஸ் கொடுக்கத் திட்டம் உண்டா? திருச்சி போன்ற இடங்களிலும், டூரிஸ்ட் ஹோம் இருக்கிற பகுதியிலும், சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலும், அரசாங்கமே, 4, 5 டாக்சிகளை, ஆட்டோ ரிக்ஷாக்களை நிறுத்தி, உறுப்பினர்களுக்கு வசதி செய்ய ஏற்பாடு செய்யுமா? அடுத்து, ஆட்டோ ரிக்ஷாக்களைக் குறிப்பிட்ட இடத்திற்கு அழைத்தால் வராதவர்களைப்பற்றி எழுதி அனுப்பினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், எழுதி அனுப்பியும் இதுவரை ஒன்றுகூட நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை அரசு அறியுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் அப்படிப் புகாரைக் கொடுத்திருக்கின்றாரா என்பதைப்பற்றிய தகவல் எனக்கு வரவில்லை. வந்தால், கண்டிப்பாக இதுபற்றி பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும். சட்டமன்ற உறுப்பினர்கள் மோட்டார் வாகன சட்டத்திற்கு உட்பட்டவர்கள். மோட்டார் வாகன சட்டத்தை மீறுபவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும். 2 பேருக்குமேல் ஆட்டோவில் செல்ல முடியாது, டாக்சியிலும் அப்படித்தான் எண்ணிக்கை இருக்கிறது. உறுப்பினருடைய மற்ற ஆலோசனைகள் பரிசீலிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, ஆட்டோ ரிக்ஷாக்கள் லைசன்ஸ் வழங்கும்போது ஓட்டுநர்களுக்குத்தான் லைசன்ஸ் வழங்க வேண்டுமென்ற விதிமுறையை அரசு கைக்கொண்டிருந்தாலும் இப்பொழுது மதுரை, கோவை போன்ற பல பட்டணங்களில் தனியார் லைசன்சை வாங்கி, ஓட்டுநர்களை வைத்து ஓட்டி, ஓட்டுநர்களிடமிருந்து அதிக வாடகை வசூல் செய்கிறார்கள். ஆகவேதான் பயன் ஓட்டுநர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, இப்பொழுது யாரிடம் அந்த லைசன்ஸ் இருந்தாலும் ஓட்டுநர்களுக்கு இந்த லைசன்சை மாற்றிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1978 செப்டம்பர் 13

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, நடைமுறையிலிருந்து வருகின்ற கொள்கை ஓட்டுநர்களுக்கு மட்டுமே உரிமம் வழங்க வேண்டுமென்பதல்ல. ஓட்டுநர்களுக்கு முன்னுரிமை தரவேண்டுமென்பது நடைமுறையில் இருந்து வருகிறது. அதன் அடிப்படையில்தான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, ஆட்டோரிக்ஷா கட்டணத்தை அரசு எப்பொழுது நிர்ணயம் செய்தது? அது மாநிலம் முழுவதும் ஒரே சீரான நிலையில் இருக்கிறதா? அல்லது மாவட்டத்திற்கு மாவட்டம் மாறுபடுகிறதா? அதற்குரிய காரணத்தை விளக்க முடியுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, ஆட்டோ கட்டணம் 6-5-1975 ல் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. எல்லா பகுதிகளிலும் ஒரே அளவுக்குத்தான் இருக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 9.50]

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இரண்டு பேர்களுக்கு மேற்பட்டு போகக் கூடாது என்று இப்போது சட்டம் இருக்கிறது. அது நடைமுறையிலே இருந்தாலும் 3 பேர்களுக்கு மேல் இப்போது போய்க் கொண்டிருக்கிறார்கள். அது நல்லதுதான். ஆக்சிடெண்டும் ஏற்படுவதில்லை. மேலும் ஒரு பேமிலியில் மூன்று பேர்கள் இருந்தால் ஒரு ஆளுக்காக மட்டும் தனியாக ஒரு ஆட்டோ ரிக்ஷா வைப்பது சாத்தியம் இல்லை. 3 பேர்களை ஏற்றலாம். அதைத்தான் மக்களும் விரும்புகிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் இரண்டு பேர்களுக்கு மேல் போகக்கூடாது என்பதை மறுபரிசீலனை செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, ஆட்டோவில் இருவருக்கு மேல் சென்றால் விபத்துக்கள் அதிகமாகிறது என்று குறிப்பிட்டிருப்பதால்தான் நான் அவ்வாறு சொன்னேன். லாம்பிரட்டா கம்பெனியைப் பொறுத்தவரையில் புதிய ஆட்டோ ஒன்றை புதிய அமைப்பில் செய்யவிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அந்தப் புதிய அமைப்பு வந்தால் 4 பேர்கள் கூடச் செல்லலாம் என்று கூறி இருக்கிறார்கள். அப்படி வந்தால் அதன் அடிப்படையில் அரசு இதைப் பரிசீலிக்கும்.

திரு. மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டோ ரிக்ஷாக்கள் வழங்குகின்ற முறை, கூட்டுறவு முறையிலேயும், வங்கிகளில் லோன் பெற்றும், யூனியன் மூலமாகவும் வழங்கப்படுகின்றன. அப்படி வழங்கப்படுகின்ற

978 செப்டம்பர் 13]

அந்த ஆட்டோ ரிக்ஷாக்களை அந்த லோன் தீருவதற்கு முன்னாலே வேறு ஆட்களுக்கு விற்க உரிமை வழங்கப்பட்டிருக்கிறதா? அப்படி உரிமை வழங்கவில்லை என்று சொன்னால் குறிப்பிட்டுச் சொன்னால் அதன் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா? மேலும் கோவை, மதுரை நகரங்களில் உள்ள ஆட்டோக்கள் மீட்டர் இல்லாமல் ஓடுவதால் பொதுமக்களுக்குப் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. எனவே அவைகளுக்கு மீட்டர்கள் பொருத்தி பொதுமக்களுக்கு வசதி செய்து தரப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைப்பின் மூலம் வழங்கப்பட்டிருக்கின்ற ஆட்டோக்களை அவர்கள் வாங்கிய கடன்களை அடைத்த பிறகுதான் அந்த உரிமையை மாற்றமுடியும். அதை மீறி மாற்றி இருப்பார்களானால், உறுப்பினர் கொடுக்கின்ற தகவலின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். கோவை, மதுரை போன்ற நகரங்களில் மீட்டர் போடவில்லை. அதனால் பொதுமக்களுக்குத் தொல்லைகள் தருகிறார்கள் என்ற புகார் அரசாங்கத்திற்கும் வந்திருக்கின்றது. அதன்பேரில் கடுமையான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்து வருகிறது. அந்தக் குறைபாடுகளை விரைவிலே களைவோம் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது.

நாவலூர்-கொட்டப்பட்டியில் விவசாயப் பாலிடெக்னிக்.

* வினா எண் 192—திரு. கே. சௌந்தரராசன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாவலூர்-கொட்டப்பட்டியில் ஒரு விவசாய பாலிடெக்னிக் அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) & (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் நாவலூர் குட்டப்பட்டு என்னும் கிராமத்தில் குமரப்பெருமாள் பண்ணை அறிவியல் நிலையம் ஒன்று 1977-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26-ம் நாளிலிருந்து நடைபெற்று வருகிறது. விவசாயப் பாலிடெக்னிக் அமைக்கும் உத்தேசம் இல்லை.

திரு. கூ. ச. முருகேசன்: தலைவர் அவர்களே, இந்த விவசாய பாலிடெக்னிக் ஆரம்பிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அதற்காக எத்தனை ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

[1978 செப்டம்பர் 13

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, "விவசாய பாலிடெக்னிக்" ஆரம்பிக்கவில்லை. குமரப்பெருமாள் பண்ணை அறிவியல் நிலையம்தான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பாலிடெக்னிக் அல்ல. அந்த குமரப்பெருமாள் பண்ணை அறிவியல் நிலையத்திற்கு ஏறத்தாழ 150 ஏக்கர் எடுக்கப்பட்டிருக்கிறது.

காந்திபுரம்-காரவள்ளி சாலை.

* வினா எண். 193—திரு. வ. சின்னசாமி: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேந்தமங்கலம் தொகுதியிலுள்ள காந்திபுரம்—காரவள்ளி சாலைக்கு (சுமார் 11 கி.மீ.) கரும்பு வளர்ச்சி நிதியிலிருந்து தார் போடுவதற்கான திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம்.

திரு. வ. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆண்டுக்காலமாக அந்த சாலை சீர்படுத்தப்படாமல் இருந்து தற்போது அதைச் சீர்படுத்த உத்தரவிட்ட அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கரம்பக்குடி ஒன்றியப் பகுதியில் பாசன வசதி

* வினா எண். 194—திரு. த. புஷ்பராஜு: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதுக்கோட்டை மாவட்டம் கரம்பக்குடி யூனியன் பகுதியிலுள்ள உழவியல் கால்வாயிலிருந்து மேலும் 8,000 ஏக்கர்களுக்கு பாசன வசதியளிக்கும் திட்டத்திற்கான மதிப்பீடு பல ஆண்டுகளுக்கு முன் தயாரிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதனை துரிதப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) ஆம்.

(ஆ) இத் திட்டம் கைவிடப்பட்டது.

திரு. த. புஷ்பராஜு: பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், கரம்பக்குடி மிகவும் பின்தங்கிய யூனியன். இந்தத் திட்டத்தில் 8,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதால் அதை மறுபரிசிலனை செய்ய அரசு முன் வருமா?

1978 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே உள்ள கரம்பக்குடி யூனியன் பகுதியில் உள்ள ஓலவியல் கால்வாயில் இருந்து மேலும் 8,000 ஏக்கர்களுக்கு பாசன வசதி அளிக்கும் திட்டம் பரிசீலிக்கப்பட்டு, காவிரி மேட்டூர் திட்டத்தில் குறிப்பிட்டபடி முழுமையாக வரையறுக்கப்பட்டு துண்டு ஏதும் இல்லாததினால் கல்லணைக் கால்வாய்க்கும் ஓலவியல் நீட்சிக் கால்வாய்க்கும் இடையே புதுக் கால்வாய் வெட்டி துண்டு விழுந்த நிலங்களுக்குப் பதிலாக பாசன வசதி அளிக்கும் சாத்தியக்கூறு இல்லை என்று அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேறு மாற்றுத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு சிக்கனம் இல்லாததால் கைவிடப்பட்டு இருக்கிறது.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு சட்ட பேரவைத் தலைவரவர்களே, கரம்பக்குடி பகுதியிலே வாட்டர் பெட் மேலே இருக்கிறது என்று சொல்வார்கள். அப்படி இருக்கக்கூடிய நிலையிலே தண்ணீர் வசதி இல்லை என்று அரசுக்கு அறிவுரை கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே, இதை மறு பரிசீலனை செய்து அங்கே வாட்டர் பெட் மேலே இருக்கக்கூடிய காரணத்தால் அந்தத் திட்டத்தை மறுபடியும் எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே அரசுக்கு நிலத்தடி நீர் சம்பந்தமாக பரிசீலிக்கப்பட்டு அறிக்கை கொடுக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல் இருந்தால் மீண்டும் பரிசீலனை செய்ய எடுத்துக்கொள்ளலாம்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, தமிழ்நாட்டின் பாசனத் தேவை அதிகமாக இருப்பதால் இங்கே நம்முடைய ஒரு மணி நேரக் கேள்வி-பதில் நேரத்தில் பாசனத் தேவை குறித்தே அதிகமான வினாக்கள் கேட்கப்படுவதால், மாவட்ட அளவில் அரசு மாவட்ட வாரியாகப் பாசனக் கருத்தரங்குகள் உருவாக்கி, அவைகளில் எடுக்கப்படும் முடிவுகளின் அடிப்படையில் பாசனத் திட்டங்களை செயல்படுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, பொதுவாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் எவ்வளவு நீர் வரத்து இருக்கிறதோ, எவ்வளவு நீர் நமக்குக் கிடைக்கிறதோ, அவைகளை எல்லாம் அதிகமாக நாம் உபயோகித்துக் கொண்டு இருக்கிறோம். மேலும் பாசன வசதியை விஸ்தரிக்க வேண்டும், அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் சிறு பாசனத் திட்டங்கள் மூலமாகக் கூட பல ஏரிகள், குளங்கள் வெட்டுதல், அதன் மூலம் பாசன வசதியைப் பெருக்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு, விவசாயப் பெருங்குடி மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு வருகிறோம்.

[1978 செப்டம்பர் 13

மேலும் புதிதாக கட்டக்கூடிய அணைகள் திட்டம் எதுவும்
தற்போது தமிழக அரசின் உத்தேசத்தில் இல்லை. ஆனாலும்
எங்கெங்கே தேவையான இடங்களில் நீர்வரத்து இருக்கிறதோ,
எங்கெங்கே அதிகமான இடங்களில் அணைகள் கட்ட முடியுமோ,
அந்தந்த இடங்களில் அணைகள் கட்ட சாத்தியக்கூறுகள்
இருக்கின்றனவா என்பதைப் பரிசீலனை செய்து வருகிறோம்.

<u>திரு. நா. சுந்தரராஜ்;</u> தலைவரவர்களே, புதுக்கோட்டை
மாவட்டம் மிகவும் வறட்சியான மாவட்டம். சமீபத்தில் ஏற்பட்ட
வெள்ளம், புயல் காரணமாக பல குளங்கள் பாதிக்கப்பட்டு
இன்னும் சீர்படுத்தப்படாமல் இருக்கின்றன. காரணம்,
பொருளாதார வசதி இல்லை, அதிக நிதி ஒதுக்கப்படவில்லை என்று
சொல்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் அந்தக் மாவட்டத்தை
தனிச் சிறப்பாக எடுத்துக் கொண்டு, அந்த குளங்களை மறுபடியும்
சீர்திருத்தி அமைக்க அதிகமான நிதி ஒதுக்கீடு செய்து, அந்தப்
பகுதி மக்களுக்கு நிரந்தரமான வசதி செய்து கொடுக்க அரசு
நடவடிக்கை எடுக்குமா?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:</u> தலைவரவர்களே,
புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குளங்கள்
இருந்தனவோ அவைகளைச் சீர்படுத்தவும், எங்கெங்கே
திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு செம்மைப்படுத்தவும்
மாண்புமிகு உறுப்பினர் பல குளங்கள் இருக்கின்றன.
படவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். சரிவர சீர்திருத்தப்
என்று குறிப்பிட்டுச் சொல்வார்களானால், எந்தெந்த குளங்கள்
உடனடியாகத் நடவடிக்கை எடுக்க அரசு அது குறித்து
என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். தயாராக இருக்கிறது

<u>திரு. என். பழனிவேல்:</u> தலைவரவர்களே, அமைச்சர்
அவர்கள் பதில் சொல்கிறபோது புதிய அணைகள் கட்டக்கூடிய
நிலையில் தற்போது அரசின் பரிசீலனையில் எதுவும் இல்லை என்று
கூறினார்கள். என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய குதிரை
யாறு பச்சையாறு பகுதிகளில் அணைகள் கட்டுவதற்கான ஆய்வு
வேலைகள் தி.மு.க. ஆட்சிக்காலத்திலேயே முடிந்துவிட்டன,
தற்போது அது நிறுத்தப்பட்டு இருக்கிறது. குறிப்பாக நிதிநிலை
அறிக்கையில் கூட ரூ. 3 கோடி அந்தத் திட்டத்திற்காக அரசு
ஒதுக்கீடு செய்து வேலைகள் நிச்சயமாக நடைபெறும் என்று
சொன்னார்கள். ஆனால் இப்போது எதுவுமே இல்லை எனபதால்
அந்த குதிரையாறு திட்டம் கைவிடப்பட்டு விட்டதா என்று அறிய
விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:</u> பேரவைத் தலைவரவர்
களே, நான் புதிய திட்டங்கள் இல்லை என்று சொன்னேனே தவிர
ஏற்கனவே போடப்பட்ட திட்டங்கள் இல்லை என்று சொல்லவில்லை.

1978 செப்டம்பர் 13]

குதிரையாறு திட்டம் ஏற்கனவே போடப்பட்ட திட்டம்.
அதற்காக கடந்த ஆண்டிலே ஏறக்குறைய ரூ. 10,000 ஒதுக்கப்
பட்டு அது மீண்டும் பரிசீலனையில் இருந்து வருகிறது. ஆகவே
குதிரையாறு திட்டம் இன்னும் கைவிடப்படவில்லை என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> விணு நேரம் முடிவுற்றது.
மீதமுள்ள விணுக்களுக்கான விடைகள் நடவடிக்கைக் குறிப்பில்
அச்சிட்டுக் கொடுக்கப்படும்.

உதகையில் கடிகாரத் தொழிற்சாலை.

*விணு எண். 195—<u>திரு. போ. கோபாலன்:</u>
<u>திரு. என். கிட்டப்பா:</u> மாண்புமிகு கிராமத் தொழில்
அமைச்சர் கீழ்க்கண்ட விணுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) உதகையில் எச்.எம்.டி. கடிகார தொழிற்சாலை
நிறுவுவது குறித்து மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை
ஏதேனும் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

<u>மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:</u>

(அ) ஆம்.

(ஆ) இதன் விளைவாக பெங்களூர் எச்.எம்.டி.
நிறுவனத்தின் தொழில் நுணுக்கக் கூட்டுறவுடன் தமிழ்நாடு சிறு
தொழில் நிறுவனம் கடிகார உறுப்புக்களை ஒன்று இணைத்து
ஆண்களுக்கான கைக்கடிகாரத் தொழிற்சாலை ஒன்றை உதகையில்
நிறுவ, 16-3-1977 தேதியிட்ட தொழில் துறை அரசாணை எண்
378-ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவு பால் வழங்கு சங்கங்கள்.

*விணு எண் 196—<u>திரு. கே. உச்சி:</u> மாண்புமிகு கிராமத்
தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட விணுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீலகிரி மாவட்டத்திலுள்ள பால் வழங்கு கூட்டுறவு
சங்கங்கள் எத்தனை?

(ஆ) கூட்டுறவு சங்க அங்கத்தினர்களிடமிருந்து பெறும்
பாலின் விலை என்ன?

(இ) சங்கங்கள் விற்பனை செய்யும் பாலின் விலை என்ன?

எண் 195—200 விணுக்களும், அவற்றுக்கான விடைகளும்,
பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அச்சிடப் பெற்றுள்ளன.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:

(அ) 21 பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.

(ஆ) கூட்டுறவு சங்க அங்கத்தினர்களிடமிருந்து பெறும் பாலின் விலை பாலில் உள்ள கொழுப்புச் சத்து மற்றும் இதர சத்துக்களின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது. உதகை கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்தில் தற்போது 6% கொழுப்புச் சத்தும் 8.5% இதர சத்துக்களும் உள்ள ஒரு லிட்டர் பாலின் விலை ரூ. 1.73-ம் 3% கொழுப்புச் சத்தும் 7.5% இதர சத்தும் உள்ள ஒரு லிட்டர் பாலுக்கு விலை ரூபாய் 1.16ம் வழங்கப்படுகிறது.

(இ) 6% கொழுப்புச் சத்தும், 8.5% இதர சத்துக்களும் உள்ள ஒரு லிட்டர் பாலின் விலை ரூ. 1.81க்கும் 3% கொழுப்புச் சத்தும் 7.5% இதர சத்துக்களும் உள்ள ஒரு லிட்டர் பாலின் விலை ரூபாய் 1.25-ல் இருந்து ரூபாய் 1.50 வரையும் விற்கப்படுகிறது.

அரசு மற்றும் உள்ளாட்சி மன்ற ஊழியர்களுக்கு மருத்துவ வசதி.

*வினா எண் 197—திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரூ. 300-க்கு மேல் வருமானமுள்ள அரசு ஊழியர்கள் மற்றும் ஸ்தல ஸ்தாபன ஊழியர்கள் அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோருக்கு அரசு மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெறுவதற்கான கட்டணங்களை உயர்த்தி புதிய உத்தரவு போடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:

(அ) ஆம்.

(ஆ) இதன் * விவரங்கள் அவை முன் வைக்கப்படுகின்றன.

தஞ்சை ராஜாமிராஸ்தார் மருத்துவமனை.

*வினா எண் 198—திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் R.M.H. மருத்துவமனையிலிருந்த நூற்றுக் கணக்கான படுக்கைகள் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

* 697-699ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:

(அ) ஆம்.

(ஆ) தஞ்சை ராஜா மிராசுதார் மருத்துவமனையில் இருந்து வந்த நெருக்கடியை சமாளிக்க நூறு (100) படுக்கைகள் ராஜா மிராசுதார் மருத்துவமனையிலிருந்து தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பிப்ரவரி 1977-ல் மாற்றம் செய்யப் பட்டுள்ளன.

ஆம்புலன்ஸ் வண்டிகளுக்கான கட்டணங்கள்.

*வினா எண் 199—திரு. சி. கோவிந்தராசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நோயாளிகளை அவசர சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப் படும் ஆம்புலன்ஸ் வண்டிகளில் கட்டணம் விதிப்பதிலிருந்து ஏழை மக்களுக்கு விதிவிலக்கு அளிக்கும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:

இல்லை.

கேரளத்திற்கு கால்நடைகள் கொண்டு செல்லல்.

*வினா எண் 200—திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையம் மாட்டு சந்தை வழியாக ஏராளமான கால்நடைகள் கேரளாவுக்கு கடத்தப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:

(அ) மேலப்பாளையம் கால்நடைச் சந்தையில் வாங்கப் பட்ட கால்நடைகள் கேரள மாநிலத்திற்குக் கொண்டு செல்லப் படுகின்றன.

(ஆ) இம் மாநிலத்திலிருந்து பிற மாநிலங்களுக்கு கால் நடைகளை கொண்டு செல்ல சட்டமியற்றுவது குறித்து எல்லா அம்சங்களையும் கருத்திற்கொண்டு அம்மாதிரியான தடை விதிக்க அவசியம் இல்லை என முடிவு செய்யப்பட்டது.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

மாநில மருத்துவ கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பில் தேர்வு பெற்றவர்கள்.

வினா 351—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1973-முதல் 1977 ஏப்ரல் வரை மாநிலத்தில் உள்ள மருத்துவக் கல்லூரியில் தேர்வு பெற்று எம். எஸ்., எம். டி., பட்டம் பெற்ற டாக்டர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுள் அரசு மருத்துவ மனைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர்கள்?

(இ) எத்தனை பேர்களுக்கு தனியாக மருத்துவமனை வைப்பதற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) அரசுப் பணிகளிலிருந்தவாறே வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளவர்கள் எத்தனைபேர்?

விடை:—

(அ) தமிழ்நாடு மருத்துவப் பணியில் ஏற்கெனவே சேர்ந்து 1973-77-ல் பட்ட மேற்படிப்பு படித்தவர்கள் 432. அரசுப் பணியில் சேராது தனியாகப் படித்தவர்கள் 209. மொத்தம் 641.

(ஆ) தனியாக பட்ட மேற்படிப்பு படித்து முடித்தபின் அரசுப் பணியில் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை 52.

(இ) 1977வரை தமிழ்நாடு தொழில்துறை முதலீடு நிறுவனத்தால் கடன் வழங்கப்பட்ட மொத்த மருத்துவர்கள் எண்ணிக்கை 30.

(ஈ) 1973-77-ல் வெளிநாடுசென்றவர்களில் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு தகுதி உடையவர்கள் எண்ணிக்கை 124.

வரட்டாற்றின் குறுக்கே மேல்நிலைப்பாலம்

வினா 352—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பழனி வட்டத்திலுள்ள பால சமுத்திரம் போகும் வழியில் வரட்டாற்றுக்கு குறுக்கே மேல் நிலைப் பாலம் கட்டும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

விடை: —

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஆனைமலை வட்டத்தில் மின்திட்டம்.

வினா 353—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம் ஆனைமலைப்பகுதியிலுள்ள கருமலை மின் சாரத் திட்டம் எப்போது துவங்கும்?

விடை:

கருமலை மின்சாரத் திட்டம் என்ற பெயரில் மின்சாரத் திட்டம் ஒன்றும் இல்லை. என்றாலும் ஆனைமலைப் பகுதியில் கருமலை எஸ்டேட் அருகில் 'மேல் நீரார்' மின் திட்டம் என்ற ஒரு மின் திட்டம் உள்ளது. இம்மின் திட்டத்தை மின்வாரியம் ஆய்வுக்காக எடுத்துக் கொண்டுள்ளது.

கீழ் மாலியங்கையில் தனியார் பள்ளி.

வினா 354—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், கீழ் மாலியங்கையில் உள்ள தனியார் பள்ளிக் கூடத்தினை ஒன்றியம் எடுத்துக் கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பள்ளிக் கூடத்தில் வேலை செய்த ஆசிரியர்களும் சேர்த்து எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளார்களா?

விடை:

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

வாடகை சைக்கிள் ரிக்ஷா விடுவதற்கான உரிமம்.

வினா 355—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாடகை சைக்கிள் ரிக்ஷா விடுவதற்கான அனுமதியினை நீக்கி விடுவதற்கு அரசு ஆலோசித்து வருகின்றதா?

விடை:

இல்லை.

[1978 செப்டம்பர் 13

காவல் நிலையக் கட்டிடங்கள்.

வினா 356—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மாநிலத்தில் எத்தனை காவல் நிலையங்கள் வாடகை கட்டிடங்களில் உள்ளன?

(ஆ) மொத்த வாடகை ஆண்டுக்கு எவ்வளவு கொடுக்கப் படுகிறது?

விடை:

(அ) 324 காவல் நிலையங்களும், 85 புறக் காவல் நிலையங் களும் வாடகைக் கட்டிடங்களில் உள்ளன.

(ஆ) காவல் நிலையங்களுக்காக ரூபாய் 4,07,329.80ம் புறக் காவல் நிலையங்களுக்காக ரூபாய் 57,793·20—ம் ஆண்டொன்றுக்கு வாடகையாகக் கொடுக்கப்படுகிறது.

வினா 357—திரு.யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் தொகுதியிலுள்ள பணக்குடி காவல் நிலையக் கட்டிடத்தைப் புதுப்பிக்கும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தற்போது அத்திட்டத்தின் நிலை என்ன?

விடை:

(அ) திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் தொகுதியிலுள்ள பணக்குடி காவல் நிலையக் கட்டிடத்தைப் புதுப்பிக்கும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

புதிய காவல் நிலையங்கள்.

வினா 358—திரு. கா. அப்புனு கவுண்டர்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா

(அ) தர்மபுரி மாவட்டத் தலைநகரான தர்மபுரியில் மற்றொரு காவல் நிலையம் அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை:

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1978 செப்டம்பர் 13]

வினா 359—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) வட சென்னை புறநகர் பகுதி வியாசர்பாடியில் காவல் நிலையம் ஒன்று அமைக்கும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை:

(அ) வட சென்னை புறநகர் பகுதி வியாசர்பாடியில் தற் சமயம் பி.3 வியாசர்பாடி காவல் நிலையம் ஒன்று இயங்கி வரு தால், மேலும் ஒரு காவல் நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வினா 360—திரு. டி. கே. கபாலி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சென்னையிலுள்ள சாந்தோம், பட்டினப்பாக்கம், சீனிவாச புரம், முள்ளிக்குப்பம் .மந்தவெளிப்பாக்கம் இவற்றின் மத்தியில் காவல் நிலையம் அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

விடை:

தற்சமயம் இல்லை.

வினா 361. திரு. கே. உச்சி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் புதிய காவல் நிலையங்கள் ஏற் படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எத்தனை காவல் நிலையங்கள், எந்தெந்த இடங்களில் ஏற்படுத்தப்படவிருக்கின்றன?

விடை:

(அ) தற்சயம் இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வேலை வாய்ப்பு அலுவலங்களில் பதிவுசெய்துள்ளவர்கள்.

வினா 362—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் வேலைத் தேடித் தரும் அலுவலகத்தில் இதுவரை பதிவு செய்துள்ளவர்கள் எத்தனை பேர்?

(ஆ) 1976, 1977—ம் ஆண்டுகளில் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வகை செய்யப்பட்டது?

விடை:

(அ) 1978 ஜூன் 30-ந் தேதிய நிலவரப்படி 55,374 பேர்கள்.

(ஆ) 3,540 பேர்கள்.

வினா 363—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977 டிசம்பர் முடிய வேலைவாய்ப்பு தேடித்தரும் அலுவலகங்களில் வேலைக்கோரிப் பதிவு செய்திருப்போரின் எண்ணிக்கை என்ன?

(ஆ) அவர்களில் 1977 ஆம் ஆண்டில் எவ்வளவு பேர்களுக்கு வேலை தேடிக் கொடுக்கப்பட்டது?

விடை:

(அ) 9,25,842 பேர்கள்.

(ஆ) 26,873 பேர்கள்

சென்னையில் கூட்டுறவு முறையில் காய்கறி விற்பனை.

வினா 364.—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் கூட்டுறவு முறையில் காய்கறி விற்பதற்கான திட்டங்கள் ஏதேனும் அரசிடம் உண்டா?

விடை:

சென்னையில் திருவல்லிக்கேணி கூட்டுறவு நகர வங்கியின் காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி உள்ளிட்ட 25 கிளைகளிலும் பூங்கா நகர கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கத்தின் 3 கிளைகளிலும் கூட்டுறவு முறையில் காய்கறி விற்பனை நடைபெற்று வருகிறது.

காவலர் குடியிருப்புகள்

வினா 365—திரு. மு. அரங்கநாதன்: மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவல்லிக்கேணி தொகுதியிலுள்ள ஐஸ் ஹவுஸ் காவலர் குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனை மாற்றிப் புதிய கட்டடம் கட்ட அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) இல்லை எனில், புதிதாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

விடை:

(அ) மற்றும் (ஆ) திருவல்லிக்கேணி ஐஸ் ஹவுஸ் பகுதியில் தற்போது உள்ள பழைய காவல் குடியிருப்புக்களை இடித்துப் புதிதாகக் கட்டுவது குறித்து, காவல் துறை தலைவர், பொதுப்பணித்துறை செயற் பொறியாளரிடம் தொடர்பு கொண்டுள்ளார். இது பற்றி முழு விபரம் கிடைத்த பிறகு, மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்.

வினா 366—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலையில் உள்ள ஜம்னாத்தூரில் காவலர் குடியிருப்புக் கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை:

(அ) மற்றும் (ஆ) வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலையில் உள்ள ஜம்னாத்தூரில் காவலர் குடியிருப்புக் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் ஏதும் இல்லை. இருப்பினும் ஜம்னாத்தூரில் நில ஆர்ஜிதம் செய்து காவல் குடியிருப்புகள் மற்றும் காவல்நிலையம் கட்டுவதற்கு ஏற்ற இடம் காவல் துறையினரால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

புகழூர் நீரேற்றுப் பாசனத் திட்டம்.

வினா 367—திரு. கு. வடிவேல்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் தொகுதியில் உள்ள புகழூர் நதி நீரேற்றுப் பாசனத் திட்ட மறு ஆய்வுக்கென அமைக்கப்பட்ட, உயர்மட்டக்குழுவின் அறிக்கை அரசுக்குத் தாக்கல் செய்தாகிவிட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை:

(அ) ஆம்.

(ஆ) உயர் மட்டக் குழுவின் அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

மின் வாரியத்தால் வாங்கப்பட்ட டிரான்ஸ்பார்மர்கள்

வினா 368—திரு. கு. ரமணி: மற்றும் திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொழில் அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடன் பெற்று அபெக்ஸ் கம்பெனியிடமிருந்து 7 டிரான்ஸ்பார்மர்களை மின் வாரியம் வாங்கியது உண்மையா?

(ஆ) அவற்றின் விலை என்ன?

(இ) இதற்காகக் கொடுக்கப்பட்ட வட்டித்தொகை எவ்வளவு?

விடை:

(அ) ஆம்.

(ஆ) ரூ. 72,057.44

(இ) ரூபாய் 42,423·40/— இதை ஐந்து ஆண்டுக் காலங்களில் வட்டியாக வங்கிக்குச் செலுத்த வேண்டும்.

சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஸ்கூட்டர்கள் வழங்கல்

வினா 369—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1976-77-ம் ஆண்டில் அமைச்சர் கோட்டாவில் இருந்து மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஸ்கூட்டர்கள் எத்தனை வழங்கப்பட்டன?

விடை:

அமைச்சர் கோட்டாவில் இருந்து சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு கீழ்க்கண்டவாறு ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டுள்ளன.

(1) 1976 .. .. —

(2) 1977 9

மசினக்குடி விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன்கள்

வினா 370—திரு. கே. உச்சி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1977-78-ல் நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதி மசினக்குடியிலுள்ள விவசாயிகளுக்கு பம்பு செட் வாங்கவும் கிணறு வெட்டவும் கொடுக்கப்பட்டுள்ள கூட்டுறவுக் கடன் எவ்வளவு?

(ஆ) எத்தனை பேர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது?

விடை:

(அ) மற்றும் (ஆ) கூடலூர் நிலவள வங்கி, 1977-78 ஆம் ஆண்டில் மசினக்குடி பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு சிறு பாசனக் காரியங்களுக்கு எந்தவிதக் கடனும் வழங்கவில்லை.

மானாமதுரையில் தொழிலாளர் நல மருத்துவமனை

வினா 371—திரு. வ. மு. சுப்பிரமணியன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மானாமதுரையில் தொழிலாளர் நல மருத்துவமனை (E.S.I.) ஏற்படுத்த அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

விடை:

இல்லை.

திருமேனி ஏரி இறவைப் பாசனத்திட்டம்

வினா 372—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மன்னார்குடி தாலுகாவில் உள்ள திருமேனி ஏரியில் இறவைப் பாசனத்திட்டத்தை அமல்படுத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

விடை:

திருமேனி ஏரியில் இறைவைப் பாசனத் திட்டம் அமைக்கும் உத்தேசம் இல்லை.

நெல் கொள்முதல்

வினா 373—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1976-77-ம் ஆண்டு அரசு கொள்முதல் செய்த நெல் அளவு எவ்வளவு?

(ஆ) கொள்முதலுக்காக அரசு செலவிட்ட தொகை எவ்வளவு?

விடை:

(அ) 1976-77-ம் ஆண்டு அரசுகொள்முதல் செய்த நெல்லின் அளவு 3,00,203 மெட்ரிக் டன்கள்.

(ஆ) கொள்முதலுக்காக அரசு செலவிட்ட தொகை ரூபாய் 25,52,36,018/-.

[1978 செப்டம்பர் 13

பரங்கிப்பேட்டையில் சலவைத் தொழிலாளர்களுக்கு டோபிகானா கட்டுதல்.

வினா 374—திரு. வி. ரகுராமன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிதம்பரம் வட்டம், பரங்கிப்பேட்டையில் சலவைத் தொழிலாளர்களுக்கான டோபிகானா கட்டும் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை:

(அ) ஆம்.

(ஆ) செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும்.

தஞ்சையில் பருத்தி சாகுபடி

வினா 375—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டத்தில் பருத்தி சாகுபடியை ஊக்குவிக்க அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

விடை:

ஒரு விவர * அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரைப்பட விழாவில் பங்கேற்ற நாடுகள்

வினா 376—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இந்த ஆண்டு சென்னையில் நடைபெற்ற திரைப்பட விழாவில் மொத்தம் எத்தனை நாடுகள் பங்கேற்றன?

(ஆ) எந்தெந்த மொழிப்படங்கள் திரையிடப்பட்டன?

விடை:

(அ) இந்தியா நாட்டைச் சேர்ந்த மொத்தம் 32 நாடுகள் பங்கேற்றன.

(ஆ) ஏழு இந்திய மொழிப்படங்களும் இதர 31 நாடுகளின் மொழிப்படங்களும் திரையிடப்பட்டன.

*699-700ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

1978 செப்டம்பர் 13]

மாயூரம் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்களுக்கு அரசு மான்யம்

வினா 377—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1976-77, 1977-78ஆம் ஆண்டுகளில் மாயூரம் ஊராட்சி ஒன்றியம் பள்ளிக்கட்டடங்கள் கட்ட அரசு அளித்த மான்யத் தொகை எவ்வளவு?

விடை:

1976-77-ல் ரூ. 10,000-மும், 1977-78-ல் ரூ. 12,064-ம் அரசு, மாயூரம் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்கள் கட்ட மான்யத் தொகைகளாக அளித்துள்ளது.

முதல் நிலைக் காவலர்கள் தேர்வு

வினா 378—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தமிழ் நாட்டில் முதல் நிலைக் காவலர்கள் தேர்வு 4 மாதங்களுக்கு முன்பு நடந்ததா?

(ஆ) இதில் தேர்வு பெற்றவர்கள் எத்தனை பேர்?

விடை:

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

தமிழ்நாட்டில் பயறு ஆய்வு நிலையம்

வினா 379—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் பயறு ஆய்வு நிலையம் அமைத்திடும் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கு அமைக்கப்படும்?

விடை:

ஒரு விவர * அறிக்கை அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

*700-ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1978 செப்டம்பர் 13

பதிவு பெற்ற சித்த வைத்தியர்கள்

வினா 380 —திரு. மு. அரங்கநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் பதிவு பெற்ற சித்த வைத்தியர்கள் தற்போது எத்தனை பேர்கள்?

(ஆ) பதிவு பெறாதோர் எத்தனை பேர்கள்?

(இ) பதிவு பெறாத சித்த வைத்தியர்களைப் பதிவு செய்து கொள்வது குறித்து அரசு புதிய உத்தரவு ஏதும் பிறப்பித்துள்ளதா?

விடை:

(அ) 16,499

(ஆ) இந்த விவரங்கள் அரசிடம் இல்லை.

(இ) இல்லை.

சோளத்திலிருந்து சமையல் எண்ணெய் தயாரிப்பு

வினா 381—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சோளத்திலிருந்து சமையல் எண்ணெய் தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை:

இல்லை.

விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள்

வினா 382.—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நமது மாநிலத்தில் எத்தனை விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன?

(ஆ) அதை அதிகப்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

விடை:

(அ) விசைத்தறிக்கென தனிக் கூட்டுறவுச் சங்கம் இதுவரை அமைக்கப்படவில்லை.

(ஆ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

1978 செப்டம்பர் 13]

கருங்குளம் கிராம அரிசனங்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கல்.

வினா 383.—திரு. ஆர். சி. சுப்பிரமணியம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி யூனியன் கருங்குளம் கிராம அரிசனங்களுக்கு (சக்கிலியர்) வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதா?

விடை:

இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி யூனியன் கருங்குளம் கிராம அரிசன மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நிலத்தை கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரைவில் பட்டா வழங்க ஆவன செய்யப்படும்.

தருமபுரி மாவட்டத்தில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு

வினா 384.—திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1977—78-ம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் எத்தனை பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது?

(ஆ) 1978-79 இல் எத்தனை பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

விடை:

(அ) 2,007 பம்பு செட்டுகள்.

(ஆ) 4,200 பம்பு செட்டுகள்.

அரசுப் பரிசு பெற்ற திரைப்படங்கள்.

வினா 385.—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1977-ம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் பரிசுப் பெற்ற திரைப் படங்கள் எத்தனை?

விடை:

திரைப்படங்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் 1976-77-ம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட மூன்று திரைப்படங்களுக்கு ரூ. 1 லட்சம் வீதம் உதவித் தொகை வழங்கப்பட்டது.

கலப்படக் குற்றத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள்.

வினா 386.—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1977-78 ஆம் ஆண்டில் கலப்படக் குற்றத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை?

(ஆ) அவற்றில் தண்டனையில் முடிந்த வழக்குகள் எத்தனை?

விடை:

(அ) 8,519 வழக்குகள்.

(ஆ) 5,839 வழக்குகள்.

சென்னை அடையாறில் பள்ளி வாசலுக்கு இடம் ஒதுக்கீடு

வினா 387.—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை அடையாறில் உள்ள இந்திரா நகரில் வாழும் முஸ்லீம்கள் தொழுகை நடத்த பள்ளிவாசல் அமைக்க வீட்டு வசதி வாரியப்பகுதியில் இடம் ஒதுக்கிக்கொடுக்கும்படி மனுச் செய்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் பேரில் எடுத்த நடவடிக்கை என்ன?

விடை:

(அ) ஆம்.

(ஆ) இந்திரா நகர் முஸ்லீம் ஜமாத் மதரஸாவிற்கு (The Muslim Jamatk Indira Nagar Madharasa) ஒரு மனை ஒதுக்கீடு செய்ய தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் உத்தேசித்துள்ளது. இதற்காகச் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. வாரியக் கூட்டத்தில் ஒப்புதலைப் பெற்ற பின்னர் மேற்கூறிய நிறுவனத்திற்கு ஒரு மனை வழங்க வீட்டு வசதி வாரியம் நடவடிக்கை எடுக்கும்.

உடன்குடி ஒன்றியப்பகுதியில் வெற்றிலை பயிரிடக் கடன்கள்.

வினா 388—திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நெல்லை மாவட்டம், உடன்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகளுக்கு அந்தப் பகுதியிலுள்ள கூட்டுறவு விவசாயக் கடன் நாணயச் சங்கங்களின் மூலம் 1972 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு முடிய வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு?

(ஆ) நடப்பு ஆண்டில் மேற்படி விவசாயிகளுக்குத் தொடர்ந்து கடன் வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை:

(அ) ரூபாய் 1.11 இலட்சம்

(ஆ) ரூபாய் 1.29 இலட்சம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பொறியியல் கழகங்களில் பணியாற்றும் பொறியியல் பட்டதாரிகள்.

வினா 389.—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கழகங்கள் எத்தனை?

(ஆ) இவற்றில் பணியாற்றும் பி.இ., மற்றும் ஐ.டி.ஐ. பட்டம் பெற்றவர்கள் எத்தனை பேர்?

விடை:

(அ) தமிழ்நாட்டில் உள்ள போக்குவரத்துப் பொறியியல் கழகங்கள் மொத்தம் ஐந்து ஆகும்.

(ஆ) இவற்றில் பணியாற்றும் பி. இ., மற்றும் ஐ.டி.ஐ. பட்டம் பெற்றவர்கள் முறையே 68 மற்றும் 1,727 ஆவார்கள்.

பல்லவன் பொறியியற் கழகத்தில் பணியாற்றும் பி.இ., பட்டதாரிகள்

வினா 390.—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பல்லவன் என்ஜினியரிங் கார்ப்பரேஷனில் பி.இ. படித்தவர்கள் எத்தனை பேர்கள் உள்ளார்கள்?

(ஆ) இவர்களிடம் வாங்கிய பங்கு தொகை எவ்வளவு?

(இ) இவர்கட்கு அளிக்கப்படும் அடிப்படை ஊதியம் எவ்வளவு?

விடை:

(அ) 31.7.78 அன்றையப்படி 15 பி.இ., பட்டதாரிகள் பல்லவன் பொறியியற் கழகத்தில் பணிபுரிந்து கொண்டிருக்கின்றனர்.

(ஆ) அவர்கள் ஒவ்வொருவரிடமிருந்து கடன் பத்திரப் பங்கு தொகையாக ரூ. 5,000 பெறப்பட்டுள்ளது.

(இ) அவர்கள் ஒவ்வொருவரும் வேலை பயிலுபவராக இருக்கும்போது மாதம் ஒன்றுக்கு ரூ. 400 உதவித் தொகையாக அளிக்கப்படுகின்றது. அவர்களை Foreman நிரந்தரப் பதவியில் ஏற்றுக்கொண்டவுடன் ரூ. 360-15-510 என்ற சம்பள விகிதத்தில் சம்பளமும் மற்றப் படிகளும் அளிக்கப்படுகின்றன.

கூட்டுறவுத் துறை பழரசத் தொழிற்சாலை.

வினா 391.—திரு. வி. சின்னசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கொல்லி மலையில் கூட்டுறவுத் துறையில் ஒரு பழரசத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை:

அந்தகைய திட்டம் ஏதும் இல்லை.

Inquiry into reasons for suicides.

Q. No. 392.—Thiru N. Kittappa: Will the honourable the Chief Minister be pleased to state:

(a) Whether any inquiry into the pattern of and reasons for suicides have been undertaken in Madras City in recent times; and

(b) If so, the details thereof?

விடை:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

Hostels for Harijan Students at Kalasapakkam.

Q. No. 393.—Thiru N. Kittappa: Will the honourable the Minister for Harijan Welfare be pleased to state:

The steps taken to open a hostel for harijan students at Kalasappakkam?

விடை:

27.7.78 அன்று கலசப்பாக்கத்தில் 30 மாணவர் தங்கிப் பயிலும் வகையில் ஓர் அரிசன மாணவர் விடுதி திறக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

Incentives for betelnut cultivation.

Q. No. 394.—Thiru N. Kittappa: Will the honourable the Minister for Agriculture and Irrigation be pleased to state:

The details of the incentives offered for the betelnut cultivation in this state during the calendar years 1976 and 1977 to the private sector?

விடை:

ஏதும் இல்லை.

Raising of betel vines.

Q. No. 395.—Thiru N. Kittappa: Will the honourable the Minister for Agriculture and Irrigation be pleased to state:

The details of steps taken to increase the intensive and extensive cultivation of betel leaves in this State during the year 1976–77?

விடை:

தமிழகத்தில் சில குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் வெற்றிலை சாகுபடி அனுபவம் மிக்கவர்களால் மட்டுமே செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் தமிழகத்தில் வெற்றிலை 6,031 ஹெக்டேர் பரப்பளவில் உற்பத்தியாகிறது. இது தற்போதைய தேவைக்குப் போதுமானதாக உள்ளது. வெற்றிலைப் பயிரைத் தீவிரமாகவும் பரவலாகவும் பயிர் செய்ய அரசுத் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை. வெற்றிலைச் சாகுபடியை ஊக்குவிக்க வர்த்தக வங்கிகளினாலும், கூட்டுறவு நிறுவனங்களினாலும் கடன்கள் வழங்கப் படுகின்றன.

Q. No. 396.—Thiru N. Kittappa: Will the honourable the Minister for Agriculture and irrigation be pleased to state:

(a) Whether any Research has been made into the betel leaves cultivation in this State in recent times; and

(b) If so, the details thereof?

விடை:

(அ) மற்றும் (ஆ) ஒரு விவர* அறிக்கை அவையின்முன் வைக்கப் பட்டுள்ளது.

Q. No. 397.—Thiru N. Kittappa: Will the honourable the Minister for Agriculture and Irrigation be pleased to state:

The details of the incentives given to the betel leaves cultivation in this State during the Calendar years 1976 and 1977.

விடை:

தமிழகத்தில் சுமார் 6,031 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகிற வெற்றிலைச் சாகுபடிக்கு அரசு சலுகை ஏதும் 1976, 1977-ம் ஆண்டுகளில் அளிக்கப்படவில்லை. பொதுவுடைமையாக்கப்பட்ட வங்கிகளும், கூட்டுறவு வங்கிகளும் மட்டுமே பயிர் கடன்கள் வழங்குகின்றன.

---

*701-702-ம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

சென்ற ஆண்டில் நவம்பரில் அடித்த புயல் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகளுக்கு வெற்றிலைக் கொடிக்கால் மறுபடியும் ஏற்படுத்த ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 500 மான்யம் தர அரசு ஆணையிட்டது. அதன்படி 5,455 விவசாயிகளுக்கு 2045.53 ஹெக்டேர் பரப்பளவில் வெற்றிலைக் கொடிக்காலை மறுபடியும் ஏற்படுத்த ரூபாய் 10.27 இலட்சம் மானியமாகத் தரப்பட்டது.

Workers engaged in tanneries.

Q. No. 398.—Thiru N. Kittappa: Will the honourable the Minister for Labour be pleased to state:

(a) the total number of tannery workers in this state, district-wise?

(b) the number among them females and males; and

(c) the number of children employed in them.

Answer: (a), (b), and (c) : A statement * is placed on the table of the House.

உச்சவரம்பு சட்டத்தில் உள்ள உபரி நிலம்.

வினா 399.—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட உபரி நிலம் எவ்வளவு: மாவட்ட வாரியாக?

விடை:

நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் 31.5.78 வரை மொத்தம் 87,586 ஏக்கர் உபரி நிலங்கள் எடுக்கப்பட்டன. மாவட்ட வாரியான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

மாவட்டம். (1)	நிலத்தின் அளவு. (2)
(1) செங்கல்பட்டு	4,952
(2) வட ஆற்காடு ..	1,062
(3) தென் ஆற்காடு	3,645
(4) திருச்சிராப்பள்ளி	7,646
(5) புதுக்கோட்டை	4,109
(6) தஞ்சாவூர் ..	26,061

*702-703-ம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

மாவட்டம். (1)	நிலத்தின் அளவு. (2)
(7) கோயம்புத்தூர்	6,988
(8) சேலம்	538
(9) தர்மபுரி	1,023
(10) மதுரை	9,945
(11) இராமநாதபுரம்	7,633
(12) திருநெல்வேலி } (13) கன்னியாகுமரி }	13,984
	87,586

அரிசனங்களுக்கு இலவச வீடுகள்.

வினா 400—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரிசனங்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ், வீடுகள் கட்டுவதற்கு உரிய தொகையைக் கொடுத்து அரிசனங்கள் தாங்களாவே வீடு கட்டிக்கொள்ள அனுமதிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை:

அரிசனங்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ், வீடுகள் கட்டுவதற்கு உரிய தொகையைக் கொடுத்து அரிசனங்கள் தாங்களாகவே வீடுகட்டிக்கொள்ள அனுமதிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10-00]

(2) ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) வானொலியில் பேரவை நிகழ்ச்சிபற்றித் தவறாக அறிவிக்கப்பெற்றது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி: சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, இன்று காலை வானொலியில் 6½ மணி செய்தியில் தொழிலாளர்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் ஓட்டெடுப்பின் மூலம் தோல்வியுற்றது என்று அறிவித்தார்கள். ஆனால் ஓட்டெடுப்பு நடைபெறவில்லை; அவர்களே திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். அப்படி இருக்கும்போது..

திரு. சி. ஆறுமுகம்: உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைச் சொல்லுகிறார்கள். தீர்மானம் திரும்பப் பெறப்படவில்லை. குரல் ஓட்டு மூலம் நிராகரிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓட்டெடுப்பு என்றால் 'வாய்ஸ் ஓட்' கூடச் சொல்லலாம். ஓட்டெடுப்புக்கு விட்டால் தான் ஓட்டெடுப்பு என்று சொல்லவேண்டுமென்றில்லை; வாய்ஸ் ஓட்டையும் சொல்லலாம். ஆகவே, அதில் தவறு ஒன்றும் இல்லை.

(திரு. சி. ஆறுமுகம் உட்கார்ந்துகொண்டே ஏதோ பேசினார்.)

உறுப்பினர் திரு. சி. ஆறுமுகம், ஏதாவது சொல்லவேண்டுமென்றால் என்னுடைய அனுமதியைப்பெற்று' சொல்ல வேண்டும். சும்மா உட்கார்ந்து கொண்டே பேச வேண்டாம்.

(ஆ) உடுக்குறியிட்ட வினாக்கள் அனைத்தும் எடுத்துக் கொள்ளப்பெற்றுப் பதிலளிக்கப்பெற வேண்டுமென்பது குறித்து.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவரவர்களே, தினந்தோறும் 25 கேள்விகளைப் போட்டு, 19 அல்லது 20 கேள்விகளுக்கு மட்டும் பதிலளிக்கப்படுகிறது; மீதியை அச்சிட்டுத் தருவதாகச் சொல்கிறீர்கள். அப்படி அச்சிட்டும் எங்களுக்குத் தரப்படவில்லை. அச்சிட்டுத் தந்தாலும் எங்களுக்கு அதில் கஷ்டம் இருக்கிறது. ஏனென்றால் அதற்கான துணை வினாக்கள் கேட்டு, தகுந்த விளக்கம் பெற வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, என்னுடைய ஆலோசனை என்னவென்றால் 20 கேள்விகளை மட்டும் போட்டு, அவைகளுக்குக்கான பதில்களையும் விளக்கங்களையும் நாங்கள் பெற ஏற்பாடு செய்யுங்கள். இல்லை என்றால், 25 கேள்விகள் போடுவதாக இருந்தால், துணை வினாக்களை சுருக்கி, எல்லாக் கேள்விகளுக்கும் அவையிலே பதில் அளிக்க ஏற்பாடு செய்யுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை மிக மிக வரவேற்கத்தக்க ஒன்று. நிறைய கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட வேண்டியிருக்கிறது. தினந்தோறும் 20 கேள்விகள் என்று எடுத்துக் கொண்டால் பதில் வந்திருக்கிற கேள்விகள் தேங்கிவிடும். அதனால் 25 கேள்விகளை எடுத்துக்கொள்கிறோம். இப்போதுகூட 'நாங்கள் கையைத் தூக்கிக்கொண்டே இருக்கிறோம், எங்களுக்கு சான்ஸ் கொடுக்கவில்லை' என்று இரண்டு உறுப்பினர்கள், அவர்கள் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள், குறை சொன்னார்கள், அப்போது நீங்களும் கேட்டுக் கொண்டுதான் இருந்தீர்கள். உறுப்பினர்கள்

எனக்கு ஒத்துழைப்புத் தருவதைப் பொறுத்திருக்கிறது, கேள்விகளை எடுத்துக்கொள்வதும் பதில் அளிப்பதும். ஆகவே, எல்லா உறுப்பினர்களும் என்னோடு ஒத்துழையுங்கள், எல்லாக் கேள்விகளுக்கும் இங்கே பதிலளிக்க வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, தினந்தோறும் கேள்வி நேரத்தில் முன் வரிசையில் இருக்கிற அமைச்சர்களுக்குத்தான் பதில் சொல்லும் லாய்ப்பு ஏற்படுகிறது; கடைசியில் இருக்கிறவர்களுக்கு வாய்ப்பு இல்லை. ஏனென்றால் அவர்கள் பதில் சொல்ல நேரம் இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே கடைசியில் இருக்கிற அமைச்சர்களின் கேள்விகளுக்கு துணை வினா கேட்டு விளக்கம் பெற எங்களுக்கு வாய்ப்பு இல்லாமலேயே போய்விடுகிறது. அதனால் இப்போது இருக்கிற முறையை மாற்றி, ஒருநாள் விட்டு ஒருநாள் கடைசியில் இருக்கிற அமைச்சர்களின் கேள்விகளை முதலில் எடுத்துக் கொண்டு, தகுந்த விளக்கங்களைப் பெற எங்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்களுடைய யோசனை நல்லதுதான், ஒருமுறை இங்கிருந்து பதில் சொல்வது, ஒருமுறை அங்கிருந்து பதில் சொல்வது என்ற கருத்தை ஏற்றுக் கொள்கிறேன்; இனி அப்படியே செய்கிறேன்.

(3) தகவல் கோரல்.

(அ) அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷனின் ஆண்டறிக்கை இந்தியில் தரப்பட வேண்டுமென்று சொல்லப் பெறுவது குறித்து

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, உங்கள் மூலம் இந்த அரசிடம் ஒரு தகவலைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்தியைத் திணிக்கமாட்டோம் என்று மத்திய அரசு உறுதி அளித்திருப்பதாக இந்த அவையிலே பலமுறை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தித் திணிப்பை எதிர்ப்பதாகவும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனக்குக் கிடைத்திருக்கிற ஒரு தகவலை பேரவைத் தலைவரவர்களே, தங்கள் மூலமாக அமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

தமிழ்நாடு அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன்ஃபினான்ஷியல் ரிப்போர்ட் இந்தியில்தான் தரப்பட வேண்டும். அப்படி இந்தியில் தரப்படாவிட்டால் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யாது என்று ஏதாவது உத்தரவு வந்திருக்கிறதா? அந்த உத்தரவின் விவரங்கள்

இந்தச் சபையில் வைக்கப்படுமா? இந்நியை எதிர்க்கும் இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது? உரிய நடவடிக்கை எடுப்போம் என்று ஒரே வரியில் பதில் சொல்லாமல் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதை இந்தச் சபைக்குத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கிளப்பிய பிரச்சினை அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷனின் அறிக்கை இந்தியில் வந்தால்தான் அதுபற்றி பரிசீலனைக்கு எடுக்கப்படும் என்பதைக் குறிப்பிட்டு, தமிழக அரசுக்கு அதுபற்றி தகவல் வந்திருக்கிறதா என்று கேட்டார்கள். பத்திரிகையிலே கூட நான் செய்தியைப் பார்த்தேன். கேரளாவில் இப்படிப்பட்ட ஒரு தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது. தமிழக அரசுக்கு எதுவும் இதுவரை அனுப்பப்படவில்லை. திடீரென்று கேட்டிருக்கிறார்கள். செய்தியை சேகரித்து, இந்த அவைக்கு நான் தெரிவிப்பேன் என்று கூறிக்கொள்கிறேன்.

(ஆ) விதி 82-ன் கீழ் கல்வி அமைச்சர் அறிக்கை அளிப்பது குறித்து.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, தங்களுக்கு உதவக்கூடிய நோக்கத்திலே தான் சொல்கிறேன். மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் ஓர் அறிக்கையினை வைக்க இருக்கின்றார்கள். அந்த அறிக்கை சட்டமன்ற மேலவையிலே வைக்கப்பட்டு பத்திரிகைகளிலே கூட வந்துவிட்டது. ஆகவே, அதற்குப் பிறகு இங்கே வைத்து சபையின் நேரத்தை வீணாக்குவது நல்லதாக இருக்காது. ஆகவே, புதிய அறிக்கையாக இருந்தால் அதனை இங்கே அவர்கள் வைக்கட்டும் என்கின்ற ஆலோசனையைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

(இ) பேரவைத் தலைவரை பதவியில் இருந்து நீக்கக் கோரும் தனித் தீர்மானம் குறித்து.

* திரு. துரை முருகன்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே ஒரு நோட்டீஸ் ஃபார் ரெமூவல் ஆப் தி ஸ்பீக்கர் கொடுத்திருக்கிறேன். சட்டப்படி 14 நாட்கள் ஆகிய பிறகுதான் அதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சட்டத்திலே விதி இருக்கின்றது. ஆனால் நாளையதினம் நம்முடைய சட்டமன்றத்தின் இந்தக் கூட்டத்தொடர் முடியப்போகிறது. முதல் தேதி கொடுத்தால் 15-ஆம் தேதிதான் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பது விதி. ஆகவே 15-ஆம் தேதி சட்டமன்றம் கூடுமா, அந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளுமா என்பதுதான் என்னுடைய முதல் வாதம்.

அதே நேரத்தில் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். சட்டப்படி ஒத்திவைக்கப்படுகின்ற காரணத்தால் அதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள முடியாது பின்னாலே பார்த்துக்கொள்ளலாம் என்பதற்கு சட்டத்திலே விதிமுறைகள் இல்லை. தாங்கள் சட்டமன்றத்தின் தலைவராக இருக்கின்ற காரணத்தால் ஒன்றைச் சொல்கிறேன். 1972 ஆம் ஆண்டு சட்டத்தை திருத்தி இருக்கின்றார்கள். அதிலே உள்ள ரூல்ஸ்-களை திருத்தி இருக்கிறார்கள். இதிலே நான் சுட்டிக்காட்ட விரும்புவது 14 நாட்களுக்குள் அதாவது "*Rule* 53: On receipt of notice under Rule 52, a motion for leave to move the resolution shall be entered in the list of business...." என்று இருக்கின்றது. ஷல் பி என்பது மாண்டேட்டரியாகும். ஆகவே அவசியம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். நோட்டீஸ் என்றால் என்ன டெஃபனிஷன்? அதாவது விதி 26-ன் பிரகாரம் "Such notice may be left at the office even when the Assembly is not in session and the period of notice shall run from the date of receipt in the office." என்று இருக்கின்றது.

சட்டமன்றம் கூடாத ஒரு காலத்திலே கூட ஒரு அங்கத்தினர் இப்படிப்பட்ட நோட்டீஸ் கொண்டு வந்து தரலாம். ஆனால் நோட்டீஸ் வாங்கிய காலத்திலேஇருந்து 14 நாட்கள் கழித்து அதை எடுத்துக் கொள்ள வேண்டி இருக்கின்றது என்ற காரணத்தாலே தான் சட்ட மன்றம் இல்லாத காலத்திலே கூட இவற்றைக் கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கின்றது.

இங்கே நான் ஒரு வாதத்தைச் சொல்ல விரும்புகிறேன். இப்படி நான் மறுபடியும் கொடுத்து 14 நாட்கள் ஆகாத நிலையில் அல்லது 13 நாட்களிலேயே சட்டமன்றம் முடிவடைகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள், அந்த காரணத்தினால் எடுத்துக்கொள்ள முடியாது என்று சொல்லப்படலாம். அந்த மாதிரியே இதனை முடித்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் 1972 ஆம் ஆண்டுக்கு முன்னால் எப்படி இருந்தது விதி என்றால் On receipt of notice of such a Resolution the Speaker shall, in consultation with the Leader of the House, appoint a date for discussion என்று இருந்தது. லீடர் ஆஃப் தி ஹவுஸ் அவர்களைக் கன்சல்ட் பண்ணிவிட்டு இதற்கென்று டேட் ஃபிக்ஸ் பண்ணலாம். ஆகவே ஒரு எதேச்சாதிகாரமான நிலை சபாநாயகர் கையிலே வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் 14 நாட்களுக்குப் பிறகு எடுத்துக்கொண்டு......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசியம் இல்லாததை இங்கே எடுத்துக்காட்ட வேண்டாம். அதைத் திருத்தியதற்குப் பிறகு வந்த சட்டத்தைப் படியுங்கள். மற்றவற்றைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இதற்கு முன்னாலே இருந்தது எல்லாம் இப்போது அவைக்கு அவசியம் இல்லை.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, 14 நாட்கள் கழித்து இதனை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் உங்களிடத்திலே இந்த விதிகளை எல்லாம் சுட்டிக் காட்டினேன். ஆகவே நோட்டீஸ் கொடுக்கப்பட்டு 14 நாட்கள் ஆன பிறகு அதாவது 15 ஆம் தேதி எடுத்துக் கொள்ளப்படுமா? அது சபையிலே வருகிறதா என்பதை எல்லாம் தெரிந்துகொள்வதற்காகத்தான் இவற்றை எல்லாம் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவிலே பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளையொட்டி நாளையோடு சட்டமன்றகூட்டத்தை முடித்துவிட வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் மேற்கொண்டு சபையை நீடிப்பதாக உத்தேசம் இல்லை. அதுமட்டுமல்லாமல் ஒன்றும் தேதி ஒன்றரை மணிக்குத்தான் இந்த நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. ஆகவே அப்படிப் பார்த்தால் 16 ஆம் தேதி தான் எடுத்துக்கொள்ளக் கூடிய அளவுக்கு வருகின்றது. ஆனால் ஆய்வுக் குழுவின் முடிவுபடி 16 ஆம் தேதி சட்டமன்றக் கூட்டத்தொடர் இல்லை. ஆகவே அடுத்து வருகின்ற கூட்டத்தொடரில் இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்வது குறித்து அதிலும் எத்தனை உறுப்பினர்கள் இதனை ஆதரிக்கிறார்கள், எத்தனை பேர் எதிர்க்கிறார்கள் என்பவற்றை எல்லாம் பரிசீலனை செய்து பார்த்த பிறகுதான் முடிவு எடுக்க முடியும், ஆகவே அலுவல் குழுவிலே 14 ஆம் தேதிக்குள் சட்டமன்றக் கூட்டத்தொடரை முடிக்க வேண்டும் என்று முடிவு எடுத்திருப்பதன் காரணத்தால் சபையை நீட்டிக்க முடியாத நிலைமை இருக்கின்ற காரணத்தால் இப்போதைக்கு அந்த நோட்டீஸை அனுமதிப்பதற்கு இல்லை. அடுத்த கூட்டத்தொடரில் இது குறித்து யார் யார் ஆதரிக்கிறார்கள், யார் யார் எதிர்க்கிறார்கள் என்பதெல்லாம் குறித்து ஒரு முடிவு எடுத்ததன் பின்னாலே, விவாதத்தை எப்போது வைத்துக்கொள்ளலாம் என்பது பற்றி நான் கூறுகிறேன்.

[முற்பகல் 10-10]

திரு. துரை முருகன் : இது ஒரு சட்டப் பிரச்னை. நோட்டீஸ் கொடுத்த நாளிலிருந்து, சபை நடக்காத காலகட்டத்தில்கூட 15 நாளில் கூட்ட வேண்டும் என்றிருக்கிறது. விதி 26-யைப் படியுங்கள். "Such notice may be left at the office even when the Assembly is not in session and the period of notice shall run from the date of receipt in the office என்றிருக்கிறது. சட்டப் பிரச்னையில் உங்களுக்கு ஏதாவது தகராறு இருக்குமானால் நீங்கள் அட்வகேட்-ஜெனரலைக் கூப்பிடுங்கள். அவர் இங்கு வந்து பேசட்டும். அவர்கள் இந்தச் சபையில் வந்து பேசலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்வதை நான் ஒத்துக்கொள்கிறேன். எந்த விதியின்கீழ் இதை இப்போதே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறீர்கள்? அந்த விதியைப் படித்துக் காட்டுங்கள். உங்களுக்கும் எனக்கும் புரியாத நேரத்தில் அட்வகேட்-ஜெனரலை வரவழைக்கலாம்.

திரு. துரை முருகன் : 16 ம் தேதி வருகிறது என்றால் ஸெஷனைக் கூட்டிவிட்டுப் போக வேண்டியதுதானே. 15-ம் தேதி அண்ணா பிறந்த தின விழா. 16-ம் தேதி எடுத்துக் கொள்ளலாமே. *Rule* 53 says 'shall be entered' It is mandatory.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்கள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுப்பதற்கு என்று தனியாக ஒரு சாப்டர் இருக்கிறது. சாப்டர் 9. அதில் வருகிற விதிமுறைகளின்கீழ் சபாநாயகர் அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கும்போது அந்த விதிமுறைகள்தான் இதற்கு 'அப்ளை' யாகும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் சட்டம் படித்தவர். நீங்கள் இந்த அவையில் பத்து, பதினைந்து ஆண்டுகளாக இருந்து விதிகளையெல்லாம் கற்றுப் பழக்கப்பட்டவர். எங்களைப் போன்றவர்கள் எல்லாம் உங்களிடமிருந்து தெரிந்து கொள்ளவேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். நீங்களெல்லாம் திறமைசாலிகளாக இருக்கும்போது உங்களது திறமையை பரிசோதிப்பதோ எடைபோடுவதோ, அட்வகேட் ஜெனரல் அவர்களை புதிதாக இங்கே அழைத்து அவர்களிடம் விளக்கம் கேட்க வேண்டும் என்ற அவசியமோ இந்த அவைக்கு இல்லை என்று கருதுகிறேன், முதலில்.

இரண்டாவதாக 26-வது விதியைச் சுட்டிக் காட்டினார்கள். அது ப்ரைவேட் மெம்பர்ஸ் பில்ஸ் பற்றியது. சபாநாயகர் அவர்களை நீக்குவதற்கு என்று தனி விதி இருக்கிறது. அந்த விதி இங்கே மிகத் தெளிவாக இருக்கிறது.

Rule 52 : "A member wishing to give notice of a resolution under Clause (c) of Article 179 of the Constitution for the removal of the Speaker or the Deputy Speaker shall do so in writing to the Secretary with a copy to the Speaker :

Provided that no resolution for the purpose shall be moved unless at least fourteen days' notice has been given to the Secretary of the intention to move the resolution."

என்றிருக்கிறது. இது இந்தியத் துணைக்கண்டத்து அரசியல் சட்டத்தின் அடிப்படையில் நாம் உருவாக்கியிருக்கிற விதி. ஆர்டிகிள் 179 ஆப் தி இந்தியன் கான்ஸ்டிட்யூஷன், அதிலுள்ள ப்ரோவிஸோவை மட்டும் படிக்கிறேன்.

"Provided that no resolution for the purpose of Clause (c) shall be moved unless at least fourteen days' notice has been given of the intention to move the resolution;"

இவ்வளவு தெளிவாக நம் விதிமுறைகளிலும், அரசியல் சட்டத்திலும் குறிப்பிட்டிருப்பதற்குப் பிறகு—அவர் 1-ம் தேதி 1-30 மணிக்கு இந்த நோட்டீஸைத் தந்திருக்கிறீர்கள் அதையெல்லாம் திரு. துரை முருகன் அவர்களே தெளிவாக எடுத்துச் சொன்னார்கள் இங்கே. அது அவைக்கு வரவேண்டுமென்றால் 15 ம் தேதி வரும் என்றும் குறிப்பிட்டார்கள். இல்லை, 16-ம் தேதி தான் வரும். ஏனென்றால் 15-ம் தேதி வந்ததற்குப் பிறகு 16-ம் தேதிதான் உங்கள் பிஸினஸ் ஆர்டர் பேப்பரில் வரும். பிஸினஸ் அட்வைஸரிக் கமிட்டி 14-ம் தேதியோடு அவை முடிகிறது என்று முடிவெடுத்தாயிற்று. அதற்குக் காட்டப்பட்ட காரணங்கள் தெளிவானது. அண்ணா அவர்கள் பிறந்த தின விழாவும், பெரியார் அவர்களது பிறந்த தின விழாவும் பெரியார் அவர்களது நூற்றாண்டில் தபால்தலை வெளியிடுகிற விழா எல்லாம் ஒன்றாக இணைந்து வருகிற காரணத்தால் 14-ம் தேதியோடு முடித்துக் கொள்ள வேண்டுமென்று பிஸினஸ் அட்வைஸரிக் கமிட்டியில்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் அன்பழகன் அவர்களும் இருந்தார்கள்—முடிவெடுத்தாயிற்று.

ஆகையினால் அந்த முடிவை மாற்றுவதற்கில்லை. திரு. துரைமுருகன் அவர்களுக்கு எப்படியும் இந்தத் தீர்மானத்தை முன்மொழிய வேண்டும். சபாநாயகர் அவர்களை அந்த ஆசனத்திலிருந்து இறக்கிப் பார்க்க வேண்டும் என்பதில் மகிழ்ச்சியிருக்குமானால் அடுத்த தொடர் கூட்டத்தில்—இது சாகவில்லை—அடுத்த தொடர் கூட்டத்தில் தாராளமாகக் கொண்டு வரலாம். அப்படிக் கொண்டு வந்து ஏழு நாட்களுக்குள் விவாதம் நடைபெற வேண்டும் என்று இருக்கிறது. அப்படி விவாதம் நடைபெற்ற பிறகு உங்களது அதிகப்படியான மெஜாரிட்டி பலத்தை வைத்துக்கொண்டு சபாநாயகர் அவர்களை இறக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுமானால் அவர்களுக்கு இதைவிட பெரிய வெற்றி எதுவும் இருக்க முடியாது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்......

திரு. துரை முருகன் : நோட்டீஸ் என்பதைப் பற்றி நிதி அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். விதிகளில் நோட்டீஸ் பற்றி தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.. .. 'Notice of a resolution' – For definition of 'notice' we have to quote the rule.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்ல வேண்டியதை சொல்லியாகிவிட்டது. நோட்டீஸ் என்றால் என்ன என்பதையெல்லாம் இப்போது சொல்ல வேண்டியதில்லை. நீங்கள் நினைத்ததையெல்லாம் இங்கே சொல்லிக் கொண்டிருக்க முடியாது. தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : இது உங்கள் மீது கொடுக்கப்பட்டிருக்கின்ற தீர்மானம். ஆகவே இதைப்பற்றிச் சொல்லுவதற்கு நேரம் கொடுங்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னைப் பொறுத்த வரையில், என்னைக் கட்டுப்படுத்துவது, இங்கு தரப்பட்டிருக்கின்ற எல்லா அலுவல்களையும் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்க வேண்டும் என்பதுதான். ஆகவே இதில் நேரத்தை செலவழித்துக் கொண்டிருக்க முடியாது.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, உங்களோடு மல்லுக்கு நிற்பதற்கு எனக்கு இன்றைக்கு வலுவில்லை. இரண்டு நாட்களாக எனக்கு ஃபீவர் என்றிருந்தும் இதைப்பற்றி கேட்பதற்காகவே இங்கு வந்திருக்கிறேன். நோட்டீஸ் ஆஃப் ரெஸலூஷன் என்றால் என்ன? What do you mean by 'notice'?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையெல்லாம் மீண்டும் விளக்கிக் கொண்டு இருக்க வேண்டாம்.....

மாண்புமிகு திரு. இ. மனோகரன் : நான் சொல்ல விரும்புவது, சபாநாயகரை நீக்குவது என்பது பற்றி விதிமுறை தெளிவாக இருக்கிறது. அந்த விதிமுறைகளையும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அடுத்து அரசியல் சட்டப்படி 179-வது விதியின்படி இதற்கு (க்ளியர் 14 டேஸ்) clear fourteen days' notice இருக்க வேண்டும் என்றிருப்பதையும் எடுத்து விளக்கியாயிற்று. இதையெல்லாம் நன்றாகத் தெரிந்த பிறகு எனக்கு உடம்பே சரியில்லை. காய்ச்சல் வேறு என்று மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தயவு செய்து உடம்பை கெடுத்துக் கொள்ளாதீர்கள். பாதுகாத்துக்கொள்ளுங்கள் என்று பழைய பாச உணர்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.... இதையும் மீறி பேசுவதாக இருந்தால் எனக்கு ஆட்சேபணை ஒன்றும் இல்லை.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். அடுத்த கூட்டத் தொடரிலும் இதை எடுத்துக்கொள்ளலாம் என்று தாங்களும் அவை முன்னவர் அவர்கள் சொல்வதை நானும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் நாளையோ அதற்கு மறுநாளோ சபை முடிந்த பின்னால் ஏதாவது ஒரு ஆர்டினன்ஸ் பிறப்பிக்க வேண்டும் என்பதற்காக திடீரென்று சபைக் கூட்டத் தொடரை முடித்துவிட்டால் என்னுடைய ரெஸலூஷன் செத்துப் போய்விடும். எனக்கு இதன்மீது பேசுவதற்கு வாய்ப்பே இல்லாமல் போய்விடும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னை இறக்குவதில் திரு. துரை முருகன் அவர்களுக்கு இவ்வளவு அக்கறையிருக்குமானால், மெஜாரிட்டியோடு தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்ற நம்பிக்கை இருக்குமானால் நிச்சயமாக இதை பின்னால் எடுத்துக் கொள்ளும் போது பேசலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது இந்தப் பிரச்சினையை இத்துடன் முடித்துவிடுங்கள்.

திரு. துரை முத்துசாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள்' இப்படி போய்க் கொண்டிருந்தால், எல்லோருக்கும் இது போன்று சந்தர்ப்பம் கொடுக்க வேண்டியிருக்கும்.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்களில் மீட்டர்கள் பொருத்தப்படவேண்டும் என்று அரசாங்கத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி இதுவரை எத்தனை மீட்டர்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன என்ற ஒரு கேள்வியை 30—8—1978-ம் தேதியே ஒரு குறுகிய கால வினாவாகக் கொடுத்திருந்தேன், அதற்கு இதுவரையிலும் பதில் இல்லை. என்ன காரணம் என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்....

(பதில் இல்லை)

(ஈ) உறுப்பினர் கைது பற்றிய செய்தி குறித்து.

திரு. பொ. உத்திராபதி : 11—9—1978-ம் தேதி சபை நடந்து கொண்டிருக்கும் போதே, சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவசாமி அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அது பற்றி தங்களுக்குத் தகவல் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தத் தகவல் வந்தது, ஆனால் தொடர்ந்தாற்போல் அவர் விடுதலை செய்யப்பட்டுவிட்டார் என்ற தகவலும் ஒன்றாக சேர்ந்து வந்ததால் தான் அதை சபையில் அறிவிக்கவில்லை. வேறு ஒன்றுமில்லை. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

4. அறிக்கை அளித்தல்

விதி 82-ன் கீழ் கல்வி அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி ஆசிரியர்கள் கூட்டு நடவடிக்கைக் குழுவின் பிரதிநிதிகள் என்னை சந்தித்து செப்டம்பர் 9, 10 தேதிகளில் கோரிக்கைப் பட்டியலை அளித்தனர். எல்லா கோரிக்கைகள் குறித்தும் விரிவான பேச்சு வார்த்தைகள் நடந்து இறுதியாக கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. வேலை பாதுகாப்பு : (அ) 1979-80 ஆம் ஆண்டு முதல் கல்லூரிகளில் புகுமுக வகுப்பு நீக்கப்படுவதின் காரணமாக அரசு கல்லூரிகளில் பணியாற்றி வரும்நிலையான ஆசிரியர்கள் (ரெகுலர் டீச்சர்ஸ்.) பணி நீக்கம் செய்யப்படமாட்டார்கள் என ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஆ) குறைந்த அளவு மாணவர்கள் எண்ணிக்கை இல்லாத காரணத்துக்காக தனியார் கல்லூரிகளில் ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்படுவதைத் தவிர்க்க, எந்த ஒரு பாடத்துறையிலும் மானியம் பெறும் தகுதி கிடைக்க குறைந்தது இருபது மாணவர்களேனும் இருக்க வேண்டுமெனும் விதி தளர்த்தப்படும் என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(இ) அரசு ஆணை நிலை எண் 871, தேதி 12—5—1978-ன் படி ஆசிரியர்களுக்கு 'பணி பாதுகாப்பு இருந்த போதிலும், 31—3—1977-ல் பணியிலிருந்த ஆசிரியர்கள் பல தனியார் கல்லூரி நிர்வாகத்தினர்களால் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று முறையிடப்பட்டது.

[முற்பகல் 10-20]

மேற்கூறியவாறு வேலைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் பணியில் அமர்த்துமாறு கோரி அரசு உத்தரவிட, அங்ஙனம் பணி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் பற்றிய விவரங்களைத் தருமாறு கூட்டு நடவடிக்கைக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டது.

31-3-1977-க்குப் பின், நிரந்தரமான பதவியிடங்களில் நியமனம் செய்யப்பட்டு, பின் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் பணியில் அமர்த்துவது குறித்தும் அரசு கவனிக்கும்.

(ஈ) தனியார் கல்லூரி நிருவாகத்தினர் ஆசிரியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் விதிமுறைகளைத் தொகுக்க, தமிழ்நாடு தனியார் கல்லூரி ஒழுங்காற்றுச் சட்டத்தைத் திருத்த ஆலோசனைகள் தருவதற்கு நியமிக்கப்பட்டுள்ள குழு பரிந்துரைகள் செய்யலாம்.

2. விதி 10 (ஏ) (1) படி நியமனம் பெற்ற அரசு கல்லூரி ஆசிரியர்கள்: தமிழ்நாடு பொதுப் பணிக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களைப் பணியில் அமர்த்தும் போது, விதி 10 (ஏ) (1)-ன் கீழ் அரசு கல்லூரிகளில் பணியாற்றி வரும் தற்காலிக ஆசிரியர்கள் பணிநீக்கம் செய்யப்படுகின்றனர். விதி 10 (ஏ) (1) கீழ் பணியாற்றும் ஆசிரியர்களில் சிலர் தமிழ்நாடு பொதுப் பணிக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டனர் ; சிலர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. தேர்ந்தெடுக்கப்படாத காரணத்தால் பணி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கும் காலியிடங்கள் ஏற்படும்போது வேலை தரப்படுகிறது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1978 செப்டம்பர் 13

பணி நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் பணியில் அமர்த்தப்பட 90 நாட்கள் இடைவெளிக்கு மேல் போகக் கூடாது என்ற விதியினைத் தளர்த்த வேண்டுமென முறையிடப்பட்டது. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையுடன் கலந்து இதனை அரசு பரிவுடன் பரிசீலிக்கும். இதனால், மற்றவர்களைக் காட்டிலும் 10 (ஏ) (1) விதிகளின் கீழ் பணி செய்தவர்கள் நியமனங்களில் முன்னுரிமை பெறுவர்.

10 (ஏ) (1) விதிகளின் கீழ் பணியாற்றி வரும் அரசுக் கல்லூரி ஆசிரியர்களிலிருந்து பணி நியமனம் செய்ய, தமிழ்நாடு பொதுப் பணிக் குழு சிறப்பு வேலையமர்த்துத் திட்டம் (Scheme of special recruitment) ஒன்றினை மேற்கொள்வது குறித்து அரசு பரிசீலிக்கும்.

3. கல்லூரியில் பணியாற்றும் 'பி' (B) பிரிவு ஆசிரியர்கள் பணியினை முறைப் படுத்துதல்: அரசு 'ஏ' பிரிவு மற்றும் 'பி' பிரிவு ஆசிரியர்களை ஒருங்கிணைப்பது குறித்து விரைவில் முடிவெடுக்க இருக்கிறது. இதனைச்செய்யும் போது கல்லூரிகளில் பணியாற்றும் 'பி'பிரிவு ஆசிரியர்கள் பணி, பள்ளிக் கல்வித் துறையில் 'பி' பிரிவு ஆசிரியர்கள் பணி போன்று முறை செய்யப்பட்டு விடும்.

4. பட்டதாரி பயிற்றுநர் மற்றும் விளக்குநர் பதவிமேல் நிலைப் படுத்துதல்: மாலை நேரக்கல்லூரிகளில் அல்லது அஞ்சல் வழிக்கல்வி முறையில் சேர்ந்து பட்டதாரி பயிற்றுநர் மற்றும் விளக்குநர்கள் தமது தகுதியினை மேம்படுத்திக் கொள்ளலாம். அறிவியல் பாடங்களில் கோடை விடுமுறைக் காலங்களில் செய்முறை வகுப்புகளை நடத்தி பட்டதாரி விளக்குநர்களின் தகுதியினை மேம்படுத்திக் கொள்ள பல்கலைக் கழகங்களோடு கலந்தாலோசித்து வசதிகள் செய்து தர நடவடிக்கை மேற் கொள்ளப் படும்.

பட்டதாரி பயிற்றுநர், விளக்குநர்கள் பிறிதொரு பாடத்தில் முதுகலைப் பட்டம் பெற்றிருந்தால், அத்தேர்வில் குறைந்தது 'பி' கிரேடு பெறு நிலையிலும் அவர்களுக்குப் பதவி உயர்வு தருவது குறித்த அவர்களது வேண்டுகோளை அரசு பரிசீலிக்கும்.

பயிற்றுநர், விளக்குநர் (Tutors and Demonstrators) மேல் நிலைப் படுத்தற்கு, அவர்கள் 10 (ஏ) (1) விதியின் கீழ் பணிசெய்த காலமும், மற்றும் தனியார் கல்லூரியில் பணி செய்த காலமும் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமெனக் கோரப் பட்டது. இக்கோரிக்கை அரசு விதிகளுக்கு முரணாக உள்ள படியாலும், நிலையான ஆசிரியர்களின் பணிமூப்பு பாதிக்கப்படுமாகையாலும் இதனை ஏற்க இயலாது என்று தெரிவிக்கப்பட்டது.

1978 செப்டம்பர் 13] [திரு. செ. அரங்கநாயகம்]

கல்லூரிக் கல்வி இயக்குநரின் செயல் முறைகள் டி. டி. ஸ். 6303/எஸ். 2/78, 13-4-78 தேதியிட்டது, 31-3-1977 ஆம் நாள் பணியில் இருந்து அரசு ஆணை எண் 871 (தேதி 12-5-78) படி பணி பாதுகாப்பு பெறும் பட்டதாரி பயிற்றுநர் மற்றும் விளக்குநர்களுக்குப் பொருந்தாது என விளக்கம் தரும் சுற்றறிக்கை அனுப்பப்படும்.

5. நேரடி ஊதியம் வழங்கல்: தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு ஊதியத்தை நேரடியாக வழங்குவது குறித்து அரசு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. நேரடி ஊதியம் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்த, பிராந்திய அலுவலகங்களைத் துவக்க கல்லூரிக் கல்வி இயக்ககம் திட்டங்களைத் தந்துள்ளது. இதன் வழி தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் நலனைக் கவனித்துப் பாதுகாத்துக் கொள்வதும் இயலும். இது குறித்து விரைவில் அரசு உத்தரவு வெளியாகும்.

6. தனியார் கல்லூரிகளில் U.G.C. (ப.மா.கு) ஊதியம் வழங்கல் தனியார் கல்லூரிகளிலிருந்து பெறப்பட்டுள்ள ஊதிய நிருணயப் பட்டியல்கள் சரி பார்க்கப்பட்டு வருகின்றன. 8000-க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் ஊதிய நிருணய விவரங்கள் சரி பார்க்கப்பட வேண்டியிருக்கிறது. 1973-74 முதல் 1977-78 ஈறாக உள்ள நிதி விவரப் பட்டியல்கள் சரி பார்க்கப்பட வேண்டியுள்ளன. இந்த பணியை மேலும் விரைவுபடுத்தி, 1978 டிசம்பர் இறுதிக்குள் அனைத்து தனியார் கல்லூரி ஆசிரியர்களின் ஊதிய நிருணயத்தை முடித்து விட திட்டமிடப் பட்டுள்ளது.

கல்லூரிக் கல்வித் துறையினைச் சேர்ந்த, மருத்துவக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் யூ. ஜி. சி. ஊதிய விகிதங்களை அளிக்க விரைவில் அரசு உத்தரவிடும்.

7. உடற்பயிற்சி இயக்குநர் மற்றும் நூலகர்கள்: மேற்கண்டோரின் ஊதிய விகித மாற்றம் குறித்து, பல்கலைக் கழக மானியக் குழுவினரைக் கலந்தாலோசித்து கவனிக்கப்படும். பல்கலைக் கழக மானியக் குழு விகித மாற்றத்துக்கு ஒப்புதல் தராவிடில் 1-4-1979 முதல் மாநில அரசு தமது நிதியிலிருந்தே இந்த ஊதிய விகித மாற்றத்தைத் தருவது குறித்து ஆலோசிக்கலாம் என முறையிடப்பட்டது. இந்த வேண்டுகோள் கருத்தில் கொள்ளப்பட்டது.

உடற்பயிற்சி இயக்குநர்களும், நூலகர்களும் தமது துறைகளுக்குத் தாமே பொறுப்பாக இருத்தல் வேண்டும் என்ற முறையீட்டினை அரசு கவனிக்கும்.

8. கல்லூரி ஆசிரியர்களை "பேராசிரியர்கள்" என பதவிப்பெயர் மாற்றம்செய்தல்: தற்போதுள்ள ஆசிரியர்களுக்கான பதவிப் பெயரை மாற்றவேண்டியதில்லை என அரசுகருதுகிறது. துறைத் தலைவர்களுக்குச் சிறப்பூதியமாக ரூ. 100 வழங்குவது குறித்து அரசு கவனிக்கும்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1978 செப்டம்பர் 13

9. பன்னிரெண்டாம் வகுப்பினைக் கல்லூரிகளில் வைப்பது: மேல்நிலை வகுப்புகளைப் பள்ளிகளில் மட்டுமே வைத்திருப்பது என்றும் கல்லூரிகளில் வைத்திருக்கலாகாது என்றும அரசு உறுதியாக முடிவெடுத்துள்ளது. அந்த முடிவை மாற்றுவதற்கில்லை.

10. குடும்ப நல்லுதவித் திட்டம் (Family Benefit Scheme): தனியார் கல்லூரி அலுவலர்களுக்குக் குடும்ப நல்லுதவித் திட்டத்தை அமுல்படுத்துதல் விரைவாக்கப்பட்டு வருகிறது.

11. பிஎச். டி. சிறப்பூதியம் (Ph. D) முன்னரே பிஎச். டி. சிறப்பூதியமாக மாதம் ரூ. 100 பெற்று வரும் ஆசிரியர்களுக்குத் தொடர்ந்து இந்தத் தொகையினை அளிப்பது குறித்து அரசு பரிவுடன் கவனிக்கும்.

12. கல்லூரி முதல்வர்களுக்கு யூ. ஜி. சி. ஊதிய விகிதங்களை மாற்றியமைத்தல்: இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

13. ஆசிரியர்பணிச்சுமை பல்கலைக்கழகம் நிருணயித்தவாறுஅமைவதுகல்லூரிக் கல்வி இயக்கம், பல்கலைக் கழகங்கள் நிருணயம் செய்துள்ள பணிச் சுமையினையொட்டியே செயற்பாடு மேற்கொள்ளுகிறது.

14. சங்கச் சார்பாளர்கள் துறைத் தலைவருடன் கால முறைப்படி கலந்துரையாடல்: அரசு இதனைப் பரிசீலித்து தக்க ஆணைகளைப் பிறப்பிக்கும்.

15. சில தனியார் கல்லூரிகளின் நடப்பு குறித்து விசாரணை செய்ய குழு நியமனம் செய்தல்: வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் பணியில்அமர்த்த நடவடிக்கை எடுக்கின்ற நிலையில் இந்த கோரிக்கையின் தேவை எழாது.

16. டிசம்பர் 1977 இல் சிறை சென்ற மதுரை (காமராஜ்) பல்கலைக் கழக ஆசிரியர்களின் கல்லூரிக்குச் செல்ல இயலா காலத்தை ஒழுங்காற்றுவது: இதைக்கவனித்து விரைவில் உத்தரவுகள் பிறப்பிக்கப்படும.

17. அரசு கல்லூரி ஆசிரியர்கள் சட்ட மேலவைத்தேர்தலுக்கு நிற்க அனுமதி: அரசு இந்தக் கோரிக்கையை ஏற்க இயலாது.

18. அரசு கல்லூரி ஆசிரியர் இடமாற்றம்: இயன்றவரை அரசு கல்லூரி ஆசிரியர்கள் கோடை விடுமுறையில் மட்டும் இடமாற்றம் செய்யப்படுகின்றனர்.

19. தனியார் கல்லூரி ஆசிரியர்களின் நிலுவைத் தொகை வழங்கல்: தணிக்கை முடிவுற்றபின் நிலுவைத் தொகை உரியவாறு வழங்கப்படும்.

1978 செப்டம்பர் 13] [திரு. செ. அரங்கநாயகம்]

20. சில கல்லூரிகளை அரசு ஏற்றுநடத்தல்: இரு கல்லூரிகளின் மேலாண்மையினர் அரசு ஏற்று நடத்தலை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். இந்த வேண்டுகோள் கருத்திலிருத்தப்படும்.

21. மேலநீலித நல்லூர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு வேலையளிப்பு: மேலநீலித நல்லூர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டு தற்போது வேலையின்றித் தவிக்கும் பத்துஆசிரியர்களின் பரிதாப நிலையினை ஆசிரியர் கூட்டு நடவடிக்கைக் குழு அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தது. மாற்றுவேலை தருமாறு கோரி இவர்களில் நால்வர் 9—9—1978 முதல் சென்னையில் கால வரம்பின்றி உண்ணுவிரதம் மேற்கொண்டுள்ளனர். 1976 ஆம் ஆண்டு, இவர்களில் ஆறு ஆசிரியர்கள் 10 (a) (ii) விதியின் கீழ் தற்காலிகமாக அரசு கல்லூரிகளில் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். தமிழ்நாடு பொதுப்பணிக் குழுவினரால் தேர்ந் தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் 1978-ல் பணியிலமர்த்தப்பட்ட போது, இந்த அறுவரும் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இவர்களுடைய பரிதாப நிலையைப் பரிவுடன் கவனிக்குமாறும் கூட்டு நடவடிக்கைக் குழு அரசுக்கு வேண்டுகோள் விடுத்து உள்ளது.

அரசு, இந்த வேண்டுகோளைப் பரிவோடு நோக்கி இந்த ஆசிரியர்களுக்கு அரசு கல்லூரிகளிலோ அல்லது தனியார் கல்லூரிகளிலோ தற்காலிக வேலை தர ஒப்புக் கொண்டுள்ளது. இந்த வேலையிழந்து வாடும் ஆசிரியர்களின் நிலை மிகவும் வருந்தத்தக்கதாயிருப்பதால், இதனை மிக்க மனிதாபிமானத்துடன் அணுக, தனிப் பரிவுடன் கவனிக்க அரசு ஒப்பியது.

21. அரசு கல்லூரி ஆசிரியர்களை நிலைப்படுத்தல்: பல்வேறு நலன்களையளிக்க, நிலையான அரசு ஊழியருக்கும் Officiating அரசு ஊழியருக்கும் விதிகள் எவ்வித வேறுபாடும் காட்டுவதில்லை. விதிகளின்படி பதவிகளை நிலையாக்க உத்தரவுகள் இடப்பட்டு வருகின்றன.

22. கல்லூரி ஆசிரியர்களுக்கு விருதுகள்: இந்த வேண்டுகோள் கருத்தில் கொள்ளப்பட்டு தனியாகப் பரிசீலிக்கப்படும்.

23. அரசுக் கல்லூரி ஆசிரியர்களை ஆசிரிய மேம்பாட்டுத் திட்டத்துக்குத் தேர்ந்தெடுத்தல்: பணி மூப்பின்படியும், பல்வேறு பாடங்கள் கற்பிப்போர் இடம் பெறும் வாய்ப்பு கிடைக்கும்படியும் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க அனைத்து அரசு கல்லூரிகளையும் ஒருமித்த ஒரு நிறுவனமாகக் கருதி செயல்பட வேண்டியிருக்கிறது. மேற்கூறிய அரசின் முடிவுகளை முன்னிட்டு கல்லூரி ஆசிரியர்கள் தமது போராட்டத்தைக் கைவிடுவார்களென நம்புகிறேன்.

[1978 செப்டம்பர் 13

[முற்பகல் 10-30]

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே 82வது விதியின் அடிப்படையிலே அறிக்கையை அளித்து இருக்கிறார்கள், நான் அந்த விதிக்குள்ளே போகவில்லை, ஆனால் இத்தகைய திட்டங்கள் அறிவிப்புகள் மேற்கொண்டு அரசுக்குக் கூடுதல் செலவினங்களை கூடுதல் பணத்தை ஏற்படுத்தக் கூடிய திட்டங்கள். ஆகவே இப்படிப்பட்ட அடிஷனல் பைனான்ஷியல் கமிட்மெண்ட் செய்யக்கூடிய திட்டங்கள் பற்றிய அறிவிப்பு எப்போதும் லோயர் ஹவுஸிலே தான் செய்வது வழக்கம்.

That is the exclusive prerogative and privilege of the Lower House here to hear the proposals which calls for additional financial commitment என்ற வகையிலே மேல்சபையிலே அறிவித்து விட்டு வந்து பிறகு இந்த அவையிலே சொல்வது முறையானதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பெரும்பாலான கோரிக்கைகளைப் பொறுத்தவரையில் நாங்கள் இதற்கு முன்னாலே அறிவித்த அறிவிப்புகளை நடைமுறைப்படுத்துவதிலே தாமதம் இருக்கிறது என்ற ஒன்றுதான் இந்தப் போராட்டத்திற்குக் காரணம். அந்த வகையிலே தாமதத்தைப் போக்கி நடவடிக்கைகளை எடுத்திருப்பதைப் பற்றித்தான் நான் அறிக்கை தந்திருக்கிறேன், இதிலே கூடுதல் செலவினத்திற்கு வழியில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(2) ஒழுங்குப் பிரச்சினைகள்

(இ) அதிகாரிகள் மட்டத்தில் அமர்ந்துள்ள அதிகாரிகளோடு உறுப்பினர்கள் பேசுவது குறித்து.

திரு. எஸ். கணேசன் : தலைவர் அவர்களே, இந்த அவையிலே உறுப்பினர்கள் அதிகாரிகள் வரிசையிலே அமர்ந்திருக்கின்ற அதிகாரிகளோடு பேசக் கூடாது என்பது மரபு. ஆனால் நீண்ட நாட்கள் அனுபவம் உள்ள உறுப்பினர் திரு. எஸ். ஜே. இராமசாமி அவர்கள் ஒரு அதிகாரியுடன் வாக்குவாதமே செய்து கொண்டிருந்தார் என்பதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் யாரும் அவையில் இருந்து கொண்டு அதிகாரிகளுடன் பேசக்கூடாது என்ற மரபே இருக்கிறது. யாரும் பேசக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : ஒரு விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து என்னுடைய ரூலிங்கிற்குள் போகக் கூடாது, அப்படியே விட்டுவிடுங்கள்.

(5) அரசினர் தீர்மானம்.

விதி 41 (3) ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடைமுறை விதி 41 (3) இன் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களைக் கவன ஈர்ப்புக்குக் கொண்டுவரக் கூடாது என்ற விதியைத் தளர்த்த வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

6. கவன ஈர்ப்புகள்.

(அ) கிழக்கு முகவை மாவட்ட நிலவள வங்கிகள் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க வேண்டிய அவசியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று பேரவையின் 41 சட்டவது விதியின் கீழ் 9 அறிவிப்புகள் வைக்கப்பட உள்ளன. முன் முன்வடிவுகள் நிறைவேற்றப்பட வேண்டிய அவசியத்தை அறிக்கைகள் னிட்டு, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கான மேசை மீதும், பேரவைத் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களின் துறை நூலகத்திலும் வைக்கப்பட்டுள்ளன. பத்திரிகைகளுக்கும் அவை அளிக்கப்படும். எனவே, அந்த அறிக்கைகளைப் படித்ததாக அவை ஏற்றுக் கொள்ளும் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தேவை என்று கருதினால் ஒரு விளக்கம் கேட்கலாம்.

முதலாவது திருவாளர்கள் கூத்தகுடி ச. சண்முகம், செ. சிவசாமி ஆகியோர் கொடுத்திருக்கிற கவன ஈர்ப்புத் தீர்மானம்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, பிற்பட்ட பகுதியாகிய கிழக்கு முகவை மாவட்டத்தில் உள்ள நிலவள வங்கிகள் கடன்கொடுக்கும் சக்தியை இழந்திருக்கின்றன. விவசாயிகளிடத்தில் பதட்ட நிலைமை ஏற்பட்டுள்ளது. கடன் கொடுக்கப்படாததால் உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டு உள்ளது. இந்த நிலைமையை மாற்றி உடனடியாக வங்கிகள் மூலம் கடன் கொடுக்க வேண்டுமென்ற அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, கிழக்கு முகவை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் வளர்ச்சிக் கடன் தேவையை 12 பிரதம நிலவள வங்கிகள் பூர்த்தி செய்து

வருகின்றன. 1974-75, 1975-76 மற்றும் 1976-77 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சி காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் தவணை விழுந்த நீண்டகாலக் கடன் தவணைகள் முறையே ரூ. 74.15 இலட்சம், ரூ. 80.49 இலட்சம் மற்றும் ரூ. 71.80 இலட்சம் அளவிற்கு ஒத்தி வைக்கப்பட்டு சுலபத் தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் மாற்றியமைக்கப் பட்டன. மேலும் 1977-78ல் வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ரூ. 5.10 இலட்சம் அளவிற்குக் கடன் தவணைகளை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கண்டவாறு கடன் தவணைகள் மாற்றியமைக்கப்பட்ட போதிலும் வங்கியில் உறுப்பினர்கள் மட்டத்தில் தவணை கடந்த தொகை ஆண்டுதோறும் அதிகரித்து வந்துள்ளது.

2. ரிசர்வ் வங்கியின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி ஒரு வங்கியின் கடன் வழங்கும் தகுதி அது முந்தைய ஆண்டில் தவணை தவறிய கடன் தொகையை வசூலிப்பதில் காட்டியுள்ள முன்னேற் றத்தைப் பொறுத்து நிர்ணயிக்கப்படுகிறது. இந்த நெறிமுறை களின்படி முந்தைய ஆண்டு ஜூன் திங்கள் இறுதி நாளில் உறுப் பினர்கள் மட்டத்தில் 60 சதவீதத்திற்கும் அதிகமாகத் தவணை கடந்த பாக்கி உள்ள வங்கிகள் கடன் வழங்கும் தகுதியை அடைவதில்லை. இதன்படி போதலூர் வங்கி மட்டும் அது சென்றாண்டில் வழங்கியுள்ள கடன் தொகை அல்லது அது சென்ற மூன்றாண்டுகளில் வழங்கியுள்ள கடன் தொகையின் சராசரி இவற்றில் எது அதிகமோ அதில் 50 சதவீதம் அளவிற்கு நடப் பாண்டில் கடன் வழங்க இயலும். ஏனைய வங்கிகளுக்கு 1978-79ல் கடன் வழங்கும் தகுதி ஏதுமில்லை. இயற்கை உற்பாதங் களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடன் தவணை மாற்றியமைக்கப் பட்டு கடன்தாரர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டிருந்தும், சென்ற ஆண்டில் திருப்திகரமாகப் பயிர் அறுவடை இருந்தும் கடன்தாரர்கள் தவணைத் தொகைகளைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால்தான் இம்மாதிரி வங்கிகள் கடன் வழங்கும் தகுதியை இழந்துள்ளன. ஆயினும் இவ்வங்கிகளுக்கு கடன் வழங்கும் தகுதியைத் தோற்றுவிக்க ரிசர்வ் வங்கி விதிமுறைகளுக்குட்பட்டு அரசு பங்குத்தொகை அளிப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

விவசாயிகளுக்கு நிவாரணமளிக்கும் நோக்குடன், எங்கெல்லாம் நிலவள வங்கிகள் சிறுபாசனக் காரியங்களுக்குக் கடன் வழங்க இயலாமல் உள்ளனவோ அங்கெல்லாம் வணிக வங்கிகளை அக்காரியங்களுக்குக் கடன் வழங்க அனுமதித்து சமீபத்தில் அரசு ஆணையிட்டுள்ளது, எந்த இடங்களில் சிறுபாசனக் காரியங் களுக்கு வணிக வங்கிகள் கடன் வழங்கலாமென கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் குறிப்பிடுவார். இந்த ஆணையினால் சிறு பாசனக் காரியங்களுக்காக கடன் பெறுவதில் விவசாயிகளுக்கு எந்தவிதச் சிரமமும் இருக்காது.

திரு. செ. சிவசாமி ; கீழ் முகவை மாவட்டத்திலே உள்ள நில வள வங்கிகள் கடன்கள் கொடுக்காத நிலைமை இருப்பதால் உற்பத்தி செய்கிற விவசாயிகள் வேறு திசையிலே போய்க் கொண்டிருக்கிறார்கள். நிலவள வங்கிகள் கொடுத்து இருக்கிற தவணைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. ஆரம்பத்தில் 20 ஆண்டு களாக இருந்தது 7 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. 300 ரூபாய் கட்டவேண்டிய விவசாயி 1,000 ரூபாய் கட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அதன் காரணமாகக் கட்ட முடியவில்லை. ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலே 30 வருடம், 40 வருடம் என்று தவணைகள் கொடுக்கிற நேரத் திலே இந்தப் பகுதியிலே 20 ஆண்டுத் தவணையை 7 ஆண்டு களாகக் குறைத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, வட்டி அதிக மாக ஆகியதால் அவர்கள் கட்டுவதிலே தடங்கல் ஏற்பட்டிருக் கிறது. இவைகள் எல்லாம் நிறுத்தப்பட வேண்டும். விவசாயி களுக்குப் போதுமான வகையிலே உதவிசெய்யக்கூடிய முறையிலே நிலவள வங்கிகளின் மூலமாக உதவிகள் கிடைக்கச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி அவர்கள் சில உணர்வுகளை இந்த மாமன்றத்தின் முன்னால் வைத்தார்கள். கிழக்கு முகவை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் வளர்ச்சிக் கடன் தேவையைப் பூர்த்தி செய்து வந்த 12 பிரதம நிலவள வங்கிகளில் இன்றைய தினம் போது மான அளவிற்குத் தேவையான அளவிற்குக் கடன் அளிக்கப்படாத நிலைமைகளை எடுத்துச் சொன்னார்கள். அதற்குரிய மேலான சில மாற்று வழிகளையும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இன்றைய தினம் அந்த நிலவள வங்கிகளில் விவசாயப் பெருமக்களுக்குரிய வகையிலே போதுமான அளவிற்குக் கடன் கொடுக்க முடியாத நிலைமை, ரிசர்வ் வங்கியின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி அவைகளெல்லாம் இயங்கிக் கொண்டிருக்கின்றன நாங்கள் ரிசர்வ் வங்கிக்கு அந்த வழிமுறைகளிலே உள்ள கட்டுதிட்டங்களைத் தளர்த்தி விவசாயிகளுடைய நலன்களையும், தேவைகளையும் பூர்த்தி செய்ய வற்புறுத்தி வருகிறோம். இன்னும் தொடர்ந்து வற்புறுத்தி வருவோம்.

அதைப்போல, கிழக்கு முகவை மாவட்டத்திலே இருக்கின்ற விவசாயிகளினுடைய சிரமங்களைக் குறைப்ப தற்காக இரண்டு வகையான மாற்று ஏற்பாடுகளைத் தமிழக அரசு இன்றையதினம் செய்திருக்கிறது. ஒன்று, கடன் வசதி அளிப்பதற்காக. இவ்வங்கிகளுக்கு கடன் வழங்கும் தகுதியைத் தோற்றுவிக்க ரிசர்வ் வங்கி விதிமுறை எங்கு தடையாக இருக் கிறதோ அங்கு அரசு பங்குத்தொகை அளிப்பது பற்றி பரி சீலிக்கப்பட்டு வருகிறது. இரண்டாவதாக விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் நோக்குடன் எங்கெல்லாம் நிலவள

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1978 செப்டம்பர் 13

வங்கிகள் சிறுபாசனக் காரியங்களுக்குக் கடன் வழங்க இயலாமல் உள்ளனவோ அங்கேயெல்லாம் வணிக வங்கிகளை அக்காரியங் களுக்குக் கடன் வழங்க அனுமதித்து சமீபத்தில் அரசு ஆணை யிட்டுள்ளது. எந்த இடங்களில் சிறுபாசனக் காரியங்களுக்கு வணிக வங்கிகள் கடன் வழங்கலாம் என்று கூட்டுறவுச் சங்கங் களின் பதிவாளர் குறிப்பிடுகிறாரோ அங்கு வணிக வங்கிகளின் மூலமாகக் கடன் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்கிறது.

ஆகவே, இந்த இரண்டு முறைகளில் கிழக்கு முகவை மாவட்டத்தில் விவசாயப் பெருங்குடி மக்களுடைய நிலைமை களுக்குப் பரிகாரம் தேட முயன்று வருகிறது என்பதை உறுப் பினர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வர விழை கிறேன்.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே,......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உறுப்பினர்களுக்கு மட்டும் சொல்லவில்லை, அமைச்சர்கள்கூட சுருக்கமாகச் சொன்னால் சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றுவதற்கு ஏதுவாக இருக்கும்.

(ஆ) கீரனூர் விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தில் கடன் வழங்கப்படாமை.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த ''நன்னிலம் ஒன்றியம், கீரனூர் விவசாயக் கூட்டுறவு சங்கத்தில் கடன் வழங்காததால் விவசாயிகள் விவசாயம் செய்ய இயலாத நிலையினைக் குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியத்தில் இயங்கிவரும் கீரனூர் கூட்டுறவு விவசாய கடன் சங்கம் 457 உறுப்பினர்களுக்கு குறுவை மற்றும் சம்பா நெல் பயிரிட 1978 மே திங்கள் முதல் 1978 ஆகஸ்ட் திங்கள் வரை ரூ. 2.78 இலட்சம் கீழ்க்கண்டவாறு வழங்கப் பட்டுள்ளது :—

பயிர்	உறுப்பினர்கள் எண்ணிக்கை.	வழங்கப்பட்ட கடன் தொகை. ரொக்கப் பகுதி. ரூ.	வழங்கப்பட்ட கடன் தொகை. பொருட் பகுதி. ரூ.	மொத்தம்.
குறுவை	53	41,000	37,000	78,000
சம்பா	404	1,51,000	49,000	2,00,000
மொத்தம் ..	457	1,92,000	86,000	2,78,000

1978 செப்டம்பர் 13] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

முன்னமேயே வழங்கப்பட்டுள்ள 49,000 ரூபாய் மதிப்புள்ள பொருட்பகுதி கடன் தவிர மேலும் ரூ. 2 இலட்சம் மதிப்புள்ள பொருட்பகுதி கடன்கள் சம்பா பயிருக்கு வழங்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. நாற்றங்காலுக்கு அடி உரமிடும் பணி துவங்கவில்லையாதலின் உறுப்பினர்கள் கடனில் உரப்பகுதியினை பெற்றுக் கொள்ளவில்லை.

தகுதியுடைய எல்லா உறுப்பினர்களுக்கும் சம்பா மற்றும் குறுவை நெல் பயிரிட நடப்பு ஆண்டில் தேவையான கடன் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, கீரனூர் கூட்டுறவு விவசாய கடன் சங்கத்தில் கடன் வழங்குதலில் எவ்விதமான இடையூறும் இல்லை. விவசாயம் இதனால் பாதிக்கப்படவில்லை.

திரு. மா. மணிமாறன்: தலைவரவர்களே, நன்னிலம் ஒன்றியம் கீரனூர் விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தில் கடன் கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் தனிப்பட்ட விரோதத்தின் காரணமாக சில பேர்கள் கடன் பெற முடியாமல் இருக்கிறது. அவர்களும் விரைவில் கடன் பெற மாண்புமிகு அமைச்சரவர்கள் வகை செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அவருடைய ஊராட்சி ஒன்றியத்தில் இயங்கிவரும் கீரனூர் கூட்டுறவு விவசாய கடன் சங்கம் 457 உறுப்பினர்களுக்கு குறுவை மற்றும் சம்பா நெல் பயிரிட 1978 மே திங்கள் முதல் 1978 ஆகஸ்ட் திங்கள் வரை 2·78 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10.40]

(இ) வேதாரண்யம் பகுதியில் புகையிலை கொள்முதல் செய்யாத நிலை.

திரு. மா. மீனாட்சி சுந்தரம்:
திரு. மு. அம்பிகாபதி: } தலைவர் அவர்களே,

'' தஞ்சாவூர் மாவட்டம் வேதாரண்யம் வட்டாரத்தில் உற்பத்தியாகும் புகையிலையை யாரும் கொள்முதல் செய்யாததால் ஏறத்தாழ 6,000 விவசாயிகளும் 2,000-க்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்களும் அல்லற்படுவதோடு கூட்டுறவுக் கடன்களை அடைக்க முடியாத நிலையிலிருப்பது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வேதாரண்யம் பகுதியில் 5,500 புகையிலை பயிரிடுவோர்கள் உள்ளனர். சுமார் 1,800 ஏக்கர் நிலத்தில் 14.60 இலட்சம் கிலோகிராம் மெல்லும் புகையிலை உற்பத்தி செய்யப்படுகிறது.

கீழ்க்கண்ட காரணங்களினால், உற்பத்தியாகும் புகையிலை தேங்கி இருக்கின்றன :—

1. விவசாய விற்பனை இயக்குநர் கூறியுள்ளபடி ஒரு ஏக்கர் நிலத்தில் புகையிலை பயிரிட ஆகும் சராசரிச் செலவு சுமார் ரூபாய் 4,000 ஆகும். ஒரு ஏக்கருக்கு சராசரி விளைச்சல் 1,000 கிலோகிராம் புகையிலையாகும். புகையிலையின் இன்றைய அங்காடி விலை ஒரு கிலோகிராமிற்கு ரூபாய் 4 ஆகும். ஆகவே உற்பத்தியாளர் பெறும் விலை உற்பத்திச் செலவிற்குக் கூட போதுமானதல்ல.

2. புகையிலை பயிரிடுவோர், ஏனைய விவசாயிகளைப் போலல்லாமல், தொழில் வணிக உரிமம் இல்லாமல் புகையிலையை நேரடியாக விற்க முடியாது. ஆகவே அவர்கள், தொழில் வணிக உரிமம் பெற்றுள்ள 11 மொத்த வியாபாரிகள் மற்றும் 154 தரகு மற்றும் பண்டகசாலை வியாபாரிகள் தயவில் இருக்கிறார்கள். இவ்வியாபாரிகள் விலை இறக்கத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அவர்கள் தற்சமயம் புகையிலையை கொள்முதல் செய்யவில்லை. வேதாரண்யம் புகையிலை பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் 1973ம் ஆண்டில் தொடங்கப்பட்டு 1974ம் ஆண்டிலிருந்து புகையிலை வாணிகம் செய்து வருகிறது. 5,500 உற்பத்தியாளர்களில் 749 உற்பத்தியாளர்களே சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். அரசு பங்குத்தொகை ரூ. 25,000 உடன் இச்சங்கத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 71,375 மட்டும் ஆகும். கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி இச்சங்கத்திற்குத் தொடக்கத்திலிருந்தே வாணிகத்திற்கான பணம் கடன் கொடுத்து வருகிறது. இச்சங்கம் அதன் சொந்தப் பண இருப்பின் (owned funds) அளவு வரையில் மட்டுமே, அதாவது ரூ. 71,375 வரை மட்டுமே, காசுக் கடன் பெறத் தகுதி பெற்றுள்ளது. ஆயினும் இச்சங்கத்திற்கு உதவி செய்வதற்காக மத்திய வங்கி ரூ. 1.50 இலட்சம் கடனைக் கொடுத்தது. இதற்கு மேலும் சங்கத்திற்குப் பணம் கடன் கொடுத்தால் ரிசர்வ் வங்கியின் அறிவுரைகளை வேண்டுமென்றே கும்பகோணம் மத்திய வங்கி மீறிகொண்டு வருவதாகக் கொள்ளப்படும். இச்சங்கத்தில் புகையிலை உற்பத்தியாளர்கள் மேலும் அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்களாகச் சேர்ந்து அதன் மூலதனத்தை அதிகரித்தால் தான் அதனுடைய கடன் பெறும் தகுதி அதிகமாகி வாணிபமும் மேம்படும். புகையிலை உற்பத்தியாளர்கள் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்தால்தான் சங்கம் அவர்களுக்கு உதவ முடியும்.

உறுப்பினர்களிடமிருந்து 1977 ஜூன், ஜூலை திங்களில் கிலோ ரூ. 6 வீதம் வாங்கிய 20,233 கிலோகிராம் ரூ. 1.21 இலட்சம் மதிப்புள்ள புகையிலை இச்சங்கத்தில் தேங்கி உள்ளது. புகையிலையின் விலை கிலோவுக்கு ரூ. 4 க்குச் சரிந்ததால் இந்த இருப்பை சங்கம் விற்கமுடியாமலிருக்கிறது. அச்சங்கம் இருப்புப் புகையிலையை ஏல விற்பனை மூலம் விற்க முயற்சி எடுத்துக் கொண்டது. 15.3.1978லும், 16.8.1978லும் ஏல விற்பனை நடத்தியது. ஆனால் ஒரு வியாபாரியும் பங்கேற்காததால் சரக்கு இருப்பு விற்பனையின்றித் தேங்கிக் கிடக்கிறது. இச்சங்கம் தன் நிதியை இச்சரக்கிருப்பில் முடக்கி உள்ளதால் மேலும் ரொக்கக் கொள்முதல் செய்ய இயலவில்லை. குறைந்த அளவு நிதி வசதியும் உறுப்பினர்களும் கொண்டுள்ள இப்புதிய சங்கம், அதிலும் புகையிலையை விற்க முடியாத நிலையில், வேதாரண்யம் பகுதியில் உற்பத்தியாகும் புகையிலை முழுவதையும் நேரடிக் கொள்முதல் செய்ய இயலாது.

திரு. மா. மீனாட்சிசுந்தரம் : தஞ்சாவூர் மாவட்டம் வேதாரண்யம் வட்டாரத்தில் புகையிலை உற்பத்தி செய்யும் விவசாயிகள் சாகுபடிக்காக சுமார் ரூ. 8 இலட்சத்தை, விவசாய கடன் சங்கத்தின் மூலம் கடன் பெற்று அந்தக் கடனை கட்டமுடியாமல் சுமார் 6,000 பேர்கள் இன்று தவிக்கின்ற நிலை இருக்கிறது. அதோடு இந்தக் கடனை ஒத்திவைக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ? அதோடு விவசாயி உற்பத்தி செய்த புகையிலையை கடந்த இரண்டுமூன்று ஆண்டுகளாக வியாபாரிகள் குறைந்த விலையில் கொள்முதல் செய்து அதே நேரத்தில் அதிக விலைக்கு விற்பதால், விவசாயிக்கும் பலன் இல்லை, வாங்குபவர்களுக்கும் பலன் இல்லை. அதோடு, வியாபாரிகள் சேர்ந்து கூட்டுறவுச்சங்கத்தை அழிக்க வேண்டுமென்ற நோக்கத்திலேயும், தாங்கள் நல்ல இலாபம் அடைய வேண்டுமென்ற நோக்கத்திலேயும் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, விவசாயி உற்பத்தி செய்யும் புகையிலையை நியாய விலையில் கொள்முதல் செய்யவும் விலைக் கட்டுப்பாட்டு முயற்சியிலும் இந்த அரசு ஈடுபடுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொல்லியதிலே சில உண்மைகள் இருக்கின்றன. வேதாரண்யத்திலே புகையிலை பயிரிடுபவர், உற்பத்தியாளர்கள் 5,500 பேர்கள் இருக்கிறார்கள். ஆனால், புகையிலை பயிரிடுவோர் கூட்டுறவு சங்கத்திலே 749 பேரே உறுப்பினர்களாக இருக்கிற காரணத்தினாலே நிதி ஆதாரங்களைத் திரட்ட முடியவில்லை. நிதி ஆதாரங்கள் குறைவாக இருக்கிற காரணத்தாலே அரசும் தலையிட்டு உதவி செய்ய முடியாத நிலைமையிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் அந்தச் சங்கத்திலே உற்பத்தியாளர்கள் அனைவருமே உறுப்பினர்களாக ஆகவேண்டுமென்ற முயற்சியிலே ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்

கிறேன். அதேபோல் போதுமான அளவுக்கு, தேவையான அளவுக்கு இந்த அரசு நிதி உதவி செய்ய இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விழைகிறேன்.

*திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வேதாரண்யம் பகுதியில் அனைத்து புகையிலை உற்பத்தி விவசாயிகளும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பெற்றிருக்கிற கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. காரணம், அவர்கள் உற்பத்தி செய்திருக்கிற புகையிலைக்குக் கட்டுபடியான விலை கொடுத்து கொள்முதல் செய்கின்ற முறை இல்லை. எனவே, கூட்டுறவுச் சங்கத்தில் எவ்வளவு விவசாயிகள் இருக்கிறார்கள் என்பது பிரச்னை அல்ல. அரசாங்கமே அவர்கள் விளைவிக்கின்ற புகையிலை அனைத்தையும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல ஆலோசனைகள் பரிசீலிக்கப் பெறும்.

(ஈ) கூட்டுறவுக் கடன்கள் வசூலில் கெடுபிடி

திரு. ஓ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் தாலுகாவிலுள்ள, செவரக்கோட்டை, கூத்தலூர் கிராமங்களில் சிறு விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதில் வீடு வாசல்களை ஜப்தி செய்தல், சாமான்களைப் பறிமுதல் செய்தல் போன்ற கெடுபிடிகளைச் செய்து வருவதால் அவர்களிடையில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவரவர்களே, கூத்தலூர் கிராமம் கூட்டுறவு விவசாய வங்கியின் விவகார எல்லையிலுள்ள 32 கிராமங்களில் செவரக்கோட்டை மற்றும் கூத்தலூர் கிராமங்கள் உள்ளன. சங்கத்தில் 884 கடன் உறுப்பினர்கள் ரூ. 9.01 இலட்சம் சங்கத்திற்கு கடன் பாக்கி செலுத்த வேண்டியுள்ளது. இதில் 809 உறுப்பினர்கள் ரூ. 5.81 இலட்சம் தவணை கடந்த கடன் பாக்கி செலுத்த வேண்டியுள்ளது. இந்த 809 உறுப்பினர்களில் 624 சிறு விவசாயிகள் ரூபாய் 3.47 இலட்சமும், மற்ற 185 விவசாயிகள் ரூ. 2.34 இலட்சமும் செலுத்த வேண்டியுள்ளது.

குறிப்பிட்டுள்ள இரண்டு கிராமங்களைப்பற்றிய விவரங்கள் கீழ்வருமாறு :—

		செவரக்கோட்டை.		கூத்தலூர்.	
		உறுப்பினர்கள்.	தொகை ரூ.	உறுப்பினர்கள்.	தொகை ரூ.
1.	கடன் பாக்கி	41	50,000	123	1,02,000
2.	மொத்த கடனில் தவணை தவறிய கடன்	40	27,000	115	78,000
3.	(அ) கலம் (2ல்) உள்ள தவணை தவறிய கடன் பாக்கியில் சிறு விவசாயிகள் தவணை தவறிய கடன் பாக்கி.	30	14,000	96	57,000
	(ஆ) இதர விவசாயிகளின் தவணை தவறிய கடன் பாக்கி	10	13,000	19	21,000

அரசின் கொள்கைப்படி, வசூலைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுத்து, தவணை தவறிய கடனளவு குறைக்கப்பட வேண்டும். வரும் பருவங்களில் தொடர்ந்து கடன் வழங்கவும் 1978-79 ஆம் ஆண்டில் ரூ. 140 கோடிக்கு குறுகியகால மற்றும் நடுத்தர கால கடன்கள் வழங்கும் குறியீட்டை எட்டவும் தாமதமின்றி கடன் வசூல் செய்ய வேண்டியது மிகவும் அவசியம். ஆயினும், சிறுவிவசாயிகள் விஷயத்தில் கடன் வசூலில் தீவிர நடவடிக்கை எடுக்கப்படமாட்டாதென அரசு தெளிவாக அறிவுறுத்தியுள்ளது.

செவரக்கோட்டை, கூத்தலூர் ஆகிய இரு கிராமங்களையும் உட்கொண்ட இராமநாதபுரம் மத்தியக்கூட்டுறவு வங்கி, 1978-79 ஆம் ஆண்டில் ரூபாய் 9 கோடி அளவுக்கு குறுகிய கால விவசாயக் கடன்கள் வழங்கத் திட்டமிட்டுள்ளது. இத்தொகையில் ரூ. 7.55 கோடி 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குமுன் வழங்கப்பட இருக்கிறது. ஆனால், தவணை தவறிய கடன்கள் வசூலிக்கப் படாமல், போதிய தவணைதவறாத கடன் அளவைப் பெறாததால் (Non - Overdue Cover deficit) இத்திட்டப்படி செய்ய இயலாது. இந்திய ரிசர்வ் வங்கியின் ஆணைப்படி, போதிய தவணைதவறாத கடன் அளவை பெற்றிராத ஒரு வங்கி அதன் கடன் வரையறைகளிலிருந்து கடன் பெறமுடியாது, இச்சிக்கலைத் தவிர்க்க, இவ்வங்கி ரூ. 4.5 கோடி வழிவகை முன்பணமாக ஒதுக்கீடு செய்ய அரசை வேண்டியுள்ளது. ஆகவே கடனைத் திருப்பிச் செலுத்த இயலும் பெரு விவசாயிகளிடமிருந்து கடனை வசூல் செய்ய வேண்டியது மிகவும் அவசியம்.

[திரு. ஏ. கிருஷ்ணசாமி] [1978 செப்டம்பர் 13

சிறு விவசாயிகள் மீது ஜப்தி நடவடிக்கை எடுக்கப் பெற வில்லை. அறிவிப்பில் குறிப்பிட்டபடி சம்பந்தப்பட்ட கிராமங் களில் எந்தவிதமான பதட்ட நிலையும் இல்லை.

திரு. ஒ. சுப்பிரமணியன் : என்னுடைய கேள்விக்கு நீண்ட விவரமான பதில் கொடுத்திருக்கிறார்கள். இதில் பெரிய விவசாயி களிடம்தான் வசூல் செய்யப்படுகிறது, சிறிய விவசாயிகளிடம் வசூல் செய்யப்படவில்லையென்று கூறியிருக்கிறார்கள். இராமநாத புரத்திலே தொடர்ந்து 3 ஆண்டுகள் வறட்சியாகவும் சென்ற ஆண்டு புயலாலும் பாதிக்கப்பட்டது. ஆகவே, வறட்சி மாவட்டங்களாக தர்மபுரி, இராமநாதபுரம் போன்ற மிகப் பெரிய மாவட்டங்களிலே விவசாயிகளிடமிருந்து கடன் வசூல் செய்வதைத் தள்ளி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கிடுக்கிடி என்ற பகுதியிலிருந்து எனக்கு வந்த தந்தியை அமைச்சரவர் களிடம் கொடுத்திருக்கிறேன். அங்கு ஜப்தி கெடுபிடி நடந் திருக்கிறது. ஒரு வாரத்திற்கு முன்பு விசலாயங்கோட்டையில் மறுநாள் தன்னுடைய மகளுக்குக் கல்யாணம் நடக்கப்போகிறது. ஆனால், முதல் நாள் ஜப்தி செய்ததாகத் தகவல் வந்திருக்கிறது. சில மாதங்களுக்கு முன்பு பச்சேரி என்ற ஊரிலே கீழ்த்தரமாக நடந்து கொண்டதனால், கூட்டுறவுக் கடன் கொடுக்கவேண்டியவர் தற்கொலை கூட செய்து கொண்டார் என்ற செய்தியை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அமைச்சர் அதை விசாரணைக்கு அனுப்பி இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே கடன் வசூலை அறவே நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியன் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல் அங்கே உள்ள சில நிலைமைகளைப் பற்றி அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏற்கனவே கடந்த 4 மாதங் களாக இப்படிப்பட்ட தகவல் அரசினுடைய கவனத்திற்கு வந்த பொழுதும் உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். அப்படி அருமை மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியன் அவர்கள் சொன்ன அந்தத் தகவலின் பேரிலே உரிய நடவடிக்கை எடுப் போம் என்பதை அவர்கள் நினைவுக்குக் கொண்டு வருகிறேன்.

தவணை, தவறிய அளவைக் குறைக்க சட்டபூர்வமான நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்கிறதே தவிர, கெடுபிடி யிலோ, ஜப்தியிலோ இப்படிப்பட்ட காரியங்களில் இந்த அரசுக்கு நம்பிக்கை இல்லை. ஏதாவது அத்துமீறிய காரியங்கள் தமிழக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால், உரிய முறையில் அரசானது நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 செப்டம்பர் 13]

(உ) வெங்காயத்தின் விலை வீழ்ச்சி.

திரு. செ. சதாசிவம்: பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் சமீபத்தில் வெங்காயத்தின் விலை வீழ்ச்சி யடைந்துள்ளதால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் நிலை குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே வெங்காய ஏற்றுமதிக் கொள்கையை மத்திய அரசு, தீர்மானிக்கிறது. வெங்காய உற்பத்தியையும் விலை நிலவரங்களை யும் பொறுத்து மாநில அரசுடன் கலந்துகொண்டு வெங்காய ஏற்றுமதியை அனுமதிப்பதையோ தடை செய்வதையோ மத்திய அரசு தீர்மானம் செய்து ஆணைகள் பிறப்பிக்கின்றது.

2. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 2.47 லட்சம் டன் வெங்காயம் தமிழ்நாட்டு மக்களின் உபயோகத்திற்குத் தேவைப் படுகிறது. ஆனால், தமிழ்நாட்டின் உற்பத்தியோ சுமார் 1.90 லட்சம் டன்கள்தான். மார்ச்சு மாதத்தில் ஒரு முறை செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் ஒருமுறையாக வருடத்தில் இரண்டு முறை வெங்காயம் அறுவடை செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் முக்கியமாக மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் வெங்காயம் பயிரிடப்படு கிறது. மதுரையில் சுமார் ஒரு லட்சம் டன்னும், கோவையில் 40 ஆயிரம் டன்னும், திருச்சிராப்பள்ளியில் 22 ஆயிரம் டன்னும், திருநெல்வேலியில் 30 ஆயிரம் டன்னும் உற்பத்தி செய்யப்படு கிறது. ஆகவே வெங்காயப் பற்றாக்குறையை கர்நாடக மாநிலத்திலிருந்தும் ஆந்திர மாநிலத்திலிருந்தும், தேவையான போது வணிகர்களால் கொள்முதல் செய்யப்பட்டு தமிழ்நாட்டின் தேவை நிறைவு செய்யப்படுகிறது.

3. வெங்காயம் ஏற்றுமதியை 19.7.1977 முதல் மத்திய அரசு தடை செய்தது. கர்நாடக மாநிலத்திலிருந்தும் தமிழ் நாட்டிலிருந்தும் வெங்காய உற்பத்தியாளர்களும் ஏற்றுமதி யாளர்களும், ஏற்றுமதித் தடையை நீக்குமாறு மத்திய அரசினைக் கேட்டுக்கொண்டார்கள். மாநில அரசினைக் கலந்துகொண்டு இத்தடையைத் தொடர்ந்து நீட்டிக்க மத்திய அரசு முடிவு செய்தது.

4. தமிழ்நாட்டில் சாதாரணமாக வெங்காயம் கிலோ 80 பைசா முதல் ரூ 1.20 வரை விற்கப்படும். வெங்காயத்தின் விலை மிகவும் குறைந்து விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படாவண்ணம் அதே சமயத்தில் பயன்படுத்துவோருக்கு நியாயமான விலையில் கிடைக்கும் வண்ணமும் நேப்பட் நிறுவனத்தை (NAFED—NATIONAL AGRICULTURAL CC-OPERATIVE MARKETING FEDERATION) தரத்தைப் பொறுத்து வெங்காயத்தைப் பெரிய அளவில் கொள்முதல் செய்யுமாறு மத்திய அரசு கேட்டுக்

கொண்டுள்ளது. அந்நிறுவனமும் பெரிய அளவில் வெங்காயக் கொள்முதல் செய்து, கிளை நிறுவனங்கள் மூலமும் கூட்டுறவுத் துறை நிறுவனங்கன் மூலமும் விநியோகம் செய்கிறது. தமிழ் நாட்டில் நேப்பட் (NAFED) நிறுவனத்தின் சென்னைக் கிளை தினசரி திண்டுக்கல் போன்ற உற்பத்தித் தளங்களிலிருந்து பெரிய அளவில் கொள்முதல் செய்கிறது. அந்நிறுவனம் செய்துள்ள கொள்முதலிலிருந்து விலைக்கு வாங்கி நுகர்வோருக்கு மலிவு விலையில் விநியோகம் செய்யுமாறு மாநில கூட்டுறவுத்துறை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இன்றைய நிலவரப்படி வெங்காய விலை கிலோ 80 பைசா முதல் ரூ. 1.20 பைசா வரை உள்ளது. அறுவடை சமயத்தில் உள்ள இந்த விலை நிலவரம் மிகவும் குறைவு என்று கூறமுடியாது. மேலும் நேப்பட் நிறுவனமும் வெங்காயம் கொள்முதல் செய்கிறது. ஆகவே உற்பத்தியாளர்களுக்கு விலைவாசியைப் பொறுத்த அளவில் பெரிய பாதிப்பு இருக்கமுடியாது என்று கருத இடமுள்ளது.

தமிழ்நாட்டிலிருந்தும் கர்நாடகத்திலிருந்தும் வெளிநாடுகளுக்கு வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய, மத்திய அரசு அனுமதித்துள்ளதென்றும், 19.9.1978ஆம் தேதி சுமார் 1,000 டன்கள் அளவுக்கு முதல் கப்பலில் ஏற்றுமதியை எதிர்பார்க்கலாமென்றும், சென்னை பிராந்திய மேலாளரிடமிருந்து அறியப்படுகிறது. இந்த ஏற்பாட்டினால் விவசாயிகளுக்கு ஆதரவு கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

திரு. செ. சதாசிவம்: தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானததிலே உள்ள விவசாயிகளுடைய வெங்காய உற்பத்தி மிக அதிகமாக இருக்கிற காரணத்தால், விலை வீழ்ச்சி அடைந்திருக்கிறது என்று கூறியிருக்கிறேன். ஆனால் அவர்கள் கூறி இருக்கிற அளவிலே தமிழகத்திற்கு மொத்தம் 2.47 லட்சம் டன் தேவை என்றும் ஆனால்' நாட்டில் 1.90 லட்சம் டன்தான் உற்பத்தியாகி இருக்கிறது என்று கூறுவது உண்மைக்குப் புறம்பானது என்பதைத் தாழ்மையுடன் கூறிக் கொள்கிறேன்.

அதோடு அவர்கள் தனது அறிக்கையிலே ஒரு கிலோ 80 பைசாவிலிருந்து 1.20 ரூபாய் வரை விற்கிறது என்று கூறுகின்றார்கள். ஆனால் விவசாயிகள் மத்தியிலே என்ன சொல்லப்படுகிறது என்றால் 75 கிலோ கொண்ட மூட்டை ஒன்று ரூ. 12 முதல் ரூ. 15 வரைதான் பரிதாபமாக விற்கப்படுகிறது என்ற காரணத்தினால் அவர்கள் இந்த வெங்காயத்தைப் பிரித்து எடுக்காமல் காட்டிலேயே விட்டுவிட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதைப்போக்குவதற்கு இந்த அரசு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சந்தேகம்தான் கேட்கச் சொன்னேன். மறுபடியும் இங்கே அத்தனையும் பேச ஆரம்பித்தால் அதற்கு நேரம் இல்லை. எனவே மேற்கொண்டு சந்தேகம் மட்டும் கேட்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. சதாசிவம்: அந்த வெங்காய உற்பத்தியாளர்கள் மத்திய அரசை அணுக கேட்டிருந்த நேரத்தில் அவர்கள் மாநில அரசைக் கேட்டோம், அவர்கள் தேவையில்லை என்ற முறையிலே கூறியிருப்பதாகக் கூறினார்கள். ஆகவே தயவு செய்து அமைச்சர் அவர்கள் அந்த ஏழை விவசாயிகளுடைய அக்கறையிலே நாட்டங்கொண்டு ஏற்றுமதியை விரிவுபடுத்துவதற்கான வழிவகைகளை பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே வெங்காயத்தினுடைய விலை கணிசமாக விவசாயிகளைப் பாதிக்கின்ற வகையில் குறைந்திருப்பதற்குக் காரணம் ஏற்கனவே இங்கே குறிப்பிலே எடுத்துச் சொல்லியதைப் போல, தமிழகத்திலே தேவையான வெங்காயம் உற்பத்தி இல்லாமல் வெளி மாநிலங்களில் இருந்து தேவையான அளவு வெங்காயம் வருவதற்குண்டான சூழ்நிலை இருக்கிறது. மேலும் விலை இறக்கத்திற்கு, இலங்கை போன்ற அந்நிய நாடுகளுக்கு வெங்காயம் ஏற்றுமதி செய்வது தடைசெய்யப்பட்டிருப்பதும் காரணம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல 1.20 காசுக்கு வெங்காயம் விற்கப்படுகிறது என்று குறிப்பிலே சொல்லப்படவில்லை. சாதாரணமாக, வெங்காயம் அறுவடை நேரத்தில் 80 பைசா முதல் 1.20 வரை விற்கப்படும். ஆனால் இந்த முறை விலை குறைந்திருப்பதற்குக் காரணம் மாநில அரசாங்கங்களுடைய ஆலோசனையைக் கேட்டு மத்திய அரசாங்கம் இலங்கை போன்ற வெளிநாடுகளுக்கு வெங்காய ஏற்றுமதியைத் தடைசெய்திருப்பது தான் காரணம். அண்மையிலே மத்திய அரசு, மாநிலங்களின் ஆலோசனையின் பேரில், இலங்கை போன்ற நாடுகளுக்கு மீண்டும் வெங்காயம் ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி தந்திருக்கிறது. ஆகவே இந்த மாதம் 19-ம் தேதி வரை 1,000 டன் வெங்காயம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய இருக்கிற காரணத்தாலே, ஒருவேளை நியாயமான விலை விவசாயிகளுக்கு இனிமேல் கிடைக்கலாம் என்று அரசின் சார்பிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(ஊ) தஞ்சை மாவட்டத்தில் குறுவைப் பயிரை பூச்சி தாக்குவது.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு குறுவைப் பயிரில் கடுமையாக பூச்சி தாக்கி சேதம் விளைவிப்பதை உடனடியாக தடுக்க வேண்டியது பற்றி'' அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை வேளாண்மைத் துறை மற்றும் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1978 செப்டம்பர் 13

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பாண்டில் தஞ்சை மாவட்டத்தில் சுமார் 3.60 இலட்சம் ஏக்கராக்களில் குறுவை நெல் பயிராகி இருக்கிறது. புகையானும் கூட்டுப் புழுவும் ஓரிரு இடங்களில் நெற்பயிரைத் தாக்கியுள்ளது. இந்தத் தாக்குதல் குறைவான அளவிலேயே உள்ளது. தஞ்சை மாவட்டம் முழுவதிலுமே சுமார் 20,000 ஏக்கர் நெற்பயிர் இத்தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கும் எனலாம். வேளாண்மைத் துறையினர் இத்தாக்குதல் கண்டவுடனேயே தெளிப்பான்களையும், தூவுவான்களையும் கொண்டு சுமார் 19,000 ஏக்கராவில் பூச்சித் தாக்குதலுக்கு எதிர் நடவடிக்கை எடுக்க உதவி உள்ளனர். இது தவிர கீழ்க்கண்ட நடவடிக்கைகளும் தக்க தருணத்தில் எடுக்கப்பட்டன:—

1. பூச்சி முன்னறிவிப்பு (Pest Surveillance and Rowing Scheme) திட்டங்களின் உதவி கொண்டு பயிர் பாதுகாப்பு அலுவலர்கள் முறையாக ஆய்வு செய்து, வேளாண்மைத்துறை அலுவலருக்கும், விவசாயிகளுக்கும் 'புகையான்' நோய் தாக்குதல் பற்றி முன்னறிவிப்புச் செய்யப்பட்டது.

2. குறுவைப் பயிரில் தோன்றும் பூச்சிகள் பற்றி துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இது தவிர வானொலி மற்றும் இதர சாதனங்கள் மூலமாக விவசாயிகளுக்குப் பூச்சி தாக்குதல் பற்றி முன்னெச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

3. புகையான் பற்றி சுவரொட்டிகள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

4. குறுவைப் பயிருக்குத் தேவையான எல்லாவிதமான பூச்சி மருந்துகளும் அனைத்து விவசாயக் கிடங்குகளிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

5. தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு வாடகைக்கு அளிப்பதற்காக 1,200 தூவான்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

6. புகையானின் தீவிரத் தாக்குதலுக்கு இலக்கான பகுதிகளுக்கென மத்திய அரசின் நிதியுதவியுடன் கடந்த சில வருடங்களாகச் செயல்பட்டு வரும் திட்டத்தின் கீழ் தஞ்சை மாவட்டத்தில் சுமார் 6,300 ஏக்கர் பரப்பளவில் மொத்தமாக மருந்தடிக்கும் வேலை மேற்கொள்ளப்படும்.

7. கும்பகோணம் மாயூரம் கோட்டங்களில் சுமார் 100 ஏக்கர் குறுவை அறுவடை செய்யப்பட்டுள்ளது. மற்ற கோட்டங்களில் அறுவடைக்கு வந்த பரப்பு இதைவிடக் குறைவு. இந்த இரண்டு கோட்டங்களிலும் ஏக்கர் ஒன்றுக்கு சராசரி மகசூல் பின்வருமாறு:—

	(கிலோவில்)
கும்பகோணம்	1,500 முதல் 2,000
மாயூரம்	1,700 முதல் 2,300

இதிலிருந்து பூச்சி தாக்குதலினால் மகசூல் பாதிக்கப்படவில்லை எனலாம்.

1978 செப்டம்பர் 13]

***திரு. மு. அம்பிகாபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் 3 இலட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள குறுவை நெல்லை பூச்சிகள் தாக்கியிருக்கின்றன. மருந்துகள் கிடங்கிலே வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். நோட்டீஸ்கள் அச்சடித்து ஒட்டப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். இதற்கு அடிக்கப்படுகின்ற மருந்துகள் தனியார் துறையிலே தயாரிக்கப்படுகின்றன. அந்த மருந்துகளைச் சாப்பிட்டுவிட்டு பூச்சிகள் கொழுத்துப்போய், பயிர்களைத் தின்றுகொண்டிருக்கின்றன. எனவே அரசுத் துறையிலேயே உத்தரவாதமான மருந்துகளைத் தயாரிக்க அரசு முன் வருமா என்பதையும், தனியார் துறையிலே தயாரிக்கப்படுகின்ற மருந்துகளிலே வீரியம் இருக்கிறதா என்பதைப் பரிசீலிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10-50]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டிலே நடவு செய்த குறுவைப் பயிரில் ஏறத்தாழ 20,000 ஏக்கர் இது போன்று பூச்சி தொல்லைக்கு உள்ளாகி இருக்கின்றன. அவைகளையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கு மத்திய அரசின் திட்டத்தின் கீழாக இன்று தஞ்சை மாவட்டத்தில் 6,300 ஏக்கரில் மருந்து தெளிக்கும் முறையை வேளாண்மைத்துறை ஏற்றுக்கொண்டு செயல்படுத்தி வருகிறது. மேலும் ஏதோ பழைய பூச்சி மருந்துகளை வைத்துக் கொண்டு அதைத் தெளிப்பதால் அங்கே புழுக்களும், பூச்சிகளும், அதைச் சாப்பிட்டுவிட்டு பெருத்து விடுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்து சரியல்ல. அதற்கு மாறாக நல்ல மருந்துகள் பூச்சிகள் சாகும் மருந்துகள்தான் வேளாண்மைத் துறை மூலம் கொடுக்கிறோம். புதிய மருந்துகள் நம்மிடத்தில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஏ) குமரி மாவட்டம் நெய்யாறு இடது கரை கால்வாயில் தண்ணீர் விடாமை.

திரு. அ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் நெய்யாறு இடதுகரை கால்வாயில் கேரள அரசு தண்ணீர் விடாததால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பயிராகாமலும், பயிரானவை தீய்ந்து போகும் நிலைமை பற்றிய அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, நெய்யாறு பாசனத் திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டபோது, வாய்க்காலின் வடிவமைப்பு, கேரளப்பகுதிக்கு விநாடிக்கு 450 கன அடியும், தமிழ்நாட்டிற்கு விநாடிக்கு 150 கன அடியும் நீர் வழங்குவதற்கு

ஒப்புக்கொள்ளப்பட்டது. இது கேரள அரசிடமிருந்து தமிழக அரசிற்கு வந்த நெய்யாறு பாசனத் திட்டத்திற்கான வரைமுறைகள் பற்றிய வரைவு விதிகளிலும், கேரள அரசால் உறுதி செய்யப்பட்டது. கொல்லங்கோடு தலைமதகில் விநாடிக்கு 150 கன அடி இயல்பாக நீர் வழங்குவதை, விதிமுறைகள் அத்தியாயம் ஒன்றிலுள்ள 2-வது பிரிவின் கீழ் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கைக்கு கேரள அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

2. 1978-79 ஆம் ஆண்டிற்கு கன்னியாகுமரி கிளை வாய்க்கால் பாசனத்திற்காக 1-6-1978 அன்று திறந்துவிடப்பட்டது. விநாடிக்கு சுமார் 80 கன அடி முதல் 100 கன அடி வரை மட்டுமே ஜூலை மாதம் வரை நீர்வரத்து இருந்தது. எனவே, வாய்க்காலில் விடப்பட்ட தண்ணீரைச் சிறந்த முறையில் பயன்படுத்த முறை பாசனம் (Turn System) கையாளப்படுகிறது. பாசனக் குறைவால் பயிரானவை தீய்ந்து போனதாகத் தகவல் ஏதும் இல்லை. நிர்ணயிக்கப்பட்ட அளவாகிய விநாடிக்கு 150 கன அடி தண்ணீரை கன்னியாகுமரி கிளை வாய்க்காலில் விடக்கோரி கேரள அரசை இந்த அரசு வற்புறுத்தியுள்ளது.

திரு. அ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, இங்கே கொடுக்கப்பட்டு இருக்கும் விவரம் தவறு. சுமார் 80 கன அடி முதல் 100 கன அடி வரை மட்டுமே ஜூலை மாதம் வரை நீர் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகஸ்ட் மாதத்தில் நானே நேரில் போய் பார்த்தேன். அங்கே இயல்பாகக் கிடைக்கவேண்டிய முழுத் தண்ணீரை கேரள அரசு கொடுக்காததால் கடைகோடி பகுதிகளில் நூற்றுக்கணக்கான நிலங்கள் பயிர் செய்ய முடியாமல் இருக்கின்றன. ஏற்கனவே வைக்கப்பட்ட நெல் பயிர்கள் தீய்ந்து போய் இருக்கின்றன: இங்கே கொடுக்கப்பட்டு இருக்கும் அறிக்கை தவறாக அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, அதைத் தீவிரமாக ஆலோசித்து நமக்குக் கிடைக்க வேண்டிய 100 கன அடித் தண்ணீரை கிடைக்கச் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தப்படி 150 கன அடி தண்ணீர் கிடைக்க வேண்டும். அதில் இப்போது 80 முதல் 100 கன அடி தண்ணீர் கிடைத்து இருக்கிறது. டர்ன் சிஸ்டம் மூலமாக அங்கே தண்ணீர் சிறந்த முறையில் எல்லோருக்கும் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல் இது தவறான தகவலாக இருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்து அது சரிப் படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஏ) கல்லணை கிளிக்கூண்டில் நீர்க்கசிவு

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவரவர்களே, "காவேரி ஆற்றில் கல்லணைக்கு அருகில் உள்ள கிளிக்கூண்டில் நீர் கசிவதைத் தடுக்க" என்ற அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, கிளிக்கூடு வெள்ள உடைப்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கரை எந்தவித ஆபத்துமின்றி நல்லமுறையில் உள்ளது. இம்மாதிரியாக அமைக்கப்பட்டுள்ள பெரிய மண் கரைகளின் பின்புறம் தண்ணீர் கசிந்து வருவது இயற்கையே ஆகும். கரைகளின் முன் பக்கம் உள்ள தண்ணீரினால் மண் கரைகள் ஊறிவிடுகின்றன. இம்மாதிரியாக ஊறி கரையின் உள்பக்கம் வருகின்ற தண்ணீர், கரையில் விசேஷமாக அமைக்கப்பட்டுள்ள வடிகால் அமைப்புகள் (filtering media) வழியாக வடிந்து மண் கரையின் பின்புறம் சுத்தமான தண்ணீராக வெளிவருகிறது. இம்மாதிரியாக கசிந்து வெளிவரும் தண்ணீரில் மண்ணும் கலந்த களிமண் நிறத்தில் வெளி வந்தால்தான் அச்சப்பட வேண்டும். ஆனால் கிளிக்கூடு உடைப்பை அடைத்திருக்கும் மண் கரையிலிருந்து கசிந்து வரும் தண்ணீர் சுத்தமான தண்ணீராகத்தான் வருகிறது.

திரு. கோ. இளங்கோவன்: தலைவரவர்களே, இந்த கிளிக்கூண்டில் அணை சரியாக இருந்தாலும், தஞ்சை மாவட்டம் பாதிக்கப்படுகிறது; உடைந்தாலும் தஞ்சை மாவட்டம் பாதிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதற்குக் காரணம் அதன் மேற்கே அமைந்துள்ள ரோட் டாம் சரியாக அமைக்கப்படவில்லை. அந்த ரோட் டாம் சரிவர செயல்படவில்லை என்றால் அந்த நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, அதைச் சரியாக அமைக்க மணல்கரைகள் அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் கிளிக்கூண்டு பகுதியில் ஏற்பட்ட உடைப்பு அடைக்கப்பட்டு மணல் கரைகள் போடப்பட்டு இருக்கின்றன. அந்த மணல் கரையில் இருந்து நீர் கசிவு ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். கசிந்து வெளிவரும் தண்ணீர் மண்ணும் கலந்த களிமண் நிறத்தில் இருக்குமானால் அச்சப்பட வேண்டும். ஆனால் அப்படி இல்லை. கசிந்து வரும் தண்ணீர் சுத்தமான தண்ணீராகத்தான் இருக்கிறது. இப்போது இருக்கும் மணல் கரைகள் நன்றாகத்தான் இருக்கின்றன. எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூ. ச. முருகேசன்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த உடைப்பு ஏற்பட்டதற்கு முக்கிய காரணம் பக்கத்தில் இருக்கிற இடத்தில் விவசாயிகள் நெல் பயிரிடுவதால் அங்கே அந்தத் தண்ணீர் தேங்கி அந்த உடைப்பு ஏற்படுகிறது. ரோட் டாம் சரியாக செயல்படவில்லை. ஆகவே, பக்கத்தில் இருக்கும் நிலங்களில் உள்ளவர்களை அப்புறப்படுத்தினால் அந்த மாதிரி உடைப்பு ஏற்படாது. அதை அமைச்சர் அவர்கள் செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினரின் யோசனை கருத்தில் கொண்டு சரி செய்யப்படும்.

(ஐ) மணிமுத்தாறு நீர்ப்பிடிப் பகுதிகளில் மழை பொய்த்து விட்டமை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, "அமபாசமுத்திரம தொகுதியிலுள்ள மாஞ்சோலை எஸ்டேட் பக்கமுள்ள காடுகளில் மரம் வெட்டப்பட்டு வருவதால் மணிமுத்தாறு நீர்ப்பிடிப் பகுதிகளில் போதிய மழை இல்லாததால் விவசாயிகளிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து" என்ற அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: 1929-ம் ஆண்டு நெல்லை மாவட்டத்தில் முன்னாள் சிங்கம்பட்டி ஜமீனைச் சேர்ந்த சுமார் 3388 ஹெக்டேர் காடுகள் பம்பாய் பர்மா ட்ரேடிங் கார்ப்பொரேஷன் (B.B.T.C.) என்ற நிறுவனத்திற்கு ஜமீன்தாரால் 99 வருட குத்தகைக்கு கொடுக்கப்பட்டன. இந்தக் குத்தகையின் நிபந்தனைகளின்படி "மேற்படி குத்தகைக்கு விடப்பட்ட காடுகளில், காபி, டீ, கோகோ, சின்கோனா, ஏலக்காய், மிளகு, ரப்பர் முதலிய தோட்டப் பயிர்கள் வளர்க்கலாம் என்பதும், இதற்கான தேவையான அளவிற்கு மரங்களை வெட்டிவிட்டு, கட்டிடங்களை எழுப்பவும் பாதைகளை அமைக்கவும் உரிமையளிக்கப்பட்டுள்ளது; ஆனால் வெட்டப்பட்ட மரங்களையும், புதர்களையும் தோட்டப்பயிர் வளர்ச்சி சம்பந்தமாக மட்டுமே உபயோகப்படுத்த வேண்டும், மீதியை எரித்து விட வேண்டும் என்பதும், வேறு யாருக்கும் விற்கவோ அல்லது பண்ட மாற்றாக கொடுக்கவோ கூடாது என்பதும் குறிப்பிடத்தக்க விதிகள் ஆகும்.

பிறகு, 1948ஆம் ஆண்டில் ஜமீன் ஒழிப்பு சட்டத்தின் அடிப்படையில் சிங்கம்பட்டி ஜமீன் காடுகளும் அரசுக்குச் சொந்தமாயின. அதன் காரணமாக 1958ஆம் ஆண்டு வருவாய் வாரியத்தால் (ரெவின்யூ போர்டால்) 1929ஆம் வருடத்திய குத்தகை ஒப்பந்தம் பரிசீலிக்கப்பட்டு இந்தக் குத்தகை தொடர்ந்து நீடிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டதுடன்

மேலும் ஒரு புதிய, முக்கிய நிபந்தனையும் விதிக்கப்பட்டது. அதாவது மணிமுத்தார் நதியின் உப நதியான குசங்குளியாரின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மரங்களை வெட்டக்கூடாது என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது. அதன்படி சுமார் 402 ஹெக்டேர் காடுகள் இந்தடுப்பு விதிக்குள் கொண்டு வரப்பட்டது. மேற்படி நிபந்தனை விதிக்கும்போது, வருவாய் வாரியம் (ரெவின்யூ போர்ட்) குத்தகை ஒப்பந்தப்படி மரங்கள் வெட்டப்பட்டால அந்த இடங்களில் துரிதமாக தோட்டப்பயிர்கள் நடபட வேண்டும் என்றும் இந்த நிபந்தனைகளை மீறினால், குத்தகையை ரத்து செய்து, எவ்வித நஷ்டஈடுமின்றி காடுகளை அரசே எடுத்துக்கொள்ளும் என்றும் திட்டவட்டமாக மேலும் ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டது. இந்த நிபந்தனைகளுக்குட்பட்டே குத்தகை நடைமுறையில் இருந்து வந்தது.

இதற்கிடையில் 1952-ம் ஆண்டில் B.B.T.C. கம்பெனியாரால் தங்களுடைய தோட்டப்பயிர் வளர்ச்சித் திட்டத்தின்படி வெட்டப்பட்ட மரங்களை மணிமுத்தாறு அணைத்திட்ட அதிகாரிக்கு மட்டும் விற்கலாம் என்றும், மணிமுததாறு அணை கட்டி முடிக்கப்பட்டபின் 1966 ஆம் ஆண்டில் வெட்டப்பட்ட மரங்களை திருநெல்வேலி மாவட்ட வன அலுவலருக்கு விற்கலாம் என்றும், அரசு அனுமதி வழங்கியது. இதனால் வெட்டப்பட்ட மரங்களை விற்கலாம் என்று அனுமதி கொடுத்தாலும், மணிமுத்தாறு திட்ட அதிகாரிக்கோ, அல்லது மாவட்ட வன அலுவலருக்கோ மட்டும் தான் கொடுக்க வேண்டும் என்பது தான் முக்கியமான நிபந்தனையாகும். 1972 ஆம் ஆண்டு வரை குத்தகை ஒப்பந்தம் இம்முறையில் செயல்பட்டு வந்தது.

ஆனால், ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, 1972 ஆம் ஆண்டு B.B.T.C. கம்பெனியாரின் 16.5.1972 தேதி கடிதம் மூலம் வெட்டப்பட்ட மரங்களை காட்டிலிருந்து வெளியே கொண்டு போய், வெளியாருக்கு விற்க அனுமதி வேண்டுமென ஒரு அனுமதி கோரியது. அந்த விண்ணப்பத்தைப் பரிசீலித்த அன்றைய அரசு, வெட்டப்படும் மரங்களை அரசுக்கு ஒரு சிறிய உரிமைத்தொகை (Seigniorage) அளித்துவிட்டு காடுகளின் வரம்பிற்கு வெளியே B.B.T.C. நிறுவனம் யாருக்கும் விற்கலாம் என்று 29-6-1973ல் அனுமதி கொடுத்தது. இந்த உத்தரவு முந்திய 1929, 1958 ஆம் ஒப்பந்தங்களின் முக்கிய நிபந்தனைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட நிலையை ஏற்படுத்தியது.

இந்த உத்தரவிற்குப் பிறகு B.B.T.C. கம்பெனியார் பெருவாரியாக காடுகளை அழித்து, மரங்களை வெட்டி விற்பனை செய்ய ஆரம்பித்தார்கள். இது தொடர்ந்து நடக்கவே பொது மக்களிடமிருந்து காடுகள் பெருமளவில் அழிக்கப்படுகிறது; அதனால் மழை வளம் குன்றுகிறது என்றும், வனவிலங்குகள் பாதிக்கப்படுகின்றன என்றும் ஏராளமான புகார்கள் வரத் தொடங்கின. இந்த நிலையில் B.B.T.C. கம்பெனியாரால் குத்தகை ஒப்பந்தப்படி, வனத்தோட்டப் பயிர் வளர்ப்பதற்காகத்தான் மரங்கள்

வெட்டப்பட்டதா என்பதும் கண்காணிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்தக் குறைகள் மத்திய அரசின் கவனத்திற்கும் சென்றன. 1975 ஆம் ஆண்டு இறுதியில், மத்திய அரசின் விவசாய அமைச்சருக்கும் அன்றைய இந்திய பிரதமரின் கவனத்திற்கும் இப்புகார்கள் சென்று, இப்பகுதிகளில் காடுகள் அழிக்கப்பட்டு வருவதைத் தடுக்க மாநில அரசு உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவித்தார்கள். இதன் அடிப்படையில் 1976 பிப்ரவரியில் காடுகளில் மரங்களை இனிமேல் வெட்டக்கூடாது என்று B.B.T.C. கம்பெனிக்கு அரசு தடை உத்தரவு பிறப்பித்தது. B.B.T.C. கம்பெனிக்கு குத்தகைக்கு விடப்பட்ட காடுகளில், 1976 ல் ஏற்படுத்தப்பட்ட வனவிலங்கு சரணாலயத்தில் உள்ள, அபூர்வமான வகை என்று கருதப்படும் சிங்கவால் குரங்கு இனத்தைக் காப்பாற்றவும் அவைகளின் இயற்கையான புழக்கத்திற்காகவும், மணிமுத்தாறுக்கு கிழக்கே ஒரு மைல் அகலத்திற்கு சுமார் 352 ஹெக்டேர் அளவுள்ள காடுகளைப் பாதுகாக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. B.B.T.C. கம்பெனியும் இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டது. இதன்பின் 1976 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவு செப்டம்பர் 1976 ல் நீக்கப்பட்டது. ஆனால் ஜூன் 1973 ம் தேதி உத்தரவுபடி தொடர்ந்து காடுகள் அழிக்கப்பட்டு மரங்கள் வெட்டப்பட்டு B.B.T.C. கம்பெனியால் வெளியாருக்கு விற்கப்பட்டு வந்தன. இதைத் தவிர, வேறு எந்த அனுமதிகளையும் சமீப காலத்தில் இந்த அரசு வழங்கவில்லை.

மேற்கூறிய விவரங்களிலிருந்து, 1929 ஆம் ஆண்டு குத்தகை ஒப்பந்தத்தின்படி அரசுக்கு பல அடிப்படை உரிமைகளும் காடுகளை பாதுகாக்க வசதிகளும் இருந்தும் 1973 ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணையின் காரணமாக தொடர்ந்து பெருமளவில் காடுகளை அழித்து மரங்கள் வெட்டப்படுவதால் தற்போதுள்ள நிலையை மாற்றவும் காடுகள், மேலும் அழிக்கப்படுவதைத் தடுக்கவும் சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுப்பது குறித்து இந்த அரசு இப்பொழுது தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. இதன் தொடர்பாக எவ்வித பதட்ட நிலையும் அந்தப் பகுதியில் இப்பொழுது இல்லை என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு எழுத்துபூர்வமாக பதில் கொடுத்து இருக்கிறார்கள். அதிலே நான் சுருக்கமாக சில விஷயங்களை உங்கள் மூலமாக அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்து விளக்கம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த அறிக்கையில் உள்ளபடி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மரங்களை வெட்டக் கூடாது என்ற நிபந்தனை மீறப்பட்டு இருக்கிறது, தனியாருக்கு விற்கக் கூடாது என்ற நிபந்தனை மீறப்பட்டு இருக்கிறது. தோட்டம் போடவேண்டும்

என்ற நிபந்தனை மீறப்பட்டு இருக்கிறது. ஆகவே, சொல்லப்பட்ட நிபந்தனைகள் அனைத்தும் மீறப்பட்டு இருக்கிறது. அந்தக் குத்தகைதாரர்கள் அதை மீறியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, அந்த ரோடுவழியாகப் போக வேண்டுமென்றால் குத்தகைதாரர்களிடம் அனுமதி வாங்க வேண்டும். லைட் போட வேண்டுமென்றால் அவர்களிடம் அனுமதி வாங்க வேண்டும். இப்படிப்பட்ட சங்கடங்கள் இருப்பதை உத்தேசித்தும், நிபந்தனைகள் மீறப்பட்டிருப்பதை உத்தேசித்தும் அரசாங்கம் இந்தக் காரணங்களைக் காட்டி, ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு, அரசாங்கமே ஏற்று நடத்த முன்வருமா?

இரண்டாவதாக இந்தக் காடுகளை வெட்டுவது உடனடியாகத் [illegible] அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மூன்றாவதாக என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் மூன்று பேர்கள் கேட்கப் போகிறீர்கள். அதனை உங்களுக்குள் பங்கிட்டுக் கேட்கலாம். ஒருவரே 3, 4 கேள்விகளைக் கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும்?

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: 1972 ஆம் வருஷ உத்தரவும் மீறப்பட்டிருக்கிறது. 1976 ஆம் வருஷ உத்தரவு மீறப்பட்டிருக்கிறது; நிபந்தனைகள் மீறப்பட்டிருக்கின்றன; பெருத்த மோசடி நடந்திருக்கிறது; இவைகளைப்பற்றி அரசாங்கம் விசாரணை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, என்னுடைய அறிக்கையிலே, தற்போதுள்ள நிலைமைகள் பற்றியும், காடுகள் மேலும் அழிக்கப்படுவதைத் தடுக்கவும் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படுவது பற்றி இந்த அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது என்று தெரிவித்திருக்கிறேன்.

அதைத் தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு இன்னொரு விவரத்தையும் தர விரும்புகிறேன். இப்போது அவர்கள் எழுப்பியுள்ள பல்வேறு சூழ்நிலைகளையும் மனதிற்கொண்டு "பாம்பே பர்மா ட்ரேடிங் கார்ப்பரேஷன் லிமிடெட்" நிறுவனத்தார் மேற்கொண்டு மரங்களை வெட்டுவதைத் தடை செய்யும்படி அரசு வனத்துறைத் தலைவருக்குத் தெரிவித்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, காடுகளை தனியாருக்கு காண்ட்ராக்ட் விடுவதனால் நான் அரசின் விதிமுறைகள் மீறப்படுகின்றன; காட்டை அழிக்கும் நிலை ஏற்படுகிறது. இந்நிலையைப் போக்க, அரசுத் துறையே காடு வெட்டும் காண்ட்ராக்டை எடுத்து நடத்த முயற்சி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

__மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:__ அரசின் பொறுப்பிலே இருக்கிற காடுகளை தனியாருக்கு குத்தகை விடுகின்ற முறையை ஒழிக்க வேண்டுமென்று கருதி, அதற்கான சட்ட முன்வடிவை அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

__திரு. ரா. கிருஷ்ணன்:__ தலைவரவர்களே, 29-7-1973-ல் சிறிய உரிமம் தொகை அளித்துவிட்டு மரங்களை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. அந்தச் சிறிய உரிமம் தொகை எவ்வளவு? அது 29-6-1973-ல் போட்ட உத்தரவு. செப்டம்பர் 1976-ல் ஒரு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இந்த உத்தரவுகளுக்கு பின்னணியாக அரசியல் ஏதாவது இருக்கிறதா? அதில் சம்பந்தப்பட்டவர்கள் யார் யார் என்பதை அறிய விரும்புகிறேன்.

அதோடு, மலை உச்சியில் இருக்கக்கூடிய மரங்களை வெட்டி, அந்த இடத்தில் தேயிலை அல்லது காப்பி போட முடியாது. காரணம் அங்கே இருப்பது வெறும் கல். கல்லிலே நிச்சயமாக வேறு பயிர் போட முடியாது. ஆகவே மரங்களை எல்லாம் வெட்டுவதை தடுக்க உடனடியாக உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

__மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :__ தலைவரவர்களே, அந்தக் கட்டணத் தொகை—உரிமத் தொகை—3, 4 பிரிவுகளாக வருகின்றன.

பெரிய மரங்கள்,	கிளாஸ் 1, 20 சி.எப்.டி..	15.75 காசு
	கிளாஸ் 2, 20 சி.எப்டி..	.. 13.12 காசு
	கிளாஸ் 3 (1)	.. 11.25 காசு
	கிளாஸ் 3 (2)	.. 7.50 காசு

இது மரங்களுக்கு. விறகுகளுக்கு (ஃபயர்வுட்ஸ்),

லோக்கல் கன்சம்ப்ஷன்—டன்ஸ்—81 சி.எப்.டி..	.. 2,25 காசு
லோக்கல் கன்சம்ப்ஷன் ஹெட் லோடு	.. 6 காசு
எக்ஸ்போர்ட்—டன்ஸ்—81 சி.எப்.டி.	..4.00 ரூபாய்
எக்ஸ்போர்ட்—ஹெட் லோடு	.. 25 காசு
சார்க் கோல்—டன்	.. 20 ரூபாய்
சார்க் கோல்—எக்ஸ்போர்ட்	.. 25 ரூபாய்

இப்படி பல்வேறு வகையில் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதிலே அரசியல் பின்னணி ஏதாவது உண்டா என்று கேட்டார்கள். இதிலே என்ன அரசியல் இருந்தது என்ற தகவல் இல்லை. ஆனால் இதுபோன்று மேலும் தவறுகள் நடைபெறாமல் தடுக்க தகுந்த முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

[முற்பகல் 11-00]

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு

__மாண்புமிகு திரு. கி. மனோகரன் :__ பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க எண் 5 சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 35/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்* என முன்மொழிகிறேன்.

1978-79 ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை அறிக்கையின் மீது எடுத்துப் பேசி விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்றிருக்கிறது. இவ்விவாதத்தில் பல உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, நிதி ஒதுக்க எண் 5 சட்ட முன்வடிவை விவாதம் எதுவும் இல்லாமலே நிறைவேற்றித் தருவார்களானால் எல்லோருக்கும் வசதியாக இருக்கும். பல மசோதாக்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. இது குறித்துப் பேச வேண்டிய கருத்துக்களை உறுப்பினர்கள் ஏற்கெனவே மனம் திருப்திப்படுகிற அளவுக்கு பேசி இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அல்லது இன்னும் சில புதிய கருத்துக்கள் இருக்கின்றன பேசுவதற்கு என்று உறுப்பினர்கள் விரும்புவார்களேயானால் தலைவர்கள் வரிசையிலே இருப்பவர்கள் மட்டும் தங்களது கருத்துக்களை எந்த அளவுக்குச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமோ அந்த அளவுக்கு சுருக்கமாகச் சொல்லி இந்த மசோதாவை நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லோருக்கும் தெரியும். அப்ராப்ரையேஷன் பில்களை சப்ளிமெண்டரியின் மீது விவாதம் முடிந்ததற்குப் பின்னாலே நேராக நிறைவேற்றுவதுதான் மரபாக இருந்து கொண்டிருக்கிறது. தாங்கள் விரும்பினால் அப்படியே நிறைவேற்றலாம்.

__மாண்புமிகு திரு. கி. மனோகரன் :__ தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்கனவே என்னிடம் அந்தக் கருத்தைத் தெரிவித்தார்கள். மற்ற தலைவர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன். திரு. சங்கரய்யா அவர்களிடமும் கேட்டபோது அதைப் பற்றி ஒன்றும் விவாதிக்க வேண்டியதில்லை விட்டு விடலாம் என்று சொல்கிறார்கள். திரு. லத்தீப் அவர்கள் நமக்கு எப்போதுமே ஒத்துழைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னார்கள். நான் சில கருத்துக்களைச்

---

*1978 செப்டம்பர் 11ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

சொல்ல வேண்டி இருக்கிறது. ஆகவே அதற்கு அனுமதி வேண்டும் என்று சொன்னார்கள். அதனை மறுக்கின்ற தைரியம் எனக்கு இல்லை. மற்றவை வரம்புக்கு பொறுப்பு தங்களுடையது. திரு. சங்கரய்யா அவர்கள் இதனை வலியுறுத்துவது குறித்து எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் புதிதாக ஏதேனும் கருத்துக்களைப் பற்றி சொல்லியிருந்தால் நான் அதனை முதலமைச்சருக்குச் சொல்லி மேலும் நடக்க ஏதுவாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> தயவுசெய்து திரு. உமாநாத் அவர்களுக்கு இந்த முறைகள் பற்றி நன்கு தெரியும். அடுத்து இப்போது நான் திரு. சங்கரய்யா அவர்களைப் பேச அனுமதித்தால் அவர்களைத் தொடர்ந்து எல்லோரும் பேசிக் கொண்டிருப்பார்கள். ஆகவே இங்கே இருக்கின்ற மரபைக் காக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் 8 மசோதாக்கள் இருக்கின்றன. ஆகவே திரு. சங்கரய்யா அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்ராப்ரியேஷன் பில்களிலே எப்போதுமே பேசுவதில்லை. நீங்கள் இதிலே பேசித்தான் ஆக வேண்டுமென்றால், உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்தப் பொருள் குறித்து நிறையப் பேசியிருக்கிறார்கள். ஆகவே எல்லோரும் ஒத்துழைத்தால் நல்லது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மீது பேசி வீணாக நேரத்தைச் செலவழிக்க வேண்டாம் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்களின் தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்படுகிறது ....

<u>திரு. ரா. மார்க்கபந்து:</u> தலைவரவர்களே, இதற்கு முன்னாலே நாங்கள் யாருமே பேசவில்லை.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்:</u> தலைவரவர்களே நான் திரு. மார்க்கபந்து அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் தொடர்ந்து திரு. மார்க்கபந்து அவர்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டுதான் வருகிறேன். அது கேட்கக் கேட்க தித்திப்பாக இருக்கக்கூடிய அளவிலே இருந்தது. திரு. கந்தசாமி அவர்கள் மிகவும் ஆழமாக வேரூன்றக்கூடிய அளவிலே நிறையப் பேசி இருக்கிறார்கள். ஆகவே, இப்போது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒத்துக்கொண்டதைப்போல் எல்லோரும் அவருடைய வழியைப் பின்பற்றி எங்களுக்கு ஒத்துழைப்பார்களானால் அது மிகவும் உதவியாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, அவ்வாறு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். எப்பொழுதுமே உறுப்பினர்களுடைய உரிமையினை நிலை நாட்டக்கூடிய அளவிலே பேசுகின்ற திரு. லத்தீப் அவர்களே அமைதியாக இருக்கும்போது திரு. கந்தசாமி அவர்கள் தயவு செய்து ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. லத்தீப் எழுந்தார்)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. சங்கரய்யா அவர்கள் ஒத்துக்கொண்டார்கள், ஆகவே திரு. லத்தீப் அவர்களும் ஒத்துக் கொண்டு எங்களுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. எம். ஏ. லத்தீப்:</u> தலைவரவர்களே, இதிலே பேச வேண்டும் என்று நான் வற்புறுத்தவில்லை. பிடிவாதமும் செய்ய வில்லை. நாங்கள் துணை மானியக் கோரிக்கையிலே நாங்கள் பேச வேண்டும் என்று சொன்னபோது தாங்கள்தான் அப்ராப்ரியேஷன் பில்லிலே பேசலாம் என்று சொன்னீர்கள். அதனால்தான் நாங்கள் அன்றைக்குப் பேசவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> பல மசோதாக்கள் வருகின்றன. அவற்றில் எதிலாவது பங்கு கொள்ளுங்கள். இதில் மட்டும் நெருக்கடியாக இருப்பதால் சொல்கிறேன். பொருத்தருளுங்கள்.

<u>திரு. என். சங்கரய்யா:</u> பேரவைத் தலைவர் அவர்களும் அவை முன்னவர் அவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க சில பிரச்னைகள் இருந்தாலும் அவற்றைப் பற்றி இப்போது இங்கு பேசுவதற்கு நான் வற்புறுத்தவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> பேரவை முன்னுள்ள கேள்வி

''தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.5) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35 / 1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்ற பெற்று, சட்ட முன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்:</u> பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 35/78) நிறைவேற்றப்பெற வேண்டும்'' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவை முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக ஆக்கப் பெற்றது.

(ஆ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை. சட்ட முன்வடிவு எண் 33/1978)

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே,

"5—6—1978 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள, தமிழ் நாடு *1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/1978) இப்பேரவை நிராகரிக்கின்றது."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் முறையே வழி மொழியப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே

"தமிழ்நாடு, 1978ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 33/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. சுப்பு அவர்களின் தீர்மானமும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் படுகின்றன.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்—(திரு. பி. எச். பாண்டியன் தலைமை)

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே. தனி அதிகாரிகள் நியமனத்திற்காகப் போடப்பட்ட அவசரச் சட்டத்தை இந்தப் பேரவை நிராகரிக்கிறது என்ற அடிப்படையில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக தனி அலுவலர்களை நியமிப்பது என்பது ஒரு சங்கத்தில் ஏதாவது ஒழுங்கீனங்கள் கண்டு பிடிக்கப் பட்டால் தனி அலுவலர் போடவேண்டுமென்று சட்டத்தில் இருக்கிறது. ஆனால் ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டிருக்கும் கூட்டுறவுச் சங்கங்களையும், கூட்டுறவு நிறுவனங்களையும் கலைப்பது என்று ஒரு கால கட்டத்தில் முடிவு செய்யப்பட்டு இங்குள்ள மத்திய கூட்டுறவு வங்கிகள் எல்லாம் கலைக்கப்பட்டன. ஒழுங்காக நடை பெற்றுக் கொண்டிருந்த கூட்டுறவு நிறுவனங்கள் கூடக் கலைக்கப்பட்டன. ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டிருப்பவைகளையும் 'சூப்பர்ஸீட்' செய்ய வேண்டுமா ? கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி இந்தியா

* 1978 செப்டம்பர் 8-ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் வெளியிடப் பெற்றுள்ளது.

விலேயே நல்ல முறையில் இயங்கும் வங்கி என்று
தேர்ந் தெடுக்கப்பட்டு பரிசு கூட வழங்கப் பட்டிருக்கிறது.
அதுவும் 'சூப்பர்ஸீட்' செய்யப் பட்டுள்ளது. அப்படியானல்
இந்தியாவிலுள்ள அனைத்து கூட்டுறவு வங்கிகளையும் சூப்பர்
ஸீட் செய்ய வேண்டும். தமிழக அரசு தன்மானத்தோடு கேட்க
வேண்டிய கேள்வி, கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியைக்
கூட கலைத்திருக்கிறார்கள், அதற்கும் ஸ்பெஷல் ஆபீஸர் போட
வேண்டுமென்று கூறுகிறார்களே, அதற்கு என்ன அவசியம் என்று
கேட்க முடியாத கால கட்டத்தில் கேட்கவில்லை, அன்று பேச
முடியாது, எழுத முடியாது ? ஆகவே அதை ஆட்சேபிக்கவில்லை.
இன்று, பேசக் கூடிய காலத்தில், எழுதக்கூடிய காலத்தில் அதற்கு
ஒரு தேர்தல் நடத்தியிருக்கலாம். கூட்டுறவுத் துறையில்
தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தான் ஜீப்களை பயன்படுத்தினார்களா,
தனி அலுவலர்கள் பயன்படுத்த வில்லையா ? அவர்கள்தான் டெலி
போனைப் பயன்படுத்தினார்கள், இவர்கள் பயன்படுத்த வில்லையா?
அவர்கள்தான் செலவு செய்தார்கள் என்றால் தனி அலுவலர்கள்
செலவு செய்யவில்லையா ? ஜனநாயகம் என்பதே 'எக்ஸ்பென்ஸிவ்'
தான். இங்கே அமைச்சர்கள் தான்வேண்டுமா என்று ஆராய்ச்சி
செய்து கொண்டிருக்க முடியாது. பார்லிமென்டரி காரியதரிசி
களின் பாத்திரம் என்ன என்ற கேள்வி வந்துவிடும். ஜனநாயகம்
என்பது செலவு மிக்க ஐட்டம்தான். கூட்டுறவு நிறுவனங்களை,
சங்கங்களை ஊக்குவிக்க வேண்டும். இந்தியாவிலேயே தமிழகம்
தான் கூட்டுறவுத் துறையில் முன்னணியில் நிற்கிறது என்ற
பெருமையைப் பெற்றிருக்கிறது. பம்பாய் போன்ற மற்ற மாநி
லங்களிலிருந்து இங்கு கூட்டுறவுத் துறையில் எப்படிக் காரியங்கள்
நடைபெறுகின்றன என்று அறிய அதிகாரிகளும் மற்றவர்களும்
வருகிறார்கள். இங்கேயே இப்படி மோசமான ஒரு நிலைமை
ஏற்பட்டால், சூப்பர்ஸீட் செய்வதென்றால், எல்லாத் துறைகளி
லும் ஏற்படும். நிலைமை இப்படித் தொடர்ந்து கொண்டு
போனால் யோக்கியர்கள், நாணயமானவர்கள் கூட்டுறவுத்
துறைக்கே வருவார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது.
நேற்றிருந்த அமைச்சர் இன்று இல்லை. பாரதி கமிஷன் அறிக்
கையை வைக்க வேண்டும் என்று கேட்டோம். காலம் வற்புறுத்
தும்போது வைப்போம் என்று சொன்னார்கள். நாங்கள் வற்புறுத்
தும்போது வைக்க மாட்டார்கள். இப்போது அந்த அமைச்சர்
இல்லை. காலம் வரும் போது வைப்பேன் என்றார்கள். அவர்
கள் இப்போது இல்லை. அமைச்சர்களே டெம்பரரியாக இருக்
கிறார்கள். இப்படியிருந்தால் எப்படி அமைச்சர்கள் கொடுத்த
வாக்குறுதிகளை காப்பாற்ற முடியும்.

[முற்பகல் 11-10]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மந்திரி இப்போது
இல்லை என்று சொல்லி விட முடியாது, மந்திரி யாராக இருந்
தாலும் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. ஒரு மந்திரியே நிரந்தர
மாக இருக்க வேண்டும் என்பது கிடையாது.

திரு. க. சுப்பு: அப்போது அவர் இருந்தார், அப்போது சொன்னதைத் தான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, இதைச் சொல்லுகின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களே இதில் இன்னும் எத்தனை நாட்களுக்கு இருப்பார் என்று சொல்ல முடியாது.

THIRU K. SUPPU: Man is not mortal.

HON. THIRU K. A. KRISHNASWAMI: The Member is not mor.al.

THIRU K. SUPPU: Everybody knows. To Err is huma .

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: அதையே நான் நானும் மீண்டும் வற்புறுத்துகிறேன்.

திரு. க. சுப்பு: நமது மந்திரி அவர்கள் நீண்டநாள் மந்திரியாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: அது போல் தான் உறுப்பினர் அவர்களும் இருக்க வேண்டும் என்று நானும் விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு: நாம் நம்முடைய மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அப்படியிருக்கும்போது, நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கூட்டுறவு சொஸைட்டிகளுக்கும் தகுந்த அதிகாரங்கள் இருக்க வேண்டும். மத்திய சர்க்காரிடம் நமக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று வற்புறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் மத்திய சர்க்கார் நம்முடைய விவகாரங்களில் தலையிடுவது போல், கூட்டுறவு சொஸைட்டிகளில் மாநில அரசாங்கமும் தலையிட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நிலை மாறவேண்டும். ஒழுங்கீனங்கள் நடைபெறுகின்றன என்று சொல்லப்படுகிறது. ஒழுங்கீனம் இல்லாத ஒரு சொஸைட்டியும் இருக்க முடியாது. என்பதை என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும். இப்போது. என்ன நடக்கிறது. இவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னால் ஸ்பெஷல் ஆபீசரை நீக்கிவிட்டு புதிய நிர்வாகிகளைப் போடுவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் எப்படிப்பட்டவர்களைப் போடுகிறார்கள். உங்களுடைய கவனத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், இந்த விவரம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நிச்சயமாக வந்திருக்காது என்று நினைக்கிறேன்.

நெகமம் அருகாமையிலுள்ள கப்பளாங்கரை என்ற இடத்திலுள்ள சொஸைட்டியில் நாங்கள் தலையிடுவதே இல்லை என்று சொல்லிக் கொண்டு யாரைப் போட்டிருக்கிறார்கள்? முன்னால் இருந்த ஆளை மாற்றிவிட்டு, இப்போது வேறு ஆட்களை எப்படிப் போட்டிருக்கிறார்கள். போடப்பட்டிருப்பவர்கள் யார் யார் என்றால், தருமன், இவருடைய மைத்துனர் சென்னான், வீரன், ரெங்கன், பழனி, சொந்தக்காரர்களை அமாவாசை இப்படி ஒரே குடும்பத்திலுள்ள எல்லாம் போட்டிருக்கிறார்கள், இது முறைதானா? ஸ்பெஷல் ஆபீசர் என்றிருந்தவரை மாற்றிவிட்டு இப்படிப் போட்டிருக்கிறார்கள். முன்னால் தலைவராக இருந்தவரை நீக்கிவிட்டுத்தான் ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டார்கள். முன்னால் தலைவராக இருந்தவர் முத்துமாரப்பக் கவுண்டர் என்பவர். இவர் தலைவராக இருப்பதை ஆட்சேபணை செய்து ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டார்கள். அத்துடன் இவரை விட்டு விடவில்லை. பொய் வழக்குப் போட்டு உள்ளே தள்ளிவிடுகிறார்கள். இதே முத்து மாரப்பக் கவுண்டர் சொஸைட்டியில் நல்ல முறையில் வேலை செய்யவில்லையா. சிறப்பாக வேலை செய்திருக்கிறார். இவருடைய தலைமையில் இந்த சொஸைட்டி சிறப்பாக நடந்திருக்கிறது. எவ்வளவோ நல்ல முறையில் இயங்கிக்கொண்டிருந்திருக்கிறது இதற்கு வேண்டிய ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன. ஆனால் இப்படிப்பட்ட முத்து மாரப்பக் கவுண்டரை ஏன் மாற்றினார்கள் என்றால் இவர் கண்ணப்பன் அவர்களுடைய சம்பந்தி என்பது தான். தி. மு. க. காரனின் சம்பந்தியாக யாரும் இருக்கக் கூடாதா? ஏதோ குடும்பக் கட்டுப்பாட்டைத்தான் நடத்தி வருகிறோம். அரசியலிலும் கட்டுப்பாடா என்று எனக்குத் தெரியவில்லை. இவ்வளவு அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு இவ்வாறு நடந்திருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

நாங்கள் போட்டால் இப்படித்தான் போடுவோம், ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களைத்தான் போடுவோம், இல்லையென்றால் போட மாட்டோம். இல்லையென்றால் ஸ்பெஷல் ஆபீசரைப் போடுவோம். என்று சொல்லிக்கொண்டிருந்தால் ஜனநாயகம் எப்படி நடக்கும்? ஸ்பெஷல் ஆபீசர் போடுவது என்பது அன்–டெமாக்ரட்டிக் முறை தான். பஞ்சாயத்து யூனியனாக இருந்தாலும் சரி. நகரசபைகளாக இருந்தாலும் சரி. ஸ்பெஷல் ஆபீசர்களைத்தான் போடுவோம் என்று சொல்லிக்கொண்டிருந்தால், ஜனநாயகப்படி எப்போது தான் தேர்தலை நடத்துவது. இப்போது புதிய அமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு வந்திருக்கிறார். அவர் பொதுத்தேர்தலில் நின்று வரவில்லையென்றாலும், மேல்சபை தேர்தலில் நின்று வந்திருக்கிறார். பரவாயில்லை, அவர்கள் கவனிக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லுகின்றேன். இப்படி ஸ்பெஷல் ஆபீசர்களுடைய காலக் கெடுவை குறைத்து, உடனடியாக தேர்தல்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வழிசெய்ய வேண்டும். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்தச் சட்டதிருத்தம் அவசியமற்றது. தேவையற்றது என்பதை சொல்லி, இருக்கின்ற அதிகாரங்களை மிஸ்யூஸ் செய்வதற்கு இது பயன்படும், ஆகவே இது தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவர் அவர்களே, ஏற்கனவே கோஆப்ரட்டிவ் சொசைட்டிகளில் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை நீக்கி விட்டு ஸ்பெஷல் ஆபீசர்களை போட்டு வைத்தி

ருக்கிருர்கள். ஆளுநர் ஆட்சி காலத்தில் இவ்வாறு நடை பெறுக் கொண்டிருந்தது. இப்போது பாப்புலர் கெவன்மென்ட் வந்து ஒன்றரை வருடங்கள் ஆகிறது. இப்படி பாப்புலர் கவர்ன் மென்ட் நடந்து கொண்டிருக்கும்போது, இந்த ஸ்பெஷல் ஆபீஸர்களுக்கு ஏற்கெனவே இரண்டு ஆண்டு காலம் என்றி ருந்ததை இப்போது சட்டத்தைத் திருத்தி அவர்களுடைய காலம் 3 ஆண்டுகள் என்று ஏன் ஆக்க வேண்டும் என்பதை நான் கேள் வியாக வைக்கிறேன்.

இப்படி வைப்பது என்பது ஜனநாயகத்தில் நமக்கு நம்பிக்கை இல்லேயோ அல்லது நாட்டிலுள்ள மக்கள் மீது நமக்கு நம்பிக்கை இல்லேயோ என்ற எண்ணத்தைத்தான் ஏற்படுத்தும். மேலும் இப்படி தனி அதிகாரிகளே கோவாப்ரேட்டிவ்களுக்கு தலைமை வகிப்பதற்கு நீடித்துக் கொண்டே போனுல், அந்தக் கருத்து இருக்குமானுல், நமக்கு ஜனநாயகத்திலே நம்பிக்கை இல்லே என்ற எண்ணத்தை இந்த நாட்டு மக்கள் உணர வேண்டிய சூழ் நிலேக்கு ஆளாக்கப்படுவோம். ஆகவே, ஏற்கனவே இரண்டு வருடம் என்றிருப்பதை மூன்று வருடங்களாக நீடிக்க வேண்டி யதன் அவசியம் என்ன என்பது தெரியவில்லே. இதற்கு ஸ்டேட் மென்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்சிலேகூட தகுந்த கார ணங்கள் கூறப்படவில்லே, அதிலே சொல்லுகிருர்கள்,— "Special Officers so appointed shall arrange for the constitution of a new committee or board as the case may be, in accordance with the provisions of Tamil Nadu Co-operative Societies Act, 1961, இது போன்ற ஒரு நடவடிக்கையை நாம் மேற்கொண்டு, அதைச் செயல்படுத்துவதன் மூலம் ஏற்கனவே இரண்டு ஆண்டுக் காலம் என்றிருந்தது போதாது, மேலும் அரேஞ்ஜ்மெண்டுகள் செய்வ தற்கு மூன்று ஆண்டுக் காலம் தேவை என்று சொல்வது எந்த அடிப்படையிலே சொல்லுகின்ருர்கள் என்பது தெரியவில்லே. நாம் தெரிந்தோ தெரியாமலேயோ அதிகாரிகள்தான் இந்த நாட்டை ஆள்வதற்கு தகுதி படைத்தவர்கள் என்ற எண்ணத்தை செய்து விடக்கூடாது. காரணம் ஏற்கெனவே இந்த நாட்டிலே இருக்கிற பப்ளிக் ரெப்ரசென்டேடிவ் பொதுவான எந்தக் கருத்தை சொன்னுலும், அதாவது தனிப்பட்ட முறையிலே இல்லாமல், பொதுவான கருத்தைச் சொல்லுகின்றபோதுகூட, நிர்வாகத்திலே தலேயீடு என்ற முறையிலே இவைகள் எல்லாம் புறக்கணிக்கப்படுகின்றன.

இப்படிச் சொல்லுகின்றபோது, நாங்கள் சொல்வதை நீங்கள் கேட்கத் தயாராக இல்லே. கேட்காவிட்டால் பரவாயில்லே. நியாய மானவைகளே, Atleast in the administrative circumstances— தவறு களேச் சுட்டிக்காட்டி, அவைகளேத் திருத்தச் சொன்னுல், அதிகாரிகள் கேட்பதில்லே. இதையெல்லாம் நிர்வாகத்திலே தலேயீடு. இவ்வாறு சொல்லக் கூடாது என்று சொன்னுல், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு வேலேயே இடையாது. மக்களுடைய குறைகளே எடுத்துச் சொல்வதற்கு இல்லே

என்று சொன்னுல், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு எம். எல். ஏ., எம். பிக்கு வேலேயே இல்லே. அந்த நிலேமையை உருவாக்கக் கூடாது. ஆகவே, தயவு செய்து கேட்டுக் கொள் கிறேன். அதிகமான. அபரிமிதமான, அதிகார போதையிலே உள்ள அதிகாரிகளுக்கு மேலும் அதிகாரங்களே அளித்தால், நம்மையே மதிக்காத அளவிற்கு ஆகிவிடுவார்கள் என்று தயவு செய்து சொல்லிக்கொள்கிறேன். நான் ஒரு திருத்தத்தைக் கொடுத் திருக்கிறேன். "Private sponsored Co-operative Societies are placed under the supervision of the Government" என்று சொல்லியிருக் கிறேன். குறிப்பாக, எல்லாப் பகுதிகளிலும், எல்லாக் கிராமங் களிலும் கூட்டுறவு சொசைட்டிகள் இருக்கின்றனவா என்று சொன்னுல், இல்லே. 10 கிராமங்களுக்கு 3, 4, 5 கிராங்களுக்கு ஒரு சொசைடிதான் வைத்திருக்கிருர்கள். ஆகவே, அதைப் பரவலாக்க வெண்டுமென்று நான் நேற்றுப் பேசியபோதுகூட சொன்னேன். வேலேவாய்ப்புத் தருவதிலே இந்த அரசு கவனம் செலுத்த வேண்டும். படித்தவர்கள் அரசாங்கத்தை ஏமாற்றி விடுவார்கள் என்று எண்ணக் கூடாது. வேலே வாய்ப்புத் தருகின்ற அளவிலே இந்தச் சட்டத்திலே திருத்தங்கள் கொண்டுவந்து, கிராமங்கள்தோறும் கூட்டுறவு சொசைடிகளே அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளே நீங்கள் செய்து தர வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலேவர் அவர்களே, தனி அதிகாரி களின் ஆட்சியை மேலும் நீடிப்பதற்கு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் திருத்தத்தை என்னுல் ஆதரிக்க இயலாது. ஏனென்ருல், ஜனநாயகத்திற்கு அப்பாற்பட்ட திருத் தமாக இதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்த அரசு கொண்டு வருவதை, பொதுமக்கள் யாருமே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இது நெருக்கடி காலத்திலே, அவசர காலத்திலே போடப்பட்ட சட்டம், அதோடு கூட்டுறவு வங்கிகளிலே இருந்த அந்த இயக்குநர் குழு ஒரு கட்சியின் சார்பிலே இருந்ததை உணர்ந்து, அதை மாற்ற இப்படி அவசர காலத்திலே சட்டம் கொண்டு வந்தார்கள். நாம் எல்லோரும் எண்ணினேம். ஜன நாயக முறையில் 1977 தேர்தல் நடந்தவுடன், இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள இந்த அரசு நிச்சயமாக ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டு, இப்போதுள்ள தனி அதிகாரிகளே மாற்றி, தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவால் வங்கிகள் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனுல், ஓராண்டு காலத்திற்கு மேலாகியும், அந்தத் திட்டத்திற்கு மாற்றுத் திட்டத்தை வகுக்காமல், இப்படியே தனி அதிகாரிகளுடைய ஆட்சி நீடித்துக் கொண்டிருப்பதனுல், எந்த விதமான நன்மையும் விளேயாது.

[முற்பகல் 11–20]

ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டிருந்தால் நிச்சயமாக அதை மாற்றி மக்கள் கையில் கொடுத்திருக்க வேண்டும். கூட்டுறவு பை-லாவைப் பார்த்தால் பொதுமக்களுக்கும், பணி

யாற்றுகின்ற டைரக்டர்களுக்கும் எந்தவித அதிகாரமும் இல்லை. ஏன் இந்தத் தனி அதிகாரிகளைப் போட்டு கூட்டுறவு வங்கிகளை இயக்க வேண்டும் ? அரசு அதிகாரிகள் சொல்லுகிறபடி திருத்தம் கொண்டு வராமல் போட்டிருக்கும் தனி அதிகாரிகளை ரத்து செய்து ஜனநாயக அமைப்பைப் போட்டு கூட்டுறவு வங்கிகள் நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டும். நான் ஒரு கூட்டுறவு வங்கியிலே நெருங்கிய தொடர்புடையவன். அதிகாரிகள் போடுகிற சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு பயந்து பயந்து செயலாற்றுகிற நிலையில்தான் நாங்கள் பணியாற்றுகிறோம். எங்களுக்குச் சுதந்திரம் கிடையாது. தனி அதிகாரி சொல்வதுபோல் நடக்கவில்லை என்றால் ஒரு சங்கத்தை மூடிவிடக்கூட தனி அதிகாரியால் முடியும். ஆகவே, தனி அதிகாரிகளின் ஆட்சியில் கூட்டுறவு வங்கிகள் நீடிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகளில் தனி அதிகாரிகளை மேலும் நீடிக்கும் மசோதாவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஏற்கெனவே, இதைப் பற்றிப் பல மெம்பர்கள் பேசினார்கள். யாரும் தனி அதிகாரியை நீடிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அதே கருத்தைத்தான் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் நானும் வற்புறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏற்கனவே ஓராண்டாக இருந்து, இரண்டாண்டாக மாறி தற்போது மூன்றாண்டு என்ற அளவுக்கு வந்திருப்பதைப் பார்க்கும்போது திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கடையநல்லூர் வட்டாரத்தில் நடைபெறுகிற சம்பவம் இப்போது நினைவுக்கு வருகிறது.

சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பு என்று கருதுகிறேன். கூட்டுறவு அமைப்புகளில் ஊழல்கள் என்று சொல்லப்பட்டு அவை விசாரிக்கப்பட வேண்டுமென்பதற்காக அந்தக் கூட்டறவு அமைப்பு கலைக்கப்பட்டு 12 ஆண்டுகள் கழிந்து விட்டன. இது வரை இந்த விசாரணையும் நடைபெறவில்லை. இதுவரை கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடைபெறவில்லை. அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் வேலை பார்த்த நபர்கள் சஸ்பென்ஷனில் இருக்கிறார்கள். வேறு வேலை செய்யவும் போக முடியாத நிலையில் கஷ்டப்படுகிறார்கள். தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஊழல் என்று சொன்னால் உடனடியாக விசாரிக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். போதிய சான்றுகள் இல்லை என்று சொன்னால் அது கைவிடப்பட வேண்டும்.

இரண்டு ஆண்டுகளாக ஊழல் ஊழல் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர அந்த ஊழல் பற்றிக் கொடுத்த விவரங்களை வைத்து இதுவரை வழக்குகள் தொடரப்பட்டதாக

நான் அறிய எந்த விதமான தகவலும் இல்லை. இந்த நிலையில் மூன்றாவது ஆண்டாக தனி அதிகாரிகளை நீடிப்பது எந்த வகையில் பொருத்தமானது ?

சமீபத்தில் சென்ற ஆண்டு இந்த அரசு பதவி ஏற்ற பிறகு விக்கிரமசிங்கபுரத்தில் மதுரை ஹார்விமில்லைச் சார்ந்த பண்டக சாலை மெம்பர்கள் ராஜினாமா செய்து விட்டார்கள். ரிஜிஸ்ட்ரார் உத்தரவிட்டு தேர்தல் நடத்தப்படுகிற நேரத்தில் கோரம் இல்லை என்று ஒத்தி வைக்கப்படுகிறது. கோரம் இல்லை என்பதோடு வேறு பல காரணங்களையும் சொல்லி அது கலைக்கப்பட்டு ஸ்பெஷல் ஆபீசர் போடப்பட்டிருக்கிறார் என்ற வேதனையான விஷயத்தைச் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

என்ன என்ன குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டதோ அதே ஊழல்களை இன்றைய ஸ்பெஷல் ஆபீஸர் செய்கிறார், அதைவிட ஒரு படி கூடத் தாண்டிச் சென்று விட்டார். ஏற்கெனவே மூலதனம் குறைந்து விட்டது, குறைந்த பட்ச ஷேர்தான் கொடுக்கலாம் என்று விதிகள் இருந்தும் இன்றைக்கு அவர் ஷேர்களைத் திருப்பிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இப்படி எந்தக் காரணத்திற்காக அவர்கள் போடப்பட்டார்களோ அதற்கு நேர் மாறான முறையிலே செயல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் இஷ்டம் போல் செயல்படக் கூடிய நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இந்தச் சட்டத்தை நாங்கள் பலமாக எதிர்ப்பதோடு ஜனநாயக முறையிலே தேர்ந்தெடுக்கப் படுகிறவர்களிடம் அதிகாரங்களைக் கொடுக்கவகை செய்வது தான் முறையாக இருக்கும் என்ற நிலையை மீண்டும் வற்புறுத்தி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே கடந்த 8 ஆண்டுகளாக கூட்டுறவிலே தேர்தல் நடத்தப்படவில்லை, உடனடியாகத் தேர்தல் நடத்தப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இப்போது தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டுமென்று கொண்டு வந்திருக்கிறார்கள், இந்த நிலை மிகவும் மோசமானது. தனி அதிகாரிகள் அவர்கள் சர்வாதிகாரி என்ற நிலையில் நடக்கிறார்கள், நாட்டு மக்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டுமென்று எதுவும் நடக்க வில்லை. தேர்தல் நடந்திருந்தால் நிச்சயமாக இப்படி ஆவணி மாதத்திலே ஜப்தி நடக்காது, தனி அதிகாரிகள் இருப் பதால் தான் மக்களுக்கு ரூபாய் போய்ச் சேர வேண்டிய நேரத்திலே ஜப்திகள் நடந்து கொண்டிருக்கின்றன. சிவகங்கையிலே பரமக்குடியிலே எல். டி. பேங்கிலே 6 ஆண்டுக்காலமாக மோசமான நிலை இருக்கிறது. அங்கே ஜெனரல் பாடி மீட்டிங் என்று போட்டு 250 ரூபாய் செலவு எழுதக் கூடிய நிலையில் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். தனி அதிகாரிகள் இருப்பதால் ஊழல்கள் நடந்கு கொண்டிருக்கின்றன. கடந்த தி.மு.க.

ஆட்சிக் காலத்திலே கூட சென்ட்ரல் பாங்குகளைப் பிடிக்க வேண்டுமென்ற முறையிலே லிப்ட் இரிகேஷன் சொஸைடிகள் என்று ஆரம்பிக்கப்பட்டு பல சொஸைடிகளைப் பிடித்து அதன் காரணமாக பல மோசடிகள் நடந்தன. அந்த ஆபீஸர்கள் மூலமாக ஆயிரக்கணக்கான ரூபாய் மோசடி செய்யப்பட்டு திருப்பிக் கட்ட வேண்டுமென்ற நிலை ஏற்பட்டு சர்சார்ஜ் போடப்பட்டிருந்தது. அது எல்லாம் கேன்சல் செய்யப்பட்டி ருக்கிறது, யாரைக் கேட்டு கேன்சல் செய்தார்கள் என்று தெரியவில்லை, தனி அதிகாரிகள் இருப்பதால்தான் அதிகாரிகள் மீது இருந்த சர்சார்ஜை நீக்கி இருக்கிறார்கள், ஆனால் மற்றவர் களின் மேல் உள்ள சர்சார்ஜை வசூலிக்கிறார்கள். ஒரு சொஸைடியிலே 11 நாள் தாமதம் ஏற்பட்ட நிலையிலே சர்சார்ஜ் வசூலிக்கப்பட்டது, ஆனால் அதே நேரத்திலே திருவாரூரிலே ஆயிரக்கணக்கான ரூபாய்களை கொள்ளைக் அடிக்கக் கூடிய நிலைமை இருந்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அங்கே சர்வாதிகாரம் தலைதூக்கி இருக்கிறது. ஆகவே ஸ்பெஷல் ஆபிஸர்களைப் போடுவதை நிறுத்திவிட்டு தேர்தல்களை நடத்தி கூட்டறவு மூல மாக நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற கூட்டுறவுச் சங்கங்கள் தனி அலுவலர் நியமித்தல் சட்டமுன் வடிவின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இரண்டு ஆண்டுகள் தனி அதிகாரிகள் இருக்கலாம் என்பதை மேலும் ஒரு ஆண்டுக்காலம் இருக்கின்ற வகையிலே நீட்டிப்பது தேவையற்ற ஒன்று. ஒரு ஆண்டுக்கு முன்னாலே தேர்தல் நடந்தபோது ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த இந்த ஆட்சி வந்தவுடனே இந்தச் சங்கங்களுக்கு எல்லாம் தேர்தலை நடத்தியிருந்தால் இப்படிப்பட்ட நிலைமை வந்திருக்காது, அவைகள் நல்ல முறையில் நடந்திருக்கும், அதற்குப் பதிலாக தனி அதிகாரிகளைப் போடுவதன் மூலமாக, எல்லாத் துறைகளிலுமே இப்படிப் போடுவதன் மூலமாக எல்லாத் துறைகளுமே பின்தங்கிய நிலைமைக்குத்தான் போகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தனி அதிகாரிகள் என்பவர்கள் அங்கே இருக்கக்கூடிய பல்வேறு மக்களுடைய பிரச்சினைகளை, அலுவலர்கள், கீழே இருக்கின்றவர் களுடைய பிரச்சினைகளைத் தீர்க்காமல் தங்களுடைய சுய அதிகாரத்தை வைத்துக்கொண்டு பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதிலே வேறுபட்ட கருத்தைச் சொல்ல முடியாது. ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகம் இருக்குமானால் அங்கே பல்வேறு கருத்துக்கள் பேசப்பட்டு கடைசியிலே நல்ல முடிவுகள் எடுக்கப்படும் என்ற நம்பிக்கை மக்களிடத்திலே இருந்தது. ஆனால் தனி அலுவலர்களிடம் லட்சக்கணக்கான, கோடிக்கணக்காக ரூபாய்களுக்கான அதிகாரங்கள் கொடுக்கப் கன்டால்நிச்சபானது நல்ல நம்பிக்கை வர முடியாது என்பதுதான் த்ட்னுடைய ருமயள. ஆகவே:, தனி அலுவலர்களை நீடிப்பது தேவை

[முற்பகல் 11-30]

யில்லாத ஒன்று. உடனடியாக அதை ரத்து செய்து விட்டு விரைவில் கூட்டுறவுச் சங்கங்ளின் மூலமாக நல்ல நேர்மையானவர் களை, நாணயமானவர்களைத் தேர்ந்தெடுக்க வகை செய்து அந்த அமைப்பைச் சிறப்பாகச் செய்ய முயற்சி செய்ய வேண்டும்.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், புதுக்கோட்டையைப் பொறுத்த வரையில் அங்கே மத்திய கூட்டுறவு வங்கி சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தாலும் அங்கேயுள்ள அலுவலர்கள், சாதாரண செக்ரட்டரியாக இருப்பவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இல்லை. காரணம், கீழே உள்ள கடன் சங்கங்களின் தலைவர்கள்தான் பணத்தை எடுத்துக்கொண்டு மத்திய கூட்டுறவு வங்கிக்குச் செல்ல வேண்டும். மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து பெற்ற பணத்தை சொசைட்டிக்குக் கொண்டு வர வேண்டுமென்ற நிலை இருந்தால் தலைவர்களுடைய வேலைப்பளு அதிகமாகி செயலாளருக்கு வேலையில்லாமல் போய்விடும் என்ற நிலைமைகள் இருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால் சிலபேர் பழி வாங்கப் பட்டிருப்பதாகவும் சொன்னார்கள். அரசியல் தலையீட்டின் காரணமாக யார் யார் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள் என்று பார்த்து அவர்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டையில் தனி அலுவலர் பல்வேறு பிரச்னைகளிலே ஈடுபட்டாலும், ஆறு மாதமாகியும் பணம் பட்டுவாடா செய்யப் படவில்லை என்ற குறையிருக்கிறது. அந்தக் குறையைப் போக்கி, உடனடியாக யார் யார் கடன் கேட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு பணம் பட்டுவாடா செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கூட்டுறவு மத்திய வங்கியிலே பணம் சேங்க்ஷன் செய்தும், விவசாயிகள் மாடு வாங்க, மாட்டுக் கடன் கொடுக்கப் படவில்லை. 6, 7 மாதங்களாகியும் மாடுகள் வாங்குவதற்கு அங்கேயுள்ள எஸ். எஃப். டி. யைச் சேர்ந்தவர்கள் ஏற்பாடு செய்யவில்லை. பணத்தை வாங்கி வங்கியிலே செலுத்தப் பட்டிருக்கிறது.

ஆளுநர் ஆட்சியிலே இவ்வாறு கொண்டு வந்ததற்கான நோக்கம் என்னவென்றால், பல ஊழல்கள் நடைபெறுகின்றன. தவறுகள் நடைபெறுகின்றன, எனவே, முறையான தேர்தல் நடத்தும் வரையில் தனி அலுவலர்கள் இருக்க வேண்டுமென்று செய்தார்கள். ஆனால், அது அப்படியே தொடர்ந்து இருப்பது தேவையில்லாதது. காரணம், இப்பொழுது ஆளுநர் ஆட்சி இல்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி இருக்கிறது. எனவே, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நேர்மையானவர்கள், நாணயமானவர்களிடம் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும். அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக தங்கள் சொந்தக் கட்சிக்காரர்கள் வர வேண்டுமென்று ஆசை

யிருந்தால் தயவு செய்து அதை மாற்றி விட்டு நாணயமான
வர்களை, நேர்மையானவர்களைத் தேர்ந்தெடுக்க வழி செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு வழி செய்யுங்கள்
என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்
கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவரவர்களே,
கூட்டுறவு தத்துவத்திற்கு மரண அடி கொடுத்து, அதனுடைய
சவ ஊர்வலமாக நடத்துகின்ற இதில் நான் கலந்து
கொள்ள முடியாது. I refuse to be the pall-bearer என்ற முறை
யிலே இதை மிகுந்த வருத்தத்தோடு இந்தத் தீர்மானத்தை நான்
எதிர்க்கிறேன்.

நம்முடைய நாட்டில் பல்வேறு பொருளாதார வளர்ச்சிகளுக்
காக, கூட்டுறவுத் துறையில் பல்வேறு திட்டங்களை வகுத்து
பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்று இருந்தாலும்
பொருளாதார வளர்ச்சி மட்டுமல்லாமல் சமுதாய மறுமலர்ச்சி
ஏற்படுவதற்குச் சமுதாயத்தில், ஜனநாயக அடிபபடையைப்
பலப்படுத்துவதற்காகக் கூட்டுறவுத் துறை ஒரு சிறந்த சாதனம்
என்ற அடிப்படையிலேதான் இந்தத் துறை நம்முடைய
நாட்டிற்குத் தேவை என்று கருதப்பட்டது. இதிலே ஏதோவொரு
ஆலையை ஏற்படுத்துகிறோம், ஒரு துறையை ஏற்படுத்துகிறோம்,
அதிலே உற்பத்தியை நாம் பெருக்குகிறோம் என்பது மட்டு
மல்லாமல், கூட்டுறவால் பலதரப்பட்ட பொருளாதாரத்தில்
நலிந்த, மெலிந்த மக்களை ஒன்று சேர்த்து, அவர்களெல்லாம்
உற்பத்தித் துறையிலே எப்படிப் பங்கு கொள்ள வேண்டும், அந்த
உற்பத்தித் துறை நிர்வாகத்திலே அவர்கள் எப்படிப் பங்கு
கொள்ள வேண்டும், அதிலே என்னென்ன அனுபவங்களை அவர்கள்
பெற வேண்டும், அப்படிப் பெறுகின்ற அனுபவங்கள் ஜனநாயக
முறையிலே ஏற்படுத்தப்பட வேண்டுமென்றுதான் கூட்டுறவுத்
துறையை நம்முடைய நாடு வலியுறுத்தி ஏற்றுக்கொண்டது.

அதுமட்டுமல்ல, நாம் சாதாரணமாகப் பள்ளிகளிலும், கல்லூரி
களிலும் கூடப் பார்க்கிறோம், குறிப்பாகக் கல்லூரிகளிலே
மாணவர் தலைவர்களைத் தேர்தல் முறையில் கொண்டுவருகிறார்கள்.
இதனால் அவர்கள் ஏதோ ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்
கிறார்கள் என்பது அல்ல. ஆனால் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும்
தேர்தல் முறையைக் கொண்டு வந்து நம்முடைய நாட்டிற்கு
நிலையான, முறையான பயிற்சி வருங்காலத்தில் ஏற்பட வேண்டும்
என்றுதான் செய்யப்படுகிறது.

அதேமாதிரி ஒவ்வொரு துறையிலும் ஜனநாயகத்தைப் பேண
வேண்டும், ஜனநாயகத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும், ஜனநாயக
ஆர்வத்தைப் பெற வேண்டும், அனுபவம் பெற வேண்டுமென்று
தான் இந்தத் திட்டங்களையெல்லாம் கொண்டு வந்தோம். ஆனால்
மிகுந்த வேதனையோடு நான் சொல்கிறேன். இன்றைக்கு மீண்டும்
இந்தத் துறைகளையெல்லாம் மக்கள் அமைப்புப்படி நிர்வகிக்கக்கூடிய

முழு உரிமைகளையும் தனி அலுவலர்களுக்குக் கொடுத்து, மீண்டும்
நீட்டித்துத் தருகிறோம் என்று சொல்வதன் வாயிலாக ஜனநாயகத்
தில் நம்பிக்கையில்லை, இந்த அரசுக்கு நம்பிக்கையில்லை யென்பதை
மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிற வகையில் தனி அலுவலர்
களுக்கு நீட்டித்துக் கொடுக்கப்படுகிறது என்றால், ஷேர்
ஹோல்டர்ஸ் என்று சொல்கிற அந்தப் பங்குதாரர்களுக்கு என்ன
உரிமை? அந்த உரிமையைச் சட்டப்படி பறித்துக் கொள்கின்ற
சட்டமாகத்தான் இது இருக்குமே தவிர, ஜனநாயகத்தை இருதய
மற்ற முறையில் அடித்துக் கொல்லுகிற சட்டமாகத்தான் இது
இருக்குமே தவிர, எப்படி இந்தச் சட்டத்திற்கு அமைச்சரவர்கள்
அனுமதி கோரி வந்திருக்கிறார்கள் என்பது வேதனையாகவும்
வேடிக்கையாகவும் இருக்கிறது. தயவுசெய்து இந்தச் சட்டத்தை
உடனடியாக வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும். இவர்கள்
ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டிருப்பது உண்மையானால்
இந்தச் சட்டத்தை வற்புறுத்த வேண்டாமென்று நான் பணிவுடன்
கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அலுவலர்கள். என்ன செய்கிறார்கள் இன்றைக்கு?
மக்கள் பிரதிநிதிகள் எந்த வகையிலே குறை உடையவர்களாக
இருந்தாலும் மக்களுடைய அபிலாஷைகளைப் பிரதிபலிக்கிறார்கள்
என்ற வகையிலே அவர்கள் ஆற்றுகிற தொண்டு செம்மையானது,
மிகத் தொன்மையானது.

கோதாண்டப்பட்டியிலே சர்க்கரை ஆலை நிறுவியிருக்கிறார்கள்:
எதற்காக அந்தத் தொழிற்சாலை? அங்கே வைத்து அழகு பார்க்க
வேண்டுமென்பதற்காகவா? அந்தப் பகுதியிலே இருக்கிற
மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும், அந்தப் பகுதியிலே
இருக்கிற 'ரா மெட்டீரியல்ஸ்' கச்சாப் பொருள்களுக்கு டிமாண்ட்
ஏற்பட வேண்டும். அந்தப் பகுதியிலே பொருளாதார முன்னேற்றம்
ஏற்படவேண்டும். அந்தப் பகுதி பொருளாதாரத்திலே செம்மை
யடைய வேண்டுமென்பதற்காக, தொழிற்சாலையை ஓரிடத்திலே
மக்கள் கேட்கிறார்களே தவிர, அந்தத் தொழிற்சாலைத் தம்மிடம்
இருக்க வேண்டுமென்பதற்காக அல்ல. ஆனால், கோதண்டப்
பட்டியிலே நாம் பார்க்கிறோம், தனி அலுவலர் உட்கார்ந்து
கொண்டு அந்தப் பகுதியிலுள்ள மக்களை வேலைக்கு எடுத்துக்
கொள்ளாமல், திருநெல்வேலியிலிருந்து ஆட்களைக் கொண்டுவந்து
அந்த ஆலையிலே நியமித்து, ஆலையை நிர்வகிக்கிறார்கள்.

அந்தப் பகுதியிலேயுள்ளவர்கள் படித்துவிட்டு வேலையில்லாமல்
அலைந்து கொண்டிருக்கிறார்கள். விவசாயம் நடைபெறாத காலத்தில்,
ஆஃப் சீசனில், விவசாயப் பெருங்குடி மக்கள் சாதாரண வேலைக்குக்
கூட அந்த ஆலையில் சென்றால், தனி அலுவலர்கள் வேலை கொடுக்க
மறுக்கிறார்கள். மற்ற இடங்களிலேயிருந்து ஆட்களைக் கொண்டு
வந்து அங்கே வேலையில் அமர்த்துகிறார். ஏன்? அவர் மக்கள் பிரதி
நிதியாக இருந்தால், அந்தப் பகுதியிலேயுள்ள பங்குதாரராக
இருந்தால், அப் பகுதியிலுள்ளவர்களது அபிலாஷைகள், உணர்வுகள்
அவருக்குத் தெரியும். ஆனால் அதற்குப் பதிலாக தனி அலுவலர்

என்றால் தன் இஷ்டம்போல் நடக்கிறபோக்கு, எதேச்சாதிகாரபோக்கு, தான் நினைத்ததைச் செய்வது என்ற போக்கு நிலவுகிறது. அந்த எதேச்சாதிகார தன்மைக்கு, இருதயமற்ற தன்மைக்கு மீண்டும் ஓராண்டு நீட்டித்துத் தருகிறோம் என்று சொன்னால் மீண்டும் அதை வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்த அரசு ஜனநாயக நம்பிக்கையற்றிருப்பதுதான் இதற்குக் காரணம். அது காரணமல்லவென்றால், வேறு காரணம் அரசுக்கு இருக்கிறதோ என்று நான் நம்புகிறேன். ஒருவேளை யாரையாவது நியமிக்க வேண்டியிருந்தால் என்னென்ன நிலைமைகள் வருமோ என்ற பயத்தின் காரணமாக, இந்த நீட்டிப்புச் சட்டம் வருகிறதோ என்று நான் குற்றம் சாட்டுகிறேன். ஆகவே, இந்தச் சட்டத்தை வன்மையாகக் (மணியடிக்கப்பெற்றது) கண்டிக்கிறேன், கடுமையாக எதிர்க்கிறேன், இதை வாபஸ் பெற வேண்டும், இது ஜனநாயக விரோதச் சட்டம். இதை நான் வன்மையாக எதிர்த்துக் கண்டிக்கிறேன்.

[முற்பகல் 11-40]

திரு. சி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் தனி அதிகாரியை மீண்டும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிப்புக் கொடுக்கும் சட்டத்தைத் தொடக்கத்திலேயே நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆட்சிக்கு வந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அவசர காலத்திலே வைத்திருந்த அதே கொள்கைகளை ஏன் கடைபிடிக்கிறார்கள் என்று என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு கட்சி ஆட்சிக்கு வந்த உடன், அந்தக் கட்சியால் என்ன நன்மை என்பதை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது அந்தக் கட்சியும், அந்தக் கட்சியினுடைய அரசும் ஆகும். ஆனால் இந்தப் புதிய சர்க்கார் என்ன காரணத்தாலோ, நாம் மட்டும் இருந்தால் போதும். கிராமத்திலே இருக்கிற கட்சிக் காரர்களுக்கு பதவி கொடுக்க வேண்டாம் என்று நினைக்கிறார்களோ என்னவோ, அதுவும் சந்தேகமாக இருக்கிறது. அல்லது அந்தப் பதவிகளுக்குக் கட்சியிலே சரியானவர்கள் இல்லை என்பதுதான் என்னுடைய ஆய்வு. நம்முடைய கூட்டுறவு அமைச்சர் தலையாட்டுகிறார், எனவே அதை ஏற்றுக்கொள்ளுகிறார் என்று நான் கருதுகிறேன். அதற்குக் காரணம் கூட்டுறவுத் துறையில் தனி அதிகாரிகளை நியமிப்பது. நான் நமது கூட்டுறவுத் துறை அமைச்சரை கேட்டுக்கொள்கிறேன், எங்களுக்கு இதிலே கொஞ்சம் பழக்க வழக்கங்கள் உண்டு. கூட்டுறவுத் துறையில் பணியாற்றுகின்ற அதிகாரிகள் பெரிய யோக்கியர்கள் அல்ல. அல்லது உங்களையும் எங்களையும் போல் இருப்பவர்கள் குற்றம் செய்கிறோம் என்றால், நீங்களே தயவு செய்து எண்ணிப்பாருங்கள்.

வெள்ளைக்காரன் காலத்திலே இருந்து, காங்கிரஸ்காரன் காலத்திலே இருந்து, எங்கள் காலத்திலே இருந்து அந்த நோய் இப்போது உங்களையும் பிடித்துக் கொள்ளக் கூடாது. நாம் சொல்வதை அவர்கள் செய்யவேண்டுமே அல்லாது அவர்கள் எழுதிவைப்பதில் அந்த நோட் ஆர்டரில் கையெழுத்து போடுகின்ற நிலைமைக்கு

நம்மை ஆளாக்கிக் கொள்ளக்கூடாது. நாம் எல்லாம் செய்தால் அது குற்றம், அதன் மேல் நடவடிக்கை. ஆனால் அதிகாரிகள் செய்தால் அவர்கள் மீது என்ன நடவடிக்கை, எங்கே விசாரணை?

நாம் கூட்டுறவுத் துறையிலே தலைவரா இருக்கும்போது கார், தொலைபேசி முதலியவைகளைப் பயன்படுத்தினால் அதன் மீது விசாரணைக் கமிஷன். அது அவசரக் காலத்தின் கருத்து. ஆனால் இப்போது தனி அதிகாரிகள் செய்கின்ற ஏகபோகம், அவர்களுக்குள்ள கார், தொலைபேசி வசதிகள். சென்னைக்கு வந்தால் 3 ஸ்டார், 5 ஸ்டார் ஓட்டல்களில் தங்குவது, துணைக்கு ஒரு ஸ்டார் வேல்யூவையும் உடன் சேர்த்துக் கொள்வது. நமது கூட்டுறவுத் துறை அமைச்சர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் அதிக நாட்கள் இருந்தவர், அந்த அரசாங்கத்தில் தொடக்கத்திலே இருந்து இருப்பவர், அவரிடம் சொல்லிக் கொள்கிறேன் அரசியல் வாதியை மட்டும் அவமதிப்பது என்பதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். அந்த முறையை எல்லா அரசியல் கட்சிகளும் கைவிடவேண்டும். நாம் இந்த முறையை கைவிடாததால் அதிகார வர்க்கம் அரசியல் கட்சிகளைப் பிரித்து பிரித்து துண்டாடுகிறது. 5 ஆண்டுகாலம் உங்களை ஆதரிப்பார்கள். அவர்கள் எழுதி வைக்கின்ற பைல்களில் கையெழுத்துப் போடாவிட்டால் வேறு கட்சிக்கு வலிவூட்டும் வகையில் ரகசியத்தை அவர்களிடம் சொல்வார்கள். இந்த ரகசியத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிந்திருப்பார்கள். தனி அதிகாரிகளை நம்பி எவ்வளவு நாட்கள் நாம் இந்த நாட்டை ஆளப்போகிறோம். வரி கட்டுவது நாம். வசதி வாய்ப்பில்லாமல் மக்களுடைய வரிப்பணத்தில் ஸ்காலர்ஷிப்பில் படித்தவர்கள் அதிகாரிகளாக வந்து, வரி கட்டுகிறவர்கள் கைக்கட்டி நிற்கவேண்டிய பரிதாபமான நிலை.

ஜனநாயகத்தில், திரு. சுப்பு அவர்கள் கூறியதைப் போல, நாம்தான் உயர்ந்தவர்கள். யார் மக்களுடைய வாக்குகளை பெற்றிருக்கிறோமோ, பதவிக்கு வருகிறோமோ அவர்கள் சொல்வதைத்தான் அதிகாரிகள் செய்ய வேண்டுமே தவிர, அவசர காலத்தில் இருந்த ஜனநாயகம் அற்ற அரசு செய்ததைப்போல செய்வது முறையாகாது (மணி அடிக்கப்பட்டது). கூட்டுறவுத் துறையைப் பொறுத்தமட்டில் மக்கள் அங்கே போய் நிற்பது, சர்க்கரைக்கு ஆலையில் போய் நிற்பது. ஆனால் இவர் ஏ. சி. அறையிலே உட்கார்ந்திருப்பார். அதிகாரிகளைப் பார்க்கபோனால் ஐயா டிரஸ் செய்துகொண்டிருக்கிறார், ஐயா குளித்துக் கொண்டிருக்கிறார், ஐயா பைல் பார்த்துக் கொண்டு இருக்கிறார் என்று சொல்வார்கள். ஆனால் அரசியல்வாதியாக இருந்தால் அவன் குளித்துக் கொண்டிருந்தாலும் அங்கே வந்து விடுவார்கள். தூங்கிக்கொண்டிருந்தால் தலைமாட்டில் வந்து உட்கார்ந்து கொள்வார்கள். எனவே நீங்கள் உங்கள் கட்சிக்காரர்களையே நியமித்துக் கொள்ளுங்கள். தேர்தல்கூட வேண்டாம். தங்கள் அண்ணனும் அமைச்சராக இருந்தவர், அவர் வழி வந்த நீங்கள்

[திரு. சி. ஆறுமுகம்] [1978 செப்டம்பர்

தயவு செய்து உடன் தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டுக்
கொண்டு இந்தச் சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின்
சார்பில் எதிர்க்கிறேன். எதிர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு
பேரவையின் தற்காலிக தலைவரவர்களே, இதுவரையில் கூட்
டுறவுத் துறைக்கான தனி அலுவலர்கள் நியமனம் பற்றிய
மசோதாமீது உணர்வுகளை எல்லாம் கொட்டி இந்த மாமன்றத்திலே
இருக்கின்ற அனைத்துக்கட்சியின் உறுப்பினர்கள் எல்லாம்
தங்களுடைய மேலான கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறியிருக்
கிறார்கள். இந்த தனி அலுவலர் சட்டத்தினுடைய நோக்கத்தை
விமர்சனம் செய்தும், தொடர்ந்து மீண்டும் ஒரு ஆண்டுக்கு தனி
அலுவலர் பொறுப்பில் அந்த நிறுவனங்களை அனுமதித்தால்
ஏற்படும் சாதக பாதக நிலைமைகள் இரண்டையும் ஒவ்வொரு
வரும் ஒவ்வொரு கோணத்தில் எடுத்து வைத்து இருக்கிறார்கள்.

அரசைப் பொறுத்த வரையில் முதற்கண் தெளிவாக ஒரு
கருத்தை திட்டவட்டமாக இந்த கண்ணியமிக்க மாமன்றத்தில்
சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். இங்கே
கருத்துரைகளை நிகழ்த்திய அனைத்துக் எதிர்க் கட்சி உறுப்பினர்
பெருமக்களும் எடுத்துச்சொன்னதைப் போல தமிழக அரசு நீண்ட
நெடு நாட்களுக்கு தனி அலுவலர்களை வைத்து அந்தக் கூட்டுறவு
நிறுவனங்களை நடத்தவேண்டும் என்ற விருப்பமோ, விழுமிய
நோக்கமோ கிடையாது. இது ஒரு தவிர்க்க முடியாத நிர்ப்பந்
தத்தின் காரணமாக தற்காலிகமாக ஏற்பட்டதே தவிர
என்றைக்குமே தொடர்ந்து தனி அலுவலர்கள் பொறுப்பிலேயே
அந்த அமைப்புகள் இருக்க வேண்டும் என்ற உணர்வில் இந்த
மசோதாவை இன்றைக்கு உங்களின் மேலான பரிசீலனைக்குக்
கொண்டு வரவில்லை.

மிகவும் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் இந்த மசோதா
விலேயே சொல்லியிருக்கிறோம், ஏற்கனவே இரண்டு ஆண்டுகள்
அவர்கள் பொறுப்பில் இருந்ததை மேலும் ஒரு ஆண்டிற்கு—
ஒரு ஆண்டிற்குத்தான்— நீடிக்க உங்களின் மேலான அனுமதியைக்
கோரித்தான் இந்த மாமன்றத்திலே இந்த மசோதாவை
உங்களின் மேலான பரிசீலனைக்குக் கொண்டு வந்து இருக்
கிறோம். அதுவும் போதுமான காரணம் இருப்பதால்தான்.
அந்தக்காரணங்களை, இந்த மசோதா கொண்டு வருவதற்கான
ஓரிரு காரணங்களைச் சொல்வது பொருத்தம் என்று கருதுகிறேன்.

இங்கே பேசிய என்னுடைய மதிப்பிற்கும், மரியாதைக்கும்
உரிய மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்களும், என்னுடைய
மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய இந்திய முஸ்லீம் லீக்கின்
பொதுச்செயலாளர் மாண்புமிகு ஜனாப் அப்துல் லத்தீப் அவர்களும்
ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த மசோதாவின் விழுமிய
நோக்கமே ஜனநாயகத்திற்கு சாவு மணி அடிப்பது என்ற ஒரு
கருத்தைச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு பணிவன்போடு

1978 செப்டம்பர் 13] [திரு.கே.ஏ.கிருஷ்ணசாமி]

மிக அடக்கத்தோடும் சொல்லிக்கொள்வேன். இன்றைக்கு தேதி
1978 செப்டம்பர் 13. இன்றைக்கு அல்ல சாவு மணி அடித்தது.
இந்த முறைக்கு, ஜனநாயக முறைக்கு 1969—ம் ஆண்டில்
இருந்தே சாவு மணி அடிக்கப்பட்டு வந்து கொண்டு இருக்கிறது.
அந்த ஜனநாயகத்தைக் காப்பாற்றத்தான், அந்த நோக்கத்தில்
தான் இந்த மசோதாவை இன்றைக்கு கொண்டு வருகிறோம்.
ஜனநாயகத்தை அழிப்பதற்காக அல்ல. ஜனநாயகத்தைப் படு
குழியில் தள்ளியிருக்கிறார்களே, அதற்கு மீண்டும் புத்துயிர்
கொடுக்க இந்த மசோதாவை இந்த அரசு கொண்டு வந்திருக்
கிறது. 1969-ம் ஆண்டில் இருந்து இப்படித்தான் கூட்டுறவு
சங்கங்கள் நடந்து வருகின்றன.

விவரம் தெரிந்த உறுப்பினர்கள், மிகப் பொறுப்பான உறுப்
பினர்கள், அவர்கள் சொன்னதைப் போல் நான் எல்லாம் இந்த
மன்றத்திற்கு, இந்த கண்ணியமிக்க சபைக்கு புதியவன், அரிச்
சுவடிகூட அறியாதவன், விவரம் தெரியாதவன், விவரம் தெரிந்
தவர்கள், என்னுடைய கல்லூரி நண்பர்கள், என்னுடைய
அரசியல் நண்பர்கள், மாண்புமிகு ஜனாப் லத்தீப் போன்றவர்கள்,
மாண்புமிகு தோழர் சுப்பு போன்றவர்கள் எல்லாம் இந்த
மாமன்றத்தில் நீண்ட நெடு நாட்கள் இருந்து பல விவாதங்களில்,
பல மசோதாக்களின் மீது பேசியவர்கள். இதே மன்றத்தில்
1969-ம் ஆண்டில் இருந்து பல திருத்தங்கள் கொண்டு வரப்பட
வில்லையா? 1970 ஆம் ஆண்டு திருத்தங்கள் கொண்டு வரப்பட
வில்லையா? 1971-ம் ஆண்டில் திருத்தங்கள் கொண்டு வரப்பட
வில்லையா? இன்றைக்கு இருக்கிற சட்டத்திலே பல குறைபாடு
கள் இருக்கின்றன. இன்னும் நான் தெளிவாகச் சொல்லப்போனால்,
1961-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம்
இருக்கிறதே, அதுவே என்னைப் பொறுத்தவரையில் அதிலே
கறுப்பு ஷரத்துக்கள் பல இருக்கின்றன என்பதை நான் மனதாரக்
கருதுகிறேன்.

[முற்பகல் 11-50]

'கறுப்பு ஷரத்துக்கள் இருக்கின்றன. இன்றைக்கு உங்களுக்குத்
தெரியும், மாண்புமிகு சுப்பு அவர்களுக்குத் தெரியும். சாப்டர்
10 (ஏ) ஸ்டேட் கோவாபரேட்டிவ் பாங்க்— சென்ட்ரல் கோவாப்ப
ரேட்டிவ் பாங்க். அதைப்போல 10 (பி) அபக்ஸ் சொசைட்டீஸ்—
சென்ட்ரல் சொசைட்டீஸ். 10 (சி) கோவாபரேட்டிவ் யூனியன்.
இப்படி 1969, 70, 71 ஆம் ஆண்டுகளிலே இவைகள் எல்லாம்,
இந்த ஷரத்துக்களை எல்லாம் அன்றைய ஆட்சியாளர்கள்
எதற்காகப் புகுத்தினார்கள்? ஜனநாயகத்தைக் காப்பதற்காகவா?
ஜனநாயகத்திற்கு உயிர் கொடுப்பதற்காகவா? தயவு செய்து
நீங்கள் எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்றைய தினம் நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சி
1969-ல் இருந்து சில முறைகேடுகள், சில ஷரத்துக்கள்.......

திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு அமைச்சரவர்கள் பல ஷரத்துக்களை 1969-லேயிருந்து இந்தச் சட்டத்தில் இடம்பெற வைத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்த ஷரத்துக்கள் என்னென்ன என்பதை தயவுசெய்து சொன்னால் எங்களுக்கு விளக்கமாகப் புரிந்துகொள்ள வசதியாக இருக்கும். அதே நேரத்தில் தனி அலுவலர்களைக் கொண்டு தொடர்ந்தாற்போல் இப்படி பல ஆண்டுகளாக நிர்வாகத்தை நடத்த வகை செய்யும் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறதா என்பதையும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜனாப் லத்தீப் அவர்கள் ஒரு பொருத்தமான கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் என்ன ஷரத்துக்கள் என்று கேட்டார்கள். 10(ஏ)-1970 ஆம் ஆண்டு 'லிப்ட் இறிகேஷன் கோவாப்பரேட்டிவ் சொசைட்டீஸ்' என்ற பெயரில் புதிய கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்க ஒரு பகுதியைத் திருத்தினார்கள். இது ஜனநாயகத்திற்கு அடிக்கப்பட்ட சாவு மணி என்பது என்னைப் போன்றவர்களுடைய நம்பிக்கை. ஏனென்றால் அதனுடைய நோக்கம் நீர் இறைவை வசதி கழகம் என்ற பெயரால் 100 ஏக்கர், 200 ஏக்கர் நிலங்களை வைத்திருப்பவர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு நல்ல நிலைமையை உருவாக்க வேண்டுமென்ற நல்ல நோக்கோடு கொண்டுவரப்பட்டது. சட்டம் நல்ல நோக்கோடு கொண்டுவரப்பட்டது. ஆனால் அந்தச் சட்டம் செயல்பட்ட விதத்தைப் பார்த்தால் நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டதாகத் தெரியவில்லை. ஏனென்றால் 1970 ஆம் ஆண்டு 1975 ஆம் ஆண்டு 2442 கூட்டுறவுச் சங்கங்கள் அந்த பெயரிலே தொடங்கப்பட்டன, இந்த விதிகளின்படி. இன்றைக்கு, 1976 ஆம் ஆண்டு எத்தனை சங்கம் இருந்தது என்றால் 327 தான். மீதி எங்கே போயிற்று? ஏன் கலைக்கப்பட்டது? அந்தச் சங்கங்களின் பெயரால் தேர்தலுக்குப் பணம் வசூல் செய்யப்பட்டது; பினாமியாக பணம் கொடுக்கப்பட்டது; அரசியல் காரணங்களுக்காக அவைகள் பயன்படுத்தப்பட்டன என்பது விவாதத்திற்குரிய பிரச்சனை. அதுபற்றி ஏற்கெனவே பல விவரங்கள் நாட்டிலே பேசப்பட்டிருக்கின்றன.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரு மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றுகிற நேரத்தில் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களை எழுப்பி, இந்த மசோதாவை நிறைவேற்ற அமைச்சர் அவர்கள் முற்படுவார்களானால் அதுபற்றி ஒரு பெரிய விவாதத்திற்கு தாங்கள் அனுமதித்தாக வேண்டும். அந்த அளவுக்கு நேரத்தை நீட்டித்து, இந்த மசோதாவில் அனைவரும் பேச வாய்ப்பளிப்பது வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு உங்கள் மூலமாக அவரது மேலான பார்வைக்கு ஒரு விவரத்தைக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஜனாப் லத்தீப் அவர்கள் எந்த ஷரத்துக்கள் ஜனநாயகத்திற்கு சாவு மணி அடிக்கின்றன என்று கேட்டார்கள். அதற்கு பொறுப்பான ஒரு அமைச்சர் பதில் சொல்ல வேண்டியது தார்மீக கடமையாக இருக்கிறது என்ற காரணத்தால் சொன்னேனே தவிர, இந்த மசோதாவுக்கு அப்பால் செல்லக்கூடிய உணர்வு எனக்கு இல்லை.

திரு. துரை முருகன் : சார் பாயிண்ட் ஆஃப் கிளாரிஃபிகேஷன், தலைவரவர்களே, எத்தனையோ செக்ஷன்களில் சாவு மணி அடிக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்குமானால் சர்க்கார் அதை நீக்கிவிடலாமே. தவறான விதிகளை நீக்கிவிட்டு, புதிய விதிகளை நீங்கள் சேர்த்துக்கொள்ளலாம். கேள்வி என்னவென்றால் ஸ்பெஷல் ஆஃபீசர்கள் நீடிக்க வேண்டுமா என்பது. பட்டுக்கோட்டைக்கு வழி என்ன என்று கேட்டால் கொட்டைப்பாக்கு விலையைச் சொல்கிறார். இருக்கிற சட்டம் சரியில்லை என்றால் நீங்கள் நீக்கலாம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் சொல்லியது எனக்கு உடன்பாடான விவரம் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த மூன்று மாத காலமாக இந்தத் தீமைகளை, தீயவைகளை, இடர்பாடுகளை அங்கே இருக்கின்ற ஜனநாயக விரோதப் போக்குகளை நீக்குகின்ற வகையிலே விரைவிலே ஒரு அடங்கல் திருத்தம் கொண்டு வருவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலே தான் அதன் அலுவலர்களை இன்னும் ஓராண்டு காலத்திற்கு நீடிக்கிறோம். நீங்கள் சொல்வது போல்தான் நாங்கள் முயற்சிகள் எடுத்து காரியங்களை ஆற்றி இருக்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற இந்தத் தவறுகளைக் களைந்துவிட வேண்டும் என்கிற நோக்கத்திலே பொருளாதாரத்தினுடைய மேதை என்று கருதப்பட்ட, கருதப்படுகின்ற இன்றைக்கும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கின்ற திரு. சந்தானம் அவர்கள் தலைமையிலே 1968—ஆம் ஆண்டு ஒரு குழுவினை அமைத்தார்கள். அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பின்னாலே 1969-ஆம் ஆண்டு இந்தக் குழுவினுடைய அறிக்கை அன்றைய அரசுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் அதிலே அந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்ததா என்றால் அவர்கள் போதுமான அளவுக்கு வேகத்தைக் காட்டவில்லை.

அதேபோல் 1974-ஆம் ஆண்டு திரு. வர்கீஸ் என்ற ஒரு பெருமகனாரின் தலைமையிலே ஒரு குழு அதாவது அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிஃபார்ம்ஸ் கமிட்டி என்ற பெயராலே ஒரு குழுவினைப் போட்டு கூட்டுறவுத் துறைக்கு தேவைப்பட்ட சில மாறுதல்களைச் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். இப்படி கடந்த 6, 7 ஆண்டு காலத்திலே கடந்த ஆட்சி செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாத காரணத்தினால் இன்றைக்கு அவைகளை எல்லாம்

[திரு.கே.ஏ.கிருஷ்ணசாமி] [1978 செப்டம்பர் 13

பரிசீலனை செய்து பிற மாநிலங்களிலே அதாவது மகாராஷ்டிரம், பஞ்சாப் போன்ற மாநிலங்களிலே இருக்கின்ற சட்டங்களை எல்லாம் ஆராய்ந்து அதேபோல் நம்முடைய மாநிலத்திலே இருக்கின்ற சட்டங்களையும் ஆராய்ந்து அத்துடன் மைய அரசினுடைய நெறி முறைகளை எல்லாம் மையமாகக் கொண்டு இன்றையதினம் தமிழக அரசு பரிசீலனை செய்து கொண்டு வருகிறது. இந்த சட்டத்தைப் பொறுத்தவரையில் 1979-ஆம் ஆண்டு வரை இருக்கின்றது. அதற்குள்ளாகவே ஒரு முழுமையான சட்டத்தை உருவாக்குகின்ற வகையில் சட்ட திருத்தங்களை எல்லாம் கொண்டு வந்துவிட வேண்டும் என்று இந்தத் தமிழக அரசு விரும்புகிறது என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், பொருளாதார நிபுணர் திரு. சந்தானம் அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்ட குழு சிபாரிசு செய்திருப்பதாகவும் அதனை முந்திய அரசு நிறைவேற்ற வில்லை என்றும் சொன்னார்கள். அந்தக் குழுவினுடைய சிபாரிசுகளையும் இவர்களுடைய ஆலோசனைகளையும் வைத்து விரைவில் மக்கள் நலம் பயக்கக்கூடிய அளவில் நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, அந்த அடிப்படையிலேதான் இங்கே திருத்தச் சட்டங்கள் கொண்டு வருவதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பல உறுப்பினர்கள் பேசி இருக்கிறார்கள். ஒவ்வொரு உறுப்பினர்களும் உயர்வான கருத்துக்களைக் கொடுத்திருக்கிறார்கள், அவர்களுடைய முக்கியமான கருத்தெல்லாம் விரைவிலே தேர்தல் நடத்த வேண்டும், தேர்தல் நடத்த வேண்டும் என்பதுதான். மேற்கண்ட கருத்துத்தான் அரசினுடைய கருத்தும் என்பதை அறிந்து தேர்தல் நடத்த வேண்டும், தேர்தல் நடத்த வேண்டும் என்று வேகமாக முனைந்து பேசுகின்ற நேரத்திலே அரசினைத் துரிதப்படுத்த வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். எனவே அரசும் அந்தக் கருத்தோடுதான் இன்றையதினம் இருப்பதால் தனி அதிகாரிகள் நீண்ட நாட்களுக்கு இருக்கக் கூடாது என்ற வகையில் காரியங்களை ஆற்றவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இதற்கு முன்பு ஏற்கனவே ஏற்பட்டுள்ள அந்தக் குறைபாடுகளையும், ஏற்கனவே ஏற்பட்டுள்ள அந்த முறைகேடுகளையும் ஏற்கனவே இருக்கின்ற அந்த இடர்பாடுகளையும் நீக்கிவிடுகின்ற வகையிலே ஒரு முழுமையான ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட நிறுவனமாகக் கூட்டுறவுத் துறை இருப்பதற்கான எல்லா முயற்சிகளையும் இந்த தமிழக அரசு எடுத்துக்கொள்ளும் என்று சொல்லி இந்தத் தீர்மானத்தை நீங்கள் நிறைவேற்றித்தர வேண்டும் என்று பணிவன்புடன் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

1978 செப்டம்பர் 13]

[நண்பகல் 12-00]

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இங்கே அனைத்துக் கட்சி நண்பர்களும் ஏகோபித்து கூறியது, இது ஜனநாயகத்திற்கு சாவு மணி அடிப்பதாகும் என்று சொன்ன பிறகு, அரசு தவறை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் மசோதா கொண்டு வந்திருக்கிறார்கள். ஆளும் கட்சியில் இருப்பவர்களுக்கே பிடிக்கவில்லை. இதை டிவிஷனுக்கு விடுவது நல்லது. அப்போது இதை யார் யார் ஆதரிக்கிறார்கள், யார் யார் எதிர்க்கிறார்கள் என்பது தெரிய வரும். எங்கள் உணர்வை மதிப்பதாகத்தெரியவில்லை. குறைந்தபட்சம் டிவிஷனுக்கு விட்டால் உங்களை எவ்வளவு பேர்கள் ஆதரிக்கிறார்கள் என்பதை நாட்டுக்கு தெரியப்படுத்த உதவியாகயிருக்கும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): திரு. சுப்பு அவர்களுடைய தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்பெறுகிறது. பேரவை முன்னுள்ள கேள்வி—

''5-6-1978 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 3/1978) இப்பேரவை நிராகரிக்கின்றது.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றதாக அறிவிக்கப்பெற்றது.

(பேரவைத் தலைவர் தலைமை)

திரு. க. சுப்பு : நான் 'டிவிஷன்' கோருகிறேன்.

வாக்கெடுப்பு கோரப்பட்டு, வாக்கெடுப்பு எண்ணிக்கணிக்கும் வாக்கெடுப்பு நடைபெற்றது.

(திரு. கா. வே. கந்தசாமி அவர்கள் இந்த நேரத்தில் சபைக்குள் வந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாக்கெடுப்பு ஆரம்பித்த பின் மாண்புமிகு உறுப்பினர்கள் சபைக்குள் வருவது கூடாது. தயவு செய்து திரு. கந்தசாமி அவர்கள் வெளியே போய்விட வேண்டும்.

(திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் இந்த நேரத்தில் சபைக்குள் வந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து திரு. இராதா அவர்களும் வெளியே போய்விட வேண்டும்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : திரு. இராதா அவர்கள் சபைக்குள்ளேதான் உட்கார்ந்து கொண்டிருந்தார். வெளியே போக அவருடைய இருப்பிடத்திற்கு வரும்போது

வேண்டும் என்று சொல்வது முறையல்ல என்று கருதுகிறேன் The hon. Member was seated in the last row பெயர் கூப்பிடும்போதுதான் அவர் தம்முடைய இருப்பிடத்தில் இருக்க வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நடைபெறுகின்ற வாக்கெடுப்பில், இரண்டாவது பகுதியில், முதல்வரிசையிலுள்ள பெயர்களையும் கூப்பிட்டுவிட்டு, இரண்டாவது வரிசையிலுள்ளவர்களையும் செயலாளர் கூப்பிட்டு விட்டார். அதன்பின் இருப்பிடத்திற்கு வருவது சரியல்ல. ஆகவே திரு. இராதா அவர்கள் வெளியே இருந்ததாகத்தான் கருதப்பட வேண்டும். தயவு செய்து திரு. இராதா அவர்கள் வெளியே போகவேண்டும்.

THE HON. THIRU G. R. EDMUND : On a point of clarification, Mr. Speaker, Sir. In certain cases I have got the right of enlightening the Speak r......

MR. SPEAKER : In voting time, no clarification will be allowed. வோட்டிங் போது கிளாரிபிகேஷன் கிடையாது. தயவு செய்து உட்காருங்கள். தயவு செய்து உறுப்பினர்கள் எல்லோரும் அவரவர்கள் இருப்பிடத்தில் அமருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. கே. ஜே. உய்யக்கொண்டான் :</u> நாங்கள் எல்லாம் புதிய உறுப்பினர்கள், தெரியாது, புதிதாக வந்திருக்கிறோம். ஆகவே....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> புதிதாக வந்திருப்பது எனக்கும் தெரியும். ஆனால் உறுப்பினர்கள் 'தெரியாது' என்று சொல்லக் கூடாது.

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> தயவு செய்து குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். விதிமுறைகளின்படி ஐந்து நிமிட நேரம் மணியடிக்கப்படும். (குறுக்கீடு) திருத்திக்கொள்கிறேன். மூன்று நிமிடம் மணியடிக்கப்படும். அதற்குப் பின் சட்டமன்றத்தின் கதவுகள் மூடப்படும். இப்படிக் கதவுகள் உள்ளபடியே மூடப்பட்டிருந்தால் வெளியே இருக்கின்ற உறுப்பினர்கள் உள்ளே வந்து அமர்ந்திருக்க முடியாது. அந்த முறையில் திரு. இராதா அவர்களும் உள்ளே வந்து அமர்ந்திருக்க முடியாது. எனவே கதவுகள் மூடப்படுவதற்கு முன்பே சபைக்குள் வந்து நுழைந்து அமர்ந்து விட்டார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தயவு செய்து அமருங்கள். நீங்கள் சொல்வது எனக்குப் புரிகிறது, ஆனால் செயலாளர் இரண்டாவது பகுதியிலுள்ள முதல் வரிசையிலுள்ளவர்களைக் கூப்பிட்டு முடித்து, இரண்டாவது வரிசையிலுள்ள மாண்புமிகு சுப்புலட்சுமி, ஜகதீசன் அவர்களை அழைத்த பின்னால் தான் திரு. இராதா அவர்கள் வந்தார்கள் ஆகவே, இது முறையல்ல.

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> என்னுடைய வாதமெல்லாம், வாக்கெடுப்பு நடைபெறும் போது உறுப்பினர்கள் மன்றத்திற்குள் இருக்க வேண்டும் என்பது தான். திரு. இராதா அவர்களைப் பொறுத்தவரையில், வாக்கெடுப்பு நடைபெறும்போது மன்றத்திற்குள் இருந்திருக்கிறார் என்பது தான்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வாக்கெடுப்பு தொடர்ந்து நடைபெறும்.

எண்ணிக் கணிக்கும், வாக்கெடுப்பில் உறுப்பினர்கள் கீழ்க்கண்டவாறு வாக்களித்தனர்.

<u>ஆதரித்தவர்கள்.</u>

1. திரு. கே. கந்தசாமி.
2. திரு. மா. அப்துல்-லத்தீப்.
3. திரு. சொ. ந. பழனிசாமி.
4. திரு. சி. பழனிமுத்து.
5. திரு. த. புஷ்பராஜு.
6. திரு. ரா. பெரியசாமி.
7. திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்.
8. திரு. மு. கருணாநிதி.
9. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
10. திரு. என். கிட்டப்பா.
11. திரு. மெ. ஆண்டி அம்பலம்.
12. திரு. ஒ. சுப்பிரமணியன்.
13. திரு. என். இராமச்சந்திர ரெட்டி.
14. திரு. மு. அரங்கநாதன்.
15. திரு. க. கருணகிரி முத்தையா.
16. திரு. மு. செல்வராஜ்.
17. திரு. க. சுப்பு.
18. திரு. இரெ. இராசமாணிக்கம்.
19. திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்.
20. திரு. வீ. சின்னையா.
21. திரு. போ. எ. சீனிவாச ரெட்டியார்.
22. திரு. செ. இராமலிங்கம்.
23. திரு. நா. சுந்தரராஜ்.
24. திரு. டி. ஆர். இராசாராம் ரெட்டி.
25. திரு. துரை முத்துசாமி.

ஆதரித்தவர்கள்—தொடர்ச்சி

26. திரு. கே. உச்சி.
27. திரு. எஸ். கணேசன்.
28. திரு. தாழை மு. கருணாநிதி.
29. திரு. துரை கலியமூர்த்தி.
30. திரு. ப. சுந்தரம்.
31. திரு. க. அரங்கசாமி.
32. திரு. ச. சுப்பையா.
33. திரு. அ. செல்லப்பா.
34. திரு. கெ. சொக்கலிங்கம்.
35. திரு. பெ. சு. திருவேங்கடம்.
36. திரு. துரை முருகன்.
37. திரு. ஆ. நடராசன்.
38. திரு. எஸ். நடராசன்.
39. திரு. தீ. சு. நல்லதம்பி.
40. திரு. மொ. பரமசிவம்.
41. திரு. சு. பாலன்.
42. திரு. து. புருஷோத்தமன்.
43. திரு. ப. பொன்னுரங்கம்.
44. திரு. மா. மணிமாறன்.
45. திரு. கூ. ச. முருகேசன்.
46. திரு. அ. ரகுமான்கான்.
47. திரு. வி. ரகுராமன்.
48. திரு. த. வேணுகோபால்.

[பிற்பகல் 12-10]

எதிர்த்தவர்கள்.

1. திரு. கே. எம். அப்துல் ரசாக்.
2. திரு. கி. அப்துல் லத்தீப்.
3. திரு. எஸ். ஜே. இராமசாமி.
4. திரு. கே. ஜே. உய்யக்கொண்டான்.
5. திரு. கி. எத்ராஜ்.
6. மாண்புமிகு திரு. கி. மனோகரன்.
7. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்.
8. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்.

எதிர்த்தவர்கள்—தொடர்ச்சி

9. மாண்புமிகு திருமதி. சுப்புலட்சுமி செகதீசன்.
10. திரு. எம். வின்செண்ட்.
11. திரு. ஆனூர் ஜகதீசன்.
12. திரு. பி. எம். கிருஷ்ணன்.
13. திரு. பி. கிருஷ்ணன்.
14. திரு. கி. பெ. காத்தமுத்து.
15. திரு. போ. கோபாலன்.
16. திரு. மு. ரெ. கோவேந்தன்.
17. திரு. கா. ந. சண்முகம்.
18. திரு. ஆர். சண்முகம்.
19. திரு. ஆர். சந்திரசேகரன்.
20. டாக்டர் கே. சமரசம்.
21. திரு. தா. சாமிக்கண்ணு.
22. திரு. பொ. சிகாமணி.
23. திரு. மு. சிவபெருமாள்.
24. திரு. வ. சின்னசாமி.
25. திரு. என். சுப்பராயன்.
26. திரு. டி. சுப்பிரமணியம்.
27. திரு. கா. செங்கோடன்.
28. திரு. கு. அ. செங்கோட்டையன்.
29. திரு. சீனி. செல்வராஜ்.
30. திரு. ஓ. ப. சோமசுந்தரம்.
31. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்.
32. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து.
33. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்.
34. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு.
35. மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்.
36. திரு. ப. தனபால்.
37. திரு. இரா. தாமரைக்கனி.
38. திரு. சு. ம. துரைராஜ்.
39. திரு. க. நாச்சிமுத்து.
40. திரு. கே. பி. நாச்சிமுத்து கவுண்டர்.
41. திரு. செ. பட்டாபிராமன்.
42. திரு. கே. பண்ணை சேதுராம்.

எதிர்த்தவர்கள்—தொடர்ச்சி

43. திரு. பி. எச். பாண்டியன்.
44. திரு. மொ. பெரியசாமி.
45. திரு. என். பெருமாள்.
46. திரு. ஆர். மணிமாறன்.
47. திரு. இரா. முத்தையா.
48. திரு. பி. ராமதாஸ்.
49. திரு. சி. ராமநாதன்.
50. திரு. செ. மெ. ராஜு.
51. திரு. ரா. மார்க்கபந்து.
52. திரு. சௌ. வே. வரதராஜன்.
53. திரு. மு. ரா. சௌந்திரராஜன்.
54. திரு. வே. இரா. ஜெயராமன்.

நடுநிலை வகித்தவர்கள்.

1. திரு. ஜே. ஜேம்ஸ்.
2. திரு. சோ. அழகர்சாமி.
3. திரு. மு. அம்பிகாபதி.
4. திரு. ர. ஜெபமணி.
5. திரு. அ. சுவாமிதாஸ்.
6. திரு. செ. சிவசாமி.
7. திரு. பொ. உத்திராபதி.
8. திரு. ரா. கிருஷ்ணன்.
9. திரு. என். வரதராஜன்.
10. திரு. எம். அண்ணாமலை.
11. திரு. தே. ஞானசிகாமணி.
12. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்.
13. திரு. ரா. உமாநாத்.
14. திரு. கு. ரமணி.
15. திரு. சி. கோவிந்தராசன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு அவர்கள் தீர்மானத்திற்கு ஆதரவாக 48 வாக்குகள். தீர்மானத்திற்கு எதிராக 54 வாக்குகள், நடு நிலைமை வகிப்பவர்கள் 15. ஆகவே தீர்மானம் தோல்வியுற்றது.

[பிற்பகல் 12-20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—"தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 33/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 சட்டப் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 33/1978) சட்டமாக நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று சட்ட முன்வடிவு சட்டமாக ஆக்கப் பெற்றது.

(இ) 1978 ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 32/1978.)

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, "22-7-1978 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1978ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/1978) இப்பேரவை நிராகரிக்கின்றது" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் வழிமொழியப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 32/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்' என்று முன்மொழிகிறேன்.

---

*1978 செப்டம்பர் 7 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அவையின் ஒப்புதலுக்காக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள 1978ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழக சட்ட முன்வடிவை அங்கீகரிக்க வேண்டுமென்பதற்கே இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதன் பேரில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல முயலுகிறேன்.

(2) ஒழுங்குப் பிரச்சினைகள் (தொடர்ச்சி)

(ஈ) எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பிற்கு அடிக்கப்பெற்ற மணியின் ஓசை குறித்து.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கத்தை அவையில் வைக்க விரும்புகிறேன். காரணம், அதிலே தவறு உண்மையில் இருக்குமானால் உடனடியாகப் பரிசீலித்து அதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் சொல்லுகிறேன். வாக்கெடுப்பு நடந்து முடிந்த பிறகு உறுப்பினர்கள் உள்ளே வந்திருக்கிறார்கள். மணி அடித்தது லாபியில் கூடக் கேட்கவில்லை.

It may kindly be tested, Supposing it is true, i can be rectified.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, With due respect to my Hon. Colleague Mr. Edmund, I do not consider this as a point of order. Things have been over. Let us come to next business.

திரு. ரா. உமாநாத் : நான் பாயின்ட் ஆப் ஆர்டராகச் சொல்லவில்லை. மணி அடிக்கிற அரேஞ்ச்மென்ட்டில் ஏதாவது குறைபாடு என்றால் செக் பண்ணுங்கள்.

There should not be any unfairness to anybody.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் சொல்வது எனக்குப் புரிகிறது. அப்படி ஒரு குறைபாடு இருக்குமானால் நிச்சயம் நிவர்த்தி செய்யப்படும். மணி எல்லா இடங்களிலும் கேட்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. மு. கருணாநிதி : அப்படியானால் இப்போது குறைபாடு இருந்தது என்று ஒத்துக் கொள்கிறீர்களா? அப்படியானால் மீண்டும் வாக்கெடுப்பு நடத்தப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'குறைபாடு இருக்குமானால்' என்றுதான் சொல்லியிருக்கிறேன். இப்போது ஏதும் இல்லை.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்— (தொடர்ச்சி)

1978-ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக்கழக (திருத்த சிறப்பு விதித்துறைகள்) சட்டமுன்வடிவு.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ள மதுரைப் பல்கலைக் கழகத்தின் பெயரை மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் என்று மாற்ற வேண்டுமென்று அவை முன் வைக்கப்பட்டுள்ள மசோதாவை நான் மிகக் கடுமையாக எதிர்த்து கீழ்க்கண்ட கருத்துக்களைச் சுருக்கிச் சொல்லுகிறேன்.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த தமிழ் என்பதை நாம் நன்கு அறிவோம். அந்தத் தமிழை ஆதி மொழிகளில் முந்திய தமிழை ஆதி மனித வர்க்கத்திற்கு மூலதனமாக வித்திட்டவர்கள்போல் இருக்கிற தமிழ் மறவர்கள் கூடி மக்களுக்குத் தந்தார்கள். முந்திய இரண்டு சங்கங்களை வளர்த்த மதுரை மாநகர் கடலால் கொள்ளப்பட்ட பிறகு மூன்றாவது தமிழ்ச் சங்கம் இன்று இருக்கும் மதுரையில் தோன்றி தமிழை வளர்த்தது.

தமிழ் அகராதிகள், தமிழ் நூல்கள் வேண்டுமென்ற நிலை ஏற்பட்டபோது, தமிழ் மண்ணில் தமிழ் நூல்கள் கிடைக்கவில்லை என்ற நிலை ஏற்பட்டபோது அன்றைக்கு பாண்டித்துரைத் தேவர் அவர்கள் மூன்று லட்சம் ரூபாயைத் தன்னுடைய குடும்பச் சொத்தில் இருந்து செலவு செய்து நான்காவது தமிழ்ச் சங்கத்தை ஏற்படுத்த முயற்சி செய்தார்கள். தமிழ் அகராதியும், அடிப்படை நூல்களும் வெளிக் கொணரப்பட்டன. அப்படிப்பட்ட மதுரையின் தனிச் சிறப்பும், புகழும் ஆக்கம் பெறுவதற்கு அடிப்படையாக, தமிழனுடைய பண்பாடு. நாகரிகம், கலாசாரம் அவ்வளவையும் உருவாக்கி வளர்த்திருக்கிற மதுரையின் சரித்திரப் பண்பாடுகள் மாறிவிடாத அளவுக்கு, அதன் தனித் தன்மை விளங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் 1965-ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டபோது அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் இந்தியாவின் பிரதமராக இருந்த, ஆசிய ஜோதி என்று புகழப்பெற்ற நேரு பெருமகனாரின் பெயர் வைக்கப்பட வேண்டுமென்று விரும்பியதைக்கூட ஒதுக்கித் தள்ளினார்கள்.

மதுரைப் பல்கலைக் கழக செனட்டில்கூட இவ்வாறு பெயர் வைக்கவேண்டுமென்ற தீர்மானம் ஒருவரால் முன் மொழியப்பட்டபோது, அரசியல் தலைவர் பெயரை இதற்கு வைக்கக் கூடாது. மதுரையின் பெயருக்கு மாறாக அவ்வாறு வைக்கக் கூடாது என்று, தீர்மானம் கொடுத்த ஒருவரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் எதிர்த்திருக்கிறார்கள். இது பல்கலைக் கழக ரெக்கார்டுகளில் இருக்கிறது.

[திரு. கே. கந்தசாமி] [1978 செப்டம்பர் 13

[பிற்பகல் 12-30]

அதேபோல் மதுரை யுனிவர்சிடி ஃபேக்கல்டி அசோசியேஷனில் 45 உறுப்பினர்கள் இருக்கிருர்கள், அவர்களில் கடந்த வாரம் நடந்த கூட்டத்திலே வாக்களித்தவர்களில் 35 பேர்கள் இந்தப் பெயர் மாற்றத்தை எதிர்த்திருக்கிருர்கள். 8 பேர்கள் மாத்திரமே அதற்கு வாக்களித்திருக்கிருர்கள் என்ற பேருண்மையை நான் இந்த மன்றத்தின் மேலான கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல இன்னும் எத்தனையோ தனிப்பட்டவர்களுடைய கருத்துக்களும் இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற பத்திரிகைகளிலும், கன்னியாகுமரி என்ற பத்திரிகையிலே 16-8-78ஆம் தேதியன்று இரண்டு பக்கம் எழுதியிருக்கிருர்கள். இந்தப் பல்கலைக் கழகப் பெயர் மாற்றம் அவசியம்தான என்ற விளக்கத்தைத் தந்திருக்கிருர்கள். இந்துப் பத்திரிகையிலே எடிட்டர் 28-7-78 ஆம் தேதியன்றும், திரு, ஹரிஹரன் 5.7.78 ஆம் தேதியன்றும், திரு வெங்கடேசன் 27-7-78 ஆம் தேதியன்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே என். ஜி. எஸ். நாராயணன், புரஃபசர் (ஹிஸ்டரி), கள்ளிக்கோட்டை யுனிவர்சிடி ஆகியவர்களும், இன்னும் பல பெரியவர்களும் மாற்றுக் கருத்துக்களைச் சொல்லி அந்தப் பெயர் மாற்றம் வேண்டாம் என்ற கருத்தைத் தெரிவித்து இருக்கிருர்கள்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுருளியாற்றுத் திட்டத்தைத் துவக்கி வைக்க வந்தபோது மாணவர்கள் பல சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், கட்சி சார்பற்ற தொழிலாளர்கள் ஆகியோர் கறுப்புக்கொடியை, தங்களுடைய அதிருப்தியைத் தெரிவிக்கக்கூடிய முறையிலே காட்டினர்கள். அதைக் குறித்து நான் சபையிலே தெரிவித்திருக்கிறேன். இப்படி நான் சுட்டிக்காட்டுவதற்காக, ஏதோ கந்தசாமி பேசுகின்ற காரணத்தினல் அரசியல் உணர்வு காரணமாக, அல்லது சமுதாய உணர்வு காரணமாகப் பேசுகின்ருனே என்ற கருத்து ஏற்பட்டு விடக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

''எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறளுக்கிணங்க யார் சொல்கின்ருர் என்பதைவிட சொல்கின்ற பொருள் என்ன என்பதை அருள்கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் காசி பல்கலைக்கழகத்தினுடைய பெயர் மாற்றப்படவில்லை, அதை ஏற்படுத்தியவர் மாளவியா. அதேபோன்று ரவீந்திரநாத் தாகூர் பெயர் வைக்கப்படவில்லை, அது விசுவபாரதி என்ற பெயரிலேதான் இருக்கிறது, காந்தியார் பிறந்த குஜராத் மாநிலத்திலேகூட காந்தியார் பெயரிலே ஒரு பல்கலைக்கழகம் பெயரிடப்படவில்லை, நேரு போன்றவர்களுக்கு ஏற்படுத்தினர்கள் என்ருல் புதிதாக ஏற்படுத்தி அந்தப் பெயரை வைத்திருக்கிருர்கள்,' ஏற்கனவே இருந்ததை மாற்றி விடவில்லை. ஆகவே சரித்திரப்பிரசித்தி பெற்ற பெயரை

1978 செப்டம்பர் 13] [திரு, கே. கந்தசாமி]

எடுத்துவிட்டு அரசியல் தலைவர்களுடைய பெயரை வைப்பதாக எங்கேயும் இல்லை, இந்தப் பெயர் மாற்றத்தின் மூலமாக பின்னலே வருகின்ற சந்ததியார்கள்—நம்முடைய தமிழன் நன்றியுடையவன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 8 நிமிடம் ஆயிற்று, முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. கே. கந்தசாமி : தயவுசெய்து எனக்குக் கொஞ்சம் டைம் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு மசோதாக்கள் எல்லாம் பாஸாக வேண்டும், 5 நிமிடம் கொடுத்தது 8 நிமிடம் எடுத்துக் கொண்டு விட்டீர்கள், முடித்து விடுங்கள்.

திரு. கே. கந்தசாமி : ஆகவே தனிப்பட்டவர்களுடைய பெயரால் எங்கேயும் மாற்றப்படவில்லை, அப்படி மாற்றுவது தவறு, பொதுமக்களுடைய கொந்தளிப்பு தமிழகத்திலே அதனல் ஏற்பட்டிருக்கிறது. கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே நடந்த ஒரு நிகழ்ச்சியை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மதுரை மீனுட்சியம்மன் கோவிலைச் சுற்றிக் கடைகள் கட்ட வேண்டுமென்று அப்போதைய அரசு சட்ட முன்வடிவு கொண்டுவர இருந்த நேரத்திலே- அப்போது அங்கே இருந்த செட்டியார்கள் எல்லாம் கூடாது என்று சுப்ரீம் கோர்ட்டிற்குக்கூடச் சென்ருர்கள். அப்போது அந்த சட்டமுன் வடிவை அப்போதைய முதல்வர் கலைஞர் அவர்கள் கொண்டு வர வேண்டுமென்று சொன்னபோது நான் கட்சி சார்பற்ற முறையிலே அதைக் கொண்டுவரக்கூடாது என்று சொன்னேன், பல இலட்சம் இந்துக்களின் மனம் புண்படும் அளவில் இருக்கும், அன்னை மீனுட்சியின் ஆலயத்தை வியாபாரஸ்தலமாக ஆக்குவது முறையா என்று சொல்லி கடை கட்டும் திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று கேட்டேன். மறுநாள் அன்றையதினம் முதல் அமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமியின் வேண்டுகோளுக்கு இணங்க, இந்த அரசு எந்த மதத்தினரையும் புண்படுத்தாத அளவில் மதச்சார்பற்ற அரசாக இருப்பதால், மீனுட்சி ஆலயத்தைச் சுற்றிக் கடை கட்டினல் இந்துக்களின் மனம் புண்படும் என்று கந்தசாமி தெரிவித்த கருத்தை ஏற்றுக்கொண்டு கடை கட்டும் திட்டத்தை இன்ருேடு கைவிட்டு விட்டது என்ற மகிழ்ச்சியான செய்தியை அறிவித்தார்கள். அதை ஒரு கவுரவப் பிரச்னையாக எடுத்துக்கொள்ளாமல் செய்தார்கள். ஆகவே, தயவுசெய்து இன்றைய மாண்புமிகு முதல்வரவர்களும் இதைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு........ (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள், 12 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. கே. கந்தசாமி : இன்னும் ஒரே ஒரு நிமிடம் கொடுங்கள், அதனால் குடி முழுகிப் போகாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், தாங்கள் இதற்குமேலே பேசுவதை நீக்கி விடுவேன். தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. கே. கந்தசாமி : இது முக்கியமான பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கிடையாது, உட்காருங்கள்.

திரு. கே. கந்தசாமி : உட்கார மாட்டேன், பேசுவேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கிடையாது, அனுமதிக்க முடியாது. அதனால்தான் கொடுப்பதில்லை என்று பணிவோடு சொன்னேன், அவையிலே ஒத்துழைக்கிற உறுப்பினராக இருந்தால் இருபது நிமிடங்கள்கூடக் கொடுக்கலாம்.

திரு. கே. கந்தசாமி : இன்னும் ஒரு நிமிடம் கொடுங்கள். முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. கே. கந்தசாமி : நான் முடித்து விடுகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனி, உட்காருங்கள். அடுத்து திரு. ரகுமான்கான் அவர்கள்.

திரு மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர்....

திரு. கே. கந்தசாமி : நான் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். திரு. அம்பிகாபதி, என்ன உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர்?

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, நான் பேசித்தான் ஆகவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

திரு. கே. கந்தசாமி : உட்கார முடியாது, நான் பேசித்தான் ஆகவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப் பேசினாலும் எல்லாவற்றையும் நீக்க வேண்டிய நிலை வரும். நான் நின்று கொண்டிருக்கிறேன், உட்காருங்கள்.

திரு. கே. கந்தசாமி : நான் என்னுடைய உணர்வுகளைச் சபைக்குத் தெரிவிக்க வேண்டும். ஒரு நிமிடத்தில் பேசிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுதான் அவைத்தலைவரின் பேச்சுக்குக் கொடுக்கின்ற மதிப்பா? தாங்கள் சொல்வதற்கு நான் கட்டுப்பட வேண்டுமா? நீங்கள் வழக்கறிஞர், நீங்களே சொல்லுங்கள், நீங்கள் சொல்வதற்கு நான் கட்டுப்பட வேண்டுமா? நீங்கள் பேசிவிட்ட பிறகுகூட நான் நீக்கிவிடுவேன், உட்காருங்கள்.

திரு. கே. கந்தசாமி : எடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யார் திருத்தம் தந்தாரோ அவரைப் பேசச் சொல்லியிருக்க வேண்டும். அப்படியில்லாமல், திருத்தம் தராதவர்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததால் வந்த வினை இது. தாங்கள் உட்காருங்கள்.

திரு. கே. கந்தசாமி : என் கருத்தைச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருகிறீர்களா, இல்லையா? நான் நிற்கிறேன், நீங்களும் நிற்பது என்றால் நில்லுங்கள். நான் நிற்கிறேன், உட்காருங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். பேரவைத் தலைவரவர்களே, ஒரு முக்கியமான விஷயத்தை உங்களது கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 150 பேர் மறியல் நடத்தியதற்காக ரிசர்வ் வங்கி அருகில் படுகாயப்படுத்தப்பட்டிருக்கின்றனர், அடிக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாக விசாரித்து இந்த அவை நடக்கும் காலத்திலேயே அறிக்கை கொடுக்க வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன். பலபேர் மருத்துவமனைகளிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12.40]

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, அருப்புக்கோட்டையிலே பஸ் மறியலாலே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர்?

திரு. க. சுப்பு : அவர் சொன்ன மாதிரி நானும் எழுப்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சொன்னதற்காகத் தாங்களும், தாங்கள் சொன்னதற்காக இன்னொருவரும் என்றால் என்ன பொருள்? அவருக்கு இன்னும் நான் பதில் சொல்லவில்லையே? நான் இன்னும் அவரது பிரச்னைக்குப் பதில் சொல்லவில்லை. எழுத்துமூலமாக அவைத் தலைவருக்குக் கொடுத்த பிறகுதான் எந்தப் பிரச்னையையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள முடியுமே தவிர, எழுந்து இடையிலே எழுப்புவது அவ்வளவு சரியல்ல. அடுத்து, திரு. ரகுமான்கான்.

திரு. கே. கந்தசாமி : தயவுசெய்து எனக்கு ஒரே ஒரு நிமிஷம்......

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே, திரு. கந்தசாமி அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வது, அவர்களை அமர வேண்டுமென்று நெடுநேரமாகப் பேரவைத் தலைவர் கேட்டுக்கொண்டதற்குப் பிறகும் அவர்கள் நின்றுகொண்டே இருந்தார்கள், வழக்கத்திற்கு மாறாக. அதற்குப் பிறகு பெரிய மனதுவைத்து உட்கார்ந்தார்கள். அதற்குப் பிறகு அவைத் தலைவர் திரு. ரகுமான்கானை அழைத்ததற்குப் பிறகு அவர்கள் தயவு செய்து உட்காருவதுதான் நியாயம். அதற்குப் பிறகு அவர்களை அழைப்பது சபாநாயகருடைய இஷ்டம்.

திரு. கே. கந்தசாமி : இப்படி ஒரு முறையை எல்லோரும் பின்பற்றுவதைப் பாராட்டுகிறேன். 10 நிமிடத்திற்குப் பதிலாக 11 நிமிடம் பேசுவதால் அவையினுடைய வேலைகள் குறுக்கிடப்படும் என்றால், தவறுகள் ஏற்படும் என்றால், அதற்குரிய தண்டனையை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து எதிர்க்கட்சித் தலைவர்களுக்குச் சொல்வது, நான் இனி கண்டிப்பாக நேரத்தைக் கணக்கிட்டுத்தான் பேச அனுமதிப்பேன். (குறுக்கீடு) எல்லாவற்றிற்கும் அந்தந்தக் கட்சியிலுள்ளவர்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்து நான் நேரத்தை ஒதுக்கப் போகிறேன்.

திரு. மு. கருணாநிதி : இந்த நேரம் ஒதுக்கீடு முதலமைச்சருக்கும் சேர்த்து ஒதுக்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிச்சயம் உண்டு. இன்னும்கூட நேரம் இருக்கும், கணக்கிட்டுப் பார்த்தால். அவ்வளவு ஆளுங் கட்சிக்காரர்கள் பேசவில்லை. பேசாமல் எதிர்க்கட்சிகளுக்குத்தான் தந்திருக்கிறேன். அந்த விவரத்தை நாளைக்குத் தருகிறேன். ஆகவே, நாளை முதல் எண்ணிக்கை அடிப்படையிலேதான் நேரம் ஒதுக்க இருக்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு தலைவரவர்கள் பெருந்தன்மையைப் பாராட்டி, அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அன்று பேசுகிறபொழுது முதல்வர் அவர்கள் என்னுடைய பேச்சைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மதுரை தேர்தலுக்காகத்தான் இந்தப் பெயர் அறிவிக்கப்பட்டதே தவிர தேச பக்தியால் அல்ல என்று நான் சொன்னேன். அதற்கு முதலமைச்சரவர்கள், நான் அறிவித்த அறிவிப்பை ஏற்கக்கூடியதாக தேசத்தினுடைய தீர்ப்பு இருக்கிறது, மதுரை ஏற்றுக் கொண்டது என்று சொன்னார். அது சட்டபூர்வமாக இருக்கிறது. ஆனால், (மணியடிக்கப்பட்டது)

*** *** ***

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதுரைப் பல்கலைக் கழகத்தைப் பற்றி பேசியதை ஏற்றுக்கொள்கிறேன். அதற்குப் பிறகு, கடைசியிலே, *** *** பேசிய அத்தனையையும் நீக்கி *** விடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு.. (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உறுப்பினர்கள் இதுவரை சிரித்ததும், பேசியதும் போதும், அமைதியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு தியாக தீபம் காமராஜ் அவர்களுடைய பெயரைச் சூட்டுகின்ற விதத்தில் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தச் திருத்தச் சட்டத்தை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். ஆனால் அதே நேரத்தில் இந்த தியாகதீபம் காமராஜ் அவர்களுடைய பெயரை மதுரைப் பல்கலைக் கழகத்திற்குச் சூட்டுகின்ற நேரத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற காரணம், காமராஜ் இந்தத் தேசத்தின் விடுதலைக்காக அரும்பணி ஆற்றிய மாபெரும் தியாகி, மரியாதைக்குரிய தலைவர், ஆகையினாலேதான் மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு அவரைக் கவுரவிக்கின்ற விதத்திலே அவர்களுடைய பெயரைச் சூட்டி இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், மீண்டும் சொல்கிறேன், அதை வரவேற்கிறது.

ஆனால் அதே நேரத்தில், ஆளுநர் உரையின்போதுகூட நான் சுட்டிக்காட்டினேன், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு— தந்தை பெரியாரைப் போற்றுவதாக இந்த அரசு சொல்கிறது—பெரியார் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதாகச் சொல்லுகிறது—

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

காமராஜரைக் கவுரவிக்கவேண்டும் என்பதற்காகச் சட்டம் போடுகின்றபோது, இந்த அரசு தந்தை பெரியாருடைய பெயரை ஏன் சென்னைப் பல்கலைக் கழகத்திற்குச் சூட்டக்கூடாது? அதற்கு என்ன தடை இருக்கிறது. அதைக் கவுரவிக்கின்ற விதத்திலே தந்தை பெரியார் அவர்களுடைய பெயரைச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்குச் சூட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே கூட எங்கள் தலைவர் கலைஞர் அவர்களின் வேண்டுகோளின் பேரில் நம்முடைய முதலமைச்சர் தந்தை பெரியார் அவர்களுடைய படத்தை இந்த மன்றத்தில் திறப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கியிருக்கிறார்கள். அதைப்போல சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் பெரியாருடைய பெயரைச் சூட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இதைப்போலவே பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் தென்பாண்டி மண்டலத்திலே விடுதலை உணர்ச்சியைத் தூண்டியவர். அவருடைய தியாகத்தைப் பாராட்டி, அவர் தென்பாண்டி மண்டலத்தில் ஆற்றிய தொண்டுகளைப் பாராட்டி நிச்சயமாக கோவையிலே இருக்கக்கூடிய விவசாயப் பல்கலைக் கழகத்திற்கு அவர் பெயரைச் சூட்டவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நிச்சயமாக, குறிப்பாக மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள் இந்த அரசாங்கத்தை வலியுறுத்தி அதற்கான முயற்சிகளில் முனைப்பாக ஈடுபடுவார் என்று நான் நம்புகிறேன்.

உயிரோடு இருப்பவர்கள் பேரிலே சிலை வைக்கக்கூடாது, உயிரோடு இருப்பவர்கள் பெயரிலே பெயர்ப்பலகைகள் இருக்கக் கூடாது என்ற வாதங்கள் எல்லாம் அண்மைக்காலத்தில் நடந்து கொண்டிருக்கிறது. அண்ணா அவர்கள் உயிரோடு இருந்த காலத்தில், சென்னை மாநகராட்சியை திராவிட முன்னேற்றக் கழகம் கைபற்றி இருந்த நேரத்தில், உயிரோடு இருந்த காமராஜர் அவர்களைக் கவுரவிப்பதற்காகத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் காமராஜ் அவர்களுடைய சிலையை வைத்தார்கள். அவர் உயிரோடு இல்லாத காலத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில், அவருக்கான நினைவு மண்டபத்தை எந்த அரசியல் நோக்கமும் இல்லாமல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிப் பொறுப்பிலே கலைஞர் இருந்தபோது செய்தார்.

அதுமட்டுமல்ல, எந்த அரசியல் நோக்கமும் இல்லாமல் காமராஜ் அவர்கள் தவழ்ந்து விளையாடிய வீட்டை விருதுநகரிலே அரசின் சார்பிலே எடுத்துக் கொண்டார்கள். அப்போது கூட சிலர் கேட்டார்கள், காமராஜ் வீட்டை இவ்வளவு பணம் கொடுத்து அரசு வாங்கலாமா என்று. அந்தத் தியாகச் செம்மலை கவுரவப்படுத்துகிற நோக்கத்தில் அதைச் செய்தோம் என்று சொன்னார்கள். ஆனால் தவறாகக் கருதிக்கொள்ள மாட்டீர்கள் என்று நம்புகிறேன். எனக்குச் சில சந்தேகங்கள் வருகின்றன.

சட்டமன்றம் நடைபெறுகிற காலத்திலே மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு காமராஜ் பல்கலைக்கழகம் என்று பெயர் மாற்றம் கொண்டு வரப்படவில்லை. அவசரச்சட்டம் கொண்டுவருகின்ற அளவுக்கு அவசியம் என்ன வந்தது. அதுவும் தேர்தலுக்கு முன்பாக, ஏன் வந்தது தேசியத் தலைவர் பாரதியார் இருக்கிறார், வ.உ.சி இருக்கிறார் அம்பேத்கார் இருக்கிறார் இதுபோன்ற பல தலைவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் மீது இல்லாத அக்கறை மாநகராட்சித் தேர்தலின் போது காமராஜர் பெயரிலே எப்படி வந்தது. மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு அவர் பெயரை வைக்கவேண்டிய அவசியம் என்ன? அதுவும் அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டதன் அவசியம் என்ன? அது காமராஜ் அவர்களை கவுரவிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டதல்ல. அரசியல் நோக்கத்தோடு, அரசியல் லாபத்தோடு, தேர்தல் நேரத்தில் அந்தப் பகுதி மக்களைத் திருப்திப் படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் கொண்டுவரப்பட்டதே தவிர, இந்த சர்க்கார் காமராஜரைக் கவுரவிக்கவேண்டும் என்பதற்காக கொண்டுவரவில்லை என்ற என்னுடைய குற்றச்சாட்டைச் சொல்லி, இதிலே உள்நோக்கம் இருக்கிறது என்று சொல்லிக் கொள்ளுகிறேன். நோக்கம் எதுவாக இருந்தாலும், நோக்கம் சரியில்லாவிட்டாலும் கூட, மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு காமராஜ் பெயர் சூட்டியதை—எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் காமராஜர் நினைவாலயத்தை உள்நோக்கம் இல்லாமல் செய்தார்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்று அமைகிறேன்.

[பிற்பகல் 12-50]

திரு. துரை முத்துசாமி: சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இங்கே மதுரைப் பல்கலைக் கழகம் என்ற பெயரை மாற்றி, மறைந்த பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் பெயரில் வழங்க சட்டத் திருத்தம் கொண்டு வந்து இருக்கிறீர்கள். அதற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு நான் சார்ந்து இருக்கின்ற காங்கிரஸ் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே சட்டத் திருத்தம் வருவதற்கு முன்பாக பேசிய நண்பர்கள் பல எண்ணங்களை எடுத்துக் கூறினார்கள். சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் வாரிசாக, அவர்களுடைய இதயமாக திகழ்ந்த பெரியார் காமராஜ் அவர்கள் பெயர் இந்த நாட்டில் நிலைத்து இருக்க வேண்டும், அவருடைய நினைவு என்றென்றும் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களுடைய பெயரால் மதுரைப் பல்கலைக் கழகத்தை 'காமராஜ் பல்கலைக்கழகம்' என்று மாற்றி அமைத்து இருப்பதற்கு நான் மீண்டும் நான் சார்ந்து இருக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் எங்கள் திருத்தம் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்திய நாட்டிலே இருக்கும் மக்கள், கோடானகோடி மக்கள் அவரை பெரும் தலைவர் காமராஜ் என்றுதான் அழைத்து

வந்தார்கள். ஆகவே, வெறும் 'காமராஜ் பல்கலைக்கழகம்' என்று இருப்பதைவிட 'பெரும் தலைவர் காமராஜ் பல்கலைக்கழகம்' என்று மாற்றி அமைத்தால் நன்றாக இருக்கும். அந்த அளவில் என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் இங்கே கொண்டுவரப்பட்டு இருக்கிற மசோதா மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் ஒரு தேசியத் தலைவர். அவர் பெயர் அழியாது என்றென்றும் பசுமையாக இருக்கவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு மதுரையில் இருக்கின்ற பல்கலைக் கழகத்திற்கு பெயரை மாற்றி, காமராஜ் பல்கலைக்கழகம் என்று பெயரிட இந்த அரசு முடிவு எடுத்து இருக்கிறது. அந்த வகையில் இங்கே மசோதா கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இந்த மசோதா வருவதற்கு முன்னதாக பெரும் தலைவர் காமராஜ் பிறந்த தின விழா 15-7-78 அன்று நடைபெற்றது. அந்த விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பெயரை அறிவித்தார்கள். அதை ஒட்டி 22-7-78-ம் நாள் அதற்கான ஒரு அவசரச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு அன்று முதல் அந்தப் பெயர் பழக்கத்தில் வந்து விட்டது. அதுவரையிலும் மதுரைப் பல்கலைக்கழகம் என்று அழைக்கப்பட்டு வந்தது, 22-7-78 நாள் முதல் அத்தனை ரிக்கார்டுகளிலும், மாணவர்கள் மத்தியிலும், கல்லூரிகளிலும் காமராஜ் பல்கலைக்கழகம் என்ற பெயர் பழக்கத்தில் வந்து விட்டது. அதற்குப் பின்பு இந்த மாமன்றத்தில் ஒருவர் ஒரு துண்டுப் பிரசுரத்தை பார்வையாளர் மாடத்தில் இருந்து இங்கே வீசியதையும், அங்கேயிருந்து ஒருவர் ஏதோ குரல் எழுப்பியதையும் இந்த மாமன்றம் மறந்து இருக்க முடியாது என்று எண்ணுகிறேன். அது யாரால் செய்யப்பட்டது என்பதையெல்லாம் நான் கூறத் தேவையில்லை. அது ரிக்கார்டில் இருக்கிறது. ஆகவே, எந்தக் காரணத்திற்காக ஏற்கனவே அறிவிக்கப்பட்ட, ஏற்கனவே அவசரச் சட்டத்தின் மூலமாக அது சட்டமாக்கப்பட்டு பழக்கத்தில் வந்து விட்ட பெயரை திருத்தி இப்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது உண்மையிலேயே நான் வேதனைப்படுகிறேன். நல்ல நோக்கத்தோடு அந்த மசோதா இங்கே வந்தது. ஆனால் ஏதோ பல்வேறு காரணங்களுக்காக இங்கே அதற்குத் திருத்தம் கொண்டு வருவது என்றால் நிச்சயம் அதை நாங்கள் ஏற்றுக் கொள்வதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் பெரும் தலைவர் காமராஜ் பெயரை அந்தப் பல்கலைக் கழகத்திற்கு நாம் சூட்டுகிறோம் என்றால் அவர் ஒரு தேசியத் தலைவர். இந்த தேசத்தின் விடுதலைக்கு 8, 9 ஆண்டுகள் சிறையில் வாடியவர். அதுமட்டுமல்ல. தமிழ்நாட்டில் தமிழை ஆட்சி மொழியாக்க வித்திட்டவர்; தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு வந்தவர். இந்த நாட்டிலே கட்டாயக் கல்வியைக் கொண்டுவந்தவர். ஏழை எளிய மக்களுக்கெல்லாம் இலவசக்

இருந்த 9 ஆண்டுக் காலம் கல்வியைக் கொண்டு வந்தவர். அவர் நல்லாட்சி பொற்காலம் என்று அனைவராலும் போற்றுகின்ற பல்கலைக் புரிந்தவர். அப்படிப்பட்டவர் பெயரால் காமராஜ் கழகம் என்று அழைக்கப்படுவதை ஏதோ ஜாதி வெறியர்களால், சமூக விரோதிகளால் இந்தப் பெயரை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறிய காரணத்தால் மாற்றுவது என்றால் இந்த நாட்டு மக்கள் மட்டுமல்ல இந்த தேசத்து அனைத்து மக்களின் மனங்களும் புண்படும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

தலைவர் காமராஜ் என்றால் அவர் ஒரு தேசத் தலைவர் மட்டு மல்ல. இந்த நாட்டு அரிசனங்களுக்காக தன்னுடைய வாழ்நாளை எல்லாம் அர்ப்பணம் செய்து, அவர்களுக்காகப் போராடியவர் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் காரணமாக இந்தப் பெயருக்கு இப்போது எதிர்ப்பு வந்திருக்கிறது என்றால் நல்லாட்சி புரிகிற இந்த அரசு அதற்கெல்லாம் செவி சாய்க்க வேண்டுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். ஏற்கெனவே எடுத்த முடிவிலிருந்து சற்றும் பிறழாது அந்தப் பெயரை இந்தப் பல்கலைக் கழகத்திற்கு வைத்து அழைக்க வேண்டும். அதனால் இந்த அரசுக்கு நல்ல புகழ் வருவது மட்டுமல்ல; மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு இந்த தேசமல்லாது உலகப் புகழ் வரும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே உரையாற்றிய சிலர் கூறினார்கள். தலைவர் காமராஜ் என்றால் அது ஒரு தனி மனிதன், அந்தத் தனி மனிதனுடைய பெயரை ஒரு பல்கலைக் கழகத்திற்கு சூட்டலாமா என்று கேட்டார்கள். தனி மனிதன் என்று கூறுவது யார்? அந்த வார்த்தை யார் வாயிலிருந்து வருகிறது என்று எண்ணிப்பார்க்கும் போது நான் வியப்படையவில்லை. ஆனால் இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்..

<u>திரு. கே. கந்தசாமி :</u> சார், பாயின்ட் ஆப் ஆர்டர். (மணி யடிக்கப்பட்டது) திரு. ஜேம்ஸ் அவர்கள் சொல்வதை நான் ஆட் சேபிக்கிறேன். யார் வாயிலிருந்து வார்த்தை வருகிறது என்கிறார்கள். யார் வாயிலிருந்து வரும்? தலைவர் பொறுப்பிலிருக்கிற உங்கள் வாயிலிருந்துகூட வார்த்தை வரும். எதையோ மனதில் வைத்துக்கொண்டு சொல்கிறார்கள்....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. கந்தசாமி, தாங்கள் தயவுசெய்து உட்காருங்கள். 'ஹி இஸ் நாட் ஈல்டிங்'.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> நான் கேட்டுக்கொள்வதெல்லாம்,

''எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்பது இழுக்கு''

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, ஏற்கெனவே எடுத்துக்கொண்ட முடிவிற்கு மாறாக இந்தத் திருத்தம் தேவையில்லை. ஆகவே, இந்தத் திருத்தத்தை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் இப்போது பல்வேறு பெயர்களை வைத்துக்கொண்
டிருக்கிறோம். பேரறிஞர் அண்ணு, தந்தை பெரியார் என்றெல்
லாம் பெயர் வைத்திருக்கிறோம். அது நிச்சயமாக வரவேற்கத்
தக்கது; சந்தேகமில்லை. அவரவர் வாழ்நாளில் எந்தக் கூட்டுப்
பெயரால் அவர்கள் அழைக்கப்பட்டார்களோ அந்தப் பெயரைச்
சூட்டுவதுதான், அந்தப் பெயரைச் சூட்டி அவர்களை கௌர
விப்பதுதான் நிச்சயமாக வரவேற்கக்கூடியதாக இருக்கும். அதில்
எந்தவிதமான தவறும் இருக்க முடியாது. அதைப்போல பெருந்
தலைவர் உயிரோடு இருந்தபோது அவரை இந்த நாட்டு மக்கள்
காமராஜ் என்று அழைப்பதில்லை; பெருந்தலைவர் காமராஜ் என்று
தான் அழைத்து வந்தார்கள். இந்த மாமன்றத்தின் நடவடிக்கைப்
புத்தகங்களை எடுத்துப் பார்த்தால் கூடத் தெரியும். அன்றைய
முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் இந்த அவையிலே
அவரை பெருந்தலைவர் காமராஜ் என்றுதான் அழைத்திருக்
கிறார்களே தவிர வெறும் காமராஜ் என்று அழைக்கவில்லை.
ஆகையால் இங்கே நான் கொடுத்திருக்கிற திருத்தத்தை,
காமராஜ் என்ற வார்த்தைக்குப் பதிலாக பெருந்தலைவர்
காமராஜ் என்ற திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று
கேட்டு அமருகிறேன்,

<u>திரு. ரா. கிருஷ்ணன்</u> : தலைவரவர்களே, மதுரைப் பல்கலைக்
கழகம் என்று இருக்கிற அந்தப் பெயரை காமராஜ் பல்கலைக்
கழகம் என்று மாற்றுவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
வரவேற்கிறது; ஆதரிக்கிறது. ஆனால் அந்தப் பல்கலைக் கழகத்தின்
கீழ் இருக்கிற கல்லூரிகளில் அங்கே பயில்கின்ற மாணவர்களுக்கு
பயனுள்ள கல்வி போதிக்கப்பட வேண்டும். கல்லூரிகள்
அனைத்தும் நல்ல நிர்வாகத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும்
என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அங்கே மாணவர்கள் பட்டப்படிப்பு முதலாண்டு படிக்
கிறார்கள். அப்போது சில காரணங்களால் சிலருக்கு தேர்வு பெற
முடியாமல் போய் விடுகிறது அல்லது 'டேர்ம் டேய்ஸ்' இல்லை
என்றால் அந்த மாணவன் மூன்றாண்டு படிப்பை முடித்துவிட்ட
பிறகு முதலாண்டு வகுப்பிலே உட்கார்ந்து, 'டேர்ம் டேய்ஸ்'
சரியான பிறகுதான் தேர்வு எழுத வேண்டுமென்ற பரிதாபகரமான
நிலை இருக்கிறது. அதற்கு ஒரு விதி இருக்கிறது என்று கருது
கிறேன். அப்படிப்பட்ட அந்த விதியை நீக்கிவிட வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1.00]

அடுத்து, இப்போது செமஸ்டர் சிஸ்டம் என்ற முறை
கொண்டு வரப்பட்டிருக்கின்றது. இதிலே இன்டர்னல் அசெஸ்
மென்ட் என்று சொல்லிக் கொண்டு அங்கே இருக்கக்கூடிய
ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி முதல்வர்கள் தங்கள் விருப்பு
வெறுப்புக்காக பல மாணவர்களைப் பழி வாங்குகின்ற போக்கு
பல்வேறிடங்களில் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன்.

அதோடு இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். தனியார்க்
கல்லூரிகளைப் பொறுத்தவரையில் நிறைய தில்லுமுல்லுகள்
நடைபெற்று வருகின்றன. இன்றைக்கு இருக்கக்கூடிய இந்த
மதுரைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் அதன்
கீழ் உள்ள பல கல்லூரிகள் தனியார் கல்லூரிகளாகும். அங்கே
பலவிதமான தில்லுமுல்லுகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன
என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படிப்
பட்ட காரியங்களின் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்
போது உடனடியாக கல்லூரி நிர்வாகத்தினர் வழக்குமன்றங்
களுக்குச் சென்று வழக்கு போடக் கூடிய பரிதாபகரமான
கொடுமையான போக்குகளை நீக்குவதற்கு அரசு ஆக்கபூர்வமான
நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பாபநாசம் தமிழ்க் கல்லூரியை ஒரு முற்றும்
துறந்த முனிவர் நடத்தி வருகின்றார். அங்கே திரு. சக்திவேல்
என்ற ஆசிரியர் வேலையில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார்.
அந்தப் பல்கலைக் கழகமும் அவரைச் சேர்த்துக் கொள்ள
வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறது, அரசும் உத்தரவு
போட்டிருக்கின்றது, அதற்கு மேல் ஹைகோர்ட் ஜட்ஜ்
ஜஸ்டிஸ் மோகன் அவர்களும்......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இப்போது நடைபெற்றுக்
கொண்டு இருப்பது பல்கலைக் கழகத்திற்கு பெயர் சூட்டுவது
பற்றியது. ஆனால் உறுப்பினர் அவர்கள் நிர்வாகத்திலே உள்ள
வற்றைப் பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். அதற்கெல்லாம்
நமக்கு இப்போது நேரம் இல்லை.

<u>திரு. ரா. கிருஷ்ணன்</u> : அப்படி உயர்நீதிமன்ற தீர்ப்பும்
கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்தத் தீர்ப்புக்குப் பிறகும்
அந்த நிர்வாகம், அந்த முற்றும் துறந்த முனிவர் அந்த
ஆசிரியரை ஏற்றுக்கொள்ளவில்லை, ஏற்றுக்கொள்ளத் தயாராக
இல்லை. ஆகவே இந்தக் குறையினைப் போக்கவேண்டும்.

அடுத்து, செனட், சிண்டிகேட் போன்ற சபைகளில் மாணவர்
களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கின்ற வகையில் வாய்ப்புகளை
ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இன்றைக்கு காமராஜ்
பல்கலைக் கழகம் என்று பெயர் மாற்றப்பட்டிருக்கிற அந்தப்
பல்கலைக் கழகம்......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. உமாநாத் அவர்களே,
உங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் நிர்வாகங்
களிலே நுழைந்து பேசிக்கொண்டிருக்கிறார். ஆனால் இப்போது
இங்கே நடைபெறுவது பல்கலைக் கழகத்திற்கு பெயர் சூட்டுவது
பற்றியது. ஆகவே தாங்கள் சொல்லுங்கள்.

<u>திரு. ரா. உமாநாத்</u> ; பேரவைத் தலைவரவர்களே, அவர்
திரு. காமராஜ் அவர்களின் பெயரைக் கொண்டிருக்கக்கூடிய அந்தப் பல்கலைக்
ரிலவென்ட்டாகத்தான் பேசிக்கொண்டிருக்கிறார்.

கழகத்தின் நிர்வாகம் சீர்குலைந்ததாகி அதனால் திரு. காமராஜர் அவர்களின் பெயருக்கு பாதிப்பு ஏற்படக் கூடாது என்ற முறையில்தான் சொன்னார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: திரு. உமாநாத் அவர்கள் ரொம்பவும் சாமர்த்தியமாகத்தான் சமாதானம் சொல்கிறார்கள்.

<u>திரு. ரா. கிருஷ்ணன்</u>: தலைவரவர்களே, அடுத்து கள்ளிகுளம் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் ஓராண்டுக் காலமாக சம்பளம் பெறாமல் பணியாற்றிக்கொண்டிருக்கிறார். டைரக்டர் ஆபீஸில் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்கிறார்கள். பல்கலைக் கழகமும் கொடுக்க **வேண்டும்** என்று சொல்கிறது. ஆனால் கல்லூரி நிர்வாகத்தினர் கொடுப்பதற்குத் தயாராக இல்லை. இப்படிப்பட்ட போக்குகள் இன்றையதினம் கல்லூரிகளிலே இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் இவற்றிலே நடவடிக்கைகள் எடுப்பதற்கு காலதாமதம் ஆகிவிடுகிறது. இப்படி காலதாமதம் ஏற்படுவதால் பழனி குமாரசாமி கல்லூரி போன்ற கல்லூரிகள் வழக்குமன்றங்களுக்குச் செல்லக்கூடிய நிலை ஏற்படுகிறது. ஆகவே இந்தக் குறைகளை எல்லாம் களைந்துவிட்டு நல்ல வகையில் நிர்வாகங்கள் ஏற்படக்கூடிய வகையில் சூட்டப்படுகின்ற திரு. காமராஜ் அவர்களின் பெயர் காப்பாற்றப்பட வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

<u>திரு. மு. ஆறுமுகம்</u>: தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவை நான் முழுமனதோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் என்னவென்றால் தென்பாண்டி நாட்டிலே ஒரு ஏழை எளிய தமிழ்க்குடியில் பிறந்த காமராஜர் என்ற பெயர் கொண்ட அந்தப் பெருமகனார் இந்தியாவினுடைய 60 கோடி மக்களுக்கும் தலைவராகவும் அதே நேரத்தில் தமிழகத்திலே ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர் கல்வியிலே மிகவும் பின்தங்கிய நிலையிலே இருந்ததை மாற்றி இன்றைக்கு 24 ஆண்டுகளில் மக்களுக்கு கல்வி அறிவு ஏற்படுகின்ற அளவுக்கு காரணகர்த்தாவாக இருந்தவர் தலைவர் காமராஜர் ஆவார். தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லாம் எம். ஏ., ஐ. ஏ. எஸ். போன்ற பட்டங்கள் எல்லாம் பெற்று உயர்வு பெற்று நல்ல வாழ்க்கை நடத்துவதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர் தலைவர் காமராஜர் அவர்கள்தான்.

> ''காலத்தாற் செய்த நன்றி சிறிதெனினும்
> ஞாலத்தின் மாணப்பெரிது''

என்ற குறளுக்கேற்ப ஒப்பற்ற தலைவராக வாழ்ந்த திரு. காமராஜ் அவர்களை மக்கள் இதயதெய்வமாகக் கருதிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு புனிதமான தலைவரின் பெயரை மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு வைப்பதன் மூலமாக தமிழக அரசும் அந்த மதுரை மாநகரும் பெருமைப்படுகிறது என்று நான் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவ்வளவு பெருமைக்குரிய தலைவர் திரு. காமராஜ் அவர்
களின் பெயரை சர்ச்சைக்கும், அரசியல் விமரிசனத்திற்கும்
உரிய பொருளாக வைப்பதை நான் உண்மையிலேயே வன்மை
யாகக் கண்டிக்கின்றேன். தலைவர் திரு. காமராஜ் அவர்கள்
அரசியல்வாதிகள் எவ்வளவு கண்ணியமாகவும், நேர்மையாகவும்
நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு வழிகாட்டியாக வாழ்ந்
தவர். அவர் 9 ஆண்டு காலம் இந்த நாட்டிலே 8 அமைச்சர்களை
வைத்துக்கொண்டு நல்ல முறையிலே ஆட்சி செய்து திறமை
யானதொரு நிர்வாகத்திற்கு வழிகாட்டியாக வாழ்ந்தவர். ஆகவே
அவருடைய பெயரை மதுரைப் பல்கலைக் கழகத்திற்குச்
சூட்டுகின்ற அளவிலே அதனை யாரும் எதிர்க்காமல் நிறை
வேற்றுவதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்</u>: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதுரைப் பல்கலைக் கழக
சட்ட முன்வடிவை ஆதரிக்க வேண்டுமென்று மாண்புமிகு
உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ளும் வகையில் நான் ஓரிரு
கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே பேசிய மாண்புமிகு
உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.
அவை அரசின் கவனத்தில் இருக்கிறது. இதற்கு ஏன் அவசரச்
சட்டம் என்று கேட்டார்கள். பெருந்தலைவர் காமராஜ் அவர்
களின் பிறந்த தின விழாவில் கலந்து கொண்டு மாண்புமிகு
முதல்வர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னதன் காரணமாக,
அதை உடனடியாக நிறைவேற்றுவதற்காக அவசரச் சட்டம்
தேவைப்பட்டது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
ஏதோ அரசியல் உள்நோக்கம் இருக்கிறது என்பதாக ஒரு
குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டைச்
சொன்னவர்கள் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி
அவர்கள் பேசியதற்குப் பிறகு அப்படி உள்நோக்கம் இருக்கிறது
என்று சொன்னது எவ்வளவு தவறு அல்லது இல்லை என்பதற்கான
நிலைமைகள் அங்கு இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்
பினர் திரு. கந்தசாமி அவர்கள் எடுத்துக் காட்டினார்கள்,
அதற்காக அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

சொல்ல விரும்புகிறேன்.
ஒன்றைக் குறிப்பிட்டுச் அவர்கள் உயிரோடு இருந்த
மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களை குடியாத்தம்
காலத்தில் மதிப்பிற்குரிய காமராஜ் அவர்கள் உயிரோடு
தேர்தலில் ஆதரித்தார்கள். அதற்குப் பிறகு அவர்கள் மதிப்பைக்
இருந்த காலத்தில் அவர்களுக்கு சிலை அமைத்து தன் முன்னேற்றக் கழக
காட்டினார்கள், அதற்குப் பிறகு திராவிட தலைவர் அவர்கள்,
ஆட்சியில், மாண்புமிகு எதிர்க்கட்சித் திரு. காமராஜ் அவர்களுக்கு
அவர்கள் ஆட்சியில் இருந்தபோது இன்று அனைத்திந்திய அண்ணா
மணி மண்டபம் கட்டினார்கள். மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு
திராவிட முன்னேற்றக் கழகம் ஆகவே திராவிடர் இயக்கத்
அவருடைய பெயரை வைக்கிறது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1978 செப்டம்பர் 13

தில் இருக்கிற நாங்கள் அந்தப் பெருமகனுருடைய தியாகத்தை, சேவையை எந்தளவிற்கு காலமெல்லாம் போற்றியிருக்கிருேம் என்பதை எடுத்துச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் காமராஜ் அவர்களோடு ஒத்த கருத்துடையவர்கள் என்பதல்ல. கடந்த முப்பதாண்டு அரசியல் மேடைகளை நீங்கள் பார்த்திருப்பீர்களாளுல் அவர்களை எதிர்த்துத்தான் நாங்கள் வளர்ந்திருக்கிருேமே தவிர அவரை ஆதரித்து அல்லது அவரது ஆதரவைப் பெற்றல்ல. ஆகவே அவர்களது பெயரை வைக்கும் நேரத்தில் பல்வேறு உணர்வுகளிடையே அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் இருந்த நேரத்திலும், பேரறிஞர் அண்ணு அவர்கள் இருந்த காலத்திலும் காட்டிய அந்தப் பெருந்தன்மை உணர்வுகளை இன்றைக்கு வெளிப்படுத்தியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணருவார்கள் என்று நம்புகிறேன்; அந்த அடிப்படையில் அவர்களது பெயரை இப்போது நாங்கள் வைக்க விரும்புகிருேம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் மதுரை என்ற பெயர் போய்விடுவது குறித்து மிகுந்த கவலைப்பட்டார். ஆனுல் இன்று நாங்கள் கொண்டுவர இருக்கிற திருத்தத்தில் மதுரை-காமராஜ் பல்கலைக் கழகம் என்ற அடிப்படையில் அந்தப் பல்கலைக் கழகம் அழைக்கப்படும் என்பதை இங்கு கூறி உங்கள் ஆதரவைத் தரவேண்டுமென்று கேட்டு என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

திரு. கே. கந்தசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரமில்லை.

திரு. க. சுப்பு இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"1978-ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு-2.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 2, இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

THE HON. Thiru C. ARANGANAYAGAM: Sir, I move: "In Clause 2. for the expression "the Kamaraj University Act, substitute the expression "the Madurai-Kamaraj University Act".

1978 செப்டம்பர் 13]

Thiru DURAI MUTHUSWAMY : Sir, I move the following amendment "In Clause 2, for the expression 'the Kamaraj University Act' substitute the expression 'the Perunthalaivar Kamaraj University Act'.

The amendment was duly seconded.

திரு. துரை முத்துசாமி அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

திரு. ஜே. ஜேம்ஸ் : நானும் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 77 (1) படி அது தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

[பிற்பகல் 1.10]

பிரிவு-3

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"பிரிவு 3, இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

பிரிவு 3-க்கு திரு. துரை முத்துசாமி அவர்கள் கொடுத்துள்ள திருத்தம் அவை ஏற்றுக்கொள்ள முடியாதபடி இருப்பதால் திருத்தம் தள்ளுபடி செய்யப்படுகிறது.

THE HON. THIRU C. ARANGANAYAGAM : I move; In Clause 3 for the expression, "by the name, 'the Kamaraj University' Substitute the expression, "by the name, 'the Madurai-Kamaraj University.

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3 திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு-4.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 4 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

[1978 செப்டம்பர் 13

THE HON. THIRU C. ARANGANAYAGAM : I move-In Clause 4 (a) in the marginal heading, for the expression 'Kamaraj University' substitute the expression 'Madurai-Kamaraj University'. (b) for the expression 'Kamaraj University', substitute the expression 'Madurai—Kamaraj University'

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 4 திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு—5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 5, இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்"

THE HON. THIRU C. ARANGANAYAGAM : I move-In Clause 5, for the expressions 'Kamaraj University' and 'Kamaraj University Act' substitute the expressions 'Madurai Kamaraj University' and "Madurai Kamaraj University Act' respectively.

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 5 திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு— 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 6 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்"

THE HON. THIRU C. ARANGANAYAGAM : I move, 'In Clause 6 for the expression "Kamaraj University" substitute the expression "Madurai-Kamaraj University".

திருத்தம் பேரவை முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 6 திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 7, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

1978 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, "1978-ஆம் ஆண்டு மதுரை பல்கலைக் கழக (திருத்த—சிறப்பு விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண் 32/78) திருத்தப்பெற்றப்படி சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி சட்டமாக ஆக்கப்பெற்றது.

(ஈ) தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1978).

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/78) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

THIRU M. ARUMUGAM:—

Sir, I move:—

"That the Tamil Nadu Hindu Religious and charitable Endowments (Amendment) Bill, 1978 (L. A. Bill No. 31 of 1978) be referred to a Select Committee of the House to elicit public opinion."

திருத்தம் வழிமொழியப் பெற்றது.

திரு. மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, இந்து அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்றிருக்கிற இந்த மசோதா அவசர கோலத்தில் நிறைவேற்றப்படுவதால், இதனால் பிற்காலத்தில் சட்டச் சிக்கல்கள் உண்டாவதற்கு ஏதுவாகும். மேலும் இச்சட்டத்தின் மூலமாக நிர்வாக அதிகாரிகளுக்கு மட்டுமே முழு அளவுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. மக்களுடைய பிரதிநிதிகள் என்ற முறையில் தர்மகர்த்தாக்களாக இருக்கின்றவர்களுக்கு எந்தவிதமான அதிகாரங்களும் கொடுப்பதற்கு இதில் வழிவகை செய்யப்படவில்லை.

அடுத்தபடியாக இன்றையதினம் இந்தத் துறையில் பாதிக்கப்படுகின்ற துணை ஆணையாளர்கள் மேல் முறையீடு செய்து கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர நீதிமன்றத்திற்குச் செல்ல வழியில்லை. ஆகவே இதற்கான பல திருத்தங்கள் செய்ய பொதுமக்கள் பிரதிநிதிகள் அடங்கிய செலக்ட் கமிட்டிக்கு உடனடியாக அனுப்பவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

---

*1978 செப்டம்பர் 7 ஆம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது

அதுமட்டுமல்ல, போடப்படுகின்ற தர்மகர்த்தாக்களை கட்சி சார்பற்ற முறையில் போடவேண்டும். ஆஸ்தீகத்தில் நம்பிக்கையுள்ளவர்களையும் தெய்வ வழிபாட்டில் உண்மையான பற்று உடையவர்களாகவும் பார்த்துப்போட்டால் கோயில் நிர்வாகத்தில் சண்டைச்சச்சரவுகளைத் தவிர்க்க முடியும். சாதாரணமாக கடந்த காலத்தில் ஏற்பட்ட சண்டைசச்சரவுகள் ஏற்படாத வகையில், நடுநிலைமையோடு இருந்து கோயில்களை நல்ல முறையில் நிர்வகிக்க ஆட்களைப் போடவேண்டும். இப்படிப் பட்ட பிரச்சினைகளை எல்லாம் ஆராய்வதற்காக இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு மீது நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஓரிரண்டு வார்த்தைகள் கூறலாம் என்று கருதுகிறேன். இதேபோல் 1976ல் தமிழ்நாடு கவர்னர் அவர்கள் அவசர காலச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்திருந்தார்கள். அந்தச் சட்டத்திற்கும், இந்தச் சட்டத்திற்கும் எந்தவிதமான மாறுபாடும் இருப்பதாகத் தெரியவில்லை. 46-வது பிரிவைப் பொறுத்தவரையில் முன்பிருந்த சட்டத்தை அப்படியே மாற்றியமைக்கின்ற வகையிலே பயன்படுத்தப்பட்டு இருக்கின்றதே தவிர, அன்றைக்கு இருந்த 46வது பிரிவுக்கும் இன்றைக்கு இருக்கும் 46வது பிரிவுக்கும் எவ்விதமான மாற்றமும் இல்லை. அன்றைக்கு உதவி ஆணையாளர், துணை ஆணையாளர் ஆகியவர்களுக்கு வருவாய் வரையறை நிர்ணயிக்கின்ற அதிகாரம் ரூ. 10,000/- என்று கொடுக்கப்பட்டிருந்தது. இன்றைக்கு அத்தனை பொறுப்புகளும் கமிஷனருக்குத்தான்.

அதேபோல் இன்றைக்கு அறங்காவலர்களை நியமிக்கின்ற முறையை மாற்றியமைக்க பல முறைகளை 46 (ஏ) பிரிவில் உள்ளடக்கிக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. புதிதாக இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டத்திலே அரசு தொடர்பில்லாதவர்களை இன்றைக்கு அறங்காவலர்களாகப் போடுவதற்காக இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கின்றது என்று சொல்லப்படுகிறது. அதற்காக இவ்வளவு அவசரமாக, வேகமாக இதைக் கொண்டுவருவது வேடிக்கையாகவும், விந்தையாகவும் இருக்கிறது. அரசு சார்பில்லாத அமைப்பாக இருக்கும் என்று 46 (ஏ) பிரிவு கூறுகிறது. அரசு சார்பில்லாதவர்கள் என்றால் யார்? யாராக இருந்தாலும் அரசியலிலே சம்பந்தப்பட்டவர்களாகத்தான் இருக்க முடியும். அப்படியானால், அரசு தொடர்பு இல்லாதவர்கள் என்றுசொன்னால் முற்றும் துறந்த முனிவர்களையா இவர்கள் நியமிக்கப் போகின்றார்கள்? மறைமுகமாக அவர்களுக்கு வேண்டியவர்களை நியமித்துக்கொள்வதற்காகத்தான் இந்த 46 (ஏ) பிரிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படிக் குழுவை அமைப்பதன்

தொடர்பில்லாத மூவரை மூலம், அதிலே நாங்கள் அரசு என்று சொல்லலாம். அல்லது இருவரை நியமித்திருக்கிறோம் நியமிக்கத் ஆனால், மறைமுகமாக அவர்களுக்கு வேண்டியவர்களை தான் உதவும்.

உதவி ஆணையாளருக்கு அதோடு மட்டுமல்ல. முன்பு ஆணையாளருக்கு வழங்கப் நியமிக்கும் அதிகாரம், பின்னால் துணை அந்த அதிகாரத் பட்டிருக்கிறது. அப்படி வழங்கப்பட்ட ஒரு லட்சத்துக்கு மேல் தையும் எடுத்துக் கொண்டு, அரசே அறங்காவலர்களை நிய வருமானம் வரக்கூடிய கோவில்களுக்கு முனிவர்களையா மிக்கும் என்று சொன்னால், முற்றும் துறந்த நியமிக்கப் போகிறார்கள்? அல்லது சந்நியாசிகளையா இவர்கள் தர்மத்தை ஆதரிக்கப் போகி எப்படி இவர்கள் தாமீகத்தை, சொல்லிவிடலாம். எங்கள் றார்கள்? ஆகவே, நேரடியாகவே அறங்காவலர்களாக கட்சியைச் சார்ந்தவர்களைத்தான் அண்ணா திராவிட நியமிக்கப் போகின்றோம், அனைத்திந்திய இந்தச் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்காகத்தான் என்று சொல்வார் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது களானால், இந்த மசோதாவே தேவையில்லை.

நியமிக்கின்ற அதோடு மட்டுமல்ல, இவர்கள் அறங்காவலர்களை கொடுத்திருக்கின் அதிகாரத்தை ஆணையாளர் அவர்களுக்குக் தலையீடு இல்லாமல் றார்கள். ஆனால், அதிலே அரசாங்கத்தின் என்ன ஆதாரம் இருக்கும், அப்படி இருக்க முடியும் என்பதற்கு கொண்டுள்ள இருக்கிறது? பஞ்சவர்ணம் இன்றைக்கு எடுத்துக் தலையீடு இல்லாமல் முயற்சிகள் இல்லாவிட்டாலும் அரசின் அரசியல்வாதிகளை நியமிப் எப்படி செயல்படமுடியும்? ஆகவே, இந்த மசோதாவை பதற்காகவே கொண்டுவரப்பட்டிருக்கின்ற நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

அன்றைக்கு 1976 ஆம் ஆண்டிலே பல அதுமட்டுமல்ல. சில தவறுகளைச் சுட்டிக் குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள். பொதுமக்களால் உதாசீனப் காட்டினார்கள். அறங்காவலர்கள் சொன்னார்கள். ஆனால், படுத்தப்படுகிறார்கள் என்றெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது? 1976 ஆம் ஆண்டிற்குப் பின் என்ன இருக்கிறார்கள். வேலைவாய்ப்பை இழந்தவர்கள் ஏராளமாக கூட வசதியில் கோவில் குருக்கள் ஒருவேளை சாப்பிடுவதற்குக் வேலை செய்கின்ற லாமல் இருக்கிறார்கள். ஆலயங்களிலே வசதியில்லாமல் இருக் ஊழியர்கள் வயிறாரச் சாப்பிடுவதற்கு மசோதாவில் ஏதாவது கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த அதோடு மட்டு பாதுகாப்பு உண்டா என்றால், கிடையாது. உழவர்களுக்கு, நிலங்கள் மல்ல. கோவில் நிலங்களிலே உழுகின்ற என்று எதிர்பார்த்துக் தங்களுக்குச் சொந்தமாக்கப்படுமா ஏதாவது வழி கொண்டிருந்தவர்களுக்கு, இந்தச் சட்டத்திலே அதுமட்டுமல்ல. திராவிட இருக்கின்றதா என்றால், கிடையாது.

[திரு. மா. மணிமாறன்] [1978 செப்டம்பர் 13

முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட
சிறுவர் பாதுகாப்பு இல்லம் அதாவது கருணை இல்லங்கள்
அதிகமாக்கப்படாமல் குறைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு இந்த
அவசரச் சட்டத்தில் ஏதாவது வழிவகை செய்யப்பட்டிருக்
கின்றதா என்றால், இல்லை. தங்களுடைய அரசியல் கட்சியைச்
சார்ந்தவர்களை. அறங்காவலர்களாக நியமிக்க வேண்டும் என்ற
ஒரே காரணத்திற்காகக் கொண்டுவரப்படுகின்ற இந்த மசோ
தாவை நான் வன்மையாகக் கண்டித்து, அமருகிறேன்.

[பிற்பகல் 1-20]

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே,
இன்று இங்கு கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதாவின் மீது ஒரு
சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். குறிப்பாக ஏரியாக்
கமிட்டிகளை,

R gional Co nmi tees shall b constituted

என்றபுதிய திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இது
போன்ற ப்ரொவிஷன் ஏற்கனவே சட்டத்தில் இருந்தவை பின்னால்
நீக்கப்பட்டிருக்கின்றன. இப்போது மறுபடியும் அதை இந்த
அரசாங்கம் கொண்டுவர விரும்புகிறது. அப்படிக் கொண்டு
வருகிறபோது ஏரியாக் கமிட்டிகளில், ரீஜனல் கமிட்டிகளில்
அரசியல் வித்தியாசங்களைப் பாராது, மத வழிபாடுகளுக்கும்,
தெய்வ வழிபாடுகளுக்கும் இடம் கொடுக்கிற வகையில் பொறுப்
பானவர்களைப் போடவேண்டும். டிரஸ்டிகளைத் தேர்ந்தெடுக்கிற
போது எந்தவிதமான பாகுபாடும் இல்லாத அளவுக்கு தேர்ந்
தெடுக்கப்படுகிற வாய்ப்பு ஏற்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது.
அந்த வகையில் திருத்தியமைப்பதை நாங்கள் வரவேற்கிறோம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் தலைமை)

24/76 என்று குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் ஒரு
சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டத்தின்படி
டிரஸ்டிகள் நீக்கப்பட்டு 'ஃபிட் பர்சன்ஸ்' நியமனம் செய்யப்
பட்டனர்.— –

Th y ar the Complaining Authorities as well as the Deciding
Auth rities

என்று ஆக்ட் 24/76ல் இருந்தது. அந்த ஃபிட் பர்சன்ஸ் என்று
சொல்லக்கூடிய எக்சிக்யூட்டிவ் ஆபீசருக்கு யாராவது ஊழியர்கள்
பிடிக்காத ஊழியர்களாக இருப்பார்களானால் விக்டிமைசேஷன்
என்ற முறையில் பழிவாங்கப்படக் கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருக்
கின்றன. ஏற்கனவே தீர்மானம் செய்யப்பட்ட தீர்ப்புகளில்
கூட அரசாங்கமே SUO MOTU ஆக தாங்களாகவே
எடுத்து பரிசீலனை செய்து சரியான நீதி கிடைக்கும் வகையில்
அரசாங்கம் உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

1978 செப்டம்பர் 13] [திரு. ரா. மார்க்கபந்து]

குறிப்பாக கிளாஸ் 21-ஏ என்பதைப் புகுத்தியிருக்கிறார்கள்;

Deputy C mmissioner to call for the records and pass orders with reference to the correctness, legality and propriety of any decision of a p litical auth rity

என்று 'ஃபைனல் அதாரிடி'யாக டெபுடி கமிஷனரை வைத்
திருக்கிறார்கள்.

ஒரு டிப்பார்ட்மெண்டில் நடைபெறுகிற முறைகள் பற்றியோ
நடைபெறுகிற நிர்வாகங்களைப் பற்றியோ, வேலை செய்கிற
ஊழியர்களைப் பற்றியோ ஏதாவது குறைபாடுகள் கண்டு
பிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுமானால்———

It will bee viewed in the departmental manner

என்ற முறையில் கீழே இருக்கும் அதிகாரிகள் எந்த முடிவுகளை
எடுத்தார்களோ அந்த முடிவுகளை அப்படியே ஊர்ஜிதம்
செய்கிற வகையில் டிப்பார்ட்மென்ட் அதிகாரிகளின் எண்ணங்கள்
இருக்கின்றன. கீழே இருக்கும் அதிகாரிகள் கொடுத்த தீர்ப்
புகளை பெரும்பாலும் அப்படியே 'கன்ஃபர்ம்' பண்ணுகிறார்கள்
ஆகையால்———

It has to be decided by a judicial authority

என்ற முறையில் இதற்கு மேலாக 21-ஏல் ஒரு திருத்தத்தைக்
கொண்டு வந்திருக்கிறேன். ஆறாவது திருத்தமாக அதை
ஏற்றுக் கொண்டு ஒரு ஜுடிஷியல் என்குயரி என்பதற்கு வழி
வகை செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் இது சரியான
முறையில் நீதியையும் உணர்வுகளையும் பிரதிபலிப்பதாக இருக்கும்.

நான் நடத்துகிற வழக்குகளில் இருந்தே ஒரு மேற்கோள்
காட்டுவதில் தவறு இருக்க முடியாது என்று கருதுகிறேன்.
குடியாத்தம் பகுதியில் டெம்பிள் புறம்போக்கு நிலங்கள் அங்கே
ஊழியம் செய்கிற டிரம்பர்ஸ், பைப்பர்ஸ் ஆகியவர்களுக்கு சர்விஸ்
இனமாகத் தந்தார்கள்.———

As long as they render service they will have to enjov the Land and the usefructs

என்று கண்டிஷன் பட்டாவை 1971ம் ஆண்டில் செட்டில்
மென்ட் ஆபீசர், செங்கற்பட்டு தந்தார்கள். அந்த ஊழியர்
களுக்கு அந்த நிலங்களைக் கொடுத்தது எக்சிக்யூட்டிவ்
ஆபீசருக்கும், அப்போதிருந்த தர்மகர்த்தாவுக்கும் பிடிக்கவில்லை.
ஆகவே, மைனர் இனம் அபாலிஷன் டிரிப்யூனலுக்கு அப்பீல்
செய்தார்கள். அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது. ஊழியம்
செய்கிறவர்களுக்கு நிலம் சொந்தமாக்கப்பட்டது———

As long as they render service

என்ற கண்டிஷன் பிரகாரம் அவர்கள் அனுபவிக்கலாம், இது
பிடிக்காத ஆலய நிர்வாகத்தினர் உடனடியாக அவர்கள் மீது
ஒரு நடவடிக்கை எடுக்கிறார்கள். நீங்கள் ஆலயத்திலே ஊழியம்

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 செப்டம்பர் 13

செய்யவில்லை என்று நடவடிக்கை எடுத்து நோட்டீஸ் அனுப்பப் படுகிறது. அந்த நோட்டீஸ் அவர்களுக்குக் கிடைக்கவும் இல்லை. கிடைத்ததாகப் பாவனை செய்யப்பட்டு டிரஸ்ட் போர்டு அதாரிடீஸ் அவர்களை வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்கிறார்கள். அதற்குப் பிறகு அசிஸ்டன்ட் கமிஷனர் முன்னால் அப்பீல் செய்தார்கள். கீழே கொடுத்த தீர்ப்பு ஊர்ஜிதம் செய்யப்பட்டு பின்னால் டெபுடி கமிஷனர் முன்னால் அப்பீல் செய்தார்கள். அங்கேயும் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. இப்போது அப்பீல் பெட்டிஷன் கமிஷனர் முன்னால் இருக்கிறது.

எனக்கு இருக்கிற அச்சம் எல்லாம் கீழே இருக்கிற ஒரு அதிகாரி ஒரு உத்திரவைப் போட்டுவிட்டால் அந்த உத்திரவுக்கு மதிப்பு அளிக்க வேண்டும், தனக்குக் கீழே உள்ள அதிகாரிகளைக் காட்டிக்கொடுக்கக் கூடாது என்பதற்காக அவர்களுடைய எண்ணங்கள், அவர்களைப்பாதுகாக்கின்ற முறையிலே இருக்கின்றது. ஆகவே,

It has to be decided by a Judicial Authority

என்ற முறையிலே திருத்தங்களைச் செய்வது சாலச் சிறந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கோயில் நிலங்களைக் குத்தகைக்கு விடுகிறார்கள். கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் புரட்டக்ஷன் ஆக்டின் கீழ் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது. நேற்று நம்முடைய முதல்வர் அவர்கள் பதில் அளிக்கின்ற போது அந்த ஆக்டிலிருந்து கோயில் நிலங்களுக்கு விலக்கு அளிக்கப்படும் என்ற உத்திரவாதத்தைத் தந்திருக்கிறார்கள். இதை எதற்காகக் கூறுகிறேன் என்று சொன்னால், ஒருகோயிலும் அந்தக் கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட நிலங்களும் அங்கே ஊழியம் செய்கின்ற ஊழியர்களுக்குச் சம்பளமாகப் பயன்படுகின்றது. இந்தச் சட்டத்தின் மூலம் அதை வசூலிக்கமுடியாது என்று சொல்கிறபோது அங்கங்கே இருக்கின்ற நிர்வாக அதிகாரிகள் அல்லது பொறுப்பிலே உள்ளவர்கள் அதைத் தங்களுக்கென பயன்படுத்திக்கொள்கின்ற வகையில் ஊழியர்களைப் பட்டினி போடுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும். முனிசிபாலிட்டி கார்ப்பரேஷன் ஆகியவை சம்பந்தப்பட்ட நிலங்கள், 3வருடங்கள் என்ற அளவிற்கு குத்தகைக்கு விடப்படுகின்றன.

Just as they apply for a licence or a contract

என்ற முறையிலே அந்த மூன்று ஆண்டுகாலம் முடிந்தவுடனே அந்த நிலங்களை எடுத்துக்கொள்கின்ற வாய்ப்பு இருக்கிறது.

Licence or contract

என்ற முறையிலே செய்தால் அந்த நிலங்களை மிஸ்யூஸ் செய்வதற்கு வாய்ப்பில்லை அந்த முறையிலே இதையும் செய்ய வேண்டும்

1978 செப்டம்பர் 13] [திரு. ரா. மார்க்கபந்து]

நிலங்களைக் கொடுக்கிறபோது சிறு விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும், அதிலே தான் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. பெருமுதலாளிகள் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி ஆலயங்களினுடைய சொத்துக்களையெல்லாம் எடுத்துக் கொள்கிறார்கள், இந்தச் சட்டத்தின் மூலமாக அவர்கள் பாதுகாப்புத் தேடிக் கொள்கிறார்கள்.

All safeguards must be given to see that the small farmers are benefitted by the lease of the land

என்ற முறையிலே அதையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. என். பழனிவேல் : சட்டப்பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, இந்த அறநிலையத் திருத்த மசோதாவின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேசக்கூடிய நேரத்தில் இன்றைய தினம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்டு ஏறத்தாழ ஒரு வருடம் தாண்டி விட்டது. இதற்கு இன்று கோயில்களை நிர்வகிப்பதற்கு என்று ஏற்கனவே இருந்துவந்த தர்மகர்த்தாக்களை யெல்லாம் டிஸ்மிஸ் செய்துவிட்டு கோயில்களை நிர்வகிக்கக்கூடியவர்களாக நிர்வாக அதிகாரிகளைப் போட்டிருக்கிறார்கள், அவர்கள் எல்லாம் சர்வாதிகாரிகள் போல் ஜனாதிபதி ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே காலதாமதம் இல்லாமல் அறநிலைய பிரதிநிதிகள் குழுக்களைப் போடவேண்டும், யாரைப் போட்டாலும் எங்களுக்குக் கவலையில்லை, ஆனால் அவர்கள் ஓரளவிற்கு அதிலே நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கட்டும், கோயிலுக்குக் கொடுக்காமல் இம்மாதிரி பிரமுகர்களின் குத்தகைகளையெல்லாம் ரத்துசெய்து, சாதாரண சாகுபடியாளர்கள் அவர்கள் வாங்கிக் கொள்கிறார்கள், 4, 5 ஏக்கர் வைத்துக்கொண்டு சாகுபடி செய்யக்கூடியவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்து, அறநிலையத்தை ஏமாற்றுகின்றவர்களிடமிருந்து நிலத்தைப் பறிமுதல் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : பேரவையின் அனுமதியோடு பேரவையின் நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.

[பிற்பகல் 1-30]

திரு. என். பழனிவேல்: ஏனென்றால் இந்தக் குத்தகை பாக்கிகளை வசூல் செய்கிறேன் என்று சாதாரண சிறுவிவசாயிகளாக, 4 ஏக்கர் 5 ஏக்கர் சாகுபடி செய்பவர்களை வெளியேற்றி விடக்கூடிய நிலைமை ஏற்படக் கூடாது என்று கறாராகச் சொல்லவேண்டும்.

கோயில்களிலே பிச்சைக்காரர்கள் வரிசையாக இருக்கிறார்கள் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி என்றெல்லாம் வசூல் செய்யப்பட்டது. உதாரணத்திற்கு எங்கள் ஊரை எடுத்துக்கொண்டாலும், பழனி மலையிலே பார்த்தால் கீழேயிருந்து மலையுச்சி

வரையில் பிச்சைக்காரர்கள் வரிசையாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது உதவி செய்யும் முறையிலேயும், மறுவாழ்வு அவர்களுக்கு அளிக்கும் முறையிலேயும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், இப்படி நான் சொல்வதைச் சாக்காக வைத்துக் கொண்டு நாளைக் காலையிலே அவர்களை யெல்லாம் அள்ளிக்கொண்டு போய் 10 மைல், 5 மைல்களுக்கு அப்பால் விட்டு விடாமல் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் முறையிலே உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பரம்பரை தர்மகர்த்தா என்ற ஒரு நிலை இருக்கிறது. பரம்பரை என்பதெல்லாம் நாட்டிலே இருக்கக் கூடாது. நிர்வாகம் நல்ல முறையிலே நடக்க வேண்டும், அந்த முறையிலே பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோயில்களிலே கடை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு 10 ரூபாய், 5 ரூபாய் என்று வரி செலுத்திக் கொண்டிருந்தவர்களுக்கு 150 ரூபாய், 200 ரூபாய் என்று வரி செலுத்த வேண்டுமென்று ஆக்கப்பட்டிருப்பதாகப் பல இடங்களிலேயிருந்து புகார் வந்தன. எல்லா எம். எல். ஏக்களுக்கும் வந்திருக்கிறது. இதைப் பரிசீலனை செய்து ஒரு நியாயமான வரியை, வாடகையைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோயில்களிலே இருக்கும் கடைகளைப் பெரிய பெருச்சாளிகளெல்லாம் பல்லாண்டுக்காலமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை என்ன என்று யாரும் கேட்பது கிடையாது. ஆனால் சிறு கடையை வைத்திருப்பவர்கள் காலி செய்ய வேண்டுமென்றும், அல்லது போட்ட வாடகையைக் கொடுக்க வேண்டும் என்றும் இம்சிக்கப்படுவதாகப் புகார் வந்திருக்கிறது. அதையெல்லாம் பார்த்து, இந்த அரசு நல்ல முறையிலே, ஒழுங்கான முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவரவர்களே, இந்து சமய அறக்கட்டளை...

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, நேரத்தை எக்ஸ்டெண்ட் செய்வது என்றால் எதுவரையில் செய்யப் போகிறீர்கள்? ஏனென்று கேட்டால் நாங்கள் போய்விட்டு மறுபடியும் 4 மணிக்கு இங்கே வரவேண்டும். எனவே, எவ்வளவு நேரம் என்று சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): இன்னும் ஒரு மசோதா இருக்கிறது. இரண்டு மணியோடு முடித்துக் கொள்ளலாம்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஒன்றரை மணிக்கு மேல் நீட்டிப்பதை நாங்கள் விரும்பவில்லை. இரண்டு மணி வரையில் என்றால் கஷ்டம்.

திரு. சோ. அழகர்சாமி: மீண்டும் நான்கு மணிக்கு நாங்கள் வரவேண்டும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஒன்றரை மணிக்கு மேல் அனுமதிக்க நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் இப்பொழுது போய்விட்டு மீண்டும் நான்கு மணிக்கு வரவேண்டும். எனவே இப்பொழுது, முடித்து விட்டு நாளைக்குத் தொடரலாம்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, இன்றைக்கு இதோடு முடிவதாக இருந்தால் இரண்டு மணி வரையில் நீடிக்கலாம், ஆனால் இன்றோடு முடிவதில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): இரண்டு பேர் பேசட்டும். இந்த மசோதாவைப் பாஸ் செய்து விடுவோம். அடுத்த மசோதாவை வேண்டுமானால் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

திரு. த. இரா. இராஜாராம் ரெட்டி: தலைவரவர்களே, விஜிடேரியன் சாப்பாட்டுக் கடைகளையெல்லாம் மூடிவிடுவார்கள். இங்கேயே சாப்பாடு போட்டாலும் பரவாயில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): இந்த மசோதா முடியும் வரையில் இருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, இரண்டு மணி வரையில் நீடிப்பதாக இருந்தால் குறைந்தபட்சம் லஞ்சுக்காவது ஏற்பாடு செய்யவேண்டும். அவ்வாறு செய்தால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): மூன்று பேர் பேச வேண்டும். ஒருவருக்கு மூன்று நிமிடங்கள் என்று 9 நிமிடங்களில் முடித்து விட்டு, ஒன்றே முக்கால் மணிக்கு முடித்து விடலாம்.

திரு. எம். ஏ. லத்தீப்: நான் சொல்வது மாதிரி இருந்தால் மூன்று வரையில்கூட இருந்துவிட்டு, இங்கேயே சாப்பிட்டு விட்டு நான்கு மணிக்கு இங்கே இருக்கலாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: ஒன்றே முக்கால் மணிக்கு முடிந்துவிடும்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: தலைவரவர்களே, இந்து சமய அறக்கட்டளை திருத்த மசோதாவின்மீது எனது சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். இப்பொழுதுள்ள நிலைமைகளைப் பார்த்தால் இந்து மதம் இருக்குமா அல்லது அழிந்துவிடுமா என்ற நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. மற்ற மதங்களிலே மதப்பற்று இல்லாதவர்கள் இருக்கலாம். மற்ற மதங்கள் இருக்கும்பொழுது நம் இந்து மதமும் இருக்க வேண்டியது மிகமிக அவசியம். அந்த முறையிலே இந்து மதத்திற்குப் பாதுகாப்பாக உள்ளது ஆலயங்களும், மடாலயங்களும்தான். இந்த நிர்வாகம் மிகமிக மோசமாக இருப்பதற்குக் காரணம் ஆலய ஊழியர்களுக்குச் சரியான வேலைப் பாதுகாப்பு கிடையாது. அவர்களுக்குச் சம்பளமும் ஒழுங்காகக் கொடுக்கப்படவில்லை. இதனால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அவர்களுக்கு வேலைப் பாதுகாப்பும், போதிய சம்பளமும் கொடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கோயில் நிலங்களைப் பற்றி பேசினார்கள். கோயில் நிலங்கள் அல்லது மடாலய நிலங்கள் உழுபவர்களுக்கே சொந்தமாக்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். இந்து மதம் சரிவர நிலைக்க வேண்டுமென்றால், அந்த நிலங்களுக்கு உள்ள கிரயத்தை, எந்த விவசாயி வைத்திருக்கிறாரோ, அந்த விவசாயியின் சார்பாக, பாங்கிலிருந்து கோயிலுக்கு கட்டிவிடலாம். அந்தப் பணத்தைக் கொண்டு கோயில் நிர்வாகம் சரியாக நடக்க ஏதுவாக இருக்கும். ஏனென்றால், இப்பொழுதுள்ள நிலைமையிலே குத்தகைப் பணம் சரியாக வசூலிக்கப்படவில்லை. அதனால்தான் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. சாதாரணமாக, ஏழை மக்களுக்கு மனைப்பட்டா கூடக் கொடுத்தார்கள்--கோயில் நிலங்களில். அதற்கு சர்க்கார் காம்பன்சேஷன் கூடக் கொடுக்கவில்லை. ஆகவே, காம்பன்சேஷன் சரிவரக் கொடுக்கப்படாத கோயில்களுக்கு காம்பன்சேஷன் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அறங்காவலர்கள் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும். அவர்கள் நியமிக்கப்பட்டால்தான் நிர்வாகம் நல்ல முறையில் நடக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

* திரு. ர. ஜெபமணி: தலைவரவர்களே, பசியான நேரத்தில் என்னைப் பேச அழைத்தீர்கள். பேச அழைத்துவிட்டு பேசும்போது, சபையை ஒத்திவைத்து எழுந்து போவீர்கள். இப்பொழுது இந்த நாட்டிற்கு ஜீவாதாரமான, உயிரான, தெய்வீகமான ஒன்றைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். இந்த நாடு சமயஉணர்விலே வாழ்கிறது. இந்த நாடு தெய்வீகமான நாடு, தெய்வங்கள் நிறைந்த நாடு. இதில் பேசுவதற்கு நேரம் அதிகம் கொடுக்கவேண்டும். ஆனால் இங்கே 3 நிமிஷத்திலே முடித்துவிடுங்கள், 1 நிமிடத்திலே முடித்து விடுங்கள் என்றால் எப்படிப் பேசமுடியும்? தெய்வ பக்தியுள்ள, தெய்வ நம்பிக்கையுள்ள நாட்டில், அது இல்லையென்றால்,

தியாகமும் இராது, ஒழுக்கமும் இராது. ஆலயம் தொழுவது சாலவும் நன்று; கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், தெய்வம் இகழேல், தெய்வம் நினைவில் இருக்க வேண்டும் என்றெல்லாம் பெரியவர்கள் பாலோடு ஊட்டினார்கள். அந்த ஆலயங்களின் நிலையைப் பற்றிப் பேசும்பொழுது கொஞ்சம் அதிக அவகாசம் வேண்டும். ஆனால், பசித்திருக்கவேண்டும். எப்போது? கொஞ்சநேரம் இறைவனை ஜெபிப்பதற்கு? ஆனால், அந்த இறைவனுடைய காரியங்களைப் பேசும்பொழுது, சிவன் சொத்து குலநாசம் என்று சொல்வார்கள், ஏனென்றால், சிவன் அந்தச் சொத்தை எடுத்துக் கொள்வதில்லை, நாம் அனுபவிக்கிறோம். ஆனால், எப்படி நிர்வகிக்கப் போகிறோம் என்பதுதான் பிரச்னை.

இப்போது இங்கே ஏரியா கமிட்டி போடுகிறோம்; அவர்களே தேர்ந்தெடுப்பார்கள், யாரை? அங்கேயுள்ள அறங்காவலர்களை, ஆனால் அந்த அறங்காவலர்களுக்கு ஏதாவது அதிகாரம் இருக்குமா? அது இராது, ஆணையருக்குத்தான் இருக்கும். இது இந்து சமயத்திற்கு மட்டும்தான் உள்ள ஒரு பெரிய குறைபாடு. மற்ற மதத்தினர் போர்டு அமைத்திருக்கிறார்கள். மக்கள் பிரதிநிதிகள் நிர்வாகத்தை கவனிக்கிறார்கள். ஆனால் இங்கே மட்டும் அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அப்படியானால் அறங்காவலர்கள் எதற்கு? இவர்களுக்குத் தெய்வத்தின் மேல் நம்பிக்கை இருக்கலாம். இல்லாமல் இருக்கலாம். இருந்தாலும் இவர்கள் நிர்வகிக்கும்போது கொஞ்சம் ஜாக்கிரதையாகவே நெருங்கவேண்டுமென்று கேட்கிறேன். ஆலயங்கள் என்பது, கோவிலும் அல்ல. ஆண்டவனைக் கும்பிடுவது முட்டாள்கள் வேலை. இது காட்டுமிராண்டித்தனம் என்று சொல்லலாம். நாங்கள் காட்டுமிராண்டிகளாக இருக்கலாம். ஆனால் எங்கள் மனதிலே அமைதியும் சாந்தமும் ஏற்படுவதற்கு நாங்கள் இஷ்டப்படி வாழ்வதற்கு, எங்களுக்கு வருகின்ற எந்தத் துன்பத்தையும் மற்றவர்களுக்குக் கொடுக்காமல், நாங்களே ஏற்றுக்கொள்ளத்தான் மத நம்பிக்கையிலே நாங்கள் இருக்கிறோம். ஆகவே, நிர்வாகம் எப்படி இருக்க வேண்டுமென்றால், துளி கூட கடவுள் மேல் நம்பிக்கை இல்லாதவர்கள், அதைப்பற்றி கவலைப்படாதவர்கள் அந்த ஆலயத்திற்குள் நுழைவதே தவறான காரியம் என்று முதலமைச்சர் ஒருமுறை சொன்னது எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. அதைக் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். பேசுவதற்கு வாய்ப்பிருந்தால் இன்னும் அதிகம் பேசுவேன் (மணி அடிக்கப்பட்டது) மணி அடித்தீர்கள். நாட்டுக்கு அது நல்ல சகுனமாக இருக்கட்டும்.

அத்தோடு இந்த இலாகாவிலே வேலை செய்கின்ற ஊழியர்கள் அனாதைகள் போல் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்க ஊழியர்களுக்கு இருக்கிற மரியாதை கொடுக்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்திலிருக்கும் தேவஸ்வம் போர்ட் ஊழியர்கள் அனாதைகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற ஊதியம்,

மற்றும் எல்லா நியாயமான அந்தஸ்தையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவர்கள் இந்த நல்ல காரியத்தை ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன். ஜெய் ஹிந்த்.

[பிற்பகல் 1.40]

திரு. எஸ்.ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். பெரியவர் அவர்கள் பேசும்போது கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்று பலவிதமான விளக்கத்தைப் பேசியிருக்கிறார்கள். ஆனால் கண்டவர் விண்டலர், விண்டவர் கண்டிலர் என்பது தங்களுக்குத் தெரியுமா, அதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திரு. ர. ஜெபமணி: கடவுள் என்பது நாம் காண முடியாத ஒன்று. .... (மணி அடிக்கப்பட்டது.)

* திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மீது சில முக்கியமான விஷயங்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். "நாமார்க்கும் குடி அல்லோம் நமனை அஞ்சோம்", "இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக இவ்வுலகியற்றியான்"—வள்ளுவர்; "தனி ஒருவனுக்கு உணவில்லை எனில், இந்த ஜகத்தினை அழித்திடுவோம்"—பாரதியார்; "ஸ்ரீரங்கநாதனையும், தில்லை நடராசனையும், பீரங்கிவைத்து பிளக்கும் நாள் எந்நாளோ" பாரதிதாசன். இப்படிப்பட்ட கருத்துக்கள் எல்லாம் இருக்கின்றன. இருந்தாலும் கோவில்கள் பாதுகாக்கப்படவேண்டும். சோவியத் யூனியனில் கூட கோவில்கள் பாதுகாக்கப்படுகின்றன, மணி அடிக்கட்டும். வெள்ளை அடிக்கட்டும். தீப ஆராதனை நடக்கட்டும். ஆனால் கேரளாவைப் போல உழுகின்ற நிலங்கள் முழுவதும் உழுபவனுக்கே சொந்தமாக்கப்பட வேண்டும். அந்தக் கோவில்களிலே வருகின்ற வருமானங்கள் முழுவதும் தமிழகத்தை நிர்ணயிக்க பயன்படவேண்டும். அந்தக் கோவில்களில் பணிபுரிகின்ற ஒரு லட்சம் ஊழியர்களின் ஊதியத்தை நிர்ணயிக்க பயன்படவேண்டும். அறுபதாயிரம் குத்தகைதாரர்கள் பாதுகாக்கப்படவேண்டும். மாண்புமிகு முதல் அமைச்சர் அறிவித்ததாக மார்க்கபந்து அறிவித்தார், கோவில் மடங்களின் நிலங்களுக்கு குத்தகையாளர் பாதுகாப்பு சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படும் என்று. ஆனால் அந்த விதிவிலக்கு அளிக்கப்படக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவில் நிலத்தை எடுத்து உழுபவனுக்குக் கொடு என்பதுதான் எங்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை. கோவிலிலே எந்த சாமியும் சாப்பிடுவதில்லை. அவனுடைய பக்தர்கள், ஏழைகள் சாப்பிட்டால் ஆண்டவன் சாப்பிட்டதாக அர்த்தம். எனவே லட்சக்கணக்கான மக்கள் பட்டினியாக இருக்கும்போது அந்த நிலங்கள் கடவுளுக்கு இருப்பதால் ஏழைகளுக்கு நிலமும் கிடைக்காது ஒன்றும் கிடைக்காது. கோவில்களில் பல்லாயிரக்

கணக்கான மதிப்புள்ள தங்க நகைகள் இருக்கின்றன. அந்த நகைகளில் உள்ள தங்கத்தை எடுத்து தொழிற்சாலைகள் கட்ட வேண்டும். ஆண்டவனுக்கு நகைகள் தேவையில்லை. ஆண்டவன் நிஷ்கலகங்மாக இருக்கிறான். அவனுக்கு நகைகள் தேவையில்லை என்று பக்தர்கள் சொல்லுகிறார்கள். எனவே கோவில் நிலங்களை எடுத்து உழுபவனுக்குச் சொந்தமாக்கவேண்டும். தங்க நகைகளை எடுத்து தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்குக் கொடுக்க வேண்டும். அப்படி தொழிற்சாலைகளைக் கட்டி தேசத்தை முன்னேற்றுகின்ற முறையில் கொண்டு வரவேண்டும்.

அறங்காவலர்களாக நியமிக்கப்படுகின்றவர்கள் நம்பிக்கை உள்ளவர்களாக, நாணயம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். பழைய பெருச்சாளி போய் புதிய பெருச்சாளிபுகுந்த கதையாக மாற்றக்கூடாது. நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கவேண்டும். கொடுக்கின்ற பணத்தை நம்பிக்கையோடு செலவழிக்கிறவர்கள் என்கின்ற முறையில் நியமிக்கப்படவேண்டும். மடங்களின் நிலங்களுக்கு விதிவிலக்குக் கொடுக்கக் கூடாது என்று கூறிக் கொண்டு, முடித்து கொள்கிறேன். வணக்கம் நன்றி.

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே இந்தச் சட்டத் திருத்தத்தின் மீது இங்கே பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்து இருக்கிறார்கள். அவர்களுக்கு விளக்கமாக பதில் அளிப்பதற்கு நேரம் அனுமதிக்காது என்பதை அவர்களும் ஒப்புக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். என்றாலும் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு அடிப்படை காரணங்களைக் கூறி, அந்தக் காரணங்களை எடுத்துச் சொல்வதன் மூலம் இங்கே திருத்தங்களைக் கொடுத்து இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அதனைத் திரும்பப் பெற்றுக் கொள்வார்கள் என்ற உறுதியில் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத் திருத்தம் என்பது அடிப்படையிலே இரண்டு காரணங்களுக்காகத்தான் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டு காலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொது மக்களின் பிரதிநிதி என்று கருதப்படுகிற, பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற அறங்காவலர்கள் இன்றைக்கு தேர்ந்தெடுக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்கள் உடனடியாக நியமிக்கப்பட்டாக வேண்டும் என்று இந்த அரசு கருதுகிறது. அதை ஒட்டித்தான் இந்தத் தேர்வுக் குழு போடப்பட்டு இருக்கிறது.

இதற்கு முன்னாலே ஒரு மசோதாவின் மீது பேசிய போது எல்லா அதிகாரத்தையும் அதிகாரிகளுக்கே கொடுத்து விடுகிறீர்களே, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மீது நம்பிக்கை இல்லையா என்று கேட்டார்கள். அதிகாரம் அதிகாரிகளிடத்தில் இருக்கக் கூடாது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடத்தில் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திருத்தம்

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1978 செப்டம்பர் 13

கொண்டு வந்து இருக்கிறேம். ஒரு உதவி ஆணையர், ஒரு ஆணையர் தன்னுடைய அதிகாரத்தின் கீழ் அறங்காவலர்களை நியமிக்கலாம் என்பது இப்போதுள்ள சட்டம். அந்த ஒரு அதிகாரி நினைத்தால் ஒரு 15,000 கோவில்களுக்கு அவருடைய கருத்தில் யார் யார் இருக்கிறார்களோ அவர்களை நியமிக்கலாம். அப்படி நியமிக்கக் கூடாது என்ற அடிப்படையில்தான் அந்த அந்த துணை ஆணையர், உதவி ஆணையர், 3 பொது மக்கள் பிரதிநிதிகள் இருந்து, அவர்கள் வருகிற விண்ணப்பங்களை தக்க வகையில் பரிசீலனை செய்து தக்கவர்களைத் தேர்ந்தெடுத்து அறிவிக்க வேண்டும். அப்படி தக்கவர்களை தேர்ந்தெடுத்து அறிவிக்கிற உரிமையைக் கொடுக்கிற வகையில்தான் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டு வந்து இருக்கிறேம். ஆகவே, அந்த அதிகாரிடத்தில் இருக்கும் அதிகாரத்தை மக்களுடைய பிரதிநிதிகளிடத்தில் தந்து இருக்கி றேம். அது தான் இந்தத் திருத்தத்தின் அடிப்படை லட்சியம்.

இரண்டாவது, பொறுப்புகள் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இருக்கிறது. ரூ. 10,000—வரை அசிஸ்டெண்ட் கமிஷனர், ரூ.10,000—ல் இருந்து ரூ.50,000-வரை டெபுடி கமிஷனர் ரூ.50,000-க்கு மேல் ரூ.1 லட்சம் வரையில் கமிஷனர் லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட கோவில்களைப் பொறுத்த வரையில் அரசாங்கம் என்று 4 வகையாக அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான கோவில்கள் இருப்பதால் இந்த முறை இன்று வகுக்கப்பட்டு இருக்கிறது. இதைப் பற்றிச் சொல்கிறபோது இங்கே பேசிய மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஏதோ உள்நோக்கம் இருப்பதாகத் தெரி வித்தார்கள். எந்தக் காரியங்களைச் செய்தாலும் முன்னாலே அவர்கள் நிறைவேற்றிய சட்டங்களுக்குக் கூட உள்நோக்கம் இருந்து இருக்குமோ என்னவோ எனக்குத் தெரியாது. இன்று இருக்கும் இந்த அரசாங்கத்திற்கு கொண்டு வந்து இருக்கும் சட்டத்திலே எந்தவிதமான உள்நோக்கமும் இல்லை என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் வந்த பிறகு ஏன் அதிகாரிகளிடத்தில் அதிகாரம் கொடுக்கிறீர்கள் என்று ½ மணி நேரத்திற்கு முன்னால் தான் கேட்டார்கள், இப்போது அரசாங்கம் அதிகாரிகளிடத்தில் இருக்கும் அதிகாரத்தை எடுத்துக்கொள்கிறது என்று சட்டம் கொண்டு வந்தால் அதை ஏன் கொண்டு வருகிறீர்கள் என்கிறார்கள். இந்தக் கேள்வியை என்னால் உண்மையிலேயே புரிந்து கொள்ள முடியவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு தக்கவர்களை நியமிக்காத காரணத் தாலோ என்னவோ, சரியாகவோ, தவருகவோ அல்லது உண்மை யாகவோ, உண்மைக்கு மாருகவோ குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு இருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் கடந்த இரண்டாண்டு காலமாக நெருக்கடியான நிலைமை அற நிலையங்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. அதைத் திருத்துவதற்காகத்தான், சீர்படுத்துவதற் காகத்தான் பொது மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதில்

1978 செப்டம்பர் 13] [திரு. ஆர். எம். வீரப்பன்]

நியாயமான நிலைமை கடைபிடிக்க வேண்டும் என்ற அடிப்படையில் சட்டத்திருத்தம் கொண்டு வந்து இருக்கிறேம். அதைத் தவிர, வேறு காரணம் இல்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த அரசால் நியமிக்கப்படுகின்ற அறங்காவலர்கள் அறங்காவலர்களாக இருப்பார்களே தவிர, அறத்தை அழிப்பவர்களாக இருக்க மாட்டார்கள். அது எந்தக் கட்சிக்காரர்கள் என்பது அல்ல பிரச்னை. அவர்கள் அந்த அறத்தைக்காக்கவும், அறநிலையத்தைக் காக்கவும் நம்பிக்கை உள்ளவர்களாக இருப்பார்களா என்பதுதான் அரசாங்கத்தின் அளவுகோல் என்பதை இந்த அவையில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பல்வேறு உணர்வுகளை இங்கே பேசியிருக்கிறார்கள். அதற்கு பதில் அளிக்க நேரம் இல்லை. குறிப்பாக திரு. மு. அம்பிகாபதி அவர்கள் சொன்னக் கருத்துக்கள் நீண்ட விவாதத்திற்குரிய கருத்துக்கள். பதில் அளிக்க வேண்டிய கருத்துக்கள், புள்ளி விவரத்தோடு தெரிவிக்கவேண்டிய கருத்துக்கள், ஆலய ஊழியர்களுக்கு உள்ள குறைகளை, கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்கிற போது, ரூ. 18 கோடி அளவிற்கு அறநிலையங்களுக்கு பாக்கி இருக்கிறது என்பதையும் பணிவோடு இந்த நாட்டு மக்களுக்கு இந்த மன்றத்தின் மூலம் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். ரூ.18 கோடி பாக்கி இருக்கிற போது எங்கேயிருந்து பெற்று அறநிலைய ஊழியர்களுக்கு அந்தச் சம்பளம் தருவது என்பதை இந்த மாமன்றம் தெரிவிக்க வேண்டும்.

கடைசியாக, இதற்குத் திருத்தம் தந்து இருக்கிற மாண்புமிகு ஆறுமுகம் அவர்கள் இந்தத் திருத்தச் சட்டத்தை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது ஒன்றும் எப்போதும் நிரந்தரமாக இருக்கும் பொறுப்புகளுக்கு அமைக்கப்படும் குழு அல்ல. அந்த அறங்காவலர் பதவிக்கு வரும் விண்ணப்பங்களைப் பரிசீலித்து சிபாரிசு செய்கிற அந்த ஒரு தனிப்பட்ட பொறுப்புக்கு மாத்திரம்தான் இந்தக் குழு அமைக்கப்படுகிறது. அந்த அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டுவிட்டால் அவர்கள் அந்தக் கோவில்களுக்கு பொறுப்புள்ளவர்களாகி விடுகிறார்கள். மாண்புமிகு ஜேபமணி அவர்கள் கூடச் சொன்னார்கள். அறங்காவலர்கள் அத்தனை அதிகாரம் பெற்றவர்கள். அதனால்தான் கடந்த காலத்தில் ஏதேதோ நடந்ததாகத் தெரிவித்தார்கள். ஆகவே, முழு அதிகாரம் பெற்றவர்கள் அறங்காவலர்கள். அந்தக் குழுவிற்கு, அறங்காவலர்களை தேர்ந்தெடுக்கிற அந்த அதிகாரம் ஒன்றுதான் கொடுக்கப்படுகிறது.

[பிற்பகல் 1—50]

ஒரு அதிகாரி நினைத்தால் 3 அறங்காவலர்களை நியமிக்க முடியும் என்ற நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறேம். இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்ற அளவுக்கு இதில் விவகாரம் ஒன்றும் இல்லை.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1978 செப்டம்பர் 13

மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்க்கபந்து அவர்கள் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிருர்கள். இந்தச் சட்டத்திலே அப்பீல் செய்வதற்கு வசதி இருக்கிறது. கடைசி வரையில் அப்பீல் செய்யும் வசதி இருக்கிறது; வாய்ப்பும் இருக்கிறது. அரசு வரை அப்பீல் செய்யலாம், அதற்குமேல் சட்டப் பிரச்சனை இருந்தால் அவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போகலாம். அதற்கு இந்தச் சட்டம் குறுக்கிடாது; குறுக்கே நிற்காது. இதுதான் பொது நீதி. நிர்வாக சீர்கேடுகள் காரணமாக மேலே இருக்கிற அதிகாரிகள் விசாரிக்கக் கூடாது என்ற நிலை ஏற்படுமாஞல் எந்த நிர்வாகமும் ஒழுங்காக நடைபெற முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு பிரச்சினைகளுக்கு விளக்கமாகப் பதில் சொல்ல வேண்டுமென்று நான் விரும்பிஞலும் நேரம்இல்லாதகாரணத்தால், இந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் தரவேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் உட்கார்ந்திருக்கிற காரணத்தால், நான் பேசித்தான் உங்களையெல்லாம் திருப்திபடுத்த வேண்டுமென்ற நிலை இல்லாததால் மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற திருத்தங்களை எல்லாம் திரும்பப் பெற்றுக் கோண்டு. இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

திரு. மு. ஆறுமுகம் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் [திரு. பி. எச். பாண்டியன்] :</u> பேரவை முன்புள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் [திருத்த] சட்ட முன்வடிவு [சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.31/1978] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

திருத்தங்கள் கொடுத்த உறுப்பினர்கள் இருக்கையில் இல்லாததால் பிரிவுகள் 2 முதல் 20 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

1978 செப்டம்பர் 13]

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> தலைவரவர்களே, "தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் [திருத்த] சட்ட முன்வடிவு [சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண்.31/1978] சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்] :</u> பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.54 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மாலை 4-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் மீண்டும் பேரவை கூடியது.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்— தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு கடன் நிவாரண சட்டம்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : Mr. Speaker, Sir, I beg to move:

"The leave be granted for the introduction of the Tamil Nadu Debt Relief Bill, 1978"

The motion was put and carried, and leave was granted.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : Mr. Speaker, Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

<u>8. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்— விவாதம் தொடர்ச்சி.</u>

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> சட்டப் பேரவைத் தலைவரவர்களே, 30-6-1977-க்குப் பிறகு 12 திட்டங்கள் முடிவுற்றுள்ளன. அவற்றின் மொத்த மதிப்பீடு ரூ.216.81 இலட்சங்கள்.

31-3-79—க்குள் முடியக்கூடிய 40 குடிநீர்த் திட்டங்களின் மொத்த மதிப்பு ரூ.800 இலட்சங்களாகும். இதுவரை செலவிடப்பட்டுள்ளத் தொகை சுமார் ரூ. 750 இலட்சங்களாகும்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 13

1978-79 ஆம் வருடத்தில் குடிநீர் வடிகால் திட்டங்களுக்காக ரூ.850 இலட்சங்கள் செலவிட உத்தேசித்துள்ளது.

ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து 29 புதிய குடிநீர் வடிகால் திட்டங்களுக்காக ரூ.240 இலட்சங்களும் செயல் முறையில் இருக்கும் 45 குடிநீர் வடிகால் திட்டங்களுக்காக ரூ.210 இலட்சங்களும், நடப்பு ஆண்டாகிய 78-79-ல் கடனைப் பெற விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், ரூ.150 இலட்சங்களுக்கு விண்ணப்பம் அனுப்பப்படும்.

1973-74 லிருந்து நகர்ப்புற குடிநீர் வடிகால் திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட கடன் விவரம் பின்வருமாறு: 1973-74-ம் ஆண்டு 302·80 லட்சங்கள். 1974—75 ஆம் ஆண்டில் ரூ.455 இலட்சங்கள். 1975—76-ல் ரூ.350 இலட்சங்கள். 1976-77—ல் ரூ.535 இலட்சங்கள். 1977-78-ல் ரூ.608 இலட்சங்கள். 1978-79-ல் 600 இலட்சங்கள்.

1980-81 லிருந்து குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உலக வங்கியின் உதவியை பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதல் 3½ ஆண்டுகளில் ரூ. 110 கோடி செலவாகும் என்றும், அதில் உலக வங்கியின் உதவி ரூ.55 கோடி என்றும் எதிர் பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டங்களின் கீழ் 230 நகரங்களுக்கு குடிநீர் அளிக்கவும், 35 நகரங்களுக்கு குடிநீர் திட்டங்களை அபிவிருத்தி செய்யவும், 2 நகரங்களுக்கு வடிகால் அமைப் பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அடுத்து நகர குடிநீர்த் திட்டங்கள். 30-6-1977-க்குப் பிறகு நிறைவேற்றப்பட்டுள்ள குடிநீர்த் திட்டங்கள் பின்வருமாறு:

தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடி குடிநீர் அபிவிருத்தித்
திட்டம், திட்ட மதிப்பீடு ரூ.6,000 இலட்சங்கள், மாயவரம்
குடிநீர் அபிவிருத்தித் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 9.40
இலட்சங்கள்.

திருச்சி மாவட்டத்தில் உப்பிடமங்கலம் குடிநீர்த்திட்டம்,
திட்ட மதிப்பீடு ரூ. 10.90 இலட்சங்கள், மணப்பாறை குடிநீர்
திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 20.44 இலட்சங்கள். தொட்டியம்
குடிநீர்த்திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 9.84 இலட்சங்கள்.

மதுரை மாவட்டத்தில் பெரியகுளம் குடிநீர் அபிவிருத்தித் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 12.18 இலட்சங்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழக்கரை குடிநீர்த் திட்டம்.
திட்ட மதிப்பீடு ரூ. 28·33 இலட்சங்கள். எமனேஸ்வரம்
குடிநீர்த் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 10.46 இலட்சங்கள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் காயல்பட்டிணம் குடிநீர்
அபிவிருத்தித் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 24.69 இலட்சங்கள்.
பாளையங்கோட்டை குடிநீர் அபிவிருத்தித் திட்டம், திட்ட
மதிப்பீடு ரூ. 47.38 இலட்சங்கள்.

1978 செப்டம்பர் 13] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

சேலம் மாவட்டத்தில் பி. என். பட்டி, வீரக்கால்புதூர்
குடிநீர்த் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 8.69 இலட்சங்கள்.
மேட்டூர் குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள், திட்ட மதிப்பீடு
ரூ. 28.50 இலட்சங்கள்.

31-3-79—க்குள் முடித்து பயனுக்குக் கொண்டுவரப்பட இருக்கும் திட்டங்களின் விபரம் பின்வருமாறு:

செங்கை மாவட்டத்தில் மறைமலை நகர் குடிநீர்த்திட்டம்,
திட்ட மதிப்பீடு ரூ. 7.40 இலட்சங்கள். வாலாஜாபாத் குடிநீர்த
திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 13.66 இலட்சங்கள். இதுவரை
செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 8.30 இலட்சங்கள். ஊத்துக்
கோட்டை குடிநீர் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 6.16
இலட்சங்கள். இதுவரை செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 5.10
இலட்சங்கள்.

அலமாதி கால்நடை அபிவிருத்திப் பண்ணை குடிநீர் திட்டம்,
திட்ட மதிப்பீடு ரூ. 13.11 லட்சங்கள். இதுவரை செலவிடப்
பட்ட தொகை ரூ. 10.10 லட்சங்கள். வட ஆற்காடு மாவட்டம்,
ஆற்காடு குடிநீர் அபிவிருத்தித் திட்டம், திட்ட மதிப்பீடு
ரூ. 15.94 லட்சங்கள், இதுவரை செலவிடப்பட்ட தொகை
ரூ. 13·52 லட்சங்கள். வாலாஜாப்பேட்டை குடிநீர்
அபிவிருத்தித் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 15.94 லட்சங்கள்.
இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ. 13.52 லட்சங்கள்.
வேட்டவலம் குடிநீர் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 28.58
லட்சங்கள். இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ. 27.76
லட்சங்கள். சாத்துவாச்சேரி குடிநீர்த் திட்டம், திட்ட மதிப்பீடு
ரூ. 22.10 லட்சங்கள், இதுவரை செலவிடப்பட்ட தொகை
ரூ. 16.18 லட்சங்கள். பணப்பாக்கம் குடிநீர்த் திட்டம்,
திட்ட மதிப்பீடு ரூ. 4.98 லட்சங்கள். இதுவரை செலவிடப்பட்ட
தொகை ரூ. 2.47 லட்சங்கள். திமிரி, விளாப்பாக்கம் கூட்டுக்
குடிநீர்த் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 21.25 லட்சங்கள்.
இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ. 22.01 லட்சங்கள்.
கண்ணமங்கலம் குடிநீர்த் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 6.41
லட்சங்கள். இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ, 1.82
லட்சங்கள்.

தென்னாற்காடு மாவட்டம், நெல்லிக்குப்பம் குடிநீர்த்
திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 26.80 லட்சங்கள், இதுவரை
செலவிடப்பட்ட தொகை ரூ. 12.27 லட்சங்கள். தஞ்சாவூர்
மாவட்டம், தஞ்சாவூர் குடிநீர்த் திட்டம் திட்ட மதிப்பீ
ரூ. 181.30 லட்சங்கள், இதுவரை செலவிடப்பட்ட தொகை
ரூ. 180.42 லட்சங்கள்.

திருச்சி மாவட்டம், பாய்லர் தொழிற்சாலை குடிநீர்த்
திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 33.53 லட்சங்கள்.
இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ. 22.80 லட்சங்கள்.
புஞ்சைத்தோட்டக்குறிச்சி குடிநீர்த் திட்டம், திட்ட மதிப்பீடு

ரூ. 12 லட்சங்கள். இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ. 10.51 லட்சங்கள். தாந்தோணி குடிநீர்த் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 9 லட்சங்கள். இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ. 8.12 லட்சங்கள்.

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் குடிநீர்த் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 44.39 லட்சங்கள். இதுவரையில் செலவிடப்பட்டதொகை ரூ. 38.28 லட்சங்கள். திண்டுக்கல் குடிநீர் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 14.79 லட்சங்கள். இதுவரையில் செலவிடப்பட்ட தொகை ரூ. 12.46 லட்சங்கள். பாலசமுத்திரம் குடிநீர் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 9.24 லட்சம், இதுவரையில் செலவிடப்பட்ட தொகை ரூ. 9.15 லட்சங்கள். வத்தலகுண்டு குடிநீர் திட்டம், திட்டமதிப்பீடு ரூ. 9.75 லட்சங்கள். இதுவரையில் செலவிடப்பட்ட தொகை ரூ. 6.97 லட்சங்கள். பண்ணைக்காடு குடிநீர் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 16 லட்சங்கள். இதுவரையில் செலவிடப்பட்ட தொகை ரூ. 14.45 லட்சங்கள். காமயகவுண்டன் பட்டி குடிநீர் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 3 லட்சங்கள், இதுவரையில் செலவிடப்பட்ட தொகை ரூ. 2 லட்சங்கள். நத்தம் குடிநீர்த் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 19.29 லட்சங்கள். இதுவரையில் செலவிடப்பட்ட தொகை ரூ. 19.57 லட்சங்கள். விருபாட்சி குடிநீர்த் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 1.3 லட்சம். இதுவரையில் செலவிடப்பட்ட தொகை ரூ. 31,000.

இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை குடிநீர்த் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 39.75 லட்சம், இதுவரையில் செலவிடப்பட்ட தொகை ரூ. 22.72 லட்சங்கள். திருப்புவனம் குடிநீர்த் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 12 லட்சங்கள், இதுவரையில் செலவிடப்பட்ட தொகை ரூ. 9.02 லட்சம். அருப்புக்கோட்டை குடிநீர்த் திட்டம். திட்ட மதிப்பீடு ரூ. 9 லட்சம், இதுவரையில் செலவிடப்பட்ட தொகை ரூ 3,000. இராமேஸ்வரம் குடிநீர்த் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 24.60 லட்சங்கள். இதுவரையில் செலவிடப்பட்ட தொகை ரூ. 15.81 லட்சங்கள்.

நெல்லை மாவட்டம், கழுகுமலை குடிநீர்த் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 15.20 லட்சங்கள். இதுவரையில் செலவிடப்பட்ட தொகை ரூ. 15.24 லட்சங்கள். பணகுடி குடிநீர்த் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 11.52 லட்சங்கள், இதுவரையில் செலவிடப்பட்ட தொகை ரூ. 10.67 லட்சங்கள். அம்பாசமுத்திரம் குடிநீர் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 33.50 லட்சம், இதுவரையில் செலவிடப்பட்ட தொகை ரூ. 34.59 லட்சங்கள். கல்லடைக்குறிச்சி குடிநீர்த் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 28 லட்சங்கள். இதுவரையில் செலவிடப்பட்ட தொகை ரூ. 22.64 லட்சங்கள். கன்னியாகுமரி மாவட்டம், தேரூர் குடிநீர்த் திட்டம், திட்டமதிப்பீடு ரூ.5.17 லட்சங்கள். இதுவரையில் செலவிடப்பட்ட தொகை ரூ. 2.29 லட்சங்கள். கோவையில், சிறுமுகை குடிநீர்த் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 39.34 லட்சங்கள், இதுவரையில்

[பிற்பகல் 4.10]

செலவிடப்பட்ட தொகை ரூ. 37.47 லட்சம். அந்தியூர் குடிநீர்த் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 28 லட்சங்கள். இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ. 22.74 லட்சங்கள். கோபிசெட்டிபாளையம் குடிநீர்த் திட்டம் மதிப்பீடு, ரூ 3.62 லட்சங்கள். இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ. 1.98 லட்சங்கள். கொடுமுடி குடிநீர்த் திட்டம் மதிப்பீடு ரூ. 11.92 லட்சங்கள். இதுவரையில் செலவிடப்பட்ட தொகை ரூ. 11.05 லட்சங்கள். கருமத்தம்பட்டி குடிநீர்த் திட்டம் மதிப்பீடு 4.04 லட்சங்கள். இதுவரை செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 1.10 லட்சங்கள்.

சேலம் மாவட்டம், ஜாரிகொண்டலம்பட்டி குடிநீர்த் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 7.78 லட்சங்கள், இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ. 6.61 லட்சங்கள்.

தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை குடிநீர்த் திட்டம், திட்ட மதிப்பீடு ரூ. 9.37 லட்சங்கள். இதுவரை செலவிடப்பட்ட தொகை 5.92 லட்சங்கள். 31-3-1979-க்குள் முடியக்கூடிய 40 குடிநீர்த் திட்டங்களின் மொத்த மதிப்பு ரூ. 800 இலட்சங்களாகும். இதுவரை செலவிடப்பட்டுள்ள தொகை சுமார் ரூ. 750 லட்சங்களாகும். . . . . .

திரு. க. சுப்பு: அருப்புக்கோட்டை குடிநீர்த் திட்ட வேலையை ஆரம்பித்து, வேலை துவக்கிய நேரத்தில், அருகாமையிலுள்ள பூலாங்குளம் என்ற கிராமத்திலுள்ளவர்கள், இத் திட்டத்திற்காக தோண்டப்படுகிற ஆழ்குழாய்க் கிணறுகள் காரணமாக தங்களுக்குப் பாதகம் ஏற்படுகிறது என்று எண்ணி அதைத் தடுக்கிற வகையில் கிராமவாசிகள் பெரிய போராட்டம் நடத்தியதின் காரணமாக இதற்காக ஏராளமான பம்பு செட்டுகளை நிறுவி பல லட்சக் கணக்கான அளவில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று அங்குள்ள தாசில்தார் மூலம் அரசாங்கத்திற்கு அறிக்கை வந்திருப்பதாகவும் தெரிகிறது. அரசாங்கம் இதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிட்ட ஆழ் துளைக் கிணறுகள் தோண்டப்பட்டு குடி தண்ணீருக்கான வசதி மக்களுக்குச்செய்துகொடுக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்து அந்த முயற்சி வெற்றி பெறுகின்ற நேரத்தில் பக்கத்திலிருந்த ஒரு கிராமத்திலுள்ள மக்கள், தங்களுடைய பகுதிகளுக்கு தண்ணீர் கிடைப்பதற்கு ஆதாரமாக இருக்கின்ற கிணறுகளில் தண்ணீர் வற்றிவிடும் என்று யாரோ சொன்னதன் காரணமாகவும், அப்படி ஏற்பட்டுவிடுமோ என்ற பயத்தின் காரணமாகவும், அச்சப்பட்டு அவர்கள் அரசுப் பணிகளைத் தடுக்க முயற்சித்து இருக்கிறார்கள். அதற்காக குழாய்க் கிணறுகளை ஏற்படுத்துகின்ற நிலை, இருக்கின்ற நிலைமைகளுக்கு ஏற்ப பொறுத்திருந்து பார்த்து, நியாயத்தை எவ்வளவு எடுத்துச் சொல்லியும், உண்மையை எடுத்துச்

சொல்லியும், எவ்வளவோ உத்தரவாதம் தந்தும், அப்படித் தண்ணீர் கிடைக்காமல் போனால் வேறு ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்லியும் கேட்காமல் அவர்கள் வன்முறையில் ஈடுபட்டதின் விளைவாக, இதைத் தடுப்பதற்கும், அரசினுடைய முயற்சிகள் வெற்றி பெறாமல் போகவேண்டும் என்ற எண்ணத்தில்—செயல்பட்டதாலும் அதே நேரத்தில் அந்தப் பகுதி மக்கள் தங்களுக்குக் குடிதண்ணீர் வேண்டுமென்று முதன்முறையாக நான் அங்கே போன நேரத்தில் என்னிடத்தில் கேட்டுக்கொண்டதின் காரணத்தால், நமது கடமையை செய்யவேண்டும் என்ற காரணத்தால, செய்யப்பட்ட வேலைகள் தடுக்கப்பட்டதால், போலீசார் நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள் என்பதும், இதன் காரணமாக பல புகார்கள் வந்தது என்பதும் உண்மை. இதையெல்லாம் பரிசீலித்து காரியங்களை செய்ய வேண்டுமென்று எதிர்பார்த்தோம். நிலைமை கட்டுக்கடங்காத காரணத்தால், தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக போலீஸ் அதிகாரிகள் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலைக்கு வந்திருக்கிறார்கள்; என்றாலும், இங்கு கூறப்பட்ட அளவுக்கு கொடுமைகள் எதுவும் நடக்கவில்லை என்பதையும், அதே நேரத்தில் தவறுகள் செய்திருந்தால், அவர்கள்மீது விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகவும், ஊரக வளர்ச்சிக் கழகத்தின் மூலமாகவும் 30-6-1977 முதல் இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. தமிழ்நாட்டில் குடி தண்ணீர் இல்லாத இடங்களின் பட்டியலைத் தயாரித்து, அந்த இடங்களில் எல்லாம் விஞ்ஞான ரீதியாக எல்லா இடங்களிலும் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்ற அளவில், கணக்கெடுத்ததில், இதற்கான வேலை 1976 டிசம்பர் திங்களில் துவங்கி, இப்படிப்பட்ட சிற்றூர்கள் ஆறு பிரிவுகள் உள்ளன என்று தீர்மானிக்கப்பட்டது. முதல் இரண்டு பிரிவுகள் குடி தண்ணீர் வசதி கொஞ்சமும் இல்லாத சிற்றூர்கள், மற்றும் தண்ணீர் இருந்தும் குடிக்கத் தகுதியற்ற முறையில் உள்ள சிற்றூர்கள்; இவ்வாறு 5,783 சிற்றூர்கள் இருக்கின்றன என்றும், இதனால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை 24 லட்சம் என்றும், இவர்களுக்கு உடனடியாக குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்றும், அதோடு வறட்சி நிவாரணப் பணியின்கீழும் முயற்சிகள் எடுக்கப்பட்டு, 30-6-77 முதல் நிறைவேற்றப்பட்டு வருகின்ற திட்டங்களின் விவரம் வருமாறு:—

பிரிவு— 1:

இத்திட்டங்களின் மூலமாக பயனடையும் சிற்றூர்கள் 1,701,
பயனடையும் மக்களின் எண்ணிக்கை 5.4 லட்சம்.
இதற்காக செலவு செய்யப்பட்ட தொகை 183.60 லட்சம்.

பிரிவு—2:

412 சிற்றூர்கள்
1.60 லட்சம் மக்கள்
81.40 லட்சம் செலவிடப்பட்டது.

மொத்த சிற்றூர்களின் எண்ணிக்கை 2,113
பயன் அடைந்த மக்கள் எண்ணிக்கை 6.64 லட்சம்
செலவிடப்பட்ட தொகை 265 லட்சம்

வறட்சி நிவாரணப் பணிகள்:

சிற்றூர்களின் எண்ணிக்கை 1,2[illegible]5
பயனடைந்த மக்கள் 9.80 லட்சம்
செலவிடப்பட்ட தொகை 120 லட்சம்

ஆக மொத்தம் 3,318 சிற்றூர்கள்
பயனடைந்த மக்கள் எண்ணிக்கை 16.44 லட்சம்
செலவிடப்பட்ட தொகை 3.85 லட்சம்.

செயலில் இருக்கும் வேலைகள்:

பிரிவு—1:

சிற்றூர்களின் எண்ணிக்கை 548
பயனடைந்த மக்கள் 2.12 லட்சம்
செலவிடப்பட்ட தொகை 112.80 லட்சம்

பிரிவு 2:

சிற்றூர்களின் எண்ணிக்கை 564
பயனடைந்த மக்கள் 3·43 லட்சம்
செலவிடப்பட்ட தொகை 174.20 லட்சம்

ஆக மொத்தம் 1,112 சிற்றூர்கள்
பயனடைந்த மக்கள் எண்ணிக்கை 5·55 லட்சம்
மொத்தம் செலவழிக்கப்பட்ட தொகை 287 லட்சம்.

ஆய்வுத் திட்டங்களுக்கான சிற்றூர்கள்:

பிரிவு—1:

சிற்றூர்களின் எண்ணிக்கை 1,317
மக்கள் தொகை 4.50 லட்சம்
செலவிடப்பட வேண்டிய தொகை 440.80 லட்சம்

பிரிவு—2:

சிற்றூர்களின் எண்ணிக்கை 1,241
மக்கள் தொகை 6·96 லட்சம்
செலவிடப்பட வேண்டிய தொகை 1,507 லட்சம்

ஆக மொத்தம் 2,558 சிற்றூர்கள்
மக்கள் தொகை 11.46 லட்சம்
செலவிடப்பட வேண்டிய தொகை 1947.80 லட்சம்.

பிரிவு—1யும் சேர்த்து 3,566 சிற்றூர்கள் 31-3-79-க்குள் குடிநீர் வசதிகளை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. பிரிவு—2-ல் 2,217 சிற்றூர்களில் சுமார் 1,500 சிற்றூர்கள் 31-3-79-க்குள் குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1978-79 நிதி ஒதுக்கீடு:

மாநில அரசு	6 கோடி
மத்திய அரசு	2.90 கோடி
ஊரக வளர்ச்சித் துறை	1.40 கோடி
உள்ளாட்சி மன்றங்களின் பங்கு	1.00 கோடி
மொத்தம்	11.30 கோடி

1973-74, 1974-75, 1975-76, 1976-77 ஆண்டுகளில் செயல் படுத்தப்பட்டத் திட்டங்கள்:

1973—74-ல் 737 கிராமங்கள்
1974—75-ல் 2,649 கிராமங்கள்
1975—76-ல் 4,037 கிராமங்கள்
1976—77-ல் 8,472 கிராமங்கள்

செலவிடப்பட்ட தொகை 165.50 லட்சம் 1973—74-ல்
505.62 லட்சம் 1974—75-ல்
503.73 லட்சம் 1975—76-ல்
888 லட்சம் 1976—77-ல் வறட்சிப் பணிகளுக்காக செலவழிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, குடிநீர் வசதியை ஏற்படுத்த வேண்டுமென்று நாங்கள் சொன்ன வார்த்தையை எங்களால் முடிந்த அளவிற்கு நிறைவேற்ற, உழைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும், அதற்கு வேண்டிய பணிகளைச் செய்வதற்கு ஆங்காங்கே அதிகாரிகள் ஒத்துழைப்புத் தருகிறார்கள் என்பதையும் அதுபோல் இங்கே மாண்புமிகு சுப்பு அவர்கள் கூறியதுபோல் பக்கத்திலே, அடுத்த ஊரிலே, அதற்கு அடுத்த ஊரிலே குழாய் வைத்தால் அல்லது கிணறு வெட்டினால் உடனே தங்களுடைய கிணற்றிலே தண்ணீர் குறைந்துவிடும் என்பதாக சாதாரண மக்களுக்கு இருக்கின்ற அந்த நம்பிக்கையைப் போக்குவதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து ஒத்துழைக்க வேண்டுமென்பது இந்த அரசின் கோரிக்கையாகும்.

[பிற்பகல் 4.20]

காரணம், ஆங்காங்கு கிராமப்புறங்களில் இருக்கிற மக்கள் மிகச் சுயநலக்காரர்கள் என்று யாரும் குறிப்பிடுவதாகக் கருத மாட்டார்கள். அவல் ஏதோ ஒரு நம்பிக்கையின் விளைவாக—நானும் சிறுவயதில் கேள்விப்பட்டிருக்கிறேன்—பத்து அடி, இருபது அடிக்கு அப்பால் கிணறு வெட்டினாலும் தங்களுடைய கிணற்றில் தண்ணீர் குறைந்து விடுமோ என்று எண்ணுவார்கள். அதுபோல் இரண்டு மூன்று கிராமங்களுக்கு அப்பால் உள்ள தங்களுக்கு

வேண்டியவர்களுக்குத் தண்ணீர் கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சம் இருக்கிறது. அந்த எண்ணத்தைப் போக்க எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும், மற்றவர்களும், அந்தந்த ஊர்களில் இருக்கிற மக்களிடம் செல்வாக்குப் பெற்றவர்களும் கட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்பதுதான் நான் விடுக்கிற வேண்டுகோள் ஆகும்.

செய்தித்தாள் காகித ஆலை நிறுவுவதற்காக சேஷசாயி காகித நிறுவனம் தயாரித்த ஒரு விவர அறிக்கையின் அடிப்படையில் அரசு ஒரு செய்தித்தாள் காகித ஆலை நிறுவ கருத்தளவில் முடிவு எடுத்து கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்தது.

தினம் 250 டன் உற்பத்தித் திறன் கொண்ட இந்த ஆலையின் திட்டச் செலவு சுமார் ரூ. 100 கோடி ஆகும்.

நம் நாட்டில் செய்தித்தாள் உற்பத்தி, தேவையைவிட குறைவாக இருப்பதால் செய்தித்தாள் அதிக அளவில் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. நாம் நிறுவ இருக்கும் ஆலை உற்பத்தியைத் தொடங்கியவுடன், அந்த அளவிற்கு இறக்குமதி குறையும், அந்நியச் செலாவணி மிஞ்சும்.

நம் நாட்டில் தேவைக்கு ஏற்ப பல செய்தித்தாள் ஆலைகள் நிறுவப்படாமைக்கு முக்கிய காரணம் மூலப் பொருளான தகுந்த மரங்கள் அதிக அளவில் கிடைக்காததுதான். தமிழகத்தில் நிறுவப்படவிருக்கும் ஆலையில் மரத்திற்குப் பதிலாக பெரும் அளவில் கரும்புச் சக்கையை மூலப்பொருளாக உபயோகப்படுத்த இருக்கிறோம்.

எனவே, இந்த இரண்டு காரணங்களாலும் இந்த ஆலை வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

இந்த ஆலை நன்கு செயல்பட அதிக அளவில் கரும்புச் சக்கை தேவைப்படும். இவை மூன்று அல்லது நான்கு கரும்பாலை களிலிருந்து பெறப்பட வேண்டும். அதே போல் நிலக்கரியும் அதிக அளவில் தேவைப்படும். மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வசதிகளும் குறைந்த வட்டியுடன் கிடைக்க வேண்டும்.

இவற்றிற்கான வழிவகைகளைச் செய்து விரைவில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது. இந்த ஆலையினால் சுமார் 4,000 பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும். அதைச் சார்ந்த சார்பு வேலைகள் சுமார் ஐயாயிரத்திலிருந்து பத்தாயிரம் பேர் வரை கிடைக்கும் என்று சொல்ல முடியும்.

இதை நான் இங்கே குறிப்பிடக் காரணம்—சிறு தொழில்களை மட்டும் அரசு கவனிக்கிறது என்ற குற்றச்சாட்டிற்கு இடமிருக்கக் கூடாது. குறை கூறுகிறவர் குற்றம் சாட்டுகிறவர்களுக்கு,

களுக்கு இந்த உண்மைத் தகவல் சரியாகக் கிடைக்காமல் இருந்திருக்குமானால் அதைத் தெரியப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் தான் இதை நான் இங்கே குறிப்பிடுகிறேன்.

1—7—1977-க்குப் பின் முன் உரிமம் வழங்க மத்திய அரசுக்கு புதிய விரிவாக்கத் திட்டங்களுக்காக பரிந்துரை செய்யப்பட்ட மனுக்களில் முன்னுரிமம் பெற்றவை 15; மத்திய அரசு முடிவு வராதவை 34. இந்த நிறுவனங்களின் பெயர்களை எல்லாம் இங்கே சொல்லி இவ்வளவு நீண்ட அறிக்கையைப் படித்துக் கொண்டிருப்பதைவிட ஒட்டுமொத்தமாக எங்களுடைய முயற்சி எந்தெந்த வகையில் தொடர்ந்து செயலாக்கப்படுகின்றன என்பதையும் அதிலிருக்கும் உண்மைகள், நிலைமைகள் எல்லோருக்கும் தெரிய வேண்டுமென்பதற்காகத்தான் சொல்லுகிறேன்.

சென்னை சென்ட்ரல் விஸ்தரிப்புக்காக இந்திய அரசின் ரயில்வே அமைச்சருக்கு எழுதி தொடர்பு கொண்டு தமிழகத்தின் வளர்ச்சிக்காக நாங்கள் எடுத்துக்கொண்ட திட்டத்தை தெரிவிக்க விரும்புகிறேன். இத்திட்டத்திற்குத் தேவைப்படும் நிலங்கள் பற்றிய விவரம், நிலங்களின் மதிப்பு அவற்றின்மீது கட்டப்பட்டுள்ள கட்டடங்களின் மதிப்பு ஆகியவை பற்றிய விவரங்களைச் சொல்வது மிகமிகத் தேவையென்று கருதுகிறேன்.

அந்த வகையில் பொதுமக்கள் பூங்காவும், விலங்குக் காட்சிச் சாலைப் பகுதியும்—பரப்பளவு—மனைகள் 422, நிலத்தின் மதிப்பு 1,68,80,000 ரூபாய், கட்டடங்களின் மதிப்பு ரூ. 3,47,461, இன்னொரு முறையிலே இன்னும் அதிகமாக இருக்கின்ற பெரிய கட்டடங்களைச் சேர்த்தால் 9,14,914 ரூபாய் வருகிறது. எஸ்.ஐ.ஏ.ஏ. திடல், பரப்பளவு 109 மனைகள், நிலத்தின் மதிப்பு ரூ. 51,50,000, கட்டடங்களின் மதிப்பு ரூ. 3,45,000. அசோக் விஹார், பரப்பளவு 43 மனைகள், நிலத்தின் மதிப்பு 21,50,000 ரூபாய், கட்டடங்களின் மதிப்பு ரூ. 9,61,724. மூர் அங்காடிப் பகுதி பரப்பளவு 145 மனைகள், நிலத்தின் மதிப்பு 1,45,00,000 ரூபாய், கட்டடங்களின் மதிப்பு ரூபாய் 55,73,611.

இவைகளையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் தென் பிராந்திய இரயில்வே பொது நிர்வாகி இரயில்வேத் துறைக்கு மாற்றப்பட வேண்டிய நிலங்கள் இலவசமாக மாற்றப்பட வேண்டும் அல்லது குறைந்தது சகாய விலையிலாவது மாற்றப்பட வேண்டுமென்று கோரியுள்ளார். அதற்கு சில காரணங்கள் சொல்லப்படுகின்றன. திருநெல்வேலி-திருவனந்தபுரம் இரயில்வே திட்டத்தை செயல்படுத்துகையில் செய்ததுபோல் இம்மாநில அரசு நிலங்களை இரயில்வே துறைக்கு இலவசமாக வழங்கி வருவதே வழக்கம். ரெவின்யூ 7—1—78 நாளிட்ட 32 ஆம் எண் அரசாணையைப் பார்த்தால் இந்த உண்மை எல்லோருக்கும் தெரியும், பார்த்து இருப்பீர்கள்.

இந்தத் திட்டத்திற்கு ரூ. 23 கோடி மூலதன முதலீடு செய்ய வேண்டி இருப்பதால் நிலத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய விலை மிகக் குறைவாகவே இருப்பது அவசியம். இது அவர்கள் சொல்லியது.

இந்தத் திட்டம் முழுவதும் உரிய சகாயமளிக்கக்கூடிய திட்டம் அல்ல. இதற்கு மாறாக, தென் பிராந்திய இரயில்வே துறைக்கு இதனால் ஆண்டொன்றுக்குத் தொடர்ந்து ஐந்து கோடி ரூபாய் இழப்பு ஏற்படும். மேலும், இத் திட்டம் இம்மாநிலத்தின் இரயில் பயணம் செய்யும் பொதுமக்களின் நீண்டகாலத் தேவையை நிறைவு செய்யும். இத் திட்டத்தை மேற்கொண்டும் தாமதப்படுத்தினால் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க முடியாத நிலை ஏற்படலாம் என்றெல்லாம் கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன.

இந்திய அரசு இரயில்வேத் துறை அமைச்சர் நமக்கு 1—4—78ஆம் நாளிட்டு எழுதிய கடிதத்தில் அரசு நிலத்தை இரயில்வேத் துறையினருக்கு இலவசமாக வழங்குவதே எல்லா வகையிலும் நியாயமாக இருப்பினும் இத்தகைய நிலங்களுக்கு நியாயமான தொரு விலை கொடுக்க இரயில்வேத் துறை தயாராக இருக்கிறதென்றும் ஆனால் தற்போதுள்ள நிலைமையின் படி விலை கொடுப்பதற்கில்லை என்றும் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக இம்மாநில அரசுக்குக் கொடுக்க வேண்டிய நேரான மான தொகை குறித்து இரயில்வே துறையினர் மதிப்பிட்டு ரூ. 2.7 கோடிக்கு மேற்படாத தொகைக்கு வகை செய்துள்ளது என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்திய அரசு கொடுக்க முன்வந்துள்ள ரூ. 2.7 கோடி தொகையை இம்மாநில அரசு உவந்து ஏற்றுக்கொண்டுள்ளது. இத்தொகையில் ரூ. 84 லட்சம் கட்டடங்கள் விலைக்காகக் கொடுக்கப்படும். எஞ்சிய தொகையான ரூ. 1.86 கோடி (இது ரூ. 3.89 கோடியில் 50 சதவீதத்திற்குச் சற்றுக் குறைவானதாகும்) தென் பிராந்திய இரயில்வேக்கு மாற்றப்படவிருக்கிற 719 மனை நிலத்திற்கு வாங்கப்படும் சகாய விலையாகக் கருதப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால் மின்சார ரயிலும் ஏற்படச் செய்வதற்கு நல்ல வாய்ப்புக் கிடைக்கும் என்ற நிலையில் தமிழகத்திலே 23 கோடி ரூபாய் செலவு செய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றும்பொழுது அது பணியாற்றுகிறபோது எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கிறது என்பதோடு பொது மக்களுக்குப் போக்குவரத்து வசதிக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது என்பதாலும் அதையொட்டி அங்கே தரப்படுகிற நட்ட ஈட்டைப் பயன்படுத்தி சென்னை மாநகரத்தின் எல்லைக்குள்ளேயே வேறு ஒரு இடத்திலே காடுகள் போன்ற இடத்தில், மிருகங்களும், இயற்கை வளங்களோடு ஒன்றித்து வாழும் அளவிற்கு, மிருகக்காட்சி சாலையை மாற்றலாம் என்ற நோக்கம் எங்களுக்கு இருப்பதால், இதை அப்படி பயன்படுத்தலாம் என்று நாங்கள் ஒத்துக்கொண்டிருக்கிறோம்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 13

[பிற்பகல் 4-30]

ஆனால் உடனடியாக இதைச் செய்ய முடியாது. வண்டலூரில் இருக்கும் அந்தப் பகுதியைப் பார்த்தபொழுது குடிநீர் வசதியே இல்லை, அதற்கு என்ன செய்வது என்பதைப் பற்றி பொறியியல் நிபுணர்களிடமும், மற்ற திறமை வாய்ந்த, நிலத்தடி நீரைக் கண்டுபிடித்துச் சொல்லுகின்ற நிபுணர்களிடமும் கருத்துக்களைக் கேட்டறிந்துகொள்ள முயற்சிக்கிறோம். அவர்களது அறிக்கை அல்லது யோசனை கிடைத்த பிறகு அதனைப் பரிசீலித்துப் பார்த்த பிறகே நாங்கள் முடிவெடுக்க வேண்டியதாக இருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, மத்திய அரசுக்குச் சகாயமாக நிலம் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூறினார்கள். அதே மத்திய அரசு, மாநிலங்களில் இருக்கும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு வரி போடுவது கூடாது என்று சுப்ரீம் கோர்ட்டில் வாதாடி வெற்றி பெற்று, நம் எடுக்கும் வெல்ஃபேர் செஷர்ஸ்-க்கு வரிகளை நாம் வசூல் பண்ண முடியாது என்று சொல்கிறபொழுது அவர்களுக்குச் சகாயமாகக் கொடுக்க என்ன நியாயம் உண்டு? இரயில் போக்குவரத்திற்கு வாய்ப்பிருக்கிறது என்று சொல்லும்பொழுது இந்திய நாட்டின் ஒரு பகுதி என்ற நிலையில் அது மத்திய அரசின் ஒரு கடமைதானே?

மாண்புமிகு திரு. எம். ஜி இராமச்சந்திரன்: சட்டப் பேரவைத் தலைவரவர்களே, நான் இதிலே குறிப்பிட்டதை அவர்கள் மறந்துவிட்டார்கள். இதுவரையில் இந்தியத் துணைக்கண்டத்தில், ஆளுகின்ற அரசு யாராக இருந்தாலும், இப்படிப்பட்ட இடங்களை எடுத்துக்கொள்ளும்பொழுது அதற்கு ஏதும் தொகைகள் கொடுப்பதில்லை என்று வழிமுறைகள் இருந்ததாக எனக்குத் தெரிந்த செய்தி, சொல்லப்பட்ட செய்தி; நாம்தான் முதன் முதலாகப் பணத்தை வாங்குகிறோம் என்பது. அதைவிட இலாபம், பொதுமக்களுக்குப் போக்குவரத்திற்கு நல்ல வசதி ஏற்படுகிறது. அது இரயில் பாதை என்பதால் இந்தியத் துணைக் கண்டம் முழுவதற்கும் அதில் பொறுப்பு மத்திய அரசுக்கு இருப்பதால் நாம் போட முடியாது. 23 கோடி ரூபாய் செலவு செய்து நடத்தினாலும் அவர்களுக்கு உள்ள நிலையில் ஒன்றிரண்டு கோடி ரூபாய் நஷ்டம் வரும் என்று சொல்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட இலாபமான, நல்ல அளவிலே இருப்பது என்று ஏற்றுக்கொள்கிறோமே தவிர, மத்திய அரசு செய்யும் அனைத்தையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று யாரும், குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் எண்ணி விட வேண்டாம். கூடுமான வரையில் எத்தனை கடிதங்கள் எழுதியிருப்போம் என்பதையும்—உங்களுக்கு உரிமை உண்டு. அதைப் பார்க்கும்பொழுது, ஏற்பாடு செய்கிறேன்—பார்த்தால் எவ்வளவு நாம் வாதாடி இருக்கிறோம், எங்கேயிருந்து எங்கே வியாபார நோக்குபோல வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள முடியுமென்று நான் நம்புகிறேன்.

1978 செப்டம்பர் 13]

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இரயில்வேத் துறை பிரச்னையைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதால் இன்னொரு முக்கியமான பிரச்னையை முதலமைச்சரின் கவத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். டெல்லி அரசாங்கத்தின் பிளானிங் கமிஷன் மூலம் 75 கோடி ரூபாய் செலவிலான திட்டத்தை, 'மாஸ் டிரான்ஸ்போர்ட் சிஸ்டம்' என்று சென்னை நகரத்தில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது கல்கத்தா, டெல்லி, பம்பாய் ஆகிய இடங்களுக்கு முன்னுரிமை கொடுத்துவிட்டிருக்கிறார்கள். சென்னையைப் பொறுத்தவரையில் 'இன்வெஸ்டிகேஷன் டிவிஷன்' என்று சென்னைக்கு ஃபார்ம் செய்யப்பட்டது. அதை மத்திய அரசு 79 ஆம் ஆண்டு மூடிவிட வேண்டுமென்று உத்திரவு இட்டிருப்பதாகத் தெரிகிறது. மத்திய அரசை வற்புறுத்தி இந்தத் திட்டத்தையும் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன்: தலைவரவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே கூறியவற்றில் பொது நோக்குள்ள விவரங்களையும் உங்கள் கட்சியிலிருந்து கேட்டுவிட்டார்கள், இதில் அதிக நேரம் கொடுத்தால் நேரம் போய்க் கொண்டே இருக்கும்.

திரு. மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, இரயில்வே பிரச்னை என்பதால் நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். தென் மாநிலங்களில், குறிப்பாக தமிழகத்திலே நமக்குப் பிராட் கேஜ் சுத்தமாகக் கிடையாது என்று சுட்டிக்காட்டி, வலியுறுத்திக் கேட்கும்பொழுது அவசியம் கேட்கப்படும் என்று முன்பு சொன்னார்கள். அதுபற்றி முயற்சி எடுத்திருக்கிறார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் நல்ல நேரத்தில் தேவையான ஒரு கேள்வியைக் கேட்டதற்காக நான் மகிழ்ச்சி அடைகின்றேன். 22, 23 தேதிகளில், டெல்லியிலே, என். டி. சி. கமிட்டி கூட இருக்கிறது. அந்தக் கமிட்டி கூடும் பொழுது, அனைத்து இந்தியாவிலே இருக்கிற மாநில முதலமைச்சர்களுக்கு அவரவர்கள் கொள்கையைப் பற்றி, தேவையைப் பற்றி சொல்வதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையில், தமிழக அரசு இப்பொழுது மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்கள் குறிப்பிட்டதை நிச்சயமாக எடுத்துக் கூறி வாதாட இருக்கிறது என்பதையும், அதைப் பெறுவதற்கு நாங்கள் நிச்சயமாக முயற்சி செய்வோம் என்பதையும் மன்றத்திலே இருக்கிற உங்கள் அனைவருடைய ஒத்துழைப்பும் இருக்கிற வரையில், மத்திய அரசு நிச்சயமாக அதைத் தராமல் ஒதுங்கிவிட முடியாது என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்கிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 13

ஆக, இந்த அளவில் நான் இன்னொன்றையும் சொல்ல வேண்டியிருக்கிறது; 1968-ல் தமிழ்நாடு அரசு பெருநகர் போக்குவரத்து ஆய்வுக்குழு ஒன்றை நியமித்தது. இக்குழு வடக்கு தெற்கில் திருவொற்றியூரிலிருந்து திருவான்மியூர் வரை ஒரு துரித ரயில் போக்குவரத்துத் திட்டம் தேவையென்று சிபாரிசு செய்தது.

இந்தப் பாதைக்கான விஞ்ஞான பொருளாதார ஆய்வு அறிக்கையை சென்னை பெருநகர்த திட்டம் (ரயில்வே) தயாரித்து ரயில்வே அமைச்சகத்திற்கு ஏப்ரல் 1975-ல் சமர்ப்பித்தது. இந்த அறிக்கை பக்கிங்ஹாம் கால்வாயை ஒட்டி திருவொற்றியூரிலிருந்து தண்டையார்பேட்டை, கொருக்குப்பேட்டை, ராயபுரம், சென்னை கடற்கரை. பூங்கா, சிந்தாதிரிப்பேட்டை, பாரதி சாலை, லஸ் வழியாக கஸ்தூரிபாய் நகர் வரை 148 கோடி ருபாயில் துரித ரயில்பாதை அமைக்க சிபாரிசு செய்தது.

1976-ஆம் ஆண்டு ஏப்ரலில் இந்திய அரசு ஒரு செயற் குழுவை நியமித்தது. இக்குழுவும் திருவொற்றியூரிலிருந்து கஸ்தூரி பாய் நகர் வரை துரித ரயில் தேவையென்று சிபாரிசு செய்தது. பண நெருக்கடியை கருத்தில் கொண்டு முதல் பகுதியாக சென்னை பீச்சிலிருந்து பாரதி சாலை வரை (5 5 கி. மீ.) துரித ரயில் திட்டத்தை 1981-க்குள் முடிக்க சிபாரிசு செய்தது.

இந்த ரயில் திட்டத்தின் மொத்த நீளம் சுமார் 21 கிலோ மீட்டர். முதல் கட்ட திட்டம் சுமார் 5.5 கிலோ மீட்டர் (பீச்சிலிருந்து பாரதி சாலை வரை). முதல் கட்ட திட்டத்தின் மதிப்பீடு 23.84 கோடி ரூபாய். இதற்கான ஆய்வு அறிக்கை 28—2—1977-ல் ரயில்வே வாரியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இத்திட்டம் மாநில அரசு நிலத்தில் 6.6 ஹெக்டேரில் அடங்குகிறது. இந்நிலத்தின் தோராய மதிப்பு ரூ. 62.5 லட்சங்கள். மாநில அரசு இந் நிலங்களை ரயில்வே நிர்வாகத்திற்கு இனமாகத்தர இசைந்துள்ளது.

இத்திட்டம் மத்திய திட்டக் குழுவின் அங்கீகாரத்திற்காக காத்திருக்கிறது. இதுபற்றி நான் பிரதம அமைச்சர் அவர்களுக்கு 28—4—1978-ல் கடிதம் எழுதியுள்ளேன். இந்தக் கடிதத்தில் இத்திட்டம் சென்னை நகர ஏழைகளின் போக்குவரத்துக்கு மிகவும் அத்தியாவசியமானது என்பதைச் சுட்டிக்காட்டி இத்திட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்குமாறு நான் வலியுறுத்தியிருக்கிறேன். ஆக நோக்கங்கள் ஒன்று பட்டிருக்கின்றன, நிலைமைகள் சாதகமாக இருக்கின்றன. ஆகவே, இதைப்பற்றி அங்கே எடுத்துக்கூறவும், இந்தத் தமிழகத்திலே எங்கெங்கு எந்தெந்த வகையில் கடமையைச் செய்ய முடியுமோ அதை நாங்கள் சொன்னவாறு செய்யவும் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில்

1978 செப்டம்பர் 13] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்களும் உறுப்பினர்களும் எனக்குச் சாதகமான செய்திகளையும் கருத்துக்களையும் கூறி நாங்கள் எங்கள் கடமையைச் செய்ய வாய்ப்பு வசதியை ஏற்படுத்தித் தருவதற்காக உண்மையிலே நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம். இதைப்பற்றி நீண்ட அறிக்கையை நான் படிக்க வேண்டியதில்லை. எல்லோருக்கும் தெரியும் என்று கருதுகிறேன். எனவே, இப்பொழுது பயன்படாமல் இருக்கிற பழைய கப்பல்களை விற்றுவிடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு நாம் ஆளாக்கப்பட்டிருக்கிற நிலையில் புதிதாக 35,000 டன் அமிழ் எடையுள்ள கரியை எடுத்துக் கொண்டு செல்லக்கூடிய அளவுக்கு சக்தி வாய்ந்த இரு கப்பல்களை வாங்குவதற்கு. இந்த அரசு திட்டமிட்டிருக்கிறது என்பதை இங்கே நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆக, இந்த நீண்ட விவரங்களைப் படிக்காமல் அதை மட்டும் சொல்லி, முன்பு என்ன நடந்தது, எப்படி இருந்தது, எப்படி வாங்கப்பட்டது, யார், யார், பெயரிலே இருந்தது என்பதையெல்லாம் நான் இனிமேல் சொல்லித்தான் உங்களுக்குத் தெரியவேண்டுமென்பதில்லையென்று நிச்சயமாக இருக்கிற காரணத்தால் நான் இதோடு இந்தப் பிரச்னையை நிறுத்திக்கொள்கிறேன்.

[பிற்பகல் 4-40]

அடுத்து பால்வளம், கால்நடை அபிவிருத்தித் திட்டங்களில் நாம் எந்தெந்த வகையில் பணியாற்றி இருக்கின்றோம் என்பதைக் கோடிட்டுக் காண்பிக்க ஆசைப்படுகிறேன்.

தமிழ்நாட்டில் மொத்தம் 105 லட்சம் மாடுகளும், 29 லட்சம் எருமைகளும் உள்ளன என்று கணக்கிடப்பட்டிருக்கின்றன. கறவை மாடுகள், எருமை இவற்றின் பால் உற்பத்தியையும், தரத்தையும் உயர்த்தும் பொருட்டு கலப்பினவிருத்தி முறை செயற்கை முறை இனவிருத்தி மூலம் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்படுகிறது. 1977-78-ல் 15 கேந்திர கிராம வளர்ச்சி வட்டாரங்கள் துவக்கப்பட்டன. மேலும் 1978-79-ல் 16 கேந்திர கிராம வளர்ச்சி வட்டாரங்கள் துவக்கப்பட இருக்கின்றன.

தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டம், 1977-78-ல் புதுக்கோட்டை மாவட்டத்தில் தொடங்கப்பட்டது. 1978-79-ல் திருச்சி மாவட்டத்தில் தொடங்கப்பட்டது. இதனால் இத் திட்டத்தின் வரம்பிற்கு உட்பட்ட பகுதிகளில் ஆண்டொன்றிற்கு குறைந்த அளவு 20 சதவீதம் மொத்த பால் உற்பத்தி உயர்த்தப்படும்.

[திரு. பி. எச் பாண்டியன் தலைமை]

மாடுகள் இன அபிவிருத்திக்கு திட்டவட்டமான கொள்கையை வகுத்து ஜெர்சி இனத்தை அடிப்படையாகக் கொள்வதென இந்த அரசு முடிவெடுத்துள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஈச்சங்கோட்டையில் 50 ஜெர்சி கிடாக்களும் 2 ஜெர்சி பொலி

காளைகளும் அடங்கிய ஒரு கால்நடைப் பண்ணை நிறுவப்
பட்டுள்ளது. மேலும் கிடாக்களையும், காளைகளையும் பெற ஏற்பாடு
செய்யப்பட்டுள்ளது. கலப்பினக் கால்நடைகளை உற்பத்தி செய்ய
4.52 கோடி ரூபாயில் பிரிட்டிஷ் அரசாங்க ஒத்துழைப்புடன்
செயல்பட உள்ளது. இதற்கான திட்டம் மைய அரசின் ஒப்ப
தலுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

கால்நடை சுகாதாரப் பணிகளைப் பொறுத்தவரையில்
1977-78ஆம் ஆண்டில் 3 கால்நடை நோய்ப்புலனாய்வு நிலையங்கள்
வேலூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் நிறுவப்
பட்டுள்ளன. 1978-79ஆம் ஆண்டு மேலும் 2 இடங்களில்
கடலூர், கோவையில் திறக்கப்பட்டன,

1977-78ஆம் ஆண்டு 10 இடங்களிலும், 1978-79ஆம் ஆண்டு
10 இடங்களிலும் கால்நடை மருந்தகங்கள் திறக்கப்
பட்டன. 1977-78ஆம் ஆண்டு 5 இடங்களிலும், 1978-79ஆம்
ஆண்டில் 5 இடங்களில் உள்ள கால்நடை மருந்தகங்கள் கால்நடை
மருத்துவமனைகளாக உயர்த்தப்பட்டுள்ளன.

1977-78ஆம் ஆண்டு மத்திய அரசு உதவியுடன் கோமாரி
வெக்கை நோய் தடுப்பு சோதனை சாவடிகள் ஏற்படுத்தப்பட்டன.
இச்சோதனைச் சாவடிகள் அண்டை மாநிலங்களிலிருந்து வரும்
கால்நடைகளைக் கண்காணித்து ''வெக்கை நோய்'' இம்மாநிலத்
தில் வராவண்ணம் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கும்.

இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு
ஆராய்ச்சி நிலையம் 29.81 லட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்
பட்டுள்ளது. தென்னிந்தியாவிலேயே முதன் முறையாக வெறி
நாய் ஒற்றை ஊசி தடுப்பு மருந்து 14—1—78 தேதியன்று
வெளியிடப்பட்டது. ஆட்டு அம்மை என்ற நோயினால் தமிழ்
நாட்டில் ஆடு வளர்ப்போருக்கு ஏற்படும் இழப்பைப் போக்க
புதிதாக இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு ஆராய்ச்சி
நிலையம் ஆட்டு அம்மை தடுப்பு மருந்தினை தயாரித்துள்ளது.
அது விரைவில் வெளியிடப்படும்.

பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 400 பழங்குடி
யினர்க்கு கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. சேலம்,
வடார்க்காடு, தர்மபுரி, தென்னார்க்காடு, திருச்சி மாவட்டத்தில்
1977-78-ல் 15,000 ஆடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. வறட்சிப்
பாங்கான திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் 1,001
பசுமாடுகளும், 502 ஆடுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.
தர்மபுரி மாவட்டத்தில் கன்றுகள் மானியத் திட்டத்தின் கீழ்
595 கன்றுகள் வழங்கப்பட்டன. 97 ஆடு வளர்ப்புப் பிரிவு
களுக்கு ஆடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

சிறப்பு கால்நடை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், உயரின கன்று
வளர்ப்புத் திட்டம் வடார்க்காடு, சேலம், தென்னார்க்காடு,
மதுரை மற்றும் கோவை மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு

வருகின்றன. கோழி வளர்ப்புத் திட்டம் செங்கற்பட்டு,
வடார்க்காடு, சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களில் 29
யூனிட்டுகளில் இயங்கி வருகின்றன. மேலும் அதிகமான யூனிட்டு
விரைவில் துவங்கப்பட இருக்கின்றன.

ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 2,415 சிறு விவசாயிகள்,
நடுத்தர விவசாயிகள் ஆகியோருக்கு ஆடுகள் வழங்கப்பட்டிருக்
கின்றன.

இதைச் சொல்லுகின்றபோது, நான் ஒன்றைக் குறிப்பிட
வேண்டும். 'நான் ஒரு இடத்திற்கு வந்து காசோலை கொடுத்த
தாகவும், நான் அந்த இடத்தை விட்டுப் போனவுடனே, அந்தக்
காசோலைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டார்கள்,
முன்னாலே கொடுத்த கடன் பாக்கியிருக்கிறது என்ற காரணத்
திற்காக' என்று இங்கே குறிப்பிட்டார்கள். நான் விசாரித்ததில்
கிடைத்த செய்தி அது காசோலை அல்ல என்றும், அவர்களுக்குக்
கொடுக்கப்பட்ட ஒரு பத்திரம் போன்ற ஒன்று என்றும் ஆனால்
வாங்கியவர் அதைச் சில மாதங்கள் கழித்து நான் அவைகளை
வைத்து வளர்க்க முடியாது என்று திருப்பிக் கொடுத்து விட்ட
தாகவும் சொல்லப்படுகிறது. இருந்தாலும், ஏற்கெனவே
கடனாளியாக இருந்த ஒருவர் எப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டார்
என்பது குறித்து விசாரித்து, அந்த அதிகாரி மீது நடவடிக்கை
எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கால்நடை வளர்ப்பு கழகத்தின் மூலமாக ஆடு
வளர்ப்புத் திட்டம் ஒன்று மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்
பப்பட்டு இருக்கிறது. அத் திட்டத்தை விரிவு செய்வதற்காக 47
கோடி ரூபாய் செலவில் திட்டம் வகுக்கப்பட்டு உலக வங்கியின்
உதவி கேட்கப்பட்டு இருக்கிறது. அத்திட்டம் நிறைவேற்றப்
படும்போது பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புகள்
கிடைக்கக்கூடும்.

பால்வள அபிவிருத்தியில் கிராம உற்பத்தியாளர் சங்கங்கள்,
ஒன்றியங்கள் அமைக்க வேண்டும் என்று அரசு முடிவு செய்
துள்ளது, ஈரோட்டில் ரூ. 3.3. கோடி செலவில் பால்
பதனிடும் தொழிற்சாலை நிறுவப்பட இருக்கிறது. இதேபோல்
ரூ. 3.65 கோடி செலவில் சேலத்தில் பால் பதனிடும் தொழிற்
சாலை அமைக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. வேலை வாய்ப்புகள்
பெருமளவில் பெருக வேண்டும் என்ற அடிப்படையில் பால்
உற்பத்தி சுமார் 8½கோடியில் இருந்து 10.88 கோடிக்கு உயர்த்தப்
பட்டு தற்போது மேலும் 15 கோடி வரையிலும் உயர்த்தப்பட
திட்டமிடப்பட்டுள்ளது. பால் பெருக்கு இரண்டாம் திட்டத்தின்
கீழ் 5 ஆண்டுகளில் பால் பெருக்கு முயற்சிகளை மேலும் தீவிரமாக்க
நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான திட்டம்
வகுக்கப்பட்டு, இந்திய பால்வள நிறுவனத்தின் ஒப்புதலுக்காக
அனுப்பப்பட்டுள்ளது. மாவட்டங்களில் கிராமக் கூட்டுறவு
உற்பத்தியாளர் சங்கங்கள் அமைக்கப்பட உள்ளன. மலைப்பகுதி
களிலும், இராமநாதபுரம், தருமபுரி, மாவட்டத்திலும் 155—க்கும்

மேற்பட்ட கிராமங்களில் பால் உற்பத்தி சங்கங்கள் நிறுவு வதற்கும் இச்சங்கங்களில் உற்பத்தியாகும் பாலை எடுத்துச் செல்வ தற்கும், பாலைப் பதப்படுத்தவும் குளிரூட்டு நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நான் இவற்றை இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், எந்தெந்த வகையில் நாங்கள் எங்களுடைய கடமையைச் செய்ய முனைகிறோம், அது முழுமை பெற்றுவிட்டாலும், முழுமை பெறும் நிலையில் இருந்தாலும் இங்கேயி ருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் எங்கள் முயற்சிகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் பதவிக்கு வந்த பிறகு எந்தவித திட்டத்திலும் அக்கறை காட்டாமல் இருக்கிறோம் என்ற தவறான செய்தி மாமன்ற உறுப்பினர்களுக்குக்கூட கொடுக்கப்பட்டு, தெரி விக்கப்பட்டு இருக்கிற காரணத்தால், நேரம் அதிகம் ஆனாலும் நான் இவைகளைப் பற்றிக் கூறிக் கொண்டு இருக்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மன்னிக்க வேண்டும். நேரம் ஆகிவிட்டது. தொழிற்துறை. இங்கே ஒரு சம்பவத்தைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுச் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள். புதிதாக ஆரம்பிக் கப்பட்டுள்ள திரிசூலம் அறிஞர் அண்ணா ப்ளூ மெட்டல் வொர்க்கர்ஸ் கோவாப்பரேடிவ் சொசைட்டியினர் 25/2பி என்ற அரசு நிலத்தில் இருந்தும் மற்றும் திரு குப்புசாமி என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள இடத்தில் இருந்தும், அத்துமீறி அனுமதியின்றி, 2,470 லாரி லோடு கற்களை வெட்டி எடுத்துச் சென்றதாகப் புகார் செய்து இருக்கிறார்கள்.

[பிற்பகல் 4-50]

இடத்திற்கு நேரிலே சென்று பார்வையிட்ட வகையிலேயும். விசாரித்த வகையிலேயும் இப்போது புதிதாக ஆரம்பிக்கப் பட்டுள்ள திரிசூலம் அண்ணா அரிசன் ப்ளூ மெட்டல் ஓர்க்கர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொசைட்டியினர் தன்னுடைய தலைவரின் சொற்படி சர்வே நம்பர் 25/2பி என்ற எண்ணுள்ள அரசாங்க நிலத்தில் உத்தரவின்றி கல் வெட்டியிருக்கிறார்கள், அந்தத் தலைவர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் என்று குறிப்பிட்டிருக்கிறார் கள், அதுபற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன. அதைப் படிப்பது என்னுடைய கடமையாகும்,

திரிசூலம் பகுதியில் திரிசூலம் லேபர் காண்ட்ராக்ட் சங்கம் லிமிடெட் திரிசூலம் அரிசன் கல் உடைப்புத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் என்று இரண்டு அமைப்புக்கள் இருந்தன. இந்த இரண்டு சங்கங்களுக்கிடையேயும் போட்டி மனப்பான்மையும், தகராறும் இருந்ததால் அவை சரியாகச் செயல்படவில்லை, ஆகையால் இந்த இரண்டு சங்கங்களையும் கலைத்துவிட்டு ஒரு புதிய கூட்டுறவு சங்கத்தை அமைப்பதற்கு அரசினால் அனுமதி அளிக்கப் பட்டு, அதற்கு ஒரு தனி அலுவலர் நியமனம் செய்யப்பட்டு, அவர்

ஆறு மாதத்திற்குள் தன்னுடைய அறிக்கையை அளிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்ளப்பட்டார். அவருடைய பரிந்துரையின் பேரில் அதற்காக ஒரு உயர்மட்டக் குழுவும் நியமிக்கப்பட்டது.

அந்த உயர்மட்டக்குழு எடுத்த முடிவை ஒட்டி, இரண்டு சங்கங்களுக்கும் பதிலாக ''அண்ணா ப்ளூ மெட்டல் இன்டஸ்ட்ரியல் கோவாப்பரேடிவ் சொசைடி' என்ற புதிய சங்கம் உருவாக்கப் பட்டு, அது 29-4-1978-ல் பதிவு செய்யப்பட்டது, அப்துல் ரசாக் என்பவர் அதற்குத் தலைவர் என்று கூறிக் கொண்டார், அந்த நிலையில் சங்கத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் தலைவராக இருக்க வேண்டுமா அல்லது தனி அதிகாரியை நியமிப்பதா என்ற பிரச்னை எழுந்தது. அப்போது, அது குறித்து கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் ஆலோசனை கோரப்பட்டது, அவர் தேர்ந்தெடுக்கப்பட்டவர் தலைவராக இருக்கலாம் என்று யோசனை கூறினார். அதன்பின் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர் சங்கத்தின் உறுப்பினராக இருக்க வேண்டுமா அல்லது உறுப்பினர் அல்லாதவராக இருக்க வேண்டுமா என்ற பிரச்சனை எழுந்தது. இதுகுறித்து தொழில் வணிகத்துறை இயக்குநரை கலந்தா லோசித்து முடிவெடுப்பது என்ற முடிவில் அவருடைய கருத்தை அறிவதற்கு அனுப்பி வைக்கப்பட்டது, அவருடைய ஆலோசனை கிடைத்தது, அதன்படி புதிதாக அமைக்கப்பட்டிருக்கிற சங்கத் திற்கு தொழிலியல் கூட்டுறவு அலுவலர் சம்பள விகிதத்தில் தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

இந்தச் சங்கத்தின் மொத்த உறுப்பினர்களில் 10 சதவிகி தத்தினர் அரிசன் அல்லாதார் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள் ளப்படலாம் என்று விதி இருந்தும், சட்டத்தில் இடம் இருந்தும் பின்னால் சர்ச்சை வரக்கூடாது என்பதற்காக அரிசனங்களை மட்டுமே உறுப்பினர்களாக சேர்த்துக் கொண்டார்கள். பின்னர் தமிழ்நாடு கனிவள பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் இச்சங்கம் செயல்படத் தொடங்கியது.

இதற்கிடையில் அண்ணா கூட்டுறவு சொசைட்டியினர் திரி சூலத்தில் அரசுக்குச் சொந்தமான 25/2பி என்ற சர்வே எண்ணுள்ள இடத்திலும் அதன் அருகில் உள்ள குப்புசாமி என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்ட இடத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவின்றி கருங்கல் ஜல்லியை தோண்டி எடுத்தனர். அப்படி 2470 லாரி அளவுக்கு தோண்டி எடுத்துச் சென்று விட்டனர். திரு. ரசாக் அவர்களின் இந்த செய்கை சட்டத்திற்கும் அதிகாரத்திற்கும் புறம்பானது, விதிமுறைகளை மீறிய செயல்.

கள்ளத்தனமாக கனிவளத்தை எடுத்துச் சென்ற குற்றத்திற்கு அந்த கனிப்பொருள் மதிப்பைப்போல் 15 மடங்கு அபராதம் விதிக்கலாம் என்று விதி இருக்கிறது. அந்த விவரம் திரு. ரசாக் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டபோது அவர் அருகில் இருக்கும் மக்களுக்கு வேலை கொடுப்பதற்காகவே இப்படிச் செய்தேன் என்று

சமாதானம் கோரினர். சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, மாவட்ட
ஆட்சித் தலைவர் இரண்டு மடங்கு அபராதம் விதித்து 21-6-78-ல்
உத்தரவிட்டார். அதன்படி கள்ளத்தனமாக கனிவளத்தை
தோண்டி எடுத்த குற்றத்திற்காக 33,345 ரூபாய் அபராதத்தை
இரண்டு வாரங்களுக்குள் கட்ட வேண்டுமென்று உத்தரவில்
தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனல் இன்னும் தொகை கட்டப்பட
வில்லை. இந்த அத்துமீறிய குற்றத்திற்கு வேறு என்ன செய்யலாம்
என்பது மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் உள்ளது.

இதற்கிடையில் அப்துல் ரசாக் அவர்கள் மாவட்ட ஆட்சித்
தலைவருக்கு முறையீடு ஒன்றை அனுப்பினர். தொழிலாளர்களுக்கு
வேலை கொடுப்பதற்காகவே இந்தச் செயலில் ஈடுபட்டதாகவும்
விதிக்கப்பட்டிருக்கிற அபராதம் அதிகம் என்றும் தமிழ்நாடு சிறு
தொழில் சலுகை விதி 10-ல் கூறிய வண்ணம் குத்தகை வசூல்
செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். அந்த விதி 10-க்
கும், விதிக்கப்பட்டிருக்கிற அபராதத்திற்கும் சம்பந்தம்
கிடையாது. மேலும் அபராத தொகையைக் குறைக்க வேண்டு
மானல் அவர் சம்பந்தப்பட்ட தொழில் வணிகத் துறை இயக்கு
நருக்கு மேல் முறையீடு செய்ய வேண்டும்.

ஆனல் திரு. ரசாக் அவர்கள் தொழில் வணிகத்துறை இயக்கு
நருக்கு மேல் முறையீடு செய்யாத காரணத்தால் அவர் உடனடி
யாக அவ்வாறு மேல் முறையீடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்
பட்டார். அவர் சங்க உறுப்பினர்களின் தலைவராக இருப்பதால்
இவ்விஷயங்கள் அனைத்தும் அரசின் பரிசீலனையில் உள்ளது.
இவ்வாறு இது பரிசீலனையில் உள்ளது என்று குறிப்பிடப்பட்டி
ருப்பது கவனிக்கத்தக்கது.

ஆகவே யாராக இருந்தாலும் அவர் இன்ன குற்றத்தைச்
செய்தார், அதற்கு இன்ன தீர்ப்பு வழங்கப்படுகிறது என்று அதி
காரிகளோ, சட்டமோ சொல்லுகின்ற நேரத்தில் அதனை இந்த
அரசு நிச்சயமாக நிறைவேற்றும் என்பதை நான் இங்கே
சொல்லிக் கொள்கிறேன். ஆனல் இங்கே நான் ஒன்றை நினைவு
படுத்த விரும்புகிறேன்.

1974-ல் தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர், அஞ்சனஹள்ளி
கிராமத்தில் கருங்கல் வெட்டியெடுப்பதற்காக 18 பேர் செய்திருந்த
சுரங்கக் குத்தகை விண்ணப்பங்களை அரசுக்கு அனுப்பினர். இந்தப்
பட்டியலில் திருவாளர்கள் ஜெம் கிரானைட்ஸ் உரிமையாளர் திரு.
எஸ். ஆர். ஆசைத்தம்பி (திரு கந்தப்பனின் மைத்துனர்) மூன்று
வதாகக் குறிப்பிட்டிருந்தார். இவ்விண்ணப்பங்கள் அரசின்
பரிசீலனையில் இருந்தபோது, சர்வே எண். 419-ல், திரு ஆசைத்
தம்பி, அனுமதியின்றி கருங்கல் வெட்டியெடுக்க ஆரம்பித்தாகவும்,
அவருக்கு ரூ. 17,357-10 அபராதம் விதித்துள்ளதாகவும்,
அபராதத் தொகையை கட்டினல், அவரது விண்ணப்பத்தை
ஆராய்ந்து அவருக்கு உரிமம் வழங்கலாம் என 1975 பிப்ரவரி
மாதம் தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்குத் தெரி

வித்தார். இந்த ஆணைக்கு எதிராக திரு. ஆசைத்தம்பி, தொழில்
வணிக இயக்குநருக்கு மேல் முறையீடு செய்தார். இந்த மேல்
முறையீட்டின் மீது ஆணை பிறப்பிக்கப்படும் வரை இவருக்கு உரிமம்
வழங்க வேண்டாமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்குத்
தெரிவித்தார். 25-3-75 அன்று இவ்விஷயம் பரிசீலிக்கப்பட்ட
போது தொழில் வணிக இயக்குநரிடம் கொடுத்த மேல் முறை
யீட்டின் மீது முடிவெடுக்கும் வரை உரிமம் கோரிய விண்ணப்
பத்தை நிறுத்தி வைக்க வேண்டியதில்லை என்றும் திருவாளர்கள்
ஜெம் கிரனைட்ஸ்ன் விண்ணப்பம் எல்லாவற்றிலும் சிறந்ததாய்
இருப்பதால் அவர்களுக்கே இந்த உரிமத்தை வழங்குமாறும்
அரசு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவித்தது. இதற்கிடையில்,
திடீரென தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பண்டரி
நாதன் அங்கிருந்து மாறுதல் செய்யப்பட்டார். அவருக்குப் பதில்
திரு. டி. எஸ். விஜயராகவன் அவர்கள் அங்கு நியமிக்கப்பட்டார்.

18-3-75-ல் தொழில் துறைச் செயலாளர் மாவட்ட ஆட்சித்
தலைவரின் சிபாரிசுகளைப் பற்றி ஒரு சுற்றுணைக் குறிப்பு அனுப்பினர்.
முன்னல் தொழிலமைச்சர் திரு. சாதிக்பாட்சா அவர்கள் மேற்
கூறியவாறு கல்குவாரி உரிமம் வழங்க வேண்டும் என்று உத்தர
விட்டார். இவ்வுத்தரவு 20-3-75 அன்று முன்னள் முதலமைச்சர்
இன்னள் எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் கருணநிதி
இவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டது. 25-3-75 அன்று தொழில்
துறைச் செயலர், திரு. எஸ். ஆர். ஆசைத்தம்பியின் மேல்முறை
யீடு ஆய்வில் இருக்கும்போது கல்குவாரி உரிமம் அளிப்பது
முறையாகுமா என்று ஒரு வினு எழுப்பினர். 25-3-75 அன்றே
சட்டத்துறைச் செயலர் அவ்வாறு கொடுப்பதில் தவறில்லை
என்றும் இந்த உரிமம் வழங்குவது கலெக்டரின் அதிகாரத்துக்குட்
பட்டது என்றும் தெரிவித்தார். இதனடிப்படையில்தான் மாவட்ட
ஆட்சித் தலைவருக்கு மேற்கூறிய கடிதம் அனுப்பப்பட்டது.

இதிலிருந்து திரு. கந்தப்பன் அவர்களின் மைத்துனர் திரு. எஸ்.
ஆர். ஆசைத்தம்பி அவர்களுக்கு கல்குவாரி வழங்குவதில் சலுகை
திராவிட முன்னேற்றக் கழக அரசினல் காட்டப்பட்டது என்று
சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனல் நான் ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்வேன். இப்படி
நாங்கள் முன்னலே நடந்ததைச் சொல்வதன் மூலம் இப்போது
நாங்களும் இதேபோல் அல்லது இதையே பின்பற்றி காரியம்
ஆற்றுவோம் என்று சொல்வதற்காக இந்த முன் உதாரணத்தை
நான் சொல்லவில்லை. சில நேரங்களில் சில அதிகாரத்தை எப்படி
நிறைவேற்றுவது எப்படி செயல் படுத்துவது என்று சிந்திக்கும்
போது சூழ்நிலைக்கேற்பவும் அதாவது சட்டத்தின் தன்மையை
மட்டும் கவனித்து உடனடியாகப் பணிகளைத் துவங்கி ஆட்கள்
வேலைகளுக்கு அனுப்பப்படுவது தடைபடக் கூடாது என்ற நோக்கத்
துடன் செயல்பட்டிருக்கலாம். அதைப்போன்ற நேரங்களில் சில
நடவடிக்கைகள் உருவாக்கப்பட்டிருக்கலாம்.

[திரு எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 13

[பிற்பகல் 5-00]

ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சொல்வேன். அந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, எங்கள் கட்சியாக இருந்தாலும் சரி. இவற்றை தீர விசாரித்து மாவட்ட ஆட்சித் தலைவர் என்ன சொல்கிறார்களோ, சட்ட அமைச்சர் அவர்கள் என்ன தீர்ப்பு வழங்கவேண்டுமென்று சொல்கிறார்களோ அதற்கேற்ப நாங்கள் நடவடிக்கைகள் எடுப்போம். அப்படிச் சொல்லும்போது, நான் விசாரித்த நேரத்தில் எனக்குத் தரப்பட்ட ஒரு குறிப்பை இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

<u>திரு. மு. கருணாநிதி :</u> தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் திரிசூலம் அண்ணா அரிசன கல் உடைக்கும் தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கம் பற்றிய விவரங்களைச் சொல்லிவிட்டு, அடுத்த பொருளுக்குச் செல்கிற காரணத்தால், நான் ஒன்றை அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்ட அபராதம் அந்த சொஸைட்டி தலைவர் ரசாக் அவர்களால் கட்டப்படவில்லை என்பதை அவர்களே இங்கே படித்துக் காட்டினார்கள். அவர்கள் மேல்முறையீடு செய்து இருப்பதாகச் சொன்னார்கள். அதற்கிடையே எனக்கு வந்துள்ள தகவல், கொடுக்கப்பட்டுள்ள ரசீதுகள்படி மாவட்ட ஆட்சித் தலைவர் 21-6-78-ல் உத்தரவு பிறப்பிக்கும்போது 2,470 லாரி லோடு கற்கள் எடுக்கப்பட்டிருந்தது. இப்போது 1-9-78 கணக்குப்படி ரசீது நம்பர் 8969—ஆக, 2000க்கு மேல் 5,000, 6,000 லாரி லோடுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதையும் நான் முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்கள் விசாரணைக்கு ஏதுவாக இருக்கும் என்பதற்காக.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> கணக்கு இருக்கிறது. அதையும் கவனித்து நான் முன்பே சொன்னபடி யார் தவறு செய்திருந்தாலும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு ரமணி அவர்கள், ஈரோடு கிருஷ்ணா ரிபைனரீஸ், அதிலே 298 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 117 பெண்கள் வேலை செய்கிறார்கள். அதை நடத்துபவர் ஒரு மில்லியனர். ஆனால் அந்தக் கம்பெனி ரிஜிஸ்டர் செய்யப்படவில்லை. அப்படியென்றால் அந்த பாக்டரி டிப்பார்ட்மென்ட் என்ன செய்து கொண்டிருந்தது ? இப்படி ரிஜிஸ்டர் செய்யப்படாமல் ஒரு கம்பெனி இயங்குகிறபோது அரசின் சட்டத்தை மீறி நடக்கிறார்கள் என்கிறபோது ஏழை எளிய மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று கருதி சட்டங்கள் செய்திருந்தபோதிலும் அதை நடைமுறைப்படுத்தாமல் அதிகாரவர்க்கம் இருக்கிறது அந்நிலை மாற்றப்படவேண்டும் என்று உறுதி தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

1978 செப்டம்பர் 13] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

ஈரோடு பவானி ரோடில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணா ரிபைனரி நிறுவன எல்லைக்குள் கீழ்க்கண்ட மூன்று நிறுவனங்கள் உள்ளன.

(1) ஸ்ரீ கிருஷ்ணா ரிபைனரிஸ், (2) ஸ்ரீ ஷண்முகசுந்தரம் டிரேடர்ஸ், (3) தொரை கிருஷ்ணா ரைஸ் அண்டு ஆயில் மில். இவைகள்
வெவ்வேறு பாகஸ்தர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. கிருஷ்ணா
ரிபைனரீஸ் நிறுவனத்தில் 26 தொழிலாளர்கள் வேலைசெய்கின்றனர்.
இதில் பெண் தொழிலாளர் எவரும் இல்லை. மற்ற இரு நிறு
வனங்கள் தலா 50 தொழிலாளர்களை வேலைக்கு வைத்துள்ளன.
மூன்றாவது நிறுவனத்தில் மட்டும் பெண் தொழிலாளிகள் உள்ளனர்.
மேற்குறிப்பிட்ட மூன்று தொழிற்சாலைகளும் கடந்த ஜூன், ஜுலை
மாதங்களில் தொழிற்சாலை ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டன.
இம் மூன்று தொழிற்சாலைகளும் உரிமம் வழங்க அதிகாரியிடம் மனு
செய்துள்ளன. ஆய்வுகளின்போது காணப்பட்ட தொழிலாளர்
நல சட்ட விதிகளைக் கடைபிடிக்காததால் இத்தொழிற்சாலைகளின்
உரிமையாளர்களுக்குக் காரணம் காட்டும் அறிவிப்புகள் வழங்கப்
பட்டுள்ளன. அது வந்தவுடன் எது நியாயமோ அதை இந்த அரசு
செய்யும் என்பதை நான் மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்களுக்குத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இருவேங்கடம் அவர்கள் பேசும்போது, உலக வங்கியிடம்
147 கோடி ரூபாய் கடனைப் பெற்று 75 லட்சம் மக்கள் பயன்
பெறுகின்ற அளவிற்கு குடிநீர் திட்டத்தைத் தமிழ்நாட்டிலே
செயல்படுத்தப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள்
போட்ட திட்டங்கள் ஒவ்வொன்றும் ஏட்டுச்சுரைக்காயாகத்தான்
நாட்டிலே இருக்கின்றன என்றும் குறிப்பிட்டார்கள். நான்
சொல்ல விரும்புவது, பெரிய திட்டங்களை எல்லாம் பெயரளவுக்கு
சொல்லி மக்களை ஏமாற்றுகின்ற வேலையில் நாங்கள் போகத்
தயாராக இல்லை என்பதை சொல்லிக் கொள்வதோடு, நான்
இதற்குப் பதில் சொல்லுகின்ற முகத்தான், குடிநீர் வாரியத்தின்
மூலமாக செலவு செய்த விவரங்களையும், திட்டங்களையும் தெரி
வித்தேன் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நண்பர் பாலகிருஷ்ணன் அவர்கள், ''தேவகோட்டை
யிலே ஒரு வீடு இடிந்து, கணவனுக்குக் கால் போய்விட்டது,
மனைவி இறந்து விட்டாள். மகனும் இறந்து விட்டான். ஆகவே
நிவாரணம் வேண்டுமென்று கேட்டார். கலெக்டரிடம் கேட்டேன்,
ஒன்றும் செய்ய முடியாது என்று சொன்னார். ஆகவே உங்களிடம்
சொல்கிறேன்'' என்று சொன்னார். நம்முடைய நிதியமைச்சர்
திரு. மனோகரன் அவர்கள் 'சாங்க்ஷன்' செய்கிறேன் என்று
சொன்னார், ''சாங்ஷன் செய்கிறேன் என்று சொல்கிறீர்கள்.
சொல்லி 6 மாதம் ஆயிற்று இன்னமும் பணம் கிடைக்கவில்லை'',
என்று குறிப்பிட்டார்கள்.

வீடு விழுந்துவிட்ட பிரச்னை சம்பந்தமாக 4-1-78 அன்றே
சட்டமன்ற மேலவையில் எழுப்பப்பட்டது. 12-1-78-ல் இராம
நாதபுரம் மாவட்ட ஆட்சியரின் அறிக்கை கோரப்பட்டது.
15-10-77 அன்று காலை கடுமையான மழையின் காரணமாக தேவ

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 13

கோட்டையில் உள்ள தின்னப்பா செட்டியார் தெருவில் 15-ம்
எண் இலக்கமுள்ள ஓட்டுவீடு முழுமையாக இடிந்து விட்டது என்று
மாவட்ட ஆட்சியர் கூறியுள்ளார். அந்த வீட்டில் திரு. மாடசாமி
என்பவர் தன் குடும்பத்துடன் வசித்து வந்தார். மேற்படி விபத்தில்
மாடசாமி மனைவி மீனாட்சி, வயது 45 என்பவரும் அவரது மகள்
பஞ்சவர்ணம், வயது 24 என்பவரும் இறந்து விட்டனர். மீனாட்சியின்
கணவர் திரு. மாடசாமி பாயசம் விற்கும் தொழிலாளி என்றும்
மாதம் ரூபாய் 50 வருமானம் பெறுபவர் என்றும் கூறப்
பட்டுள்ளது. இறந்த பஞ்சவர்ணத்தின் கணவர் திரு. வேலுசாமி
கூலி வேலை செய்பவர் என்றும், திரு. வேலுசாமியும் இறந்த
பஞ்சவர்ணமும் தனியாக வேறொரு இடத்தில் குடியிருந்தனர்.
விபத்துக்கு முதல் நாள் வேலுசாமி தன் குடும்பத்துடன் தன்
மாமனாரின்-அதாவது மாடசாமியின் வீட்டிற்கு விருந்தினராக
வந்திருந்தார்.

இதில் இறந்த இரண்டு பெண்களும் அக்குடும்பங்களுக்கு
பொருள் ஈட்டுபவராக இல்லாதிருந்த காரணத்தால் முதலமைச்சர்
பொது நிவாரண நிதியிலிருந்து உதவித்தொகை அளிக்க இயலாது
என நிதி அமைச்சரின் ஒப்புதலுடன் முடிவு செய்யப்பட்டது.
திரு. வேலுசாமி என்பவர் தனது 24-3-78 தேதியிட்ட மனுவில்
மேற்படி விபத்தில் இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு தன்
பிழைப்பை இழந்ததாக கூறியுள்ளார். ஆகையால் இராமநாத
புரம் மாவட்ட ஆட்சியரை, திரு. வேலுசாமி நிரந்தரமாக உடல்
இயலாமையுற்றவரா என்பதனையும் அரசாணை பலவகை எண் 520,
வருவாய் தேதி 7-3-77—ன் படி முதல்வர் பொது நிவாரண நிதியிலி
ருந்து உதவித் தொகை பெற தகுதியுள்ளவரா என்பதனையும்
ஆராய்ந்து அரசுக்குத் தகவல் அனுப்பும்படி 28-6-78 அன்று
கேட்டுக்கொள்ளப்பட்டார். இதற்குப் பதில் வராமையால் 4-9-78
இல் தொலை பேசி மூலம் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை உடனடி
யாகக் கோரப்பட்டது. திரு. வேலுசாமி கால் முறிவு ஏற்பட்டு
நிரந்தர ஊனம் உற்றவராகக் கருதப்படலாம் என்றும் தற்போது
வேலை ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார் என்றும்,
அவருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய்
1,000 அளிக்கலாம் என்றும் மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்
வதாக 5-9-78 அன்று தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டது.

மேற்படி பரிந்துரைக்கான அறிக்கை மாவட்ட ஆட்சியரிட
மிருந்து வரப் பெற்றதும் வேலுச்சாமிக்கு முதல் அமைச்சர் பொது
நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 1,000 அளிப்பது பற்றி தனியாக
நடவடிக்கை எடுக்கப்பட்டு தொகை அளிக்கப்படும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, திரு. உச்சி அவர்கள் பேசும்போது, கூடலூர் பகுதி
யிலே 'ஜென்மி ஆக்ட்' என்ற ஒரு ஆக்ட் இருந்தது. அந்தப்
பூமியை அந்தப் பகுதி மக்கள் வெகுகாலமாகத் தங்கள் கைவசம்
வைத்திருந்தார்கள். ஆனால் 1969-ம் ஆண்டு ''லான்ட் அபாலிஷன்
ஆக்ட்'' கொண்டுவரப்பெற்று, பட்டா செய்து கொடுக்கப்பட
வேண்டுமென்று மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பட்டா

1978 செப்டம்பர் 13] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

[பிற்பகல் 5–10]

செய்து கொடுக்கப்பட்டது. ஆனால் நாளது வரையில் எல்லாப்பகுதி
களிலும் பட்டா செய்து கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை என்று
குறிப்பிட்டார்கள்.

நீலகிரி மாவட்டத்திலுள்ள ஜென்ம உரிமையை ஒழித்து
ரயத்துவாரியாக மாற்றுவதற்காக, ''கூடலூர் ஜென்மம்
உடமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம்
1969'' கொண்டுவரப்பட்டது. இப்பகுதி முந்தைய மலபார்
மாவட்டத்தைச் சேர்ந்தது. தரகு முறையை ஒழிக்க வேண்டி
இச்சட்டம் கொண்டுவரப்பட்டது. ஜென்ம உரிமை ஒழிப்பு
10 கிராமங்களில் 324.24 சதுர கிலோ மீட்டர்கள் பரப்பில்
அமுல்படுத்த வேண்டியுள்ளது. இச்சட்டம் 27-11-74-ல் நடை
முறைக்குக் கொண்டு வரப்பட்டது. பின்னர், சில ஜென்ம
உடமையாளர்கள் உயர்நீதி மன்றத்தில் இந்தச் சட்டம்
அமுலுக்குக் கொண்டு வருவதை எதிர்த்து வழக்குத் தொடுத்
தனர். உயர்நீதி மன்றத்தில் அவ்வழக்கு முடிவு பெறும் வரை
இச்சட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தடை ஆணை பிறப்பிக்கப்
பட்டது. நில உச்ச வரம்புச் சட்டம் இந்தப் பகுதியில்
அமுல்படுத்தப்படுவதால், கூடலூர் ஜென்ம ஒழிப்புச்
சட்டத்தையும் அமுல்படுத்தக் கூடாதென்பது அவர்களது
வாதம். இந்த வழக்குகள் 23-9-76இல் தள்ளுபடி செய்யப்
பட்டன.

நில அளவை வேலைகள் இப்பகுதியில் முடிக்கப்பட்டு நிலவரித்
திட்டத் துறைக்கு பதிவுருக்கள் தரப்பட்டு விட்டன. இச்சட்டம்
அமுல்படுத்தப்படும் பணியை கூடலூரிலுள்ள கிளை நிலவரித்
திட்டம் அலுவலகம் கவனித்து வருகிறது. இச்சட்டத்தின் கீழ்
பட்டா வழங்குவதைக் குறித்த சட்டப்பூர்வ விசாரணைகளை
நடத்துவதற்கென ஒரு தனி உதவி நிலவரித் திட்ட அலுவலரும்
நியமிக்கப்பட்டிருக்கிறார். நிலவரித் திட்டத்தின் பல்வேறு
கட்டப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன. இதற்கிடையில் சில
எஸ்டேட் உடமையாளர்கள் உச்ச நீதி மன்றத்தில் வழக்குகள்
தொடுத்து தடை ஆணையும் பெற்றுள்ளனர். அவ்வாறு தடை
ஆணை பெறப்பட்ட பகுதியின் பரப்பளவு 172.46 சதுர கிலோ
மீட்டர்கள். மீதமுள்ள 151.78 சதுர கிலோ மீட்டர்களில்
நிலவரித் திட்டப் பணிகள் நடந்து வருகின்றன. உச்ச நீதி
மன்றத்தின் முன் உள்ள வழக்குகள் பைசல் ஆனதும் அதன்
தடை ஆணையால் பாதிக்கப்பட்ட நிலப் பரப்பிலும் நிலவரித்
திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும். பின்னர், சட்ட விதி
களின்படி தகுதி வாய்ந்தவர்களுக்குப் பட்டா வழங்கப்படும்.

இங்கே நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விழைகிறேன்.
இப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் கலைஞர் அவர்களும்
நான் என்ன சொல்கிறேன் என்பதைப் புரிந்துக்கொள்ள
முடியும். இது இன்றைக்கு, நேற்றைக்கு ஏற்பட்ட பிரச்னை
அல்ல. நீண்ட நெடுங்காலமாக இருக்கின்ற பிரச்னை. எல்லை
யோரங்களி
தமிழக மக்கள் அதிகமாக தங்களுடைய பணிகளைச்

ே செய்வதற்கோ, வாழ்வதற்கோ வாய்ப்பு குறைந்திருக்கிறது என்று கூறுகிற அளவில் நிலைமை இருக்கின்றது என்பதும், அதை நிச்சயமாக மாற்றி, இலங்கையிலிருந்தோ அல்லது வெளிநாடுகளிலிருந்தோ அல்லது வேறு எங்கேயிருந்து வந்தாலும், அந்தத் தமிழர்களுக்கு, தமிழக மக்களுக்கு எந்தெந்த எல்லையோரங்களில் நில வசதியுள்ளதோ, அந்த நிலங்களைத் தந்து பயிரிட்டு வாழ்வதற்கும், தொழில் வாய்ப்புகள் கிடைக்கும் வகையில் கடன் உதவியும் தந்து, மானியம் தருவதாக இருந்தாலும் அதையும் தந்து, அவர்களை குடியேற்ற வேண்டுமென்பது இந்த அரசினுடைய விருப்பம் என்பதையும், அதை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முழு முயற்சியுடன் பணியாற்றும் என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எந்தக் காரணத்தை முன்னிட்டும், தமிழகத்தினுடைய எல்லையைக் குறைத்துக் கொள்ள, விட்டுவிட வழி செய்யக் கூடாத நிலையில், அந்த ஆபத்து ஏற்படாத நிலையில் நாம் செயல் பட வேண்டியிருக்கிறது என்பதை நான் அவருடைய கட்சியிலே இருந்தபோது, மனம்விட்டுப் பேசியிருக்கிறேன். அதை இந்த அரசு தொடர்ந்து நிச்சயமாகக் கடைபிடிக்கும் என்று சொல்லும் போது, அவர் மனம் நிறைவு பெறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதைப்போல், மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் தலைவர்களும் இதைக் கவனித்து, ஆங்காங்கு எல்லையோரங்களில் நில வசதியுள்ள இடங்கள் இருக்குமானால், அவற்றை பயன்படக் கூடிய நிலமாக மாற்றியமைக்க இந்த அரசு பணமும் கடனுகத் தரும், மானியமும் தரும். தொழில் நுட்ப நிபுணர்களை அனுப்பி, அவர்களுக்கு ஆலோசனை வழங்கவும் உதவி செய்ய ஏற்பாடு செய்யும். எனவே, ஆங்காங்கே செல்லும்போது, அனைத்துக் கட்சியினரும் இதைப் பயன்படுத்தி, தமிழக மக்களுக்கு இதை எடுத்துச் சொல்லி, வருகின்றவர்கள் வேறு எங்காவது நிலம் கேட்கக் கூடிய சூழ்நிலை உருவாகுமானால், அதைத் தடுத்து அவர்களை அங்கே குடியேற்றுவதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று நான் பணிவோடு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

'ஏற்கனவே நீங்கள் இந்த மாமன்றத்திலே 50,000 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப் போகிறோம் என்று அறிவித்தீர்கள். ஆனால் இதுவரையிலே எங்கள் பகுதியிலே ஒரு விவசாயி கூட மின் இணைப்புப் பெற்றதாகத் தெரியவில்லை. ஆனால் நீங்கள் சொல்லிக்கொண்டே இருக்கிறீர்கள்' என்று சொல்லியிருக்கக்கூடிய நிலையிலே, அதே சமயத்தில் சிந்தித்துப் பதில் சொல்ல வேண்டிய, உண்மையை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு மாண்புமிகு திருவேங்கடம் அவர்கள் வாய்ப்புத் தந்திருக்கிறார்கள்.

அதற்கு என்னுடைய சி பதில்-மின்வாரியம் பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கும் வழிமுறைகளை சமீபத்தில் திருத்தி அமைந்துள்ளது. இதன்படி 1-7-;१ முதல் மனுச் செய்த

தேதியின் அடிப்படையில் மட்டும் முன்னுரிமை அளிக்கப்பட்டு 10 சதவீத வருவாய் அளவையும் கருத்தில் கொள்ளாமல் மின் இணைப்பு வழங்கப்படுகிறது. 1978–79ஆம் ஆண்டில் மின் இணைப்பு வழங்க 50,000 பம்ப் செட்டுகள் எனக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் வேலூர் மின் திட்டத்திற்கு 2,500 பம்ப் செட்டுகளும் திருவண்ணாமலை மின் திட்டத்திற்கு 4,000 பம்ப் செட்டுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோல் ஆங்காங்கு முடிந்த வரையில் இதைச் செய்ய வேண்டுமென்று நாங்கள் விரும்பிய அளவுக்குச் செய்ய முயலும் போது என்ன நிலைமை ஏற்பட்டது என்றால் நாட்டிலே போராட்டங்கள் மின் கட்டணத்தைக் கொடுக்காமல் மின்சாரத்தைப் பயன்படுத்துவது, அதே நேரத்தில் வன்முறையில் ஈடுபடுவது இவைகள் எல்லாம் நடந்ததை இந்த அவை மறந்திருக்காது.

இந்த நேரத்தில் ஒன்றை நான் குறிப்பிட வேண்டுமென்று விரும்புகிறேன். முதலில் அமைதி ஏற்படுகிற சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்றும், இந்த அரசால் இருக்கிற நிதி நிலைக்கேற்ப என்ன செய்ய முடியுமோ அதைச் செய்வதாக வெளியிட்டு ஓரளவு விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதற்குப் பிறகு போராட்டம் நடத்துவோம் என்று சொல்வதும், நாங்கள் மகாத்மா காந்தி கொள்கையைப் பின்பற்றிப் போராட்டம் நடத்துவோம் என்று நேரில் சொல்வதும், ஆனால் செயல்பட துவங்கும்போது கட்டை வண்டிகளைக் கொண்டு வந்து வீதியிலே நிறுத்தி விடுவதும், மாடுகளை அவிழ்த்து விட்டுவிடுவதுமான இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வது என்ற நிலை ஏற்படும் என்று சொல்லப் பட்டபோது நான் சொன்னதை இங்கே மறுபடியும் கூற விழைகிறேன்.

மக்களுடைய போக்குவரத்துக்கு இடைஞ்சலை ஏற்படுத்துவார்களானால், அதை ஒழுங்குப்படுத்திக் கொடுக்க வேண்டியது அரசின் கடமை என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ள வேண்டும். அந்தவகையில் நூற்றுக்கணக்கான கட்டை வண்டிகள் வழியில் நிறுத்தப்படுமானால் அதைப் பத்திரமாக எடுத்து, எங்கே கொண்டு போய் வைப்பது என்று சிந்தித்தால் அதற்கு எவ்வளவு நாட்கள் ஆகும், எந்த அளவுக்கு ஆட்கள் தேவைப்படும் என்பதை எல்லாம் தயவு செய்து நீங்கள் நடுநிலையோடு சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அறப்போராட்டம் என்று சொல்லி—யார் விரும்பினாலும் அத்தகைய போராட்டத்தைத் தொடங்குவதை இந்த அரசு நிச்சயமாக வெறுப்போடு பார்க்காது.—விருப்போடு பார்க்குமா இல்லையா என்பது வேறு-வெறுப்போடு நிச்சயமாகப் பார்க்காது.

அவர்களுக்கு எதிரியாகவும் எங்களை ஆக்கிக்கொள்ள மாட்டோம். ஆனால் பொதுமக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுகிற நிலையில் அவர் களுடைய செயல் மாறுமானால் அதைத் தடுத்து பொதுமக்கள் போக்குவரத்துக்கு வசதி செய்து கொடுக்க வேண்டியது அரசின் நீங்காத கடமையாகும். நாங்கள், அவர்களாகவே வண்டிகளை எடுத்துக் கொண்டு போகட்டும் என்று விட்டு விடுவோமானால், இப்போது கேட்பதைப் போல், முதலிலேயே ஏன் அவர்களை அழைத்துப் பேசி இருக்கக் கூடாது, போராட்டத்தைத் தொடங்கியவர்களை அழைத்துப் பேசியிருக்க வேண்டும் என்று சொல்வார்கள்.

பேராசிரியர் பேசியதாகப் பார்த்தேன் 'போராட்டத்தை நடத்தினால்தான் எதுவும் கிடைக்கும் என்ற நிலைமை உருவாக்கி விடாதீர்கள்', என்று அவர்கள் சொன்ன கருத்தை நான் மதிக்கிறேன். போராடித்தான் பெற வேண்டுமென்ற நிலை இருக்கக் கூடாது. ஆனால் நேர்மையான முறையில் நாங்கள் பல வழிகளைக் கடைப்பிடித்தும் அதை, அந்த நேர்மையை அவர்கள் மதிக்கவில்லை. அவர்கள் வன்முறையில் இறங்கி பொது மக்களுக்குத் தொல்லைகள் ஏற்படுத்துவது என்ற நிலையில் இறங்கு வார்களானால், நேர்மை எங்களிடம் இருந்தாலும் சட்டத்தை நிச்சயமாக நாங்கள் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படுகிறோம்.

அந்த வகையில்தான் நான் சொன்னேன். அங்கிருந்து அந்தக் கட்டை வண்டிகள் நிச்சயமாக அகற்றப்படும். எப்படி அகற்றப் படும் என்பதற்கு உத்தரவாதம் சொல்ல முடியாது. அது உடைக்கப்படலாம், அது உருட்டி விடப்படலாம். உயரமான இடத்தில் பாதை இருக்கிறது, பக்கத்தில் சரிவு இருக்கிறது, என்றால் அதைத் தள்ளிவிட வேண்டிய அவசியம் இருக்கிறது என்றால் அதைத் தள்ளிவிடத்தான் வேண்டியிருக்கும் என்ற அளவில் சொன்னேன்.

[பிற்பகல் ..20]

இப்போதும் சொல்கிறேன். யாரும் அதைச் செய்து தான் தீர்வார்கள், இல்லாவிட்டால் இராணுவத்தைக் கொண்டுவர வேண்டும், இராணுவத்தைக் கொண்டுவந்து அப்படி பயமுறுத்தலை ஏற்படுத்துவதைவிட அவர்களுக்கு அதனால் எவ்வளவு நஷ்டம் வரும் என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கிற சூழ்நிலையை ஏற்படுத்தினால் போராட்டம் நடத்துமாறு தூண்டப்படமாட் டார்கள், அப்படித் தூண்டப்பட்டாலும் அவர்கள் ஒத்துழைக்க மாட்டார்கள் என்று நான் கருதினேன்.

சென்னை நகரத்தைப்பற்றி ஒன்றை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். மாடுகள் வீதியிலே போக்குவரத்து இடைஞ்ச லாக அவிழ்த்துவிடப்பட்டு குறுக்கிலே அந்தப் பக்கமும் இந்தப்

பக்கமும் செல்கின்ற நிலைமை ஏற்பட்டு அதனால் லாரி, பஸ்களில் செல்வோர் ஆபத்துக்குள்ளாகும் நிலைமை ஏற்படுமானால் அந்த மாடுகளை அரசின் உத்திரவுப்படி அதிகாரிகள் கொண்டுபோய் விடு வார்கள் என்ற நிலைமை எனக்கு நினைவுக்கு வருகிறது. இது எப்படி நியாயமானது என்று சொல்ல விழைகிறேன். அதைத் திரைப் படங்களிலே செய்திகளாகக் காட்டுகிறார்கள், இப்போது டி. வி. யிலேயும் காட்டுகிறார்கள். அதுபோல் மாடுகளை அவிழ்த்துவிட்டுப் போய்விடுவார்கள், அந்த மாடுகளை அரசு அதிகாரிகள் கொண்டு போய் விடுவார்கள் என்று சொல்வதில் என்ன தவறு இருக்கிறது என்று தெரியவில்லை. ஏதற்காக மறியல் செய்கிறார்கள் என் பதைச் சொல்லிவிட்டு அமைதியாகச் செல்லட்டும், அறவழியில் செல்லட்டும்.

நேற்றைய தினம் நான் பேசியபோது குறிப்பிட்டேன்— விவசாயிகளுக்காக மைய அரசோடு என்ன என்ன விதத்தில் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும், மறுபடியும் நாங்கள் எப்படிக் கேட்கப் போகிறோம் என்பதையும் இங்கே சொல்லியிருக்கிறேன்.

இந்தவகையிலே நாங்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருந்தும், குழுவோடு பேசும் அதைப் பலமுறை நேரிலே சொல்லியிருந்தும், வீட்டுக்குப் போய் ஒன்றைச் பொழுது ஒன்றைச் சொல்வது, ஒன்றைச் செல்வது என்று சொன்னால் சொல்வது, வெளியே போய் கலைஞருக்கு ஒன்றைச் சொல்ல நான் எதிர்க்கட்சித் தலைவர் அந்தக் கட்சியில் இருந்த நேரத்திலே விரும்புகிறேன். நான் அந்தக் கட்சியில் நடந்த போது இதே அப்போது விவசாயிகள் போராட்டம் நடந்த போது இதே போல் ஒருவர் - அவர் பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை, அப்போது முதல்வரிடத்திலே நேரிலே ஒன்றைப் பேசுவதும் வெளியே ஒன்றைப் பேசுவதுமாக எப்படிப்பட்ட கருத்துக்களை வெளியிட்டார்கள் என்பதை வேதனையோடு சொல்லாமல் இருக்க முடியாது.

இப்படிப்பட்டவர்களை எப்படி சாதாரண விவசாயிகள் பின் பற்றிச் செல்கிறார்கள் என்று தெரியவில்லை, நான் சாதியைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்ற காரணத்தால் சொல்கிறேன். ஏதோ உணர்ச்சியைத் தந்து, நாங்கள் போராடினால் நீங்கள் பணம் கட்ட வேண்டிய நிலைமை இருக்காது என்று ஆசைகாட்டி, அவர்களைத் தப்பான வழியில் இழுத்துச்செல்வதை நாம் ஆதரிக்கக் கூடாது, இந்த அரசு அதை ஆதரிக்க முடியாது, இந்த மாமன்றமும் ஆதரிக்காது என்று மனதார நம்புகிறேன்.

காரணம், அவர்கள் தம் எண்ணங்களை, தேவைகளை எப்படி யெல்லாம் சொல்ல வேண்டுமோ அப்படிச் சொல்லட்டும், ஆனால் மக்களுடைய சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கின்ற முறையில்,

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 13

போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்கிற முறையில் இருந்தால் எப்படி விட்டுவைப்பது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இன்னும் ஒன்றைச் சொல்கிறேன். இப்போது நாங்கள் கொடுத்த உத்திரவுக்குப் பிறகு இந்த ஒன்றேகால் ஆண்டுகளாக என்ன நடந்திருக்கிறது என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். போலீஸ் அதிகாரிகள் முதலில் அடிபட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்படவேண்டிய நிலைமை ஏற்பட்ட பிறகு தான் அவர்கள் தங்களுடைய கடமையைச் செய்யக்கூடிய அளவிற்குக் கண்ணீர் புகையிலிருந்து, லத்தி சார்ஜுக்குச் செல்கிறார்கள், குண்டு போட்டால் பக் ஷாட் தானே என்று சொல்கிறார்கள் என்று திரு. சுப்பு அவர்கள் நாமெல்லாம் சிரிக்கும்படி சொன்னாலும் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே நான் கேள்விப்பட்ட செய்தி தான். என்னிடம் ஆதாரம் இல்லை. இப்பொழுது அது வேண்டாம், அதில் முடிவு வரட்டும்.

எந்தக் காரணமாக இருந்தாலும் ஒன்றை நான் வேதனையோடு சொல்வேன். இந்த அரசு போராட்டங்களைக் கண்டு அஞ்சவில்லை, போராட்டங்களைத் தூண்டி விடுபவர்களைப் பழி வாங்கவும் தயாராக இல்லை. ஆனால் அதே நேரத்தில், போராட்டங்கள் வரட்டும் என்று எந்தப் பிடிவாதத்தையும் காட்ட நாங்கள் தயாராக இல்லை. இதைத் தான் இந்த அரசு கொள்கையாக வைத்துக் கொண்டிருக்கிறது.

யாராவது தங்களுடைய தேவையை, விருப்பத்தை வெளியிட்டால் அதைக் கவனிக்கக் கூடாது என்று எண்ணம் எங்களுக்கு இல்லை. எங்களால் முடிந்த வரையில் சொல்லிப் பார்க்கிறோம், விவரங்களை எடுத்து வைக்கிறோம், நிலைமைகளை விளக்கிக் காட்டுகிறோம், புள்ளிவிவரங்களோடு சொல்லுகிறோம். ஆனால் படித்தவர்கள்கூட சில நேரங்களில் போராட்டம் என்று இறங்கும் பொழுதுதான் நாங்கள் வேதனைப்பட வேண்டியிருப்பது மட்டுமல்ல, பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அவர்கள் கூட மறந்து விட்டார்களே என்று நாங்கள் திகைக்க வேண்டியதாக இருக்கிறது.

பொதுமக்கள் யார் என்பதற்கு நான் இன்றைக்கு விளக்கம் தர வேண்டிய அவசியமில்லை; என்றாலும் ஒன்றைச் சொல்கிறேன். இங்கே நம்மை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளுங்கள், இங்கே சட்டமன்றம் நடைபெறுகிறது, இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கின்ற நாம் தமிழகத்தின் முழு நிலைமைகளையும் எண்ணிப் பார்த்து அதை முழுமையாகச் சிந்தித்து, அதற்கேற்றவாறு என்னென்ன செய்யலாம் என்பதைப்பற்றி யோசனைகள் கூறி, சொல்லு ஏற்றுக்கொண்டு, நாம் கொண்டு வரும் திட்டங்களை, ஏற்று கின்ற முறைகளை, எடுத்து வைக்கின்ற புள்ளிவிவரங்களை

1978 செப்டம்பர் 13] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அல்லது பதில் கூறித் திருத்தி அல்லது அதை ஆமோதித்து. அனைத்தும் இப்படி இங்கே சில காரியங்கள் நடைபெறுகின்றன. தமிழகம் ஏதாவது ஒரு தனி இடத்திற்காக மட்டும் அல்ல; முழுவதற்காகவும்தான்.

ஆனால் எங்கேயோ ஒருசிலர் இருந்து கொண்டு, நூற்றுக் கணக்கானவர்கள் என்று கணக்கானவர்கள் அல்லது ஆயிரக்கணக்கானவர்கள் என்று வைத்துக் வைத்துக்கொள்வோம் அல்லது பத்தாயிரம் பேர் என்று நடத்துகிறோம், கொள்வோம், அவர்கள் நாங்கள் ஊர்வலம் ஜன்னல்களையெல்லாம் உடைப் போகின்ற வழியில் இருக்கின்ற நாங்கள் போம், வழியிலே பார்க்கின்ற கார்களையெல்லாம் எங்க எப்படியாவது தூளாக்குவதற்கு முயற்சிப்போம் என்றும் உயிர் ளுடைய ஊர்வலம் நடக்கும், இதைத் தடுக்க வந்தால் நிலைமைகள் உங்களுடையது அல்ல என்றும் சொல்லும் அளவிற்கு கொண்டிருக்க உருவாகுமானால் அதை அரசு வேடிக்கை பார்த்துக் இங்கே முடியுமா என்ற என்னுடைய பணிவான கேள்வியை வைக்க விரும்புகிறேன்.

இதை நான் சொல்லும்பொழுது இன்னொரு செய்தியையும் கேள்விப்பட்டேன்—நேற்று என்று வைத்துக் கொண்டாலும் சரி, இன்று என்று வைத்துக்கொண்டாலும் சரி, நேற்றைக்கு முன் தினம் என்று வைத்துக்கொண்டாலும் சரி ஒரு தலைவர் "நீங்கள் போங்கள் போலீசார் மறுத்தால் மீறிப் போங்கள், என்ன வருகிறதோ பார்க்கலாம்," என்று சொல்லியனுப்பியதாக எனக்குச் செய்தி தரப்பட்டிருக்கிறது. அது உண்மையா, பொய்யா என்பதை அவர்கள்தான் சொல்ல வேண்டும்.

எனக்குக் கிடைத்த செய்தி தவறாக இருந்தால் நான் சந்தோஷப்படுவேன். ஆனால் நடந்திருப்பது அப்படியேதான். சில மாணவர்கள் வந்திருக்கிறார்கள், குறிப்பிட்ட இடத்தில் திருத்தி வைத்ததையும் மீறி இருக்கிறார்கள், அதிகாரிகள் தாக்கப் பட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு சில நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன, அதிகாரிகளும், ஒருசில மாணவர்களும் மருத்துவ மனைக்குச் சென்றிருக்கிறார்கள். இது தேவையற்ற ஒன்று. இப்படிச் சொல்லிக் கொடுத்து இளைஞர்களை அனுப்புவது தேவைதானா என்பதை உலகம் தெரிந்த, சட்டம் தெரிந்த, எத்தனையோ ஆண்டுகள் இந்த நாட்டு சுதந்திரத்திற்காகவும், மற்றவைகளுக் காகவும் தியாகம் செய்த உள்ளம் படைத்த அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடிபடுவதும், அடிப்பதும் இந்த நாட்டிலே பிறந்த மக்கள் தான். உங்களுடைய உடன்பிறப்பாக எண்ணப்படுபவர்கள்தான். அவர்களுடைய குடும்பத்தில் இல்லை என்றாலும் யாருடைய குடும்பத்திலேயாவது இருந்து வருபவர்கள்தான். அந்தத் தாய் தகப்பனுக்குக் குழந்தை என்று எண்ணிப்பார்க்கும்பொழுது இவைகளைப்பற்றிச் சிந்திக்க வேண்டியதாக இருக்கிறது: இந்த

நிலையில் ஏதாவது ஒரு போராட்டத்தை நடத்த வேண்டும். எண்ணத்தை வெளிக்காட்ட வேண்டுமென்று கல்லையும், அது போன்ற வேறு ஆயுதங்களையும் நம்பாமல், அல்லது எடுக்காமல், விவாதத்திலே இறங்கி, கருத்துக்களை எடுத்து வைத்து அதைத் திருத்திக்கொள்ள முயற்சிப்பதுதான் ஜனநாயகத்திற்கு உகந்ததாக அமையும் என்பதை நான் இந்த அவையிலே அந்தப் பெரியவர்களுக்கு வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிடுகிறபொழுது, ஒரு ஊரிலே கூட்டம் நடத்த ஏற்பாடு செய்திருந்ததாகவும், கூட்டம் நடத்த ஏற்பாடு செய்த பிறகு அனுமதி இல்லை என்று சொன்னதாகவும், ஆனால் பக்கத்து ஊரிலே ஆட்சிக் கட்சியினருக்கு அனுமதி வழங்கியதாகவும் சொல்லி இருக்கிறார்கள்.

[பிற்பகல் 5.30]

ஆனால் ஆளுங்கட்சிக் கூட்டம் நடைபெறவே இல்லையென்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது—இது பொய்யாக இருக்குமானால் நிச்சயமாக இந்தத் தகவலைக் கொடுத்தவர்கள்மீது நான் நடவடிக்கை எடுப்பேன் என்பதை இங்கே சொல்லிக்கொள்கிறேன்—அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் 'வால் போஸ்டர்' போட்டார்களே தவிர அந்தக் கூட்டம் நடக்கவில்லை யென்று எனக்கு அதிகாரிகளிடமிருந்தும் என்னுடைய நண்பர்களிடமிருந்தும் தகவல் வந்திருக்கிறது.

இன்னொன்றை நான் குறிப்பிட வேண்டும். மின் கட்டணத்தை உயர்த்த மத்திய அரசு சட்டம் கொண்டு வந்தது என்பதும் உங்களுக்குத் தெரியும். சிறப்புச் சட்டம் கொண்டு வந்தது என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆனால், நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் ஏதோ காரணத்திற்காக, மைய அரசிற்கு பயந்து அவர்கள் சொல்வதற்கெல்லாம் தலையாட்டுகிறோம் என்ற எண்ணம் யார், யாருக்கோ தோன்றி விட்டது என்கிற நிலையில் வெளியே பேசப்படுவதாகவும், இங்கேயும் சொல்லப்பட்டதாகவும் நான் அறிகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இதைச் சொல்லும்போது இங்கே வந்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கூட கேட்டார்களாம். ''மத்திய அரசு திட்டங்களைக் கண்டிக்கிறோம் என்று சொல்ல தமிழக அரசிற்குத் தைரியம் உண்டா'' என்று கேள்வி கேட்டார்களாம்.

1—3—1978 முதல் மின் உற்பத்திக்கு ஆயத் தீர்வை விதிக்க மத்திய அரசு முன் வந்துள்ளது. இது மின் உற்பத்தி செய்வதற்குத் துணையாகச் செலவாகிய மின் அளவைக் கழித்த பிறகு உற்பத்தி செய்யப்படும் மின் சக்தி மீது செலுத்தத்தக்க தீர்வையில்

10% நிவாரணம் அளிக்கப்படுவதற்கு உட்பட்டதாகும். விவசாயத்திற்குப் பயன்படுத்துகின்ற மின்சாரத்திற்கு இத்தீர்வையிலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மத்திய அரசின் அறிக்கை வந்தவுடனே பிரதமருக்கும் மத்திய நிதி அமைச்சருக்கும் இந்த ஆயத் தீர்வையை எதிர்த்து இந்த அரசால் கடிதம் எழுதப்பட்டது. அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் இக்கருத்து அனுப்பப்பட்டது. கர்நாடகா, ஆந்திரம், கேரளம் ஆகிய மாநிலங்கள் தமிழக அரசின் கருத்தை முழுமையாக ஏற்றுக்கொள்வதாகவும் வாக்குறுதி அளித்து, ஏற்கனவே அவர்கள் மத்திய அரசோடு தொடர்பு கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளன. மத்திய அரசு, மாநிலங்கள் மின் கட்டணங்களை உயர்த்தி நிதி நிலையைச் சரிக்கட்டலாம் என்று இந்த அரசுக்குப் பதில் அனுப்பியுள்ளது. ஆண்டிற்கு ரூ. 14.50 கோடி இழப்பு ஏற்க வேண்டியுள்ளதால், இங்கு மின் கட்டணத்தை உயர்த்த வேண்டிய நிலைமைகள் தற்பொழுது எங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே சொன்னார்கள். ஒவ்வொரு மாநிலத்திற்கும் இருக்கிற அதிகாரம் போதாது. இன்னும் வேண்டுமென்று சொல்கிற நேரத்தில் கொஞ்சங் கொஞ்சமாக அவர்கள் கை வைத்து நம் மீது ஆதிக்கத்தை அதிகப்படுத்திக் கொள்கிறார்கள் என்கிற நிலை மயிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அந்தக் குறிப்பிட்ட கருத்துக்கு என் கருத்து மாறுபட்டதல்ல என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

பஞ்சாயத்து போர்ட் என்ற வகையில் பஞ்சாயத்து ராஜ்யம் வேண்டும் என்று கூறுவதை கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளக் கூடிய மத்திய சர்க்காரால் பெரியவர் அசோக் மேத்தா அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அமைத்து, ''பஞ்சாயத்து ராஜ்யம் முழுமையாக அமலாக என்னென்ன வழிகளைக் கையாளலாம், ஏற்பாடு செய்யலாம், விதிமுறைகளை ஏற்படுத்தலாம்'', என்று வழிமுறைகளை உருவாக்கித் தரும் பணியை அவர்களிடம் ஒப்படைத்தார்கள்.

ஆனால், நான் திட்டவட்டமாக தமிழகத்தின் கருத்தை அங்கே சொல்லி, ஜில்லா போர்டை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்றோம்; அதே போல் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் ஊராட்சி மன்றங்களுக்கும் இடையிலே ஒரு தனி அமைப்புத் தேவை. இந்த இரண்டையும் கலைத்து விடலாம் என்று அவர் சொன்ன யோசனைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அதாவது மண்டல குழு என்று சொன்னார்கள். அதையும் நாங்கள் எதிர்த்து எங்களது கருத்துக்களைச் சொல்லி—அதிலே உறுப்பினராக இருந்தாலும் எனது—எங்களது—கருத்துக்களை எழுதிக் கொடுத்துவிட்டு, தமிழகத்தைப் பொறுத்தவரை இருக்கிற முறையைத்தான் பின்பற்றுவோம் என்று சொல்லி இருக்கிறோம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 13

ஆகவே, எதற்கெடுத்தாலும் நாங்கள் மைய அரசுக்கு ஆமாம் போடுவோம் என்றோ, ஆதரிப்போம் என்றோ இங்கே யாராவது சந்தேகப்படுவார்களானால் அப்படிப்பட்ட உள்ளங்களுக்குத் தெரிவிக்கிறேன், நாங்கள் தமிழகத்தினுடைய நன்மை, பொது நன்மை என்று வரும்போது எந்தக் காரணத்தாலும் தமிழகத்து நன்மைக்கு எதிராக இருக்க மாட்டோம். தமிழக மக்களது நன்மைக்கு மாறாக யாருக்கும் ஒத்துழைப்புத் தரமாட்டோம் என்பதையும் நான் இங்கே தெளிவாகக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுபோல பல பிரச்னைகளைப் பற்றி நான் கூற வேண்டி இருப்பினும், ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக பதில் சொல்ல வேண்டிய நிலைமைகள் இருக்கிறது என்றாலும், நான் பொதுவாக சிலவற்றைச் சொல்வதால், ஏதோ ஒருசில உறுப்பினர்களைத் தான் மதித்துப் பதில் சொல்லுகிறேன், மற்றவர்கள் சொன்னதை நான் அலட்சியப் படுத்திவிட்டேன் என்று யாரும் கருதிவிடக் கூடாது. மணி 5.35 ஆகிறது. ஆகவே அதிகமாக நான் நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை; என்றாலும் ஒரு சிலவற்றைச் சொல்லியாக வேண்டிய கடப்பாடு உள்ளதால் இதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நியாயவிலைக் கடைகளைப் பற்றி இங்கே பேசியிருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் மக்களுக்கு இன்றியமையாப் பொருட்களை வழங்குகின்ற பல்பொருள் நியாயவிலைக் கடை ஒன்று திறக்கப் படவேண்டும் என்பதை அரசு தன்னுடைய கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழகத்தில் 16,000 கிராமங்கள் உள்ளன. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கடை திறக்கப்படும் என்பதுதான் அரசின் கொள்கையும், அரசு செய்த அறிவிப்பும் ஆகும். இக்கொள்கையைச் செயல்படுத்த ஏற்கனவே இருந்த 9,000 ரேஷன் கடைகளில் 4,000-க்கும் மேற்பட்டவற்றை பல் பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றியுள்ளோம். இது தவிர ஏறத்தாழ 1,500 புதிய கடைகளையும் திறந்துள்ளோம். ஆக இப்போது நம் மாநிலத்தில் 5,500-க்கு மேற்பட்ட கிராமங்களில் பல்பொருள் நியாயவிலைக் கடைகள் இயங்கி வருகின்றன. மற்ற கிராமங்களில் ஏற்கனவே இயங்கி வரும் ரேஷன் கடைகளைப் பல்பொருள் நியாய விலைக்கடைகளாக மாற்றியும் கடைகள் இல்லாத புதிய கிராமங்களில் கடைகள் திறக்கவும் படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் நலனைக் கருதி, பல கோடி ரூபாய் முதலீட்டையும் பொருட்படுத்தாமல் தீவிரமாகச் செயலாற்றப்படும் இந்தத் திட்டம் இப்போது கணிசமான வெற்றி அடைந்துள்ளது என்பதையும் இத்திட்டத்தைப் படிப்படியாக விரிவாக்கி மாநிலம் முழுவதும் இன்னும் ஓராண்டு காலத்திற்குள் இத்திட்டம் செயல்பட அரசு நடவடிக்கைகள் எடுக்கும்.

1978 செப்டம்பர் 13] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

இந்தக் கடைகளை மாற்றி அமைக்கும் திட்டத்திற்கு பலகோடி ரூபாய் செலவாகும் என்பதால், மத்திய அரசின் நிதியுதவியையும் இவ்வரசு கோரியுள்ளது. இங்கே நான் கூறுகிற போது, எப்போது நியாய விலைக் கடைகளைத் திறக்க வேண்டும் என்ற பிரச்சினை உருவாகி, 16,000 நியாய விலைக் கடைகளைக் கொண்டு வருவதற்கு இந்த அரசு ஆசைப்பட்டு, திட்டங்களைத் தீட்டச் சொல்லி, எதை வெளியிட்டதோ அதற்கு எதிராக அரசைப் பொறுத்தவரையில் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் நீக்கிய பிறகு நியாய விலைக் கட்டுப்பாடு கிடையாது என்று கொண்டு வருவது என்ற கடைகளை எந்தக் கட்டுப்பாட்டுக்குள் அதற்குப் பிறகு நாங்களே பிரச்சினை பெரியதாக எழுந்தது. ஒரு வழி முறையை ஏற்படுத்திக் கொண்டு, ஒருபக்கையில் கொள் முதல் செய்து எங்களால் முடிந்த அளவு விலையைக் கட்டுப் படுத்தியும், அதே நேரத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேலாக விலையை உயர்த்தி வாங்கியும், இப்படிப்பட்ட செயல்களில் நாங்கள் ஈடுபட வேண்டியிருக்கிறது. இப்படி இருந்தும் நாங்கள் சொன்னவற்றில் எந்தஅளவுக்குச்செயலாற்றி விட்டோம் என்பதை யும், எந்த அளவுக்கு இன்னும் செயலாற்றவேண்டும் என்பதை யும் கூறும்போது அனுபவம் எங்களுக்கு ஒரு நல்ல உதாரணத்தைத் தந்திருக்கிறது என்பதையும், அப்படிப்பட்ட நேரத்தில் நாம் திட்டம்இடும்போதுஅதைச் சீர்குலைக்க வேண்டும் என்கிற எண்ணம் இல்லாவிடினும், மற்றவர்கள் எடுத்துக் கொள்கிற நடவடிக்கையின் விளைவாகத் தடங்கல்கள் ஏற்படுகிறது என்பதையும் நான் உணர்ந்திருக்கிற காரணத்தால், எதிர்காலத்தில் அப்படிப்பட்ட நிலைமை வருமானால் இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு, கூடுமானவரையில் வழிவகை காணும் ஏற்படாமல் இருப்பதற்கு இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறேன் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்

ஒவ்வொரு கிராமத்திலும் நியாயவிலைக் கடைகள் திறக்கப் படும் திட்டத்திற்குப் பலகோடி ரூபாய் செலவாகும் என்பதால் மத்திய அரசின் திட்டத்தினால் ஏற்பட்ட விளைவுகளால்தான் இந்தக் கோரிக்கையை நாம் வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றி இறுதி முடிவு இன்னும் எடுக்கப் படவில்லை.

[பிற்பகல் 5.40]

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டதைப்போல பலவேறு பொருள்கள், அத்தியாவசியப் பொருள்கள் ஆகியவற்றின் விலைகள் உயருகிறது என்பதையும், அப்படி விலைகள் உயர்வதற்குக் காரணம் மத்திய அரசா, மாநில அரசா என்று கேட்பதோடு இடைத்தரகர்களா என்ற கேள்வியும் இங்கே எழுப்பப்படுகிறது என்பதையும், பொருள்கள் பற்றாக்குறை ஆகிறது, விலைகள் உயருகிறது என்றும் அதிக விலை கொடுத்தால் மட்டும் பொருள்கள் கிடைக்கும் என்ற நிலைமை இருப்பதால், இதை யார் உருவாக்குகிறார்கள் என்பதையும் பல முறை மேடைகளில் கேட்டு இருக்கிறார்கள். நானும் பலமுறை

மேடைகளில் எழுப்பியிருக்கிறேன். ஆகவே, அதிலே புதிதாகச் சொல்வதற்கு ஒன்றும் இல்லை. ஆகவே, இந்த இடைத்தரகர்கள் நீக்கப்பட்டாக வேண்டும்.

அரிசி மில்களைப் பற்றி நான் ஒரு கருத்தைச் சொன்னேன். அரிசி மில்களைத் தேசிய உடைமையாக்கினால் என்ன என்ற எண்ணம் எனக்கு வந்ததற்குக் காரணம் அரிசி கடத்தப்படுவது தடுக்கப் பட வேண்டும் என்ற நிலைமை ஏற்படும்போது எல்லாம் நான் ஆட்சிக்கு, பதவிக்கு வருவதற்கு முன்பாகவே பல்வேறு இடங் களில் கூட்டங்களுக்குச் செல்கிறபோது கண்டு இருக்கிறேன். சைக்கிள்களில் அரிசி மூட்டையை எடுத்துக்கொண்டு ஊருக்கு ஊர் செல்வதும், லாரிகளில் கீழே அரிசி மூட்டையை வைத்து விட்டு, அவற்றின் மேலே வேறு பொருள்களை வைத்து எடுத்துச் செல்வதையும் கண்டு இருக்கிறேன். அதை அறிந்து சில நேரங் களில் செக்போஸ்ட்டுகளில் சொல்லிவிட்டும் போய் இருக்கிறேன். அப்படிப்பட்ட நிலைமைகள் அதனால் அங்கே தடுக்கப்பட்டும் உள்ளன. ஆகவே, கடத்தல்கள் இல்லாமல் செய்யப்பட வேண்டு மானால், சங்கச் சாவடிகள் நிச்சயமாகத் தேவைப்படுகின்றன, சோதனைச் சாவடிகள் தேவைப்படுகின்றன, என்றும், இப்போது எல்லாம் பை-பாஸ் ரோடு என்று எல்லா இடங்களிலும் வைத்து இருக்கிறோம், அதைப்போல் அவைகளும் போய்விடுகின்றன. ஆகவே, நான் இதற்கு ஒரு முடிவு காண வருவாய்த் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி அந்த நிலைமைகளை ஆராய்ந்து ஒரு திட்டத்தைச் சொன்னேன். அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தியதில் ஒரு வார காலத்தில் சில உண்மைகளைக் கண்டோம். பித்தளைத் தகடுகள் மற்றும் அது போன்று சில பொருள்களை எல்லாம் லைசென்ஸ் இன்றி எடுத்துச் செல்கின்றனர். லாரிகளை மடக்க எதிர்பாராத இடங்களில் நாங்கள் அதிகாரிகளை அனுப்பி திடீரென்று சோதனை செய்ததில் ஏறத்தாழ 4 லட்ச ரூபாய் அளவிற்கு வரி வசூலிக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இருந்தாலும் அப்படிப் பட்டவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று பார்க்கிறபோது அவர்கள் சட்டத்தில் இருக்கும் சில ஓட்டைகளை வைத்து தப்பித்துக் கொள்வதற்கான வாய்ப்பு இருப்பதால் வேறு நடவடிக்கையை அவர்கள் மேல் எடுக்கவில்லை. எப்படி மது விலக்கு சம்பந்தமாகக் குற்றம் செய்பவர்கள்மீது நடவடிக்கை அதாவது மதுவைக் கொண்டு வரும் கார்கள், அதை ஓட்டுகின்றவர்கள், அதன் சொந்தக்காரர்கள் எல்லாம் அந்தக் குற்றத்திற்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று நாம் சொல்ல விழைகிறோமோ அதேபோல் அவர்கள் யாராக இருந்தாலும் அந்த லாரிகளுக்குச் சொந்தக்காரர்களும் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டிய நிலைமை வந்தால்தான் இவைகள் குறையும் என்று நாங்கள் கருதுகிறோம். அத்தகைய நிலைமையை அரசு மட்டும் செய்து விட முடியாது, அதிகாரிகள் மட்டும் அதை

நிறைவேற்றி விட முடியாது. எவ்வளவோ பெரிய மைல்கள் நீளத்தில் பல்வேறு பாதைகளை வசதியாக நாம் அமைத்துக் கொடுத்து இருக்கிற நிலைமையில் எல்லா இடங் களிலும் காவல் துறையினரை வைத்து அவர்களைத் தடுக்க முடியும் என்பது எளிதான காரியம் அல்ல. எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பைப் பல்வேறு வகைகளில், பல்வேறு நிலைமைகளில் தந்து இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டாக வேண்டும். அதேபோல் இனியும் தொடர்ந்து அனைவரும் ஒன்று சேர்ந்து ஒத்துழைப்புத் தருவார்களானால் இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்ற முடியும் என்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன்.

அடுத்து 1963-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழித்தலும்-ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டத்தின் 66-வது பிரிவின் கீழ் ஓர் இனும் எஸ்டேட்டில் உள்ள ஒரு நிலம் வனநிலமா அல்லது வன நிலத்தில் அமைந்துள்ளதா அல்லது வன நிலத்தின் எல்லை எதுவரையில் உள்ளது என்பது குறித்து வினா ஏதும் எழுந்தால் வரையறுக்கப்படக்கூடியது போன்ற கால அளவிற்குள் இயக்கு நருக்கு மேல்முறையீடு ஒன்றைச் செய்து கொள்வதற்கும், வருவாய்த்துறை வாரியத்தால் திருத்திஅமைக்கப்படுவதற்கும் உட் பட்டு அது செட்டில்மென்ட் அதிகாரியால் தீர்க்கப்பட வேண்டும்.

தமிழ் நாடு 1965-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழித் தலும்-ரயத்துவாரியாக மாற்றுதலும்) விதிகளைச் சேர்ந்த 49-ம் விதியின் கீழ், செட்டில்மென்ட் அதிகாரி, வனநிலங்கள் குறித்த பிரச்சனைகளை 66-வது பிரிவின்கீழ் தானாகவோ அல்லது விண்ணப்பம் செய்து கொள்வதன் பேரிலோ முடிவு செய்ய வேண்டும். விண்ணப்பம் வரப்பெறுவதின் பேரில், செட்டில்மென்ட் அதிகாரி, விசாரணை செய்வதற்குரிய நாளை வரையறுத்து, விண்ணப்பதாரருக்கும் பிரதிவாதிகளுக்கும், இனும் எஸ்டேட்டின் மேலாளருக்கும் அறிவிப்புக் கொடுக்க வேண்டும். அவ்விண்ணப்பம் குறித்து அவர் சுருக்க வகையில் விசாரணை செய்து, தமது சாட்சியங்களை எடுத்துரைக்க அவர்களுக்கு நியாயமான வாய்ப்பை அளித்த பிறகு தனது முடிவை எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். இந்த அதிகாரம், சம்பந்தப்பட்ட உதவி செட்டில்மென்ட் அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சில பகுதிகளை வன நிலமாக அறிவிப்பதற்காக, செட்டில்மென்ட் துறைக்கு கடலூர் மாவட்ட வன அதிகாரி விண்ணப்பம் செய்துள்ளார். செட்டில்மென்ட் பணி இப்பகுதி களில் நடைபெற்று வருகிறது. இதுவரையில் தென்னாற்காடு மாவட்டம், கல்ராயன் மலைப்பகுதிகளில் 34,000 ஹெக்டேர் நிலங்கள் வன நிலமாக 1963-ம் ஆண்டு 26-வது சட்டத்தின் 66-வது பிரிவின் கீழ் விழுப்புரம் உதவி செட்டில்மென்ட் அதிகாரி யால் அறிவிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பகுதிகளைப் பொறுத்த மட்டில் விசாரணை நடைபெற்று வருகிறது.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 13

மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்புகள், உதவி செட்டில்மென்ட் அதிகாரியால் தானுகவோ அல்லது வனத்துறையிலிருந்து வந்த விண்ணப்பத்தின் பேரிலோ பிறப்பிக்கப்பட்டிருக்கலாம் என்று மேற்சொன்னவற்றிலிருந்து தெரிய வருகிறது. பாதிக்கப்பட்ட தரப்பினர் இந்த ஆணை கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செட்டில்மென்ட் இயக்குநருக்கு மேல்முறையீடு ஒன்றைச் செய்து கொள்ளலாம் என்பதோடு மறு ஆய்வு மனுவை வருவாய்த் துறை வாரியத்திற்குக் கொடுக்கலாம். இந்த அறிவிப்புகள் உதவி செட்டில்மென்ட் அதிகாரியால் 1963ஆம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழித்தலும், ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டத்தின்கீழ் அவர்களிடம் நிலை பெற்றுள்ள சட்டப்படிக்கான அதிகாரங்களின்கீழ் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த அறிவிப்புகளைத் திரும்பப் பெறுவதற்கு அரசுக்கு அதிகாரமில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள், "வருவாய்த் துறை அமைச்சரவர்கள் கீழத் தஞ்சையிலே பேசும்பொழுது, விவசாயக் கூலிகளுக்கு 50 பைசா இடைக்காலத்தில் கூட்டிக் கொடுப்பதற்கான முயற்சிகள் செய்கிறோம் என்று சொன்னார்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். எவனெல்லாம் கிளர்ச்சி செய்கிறானே அவனுக்குத்தான் சலுகை கிடைக்கும் என்று சொன்னால் அது சரியல்ல. தமிழ்நாட்டிலே உள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கூலிகளுக்கு எட்டு ரூபாய் என்று அறிவிக்க வேண்டும்," என்றார்கள்.

1969ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியச் சட்டத்தின் கீழ் கீழத் தஞ்சை மாவட்டப் பகுதியிலுள்ள வேளாண்மைத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வுக்கான கோரிக்கைகளை மாவட்ட ஆட்சியரிடம் விடுத்தனர். அதன்பேரில் முத்தரப்பு பேச்சுவார்த்தைகள் 28-6-78 அன்று மாவட்ட ஆட்சியரால் நடத்தப்பட்டன. அதில் முடிவேற்படாததால், ஊதிய நிர்ணயம் செய்ய பரிந்துரையளிக்குமாறு ஒரு நபர் குழுவினை 15-7-78 அன்று அரசு நியமித்தது. இக்குழுவின் இறுதிப் பரிந்துரை கிடைத்து அரசு முடிவெடுப்பதற்குள் குறுவை சாகுபடி முடிவுற்றுவிடுமாதலின், குறுவைச் சாகுபடியில் ஈடுபடும் வேளாண்மைத் தொழிலாளர்கள் பயனடைய மேற்படி குழு ஓர் இடைக்கால அறிக்கை 14-8-78 அன்று அளித்தது. அவ்வறிக்கையில் பரிந்துரைத்தவாறு அரசு இடைக்கால நடவடிக்கையான முழு பராக்கமாகக் கொடுக்கப்படும் ஊதியத்தை மட்டும் 50 பைசா உயர்த்திக்கொடுத்தது. இதற்கான அரசிதழ் விளம்பரம் 16.8.78 ல் அன்று முதல் அமலுக்கு வருமாறு வெளியிடப்பட்டது.

இதற்கிடையில் கிளர்ச்சி எதுவும் நடக்கவில்லை. கிளர்ச்சி செய்தவனுக்குத்தான் சலுகை கிடைக்கும் என்று கூறியது சரியல்ல. குழுவின் இறுதி அறிக்கை விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். கிடைத்தவுடன் விரைவில் அரசு நடவடிக்கை எடுக்கும்.

1978 செப்டம்பர் 13]

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, கீழத் தஞ்சையில் விவசாயிகளுக்குக் கிடைக்கின்ற கூலி உயர்வைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவித்தார்கள், நன்றி. விவசாயத் தொழிலாளர்களுக்கு ஊதியம் நிர்ணயம் சம்பந்தமாக ஒரு கமிட்டி நிறுவப்பட்டது. அதில் சுந்தரேசத் தேவர், சீர்காழி வக்கீல் பாலகிருஷ்ணன் போன்றவர்கள் எல்லாம் இடம் பெற்றார்கள். ஆனால் விவசாயப் பிரதிநிதிகள் அதில் இடம் பெறவில்லை என்பதைப் பார்க்கவேண்டும். அதோடு விவசாயிகளுக்கு இலவசமாகக் கொசு வலை வழங்க அரசு முன்வருமா? கொசுக்கடியால் விவசாயிகள் மிகவும் அவதிப்படுகிறார்கள் என்பதால் இதைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவசாயிகள் மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார்கள் என்பதை நான் உணருகிறேன்.

[பிற்பகல் 5-50]

ஆனால், ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். கொசு வலை மட்டுமல்ல, பட்டுமெத்தைகூட கொடுத்தால் யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், கொடுப்பதற்குப் போதுமான நிதிவசதி இருக்கின்றதா என்பதை நாம் பார்க்க வேண்டும். அந்த வசதி இல்லாத காரணத்தால்தான் இப்போது மூன்று பைசா அதிகமாக மின் கட்டணத்தை இங்கே உயர்த்துவதற்கு முயலுகிறோம் என்ற நிலைமை உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். இதை நீங்கள் எண்ணிப் பார்த்தால் நல்லது. உங்களுக்கு ஒன்றை நான் சொல்வேன், இந்த அரசு விவசாயிகள் மட்டுமல்ல, உழைக்கும் வர்க்கம் அத்தனையும் செழுமையாக வாழ வேண்டும் என்பதில் மிகவும் அக்கறை கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கொள்கையினை அமல் நடத்த வேண்டும் என்றுதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிவிட்டுச் சென்றார்கள். அதை நாங்கள் மறக்கவில்லை. ஆனால், அதே நேரத்தில் விவசாயிகளுடைய பிரதிநிதிகள் என்று சொல்லும்போது நடுநிலையோடு செயல்படுகின்ற நாங்கள் எல்லோரையும் ஒரே கருத்திலேதான் கவனிக்கிறோமே தவிர வேறுபாட்டினை நாங்கள் காட்டுவதில்லை, இன்னார் இன்னின்ன வர்க்கத்திற்குப் பிரதிநிதி என்று சொல்லிக் கொண்டாலும், ஒட்டுமொத்தமாக எந்தத் தொகுதியிலே இருந்து வந்தாலும், தமிழகத்துக்கும், தமிழக மக்களுக்கும்தான் பேச வந்திருக்கிறார்கள் என்று நான் எண்ணுகிறேனே தவிர, உங்களில் யார் விவசாயிக்குப் பிரதிநிதி, யார் விவசாயி அல்லாதாருக்குப் பிரதிநிதி என்று வேறுபடுத்திப் பார்க்கவில்லை. அதேபோல் நீங்களும் தயவு செய்து பிரித்துப் பார்க்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதை எல்லாம் நான் சொல்லும்போது ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஏதாவது ஒரு கமிஷன் அமைக்கப்படும்போது சாதிப் பிரச்சினை, அதிலே ஊடுருவுவதற்கு வாய்ப்பினைத் தந்து

விட்டார்கள் என்று வைத்துக் கொண்டால் நீதிபதியின் மேலேயே சந்தேகம் வைத்து இன்னொரு சாதியைச் சேர்ந்த நீதிபதியை நியமிக்க வேண்டும் என்று கேட்கிற அளவுக்கு நாட்டிலே சாதி உணர்வை வளர்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு—இந்த மாமன்றத்திலே உள்ளவர்கள் புத்தி சொல்லி அவர்களை அப்படிப்பட்ட போக்கிலிருந்து மாற்ற வேண்டும் என்று நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட ஒருவர் தாக்கப்பட்டால் அதை விசாரணை செய்வதற்கு தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒரு நீதிபதி தான் வேண்டும் என்று கேட்பது, நாயுடு சாதிப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் நாயுடு சாதியைச் சேர்ந்த நீதிபதியைத் தான் போட வேண்டும் என்று கேட்பது, முதலியார் பிரச்சினை வரும்போது முதலியார் சாதியைத்தான் நீதிபதியாக உட்கார வைக்க வேண்டும் என்று கேட்பது, ஆக இப்படி, எந்தெந்த சாதிக்காரர்பற்றிய பிரச்சினை வந்தாலும் அந்தந்த சாதிக்காரர் தான் நீதிபதியாக அமர்த்தப்பட வேண்டும் என்ற நிலைமை ஆரம்பித்தால் அதற்கு முடிவே இல்லாமல் போய்விடும்.

அது மட்டுமல்ல, இது நிச்சயமாக இந்த நாட்டினுடைய ஒட்டு மொத்தமான கொள்கைக்கு உதவாது என்பதை நான் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். ஆகவே இந்த எண்ணம் வராமல் இருக்க வேண்டும். நீதிபதி யாராக இருந்தாலும் அவர்களை நீதிக்குக் காவலர்களாக எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு மாறாக ஒரு சாராருடைய அதாவது சாதி இந்துக்கள் பற்றிய பிரச்சினைக்கு மற்றவர்களை நியமித்தால் அவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட மாட்டாது என்ற அளவிலே உள்ள எண்ணத்திற்குப் பொறுப்பானவர்களை இந்த மன்றத்திலே உள்ளவர்கள் ஆதரிக்க மாட்டார்கள் என்பதில் பரிபூரணமான நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

ஆனால், வழக்குகளை விசாரிக்கும்போது நீதி மன்றத்திலே யாராவது தலையிட்டிருந்தார் என்கிற நிலைமை ஏற்படும்போது, அப்படித் தலையிட்டார் என்கிற ஆதாரத்தோடு வந்தால் அல்லது அதிகாரிகள் தலையிடுகிறார்கள் என்கிற ஆதாரத்தோடு வந்தால் அதை ஆய்வு செய்து நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், இப்படிப்பட்ட சந்தேகங்கள் உருவாகிவிட்டால் நாமும் நம்முடைய மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களும் சந்தேகக் கண்ணோடு பார்க்கும் நிலைமை ஏற்பட்டு விடும் என்கிற வகையில் நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். வழக்கு மன்றத்திலே ஒரு வழக்கு வரும்போது அந்த வழக்கு மன்றம் வேண்டாம் வேறு மன்றம் வேண்டும் என்று கேட்பது எப்படி நியாயமாக இருக்காதோ அதேமாதிரிதான் இந்த சாதிப் பிரச்சினையும்

என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்த நிலைமை [illegible]லில் மக்கள் மனதிலே நம்பிக்கையை நாம் ஏற்றியாக வேண்டும், அதை நான் சொல்லியாக வேண்டும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, அவர்கள் * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னைக் கேட்காமல் நீங்கள் எழுந்து நிற்பதே தவறு. என்னிடம் முதலில் கேட்டு விட்டுத்தான் தாங்கள் எழுந்து நின்று கேட்கவேண்டும். அது தான் முறை. தாங்கள் பேசிய பேச்சில் ஏதாவது விடுபட்டிருந்தால் அது குறித்து சந்தேகம் கேட்டால் பரவாயில்லை. ஆனால், தமிழ்நாடு முழுவதும் உள்ள பிரச்சினைகள் பற்றி எழும்பி எழும்பிக் கேட்டு அவையின் நேரத்தை வீணாக்குவது சரியல்ல.

திரு. க. சுப்பு: முதல் அமைச்சர் ஐந்து மணி நேரம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அது சரி என்று கருதுகிறீர்களா என்று கேட்கிறேன். நான் எழுந்து ஒன்றும் கேட்கக் கூடாதா? (கூச்சல்—குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதிகளைப் பார்த்தேன். உங்களால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை என்றால் அதற்கு நான் பொறுப்பாளி அல்ல. முதல் அமைச்சர் அவர்கள் இவ்வளவு நேரம் பேசுகிறார்களே என்று கேட்க உங்களுக்கு உரிமை இல்லை.

திரு. க. சுப்பு: அதற்கு, உங்களுக்கு உரிமை இல்லை. (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்கு உரிமை இல்லை என்று சுப்பு அவர்கள் பேசுவது என்ன நியாயம்? இப்படி ஒரு அங்கத்தினரை நான் தினசரி பார்த்துக் கொண்டிருக்கிறேன். அது எனது தலைவிதிதான். எனக்கு உரிமை இல்லையா? எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் ஏதும் சொல்லாதிருக்கிறார், உறுப்பினரும் எழுந்து ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார். எனக்கே உரிமை இல்லை என்றால் என்ன அர்த்தம்?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நான் சொல்ல வந்தது, மாண்புமிகு சுப்பு பேசியதை நிறுத்த வேண்டும் அல்லது தடைப்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல. இன்னொன்றும் சொல்கிறேன், என்னவெனில், *

ஆக, இதில் சந்தேகப்படக் கூடாது என்பதற்காகத்தான் [illegible] [illegible] தவிர மற்றபடி மாண்புமிகு சுப்பு பேசும்போது [illegible] [illegible] என்பதற்காக அல்ல. நான் இன்னொன்றையும்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கூறிக் கொள்ள விரும்புகிறேன். தலைவர் அவர்கள் எழுந்து நிற்கும்போது நீங்களும் எழுந்து நின்று நான் நேரிலே கேட்கக் கூடாது ***என்று கேட்பது சரிதானா? நான் முதல் அமைச்சர் என்ற நிலையில் கேட்கவில்லை, சகோதரர் என்ற நிலையில் கேட்கிறேன். நாம் மதிப்பைக் கொடுத்து மதிப்பைப் பெற வேண்டும். இங்கே எல்லோருக்கும் பேச உரிமை இருக்கிறது என்பதை நான் நம்புகிறேன்.

மாண்புமிகு சுப்பு அவர்கள் எதைச் சொன்னாலும் நான் கேட்கிறேன், பதில் சொல்வதற்கு நான் தயங்கவில்லை. நான் அதைப் பற்றிக் கவலைப்படவும் இல்லை. திரு. சுப்பு எப்படிப் பேசுவார் என்பது எனக்கு நன்றாகத் தெரிந்து விட்டது, முதல் அமைச்சர் பதவிக்கு வந்த பிறகு. ஏனென்றால் சபாநாயகர் அவர்கள் அன்றொரு நாள், நாடகம் நடத்துகிறீர்கள், நாடக மாடுகிறீர்கள் என்று சொன்னபோது, மாண்புமிகு சுப்பு, ''இப்படிச் சொன்னால் முதல் அமைச்சர் அவர்களுக்குக் கோபம் வந்துவிடப் போகிறது'' என்று சொன்னார். என்மீது அவர்களுக்கு அவ்வளவு அக்கறை! என்னை எப்போதும் கவனித்துக் கொண்டு வருகிறார். எந்த இடத்திற்குப் போனாலும் முதல் அமைச்சர் தான் அவர்கள் கண்களுக்குப்படுகிறார். எம். ஜி. ஆர். நடிகனாக இருந்ததுதான் அவர்கள் நினைப்பிற்கு வருகிறது. அதை மறந்து விடவில்லை.

[மாலை 6-00]

ஆனால், அதில் எனக்கு வெட்கம் இல்லை. தொழில் செய்து வாழ்வதில் எந்தவிதமான தவறும் இல்லை. அதில் எந்தவிதமான வெட்கமும் இல்லை. ஆனால் எந்தவிதமான தொழிலும் இல்லாமல் எப்படியோ சம்பாதித்துக் கொண்டு இருந்தால்தான் வெட்கப்பட வேண்டுமே தவிர இதில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை.

நான் சொல்ல விரும்புவது நீதிபதிகளின் நிர்வாகத்தில் சந்தேகம் யாருக்கும் வரக்கூடாது என்பதுதான். அந்த வகையில் சொல்லுகிறேன். சாதி போன்றவைகளைப் பார்த்து நீதிபதிகளைப் போடுவதில்லை. நீதிபதிகளைப் போடும்போது இவர் என்ன சாதி என்று பார்ப்பதில்லை.

சாதி தகராறு என்ற முறையில் பல பிரச்னைகள் வருகின்றன. இதுசம்பந்தமாக ஒரு மனுவை இன்னொரு அமைச்சரிடம் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட நிலைமையில் நாம் ஒன்றை எண்ணிப்பார்க்க வேண்டும். எதற்காக நாம் உழைக்கின்றோம்? எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, ஆட்சிக் கட்சியாக இருந்தாலும் சரி இங்கே இருக்கின்றவர்கள் யாரும் சாதிப் பிரச்னையில் நம்பிக்கையுள்ளவர்களாக இருக்க மாட்டார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. சாதி, மதம் என்பதை முன்னிலைப்படுத்தி ஒரு பிரச்சினையைப் பார்க்கக்கூடாது என்பதில் நம்மில் யாருக்கும் சந்தேகம் கிடையாது. ஆகவே அப்பேர்ப்பட்ட நிலையில் சந்தேகமில்லாத அளவில் எல்லோரும் சேர்ந்து

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஒத்துழைக்க முன் வரவேண்டும் என்பதற்காக இதைக் கூறுகிறேனே தவிர எங்களைப் பொறுத்தவரையில் திட்டவட்டமாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எழுதி வைத்துக் கொள்ளலாம், இவையெல்லாம் மாய்ந்து விடக்கூடியதல்ல. யார் மீதாவது வழக்கு போட வேண்டும் என்று வருகின்ற நேரத்தில், அப்படிப்பட்ட நிர்ப்பந்தம் ஏற்படுகின்ற நேரத்தில் எத்தனையோ முறை ஆலோசித்துப் பார்த்த பிறகு—சிந்தித்துப் பார்த்த பிறகு, வேறு வழியே இல்லை என்று வந்தால் மட்டுமே வழக்குப் போடப்படுகிறதே தவிர வேறுவிதத்தில் யார் மீதும் வழக்கு போடுவதில்லை என்பதும், அப்படி வழக்குப் போட்டாலும் கூட, அது எந்த அளவுக்கு நியாயமாக நடக்க வேண்டுமோ அந்த அளவுக்கு நியாயங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளைச் செய்து தருகிறோம். இதை இந்த மன்றத்திலுள்ளவர்கள் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும் என்று நம்புகிறேன்.

எப்படியாவது மற்றவர்களைக் கைது செய்து உள்ளே தள்ளி விட்டு, மூன்று ஆண்டுகள் நான்கு ஆண்டுகள் சிறையில் போட்டு விட்டு இந்த ஆட்சியை நடத்திவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டு இந்தப் பதவிக்கு நாங்கள் வரவில்லை. நாங்கள் முன்னால் சொன்ன குற்றச்சாட்டுகளை இன்னும் மறக்கவில்லை; மறுக்கவும் இல்லை. இவைகள் எல்லாம் சர்க்காரியா கமிஷன் முன்னால் கொண்டு வரப்பட்டு விசாரிக்கப்பட்டு அதனுடைய முடிவுகள் இங்கே தரப்பட்டிருக்கின்றன. இவற்றை உடனடியாக முடிப்பதுதானே, இன்மீது வழக்குகளைப் போடுவதுதானே என்று இங்குள்ளவர்களும் சரி, வெளியிலுள்ளவர்களும் சரி அடிக்கடி பேசி வருகிறார்கள். நான் சொல்ல விரும்புகின்ற கருத்தை இத்துடன் சேர்த்தே சொல்லி விடுகின்றேன். இதில் குற்றம் செய்திருப்பவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் சரி, அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஆளானவர்கள்மீது வழக்குத் தொடரலாம் என்று ஆதாரங்கள் இருக்கின்றன என்று முடிவு எடுக்கப்படுமானால், நிச்சயமாக அவர்கள்மீது வழக்குப் போடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவற்றின் தீர்ப்பு அல்லது முடிவு நீதிபதியின் கையில் இருக்கிறது என்பதையும் நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்......

திரு. மு. கருணாநிதி : இவர்கள் கட்சி ஆரம்பித்த நேரத்தில் பல கூட்டங்களில் பேசிய போதும், நிருபர்களுக்கு அளித்த பேட்டியிலும் ஒன்றை மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். யார் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வந்தாலும், அவர்கள் மீது விசாரணை வைக்கப்பட்டு அதற்குப் பிறகுதான் அவர்கள் தங்கள் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் அதற்கு மாறாக விசாரணையில் இருப்பவர்களையெல்லாம் சேர்த்துக் கொண்டிருக்கிறார்களே, அவர்கள் எல்லாம் விசாரணை வைக்கப்பட்டு வடிக்கட்டப்பட்டு சேர்க்கப்பட்டார்களா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: எங்கள் கட்சியில் சேராதவர்களை நான் கேள்வி கேட்க எனக்கு உரிமை யில்லை. நான் இது பற்றிச் சொன்னதைச் சரியாக வெளியிடவில்லை என்று நினைக்கிறேன். நான் சொன்னது, எங்கள் கட்சியில் சேருபவர்களை நான் விசாரணைக்கு உட்படுத்தி விசாரித்து, அதற்குப் பிறகு அவர்களைக் கட்சியில் சேர்த்து வைத்துக் கொள்வதா அல்லது வெளியே அனுப்புவதா என்று முடிவு செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறேன். இப்போதும் சொல் கிறேன், யாராக இருந்தாலும் சரி, எங்கள் கட்சியில் சேர்ந்த வர்கள் மீது வழக்கு நடந்து அந்த வழக்கில் அவர்கள் நிச்சயமாகக் குற்றவாளிகள் என்றால், அவர்கள் எங்கள் கட்சியில் இருக்க முடியாது என்பதை இங்கு தெளிவாக நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்த வகையில் நான் நாங்கள் பின்பற்றியிருக்கி றோம். அந்த வகையில் இருக்க வேண்டும் என்றுதான் நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் தெளிவாகச் சொல்லு கின்றேன்.

இன்னொன்றையும் சொல்ல வேண்டும். விசாரணை செய்கின்ற நீதிபதிகள் அவர்களுக்கென்று இருக்கின்ற பதவியில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் விசாரணை செய்கின்ற பணி களைச் செய்வதிலும் நீதிபதியாக இருந்து பணிகளைச் செய்வதிலும் எந்தவிதமான கஷ்டமும் இல்லை. ஆகவே இவர்களை விலைக்கு வாங்க முடியாது. அப்படி விலைக்கு வாங்க எங்களிடம் சக்தியும் இல்லை என்பதையும் கூறிக்கொள்வதோடு, நிச்சயமாக இவர்கள் நடுநிலைமையோடு தங்கள் காரியத்தைச் செய்வார்கள் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்களும் தெரிந்து கொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். எஸ். எம். டீ. அவர்களுடைய வழக்கு நடந்தபோது, அவர் எதையெல்லாம் எப்படிப்பட்ட சூழ்நிலைகளைச் சந்திக்க வேண்டி யிருந்தது என்பதை விசாரணைக் கமிஷனிலே சொல்லியிருக்கி றார்கள், கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் கேள்விப் பட்டேன். ஆகவே, அதையெல்லாம் நினைத்துப் பார்க்கும் போது, அதற்கு அஞ்சாத ஒருவர், அந்த ஆபத்துக்குக் கவலைப் படாத ஒருவர். இந்தப் பதவியைப் பெரிதாக நினைத்துவிட முடியாது என்பதை நான் நன்கு உணர்ந்திருக்கிறேன். ஆகவே, எந்தக் காரணத்தை முன்னிட்டும், அப்படி ஒரு சந்தேகம் ஏற்படு மானால், வேறு ஒரு நல்லவரை, அனுபவம் உள்ளவரை நாங்கள் தேடி எடுத்து, நிச்சயமாக அவரிடம், அப்பேர்ப்பட்டவரிடம் ஒப்படைப்போம் என்பதையும் நான் இங்கே தெளிவாகச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சர்க்காரியா கமிஷனைப் பொறுத்தவரையில், நாங்கள் அதைப் பற்றி சட்ட நுணுக்கத் திறமையாளர்கள், சட்ட அமைச்சர் ஆகியவர்களை அழைத்து, அட்வகேட் ஜெனரலுடன் கலந்து பேசி, எதை எதையெல்லாம் எடுக்கலாம் என்பதைப் பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் எந்த வழக்குகள் எப்படி

எடுக்கப்படும் என்பதைப்பற்றி நாங்கள் தெரிவிப்போம். அதிலே சந்தேகமில்லை. ஆனால், இப்போதுகூட வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. அதிலேகூட, யாரைக் குறிப்பாக நினைக்கி றீர்களோ, அவர் சம்பந்தப்பட்டிருக்கிறார். அதில் விதிவிலக்கு அளிக்கப்படவில்லை. வழக்கு இருக்கிறது. ஆகவே, பணிவோடு சொல்கிறேன். யாருக்கும் லாபம் காட்டவோ, சலுகை காட்டவோ, அவருக்குப் பாதுகாப்புத் தருவதற்காகவோ, அதைப் பயன்படுத்தி இந்தக் கட்சியை வளர்க்கவோ, ஆட்சியில் இருக்கவோ, இன்னொரு கட்சியினுடைய சக்தியைக் குலைக்கவோ அந்த நிலைக்கு நாங்கள் நிச்சயமாகப் போகத் தயாராக இல்லை!

ஒருவர் வருவதும், போவதும் வேறு. அதைப் பயன்படுத்திக் கொள்வது என்பதும் வேறு. அந்த வகையில் பார்க்கும்போது, நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்வேன், இந்த எண்ணம் எனக்கில்லை, எங்கள் கட்சிக்கும் இல்லை, அது தேவையும் இல்லை. ஆகவே, சர்க்காரியா கமிஷனைப் பொறுத்தவரையில் நான் மீண்டும் சொல்கிறேன் — எல்லோரும் அவசரப்படுகிறார்கள், என்றால் அவசரப்பட முடியாது. மூன்று ஆண்டுகளுக்கு விசாரணை நடந்து அவர்கள் சொல்லியிருக்கும்போது, ஆதாரங்கள் இருக்குமானால் வழக்குகள் தொடர, மூன்று மாதங்கள், ஆறு மாதங்கள் எடுக்க வேண்டிய நிலைமை இருக்குமானால், அதற்காகக் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன்.

காவல் துறையைப் பற்றி இங்கே குற்றம் சுமத்தப்பட்டிருக் கிறது. ஏராளமான குற்றச்சாட்டுக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளைப் பற்றியெல்லாம் சொல்லும்போது, ஒன்றைச் சொல்ல வேண்டும். சிலவற்றைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். "பிரேமா கொலை வழக்கு நடந்து எவ்வளவு நாளாயிற்று. இன்னும் பைசல் ஆகவில்லையே" என்று சொல்லியிருக்கிறார்கள். அவைகளைப் பற்றி நான் சொல்வதற்கு முன், அண்மையில் யார் யாரைச் சந்தேகித்து, விசாரித்து, இதுவரையில் எவ்வளவு கைரேகைகளைப் பரிசோதித்துப் பார்த் திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்தால், ஏறத்தாழ 2,000 அல்லது 3,000 என்ற அளவிற்குக் கைரேகைகளைப் பரிசோதித்து இருக்கிறார்கள். இன்னும் அவர்கள் முயற்சி செய்து கொண்டி ருக்கிறார்கள். எந்த வகையிலும் குற்றத்தைக் கண்டுபிடிக்க வேண்டு மென்றே அவர்கள் அக்கறையோடு செயல்படுகிறார்கள். பிரேமா கொலை வழக்கு பற்றி தமக்குத் தெரியும் என்று இங்கே மன்ற உறுப்பினர் ஒருவர் அவர்கள் சொன்னார்கள். பிறகு அதைப் பற்றிச் சொல்லவில்லை என்றாலும், இப்போது அதைப்பற்றிப் பேச விரும்பவில்லை. முடிந்தால் அரசுக்கு உதவுங்கள். விரும்பினால் யார் என்று சொல்லுங்கள். நீங்கள் சொல்லவில்லை என்றாலும், சொன்னாலும் வெளியே போகாமல் பாதுகாக்க வேண்டியது எங்கள் பொறுப்பு என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். யார் மேல் சந்தேகம் என்று சொல்லுங்கள். அச்சடித்துக் கொடுத்தால் போதும்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 13

கையெழுத்துத் தேவையில்லை. அவருடைய பெயர் பொறித்த காகிதம் கூட அவசியமில்லை. வெறும் காகிதத்தில் எழுதிக் கொடுங்கள். அதைத்தான் நான் கேட்கிறேன். அந்த வகையில் உதவி செய்யுங்கள். தெரிந்தவர்கள் சும்மா இருக்க வேண்டாம். தெரிந்தவர்கள் சும்மாயிருந்தால், நியாயம் வழங்குவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். தெரிந்தவர்கள் இதை உணர வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

அதே நேரத்தில் அண்மையில், பெரிய ஆபத்துக்கள் பெண்களுக்கு ஏற்படுகின்றன என்று இங்கே சொல்லப்பட்டது. அது பற்றி பத்திரிகையிலே வெளிவந்தது; எல்லோருக்கும் தெரிந்த உண்மை. நான் மறைக்கத் தயாராக இல்லை. ஆனால், இதிலே எப்படிப்பட்டவர்கள் ஈடுபடுகிறார்கள் என்பதை இங்கே சொன்னால், மிகவும் வேதனையாக இருக்கும் என்பதால் வெளியிட விரும்பவில்லை. வழக்கு மன்றத்திலே வெளிவரும் போது, இந்த மாதிரி செயல்களில் ஈடுபடுகிறவர்கள் எப்படிப் பட்டவர்கள், யார் யார், எந்தக் கொள்கையைப் பின்பற்று கின்றவர்கள் என்பதையெல்லாம் இந்த நாடு அறியும். அதனை தான் இப்போது சொல்லக் கூடாது என்ற காரணத்தால் சொல்ல விரும்பவில்லை.

[மாலை 6-10]

ஆனால், ஒன்றை மட்டும் சொல்லுகிறேன். கற்பனையில் யாரும் எதையும் உருவாக்க முடியாது. அப்படி உருவாக்குகிற வழக்கு நிச்சயமாக நிற்காது. உண்மையான வழக்குகளே சில சமயம் தோற்றுப் போகும் என்ற நிலைமை இருக்கும்போது பொய்யான வழக்குகள் எத்தனை நாட்களுக்கு இருக்கும்? நிச்சய மாக இருக்காது என்பதில் சந்தேகம் இல்லை. ஆகவேதான் அந்த வகையில்தான் இதையும் சொல்லி வருகிறேன். இந்த மன்றத்தில் இந்த நேரத்தில் சுமுகமாக உட்கார்ந்து என்னுடைய பேச்சை மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டிருக்கி றார்கள். மாண்புமிகு சுப்பு அவர்களுக்கு ஐந்து மணி நேரம் ஆகிறதே என்று தோன்றுகிறது. மற்றவர்கள் நாம் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லுகிறாரே என்று அனுதாபத்தோடு எடுத்துக் கொள்ளும்போது இவர்களும் பொறுமையோடு இதை ஏற்றுக் கொள்வார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

காவல் துறையைப் பொறுத்தவரையில்— எதற்கெடுத்தாலும் அவர்கள் பயங்கரமாகத் தாக்குகிறார்கள் என்பது போன்று சொன்னார்கள். ஆனால், உண்மையில் நடப்பது என்ன? அமைதி காக்கப் போகிறவர்கள் அடிபட்டு ஓடி வருகிறார்கள் என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். போலீஸ் அதிகாரிகள் போகிறார்கள்—சாராயம் காய்ச்சுவதற்கு உதவியாக இருக்கும் மற்றவர்கள் அவர்களைத் தாக்குகிறார்கள். காவல் துறையினர் பயந்து ஓடுகிறார்கள். இந்த நிலைமை நாட்டில் இருக்க வேண்டுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

1978 செப்டம்பர் 13] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

பெண்களை வீட்டுக்குள் போய்த் தாக்குகிறார்கள், துன்புறுத்து கிறார்கள், அடிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு. இரண்டையும் வைத்துப் பரிசீலிக்கும்போது உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியாமல் இருந்தாலும் பரிசோதித்து, விசாரித்து, ஆதாரங்களைப் பெற்று நடவடிக்கை எடுப்பதில் இருந்து பின் வாங்கமாட்டேன் என்பதை இந்த மாமன்றம் ஏற்றுக்கொள்ளும் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

கற்பழிக்கும் சம்பவத்தில் யார் யார் எப்படிப்பட்டவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது வழக்கு மன்றத்தில் வர இருக்கிற காரணத்தால் இப்போது குறிப்பிட விரும்பவில்லை; குறிப்பிட வேண்டுமென்று வற்புறுத்தமாட்டார்கள் என்று கருதுகிறேன். அது வெளிவரும்போது இந்த நாடு அறிந்து கொள்ளும். எப்படிப் பட்டவர்கள் இப்படிப்பட்ட கொடுமைகளைச் செய்கிறார்கள் என்பதை இந்த நாடு அறிந்து கொள்ளும். எந்தெந்தக் கொள்கைகளுக்குச் சொந்தக்காரர்கள் என்று சொல்லுகிறவர்கள் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நாடு அறியும். அந்த நிலைமை வரும் வரையில் மாமன்ற உறுப்பினர்கள் தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாராயம் காய்ச்சுபவர்களில் மற்றக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தான் இருக்கிறார்கள், எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் இல்லையென்று எப்போதும் பேசியதில்லை. நான் பொதுக் கூட்டங்களிலேயே சொல்லியிருக்கிறேன். சாராயம் காய்ச்சியதாக இரண்டு பேர் கைது செய்யப்பட இருந்தால் அதிலே முதலிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன் கைது செய்யப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அப்படி நட வடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்புகூட நூற்றுக்கணக்கான பேர்களைக் கைது செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஒரு ரிடையர்டு கான்ஸ்டபிள் மகள் அதிலே சம்பந்தம் வைத்திருக்கிறார் என்றால் நிலைமை எப்படி இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லத் தேவை இல்லை. அது எப்படியோ வளர்ந்து விட்டிருக்கிறது. இதைத் தடுக்க முயற்சிப்பது என்பது மிகச் சாதாரண வேலை அல்ல. மக்கள் மத்தியில் பிரசாரம் செய்ய வேண்டும். மக்கள் மனதை மாற்றியமைக்க வேண்டும். வெறும் சட்டத்தினால் மட்டும் இதை நிறைவேற்றிவிட முடியாது.

அந்த வகையில் தஞ்சைப் பகுதியில் ஒரு விழா கொண்டாடிய போது அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க்கட்சியில் இருக்கிற தலைவர்கள், கட்சியைச் சேர்ந்தவர்கள்கூட அதிலே சேர்ந்து பணியாற்றி அன்றையதினம் பரிசு பெற்றார்கள். ஆனால் திடீரென்று அவர் ராஜினாமா செய்துவிட்டார். என்ன காரணம் என்று கேட்டால், மேலிடத்து உத்தரவு என்று சொல்லிவிட்டார். இதற்குப் பிறகு என்ன சொல்வது? ஆனால் கொள்கையில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் யாரோ அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்குகிறார்கள் என்றால்

இந்த நாட்டில் ஒன்று சேர்ந்து நல்லது செய்ய முயலுபவர்களைத் தடுப்பதிலிருந்து நிச்சயமாக நாட்டுக்கு அவர்கள் நன்மை செய்பவர்களாக இருக்க முடியுமா என்பதை எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த வகையில் காரியங்கள் நடைபெற நாம் நிச்சயமாக அவர்களை அனுமதிக்கக் கூடாது என்பதையும், எல்லோரும் ஒத்துழைத்தால்தான், அனைத்துக் கட்சியினரும் ஒத்துழைத்தால்தான் இதிலே வெற்றி பெற முடியும் என்பதை உணர்ந்திருக்கிறேன் என்பதையும் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்த வகையில் இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அண்டை மாநில முதலமைச்சர்களுக்கு நான் ஒரு வேண்டுகோள் விடுத்தேன். அந்த வேண்டுகோள் — 'தமிழக எல்லை ஓரத்தில் தங்களது மாநிலத்தை ஒட்டிய இடத்தில் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு நீங்கள் மதுவை அனுமதிக்கக் கூடாது, விற்கக் கூடாது, அதைத் தடுக்க வேண்டும்'', என்று நான் கேட்டுக் கொண்டேன்.

கேரள அரசு ஒத்துக் கொள்ளவில்லை, ஆந்திர அரசும் ஒத்துக் கொள்ளவில்லை. ஆனால் கர்நாடக அரசு, ''ஜூலை 1-ஆம் தேதி முதல் அதைத் தடுத்துவிட்டோம், 5 கிலோ மீட்டருக்குள் விற்க முடியாது; நாங்கள் கட்டளையிட்டு விட்டோம்'' என்று கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த மாமன்றத்தின் சார்பாக நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். கேரள அரசு அமைச்சரவையும், ஆந்திர அரசு அமைச்சரவையும் இரண்டு முதலமைச்சர்களும் நிச்சயமாக இதற்குப் பிறகாவது சிந்தித்துப் பார்த்து இதைப்போல் அமல்படுத்த அவர்கள் முன்வருவார்கள் என்று நம்புகிறேன். இதை அவர்கள் தெரிந்து பின்பற்று வார்களானால் சாராயத்தைக் கொண்டுவருவது. கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுவது எல்லாம் நிச்சயமாக எளிதில் தடுக்கப்பட முடியும்.

இங்கே ஸ்பிரிட் வேண்டுமென்று கேட்கிறார்கள், வார்னிஷ் வேண்டுமென்று கேட்கிறார்கள், லித்தோ பிரஸுக்கு, எனக்கிடமே கொண்டுவந்தார்கள், 8 லட்சம் லிட்டர் தேவைப்படுகிறது என்று கேட்டார்கள். அவைகளையெல்லாம் நாங்கள் கணக்குப் போட்டுப் பார்த்து இனிமேல் நேரடியாக லைசென்ஸ் கொடுப்பது இல்லை என்றும், கூட்டுறவு முறையில் குறிப்பிட்ட சங்கங்களை அமைத்து, அரசினுடைய அங்கீகாரம் பெற்று, கடைகளை வைக்கின்ற வியாபாரிகளுக்கு மட்டும் கொடுப்பது என்றும், எல்லோருக்கும் கொடுப்பதில்லை என்றும் முடிவு எடுத்து இருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படி நாங்கள் நடவடிக்கை எடுக்கும்பொழுது இங்கே தவறு நம்மையும் மீறி தவறுகள் ஏற்படுகின்றன என்றால் தவறு என்பதற்கும், தப்பு என்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது என்று பெரியவர்கள் சொல்கிறார்கள், ஒரு தடவை

செய்தால் தவறு, மறுதடவை செய்தால் ஏதோ பழக்கம் என்று சொல்லலாம், மூன்றாவது தடவை செய்தால் ஏதோ கடைசி என்று சொல்லலாம், ஆனால் நான்காவது தடவை செய்தால் தண்டனை கொடுக்காமல் இருக்க முடியாது, அப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற ஆசை எனக்கு உண்டு. குறைந்தது முதல் தண்டனை 6 மாதம் கடுங்காவல் தண்டனை என்ற வகையில் அந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்பது என்னுடைய ஆசை, அதை நிறைவேற்றித்தர நீங்கள் ஒத்துழைப்பீர்கள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

கொள்கை என்பதிலே மதுவை அகற்றுவதுதான் நல்லது என்பதில் நம்மில் யாருக்கும் வேறுபாடு இல்லை; ஆனால் அதிலே ஏற்படுகிற நஷ்டங்களிலும், தொல்லைகளிலும் எப்படிக் கொண்டு வருவது என்பதிலே நம்முள் கருத்துவேறுபாடு இருக்கலாமே தவிர, அதனால் நன்மை உண்டு என்பதிலே கருத்து வேறுபாடு இருக்காது, அவ்வளவு தொல்லைகளையும், நஷ்டங்களையும் தாங்கிக்கொண்டு இந்த அரசும் இந்த மாமன்றமும் அதற்காகச் செயல்படும்பொழுது மக்கள் மத்தியிலே நிச்சயமாகச் சாதகமான சூழ்நிலை கிடைக்கும்; வளர்ந்து வரும் என்று நான் நம்புகிறேன்.

காவல் துறையிலே எத்தனை பேர்களைச் சேர்க்க வேண்டுமென்று நாங்கள் விரும்பிய நேரத்திலே எங்களுடைய கட்சிக்காரர்களைச் சேர்ப்பதற்காக அப்படி 10 ஆயிரம் பேர்களைச் சொல்லிவிட்டேன் என்று மக்கள் மத்தியிலே பேசியதை நான் மறந்துவிடவில்லை. உண்மையில் அப்படிப்பட்ட எண்ணத்தில் நான் சொல்லவில்லை. மதுவிலக்கை எப்படிச் சரிவர நிறைவேற்றுவது, மதுவை எப்படித் தடைசெய்வது என்ற நோக்கத்திலே முன்னாலே தவறு செய்கிறவர்கள் யாராவது இருந்தால் அதற்குப் பின்னாலே வருகிறவர்கள் நல்ல குணத்தோடு அப்படிப்பட்ட பழக்கவழக்கம் இல்லாதவர்கள் வந்து அந்த இடத்தை அடைய வேண்டுமென்ற எண்ணத்தில் தான் சொன்னேன். அதற்காக அவசரத்தில் தேர்ந்தெடுக்க முடியவில்லை. சில நேரங்களிலே—நாம் குலத்தொழில் என்பதையே ஆதரிப்பவர்கள் இல்லை என்ற நிலையில்—போலீஸார் மகன் போலீசில்தான் வரவேண்டுமென்ற நிலையில், சில நேரங்களிலே பழக்கவழக்கம் ஏற்பட்டுவிட்ட காரணத்தாலே, வீட்டிலே இருக்கிற மூத்த மகன் வேலையின்றி இருந்தால், அதற்குப் பொருத்தமான நிலையில் இருந்தால், சம்பாதிக்கும் ஆட்கள் வேறு இல்லையென்றால் அவருக்குக் கொடுக்கலாம் என்ற நிலையில் நாங்கள் முடிவு எடுத்துச் செயல்பட வேண்டியிருக்கிறது.

[மாலை 6-20]

இந்த நிலைமையில் பேரணாம்பட்டு சம்பவத்தைப்பற்றி இங்கே குறிப்பிட்டாக வேண்டியிருக்கிறது. 25-8-1978 அன்று மாலையில் சின்ன மசூதி, பெரிய மசூதி தெரு வழியாகப் போலீஸ் பந்தோபஸ்துடன் காவடி ஊர்வலம் சென்ற பொழுது

ஊர்வலத்தினர் மீது **** கல்லெறிந்ததாகவும் * என்று நான் படிக்கிறேன். தயவு செய்து பத்திரிகைகளில் * என்று போட வேண்டாம். எச்சில் துப்பியதாகவும் தெரிகிறது. இதன் விளைவாக இருதரப்பினருக்கும் மோதல் ஏற்பட்டது, மேலும் சட்டவிரோதமாக 3,000 பேர்களடங்கிய கும்பலைக் கலைக்க, போலீசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடித்து, தடியடியும் உபயோகித்தனர். இந்தச் சட்டவிரோதக் கும்பல் ரஜிதாபாத்திலுள்ள குடிசைகளுக்குத் தீ வைக்க முற்பட்டனர். ஒரு முஸ்லீம் பெண்மணி தீக்காயமடைந்து குடியாத்தம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, 26-8-78 காலை மரணமடைந்தார். ஒரு சப்-இன்ஸ்பெக்டரும், ஒரு கான்ஸ்டபிளும் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். 144 தடையுத்தரவு போடப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல்துறை கண்காணிப்பாளரும் பேரணம்பட்டில் முகாமிட்டு அமைதியை நிலைநாட்டினர்.

காவல்துறைத் தலைவரும் 26-ந்தேதி பேரணம்பட்டிற்கு விரைந்து, உள்ளூர் முஸ்லீம் தலைவர்களையும், இந்து தலைவர்களையும் கலந்து ஆலோசித்து அமைதி காக்க வேண்டுகோள் விடுத்து உள்ளார்.

மேலும் 25-8-78 அன்று தாசில்தார் ஒவ்வொரு பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கும் ரூ. 100/ கொடுப்பதற்காகச் சென்றபொழுது, அவர்கள் தங்கள் சொந்தக்காரர்களிடம் சென்று தங்கிவிட்டதாகத் தெரிகிறது. தாசில்தார் மேலும் அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டிச் சென்றபொழுது அவர்கள் அந்த ரூ. 100-ஐ பெற விரும்பாமல் மறுப்பதாகத் தெரிகிறது. தற்போது நிலைமை அமைதியாகவே இருக்கிறது. என்ற செய்தி வந்திருக்கிறது.

இந்த நிலையில் அரசு அவ்வப்பொழுது தன்னாலான கடமைகளைச் செய்து கொண்டும், காவல்துறை தன்னாலான நிலைமைகளிலே செயல்பட்டுக் கொண்டும் வருகிறது. இவைகளை நான் இங்கே குறிப்பிடும்பொழுது காவல்துறையினருக்கும் இந்த மாமன்றம் பாதுகாப்புத்தர வேண்டுமென்று நான் சட்டப்பேரவைத் தலைவரவர்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். தவறு செய்யும் அதிகாரிகளை மன்னிக்க வேண்டுமென்று கேட்க மாட்டேன். அவர்கள் செய்த குற்றங்களுக்கேற்ப தண்டனை பெற்றுக வேண்டும். ஆனால் குற்றமற்றவர்களையெல்லாம்கூட, தவறு செய்பவர்களோடு ஒரே தராசில் நிறுத்தி—மன்னிக்க வேண்டும்—ஒரே நேரமாகப் பாவித்து, ஒரே விதமாகக் கற்பனை செய்து கொண்டு இவர்களை விமர்சனம் செய்ய முன்வந்தால் அதன் விளைவு எவ்வளவு மோசமாகப் போய்விடும் என்பதை

* *மாண்புமிகு முதல்வர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பேரவைத் தலைவரால் நீக்கப் பெற்றது.

எண்ணிப் பார்க்க வேண்டும். நியாயமாக நடப்பவர்களுக்கும் பாதுகாப்பு இல்லாமற்போனால் அவர்கள் மக்களை எப்படிப் பாதுகாக்க முடியும் என்பதை நாம் உணர்வோம் என்பதில் சந்தேகமில்லை.

இதே நேரத்தில், முதலாளிகள், பெரும் முதலாளிகள், சில ஆலை முதலாளிகள், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் ஏகபோக முதலாளிகள் என்ற பெயருக்குச் சொந்தக்காரர்கள் தொழிலாளர்களுடைய தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கும் சிலரை நம்பி, அவர்களைத் தங்கள் கையாட்களாக வைத்துக் கொண்டு, சில அவலமான நிலைகளையெல்லாம் ஏற்படுத்துகிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது என்பதை வருத்தத்தோடு சொல்வேன். இங்கே தொழிலாளர் தலைவர்களாக இருப்பவர்கள் பலர் இருப்பார்கள், தொழிலாளர்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் பலர் இருப்பார்கள், நீங்கள் அந்தத் தொழிலாளர்களுக்கு எச்சரிக்கை செய்யவேண்டும். அப்படிப்பட்டவர்களை ஏற்றுக்கொள்ளாதீர்கள் என்று இந்த மாமன்றத்தில் இருக்கின்ற ஒவ்வொருவரும், யாராவது அப்படிக் குற்றம் செய்பவர்கள், முதலாளிகளுக்குச் சொந்தக்காரர்களாக இருந்து, ஆனால் தொழிலாளர்களுக்குத் தலைவர்களாக இருந்து எதிரிச் சங்கத்தை அழிக்க முதலாளிகளைப் பயன்படுத்திக்கொண்டு, யாராவது கைக்கூலிகள் போலச் செயல்பட்டால் தயவு செய்து இந்த மாமன்றத்திலே இருக்கின்ற அத்தனை தொழிலாளர் தலைவர்களும், பொதுவாக அத்தனை மாமன்ற உறுப்பினர்களும் அவர்களுக்கு நல்ல உணர்வை ஏற்படுத்த முன்வரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால்....

<u>திரு. க. சுப்பு:</u> தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் பேசும்பொழுது சொல்லியிருக்கிறார்கள், தொழிலாளர்கள் தங்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். சில இடங்களில் சில தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களுக்காகப் போராடுவதாக அறிவிக்கிறார்கள். ஆனால் முதலாளிகளிடம் பணம்வாங்கிக்கொண்டு சங்கத்தையும் தொழிலாளர்களையும் அடகு வைக்கிறார்கள். ஏமாற்றுகிறார்கள். காலம் அவர்களின் பெயர்களை வெளிப்படுத்த சம்மதம் அளிக்கும்போது அவர்கள் யார் என்பதை நான் தெரிவிப்பேன், அது எனது கடமையாகும் என்று நன்றாகச் சொல்லி இருக்கிறார்கள்.

அப்படிப்பட்டவர்களின் விவரங்களைச் சொல்ல வேண்டும். அப்படித் தெரிந்திருந்தால் சொல்லாமல் இருப்பது குற்றம் என்று அவர்களே சொல்லி இருக்கிறார்கள், இப்பொழுது அவர்கள் சொல்லாமல் இருப்பது குற்றம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் ஒழுக்க நெறிக்கு ஏற்ப நீங்கள் அந்த விவரங்களையெல்லாம் சட்டமன்றத்தில் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, எதைச் சொல்ல வேண்டும், எதைச் சொல்லக் கூடாது, எப்படிச் சொல்வது, எந்த நேரத்தில் சொல்வது என்பது எனக்கு மிக மிக நன்றாகத் தெரியும். அதைப் பற்றி மாண்புமிகு சுப்பு அவர்களுக்குத் தெரியாது. கலைஞர் அவர்களைக் கேட்டால் தெரியும். வேறு வகையில் எனக்கு கருத்து வேறுபாடு இருந்தாலும் நான் எப்படிப்பட்டவன் என்பது அவருக்கு நிச்சயமாகத் தெரியும் என்பதால் உங்கள் தலைவரிடத்தில் நான் ஒப்படைத்து விடுகிறேன்.

நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன்; நான் குறிப்பிட்டுச் சொல்லாவிட்டாலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு தொழிற்சங்கத்தினுடைய கொடியைப் பறக்க விடுவதற்கு எந்த இடத்திலாவது அனுமதி இல்லையென்ற நிலைமை நாட்டிலே தோன்றுகின்ற சூழ்நிலை இருக்குமானால், 'கேட்மீட்டிங்' என்று சொல்கிறார்களே, அதை நடத்த முடியாது என்ற நிலைமை நாட்டிலே இருக்குமானால், அதற்கும் தொழிற் சங்கமோ, மற்றவர்களோ, அந்த முதலாளிகளோ ஒத்துழைக்கிறார்கள் என்றால் அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை மாண்புமிகு சுப்பு அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன். அதற்கு மேல் அவர் வற்புறுத்தக் கூடாது. அவர்களுக்குத் தெரியும். என் வாயாலே கொண்டு வர வேண்டுமென்று விரும்புகிறார்கள். அவர் அங்கே போய் பேசிவிட்டு வந்திருக்கிறார்; அவர் அங்கே போய் கொஞ்ச நாள் இருந்துவிட்டு வந்திருக்கிறார். ஆகவே, அவர்களுக்குத் தெரியும்.

பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிடக் கூடாதே என்பதற்காக, இராணுவத்திற்குத் தேவையான பொருள் நிச்சயமாக உருவாக்கப்பட வேண்டும்; அது அங்கே உற்பத்தியாக வேண்டுமென்பதற்காக இந்தத் தமிழக அரசு பொறுத்துக் கொண்டிருக்கிறதே தவிர வேறு எந்தக் காரணமும் இல்லையென்பதை இங்கே நான் தெளிவாக, தலைவர் மூலமாக, மாண்புமிகு சுப்பு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காலம் என்ற மணிக்கணக்கை நான் கூறவில்லை; காலம் என்பதை புரோகித மனப்பான்மையுடன் நான் கூறவில்லை— இந்தக் காலத்தைப் பற்றி நான் கூறும்போது, இராணுவத் தளவாடங்கள் உற்பத்தி செய்வது தடுக்கப்பட முடியாது என்கிற நிலைமை மத்திய அரசுக்கு என்றைக்கு வருகிறதோ, இந்தப் பாதுகாப்பு உணர்ச்சி அவர்களுக்கு ஏற்படுகிறபொழுது, அல்லது அவர்கள் தலையிட்டு அந்தத் தொழிற்சாலையை எடுத்துக்கொள்ளும்போது நான் அதை நிரூபிக்க முடியும், சொல்ல முடியும். எனவே இப்போதைக்கு அதை நான் ஜீரணித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன் என்பதை ஒரு முதலமைச்சராக இருக்கிறேன் என்பதால் சொல்கிறேன். இந்திய துணைக் கண்டத்து ஒட்டு மொத்த நன்மையை முன்னிட்டு நான் அமைதியாக அடக்கிக் கொள்கிறேன், அவ்வளவுதான்.

இதைச் சொல்லும்போது தொழிலாளர்களைப் பற்றி நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். அவர்கள் தங்களுடைய குறைகளைப் பற்றி சொல்கின்ற நேரத்தில், டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிற நிலைமையைப் பற்றி நாங்கள் அக்கறை காட்டவில்லையென்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அக்கறை காட்டவில்லையென்பது தவறு. எவ்வளவு அக்கறையோடு நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். அதைப் பற்றி இருவரையும் அழைத்துப் பேசினோம் என்பதையெல்லாம் யாரும் மறந்து விடமுடியாது. ஆனால் இருவரும் ஆரம்பத்தில் ஒரே கருத்தில் இருப்பது போல் ஒருங்கிணைந்து, கையெழுத்துப் போடுகிற நிலைமை வந்தபொழுது இருவரும் பின் வாங்கி இருக்கிறார்கள். இந்த அளவு தருவோம் என்கிற உத்திரவாதத்தை தொழிற்சாலை அதிபர்கள் தெரிவிக்க வேண்டுமென்பது தொழிலாளர்களது வாதம். வழக்குகளைப் போட்டு தொழிலாளர்களை இந்த அளவு துன்பத்துக்குள்ளாக்கியதால், இந்த அளவு தரப்படவேண்டும், அது தொழிலாளர்களுடைய தேவை, அது தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அதோடு 7, 8, மாதங்கள் வேலை இழந்திருக்கிறார்கள்; தொழிலாளர்களுக்கு அதற்கு ஏதாவது தந்தாக வேண்டுமென்பது ஒரு பிரச்சினை.

இன்னொரு பிரச்சினை 'போனஸ் தந்து விடுகிறோம்' என்று சொல்கிறார்கள். ஆனால், சொல்லும்போது, அந்த அதிபர் கேட்கிறார், 'மொத்த சம்பளத்தைக் கேட்பதற்கு நாங்கள் தயாராக இல்லை, கேட்கமாட்டோம். 7 மாதம், 8 மாதம் வேலையில்லாமல் இருந்ததற்கு நாங்கள் ஏதும் கேட்கமாட்டோம்' என்று தொழிலாளர்கள் எழுதித் தர வேண்டுமென்று கேட்கிறார்கள். அதைத் தமிழக அரசு ஒத்துக் கொள்ளவில்லை. அந்த உரிமையைத் தொழிலாளர்கள் விட்டுக் கொடுக்க முடியாது. ஆகவே, தொழிலாளர்கள் இதைக் கேட்பதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் அதிபர்கள் அதை ஒத்துக்கொள்ள முடியாது என்று மறுக்கிற நேரத்தில், அந்த நேரத்தில், இதை எப்படித் தீர்த்து வைக்க முடியுமோ, சட்டம் எப்படி இடங்கொடுக்கமோ அந்த வகையில் நடவடிக்கை எடுப்போம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைப்போல் பல பிரச்சினைகளை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இங்கே பேசியவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களது ஒட்டுமொத்தமான கருத்துக்களுக்கும் நான் இன்னும் பதில் சொல்லவில்லையென்றாலும் படித்துக் காட்டிவிட்டு பின்பு பேசும் பொழுது கூட எவ்வளவு நேரம் ஆகிறது என்பதை நினைக்கும்போது நான் என்னுடைய பேச்சைக் குறைத்துக் கொள்ள வேண்டிய அவசியத்திற்கு ஆளாகி இருக்கிறேன்.

[மாலை 6-30]

இன்னும் இங்கே நான் பேசவேண்டும் என்று நினைக்கின்றபோது இந்து அறநிலையத்தைப் பற்றி எல்லாம் பேச வேண்டியிருக்கிறது. வக்ப் - போர்டின் சில நிலைமைகளைப் பற்றி இங்கே

சொல்லியாக வேண்டும், நான் ஏதோ வீணாக முன்னால் இருந்தவர்கள் மேல் குறை சாட்டுகிறேன், குற்றம் சாட்டுகிறேன், என்று சொல்வதற்கு இடமேற்படாதிருக்க நான் ஒரு சிலவற்றை மட்டும், ஒன்றிரண்டை மட்டும் இங்கே படித்துக் காட்ட வேண்டியவனாக இருக்கிறேன்.

[தி. பி. எச். பாண்டியன் தலைமை]

திருநெல்வேலி மாவட்டம் கடையநல்லூரில் காதர் மொய்தீன் கொத்துவாபள்ளியில் 30-11-77-ல் ரஹ்மான் என்பவருடைய, வயதான ரசூலம்மாள் என்ற பெண் குழந்தை இறந்துவிட்டது. வருவாய்த்துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் சொல்லியும், வக்ப் வாரியம் உத்தரவும் புறக்கணிக்கப்பட்டு குழந்தையை காபர்ஸ்தானில் நிர்வாகத்தினர் எடுத்து பொது மையவாடியில் அடக்கம் செய்ய மறுத்து விட்டனர். 12 மணி நேரம் தாமதத்திற்குப் பிறகு மேற்படி பெண் குழந்தை வீட்டிலேயே அடக்கம் செய்யப்பட்டது. இது அங்கே நடந்திருக்கிற நியாயம். அதைப் பற்றி வக்ப் வாரியம் கேட்டிருக்க வேண்டும். இனிமேல் அதைக் கேட்க இருக்கிறார்கள், நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதற்காக ஒன்றிரண்டு மட்டும் படித்துக் காண்பிக்கிறேன்.

9-12-77 ஆம் நாள் மாலை 4 மணி அளவில் மேற்படி ஜமாத்தைச் சேர்ந்த பக்கீர்மொகிதின் என்பவருடைய மகள் இறந்து விட்டார். மேற்படி பக்கீர் மொகிதீன் மறு நாள் 10-12-1977-ல், திருநெல்வேலி சப்கோர்ட்டில் ஜனாசை அடக்கம் செய்ய கோர்ட்டு உத்தரவு வாங்கித் தந்தார். இதனால் பெரும் கலவரம் ஏற்பட்டது. 48 மணி நேரம் தாமதத்திற்குப் பின்னர் ஜனாசா அடக்கம் செய்யப்பட்டது. இப்படிப்பட்ட நிலைமைகள் தொடர்ந்திருந்தும் பழைய வக்ப் வாரியம் மேற்படி நிர்வாகத்தின் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அடுத்து, எஸ்.சி.எம். ஷேக் முகமது என்பவர் திருநெல்வேலி லோக்கல் பண்டுக்குச் சொந்தமான மரங்களை வெட்டி விற்று விட்டார்கள். அந்த மரங்கள் எப்போது வெட்டப்பட்டது, என்ன விலைக்கு விற்கப்பட்டது என்கிற விவரங்களுக்கு எந்தவிதமான அறிக்கையும் அந்த வக்ப் வாரியத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. கடந்த 22-8-78 தேதியே விற்று விட்டதாகவும் பணத்தை அவரே தன் பொறுப்பில் வைத்து கொண்டு விட்டதாகவும், தெரியவந்தது. அது வக்ப் வாரியத்தில் செலுத்தப்படவில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்னமும் படிக்கலாம். நேரம் இல்லை. இங்கே மாண்புமிகு லத்தீப் அவர்கள் இதைப் படித்துப் பார்க்கலாம். அவர்கள் என்ன சொல்ல முடியுமோ அத்தனையும் அவர்கள் நண்பர்களுக்கு அதைப் பற்றிச் சொல்லலாம்.

திரு. எம். ஏ. லத்தீப்: ** ** ** ** **

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: சட்டப்பேரவைத் தலைவரவர்களே, இங்கே பல சம்பவங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்கு பதில் சொல்ல வேண்டும் என்று இருந்தேன். ஆனால் நேரம் அதிகம் ஆகிவிட்ட காரணத்தால், மாண்புமிகு சுப்பு அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன், அடுத்தக் கூட்டத்தொடரில் வாய்ப்பு தருவீர்களானால், நான் இனி இந்த அவையில் தினந்தோறும் இருப்பது என்ற முடிவிற்கு வந்து இருக்கிறேன் என்பதையும் சொல்லி நான் இங்கே இல்லை என்ற குறை யாருக்கும் இல்லாமல் பார்த்துக் கொள்வேன் என்பதையும் சொல்லி, இந்த ஆளுநர் உரையை ஏற்றுக்கொள்ளுமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[மாலை 6.40]

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: * * * * *

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, இந்த பேரணம்பட்டு பிரச்சனைக்கு தாங்களே நேரடியாக விசாரணை செய்வது ஒருவகையில் மேலும் சுமூகமான நிலையை ஏற்படுத்தும். இல்லாவிட்டால் பல தவறான காரியங்கள் ஏற்படுமோ என்ற அச்சம் இருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்களுடைய கோரிக்கை அல்ல; வேண்டுகோள் அல்ல; அந்தக் கட்டளையை நான் ஏற்றுக் கொள்கிறேன். நானே அந்த விசாரணையை மேற்கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, இந்த ஆளுநர் உரையில் இன்னும் பல கருத்துக்களை, எவ்வளவோ செய்திகளை மக்களுக்குச் சொல்வதாக இருந்தேன். ஆனால் சூழ்நிலை சரியில்லை. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே இருக்கும்போது சில விவரங்களைப் பேச வேண்டுமென்று நினைத்தேன். அவர்கள் அவசரமாக திரு. மண விழாவிற்குச் சென்றிருக்கிறார்கள். இன்னொருமுறை வாய்ப்பு கிடைக்கும்போது அவைகளைப்பற்றி தெளிவாகச் சொல்லி, அவர்களுடைய கருத்துக்களையும் தெரிந்துகொள்ள வாய்ப்புக் கிடைக்கும் என்று சொல்லி, இந்த ஆளுநர் உரையை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேசும்போது * * * என்று பேசியதை குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்திரவிடுகிறேன். அதைப்போன்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பேசிய * * பகுதியை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

* மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நானும் பரிமாறிக்கொண்ட கருத்துக்களை, அதாவது ''நானே பேரணும்பட்டு பிரச்சனைக்கு விசாரணை நடத்துகிறேன்'' என்று கூறியதை மட்டும் வைத்துக் கொண்டு மற்றவைகளை எல்லாம் நீக்கிவிடுவது நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். பொது நன்மையைக் கருதி, இதை ஒரு வேண்டுகோளாக வைக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நான் பேசியதிலே ** ** என்று குறிப்பிட்டதை பத்திரிகையிலே போட வேண்டாம் என்று சொல்லியிருப்பதால் இந்தப் பிரச்சனை எழவில்லை. ஆதைப் பற்றி சந்தேகம் வேண்டாம். ** ** என்றுதான் பத்திரிகையிலே போடுவார்கள்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: * * * * (சிரிப்பு)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் குறிப்பிட்டதையும் எடுத்துவிடுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. மேலும் நேரம் இல்லாததால் இந்த ஆளுநர் உரையை ஏற்றுக் கொள்ளும்படி மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, 5-8-78-ல் ஏற்பட்ட தீ விபத்தில் 14 பேர் இறந்து விட்டார்கள். அதைப்பற்றி இங்கே ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. அதைப்பற்றி......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேற்கொண்டு விவாதத்திற்கு இடமில்லை; நீங்கள் உட்காருங்கள்.

திரு. தீ. சு. நல்லதம்பி: தலைவரவர்களே, இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கின்ற ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள எனக்கு அழைப்பு வந்திருக்கிறது. அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர் நிராகரிக்கப்பட்டு, வேறு எங்கோ உள்ளவரைப்போட்டு அந்த நிகழ்ச்சி நடக்கிறது. இது எந்த அளவுக்கு நியாயம் என்பதை முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆஃப் ஆர்டரா?

திரு. தீ, சு. நல்லதம்பி: பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. விளக்கத்திற்காக கேட்கிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லத்தீப் அவர்கள் பேசியதும் அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த பதிலுரையில் குறிப்பிட்ட அந்தப் பகுதியை மட்டும் நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

இத்துடன் விவாதம் முடிவுற்றது.

திரு. சோ. அழகர்சாமி அவர்களுடைய திருத்தம் சபையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

''1978 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 30 ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்''

என்ற திரு. மணிமாறன் அவர்கள் முன்மொழிந்த நன்றி கூறும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 6-46 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

92. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு அலுவல் முறையிலல்லாத உறுப்பினராக, ஓய்வு பெற்ற தலைமைப் பொறியியலாளர் திரு. எஸ். எச். மகாதேவன் அவர்களை நியமிப்பது குறித்த வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின், 13–7–1978 ஆம் தேதியிடப்பெற்ற, 1080 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல்—மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] .

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*51. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 35/1978).

*52. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1978).

*53. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1978).

*54. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1978).

†55. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் மூன்றுவது (ஆறுவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை.

†56. 1972-73 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகளின் மீதும், இந்திய தணிக்கைத் துறை தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கையின் மீதுமான பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை.

†57. உடுக்குறியிடாத வினாப்பட்டியல் (351 முதல் 400 வரை).

இணைப்பு I

[502-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 185-க்கான விடையைக் காண்க].

விவரமான அறிக்கை.

1961-ம் ஆண்டு இரவீந்திரநாத் தாகூர் நூற்றாண்டு விழாவினை ஒட்டி இந்திய அரசு மாநிலங்களில் இரவீந்திரர் கலை அரங்கம் கட்ட வேண்டுமென்று ஒரு திட்டம் தயாரித்து அதன்படி அக்கலை அரங்கத்தை கட்டி முடிப்பதற்கு ஒவ்வொரு மாநிலத்திற்கும் இந்திய அரசின் பங்காக ரூ. 2.75 லட்சம் மானியம் அளிக்க முன் வந்தது. இத்திட்டத்தை ஏற்று இவ்வரசு சென்னையில் இரவீந்திரர் கலை அரங்கு கட்டி முடிக்க சென்னை நுங்கம்பாக்கம் கிரீம்ஸ் ரோட்டில் சுமார் 64 கிரவுண்டு நிலம் ஒதுக்கீடு செய்தது.

* 12-9-1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றது.

† 12-9-1978 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றது.

மேலும் அரங்கத்தைக் கட்டுவதற்கான வரைபடங்கள், மதிப்பீடுகளுக்கு ஒப்புதலளித்து அதனடிப்படையில் அரங்கத்திற்கான அஸ்திவாரமும் சில கட்டிடப் பகுதிகளும் ரூ. 3.75 லட்சத்திற்கு கட்டப்பட்டது. 1962-ம் ஆண்டு சீன ஆக்கிரமிப்பாலும் பின்னர் 1964-65-ல் பாகிஸ்தான் படையெடுப்பாலும் நாட்டில் அவசரநிலை பிரகடனமானபோது இக்கட்டிட வேலையை அரசு நிறுத்த வேண்டியதாயிற்று. மீண்டும் 1971-ல் கட்டிட வேலைகளைப் புதிதாகத் தொடங்க எண்ணியபோது விலைவாசி ஏற்றத்தின் காரணமாக இவ்வரங்கை கட்டி முடிப்பதற்கு அதிகச் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டது. இதற்கிடையில் பாரதியார் நினைவுச் சங்கத்தினர் பாரதி நினைவு அரங்கம் கட்டுவதற்கு தேவையான நிலத்தை ஒதுக்கித்தர வேண்டுமென்று அரசை வேண்டினர். பாரதி நினைவு அரங்கம் கட்டுவதற்குப் புதிதாக நிலம் ஒதுக்கீடு செய்வதற்குப் பதிலாக, இரவீந்திரர் கலை அரங்கு கட்டும் இடத்தையும், கட்டிடப் பகுதிகளையும் பாரதி நினைவு சங்கத்திற்கு அளித்து 'இரவீந்திரர்—பாரதி' கலை அரங்கம் கட்டி முடிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம் என இவ்வரசு முடிவெடுத்தது. இதற்கு இணங்க இரவீந்திரர் அரங்கைக் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட 64 கிரவுண்டு நிலத்தையும் அதில் கட்டி முடிக்கப்படாமலுள்ள கட்டிடத்தையும் பாரதியார் நினைவு சங்கத்திற்கு அளித்து, அதனைக் கட்டி முடித்தபின் இரவீந்தரர் கூடமென்றும், பாரதியார் அரங்கு என்றும்—அழைக்க வேண்டுமென்று 31-10-74 நாளிட்ட கல்வித்துறை ஆணை (நிலை) 1869-ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. பாரதியார் சங்கம் இன்னும் கட்டிட வேலையை ஆரம்பிக்கவில்லை. தற்பொழுது தமிழ்நாடு இயல், இசை, நாடகமன்றம் மேற்சொன்ன இடத்தில் பாரதியார் நினைவுச் சங்கத்துடன் சேர்ந்து கலை அரங்கை கட்டி முடித்து அதனை தன் பொறுப்பில் வைத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுள்ளது. இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

இணைப்பு II

[518-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 197-க்கான விடையைக் காண்க]

28-6-1977-நாளிட்ட அரசாணை எண் 1520-ன் படியும், அதற்குப் பின் திருத்தப்பட்ட ஆணையின் படியும் அரசு மருத்துவமனைகளிலும் உருக்கி நோய் மருத்துவமனைகளிலும் (அரசு அல்லது அரசு உதவி மானியம் பெறும் மருத்துவமனைகள் உட்பட) அரசு அலுவலர்கள், மற்றும் ரூ. 300-க்கு குறைவாக ஊதியம் பெறும் உள்ளாட்சித்துறை அலுவலர்கள் சிறப்பு

வகுப்புகளில் உள்ளுறை நோயாளி சிகிச்சை பெற ஊதிய வரம்பு திருத்தி அமைக்கப்பட்டன: அந்த சிறப்பு வகுப்புகளின் வசூலிக்கப் படவேண்டிய கட்டணமும் திருத்தியமைக்கப்பட்டன.

திருத்தியமைக்கப்பட்ட ஊதிய வரம்புகள்,

மாதம் ஒன்றுக்கு ரூ. 299/-ம் அதற்குக் கீழும் மொத்த வருமானம் உள்ளவர்களுக்கு.	பொதுப்பிரிவு (இலவசம்).
மாதம் ஒன்றுக்கு வருமானம் ரூ. 300-லிருந்து ரூ. 599- வரை உள்ளவர்களுக்கு.	''சி'' வகுப்பு
மாதம் ஒன்றுக்கு வருமானம் ரூ. 600- லிருந்து ரூ. 999- வரை உள்ளவர்களுக்கு	''பி'' வகுப்பு
மாதம் ஒன்றுக்கு வருமானம் ரூ. 1000-ம் அதற்கு மேலும் உள்ளவர்களுக்கு.	''ஏ'' வகுப்பு

சிறப்பு வகுப்புகளில் உள்ளுறை மருத்துவ சிகிச்சைக்காக தொகை.	நோயாளிகளிடமிருந்து வசூலிக்கப்படவேண்டிய
1. கல்லூரி இணைந்த மருத்துவமனை மற்றும் காசநோய் மருத்துவமனைகள். (1)	திருத்தப்பட்ட கட்டணம். (2)
''ஏ' வகுப்பு ஒற்றைப் படுக்கை	நாளொன்றுக்கு ரூ. 30 குளிர்ச்சாதன வசதிக் கட்டணமாக ரூ. 10.
''ஏ'' வகுப்பு இரண்டு படுக்கைகள்	நாளொன்றுக்கு தலா படுக்கை ஒன்றுக்கு ரூ. 25.
''ஏ'' வகுப்பு மூன்று படுக்கை அல்லது நான்கு படுக்கை	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு. ரூ. 23
''பி'' வகுப்பு ஒற்றைப்படுக்கை	நாளொன்றுக்கு ரூ. 2
''பி'' வகுப்பு இரண்டு படுக்கைகள்	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு ரூ. 19
''சி'' வகுப்பு	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு ரூ. 7.50.
''சி'' வகுப்பு (காசநோய் மருத்துவ மனைகள்), தாம்பரம், ஓட்டேரி, நாகர்கோயில்	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு ரூ. 7.00.

2. மாவட்ட தலைமை மருத்துவ மனைகள். (1)	திருத்தப்பட்ட கட்டணம். (2)
''ஏ'' வகுப்பு அரசு லாலி மருத்துவமனை கூனூர் தலைமை மருத்துவமனை, உதகமண்டலம்	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு ரூ. 28.50.
''பி'' வகுப்பு (அரசு தலைமை மருத்துவ மனை, உதகமண்டலம், மற்றும் அரசு லாலி மருத்துவமனை, கூனூர், தாம்பரம் தவிர மற்ற மருத்துவ மனைகள்).	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு ரூ. 12.50.
''பி'' வகுப்பு (அரசு தலைமை மருத்துவ மனை, உதகமண்டலம், மற்றும் அரசு லாலி மருத்துவமனை, கூனூர்).	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு ரூ. 12.50.
'சி'' வகுப்பு (மலைப்பகுதியில் உள்ள மருத்துவமனைகளில்).	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு ரூ. 8.00.
''சி'' வகுப்பு (மற்ற மருத்துவ மனைகளில்).	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு ரூ. 7.00.

இணைப்பு III

(528-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 375க்கான விடையைக் காண்க)

பதில்

தஞ்சை மாவட்டத்தில் பருத்தி சாகுபடியை ஊக்குவிக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:—

(1) அதிக மகசூல் தரக்கூடிய எம், சி. யு. 7 மற்றும் 'வரலட்சுமி' போன்ற இரகங்கள் சிபாரிசு செய்யப்பட்டு பருத்தி சாகுபடி தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. 1977-78 ஆண்டில் 9,267 ஏக்கரில் இம்மாவட்டத்தில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதனை 1978-79 ஆம் ஆண்டில் சுமார் 25 ஆயிரம் ஏக்கராவில் விரிவாக்க திட்டமிடப்பட்டுள்ளது, இதற்குத் தேவையான தரமான பொறுக்கு விதைகள் விநியோகிக்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

(2) பருத்தி பயிரிட விரும்பும் விவசாயிகளுக்கு கிராம கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும், அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமும் ரகத்திற்கு ஏற்ப (எம்.சி.யு. 7 ரகத்திற்கு ஏக்கருக்கு ரூபாய் 1,000, வரலட்சுமி ரகத்திற்கு ஏக்கருக்கு ரூபாய் 2,000) பயிர் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(3) நிலத்தடி நீரை முழு அளவு பயன்படுத்தி, வரும் மூன்று ஆண்டுகளில் சுமார் ஒரு லட்சம் ஏக்கராவில் பருத்தி பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

(4) தஞ்சையிலேயே ஒரு தனியார் ஜின்னிங் பேக்டரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(5) தஞ்சை, குடந்தை, குத்தாலம் முதலிய இடங்களில் உள்ள ஒழுங்கு முறை விற்பனை கூடங்கள் செயல்படுத்தப்பட்டு பருத்தி விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பருத்தி சாகுபடி அதிகரிப்பதற்கேற்ப ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் வருகிற ஆண்டுகளில் பரவலாகப் பல இடங்களில் செயல்படுத்தி பருத்தி விற்பனையில் உள்ள சிக்கல்களை நீக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

(6) தேவையான அளவு உரங்களும், பயிர் பாதுகாப்பு மருந்துகளும், பயிர் பாதுகாப்புக் கருவிகளும் சிரமமின்றிக் கிடைக்க ஆவன செய்யப்பட்டுள்ளது. பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளையும், இனி சாகுபடி செய்யப் போகும் விவசாயிகளையும் வேளாண்மைத் துறையின் விரிவாக்கப் பணியாளர்கள் அவ்வப்போது சந்தித்து சாகுபடி நுணுக்கங்களை செயல் விளக்கங்கள் மூலம் விளக்கி வருகின்றனர்.

இணைப்பு IV

[529-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 379-க்கான விடையைக் காண்க.]

பதில்.

அகில இந்திய ஒருங்கிணைந்த பருப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இரு மையங்கள் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் ஆதரவுடன் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் கீழ் தற்பொழுது இயங்கி வருகின்றன. 8-12-77 மற்றும் 9-12-77 தேதிகளில் புதுடில்லியில் நடந்த இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் பொதுக் குழுக் கூட்டத்தில் தமிழ்நாட்டிற்கு ஒரு வட்டார பருப்புப் பயறு ஆராய்ச்சி நிலையம் அமைப்பது குறித்து ஒரு திட்டம் முன்மொழியப்பட்டது. ஏற்கெனவே இரண்டு மையங்கள் தமிழ் நாட்டில் செயலாற்றி வருவதால், மேலும் ஒரு நிலையம் அமைக்க மத்திய அரசு இசைவு தரவில்லை. பயறு வகைகளுக்கென்று தனி ஆராய்ச்சி நிலையம் ஒன்றினை நடப்பு ஆண்டில் இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டிலாவது அமைத்தால் தான் தமிழகம் தனது சுய தேவையை ஓரளவுக்காவது சரிக்கட்ட முடியும் என்றும், தமிழ் நாட்டில் ஒரு வட்டார பயறு ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்காக இசைவாணை வழங்குமாறும் இந்திய வேளாண்மைக் கழகத்தை இவ்வரசு கோரியுள்ளது.

இணைப்பு V.

[535-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 396-க்கான விடையைக் காண்க.]

விடை.

தமிழ் நாட்டில் கடந்த சில ஆண்டுகளில் வெற்றிலைச் சாகுபடி தொடர்பாக எவ்வித ஆராய்ச்சியும் மேற்கொள்ளப் படவில்லை. என்றாலும், வெற்றிலை வாடல் நோய்த் தடுப்பு முறை பற்றித் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஒரு ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளது. 1959-ம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் பொத்தனூரில் வெற்றிலை வாடல் நோய் பற்றிய ஆராய்ச்சிப் பணி ஒன்று புதுடில்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் உதவியுடன் தொடங்கப்பட்டது. இப்பணி அனைத்திந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டமாக மாற்றப் பட்டு 1970 வரை செயல் பட்டு வந்து முடிவில் நின்றுவிட்டது.

அவ்வாராய்ச்சியில் கண்டறிந்ததாவது:—

வெற்றிலை வாடல் நோய் ஒருவகைப் பூசணத்தால் உண்டாகின்றது. அப்பூசணத்தின் பெயர் ''பைட்டோப்தொராபாரசைட்டிகா' என்பது. இப்பூசணம் மண்ணின் மூலமாகப் பரவுகிறது. இவ்வாடல் நோய் முதலில் வேரில் தோன்றுகிறது. இந்நோய்த் தாக்குதலால் படிப்படியாக வெற்றிலைக்கொடி முழுதும் வாடி விடுகிறது. இந்நோய் குறிப்பாக குளிர்ப் பருவத்தில் அதாவது செப்டம்பர் முதல் பிப்ரவரி வரை விரைவாகப் பரவுகிறது. இப்பருவத்தில் இரவில் 23 டிகிரி சென்டிகிரேடுக்கும் குறைவாக வெப்பம் கொண்ட நாட்கள் மிகவும் அதிகம் உள்ளன.

இந்தக் குளிர்ப் பருவத்தின் ஆறுமாத காலமும் மாதம் ஒரு முறை 1 சதம் அல்லது 0.5 சதம் போர்டோக் கலவை அல்லது பெட்டோலான் 0.25 சதம் போன்ற தாமிர ஆக்ஸிகுளோரைடு மருந்துகளைக் கொடியின் தூரைச்சுற்றி மண் நன்றாக நனையும்படி ஊற்றினால் இந்த நோய் நன்கு கட்டுப்படுத்தப்படுகிறது. ஏக்கருக்கு 400 கிலோ சூப்பர் பாஸ்பேட்டை வேரைச் சுற்றி இடுவது நோயின் கடுமையைக் குறைக்கின்றது.

தமிழ்நாடு வேளாண்ம பல்கலைக் கழகத்தின் பயிர் நோயியல் துறை 1974-ல் இந்நோய் பற்றிய ஆராய்ச்சிப் பணியைத் தொடங்கியது. 1977 மார்ச்சு முதல் இதனைப்பற்றிய ஆராய்ச்சி சேலம் மாவட்டம் வேலூரில் ஒரு பயிர் நோயியல் துணை வல்லுநர் மற்றும் ஒரு உரையாளர் உதவியுடன் செயல்பட்டுவருகிறது. இவ்வாராய்ச்சி, தனியார் வெற்றிலைக் கொடிக் கால்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பல்வேறு பூசணக்கொல்லிகள் பரிசோதனை செய்யப்பட்டன. தாமிர ஆக்சிகுளோரைடு 0.25 சதம், போர்டோக் கலவை 0.5 சதம் ஆகிய மருந்துகள் இந்நோயைக் கட்டுப்படுத்த

கூகந்தலை என அறியப்பட்டுள்ளது. மேலும் 'டிக்கோனில்' என்னும் புதுவகைப் பூசணக்கொல்லி 0.1 சத மருந்தும் இவ்வாடல் நோயைத் திறம்படக் கட்டுப்படுத்தக் கூடியதாகக் கண்டறியப் பட்டுள்ளது. இவ்வாராய்ச்சி மேலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இணைப்பு VI.

]536-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 398-க்கான விடையைக் காண்க.]

சட்ட மன்றப் பேரவையில் வைக்கப்பட்ட
விவர அறிக்கை

(அ) இம்மாநிலத்தில் உள்ள மொத்த தோல் பதனிடும் தொழிலாளர்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக.

(ஆ) அவர்களில் ஆண்கள், பெண்களின் எண்ணிக்கை.

(இ) வேலையில் அமர்த்தப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை.

(அ), (ஆ) மற்றும் (இ):-

விவர அறிக்கை.

வரிசை எண்.	மாவட்டத்தின் பெயர்.	மாநிலத்தில் தோல் பதனிடும் தொழிலாளர்களின் எண்ணிக்கை.	பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை.	ஆண் தொழிலாளர்களின் எண்ணிக்கை.	சிறுவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	சென்னை ..	529	79	450	..
2	செங்கல்பட்டு ..	4,095	668	3,427	..
3	தென்னாற்காடு ..	..	..	..	..
4	வடஆற்காடு ..	7,086	244	6,842	..
5	தஞ்சாவூர் ..	..	..	..	..
6	திருச்சிராப்பள்ளி ..	329	..	329	..
7	புதுக்கோட்டை ..	..	..	..	..
8	மதுரை ..	876	5	871	..
9	இராமநாதபுரம் ..	..	..	..	..
10	திருநெல்வேலி ..	..	..	..	..
11	கன்னியாகுமரி ..	..	..	..	..
12	தர்மபுரி ..	..	..	..	..
13	சேலம் ..	..	..	..	..
14	கோயம்புத்தூர் ..	353	..	353	..
15	நீலகிரி ..	..	..	..	..
	மொத்தம் ..	13,268	996	12,272	..

குறிப்பு :—1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீ, பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்சாலைகள் தொடர்பான விவரங்கள் மட்டுமே மேலே தரப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1978 செப்டம்பர் 14.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

பஞ்சாயத்துக்களில் மின் வழங்கு மீட்டர்கள் பொருத்தல்.

*குறுகிய கால வினா எண். 3—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தற்போது தமிழ்நாட்டில் உள்ள எத்தனை பஞ்சாயத்துக்களில் மீட்டர் பொருத்தப்பட்டுள்ளது?

(ஆ) ஆம் என்றால், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) & (ஆ) : தமிழ்நாட்டில் தற்போதுள்ள 12,421 பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த 50,666 மின் வழங்கும் முனைகளில் 19,132 முனைகளுக்கு மீட்டர் வைக்கப்பட்டுள்ளது.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் நிதியை மிச்சப்படுத்தும் நோக்கத்தோடு இந்தச் சட்டம் அமல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. என்ன காரணத்தினால் இன்னும் அனைத்துப் பஞ்சாயத்துக்களிலும் மீட்டர்கள் பொருத்தப்படவில்லை? காலதாமதத்திற்கான காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மீட்டர் பொருத்து ... ய முனைணைப் பொருள்கள் கிடைக்காத காரணத்தால் ஏற்படுகின்றன. ப...ம். அவ்வளவும் கிடைக்கப்பெறச் செய் வாங்கிப் போட் முறைகள் விரைவுபடுத்தப்பட்டிருக்கின்றன.

[1978 செப்டம்பர் 14

திரு. துரை முத்துசாமி : மீட்டர்கள் என்ன விலைக்கு வாங்கப்
படுகிறது? இப்போது எங்கு வாங்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: விலைபற்றிய விவரம்
என்னிடம் தற்போது இல்லை. இந்தியா மீட்டர்ஸ் நிறுவனத்தின்
நிர்வாகத்தை அரசே மேற்கொண்டு நடத்துகிறது. அந்த
நிறுவனம் இந்த மீட்டர்களைத் தருகிறார்கள்.

திரு. என். பழனிவேல் : ஊராட்சிமன்றங்கள் மின்சாரத்தை
நேரடியாக உபயோகப்படுத்திக் கொள்வதன் மூலம் மின்சார
வாரியத்தைச் சேர்ந்தவர்கள், ரிப்பேராகிவிட்டால் அதை
வந்து பார்ப்பதில் சிரமம் இருக்கிறது. ஆகவே பஞ்சாயத்து
அதிகாரிகளுக்கும் மின்சார வாரிய அதிகாரிகளுக்கும் கருத்து
வேறுபாடு ஏற்படுகிறது. எனவே மீண்டும் இதை நேரடியாக
பஞ்சாயத்துக்களிடம் இல்லாமல் மின்சார வாரியத்திடமே
ஒப்படைக்க அரசு உத்தரவு போடுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 1974-ம் ஆண்டு அரசு
ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளது. அந்த உத்தரவின்படி தெரு
விளக்குகளைப் பராமரிப்பதற்கான பொறுப்பை ஊராட்சி மன்
றங்களே மேற்கொள்ள வேண்டுமென்றும் அந்தத் தெருவிளக்கு
களை மாட்டுகிற காரியத்தை மட்டும் மின்சார வாரியம் நிறை
வேற்றினால் போதும் என்று அந்த உத்தரவில் தெரிவித்துள்
ளது. அதன்படி மின்சார வாரியத்தில் பணியாற்றுகிற பணி
யாளர்கள் வாரத்திற்கு ஒருமுறை ஊராட்சி மன்றத்திற்குச்
சென்று அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று ஏற்கனவே
உத்தரவு அமலாகியுள்ளது. ஆனால் இது சரிவர இயங்கவில்லை
என்ற புகார்கள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளன. அதை மீண்
டும் மின்சார வாரியமே ஏற்றுக் கொள்ளலாமா என்பது பற்றி
பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் ஒரு காலத்தில்
மின்சார வாரியமே இதை ஏற்றுக் கொண்டபோதும் இந்தவித
மான புகார்கள் வந்திருக்கின்றன.

திரு. செ. சதாசிவம் : ஊராட்சி மன்றங்களில் இந்த
மீட்டர்கள் பொருத்தப்பட்ட பிறகு, தன் செலவில்
சாமான்களை வாங்கிக் கொடுத்து பொருத்திய ஊராட்சி
மன்றங்களுக்கு மின் கட்டணத்தில் பாதிச் சலுகை இருந்தது.
இப்போது மீட்டர் பொருத்தப்பட்ட பிறகு அந்தச் சலுகை
நீக்கப்பட்டு மீட்டர் அடிப்படையில் வாடகை இப்போது வசூ
லிக்கப்படுகிறது. மின்சார வாரியம் மூலம் பொருத்தப்பட்ட
விளக்குகளுக்கு ரூ. 5 கட்டணம் என்றும் ஊராட்சிமன்றங்கள்
மூலம் பொருத்தப்பட்ட விளக்குகளுக்கு ரூ. 2.50 என்றிருந்தது.
இப்போது இரண்டும் ஒன்றாக்கப்பட்ட பிறகு ஆயிரக்கணக்கான
ரூபாய்கள் பஞ்சாயத்துகள் போட்டிருந்தாலும் இவ்வளவு
வித்தியாசம் இருக்கிறது. ஆகவே முன்பு இருந்ததைப்போலவே
மின் கட்டணம் வசூலிக்க உத்திரவிடப்படுமா?

1978 செப்டம்பர் 14]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஏற்கனவே தெரு
விளக்குகளுக்கு மீட்டர் இல்லாத காலத்தில் ஒரு நிரந்தரக் கட்
டணம், பிளாட் சார்ஜ் என்ற வகையில் வசூல் செய்யப்பட்டது.
அப்போதிருந்த ஆணைகளின்படி மூன்று தடவைவரை பல்புகளை
மின்சார வாரியமே மாற்றி இலவசமாக ஊராட்சிமன்றங்களுக்கு
அளிக்க வேண்டும் என்றிருந்தது. அந்தச் செலவுகள் எல்லா
வற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, இப்போது மீட்டர்
பொருத்தப்பட்டு யூனிட் ஒன்றுக்கு எவ்வளவு கட்டணம் விதிப்
பது என்று பரிசீலனை செய்யப்பட்டது. அப்போது மின்சார
வாரியத்திற்கு இதிலாகிற செலவுகளை எல்லாம் கணக்கில் எடுத்
துக் கொண்டு, அதேபோல் ஊராட்சிமன்றங்கள் மின்சார
வாரியத்திற்கு இதுவரையில் வழங்கிய பணத்தையும் கணக்கில்
எடுத்துக்கொண்டு அந்த அடிப்படையில் யூனிட் ஒன்றுக்கு 27
பைசா என்று உத்தரவிட்டிருக்கிறது. சாதாரணமாக 38 பைசா
வரை வரும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே,
அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இப்போதுள்ள
முறையை மாற்றுவதற்கு பரிசீலனை செய்து கொண்டிருப்பதாகச்
சொன்னார்கள். இதில் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியமே
இல்லை. முன்னாலுள்ள முறை சிறந்த முறை என்று எல்லா
ஊராட்சிகளிலுமுள்ளவர்கள் சொல்லுகிறார்கள். இப்போதுள்ள
முறையினால் மின்சார வாரியத்திற்கும் ஊராட்சிமன்றங்களுக்
கும் குழப்பம்தான் ஏற்படுகிறது. ஆகவே, இந்த முறையை
பரிசீலனைக்கு என்று எடுத்து காலதாமதப்படுத்தாமல் உடனடியாக
மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,
ஏற்கனவே மின்சார வாரியம் தெரு விளக்குகளைப் பராமரிப்பு
செய்து வந்தது. அப்போது மின் வாரியம் சரியானபடி தெரு
விளக்குகளைப் பராமரிப்பு செய்யவில்லை என்ற புகார்கள் வந்தன.
அப்படிப்பட்ட புகார்களின் அடிப்படையில் நிர்வாக சீர்திருத்
தக் குழு ஒரு பரிந்துரையைச் செய்தது. அந்தப் பரிந்துரையின்
அடிப்படையில் அன்றைக்கு இருந்த அரசு பரிசீலனை செய்து
1974-ம் ஆண்டு முதல் மின்வாரியத்திற்குப் பதிலாக ஊராட்சி
மன்றங்களேப் இதை பராமரித்துக் கொள்ள வேண்டும் என்று
ஆணை வழங்கியது. இப்போது ஊராட்சி மன்றங்களிலிருந்து
இதை மாற்றி மின்வாரியத்தில் பராமரிக்கின்ற பொறுப்பை
கொடுக்க வேண்டும் என்று சொல்லுகின்ற நிலைமை இருக்கிறது.
அதனால்தான் இதை பரிசீலிக்க வேண்டியிருக்கிறது என்று நான்
சொன்னேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே,
இந்தப் புதிய முறையைச் செயல்படுத்துவதில் சில சிக்கல்கள்
ஏற்படுகின்றன. பல்புகள் கொடுப்பதில்லை. ஆணையரே பல்புகளை
வாங்கிப் போட்டுக்கொள்ளலாம் என்று திட்டத்திலில்லை.

ஊராட்சிமன்றத் தலைவர்களே பல்புகளையும் ஹோல்டர்களையும் வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்லும்போது அதிலும் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. அல்லது ஊராட்சி ஒன்றிய ஆணையாளரே இவைகளை வாங்கிப் போட்டுக்கொள்வதற்கான முறையில் பணம் வழங்கப்பட வேண்டும். மேலும், பல ஊர்களில் மின்வாரிய ஊழியர்கள் சரியாக வேலை செய்வதில்லை என்று குறைபாடுகள் இருக்கின்றன. ஆகவே, இவைகளையெல்லாம் கவனித்து இந்த முறையை மாற்றி அமைக்க அரசு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஒன்று, ஊராட்சிமன்றங்களுக்கு மின்சார வாரியமே இந்தப் பொருட்களை வழங்க வழி செய்வது. இதைச் செயல்படுத்துவதற்கு ஆணையாளர்களுக்கு பொறுப்பைத் தரலாம் என்பதும் இப்போது ஆலோசனையில் இருக்கிறது. இரண்டாவது, மின்சார வாரிய ஊழியர்கள் ஊராட்சிமன்றங்களில் சரியாக வேலை செய்வதில்லை என்கின்ற புகார் இருப்பதால், மின்வாரிய ஊழியர்களை ஊராட்சி மன்றங்களுக்கு டெப்யூட்டேஷன் என்ற முறையில் அனுப்புவது. இந்த விஷயங்கள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, பல ஊராட்சி மன்றங்களிலிருந்தும் மின்சார வாரியத்திற்குக்கட்டணம் செலுத்த வேண்டிய பாக்கியுள்ளது. நலிந்துபோன பஞ்சாயத்துகளிலிருந்து வரவேண்டிய கட்டணத்தை ரத்து செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தினுடைய கணக்கு விவரப்படி 1977ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் தேதிவரை ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து தெருவிளக்குகளை எரித்ததற்காக ரூ. 62,43,691 வரவேண்டியிருக்கிறது. தெருவிளக்கு உபயோகத்திற்காக மற்ற பொருட்களுக்காக ஊராட்சிமன்றங்களிலிருந்து வரவேண்டியது ரூபாய் 14,68,096. நலிந்துபோன ஊராட்சிமன்றங்களுக்கு உதவி செய்ய வேண்டுமா என்கின்ற கருத்து இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. அ. சுவாமிநாதஸ் : தலைவர் அவர்களே, தெருவிளக்குகளை பராமரிக்கின்ற பொறுப்பு ஏற்கெனவே மின்சார வாரியத்தில் இருந்த நேரத்தில் பஞ்சாயத்துகளில் தெரு விளக்குகள் அமைப்பதற்காக எஸ்டிமேட்டுகள் எல்லாம் தயார் செய்து அதற்கான கட்டணங்களை அனேக பஞ்சாயத்துக்கள் செலுத்தியிருக்கின்றன. இப்படிச் செலுத்தி 4, 5 வருடங்களாகின்றன. இப்போது என்ன சொல்கிறார்கள் என்றால், இப்போதுள்ள அமைப்பின்படி நாங்கள் தெருவிளக்கு போடுகின்ற வேலைகளை எடுத்துக் கொள்ளமுடியாது

என்று தெரிவிக்கின்றார்கள். ஆகவே, ஏற்கெனவே கட்டணங்களைச் செலுத்திய பஞ்சாயத்துக்களுக்கு மின்சார வாரியமே மின்விளக்குகளை அமைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். இன்னும் புதிதாகத் திட்டங்களைப் போடும்போது, கிராமங்களுக்கு இப்படிப்பட்ட முறை பொருந்தி வருமா என்று ஆராய்ந்து பார்த்து, இப்படிப்பட்ட குளறுபடிகள் இல்லாமல் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9–10].

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே ஏற்கெனவே ஊராட்சிமன்றங்களில் தெருவிளக்குகள் போடுவதற்காகப் பணம் பெற்று, மின் வாரியத்தால் அந்த தெரு விளக்குகள் இன்னும் போடுவதற்கு நடவடிக்கை எடுக்காது இருக்குமானால் அதைப்பற்றி நிச்சயமாகப் பரிசீலிப்போம். இரண்டாவதாக அவர்கள் குறிப்பிட்டார்கள், இப்போதிருக்கிற முறையில் குளறுபடி இருக்கிறது என்று. அது குளறுபடி என்பதை ஒப்புக் கொள்கிறேன். இந்தக் குளறுபடியைப் போக்குவது எப்படி என்பதைத்தான் சிந்திக்கிறோம்.

குடும்பநலத் திட்டத்தின்கீழ் அறுவை சிகிச்சைகள்

*வினா எண். 201—திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1976–77-ல் தமிழ்நாட்டில் எத்தனை பேர்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தமிழ்நாட்டில் 1976–77ஆம் ஆண்டில் 5,67,037 பேர்களுக்குக் குடும்பநல அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, 1976–77-ல் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதை மாவட்டவாரியாக அறிவிக்க இயலுமா ? அவர்களில் ஆண்கள் எத்தனை பேர் ? பெண்கள் எத்தனை பேர் ? அதைப்போல், 1976–77-க்கு அறிவிக்க இயலாவிட்டாலும், பொதுவாக சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றவர்கள் அதை ஆதரிக்கின்ற முறையில் இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை எத்தனை பேர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில்1976–77-ல் 5,67,037 பேர்கள் அறுவை சிகிச்சை செய்து கொண்டார்கள். அதில் 3,80,208 பேர்கள் ஆண்களும், 1,86,829 பேர்கள் பெண்களும் ஆவர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல் மாண்புமிகு உறுப்பினர்கள் எவ்வளவு பேர்கள் செய்து கொண்டார்கள் என்பதைப் பற்றிய விவரம் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதைப் பற்றி விரிவாகச் சொல்லப்படும்.

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடும்ப நல பாதுகாப்புத் திட்டத்தில் அறுவை சிகிச்சையைப் பொறுத்தவரையில் அரசு அலுவலர்களும், ஆசிரியர்களும் கட்டாயமாக ஆட்களைப் பிடித்துக்கொண்டு வரவேண்டிய நடைமுறைத் திட்டமானது..........

திரு. ரா. உமாநாத் : பாயின்ட் ஆப் ஆர்டர். அடுத்து வரக்கூடிய கேள்வி இதைப்பற்றியது. அதற்கு இப்போதே இந்தக் கேள்வியைக் கேட்டு, ரிப்ளை கொடுத்து விட்டால் என்ன அர்த்தம்?

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே' இந்த அறுவை சிகிச்சை முறைக்கு குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவர்கள் அதற்கு எதிர்ப்புக் குரல் கிளப்புவதாகவும், அந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் இந்த அறுவை சிகிச்சை செய்துகொள்ள விருப்பம் இல்லாதவர்களாகவும் |பேசப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளில் அந்த மதத்தைச் சார்ந்தவர்கள் அறுவை சிகிச்சை செய்து கொண்டார்கள் என்பதற்கு ஆதாரமாக ஏதாவது விவரங்கள் அரசாங்கத்தில் இருககிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் குடும்ப நலத் திட்டத்தை எல்லா மதத்தவர்களும் பின்பற்றுகிறார்கள். உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல் எந்தவிதமான வேறுபாடுகளும் இல்லை. இந்த சிகிச்சை செய்துகொண்ட 3,80,208 ஆண்களில், 3,55,907 பேர்கள் இந்துக்கள், 6,755 பேர்கள் முஸ்லீம்கள், 17,516 பேர்கள் கிறித்துவர்கள், 30 பேர்கள் ஏனைய மதத்தைச் சார்ந்தவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அதைப்போல், 1,86,829 பெண்களில், 1,70,946 பேர்கள் இந்துக்கள், 4,656 பேர்கள் முஸ்லீம்கள், 11,218 பேர்கள் கிறித்துவர்கள், 9 பேர்கள் ஏனைய மதத்தைச் சார்ந்தவர்கள். எனவே, எல்லா மதத்தைச் சார்ந்தவர்களும் தற்போது குடும்ப நலத் திட்டத்திற்கு ஆதரவு தந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, யாரும் எந்தவிதமான வெறுப்பும் காட்டப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : சென்ற காலங்களில் அறுவை சிகிச்சை என்பது நம் நாட்டில் பலவாறு நடந்தது என்பது உலகப் பிரசித்தம். இன்றுகூட தமிழ்நாட்டில் அறுவை சிகிச்சை என்ற பெயரால் சில தரகர்கள் வேண்டுமென்றே சில இடங்களில் மோசடி செய்வதாகப் புகார்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இதை முறைப்படுத்த உடல் ஆரோக்கியத்திற்காக மட்டும்தான் அறுவை சிகிச்சை என்ற கொள்கை என்பதை உறுதிப்படுத்த அரசு ஆலோசனை செய்கிறதா? இனிமேலாவது ஆலோசனை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : அது போன்ற தவறுகள் ஏற்படாவண்ணம் இருப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறு குறிப்பிட்ட இடத்தில் நடந்திருக்கிறது என்று எடுத்துச் சொல்வார்களானால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சை செய்து கொள்ளக்கூடியவர்களுக்கு ஊக்க அடிப்படையில் ஓரளவு தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதை அதிகரிக்க அரசு ஆவன செய்யமுன்வருமா? ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னால் சட்டமன்ற உறுப்பினராக நான் இருந்த நேரத்தில் 30 ரூபாய் கொடுத்தார்கள்; இப்போது அதிகமாகக் கொடுப்பதாக தெரிகிறது. மீதிப் பணத்தையும் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். எம். ஏ. ரசாக் : குடும்ப நலத்திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சை செய்யப்படும்போது மருத்துவர்கள் கவனக் குறைவு காரணமாக நோயாளிகள் உயிர் பலியாகின்ற நிலைமை ஏற்படுகிறது. அப்படி ஏற்படுகிற நேரத்தில் அவர்களுடைய குடும்பங்களைப் பாதுகாக்க அரசு கவனம் எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : அது போன்ற தவறுகள் சில இடங்களில் நடைபெற்றிருக்கின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டு அவைகளின்மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால், தற்சமயம் அந்தமாதிரி எந்தவிதமான தவறுகளும் எங்கும் நடைபெறவில்லை என்று தெரியவருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்காவது இதுபோன்ற தவறுகள் நடந்து இருக்கின்றன என்று குறிப்பிட்டுக் கூறுவார்களானால் அதுபற்றி நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும்.

[1978 செப்டம்பர் 14

திரு. ரா. கிருஷ்ணன் : குடும்பக் கட்டுப்பாடு என்ற பெயரால் நெல்லை மாவட்டத்தில் முக்கூடல் என்ற ஊரில் இலட்சக் கணக்கான ரூபாயை டாக்டர்களும் மற்றவர்களும் மோசடி செய்தது அரசுக்குத் தெரியுமா? அவர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தனிக் கேள்வி போடுவார்களேயானால் விளக்கமாகப் பதில் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர்கள் தம்முடைய கேள்விக்கு அமைச்சர் அவர்களிடம் தகவல் இருக்குமா என்று தெரிந்து கேட்க வேண்டும்.

* Q. No. 202—Thiru. R, UMANATH : Will the Hon. the Minister for Health be pleased to state :—

(a) whether the quota system to bring persons for sterilisation is still prevalent among Village Officers, Gramasevaks, Balasevikas etc.,

(b) whether the Government have received a recommendation from East Thanjavur District Development Council for its action; and

(c) if so, the action proposed to be taken?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) இல்லை

(ஆ) ஆம்.

(இ) எல்லா மாவட்ட ஆட்சியர்களும் எந்தவித கட்டாயமோ அச்சுறுத்தலோ இன்றி குடும்ப நலத் திட்டத்தைச் செயற்படுத்த கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத் : கோட்டா சிஸ்டம் இல்லையென்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். ஆனால், கோட்டா சிஸ்டம் என்ற பெயரைச் சொல்லாமலே கோட்டா கொடுத்துக் கொண்டு இன்றைக்கு கிராம அதிகாரிகள், கிராம சேவிகள் போன்றவர்கள் நிர்பந்திக்கப்படுகிறார்கள். நான் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புவது, கேட்க விரும்புவது பாலசேவிகிகளிடமிருந்து எனக்கு நாலைந்து கம்ப்ளெயின்ட்ஸ் பரிதாபகரமாக எழுதி வந்திருக்கிறது. இந்த கோட்டா சம்பந்தமாக ஏற்பாடு செய்வதற்கும், பிரச்சாரத்திற்காக வீடு வீடாக அனுப்பும்போதும் சமூகவிரோதிகள் தங்களை தகாத நிலைக்கு

1978 செப்டம்பர் 14]

உட்படுத்துகிறார்கள், எங்களை எப்படியாவது இந்த வேலையில் ஈடுபடுத்தாமல் பாருங்கள் என்று எழுதியிருக்கிறார்கள். கோட்டா சிஸ்டம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னாலும் இருக்கிறது என்பதை விசாரிக்கவும், இந்த விஷயத்தில் பெண்களைப் பிரசாரத்திற்குக்கூட அனுப்பக் கூடாது என்று உத்தரவாதம் கொடுக்கவும் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : குடும்ப நலத் திட்டத்திற்குப் பிரசாரம் செய்வது என்பது அத்தியாவசியமான ஒன்றாகும். இதைப்பற்றிப் பிரச்சாரம் செய்வதற்கு பெண்களும் பயன்படுத்தப்பட்டாக வேண்டுமென்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அறியாதது அல்ல. ஆண்கள் போய் பெண்களிடம் இதைப் பற்றி பிரச்சாரம் செய்வது முறையாக இருக்காது. ஆகவே, பெண்களும் இந்தத் துறையில் பணியாற்றினால்தான் இந்தத் திட்டத்தை நல்ல முறையில் கிராமப்புறங்களில் பரப்ப ஏதுவாக இருக்கும். ஆனால், உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுவது போல் தவறுகள் நடைபெறுமானால், அதனால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்குத் தெரியப்படுத்தியதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார்களானால் அதுபோன்ற தவறுகள் நடைபெறாமல் இருப்பதற்கு நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : கோட்டா சிஸ்டம் பற்றிச் சொல்லும்போது—குடும்ப நலத் திட்டத்தை மருத்துவத் துறை செய்து வருகிறது. ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்டத்திற்கான இலக்கை நிர்ணயம் செய்த பிறகு ஊராட்சி ஒன்றியத்தின் இலக்கீடு பிரித்து நிர்ணயிக்கப்பட்டு அதற்கான பணியாளர்கள் ஆணையாளரின் கீழ் பணியாற்றுகிற சூழ்நிலை. துறையைச் சேர்ந்த பணியாளர்கள் அதிலே ஈடுபடுத்தப்படுகிற காரணத்தால் மற்றைய பணிகள் பாதிக்கப்படுகின்றன. முதலில் ஊராட்சி ஒன்றியங்களின் இலக்கீடு என்று நிர்ணயிப்பதை நிறுத்தி மருத்துவத் துறையைச் சேர்ந்தவர்கள் இப்படிப்பட்ட பணிகளை அவர்களுடைய பணியாளர்களே செய்வதற்கு அரசு ஏற்பாடுகள் செய்யுமா ?

(முற்பகல் 9–20.)

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் எந்தத் துறையானாலும் மாவட்ட ஆட்சித் தலைவருடைய பொறுப்பிலேதான் அந்தத் துறையினுடைய திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் திட்டங்களைத் தருவது வழக்கமாகும். அந்த முறையிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அவர்களைக் கேட்டுக்கொள்கிறபோது அவர்கள், ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்து வருகிறபோது ஒன்றியங்களிலே வைத்திய முறையிலேயும் குடும்ப நல முறையிலேயும்

அலுவலர்கள் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள், அவர்களையும் அங்கே இருக்கின்ற ஹெல்த் விசிட்டர்களையும் வைத்து வகைகளைப் பிரித்துக் கொடுத்து அந்த முறையிலே அவர் பணிகள்யாற்றிக் கொண்டு வருகிறார்கள். யாரையும் வற்புறுத்தவேண்டுமென்றோ இவ்வளவு பேர்களைக் கொண்டுவர வேண்டுமென்றோ சொன்னதாக எனக்குத் தகவல் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுபற்றிய தகவல்களைத் தருவார்களானால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. ரா. உமாநாத் : வகைகள் பிரித்துக் கொடுத்து என்பதாக அமைச்சர் வாயிலிருந்தே வந்து விட்டது. அதுதான் கோட்டா சிஸ்டம் என்பது. அந்த வகைகளின்படி கொடுத்த எண்ணிக்கை கொடுக்கவில்லையென்றால் மேலேயிருந்து அவர்களுக்கு பிரஷர் வருகிறது, அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இப்படி வகைகள் பிரித்துக் கொடுப்பதை அமல்நடத்துவதில் நிர்பந்தம் இருப்பதால் கையிலிருந்து அவர்கள் பணம் கொடுக்க வேண்டிய நிலை—ஏனென்றால் கவர்ன்மெண்ட் பிக்ஸ் பண்ணுகிற பணம் போதாது, கூட தரவேண்டுமென்று கேட்கிறார்கள், இதனால் அவர்கள் சம்பளத்தில் இருந்து கொடுக்க வேண்டியிருப்பதால் அவர்களுடைய சம்பளமே பாதிக்கப்படுகிறது. ஆகவே, இப்படி வகைப்படுத்தி கொடுக்கும் ஏற்பாட்டை நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, நான் சொன்னதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். வகைபிரித்துத் தருகிறார்கள் என்று நான் சொன்னது, எண்ணிக்கை என்ற அடிப்படையில் தருகிறார்கள் என்று சொல்லவில்லை. எந்த எந்தத் திட்டத்தை எப்படி எப்படிச் செயல்படுத்த வேண்டுமென்று எடுத்துச் சொல்லப்படுகிறது. குடும்பநலத் திட்டம் பற்றிய பிரச்சாரம் செய்து 15 நாட்கள் விழா எடுக்கப்படுகிறது, கிராமப்புறங்களிலே இப்படிப்பட்ட விழாக்களை, நாடகங்களை நடத்துவதன் மூலமாக மக்கள் அதிலே பயிற்சி பெற்றுக் கொள்வதற்கும், இந்தத் திட்டத்திலே அவர்களை ஈடுபடுத்துவதற்கும்தான் இப்படிப்பட்ட விழாக்கள் போன்றவைகள் நடத்தப்படுகின்றன. ஒன்றியங்களிலே அதைத்தான் வகைகள் பிரித்துக் கொடுக்கிறார்கள். எவ்வளவு என்று பிரித்துக் கொடுத்து நிர்பந்தம் செய்வது முன்னாலே இருந்திருக்கலாம், தற்போது அப்படிப்பட்ட நிர்ப்பந்தங்கள் இல்லை. அப்படி ஏதாவது அறிக்கை சென்று அதனால் பாதிக்கப்பட்டார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக்காட்டினால் அதன் மீது அரசு நடவடிக்கை எடுக்க ஏதுவாகும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்பொழுது பெண்களையும் இந்தப் பிரச்சாரத்தில் ஈடுபடுத்துவது மிக மிக அவசியம் என்று சொன்னார்கள். பெண்களை

அனுப்புகிறபோது கல்யாணம் ஆகாத சிறு வயசுப் பெண்களை அனுப்புவதால் குழந்தைகள் பெறாமல் எப்படி இருக்கவேண்டுமென்று குழந்தைகளைப் பெற்றவர்களுக்குப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று சொல்லப்படுவதால் அவர்கள் பெரும் துன்பங்களுக்கு ஆளாகிறார்கள். அது மட்டுமல்ல, கடுமையான கேள்விகளைக் கேட்பதால் அவர்கள் பதில் சொல்ல முடியாமல் திணறுகிறார்கள், இது யதார்த்த நிலை. ஆகவே, அமைச்சர் அவர்கள் அந்த முறையிலே செய்யாமல் கருத்தரங்குகளையும், கான்பரன்சுகளையும், அதற்காக ஏற்படுத்தி டாக்டர்களையும் வைத்து இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல் இருந்தால் அதை மாற்றியமைப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. மருத்துவத் துறையிலே பயிற்சி பெற்றவர்கள்தான் அந்தப் பணிகளிலே அமர்த்தப்படுகிறார்கள். அவர்கள் அதற்காக பயிற்சி பெறுகிறபோது அதைப்பற்றிய பயிற்சிகள் எல்லாம் அவர்களுக்குத் தரப்படுகின்றது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், மருத்துவத் துறையில் பயின்றுகொண்டிருக்கின்ற நேரத்திலே கல்யாணம் ஆகாத நிலையில்தான் அவர்கள் பயில்கிறார்கள். செவிலியர்கள் ஹெல்த் விஸிட்டர்களாக பயிற்சியளிக்கப்படுவதுபோன்று ஒரு பயிற்சியை அவர்கள் பெற்றதற்குப் பிறகுதான் அந்தப் பணியிலே அமர்த்தப்படுகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பேறுகால மருத்துவ உதவியாளர்களுக்குக் குடியிருப்புகள்.

*வினா எண். 203—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் பணிபுரியும் பேறுகால மருத்துவ (Maternity Assistants) உதவியாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்களை மருத்துவமனை எல்லைக்குள் கட்டும் திட்டத்தினை அரசு ஏதும் மேற்கொண்டுள்ளதா

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) இல்லை.

(ஆ) எழாது.

திரு. துரை முத்துச்சாமி : சென்ற ஆண்டு இதற்காகத் திட்டமிடப்பட்டதா ? எத்தனை வீடுகளில் இப்போது குடியிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர வர்களே, தமிழ்நாட்டில் உள்ள 383 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 188 ஆரம்ப சுகாதார நிலையங்களில் துணை செவிலியர் உள்பட அனைவருக்கும் குடியிருக்க வீடு கட்டப் பட்டுள்ளது. பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர், 75 ஆரம்ப சுகாதார நிலையப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு இல்லங்கள் கட்டவும், 24 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்தகம் மற்றும் குடியிருப்பு இல்லங்கள் கட்ட செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கிறது. மொத்தமாகக் குறிப்பு வந்திருக்கிறது. தனித்தனியாகக் குறிப்பு அனுப்ப வேண்டுமென்று பொதுப் பணித்துறை கேட்கப்பட்டிருப்பதால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

வாசுதேவநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம்.

*வினா எண். 204— திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்களில் கீரல் ஏற்பட்டு, இடிந்து விழும் நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) ஆம்.

(ஆ) தற்பொழுது ஆரம்ப சுகாதார மருத்துவமனை 1—12—1977 முதல் வாடகைக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு அங்கு இயங்கி வருகிறது. பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவ இயக்குநர் ஆரம்ப சுகாதார நிலையத்திற் கான புதிய இடத்தை தேர்ந்தெடுக்கும்படி திருநெல்வேலி மாவட்ட நல்வாழ்வு அலுவலரை கேட்டு இருக்கிறார். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது அந்த மருத்துவமனை வாடகை இல்லத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, புளியம்பட்டி என்று முனிசிபாலிட்டி இருக்கிறது. அங்கு படுக்கை வசதிகளுடன் கூடிய ஆஸ்பத்திரி இல்லை. மிகப் பரிதாப கரமான நிலையில் இருக்கிறது. வாசுதேவநல்லூரில் உள்ள

பிரைமரி ஹெல்த் சென்டரும் இடிந்து விட்டது. புதிதாக வந்திருக்கும் இடம் மிகச் சிறிய கட்டிடமாக இருப்பதால் மூன்று டாக்டர்கள்கூட இருக்க முடியாது. இந்தச் சூழ்நிலை யைக் கருதி உடனடியாக புதிய கட்டிடங்கள் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவ ரவர்களே, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தொழில் கூட்டுறவு வங்கி

*வினா எண். 205— திரு. வி. கே. கோதண்டராமன். மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது?

(ஆ) ரிசர்வ் வங்கி இதை அங்கீகரித்துள்ளதா?

(இ) இல்லை என்றால், என்ன காரணம்?

(ஈ) இதுவரை எவ்வளவு கடன் வழங்கியுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி 1961-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) ரிசர்வ் வங்கி இதனை அங்கீகரிக்கவில்லை.

(இ) ரிசர்வ் வங்கி இதனை அங்கீகரிக்க சில நிபந்தனைகளை விதித்துள்ளது. இது குறித்து ரிசர்வ் வங்கிக்கும், தமிழக அரசுக்கும் கடிதப் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது.

(ஈ) 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ந் தேதி வரை தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி, குறுகிய மற்றும் நீண்ட கால கடன்களாக, மொத்தமாக ரூ.1,701.30 இலட்சம் வழங்கியுள்ளது.

உளுந்தூர்பேட்டையில் விமானதளம்.

*வினா எண். 206—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் உள்ள பழைய விமானதளத்தை சீர் செய்து விமான போக்குவரத்து நடத்தும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1978 செப்டம்பர் 14

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உளுந்தூர்ப் பேட்டையில் உள்ள பழைய விமான தளத்தைப் புதுப்பித்தால் வெளிநாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப்பயணிகள் நெய்வேலி, பாண்டிச்சேரி போன்ற இடங்களைச் சுற்றிப் பார்க்க வசதி ஏற்படும். எனவே அது புதுப்பிக்கப் படுமா? அதோடு அந்த இடம் தற்பொழுது எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது? யாருடைய பொறுப்பில் அது இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, அந்த விமான தளத்தைப் புதுப்பிக்கின்ற எண்ணம் அரசுக்குத் தற்போது இல்லை. இது மத்திய அரசினுடைய பொறுப்பிலே இருந்து வருகிறது. இந்த விமானதள இடத்தை அரிசன மற்றும் மலைசாதி வகுப்பினருக்கு வீடு கட்ட எடுத்துக்கொள்ளலாமா என்பது பற்றியும் பரிசீலனையில் இருந்து வருகிறது.

வேலூர்-நாகர்கோயில் விரைவுப் பேருந்து.

*விஞ எண். 207—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1978-ம் ஆண்டு மே மாதத்தில் வேலூரிலிருந்து நாகர்கோவில் செல்லும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த துரித வண்டி, திருவண்ணாமலைக்கு அருகில் விபத்துக்குள்ளாகியதா?

(ஆ) ஆம் எனில், அதனுல் பொதுமக்களுக்கும் அவர்களுடைய உடமைகளுக்கும் சேதாரம் உண்டா?

(இ) சேதாரத்திற்கு நட்ட ஈடு தர அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம். 8—5—1978 அன்று திருவண்ணாமலையில் அந்த விபத்து நடந்தது.

(ஆ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

1978 செப்டம்பர் 14]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, அன்றையதினம் அங்கே விவசாயிகள் மூன்று, நான்கு மாட்டு வண்டிகளில் வந்த பொழுது இரண்டு மாட்டு வண்டிகள் நொறுங்கியிருக்கின்றன, இரண்டு மாடுகள் செத்திருக்கின்றன. அவர்கள் பல்லவன் போக்குவரத்துக் கழக மேனேஜிங் டைரக்டருக்கு வக்கீல் நோட்டிஸ் கொடுத்திருக்கிறர்கள். நான் இரண்டு முறை பார்த்து, நஷ்டஈடு தருவதாகச் சொல்லியிருக்கிறர்கள். ஆனுல் மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்படிச் சொல்கிறர்கள். விபத்துக்குள்ளானவர்களின் மாட்டு வண்டிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, அவர்கள் ஏழை எளியவர்கள், எனவே அதற்குத் தகுந்த நஷ்டயீட்டைத் தருவதற்கு நடவடிக்கைகள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30.)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, இந்த விபத்திலே நான் உயிர்ச்சேதம் இல்லையென்று கூறினேன். ஆனுல் மாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதுபற்றிய குறிப்பு எனக்குத் தரப்படவில்லை. ஆனுல் இந்த விபத்திலே, லாரி ஒன்று பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்திலே மோதிய காரணத்தாலேதான் விபத்து ஏற்பட்டிருக்கிறது என்றும், புலனுய்வில் லாரிதான் அதற்குக் காரணம் என்றும் லாரி ஓட்டுநர் கைது செய்யப்பட்டு வழக்கு நடந்திருக்கிறது. பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து அந்த விபத்துக்குக் காரணமாக இருந்தால்தான் விதிமுறைப்படி நட்டஈடு கொடுக்க முடியும். அதுபற்றி, விவரம் தெரிந்து நடவடிக்கை எடுக்கிறேன்.

பீடித் தொழிலாளர்களுக்கு சேமநல நிதி.

*விஞ எண் 208—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டிலுள்ள பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு P. F. பிடிக்கும் சட்டம் கொண்டுவர அரசு ஆலோசித்து வருகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தமிழ்நாட்டிலுள்ள பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்புத் தொகை பிடிக்கும் சட்டம் 31—5—1977 முதல் கொண்டு வரப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தொழிலாளர்களின் பிள்ளைகளுக்குப் புத்தக வங்கிகள்.

*வினா எண் 209—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நமது மாநிலத்திலுள்ள பெரிய நகரங்களில், கல்லூரி செல்லும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்காக புத்தக பாங்குகளை ஏற்படுத்த உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக சென்னை, மதுரை, கோவை, திருச்சி ஆகிய, நகரங்களில் புத்தக வங்கிகள் ஆரம்பிக்கப்படும்.

திரு. எஸ். கணேசன் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில் குறிப்பிட்ட ஒருசில நகரங் களில் மட்டுமே இந்த வங்கிகள் அமைக்கப்பட இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். தொழிலாளிகள், விவசாயத் தொழிலாளிகள் நிரம்ப இருக்கிறார்கள். எனவே, பரவலாக அங்கங்கே இருக்கிற வட்டத் தலைநகரங்களிலே அப்படிப்பட்ட புத்தக வங்கிகளைத் துவக்க அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, 'லேபர் வெல்பேர் ஃபண்ட்' என்பதிலேயிருந்து இது செலவு செய்யப்படுகிறது. அதற்காக ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழு அடிக்கடி கூடி எடுக்கும் முடிவுக்கேற்ப இது விரிவு செய்யப்படுகிறது. குழுவின் முடிவிற்கொப்ப இந்த அரசு செயல்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர் களே, தொழிலாளர் குழந்தைகள் நிறையப் புத்தகங்கள் வாங்கு வதற்காக இந்த பாங்க் அமைக்கப்படுவதாகச் சொன்னார். சில ஊர்களிலே, குறிப்பாக, விக்கிரமசிங்கபுரத்திலே 10,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வசிக்கிறார்கள். அந்தப் பகுதியில் 4 கல்லூரிகள் இருக்கின்றன. அங்கு ஒரு புத்தக பாங்க் இருக்க வேண்டியது அவசியம். அதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னது, அதற்காக அமைக்கப் பட்டிருக்கிற குழு கூடி— அதில் தொழிற்சங்கத் தலைவர்கள் எல் லாம் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள்— அவர்கள் எடுக்கக்கூடிய முடிவுக்கு ஏற்ப தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். குழுவின் தலைவர் தொழிலாளர் நல அமைச்சர்தான்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த வங்கியை ஏற்படுத்துவதற்கு இதுவரையிலும் அந்தக் குழு எவ்வளவு தொகை அனுமதித்துள்ளது ? இதுவரையிலும் ஏதேனும் அதற்காகச் செலவழிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : இந்தப் புஸ்தக வங்கிகள் ஏற்படுத்துவதால் புஸ்தகங்கள் தொழிலாளர் குழந்தைகளுக்கு இலவசமாகக் கொடுக் கப்படுமா ? அல்லது குறைந்த விலையில் வழங்கப்படுமா ? அப் படிப்பட்ட ஏற்பாடுகள் எந்த எந்த இடங்களில் இப்பொழுது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த வருஷமே இப் பொழுது புஸ்தகங்கள் கிடைக்காத நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஏதாவது அந்த வங்கிகளில் செய்ய முடிந்ததா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இந்த வங்கிகள் அங்கு போய் படிப்பதற்காக செய்யப்பட்டுள்ள ஏற்பாடாகும். இந்த வெல்ஃபேர் பண்டில் பணத்திற்குப் பஞ்சம் இல்லை. எனவே நாம் எல்லாம்—குழு—உட்கார்ந்து பேசும் பொழுது விரிவான திட்டங்களை வகுத்து தொழிலாளர்கள் குழந்தைகளுக்குப் பலன் அளிக்கும் வகையில் செயல்படுத்த முயற்சி எடுக்கலாம்.

சிதம்பரம் நகருக்குக் குடி நீர் வழங்கல்.

*வினா எண் 210—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு தயவுசெய்து விடையளிப்பாரா :

(அ) சிதம்பரம் நகரில் குடி தண்ணீர் குறையினை நீக்க பூஸ்டர் சிஸ்டம் அரசு ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிதம்பரம் குடிநீர்ப் பிரச்னையைப் பற்றி முன்பு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது பூஸ்டர் சிஸ்டத்தை அமுல் படுத்தப் போகிறோம். அதனால் தண்ணீர் தாராளமாகக் கிடைக்கும் என்று பதில் அளித்தார்கள். ஆனால் விசாரித்த பொழுது அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. இப்பொழுது அமைச்சரவர்கள் அந்தத் திட்டமே இல்லையென்கிறார்கள். அதை ஏற்படுத்த உத்தேசம் உண்டா ? முதலிலே சொன்ன பதிலுக்கு அமைச்சரவர்கள் இப்பொழுது என்ன கூறுகிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி ''........ குடி தண்ணீர் குறையினை நீக்க பூஸ்டர் சிஸ்டம் அரசு ஆய்வில் உள்ளதா'' என்பது. நான் இல்லையென்று சொன்னேன். வேறு முறை ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. முன்னால் குடி தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக உடனடியாக பழைய குடிநீர்த் திட்டத்தை அபிவிருத்தி செய்யும்பொருட்டு ரூ. 20 இலட்சம் செலவில் நிர்மாணிக்கவும் ரூ. 53,000 ஆண்டு பராமரிப்புக்காகவும் திட்டமிடப்பட்டு அதற்கு அரசின் ஒப்புதல் பெற்று திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆரணி பேருந்து நிலையம்.

*வினா எண். 211—திரு. வீ. அர்ச்சுனன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு தயவு செய்து விடையளிப்பாரா :

(அ) ஆரணி நகரத்தில் உள்ள பஸ் நிலையத்தினை தாலுக்கா அலுவலகத்திற்கு எதிரில் உள்ள திடலுக்கு மாற்றுமாறு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) & (ஆ) : கோரிக்கை ஒன்றும் வரவில்லை. வேலூர் மண்டல நகராட்சி ஆய்வாளரின் ஆலோசனையின் பேரில்தான் பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற ஆணையர் நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளார்.

பெரியகுளம் பேருந்து நிலையம்.

*வினா எண். 212—திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு தயவுசெய்து விடையளிப்பாரா :

(அ) பெரியகுளம் நகரத்திலுள்ள பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) தனியார் நிலங்களை வாங்க ரூ. 2·6 இலட்சம் கடன் கோரி நகராட்சி தனி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட செயற்குறிப்பின் மேல் நிர்வாக மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற்ற பின் விரிவான திட்ட மதிப்பீடுகளுடன் கடன் விண்ணப்பத்தை புதுப்பிக்குமாறு அரசு, நகராட்சி தனி அலவலரைக் கேட்டுள்ளது.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, அங்கே பணியாற்றி வருகின்ற ஒவ்வொரு கமிஷனரும் ஒவ்வொரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த பஸ் நிலையத்தை அவர்கள் இஷ்டப்படி எடுத்துக் கொள்ளலாம் என்று திட்டம் தீட்டிக் கொள்ளுகிறார்கள். எந்த இடத்தில் அந்த பஸ் நிலையத்தைக் கட்ட அரசு சிபாரிசு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 22–6–1978-லே நமது வீட்டுவசதி அமைச்சர் அவர்கள் நேரடியாக அந்த இடத்தைப் பார்த்து அதைப் பற்றிய வரைபடத்தை அனுப்பச் சொல்லி தனி அதிகாரியைக் கேட்டார்கள். அந்த வரைபடமும் அனுப்பப்பட்டிருக்கிறது. அதை ஒட்டி அரசு அதை அணுகும்.

திருவண்ணாமலை பேருந்து நிலையம்.

*வினா எண். 213—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு தயவு செய்து விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க வேலை துவங்கப்பட்டு முடிவு பெறாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(இ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

[1978 செப்டம்பர் 14

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) வேலை துவக்கப்படவில்லை.

(ஆ) & (இ). கேள்விக்கு இடமில்லை.

(இ) நகராட்சிப் பிரயாணிகள் தங்கும் விடுதிக்கு அருகிலுள்ள நகராட்சி இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நகராட்சிக்கு அரசு அனுமதியளித்துள்ளது. ஆணையரிடமிருந்து நிர்வாக ஒப்புதலுக்கான பிரேரணைகள் வந்ததும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஓரிடத்திலே பஸ் நிலையத்தை மாற்றுவதற்குண்டான வேலைகள் செய்யப்பட்டு முடிவு பெறாமல் நிறுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே, திருவண்ணாமலையில் 7 இடங்களில் பஸ் உரிமையாளர்கள், பஸ்களை நிறுத்தி பொதுமக்களை ஏற்றிச் செல்கிறார்கள். அதனால் பொதுமக்களுக்கு மிகுந்த வசதிக் குறைவு ஏற்படுகிறது. ஆகவே அதை ஒரே இடமாக இருக்குமாறு ஏற்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்த வகையிலே போளூர் சாலையிலே, திருவண்ணாமலை நகராட்சிப் பயணியர் விடுதிக்குப் பக்கத்திலே உள்ள நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது.

அரிசனக் குடியிருப்புகளுக்குச் சொத்து வரி.

*வினா எண். 214— திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரிசனங்களுக்கு அரசு கட்டிக் கொடுக்கும் குடியிருப்புகளுக்கு வீட்டு வரி ரூபாய் பத்து விதிக்க ஊராட்சிகளுக்கு அரசு பரிந்துரை செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஆம். இது ஒரு ஆண்டுக்கு.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, இதிலே பிராபர்டி டாக்ஸ் என்று இருக்கிறது. இப்போது புதிதாக அரசால் கட்டிக் கொடுக்கக்கூடிய காலனிகள், வீடுகளுக்கு வரி 10 ரூபாய் அதிகமாக்க வேண்டும் என்று அரசு செயல் குறிப்பில் இருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் இந்த வீடுகளில் குடியேறுவதற்கு முன்னாலே கூரை வீடுகளில்தான் வசித்து வந்தார்கள். அவர்கள் கூரை வீடுகளில் இருக்கும்போது கட்டிய வரியையே இந்த வீடுகளுக்கும் கட்டுவதற்கு அரசு சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1978 செப்டம்பர் 14]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்த வகையிலேதான் அரையாண்டுக்கு 5 ரூபாய் என்று வரி வசூலிக்கப்படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இப்போது அரிசனங்களுக்குக் கட்டிக் கொடுத்த வீடுகள் இலவசமாகக் கட்டிக் கொடுத்த வீடுகள். ஏற்கனவே அவர்கள் கூலி வேலை செய்து, நாளொன்றுக்கு 3, 4 ரூபாய்கள்தான் சம்பாதிக்கிறார்கள். சில வீடுகளில் ஆண்களே இல்லாமல் பெண்கள் மட்டும்தான் சம்பாதிக்கின்ற நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு வருவாய் குறைவாக இருக்கும். எனவே இந்த 10 ரூபாய் வரி— அதாவது அரையாண்டுக்கு 5 ரூபாய் வரி என்பது மிக மிக அதிகம். ஆகவே இந்த வரியையே ரத்து செய்து இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுத்த மாதிரி கொடுத்து அரிசனங்களுக்கு வரியை ரத்து செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்த வீடுகளுக்கு மதிப்பீட்டின் படி ரூ. 30, ரூ. 40, வரி விதிக்கவும் வாய்ப்பிருக்கிறது. ஆனால் அரிசனங்களுக்குச் சலுகை காட்ட வேண்டும் என்ற அடிப்படையில்தான் அரை ஆண்டுக்கு 5 ரூபாய் வரி வசூலிக்கப்படுகிறது.

திரு. மா. மணிமாறன் : இந்த வீடுகள் அரசாங்கம்தான் புதிதாகக் கட்டிக் கொடுக்கிறதே தவிர, அரிசனங்கள் முதலீடு செய்து கட்டிய வீடுகள் அல்ல. முன்னாலே அவர்கள் வாழ்ந்த வீடு கூரை வீடுகள்தான். அவர்கள் அந்தக் கூரை வீடுகளிலே வாழ்ந்தபோது அவர்களுக்கு விதிக்கப்பட்ட வரி ரூ. 1, அல்லது $1\frac{1}{4}$ தான். எனவே புதிதாக வீடுகளைக் கட்டி முடித்து அவர்களை அங்கே மாற்றி வைத்து வரி வசூலிப்பது என்பது எப்படி என்பது நமக்குத் தெரியவில்லை. எனவே அரசு அருள்கூர்ந்து, முன்னாலே இருந்த வரியையே வசூலிக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அப்படி வரி விதிக்காமல் இயங்குகிற நிலைமையில் ஊராட்சிகள் இல்லை.

[முற்பகல் 9-40]

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, வாசுதேவநல்லூரில் 150 வீடுகள் இருக்கின்றன. அவர்களுக்கு அரையாண்டிற்கு ரூ. 25 வசூலிக்கப்படுகிறது. அதைக் குறைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அது தனிப் பிரச்னை. தனியாகக் கேட்டால் பரிசீலிக்கப்படும்.

[1978 செப்டம்பர் 14

திருத்துறைப்பூண்டி பேரூராட்சி.

*வினா எண். 215—

திரு. பொ. உத்திராபதி :
திரு. இரா. தாமரைக்கனி :
திரு. என். கிட்டப்பா :
} மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு தயவு செய்து விடையளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி பேரூராட்சியினை நகராட்சியாக ஆக்கக் கோரி அரசுக்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு இதுபற்றி மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) – (ஆ) திருத்துறைப்பூண்டி பேரூராட்சியினை நகராட்சியாக மாற்றுவதற்கான கருத்துரு நகராட்சிகளின் ஆய்வாளரின் பரிசீலனையில் உள்ளது. அரசுக்கு அறிக்கை வந்த பின்னர் அதன்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, திருத்துறைப்பூண்டி பேரூராட்சியில் 20,000-க்கும் அதிகமான மக்கள் தொகை இருக்கிறது. சென்ற மூன்று ஆண்டுக் கணக்குப்படி அதனுடைய வருமானம் ரூ. 5,51,000-க்கு இருக்கிறது. ஆனால் அங்கே நல்ல ரோடு கிடையாது, குடிப்பதற்குத் தண்ணீர் கிடையாது, நல்ல தண்ணீர் கிடையாது, தை மாதம் வந்து விட்டால் இரண்டு மைல் நடந்து சென்றுதான் குளிக்க வேண்டியிருக்கிறது. 1974-ம் ஆண்டிலேயே அதை நகராட்சியாக மாற்ற வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் என்ன காரணத் தாலோ அது மறுபடியும் நிறுத்தப்பட்டு இருக்கிறது. தொடர்ச்சி யாக அந்த மக்கள் அதை நகராட்சியாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள்., ஊராட்சி ஒன்றியம், பேரூ ராட்சி, மாவட்ட கலெக்டர் ஆகியோர் அந்தத் திட்டத்திற்கு அனுமதியும் கொடுத்துவிட்டார்கள், ஆகவே, உடனடியாக அந்த பேரூராட்சியை நகராட்சியாக இந்தத் தேர்தலுக்குள் மாற்று வதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இந்தத் தேர்தலுக்குள்ளாக நகராட்சியாக ஆக்க வேண்டும் என்ற முறை யில்தான் அரசு அதைப் பரிசீலிக்கிறது.

1978 செப்டம்பர் 14]

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, மன்னார்குடிக்கு அடுத்த பெரிய நகரமாக திருத்துறைப்பூண்டி விளங்குகிறது. திருத்துறைப்பூண்டியில் புகையிலை விளைகிறது. ஆகவே, அது ஒரு மார்கெட் சென்டராக இருப்பதாலும், தொழிலாளர்கள் அதிகமாக இருப்பதாலும், மாணவர்கள் அதிகமாக இருப்பதா லும், அது ஒரு பெரிய வியாபார ஸ்தலமாக இருப்பதாலும் அரசு அதில் சிரத்தை எடுத்துக்கொண்டு நம்முடைய அண்ணன் உத்திராபதி சொல்லியதைப்போல் அந்தப் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அதைவிட சிறிய பேரூராட்சிகள் எல்லாம் நகராட்சிகளாக மாற்றப்பட்டு இருக்கிற போது........

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நக ராட்சியாக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, அமைச்சரவர்கள் பதில் அளிக்கிறபோது விரைவில் திருத்துறைப்பூண்டி பேரூராட்சி நகராட்சியாக ஆக்கப்படும் என்று சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், திருத்துறைப்பூண்டியைப் போல் வேறு எந்தப் பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற அரசு ஆய்வு செய்து கொண்டு இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, திருமங்கலம், கீழக்கரை, திருக்கோவிலூர், கள்ளக்குறிச்சி, உசிலம்பட்டி ஆகிய 5 பேரூராட்சிகள் நகராட்சிகளாக மாற்ற ஆய்வு நடத்தப்படுகிறது.

பூதப்பாண்டி பேரூராட்சி.

*வினா எண். 216—திரு. செ. கிருஷ்ணன் : மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) கன்யாகுமரி மாவட்டம், தோவாளை ஊராட்சி ஒன்றிய எல்லைக்கு உட்பட்ட பூதப்பாண்டி பேரூராட்சியையும், சுற்று வட்டார ஊராட்சிகளையும் சேர்த்து நகர் மன்றமாக அமைக்கும் திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. செ. கிருஷ்ணன் : பேரவைத் தலைவரவர்களே, கன்னியா குமரி மாவட்டத்தில் தோவாளை தாலூக்காவில் பூதப்பாண்டி பேரூராட்சியும் நகராட்சியாக மாற்றுகிற அளவிற்கு எல்லா வசதிகளையும் கொண்டதாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் உள்ள மக்களின் நன்மையைக் கருதி அதை நகராட்சி யாக மாற்ற அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அந்தப் பரிந்துரை அரசுக்கு வருமானால், ஆலோசிக்கலாம்.

அர்ச்சகர்கள் சட்டம்.

*வினா எண். 217—திரு. எஸ். கணேசன், திரு. மா.மணிமாறன், திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு சட்டமன்றத்தினரால் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டு உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பினால் முடமாக்கப்பட்ட 'அர்ச்சகர் சட்டத்தை' செல்லுபடியாக்கிட இந்த அரசு எடுத் துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அரசியல் சட்ட திருத்தத்தின் மூலம் அடைய வேண்டிய இந்தக் குறிக்கோளை அடைவதற்கான வழிமுறைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. எஸ். கணேசன் : பேரவைத் தலைவரவர்களே, பெரி யாரின் திருவுருவப்படத்தை இந்த மன்றத்தில் திறக்க இருக்கி றோம். பெரியார் 100 ஆண்டு விழா கொண்டாட இருக் கிறோம். இந்த நேரத்தில் ஐயா அவர்களின் தொண்டுக்கு மரியாதை செய்யும் வகையில் அந்த அர்ச்சகர் சட்டம் செல்லுபடி யாகும் அளவில் அரசியல் சட்டத்தைத் திருத்தக் கோரி இந்த அரசு மீண்டும் மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, பெரியார் 100-ஆண்டு விழா கொண்டாடுகிறோம், பெரியாரின் படத்தை திறக்கிறோம் என்பது எல்லாம் நம்முடைய அதிகாரத் திற்கு உட்பட்டது. நம்முடைய கையில் இருக்கிற விவகாரங் கள். ஆனால் இது அரசியல் சட்டம் திருத்தப்பட்டு செய்ய வேண்டிய காரியம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அறிவார்கள். 1970-ம் ஆண்டில் தொடங்கி, 1975-ம் ஆண்டு வரையில் ஒரு நெருக்கடி, நிலைமையில் அது நின்று விட்டது என்பதையும் அறிவார்கள். ஆகவே, இவ்வளவு பெரிய சிக்கலான பிரச்னையை இந்த அரசு கவனத்தோடும், ஆர்வத்தோடும் பரி சீலிக்கும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தின் முன்னாள் பிரதம அமைச்சர் அவர்களுக்கு தமிழ் நாடு அரசு ஏறத்தாழ 5 முறை கடிதம் எழுதியிருக்கிறது. அப்படி யிருந்தும் மத்திய அரசு அரசியல் சட்டத்தை மாற்றியமைக்க வில்லை. எனவே, இந்த அரசு அரசியல் சட்டத்தைத் திருத்த மத்திய அரசை வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, ஏற்கெனவே 1974-ஆம் ஆண்டிலே சட்டமன்றத்தின் இரு அவை களும் சேர்ந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அது மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கே விடை கிடைக்கவில்லை ; விடிவும் பிறக்கவில்லை. ஆகவே, மீண்டும் சட்டமன்றம் வலியுறுத்துவது என்பது பரிகாரம் அல்ல. ஆனால் தக்க நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி செய்யும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இச்சட்டத்தை அமல்படுத்துவதற்கு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று முன்பு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு வலியுறுத்தியது. இன்றைய அரசும் வலியுறுத்துவ தாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். தந்தை பெரியார் அவர் கள் இந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்பதற்காக ஒரு பெரிய போராட்டத்தை நடத்தப் போவதாக அறிவித்தார்கள். ஆனால் அதற்குள் அவர்கள் மறைந்துவிட்டார்கள். அதை எல் லாம் மனதிற்கொண்டு, ஏற்கெனவே ஒரு தீர்மானத்தை நிறை வேற்றி அனுப்பியிருந்தாலும், தந்தை பெரியார் அவர்களுக்கு நாமெல்லாம் மரியாதை செலுத்தக் கூடியவர்கள் என்ற முறை யிலே, அரசியல் சட்டத்தைத் திருத்தும் வகையில் மீண்டும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பி வைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் அத்தகைய பலன் ஏற்படும் என்று எல்லோரும் எண்ணினால், ஒருமனதாக முடிவு செய்தால், அதுபற்றி அரசு பரிசீலிக்கும். முன்பு ஒரு முறை இந்தச் சட்டமன்றத்திலே தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியிருக்கும்போது மீண்டும் அப்படிபட்ட ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவது சரியாக இருக்குமா என்பதை பரிசீலித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[1978 செப்டம்பர் 14

தொட்டபெட்டா சிகரத்தில் பயணிகள் விடுதி.

*வினா எண். 218—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

உதக மண்டலத்திலுள்ள தொட்டபெட்டா சிகரத்தில் பயணிகள் விடுதி அமைப்பது பற்றிய செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

தரங்கம்பாடியை மீன்பிடி துறைமுகமாக்கல்.

*வினா எண். 219— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தரங்கம்பாடியை மீன்பிடி துறைமுகமாக்கும் செயற்குறிப்பு ஏதேனும்,உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, 1935-ஆம் ஆண்டு என்று நான் கருதுகிறேன். தஞ்சை மாவட்டத்திற்கு இப்போது தஞ்சை தலைநகராக இருப்பதைப் போல அப்போது தரங்கம்பாடி தலைநகராக இருந்திருக்கிறது. அந்த அடிப்படையிலும் மற்றுள்ள பல்வேறு அடிப்படைகளிலும் தரங்கம்பாடியின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு அதன் முக்கியத்துவத்தை கருதிதான் இன்றைய அரசு அங்கே இருக்கிற கோட்டையை புதுப்பிக்கும் திட்டத்தை உருவாக்கியிருக்கிறது. அங்கே இருக்கிற மீனவர்களின் நலனையும் கருத்திற்கொண்டு தரங்கம்பாடியை ஒரு மீன்பிடித் துறைமுகமாக ஆக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவரவர்களே, மீன்பிடித் துறைமுகத்தை அமைப்பது, பெங்களூரில் இருக்கிற மீன்பிடி துறைமுக முதலீட்டு ஆய்வுக் குழுவின் ஒப்புதல் பெற்றுதான் நாம் அமைக்க முடியும். அவர்கள் பரிசீலித்து, இப்போதுள்ள நிலையில் சாத்தியக்கூறு இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே, உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல தரங்கம்பாடியின் முக்கியத்துவத்தை மனதிற்கொண்டு இந்த அரசு மத்திய அரசை நிச்சயம் வலியுறுத்தும்.

1978 செப்டம்பர் 14]

Fair Price shops opened by Central Government

*Q. No. 220 Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Food be pleased to state :

(a) whether a number of Fair Price shops are being set up by the Union Ministry of Civil Supplies in this State from June 1978 and

(b) Whether the State Government has been consulted by the Central Government in the matter?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) & (ஆ) மத்திய அரசு இதற்கான ஒரு திட்டம் வகுப்பது பற்றி ஆலோசித்து வருகிறது. மாநில அரசு தன் கருத்துக்களைத் தெரிவித்துள்ளது. மைய அரசு இன்னும் ஒரு முடிவு எடுக்கவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நமது மாநில அரசு கூட அண்மையில் 16,000 நியாய விலைக் கடைகளை அமைப் போம் என்று சொல்லி, சிலபல இடங்களில் அமைக்கப்பட்டும் இருக்கின்றன. இந்த நேரத்தில் மைய அரசு இத் திட்டத்தை நிறைவேற்ற முன்வந்தால் நமது அரசு அதை வரவேற்று விரைந்து செயல்படுத்த மத்திய அரசை வலியுறுத்த என்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது? அதில் மாநில அரசுக்கு ஏதேனும் பங்கு உண்டா ?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மைய அரசாலே ஆரம்பிக்கப்பட இருக்கின்ற இந்த நியாய விலைக் கடைகளில் மாநில அரசுக்கு எந்தவிதமான பங்கும் நிச்சயமாக இல்லை. இப்பேர்ப்பட்ட கடைகளை ஆரம்பிப்பதற்கான ஆலோசனையை மைய அரசு மாநில அரசுடன் கேட்ட நேரத்தில் தமிழக அரசு அதை நிறைவேற்ற தன்னுடைய கருத்துக்களை ஏற்கெனவே எடுத்துச் சொல்லி இருக்கின்றது. இது இன்னும் மைய அரசினுடைய பரிசீலனையில் தான் இருக்கிறது. இன்னும் அதனுடைய முடிவினைத் தெரிவிக்கவில்லை. அவர்கள் அவ்வாறு முடிவினைத் தெரிவித்த பிறகு தமிழக அரசு அதன் மேல் நடவடிக்கைக் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1978 செப்டம்பர் 14

காவேரிப்பட்டணத்தை வட்டத் தலைநகரமாக்கல்.

*வினா எண் 221—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு தயவு செய்து விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் காவேரிப்பட்டணத்தை வட்டத் தலைநகராக்க அரசு ஏதேனும் செயல் திட்டம் வைத்துள்ளதா?

(ஆ) 1972-ல் அரசு அதற்கான செயல் திட்டத்தைப் பரிசீலித்து பூர்வாங்க வேலைகளை முடித்துள்ளது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) & (ஆ) இல்லை.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே, தருமபுரி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணகிரி வட்டத்தை இரண்டாகப் பிரித்து காவேரிப்பட்டணத்தை ஒரு வட்டமாக்க வேண்டும் என்று 1972-லே ஒரு தீர்மானம் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதை நான் அறிகிறேன். அது தவிர அண்மையிலே நடைபெற்ற மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூட மாவட்ட ஆட்சித் தலைவரால் இப்படிப்பட்ட ஒரு தீர்மானம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே தயவு செய்து மீண்டும் பரிசீலனை செய்து தகுந்த முடிவினை அறிவிக்க முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, அது மீண்டும் பரிசீலிக்கப்படும். ஆனால் அவர் சொல்வது போல் இதுவரை எந்தவிதமான தீர்மானமும் அரசுக்கு வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தில் எடுக்கப்பட்ட உபரி நிலங்கள்

*வினா எண் 222—திரு. நா. பழனிவேல்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உடைமை உச்சவரம்பு நிர்ணயிப்பு) சட்டத்தின்கீழ் மதுரை மாவட்டத்தில் எடுக்கப்பட்ட உபரி நிலம் எவ்வளவு?

(ஆ) சென்னை உயர்நீதி மன்றத்தில் தடை உத்தரவில் நடவடிக்கை எடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்ட நிலத்தின் அளவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) 9,945 ஏக்கர்கள்.

(ஆ) 2,362 ஏக்கர்கள்.

1978 செப்டம்பர் 14]

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட மொத்த நிலம் 9,945 ஏக்கர் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். இந்த 9,945 ஏக்கர் நிலமும் யார் யாருக்கு பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது? எந்தெந்தத் தாலுக்காக்களில் அந்த நிலங்கள் எடுக்கப்பட்டுள்ளது ஆகிய விவரங்களை அமைச்சரவர்கள் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, தாலுக்கா வாரியாக விவரங்கள் இல்லை. யார் யாருக்குக் கொடுக்கப்பட்டது என்ற பெயர்கள் அடங்கிய விவரங்களும் இல்லை. ஆனால் யார் யாருக்குக் கொடுக்க வேண்டும் என்று சட்டதிட்டங்களில் எப்படி இருக்கின்றதோ அந்த முறைகளைப் பின் பற்றிக் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு என். பழனிவேல்: தலைவரவர்களே, எடுக்கப்பட்ட ஏக்கர் நிலத்தின் அளவை மட்டும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் யார் யாரிடமிருந்து எடுக்கப்பட்டது என்று சொல்லவில்லை. அதுபோல் யார் யாருக்குக் கொடுக்கப்பட்டது என்ற விவரத்தையும் சொல்லவில்லை. ஆனால் யார் யாருக்குக் கொடுக்கலாம் என்று அரசு உத்தேசித்துள்ளது என்று சொல்கிறார். இது அரசாங்கத்தினுடைய சரியான அணுகுமுறையாகத் தெரியவில்லை. ஆகவே, பழனி தாலுக்காவில்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் துணைக் கேள்வியாகக் கேளுங்கள். விளக்க வேண்டாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, நிலத்தைக் கொடுக்கிற போது அதிலே சில வரைமுறைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. முன்னாலேயே உழுது பயிர் செய்கின்றவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அது மட்டுமல்ல. நிலமற்றவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆதி திராவிட மக்களுக்குக் கொடுக்கப்படுகிறது. மலைவாழ் மக்களுக்குக் கொடுக்கப்படுகிறது. நிலம் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆகவே அப்படித் தவறி எங்கேயாவது நிலம் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதனை ஆராய்ந்து கொடுத்த நிலத்தைத் திரும்ப எடுத்துக் கொள்வதற்கு அரசு தயாராக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, இப்போது கிராமப் புறங்களிலுள்ள மக்களின் வாங்கும் சக்தியை அதிகப்படுத்த வேண்டும் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். அடுத்து கிராமத்திலே இருக்கின்றவர்களுக்கு வேலைவாய்ப்பினைப்

பெருக்க வேண்டும் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒரு பகுதியாகத்தான் இந்த உச்ச வரம்புச் சட்டத்தால் கிடைத்த உபரி நிலத்தை எடுத்து சாதாரண உழைக்கும் மக்களுக்குக் கொடுப்பது என்பது ஒரு முக்கியமான திட்டம். ஆனால் இந்தத் திட்டத்தை அமல் நடத்துகின்ற போது அலுவலர்கள் பல தவறுகளைச் செய்வதால், ஹைக்கோர்ட் வரைக்கும் போக வேண்டிய அளவுக்குக் கூட நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. இப்படிப் பட்ட நிலைமைகளை அனுபவத்திலிருந்து நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். ஆகவே........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள், தாங்கள் விளக்கமாகச் சொல்லி கடைசியிலே கேள்வி கேட்பது என்றால் அதற்கு நேரம் இல்லை.

<u>திரு. என். வரதராஜன் :</u> தலைவரவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருப்பதால் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்றுதான் இதனைச் சொல்கிறேன். இது தமிழ்நாடு முழுமைக்கும் உள்ள ஒரு முக்கியமான பிரச்சினை. ஆகவே இந்த அலுவலர்கள் பணியாற்றுவது பற்றிய ஆலோசனைகளைக் கூற, அவர்களைக் கண்காணிக்க மக்கள் குழு ஒன்று அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> சாதாரணப் பிரச்னையைக்கூட இந்த அரசு கவனமாகக் கவனிக்கத் தயாரா யிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் சொல்லப் பட்ட முக்கியமான பிரச்னையை இன்னும் முக்கியமாகக் கவனிக்க அரசு தயாராயிருக்கிறது. இப்படிப்பட்ட தவறுகள் எங்கே யாவது நடந்திருக்கிறது என்று சொன்னால் அதை உடனடி யாகக் கவனிக்க அரசு தயாராயிருக்கிறது.

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> இந்த நில உச்ச வரம்புச் சட்டத் தின் கீழ் மிச்ச நிலத்தை எடுத்துக் கொள்ளும்போது பலவித முறைகேடுகள் நடக்கின்றன. அதற்குக் காரணம், இன்றுள்ள விதிகளில் மிச்ச நிலத்தைக் கொடுப்பது சாகுபடி செய்து கொண் டிருப்பவர்களுக்கும், அவர்கள் ஐந்து ஸ்டான்டேர்ட் ஏக்கராவிற் குக் கீழ் வைத்திருந்தால் கொடுக்கலாம் என்றிருக்கிறது. ஐந்து ஸ்டான்டேர்ட் ஏக்கர் என்று சொல்லும்போது கிராமங் களில் இருபது சாதாரண ஏக்கர் வரை வருகிறது. ஆகவே நிலம் உள்ளவர்களுக்கும் போய்ச் சேருகிறது. ஐந்து ஸ்டான்டேர்ட் ஏக்கர் என்பதற்குப் பதிலாக சாதாரண ஐந்து ஏக்கர்களுக்கு மேல் இருந்தால் கொடுக்கக் கூடாது என்று செய்து நிலம் இல் லாதவர்களுக்குக் கொடுக்ககூடிய முறையில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வருவார்களா?

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u>—ஸ்டாண்டேர்ட் ஏக்கர் ஐந்து உள்ளவர்களுக்குக் கொடுக்கலாம் என்ற சட்டம் அரசாங்கக் கணக்கில் இதுவரையில் இல்லை. ஐந்து ஏக்கர் என்று இனிமேல் வேண்டுமானால் திருத்தலாமே தவிர இப்போது அப் படிப்பட்ட சட்டம் இல்லை.

Jagir lands in Kalrayan hills

*Q. No. 223 : THIRU C. PALANIMUTHU : Will the Hon. the Minister for Revenue be pleased to state:

(a) whether survey and settlement has been completed in the erstwhile Jagirs of Chinnakalrayan and Periakalrayan areas in Salem District in pursuance of Minor Inams Abolition Act;

(b) the extent of lands settled in favour of the Tribal people;

(c) whether Non-Tribal people also have been given 'patta' in the Settlement; and

(d) if so, the extent of lands so given to them?

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> (அ) பெரிய
கல்ராயன் மேல்நாடு மற்றும் கீழ்நாடு ஜாகிர்கள் தமிழ்நாடு இனும்
எஸ்டேட்டுகள் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றல்) சட்
டம் 1963ன் கீழ் 13—2—1973 அன்று எடுத்துக் கொள்ளப்பட்டு
சர்வே மற்றும் செட்டில்மெண்ட் வேலைகள் நடைபெற்று வரு
கின்றன. சின்னகல்ராயன் ஜாகிர்கள் பசலி 1381 (1970-71)ல்
தமிழ்நாடு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரி
யாக மாற்றல்) சட்டம் 1963ன் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு
செட்டில்மெண்ட் செய்யப்பட்டு விட்டன.

(ஆ) சின்ன கல்ராயன் மலைகளில் (வடக்கு நாடு மற்றும்
தெற்கு நாடு) 3303—07—5 ஹெக்டேர்கள் விஸ்தீர்ணம்
1,647 மலைசாதி மக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. பெரிய
கல்ராயன் மலைகளில் இதுவரை 2,434—72—5 ஹெக்டேர் நிலம்
1,186 மலைசாதி மக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

(இ) ஆம்.

(ஈ) சின்ன கல்ராயன் (வடக்குநாடு மற்றும் தெற்கு நாடு)
மலைகளில் 256—15—5 ஹெக்டேர்கள் நிலம் மலைச்சாதியினர்
அல்லாத 51 பேருக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. பெரிய கல்
ராயன் மலைகளில் இதுவரை 14—30—00 ஹெக்டேர் நிலம்
மலைச்சாதியினர் அல்லாத நான்கு பேருக்குக் கொடுக்கப்பட்டுள்
ளன.

[1978 செப்டம்பர் 14

திருமயம் வட்டத்தில் மோட்டார்களுக்கு மின் இணைப்பு.

*வினா எண். 224—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலுகாவில் எத்தனை கிணறுகளுக்கான மின்சார மோட்டார்களுக்கு மின் இணைப்புக் கோரி மனுக்கள் வந்துள்ளன?

(ஆ) எத்தனை கிணறுகளுக்கு மின் இணைப்பு இந்த ஆண்டு கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். (அ) 1444 மனுக்கள்.

(ஆ) சுமார் 150 பம்பு செட்டுகள்.

அரசு ஊழியர்களது சேமநிதிக் கணக்குகள்.

*வினா எண். 225—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநில சர்க்கார் ஊழியர்களின் பிராவிடன்ட் பண்டு கணக்குகளை மத்திய சர்க்காருக்குப் பதிலாக மாநில சர்க்காரே நிர்வகிக்க உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

திரு. மீ. வின்சென்ட் : (அமைச்சரின் பேரவை செயலர்).

(அ) தற்போது அத்தகைய செயற் குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். கணேசன் : புயல், வெள்ளம், மற்ற இயற்கைக் கொடுமைகள் எல்லாம் கேட்டுக் கொண்டு வருவதில்லை. அவை அடிக்கடி வருகின்றன. இதனால் தொழிலாளர் தோழர்கள் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள். வாழ்க்கை கூட அவர்களுக்கு நலிந்து விடுகிறது. இந்த ப்ராவிடண்ட் பண்ட் மத்திய அரசினால் நிர்வகிக்கப்படுகிற காரணத்தினால் தொழிலாளர்கள் தங்களுக்குத் தேவையான உதவியை உடனடியாகப் பெறுவதற்குத் தாமதம் ஏற்படுகிறது. எனவே அவர்கள் சௌகரியத்தை முன்னிட்டாவது இந்த வைப்பு நிதியை மாநில அரசே வைத்துக்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1978 செப்டம்பர் 14]

[முற்பகல் 10-00]

திரு. மீ. வின்சென்ட் : (அமைச்சரின் பேரவை செயலர்), சம்பந்தப்பட்ட சேமநல நிதி கணக்கில் தவறுகள் ஏதும் இருந்தால் அந்தப் புகார்களைத் தங்கள் அலுவலகம் மூலம் அனுப்பி வைக்கலாம் என்று மாநில கணக்காய்வுத் துறைத்தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்கள். மேலும் இந்தக் கணக்கை ஒழுங்காகக் கவனிக்க ஏற்பாடு செய்துள்ளதாகவும் தெரிவித்திருக்கிறார்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

முதியோர் உதவித் தொகை பெறுவோர்.

வினா 401—திரு. செஞ்சி ந. ராமச்சந்திரன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தற்போது தென் ஆர்க்காடு மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகை பெறுபவர்கள் எத்தனை பேர் ?

விடை :

1. இம்மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகை திட்டத்தின் கீழ் ஒய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை 4703.

2. உடல் ஊனமுற்ற ஆதரவற்றோர் ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை 605.

3. விதவைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை 595.

வினா 402—திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தாலுக்காவில் எத்தனை பேர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்படுகிறது ?

(ஆ) எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க அரசு உத்தேசித்து உள்ளதா ?

விடை :

(அ) திருமயம் தாலுக்காவில் 77 ஆண்களுக்கும் 208 பெண்களுக்கும் பொதுவான திட்டத்தின் கீழும் 80 பெண்களுக்கு ஆதரவற்ற விதவையர்க்கான திட்டத்தின் கீழும், 21 ஆண்களுக்கும் 13 பெண்களுக்கும் உடல் ஊனமுற்றோர்க்கான திட்டத்தின் கீழும் முதியோர் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

(ஆ) தற்போது அத்தகைய செயற்குறிப்பு ஏதும் இல்லை.

கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை காலத்தில் காலி இடங்கள் பற்றி வானொலியில் அறிவித்தல்.

வினா 403— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்லூரிகளில் சேர இருக்கின்ற மாணவர், மாணவிகளுக்கு எந்தெந்தக் கல்லூரிகளில் இடம் இருக்கின்றதென்று வானொலியில் அறிவிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை :

(அ) & (ஆ) : அரசினர் கலைக் கல்லூரிகளில் புகுமுக வகுப்பு, பட்டப்படிப்பு வகுப்புகளில் மாணவர் சேர்க்கை நடக்கும்போது அந்தந்த வகுப்புகளில் உள்ள காலி இடங்களைப் பற்றி மாணவர்கள் அறிவதற்காக சம்பந்தப்பட்ட அரசுக் கல்லூரி முதல்வர்கள் நேரடியாக அகிலஇந்திய வானொலி நிலையத்தினருக்குக் காலி இடங்கள் பற்றிய அறிக்கை ஒன்றினை அனுப்ப வேண்டும் என 15—6—1972 தேதியிட்ட அரசாணை எண். 890 (கல்வித் துறை) ல் அனுமதிக்கப்பட்டு செயலாக்கப்பட்டு வருகிறது. 1977–78-ம் ஆண்டிலும் காலி இடங்கள் பற்றிய விவரம் வானொலி நிலையத்திற்குத் தெரிவிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

கல்லூரி முதல்வர்கள் மாணவர்கள் சேர்க்கை காலத்தில், அவ்வப்போது உள்ள காலி இடங்கள் பற்றிய விவரத்தினை "அகில இந்திய வானொலி" நிலையத்தினருக்கு அளிக்க வேண்டும். இவ் விவரம் நிலையத்தினரால் பொது மக்கள், மாணவர் தகவலுக்காக அறிவிக்கப்படும்.

தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்ட புயல் சேதங்கள்.

வினா 404— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

12—11—1977 அன்று வீசிய புயல் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்ட சேதம் எவ்வளவு ?

விடை :

	(ரூபாய் கோடியில்)
சாலைகள், துறைமுகங்கள், மின் விசை, நீர்ப் பாசனங்கள், பள்ளிக் கட்டிடங்கள், அரசு கட்டிடங்கள் முதலியவற்றின் சேதம் மதிப்பு.	7.40
பயிர் சேதம் மதிப்பு	17.17
மின் படகுகளின் சேதம் மதிப்பு..	0.08
	24.65

தமிழ் நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகள்.

வினா 405— திரு. துரைமுத்துசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் மொத்தம், தனியார், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் எத்தனை உள்ளன ?

(ஆ) அதில் எவையெவை லாபத்தில், நஷ்டத்தில் நடைபெறுகின்றன ?

விடை :

(அ) & (ஆ) : தமிழ் நாட்டில் தற்பொழுது 21 சர்க்கரை ஆலைகள் உள்ளன. அவைகளில் பெயர்களும் 1976–77-ம் ஆண்டில் அவைகள் அடைந்த தோராய இலாப நட்ட விபரங்களும் பின்வருமாறு :

வரிசை எண்.	கூட்டுறவுத் துறை.	நிகர லாபம்.	நிகர நட்டம்.
		(ரூ. இலட்சத்தில்).	
(1)	(2)	(3)	(4)
1	மதுராந்தகம்	..	59.83
2	ஆம்பூர்	21.01	..
3	அமராவதி	..	57.76
4	சேலம்	..	5.12
5	நேசனல்	..	7.35
6	கள்ளக்குறிச்சி	10.53	..
7	தருமபுரி	4.47	..
8	வேலூர்	வெள்ளோட்ட அரவை ஆண்டு.	
9	திருப்பத்தூர்	வெள்ளோட்ட அரவை ஆண்டு.	

வரிசை எண்.	தனியார் துறை.	நிகர லாபம்.	நிகர நட்டம்.
		(ரூபாய் இலட்சத்தில்)	
(1)	(2)	(3)	(4)
1	சவுத் இந்தியா	2.30	..
2	மதுரை	..	19.17
3	சக்தி	..	98.9
4	அருணா	..	20.00
5	திரு ஆரூரான்	..	3.25

வரிசை எண்.	தனியார் துறை.	நிகர லாபம்.	நிகர நட்டம்.
		(ரூ. இலட்சத்தில்.)	
(1)	(2)	(3)	(4)
6	கோத்தாரி	..	51.17
7	இ.ஐ.டி. பாரி	..	60.65
8	காவேரி	..	41.92
9	டெக்கான்	..	47.00
10	பாலார்	..	இயங்கவில்லை

பொதுத் துறை.

1	அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை.	வெள்ளோட்ட அரவை ஆண்டு.	
2	ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை.	வெள்ளோட்ட அரவை ஆண்டு.	

மின்துறை அலுவலகக் கட்டிடங்கள்.

வினா 406—திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மின் திட்டத்தில் (Kanyakumari Electricity System) எத்தனை அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன ?

(ஆ) இவைகளுக்கு வாடகையாக ஒரு வருடத்திற்கு மின் வாரியம் எவ்வளவு பணம் செலவு செய்கின்றது ?

(இ) அலுவலகங்களுக்காக சொந்தக் கட்டிடங்கள் கட்ட மின் வாரியத்திட்டம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

விடை :

(அ) 48

(ஆ) ரூ. 58,536.

(இ) இல்லை.

விஞ 407—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசபாக்கத்தில் எத்தனை மின்துறை அலுவலகங்கள் வாடகைக் கட்டிடத்தில் உள்ளன ?

(ஆ) போதிய கட்டிடம் கட்ட எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மூன்று அலுவலகங்கள் ஓரே வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றன.

(ஆ) பொருளாதார நெருக்கடியின் காரணமாக சொந்தக் கட்டிடங்கள் கட்டுவதில்லையென மின்சார வாரியம் தீர்மானித்துள்ளது.

பழனி வட்டத்தில் குடிநீர் வழங்கு திட்டங்கள்.

விஞ 408—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

பழனி வட்டம், நெய்க்காரப்பட்டி, ஆயக்குடி ஆகிய பேரூராட்சிப் பகுதிகளில் இருந்துவரும் குடிநீர்க் கஷ்டத்தைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—பழனி வட்டம், நெய்க்காரப்பட்டி பேரூராட்சியின் குடிநீர் கஷ்டத்தைப்போக்க குடிநீர் வடிகால் வாரியம் ஓர் திட்டம் தயாரித்தது. அதற்கு அரசு ஆணை எண். 1263, நாள் 5–8–78-ல் ஒப்புதலும் அளித்துள்ளது. ஆயக்குடி பேரூராட்சி பற்றிய திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

கோவை பயிற்சி மருத்துவ விடுதியின் உணவு வழங்கல் பிரிவு.

விஞ 409—திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் பயிற்சி மருத்துவ விடுதியில் உணவு வழங்கும் பிரிவு கடந்த ஆறுமாத காலமாக மூடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன ?

(இ) பயிற்சி மருத்துவர்களுக்கு உணவளிக்க என்ன மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பொருளாதார நெருக்கடியால் 19–9–77-ல் மூடப்பட்டது.

(இ) மாணவர் விடுதி 19–3–78 முதல் செயல்பட்டு வருகிறது.

எடுத்தனூர் அரிசனக் குடியிருப்பில் தெரு விளக்குகள்.

விஞ 410—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு ஒன்றியத்தைச் சேர்ந்த எடுத்தனூர் அரிசன காலனிக்கு தெருவிளக்கு போட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதா ?

விடை—தண்டராம்பட்டு பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த எடுத்தனூர் அரிசன குடியிருப்புப் பகுதிகளுக்கு ஏற்கனவே தெரு விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. மேலும் 10 (பத்து) கூடுதலாக விளக்குகள் போடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பணி முடிக்கப்பட்டு 21–6–78 ஆம் தேதியன்று இப்பத்து விளக்குகளுக்கும் மின்சக்தி அளிக்கப்பட்டது.

நாவலூர் குட்டப்பட்டு கிராமத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மாணவர்களுக்குப் பயிற்சி.

விஞ 411—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை-பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) திருச்சி மாவட்டம் நாவலூர் குட்டப்பட்டு கிராமத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் எத்தனை மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது ?

(ஆ) அதில் தமிழ்நாடு அரசின் பங்கு என்ன ?

[1978 செப்டம்பர் 14

விடை—

(அ) நாவலூர் குட்டப்பட்டு கிராமத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நெல், சோளம், கம்பு, நிலக்கடலை சாகுபடி, வீட்டுக் காய்கறித் தோட்டம், களர் உவர் நிலங்களைச் சீர்திருத்துதல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பயிற்சிக்கும் 20 பேர்கள் அனுமதிக்கப் படுகிறார்கள். இனிமேல் ஒவ்வொரு பயிற்சிக்கும் 35 பேர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

(ஆ) இந்த நிலையத்திற்கு 39·75 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை இலவசமாக அரசு வழங்கியுள்ளது.

சூரிய அடுப்பு.

வினா 412—திரு. என். கிட்டப்பா :—மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) மதுரை தொழில் கல்லூரியில் சூரிய அடுப்பு கண்டு பிடிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மதுரை தமிழ்நாடு பாலிடெக்னிக்கைச் சேர்ந்த ஆசிரியர்களும், மாணவர்களும் சேர்ந்து சுதேசிப் பொருட்களை உபயோகித்து ஒரு சூரிய அடுப்பைக் கண்டுபிடித்துள்ளனர். மூங்கில் மற்றும் வெள்ளித் தாட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த சூரிய அடுப்பு 1·5 மீட்டர் குறுக்களவும், 2 மீட்டர் குவியீர்ப்பு மையமும் 1·8 மீட்டர் பரப்பளவையும் கொண்டது. சூரியக் கதிர்கள் குவியீர்ப்பு மையத்தில் விழுவதால், தேவையான உஷ்ணம் உண்டாகிறது. மேற்படி உஷ்ணத்தால் 20 நிமிடத்தில் அரிசியை சமைக்கலாம். அடுப்பின் விலை ரூ. 80 ஆகும். பராமரிப்புச் செலவும் குறைவாகும். அதனைக் கையாளுவதில் தனிப்பட்ட அறிவு தேவையில்லை. மேற்படி அடுப்பு சுத்தமாகவும், கையடக்கமாகவும், திறந்த வெளியில் மிக எளிதில் உபயோகப்படுத்தலாம்.

1978 செப்டம்பர் 14]

காவல் துறையினருக்குப் பயணப்படிகள்.

வினா 413—திரு. என். கிட்டப்பா :—மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவல் துறையினருக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் பயண காலப்படி நாள் ஒன்றுக்கு எவ்வளவு தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது ?

(ஆ) அதனை உயர்த்தித் தரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

(அ) காவல் துறையினருக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் பயணக்கால தினப்படி:—

	பதவித்தரம்.	பயணக் காலப்படி.
1	காவலர் (இரண்டாம் நிலை)	நாளொன்றுக்கு ரூபாய் 4.
	காவலர் (முதல் நிலை) ..	நாளொன்றுக்கு ரூபாய் 6.
2	தலைமைக் காவலர் ..	நாளொன்றுக்கு ரூபாய் 6.
3	ரூபாய் 399 வரை ஊதியம் பெறும் உதவி சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும், ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும், சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும்.	நாளொன்றுக்கு ரூபாய் 6.
4	ரூபாய் 400-க்கு மேல் மாத ஊதியம் பெறும் உதவி சப் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர், ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர், டெபுடி இன்ஸ்பெக்டர் ஆகியவர்களுக்கு.	நாளொன்றுக்கு ரூபாய் 8.
5	அரசிதழ் (Gazetted) பதிவு பெற்ற காவல் துறை அலுவலர்களுக்கு.	நாளொன்றுக்கு ரூபாய் 10.
6	அனைத்திந்திய காவல் துறை அதிகாரிகளுக்கு.	நாளொன்றுக்கு ரூபாய் 12·50.
7	துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரலுக்கும் அதற்கு மேலும்.	நாளொன்றுக்கு ரூபாய் 15.

(ஆ) காவல் துறையினருக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் பயண காலப்படியை உயர்த்தித் தரும் செயற் குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

[1978 செப்டம்பர் 14

குடும்ப நலத் திட்டத்தின்கீழ் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட சிறைவாசிகள்.

வினா 414 — திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

1977-78 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் குடும்ப நலத் திட்டத்தின்கீழ் அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் எத்தனை பேர், மத்திய சிறைச்சாலை வாரியாக?

விடை — இம் மாநிலத்திலுள்ள சிறைகளில் மொத்தம் 149 சிறைவாசிகள் 1977-78 ஆம் ஆண்டில் குடும்ப நலத் திட்டத்தின்கீழ் அறுவை சிகிச்சை செய்துக் கொண்டனர்.

மத்திய சிறைவாரியான விவரம் பின்வருமாறு: —

1	மத்திய சிறை, மதுரை ..	20 சிறைவாசிகள்.
2	மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி	31 சிறைவாசிகள்.
3	மத்திய சிறை, கடலூர்	16 சிறைவாசிகள்.
4	மத்திய சிறை, சென்னை ..	3 சிறைவாசிகள்.
5	மத்திய சிறை, கோவை ..	16 சிறைவாசிகள்.
6	மத்திய சிறை, வேலூர்	55 சிறைவாசிகள்.
7	மத்திய சிறை, சேலம் ..	3 சிறைவாசிகள்.
8	மாநில மகளிர் சிறை, வேலூர் ..	5 சிறைவாசிகள்.
	மொத்தம் ..	149

அரியலூர்-செந்துறை சாலை.

வினா 415— திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர்—செந்துறை சாலையில் கி. மீ. 11,6, பொய்யாதநல்லூர், இலுப்பையூர், வெள்ளூர், நக்கம்பாடி வரை 10 கி. மீ. சாலை ரூபாய் 7 இலட்சம் மதிப்பீட்டில் கிராமச்சாலை திட்டத்தில் அபிவிருத்தி செய்ய அரசு அனுமதி கோரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

1978 செப்டம்பர் 14]

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மருந்து ஆய்வாளர்கள்.

வினா 416— திரு. ஏ. செல்லப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் Drug Inspector எத்தனை பேர்?

(ஆ) அதில் Senior Inspector-கள் எத்தனை பேர்?

(இ) இவர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர்?

விடை :—(அ) 59 பேர்கள்.

(ஆ) 59 மருந்து ஆய்வாளர்களைத் தவிர 10 முதுநிலை ஆய்வாளர்கள் உள்ளனர்.

(இ) மருந்தாய்வாளர்களில் இரண்டு பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். முதுநிலை ஆய்வாளர்களில் அவ் வகுப்பைச் சார்ந்தவர் ஒருவரும் இல்லை.

வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள சாலை உருளைகள்.

வினா 417 — திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் உள்ள இரு பிரிவுகளிலும் எத்தனை Road Roller-கள் உள்ளன.

(ஆ) பற்றுக்குறையைத் தவிர்க்கும் வகையில் மேலும் வாங்கும் உத்தேசம் உண்டா?

விடை — (அ) 23 சாலை உருளைகள் (Road Roller).

(ஆ) சாலை உருளைகள் ஒரு குறிப்பிட்ட கோட்டத்திற்காகவோ அல்லது கோட்டத்தின் பணிகளுக்காகவோ வாங்கப்படுவதில்லை. ஆதலால் மாநிலம் முழுவதும் உள்ள பணிகளின் தேவைகளுக்கேற்ப சாலை உருளைகள் வாங்கப்படுகின்றன. 1976-77 ஆம் ஆண்டில் நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித்துறைக்கு 39 சாலை உருளைகள் வாங்கப்பட்டுள்ளன. மேலும் அண்மையில் தனித் தலைமைப் பொறியாளர் (சாலை-வெள்ள நிவாரணப்பணி) அலுவலகத்திற்கு, வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 7 சாலை உருளைகள் வாங்குவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

வட ஆற்காடு மாவட்டத்தில் வெள்ள நிவாரணப் பணிகளின்கீழ் சாலை வேலைகள்.

வினா 418 — திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூர், திருவண்ணாமலை ஆகிய இரு டிவிஷன்களுக்கும் வெள்ள நிவாரணப்பணிகளின்கீழ் சாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) இதில் எந்த சாலைகள், பாலங்கள் முதலியவைகளைப் பராமரிப்பு செய்ய எவ்வளவு தொகை செலவிடப்பட்டது ?

(இ) இந்த வேலைகள் எப்பொழுது முடிவுறும் ?

விடை — (அ) வேலூர் பெருவழித்துறைக் கோட்டம் ரூபாய் 31·00 இலட்சம்.

திருவண்ணாமலை பெருவழித்துறைக் கோட்டம் ரூபாய் 58 இலட்சம்.

(ஆ) வேலூர் பெருவழித்துறைக் கோட்டம்.

1977-78-ல் அரசு சாலை, சிறு பாலங்கள், தரைப் பாலம், பள்ளங்கள் ஆகியவைகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூபாய் 14·25 இலட்சம். எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் 187 ஆகும்.

1977-78-ல் ஊராட்சி/ஊராட்சி ஒன்றிய சாலை, சிறுபாலங்கள், தரைப்பாலம், பள்ளங்கள் ஆகியவைகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூபாய் 14·21 இலட்சம். எடுத்துக்கொள்ளப்பட்டவேலைகள் 816 ஆகும்.

திருவண்ணாமலை பெருவழித்துறைக் கோட்டம்.

1977-78-ல் அரசு சாலை, சிறு பாலங்கள், தரைப்பாலம் பள்ளங்கள் ஆகியவைகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூபாய் 25·01 இலட்சமாகும். எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் 329 ஆகும். 1977-78-ல் ஊராட்சி/ஊராட்சி ஒன்றிய சாலை, சிறு பாலங்கள், தரைப்பாலம், பள்ளங்கள் ஆகியவைகளுக்காக செலவிடப்பட்ட தொகை ரூபாய் 23·00 இலட்சமாகும்.

(இ) இந்த வேலைகள் 30-6-1978-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தேம்பள்ளி—திருவலம் வரத்துக் கால்வாய்.

வினா—419 திரு. துரை முருகன்: மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜா வட்டம் தேம்பள்ளி ஏரியிலிருந்து திருவலம் கெம்பராஜபுரம் ஏரிக்குச் செல்லும் கால்வாய் பழுதுபட்டு உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அக்கால்வாயை மராமத்து செய்து தூர் எடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை —(அ) ஆம்.

(ஆ) இந்த வரத்துக் கால்வாயில் தூர் எடுப்பதற்காக ரூபாய் 80,000-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கும் நிலையில் உள்ளது. இவ்வாண்டு இப்பணி துவக்கப்படும்.

முகையூர் தொகுதியில் அரிசனங்களுக்கு வழங்கப்பட்ட மனைப் பட்டாக்கள்.

வினா—420 திரு. கோ. ரகோத்தமன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதியில் எத்தனை அரிசனக்காலனிகளில் மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது ?

(ஆ) தீப்பிடிக்காத வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை வீரங்கிபுரம், ஜம்பை, மாரங்கியூர் ஆகிய கிராமங்களுக்கு விஸ்தரிக்க உத்தேசம் உள்ளதா ?

விடை— (அ) முகையூர் தொகுதியில் 35 அரிசனக் காலனிகளுக்கு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதனால் 2,512 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக 139·68 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) 1978-79 ஆம் ஆண்டிற்கான வீடுகள் கட்ட தேர்ந்தெடுக்கப்படும் கிராமங்களின் பட்டியல் விரைவில் தயாரிக்கப்படும். அது சமயம் இம் மூன்று கிராமங்களையும் அப்பட்டியலில் சேர்ப்பது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

[1978 செப்டம்பர் 14

தெருக்கூத்து பயிற்றுவிக்கும் பயிற்சி நிலையம்.

வினா *421—திரு. போ. கோபாலன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழமைமிக்க கலையான தெருக்கூத்தினைப் பயிற்றுவிக்கும் நிலையம் தமிழ் நாட்டில் உள்ளதா?

விடை—

பழமைமிக்க கலையான தெருக்கூத்துக் கலையைப்பயிற்றுவிக்கும் நிலையம் தமிழ் நாட்டில் இல்லை. ஆனால் தெருக்கூத்துக் கலையை தமிழ் நாட்டின் பல மாவட்டங்களில் புராதன முறைப்படி குரு பாரம்பரிய அடிப்படையில் கற்றுக் கொடுத்து வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களின் முகவரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

1. திரு. நடேச தம்பிரான், தெருக்கூத்துக் கலைஞர், செய்யாறு தாலூக்கா, வட ஆற்காடு மாவட்டம்.

2. திரு. ராஜகோபால் அவர்கள், பெரியசாமி அவர்களின் புதல்வர், ஆலங்குப்பம், திண்டிவனம் தாலூக்கா, தென் ஆற்காடு மாவட்டம்.

3. திரு. முனுசாமி அவர்கள், திரு. ஆறுமுகம் அவர்களின் புதல்வர், தெருக்கூத்துக் கலைஞர், ஆலங்குப்பம் காலனி, ஆலங்குப்பம் அஞ்சல், திண்டிவனம் தாலூக்கா, தென் ஆற்காடு மாவட்டம்.

4. திரு. ரமணி அவர்கள், திரு. மாணிக்கம் பிள்ளை அவர்களின் புதல்வர், ஆலங்குப்பம் அஞ்சல், திண்டிவனம் தாலூக்கா, தென் ஆற்காடு மாவட்டம்.

5. திரு. தேசிகன் அவர்கள், தெருக்கூத்துக் கலைஞர், ஆடவல்லிக்கூத்தன், மூனூர் அஞ்சல், திண்டிவனம் தாலூக்கா, தென்ஆற்காடு மாவட்டம்.

6. திரு. டி. சுப்பிரமணியம், திரு. தூயமணி அவர்களின் புதல்வர், தெருக்கூத்துக் கலைஞர், சொக்கத்தங்கன் காலனி, கீழ் சிவிரி அஞ்சல், திண்டிவனம் தாலூக்கா.

* 980–982 பக்கத்தில் இணைப்பு I ஆக உள்ளது.

1978 செப்டம்பர் 14]

7. திரு. ஏ. ராஜமாணிக்கம், ராஜமாணிக்கம் கலைக்குழு தோடந்தனூர் கிராமம், விழுப்புரம் தாலூக்கா, தென் ஆற்காடு மாவட்டம்.

8. திரு. கே. பாலகிருஷ்ணன், தெருக்கூத்துக் கலைஞர், தோடந்தனூர் கிராமம், விழுப்புரம் தாலூக்கா, தென் ஆற்காடு மாவட்டம்.

9. ராஜமாணிக்கம் கலைக்குழு, திரு. ராஜமாணிக்கம் கவுண்டர், திரு. ராமகிருஷ்ணகவுண்டர் அவர்களின் புதல்வர், தோடந்தனூர் கிராமம், விழுப்புரம் தாலூக்கா, தென் ஆற்காடு மாவட்டம்.

10. திரு சின்னான் அவர்கள், சின்னான் கலைக்குழு, ஆண்டிபாளையம், மயிலம்பாடி, பவானி தாலூக்கா. கோயமுத்தூர் மாவட்டம்.

11. திரு விஜயவீரன் அவர்கள், விஜயவீரன் கலைக்குழு, தொனுகல் பஞ்சாயத்து யூனியன் ஸ்கூல், கரணபட்டி பிளாக், இராமநாதபுரம் மாவட்டம்.

12. திரு. வெங்கடசுப்பு, திரு. அழகிரி ரெட்டியார் அவர்களின் புதல்வர், தெருக்கூத்துக் கலைஞர், எம். ரெட்டியார் பட்டி, அருப்புக்கோட்டை தாலூக்கா, இராமநாதபுரம் மாவட்டம்.

13. திரு. சாகுல் அமீது, தெருக்குகூத்துக் கலைஞர், வேலாயுதபுரம், (வழி) சாம்பவர் வடகரை, திருநெல்வேலி மாவட்டம்.

14. திரு. ஜி. ராமச்சந்திர ராவ், தெருக்கூத்துக் கலைஞர், பருசலிங்கபுரம், மகாதானபுரம் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்.

களக்காடு பகுதி விளைநிலங்களில் காட்டுப் பன்றிகள் தொல்லை.

வினா—422 திரு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு வேளாண்மை-பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நெல்லை மாவட்டம், களக்காடு வட்டாரத்தில் விவசாயிகளின் விளைப் பயிர்களை காட்டுப் பன்றிகள் வந்து அழிப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதுபற்றி அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை— (அ) ஆம்.

(ஆ) களக்காடு வனவிலங்கு சரணலயமானபடியால் காட்டுப் பன்றிகள் உள்ளன. வன விலங்கு சரணலயக் காப்பாளர், சரணலயத்தை விட்டு வெளியே வந்து பயிர்களை அழிக்கும் விலங்குகளைச் சுட்டுக்கொல்ல விவசாயிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளார். ஆனல், சரணலயத்திலேயே போய் வேட்டையாடுதல் இந்திய வனவிலங்குச் சட்டத்தின்படி தடுக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் நாய்களின் உதவியோடு காட்டுப் பன்றிகளை வயல்களைவிட்டுத் துரத்த அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

பட்டாசுகள் வெடித்தல், துப்பாக்கியால் சுடுதல், வலை வைத்துப் பிடித்தல், நச்சுப் பொருட்களை வைத்து வனவிலங்குகளைக் கொல்லுதல் ஆகிய முறைகளாலும் அவ்விலங்குகளினல் பயிரின் அழிவு தடுக்கப்படுகிறது.

பழனி தாலுகாவில் உள்ள பஞ்சாலைகள்

வினு—423 திரு. என் பழனிவேல்: மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பழனி தாலுகாவில் எத்தனை பஞ்சாலைகள் உள்ளன ?

(ஆ) அதில் ஒவ்வொன்றிலும் எத்தனை பேர்கள் வேலை செய்கிறார்கள் ?

(இ) அந்த வட்டாரத்திலுள்ள அரிசனங்களுக்கு அந்த மில்களில் வேலை கொடுப்பதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

விடை — (அ) பழனி தாலுக்காவில் கீழ்க்கண்டவாறு மூன்று பஞ்சாலைகளும் இரண்டு கழிவுப் பஞ்சாலைகளும் உள்ளன:—

(1) விஜயகுமார் மில்ஸ், லிமிடெட்.

(2) ராஜரத்ன மில்ஸ், லிமிடெட்.

(3) பழனி ஸ்ரீ முருகன் டெக்ஸ்டைல்ஸ், லிமிடெட்.

(4) பழனி ஸ்பின்னிங் மில்ஸ்.

(5) ராஜலட்சுமி வேஸ்ட் காட்டன் ஸ்பின்னிங் மில்ஸ்.

(ஆ) ஒவ்வொரு மில்லிலும் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது:—

(1) விஜயகுமார் மில்ஸ் லிமிடெட்—1,188

(2) ராஜரத்ன மில்ஸ் லிமிடெட்—412

(3) பழனி ஸ்ரீ முருகன் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்—242

(4) பழனி ஸ்பின்னிங் மில்ஸ்—20

(5) ராஜலட்சுமி வேஸ்ட் காட்டன் ஸ்பின்னிங் மில்ஸ்—43.

(இ) அந்த வட்டாரத்திலுள்ள அரிசனங்களுக்கு அந்த மில்களில் வேலை கொடுப்பதில்லை என்று எந்தப் புகாரும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. விஜயகுமார் மில்ஸ் லிமிடெட்டில் 41 அரிசன ஊழியர்களும், ராஜரத்ன மில்லில் 11 அரிசன ஊழியர்களும், பழனி ஸ்ரீமுருகன் டெக்ஸ்டைல்ஸில் 20 அரிஜன ஊழியர்களும், பழனி ஸ்பின்னிங் மில்லில் 5 அரிசன ஊழியர்களும் வேலை செய்கிறார்கள். ராஜலட்சுமி வேஸ்ட் காட்டன் ஸ்பின்னிங் மில்லில் வேலை செய்யும் 43 பேர்களும் அரிஜனங்களே.

ஒப்படை செய்யப்பட்ட நிலங்களின் மேம்பாட்டிற்கு மானியம்

வினு — 424 திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நில உச்சவரம்புச் சட்டப்படி கிடைத்த நிலங்களில் இதுவரை ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள் எத்தனை ஏக்கர்?

(ஆ) எத்தனை நபர்களுக்குக் கொடுக்கப்பட்டது ?

(இ) அவைகளை மேம்படுத்துவதற்கென சென்ற ஆண்டிலும் இந்த ஆண்டிலும் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது ?

(ஈ) இதில் கடனுகக் கொடுக்கப்பட்டவை எவ்வளவு ? மானியமாகக் கொடுக்கப்பட்டவை எவ்வளவு ?

விடை — (அ) 31—5—1978 வரை 75,486 ஏக்கர்கள்.

(ஆ) 48,233 பேர்கள்.

(இ) அவைகளை மேம்படுத்துவதற்கென மத்தியத் துறை திட்டத்தின்படி (Central sector scheme) முழுவதும் கொடையாக (Outright grant) கொடுக்கப்பட்டுள்ள தொகை பின்வருமாறு :—

1976–77—ரூ. 2,38,985.24.

1977–78—ரூ. 2,20,309.77.

(ஈ) இதில் கடனாகத் தொகை கொடுக்கப்படவில்லை. பூரா தொகையும் மானியமாகக் (கொடையாக) கொடுக்கப்பட்டுள்ளது.

சென்னையில் மலேரியா காய்ச்சல்

வினா 425— திரு. என். கிட்டப்பா.— மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை நகரில் 1978 ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் மலேரியா காய்ச்சல் எத்தனை பேருக்கு ஏற்பட்டது ?

(ஆ) இதற்கு முந்திய ஆண்டு இந்த மாதங்களில் எத்தனை பேருக்கு ஏற்பட்டது?

விடை —(அ) சென்னை நகரில் 1978 ஆம் ஆண்டில் ஜனவரி மாதத்தில் 1,151 பேருக்கும், பிப்ரவரி மாதத்தில் 1,091 பேருக்கும் மலேரியா காய்ச்சல் ஏற்பட்டது.

(ஆ) இதற்கு முந்திய ஆண்டான 1977-ல் ஜனவரி மாதத்தில் 898 பேருக்கும், பிப்ரவரி மாதத்தில் 816 பேருக்கும் மலேரியா காய்ச்சல் ஏற்பட்டது.

திருவண்ணாமலையில் நீதிமன்றக் கட்டடங்கள்

வினா 426— திரு பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவண்ணாமலை நகரத்தில் உள்ள நீதி மன்றங்கள் வாடகை கட்டடங்களில் நடைபெறுகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், சொந்தத்தில் கட்டடங்கள் கட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை (அ) திருவண்ணாமலையில் உள்ள முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் மட்டும்தான் திங்கள் ஒன்றுக்கு 500 ரூபாய்

வாடகையில் 20–6–1977-லிருந்து வாடகை கட்டடத்தில் அமைந்துள்ளது. திருவண்ணாமலையிலுள்ள ஏனைய நீதிமன்றங்கள், அதாவது, துணை நீதிமன்றம், மாவட்ட முன்சீப் நீதிமன்றம், இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் ஆகியவை அரசுக் கட்டடங்களில் அமைந்துள்ளன.

(ஆ) திருவண்ணாமலையில் 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் நீதிமன்ற கட்டடங்களைக் கட்டுவதற்கான செயற்குறிப்பை சென்னை உயர்நீதி மன்றம் அனுப்பி வைத்தது. இதற்கு அதிகத்தொகை தேவைப்படுகிறது என்பதனால், இச்செயற்குறிப்பு தள்ளிப் போடப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மருத்துவமனை.

வினா 427—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் எத்தனை மருத்துவ அதிகாரிகள் பணிபுரிகின்றனர் ?

(ஆ) தினசரி எத்தனை நோயாளிகள் வருகின்றனர்?

(இ) ஆண்டுக்கு எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள மருந்துகள் கொடுக்கப்படுகின்றன?

(ஈ) மருத்துவ வசதி, படுக்கை வசதிகளை அதிகப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—(அ) தற்போது 9 மருத்துவ அலுவலர்கள் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். விவரங்கள் —

பொது	..	7
பல் பகுதி	..	1
சித்தா	..	1

(ஆ) உள்ளுறை நோயாளிகள் சராசரி தினமும் 144, வெளியுறை நோயாளிகள் சராசரி தினமும் 1,231.

(இ) கடந்த 1977–78ஆம் ஆண்டில் மட்டும் இந்த மருத்துவமனையில் 2.97 லட்சம் மதிப்புள்ள மருந்துகள் வழங்கப்பட்டன.

(ஈ) தற்போது 132 படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவமனையாக இருந்து வருகிறது. சித்தப் பிரிவு, குழந்தைப் பிரிவு, ரத்த சேமிப்பு நிலையம், காசநோய் தடுப்புப் பிரிவு போன்ற சிறப்புப் பிரிவுகளும் இத்துடன் செயல்படுகின்றன. தற்போதுள்ள வசதிகளை விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

[1978 செப்டம்பர் 14

நெல்லை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

வினா 428— திரு. என். தனசேகரன்— மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டத்தை முறையே நெல்லை, தூத்துக்குடி நகரங்களைத் தலைமையாகக் கொண்டு இரண்டு தனி மாவட்டங்களாகப் பிரிக்கும் எண்ணம் அரசிற்கு உண்டா?

விடை—நிர்வாகச் சீர்திருத்தக் குழு தனது பரிந்துரையில் நெல்லை மாவட்டத்தை முறையே நெல்லை, தூத்துக்குடி நகரங்களைத் தலைமையிடங்களாகக் கொண்ட மாவட்டங்களாகச் சீரமைக்கலாம் என பரிந்துரை செய்துள்ளது. நிதி நிலை மற்றும் இதர சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு, பெரிய மாவட்டங்களைப் பிரித்துச் சீரமைக்கும்போது இது பற்றிப் பரிசீலிக்கப்படும். தற்போது இப்பொருள் அரசின் பரிசிலனையில் இல்லை.

திருப்பத்தூர் மருத்துவ மனையில் இரத்தப் பரிசோதனை நிலையம்.

வினா 429— திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள அரசினர் மருத்துவ மனையில் புதியதாக இரத்தப் பரிசோதனை நிலையம் ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் அமைக்கப்படும்.

விடை— (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை?

திருப்போரூர் தொகுதியில் அரிசன நலப் பள்ளிக் கட்டடங்கள்.

வினா 430— திரு. ஜி. சொக்கலிங்கம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதியில் அடங்கிய அரிசன நலப் பள்ளிகள் குறிப்பாக பாலூர், புதுப்பாக்கம், மேலைக்கோட்டையூர் ஆகிய பள்ளிக் கட்டடங்களை புதுப்பிக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும்?

1978 செப்டம்பர் 14]

விடை—(அ) மற்றும் (ஆ) (i) பாலூர் அரிசன நலப்பள்ளிக் கொட்டகைகள் 2,100 ரூபாய் செலவில் தற்போது செப்பனிடப்பட்டுள்ளன. மேலும், ஏ. சி. கூரைத்தகடுகள் போடுவதற்கு 5,000 ரூபாய்க்கு அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தக்காரரிடம் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ii) புதுப்பாக்கம் அரிசன நலப்பள்ளிக் கட்டடத்தைச் செப்பனிடுவதற்கு 4,500 ரூபாய் அனுமதிக்கப்பட்டு 2–1–1978 அன்று ஒப்பந்தக்காரரிடம் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. செப்பனிடும் பணி நடைபெற்று வருகிறது.

(iii) மேலைக்கோட்டையூர் அரிசன நலப்பள்ளிக் கட்டடத்தைச் செப்பனிடுவதற்கு 4,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. விரைவில்பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

தொண்டி ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா 431— திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புயல்-வெள்ள நிவாரண நிதியிலிருந்து தென் ஆற்காடு மாவட்டம் வல்லம் ஒன்றியத்தில், அளியூர் போந்தை சாலையில் தொண்டி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் உண்டா?

விடை: இல்லை.

ஆரணியில் தொழில் கல்விக் கூடம்.

வினா 432— திரு வீர, அர்ச்சுனன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரணியில் ஒரு தொழில் கல்விக்கூடம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை: இல்லை.

[1978 செப்டம்பர் 14

சாவகட்டுபாளையத்தில் குடிநீர் வழங்கல்.

வினு 433— திரு. எஸ். என். பழனிச்சாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா —

கோவை மாவட்டம், அவினுசி வட்டம், தத்தனூர் ஊராட்சி சாவகட்டுபாளையம் கிராமத்தில் குடிநீர்ப் பற்ருக்குறையைப் போக்க நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா ?

விடை —

பொதுக் கிணற்றில் தற்போது 15 அடிக்கு மேல் தண்ணீர் உள்ளது. இக்கிணற்றில் ஒரு மேல்நிலைத் தொட்டி அமைக்கப் பட்டு, 4 குடிநீர் குழாய்களும் பொருத்தப்பட்டு ஊர் மக்களுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் குடிநீர்ப் பற்ருக்குறை இல்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித் துள்ளார்.

பொன்னமராவதி ஒன்றியத்தில் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள்.

வினு 434— திரு நா. சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி ஒன்றியத்தில் பல மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் பல்வேறு காரணங்களுக்காகப் பயன்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை:—(அ) மற்றும் (ஆ) ; பல்வேறு காரணங்களுக்காக செயல்படாமல் உள்ள 11 மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை உடன் சீர்செய்து செயல் நிலைக்கு கொண்டுவர புதுக்கோட்டை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

1978 செப்டம்பர் 14]

திருச்சி வேலை வாய்ப்பு அலுவலகக் கட்டடம்.

வினு 435— : திரு. கே. சௌந்தரராசன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சியில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகம் மிகவும் சிறிய கட்டடத்தில் இயங்கி வருகிறது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை வேறு கட்டடத்தில் அமைக்கும் திட்டம் உண்டா ?

விடை—(அ) ஆம்.

(ஆ) வேறு கட்டடத்தில் இந்த அலுவலகத்தை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மதுரை மாவட்டத்தில் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளோர்.

வினு 436— திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் எஸ். எஸ். எல். சி. யும் அதற்கு மேலும் படித்துவிட்டு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிந்துள்ளவர்கள் எத்தனை பேர் ?

விடை—

30—6—78 அன்றைய நிலவரப்படி 36,460 பேர்கள்.

ஆத்தூரில் முன்சீப் கோர்ட்.

வினு 437— திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஆத்தூர் நகரில் முன்சீப் கோர்ட் நிறுவ வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) உயர்நீதிமன்றம் அனுப்பியுள்ள முன்னுரிமைப் பட்டியலில் மாவட்ட முன்சீப் கோர்ட் ஆத்தூர் பதினேழாவது இடம் பெற்றுள்ளது. அரசின் நிதி நிலைமையை அனுசரித்து ஆத்தூரில் மாவட்ட முன்சீப் கோர்ட் அமைப்பது குறித்த செயற்குறிப்பு 1979–80-ல் பரிசீலிக்கப்படும்.

சென்னையில் டாக்ஸி டிரைவர்கள் மீது வழக்குகள்.

வினா 438— திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78 சென்னையிலுள்ள வாடகை டாக்ஸி டிரைவர்கள் பொது மக்களிடம் சரியாக நடந்து கொள்ளாததன் பேரில் கொடுக்கப்பட்ட புகார்களின் அடிப்படையில் எத்தனை டிரைவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டுள்ளன ?

(ஆ) அதில் எத்தனை பேருக்கு அபராதம் விதிக்கப்பட்டது?

விடை—

(அ) 1977-ம் ஆண்டு 184 வழக்குகளும், 1978-ம் ஆண்டு (ஜூலை 31 தேதி முடிய) 254 வழக்குகளும், கீழ்க்காணும் குற்றங்களுக்காகப் போடப்பட்டன.

	1977	1978
1. அதிகப்படியான கட்டணம் கேட்டதற்காக	67	79
2. வாடகைக்கு வர மறுத்ததால்	117	175

(ஆ) அந்த வழக்குகளில் 332 டிரைவர்கள் குற்றம் செய்தார்கள் என்று தண்டிக்கப்பட்டார்கள். விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

	1977	1978 (ஜூலை 31 முடிய)
1. அதிகப்படியான கட்டணம் கேட்டதற்காக	63	47
2. வாடகைக்கு வர மறுத்ததால்	103	119

உடன்குடி கூட்டுறவு விவசாய நாணயக் கடன் சங்கத் தலைவர் மீது குற்றச்சாட்டு.

வினா 439— திரு. ஆர். அமிர்தராஜ்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் உடன்குடி கூட்டுறவு விவசாய நாணயக் கடன் சங்கம் இ. 423-ன் 1971 ஆம் ஆண்டு முதல் 1977 ஆண்டு வரை இருந்த தலைவர் மீது அரசுக்கு குற்றச்சாட்டுகள் அடங்கிய மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

விடை—(அ) ஆம்.

(ஆ) மனுவில் கண்ட குற்றச்சாட்டுகள்பற்றி திருநெல்வேலி மண்டல இணைப்பதிவாளர் அவர்களால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட விசாரணையின் விளைவாக குற்றச்சாட்டுகளில் தொடர்புடைய சங்கப் பணியாளர்கள் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சங்கத்தின் தலைவர் என்ற முறையில் அதிகாரப் பூர்வமான பொறுப்பு இருப்பினும் தனிப்பட்ட முறையில் தலைவருக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் தொடர்பில்லை என்று விசாரணையிலிருந்து தெரிய வருகிறது.

கரும்பு உற்பத்தியில் சாலைப் பணிகள்.

வினா 440—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நடப்பாண்டில் கரும்பு உற்பத்தி நிதியிலிருந்து நாட்டார் மங்கலம் —பெரிய தச்சூர் (வழியாக) முடையூர் சம்மந்தூர், அணிவாடி, வல்லம் பாலப்பட்டு (வழி) கொங்கரப்பட்டு, ரெட்டணை, நெடிமொழிலூர் சாலைப் பணிகளை ஏற்று முடிக்கும் திட்டம் உண்டா?

விடை—நடப்பு ஆண்டில் புதிய சாலைகள் அமைக்க சர்க்கரை இயக்குநரிடமிருந்து பட்டியல் வரப் பெற்று ஆய்வில் உள்ளது. நிதிநிலைமையை அனுசரித்து எந்தெந்த வேலைகளை நடப்பு ஆண்டில் எடுத்துக் கொள்ளலாம் என்று ஆராயப்படும்.

[1978 செப்டம்பர் 14

முதுகையூர் தொகுதியில் குழந்தைகள் காப்பகங்கள்.

வினா 441—திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னாற்காடு மாவட்டம், முகையூர் தொகுதியில் எத்தனை காப்பகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது ?

(ஆ) மேலும் குழந்தைகள் காப்பகங்களை ஏற்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) நான்கு.

(ஆ) இவ்வாண்டில் (1978–79) 150 குழந்தைகள் நல மையங்கள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களில் 5 குழந்தைகள் நல மையங்களுக்கு குறைவாக இருத்தல் கூடாது. 4 குழந்தைகள் நல மையங்கள் உடைய முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் மேலும் ஒன்று ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

புள்ளி மங்கல உயர்நிலைப் பள்ளிக்கட்டடம்.

வினா 442—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம், புள்ளி மங்கலம் கிராமத்தில் உள்ள அரசினர் உயர் நிலைப் பள்ளியில் புயல் நிவாரணப் பணிகள் மேற்கொள்ள உத்திரவிடப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை —

(அ) மற்றும் (ஆ) : இல்லை. இப்பள்ளியின் கட்டடங்கள் மன்னார்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமானது. அவைகள் இது வரையில் பள்ளிக் கல்வித் துறைக்கு மாற்றப்படாததால் அரசு அக்கட்டிடங்களுக்கு மராமத்து பணிகள் எதுவும் மேற்கொள்ள இயலவில்லை. கட்டிடங்களை பள்ளிக் கல்வித் துறைக்கு நிரந்தரமாக மாற்றுவது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1978 செப்டம்பர் 14]

வேலூர் மத்திய சிறையில் குடி தண்ணீர் தட்டுப்பாடு.

வினா 443— திரு. பெ.சு. திருவேங்கடம் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு வேலூரில் உள்ள மத்திய சிறையில் குடிதண்ணீர் தட்டுப்பாடு உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை —

(அ) வட ஆற்காடு வேலூரில் உள்ள மத்திய சிறையில் குடிதண்ணீர் தட்டுப்பாடு இல்லை.

(ஆ) வேலூர் மத்திய சிறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இட வசதி 1920 ஆயினும், இம்மத்தியச் சிறை, மற்றும் கிளைச் சிறை இரண்டிலும் உள்ள சிறைவாசிகளின் சராசரி எண்ணிக்கை சுமார் 1,000 ஆகும். இந்த 1,000 பேர்களுக்குத் தேவையான குடி தண்ணீர் நகராட்சிக் குழாய் மூலம் போதுமான அளவு வினியோகிக்கப்படுகிறது. சில அரசியல் போராட்ட சமயங்களில் அதிக அளவு நபர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளில் அனுமதிக்கப்படும் சூழ்நிலையில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட வழிவகை உண்டு. அச்சமயத்தில் சிறை லாரியில் தண்ணீர்த் தொட்டியைப் பொருத்தி, பாலாறு தண்ணீர் தேக்க நிலையிலிருந்து நீர் கொண்டு வந்து குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் தேதியிட்ட, எண் 559, உள் துறை அரசு ஆணையில், 2 குழாய் கிணறுகள் வேலூர் மத்தியச் சிறையில் நிறுவிட அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இங்கு நல்ல தண்ணீர் அதிக அளவில் கிடைக்குமேயானால், அதிகமான சிறைவாசிகள் அனுமதிக்கப்படும் சமயங்களில், இவர்களின் தேவையையும் முழுமையாகப் பூர்த்தி செய்ய இயலும் எனக் கருதப்படுகிறது.

கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர்.

வினா 444..திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை என்ன ?

[1978 செப்டம்பர் 14

விடை—

கைத்தறி நெசவுத் தொழிலில் நேரிடையாகவும், கண்டு சுற்றுதல், பாவு ஓட்டுதல் போன்ற உப தொழில்களிலும் சுமார் பத்து இலட்சம் நெசவாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

போக்குவரத்துக் கழகப் பணிமனைகள்.

வினா 445 திரு. த. புஷ்பராஜு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையிலுள்ள பாண்டியன் போக்குவரத்துக் கழக பணிமனையை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆமெனில், அதன் விபரமென்ன ?

விடை—

(அ) புதுக்கோட்டையில் பாண்டியன் போக்குவரத்துக் கழக பணிமனையை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை. எனினும் தற்போதைய பணிமனை போதுமானதாக இல்லாததால், புதுக்கோட்டை நகராட்சியின் உத்தேச புதிய பேருந்து நிலையத்தினருகில் ஒரு புதிய பணிமனையை ஏற்படுத்த பாண்டியன் போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

வினா 446 திரு. த. புஷ்பராஜு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் உள்ள சோழன் போக்குவரத்துக் கழக பணிமனையினை சீர்திருத்தம் செய்ய செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

1978 செப்டம்பர் 14]

விடை—

(அ) தஞ்சாவூரிலுள்ள சோழன் போக்குவரத்துக் கழக பணிமனையினை சீர்திருத்தம் செய்யும் செயற்குறிப்பு உள்ளது.

(ஆ) தஞ்சாவூரிலுள்ள பணிமனையில் 'சிமெண்ட் கான்கிரீட்' தளம் அமைக்கும் பணி வெகு விரைவில் மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

மேலும் தற்போது அப்பணிமனையில் இயங்கிவரும் நகரப் பேருந்துகளுக்கான பணிமனைக்கென, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடமிருந்து தஞ்சாவூர் நகரம், மேலவலி கிராமத்தில் 6 ஏக்கர் நிலம் ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது. பணிமனைக்கான கட்டிடம் அங்கு விரைவிலேயே கட்டப்பட இருக்கின்றது.

கூடலூர் தொகுதி சிரியூர் ஆதிவாசிகள்.

வினா 447—திரு. கே. உச்சி : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதி சிரியூர் என்ற இடத்தில் வசிக்கும் ஆதிவாசிகள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களுக்கு அரசு அளித்துள்ள சலுகைகள் யாவை ?

(இ) இதனால் பயன் அடைந்துள்ளவர்கள் எத்தனை பேர்கள்?

விடை —

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதி சிரியூர் என்ற பகுதியில் இருளர் வகுப்பைச் சேர்ந்த சுமார் 100 பழங்குடி மக்கள் வசிக்கிறார்கள்.

(ஆ) சிரியூரில் வாழும் பழங்குடி மக்கள் பொதுவாக அரப்புக்காய், மோஸ் கடுக்காய், தேன் போன்ற சிறுவன விளைபொருட்களை சேகரிப்பதில் ஈடுபட்டவர்கள் ஆவர். ஆகவே அவர்கள் நலனுக்காக தொழிலாளர் ஒப்பந்தச் சங்கம் ஒன்று மசனங்குடியில் செயல்பட்டு வருகிறது. இது தவிர, மசனங்குடியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வாழும் பழங்குடியினருக்காக, கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது. இதில் தற்போது 230 அங்கத்தினர் உள்ளனர். இச்சங்கம் அதன் அங்கத்தினர்களுக்கு வேலை வாய்ப்புகளை

ஏற்படுத்திக் கொடுத்தும், ஒதுக்காடுகளிலிருந்து அம்மக்கள் சேகரித்துக் கொண்டு வரும் சிறுவன விளை பொருட்களுக்கு கூலி கொடுத்தும் உதவுகிறது. கல்வி வசதியைப் பொறுத்த வரையில் இப்பகுதி மக்களுக்காக, ஆனைக்கட்டி, மார்வல்லா, பொக்காபுரம் ஆகிய 3 இடங்களில் இருளர் பழங்குடியினருக்கென்று 3 அரசு உறைவிடப் பள்ளிகள் திறந்துள்ளது.

சிரியூர் பழங்குடி மக்கள் குடியிருப்பில் உள்ள ஒரு குடி நீர் கிணற்றின் மூலம் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இக்குடியிருப்புக்குத் தெரு மின் விளக்குகளும் மற்றும் இணைப்புச் சாலை வசதிகளும் தரப்பட்டுள்ளன. மற்ற அரிசன மக்களுக்கு அரிசன நலத்துறை மூலம் வழங்கப்படும் கல்விச் சலுகைகளும் உழவு மாடுகள் வழங்குதல் போன்ற பொருளாதார முன்னேற்ற சலுகைகளும் இப்பகுதிவாழ் பழங்குடியினருக்கும் கிடைக்கின்றன.

(இ) இந்த சிரியூர் பகுதியில் வாழும் எல்லா பழங்குடியினரும் தமிழக அரசு செயல்படுத்துகிற திட்டங்களின் மூலம் பயன் பெறுகிறார்கள்.

நீலகிரி மாவட்டத்தில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள்.

வினா 448—திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் உள்ள அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

விடை—

நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலத்தில் சர்ச்ஹில் என்னுமிடத்தில் ரூ. 4.17 லட்ச செலவில் மேலும் 24 வீடுகளும், குன்னூரில் ரூ.8.21 லட்ச செலவில் 30 வீடுகளும், கோத்தகிரியில் ரூ. 6.95 லட்ச செலவில் 24 வீடுகளும் கட்ட வீட்டு வசதி வாரியம் உத்தேசித்துள்ளது.

மேலூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை

வினா 449—திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை தொகுதி, மேலூர் கிராமம், மூசாபரி என்னுமிடத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்குகின்ற செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் ஊராட்சி ஒன்றியம், மேலூர் கிராமத்தில், கால்நடை மருந்தகம் ஒன்று துவக்குவதற்கான செயற்குறிப்பு குன்னூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) குன்னூர் ஊராட்சி ஒன்றியம் மேற்படி மருந்தகம் அமைக்கக் கோரி நிறைவேற்றிய தீர்மானம், மற்றும் தேவையான விவரங்கள், குன்னூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடமிருந்து பெறப்பட்டவுடன், இதுபற்றி கவனிக்கப்படும்.

கோடாரங்குளம் கிராமத்திலுள்ள இனாம் நிலங்கள்

வினா 450—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள கோடாரங்குளம் கிராமத்தில் உள்ள இனாம் நிலங்கள் இனாம் ஒழிப்பு சட்டப் பிரகாரம் ரயத்துவாரி நிலங்களாக மாற்றப்பட்டு விவசாயிகளுக்குப் பட்டா வழங்கப்பட்டுவிட்டதா?

விடை—

ரயத்துகளுக்கு தனித் தாசில்தாரால் பட்டா அனுமதிக்கப்பட்டதை எதிர்த்து, இனாம்தாரரான திருவாவடுதுறை ஆதினம் இனாம் ஒழிப்பு டிரிபூனலில் தாக்கல் செய்த வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. எனவே பட்டா வழங்கப்படவில்லை.

[1978 செப்டம்பர் 14

பாப்பாங்குளம் கால்நடைப் பராமரிப்பு நிலையம்.

வினா 451— திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்— மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி பாப்பாங்குளத்திலுள்ள கால்நடைப் பராமரிப்பு நிலையத்தை மக்களின் ஆட்சேபத்தையும் மீறி வேறு இடத்திற்கு மாற்ற அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

விடை —

(அ) அண்டு (ஆ) திருநெல்வேலி தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் செயல்படும் பாப்பாங்குளம் கிளை நிலையத்திலுள்ள கால்நடை சிகிச்சை, கருவூட்டல் போன்ற வசதிகளைப் போதிய அளவு பயன்படுத்தாத காரணத்தால் அக்கிளை நிலையத்தினைக் கல்லூரிக்கு மாற்றும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது. இருப்பினும் பாப்பாங்குளம் மக்கள் தங்களது கால்நடைகளுக்கு ஐந்து கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் இருக்கும் பொட்டல் புதூர், கீழ்ஆம்பூர் ஆகிய கிளை நிலையங்களில் இவ்வசதிகளைப் பெற வாய்ப்புள்ளது.

ஓலகலம்பாடி கிராமத்தில் சிறு விவசாயிகள் இறைவைப் பாசனத் திட்டம்

வினா 452— திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தண்டாரம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த ஒலகலம்பாடி கிராமத்தில் சிறு விவசாயிகள் இறைவை நீர்ப்பாசனத் திட்டம் துவங்கப்பட்டு நடைமுறையில் உள்ளதா ?

விடை— குறிப்பிட்ட கிராமத்தில் 1970-ல் ஒரு சிறு விவசாயிகள் கூட்டுறவு நீரேற்றுப் பாசனச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், நிலத்தடி நீர்ச்சான்று கிடைக்காமையாலும் விதிமுறைகளைத் தளர்த்தி பெண்ணையாற்றின் நதிக்கரையில் கிணறுகளைத் தோண்ட அனுமதியளிக்கவில்லையாதலாலும் 1976 ஏப்ரலில் இச்சங்கம் கலைக்கப்பட்டது.

1978 செப்டம்பர் 14]

ஒன்றியங்களில் கிராமப் பணிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கல்.

வினா 453— திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

ஊராட்சி மன்றப் பள்ளிகளுக்கு ஒன்றிய பொறியாளர் ஒப்பளிப்பு வழங்கும் மதிப்பீட்டு தொகையை ரூ. 5,000-க்கு உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை —ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 21-1-1977 நாளிட்ட 113 ஆம் எண் அரசாணையில் ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்கள் கிராமப் பணிகளுக்கு தொழில்நுட்ப ஒப்பளிப்பு வழங்கும் மதிப்பீட்டின் உச்சவரம்புத் தொகை ரூ. 3,000-லிருந்து ரூ. 5,000 மாக உயர்த்தப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை நகரில் தனி வட்டாட்சியர் பதவி

வினா 454— திரு. த. புஷ்பராஜ் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகரத்தில் வரவேற்புக்கு எனத் தனி வட்டாட்சியர் நியமிக்க அரசு செயற்குறிப்பு உள்ளதா ?

விடை — இல்லை.

கோடியக்கரை பறவைகள் சரணாலயம்.

வினா 455— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோடியக்கரை பறவைகள் சரணாலயம் அபிவிருத்திக்கு அண்மையில் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு ஏதேனும் செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) கீழ்க்காணும் பணிகளுக்காக ரூ. 3·57 இலட்சம் செலவழிக்க மத்திய அரசு அளித்துள்ளது:—

		ரூ.	பை.
1.	படகு வாங்குதல்	10,000	00
2.	ஆராய்ச்சியாளர்களுக்கு தங்கும் விடுதிகளும், ஆய்வுக் கூடங்களும் கட்டுதல்.	1,80,000	00
3.	சரணாலயத்திற்கான நிலங்கள் ஆர்ஜிதம் செய்தல்.	1,67,000	00
		3,57,000	00

ஸ்ரீலங்கா அகதிகள் மறுவாழ்வு ஆலோசனைக் குழு

வினா 456— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீலங்கா அகதிகள் மறுவாழ்வுக்கென மாநில அளவில் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) ஸ்ரீலங்கா அகதிகள் மறுவாழ்வுக்கென்று வருவாய்த்துறையின் 2-1-1978 நாளிட்ட ஆணை எண் 2-ன் படி மாநில அளவில் ஆலோசனைக் குழு ஒன்று மாண்புமிகு முதலமைச்சர் தலைமையின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா அகதிகளுக்கு அளிக்கப்படும் மறுவாழ்வுத் திட்டங்கள் சரிவர அமுல் செய்யப்படுகின்றனவா என்பதை கவனிப்பதற்கும் பல்வேறுபட்ட பொருளாதாரத் துறைகளில் ஈடுபட்டிருக்கும் முக்கிய நபர்களின் அறிவுரைகளைப் பெறவும், மறுவாழ்வுத் திட்டங்களை அமுல்படுத்துவதில் அவர்களுடைய ஆதரவைப் பெறுவதற்காகவும் ஒரு மாநில ஆலோசனைக் குழு நிறுவப்படவேண்டுமென்று அரசு உத்தேசித்து,

ஸ்ரீலங்கா அகதிகளின் மறுவாழ்வுக்கென கீழே குறிப்பிடப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு உயர் மட்ட ஆலோசனைக் குழுவை அரசு நியமித்துள்ளது:—

1.	முதலமைச்சர்	தலைவர்.
2.	மறுவாழ்வுத்துறை அமைச்சர் ..	உப தலைவர்.
3.	செயலர், வருவாய்த்துறை ..	உறுப்பினர்.
4.	செயலர், வேளாண்மைத்துறை ..	உறுப்பினர்.
5.	செயலர், மீன், வனத்துறை ..	உறுப்பினர்.
6.	செயலர், சமூக நலத்துறை ..	உறுப்பினர்.
7.	அரிசனம், பழங்குடி மக்கள் மறுவாழ்வுத் துறை இயக்குநர்.	உறுப்பினர்.
8.	வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் இயக்குநர்.	உறுப்பினர்.
9.	வனத்துறை தலைவர்	உறுப்பினர்.
10.	மீன், வனத்துறை இயக்குநர் ..	உறுப்பினர்.
11.	சமூக நலத்துறை இயக்குநர் ..	உறுப்பினர்.
12.	மறுவாழ்வுத்துறை இயக்குநர் ..	உறுப்பினர்-செயலர்.

அரசு அதிகாரிகள் அல்லாத உறுப்பினர்கள்—

13.	திரு. அன்பழகன், பாராளுமன்ற உறுப்பினர்.	இராமநாதபுரம்.
14.	திரு. எஸ். செகந்நாதன், பாராளுமன்ற உறுப்பினர்.	ஸ்ரீபெரும்புதூர்.
15.	திரு. மதுரை முத்து, சட்டமன்ற மேலவை உறுப்பினர்.	மதுரை.
16.	திரு. கே. எஸ். கணபதி, சட்டமன்ற மேலவை உறுப்பினர்.	திருச்சிராப்பள்ளி.
17.	திரு. ஐசரிவேலன், சட்டமன்றத் தொடர்பாக இந்து அறக்கட்டளை அமைச்சரது செயலாளர்.	சென்னை.
18.	திரு. கே. பாலாஜி, சட்டமன்ற உறுப்பினர்.	காஞ்சிபுரம்.
19.	திரு. ஆர். முத்தையா, சட்டமன்ற உறுப்பினர்.	சேடப்பட்டி.
20.	திரு. எம். அப்துல் லத்தீப், சட்டமன்ற உறுப்பினர்.	வாணியம்பாடி.
21.	திரு. கே. கந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர்.	ஆண்டிப்பட்டி.

[1978 செப்டம்பர் 14

22. திரு. சி. மாணிக்கம், சட்டமன்ற உறுப்பினர். — திருச்சிராப்பள்ளி.

23. திரு. துரை கோவிந்தராசன், சட்டமன்ற உறுப்பினர். — திருவோணம்.

24. திரு. எம். வின்செண்ட், சட்டமன்றத் தொடர்பாக நிதியமைச்சரது செயலாளர். — சென்னை.

25. திரு. டி. இராமசாமி, சட்டமன்ற உறுப்பினர். — இராமநாதபுரம்.

26. திரு. ஆர். கோபாலன், சட்டமன்ற உறுப்பினர். — நீலகிரி.

27. திரு. கே. மருதாசலம், சட்டமன்ற உறுப்பினர். — தொண்டாமுத்தூர்.

28. திரு. கே. பி. நாச்சிமுத்து, சட்டமன்ற உறுப்பினர். — மேட்டூர் அணைக்கட்டு.

இக்குழுவின் தலைமையகம் சென்னையில் இருக்கும். இக்குழு ஆறு மாதத்திற்கு ஒரு முறையாவது கூட வேண்டும். அதோடு அவசியம் நேரும்பொழுது எல்லாம் இக்குழு அவசியத்தை முன்னிட்டு கூடும். இக்குழுவின் செயலர் உறுப்பினர் இக்குழுவைக் கூட்டுவார்.

மீன்பிடி ட்ராலர்கள்.

வினா 457— திரு. மு. அரங்கநாதன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தில் மீன்பிடி ட்ராலர்கள் வாங்க எந்த ஆண்டு திட்டமிடப்பட்டது ?

(ஆ) அதற்கான பணம் எந்த ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் எவ்வளவு ஒதுக்கப்பட்டது ?

(இ) அதனால் ஏற்படும் பலன்கள் யாவை ?

விடை —(அ) 1974-ம் ஆண்டில்.

(ஆ) ட்ராலர்களை இறக்குமதி செய்வதற்காக தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு அரசு 1975-76ஆம் ஆண்டில் ரூபாய் 13,19,482-ம், 1976-77 ஆம் ஆண்டில் ரூபாய் 6,02,896·08-ம், 1977-78ஆம் ஆண்டில் ரூபாய் 18,27,400-ம் கடனாக வழங்கியது. கடன் வழங்க அந்தந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில் வகை செய்யப்பட்டது.

1978 செப்டம்பர் 14]

(இ) சிறிய வகை மீன்பிடி இயந்திரப் படகுகளில் சென்று மீன் பிடிப்பதைவிட ஆழ் கடல் சென்று ட்ராலர்களைப் பயன்படுத்தி கடலின் ஆழ்ப்பகுதிகளில் மீன் பிடிக்கவும், இறால், கல்லிறால் போன்ற மீன் இனங்களை அதிக அளவில் பிடித்து நிறைந்த அளவில் ஏற்றுமதி செய்யவும், அதனால் அயல் நாட்டு செலாவணி பெறவும் முடியும். மேலும் உள்நாட்டுத் தேவைக்கான மீன் வகைகளும் அதிக அளவில் பிடிக்கலாம்.

வினா 458— திரு. இ. சு. நல்லதம்பி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய மெக்சிகன் ட்ராலர்கள் ஏதேனும் 1976-77, 1977-78 ஆம் ஆண்டில் மீன் வளத்துறை வாங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான மதிப்பு என்ன ? வாங்கிய ட்ராலர்கள் அனைத்தும் உபயோகப்படுத்தப்படுகின்றனவா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

விடை— (அ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 1978ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மெக்சிகோவிலிருந்து இரண்டு புதிய ட்ராலர்களை (நாவாய்களை) இறக்குமதி செய்துள்ளது.

(ஆ) காப்பீடு (இன்சூரன்ஸ்) மற்றும் இறக்குமதி செலவு உட்பட, அவைகளின் மொத்த விலை, ஏறத்தாழ ரூபாய் எண்பது இலட்சம் (ரூபாய் 80 இலட்சம்). இரண்டு ட்ராலர்களும், மீன் பிடிப்பில் உபயோகப்படுத்தப்படுகின்றன.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

அரிசனங்களுக்கு மனைப்பட்டாக்கள் வழங்கல்.

வினா 459— திரு. சின்னசேலம் பா. சுப்பிரமணியம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டத்தில் குடியிருப்புமனை இல்லாத அரிசனக் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அவர்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை — (அ) தென்னாற்காடு மாவட்டத்தில் 53,932 அரிசன குடும்பங்கள் குடியிருப்புமனை இல்லாமல் உள்ளன.

(ஆ) வீட்டு மனை இல்லாத எல்லா ஏழை அரிசன குடும்பங்களுக்கும் இலவசமாக வீட்டு மனை வழங்க வேண்டும் என்பது அரசின் திட்டம். அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வினா 160 — திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1967ஆம் ஆண்டு முதல் 1977ஆம் ஆண்டு வரை அரிசன மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள குடிமனைப் பட்டாக்களின் எண்ணிக்கை என்ன ?

(ஆ) வழங்கப்பட்டுள்ள பரப்பளவு எவ்வளவு ?

விடை — (அ) 1967ஆம் ஆண்டு முதல் 1977ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டுள்ள குடிமனைப் பட்டாக்கள் 5,389.

(ஆ) வழங்கப்பட்டுள்ள பரப்பளவு 348·56 ஏக்கர்.

கொத்தளம் பகுதியில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்.

வினா 461— டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் கொத்தளம் பகுதியில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை — (அ) தருமபுரி மாவட்டத்திலுள்ள கொத்தளம் பகுதி மலைவாழ் மக்களுக்கான மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்படவில்லை. இருப்பினும் வருகிற 1978-83 மத்திய காலத்திட்டத்தின்கீழ் இப்பகுதியும், இது போன்ற ஏனைய பகுதிகளும் ஒரு தனித் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட இருக்கின்றன.

(ஆ) 1978-83ஆம் ஆண்டிற்கான மத்திய காலத்திட்டத்தின்கீழ் பழங்குடியினருக்கான துணைத் திட்டம் தயாரிப்பதற்கான வழிமுறைகள் மாவட்ட ஆட்சியருக்கும் ஏனைய துறைத் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டு அவர்களிடமிருந்து செயற்குறிப்புத் திட்டங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. இந்த வழிமுறைகளின் கீழ் சிதறி வாழும் பழங்குடி மக்களுக்கு முன்னேற்றத் திட்டம் தயாரிப்பதற்கான வழிமுறைகளும் கூறப்பட்டு உள்ளன. இவை பெறப் பெற்றவுடன் மாநில அளவில் இத்திட்டங்கள் பரிசீலனை செய்யப்பட்டு முடிவான ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஏற்புக்காக அனுப்பி வைக்கப்படும்.

தருமபுரி மாவட்டத்தில் கால்நடை வளர்ச்சி.

வினா 462— டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்திற்கு 1978-79-க்கு கால்நடை வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

(ஆ) என்னென்ன திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட உள்ளன ?

விடை — (அ) தருமபுரி மாவட்டத்திற்கு 1978-79 ஆம் ஆண்டில் கால்நடை வளர்ச்சிக்கு ரூபாய் 78·61 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) 1978-79ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் பின்வருமாறு :—

		(ரூபாய் இலட்சத்தில்.)
1	கால்நடை உதவி இயக்குநர்கள் பணியாளர் தொகுதி.	1·60
2	கால்நடை மருந்தகங்கள், மருத்துவ மனைகள் ..	7·42
3	எல்லைப் பகுதி ஊசி குத்துதல் திட்டம், சோதனைச் சாவடிகள் அமைத்தல்.	1·48
4	கால்நடைப் பண்ணைகள் புள்ளிவிவரப்பிரிவு ..	0·08
5	கால்நடைப் பண்ணைகள்	17·06
6	கேந்திர கிராமப் பகுதிகள்	1·57
7	செம்மறியாடு பண்ணைகள், பிரிவுகள் ..	0·60
8	பன்றி வளர்ப்புப் பிரிவுகள்	2·93
9	கோழிப் பண்ணைகள் விரிவாக்க மையங்கள் ..	3·52
10	கோழிக் குஞ்சு பொரிப்பு நிலையங்கள் ..	1·57
11	வெக்கை நோய் திட்டச் சோதனைச் சாவடிகள், விழிப்புப் பிரிவுகள் அமைத்தல்.	1·19
12	மாதிரிப் பொருள் ஆய்வுத் திட்டம் ..	0·08
13	ஹோசூர் கால்நடைப் பண்ணை மேம்பாடு ..	0·01
14	வம்சா வழி ஆய்வுத் திட்டம்	5·02
15	செம்மறி ஆடு பெருக்கத் திட்டம்	0·19

		(ரூபாய் இலட்சத்தில்)
16	கால்நடைகள், பறவைகள் வழங்குதல் ..	7·63
17	வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செம்மறி ஆடு, மாடுகள் வளர்ப்பு.	16·55
18	ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம்—கறவை மாடுகள், செம்மறி ஆடுகள் வழங்குதல்.	10·11
	மொத்தம் ..	78·61

மாயூரம் நகரில் சாலைப் பணிகளுக்கான செலவு.

வினு 463—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ம் ஆண்டில் மாயூரம் நகராட்சி சாலைகளுக்காகவும் அவைகளின் பராமரிப்பு செலவுகளுக்காகவும் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) அதில் அரசின் மானியத் தொகை எவ்வளவு ?

விடை—

(அ) ரூ. 4,07,306.

(ஆ) ரூ. 38,961.

கொல்லைக் கரையில் காப்பி விளைச்சல்.

வினு 464—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

1977–78-ம் ஆண்டில் நீலகிரி மாவட்டம், கொல்லைக் கரைப் பகுதியில் காப்பி விளைச்சலைப் பெருக்குவதற்கு அளிக்கப்பட்ட உதவித்தொகை எவ்வளவு ?

விடை—

நீலகிரி மாவட்டத்தில், கொல்லைக் கரைப் பகுதியில் வாழும் பழங்குடி மக்கள் மிகவும் பழமையான முறையில் விவசாயம் செய்து முழுப் பயனையும் அடையாத காரணத்தால் நவீன முறைப்

படி விவசாயம் செய்து காப்பி விளைச்சலைப் பெருக்கி அவர்கள் பொருளாதார நிலை உயர்வதற்கு கீழ்க்கண்ட உதவித் தொகை 1977–78-ம் ஆண்டில் அளிக்கப்பட்டுள்ளது :—

	தொகை. ரூ.	பை.
காடுகளை அழித்து சாகுபடி செய்ய தகுதியாக்க நிலச்சீர்திருத்தம் செய்தல்.	1,57,156	53
உரம் பூச்சி மருந்துகள் வாங்க குடும்பம் ஒன்றிற்கு ரூ. 150 வீதம் 140 குடும்பங்கட்கு.	14,000	00
மொத்தம் ..	1,71,156	53

தீண்டாமை ஒழிப்புக்கான ரோந்துப் படை.

வினு 465—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தீண்டாமை ஒழிப்புக்காக உள்ள ரோந்துப் படையில் எத்தனை பேர் பணியாற்றுகின்றனர், மாவட்ட வாரியாக ?

(ஆ) 1977–78ம் ஆண்டில் அவர்கள் பதிவு செய்த வழக்குகள் எத்தனை, மாவட்ட வாரியாக ?

விடை—

(அ) தீண்டாமை ஒழிப்புக்காக உள்ள ரோந்துக் காவல் படைகளில் பணியாற்றுகின்றவர் (மாவட்ட வாரியாக) விபரம் வருமாறு —

பணியாற்றுகின்றவர் விபரம்.

மாவட்டம்.	ஆய்வாளர்.	உதவி ஆய்வாளர்.	தலைமை காவலர்.	காவலர்.
(1)	(2)	(3)	(4)	(5)
1. தென்னுற்காடு ..	1	1	2	2
2. மதுரை (தெற்கு)	1	1	2	2
3. திருச்சிராப்பள்ளி	1	1	2	2
4. தஞ்சாவூர் (மேற்கு)	1	1	2	2
5. நெல்லை	1	1	2	2
6. கோவை (நகர்புறம்)	1	1	2	2

[1978 செப்டம்பர் 14

(ஆ) 1977–78-ம் ஆண்டில் அவர்கள் பதிவு செய்த வழக்குகளின் விபரம் (மாவட்ட வாரியாக) —

1. தென்னாற்காடு—185
2. மதுரை (தெற்கு), மதுரை (வடக்கு) சேர்ந்தது—127.
3. திருச்சிராப்பள்ளி—89.
4. தஞ்சை (மேற்கு), தஞ்சை (கிழக்கு) சேர்ந்தது—196.
5. நெல்லை—129.
6. கோவை (நகர்புறம்), கோவை (புறநகர்) சேர்ந்தது—98.

'தமிழரசு' வெளியீடு.

வினா 466—திரு. என். கிட்டப்பா, திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

''தமிழக அரசின் சார்பில் நடத்தப்படும் 'தமிழரசு' ஏடு வெளியிடுவதன் மூலம் அரசுக்கு கிடைக்கும் லாபம் என்ன ?''

விடை—

தமிழக அரசு சார்பில் நடத்தப்படும் 'தமிழரசு' ஏடு அரசின் அதிகார பூர்வமாக, பொது மக்கள் அனைவரும் அரசின் சாதனைகளை அறிந்து கொள்ள வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் வெளியிடப்படுகின்றதேயன்றி, வியாபார நோக்கத்துடன் இலாப நஷ்டத்தைக் கருதி நடத்தப்படுவது அல்ல.

விவசாயிகளுக்கு கால் நடைகள் வழங்கல்.

வினா 467—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அண்மையில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கால் நடைகள் வழங்க 'கேர்' ஸ்தாபனம் உதவித் தொகை வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது ?

1978 செப்டம்பர் 14]

விடை—(அ) ஆம்

(ஆ) சென்ற ஆண்டு நவம்பர் திங்களில் ஏற்பட்ட புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு தங்களுடைய உழவு மாடுகளை இழந்த விவசாயிகளுக்கு காளை மாடுகள் வாங்கி வினியோகிப்பதற்காக சென்னையிலுள்ள 'கேர்' நிறுவனத்தினர் ரூபாய் 20 இலட்சம் நன்கொடையாக வழங்க முன்வந்ததை அரசு ஏற்றுக் கொண்டது. புயலாலும் வெள்ளத்தாலும் ஏற்பட்ட கால் நடைகளின் இழப்பு விகிதத்தை அடிப்படையாகக் கொண்டு, மதுரை, தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களுக்கு இந்தத் தொகையைப் பகிர்ந்தளிக்க வகை செய்யப்பட்டது. 'கேர்' நிறுவனம் ரூபாய் 15 இலட்சம் முன் பணமாக வழங்கியது. இத்திட்டத்தில் மொத்தம் செலவழிக்கப்பட்ட தொகை ரூபாய் 11,13,840.88. மீதித் தொகையான ரூபாய் 3,86,234.12 'கேர்' நிறுவனத்திற்கு திருப்பியளிக்கப்பட்டு விட்டது. இத்திட்டத்தினால் பயனடைந்தவர்களின் எண்ணிக்கையும் வழங்கப் பெற்ற கால் நடைகளின் எண்ணிக்கையும் மாவட்ட வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

மாவட்டம்.	செலவிடப்பட்ட தொகை. (ரூபாய்).	வினியோகிக்கப் பட்ட கால் நடைகள்.	பயனடைந்தவர்கள்.
(1)	(2)	(3)	(4)
மதுரை	3,10,696.70	426	287
தஞ்சாவூர் ..	4,59,081.35	980	763
திருச்சி	2,25,552.40	318	218
புதுக்கோட்டை ..	1,04,100.00	189	159
தென்னாற்காடு ..	14,410.43	25	19
மொத்தம் ..	11,13,840.88	1,938	1,446

சத்தியமங்கலம் தொகுதியில் ஏரி அமைப்புத் திட்டங்கள்.

வினா 468—திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதியைச் சேர்ந்த திருநாரையில் ஒரு ஏரி அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) அண்டு (ஆ) கோவை மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதியைச் சேர்ந்த திருநாறையில் ஓர் ஏரி அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

வினா 469—திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதியைச் சேர்ந்த ஏறகளள்ளியில் ஒரு ஏரி கட்டும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) அண்டு (ஆ) கோவை மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதியில் சேர்ந்த ஏறகளள்ளியில் ஓர் ஏரி கட்டும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் தற்பொழுது இல்லை.

வினா 470—திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதியைச் சேர்ந்த புதுப்பீர்கடவு கிராமத்தில் ஒரு ஏரி கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அதன் விவரம் பின்வருமாறு :—

திட்ட மதிப்பீடு தொகை	ரூ. 2,30,000
உத்தேசிக்கப்பட்ட பயனடையும் பாசன பரப்பு (புதியது).	171 ஏக்கர்.
உணவு உற்பத்தி	136·60 டன்கள்.

மேற்படி திட்டம் மிகவும் சிக்கனமற்றதாக உள்ளதால் மறுபரிசிலனை செய்ய தல அதிகாரிகளால் மேலும் புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

வரதப்பாளையம் குளத்தை செப்பனிடும் திட்டம்.

வினா 471—திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதியைச் சேர்ந்த வரதப்பாளையம் குளத்தை செப்பனிடும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) விவரம் கீழ் வருமாறு :—

மதிப்பீடு தொகை	ரூ. 8.53 லட்சங்கள்.
உணவு உற்பத்தி	223 டன்கள்.
திட்டச் செலவு ஒரு டன்னுக்கு ..	ரூ. 3,834.

கோவை மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதியைச் சேர்ந்த வரதப்பாளைய கிராமத்தில் உள்ள பெரிய குளத்தை செப்பனிடுவதற்காக விவரங்கள் சேகரிக்கப்பட்டு மதிப்பீடு தல அதிகாரிகளால் இறுதியாக்கப்படுகிறது.

தீயணைப்பு நிலையக் கட்டிடங்கள்.

வினா 472—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி நத்தத்தில் கீற்றுக் கொட்டகையில் செயல்பட்டு வரும் தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் அமைத்துத்தர இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நத்தத்தில் தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டுவதற்காக ஒரு காலி இடத்தை நத்தம் பேரூராட்சி மனமகிழ் மன்றத்தினரிடமிருந்து பெற ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மேற்படி இடம் கிடைத்தவுடன் நிதி நிலையை அனுசரித்து படிப்படியான திட்டத்தில் நத்தம் தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்யப்படும்.

வினா 473—திரு. தே. ஞானசிகாமணி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தாலூகாவில் குழித்துறையில் 1975 ஜூன் மாதத்தில் செயல்படத் தொடங்கிய தீயணைக்கும் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டும் உத்தேசமுண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) குழித்துறையில் நிரந்தர தீயணைப்பு நிலையம் கட்டுவதற்கென விளவங்கோடு கிராமத்தில் 23·50 சென்ட் நிலம் (சர்வே எண். 74) தேர்ந்தெடுக்கப்பட்டு, 8—3—78 அன்று குழித்துறை நகராட்சியினரிடமிருந்து தீயணைப்புத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டது. நிரந்தரத் தீயணைப்பு நிலையம் கட்டுவதற்கு தேவையான வரைபடம் மற்றும் மதிப்பீடும் சென்னை பொதுப் பணித்துறை தலைமைப் பொறியாளரிடம் கோரப்பட்டு உள்ளது. வரைபடம் மற்றும் மதிப்பீடும் கிடைக்கப்பெற்றதும், அரசின் நிதி நிலையை அனுசரித்து நிரந்தர தீயணைப்பு நிலையம் கட்ட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சென்னையில் வேலைபார்க்கும் பெண்களுக்குத் தங்கும் விடுதிகள்.

வினா 474—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப் புறங்களிலிருந்து சென்னை நகருக்கு வந்து வேலை பார்க்கும் பெண்களுக்கென அரசு தங்கும் விடுதிகளை அமைத்திடும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) & (ஆ) : குறைந்த வருவாய், நடுத்தர வருவாய் உள்ள பணிபுரியும் பெண்களுக்கு உணவு, உறைவிட வசதிகள் அளிக்க 1967-68-ம் ஆண்டிலேயே திட்டம் தீட்டப்பட்டு, அவ்வாறே 1—8—67-விருந்து பணிபுரியும் மகளிர்க்கான இல்லம் ஒன்று சென்னையில் துவக்கப்பட்டு சமூக நலத்துறையால் நடத்தப்பட்டு வருகின்றது. மாதாந்திர வருமானம் ரூ. 500-க்கு குறைவான மகளிர் இதில் அனுமதிக்கப்படுவர். தற்போது 25 மகளிர் தங்கும் வசதியுள்ளது. நபர் ஒன்றிற்கு உணவிற்காக 80 ரூபாயும், வாடகைக்காக 25 ரூபாயும், மின் கட்டணத்திற்கு 5 ரூபாயும் வசூலிக்கப்படுகிறது.

இவ்வில்லத்தில் தங்குவோரின் எண்ணிக்கையை 25-லிருந்து 200 ஆக உயர்த்துவதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

இது தவிர பணிபுரியும் பெண்கள் விடுதிகள் நடத்த தனியார் தொண்டு நிறுவனங்களும் ஊக்குவிக்கப்படுகின்றன. இதற்கான மாநில அரசின் பரிந்துரையின் பேரில், விடுதிக் கட்டிடத்தின் கட்டுமான/விரிவாக்க மதிப்பீட்டுச் செலவில் 75 சதவீதம் வரை மத்திய அரசு மானியம் வழங்குகிறது. இதுவரை இம் மாநிலத்தில் 17 தொண்டு நிறுவனங்கள் மேற்கண்ட உதவித் தொகையை பயன்படுத்தி விடுதிகள் நடத்தி வருகின்றன. இவற்றுள் 6 நிறுவனங்கள் சென்னை நகரில் விடுதிகள் நடத்தி வருகின்றன.

மேலும் மத்திய அரசு உதவிக்கு கூடுதலாக மாநில அரசும் 15 சதவிகிதம் அல்லது 35,000 ரூபாய் (இவற்றில் எது குறைவோ அத்தொகையை) தனியார் நிறுவனங்களுக்கு மானியமாக வழங்கி வருகிறது. இதுவரை 10 தனியார் நிறுவனங்கள் மாநில அரசின் உதவித்தொகையை பெற்றுள்ளன. இவற்றுள் 6 நிறுவனங்கள் சென்னை நகரில் விடுதிகள் நடத்தி வருகின்றன.

சென்னை கலைவாணர் அரங்கம்.

வினா 475—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி அறக்கட்டளைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை கலைவாணர் அரங்கில் ஒரு நாளைக்கு சராசரி எவ்வளவு வருமானம் கிடைக்கிறது?

விடை—

1977-78-ம் ஆண்டுக்கான ஒரு நாளைய சராசரி வருமானம் ரூ. 1,599.

கிளியனூர் ஏரி சீரமைப்பு.

வினா 476—திரு. எம். பரமசிவம் : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தாலூகாவில் உள்ள கிளியனூர் சித்தேரியை அகலப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமுல்படுத்தப்படும்?

விடை—

(அ) முன்னாள் ஜமீன் ஏரியாகிய திண்டிவனம்] தாலூகாவில் உள்ள கிளியனூர் ஏரி பொதுப்பணித்துறையால் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏரியின் உடைந்துபோன பகுதிகளை சீர்படுத்தி, கரைகளை பலப்படுத்தி மராமத்து செய்ய ரூ. 64,000 செலவில் மதிப்பீடு தல அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) ஆய்வுப் பணிகள் முடிந்து, விவர மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பரிசீலனைக்குப் பின் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்; ஒப்புதல் கிடைத்ததும் வேலை மேற்கொள்ளப்படும்.

ஐ. ஏ. எஸ். அதிகாரிகளுக்கு மருத்துவ வசதி.

வினா 477—திரு. கே. உச்சி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் வாங்கும் வைத்திய வசதிக்கான தொகை வருடம் ஒன்றுக்கு எவ்வளவு?

விடை—எழுப்பப்பட்டுள்ள வினா பொதுவாக இருப்பதாலும், இரு நூறுக்கும் மேற்பட்ட ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் பல்வேறுபட்ட இலாக்காக்களில் இருப்பதாலும், அனைவருக்கும் இந்த விபரங்கள் சேகரிப்பதற்கு நீண்ட காலமும் செலவும் ஆகும் என்பதாலும் இந்தக் கேள்விக்கு விடை அளிப்பதால் ஏற்படக் கூடிய பொது நன்மை ஒன்றும் பெரிதாக இருக்காது என்பதாலும் குறிப்பிட்ட வினாவிற்கு பதில் அளிக்க இயலவில்லை.

புதுப்பாளையம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

வினா 478—திரு. செ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கம் வட்டம் புதுப்பாளையம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் இருந்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது துவங்கப்படும்?

(இ) திட்டத்தின் மதிப்பீடு என்ன?

(ஈ) திட்டத்தை விரைவு படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) & (இ): திட்டம் ஆய்வில் இருப்பதால் இக்கேள்விகளுக்கு அறுதியான பதில் தற்சமயம் கூற இயலாது.

(ஈ) திட்டத்தை விரைவுபடுத்த வாரியம் எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுத்து வருகின்றது.

தனியார் கோழிப் பண்ணைகளுக்கு அரசு மானியம்.

வினா 479—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் கோழிப் பண்ணைகளுக்கு அரசு மானியம் ஏதேனும் தரப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது ?

(இ) 1977-78 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஈ) அவர்களிடமிருந்து வசூலாக வேண்டிய கடன் தொகை எவ்வளவு?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இந்திய அரசின் முழு நிதியுதவியுடன் கூடிய சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் கோழியின வளர்ச்சிக்காக சிறு விவசாயிகளுக்கும் நடுத்தர விவசாயிகளுக்கும் மற்றும் நில மற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும் அரசு தமிழ்நாடு கோழி வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக மானிய உதவி அளிக்கின்றது. இத்திட்டத்தின்கீழ் மேலே குறிப்பிட்டவர்களுக்கு மட்டும் 100 கோழிகள் கொண்ட கோழிப் பண்ணை அமைக்க மானிய உதவியாக அவர்களுக்கு குறிப்பிட்ட மொத்த தொகையில் முறையே சிறு விவசாயிகளுக்கு 25 சதவீதமும் மற்றவர்களுக்கு 33⅓-ம் மானியமாக அளிக்கப்படுகிறது. இவ்வகையில் இவ்வுதவி பெற தகுதியுள்ள சிறு விவசாயிகளுக்கு ரூபாய் 1,330 வீதமும் மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும், நடுத்தர விவசாயிகளுக்கும் ரூபாய் 1,776 வீதமும் மானிய உதவி வழங்கப்படுகிறது. இத் திட்டம் மதுரை, சேலம், செங்கற்பட்டு மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் மட்டும் செயலாக்கப்படுகிறது.

(இ) 1977-78-ல் செங்கை மற்றும் சேலம் மாவட்டங்களில் ரூபாய் 47,880 அரசு மானியமாகச் சிறு விவசாயிகளுக்கும், நடுத்தர விவசாயிகளுக்கும் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது,

(ஈ) இத்திட்டத்தின்கீழ் மானியம் மட்டுமே அரசு வழங்குகிறது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் விவசாயிகளுக்கு கோழிப் பண்ணைகள் நிறுவுவதற்கான செலவினங்களை கடனாக வழங்குகின்றன. இந்தக் கடனை வசூலிக்கும் பொறுப்பும் அவர்களுடையதே. இத்திட்டம் மிக அண்மையில் தொடங்கப்பட்டதாகும். எனவே வழங்கப்பட்ட கடன்களை வசூலிக்கும் காலம் வரவில்லை.

தாராசுரம் பட்டு (கைத்தறி) கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கம்.

வினா 480— திரு. ஈஸ்வர மூர்த்தி என்கிற திரு. பி. சொரணம்: மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராசுரம் பட்டு (கைத்தறி) கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கத்தின் டைரக்டர்கள் பலருக்கு ஓவர் டியூ உள்ளதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அவர்கள் மேல் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை —(அ) & (ஆ) : இந்த சங்கத்தைப் பற்றிய சில புகார்கள் கைத்தறி மற்றும் பஞ்சாலை இயக்குநர் துறைக்கு வந்து அவற்றை விசாரணை செய்ததில் நான்கு சங்க இயக்குநர்கள் தவணை தவறியுள்ளதாகத் தெரிய வந்தது. அவர்களை ஏன் இயக்குநர் பதவியிலிருந்து நீக்கம் செய்யக்கூடாது என்பதற்கான காரண முன்னறிவிப்பு (தமிழ்நாடு கூட்டுறவு விதி 1963-ன் பிரிவு 39-ன் கீழ்) திருச்சி உதவி இயக்குநரால் 6—7—1978-ல் கொடுக்கப்பட்டுள்ளது. பதில் கிடைக்கப்பட்டவுடன் பரிசீலித்து மேல் நடவடிக்கை தொடரப்படும்.

மாநிலக் கூட்டுறவு வங்கியின் விருந்தோம்பல் செலவு.

வினா 481— திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1976-77, 1977-78 ஆகிய ஆண்டுகளில் மாநில கூட்டுறவு வங்கியின் விருந்தோம்பல் செலவு எவ்வளவு?

விடை —

1976-77 ஆம் ஆண்டில் ரூபாய் 11,653·72.

1977-78 ஆம் ஆண்டில் ரூபாய் 7,493·11.

மேலே கண்ட தொகை ஊழியர்கள் கூட்டத்திற்கும், மத்திய வங்கி அதிகாரிகளுடனும் மற்ற நிறுவனங்களுடனும் நடத்தும் கூட்டத்திற்கும், முக்கியமான வாடிக்கையாளர்கள் வங்கிக்கு வருகை தரும்போதும், பொதுக்குழு கூட்டத்திற்கும், மற்ற வங்கிகளிலிருந்து வரும் முக்கிய அதிகாரிகளுக்கும் அளிக்கப்படும் தேநீர் முதலான விருந்தோம்பலுக்கு செலவழிக்கப்பட்டுள்ளது.

வடாற்காடு மாவட்டத்தில் வெள்ள நிவாரணப் பணியின்கீழ் போடப்பட்ட பாலங்கள்.

வினா 482—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ள நிவாரணப் பணியின்கீழ் வட ஆற்காடு மாவட்டத்தில் போடப்பட்டுள்ள பாலங்கள், தாம்போதிகள் எத்தனை, வட்டவாரியாக?

(ஆ) இதற்காக செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) விடப்பட்ட பாலங்கள், தாம்போதிகள் எத்தனை?

(ஈ) சாலைகள் பழுது பார்த்தது எவ்வளவு?

(உ) மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை செலவழிக்கப்பட்டு விட்டதா? அல்லது மீதம் ஏதும் உள்ளதா?

(அ) திருவண்ணாமலை கோட்டம்.

	சிறு பாலம்.	தொகை (இலட்சத்தில்).	தாம் போதி.	தொகை (இலட்சத்தில்).
1 திருவண்ணாமலை வட்டம். ..	20	2·28	1	0·03
2 போளூர் வட்டம் ..	25	1·80	..	..
3 செங்கம் வட்டம் ..	13	1·09	..	..
4 செய்யார் வட்டம் ..	19	1·39	..	..
5 ஆரணி வட்டம் ..	10	0·62	..	..
6 வந்தவாசி வட்டம்	26	1·76	..	..
	113	8·94	1	0·03

வேலூர் கோட்டம்.

	சிறு பாலம்.	தொகை (இலட்சத்தில்).	தாம் போதி.	தொகை (இலட்சத்தில்).
1 வேலூர் வட்டம் ..	5	0·91	9	1·49
2 குடியாத்தம் ..	2	0·20	16	2·59
3 வாலாஜா ..	23	2·61	10	1·31
4 அரக்கோணம் ..	13	1·06	15	2·30
5 திருப்பத்தூர் ..	..	..	3	0·74
	43	4·78	53	8·43

(திருவண்ணாமலை கோட்டம்)	(வேலூர் கோட்டம்)
(ஆ) சிறு பாலங்களுக்கும், நாம போதிகளுக்கும் 1977-78-ல் செலவழிக்கப்பட்ட தொகை ரூபாய் 8·97 இலட்சம்.	சிறு பாலங்களுக்கும் நாம்போதிகளுக்கும் 1977-78-ல் செலவழிக்கப்பட்ட தொகை ரூபாய் 13·21 இலட்சம்.
(இ) ஏதுமில்லை.	ஒன்று (போதிய நிதிவசதி இல்லாததால்) வேலையின் மதிப்பு சுமார் ரூபாய் 3,20,000.
(ஈ) 1977-78-ல் செலவு செய்யப்பட்ட தொகை ரூபாய் 39·03 இலட்சம் ஆகும்.	1977-78-ல் செலவு செய்யப்பட்ட தொகை ரூபாய் 24·28 இலட்சம் ஆகும்.
(உ) 1977-78-ம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை அனைத்தும் செலவழிக்கப்பட்டு விட்டது. 1978-79-ம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 7·99 இலட்சம் செலவழிக்கப்பட்டு வருகிறது.	1977-78-ம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை அனைத்தும் செலவழிக்கப்பட்டு விட்டது. 1978-79-ம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 4·25 இலட்சம் செலவழிக்கப்பட்டு வருகிறது.

Visit of Kanchi Sankarachayar to Tiruchirappalli Regional Engineering College.

Q. 483—Thiru R. UMANATH: Will the Hon'ble the Minister for Education be pleased to state—

(a) Whether any reception was organised by the Regional Engineering College, Tiruchirappalli, to Kanchi Sankaracharyar when he visited the institution recently;

(b) If so, the details of the reception and functions organised in his honour;

(c) the amount of money spent on the same; and

(d) whether the visit was at the instance of Sankaracharyar or the College authorities?

Answer—(a), (b), (c) and (d): The Temple Committee (a student body) of the Regional Engineering College, Tiruchirappalli, invited His Holiness Shri Sankaracharya Swamigal of Kanchi Kamakoti Peetam to visit the College and the Vinayagar Temple maintained by them and bless them when the Acharyar was camping at the nearby Kailasapuram Township (Bharat Heavy Electricals Limited), Tiruchirappalli. His Holiness accepted the invitation and visited the temple on 6th November 1977. The expenditure on the puja, etc., was met by the Temple Committee out of students' contributions made for the maintenance of the Vinayagar Temple. The College did not organise any reception to the Acharya and no amount was spent by the College

ஜவ்வாது மலை விவசாயிகளுக்கு ஆடுகள் வழங்கும் திட்டம்.

வினா 181—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலையில் விவசாயிகளுக்கு ஆடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன.

(இ) அத்திட்டத்தினால் பயன் பெற்றவர்கள் எத்தனை பேர்?

விடை—(அ) பழங்குடியின் நல்வாழ்வுத் திட்டத்தின் கீழ் ஆடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) இத்திட்டத்தின் கீழ் 50 விழுக்காடுடன் மானியமாக ஒரு குடும்பத்திற்கு 1 செம்மறி கிடாவும், 10 பெட்டை ஆடுகளும் கொண்ட ஒரு யூனிட் வழங்கப்படுகிறது. இதன்படி 1976-77-ல் 15 யூனிட்டுகளும், 1977-78-ல் 187 யூனிட்டுகளும் வழங்கப்பட்டன. 1978-79 ஆம் ஆண்டிற்கு 33 யூனிட்டுகள் உயர்ந்த பட்சமாக ஒரு யூனிட்டுக்கு ரூபாய் 1,500 வீதம் ரூபாய் 50,000 மானியத் தொகை வழங்க உத்திரவிடப்பட்டிருக்கிறது.

(இ) 1976-77-ல் 15 குடும்பங்களும், 1977-78-ல் 187 குடும்பங்களும் பயனடைந்திருக்கிறார்கள். 1978-79ஆம் ஆண்டில் 33 குடும்பங்கள் பயனடையும்.

தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம்.

வினா 185—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

(ஆ) 1978 மார்ச் முடிய எத்தனை லாரிகள் வாங்கப்பட்டுள்ளன, வருட வாரியாக?

(இ) அதன் மூலம் வந்த வருமானம் எவ்வளவு, வருட வாரியாக?

(ஈ) கழகத்தின் பணிகளை மேலும் விஸ்தரிக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

(உ) அண்மையில் அரக்கோணத்திலிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து அரக்கோணத்திற்கும் கோதுமை ஏற்றுமதி செய்ததில் மட்டும் இன்றுவரை வந்த வருமானம் எவ்வளவு?

விடை

(அ) தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம் 1975ம் ஆண்டு மார்ச்சு மாதம் 26-ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) வாங்கப்பட்ட லாரிகளின் எண்ணிக்கை வருட வாரியாக :

1975-76 — 63 லாரிகள்.

1976-77— 2 லாரிகள்.

1977-78—4 லாரிகள்.

(இ) வந்த வருமானம், வருட வாரியாக :

1975-76— ரூ. 20,66,558

1976-77—ரூ. 39,19,749

1977-78— ரூ. 42,61,735

(ஈ) கழகத்தின் பணிகளை விஸ்தரிக்க குறிப்பிடும்படியான திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(உ) 1978ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து ஆகஸ்டு மாதம் 3 ஆம் தேதி முடிய வந்த வருமானம் ரூ. 10,750

நிலக்கடலை பயிரிடுவோருக்கு அரசு உதவிகள்.

வினா 486—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டத்தில் நிலக்கடலை பயிரிடுவோருக்கு அரசு அளிக்கும் உதவிகள் என்ன ?

விடை— தஞ்சை மாவட்டத்தில் நிலக்கடலை பயிரிடுவோருக்கு அரசால் அளிக்கப்படும் உதவிகளாவன :

(அ) தனிப்பட்ட சாகுபடியாளர்களின் வயல்களில் விதைப் பண்ணைகள் அமைத்து, அவர்களிடமிருந்து விதைகளை அரசு இலாகா மூலமே கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விதைகள் விநியோகம் செய்யப்படுகின்றன.

(ஆ) பூச்சிகளினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒட்டுமொத்தமாக பயிர்ப் பாதுகாப்பு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் ஏக்கருக்கு ரூ. 3 வீதம் மானியம் வழங்கப்படுகிறது.

(இ) குறிப்பிட்ட சில பகுதிகளில் ஏற்படும் சிகப்புக் கம்பளிப் பூச்சியை ஒழிக்க மருந்துக்காகும் செலவையும், மருந்து அடிக்க ஆகும் கூலிச் செலவையும் கடன் வழங்கும் முறையில் அரசு ஏற்றுக் கொள்கிறது. பிறகு இக்கடன் நிலத் தீர்வையுடன் சேர்ந்து வசூலிக்கப்படுகிறது.

(ஈ) நுண் ஊட்டச் சத்துக்கள் இடுதல், ஜிப்சம் இடுதல் ஆகிய புதிய முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நுண் ஊட்டச் சத்துக்கள் விவசாயக் கிடங்குகள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன. ஜிப்சம் தனியார் நிறுவனங்கள் மூலம் விநியோகிக்கப்படுகின்றது.

CHILDREN'S PARK AT GUINDY

Q. 487—Thiru N. KITTAPPA : Will the Hon'ble the Minister for Local Administration be pleased to state—

(a) the authority maintaining the Children's Park in Guindy, Madras; and

(b) the cost of maintenance, per year?

விடை

(அ) கிண்டியிலுள்ள குழந்தைகள் பூங்காவை பராமரிக்கும் பொறுப்பு வனத்துறையைச் சார்ந்த சென்னை வன விலங்கு காப்பாளருடையது.

(ஆ) வருடாந்திர பராமரிப்பு செலவு :

1976-77— ரூ. 1,51,064

1977-78— ரூ. 1,55,008

WEIGHTS AND MEASURES IN CHITRAKULAM BOOTH OF T.N.D.D.C

Q. 488—Thiru N. KITTAPPA : Will the Hon'ble the Minister for Law be pleased to state—

(a) whether the milk venders in the booth of the Tamil Nadu Dairy Development Corporation in Chitrakulam area in Mylapore, Madras have been apprehended for using false measures about the 14th April, 1978; and

(b) If so, the action taken against them ?

Answer—

(a) No.

(b) Does not arise.

CHARGES FOR NUMBERING OF HOUSE AND SITES IN MADRAS.

Q. 489—THIRU N. KITTAPPA : Will the Hon'ble the Minister for Local Administration be pleased to state—

(a) the rates on which contractors are appointed by the Madras Corporation for numbering the houses and sites at Madras City;

(b) the details of the contractors appointed by the Madras Corporation to number the house and sites in Madras City in 1978 and

(c) the amount paid to them for the work ?

விடை—

(அ) சென்னை மாநகரத்தில் வீட்டு கதவுகளில் வர்ணம் பூசி இலக்கம் பொறிப்பதற்காக கதவு ஒன்றுக்கு 0.80 காசுகள் வீதம் அனுமதிக்கப்பட்டது.

(ஆ) நியமிக்கப்பட்ட ஒப்பந்தகாரர்கள்—

கோட்டம் 1 முதல் 10 வரை.	திரு. பி. மோகனன், 49, ராமானுஜம் கூடம் தெரு, சென்னை-56.
கோட்டம் 11 முதல் 20 வரை.	திரு. கே. பழனி, 32-பி, சோலையப்பன் தெரு, சென்னை-21.
கோட்டம் 21 முதல் 30 வரை.	யுனைடெட் எஞ்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஷன், 1, வில்லேஜ் சாலை 2-வது தெரு, சென்னை-34.
கோட்டம் 31 முதல் 40 வரை.	ஜே. சத்தியபாமா அண்டு கம்பெனி, 3.2சி, பிரித்தாவெட் சாலை. சென்னை-7.
கோட்டம் 41 முதல் 50 வரை.	திரு பி. பெருமாள், 50/1, பெட்சுரி பாக்கீஸ் சாலை, சென்னை-30.
கோட்டம் 51 முதல் 60 வரை.	கஸ்தூரி கன்ஸ்ட்ரக்ஷன், பிளாட் நெம்பர் 4109, அறிஞர் அண்ணா நகர், சென்னை-40.
கோட்டம் 61 முதல் 70 வரை.	திரு கே. சீதாராமன், 67-டி, படேல் ரோடு, சென்னை-11.

கோட்டம் 71 முதல் 80 வரை.	திரு எம். நடராசன், 111-எ ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம், சென்னை-24.
கோட்டம் 81 முதல் 90 வரை.	திரு கே. எம். மகநூனவர், 16, மேட்டுத் தெரு, சென்னை-1.
கோட்டம் 91 முதல் 100 வரை.	திரு ஆர். தியாகராசன், 3, தஞ்சாவூர் தெரு, தியாகராயநகர், சென்னை.17.
கோட்டம் 101 முதல் 110 வரை.	திரு. எம். மீரான், 170, மன்னார்சாமி கோயில் தெரு, சென்னை-13.
கோட்டம் 111 முதல் 120 வரை.	திரு. எஸ். சீனிவாசலு, 87, பஜனைகோயில் தெரு, சென்னை-24.

(இ) இவர்களுக்கு தொகை இன்னும் கொடுக்கப்படவில்லை.

District Industries Centres

Q. 490 Thiru M. ARUMUGAM : Will the Hon. Minister for Rural Industries be pleased to state the names of the districts where District Industries Centres are to be opened in the first instance ?

Ans.—District Industries Centres have been set up in the eight districts of Chengalpattu, Dharmapuri, Ramanathapuram, Thirunelveli South Arcot, Pudukkottai and Kanyakumari.

Tribals of Tamil Nadu

Q. 491 : Thiru C. MANICKAM : will the Hon. Minister for Harijan Welfare be pleased to State.

(a) the places in this State where Hill Tribes are inhabiting: and

(b) the steps taken to foster their culture?

விடை : (அ) 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப் பின்படி, இம்மாநிலத்தில் பக்கத்தில்....இணைப்பு IIஆக உள்ளது. பழங்குடியின் மக்கள் தொகையும்' அவர்கள் வசிக்கும் இடங்கள் பற்றிய விவரமும் * இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) ஒருங்கிணைந்த பழங்குடி மக்கள் மேம்பாட்டுத்துணை திட்டத்தின் கீழ், பல ஆக்கப் பணிகளை வகுத்து நிறைவேற்றுகின்ற போது மலைவாழ் மக்களின் தொன்று தொட்டு வரும் பழக்கத்திலிருக்கிற

* 983—984ம் பக்கத்தில் இணைப்பு IIஆக அச்சிடப்பெற்றுள்ளது.

மென்மையான கலாசாரத்துக்கு எந்தவிதமான குந்தகமும் ஏற்படாதவண்ணம் மிக்க கவனத்துடன் அரசு செயல்பட்டு வருகிறது. அவர்களின் அன்றாட வாழ்க்கை முறையில் கையாண்டு வருகின்ற வழியிலேயே அவர்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்துக்கு அரசு முடிந்த அளவு அவர்களை அணுகுகிறது. பழங்குடி மக்கள் ஒரு எளிய சமுதாய அமைப்பைச் சார்ந்தவராகையால், உடனடியாக வகுக்கப்படுகின்ற. எந்தவிதமான வெளியுலக அமைப்புகளும் அதன் சட்ட திட்டங்களும் அவர்களின் வாழ்க்கை முறையை பாதிக்காத வண்ணமும் அவர்களை அச்சுறுத்துவதாக இல்லாதவாறும் முடிந்த அளவு அரசு கவனித்துக் கொள்ளுகிறது.

Officers of Animal Husbandry Department deputes for training abroad

Q. 492. THIRU K. ABDUL LATHEEF : Will the Hon. Minister for Social Welfare be pleased to state

(*a*) the details of officers in the Animal Husbandry Department who have been sent abroad for training in the last five calendar years.

(*b*) the subjects in which these Officers have specialised.

Ans. (*a*) No Officer of the Animal Husbandary Department was sent abroad for training in the last five years,

(*b*) the question does not arise.

Study on incidence of brain fever in Tirunelveli district.

Q. 493: THIRU. M. ARUMUGAM: Will the Hon. the Minister for health be pleased to state.

(*a*) whether any team of experts had been sent by the Central Government to study the Brain fever in Tirunelveli district during April 1978, and

(*b*) If so, the details thereof.

விடை : [அ] ஆம்.

[ஆ] பூனா நோய் நச்சுயிர் [வைரஸ்] ஆராய்ச்சி நிலையம் புலனாய்வுக் குழு, மாநில சுகாதாரத் துறையுடன் இணைந்து மூளைக் காய்ச்சல் அறிவிக்கப்பட்ட திருநெல்வேலி, இராமநாதபுரம், தென்னாற்காடு மாவட்டங்களில் 1978 மார்ச் முதல் ஜூன்

மாதம் வரையிலான காலத்தில் நோய்க் காரண நிலைமைகளை முடிவு செய்வதற்குப் பணி புரிந்தது. இக்குழு நோயாளிகளைக் கண்டறிந்து, இரத்தம், முதுகுத்தண்டு திரவம், மூளைத் திசுக்கள் முதலியவற்றை ஆய்வுக்காக சேகரித்தது. நோய் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் பல்வேறு இன கொசுக்கள் சேகரிக்கப்பட்டன. இந்த கொள்ளை நோயில் ஜப்பானிய நோய் நச்சுயிரின் நோய்க் காரணமிருப்பது மாதிரிகளின் ஆராய்ச்சி உறுதிப்படுத்தியுள்ளது. சேகரிக்கப்பட்ட கொசுக்களை ஆராய்ந்திலிருந்து இங்குள்ள கியூலக்ஸ் கொசுக்கள் ஜப்பானிய நோய்க் கூறு உடையன என்று வெளிப்பட்டுள்ளது.

District munsif Court Building at Virudhachalam.

Q. 494: THIRU K. ABDUL LATHEEF : Will the Hon. the Minister for Law be pleased to state :

(*a*) Whether the Government are aware that the District Munsif's Court building at Virudhachalam needs repairs; and

(*b*) the steps taken thereon?

Ans. (*a*) Yes, Sir.

(*b*) In G.O. Rt. No. 1322, Home dated 3rd April 1978, the Government approve the proposal for dismantling the dilapidated building of the District, Munsif' Court, Virudhachalam. The proposal for the construction of a new building for the District Munsif Court at Virudhachalam was considered as part II Scheme for 1978-79 and was deferred for want of funds.

Facilities to prisoners appearing for university Examinaion.

Q. 495 : Thiru C. MANICKAM : Will the Hon. the Minister for Law be pleased to state:

(*a*) the details of the facilities available for prisioners in jails in this State to write examinations conducted by the Universities:

(*b*) the number of male and female prisioners who had taken various examinations conducted by the Universities during the academic years 1975-76 and 1976-77?

Ans. (*a*) Prisoners are permitted to appear for all Government examinations and to study through correspondence Courses and appear for various University examinations like B.A. B.Sc., B.Com, etc., at Government cost. They are permitted to appear for the same examination up to three times at Government cost. Qualified teachers in the prison schools give coaching to prisoners appearing for University Examinations. The prisoners are permitted to go to the examination centre for writing examinations in civilian clothes. The policemen escorting the prisoners to the examination centre are also sent mufty, so that the prisoners may feel that they are also like ordinary citizen and can write the examination well without any inferiority complex and with self confidence.

(*b*)

Year.	*Number of prisioners appeared for the various University examinations.*	
	Male.	*Female.*
(1)	(2)	(3)
1975-76	8	Nil.
1976-77	[illegible]	Nil.

Libraries in Central Jails.

Q. 496 : THIRU C. MANICKAM : Will the Honourable the Minister for Law be pleased to state—

(*a*) Whether there are libraries in the Central Jails in this State :

(*b*) If so, the details thereof ; and

(*c*) If not, the steps taken to open libraries in every jail in the State.

Ans. (*a*) Yes.

(*b*) There are eight Central Prisons in the State at Cuddalore, Salem, Madras, Vellore, Palayamcottai, Tiruchirappalli, Coimbatore and Madurai and there is a library attached to each of the Central Prison mentioned above. The libraries are equipped with Tamil and English books. Books in other language are also kept in some libraries. Besides, the Local Library Authorities are also periodically lending books which are issued to the prisoners. Periodicals like Ananda-Vikatan, Kalki, Tamil Arasu and daily newspapers like Dinamani, Navasakthi are also obtained at Government cost as per ratio of prisioners as prescribed in the rules and kept for reading in the libraries in the Central Prisons.

(*c*) Does not arise.

Poompuhar Shipping Corporation.

Q. 497 : THIRU N. KITTAPPA : Will the Honourable the Minister for Transport be pleased to state :—

(*a*) Whether the ships belonging to the State owned Poompuhar Corporation Limited are engaged in moving coal from various places in India and abroad to Madras for the State Electricity Board , and

(*b*) If so, the quantity moved by the ships during the calander years 1976, 1977 and 1978.

A.—(*a*) and (*b*) The ships of the Poompuhar Shipping Corporation Limited carried the following quantities of coal from Calcutta to Madras for the Tamil Nadu Electricity Board.

1976	..	37016 MT
1977	..	31449 MT
(Up to July) 1978	..	35623 MT

There was no coal brought from abroad for the Tamil Nadu Electricity Board either by Poompuhar or any other agency.

Admission of Women Students in Men's Polytechnics.

Q. 498 : THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) Whether Women students are to be admitted into Men's Polytechnics in this State , and

(*b*) If so, the details thereof.

A.—(a) Yes.

(b) Women students will be admitted into the Men's Polytechnics within the overall in take of each Institution, as and when found necessary.

தருமபுரி மாவட்டத்தில் சலவைத்துறைகள் அமைத்தல்.

வினா 499—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டத்தில் சலவைத் தொழிலாளர்களுக்கு டோபிகானா (சலவைத்துறை) அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை : ஆம். தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், காவேரிப் பட்டினத்தில் சலவைத் துறை அமைத்துக் கொடுக்கும் திட்டம் காவேரிப்பட்டினம் பேரூராட்சியின் பரிசீலனையில் உள்ளது.

ஓசூரில் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்ட மருத்துவமனை.

வினா 500 : திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தர்மபுரி மாவட்டம் ஓசூரில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை உருவாக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை இல்லை.

அரிசனங்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள்.

வினா 501—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976 ஜனவரி முதல் 1977 ஜூன் வரை தமிழ்நாட்டில் வடஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய இரு மாவட்டங்களில் வீட்டுமனை கோரி விண்ணப்பித்துக் கொண்ட அரிசனங்கள் எத்தனை பேர்கள் தாலூகாவாரியாக?

(ஆ) அவர்களில் எத்தனை பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டன, தாலூகாவாரியாக?

(இ) பட்டா வழங்க முடிவெடுக்காமல் இருக்கக் கூடிய மனுக்கள் எத்தனை, தாலூகாவாரியாக?

விடை—(அ) 1976 ஜனவரி முதல் 1977 ஜூன் வரை தமிழ்நாட்டில் வட ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய இரு மாவட்டங்களிலும் வீட்டுமனைக் கோரி விண்ணப்பித்துக் கொண்ட அரிசனங்களின் தாலூகாவாரியாக புள்ளி விவரங்கள் வருமாறு:—

வட ஆற்காடு மாவட்டம்.	புறம் போக்கு.	பட்டா.
(1)	(2)	(3)
1. குடியாத்தம்	399	587
2. திருப்பத்தூர்	253	265
3. வாணியம்பாடி	495	373
4. வேலூர்	132	455
5. ஆற்காடு	46	438
6. வாலாஜாபாத்	358	455
7. அரக்கோணம்	145	426
8. போளூர்	292	404
9. செங்கம்	192	344
10. திருவண்ணாமலை	430	312
11. ஆரணி	131	396
12. வந்தவாசி	247	726
13. செய்யார்	316	1,045
மொத்தம் ..	3,436	6,628

செங்கற்பட்டு மாவட்டம்.	புறம் போக்கு.	பட்டா.
(1)	(2)	(3)
1. செங்கற்பட்டு	678	382
2. மதுராந்தகம்	891	663
3. காஞ்சிபுரம்	746	220
4. உத்திரமேரூர் (சப் தாலூகா)	150	50
5. ஸ்ரீபெரும்புதூர்	70	156
6. சைதாப்பேட்டை	..	537
7. பொன்னேரி	..	278
8. கும்மிடிபூண்டி	141	144
9. திருவள்ளூர்	154	773
10. ஊத்துக்கோட்டை (சப் தாலூகா)	142	250
11. திருத்தணி	706	115
12. பள்ளிப்பட்டு (சப் தாலூகா)	219	195
மொத்தம் ..	3,897	3,763

(ஆ) அவர்களில் பட்டா வழங்கப்பட்டோரின் புள்ளி விவரங்கள் வருமாறு:—

வட ஆற்காடு மாவட்டம்.	புறம்போக்கு.	பட்டா.
(1)	(2)	(3)
1. குடியாத்தம்	310	483
2. திருப்பத்தூர்	228	68
3. வாணியம்பாடி	495	226
4. வேலூர்	132	253
5. ஆற்காடு	38	157
6. வாலாஜாபாத்	182	65
7. அரக்கோணம்	79	69
8. போளூர்	210	201
9. செங்கம்	192	80
10. திருவண்ணாமலை	321	350
11. ஆரணி	102	126
12. வந்தவாசி	209	335
13. செய்யார்	316	514
மொத்தம் ..	2,814	2,927

செங்கற்பட்டு மாவட்டம். ..	புறம் போக்கு.	பட்டா.
(1)	(2)	(3)
1. செங்கல்பட்டு	129	215
2. மதுராந்தகம்	590	99
3. காஞ்சிபுரம்	155	..
4. உத்திரமேரூர் (சப் தாலூகா)	109	..
5. ஸ்ரீபெரும்புதூர்	70	..
6. சைதாப்பேட்டை	..	88
7. பொன்னேரி	..	..
8. கும்மிடிபூண்டி	106	..
9. திருவள்ளூர்	109	168
10. ஊத்துக்கோட்டை (சப் தாலூகா). ..	59	..
11. திருத்தணி	372	92
12. பள்ளிப்பட்டு (சப் தாலூகா).	105	..
மொத்தம் ..	1,804	662

(இ) பட்டா வழங்க முடிவெடுக்கப்படாமல் இருக்கக்கூடிய மனுக்கள் விவரம் வருமாறு:—

வட ஆற்காடு மாவட்டம்.	பரிசீலனையில் இருக்கும் மனுக்கள்.	
	பட்டா.	புறம் போக்கு.
(1)	(2)	(3)
1. குடியாத்தம்	..	..
2. திருப்பத்தூர்	..	..
3. வாணியம்பாடி	..	..
4. வேலூர்	..	..
5. ஆற்காடு	..	8
6. வாலாஜாபாத	..	21
7. அரக்கோணம்	..	26

[1977 செப்டம்பர் 14

வட ஆற்காடு மாவட்டம்.

(1)	பரிசீலனையில் இருக்கும் மனுக்கள். பட்டா. (2)	புறம்போக்கு. (3)
8. போளூர்	..	28
9. செங்கம்	..	..
10. திருவண்ணாமலை	..	35
11. ஆரணி	..	..
12. வந்தவாசி	..	28
13. செய்யார்	..	..
மொத்தம்	..	146

செங்கல்பட்டு மாவட்டம்.

(1)	பட்டா. (2)	புறம்போக்கு. (3)
1. செங்கல்பட்டு	..	523
2. மதுராந்தகம்	..	301
3. காஞ்சிபுரம்	..	591
4. உத்திரமேரூர் (சப் தாலூகா)	..	41
5. ஸ்ரீபெரும்புதூர்	..	..
6. சைதாப்பேட்டை	..	..
7. பொன்னேரி	..	..
8. கும்மிடிபூண்டி	..	35
9. திருவள்ளூர்	..	31
10. ஊத்துக்கோட்டை (சப் தாலூகா).	..	83
11. திருத்தணி	..	334
12. பள்ளிப்பட்டு (சப் தாலூகா)	..	114
மொத்தம்	..	2,053

1978 செப்டம்பர் 14]

வினா 502—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தில் குடியிருப்பு மனை இல்லாத அரிசனக் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவர்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை— (அ) தென் ஆற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தில் 3,396 அரிசன குடும்பங்கள் சொந்த குடியிருப்பு மனை இல்லாமல் உள்ளன.

(ஆ) வீட்டு மனை இல்லாத எல்லா ஏழை அரிசன குடும்பங்களுக்கும் இலவசமாக வீட்டுமனை வழங்க வேண்டும் என்பதுதான் அரசின் திட்டம். அதன்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மருத்துவத் துறை செயற்கை அவயவங்கள் பொருத்து நிலையப் பணியாளர்கள்.

வினா 503—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவத் துறையைச் சார்ந்த செயற்கை அவயவங்கள் பொருத்தும் நிலையத்தில் நீண்ட நாள் பணியாற்றியும் நிரந்தரமாக்கப்படாதவர்கள் உண்டா?

(ஆ) ஆம் எனில், அவர்களை நிரந்தரமாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது?

விடை— (அ) ஆம்.

(ஆ) இது சம்பந்தமாக கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

கொடைக்கானல் பகுதியில் சாலைப் பணிகள்

வினா 504—திரு. கே. பண்ணை சேதுராமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம சாலைத் திட்டத்தின் கீழ் கொடைக்கானல் பகுதியில் பூண்டி, போளூர், கிளாவரை கிராமங்களுக்கு சாலை அமைக்கும் செயற் குறிப்புகள் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன?

விடை— (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

விபத்தில் பாதிக்கப்பட்ட பனையேறும் தொழிலாளர்களுக்கு நிதி வழங்கல்.

வினா 505— திரு தே. ஞானசிகாமணி: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?—

பனையேறும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் விபத்து நிதி 1973-ம் ஆண்டுகளுக்குப் பிறகு எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது?

விடை: 1973-ம் ஆண்டிற்கு பிறகு 31—8—1977 வரை விபத்தினால் பாதிக்கப்பட்ட 366 பனைத் தொழில் வல்லுநர்களுக்கு விபத்து நிதி வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூபாய் 2,39,900.

வாணியாற்றின் குறுக்கே பாலம்.

வினா 506.—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?—

அரூர் பஸ் நிலையத்திற்கும், அரிஜன் காலனிக்கும் மத்தியில் ஓடும் வாணியாற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

விடை: இல்லை.

அரூர் வட்டத்தில் தொழிற் கூடங்கள்.

வினா 507—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

அரூர் வட்டத்தில் தொழில் வளர்ச்சிக் கூடம் (இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்) அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

விடை— தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் நுண் தொழிற் கூடங்களுக்குள்ள (Tiny Sector) திட்டத்தின் கீழ் 10 தொழிற் கூடங்களை இந்த ஆண்டு அரூரில் கட்டுவதற்கு திட்டமிட்டுள்ளது.

Bridge across Paraliar.

Q. No. 508.— THIRU J. JAMES: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) whether there is any proposal to construct a bridge across Paraliar at Mathoor connecting Mathoor and Kumarankudi villages in Kanyakumari district; and

(b) if so, the details thereof?

Answer: (a) No.

(b) Does not arise.

புள்ளம்பாடி வாய்க்காலில் இருந்து கிளை வாய்க்கால்.

வினா 509—திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் புள்ளம்பாடி மெயின் வாய்க்காலில் 49/1-வது மைலில் இருந்து பொது மக்கள் செலவில் வெட்டியுள்ள கிளை வாய்க்காலுக்கு பைப் வைத்துக் கொடுக்கக் கோரும் கோரிக்கை எந்த நிலையில் உள்ளது ?

விடை:— அரியலூர் புள்ளம்பாடி மெயின் வாய்க்காலில் 49/1-வது மைலில் இருந்து 'பைப்' வைத்துக் கொடுக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

சிதம்பரம் வட்டத்தில் ஹையர் செகண்டரி பள்ளிகள்.

வினா 510—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டத்தில் (Hihger Seconda y) ஹையர் செகண்டரி கல்வி கற்பிக்க எத்தனை பள்ளியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

(ஆ) நந்தனூர் உயர்நிலைப்பள்ளி, அருளானந்தர் உயர் நிலைப் பள்ளி, சேத்தியா தோப்பு ஆகிய பள்ளிகளில் ஏற்படுத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை: (அ) சிதம்பரம் வட்டத்தில் ஒன்பது உயர் நிலைப் பள்ளிகளில் நடப்பு ஆண்டில் மேல் நிலைப்பள்ளிக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) நந்தனூர் அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, சிதம்பரம் நந்தனூர் அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, சிதம்பரம் ஆகிய இரண்டு பள்ளிகளிலும் 1978-79-ல் மேல் நிலைப்

பள்ளிக் கல்வி கற்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சேத்தியா தோப்பு அருளானந்தர் உயர்நிலைப் பள்ளியில் நடப்பு ஆண்டில் மேல் நிலைப் பள்ளிக் கல்விப் பிரிவு தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

வெண்ணாற்றின் தென்கரையைப் பலப்படுத்துதல்.

வினா 511—திரு. அ. செல்லப்பா: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?—

வலங்கைமான் தொகுதியைச் சேர்ந்த அம்மாபேட்டை ஒன்றியத்தில் நெய்க் குண்ணம் பஞ்சாயத்தைச் சேர்ந்த தீபாம்பாள் புரம் கிராமத்தில் வெண்ணாற்றின் தென்கரையைப் பலப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள வலங்கைமான்தொகுதி அம்மாப்பேட்டை ஒன்றியம் நெய்க் குண்ணம் எல்லைக்குட்பட்ட வெண்ணாற்றின் தென்கரை என்பது வெண்ணாற்றின் வலது கரை மைல் 51/5 முதல் 53/5 வரை உள்ள பகுதியாகும். 1977 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தில் இப்பகுதியில் உடைப்புகள் ஏற்பட்டன. அவைகள் அடைக்கப்பட்டு கரைகள் நிர்ணய அளவிற்கு உயர்த்தி கரைகள் பலப்படுத்தப் பட்டது. மேலும் மண் வேலை செய்து பலப்படுத்தப்பட்ட கரைகளுக்கு பாதுகாப்பாக கருக்கைகள் இக்கோடையில் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசியல் தியாகிகள் குழந்தைகளுக்கு படிப்புதவி.

வினா 512.—திரு. கு. ரமணி: திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?—

(அ) பென்ஷன் பெறுகிற அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு இலவசமாக படிப்புக்கு ஏற்பாடு செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விபரங்கள் யாவை?

விடை—(அ) & (ஆ) தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிலும் அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு முழு கட்டணச் சலுகையுடன் உதவித் தொகையும் அரசு வழங்கி வருகின்றது. இத்திட்டத்திற்கு தற்போது மத்திய அரசின் உதவி அளிக்கப்படுவதில்லை. 1974-75-ம் ஆண்டு முதல் மாநில அரசு இத்திட்டத்தின் முழுச் செலவையும் ஏற்றுக் கொள்கிறது.

2. இத்திட்டத்தின்கீழ் உதவி பெற சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோரின் வருட வருமானம் ரூ. 3,600 க்கு உட்பட்டதாகவும் தியாகிகள் குறைந்த பட்சம் ஆறுமாதம் சிறை தண்டனை அடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

3. உதவித் தொகைகளின் எண்ணிக்கை.—

1.	8 படிவம் முதல் 10 வரை	48
2.	11 அல்லது புகுமுக வகுப்பு	36
3.	பட்டப்படிப்பு	20

உதவித் தொகையின் அளவு (தங்கி படிக்கும் மாணவர்கள்).—

8 முதல் 10 வரை	ரூ. 335 வருடத்திற்கு
புகுமுக வகுப்பு/11-ம் வகுப்பு	ரூ. 385 வருடத்திற்கு
பட்டப்படிப்பு முதல் வருடம்	ரூ. 525 வருடத்திற்கு
இரண்டாம் வருடம்	ரூ. 450 வருடத்திற்கு
மூன்றும் வருடம்	ரூ. 440 வருடத்திற்கு

உதவித் தொகையின் அளவு—(தங்காமல் படிக்கும் மாணவர்கள்)

8 முதல் 10 வரை	ரூ. 35
11 வகுப்பு/புகுமுக வகுப்பு	ரூ. 85
பட்டப்படிப்பு முதல் வருடம்	ரூ. 125
இரண்டாம் வருடம்	ரூ. 59
மூன்றும் வருடம்	ரூ. 40

தொழிற்படிப்புக்கான உதவித் தொகையின் எண்ணிக்கை—

அரசாணை எண். 282, நாள், 13–2–1963.

விவசாயக் கல்வி	3
பொறியியல்	3
சட்டம்	1
மருத்துவக் கல்வி	3
ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்	3
கால்நடை மருத்துவம்	1

புத்தக உதவித் தொகைகளின் விவரம்—

1.	எம்.பி.பி.எஸ்.	ரூ. 1,081 படிப்புத் தொடர் முழுவதும்
2.	பி.டி.எஸ்.	ரூ. 1,087
3.	பி. பார்ம்.	ரூ. 487
4.	பி.டி.	இல்லை.
5.	சட்டப்படிப்பு எப். எல்./பி.எல்.	ரூ. 51
6.	பொறியியல் கல்வி	ரூ. 550
7.	விவசாயக் கல்வி	ரூ. 650
8.	டிப்ளமா	ரூ. 180
9.	தொழிற்படிப்பு	ரூ. 35

களக்காடு பகுதியில் கால்நடைகளுக்கு மேய்ச்சல் இடம்.

வினா 513.— திரு மு. ஜான் வின்சென்ட்.— மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நெல்லை மாவட்டம் களக்காடு பகுதியில் மலையடிவார மக்கள் தங்களது கால்நடை மேய்ச்சலுக்கு இடமின்றி கஷ்டப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—(அ) கால்நடை மேய்ச்சலுக்குக் கஷ்டப்படுவதாக அரசுக்குத் தகவல் இல்லை.

(ஆ) களக்காடு ஒதுக்குக்காடு முழுவதும் சரணாலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது. வனவிலங்கு சரணாலயத்தில் மாடுகள் மேய்வதாலும் அதைத் தொடர்ந்து நெருப்பு வைத்து புல் தரையை எரியச் செய்வதாலும் வன விலங்குகள், தாவரங்கள் ஈரப்பசை ஆகியவைகட்கு நிரந்தரத் தீமை உண்டாகி மலைவளம் குன்றிவிடும். மேலும், மேய்ச்சலுக்குச் செல்லும் மாடுகளை அடித்துவிடும் புலி மற்றும் சிறுத்தை முதலிய வன விலங்குகளை விஷம் வைத்துக் கொல்லும் முறை, மேய்ச்சலுக்கு மூடப்பட்டுள்ளதால், தவிர்க்கப்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டே, களக்காடு சரணாலயத்தில் மேய்ச்சலுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. ஆயினும், மக்கள் கோரிக்கைக்கு இணங்க தெற்கே பரிவரி சூரியன் பகுதிகளிலும், வடக்கே தெற்கு வீரநல்லூர், மல்லூர் மற்றும் மண்பொத்தை, கொழுந்துமாமலை காப்புக் காடுகளிலும் மேய்ச்சலுக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், களக்காடு சரணாலயத்தில் ஒட்டிய புறம்போக்கு பட்டாக் காடுகள் அதிகமாக உள்ளன. அங்கேயும் மாடுகளை மேய்க்கலாம். நடப்பு ஆண்டில் மலை விளைச்சலாகிய புற்களை சேகரம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு சேகரம் செய்யப்படும் புல் சரணாலயத்தைச் சுற்றியுள்ள ஊர் மக்களுக்குப் பெரிதளவில் பயன்பட வாய்ப்புண்டு. வனத்திற்கு போகும் பெரும்பாலான மாடுகள் தரக்குறைவானவை.

மதுரை மாவட்டத்தில் வனப்பகுதி நிலங்கள்

வினா 514—திரு. நா. பழனிவேல்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் வனப்பகுதிகளில் விவசாயம் செய்துவருபவர்கள் எவ்வளவு பேர்?

(ஆ) அவர்கள் விவசாயம் செய்யும் நிலங்களை அவர்களுக்கே ஒப்படை செய்து கொடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(இ) மேலும், வனப்பகுதியில் விவசாயத்திற்கு தகுதியான நிலங்களை நிலமற்ற ஏழை அரிசனங்களுக்கும், ஏழைகளுக்கும் வழங்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

விடை:

(அ) மதுரை மாவட்டத்தில் 1,761 விவசாயிகள் வனப் பகுதிகளில் விவசாயம் செய்துவருகிறார்கள்.

(ஆ) தற்போது விவசாயிகளுக்கு வனத் தோட்டங்கள் உற்பத்தி செய்யப்படும் நிலங்களில் கும்ரி பயிரிடத்தான் நிலங்கள் கொடுக்கப்படுகின்றன. ஆகவே, ஒப்படை செய்து கொடுப்பதற்கில்லை.

(இ) காட்டு நிலங்களை காடு அல்லாத பயன்களுக்குத் தருவதில்லை என்பது அரசின் கொள்கை. இந்திய அரசும் இக்கொள்கையை வலியுறுத்தி சில வழிமுறைகளை வகுத்துள்ளது.

உளுந்தூர்ப்பேட்டை மருத்துவ மனையில் டாக்டர்கள், நர்சுகள்

வினா 515—திரு. வ. துலுக்காணம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்ப்பேட்டை அரசினர் மருத்துவ மனைக்கு அனுமதிக்கப்பட்ட டாக்டர், நர்சுகள் பதவிகள் முழுமையாக நியமிக்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன் மேல் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை:

(அ) & (ஆ) உளுந்தூர்ப்பேட்டை அரசினர் மருத்துவ மனைக்கு 3 உதவி அறுவை மருத்துவர்களும், 3 செவிலியர்களும் மொத்தத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தற்சமயம் அனுமதிக்கப்பட்ட எல்லா பதவிகளும் நிரப்பப்பட்டு அலுவலர்கள் பணி புரிந்து வருகின்றனர்.

தென் ஆற்காடு மாவட்டத்தில் அரிசனக் குடியிருப்புகள்

வினா 516—திரு. வ. துலுக்கானம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், உளுந்தூர்ப்பேட்டை யூனியன் பகுதி, தியாகதுர்க்கம் யூனியன் பகுதி, நல்லூர் யூனியன் பகுதிகளில் எத்தனை அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன?

(ஆ) வீடு கட்ட ஆரம்பித்த குடியிருப்புகளில் நிறைவுபெறாமல் உள்ள குடியிருப்புகள் எவ்வளவு?

(இ) இந்த ஆண்டு எத்தனை அரிசனங்களுக்கு எத்தனை குடியிருப்புகள் கட்டும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது?

(ஈ) எப்போது வேலை ஆரம்பிக்கப்படும்.

விடை:

(அ) தென் ஆற்காடு மாவட்டம், உளுந்தூர்ப்பேட்டை ஒன்றியம், தியாகதுர்க்கம் ஒன்றியம், நல்லூர் ஒன்றியம் பகுதிகளில் அரிசனங்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் பின் வருமாறு:—

ஒன்றியத்தின் பெயர். (1)	கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள். (2)
1. உளுந்தூர்ப்பேட்டை ஒன்றியம்	42
2. தியாகதுர்க்கம் ஒன்றியம்	153
3. நல்லூர் ஒன்றியம்	299

(ஆ) உளுந்தூர்ப்பேட்டை ஒன்றியத்தில் காட்டு நெமிலி கிராமத்தில் கட்ட ஆரம்பித்த 51 குடியிருப்புகளில் தொடர்ந்து வேலை நடந்து வருகிறது.

(இ) 1978-79—க்கான வீடுகள் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

(ஈ) இவ்வினா எழவில்லை.

சேரன்மாதேவி தொகுதியிலுள்ள பாசனக் குளங்கள்

வினா 517—திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மாதேவி தொகுதியில் எத்தனை பாசன குளங்கள் உள்ளன?

(ஆ) அதில் எத்தனை குளங்கள் சமீப காலத்தில் மராமத்து செய்யப்பட்டன?

(இ) மராமத்து செய்யப்படாத குளங்களையும் மராமத்து செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை:

(அ) சேரன்மாதேவி தொகுதியில் மொத்தம் 111 நீர்ப்பாசனக் குளங்கள் உள்ளன.

(ஆ) அதில் 38 குளங்கள் சமீப காலத்தில் மராமத்து செய்யப்பட்டன.

(இ) மீதமுள்ள 73 குளங்களில், 38 குளங்கள் சீரிய நிலைமையில் உள்ளதால் அதற்கான மராமத்து வேலைகள் தற்போது தேவையில்லை. மற்றும் உள்ள 35 குளங்களுக்கு மராமத்து வேலைகள், அடுத்த ஆண்டு 1979-80 நிதிநிலைமை பொறுத்து கால்வாய்கள் மூடியிருக்கும் தருணங்களில் செய்யப்படும்.

விற்பனை வரி குறித்த சோதனைகள்

வினா 518—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1976-77 ஆம் ஆண்டில் விற்பனை வரி ஏய்ப்பு செய்தவர்களிடமிருந்து சோதனைகள் மூலம் கிடைத்த வரி வருமானம் எவ்வளவு?

விடை—

1976-77 ஆம் ஆண்டில் விற்பனை வரி ஏய்ப்பு செய்தவர்களிடமிருந்து வணிகவரித் துறையினரால் சோதனைகள் மூலம் கிடைத்த மொத்த வருமானம் ரூபாய் 5·35 கோடியாகும்.

[1978 செப்டம்பர் 14

தேவலாவில் நிலமற்ற இலங்கைத் தமிழர்கள்

வினா 519—திரு. கே. உச்சி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதியிலுள்ள தேவலாவிலுள்ள நிலமற்ற இலங்கைத் தமிழர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு நிலப்பட்டா கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

(அ) 600 பேர்.

(ஆ) கூடலூர் வட்டம், தேவலா கிராமத்தில் உள்ள நிலங்கள் ''கூடலூர் ஜென்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம், 1969'' (சட்டம் 24/69) பிரிவு 53-ன்கீழ் ''வனமாக'' மாற்றப்பட்ட நிலங்களாகும். 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29 ஆம் நாளிட்ட வருவாய்த் துறையின் பலவகை எண். 2139 அரசாணையின்படி நிறுவப்பட்ட உயர் மட்டக் குழுவின் தீர்மானத்தின் பிறகுதான் அந்நிலங்களை ஒப்படை செய்ய இயலும். மேலும், தற்போது இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 279 பேர்கட்கு வீட்டுமனை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேலூரில் அரசு அலுவலகக் கட்டிடங்கள்

வினா 520—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம், வேலூரில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்துக்கும், மற்றைய அலுவலகங்களுக்கும் புதியதாக அலுவலக கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

1978 செப்டம்பர் 14]

கலசப்பாக்கம் ஒன்றியத்தில் புதிய துவக்கப் பள்ளிகள்.

வினா 521—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் ஒன்றியத்தில் புதியதாக எத்தனை துவக்கப்பள்ளிகள் திறப்பதற்கு அரசிடம் அனுமதி கோரி முறையீடு அனுப்பப்பட்டுள்ளது?

(ஆ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மூன்று.

(ஆ) 1975–76 ஆம் கல்வி ஆண்டில் கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் இராமசாமிபுரம் மற்றும் [illegible]ன்னுவம்பட்டு கிராமங்களில் பள்ளிகள் கல்வித் துறையின் முன் அனுமதி பெறாமல் [illegible] ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் திறக்கப்பட்டு நடைபெற்று வந்தன. அதில் இராமசாமிபுரம் கிராமத்தில் திறக்கப்பட்ட பள்ளிக்கு பின் ஏற்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மற்றொரு பள்ளியான [illegible] துவக்கப் பள்ளிக்கும் பின் ஏற்பு அனுமதி வழங்குவது குறித்த கருத்துரு சார்பு அலுவலரின் பரிசீலனையில் உள்ளது.

மேலும், 1976–77 ஆம் கல்வி ஆண்டில் [illegible] ஒன்றிய ஆணையரால் [illegible] கிராமத்தில் ஓர் பள்ளி கல்வித்துறையின் முன் அனுமதியின்றி திறக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அதற்கும் பின் ஏற்பு அனுமதி வழங்குவது குறித்த கருத்துரு சார்பு அலுவலரின் பரிசீலனையில் உள்ளது.

1978–79 ஆம் கல்வி ஆண்டில், கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் புதிய துவக்கப்பள்ளிகள் திறக்கக் கோரும் பிரேரணை ஏதும் பெறப்படவில்லை.

சங்கராபுரம் மருத்துவமனைக்கு பெண் மருத்துவ அலுவலர் நியமனம்.

வினா 522—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் சங்கராபுரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் பெண் மருத்துவ அலுவலர் நியமனம் செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): சங்கராபுரம் அரசு மருத்துவ மனையில் பெண் மருத்துவ அலுவலரை நியமனம் செய்வது பற்றிய கருத்துரு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருப்பத்தூர் ஏரியை பழுது பார்த்தல்.

வினா 523—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஏரியை ஆழப்படுத்தி அதன் கரையை அகலப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூர் பெரிய ஏரிக்கு நீர் எடுத்து புனல் அமைக்கும் திட்டத்தின் கீழ் ரூபாய் 53,481 செலவில் 1975-ல் வேலைகள் செய்து முடிக்கப் பட்டன. ஏரியின் கரையை செம்மையாக சீரமைக்கவும் கரைக்கு சிவப்பு மொரம்பு (Gravel casing) பரப்பவும் 1977–78-ல் வெள்ள நிவாரணப் பணியின் கீழ் ரூபாய் 55,800 மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, சுமார் 60 சதவிகிதம் வேலை நடைபெற் றுள்ளது. மீதமுள்ள வேலைகள் தொடரப்பட்டு வருகின்றன. இந்த ஏரியின் கரையை அகலப்படுத்தவும், ஏரியின் மராமத்து வேலைகள் மேற்கொள்ளவும் ஒரு மதிப்பீடு ரூபாய் 69,300-க்கு 1977–78-ல் அங்கீகரிக்கப்பட்டு, வேலைகள் நடைபெற்று வருகின்றன.

தோட்டக் கலை கல்வி நிலையம்.

வினா 524—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசினால் தோட்டக்கலை கல்வி நிலையம் ஏதேனும் நடத்தப்பட்டு வருகின்றதா?

(ஆ) ஆம் எனில் 1977–78 ஆம் ஆண்டில் அதில் பயின்று தேர்ச்சி பெற்றவர்கள் எத்தனை பேர்?

விடை—

(அ) கோவையில் உள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் தோட்டக்கலைக் கல்வித்தொகை ஆராய்ச்சி நிலையம் துறையொன்று இயங்கி வருகிறது.

(ஆ) கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 1972–73 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட தோட்டக்கலைப் பட்டப் படிப்பில் நடப்பு ஆண்டு முடிய 59 பட்டதாரிகள் பயிற்சியளிக்கப்பட்டு வெளிவந்துள்ளனர். இது 1977–78 ஆம் ஆண்டில் பட்டம் பெற்ற 18 பேரையும் உள்ளடக்கியது.

அரிசனங்களுக்கு கறவை மாடு வாங்குவதற்கு கூட்டுறவுச் சங்க மானியத் தொகை.

வினா 525—திரு. ஜி. சொக்கலிங்கம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கறவை மாடு வாங்குவதற்கு கடந்த ஆண்டில் அரிஜனங் களுக்கு மானிய தொகை எவ்வளவு கொடுக்கப்பட்டது?

(ஆ) அது எந்தெந்த கிராமங்களுக்குக் கொடுக்கப்பட்டது?

விடை—

(அ) ரூபாய் ஒரு இலட்சம்.

(ஆ) 1977–78-ம் ஆண்டில் கீழ்க்கண்ட கிராமங்களில் கூட்டுறவு பால் விநியோகச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டது.

(1) எலப்பாக்கம் அரிசன கூட்டுறவுப் பால் விநியோகச் சங்கம்.

(2) கள்ளஞ்சேரி அரிசன கூட்டுறவுப் பால் விநியோகச் சங்கம்.

(3) பட்டரைப் பெரும்புதூர் அரிசன கூட்டுறவுப் பால் விநியோகச் சங்கம்.

(4) மாத்தூர் கூட்டுறவுப் பால் விநியோகச் சங்கம்.

(5) வையூர் அரிசன கூட்டுறவுப் பால் விநியோகச் சங்கம்.

அரசுக் கல்லூரிகளில் மாணவர் ஆசிரியர் விகிதாச்சாரம்.

வினா 526—திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுக் கல்லூரிகளில் மாணவர் ஆசிரியர் விகிதாச் சாரம் எவ்வளவு?

(ஆ) அதன் அடிப்படையில் நடப்பாண்டில் (1977–78), மாணவர் சேர்க்கையை ஒட்டி ஆசிரியர்கள் நியமனம் செய்யப் பட்டார்களா?

(இ) இல்லையெனில், அதற்கான காரணம் யாது?

விடை—

(அ) அரசுக் கல்லூரிகளில் பாலைவர் ஆசிரியர் விகிதாச்சாரம் எதுவும் இல்லை. ஒவ்வொரு வகுப்பிற்கும், அதாவது புகுமுக வகுப்பு, பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, ஆகியவற்றிற்கு பல்கலைக்கழகம், பாடத்திட்டம் வகுத்துள்ளது; அதற்கேற்றாற்போல் ஆசிரியர்கள் கல்லூரிகளுக்கு நியமிக்கப்படுகிறார்கள். மாணவர்களின் எண்ணிக்கையை வைத்து ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதில்லை.

(ஆ) வினா ''அ''விற்கு அளித்துள்ள விடையால் இவ்வினாவிற்கு இடமில்லை.

(இ) பள்ளிகளில் ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரம் மேற்கொள்ளப்படுவது போன்று கல்லூரிகளில் மேற்கொள்ளுவதில்லை. ஏனெனில், கல்லூரிக் கல்வி உயர் கல்வியாகும். இதில் கல்வியின் தரத்திற்கே முதலிடம் அளிக்கப்படுகிறது. எனவே, கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் பாடங்கள் ஒரு வகுப்பிற்கு ஒரு வாரத்திற்கு எத்தனை மணி நேரங்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும் எனவும், ஒரு ஆசிரியர் ஒரு வாரத்திற்கு எத்தனை மணி நேரம் பயிற்றுதல் வேண்டும் எனவும் பாடங்களின் அடிப்படையில் வேலைப்பளு பல்கலைக் கழகத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பிறகு அந்த வேலை பளுவிற்கு ஏற்ப பேராசிரியர், உதவிப் பேராசிரியர்கள், பயிற்றுநர்கள், விளக்குநர்கள் ஆகிய நிலையில் உள்ள கல்லூரி ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

கோவை பாளையம் தோட்டப் பகுதியில் குடிசை மாற்றுப் பணிகள்.

வினா 527—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை நகரம் பாளையம் தோட்டப்பகுதி, லிங்கே கவுடர் தோட்டப் பகுதியில் உள்ள குடிசைகளை மாற்றி வீடுகள் கட்ட அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு வீடுகள் கட்டப்பட உள்ளன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : கோவை நகர் பாளையம், தோட்டப் பகுதியில் ரூபாய் 2·621 இலட்சம் மதிப்பீட்டில் 16 வீடுகளும், லிங்கேகவுடர் தோட்டப் பகுதியில் ரூபாய் 4.782 இலட்சம் மதிப்பீட்டில் 32 வீடுகளும் கட்டும் திட்டம் ஒன்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

புதுப்பதி-சின்னாம்பதியில் குழந்தைகள் நல மையங்கள்.

வினா 528—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில் புதுப்பதி-சின்னாம்பதி மலைவாழ் மக்களுக்கு '' பால்வாடி '' அமைத்துத்தர 1977-ம் ஆண்டில் கோரப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும்.

விடை—

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், பேரூர், தொகுதியில் புதுப்பதி-சின்னாம்பதி மலைவாழ் மக்களின் குழந்தை களுக்காக குழந்தைகள் நல மையங்கள் ஏற்படுத்தித் தரவேண்டி திரு. ஆ. நடராசன், எம். எல். ஏ., பேரூர் தொகுதி அவர்கள் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ஆம் நாளில் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். அவ்விண்ணப்ப நகல் அரசினரால் சமூக நல இயக்குநருக்கு அனுப் பப்பட்டது. இவ்வாண்டு அரிசன காலனிகளில் 50 புதிய குழந்தை கள் நல மையங்கள் திறக்க அரசு ஆணையிட்டுள்ளது. அதற்கான இடங்கள் தேர்வு செய்யப்படும்போது சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

கோவை விவசாயப் பல்கலைக்கழகப் பூங்கா.

வினா 529—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை விவசாயப் பல்கலைக் கழகப் பூங்காவில் (பொட்டானிக்கல் கார்டன்) பொதுமக்கள் உபயோகத்திற்கு '' கழிவிடங்கள் '' (கக்கூஸ்) இல்லாததால் மக்கள் தொல்லைப் படுவதை அரசு அறியுமா ?

(ஆ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூரில் உள்ள தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் உள்ள பூங்கா (பொட் டானிக்கல் கார்டன்) பட்டப்படிப்பு; பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மாணவர்களுக்காக உள்ளது. பொது மக்கள் பயன் படுத்துவதற்காக இல்லை. ஆனாலும் பூங்காவிற்கு வருவோர் களுக்காக குறைந்த பட்ச வசதிகளை செய்துதரும் நடவடிக்கை களை வேளாண்மைப் பல்கலைக்கழகம் எடுத்து வருகிறது.

விடை—

(அ) அரசுக் கல்லூரிகளில் மாணவர் ஆசிரியர் விகிதாச்சாரம் எதுவும் இல்லை. ஒவ்வொரு வகுப்பிற்கும், அதாவது புகுமுக வகுப்பு, பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, ஆகியவற்றிற்கு பல்கலைக்கழகம், பாடத்திட்டம் வகுத்துள்ளது; அதற்கேற்றாற்போல் ஆசிரியர்கள் கல்லூரிகளுக்கு நியமிக்கப்படுகிறார்கள். மாணவர்களின் எண்ணிக்கையை பொறுத்து ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதில்லை.

(ஆ) வினா "அ"விற்கு அளித்துள்ள விடையால் இவ்வினாவிற்கு இடமில்லை.

(இ) பள்ளிகளில் ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரம் மேற்கொள்ளப்படுவது போன்று கல்லூரிகளில் மேற்கொள்ளுவதில்லை. ஏனெனில், கல்லூரிக் கல்வி உயர்கல்வியாகும். இதில் கல்வியின் தரத்திற்கே முதலிடம் அளிக்கப்படுகிறது. எனவே, கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் பாடங்கள் ஒரு வகுப்பிற்கு ஒரு வாரத்திற்கு எத்தனை மணி நேரங்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும் எனவும், ஒரு ஆசிரியர் ஒரு வாரத்திற்கு எத்தனை மணி நேரம் பயிற்றுதல் வேண்டும் எனவும் பாடங்களின் தகுதிக்கேற்ப வேலைப்பளு பல்கலைக் கழகத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பிறகு அந்த வேலைப்பளுவிற்கு ஏற்ப பேராசிரியர், உதவிப் பேராசிரியர்கள், பயிற்றுநர்கள், விளக்குநர்கள் ஆகிய நிலையில் உள்ள கல்லூரி ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

கோவை பாளையம் தோட்டப் பகுதியில் குடிசை மாற்றுப் பணிகள்.

வினா 527—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை நகரம் பாளையம் தோட்டப்பகுதி, லிங்கேகவுடர் தோட்டப் பகுதியில் உள்ள குடிசைகளை மாற்றி வீடுகள் கட்ட அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு வீடுகள் கட்டப்பட உள்ளன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : கோவை நகர் பாளையம் தோட்டப் பகுதியில் ரூபாய் 2·621 இலட்சம் மதிப்பீட்டில் 16 வீடுகளும், லிங்கேகவுடர் தோட்டப் பகுதியில் ரூபாய் 4,782 இலட்சம் மதிப்பீட்டில் 32 வீடுகளும் கட்டும் திட்டம் ஒன்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

புதுப்பதி-சின்னம்பதியில் குழந்தைகள் நல மையங்கள்.

வினா 528—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில் புதுப்பதி-சின்னம்பதி மலைவாழ் மக்களுக்கு '' பால்வாடி '' அமைத்துத்தர 1977-ம் ஆண்டில் கோரப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும்.

விடை—

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், பேரூர், தொகுதியில் புதுப்பதி-சின்னம்பதி மலைவாழ் மக்களின் குழந்தைகளுக்காக குழந்தைகள் நல மையங்கள் ஏற்படுத்தித் தரவேண்டி திரு. ஆ. நடராசன், எம். எல். ஏ., பேரூர் தொகுதி அவர்கள் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ஆம் நாளில் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். அவ்விண்ணப்ப நகல் அரசினரால் சமூக நல இயக்குநருக்கு அனுப்பப்பட்டது. இவ்வாண்டு அரிசன காலனிகளில் 50 புதிய குழந்தைகள் நல மையங்கள் திறக்க அரசு ஆணையிட்டுள்ளது. அதற்கான இடங்கள் தேர்வு செய்யப்படும்போது சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

கோவை விவசாயப் பல்கலைக்கழகப் பூங்கா.

வினா 529—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை விவசாயப் பல்கலைக் கழகப் பூங்காவில் (பொட்டானிக்கல் கார்டன்) பொதுமக்கள் உபயோகத்திற்கு '' கழிவிடங்கள் '' (கக்கூஸ்) இல்லாததால் மக்கள் தொல்லைப் படுவதை அரசு அறியுமா ?

(ஆ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூரில் உள்ள தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் உள்ள பூங்கா (பொட்டானிக்கல் கார்டன்) பட்டப்படிப்பு; பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மாணவர்களுக்காக உள்ளது. பொது மக்கள் பயன்படுத்துவதற்காக இல்லை. ஆனாலும் பூங்காவிற்கு வருவோர்களுக்காக குறைந்த பட்ச வசதிகளை. செய்துதரும் நடவடிக்கைகளை வேளாண்மைப் பல்கலைக்கழகம் எடுத்து வருகிறது.

அவினாசித் தொகுதியில் குட்டைகளை பழுதுபார்த்தல்.

வினா 530—திரு. சொ. ந. பழனிசாமி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதியில் உள்ள பழுதடைந்த குட்டைகளை பராமரிப்பதற்காக 1977-78-ல் அரசு செலவு செய்த தொகை எவ்வளவு?

(ஆ) அதன் விபரம் யாது?

விடை—

(அ) அவினாசி தொகுதியில் உள்ள பழுதடைந்த குட்டைகளை பராமரிப்பதற்கு 1977-78-ல் அரசு செய்த செலவு தொகை ரூ. 45,421.

(ஆ) அதன் விபரம் :

	ரூபாய்
1. சர்வே எண் 258 நாராணபுரம் கிராமக் குட்டை வெள்ள நிவாரண மராமத்து மதிப்பீடு ரூ. 16,400, எண் 27-ஐ, 1977-78 ..	13,753-00
2. குன்னத்தூர் குளம் சீர்திருத்தம் செய்தலும், தரப்படுத்துதலும், மதிப்பீடு ரூ. 25,000 எண் 7-ஐ, 1977-78 ..	15,747-00
3. அவினாசி தாலூகாவில் உள்ள அகநல்லி பாளையம் குளம் சீர்திருத்தம் செய்தலும் தரப்படுத்துதலும் மதிப்பீடு ரூ. 25,000 எண் 2-ஐ, 1977-78	15,921-00
மொத்தம்	45,421-00

வடகரை கிராமம் மேட்டுக்கால்வாய் மண் அரிப்பினால் பாதிப்பு.

வினா 531—திரு. மு. மு. அ. ரசாக் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசித் தாலூகா வடகரை கிராமம் மேட்டுக் கால்வாய் மண் அரிப்பினால் பாதிக்கப்பட்டு போக்குவரத்து தடைப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால் அது எப்பொழுது சரி செய்யப்படும்?

விடை— (அ) மேட்டுக் கால்வாயின் வலது பக்க சரிவு ஓரங்களில் சாலைப் பகுதியில் ஆங்காங்கே சிறியமண் அரிப்புகள் காணப்படுகின்றன. இச்சிறிய மண் அரிப்புக்களினால் சாலை போக்குவரத்து பாதிக்கப்படவில்லை.

(ஆ) வாய்க்காலில் தண்ணீர் போக்கிற்குத் தடையேதுமில்லாததால் இந்த மண் அரிப்புகளுக்காக மராமத்து வேலைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

கள்ளக்குறிச்சி மருத்துவமனையில் குழந்தைகள் பிரிவு.

வினா எண். 532—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி மருத்துவமனையில் குழந்தைகளுக்கென்று தனிப்பிரிவு ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

விடை—கள்ளக்குறிச்சி மருத்துவமனையில் குழந்தைகளுக்கென்று தனிப்பிரிவு ஒன்று ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

அறிவியல் கண்ணாடிப் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி நிலையம்.

வினா எண். 533—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அறிவியல் கண்ணாடிப் பொருட்களை உருவாக்கும் பயிற்சி நிலையம் தமிழகத்தில் எங்கெங்கு உள்ளது?

(ஆ) அதில் ஆண்டொன்றுக்கு எத்தனை மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள்—

விடை— (அ) அறிவியல் கண்ணாடிப் பொருட்களை உருவாக்கும் பயிற்சி நிலையம் சென்னை கிண்டி தொழிற்பேட்டையில் மட்டும் உள்ளது.

(ஆ) ஆண்டு ஒன்றுக்கு 20 மாணவர்கள் பயிற்சிக்கு சேர்க்கப்பட்டு இரண்டு ஆண்டு காலம் பயிற்சி பெறுகின்றனர்.

[1978 செப்டம்பர் 14

அவினாசித் தொகுதியில் குட்டைகளை பழுதுபார்த்தல்.

வினா 530—திரு. சொ. ந. பழனிசாமி: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதியில் உள்ள பழுதடைந்த குட்டைகளை பராமரிப்பதற்காக 1977-78-ல் அரசு செலவு செய்த தொகை எவ்வளவு?

(ஆ) அதன் விபரம் யாது?

விடை—

(அ) அவினாசி தொகுதியில் உள்ள பழுதடைந்த குட்டைகளை பராமரிப்பதற்கு 1977-78-ல் அரசு செய்த செலவு தொகை ரூ. 45,421.

(ஆ) அதன் விபரம்:

	ரூபாய்
1. சர்வே எண் 258 நாராணபுரம் கிராமக் குட்டை வெள்ள நிவாரண மராமத்து மதிப்பீடு ரூ. 16,400, எண் 27-ஐ, 1977-78 ..	13,753-00
2. குன்னத்தூர் குளம் சீர்திருத்தம் செய்தலும், தரப்படுத்துதலும், மதிப்பீடு ரூ. 25,000 எண் 7-ஐ, 1977-78 ..	15,747-00
3. அவினாசி தாலூகாவில் உள்ள அகநல்லிபாளையம் குளம் சீர்திருத்தம் செய்தலும் தரப்படுத்துதலும் மதிப்பீடு ரூ. 25,000 எண் 2-ஐ, 1977-78	15,921-00
மொத்தம்	45,421-00

வடகரை கிராமம் மேட்டுக்கால்வாய் மண் அரிப்பினால் பாதிப்பு.

வினா 531—திரு. மு. மு. அ. ரசாக்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசித் தாலூகா வடகரை கிராமம் மேட்டுக்கால்வாய் மண் அரிப்பினால் பாதிக்கப்பட்டு போக்குவரத்து தடைப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால் அது எப்பொழுது சரி செய்யப்படும்?

1978 செப்டம்பர் 14]

விடை— (அ) மேட்டுக் கால்வாயின் வலது பக்க சரிவு ஓரங்களில் சாலைப் பகுதியில் ஆங்காங்கே சிறியமண் அரிப்புகள் காணப்படுகின்றன. இச்சிறிய மண் அரிப்புக்களினால் சாலை போக்குவரத்து பாதிக்கப்படவில்லை.

(ஆ) வாய்க்காலில் தண்ணீர் போக்கிற்குத் தடையேதுமில்லாததால் இந்த மண் அரிப்புகளுக்காக மராமத்து வேலைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

கள்ளக்குறிச்சி மருத்துவமனையில் குழந்தைகள் பிரிவு.

வினா எண். 532—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கள்ளக்குறிச்சி மருத்துவமனையில் குழந்தைகளுக்கென்று தனிப்பிரிவு ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

விடை —கள்ளக்குறிச்சி மருத்துவமனையில் குழந்தைகளுக்கென்று தனிப்பிரிவு ஒன்று ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

அறிவியல் கண்ணாடிப் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி நிலையம்.

வினா எண். 533—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அறிவியல் கண்ணாடிப் பொருட்களை உருவாக்கும் பயிற்சி நிலையம் தமிழகத்தில் எங்கெங்கு உள்ளது?

(ஆ) அதில் ஆண்டொன்றுக்கு எத்தனை மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள்—

விடை— (அ) அறிவியல் கண்ணாடிப் பொருட்களை உருவாக்கும் பயிற்சி நிலையம் சென்னை கிண்டி தொழிற்பேட்டையில் மட்டும் உள்ளது.

(ஆ) ஆண்டு ஒன்றுக்கு 20 மாணவர்கள் பயிற்சிக்கு சேர்க்கப்பட்டு இரண்டு ஆண்டு காலம் பயிற்சி பெறுகின்றனர்.

தச்சூர் ஆற்றிலிருந்து அகரம் ஏரிக்குக் கால்வாய் வெட்டுதல்.

வினா எண் 534—திரு. வீ. அர்ச்சுனன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரணியை அடுத்த தச்சூர் ஆற்றிலிருந்து அகரம் ஏரிக்கு கால்வாய் வெட்டுவது குறித்து கோரிக்கை மனு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

விடை— ஆரணியை அடுத்த தச்சூர் ஆற்றிலிருந்து அகரம் ஏரிக்கு கால்வாய் வெட்டுவது குறித்து கோரிக்கை மனு ஏதும் இதுவரையில் பெறப்படவில்லை.

கரூர் கூட்டுறவு நூற்பாலையை விரிவு படுத்தும் திட்டம்.

வினா எண் 535—திரு. கே. வடிவேலு: மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூருக்கு அருகாமையில் உள்ள மலைக்கோவிலில் இருக்கின்ற கூட்டுறவு நூற்பாலையை விரிவு படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது விரிவுப்படுத்தப்படும்?

(இ) அதனால் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும்?

விடை—(அ), (ஆ) & (இ) திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு நூற்பாலையின் உற்பத்தி திறனை 12,000 கதிர்களிலிருந்து 25,020 கதிர்களாக விரிவுபடுத்தும் திட்டம் ரூ. 122 லட்சம் செலவில் அண்மையில் நிறைவேற்றப்பட்டு, அக்டோபர் திங்களில் முழுத்திறனுடனும் செயல்படவிருக்கிறது. அப்போது கூடுதலாக 191 பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

நம்பியாற்றுப் பாலத்தை அகலப்படுத்துதல்.

வினா எண் 536—திரு. யா. செ. மு. யூசுப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திருநெல்வேலி மாவட்டம் தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் நாங்குநேரியை அடுத்து 6 கி.மீ.-ல் உள்ள நம்பியாற்றுப் பாலத்தினை அகலப் படுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

விடை— (அ) ஆம்.

(ஆ) பாலம் கட்டும் பணி நடப்பு ஆண்டில் துவங்கப் படும்.

பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை.

வினா எண். 537—திரு. ரா. மார்க்கபந்து: மாண்புமிகு கிராமத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு பால்வள நிறுவனத்தால் 1—7—72 முதல் நாளது தேதி வரையில் 'Operation Flood' திட்டத்தின் கீழே எந்தெந்த இடங்களுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப் பட்டு செலவு செய்யப்பட்டது?

விடை— தமிழ்நாடு பால்வள நிறுவனத்தால் 1—7—72 முதல் நாளது தேதி வரையில் பால் பெருக்குத் திட்டம் ஒன்றின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை, செலவு செய்யப்பட்டதொகை விவரங்கள் பின்வருமாறு :—

	ஒதுக்கீடு தொகை.	31—3—78 வரை செலவு செய்யப் பட்ட தொகை.
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1. மாதவரம் பால் பண்ணையை விரிவுபடுத்துதல் ..	20.61	20.61
2. அம்பத்தூரில் ஒரு பெரிய பால் பண்ணையை அமைத்தல்	314.00	241.73
3. பால் சேகரித்து வழங்கும் பண்ணை மற்றும் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல்	454.39	115.34
4. பால் உற்பத்தியை அதிகரித்தல்	293.00	118.23

	ஒதுக்கீடு தொகை.	31—3—78 வரை செலவு செய்யப்பட்ட தொகை.
	(ரூபாய் இலட்சத்தில்.)	
5. ஊட்டியில் கால்நடை உற்பத்திக்கென ஒரு கால்நடை பண்ணையமைத்தல் ..	18·55	17·09
6. ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தின் கீழ் தன்னிறைவு கொண்ட ஒரு பால் பண்ணை அமைத்தல் — —	330.00	72·04
மேலும் இந்திய பால் பண்ணை வளர்ச்சி கழகம் பால் பெருக்குத்திட்டம் 1-ன் கீழ் பின்வரும் திட்டங்களுக்கு கொள்கை அளவில் அனுமதி அளிப்பதாக கூறியுள்ளது.		
7. திருப்பூர் குளிரூட்டு நிலையத்தின் கொள்ளளவை நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டரிலிருந்து 20,000 லிட்டர் வரை விரிவாக்கம் செய்தல்.	5.00	..
8. அச்சரப்பாக்கம் குளிரூட்டும் நிலையத்தின் கொள்ளளவை நாளொன்றுக்கு 10,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டர் வரை விரிவாக்குதல்.	15.00	..
9. விழுப்புரத்தில் நாள் ஒன்றுக்கு 40,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய குளிரூட்டும் நிலையம் அமைத்தல்.	20.00	..
10. பாலுசெட்டி குளிரூட்டும் நிலையத்தின் கொள்ளளவை நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டரிலிருந்து 30,000 லிட்டர் வரை விரிவாக்குதல்.	10.00	..
11. ஸ்ரீவில்லிபுத்தூர், சங்கரன் கோயிலில் இரண்டு குளிரூட்டும் நிலையங்களை விரிவாக்குதல்	4·40	..
12. நீண்ட தூரம் போகும் 19 பால் தொட்டி வாகனங்கள் வாங்குதல்	81.80	...
13. சேலத்தில் ஒரு பால் பண்ணை அமைத்தல்	365.00	—

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி.

வினா 538—திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு கிராமத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) எண்ணெய் வித்துக்கள், தமிழ்நாட்டில் எத்தனை லட்சம் டன் உற்பத்தியாகிறது ?

(ஆ) இந்த வித்துக்களைப் பயன்படுத்தும் வகையில் எத்தனை இடங்களில் விசை செக்குகள் பயன்படுத்தப்படுகின்றன ?

(இ) இதை விரிவுப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

[1978 செப்டம்பர் 14

விடை : (அ) 1976-77 ஆம் ஆண்டு மாநில புள்ளி விவரப்படி தமிழகத்தில் 8,66,000 டன்கள் அளவு எண்ணெய் வித்துக்கள் கீழ்க்கண்ட ரகங்களில் உற்பத்தியாகி உள்ளன.

	டன்கள்.
1. கடலை வித்துக்கள்	8,29,000
2. எள் வித்துக்கள்	33,000
3. விளக்கெண்ணெய் வித்துக்கள்	4,000
மொத்தம் ..	8,66,000

(ஆ) 1978 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் தேதி அன்று முடிய தமிழகத்தில் 538 மின்விசைச் செக்குகள் கூட்டுறவு சங்கங்களுக்கும் தனி நபர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் 1974-75 ஆம் ஆண்டு வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் 200 மின்விசை செக்குகளை பரம்பரையாக எண்ணெய் தொழில் செய்து வரும் கைவினைஞர்களுக்கும், படித்த வேலையற்ற இளைஞர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த மின்விசை செக்குகளை வழங்கப் பட்ட கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் நபர்களடங்கிய விவரங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் குறிக்கப் பட்டுள்ளன.

(இ) நடப்பு ஆண்டில் 500 மின்விசை செக்குகளைப் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கும் தனிநபர்களுக்கும் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இணைப்பு

வ. எண். மாவட்டத்தின் பெயர்	வேலைவாய்ப்புத்திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கு வழங்கப்பட்ட மின்விசைச் செக்குகளின் எண்ணிக்கை.	கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்ட மின்விசை செக்குகளின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1. சென்னை	..	4
2. காஞ்சிபுரம்	..	36
3. வேலூர்	12	6
4. திருவண்ணாமலை	10	10
5. தர்மபுரி	11	14
6. கடலூர்	13	28
7. தஞ்சாவூர்	10	17
8. திருவாரூர்	10	4
9. கரூர்	11	..
10. ஈரோடு	..	2
11. நாமக்கல்	11	50
12. சேலம்	11	2
13. புதுக்கோட்டை	11	2
14. மதுரை	19	42
15. திருச்சிராப்பள்ளி ..	11	12
16. பரமக்குடி	10	4
17. திருநெல்வேலி	11	12
18. ஸ்ரீவில்லிபுத்தூர்	11	17
19. திண்டுக்கல்	14	..
20. கோயில்பட்டி	14	4
21. திருப்பூர்	..	20
22. நாகர்கோவில்	..	20
23. கோயம்புத்தூர்	..	32
மொத்தம் ..	200	338

1978 செப்டம்பர் 14]

மன்னார்குடி வட்டத்தில் பாசன வசதிகள்.

வினா 539—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மன்னார்குடி தாலூகாவில் திருமேனி ஏரியிலிருந்து செல்லும் ஆற்றில் களிச்சான் கோட்டைக்கு கிழக்கே பெட் டேம் அமைத்து பாசனத்திற்கு ஏற்பாடு செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை : மன்னார்குடி தாலூகாவில் திருமேனி ஆற்றில் களிச்சான் கோட்டைக்கு கிழக்கே பெட் டேம் அமைத்து பாசனத்திற்கு ஏற்பாடு செய்யும் திட்ட வேலை நடந்துகொண்டு வருகிறது.

வினா 540—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சை மாவட்டம், மன்னார்குடி தாலூகாவில் வடுவூர் ஏரியை ஆழப்படுத்தி பராமரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

விடை : தஞ்சை மாவட்டம் மன்னார்குடி தாலூகாவிலுள்ள வடுவூர் ஏரியை ஆழப்படுத்தும் திட்டம் ஏதுமில்லை. இவ்வேரி நீர்ப்பாசன பராமரிப்பு தலைப்பின்கீழ் பராமரிக்கப்பட்டு வருகிறது.

சிறுமலை நீர்த்தேக்கத் திட்டம்.

வினா 541—திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நிலக்கோட்டை தொகுதியில் சிறுமலை நீர்த்தேக்கம், கட்டுவதற்கு திட்டம் தீட்டப்பட்டு அத்திட்டம் முடிவுறாமல் இருப்பதன் காரணம் என்ன ?

(ஆ) அது எப்போது முடிவுறும் ?

விடை—(அ) & (ஆ) : இத்திட்டத்தின் பயன் முதலீடு விகிதம் (பி. சி. ரேஷியோ) பாதகமாக இருப்பதாலும், ஒரு டன்னுக்கு ஆகும் செலவு மிகவும் அதிகமாக இருப்பதாலும் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் வீட்டுவரி நிலுவை.

வினா 542—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில் 1975–76, 76–77, 77–78 ஆண்டுகளில் வீட்டுவரி வசூலிக்கப்படாமல் நிலுவையாக உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஊராட்சிகளில் நிலுவை உள்ளது?

விடை—(அ) & (ஆ) : 1975–76 ஆம் ஆண்டிற்கான வரி பாக்கி ஏதுமில்லை. 1976–77 ஆம் ஆண்டிற்கு 4 ஊராட்சிகளிலும் 1977–78 ஆம் ஆண்டிற்கு 6 ஊராட்சிகளிலும் நிலுவை உள்ளது.

கூட்டுறவு நூற்பாலைகள்.

வினா 543—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கைத்தறி, பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு அரியூர் கூட்டுறவு நூற்பாலை 1974–75, 1975–76, 1976–77 ஆண்டுகளில் லாபம் பெற்றுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், ஒவ்வொரு ஆண்டுகளில் எவ்வளவு லாபம் ஈட்டியுள்ளது ?

(இ) பங்கு தாரர்களுக்கு லாபம் பங்கீடு கொடுத்த, தொகை எவ்வளவு ?

விடை—(அ) & (ஆ) : வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை 1975 ஆம் ஆண்டு தேய்மானத்திற்காக ரூபாய் 10 இலட்சம் செய்த பிறகு ரூபாய் 19·00 இலட்சம் நிகர நட்டத்திலும், 1976 ஆம் ஆண்டு தேய்மானத்திற்கு ரூபாய் 10·75 இலட்சம் ஒதுக்கீடு செய்த பிறகு ரூபாய் 17·12 இலட்சம் நிகர நட்டத்திலும் இயங்கியுள்ளது. 1977 ஆம் ஆண்டின் தணிக்கை தற்போதுதான் எடுக்கப்பட்டு வருகிறது.

(இ) மேற்கூறிய ஆண்டுகளில் ஆலை நட்டத்தில் இயங்கியதால் லாப பங்கீடு இல்லை.

மணல்மேடு பஞ்சாலைத் தொழிலாளர்கள்

வினா 544—திரு மு. அம்பிகாபதி : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் மணல்மேடு பஞ்சாலையில் உள்ள நிரந்தரம் செய்யப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை என்ன?

(ஆ) அவர்களுள் பர்மாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் வந்தவர்கள் எத்தனை பேர் ?

[1978 செப்டம்பர் 14

விடை—(அ) மேற்படி நூற்பாலையில் 1978ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் தேதி வரை நிரந்தரம் செய்யப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை 226 ஆகும்.

(ஆ) இவர்களில் இலங்கையிலிருந்து வந்த அகதிகள் 190 பேர். பர்மாவிலிருந்து தவந் எந்த அகதியும் இவ்வாலையில் வேலைக்கு அமர்த்தப்படவில்லை.

வினா 545—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு கைத்தறி. பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சை மாவட்டம் மாயூரம் மணல் மேட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலையின் 1976-77-ம் ஆண்டின் நிகர வருவாய் எவ்வளவு ?

விடை—தஞ்சாவூர் கூட்டுறவு நூற்பாலையில் 1976-ம் ஆண்டிற்கான கணக்குகள் தணிக்கையில் உள்ளன. 1976-ம் ஆண்டு தணிக்கை முடிந்த பின்னர் 1977-ம் ஆண்டு கணக்குகள் தணிக்கை இடப்படும். எனினும் மேற்படி ஆலையானது 1976-ம் ஆண்டு தேய்மானத்திற்கு ரூ. 5·17 இலட்சம் ஒதுக்கீடு செய்த பிறகு ரூ. 14·29 இலட்சம் உத்தேச நிகர நட்டத்திலும், 1977-ம் ஆண்டில் தேய்மானத்திற்கு ரூ. 5·30 இலட்சம் ஒதுக்கீடு செய்த பிறகு ரூ. 11·69 இலட்சம் உத்தேச நிகர நட்டத்திலும் இயங்கி உள்ளது.

மேல் சோழங்குப்பத்தில் புதிய ஏரி.

வினா 546—திரு பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசபாக்கம் தொகுதியில் மேல் சோழங்குப்பம் கிராமத்தில் புதிய ஏரி கட்டி முடிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மொத்த மதிப்பீடு என்ன ?

(இ) அதன் மூலம் எவ்வளவு ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றுள்ளது ?

விடை—(அ) கலசபாக்கம் தொகுதியில் மேல்சோழங்குப்பம் கிராமத்தில் கட்டப்படும் புதிய ஏரியில் கோடி வாய்க்காலில் கட்டப்பட வேண்டிய ஒரு தணிவைத் தவிர மற்ற எல்லா வேலைகளும் முடிவுற்றன.

(ஆ) மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 20·15 இலட்சம்.

(இ) இதன் மூலம் 596 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

1978 செப்டம்பர் 14]

மன்னார்குடி பேருந்து நிலையத்திற்கு எதிரில் புதிய கடைகள்.

வினா 547—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி நகராட்சி பேருந்து நிலையத்திற்கு எதிரில் புதிய கடைகள் கட்டப்படுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை—ஆம்.

மன்னார்குடி பேருந்து நிலையத்தில் பிரயாணிகள் தங்கும் அறைகள்.

வினா 548—திரு மு. அம்பிகாபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி பேருந்து நிலையத்தில் மேல்புறம் (மாடியில்) பிரயாணிகள் தங்க அறைகள் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை—இல்லை.

முகவை மாவட்டத்தில் வெள்ளச் சேதத்திற்கான தடுப்புச் சுவர்கள்

வினா 549—திரு செ. சிவசாமி : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முகவை மாவட்டத்தில் வெள்ளச் சேதத்தை கட்டுப்படுத்தும் முறையில் வைகை, சருகணி ஆறு, காட்டாறு முதலிய ஆறுகளின் ஓரங்களில் தடுப்புச் சுவர் கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

விடை—இல்லை.

மாயூரம் வட்டத்தில் புதிய உயர்நிலைப்பள்ளி

வினா 550—திரு இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மாயவரம் வட்டம் குத்தாலத்தில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி துவங்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

வினா 551—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் ஒன்றியம், 22, வில்லியநல்லூர் பகுதியில் அரசினர் உயர்நிலைப்பள்ளி ஒன்று துவக்கிடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

மாவனள்ளா கிராம ஆதிவாசிகளுக்குக் குடிநீர் வழங்கல்

வினா 552—திரு கே. உர்பி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதியைச் சேர்ந்த மாவனள்ளா என்ற கிராமத்தில் வாழும் ஆதிவாசிகளுக்குக் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை—'நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதியைச் சேர்ந்த மாவனள்ளா என்ற கிராமத்தில் வசிக்கும் மக்கள் மாவனள்ளா குடியிருப்புகளுக்கு அருகில் ஓடும் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொள்கிறார்கள். அருகிலேயே ஆறு ஓடுவதால், அக்குடியிருப்புக்கு வாழ் மக்களுக்கு எந்தவித குடிதண்ணீர் பற்றி கஷ்டங்களும் இல்லை. எனினும், அப்பகுதி மாவனள்ளா ஆதிவாசிகள் குடியிருப்பில் கிணறு தோண்டுவதற்கான ரூ. 5,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளியும் கேட்கப்பட்டுள்ளது. அவ்வேலைக்கான ஒப்பந்தக்காரர் முடிவு செய்து, இரண்டு மாத காலத்தில் குடிநீர் கிணறு தோண்டும் வேலை முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குன்னூரில் வாடகை கார்கள் நிறுத்த இடம்

வினா 553—திரு க. அரங்கசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் நகரத்தில் வாடகை கார்கள் நிறுத்துவதற்கு (Taxi Stand) கட்டக் கோரி குன்னூர் நகராட்சியிலிருந்து ஏதேனும் தீர்மானம் வந்துள்ளதா;

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

விடை— (அ) அரசுக்கு வரவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

சென்னை, நொச்சிக்குப்பம் பகுதியில் குடிநீர் குழாய்கள் அமைத்தல்.

வினா 554—திரு டி. கே. கபாலி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நொச்சிக்குப்பம் பகுதியில் குடிநீர் குழாய்கள் அமைக்கும் உத்தேசம் உண்டா?

விடை— சென்னை நொச்சி நகர் நொச்சிக்குப்பம் பகுதியில், குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் எடுக்கப்பட்ட கிணற்றிலிருந்து பம்பு மூலம் 6 பொது குடிநீர் குழாய்கள் வழியாக குடிநீர் மேற்படி குடியிருப்புகளுக்கு காலையிலும், மாலையிலும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் சென்னை மாநகராட்சிப் பொறுப்பில் இரண்டு பொதுக் குடிநீர் குழாய்கள் இப்பகுதியில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன; இவை தவிர பொது உபயோகத்திற்காக (குளிப்பதற்கும், சுத்தம் செய்வதற்கும்)

ஒவ்வொரு குடியிருப்புக்கும் மேல்நிலை நீர் தொட்டிகளும் அமைக்கப்பட்டு இருக்கிறது. நகருக்குக் கிடைக்கும் குடிநீர் அளவு உயர்ந்தால், மாநகராட்சியிலிருந்து மேலும் இப்பகுதிக்கு குடிநீர் வழங்கப்படும்.

கீழத்திருக்கழிப்பாலை கிராமத்திற்கு பாசன வசதி

வினா 555—திரு. வி. ரெகுராமன் :
திரு. துரை. கலியமூர்த்தி : } மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம் கீழத்திருக்கழிப்பாலைக்கு பிச்சாவரம் ரெகுலேட்டரிலிருந்து பாசன வாய்க்கால் அமைத்து தரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

விடை—(அ) ஆம்.

(ஆ) கீழத்திருக்கழிப்பாலை கிராமத்தில் உள்ள நிலங்களுக்கு பிச்சாவரம் ரெகுலேட்டரிலிருந்து கால்வாய் வெட்டி பாசன வசதி செய்து தர ரூ. 78,800 செலவில் உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தின் வரைபடங்களும் மதிப்பீடுகளும் தல அதிகாரிகளுக்குள் முடிவு செய்யப்படுகின்றன. அவை கிடைக்கப்பெற்றதும், பரிசிலனைக்குப்பின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

அரிசனங்களுக்கு தொழில் நடத்த வட்டியில்லாக் கடன்கள்.

வினா 556—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

1977–78-ம் ஆண்டில் அரிசனங்களுக்கு தொழில் நடத்த அரசு, வட்டி இல்லாக்கடன் எத்தனைப் பேருக்கு எவ்வளவு ரூபாய் கொடுத்துள்ளது ?

விடை—1977–78-ம் ஆண்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு (இந்துக்கள் மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறியோர்) கீழ்க் கண்டவாறு வட்டியில்லாக் கடன் வழங்கப்பட்டது:—

வரிசை எண்.	மாவட்டம்.	தாழ்த்தப் பட்டவர்கள் எண்ணிக்கை.	வழங்கப் பட்ட தொகை.
(1)	(2)	(3)	(4)
			(ரூபாய்)
1	சென்னை நகரம்	242	1,83,290
2	செங்கற்பட்டு	63	65,325
3	வட ஆற்காடு	31	28,150
4	தென் ஆற்காடு	73	1,43,375
5	தஞ்சாவூர்	160	1,28,225
6	திருச்சிராப்பள்ளி ..	125	93,850
7	திருநெல்வேலி	15	9,750
8	மதுரை	162	1,04,500
9	இராமநாதபுரம்	237	1,88,325
10	கோயம்புத்தூர்	27	9,900
11	சேலம்	21	34,000
12	தர்மபுரி	55	34,150
13	கன்னியாகுமரி	64	24,400
14	நீலகிரி	1	950
15	புதுக்கோட்டை.. ..	40	27,550
		1,316	10,75,740

சிதம்பரம் வட்டம் பாளையங்கோட்டையை நகரப் பஞ்சாயத்தாக்குதல்

வினா 557—திரு துரை. கலியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் வட்டம், பாளையங்கோட்டை கீழ்பாதி, பாளையங்கோட்டை மேல்பாதி, பாளையங்கோட்டை வடக்கு பாளையம் ஆகிய மூன்று பஞ்சாயத்துக்களையும் சேர்த்து நகரப் பஞ்சாயத்தாக ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—இல்லை.

[1978 செப்டம்பர் 14

குமாரக்குடி கிராமத்தில் நிலப்பட்டாக்கள் வழங்கல்

வினு 558— திரு துரை. கலியமூர்த்தி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா?—

(அ) 1977–78-ல் சிதம்பரம் வட்டம், குமாரக்குடி கிராமத்தில் எத்தனை பேர்களுக்கு நிலப்பட்டா கொடுக்கப்பட்டது ?

(ஆ) எத்தனை மனுக்கள் நிலுவையில் உள்ளன ?

விடை—

(அ) 1977–78-ம் ஆண்டில் தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், குமாரக்குடி கிராமத்தில் ஒருவருக்கும் நிலப் பட்டா கொடுக்கப்படவில்லை.

(ஆ) நில அடமானம் கோரி வந்துள்ள மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்கீழ் வழக்குகள்.

வினு 559—திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா?—

(அ) தென் ஆற்காடு மாவட்டத்தின் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்கீழ் எத்தனை வழக்குகள் சென்ற ஆண்டு (1977) பதிவு செய்யப்பட்டுள்ளன ?

(ஆ) எத்தனை பேருக்கு தண்டனை அளிக்கப்பட்டுள்ளது ?

விடை —

(அ) தென் ஆற்காடு மாவட்டத்தில் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்கீழ் 1977ஆம் ஆண்டில் 262 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

(ஆ) அதில் 93 பேருக்கு தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

1978 செப்டம்பர் 14]

சேத்தியா தோப்பில் அரசுக் கலைக் கல்லூரி.

வினு 560—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் வட்டம் சேத்தியா தோப்பில் அரசு கலைக் கல்லூரி ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

விடை —

சிதம்பரம் வட்டம் சேத்தியா தோப்பில் அரசு கலைக் கல்லூரி ஏற்படுத்தும் உத்தேசம் எதுவும் இல்லை.

சென்னை நகர மக்கள் தொகை.

வினு 561—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா? —

(அ) சென்னை நகரின் தற்போதைய மக்கள் தொகை என்ன?

(ஆ) இன்னும் பத்தாண்டுக்குப் பிறகு எந்த அளவு இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது ?

விடை—

(அ) அண்டு (ஆ) புள்ளியியல்துறை ஆணையாளரிடமிருந்துபெறப் பட்டதகவலின்படி சென்னை மாநகரின்மக்கள்தொகைஎண்ணிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன. (1978 மற்றும் 1988 ஆம் ஆண்டுக்குரிய மக்கள் தொகை எண்ணிக்கைகள் இந்தியஅரசாங்கத்தின் மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் துறையிடம் இல்லை).

சென்னை மாநகரின் மக்கள் தொகை மதிப்பீடு.

ஆண்டு. (1)	ஆண்கள். (2) (இலட்சம்)	பெண்கள். (3) (இலட்சம்)	மொத்தம். (4) (இலட்சம்)
(அ) 1978	16·04	14·54	30·58
(ஆ) 1988	20·71	18·83	39·54

[1978 செப்டம்பர் 14

தொழிற் பயிற்சிப் பிரிவு தொடங்கப்பட்ட உயர்நிலை பள்ளிகள்.

வினா 562—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?—

உயர்நிலைப் பள்ளிகளில் தொழிற் பயிற்சி தருவதற்காக கோத்தாரி கல்விக் குழுவின் பரிந்துரைக்கேற்ப 1977–78-ம் ஆண்டில் அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

விடை—

கைத்தொழில் பாடத்துக்கு பள்ளிப் பாடத்திட்டத்தில் ஏற்கனவே இடமளிக்கப்பட்டுள்ளது. அனேகமாக அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும் தனியாக கைத்தொழில் ஆசிரியர்கள் உள்ளனர். சுமார் 70 உயர்நிலைப் பள்ளிகளில் வேலை வாய்ப்புக்கு வகை செய்யக்கூடிய வானொலிப் பெட்டி பழுது பார்த்தல், உந்து வண்டிப் பொறியியல், மின்னியக்கிகள் பின்னுதல் முதலிய தொழில் சார்ந்த பாடமுறைகள் உள்ளன. (அவை காம்பிரஹென்சிவ் பள்ளிகள் என அழைக்கப்படுகின்றன.) சுமார் 300 உயர்நிலைப் பள்ளிகளில் இருமுனைப் பாடங்கள் என்ற பெயரில் பொறியியல் அலுவலக நடைமுறை, வேளாண்மை முதலிய தொழிற் பாடங்களும் கற்றுத்தரப்பட்டன. இவையனைத்தும் 1977–78-லும் நடைமுறையில் இருந்தன.

உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள்.

வினா *563—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

1977–78ல் தமிழ்நாட்டில் அறிவியல் ஆய்வுக்கூட வசதியினைப் பெற்றுள்ள உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை ? மாவட்ட வாரியாக.

விடை— *ஐம்பது உயர்நிலைப் பள்ளிகள், அவற்றின் விவரங்கள் அவை முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் தரப்பட்டுள்ளன.

[* 985–987ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]

1978 செப்டம்பர் 14]

வரதட்சிணை முறை தடுப்புச் சட்டத்தை மீறியவர்கள் மீது நடவடிக்கை.

வினா 564—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?—

(அ) தமிழ்நாட்டில் வரதட்சிணை முறை தடுப்புச் சட்டத்தை மீறியதாக 1977–78-ம் ஆண்டில் யாரேனும் கைது செய்யப்பட்டுள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கல்லூரிகளுக்கு மானியம்,

வினா 565—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

நமது மாநிலத்தில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட எந்தெந்த கல்லூரிகளுக்கு அரசு எவ்வளவு மானியம் வழங்கியுள்ளது.

விடை—

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கல்லூரிகளுக்கு வழங்கப் பட்ட மானியங்கள் விவரம் வருமாறு :

கல்லூரிகள். (1)	மாநில அரசு நிதி ஒதுக்கீடு. (2) (ரூபாய்)
1. சீதாலஷ்மி-ராமசுவாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி.	24,00,000
2. செயின்ட் ஜோசப்ஸ் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.	12,00,000
3. ஹோலி கிராஸ் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.	10,00,000

கல்லூரிகள் (1)	மாநில அரசு நிதி ஒதுக்கீடு (2) (ரூபாய்)
4. பிஷப்ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி ..	3,00,000
5. தேசிய கல்லூரி, திருச்சிராப்பள்ளி ..	1,50,000
6. காதர் மொஹிதின் கல்லூரி, அதிராம்பட்டினம்.	25,000
7. எ. டி. ஆர். எம். கல்லூரி, நாகப்பட்டினம்	20,000
8. ராஜாஸ் கல்லூரி, புதுக்கோட்டை ..	1,000
9. ராஜா செர்போஜி கல்லூரி, தஞ்சை ..	1,000
10. புஷ்பம் கல்லூரி, பூண்டி.	1,500
11. பூம்புகார் பேரவைக் கல்லூரி ..	1,500
	51,00,000

மாயூரம் மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கை.

வினா 566—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாயூரம் அரசினர் மருத்துவமனையில் எத்தனை நோயாளிகளுக்கு படுக்கை வசதி செய்யப்பட்டுள்ளது ?

(ஆ) படுக்கை வசதியை மேலும் விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?—

விடை—

(அ) மாயூரம் அரசினர் மருத்துவமனையில் தற்சமயம் 104 படுக்கைகள் உள்ளன.

(ஆ) இல்லை.

கிராமப்புறங்களில் சித்த மருத்துவமனைகள்

வினா 567—திரு. கா. சுப்ரவேலு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

அரசு மருத்துவமனைக்கு வெகு தூரத்திலுள்ள கிராமங்களின் மையங்களில் 'சித்த மருத்துவமனைகள்' அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

தற்சமயம் தாலூகா அல்லது தாலூகா அல்லாத பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் துவங்கி வைத்திய வசதிகள் நடைபெற்று வருகின்றன. இது தவிர கிராமப்புறங்களில் சித்த மருத்துவமனைகள் அரசினாலும் ஊராட்சி ஒன்றியங்களாலும் மானிய அடிப்படையில் திறக்கப்பட்டு நடத்தப்படுகின்றன.

இராதாபுரம் துணைவட்டம்.

வினா 568—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் துணைவட்டத்தை தனி வட்டமாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இராதாபுரம் துணை வட்டத்தை முழு வட்டமாகத் தரமுயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

அண்ணாமலையார் மலையில் மரம் வளர்ப்பு

வினா 569—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருவண்ணாமலை அண்ணாமலையார் மலைமீது காட்டிலாக்காவினரால் மரம் வளர்க்க கன்றுகள் நடப்பட்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) அண்டு (ஆ) அண்ணாமலையார் மலைமீது வன இலாகாவினரால் 1976-77-ம் வருடம் 4,299 செடிகளும், 1977-78-ம் வருடம் 40 ஹெக்டர் பரப்பில் 52,427 செடிகளும் நடப்பட்டு அவைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேற்படி கன்றுகள் நடப்பட்டதன் விபரம் பின் வருமாறு :—

வருடம். (1)	செடிகளின் எண்ணிக்கை. (2)	செடிகளின் இனம். (3)
1976-77	4,299	கொடைவேலன், பரம்பை தகரை.
1977-78	52,427	வெப்பாலை, வன்னி, ஆச்சான், சிகப்பு-சந்தனம், ஒடைவேலன் முதலியன.

1978-79-ம் வருடத்தில் 40 ஹெக்டர் பரப்பில் செடிகள் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

செளகுளத்தூர் காட்டுப்பகுதி நிலங்கள்.

வினா 570—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி-அற நிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் உள்ள செளகுளத்தூர் காட்டுப்பகுதி மொத்தம் எத்தனை ஏக்கர் ?

(ஆ) தற்சமயம் ஏதேனும் மரங்கள் வளர்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா ?

(இ) இல்லையெனில். அந்நிலங்களை ஏழைகளுக்கு பிரித்துக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

விடை—

(அ) துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் உள்ள செளகுளத்தூர் காப்புக்காடு மொத்தம் 2,306.18 ஹெக்டேர் பரப்புடையது.

(ஆ) இப்பகுதியில் இதுவரை 1,875 ஹெக்டேரில் வனத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. மீதியுள்ள பகுதியிலும் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் நடவு வேலைகள் நடந்து வருகின்றன.

(இ) இப்பகுதியில் ஏழைகளுக்கு காப்புக்காடு நிலத்தை கொடுக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

நாசரேத்தில் கள்ள நோட்டுக்கள் கைப்பற்றல்

வினா 571—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1978-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2-வது வாரத்தில் நெல்லை மாவட்டம் நாசரேத்தில் உள்ள கூட்டுறவு வங்கியில் கள்ள 100 ரூபாய் நோட்டு மாற்றியதற்காக யாரேனும் கைது செய்யப்பட்டாரா ?

(ஆ) ஆம் எனில், அதுபற்றி மேற்கொண்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) ஆம். 3—2—1978-ல் திருவேங்கடபுரத்தைச் சேர்ந்த சித்ர-வேலாயுதம், த/பெ. முத்தய்ய நாடார் என்பவர் கைது செய்யப்பட்டார்.

(ஆ) பிடிப்பட்ட இரண்டு 100 ரூபாய் கள்ள நோட்டுக்கள் நாசிக்குக்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளன. குற்றவாளி காவலில் வைக்கப்பட்டார். இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டு புலனாய்வில் உள்ளது.

புதுப்பாளையம் மருத்துவமனையில் படுக்கை வசதி

வினா 572—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) செங்கம் வட்டம் புதுப்பாளையம் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதி இல்லாமல் இருந்து வருவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், படுக்கை வசதி செய்ய அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இம்மருந்தகம் புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தினிடமிருந்து அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மருத்துவமனையில்லையாதலால் உள் நோயாளிகளுக்கு சிகிச்சை தருவதற்காக படுக்கை வசதிகள் கிடையாது. இம்மருந்தகம் செங்கம் மற்றும் போளூர் மருத்துவமனைகளுக்கு அருகாமையில் உள்ளது. இம்மருந்தகத்தை படுக்கை வசதிகளுடன் கூடிய அரசாங்க மருத்துவ மனையாக ஆக்குவதற்கான செயற்குறிப்பு தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

ஆதி ஆந்திர அரிசன மக்களுக்கு குடிசைமாற்று வாரிய வீடுகள்.

வினு 573—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு
தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட
வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னை சுதந்திரா நகர், 3-ம் தெருவில் உள்ள
ஆதி ஆந்திர அரிசன மக்களுக்கு அவர்கள் வசிக்கும் இடத்தி
லேயே குடிசை மாற்று வாரியம் மூலமாக வீடுகள் கட்டிக்
கொடுக்கப்படும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இத்திட்டம் தொடங்கப்
பெறும் ?

(இ) இதற்கு எவ்வளவு தொகை செலவழிக்கப்படும் ?

விடை—

(அ), (ஆ) & (இ): சென்னை சுதந்திரா நகர் 3-ம் தெருவில்
உள்ள ஆதி ஆந்திர அரிசன மக்களுக்கு அவர்கள் வசிக்கும் இடத்தி
லேயே குடிசை மாற்று வாரியம் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுப்
பதற்கான செயற்குறிப்பு பரிசீலனை செய்யப்பட்டு, அதற்கான
நில ஆர்ஜித நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு விட்டன. மேற்படி
திட்டம் எப்போது தொடங்கப்பெறும், மற்றும், அதற்கு
எவ்வளவு தொகை செலவழிக்கப்படும் என்ற விவரங்கள்,
நில ஆர்ஜித வேலை முடிந்து, திட்டம் தயாரித்த பின்னர்
தான் தெரியும்.

கான்சாபுர கிராம அரிசன குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கல்

வினு 574—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு அரிசன
நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு
விடையளிப்பாரா :—

திருவில்லிப்புத்தூர் தொகுதியைச் சேர்ந்த கான்சாபுரம்
கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடிதண்ணீர்
வசதி செய்து தர அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், திருவில்லிப்புத்தூர் வட்டம்,
கான்சாபுரம் அரிசன காலனி மக்களுக்கு 4 குடிநீர் கிணறுகளும்
ஒரு ஆழ்குழாய் கிணறும் உள்ளன. அங்கு குடிதண்ணீர் தட்டுப்
பாடு ஏதுமில்லை.

பெனுகொண்டபுரம் ஏரிக்கு வரத்துக்கால்வாய்

வினு 575—திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஊத்தங்கரை தாலூகாவில் உள்ள பெனுகொண்டபுரம் ஏரிக்கு போரூர் ஏரியிலிருந்து கால்வாய் வெட்டி தண்ணீர் கொண்டு வரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் எப்பொழுது அந்த திட்டம் செயல்படுத்தப்படும் ?

விடை—

(அ) அண்டு (ஆ) : ஊத்தங்கரை தாலூகாவிலுள்ள பெனுகொண்டபுரம் ஏரிக்கு போரூர் ஏரியிலிருந்து கால்வாய் வெட்டி தண்ணீர் கொண்டு வரும் திட்டம் ஏதும் இல்லை.

ஊத்தங்கரை தாலூகாவில் பனஞ்சர்க்கரை தொழிற்சாலை.

வினு 576—திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை தாலூகாவில் பனஞ்சர்க்கரை தொழிற்சாலை கட்டும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினுவிற்கு இடமில்லை.

காலணிகள் ஏற்றுமதி

வினு 577—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கதர், கிராம கைத்தொழில் வாரியம் தயாரிக்கும் காலணிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா?

(ஆ) 1977–78-ம் ஆண்டிற்கு எவ்வளவு காலணிகள் தயாரிக்கப்பட்டன ?

(இ) ஏற்றுமதி எவ்வளவு ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) சுமார் ரூபாய் 17 இலட்சத்து 84 ஆயிரம் மதிப்புள்ள 99,874 ஜோடி காலணிகள் தயாரிக்கப்பட்டன.

(இ) கேள்விக்கு இடமில்லை.

கிளிக்கூடு அருகில் மணற்போக்கி அமைத்தல்.

வினா 578—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருச்சி மாவட்டம் கிளிக்கூடு அருகில் காவிரியில் நிரந்தர மணற்போக்கி ஒன்றினை அமைக்கின்ற உத்தேசம் அரசிற்கு உண்டா?

விடை—

கிளிக்கூடு அருகில் காவிரியில் நிரந்தர மணற்போக்கி கட்டுவது பற்றி பரிசீலனை செய்யப்பட்டு, இது தேவையில்லை எனக்கருதி தற்போது இத்திட்டம் கைவிடப்பட்டது.

மாணம்பதி பெரிய ஏரியை ஆழப்படுத்தும் திட்டம்.

வினா 579—திரு. செ. சொக்கலிங்கம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருப்போரூர் ஒன்றியம் மாணம்பதி பெரிய ஏரியை ஆழப்படுத்தும் திட்டத்திற்கு மதிப்பீடு தயார் செய்யும் வேலை துவங்கவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அதை ஆழப்படுத்தும் உத்தேசம் உண்டா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மாணம்பதி ஏரியை ஆழப்படுத்துவதற்கான திட்டம் ரூ. 19 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டது. ஒட்டேரி-கிராம மக்கள் தங்கள் நிலங்களின் மீது தூர் வாரிமண் போட எதிர்ப்பு தெரிவித்தமையாலும் இத்திட்டத்தின் மூலம் பயனடையும்

பரப்பு 50 ஏக்கர் மட்டுமேயாதலாலும் இத்திட்டம் சிக்கனமல்லாத ஒன்று என்று கைவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாணம்பதி ஏரியின் கரையை உயர்த்தும் திட்டம் ஆராயப்பட்டு ரூ. 505 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தினால் எதிர்வாயில் சாகுபடி நிலங்கள் நீர்ப் பிடிப்புக்கு உள்ளாவதை மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதல் போது விரும்பாத காரணத்தால் இதுவும் 1977-ல் கைவிடப்பட்டது.

பொதுப்பணித்துறை நிலங்களில் ஆக்கிரமிப்பு.

வினா 580—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

அரசுக்குச் சொந்தமான பொதுப்பணித் துறையினரின் இடத்தை ஆக்கிரமித்தவர்கள் 1977–78 ஆம் ஆண்டில் எத்தனை பேர் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர் ?

விடை—

பொதுப்பணித்துறை நீர்ப்பாசனத் பிரிவைச் சேர்ந்த நிலத்தை ஆக்கிரமித்தவர்களில் தஞ்சை மாவட்டத்தில் 120 பேர்களும் வட ஆற்காடு மாவட்டத்தில் 5 பேர்களும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தியான நெல் அளவு

வினா 581—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

1977–78 ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தியான நெல்லின் அளவு எவ்வளவு ?

விடை—

1977–78 ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் நெல் உற்பத்தி 14.38 இலட்சம் டன்களாகும்.

தஞ்சை மாவட்டத்தில் பருத்தி, மிளகாய் பயிரிடும் நிலத்தின் பரப்பளவு.

வினா 582—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தஞ்சை மாவட்டத்தில் 1977–78ஆம் ஆண்டில் பருத்தி பயிரிடும் நிலத்தின் அளவு எவ்வளவு?

விடை—

1977–78-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் 9,267 ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

வினா 583—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தஞ்சை மாவட்டத்தில் நஞ்சையில் மிளகாய்ப் பயிரிடும் நிலத்தின் பரப்பு எவ்வளவு?

விடை—

தஞ்சை மாவட்டத்தில் மிளகாய் சாதாரணமாக சுமார் 950 ஹெக்டேர் பரப்பில் பயிரிடுவது வழக்கம். 1977–78 ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் 1,500 ஹெக்டேர் பரப்பில் மிளகாய் பயிரிடப்பட்டது.

நெல்லை மாவட்டத்திலுள்ள பண்டக சாலைகள்

வினா 584—திரு. ஓ. சோ. வேலுச்சாமி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

நெல்லை மாவட்டத்தில் ஒட்டபிடாரம் ஊராட்சி ஒன்றியத்திலும், கயத்தாறு ஊராட்சி ஒன்றியத்திலும் முறையே எத்தனை நியாய விலைக் கடைகளும், கூட்டுறவு பண்டகசாலைகளும் இருக்கின்றன?

விடை—

ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்தில் இயங்கும்

(1) நியாயவிலைக் கடைகள்	41
(2) கூட்டுறவுப் பண்டகசாலைகள்	19

கயத்தாறு ஊராட்சி ஒன்றியத்தில் இயங்கும்

(1) நியாயவிலைக் கடைகள்	30
(2) கூட்டுறவுப் பண்டகசாலைகள்	11

தஞ்சை மாவட்டத்தில் மனைப்பட்டாக்கள்

வினா 585—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1977–78 ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் வீட்டு மனைப்பட்டா கோரி வந்துள்ள விண்ணப்பங்கள் எவ்வளவு?

(ஆ) இதுவரை எத்தனை விண்ணப்பங்கள் பைசல் செய்யப் பட்டுள்ளன?

விடை—

(அ) 5,337

(ஆ) 5,312

ஜவ்வாது மலையில் விவசாய அபிவிருத்தித் திட்டம்.

வினா 586—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலையில் நிலங்களில் மண் அரிப்பு ஏற்படுவதை தடுக்க விவசாய அபிவிருத்தி திட்டம் ஏதேனும் அரசு செயல்படுத்துகிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) அத்திட்டத்தில் பயன்பெற்ற விவசாயிகள் எத்தனை பேர்?

விடை :—

(அ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் பல திட்டங்களில் மண் வளப் பாதுகாப்புத் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் வட ஆற்காடு மாவட்டம், ஜவ்வாது மலையில், நிலங்களில் மண் அரிப்பு ஏற்படுவதை தடுக்க ஒரு திட்டம் செயல்பட்டு வருகிறது.

(ஆ) 1977–78-ம் ஆண்டு வட ஆற்காடு ஜவ்வாது மலையில் இத்திட்டத்தை நிறைவேற்ற ரூ. 1,60,000 வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம்கீழ் குறிப்பிட்டுள்ளவாறு செயல்படுத்தப்பட்டுள்ளது.—

	மொத்த செலவு. ரூ.	பரப்பு (ஹெக்டர்)
(1) திருப்பத்தூர் வட்டம் :		
நெல்வாசல் நாடு கிராமம்.		
சம உயரகல் சுவர் அமைத்தல் ..	1,16,972	38,63
(2) வாணியம்பாடி வட்டம் :		
மந்தாரக்குட்டை :		
படி மட்டம் அமைத்தல் ..	43,010	14,25
மொத்தம் ..	1,59,982	52.88

1978–79-ம் ஆண்டிற்கு ரூ. 20,000 செலவிட ஆணையிடப்பட்டுள்ளது..

(இ) இத்திட்டத்தின் மூலம் 1977–78-ம் ஆண்டில் 49 பழங்குடி விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

அரசு விதைச் சுத்திகரிப்பு நிலையத்தில் கையாடல்.

வினா 587—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வட ஆற்காடு மாவட்டம் போளூருக்கருகில் வசூர் கிராமத்தில் அமைந்திருக்கும் அரசு விதைச் சுத்திகரிப்பு நிலையத்தில் கையாடல் நடைபெற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு தொகை கையாடப்பட்டுள்ளது ?

(இ) அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ரூபாய் 16,856.73 மதிப்புள்ள பொருள்கள் கையாடப்பட்டதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

(இ) கையாடலுக்கு காரணமான வேளாண்மை துணை அலுவலர் 4—4—78 முதல் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். கையாடல் செய்யப்பட்டதாக கணக்கிடப்பட்டுள்ள தொகையை அவரிடமிருந்து வசூலிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆகஸ்டு மாத நிலவரப்படி அவரிடமிருந்து இன்னும் 1,000 ரூபாய் மட்டுமே வசூலிக்கப்பட வேண்டியுள்ளது. இத்தொகையையும் அவரிடமிருந்து வசூல் செய்ய விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கையாடல் மற்றும் முறைகேடுகள் குறித்து அவர்மேல் முறையான மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாணவர்களுக்கு அரசு பாடப் புத்தகங்கள் வெளியீடு.

வினா 588—திரு. வீ. கே. கோதண்டராமன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எந்த வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு அரசு பாடப் புத்தகங்கள் வெளியிடப்படுகிறது ?

(ஆ) அவைகள் எந்த முறையில் விற்பனை செய்யப்படுகிறது?

விடை—

(அ) 1 முதல் 10 வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கான பாட நூல்களில் 9 ஆம் வகுப்பு ஆங்கிலத் துணைப் பாட நூல் ஒன்று தவிர, அனைத்தும் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் அரசு நிறுவனமான 'தமிழ் நாட்டுப் பாடநூல்' நிறுவனத்தால் வெளியிடப்படுகின்றன.

தெலுங்கு, மலையாளம், உருது ஆகிய சிறுபான்மையோர் பேசும் மொழிகளில் கணிதம், அறிவியல், புவியியல், வரலாறு ஆகிய நூல்கள் 3 முதல் 10 வகுப்புகளுக்கு வெளியிடப்படுகின்றன. கன்னடத்தில் கணக்கு, அறிவியல், புவியியல், வரலாறு ஆகிய நூல்கள் 3 முதல் 8 வகுப்புகளுக்கு வெளியிடப்படுகின்றன.

மேல் உயர்நிலைப் பள்ளி நிலையில் (Higher Secondary) அரசு உத்திரவிட்டுள்ள 41 தலைப்புகளில் தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் நூல்களை வெளியிடுகிறது.

(ஆ) சென்னை நகரை பொறுத்தவரை, தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் நேரடியாகச் சில்லறை வியாபாரிகள் மூலம் பாட நூல்களை விற்பனை செய்கிறது. பிற இடங்களில் ஆங்காங்கு உள்ள கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட சில்லறை வியாபாரிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றது.

கலைக்கப்பட்ட ஊராட்சி மன்றங்கள்.

வினா 589— திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1977 ஜூன் மாதத்திற்கு பிறகு கலைக்கப்பட்ட ஊராட்சி மன்றங்களின் எண்ணிக்கை என்ன ?

(ஆ) அப்படி கலைக்கப்படுவதற்கான காரணங்கள் யாவை ?

விடை—

(அ) நான்கு ஊராட்சிகளும் ஒரு பேரூராட்சியும்;

(ஆ) (1) பாலத்தளி ஊராட்சி உறுப்பினர்கள் தலைவருடன் ஒத்துழைக்காமையினால் நிர்வாகம் இயங்கவில்லை. மேலும் பல முறைகேடுகள்.

(2) திருப்பத்தூர் பேரூராட்சியில் 7 உறுப்பினர்கள் ராஜிநாமா செய்து விட்டார்கள். அறுவர் உறுப்பினர் தகுதியை இழந்து விட்டனர். எஞ்சிய இருவரைக் கொண்டு ஊராட்சி இயங்க இடமில்லை.

(3) திருச்சோற்றுத்துறை ஊராட்சியில் 12 உறுப்பினர்களில் தலைவர் மட்டும்தான் பதவியில் இருந்தார். 10 பேர் ராஜிநாமா செய்து விட்டனர். ஒருவர் இறந்து விட்டார்.

(4) அழகனேரி ஊராட்சி தலைவர் இறந்து விட்டார். மற்ற உறுப்பினர்கள் ராஜிநாமா செய்து விட்டனர்.

(5) பொன்னுக்குடி ஊராட்சியில் ஒரு ஆண்டுக்கு மேல் கூட்டமே நடத்தவில்லை, எந்த வேலையும் செய்யப்படவில்லை, மற்றும் தலைவர் மீது பணம் கையாடல் குற்றச்சாட்டு.

குடிசைப் பகுதி வாரிய வீடுகளில் வசிப்போருக்கு உள்ள நிபந்தனைகள், சலுகைகள்.

வினா 590—திரு. என். வரதராஜன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் குடிசைப்பகுதி மாற்று வாரிய வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு அரசு விதித்த நிபந்தனைகள் யாவை ? சலுகைகள் யாவை ?

(ஆ) அவ்வாறு அளிக்கப்பட்ட நிபந்தனைகளில் சமீபத்தில் அரசு ஏதேனும் மாற்றம் செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரமென்ன ?

விடை—

(அ) சென்னை நகரில் குடிசைப் பகுதி மாற்று வாரிய வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ள நிபந்தனைகள் பின்வருமாறு :—

(1) ஒதுக்கீடு பெற்றவர் வாரியத்திற்கு முத்திரைத் தாள் ஒட்டிய ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும். ஒதுக்கீடுதாரர் ஒதுக்கீடு உத்தரவு கிடைத்த ஏழு தினங்களுக்குள் அனுமதித் தொகை முன் வைப்பாக ரூ. 30—ஐயும், குடியிருப்பிற்கான அனுமதித் தொகை பாக்கியையும் செலுத்தி வாரிய எஸ்டேட் அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்வதோடு அவருடைய வருவாய்க்கான சான்றிதழையும் பெற்று அனுப்ப வேண்டும்.

அனுமதித் தொகை முன்வைப்பினை செலுத்தியபின் குடியிருப்பு தேவையில்லை என்று தெரிவித்தால் செலுத்திய அனுமதித் தொகை மற்றும் முன் வைப்புத் தொகை ஆகியவற்றை திருப்பித் தர இயலாது.

(2) ஒதுக்கீடுதாரர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள குடியிருப்பிற்கு தண்ணீர் வசதி மட்டும் செய்து கொடுக்கப்பட்டால் ரூ. 12-ம், தண்ணீர் வசதியும் மின் வசதியும் சேர்த்து செய்து கொடுக்கப்பட்டால் ரூ. 15-ம், மேற்படி இரண்டு வசதிகளும் இல்லையெனில் ரூ. 10-ம் மாத அனுமதித் தொகையாக தற்காலிகமாக செலுத்தி வர வேண்டும். ஒதுக்கீடுதாரர் அவரது வருவாய் சான்றிதழை சமர்ப்பித்த பின்னரே, இறுதியாக அனுமதித் தொகையை நிர்ணயம் செய்து நிரந்தர ஒதுக்கீடு ஆணை வழங்கப்படும். அனுமதித் தொகை ஒவ்வொரு மாதமும் 7-ம் தேதிக்குள் எஸ்டேட் அதிகாரியிடம் செலுத்தி விடவேண்டும்.

(3) லைசென்ஸ் உத்தரவு ஆண்டுக்கு ஒரு முறை புதுப்பிக்கத்தக்கது.

(4) ஒதுக்கீடு உத்தரவு கிடைத்த 15 நாட்களுக்குள்ளாக, அதில் குடியேறிவிட வேண்டும்.

(5) குடியிருப்பில் சேர்க்கைகள், தடுப்புச் சுவர்கள் அல்லது வேறு எவ்வித மாற்றங்களும் செய்யக்கூடாது.

(6) ஒதுக்கீடுதாரரின் குடும்பத்தினர்கள் மட்டுமே குடியிருப்பை குடியிருக்க உபயோகித்து வர வேண்டும். குடியிருப்பை அவர்கள் மற்றவர்களுக்கு வாடகைக்கு விடவோ அல்லது விற்கவோ கூடாது. குடியிருப்பை வாடகைக்கு விட்டவர்கள் அல்லது விற்றவர்கள் குடிசைப் பகுதி மாற்று வாரியத் திட்ட சட்டத்தின் பிரிவு 62 (1)—ன் படி, மூன்று மாத காவல் தண்டனைக்கும் ரூ. 1,000 அபராதத்திற்கும் உள்ளாவார்கள் என்று எச்சரிக்கப்படுகிறார்கள். குடியிருப்பை ஒதுக்கீடு பெற்றவர்கள் அவர்கள் எழுதிக் கொடுத்த ஒப்பந்தப் படிவத்தில் கண்டுள்ள ஷரத்துக்களை மீறினால் குடியிருப்பிலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.

(7) எக்காரணத்தைக் கொண்டும் குடியிருப்புகள் வேறு நபருக்கு மாற்றம் செய்யப்பட மாட்டாது. எனினும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் உடன் பிறந்தவர்கள், வாரிசுதாரர்கள், பெற்றோர்கள் அல்லது பிள்ளைகளுக்கு இடையில் மாற்றம் செய்வது பற்றி கவனிக்கப்படும்.

(8) குடியிருப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள கக்கூசு, குளியலறை, கழிவிட மேடை, நீர்க்குழாய் மற்ற அமைப்பு அல்லது வசதியைக் கவனமாக உபயோகிக்க வேண்டும். அவற்றைச் சேதப்படுத்தவோ, கெடுக்கவோ கூடாது.

(9) மேலே கூறியுள்ள எந்த விதிகளை மீறினாலும் அந்த குடியிருப்புக்குரிய லைசென்சை வாரியம்/அரசு ரத்துசெய்வதுடன் லைசென்சுதாரரோ அல்லது அவர் மூலமாக பாத்தியதை கொண்டாடுகிறவர்களோ, அத்து மீறியவர்கள் எனக் கருதப்பட்டு அவர்களை குடியிருப்பிலிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

வாரிய குடியிருப்பில் வசிப்பவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் பின்வருமாறு :—

(1) வாரிய குடியிருப்பு ஒன்றுக்கு கட்டுப்படி வாடகை (Economic rent) அதிகமாக இருந்தபோதிலும், அடிப்படை வாடகையாக வசூலிப்பது ரூ. 10 முதல் ரூ. 15 மட்டுமே

(2) குடியிருப்பிலுள்ளவர்கள் நிரந்தர வருமானம் உள்ளவர்களாக இருந்து அவர்கள் மாத வருமானம் ரூ. 350-க்கு மேற்படாமல் இருப்பின், அவர்களுக்கு அவர்கள் விருப்பத்தின் பேரில் அக்குடியிருப்பு தவணை முறையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

__(ஆ) அண்டு (இ):__- மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனைகளில் மாற்றம் எதுவும் சமீபத்தில் செய்யப்படவில்லை. ஆனால் குடியிருப்பு ஒதுக்கீடு பெறும் தகுதியுள்ள குடிசை வாசிதானா என்பதை நிர்ணயிக்கும் தேதி 1-1-74 என்பதிலிருந்து 30-6-77 என மாற்றப்பட்டுள்ளது.

உடன்குடியில் பனை வெல்லம், சர்க்கரை, கற்கண்டு செய்முறை பயிற்சி நிலையம்.

வினா எண் 591— திரு. ஆர். அமிர்தராஜ் : மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் உடன்குடியில் பனை வெல்லம், சர்க்கரை, கற்கண்டு செய்முறை பயிற்சி நிலையம் அமைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் செயல் முறைக்கு வரும் ?

__விடை—__

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருச்செந்தூரில் பனை ஓலைப் பொருட்கள் பயிற்சி நிலையங்கள்.

வினா எண் 592— திரு. ஆர். அமிர்தராஜ்: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், திருச்செந்தூர் தொகுதியில் உள்ள பனை ஓலைப் பொருட்கள் பயிற்சி நிலையம் எத்தனை ?

விடை—

நெல்லை மாவட்டம், திருச்செந்தூர் தொகுதியில் குலசேகரப்பட்டினம் மற்றும் மெஞ்ஞானபுரம் ஆகிய இரண்டு இடங்களில் பனை ஓலைப்பயிற்சி நிலையங்கள் மாநில இணையத்தின் கீழ் இயங்கி வருகின்றன.

கடம்பாகுளம் மராமத்து.

வினா எண் 593—திரு. ஆர். அமிர்தராஜ்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், திருச்செந்தூர் தாலூகா கடம்பாகுளம் மணல் தூர்ந்து கொள்ளளவு குறைந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் தூர் எடுத்து மராமத்து செய்யும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா

விடை—

(அ) ஆம்.

(ஆ) தற்போது தூர் எடுத்து மராமத்து செய்யும் செயற் குறிப்பு ஏதும் அரசிடமில்லை.

Frozen Semen Bank at Eachenkottai Farm near Thanjavoor.

Q. No. 594—Thiru M. ARUMUGAM: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(a) Whether the Central Government have undertaken to procure the Danish Co-operation for the setting up of a Frozen Semen Bank at Eachenkottai Farm near Thanjavoor in this state; and

(b) if so, the details there of ?

Ans.— (a) Yes.

(b) The Government of India have informed this Government that the Danish Government have agreed to offer the following assistance for the establishment of a Frozen Semen Bank at Eachenkottai farm : —

(i) Equipment for the Bank and for 50 sub-centres.

(ii) Provision of 10 young Jersey bulls including transport

(iii) Supply of 24,000 doses of Frozen Semen.

(iv) Training of two officers in the Frozen Semen Technology.

(v) Advisory assistance by short term Danish Consultant.

Marudur Veterinary Hospital building condition.

Q. No. 595—Thiru. S. M. VASAN: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(a) Whether the Government are aware of the bad condition of the buildings housing the Veterinary Hospital at Marudur Village in Bhuvanagiri in South Arcot District; and

(b) If so, the steps taken in this regard ?

Ans.—

(a) No Veterinary Dispensary or Veterinary Hospital is functioning in Marudur Village. Only a sub-centre is functioning in Marudur Village in a rent free building. The condition of the building is not bad and it requires only minor repairs.

(b) Action is being taken by the Assistant Director of Animal Husbandry, Chidambaram for carrying out the minor repairs to the above buildings.

Quality Control of the Cattle Food.

Q. No. 596—Thiru. N. KITTAPPA : Will the Honourable the Minister for Social Welfare be pleased to state—

(a) Whether any quality control steps have been undertaken by the Government over the cattle food in this State; and

(b) If so, the details thereof?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

Milk Project at Uthangarai.

Q. No. 597—Thiru N. KITTAPPA: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(a) Whether there are proposals under the consideration of the Government to open a Milk Project at Uthangarai; and

(b) If so, the details thereof?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Rehabilitation of Women Prisoners.

Q. No. 598—Thiru. N. KITTAPPA: will the Hon. the Minister for Law be pleased to state—

the details of the rehabilitation work for the women prisoners organised by the jails administration in this State?

Ans—.

In this State, the State prison for women, Vellore with an authorised accommodation for 412 prisoners functions exclusively for women prisoners.

In order to enable the women prisoners confind in the above mentioned prison to lead an honest life and to be self-employed on their release, they are given training in certain select industries, namely, Tailoring, Weaving and Tape making. Apart from this they are given demonstration (training) once in a week in domestic work like preparation of sweets, savouries etc., by social organisations etc., Besides this, elementary education is being given to the women prisoners in the school attached to the institution.

தர்மபுரி மாவட்டத்தில் வறட்சி மீட்பு பணிகள்.

வினா எண் 599—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் வறட்சி மீட்பு பணியின் கீழ் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் எத்தனை ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டன ?

(ஆ) அமைக்கப்பட உள்ள சங்கங்கள் எத்தனை ?

(இ) அவற்றுக்கு கொடுக்கப்பட்ட கடன் எவ்வளவு ?

விடை—

(அ) 26 (இருபத்தாறு).

(ஆ) 10 (பத்து).

(இ) ரூபாய் 19.64 இலட்சம்.

காட்டு நிலங்களில் விளையும் பயிர்களுக்குப் பாதுகாப்பு திட்டம்.

வினா எண் 600—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனப் பண்ணை நிலத்தில் சாகுபடி செய்யும் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு கொடுக்க அரசின் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு எத்தனை பேர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) காட்டு நிலங்களில் குத்தகைதாரர்கள் பயிரிடும் நிலங்களிலுள்ள பயிர்களைப் பாதுகாக்க வனத்துறையிடம் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெறாது என்பதைக் குறிக்கும்.]

2 தன்னிலை விளக்கம்.

உறுப்பினருக்கு ஒதுக்கப்பெற்ற வீட்டில் பிறர் தங்கி இருப்பது குறித்து.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நான் 184-வது விதியின் கீழ் ஒரு உரிமை மீறல் பிரச்னையை தலைவரிடம் தந்திருந்தேன். அதைப்பற்றி இன்றைய தினம் அஜெண்டாவில் ஒன்றும் இல்லை........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை உரிமைப் பிரச்னையாக எடுத்துக் கொள்ள முடியாது. பர்ஸனல் க்ளாரிபிகேஷன் என்ற முறையில் வேண்டுமானால் தங்கள் கருத்தைத் தெரிவிக்கலாம்.

திரு. ரா. மார்க்கபந்து : அடுத்த ஒன்று, குடியாத்தத்தில் நடைபெற்ற தடியடி பிரயோகம் சம்பந்தமாக 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது சம்பந்தமாகவும் இன்றைய அஜெண்டாவில் இடம் பெறவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நீங்கள் இப்போது கேட்க முடியாது, பர்ஸனல் க்ளாரிபிகேஷன என்ற முறையில் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சொல்லுங்கள்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் கோஷன் பிளாக் இல் 17-வது எண் உள்ள வீடு ஒதுக்கப்பட்டிருக்கிறது. நான் வழக்கறிஞர் என்ற முறையில் எனது ஜூனியர் வக்கீல் துரைசாமி என்பவரும் என்னோடு இருக்கிறார். என்னுடைய மகன் சாந்தோம் ஹைஸ்கூலில் படித்துக் கொண்டிருப்பவனும் என்னோடு இருக்கிறான். இப்படி மூன்று பேருமாக இருக்கிறோம். கட்சித் தலைவர் என்ற முறையில் என்னைப் பார்ப்பதற்காக பல பகுதிகளிலிருந்து என்னுடைய வீட்டுக்கு வந்து சேருகிறார்கள். அப்படியிருக்க 11—9—1978-ம் தேதியன்று திரு. துரைமுத்துசாமி அவர்கள் என்னைப்பற்றி இந்த மன்றத்தில், எனக்கு மக்களிடம் தப்பபிப்ராயம் உண்டாகும் படியான அளவில் நாட்டு

மக்களிடம் கெட்ட எண்ணத்தை உண்டாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் உண்மைக்கு புறம்பான தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். ''மார்க்கபந்து பெயரிலும், துரை கோவிந்தராஜன் பெயரிலும் இருக்கின்ற வீடுகளில் வேறு நபர்கள் இருக்கிறார்கள். உடனே இதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கின்ற வகையில் பேசியிருக்கிறார்கள்'' இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. வேண்டுமென்றே என் மீது களங்கம் கற்பிக்க வேண்டும் என்று இதை சொல்லியிருக்கிறார்கள். இந்தச் செய்தி ''தினகரன்'' பத்திரிகையிலும் ''தினத்தந்தி'' பத்திரிகையிலும் கொட்டை எழுத்துக்களில் போட்டிருக்கிறார்கள். இவ்விதம் வந்திருப்பது வேண்டுமென்றே எங்களை நாட்டு மக்களிடம் கேவலப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் செய்யப்பட்டிருப்பதாக இருப்பதால், இதன் மீது உரிமைப் பிரச்னை என்ற முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போதே தன்னுடைய வீட்டில் துரைசாமி என்பவர் தங்கியிருக்கிறார் என்றும், அவர் ஒரு வழக்கறிஞர் என்று சொன்னார், அவர் இவருடைய உறவினரா என்பதை அவர் சொல்லவில்லை. துரைசாமி என்று தான் பெயர்ப்பலகை அங்கு இருக்கிறது. துரைசாமி என்பவர் பெயரிலுள்ள தபால்கள் எல்லாம் அங்கே தான் வருகிறது, நீதி மன்றத்திலும் இதே முகவரியில் தான் ரெஜிஸ்டரும் செய்திருக்கிறார்கள், இதன் அடிப்படையில் தான் நான் பேசினேனே தவிர வேறு முறையில் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : The Hon. Member must understand the point and then raise it. திரு. துரைசாமி அவர்கள் என்னுடைய மைத்துனர், அவர் என்னுடைய ஜூனியர் வக்கீலாக இருக்கிறார். அதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் அவர் எப்படிச் சபையில் இந்தவிதமாக பேசலாம் ?

மாண்புமிகு பேரவைத்தலைவர்: திரு. மார்க்கபந்து அவர்களுடன் திரு. துரைசாமி என்பவரும் தங்கியிருப்பதாக அறிகிறேன் என்று தான் துரைமுத்துசாமி பேசியிருக்கிறார். நீங்களும் துரைசாமி என்பவர் உங்கள் மைத்துனர் என்று ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள், ஆகவே இதில் உரிமை மீறல் பிரச்னை வருவது என்பதோ, திரித்துக் கூறினார் என்ற பிரச்னையோ எழவில்லை என்ற எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

திரு. துரை கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு ஒருவருடைய பெயர்ப் பலகை இருந்தது என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய வீட்டில்

என்னுடைய பெயர்ப் பலகை தான் இருக்கிறது. என்னைப்
பார்க்க வருகின்ற மக்கள் அங்கு இருப்பார்கள். அதைப் பார்த்து
விட்டு இப்படிச் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன்
என்னுடைய மருமகன் என்னோடு இருந்து வருகிறார். ஆகவே
தவறான தகவலை உறுப்பினர் அவர்கள் சபையில் தந்திருக்
கிறார்கள் என்னுடைய வீட்டில் என்னுடைய பெயர்ப் பலகை
தானே இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
தவறான தகவலை சபையில் சொன்னதற்காக அவர்கள் மீது
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : He is misleading the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : That I must decide.
இது உங்களுடைய பிரச்னை அல்ல. துரை முத்துசாமிக்கும்,
துரை கோவிந்தராஜுக்கும் உள்ள பிரச்னை.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே,
இங்கே உறுப்பினர் துரை கோவிந்தராஜன் அவர்கள் பேசுகின்ற
போது சொன்னார்கள். என்னுடைய மருமகன் என்னுடைய
வீட்டிலே தங்கியிருக்கிறார்கள் என்று. வீடு அவருக்காக
ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர் வகிக்கின்ற கொறடா பதவிக்
காக. ஆகவே, மருமகன் அவர் வீட்டில் தங்கலாமா என்று அறிய
விரும்புகிறேன் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய மகன், மகள்
இருக்கலாமா என்றெல்லாம் கேட்டால், பின்னால் மனைவி கூட
இருக்கலாமா என்ற கேள்வி வரும். அதுவல்ல பிரச்னை. திரு.
துரை கோவிந்தராஜன் அவர்களோடு பால்ராஜ் என்கின்ற
அவருடைய மருமகன் அந்த வீட்டிலே இருக்கலாம். இது
தவறல்ல.

3. தகவல் கோரல்.

41, 42, 184 ஆகிய விதிகளின் கீழ் உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே,
இந்தியகம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாடு பூராவிலும், இந்தியா
எங்கிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அரிஜன பாது
காப்பு, விவசாயப் பொருட்களுக்கு விலை நிர்ணயம், மக்களுக்கு
வேலைவாய்ப்பு போன்ற கோரிக்கைகளை வைத்து நேற்று சென்னை

நகரத்தில் இது சம்பந்தமாக மாணவர்கள், இளைஞர்கள் ஊர்
வலமாக வந்தவர்களைத் தகாத முறையில் அடித்து, நொறுக்கி,
ஏகப்பட்ட சித்திரவதைகளுக்கு உள்ளாக்கி, காயங்களுடன் ஆஸ்
பத்திரியிலே ஏழுமலை, சாகுல் அமீது, துரைராஜ், சீனிவாசன்
போன்றவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எதைப் பற்றி, எந்தத் தலைப்பின்கீழ் பேசுகிறீர்கள் ? 42-ஆவது விதியிலோ அல்லது 41-ஆவது விதியிலோ நான் இந்தப் பிரச்னையைத் தந்திருக்கிறேன். அது இந்த அவைமுன் கொண்டு வரப்படவில்லை என்று சொல்லிவிட்டு, என் அனுமதி கேட்டு, அதையும் வாசித்து சுருக்கமாகச் சொன்னால் நேரம் வீணாகாமல் சரியாக இருக்கும்? என்ன ஒழுங்குப் பிரச்னை கொடுத்திருக்கிறேன் என்று சொல்லாமல், உரைபோல் ஆரம்பித்துப் பேசிக் கொண்டே போனால் அதற்கு என்ன பொருள் ?

திரு. சோ. அழகர்சாமி : 42-ஆவது விதியின் கீழ் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். அது அவசியமும், அவசரமும் ஆகும். இது சம்பந்தமாக நேற்று நடந்த தாக்குதல் வேண்டுமென்றே அமைதியாக போகக் கூடியவர்களின் மேல் செய்யப்பட்டது. அது மட்டுமல்ல. எந்தவிதமான காரணமும் இல்லாமல், விவசாயிகளைப் பற்றியோ அல்லது தொழிலாளர்களைப் பற்றியோ அரசாங்கத்திற்கு எதிராக ஒரு கோரிக்கை வைப்பதை பயமுறுத்த வேண்டுமென்ற நோக்கத்திற்காக வேண்டுமென்றே தாக்குதல் செய்திருக்கிறார்கள். அமைதியாக ஊர்வலமாக வந்த தொண்டர்கள் 43 பேர்கள் அவர்களுடன்கூட, அவர்களை வழி அனுப்புவதற்காக ஒரு பக்கம் பாட்ஜ் அணிந்து கொண்டு ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்தார்கள். அப்படி ஒழுங்காக இருந்தவர்கள்மீது தாக்குதல் நடத்தி, அடித்து, நொறுக்கி, பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். சட்டமன்றம் நடக்கும்போதே இப்படிப்பட்ட கொடுமைகள் நடந்திருக்கின்றன. சபாநாயகர் அவர்களுக்கு இந்த இரத்தக் கறை படிந்த சட்டையை காண்பிக்கின்றேன்... .. .. ..

மாண்புமிகு பேரவைத்தலைவர்: 42-ஆவது விதியின்கீழ் பிரச்னை என்ன என்பதைச் சுருக்கமாகச் சொல்லுங்கள். அதற்கு நான் பதில் சொல்லுகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பத்திரிகை நிருபர் தாக்கப்பட்டிருக்கிறார். அவரையும் பயங்கரமாக அடித்திருக்கிறார்கள். இது சம்பந்தமான போட்டோ காபி என்னிடம் இருக்கிறது. போலீசார் அடித்து, தாக்கியதன் காரணமாக மயக்கமாக விழுந்த சாகுல் அமீதின் போட்டோவையும் பாருங்கள். அவரைக் கீழே வீழ்த்தி லத்தியால் அடித்திருக்கிறார்கள்... .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் எவ்வளவு தாராளமாய் இருந்தாலும், அதைப் பயன்படுத்தித் தாங்கள் சுருக்கமாகச் சொல்லவில்லை. இந்தப் பிரச்சினை பற்றி அரசுக்கு சுருக்கமாகச் சொல்லுங்கள். இப்படிப் பேசிக் கொண்டே போனால், நான் அனுமதிக்க முடியாது.

திரு. சோ. அழகர்சாமி : இது முக்கியமானது. சட்டசபை நடந்துகொண்டிருக்கும் போதே, சென்னை மாநகரில் அமைதியான முறையிலே வந்த 43 தொண்டர்களை அடித்து, நொறுக்கியதோடு மட்டுமல்லாமல், குடியாத்தத்திலேயும் இப்படி நடந்திருக்கிறது. இன்னும் பல இடங்களிலேயும் நடந்திருக்கிறது. அரசாங் கத்தின் போக்கிலே மாறுதல் வேண்டும். காரணம் ஊர்வல மாக வருகின்றவர்களை, தங்கள் கோரிக்கைகளை அரசாங்கத் திடம் எடுத்துச் சொல்வதற்காக வந்தவர்களை இப்படித் தாக்கு வது, அடித்து நொறுக்குவது நடைமுறையில் கடைபிடிக்க வேண்டுமா ? அப்படித் தாக்கியது பற்றி ஒரு விவாதம் நடத்த வேண்டும். அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 42-ஆவது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் அழகிரிசாமி, அம்பிகா பதி, உத்திராபதி, எஸ். சிவசாமி, கே. சுப்பு ஆகியோர் இதே பிரச்சினை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் தந்திருக்கிறார்கள்.

திரு. க. சுப்பு : ஒன்று கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து திரு. அழகர்சாமி அவர்கள் சொல்லி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தாகிவிட்டது. நீங்கள் சொன்னால் பிறகு ஒவ்வொருவரும் சொல்ல வேண்டுமென்று சொல்வார்கள். இந்தப் பிரச்சினையை அறையிலேயே தள்ளிவிட முடியும் என்றாலும் பெருந்தன்மையுடன் அரசின் கவனத்திற்குக்கொண்டு வர ஒரு சந்தர்ப்பம் கொடுத்தால் ஒரு அளவோடு நிற்க வேண்டும்.

திரு. க. சுப்பு : தங்கள் பெருந்தன்மையை எனக்கும் கொஞ்சம் நீட்டுங்கள்.

திரு. கே. கந்தசாமி : நானும் கொடுத்திருக்கிறேன். பேச சந்தர்ப்பம் இல்லை யென்றாலும் நான் கொடுத்ததாகவாவது சொல்ல வேண்டாமா?

திரு. ரா. உமாநாத் : என்னுடைய சிறு சப்மிஷனைப் பேர வைத் தலைவர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்பு கிறேன். இந்த மாதம் 7ஆம் தேதி 200 ஸ்விச் கியர் தொழிலா ளர்கள் கைது செய்யப்பட்டு.... .. ..

திரு. சோ. அழகர்சாமி : நான் கிளப்பியதற்கு அரசாங்கத்தின் சார்பில் பதில் சொல்லவில்லை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நீங்கள் கொண்டு வந்ததை அரசின் கவனத் திற்குக் கொண்டுவர ஒரு வாய்ப்பளித்தேன். அரசுத் தரப்பில் பதில் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்த முடியாது.

திரு. சோ. அழகர்சாமி : நேற்று தலைநகரில் நடந்த சம்பவம், அமைச்சர்கள் இருந்திருக்கிறார்கள்.. ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகர்சாமி அவர்க ளுக்கு விதிகள் தெரியும். அறையிலே கேளுங்கள் என்று சொல்லி யிருக்க முடியும். அரசின் கவனத்திற்குக் கொண்டுவர ஒரு சந் தர்ப்பம் கொடுத்தேன். அனுமதித்த பிறகு அரசை வலியுறுத்த முடியாது.

திரு. சோ. அழகர்சாமி : அடிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.......

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவை தலைவர் அவர்களே, நேற்று நடைபெற்ற சம்பவம் ஒன்றைப் பற்றி 42-ஆவது விதியின்கீழ் ஒத்திவைப்பு தீர்மானம் ஒன்றை காலையிலே எட்டே முக்கால் மணி, ஒன்பது மணிக்குக் கொடுக்கிறார்கள். உடனடியாக அரசின் சார்பில் அரசாங்கம் என்ன சொல்லு கிறது என்று இன்றையதினம் உறுப்பினர்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய தினம் உறுப்பினர்கள் வற் புறுத்திக் கொண்டிருக்கும் சம்பவத்தைப்பற்றி என்ன நடந்தது என்பதற்கான விவரங்களை அரசு சேகரித்துத்தான் அதற்கான அறிக்கையை இந்த அவையில் வைக்க முடியும்., ஆகவே உடனடியாக வைக்கவேண்டுமென்று கேட்பதில் என்ன நியாயம் இருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி : நேற்று சட்டசபையிலே பன்னி ரண்டே முக்கால் மணிக்கு இந்தப் பிரச்சினையைக் கிளப்பியிருக் கிறேன்... ..

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் ; நேற்று சட்ட மன்றத்தில் இந்த பிரச்சினையை கிளப்பியது விதி 42-ன் கீழ் அல்ல. விதி 42-ன் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானத்தை நேற்றே கொடுத்திருப்பார்களானால் அதற்கான விவரங்களைச் சேகரித்து அவையில் கொடுக்க சாத்தியமாக இருந்திருக்கும். (கூச்சல் குழப்பம்.)

[1978 செப்டம்பர் 14

__திரு. சோ. அழகர்சாமி :__ மறியல் செய்தவர்களை நூற்றுக் கணக்கான போலீசார் அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். அரசாங்கம் இதற்குத் தகுந்த பதில் சொல்லவில்லை. அதைக் கண்டிக்கும் வகையில் நாங்கள் வெளியேறுகிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

__திரு. க. சுப்பு :__ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது காலையிலே கொடுத்துவிட்டு இப்போது உடனே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்கலாமா என்று கேட்டார்கள்......

__மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :__ கன்ஃபியூஸ் செய்யக் கூடாது. நான் அப்படிக் கேட்கவில்லை. அதற்குள் தகவல்களை சேகரிக்க முடியுமா என்று கேட்டேன்.

__திரு. க. சுப்பு:__ இந்தப் பேரவையின் மரபு எப்படியிருக்கிறது என்றால் அவை கூடுவதற்கு முன்னாலே கொடுத்தால் 10 மணிக்கு எல்லாம் எடுத்துக் கொள்வதுதான் மரபாக இருக்கிறது. அது உங்களால் முடியவில்லை என்று சொல்லுங்கள், முடியாமல் இருக்கலாம், இது வேறு, நேற்றைய தினமே கிளப்பியபோது முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கலாம். அமைச்சர் அவர்களின் விளக்கம் சரியில்லை, அரசாங்கத்தின் நிலையும் சரியில்லை என்று சொல்லி நான் அமர்ந்து கொள்கிறேன்.

__திரு. ரா. உமாநாத் :__ தலைவர் அவர்களே, சுவிட்ச்கியரை சேர்ந்த 200 தொழிலாளர்கள் விஷயமாக நான் ரூல் 41இல் ஒரு கால் அட்டென்ஷன் கொடுத்திருந்தேன். அதைத் தாங்கள் அட்மிட் செய்து இருக்கிறீர்கள். ஆனால், அமைச்சரிடமிருந்து ஸ்டேட்மெண்ட் வரவில்லை என்ற காரணத்தால் நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த ஸ்டேட்மெண்ட் தயாராக இருந்தால் இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிற கால் அட்டென்ஷனோடு சேர்த்து எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

__திரு. க. சுப்பு :__ நானும் ஒரு அட்ஜர்ன்மெண்ட் நோட்டீஸ் கொடுத்திருந்தேன். அது இன்னும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதையும் சேர்த்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

__திரு. ஜே. ஜேம்ஸ் :__ தலைவர் அவர்களே, நேற்றைய தினம் 42-வது விதியின் கீழ் இரண்டு தீர்மானங்களை உங்களிடம் கொடுத்துள்ளேன். இன்றைய தினம் இந்த மாமன்றத்தின் தொடர் கூட்டத்தின் கடைசி நாளாக இருக்கிறது. இன்று எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்த்தேன். குடியாத்தம் நகரில் டவுன் பஸ் விடவேண்டுமென்று அனைத்துக் கட்சிக் காரர்களும்..

1978 செப்டம்பர் 14]

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ திரு. ஜேம்ஸ் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். திரு. உமாநாத் அவர்கள் சுவிட்ச்கியர் தொழிலாளர் பிரச்சினை பற்றி நான் கொடுத்திருந்ததற்கு அரசுத் தரப்பிலே பதில் தயாராக இருக்குமானால் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று எப்படிச் சொன்னாரோ அதுதான் பிரச்சினை, அதுபோன்று தாங்கள் சுருக்கமாகச் சொல்ல வேண்டும். விளக்கம் சொல்ல வேண்டாம். விளக்கத்திற்குள் போவதற்கு நான் அனுமதிக்க மாட்டேன்.

[முற்பகல் 10-20]

__திரு. வி. கே. கோதண்டராமன் :__ தலைவரவர்களே, பொது மக்களின்மீது கடுமையான அளவிற்கு டியர்கேசும், லத்தி சார்ஜும் செய்யப்பட்டிருக்கிறது. மாணவர்கள் உட்பட விவசாயிகள், தொழிலாளர்களாகிய நூற்றுக் கணக்கானவர்கள் படுகாயப்படுத் தப்பட்டிருக்கிறார்கள். ஆறு பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே இந்த கடுமையான தடியடிப் பிரயோகத்திற்கு அவசியம் இல்லாத சூழ்நிலையில் நடந் திருக்கிறது என்பது மட்டுமல்ல, ஆஸ்பத்திரிக்குள்ளேயே நுழைந்து அங்கேயிருந்த அடிபட்டவர்களை வெளியே இழுத்துக் கொண்டு வந்து தாக்கியிருக்கிறார்கள். வீதியிலே வீடு வீடாகச் சென்று தாக்கியிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையிலே அந்தப் போலீஸ்காரர்களுடைய அட்டூழியம் வன்மையாகக் கண்டிக்கக் கூடியது. அதே நேரத்தில் உங்கள் மூலமாக அரசை நான் கேட்டுக் கொள்வது உடனடியாக அந்தப் போலீஸ்காரர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், நூறு பேர்களுக்கு மேல் இன்றைக்கு கைது செய்யப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்டிருக் கிறார்களே, அவர்களை விடுதலை செய்யவேண்டுமென்றும் தாழ்மை யோடு கேட்டுக் கொள்கிறேன். இதோ என் கையில் வைத்திருப்பது......

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ என்னிடத்தில் காட்டாமல் ஆயுதங்களைக் கொண்டுவரக் கூடாது. அதுவே குற்றம். அது வெடித்துவிடப் போகிறது. உள்ளே வையுங்கள்.

__திரு. ரா. மார்க்கபந்து :__ தலைவரவர்களே, எழுத்து மூலமாகக் கொடுத்திருக்கிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ ஒரு பிரச்சினைக்கு ஒருவரை தான் அனுமதிக்கிறேன்.

__திரு. ரா. மார்க்கபந்து:__ திரு. உமாநாத்திற்குக் கொடுத்தீர்கள்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ திரு. அழகர்சாமி பேசினார்கள், திரு. சுப்பு எழுந்தபொழுது இதே பிரச்னையை ஒருவர் சொன்னால் போதும் என்று சொன்னேன்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே.. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதை அனுமதிக்க இயலாது.

திரு. ரா. மார்க்கபந்து : I must bring it to the notice of the Government. இதைப்பற்றிச் சொல்லியாக வேண்டும். நான் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து நான்
சொல்வதைப் புரிந்து கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்.
பிரச்னையை இரண்டு பேர் கொடுத்தால் ஒரு
அனுமதி தர முடியும் என்பது ஒருவருக்குத்தான்
படித்து அவைக்கு அந்த விஷயம் என்னுடைய முடிவு. ஒருவர்
சொல்வேன். இதில், திருவாளர்கள் தெரிந்தால் போதும் என்று
ஜேம்ஸ், மார்க்கபந்து, துரை சொர்ணம், ரகுமான்கான்,
திருக்கிருர்கள். அதேபோன்று முத்துச்சாமி ஆகிய ஐவர் கொடுத்
னையான ஸ்விச் கிர் பிரச்னையில், திரு. உமாநாத் எழுப்பிய பிரச்
ராஜ், ஜேம்ஸ், விஜயராகவன், திருவாளர்கள் சுப்பு, சுந்தர
நாத், கோவிந்தராஜன் ஆகியோர் ரகுமான்கான், மாரிமுத்து, உமா
கொடுத்திருக்கிருர்கள்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, உங்கள் மூலமாக இந்த அரசுக்கு நான் ஒரு தகவலைக்
கொண்டு வர விரும்புகிறேன். தமிழ்நாடு பரிசுச் சீட்டில்
இரண்டு சீட்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனல், ஒரே
நம்பர் போடப்பட்டிருக்கிறது.

திரு. ப. சந்திரன் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். நாங்கள்
கேட்டதற்குப் பதில் கொடுக்கவில்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்படிக் கேட்க முடியும்?
திரு. அழகர்சாமி கேட்டுக் கொண்டிருக்கிருர்கள். அரசுத்
தரப்பிலே கட்டாயப் படுத்திக் கேட்க முடியாது. தகவல்
தெரிந்தால் அமைச்சரவையிலே இருப்பவர்கள் பதில் சொல்
வார்கள். இல்லையென்றல் இந்த விஷயம் குறிப்பேட்டில்
ஏறியது என்பது நானே தவிர, கட்டாயப்படுத்த முடியாது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, சம்பந்தப்பட்ட அமைச்சர் திரு. ஆர்.எம்.வீ. அவர்கள்
இங்கே இருக்கிருர்கள். தமிழ்நாடு பரிசுச் சீட்டு இரண்டு
சீட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு சீட்டுகளிலும்
ஒரே நம்பர் இருக்கிறது. அதை நான் ஆதாரத்தோடு வைத்
திருக்கிறேன். 50,000 ரூபாய் முதல் பரிசு உள்ள சிபி 960715
என்ற சீட்டு. அதேபோல இன்னொரு சீட்டு சிபி 960715 என்று
இருக்கிறது. இந்தச் சீட்டுகள் தங்கம் வெங்கய்யா செட்டி,

குன்னூர் என்பவருடையது. இதை விற்ற ஏஜண்ட் ஆர். கிருஷ்ணன், குன்னூர் துணைக் கருவூலம், நம்பர் 40/76 என்பவரிடமிருந்து வாங்கப்பட்டிருக்கிறது. இதில் தெளிவாக ஊழல் நடைபெற்றிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் எழுத்து மூலமாகக் கொடுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : நான் அமைச்சரிடம் கொடுத்து விடுகிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக சென்னை மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைக் கட்டண கூப்பன்களில் தொடர் எண்ணிக்கை இல்லாமலே விநியோகித்திருக்கிருர்கள். சில கூப்பன்களிலே தொடர் எண்ணிக்கை இருக்கிறது, சில கூப்பன்களில் தொடர் எண்ணிக்கை இல்லாமலிருக்கிறது. தொடர் எண்ணிக்கை இல்லாமலேயே கூப்பன்கள் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. இது அதிகாரிகள் செய்ததா? அல்லது தனிப்பட்டவர்கள் செய்து விநியோகித்தார்களா ? இதற்கு எப்படிக் கணககு வைத்திருக்கிருர்கள்? எந்தத் தொடர் எண்ணிலேயிலிருந்து எந்தத் தொடர் எண்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கானுக்குச் சொன்னதைப் போல் தாங்களும் அமைச்சருக்குத் தாருங்கள். அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. கே. பண்ணை சேதுராம் : பாய்ன்ட் ஆஃப் ஆர்டர் ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்தப் பிரச்னை என்பதை ஒவ்வொன்ருகக் கேட்கிறேன். உங்களுக்கும் வாய்ப்புத் தருகிறேன். எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. எல்லோருமே கேட்டாலும் நான் தரத் தயார்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, நான் கொடுத்திருந்த கவன ஈர்ப்புத் தீர்மானங்களில் வந்தது போக வராதவைகளில் ஒன்றிரண்டை கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். துறையூரிலே இருக்கக்கூடிய கர் அண்ட் சுகர் பாக்டரியி'லே..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதி மறுக்கப்பட்ட ஒன்றும் இல்லை ; ஆனல், இன்னும் பதில் கிடைக்கவில்லையென்பதை மட்டும் . . . .

திரு. க. சுப்பு : ஆமாம். துறையூரிலே 'கர் அண்ட் சுகர் இன்டஸ்ட்ரீஸ்' என்ற பெயரிலே 'ஃபாக்டரி' இருக்கிறது. 3 தாலூகாக்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு, அந்த ஃபாக்டரி

யால் பணம் கொடுக்கப்படாத நிலைமையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். விவரத்தை இப்பொழுது விவாதத்திற்கு எடுக்காவிட்டால் வேலை முடிந்தால் சரி என்று சொல்கிறேன்.

அடுத்தது, இன்னொன்று. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தொகுதியான அருப்புக்கோட்டையில் பஸ் மறியலில் ஈடுபட்டு, அதனால் பஸ்கள் காரியாப்பட்டியைச் சுற்றிப் போய்க் கொண்டிருக்கின்றன. பஸ் விட வேண்டுமென்ற கோரிக்கை இருந்து கொண்டே இருக்கிறது. இன்னும் பள்ளிக்கூடங்களுக்குக் கூடச் செல்ல முடியவில்லை. அன்றைய தினம் போக்குவரத்துத் துறை அமைச்சர் சொன்னபோது, பஸ் விட்டுவிட்டு பதில் சொல்கிறேன் என்று சொன்னார். இப்பொழுது பஸ் விடவில்லையா? அல்லது பதில் இல்லையா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரிசர்வ் பாங்க் முன்னால் நடைபெற்ற நிகழ்ச்சி பற்றிய பிரச்னையிலே உங்கள் பெயர் இருக்கிறது.

திரு. கே. கந்தசாமி : அருப்புக்கோட்டை தொகுதியைச் சேர்ந்ததால் சொல்கிறேன். காரியாப்பட்டிக்கு மினி பஸ் வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. மறியலிலே ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அங்கே மோசமான நிலைமையிருக்கிறது. ரூல் 42-ன் கீழ் அறிவிப்புக் கொடுத்திருந்தேன். அமைச்சரவர்கள் பதில் சொல்லத் தயாராக இருக்கிறார் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதனை 'டிசலவ்' பண்ணி, உங்களுக்குப் பதில் அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் : சட்டசபையில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் இங்கே குறிப்பேடுகளில் பதியப்படுகின்றன. அப்படி பதியப்படுகிற செய்திகள் மட்டும் பத்திரிகைகளில் வெளி வருகின்றன. அப்படி வெளிவருகிற செய்திகள்தான் அவை உரிமை மீறல் இல்லாமல் வருகின்றன. அந்தச் செய்திகளை அவை மறைத்தும், திரித்தும், கூட்டியும், குறைத்தும் வெட்டியும், ஒட்டியும் வெளியிட்டால், அது அவை உரிமையை மீறிய செயலாகும். ஆனால், இங்கே சபையிலே, பதிவேட்டிலே ஏறாத செய்திகள் எல்லாம் பத்திரிகைகளிலே வெளி வருகின்றன. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் வழக்குரைஞர். எந்த விதியின் கீழ் அதைக் கொடுத்தீர்கள் என்னிடம் ? தாங்கள் என் கையிலே எழுத்து மூலமாகக் கொடுத்தது உண்டா? தயவு செய்து உட்காருங்கள்.

திரு. துரை முத்துசாமி : நேற்றைய தினம் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் ரூ. 15 பஸ் பாஸ் கேட்டு கிளர்ச்சி செய்த தன் விளைவாக, மாணவர்கள் மீது கண்ணீர் புகை வீசப்பட்டது. அது பற்றி 42-வது விதியின்கீழ் நான் கொடுத்துள்ள தீர்மானத்தை எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. து. இராசரத்தினம் : தலைவரவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் எழுந்திருப்பதற்கு முன்னாலே நான் சொல்லிவிடுகிறேன். தாங்கள் கொடுத்திருக்கிற உரிமை மீறல் பிரச்னையை நான் நேற்றைக்கே தள்ளுபடி செய்து விட்டேன். பிறகு திருப்பித் திருப்பி விதிகளைப் பார்த்த பொழுது வெளியிலே நடந்திருக்கிற ஒரு பிரச்னையை, நிர்வாக நடவடிக்கைகளை, உரிமை மீறலாக இங்கே கொண்டு வந்து பேசுவது என்பது அனுமதிக்க முடியாத ஒன்று என்பது தெரிகிறது. ஆகவே, உங்களுடைய பிரச்னை பத்திரிகை வாயிலாகவும் வந்திருக்கிறது. இங்கேயும் எதிர்க்கட்சித் தலைவர் விளக்கமாகப் பேசியிருக்கிறார். ஆகவே, அந்த அளவு பதிவேட்டிலே ஏறிய பின்னால் மறுபடியும் உரிமை மீறல் என்று கொண்டு வருவது விதிகளின் படி சரியல்ல என்பதால் உங்களைப் பேச அனுமதிக்கவில்லை.

[முற்பகல் 10.30.]

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இந்த உரிமை மீறல் பிரச்சினை குறித்து எனக்கு இப்போதுதான் ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. அதிலே

சட்டமன்றப் பேரவை விதி 184-ன்கீழ் அளித்துள்ள உரிமைப் பிரச்சினை.

''சட்டமன்றப் பேரவை விதி 184-ன்கீழ் தாங்கள் அளித்துள்ள உரிமைப் பிரச்சினையில் குறிப்பிட்டுள்ள பொருள்பற்றி திரு. டி. இராஜரத்தினம் அவர்கள் பேரவை அலுவல்களில் பங்கு கொண்டு பேசவில்லை. மேலும் இது பற்றிப் பேசிய உறுப்பினர்கள் திரு. டி. இராஜரத்தினம் அவர்கள் தகவல் கொடுத்துப் பேசியதாகவும் கூறவில்லை. மேலும், உறுப்பினர் வீட்டில் காவல் துறையினர் ஏதேனும் புலன் விசாரணைக்காக சோதனை போடக் கூடாது என்று எவ்வித உரிமையும் விதியும் கிடையாது என்ற காரணங்களுக்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தாங்கள் அப்பொருள் குறித்துப் பேரவையில் எழுப்புவதற்கு அனுமதியளிக்க மறுத்து உள்ளார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையிலே நான் கொடுத்த நோட்டீசிலே அவர்கள் பேசினார்கள் என்று சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுப்பு அவர்கள் ஒரு வழக்கறிஞர். நீண்ட காலமாக இங்கே இருக்கிறார்கள். தம் கருத்தை பதிவேட்டிலே ஏற்றுவதிலே நன்றாக முயற்சி செய்து முடித்து விட்டார்கள். அத்தோடு விட்டுவிடுங்கள். உட்காருங்கள்.

திரு. து. இராசரத்தினம் : தலைவர் அவர்களே..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் பிரச்னையை திரு. சுப்பு பேசிவிட்டார். உட்காருங்கள். உங்கள் சார்பில் அவர் பேசியாகிவிட்டது.

திரு. து. இராசரத்தினம் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசியதை அனைத்தையும் நீக்க வேண்டி இருக்கும், விதிகளுக்குப் புறம்பாக இருந்தால்....

திரு. து. இராசரத்தினம் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து திரு. இராசரத்தினம் பேசியதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் சிறைச்சாலையில் நம்பியார் என்ற கைதி............

திரு. து. இராசரத்தினம் : தலைவர் அவர்களே..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு சொல்லிவிட்டார். அவைக்குறிப்பில் ஏறிவிட்டது.

திரு. ரா. மார்க்கபந்து : நான் மூன்று நாட்களுக்கு முன்பாக சேலம் சிறைச்சாலையில்........

திரு. து. இராசரத்தினம் : இது என் சொந்தப் பிரச்சினை?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொந்தப் பிரச்சினைகளைப் பேசுவதற்கு அவைத் தலைவர் அனுமதித்தால்தான்.

திரு. து. இராசரத்தினம் : அதைத்தான் கேட்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிகளில் இடம் இல்லை.

திரு. து. இராசரத்தினம் : தன்னிலை விளக்கம்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தன்னிலை விளக்கம் என்பது இந்த அவையில் உங்களைப்பற்றி இன்னொருவர் தவறாகப் பேசியிருந்தால்தான் தன்னிலை விளக்கம் தரலாம். அல்லது தாங்கள் பேசிய பேச்சுக்குத் திருத்தம் கூறினால் அதற்குத் தன்னிலை விளக்கம் தரலாம். ஆனால் வெளியே இருக்கிற பிரச்னைக்கு இங்கே அனுமதி கொடுக்க விதிகளிலே இடம் இல்லை. ஆகவே தயவு செய்து அமருங்கள்.

திரு. து. இராசரத்தினம் : பாயின்ட் ஆப் ஆர்டர், 9-ந் தேதி எங்கள் கட்சித் தலைவர் அவர்கள்...................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து நான் சொல்வதை ஏற்றுக் கொள்ளுங்கள். விதிகளிலே இல்லாத ஒன்றை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதும், திரு. சுப்பு அவர்கள் சொன்னதும் பதிவேட்டிலே இருக்கிறது.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே,

திரு. து. இராசரத்தினம் : பாதுகாப்புத் தேவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உங்களுக்குப் பாதுகாப்பு தேவை என்பதை அரசுக்கு அனுப்புங்கள். இங்கே எந்த விதியின் கீழும் உங்களை நான் அனுமதிக்க முடியாது.

திரு. து. இராசரத்தினம் : பாதுகாப்பு கொடுக்க முடியாது என்ற காரணத்திற்காகத்தான் தலைவர் எழுப்பியதற்கு, அவர்களுடைய குடும்பத்திற்குப் பாதுகாப்பு தர வேண்டும் என்ற காரணத்திற்காக........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் பேசிவிட்டார்.

திரு. ரா. மார்க்கபந்து : 3 நாட்களுக்கு முன்பாக சேலம் சிறைச்சாலையில் நம்பியார் என்ற கைதி..........

திரு. து. இராசரத்தினம் : இது என்னுடைய பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து தாங்கள் சட்டமன்ற உறுப்பினர். இப்படிப்பட்டவைகளைப் பேசுவதற்கு விதிகளில் இடமில்லை. பேசக் கூடாது. உட்காருங்கள்.

திரு. து. இராசரத்தினம் : பாதிக்கப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த விதிகளின்கீழ் நான் அனுமதிப்பது? விதி கிடையாது.

திரு. து. இராசரத்தினம் : எங்கள் தலைவர் பேசியதை ஒட்டி......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து இராசரத்தினம் அவர்கள் ஒத்துழைக்க வேண்டும். விதிகளுக்கு உட்பட்டுத்தான் நான் செயல்பட முடியும். எந்த விதிகளின் கீழ் நீங்கள் பேசமுடியும்?

திரு. து. இராசரத்தினம் : ஏற்கனவே அவையில் பேசிய பேச்சை ஒட்டித்தான் சோதனை செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியிலே எது நடந்தாலும் எழுத்து மூலமாகத் தர வேண்டும். திரு. மார்க்கபந்து அவர்கள்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, 3 நாட்களுக்கு முன்பாக....

(திரு. என். கிட்டப்பா எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராஜரத்தினம் அவர்கள் பாதிக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் அவர்களுடைய நிலைமையை இங்கே விளக்க முற்படுகிறார்கள். நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து அவர்களை ஒரு இரண்டு நிமிட நேரம் அனுமதித்தால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் திரு. ராஜரத்தினம் அவர்களைப் பேச விடக்கூடாது என்பது அல்ல. உங்களைவிட நீண்டகாலமாக அவர் எனக்கு நெருங்கிய நண்பர். எனக்கு இந்த அவைத் தலைவர் என்ற முறையில் கடைமைகள் இருக்கின்றன. இந்த அவையை நடத்துவதற்கு விதிகளை உண்டாக்கி எனக்குத் தந்து இருக்கிற காரணத்தால் அவைகளை ஒட்டித் தான் நான் நடக்க முடியும். அதோடு இந்த அவையில் அவருக்கு ஆபத்து உண்டாக்கப்பட்டிருந்தால், அவமானம் ஏற்படுத்தப்பட்டு இருந்தால் அல்லது அவர் பேசிய பேச்சை மற்றவர்கள் குறுக்கிட்டு கேலி பேசியிருந்தால், அது குறித்து நடவடிக்கை எடுக்கலாம். வெளியே நடந்திருக்கும் சம்பவத்தைக் குறித்து இந்த அவையில் எழுப்புவது முறையல்ல. எந்த விதியின்கீழ் அவரை அனுமதிக்கச் சொல்கிறீர்கள் என்று சொல்லுங்கள்.

திரு. து. இராஜரத்தினம் : தலைவரவர்களே, ஏற்கனவே எங்கள் தலைவர் இங்கே என்னுடையகுடும்பத்திற்குப் பாதுகாப்பு தரவேண்டுமென்று கேட்டு இருக்கிறார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். தயவு செய்து பேசி நேரத்தை வீணாக்காதீர்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, எங்களுடைய கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த அவையில் பேசியதை ஒட்டியே அந்த நிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெற்று இருக்கின்றன. எனவே பாதிக்கப்பட்டது நமது அவை உறுப்பினர், வெளியே பாதிக்கப்பட்டாலும், உள்ளே பாதிக்கப்பட்டாலும் நமது அவை உறுப்பினர். நம்மைச் சேர்ந்த ஒருவர் என்ற அடிப்படையிலும், தங்களுக்கு நெருங்கிய நண்பர் என்ற அளவிலும்... ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கிட்டப்பா அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். சட்ட விதிகளின் படி சட்டமன்ற உறுப்பினர் பேரவைத் தலைவரின் ஆளுகைக்கு உட்பட்ட இடத்தில் பாதிக்கப்பட்டிருந்தால் சொல்லுங்கள், நடவடிக்கை எடுக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் அவையிலோ, அல்லது விடுதியிலோ பாதிக்கப்பட்டு இருந்தால், அவருக்கு எல்லா விதமான பாதுகாப்பும் கொடுக்க வேண்டியது என்னுடைய கடமை. ஆனால், சட்டமன்ற உறுப்பினர்மீது வெளியே காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கின்றனர் என்றால் எந்த வகையில் நான் அதைத் தடுத்து நிறுத்த முடியும்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, மன்னிக்க வேண்டும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஏரோடிரோமிலே அடிக்கப்பட்டார் என்பதற்காக நாடாளுமன்றத்தில் பிரிவிலேஜ் மோஷன் எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை முருகன், உங்களுக்கு உடம்பு சரியில்லை, உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : ஆகவே, அவர் சட்டமன்றத்திற்கு புறப்பட்டு வருகிற வழியெல்லாம் பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது உங்கள் பொறுப்பாகிறது. சென்னை விமான நிலையத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் தாக்கப்பட்டார் என்றபோது, ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள பாராளுமன்றத்தில் பிரச்சினை எழுப்பப்பட்டு இருக்கிறது. இங்கே உறுப்பினர் ராஜரத்தினம் சட்டமன்றத்திற்குப் புறப்படுகிறபோது போலீஸ்காரர்கள் நுழைந்து வீட்டிலே அட்டகாசம் செய்திருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் அவருக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எத்தனை மணிக்குச் சோதனை நடைபெற்றது என்று தெரியுமா? இரவு 12 மணிக்கு சட்டமன்றத்திற்கு வருகிறாரா ?

[1978 செப்டம்பர் 14

திரு. துரை முருகன் : சட்டமன்றத்திற்கு வருவதற்காக அவர் படித்துக்கொண்டு இருந்து இருப்பார் என்று நினைக்கிறேன். இது ஒரு அவசரமான அவசியமான பிரச்னை. மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நிதி அமைச்சர் தாக்கப்பட்டார் என்பதற் காக டெல்லி பாராளுமன்றத்தில் பிரிவிலேஜ் மோஷன் எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறபோது, இங்கே திரு. ராஜரத்தினம் அவர்களுக்கு தாங்கள் பாதுகாப்பு கொடுக்கக கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வேகமாக வக்கா லத்து வாங்க வேண்டாம். திரு. ராஜரத்தினம் அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று எனக்கும் தெரியும். ஆனால் அவர் இங்கே அதைச் சொல்வதற்கு விதிகள் இல்லை. அவருடைய நிலைமைகள் எனக்குத் தெரியும். நானும் அதை, உணர்கிறேன். ஆனால் இங்கே மற்றொரு உறுப்பினர் எந்த விதியின் கீழ் அதை அனுமதித்தீர்கள் என்று கேட்டால், அல்லது அவருக்கும் அந்த வாய்ப்புத் தரப்பட வேண்டும் என்று கேட்டால் நான் எப்படி இந்த அவையை நடத்துவது? இந்த அவையின் மரபைக் காப்பாற்றுவது ? ஆகவே, என்னுடைய நிலை மையை உணர்ந்து உறுப்பினர்கள் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. து. இராசரத்தினம் : தலைவரவர்களே, மன்னிக்க வேண்டும். விதி 42-ன் கீழ் தீர்மானம் கொடுத்தவர்கள் பெயர் சொல்லியிருக்கிறீர்கள். நான் கொடுத்தது ஏன் எடுத்துக் கொள்ளப்படவில்லை ? விதி 184-ன் கீழும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தள்ளப்பட்டு இருக்கும். அது குறித்து தங்களுக்கு தகவலும் அனுப்பப்பட்டு இருக்கும். தள்ளப்பட்டதை அனுமதிக்க இயலாது.

திரு. து. இராசரத்தினம் : எனக்குத் தகவல் எதுவும் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி என் அறை யில் வந்து கேளுங்கள்.

[முற்பகல் 10-40]

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, என்னை நீங்கள் பல முறை அழைத்துவிட்டீர்கள். ஆனால் நான் பேச முடியாத அளவுக்குப் பல உறுப்பினர்கள் குறுக்கிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இப்படி இருந்தால்......

1978 செப்டம்பர் 14]

திரு. து. இராசரத்தினம் : தலைவரவர்களே, 3 நாட்களுக்கு முன்னாலே இங்கே இந்தப் பிரச்னை வந்திருக்கிறது. அதைப் பற்றி.....

(திரு. ரா. மார்க்கபந்து எழுந்தார்)

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, எனக்கு விதிகளைப் பற்றி அதிகமாகத் தெரியாது. நான் தங்களைக் கேட்டுக் கொள்வது, எங்கள் கட்சி உறுப்பினர் பாதிக்கப்பட்டிருக்கிறார். பாதிக்கப்பட்டவர் இங்கே சில விவரங்களைக் குறிப்பிட விரும்புகிறார். ஆனால், தாங்கள் அறையிலே வந்து பேசுங்கள் என்று சொல்கிறீர்கள். அது முறையல்ல என்பது என்னுடைய கருத்து. அவர்களுடைய அறையிலே பேசியது இன்றைக்கு அம்பலத்திற்கு வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை அனுமதிக்குமானால் டி. ஆர். ஆர். பிரச்சனையை இன்றைக்கெல்லாம் எடுத்துக்கெண்டால் கூட நான் சந்தோஷப்படுகிறவன்தான். அதில் சந்தேகம் இல்லை. (குறுக்கீடு) திரு. துரை முருகன், நான் உங்களை நம்ப முடியாது. நாளை இதையே சொல்லி, தங்களை அனுமதிக்க வேண்டுமென்று கேட்பீர்கள். தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள். இந்தப் பிரச்சனை ஏற்கனவே பத்திரிகையில் வந்துவிட்டது. எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசியாகிவிட்டது; திரு. சுப்பு அவர்கள் கூட எழுப்பியிருக்கிறார்கள். அதனால் நிச்சயம் அவர்களுக்குப் பாதுகாப்பு தருவார்கள்.

திரு. துரை முருகன் : நான் தங்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். ஒரு குற்றச்சாட்டை இங்கே சொல்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பின்னாலும்.......

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, தாங்கள் 15 தடவைக்கு மேல் என்னைப் பேச அழைத்துவிட்டீர்கள். நானும் எழுந்து எழுந்து உட்கார்ந்து கொண்டு இருக்கிறேன். தயவு செய்து என்னைத் தொடர்ந்து பேச அனுமதியுங்கள். (குறுக்கீடு) சேலம் சிறையிலே உண்ணாவிரதம் இருந்து சாகக் கூடிய நிலைமையிலே ஒருவர் இருக்கிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து எல்லோரும் உட்காருங்கள். இந்த அவையை ஒழுங்காக நடத்த அனுமதியுங்கள். எல்லோரும் ஒத்துழையுங்கள் இதுபற்றிப் பேச அனுமதியில்லை. நான் தீர்ப்பு சொல்லிவிட்டேன்,

[1978 செப்டம்பர் 14

திரு. ரா. மார்க்கபந்து : உண்ணாவிரதம் மேற்கொண்டு 6, 7 நாட்கள் ஆகிவிட்டது. அவர் இறந்து போகக் கூடிய நிலையில் இருக்கிறார். அதற்குக் காரணம் அவர் பரோல் வேண்டுமென்று கேட்டதற்குக் கொடுக்க வில்லை. சாகும் நிலையிலிருக்கும் அவருக்கு அங்கு வைத்திய வசதியும் சரியாகக் கிடைக்கவில்லை. இப்போது மருத்துவ மனையில் சாகும் நிலையில் இருக்கிறார். (குறுக்கீடுகள்) அந்தப் பிரச்சினை பற்றி நான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத் திருக்கிறேன். அதுபற்றி இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இப்போது என் கருத் தைச் சொல்வதற்கு தாங்கள் தயவு செய்து அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். உங்கள் உடல் நிலையும் சரியில்லை. நான் தீர்ப்புச் சொல்லிவிட் டேன். அதன் பிறகு அனுமதி கேட்டால் எப்படி?

(திருவாளர்கள் ரா. மார்க்கபந்து, து. இராசரத்தினம், மு. அரங்கநாதன், இரெ. இராசமாணிக்கம் ஆகியோர் எழுந்தார் கள்.)

எல்லோரும் உட்காருங்கள். உங்களுக்கு எல்லாம் தெரியும். டி. ஆர். ஆர். தாங்கள் பிடிவாதம் காட்ட வேண்டாம். நான் அனுமதிக்க முடியாது. என்னுடைய தீர்ப்பை நான் சொல்லி விட்டேன். அதற்குப் பின்னும் இப்படி அடிக்கடி பலரும் குறுக்கிட்டால் நான் என்ன செய்ய முடியும்? அவையை சரியாக நடத்திச் செல்ல எல்லோரும் ஒத்துழைப்புத் தாருங்கள். (குறுக் கீடு) அரங்கநாதன், நீங்கள் உட்கார்ந்து விட்டீர்கள். அதன்பின் உட்கார்ந்து இப்படிப் பேசினால் என்ன அர்த்தம்?

திரு. மு. அரங்கநாதன்: நாங்கள் பேசினால் மட்டும் இப்படிப் பேசலாமா என்று கேட்கிறீர்கள். ஆனால், ஆளும் கட்சியிலிருந்து பேசிக் கொண்டிருக்கிறவர்களை நீங்கள் ஒன்றும் சொல்வது கிடை யாது. ஒரு ஆளும் கட்சி உறுப்பினர் எங்களைப் பார்த்து பொறுப் பற்ற முறையில் நடந்து கொள்கிறார்கள் என்று சொல்கிறார். அதையும் நீங்கள் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய காதில் விழ வில்லை. எனக்குக் கேட்காத ஒரு வார்த்தையை தாங்கள் சொல் கிறீர்கள். கேட்காத வார்த்தைக்கு நான் என்ன செய்ய முடியும்?

திரு. ரா. மார்க்கபந்து: நான் ஏற்கனவே கவன ஈர்ப்புத் தீர் மானம் தந்திருக்கிறேன். நீங்கள் நான் கேட்டதற்கு இன்னும் பதில் சொல்லவில்லை. ஆனால் நான் ஒன்றை மட்டும் குறிப்பிட

விரும்புகிறேன். இங்கே இருக்கிறவர்கள் என்ன வேண்டுமானா லும் பேசலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு தாங்கள் அனுமதிக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மார்க்கபந்து, நாங்கள் பிரச்சினைக்கு வாருங்கள். (பலர் எழுந்தார்கள் — குறுக்கீடுகள் — தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, ஒரு விவகாரம் சட்டமன்றத்திற்கு வருகிறது. நான் ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள்; அப்படிச் சொன்னதற்குப் பிறகு அதற்குப் பிறகு அரசாங்கம், நான் இந்த அரசைச் சொல்லவில்லை, ஒரு அரசு அந்தக் காரியத்திலே வேறு வகையிலே அதாவது என்னைப் பழி வாங்குகின்ற முறை யிலே வீட்டிற்குப் போலீஸை அனுப்பி பெண்டு பிள்ளைகளைத் தொந்திரவு செய்வது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் தயவு செய்து உட்காருங்கள். அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு சட்டமன்ற மேலவையில் (குறுக்கீடு) திரு. துரை முருகன் அவர்களே, தாங்கள் உட்காருங்கள். இது சட்டமன்றம், தயவு செய்து தாங்கள் உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, எங்கள் கட்சி உறுப்பினர் ஒருவர் பாதிக்கப்பட்டிருக்கிறார். எப்படி அமைச்சர் ஒருவர் பாதிக்கப்பட்டால் அது அமைச்சர்கள் அத்தனை பேருக்கும் கூட்டுப் பொறுப்போ அதுபோல் இது எங்களுடைய கூட்டுப் பொறுப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், மற்ற கட்சிக்காரர்களுக்கும் நேரம் தர வேண்டாமா? நீங்கள் உட்காருங்கள், உங்கள் கட்சியிலேயே அதிக நேரம் எடுத்துக் கொண்டு பேசிக் கொண்டிருந்தால் எப்படி? இனிமேல் அவ்வளவுதான் நேரம், நீங்கள் உட்காருங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, தாங்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தலைவராக இருக்கின்றீர்கள். நாங்கள் எல்லோரும் உறுப் பினர்கள். ஆகவே, எங்களுக்கு தமிழகத்திலே எங்கே எந்த விதமான ஆபத்து ஏற்பட்டாலும் பாதுகாப்புத் தர வேண்டியது தங்களுடைய பொறுப்பு. ஆகவே, அதற்கான முறையில் விதிகளைத் திருத்த வேண்டுமே தவிர வேறு ஒன்றும் இல்லை. அவ்வாறு பாதுகாப்புத் தரவேண்டியது தங்களுடைய கடமை. அடுத்து, நான் விதி 44-ன் கீழ் ஒன்று கொடுத் திருந்தேன்........

4 அறிவிப்புகள்.

அரசினர் சட்ட முன்வடிவுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்ட முன் வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப்பெற்றுள்ளன என்று மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது—

(1) தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்தம்-தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 27/1978) ;

(2) 1978-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (மூன்றுவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 28/1978) ;

(3) 1978-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 29/1978).

(ஈ) (மதுரை) காமராஜ் பல்கலைக் கழக பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றவர்கள் குறித்து.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் காமராஜ் பல்கலைக் கழகப் பேரவைக்குத் ((Kamaraj University Senate) தேர்ந்தெடுக்கப்பெற்ற நான்கு உறுப்பினர்களின் பதவிக் காலம் 30—10—1978-ல் முடிவடைவதால் ஏற்படும் நான்கு வெற்றிடங்களுக்கு, கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்கள் முறையாக நியமனம் செய்யப் பெற்றுள்ளனர் :—

1. திரு. சோ. பாலகிருஷ்ணன்
2. திரு. வி. எம். சுப்பிரமணியம்
3. திரு. ந. தனசேகரன்
4. திரு. அ. ரகுமான்கான்

முறைப்படி நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளர் களின் எண்ணிக்கையும், நிரப்பப் படவேண்டிய வெற்றிடங் களின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால், மேற்கண்ட நால்வரும் காமராஜ் பல்கலைக் கழகப் பேரவைக்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் அறிவிக்கிறேன்.

[முற்பகல் 10.50]

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(அ) 41, 42 184 ஆகிய விதிகளின் கீழ் உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, (பல உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்).

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, திரு. இராசரத்தினம் அவர்களுக்கு ஏற்பட்ட சோதனைக்கு நிச்சயமாக இந்த அவை கவலைகொள்கிறது, அதுகுறித்து சபாநாயகர் அவர்கள் நிச்சயமாகக் கவனிப்பார்கள். .. ..

திரு. துரை முருகன் : பைனன்ஸ் மினிஸ்டருக்கு இருக் கிறது, முதல் அமைச்சருக்கு இல்லையே (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் என்னைப் பாராட்டியதோடு அமைந்திருப்பார்களேயானால் என் சார்பில் இருக்கிற கழக நண்பர்கள் வருத்தப்பட்டிருக்க மாட்டார்கள். ஆனால் எங்கள் எல்லோரையும் விட அதிகக் கவலைப்படுபவர்கள் முதல் அமைச்சர் அவர்கள் என்பதை இந்த அவையில் நான் அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, தயவு செய்து உள்நோக்கம் கற்பிக்கக்கூடாது. விஷயம் தெரிந்த திரு துரை முருகன் அவர்களைப் போன்றவர்கள் அவர்களுடைய கட்சியில் இருக்கிற சிலபேர்களைப் போல், அவர்களைப் பின் பற்றுமல் தனக்கு என்று ஒரு தனித்தன்மையோடு நீண்ட நாட்களாக (திரு. க. சுப்பு எழுந்தார்)— திரு. துரை முருகனுக்கு இந்தப் பாராட்டை நான் கொடுக்கக் கூடாதா ? (கூச்சல்—குழப்பம்.)

5, அரசினர் தீர்மானம்.

(அ) விதி 41 (3)ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, ''தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடைமுறை விதி 41(3)-ன் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களைக் கவன ஈர்ப்புக்குக் கொண்டு வரக்கூடாது என்ற விதியைத் தளர்த்த வேண்டும்'' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

[1978 செப்டம்பர் 14

6. கவன ஈர்ப்புகள்.

(அ) உளுந்தூர்ப்பேட்டை மயிலாடும் தாங்கல் கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று பேரவையின் 41-ஆவது விதியின்கீழ் ஒன்பது கவன ஈர்ப்புத் தீர்மானங் களுக்கான அறிக்கைகள் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் மேசைமீதும் பேரவைத்துறை நூலகத்திலும் வைக்கப்பட் டுள்ளன. பத்திரிகைகளுக்கும் அவை அளிக்கப்படும். எனவே அந்த அறிக்கைகளைப் படித்ததாக அவை ஏற்றுக் கொள்ளும் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தேவை என்று கருதினால் ஒரு விளக்கம் கேட்கலாம்.

திரு. வ. துலுக்காணம் : தலைவரவர்களே, “ உளுந்தூர் பேட்டை வட்டம், மயிலாடும்தாங்கல் என்ற கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்தால் 1 இலட்சத்திற்கு மேல் நட்டம் ஏற்பட் டதை விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்க’’ என்ற அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, உளுந்தூர்பேட்டை தாலுகாவில் உள்ள மயிலாடும்தாங்கல் என்ற கிராமத்தில் 29—8—1978 காலை 3.30-க்கு தீ விபத்து ஏற்பட்டு ஆதி இந்துக்களின் 45 வீடுகள் தீயினால் எரிந்து விட்டன. இத் தீ விபத்தில் உயிர்ச்சேதம் ஒன்றுமில்லை. இரண்டு ஆடுகள் மட்டும் மேற்படி தீயில் எரிந்து சாம்பலாகிவிட்டன எனக் கூறப்படுகிறது. இத் தீ விபத்து தகவல் கிராம அதிகாரி மூலம் கிடைத்த உடனேயே உளுந்தூர்ப்பேட்டை தாசில்தார், அவர்கள் அக்கிராமத்திற்கு விரைந்து சென்றார். அதற்குள் திருக்கோயிலூரிலிருந்து அழைக்கப்பட்ட தீயணைப்புப் படை யினர் தீயை அணைத்துவிட்டனர். தாசில்தார் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உணவருந்த எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். தாராள குணம் படைத்த தனியார் ஒருவர் நன்கொடை அளித்த 120 லிட்டர் அரிசி பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் வழங்கப்பட்டது. இத் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட பொருட் சேதம் சுமார் ரூ. 38,000 ஆகக் கணக்கிடப்பட்டுள்ளது. இத் தீ விபத்து இயற்கையாக ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இதில் ஏதோ சதி இருப்பதாகக் கருதப்பட்டு திருக்கோயிலூர் காவல் நிலையத்தில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு, அது விசாரணையில் இருந்து வருகிறது. பாதிக்கப்பட்ட 45 பேர் களுக்கு தலா ரூ. 100 வீதம் நிவாரணம் அளிக்க ரூ. 4,500 வழங்க அரசுக்கு ஒரு செயற்குறிப்பு மாவட்ட ஆட்சியாளரிட மிருந்து 12—9—1978 அன்று கிடைக்கப்பெற்று, அதனை அனுமதிக்கும் அரசு ஆணையும் அன்று வெளியிடப்பட்டது.

1978 செப்டம்பர் 14]

(ஆ) அருள்மிகு மாகாணநாத சுவாமி ஆலய பகுதியிலுள்ள அரிசன மக்களிடம் வசூல் கெடுபிடி:

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, “ தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டம் அருள்மிகு மாகாணநாத சுவாமி ஆலயம் பகுதியில் குடியிருந்து வரும் தாழ்த்தப்பட்ட மக்களிடம் கெடுபிடியாக பகுதி வசூலிப்பது’’ என்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், கோயில் திரு மாகாணம் கிராமம் அருள்மிகு மாகாணநாத சுவாமி ஆலயம் அறநிலைய ஆட்சித்துறைக்குட்பட்ட ஆலயமாகும். இவ் வாலயம் இரண்டாம் நிலை செயல் அலுவலரால் நிர்வகிக்கப் பட்டு வருகிறது. இதன் ஆண்டு வருமானம் ரூ. 97,052 ஆகும்.

2. மேற்படி ஆலயத்திற்குச் சர்வே எண். 179/4 பி-ல் 57 செண்டு புஞ்சை நிலம் சொந்தமாக இருந்து வந்தது. மேற்படி 57 செண்டு புஞ்சை நிலத்தில் 1971-ஆம் ஆண்டு குடி யிருப்புச் சட்டத்தின் அடிப்படையில் 48 செண்டு நிலத்தை 13 நபர்களுக்கு குடியிருப்புப் பட்டா வழங்கப்பட்டு, தமிழ்நாடு அரசின் அரிசன நலத்துறையால் வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளது. மேற்படி குடியிருப்புச் சட்ட விதிகளின்படி மேற்கண்ட 48 செண்டு நிலத்திற்கு ரூ. 117.95 நஷ்ட ஈட்டுத் தொகையாக கோயிலுக்கு வழங்கப்பட்டு, மேற்படி தொகை 31—3—1973-ல் ஆலயக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

3. மேற்படி 57 செண்டு நிலத்தில் குடியிருப்புப் பட்டா வழங்கப்படுவதற்கு முன்பு மனைப் பகுதி கோயிலால் வசூலிக்கப் பட்டு வந்துள்ளது. அதன்படி 1381 பசலி முடிய உள்ள பகுதி பாக்கி ஆலயக் கணக்கில் நிலுவையாகக் காட்டப்பட்டு வருகிறது. பாக்கிக்கான விபரம் வருமாறு :—

		ரூ.
(1)	எல். கலியபெருமாள்	7.50
(2)	என். மணியன்	23.70
(3)	வி. அம்மாசி	10.34
(4)	என். சன்னாசி	3.00
(5)	முருகன் மனைவி லட்சுமி	21.34
(6)	கா. சின்னையன்	12.00

(திரு. ஆர். எம். வீரப்பன்) [1978 செப்டம்பர் 14

		ரூ.
(7)	ச. ஆறுமுகம்	19.06
(8)	சி. முருகையன்	11.18
(9)	முனியாண்டி மனைவி தயிலி	12.34
(10)	சி. கோவிந்தன்	19.00
(11)	சு. பக்கிரிசாமி	17.82
	ஆக மொத்தம்	157.28

இடம் கோயிலுக்கு தற்போது சொந்தம் எனக் கோரி
பகுதி கேட்டு வற்புறுத்தப்படவில்லை. குடியிருப்பு பட்டா
வழங்குவதற்கு முன் உள்ள மனைப் பகுதிதான் ரூ. 157.28
நிலுவை உள்ளது.

இந்த நிலுவையைத்தான் ஆலய நிர்வாகத்தினர் கேட்டு
வருகின்றனர். குடியிருப்புச் சட்டத்தின் கீழ் பட்டா
கொடுக்கப்பட்டு விட்டதால், அவர்களை ஆலயத்தினரால்
காலி செய்யும் பிரச்சினையே எழவில்லை. அவ்வாறான
நடவடிக்கை ஒன்றும் கிடையாது.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, நன்னிலம்
வட்டம், திருமாகாணத்தில், அரிசனக் குடியிருப்புகளில் இருந்து,
அவை கோவிலுக்குத் தொடர்பான நிலம் என்பதால் பகுதி பாக்
கியை வசூலித்து, தொந்தரவு படுத்தி வசூலித்து வழக்கு மன்றத்
திற்கு அலைக்கழித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி வசூலிப்
பது நிறுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்
களே, இதிலே பட்டா செய்து கொடுத்த அந்த நிலங்களுக்கு எந்த
விதமான வசூலிலும் ஈடுபடவில்லை. அதற்கு முன்னால் பாக்கி
யிருக்கிற சுமார் ரூ. 157.28 வசூலிப்பதற்கு அதிகாரிகள் முயற்சி
எடுத்துக் கொண்டிருக்கிறார்களே தவிர வேறில்லை என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) பாடப் புத்தகங்களிலிருந்து சில பகுதிகள் நீக்கப்
பெற்றுள்ளது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, இந்த ஆண்டு
பாடப் புத்தகத்திலிருந்து தேசியத் தியாகத் தலைவர்களின்
சரித்திரங்கள் நீக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை
குறித்த அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை
மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்
கொண்டுவருகிறேன்.

1978 செப்டம்பர் 14]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பத்தாண்டுப் பள்ளிப் படிப்புமுறையில் பள்ளிப் பாடத் திட்டமும் பாடங்களும் பல்வேறு பாடங்களிலும் அனைத்து வகுப்புகளிலும் மிகப்பளுவாக இருந்ததாக பல்வேறு இடங்களிலும் இருந்து அரசுக்குப் புகார்கள் வந்தன. பாடத் திட்டக் குழுக்களிலுள்ள வல்லுநர்களைக் கலந்து கொண்டு அவர்கள் பரிந்துரைக்கேற்ப 1978–79-லிருந்து அனைத்துப் பாடங்களிலும் அனைத்து வகுப்புகளிலும் பாடத் திட்டம் மற்றும் பாடநூல்களின் பளுவைக் குறைத்திட அரசு ஆணையிட்டுள்ளது. 1—10 வகுப்புகளுக்கான அனைத்து தமிழ்ப் பாட நூல்களிலும் பளுவைக் குறைப்பதற்காக சில பாடங்கள் நீக்கப்பட்டுள்ளன. அவ்வாறு நீக்கும்பொழுது எந்தெந்தப் பாடங்களை நீக்கலாம் என்று பாடத் திட்டக் குழு வல்லுநர்கள் முடிவு செய்யும்பொழுது பின்வருவன போன்ற விஷயங்களையே கருத்திற்கொண்டனர்—அதாவது (1) அந்தப் பாடங்களின் நடை கடுமையாக இருக்கிறதா என்பது (2) அவ்வாறு நீக்கக் கருதப்படும் பாடங்களில் உள்ள பொருள்களை அல்லது அதேபோன்ற பொருள்களை வேறு பாட நூல்களில் (அதே வகுப்பில் அல்லது வேறு வகுப்புகளில்) படிக்க வகை செய்யப்பட்டுள்ளதா என்பனவே அக்கோட்பாடுகள் ஆகும்.

2. மேற்கண்ட அடிப்படையிலேயே கவன ஈர்ப்பு தீர்மானத்தில் குறித்துள்ள பாடங்களும் 1978–79-ல் இருந்து நீக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, 10-ம் வகுப்பு பாட நூலின் பாடச் சுமையை குறைப்பதற்காக நீக்கப்பட்ட பாடங்களின் விவரங்கள் வருமாறு :—

செய்யுள்.

(1) சிலப்பதிகாரம் (சில அடிகள்)

(2) சீவகசிந்தாமணி (சேர்த்திருந்த பாடப் பகுதி முழுவதும்).

(3) தனிப் பாடல்கள் 7.

உரைநடை.

(1) தமிழ்நாட்டுப் பெண்பாலார் (டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் எழுதியது).

(2) மற்றுமொரு புத்தாண்டுப் பிறப்பு(திரு. ஜவகர்லால் நேரு எழுதியது)

(3) சுப்பிரமணிய சிவா (திரு. கருப்பையா எழுதியது).

(4) சுற்றுச் செலவுக் கலை (டாக்டர் தனிநாயக அடிகள் எழுதியது).

(5) மறைந்த மாநகர்-பழையாறை (திரு. நடனகாசிநாதன் எழுதியது).

(திரு. செ. அரங்கநாயகம்) [1978 செப்டம்பர் 14

3. அதே பத்தாம் வகுப்பு பாடநூலில் தேசிய விடுதலைப்
போராட்டம் பற்றிய விரிவான பாடம் ஒன்று இருப்பதைக்
கவனிக்க வேண்டும். அப் பாடத்திலேயே சுப்பிரமணிய சிவா
போன்ற பல விடுதலைப் போராட்ட வீரர்களைப் பற்றிச் சொல்லப்
பட்டுள்ளது. அப்பாட நூலில் டாக்டர் இராதாகிருஷ்ணன்
எழுதிய பாடம் ஒன்றும் இடம் பெற்றுள்ளது. செய்யுள் பகுதியில்
பாரதியார் எழுதிய "மகாத்மா நீ வாழ்க" என்னும்
பாடலும் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். வேறு வகுப்பு
களுக்கான தமிழ் மற்றும் ஆங்கில பாட நூல்களிலும், துணைப்
பாட நூல்களிலும், வரலாற்றுப் பாட நூல்களிலும் காந்தி
அடிகள், நேரு, பட்டேல் முதலிய தேசியத் தலைவர்களைப் பற்றிய
விடுதலைப் போராட்ட வீரர்கள் பலரைப் பற்றியும் பல இடங்
களில் சொல்லப்பட்டுள்ளது.

4. மேலும் பாடப் பளுவைக் குறைப்பதற்காக இவ்வாண்டு
நீக்கியுள்ள பாடப்பகுதிகளை புத்தகங்களிலிருந்து நீக்கவில்லை.
அவைகளை வகுப்பில் கற்றுத் தர வேண்டாம் என்றும், அவை
தேர்வுக்குக் கிடையாது என்றும்தான் ஆணையிடப்பட்டுள்ளது.

5. இவ்வாண்டு முதல் தமிழிலும் பிற பாடங்களிலும் பாடச்
சுமையைக் குறைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கையைப் பொது
வாக மாணவர்களும் பொது மக்களும் வரவேற்று உள்ளனரே
யல்லாமல், "கொந்தளிப்பான நிலை" எதுவும் இல்லை.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு
எட்டாவது வகுப்பில் புரட்சி வீரன் பகவத்சிங், 10-வது வகுப்பு
பாடப்புத்தகத்தில் தமிழ்நாட்டுப் பெண் பாலார் 6-வது வகுப்புப்
புத்தகத்தில் உ. வே. சாமிநாதய்யர் எழுதியது, சுப்பிரமண்ய
சிவா, வாஞ்சிநாதன் போன்ற மிகப் பெரிய போராட்ட வீரர்
களின் சரித்திரம் இவை பாடப் புத்தகங்களிலிருந்து நீக்கப்பட்டி
ருக்கிறது. அது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. மீண்டும்
அந்தப் பாடப்புத்தகங்களில் எந்தெந்தப் பகுதிகள் நீக்கப்
பட்டனவோ அந்தப்பகுதிகள் முழுவதும் சேர்த்துக் கொள்ளப்பட
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால், இந்தநாட்டினுடைய சுதந்திரப்போராட்ட வீரர்
களுக்கு களங்கம் ஏற்படுத்துகின்ற வகையில், அவர்களுடைய
வாழ்க்கைப் பகுதிகளை நீக்குவது என்பது அவர்களுடைய
வாழ்க்கை சரித்திரத்தைக் கொச்சைப்படுத்துவதாகும். ஆகவே
இதை மாற்றி மீண்டும் தமிழ்நாட்டு மாணவர்கள் இப்படிப்பட்ட
போராட்டத் தியாகிகளுடைய வீரத்தையும் தியாகத்தையும்
அறிந்து கொள்கின்ற முறையில் முழுமையாக எல்லா விவரங்களை
யும் பாடப்புத்தகத்தில் சேர்ப்பதற்கு அரசு முன்வரவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 செப்டம்பர் 14]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பாடப் புத்தகங்
களில் இருக்கின்ற பல்வேறு பகுதிகளைச் சேர்த்துப் பாடப்
புத்தகங்களை நாம் தயாரிக்கின்றோம். அதிலே பாடங்கள் அதிக
மாக இருக்கிறது என்கின்ற புகாரின் அடிப்படையில் பல்வேறு
பகுதிகளை நீக்க வேண்டும்என்ற அடிப்படையிலும், பாடப்பளுவை
குறைக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் நடவடிக்கை எடுக்
கின்ற முறையில் சில பகுதிகள் நீக்கப்பட்டிருக்கின்றன. பரீட்
சைக்கு அல்லது தேர்வுக்கு சில குறிப்பிட்ட பகுதிகள் தேவை
யில்லை என்று சொல்லப்படுகிறதே தவிர, அப்பகுதிகள் பாடப்
புத்தகங்களில் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. இப்படி
சில பகுதிகள் நீக்கப்படுகின்ற நேரத்தில் பரீட்சைக்கு தேவை
யில்லை என்று மட்டும்தான் சில பகுதிகள் நீக்கப்படுகின்றனவே
தவிர வேறு சந்தர்ப்பங்களில் போராட்ட வீரர்களின் தியாகத்
தையும் வீரத்தையும் தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு அளிக்
கப்பட்டிருக்கிறது. சில பகுதிகள் பாடப்பளுவை குறைப்பதற்
காக நீக்க வேண்டும் என்ற நிலைமை வருகின்ற நேரத்தில் சில
பகுதிகள் தேர்வுக்குத் தேவையில்லை என்று நீக்கப்படுகின்றன.
அதே நேரத்தில் ஒன்றை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.
பாடப் புத்தகங்களை தயாரிப்பதிலும், பாடப் புத்தகங்களை
மாணவர்களுக்குத் தருவதிலும் இந்த அரசு மிகவும் விழிப்புடன்
இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்
துக்கொள்கிறேன். பாடப் புத்தகங்களில் நல்ல கருத்துக்களைத்
தரவேண்டும் என்பதிலும், அவர்களுடைய வாழ்க்கைத் தியாகத்
தையும் வீரத்தின்யும் சிறப்புகளை எல்லா மாணவர்களும் தெரிந்து
கொள்ள வேண்டும் என்ற முறையில் புத்தகங்களைத் தயாரிக்க
வேண்டும் என்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறையோடு
செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்
அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பாடப் புத்தகத்தில் வைத்துவிட்டு,
பரீட்சைக்கு மாணவர்கள் படிக்க வேண்டாம் என்று நீக்கி விட்
டால், மாணவர்கள் எப்படி அவற்றைத் தெரிந்து கொள்வார்கள்?
ஆகவே, இதை மாற்றி அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே,
தேர்வுக்கு இல்லை என்றிருப்பதால், அவற்றைப் படிக்காமல்
இருக்க வேண்டும் என்று யாருக்கும் தடையில்லை.

திரு. கே. கந்தசாமி : அமைச்சர் அவர்கள் மக்களுடைய
உணர்வுகளையெல்லாம தெரிந்திருக்கிறோம் என்று சொன்னார்கள்
ஆனால், சுப்பிரமணிய சிவா போன்றவர்கள் .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் இப்போது எந்த விதியின் கீழ் கேட்கிறீர்கள்? தாங்கள் இதுபற்றி எந்தவிதமான தீர்மானமும் கொடுக்கவில்லை. அப்படியிருக்கும்போது எப்படி இப்போது எழுந்து பேசுகிறீர்கள்?

திரு. கே. கந்தசாமி: இது முக்கியமான பிரச்னை . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் இதுபற்றி தீர்மானம் கொடுத்திருக்கிறீர்களா?

திரு. கே. கந்தசாமி: கொடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியானால், தாங்கள் இதன்மீது பேசக் கூடாது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கின்ற அக்கறையைப்போல் இந்த அரசுக்கும் மிகுந்த அக்கறை இருக்கிறது. தந்தை பெரியார் அவர்களுடைய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய படத்தையும் கூட வெளியிட்டிருக்கிறோம். இப்படிப் பட்ட தலைவர்களின் சரித்திரத்தை மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கின்ற அக்கறையைப்போல் இந்த அரசுக்கும் இருக்கிறது. அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. கந்தசாமி: அதற்காகப் பாராட்டுகிறேன். நன்றி தெரிவிக்கிறேன். ஆனால் நான் சொல்ல விரும்புவது . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஏற்கெனவே சொல்லி விட்டேன், இந்தப் பிரச்னையில் நீங்கள் பேசுவதற்கு இடமில்லை. தயவு செய்து உட்காருங்கள்.

(ஈ) இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவன தொழில் தகராறு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

அடுத்து திருவாளர்கள் க. சுப்பு, ரா. உமாநாத், பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம், கே. ஞானசிகாமணி, ரா. கிருஷ்ணன், கே. பண்ணை சேதுராம் ஆகியோர்.

"சென்னை கிண்டியிலுள்ள இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனத்தில் எழுந்த தொழில் தகராறு குறித்து" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, சென்னை, இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனத்தில் மொத்தம் 1,500 தொழிலாளர்களும், 500 அலுவலகப்பணியார்களும் பணிபுரிகின்றனர். இந்நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான கூலி விகிதம் பற்றிய ஒப்பந்தம் ஒன்று 1974-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆம் தேதியில் ஏற்பட்டு அமுலில் இருந்துவந்தது.

(2) அமுலில் இருந்து வரும் இவ்வொப்பந்தத்தை இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் எம்ப்ளாயீஸ் யூனியன் ஒரு அறிவிப்பைக் கொடுத்து 1977 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 30 ஆம் நாளில் ஒரு முடிவுக்கு கொண்டு வந்தது. 1975 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11 ஆம் நாளில் அங்கீகரிக்கப்பட்ட இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் ஸ்டாப் யூனியன், தாங்கள் இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் எம்ப்ளாயீஸ் யூனியன் கையெழுத்திட்டுள்ள, மேலே குறிப்பிட்ட ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்டவர்கள் இல்லையென்றும் அதனால் தங்களுக்கு உரிய கூலி விகிதம் பற்றிப் பேசித் தீர்வு காணவேண்டும் என்றும் 1977 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 30 ஆம் நாள் அன்று தெரிவித்தனர். அதன்படி நிர்வாகம், இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் எம்ப்ளாயீஸ் யூனியன் மற்றும் இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் ஸ்டாப் யூனியனுடனும் நேரடி பேச்சு வார்த்தைகள் நடத்தின. நேரடி பேச்சு வார்த்தைகளில் ஒப்பந்தம் ஏற்படாமையினால், சென்னை, முதல் வட்டத் தொழிலாளர் துறை துணை ஆணையர் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். பேச்சு வார்த்தைகளின் விளைவாக தொழிலாளர் துறை ஆணையர் முன்பாக தொழிற் தகராறு சட்டப்பிரிவு 12 (3)-ன் கீழ் இரு தனி இடைக்கால ஒப்பந்தங்கள் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ஆம் தேதியில் ஏற்பட்டன. அவ்விரு ஒப்பந்தங்களின்படி அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி மற்றும் ஜூலை மாதத்திற்குரிய சரிசெய்யப்பட்ட பஞ்சப்படி ஆகியவைகளின் கூட்டுத்தொகையின் 10 சதவிகிதம் நிகர சம்பளம் இடைக்கால நிவாரணமாக 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி முதல் கொடுக்கப்படும் என்றும், தீர்க்கப்படாத இன்னும் நிலுவையிலுள்ள மற்ற கோரிக்கைகள் கவனிக்கப்பட்டு, பேச்சு வார்த்தைகள் நடத்தி, ஒட்டு மொத்தமாக ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்வது என்றும், யூனியன் வேலை நிறுத்த அறிக்கையை திரும்பப் பெற்றுக்கொண்டு தொழில் அமைதுகாத்து, உற்பத்தியைப் பெருக்கித் தருவது என்றும், இந்த இடைக்கால நிவாரணம் (மத்திய) அரசின் ஒப்புதலுக்கு பிறகு அளிக்கப்படும் என்றும் ஒத்துக்கொள்ளப்பட்டது.

(3) மேலே சொல்லப்பட்ட ஒப்பந்தத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கவில்லை என்றும், அதனால் இறுதி ஒப்பந்தத்திற்கு வேண்டிய பேச்சுவார்த்தைகளை நிர்வாகம் மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டதாக யூனியன்கள் தெரிவித்துள்ளன. நிர்வாகத்தின் இச்செய்கையைக் கண்டித்து 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7 ஆம் தேதி முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

செய்து வருகின்றனர். இவ்வேலை நிறுத்தத்தில் அலுவலகப் பணியாளர்கள் கலந்து கொள்ளவில்லை. சென்னை முதல் வட்ட தொழில் துறை துணை ஆணையர் நிர்வாகத்தினரையும், தொழிற் சங்கப்பிரதிநிதிகளையும் பேச்சு வார்த்தைக்கு அழைத்து சமரச முயற்சி மேற்கொண்டுள்ளார்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்துஸ்தான் டெலிபிரின்டர் தொழிலாளர்கள் பிரச்சினையில் தொழில்துறை அக்ரிமென்ட் ஒன்று போடப்பட்டிருக்கிறது. போடப்பட்ட அக்ரி மென்டை அமல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை. சட்டப்படி இதற்கு மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சட்டப்படி மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கவில்லை என்றாலும் அதை எதிர்பார்த்து மாநில அரசே இந்த அக்ரிமென்டை அமுல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்விதம் எடுக்காமல் இருப்பதன் காரணமாக 7—9—1978ல் முதல் அங்குள்ள தொழிலாளர்கள் போராட் டத்தில் இறங்கியிருக்கிறார்கள். மத்திய சர்க்காரின் ஒப்புதலை எதிர்பார்த்து, மாநில அரசே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். பி.எச்.எல். நிறுவனத்தில் கூட, இவ்விதமாக ஏற்பட்ட ஒப்பந் தத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் கிடைப்பதற்கு முன்னால்— இந்தப் பிரச்னை ஜாயின்ட் ஆக்ஷன் கௌன்சிலில் எழுப்பப் பட்டு, அக்ரிமென்டை அமல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டது. அதுபோன்று இதிலும் நடந்திருக்க வேண்டும்.

[முற்பகல் 11-00.]

ஆகவே, அப்படி அதிகப்படியாக கொடுக்காவிட்டால், மத்திய அரசுக்கு அஞ்சாமல் செயல்படுவேன் என்று முதல் அமைச்சர் சொல்லியிருப்பதுபோல், மத்திய அரசாங்கத்தை அணுகுவதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 12 (3) ஒப்பந்தத்தில் "subject to approval" என்றிருப்பதை சாக்காக எடுத்துக் கொண்டு நிர்வாகம் செயல்படுத்தவில்லை. இந்தப் போக்கை அரசு ஆதரிக்கவில்லை. வருத்தப்படுகிறது. பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடத்தப்பட்டு, நேற்றயதினம் மூன்றாவது சுற்றுக பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது. அந்த பேச்சுவார்த்தையில் முறிவு ஏற்பட்டு, ஒப்பந்தத்தில் உள்ளபடி செயல்பட முடியாமல் போய்விட்டால், தொழில் துறை செயலர் அவர்களை டெல்லிக்கு அனுப்பி, இந்த ஒப்பந்தத்தின் புனிதத் தன்மையை எடுத்துச் சொல்லி, தொழிலாளர்களுக்கு நன்மை தேடித் தருவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இது மிகவும் சீரியசான பிரச்னை. இந்த மாநிலத்தின் இன்டஸ்ட்ரியல் பீசை டிஸ்ரப்ட் செய்யக்கூடிய பிரச்னை. 10 சத வீதம் இன்டரிம் ரிலீப் தருவதாக மத்திய சர்க்காரே 'ஆபர்' பண்ணினார்கள். இப்போது 'இன்டரிம் ரிலீப்' வேண்டாம் என்று அவர்களே சொல்கிறார்கள், மணி நேரத்திற்கு மணி நேரம் மத்திய சர்க்கார் மாறிக்கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. இதனால் மத்திய சர்க்கார் தொழிலாளர்களிடையே சர்ச்சையை நீடித்துக் கோண்டே,

" It will not be tolerated. The Central Government is laying down a dangerous precedent."

எந்தவிதத்தில் என்று சொன்னால், மத்திய சர்க்கார் இப்படிப் பட்ட ஒப்பந்தத்தை மீறுவதன் மூலமாக, தனியார்களும் இப்படி ஒப்பந்தத்தை மீறலாம் என்கின்ற நிலைமை இந்த மாநிலம் பூரா விலும் ஏற்படலாம். இப்படி அவர்கள் இந்த ஒப்பந்தத்தை மீறுவதன் மூலம், இந்த மாநிலத்திலே இன்டஸ்ட்ரியல் பீசை நிறைவேற்றக்கூடிய பொறுப்பு இந்த மாநில சர்க்காருக்குத்தான் ஏற்படுகிறது. மாநில சர்க்கார்தான் இந்த இன்டஸ்ட்ரியல் பீசை மெயின்டெயின் செய்யவும் வேண்டியிருக்கிறது. எனவே மத்திய சர்க்கார் தான் இன்டஸ்ட்ரியல் பீசை டிஸ்ரப்ட் செய் கிறார்கள். எனவே, At least on this issue- லேயாவது மத்திய சர்க்கார் இன்டஸ்ட்ரியல் பீசை நிலைநாட்டுவதற்குப் பொறுப்பாக இருக்க வேண்டும். மத்திய சர்க்காரை ஒப்புக் கொள்ளும்படி செய்யவேண்டும். இல்லாவிட்டால், ஜெனரல் ஸ்டிரைக் ஏற்படும். We will be suffering

26-ம் தேதி கொடுத்த வாக்குறுதியின்படி மத்திய சர்க்கார்,

They have committed a breach of trust by not allowing this collective bargaining

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செக்ரடரியை டெல்லிக்கு அனுப்புவதாகச் சொல்லுகிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால், செக்ரட்டரி சொல்வதை மத்திய சர்க்கார் கேட்க மாட்டார்கள். ஸ்டிரைக் நீடித்துக் கொண்டுதான் போகும். இந்த ஸ்டிரைக் நீடிக்காத வகையில், தொழில்நல அமைச்சர் அவர்கள் இன்றைக்கே தொலைபேசி மூலம் டெல்லி தொழில் நல அமைச்சர் அவர்களோடு தொடர்பு கொண்டு, இந்த ஸ்டிரைக் பிரச்னையைப் பற்றி ஒரு முடிவு காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் வெளியிட்டுள்ள உணர்வுகளை இந்த அரசு மிகவும் மதிக்கிறது. அந்த ஒப்பந்தம்

Subject to approval என்று சொல்லியிருக்கிறார்கள்.
அந்தக் காரணத்தால் சட்டபூர்வமாக மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் சொன்ன அளவுக்கு நான் வேகமாகப் போக முடியாது.
ஆனாலும், இதனுடைய 'இம்ப்ளைட் மீனிங்' என்ன வென்றால்,
I will be approved. இதை ஏற்றுக்கொண்டு அதன்படி மத்திய
அரசு 'பெல்' BHEL நிறுவனத்தில் செயல்பட்டிருக்கிறார்கள்.
இந்த உணர்வுகளை நீங்கள் எந்த அளவுக்கு ஆழமாகச் சிந்தித்து
அதிர்ச்சி அடைந்திருக்கிறீர்களோ, அந்த அளவுக்கு இந்த அரசும்
அதிர்ச்சி அடைந்திருக்கிறது. செயலாளர் அவர்களை அங்கே
அனுப்பினால் முடியாது. நீங்களே பேச வேண்டுமென்று சொல்லு
கின்ற யோசனை ஏற்றுக்கொண்டு, இன்றைய தினம் எனக்கு
நிறைய அஜண்டா இருக்கிற காரணத்தால், இன்றைக்கோ,
நாளைக்கோ அல்லது இன்று இரவே பேச வேண்டிய நிர்ப்பந்தம்
ஏற்பட்டாலும் நான் நிச்சயமாக திரு. ரவீந்திர வர்மாவுடன
பேசுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : ஏற்கனவே
இந்த செட்டில்மெண்டுக்காக அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்து
நடவடிக்கை எடுத்து வருவதற்கு நன்றி. இடையில் மத்திய
அமைச்சர் அவர்களிடம் பேசுவதாகவும் சொல்லியிருக்கிறார்.
நன்றி. காலதாமதம் ஏற்படும் நிலைமை ஏற்பட்டால் ஏற்கனவே
ஒப்பந்த அடிப்படையில் அட்வான்சாகக் கொடுத்து எட்டிரைக்கை
முடிவுக்கு கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சிக்கலே
அதிலேதான் ஏற்பட்டிருக்கிறது. ஒப்பந்தத்தை அவர்கள்
செயல்படுத்தவில்லை. அவர்கள் சொல்லுகிற காரணம்
Sbuject to approval என்ற Phrase,—'ஐ தங்களுக்குச் சாதகமாக
எடுத்துக் கொள்கிறார்கள், For 'subject to approval' the
impl ed meaning is 'it will be approved'
அதை நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை
இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : இந்த பேச்சுவார்த்தை ஆரம்பிப்
பதற்கு முன்பு ப்யுரோ ஆப் பப்ளிக் என்டர்பிரைசஸ்
மூலமாக கைட் லைன்ஸ் தயார் செய்வதாக சொல்லப்
படுகிறது. கைட் லைன்ஸ் உருவாகும் வரையில் பேச்சு
வார்த்தையை நிச்சயமாக முடிவு செய்ய முடியாது. அதற்கு
முன்பாக இந்த அரசு என்ன செய்யப்போகிறது என்பதை
ஏற்கனவே பி. எச். இ. எல். நிறுவனத்தின் மூலமாக ஒரு
ஒப்பந்தம் போடப்பட்டது. பெங்களூரில் இதைவிட அதிகமாக
ஒப்பந்தங்கள் இருப்பதை இந்த மாநிலத்தில் திணிக்கும்
முயற்சி நடக்கிறது. இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை
எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இது சம்பந்த
மாக ஒரு முடிவைக் கொண்டு வரவேண்டுமென்று அந்தச்
சங்கங்கள் சார்பாக திரு. சிந்தன் அவர்கள், நிர்வாகத்தின்
சார்பாக அதன் பிரதிநிதிகள் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.
நேற்றும் பேச்சு வார்த்தை நடந்திருக்கிறது. இன்றைய தினம்
அறிவித்த உணர்வுகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அரசே
நேரடியாக—அதாவது அமைச்சரே நேரடியாகத் தலையிட
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அது ஏற்றுக் கொள்ளப்
பட்டிருக்கிறது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

(உ) சென்னைப் பெருநகர போக்குவரத்துத் திட்ட அமைப்பின் செயற்குறிப்புகள் நிராகரிக்கப்பெற்றதாகச் சொல்லப் பெறுவது

திரு. க. சுப்பு :
திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:
திரு. ஏ. ஆர். மாரிமுத்து :
} பேரவைத் தலைவரவர்களே,
" ரூ. 22 கோடி செலவாகக்
பெருநகர்ப் போக்கு வரத்துந்
கூடிய கல்கத்தாவிற்கான செலவாகக்கூடிய டில்லிக்கான
திட்டங்களும் , ரூ. 24 கோடி செலவாகக்கூடிய பம்பாய்
திட்டங்களும், ரூ. 14.5 கோடி செலவாகக்கூடிய பம்பாய்
மாநகருக்கான திட்டங்களும் திட்ட ஆணைக்குழுவினால் ஏற்பளிக்கப்
மாநகருக்கான திட்டங்களும் திட்ட ஆணைக்குழுவினால் ஏற்பளிக்கப்
பட்டிருக்கையில், சென்னை மாநகருக்கான ரூ. 23.84 கோடி
செலவாகக்கூடிய சென்னை, பெருநகரப் போக்குவரத்துத் திட்ட
அமைப்பு அளித்த செயற்குறிப்புக்கள் மட்டும் நிராகரிக்கப்பட்டு
அதன்விளைவாக புலனாய்வு அமைப்பு, அதாவது, சென்னை பெரு
நகர் போக்குவரத்துத் திட்டம் (இரயில்வே) 31–3–1979-ல்
மூடப்படவிருப்பதால் ஏற்படும் கடுமையான நிலைமை பற்றி''
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின்
கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர்
அவர்களே, இந்தியாவின் நான்காவது பெரிய நகரம் சென்னை
மாநகரமாகும். சென்னைப் பெருநகரப் பகுதியின் மக்கள் தொகை
1971-ம் ஆண்டில் ஏறத்தாழ 35.00 இலட்சமாக இருந்தது.
இந்த எண்ணிக்கை 1981-ம் ஆண்டில் 41 இலட்சமாகவும், 1991
ஆம் ஆண்டில் 53.00 இலட்சமாகவும் பெருகும் என்று எதிர்
பார்க்கப்படுகிறது. இவ்வாறு விரைந்து பெருகுகின்ற மக்கள்
தொகைப் பெருக்கமும் இது தொடர்பான ஏனைய வளர்ச்சிகளும்
தற்போதைய போக்குவரத்து அமைப்புகளுக்கு கடும் நெருக்கடி
யை உண்டாக்கியுள்ளன. இந்த நெருக்கம் வரும் ஆண்டுகளில்
மேலும் அதிகமாகும்.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1978 செப்டம்பர் 14

2. தமிழ்நாடு அரசு, சென்னைப் பகுதி போக்குவரத்து ஆய்வுப்
பிரிவினை ஏற்படுத்தியுள்ளது. இப்பிரிவு, வடக்கு தென்கிழக்குப்
பகுதியில் விரைவுப் போக்குவரத்து ஏற்பாட்டின் அவசியத்தை
உறுதிப்படுத்தியுள்ளது. இதற்கு மிகவும் பொருத்தமான
விரைவுப் போக்குவரத்து ஏற்பாடு இன்னது எனத் தெரிந்தெடுக்
கும் பணி, பெருநகரப் போக்குவரத்துத் திட்ட அமைப்பிடம்
(இரயில்வே) ஒப்படைக்கப்பட்டது.

3. சென்னைப் பெருநகரப் போக்குவரத்துத் திட்ட அமைப்பு
(இரயில்வே) தனது தொழில் நுட்ப-பொருளாதார சாத்தியக்கூறு
ஆய்வறிக்கையில் இரு வேறுபட்ட வழிகளில் அமையும் பாதை
களில் ஏதாவது ஒன்றைத் தெரிந்தெடுத்து அவ்வழியில் இப்
பாதையை அமைக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்
றில் ஒரு வழி பக்கிங்காம் கால்வாய் வழியாக அமையும், மற்றொரு
வழியின் ஒரு பகுதி கால்வாய் வழியாகவும், இன்னொரு பகுதி
தெருப்பாதை வழியாகவும் அமையும். இரயில்வே அமைச்சகம்
பக்கிங்காம் கால்வாய் வழியே அமைகின்ற பாதையையே
தேர்ந்தெடுத்து, வடக்கில் திருவொற்றியூரிலிருந்து தெற்கில்
கஸ்தூரிபாய் நகர் வரையில் விரைவுப் போக்குவரத்து ஏற்பாடு
ஒன்றை (20–38 கி. மீட்டர்) ரூ. 140 கோடி மதிப்பீட்டுச் செல
வில் அமைப்பதற்காக திட்ட ஆணைக்குழுவிற்கு இத்திட்டத்தைப்
பரிந்துரைத்துள்ளது.

4. இந்திய அரசு திட்ட ஆணைக்குழு 1976-ம் ஆண்டு ஏப்ரல்
திங்களில் சென்னை பெருநகர்ப் பகுதியின் ஒருங்கிணைந்த போக்கு
வரத்துத் தேவைகளை ஆய்வு செய்வதற்காகப் பணிக்குழு ஒன்றை
அமைத்தது. இப்பணிக்குழு 1977ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில்
அனுப்பிய தனது அறிக்கையில் சாலைப் பணித் திட்டங்கள்
பல்லவன் போக்குவரத்துக் கழகத் திட்டம், இரயில்வே பணித்
திட்டங்கள் ஆகியவை கொண்ட முனைப்புத் திட்டம், ஒன்றை
1981 ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டுக் காலத்தில் மொத்தம்
ரூ. 75.99 கோடிச் செலவில் நிறைவேற்றலாம் எனக் குழு பரிந்
துரைத்துள்ளது. நிதி நெருக்கடியைக் கருத்திற் கொண்டு, இந்த
விரைவுப் போக்குவரத்து ஏற்பாட்டின் முதற்படியாக, சென்னைக்
கடற்கரையிலிருந்து லஸ் வரை (8.43 கி. மீட்டர்) பாதை அமைக்
கும் பணியைமேற் கொள்ளலாம் எனப் பணிக்குழு பரிந்துரைத்
துள்ளது. இதில் முதற்கட்டமாக சென்னைக் கடற்கரையிலிருந்து
பாரதி சாலை (பைகிராப்ட்ஸ் சாலை) வரை 5.52 கி. மீட்டர் நீள
பாதை அமைக்கும் பணியை எடுத்துக் கொண்டு 1981 ஆம் ஆண்
டுக்கு முன்பு முடிக்கப்பட வேண்டும் எனவும் பரிந்துரைத்துள்ளது.

5. பணிக்குழுவின் பரிந்துரைகளைத் தமிழ்நாடு அரசு ஏற்றுக்
கொண்டுள்ளது. சென்னைக் கடற்கரையிலிருந்து பாரதி சாலை
வரையிலான விரைவுப் போக்குவரத்து முறை முதல் கட்டப்
பணிக்குரிய விரிவான திட்ட அறிக்கை 28–2–1977-ம் நாளன்று

1978 செப்டம்பர் 14] [திரு. எஸ். இராகவானந்தம்]

இரயில்வே வாரியத்திற்குப் பணிந்தனுப்பப்பட்டுள்ளது. முதல்
கட்டப் பணிக்குரிய செலவு ரூ. 24.05 கோடியாகும். லஸ்
வரையிலான இரண்டாம் கட்டப் பணிக்குரிய செலவு ரூ. 19.83
கோடியாகும்.

6. இத் திட்டத்திற்கு 6.64 ஹெக்டேர் வரை மாநில அரசின்
நிலம் தேவைப்படுகிறது. இதன் தோராய மதிப்பு ரூ. 63 இலட்
சம் ஆகும். இந்திய அரசு கேட்டதன் பேரில், விரைவுப் போக்கு
வரத்துத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக, 6.64 ஹெக்
டேர் நிலத்தை இலவசமாகக் கொடுக்க இந்த அரசு ஒப்புக் கொண்
டுள்ளது. இதனால் இத் திட்டத்திற்காகும் மொத்தச் செலவு
குறையும். இதற்கான அனுமதியை விரைவில் வழங்கவும், இதற்கு
முன்னுரிமை அளிப்பதற்கும் இயலும்.

7. செயற்குறிப்புக்களைச் சாதகமாகப் பரிசீலனை செய்து
விரைவில் அனுமதி வழங்குமாறு திட்டக்குழு கேட்டுக் கொள்ளப்
பட்டுள்ளது.

8. தலைமைப் பொறியாளர் ஒருவரது தலைமையில் சென்னையில்
இயங்கிக் கொண்டு, பெருநகர்ப் போக்குவரத்துத் திட்டம் தொடர்
பான தொடக்கப் பணிகளைக் கவனித்துவரும் சென்னைபெரு
நகர்ப் போக்குவரத்துத் திட்டப் பிரிவு (இரயில்வே) 30–9–78-ல்
கலைக்கப்பட இருப்பதாகவும், ஓராண்டுக்குள் வடிவமைப்பு விவரங்
களைத் தயாரிப்பது, ஒப்பந்தப் புள்ளிகள் கேட்பது இத்திட்டம்
சம்பந்தப்பட்ட நிலங்களை மாற்றிக் கொடுப்பதற்கு அனுமதி
பெறுவது முதலான வகையில் விரைவுப் போக்குவரத்துத் திட்ட
முதல் கட்டப் பணியை விரைவுப்படுத்துவதற்குத் தடங்கல்
ஏற்படாமல் இருக்க, பணியாளர்களை அவசியம் தொடர்ந்து பணி
யில் வைத்திருக்க வேண்டுமென்பதும், இந்திய அரசின் கவனத்
திற்கும் திட்டக் குழுவின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டுள்
ளது. இத் திட்டம் தொடர்பான வடிவமைப்பு விவரங்கள்
தயாரிக்கும் பணியைப் பூர்த்தி செய்ய பணியாளர்களை வைத்திருப்
பதற்காகத்தான் தொகை தேவைப்படுகிறதென்றும், இதற்குப்
பெரிய அளவில் நிதி ஒதுக்கீடு அவசியமில்லை என்றும், இந்திய
அரசுக்கும் திட்டக்குழுவுக்கும் தெரிவிக்கப்பட்டது.

9. இதன் தொடர்பாக இந்தியப் பிரதமருக்கு நமது முதல்வர்
இரண்டு முறை கடிதம் எழுதி, முன்னுரிமை அடிப்படையில்
இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டியதன் அவசியத்தை
நன்கு வலியுறுத்திக் கூறியுள்ளார். வடக்கு-தென்கிழக்கு பகுதி
யில் தரைமார்க்கப் போக்குவரத்து 1981-ல் நிலைகுலையும் ஆபத்து
இருப்பதாலும், அப்பொழுது அதிலிருந்து மீளமுடியாத நிலை ஏற்
பட்டுவிடுமாதலாலும், மாநில அரசு இது குறித்து மத்திய அரசி
டம் எடுத்துக் கூற வேண்டுமென்றும் சென்னை பெருநகர்ப்
போக்குவரத்துத் திட்ட (இரயில்வே) தலைமைப் பொறியாளர்
கேட்டுக் கொண்டுள்ளார். இத் திட்டத்தின் முக்கியத்துவத்தைக்
கருத்திற் கொண்டு இதற்கென்றே மாநில அரசு அதிகாரி ஒரு

வரை புதுடில்லிக்கு அனுப்பி தனிப் பிரதிநிதியான திரு. கே.
இராஜாராம் அவர்களுடன் இத் திட்டத்தின் முக்கியத்துவத்தை
மத்திய அரசு அதிகாரிகளிடம் விளக்கிக் கூறி இத் திட்டத்திற்கு
இம்மாதமே அனுமதி வழங்க அவர்களை சம்மதிக்கச் செய்ய
கருதப்பட்டுள்ளது.

10. ஆகவே, இத் திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதியைப்
பெறுவதற்கு எல்லா முயற்சிகளையும் தமிழ்நாடு அரசு மேற்
கொண்டு வருகிறது. இச் செயற்குறிப்பை நிராகரிப்பதென
மத்திய அரசு முடிவு செய்யவில்லையாதலின், பெருநகர்ப் போக்கு
வரத்துத் திட்டப் பிரிவு (இரயில்வே) கலைக்கப்படுவதாக இல்லை.
இந்நிலையில், கடுமையான சூழ்நிலை ஏதும் தோன்றிடவில்லை.

திரு. க. சுப்பு : இந்தப் பிரச்சினையில் கல்கத்தாவிற்கும்
டில்லிக்கும் வழங்கப்பட்டிருக்கும் நிதி தமிழகத்திற்கு வழங்கப்பட
வில்லை என்ற உண்மையின் அடிப்படையில் மாண்புமிகு முதல
மைச்சர் அவர்கள் பாரதப் பிரதமருக்கு இரண்டு முறை கடிதங்
கள் எழுதியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
இங்கிருக்கும் அதிகாரிகளை டில்லிக்கு அனுப்பி மேலும்
அரசாங்க பிரதிநிதியாக இருந்து செயல்படுகிற திரு. இராஜாராம்
அவர்களும் சேர்ந்து பேசுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
இது எப்படி இருக்கிறது என்றால் பெரிய பிரச்சினைக்கு சிறிய நட
வடிக்கை என்ற அளவில் இருக்கிறது. வேண்டுமென்றே திட்ட
ஆணைக்குழு நிராகரித்திருக்கும் நிலையில் முதலமைச்சர் அவர்கள்
கொஞ்சம் கடுமையான முறையில் சொல்லியிருக்க வேண்டும்.
முதலமைச்சர் அவர்கள் எப்படி கடிதம் எழுதியிருக்கிறார்கள்.
அவர்கள் பிரதம அமைச்சருக்கு எழுதியிருக்கும் கடிதங்களில்
இருக்கும் வாசகங்களை வைத்துக் கொண்டுதான் இந்தப் பிரச்சினை
யிலே அரசாங்கம் காட்டும் அக்கறையைப் புரிந்து கொள்ள முடியும்.
அரசாங்கம் அந்த அளவுக்கு வலியுறுத்தியிருக்கிறதா என்பதை
அறிய முதலமைச்சரின் கடித நகல்களை இந்த அவையில் வைக்கு
மாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : முதலமைச்சர்
அவர்கள் எழுதிய கடிதத்தை இங்கே வைக்கலாமா வேண்டாமா
என்ற சட்ட நுணுக்கம் எனக்குத் தெரியாது. அதை அறிந்து
ஏற்ற நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். ராபிட் டிரான்
சிட் சிஸ்டம் போடுவதற்குத் தேவையான நிலம் 6.64 ஹெக்டேர்
நிலம் கொடுக்கப்பட்டுவிட்டது. அதன் மதிப்பு சுமார் 63 லட்சம்.
இதிலிருந்தே இந்த அரசினுடைய தீவிரமான நோக்கம் மாண்புமிகு
உறுப்பினர் அவர்களுக்குப் புரியும் என்று கருதுகிறேன். 63 லட்
சம் மதிப்புள்ள நிலத்தைக் கொடுக்கிறோம் என்று எழுதி
விட்டோம். மத்திய அரசோடு பேச்சுவார்த்தைக்கான
காரியங்களை நடத்த திரு. ராஜாராம் அவர்கள் நியமிக்கப்பட்
டிருக்கிறார்கள் முதலமைச்சர் அவர்கள் இரண்டு முறை கடிதம்
எழுதியிருக்கிறார்கள். திரு. இராஜாராம் பேசுவதாக இருக்கிறார்.

செயலாளரும் செல்வதாக இருக்கிறார். இதற்கு மேலும் என்ன செய்யலாம் என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆலோசனை கூறினால் அரசு அதுபற்றிப் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஊ) மணிமுத்தாறு நீர்த்தேக்கத்திலிருந்து பெருங்கால் பாசனத்திற்குத் தண்ணீர் விடாமை.

திரு. சு. முத்துசாமி கரையாளர் : பேரவைத் தலைவரவர்களே, " திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு நீர்த் தேக்கத்திலிருந்து பெருங்கால் பாசனத்துக்கு குறித்த காலத்தில் போதிய அளவு தண்ணீர் கொடுக்காததால் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களில் விவசாயம் பாதிக்கப்பட்டது குறித்து "

மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மணிமுத்தாறு நீர்த் தேக்கத்திலிருந்து ஒரு மதகுக் கால்வாய் மூலமாகப் பெருங்கால் ஆயக்கட்டுக்குப் பாசனம் அளிக்கப்படுகிறது. இந்தக் கால்வாயின் கீழ்ப்பகுதியான ஆயக்கட்டின் பரப்பு 2,590 ஏக்கர். இதில் 1,209 ஏக்கர் நேரடிப் பாசனத்தின் கீழ் உள்ளது. 1,381 ஏக்கர் கால்வாயிலிருந்து நீரைப் பெறுகின்ற ஏரிகள் மூலமாகப் பாசனம் பெறுகிறது.

நடப்புப் பாசனப் பருவக் காலத்தின் போது ஜூன் திங்கள் முதல் நாளிலிருந்து தொடர்ந்து ஆயக்கட்டுக்குப் பாசனம் அனுமதிக்கப்படுகிறது. குறுவைப் பயிரின் கீழ் 1,148 ஏக்கர் நேரடியாகப் பாசனம் பெற்றும் 1,284 ஏக்கர் ஏரிகளின் மூலம் பாசனம் பெற்றும் பயிரிடப்பட்டன. ஜூன் திங்களில் இக்கால்வாயில் முழு அளவில் நீர் வழங்கப்பட்டது. தென் மேற்குப் பருவ மழை பொய்த்த காரணத்தால் ஜூலை மாதத்தில் இரண்டாவது மூன்றாவது வாரங்களிலும், ஆகஸ்ட் மாதத்தில் முதல் வாரத்திலும் நீர்த்தேக்கத்திற்கு வந்த நீர்வரத்து மிகக் குறைவாக இருந்தது. எனவே, பாசனத்திற்கு நீர் வழங்குவதை நியாயமான விதத்தில் முறைப்படுத்த வேண்டியிருந்தது. இவ்வாறு பருவ மழை பொய்த்த காரணத்தால் தாம்பிரபரணி பாசன ஏற்பாட்டின் கீழுள்ள ஆயக்கட்டும் கூட பாதிக்கப்பட்டது என்பதையும் அதற்காக அங்கே பயிரிடப்பட்டிருந்த பயிர்களுக்குத் தொடர்ந்து பாசனம் அளிக்கும் பொருட்டு மணிமுத்தாறு நீர்த் தேக்கத்திலிருந்து நீர் வழங்கி உதவ வேண்டியதாயிற்று என்பதையும்

இங்கு குறிப்பிட வேண்டும். தாம்பிரபரணி பாசன ஏற்பாடு
பெருங்கால் ஆயக்கட்டு ஆகியவை போன்ற பெரிய அளவிலான
ஆயக்கட்டுகளுக்கு அளிக்க வேண்டிய பாசன நலனைக் கருத்தில்
கொண்டு பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் அனைத்தையும் காக்கும்
பொருட்டு மேற் சொன்னது போல நீர் வழங்குவதை நியாயமான
விதத்தில் முறைப்படுத்துதல் வேண்டியதாயிற்று. ஆகஸ்ட் 12-ம்
நாள் முதல் நிலைமை சீர டைந்துள்ளது. இப்போது பெருங்கால்
கால்வாயில் போதுமான அளவிற்கு நீர் விடப்படுகிறது. நீர்த்தேக்
கத்தில் உள்ள நீர் மட்டம் பொறி மதகின் அடிப்புறத் தவணைக்கும்
(Sill of the sluice) கீழே போய்விட்டபோதிலும்கூட இயல்பாகக்
கிடைக்கின்ற நீர்வரத்து, சாதாரணமான நடமுறையை ஒட்டி பணி
முத்தாறு அணையின் மேற்கு பகுதியில் பிரிந்து செல்கின்ற இக்கால்
வாயின் பழைய பாதையின் மூலமாக விடப்படுகிறது. இத்தகைய
நிலைமைகளில் இந்தக் கால்வாயின் கீழுள்ள அனுமதிக்கப்பட்ட
ஆயக்கட்டிலுள்ள பயிர்கள் வாடிவிடவில்லை. அவை பாசனம்
பெற்று அறுவடைக்குத் தகுதியான நிலையில் உள்ளன என்று
தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தென்மேற்குப் பருவ மழை
பொய்த்த போதிலும் நீர்தேக்கத்திலுள்ள நீர் நிலைமை அப்பகுதியில்
குறைந்திருந்த போதிலும் முடிந்த அளவு பெருங்கால் மிகக்
கால்வாயின் கீழுள்ள ஆயக்கட்டு பாதிக்கப்படுவதற்கு இடமளிக்
கப்படவில்லை. இந்த ஆயக்கட்டில் பாசனம் பெறுவதற்குத்
தகுதியாயுள்ள நிலங்களில் பயிரிடப்பட்ட பயிர்கள் முடிந்த
அளவு பாதுகாக்கப்பட்டன.

திரு. சு. முத்துசாமி கரையாளர் : பணிமுத்தாறு
தேக்கத்திலிருந்து பெருங்கால் பாசனத்திற்குத் தண்ணீர் செல்
லாததன் காரணமாக 200 ஏக்கருக்கு மேல் பாதிக்கப்பட்டிருப்
பதாகத் தீர்மானம் கொண்டு வந்தேன். அதற்கு அமைச்சர்
அவர்கள் பதிலில் பயிர் வாடவில்லை என்று கூறி இருக்கிறார்கள்.
ஆனால், அந்தப் பயிர்கள் பட்டுப்போய்விட்டன. இந்த நிலை
வரக்காரணம், அந்த நீர்த் தேக்கத்திலிருந்து பாசனத்திற்கு விடக்
கூடிய தண்ணீரை வேறு ஒரு தொழிற்சாலைக்குக் கொடுப்பதால்
தான் இந்த நிலை ஏற்பட்டது என்று கூறுகிறார்கள். அதை
அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக்
கொண்டு இந்தப்பாசனத்திற்குத் தண்ணீர் வருவதற்கான ஏற்பாடு
களைச் செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர்
அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11.10]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர்
அவர்களே, தென் மேற்குப் பருவ மழை பொய்த்த காரணத்தால்
ஜூலை மாதத்திலே 2-வது, 3-வது வாரங்களிலும் ஆகஸ்டு மாத
முதல் வாரத்திலும் நீர்த்தேக்கத்திற்கு நீர் வரத்துக் குறைந்து

விட்டது. அவ்வாறு குறைந்த காரணத்தால் பாசனத்திற்கு
நீர் வழங்குவதை நியாயமான விதத்திலே டர்ன் சிஸ்டம் என்ற
வகையிலே முறைப்படுத்திக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.
பயிர் வாடவில்லை, பயிர் பட்டுப்போய்விட்டது என்று
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். பயிர் வாடா
மல் எப்படிப் பட்டுப்போகும் என்று எனக்குத் தெரிய
வில்லை. பயிர்களைப் பாதுகாப்பதற்காக வேளாண்மைத் துறை
பொறுப்பாகவும் அதேபோல் பாசனத் துறை பொறுப்பாகவும்
இந்த அரசும் பொறுப்பாகவும் இருப்பதால் அவைகள்
பட்டுப்போகாத நிலையில் மீண்டும் தண்ணீர் வசதி செய்து
கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(எ) கல்லணையிலிருந்து பட்டுக்கோட்டை கடைமடைப்
பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்காமை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. மு. அம்பிகாபதி : தலைவர்
அவர்களே, "மேட்டூர் அணையில் நீர் நிரம்பிய நிலையிலும், பட்டுக்
கோட்டை பகுதி கிருஷ்ணபுரம், பழவேற்காடு, ஓதியடிக்காடு,
தம்பிக்கோட்டை மேற்கு, தம்பிக்கோட்டை வடக்கு,
கல்யாணஓடை, அத்திவெட்டி கிராமங்களில் தண்ணீர் கிடைக்
காத காரணங்களால் நாற்றங்கால்கள் பாழடைந்து சாகுபடி
வேலைகள் சீர்குலைந்துவிட்ட காரணத்தாலும் அக் கிராமங்களில்
உள்ள விவசாயிகள் உண்ணாவிரத போராட்டம் நடத்தப்
போகும் நிலையில் அப்பகுதியிலுள்ள பதட்ட நிலையை
குறித்த" பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு
வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு
கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே,
கல்லணை பாசனத்திற்கு திறந்த நாள் முதல் கல்லணைக் கால்
வாயில் முழு அளவு பாசன நீர் விடப்படுகிறது. மேலே சொன்ன
கிராமங்களுக்குப் பாயும் வாய்க்கால்களில் பாசன நீர்
கடைமடைப் பகுதி வரை சென்று கொண்டிருக்கிறது. எனினும்
இப்பகுதியில் வறட்சி மற்றும் மழையின்மையால், நாற்று
நடவு, துரிதமாக நடப்பதற்கு பாசனத் தண்ணீர் போது
மானதாக இல்லை. ஆனால், தற்போது பெய்த மழை அனுசரணை
யாக இருப்பதால் நாற்று நடவு வேகமாக நடப்பதற்கு தற்
போது கிடைக்கும் பாசன நீர் போதுமானதாக உள்ளது.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, கல்லணைக் கால்வாய்
விஷயமாகவும், வடவாறு விரிவாக்கக் கால்வாய் விஷயமாகவும்
9—9—1978 ஆம் நாளன்று மாண்புமிகு அமைச்சர் அவர்களி
டத்திலே நாங்கள் விண்ணப்பம் கொடுத்திருக்கிறோம்.
அங்கே இருக்கின்ற வடிகால் பிரச்சினை பட்டுக்கோட்டை தாலுகா,

மன்னார்குடி தாலுகா ஆகிய பகுதிகளில் உள்ள கிருஷ்ணபுரம், பழவேற்காடு, ஓதியடிக்காடு, தம்பிக்கோட்டை மேற்கு, தம்பிக்கோட்டை வடக்கு, கல்யாண ஓடை, அத்திவெட்டி, திருமக்கோட்டை, இளவக்குறிச்சி, வாவாஜிக்கோட்டை ஆகிய பகுதிகளிலே சரியான பாசன முறை கிடையாது. கடந்த முறை நான் இது குறித்து கவன ஈர்ப்புக் கொடுத்தபோது அமைச்சர் அளித்த பதில் பற்றி திருமக்கோட்டையிலே கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டது. தந்தியெல்லாம் வந்தது, ஆகவே அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் கிடைக்கக்கூடிய முறையிலே கால் வாய்ப் பகுதிகளை விரிவுபடுத்த அமைச்சர் அவர்கள் தனிக்குழு அமைத்து திட்டமிட முன்வருவார்களா ?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கிருஷ்ணபுரம், பழவேற்காடு, ஓதியடிக்காடு, தம்பிக்கோட்டை மேற்கு, தம்பிக்கோட்டை வடக்கு, கல்யாண ஓடை, அத்திவெட்டி கிராமங்கள் கடைமடைப் பகுதிகளாகும். அந்தக் காரணத்தாலும் அங்கே வறட்சி இருப்பதாலும் மழையின்மையாலும் சரிவர நாற்றுகள் நடமுடியாத சூழ்நிலை இருந்தது. ஆனால் சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக நாற்று நடவு நடந்து கொண்டிருக்கிறது. மேலும் பாசனத்துறை மூலமாகவும், வேளாண்மைத் துறை மூலமாகவும் வேண்டிய தண்ணீரைக் கொடுக்க வழிவகை செய்யப் பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஏ) சிதம்பரம் வட்டத்தில் பாசன மதகுகள் சிலரால் இடிக்கப்பெற்றது குறித்து.

<u>திரு. துரை கலியமூர்த்தி</u> : தலைவர் அவர்களே, ''10—8—1978 அன்று சிதம்பரம் வட்டம், குமராட்சி பகுதியில் முள்ளங்குடி என்ற ஊரில் உள்ள பாசன கொண் டத்தையும், அருகில் உள்ள பருத்திக்குடி என்ற ஊரில் உள்ள பாசன கொண்டத்திலும் உள்ள சிமிட்டு கொண்டங்களை கீழ் முகத்திலுள்ள மக்கள் 50 பேர்களுக்கு மேலாக கூட்டமாகச் சென்று இடித்துள்ளனர். அரசு சார்பில் 6 பேர்களைக் கைது செய்யவே, கைது செய்யப்பட்டவர்கள் சார்பாக மக்கள் கூட்டம் கூடி போராட்டம் செய்து 6 பேர்களையும் விடுதலை செய்துள்ளனர். உடைக்கப்பட்ட கொண்டங்களை மேற்படி 6 பேர்களும் கட்டித் தரவேண்டும் என்று ஆர்.டி.ஓ. கூறியுள்ளார். ஆனால் இதுவரை மேல் நடவடிக்கை எதுவுமில்லாதால் பாசன நிலங்கள் பாதிக்கப்பட்டு அங்கு மக்களிடையே பெரும் பதட்ட நிலை உருவாகியுள்ளது'' குறித்த அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : தலைவர் அவர்களே, சிதம்பரம் வட்டத்தில் பொதுப்பணித்துறை குமராட்சி பிரிவின் பராமரிப்பில் உள்ள வடக்கு ராஜன் வாய்க்காலில்

பிரியும் கருப்பூர் வாய்க்காலில் முள்ளங்குடி, கீழ் பருத்திகுடி ஆகிய கிராமங்களில் மேற்படி கருப்பூர் வாய்க்காலின் குறுக்கே உள்ள Notch-களை 17—8—1978 அன்று பகல் 12 மணிக்குமேல்—

1. கருப்பூர் கிராமம் குப்புசாமி படையாச்சி மகன் ஆறுமுகம். 2. வடக்கான்குடி கிராமம் நாகூரான். 3. நீத்துகுடி கிராமம் அண்ணாதுரை.

ஆகியோர் ஊர் மக்கள் கோஷ்டியாக வந்து உடைத்து சேதப் படுத்தினர். இது குறித்து 17—8—1978 அன்று உதவி ஆய் வாளர் காவல்துறை, குமராட்சி அவர்களுக்கு பிரிவு அதிகாரி குமராட்சி அவர்களால் புகார் செய்யப்பட்டது. பிரிவு அதிகாரி இடத்தை 18—8—1978 அன்று நிர்வாகப் பொறியாளர், தெரி வித்த பொதுப்பணித்துறை, சிதம்பரம் அவர்கள் பார்வையிட்டு குமராட்சி பிரிவு அதிகாரிக்கு மேற்படி Notch-ல் தண்ணீர் வரும் வழியினை அகலப்படுத்தி, இடிந்து விட்டதனால் ஏற்பட்ட இடையூறுகளை களைய உடனடியாக தற்காலிக ''கொண்ட''ங் களை அமைக்க நடவடிக்கை எடுக்க அறிவுரை வழங்கினார். மேற்படி Notch பிரிவு அதிகாரியால் ரூ. 1,500 செலவில் உடனடியாக தற்காலிகமாக தகுந்த ஏற்பாடு செய்து ஆயக்கட்டு பாதிக்கா வண்ணம் சரிசெய்து ஓரிரண்டு நாட்களில் மேற்படி Notch-கள் வழியே பாசன நீர் விடப்பட்டு வருகிறது. மேற்படி கொண்டங்கள் இடிந்தது பற்றி மாவட்ட போலீஸ் அதிகாரிக்கு எண் 711/எம்/78/டி2, நாள் 21—8—1978 தெரிவிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கும்படி கோரப்பட்டது.

26—8—1978 அன்று சிதம்பரம் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் மேற்படி கொண்டத்தை இடித்தவர்கள், மற்றும் பொதுப் பணித்துறை அதிகாரிகள் ஆகியோரை அழைத்துக் கூடி விவாதித்து. அதன்படி, மேற்படி கொண்டங்களை இடித்த கிராம மக்கள் அதற்கான செலவை தாங்கள் ஏற்றுக் கொள்வதாகவும், அதனால் புகாரை திரும்பப் பெறக்கோரி சமரசத்திற்கு வந்தனர். கொண் டங்களை மராமத்து செய்ய ரூ. 4,000 ஆகுமென மதிப்பிடப் பட்டுள்ளது. மேற்படி பணத்தை இதுவரை செலுத்தவில்லை. ஆதலால் போலீசில் கொடுத்த புகார் இதுவரை திரும்பப் பெற வில்லை.

மேலும் Notch-களை தற்போது சீர் செய்ய முடியாது. ஏனெனில் பாசனத்திற்கு தண்ணீர் செல்ல வேண்டி உள்ளது) எனவே வரும் மூடு காலத்தில் வேலைகள் (closure period. i. e. ஜூலை 1979-ல் முடிக்கப்படும்.

<u>திரு. துரை கலியமூர்த்தி</u> : தலைவர் அவர்களே, சிதம்பரம் வட்டத்திலே பாசனப் பகுதியிலே கீழ்முகம் பகுதியிலே உள்ள வர்கள் மதகுகளை உடைத்துவிட்ட காரணத்தால் அங்கே பாசன வசதி தடைபட்டு கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டிருக்கிறது, போலீஸுக்குத் தகவல் கொடுத்தும் எந்தவிதமான நடவடிக்கை யும் எடுக்கப்படவில்லை, உடனடியாக நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே' மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அளித்த விளக்கம் சம்பந்த மாக மாவட்ட போலீஸ் அதிகாரிகளுக்கு எண் 711/எம்./78 டி.2, 21—8—1978-இல் தெரிவிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் அந்த மதகுகளை—நாட்களை இப்போது சரிசெய்ய முடியாது, ஏனெனில் இப்போது பாசனத் திற்குத் தண்ணீர் செல்லவேண்டியிருக்கிறது, பாசன வசதி முடிந்தவுடன், குளோஷர் பீரியடில் ஜூலை மாதத்திலே அவைகள் சீர்செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஐ) வட ஆற்காடு மாவட்டம், ஆலங்காயம், திருப்பத்தூர் பகுதிகளில் கம்பளிப் பூச்சிகளால் வேர்க்கடலைப் பயிர் பாதிக்கப் பட்டிருப்பது குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, சட்ட ப் பேரவை விதிகளின் 41-வது விதியின்,

''வட ஆற்காடு மாவட்டம் ஆலங்காயும்—திருப்பத்தூர் பகுதிகளில் கம்பளிப்பூச்சிகளின் தீவ்ரத் தாக்குதாலல் வேர்க்கடலை போன்ற பயிர்கள் முழுமையாக அழிக்கப்பட்டு விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டு இருப்பதை'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் கீழ்க்கண்ட பகுதிகளில் சிகப்பு கம்பளிப் பூச்சி கடலைப் பயிரில் காணப்பட்டதாக தகவல் வந்துள்ளது.

திருப்பத்தூர் வட்டாரம்	..	
நாட்டரம்பள்ளி வட்டாரம்	..	.. 300 ஏக்கர்
பேரணும்பட்டு	.. ..	.. 370 ,,
கண்டிலி	.. ..	.. 250 ,,
ஆலங்காயம்	.. ..	.. 400 ,,
	..	.. 200 ,,

மேல்கண்ட பகுதிகளில் மொத்தம் 365 ஏக்கர் பரப்பளவில் பூச்சி மருந்து அடிக்கப்பட்டுள்ளது. ஒட்டு மொத்தமாக பூச்சி மருந்து அடித்து கடலைப் பயிரில் சிகப்பு கம்பளிப் பூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்தும் மத்திய அரசு உதவியுடன் செயல்படும் திட்டத் தின் (Mass Ground Spraying against Redhairy Caterpillar) கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்படி பூச்சி மருந்து களின் விலையையும் மருந்து தெளிக்கும் செலவையும் அரசு, கடனாக கொடுக்கிறது. மருந்து தெளிப்பதற்காகும் செலவில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3 மத்திய அரசு மானியமாக அளிக்கிறது. இதே போல் தீவிர எண்ணை வித்து அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மருந்து தெளிப்பதற்காகும் செலவில் ஏக்கர் 1-க்கு ரூ. 3 மத்திய அரசு அளிக்கும் மானியமும் இந்த கடலைப் பயிரைத் தாக்கிய கம்பளிப் பூச்சிக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைக்கு உதவுகிறது.

2. பருவ மழை தவறியதாலும், வறட்சி நிலையினால் பயிரின் தற்போதைய நிலை திருப்திகரமாக இல்லாததாலும். விவசாயிகள் இந்த ஒட்டு மொத்தமாக மருந்தடிக்கும் திட்டத்தின் கீழ் பயன் பெற அதிக ஆர்வம் காட்டவில்லை. ஆயினும் அவர்களுக்கு இந்த நடவடிக்கையின் முக்கியத்துவம் பற்றி ஆலோசனை கூறப் பட்டு பூச்சி மருந்துகள் தேவைக்கேற்ற விற்பனை செய்யப் படுகின்றன.

3. சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக சிகப்பு கம்பளிப் பூச்சி சில இடங்களில் தோன்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளதால் ஒட்டு மொத்த பரப்பில் மருந்தடிக்கும் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்த வேளாண்மைத்துறை முனைந்துள்ளது. சிகப்பு கம்பளிப்பூச்சியை ஒழிப்பதற்குத் தேவையான பூச்சி மருந்துகள் தேவையான அளவு எல்லா விவசாய கிடங்குகளிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதே போல் விவசாயிகளுக்கு வாடகைக்கு கொடுப்பதற்கு தூவுவான்கள் ஆயத்த நிலையில் வைக்கப் பட்டுள்ளன. சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் முதலியன இப்பூச்சி பற்றியும் அதன் தடுப்பு முறைகள் பற்றியும் அச்சிடப் பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றது. இது தவிர, வானொலி மூலமாகவும் இப்பூச்சியின் தாக்குதல் மற்றும் தடுப்பு முறை பற்றி விவசாயிகளுக்கு தகுந்த முறையில் அறிவிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆகவே பூச்சித் தாக்குதலை சமாளிக்க வேளாண்மைத்துறை தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஓ) அண்ணா போக்குவரத்துத் தொழிலாளர்கள் இடமாற்றம் செய்யப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திருவாளர்கள் கே. சுப்பு, சி. பழனிமுத்து ஆகியோர் அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்ச்சியினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. க. சுப்பு, திரு. சி. பழனிமுத்து : தலைவர் அவர்களே' பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம் :—

'' அண்ணா போக்குவரத்து கழகத் தொழிலாளர் மீது பழிவாங்கு நடவடிக்கையாக சில ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதால் சங்க ஊழியர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை அதன் காரணமாக 7—9—1978 அன்று அறிவித்த உண்ணாவிரதம், மற்றும் தீக்குளிப்பு அபாயம் பற்றிய பொது முக்யத்துவம் வாய்ந்த நிகழ்வினை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, முன்னதாக திரு. கே. சுப்பு, எம்.எல். ஏ. அவர்கள் 12—6—78 அன்று 10 ஓட்டுநர்களும், நடத்துநர்களும் இடமாற்றம் செய்யப் பட்டது தொடர்பாக அரசுக்கு எழுதியதை மாண்புமிகு உறுப் பினர்கள் குறிப்பிடுவதாக இருக்கலாம். அந்நபர்களின் அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் இடமாற்ற உத்திரவானது ஒரு சாதாரண அன்றாட அலுவல் நடவடிக்கையாகும். அவை பழி வாங்குவதற்கான ஒரு இடமாற்ற உத்திரவல்ல என்று அரசுக்கு தெரிய வருகிறது.

ஒழுங்கு நடவடிக்கையை எதிர் நோக்கியுள்ளதாலும் கழகத் திலிருந்து முன்னதாகவே வேலை நீக்கம் செய்யப்பட்டதாலும் அதிருப்தியடைந்த சிலர், கூட்டு நடவடிக்கைக் குழு (Joint Action Committee of Trade Unions) என்ற பெயரில் 7—9—78 அன்று உண்ணாவிரதமும், தீக்குளித்தலும் நடைபெறும் என அறிவிக்கும் அச்சடித்த பிரதிகளை விநியோ கித்தனர் என்று அறியப்படுகிறது. ஒழுங்கு நடவடிக்கையை எதிர் நோக்கியுள்ள ஒரே ஒரு ஊழியர் மட்டும் 7—9—78 அன்று மாலை உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். அன்றே, மிக மோசமான நடத்தை காரணமாக தற்காலிக வேலை நீக்கத் தில் இருக்கும் மற்றொரு ஊழியர் தீக்குளிக்கப் போவதாக அச்சுறுத்தினார். இக்குழுவின் தலைவர்களின் மற்றொருவர் கை யாடல் காரணமாக ஒழுங்கு நடவடிக்கையை எதிர் நோக்கி யுள்ள ஒரு நடத்துனராவார். எவ்வாறாயினும், 8—9—78 அன்று அக்குழு உண்ணாவிரதத்தையும், தீக்குளிப்பையும் ஒத்தி வைப்பதாக தாங்களாகவே அறிவித்தது. இடமாற்றம் செய் யப்பட்ட நடத்துனர்களோ, ஓட்டுநர்களோ இதில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை.

இவ்வித போராட்டம் தாங்கள் வேலையைத் திரும்பப் பெறவோ அல்லது வேலையில் நீடிக்கவோ உதவிகரமாக இருக்கும் என்ற தவறான எண்ணத்திற்கு ஊழியர்கள் இட்டுச் செல்லப்பட்டு விட்டதாகத் தோன்றுகிறது. அதிக அளவிலான ஊழியர்கள் வேலை பார்க்கும் போக்குவரத்துக் கழகத்தில், கழகச் சட்டங்களை மீறி நடப்பவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துத்தான் ஆகவேண்டும்.

அங்கீகாரம் பெற்ற தொழிற்சங்கம், மற்றும் பதிவு பெற்று ஆனால் அங்கீகாரம் பெறாத தொழிற் சங்கங்களுக்கும், நிர்வாகத் தினருக்கும் இடையே உள்ள உறவானது சுமுகமாக உள்ளது. கழக வேலைகள் எப்போதும் போல் நடைபெற்று வருகின்றன. சட்டத்திற்குட்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் அனைத்தும் அனுமதிக்கப்படுகின்றன. தொழிலாளர்களின் உண்ணாவிரதம் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. தற்போது சுமுகமான நிலை நிலவுகிறது.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, சம்பந்தப்பட்ட அமைச்சரை அவையில் காணோமே, அவர் இருந்தால் ப்ராப்பராக இருக்கும். இருந்தாலும் கேட்பதைக் கேட்டுவிடுகிறேன்.

சென்ற 12 ஆம் தேதியன்று நான் பேசும் பொழுது குறிப் பிட்டேன், ''அண்ணா போக்குவரத்து தொழிற் சங்கத்தின் முன் னிலையில் 11—6—78-ல் கலைஞர் கொடியேற்றி வைக்கிறார். 12—6—78-ல் அந்த விழாவுக்கு ஏற்பாடு செய்தவர்களை மாற்றி உத்தரவு போடுகிறார்கள். இது பற்றி போக்குவரத்து மந்திரி யிடம் நான் மனு தந்தேன். அந்த உத்தரவை நிறுத்தி வைப்ப தாக மந்திரி என்னிடம் கூறினார். ஆனால் அவர் செய்தது என்ன தெரியுமா ? எனது மனுவைத்தான் நிறுத்தி வைத்தார்.'' என்று சொன்ன பொழுது மாண்புமிகு அமைச்சர் பொன்னையன் குறுக் கிட்டு ஒழுங்கீனங்கள், கையாடல் குற்றத்திற்காக அவர்கள் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்பொழுது நான் சொல்லியிருக்கிறேன், ''நாளைக்கே நான் அமைச்சர் மீது உரிமை பிரச்னை கொண்டு வருகிறேன். உங்க ளுடைய மாறுதல் உத்தரவில் அப்படிப்பட்ட காரணங்கள் ஏதும் கூறப்படவில்லை'' என்று சொல்லியிருக்கிறேன். ஆனால் இன்று அவையிலே கொடுத்திருப்பதிலே என்ன இருக்கிறது என்று சொன்னால், ''அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் இட மாற்ற உத்தரவானது ஒரு சாதாரண அன்றாட அலுவல் நட வடிக்கையாகும். அவை பழிவாங்குவதற்கான ஒரு இடமாற்ற உத்தரவல்ல என்று அரசுக்கு தெரிய வருகிறது'' என்று சொல்லி யிருக்கிறார்கள்.

இந்த இரண்டில் எது உண்மை ? இன்றைக்குச் சொன்னதை உண்மை என்று எடுத்துக் கொண்டால் முன்பு சொன்னது தவறு என்று ஆகிறது, அது தவறு என்றால் உரிமைப் பிரச்னை வரும். தவறு ஏற்பட்டு விட்டது என்று சொன்னால் நான் இதை விட்டு விடுகிறேன். எது உண்மை என்று தெரிய வேண்டும். அவர் போட்ட உத்தரவை அவரே நிறுத்துவது நியாயமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாற்றல் உத்தரவு என்பதை ஒரு தண்டனையாகக் கருதுவது சரியல்ல. நிர்வாக அடிப்படையில் அந்த உத்தரவு இடப் பட்டது. தவறு செய்து இருந்தால் தனியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. க. சுப்பு : நீங்கள் சொன்னது நிர்வாக உத்தரவு. முன்பு சொன்னது, ஒழுங்கீனங்கள், கையாடல் என்று.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, பேரவையின் கூட்டத் தொடர் இன்றோடு முடிவடைகிறது. 42-இல் கொடுத்த தீர்மானங்களை 41 ஆக மாற்றியிருக்கிறீர்கள். . . .

[1978 செப்டம்பர் 14

திரு. க. சுப்பு: நான் கேட்டதற்கு அமைச்சர் பதில் சொல்லி விடட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அழகர்சாமி, நீங்கள் ஏதோ பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கிறீர்கள் என்று பார்த் தே ன். இதிலேயே இன்னொருவர், பழனிமுத்துவும் கொடுத் திருக்கிறார்.

திரு. க. சுப்பு: நான் கேட்க விரும்புவது கடைசி உத்தரவு தான் நிற்குமா? எது சரி?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நான் தெளிவாகச் சொன்னேன். எந்த மாற்றல் உத்தரவும், Transfer is not ordinarily to be construed as a punishment. It is only an administrative matter. ஆகவே, எந்த மாற்றல் உத்தரவும் அட்மினிஸ்ட்ரேட்டிவ் மேட்டர். மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தத் தொழி லாளர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்ற தகவலைத் தந்திருக் கிறார்கள் என்றால், அப்படித் தவறு செய்திருந்தால் அது இந்தப் பதிலிலே வராது. தனியாக நடவடிக்கைகளாக வரும்.

திரு. க. சுப்பு: அதற்காகத்தான் தொடர்புடைய அமைச் சர் இருக்க வேண்டுமென்று சொன்னேன். உங்களுடைய பதில் வருந்தத்தக்கதாக இருக்கிறது. இதற்குத் தொடர் புடையதாக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சம்பந்தப்பட்ட அமைச் சரே வந்துவிட்டார்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் எழுப்பிய பிரச்னைக்குப் பதில் தரப்பட்டிருக்கிறது. எந்த வகையிலே தொடர்புடையது இல்லை என்று சொல்கிறார்கள்? அவருக்கு வேண்டிய பதில் கிடைக்க வில்லை என்பதால் அப்படிச் சொல்கிறார்களா?

திரு. க. சுப்பு: நான் கேட்ட கேள்விக்கான பதில் இல்லை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மீண்டும் கேள்வியைக் கேட்டால் நான் பதில் சொல்கிறேன்.

திரு. க. சுப்பு: தாங்கள் இப்பொழுது கொடுத்துள்ள பதிலில் ஒரு விஷயத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். அன்றைக்குச் சொன்ன பொழுது, அண்ணா போக்குவரத்து தொழிற் சங்கத்தின் முன்னிலையில் 11—6—78-ல் கலைஞர் கொடி யேற்றி வைக்கிறார். 12—6—78-ல் அந்த விழாவுக்கு ஏற்பாடு செய்தவர்களை மாற்றி உத்தரவு போடுகிறார்கள். இது பற்றி போக்குவரத்து மந்திரியிடம் நான் மனு தந்தேன். அவர் அந்த

78 செப்டம்பர் 14] (திரு. க. சுப்பு)

மனுவைத் தான் நிறுத்தி வைத்தார், ஆர்டர் நிறுத்தப்படவில்லை, பேப்பர் தான் நிறுத்தி வைக்கப்பட்டது என்று சொன்ன நேரத் தில் அமைச்சர் பொன்னையன் அவர்கள் குறுக்கிட்டு, ஒழுங் கீனங்கள் கையாடல் குற்றங்களுக்காக அவர்கள் மாறுதல்செய்யப் பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இன் றைக்குக் கொடுத்திருக்கின்ற இந்த பதிலில் அது இல்லை. இன் றைக்குக் கொடுத்திருக்கும் பதிலில், அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் இட மாற்ற உத்திரவானது ஒரு சாதாரண அன்றாட அலுவல் நடவடிக்கையாகும், அவை பழிவாங்குவதற்கான ஒரு இடமாற்ற உத்தரவல்ல என்று அரசுக்குத் தெரியவருகிறது, என்று சொல்லி இருக்கிறார்கள். எனவே, நான் கேட்கிறேன் அன்றைக்கு சொன்னது தவறா, அல்லது இன்றைக்கு சொன்னது தவறா?

இன்னொன்றையும் சொல்லிவிடுகிறேன். உண்ணாவிரதத்தை அவர்களாகவே நிறுத்திக் கொண்டார்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதுவும் தவறு. மாண்புமிகு முதலமைச்ச ரோடு பேசுவது என்று ஒப்புக் கொண்ட பிறகு தந்தி கொடுத்து நாங்கள் நிறுத்தச் சொன்னோம். பதில் தந்தி அடித்திருக்கிறார்கள், நிறுத்தியிருக்கிறோம் என்று.

[முற்பகல் 11.20]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, அன்று நான் கூறியதும் இன்று இந்த அறிக்கையில் கூறியதும் ஆகிய இரண்டுமே சரியானது என்று நான் கூறிக்கொள் கிறேன். காரணம், transfer for administrative reasons என்ற காரணத்திற்காகத் தான் செய்யப்பட்டிருக்கிறது என்ற குறிப்பினை இதில் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், எந்த அட் மினிஸ்ட்ரேடிவ் ரீசன்ஸ் என்பதனையெல்லாம் தெளிவாக, டிரான்ஸ்ஃபர் செய்கின்ற பொழுது குறிப்பிடுவதில்லை. இந்தக் குறிப்பிட்ட டிரான்ஸ்ஃபர்கள் நடந்ததற்கு முக்கியமான காரணம் வேறு. உறுப்பினர் அவர்கள் அன்று கூறும்போது, எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் அன்று சேலம் சென்று கொடி யேற்றிய காரணத்தினால் 11-ம் தேதி, 12-ம் தேதி தான் அவர்கள் மாற்றப்பட்டார்கள் என்று கூறினார்கள். காரணம், 8-ந் தேதியே அவர்களையெல்லாம் மாற்றம் செய்ய வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டு அதை நடைமுறைப்படுத்தியது 12-ம் தேதி என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் மாற்றப்பட்டதற்கு மற்றொரு காரணம் அந்த ஓட்டு நர், நடத்துனர், மற்றப் பணியாளர்கள்-மாற்றப்பட்டவர்கள் மாண்புமிகு சுப்பு அவர்களது தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர் கள் என்பதும் தவறான செய்தி என்ற தகவல் வந்திருக்கிறது. சிலர் அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம்.

(திரு. சி. பொன்னையன்) [1978 செப்டம்பர் 14

பழனியப்பன் என்பவர் மாற்றம் செய்யப்பட்டார். பொதுவாக பணி மாற்றம், பல தவறுகளை அவர்கள் செய்யும் போது cumulat ve effect ஆக இறுதியிலே வேலைநீக்கம் கூட செய்யப்படும். அதற்கு முன்னால் பல தண்டனைகள் வழங்கப்படும். அபராதம் விதிக்கப்படும், பிறகு எச்சரிக்கை செய்யப்படும். அதற்குப் பிறகு பணி நீக்கம் கூடச் செய்யப்படுகிறது. இந்தப் பழனியப்பனைப் பொறுத்தவரை, டிக்கட்டுகளில் தொகைகளை மாற்றி, அடித்து எழுதியதற்காக ரூபாய் 4 அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. அடுத்து, பணம் வாங்காமலும் டிக்கட் வழங்காமலும் வேண்டியவர்களை ஏற்றிச் சென்றதற்காக ரூபாய் 2 அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. பின்னர், பணத்தைப் பெற்றுக்கொண்டு டிக்கட் வழங்காமல்—இது திருட்டுக் குற்றம்; அரசுப் பணத்தைக் கையாடல் செய்வது—அந்தக் குற்றத்தையும் செய்தார். அதற்குப் பிறகு மீண்டும் ஒரு முறை பணம் வாங்கிக் கொண்டு டிக்கட் கொடுக்காமலிருந்த குற்றம் செய்தார். அதல்லாமல் மற்றும் ஒரு முறை 4 டிக்கட்டுகளை இன்வாய்ஸ்களை இணைக்காமல் கொடுத்த தவற்றைச் செய்தார். இதுபோன்ற பல குற்றங்களைச் செய்தார்.

தொழிலாளர்களைப் பழி வாங்கக் கூடாது, குறிப்பாக—போக்குவரத்துத் தொழிலாளர்கள், ஓட்டுநர், நடத்துநர் இவர்கள் வறுமை நிலையில் இருக்கின்ற காரணத்தால் முடிந்த அளவு எச்சரிக்கை கொடுத்து, அபராதம் போன்ற தண்டனைகள் கொடுத்து, இறுதியாக வேறு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றுதான் இந்த மாற்றுதல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில்தான் வருவாய் மிகுதியாக இல்லாத பகுதிகளில், இந்த மாதிரி தவறுகள் செய்யச் சந்தர்ப்பங்கள் குறைவாக உள்ள பகுதிகளில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதுபோலவேதான் மீதி இருப்பவர்களுக்கும் மாற்றம் தரப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, (மணியடிக்கப்பட்டது) இது முக்கியமான பிரச்சினை. அவர் சொன்னது தப்பு என்பதற்காகச் சொல்ல வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முக்கியமென்றால் ஒரு முறைதான். ஒரு முறை வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

திரு. க. சுப்பு : ஒரு கண்டக்டரைக் குற்றம் சாட்டுகிறார் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேலே கேட்டுக் கொண்டே போனால் அவை (குறுக்கீடு) அதைக் கட்டுப்படுத்தத்தான் நான் இருக்கிறேன்.

திரு. க. சுப்பு : நல்லதுதான். தாங்கள் கட்டுப்படுத்தவேண்டு

1978 செப்டம்பர் 14]

திரு. ரா. உமாநாத் : சுவிச்கியர் விஷயமாக அமைச்சரிடம் தகவல் இருக்கிறது; அவர் சொல்லட்டும்.

திரு. க. சுப்பு : ஒரே ஒரு கருத்தைக் கேளுங்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து எல்லோரும் கடைபிடிப்பதைத் தாங்களும் பின்பற்றுங்கள்.

திரு. க. சுப்பு : பாவம், அவர் வாழ்க்கை கெட்டுவிடும்.

(3) தகவல் கோரல் (தொடர்ச்சி)

41, 42, 184 ஆகிய விதிகளின் கீழ் உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து.

மாண்புமிகு திரு, எஸ். இராகவானந்தம் : சுவிச்கியர் மாண்புமிகு உமாநாத் அவர்கள் கேட்டதற்கு என்னி சம்பந்தமாக மாண்புமிகு உமாநாத் அவர்கள் தகவல் இல்லை. ஆனால், என்னிடத்தில் டத்தில் நேரடியான தகவல் கொடுக்கலாம் என்று அவைத் தலைவர் இருக்கின்ற தகவலைக் தருகிறேன். இந்தத் தொழிற்சாலையில் 14-3-1978: அனுமதித்தால் தருகிறேன். சென்னை இரண்டாவது தொழி முதல் வேலை நிறுத்தம் நடந்தது. தொழில் தகராறை விசார லாளர் துறை ஆணையாளர் மேற்படி தொழில் தகராறை விசார லைக்கு எடுத்துக் கொண்டார். ஆயினும், உடன்பாடு ஏற்படவில்லை உடனடியாக ரூபாய் 5 இலட்சம் அளவுக்கு நிதி உதவி தேவை என்று நிர்வாகத்தினர் தெரிவித்தனர். அதற்கு வேண்டிய முயற்சிகளை அதிகாரிகள் செய்கின்றனர்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வேலை நிறுத்தத்திற்குப் பிறகு, எனக்குக் கிடைத்த தகவல் செட்டில்மென்ட் ஆகிவிட்டது என்பதுதான். அதற்குப் பிறகு கடந்த 6, 7 மாதங்களாக ஏராளமான தொழிலாளர்கள் பட்டினி கிடந்து இருக்கிறார்கள், அதிலே ஸ்டேட் கவர்ன்மெண்ட் பணமும் அரை கோடி ரூபாய்கள் முடங்கிக் கிடக்கின்றது. அதையும் காப்பாற்றவேண்டும், தொழிலாளர்களையும் காப்பாற்ற வேண்டும். அதுமட்டுமல்லாமல், நாட்டிற்குத் தேவையான 50 சதவீதம் கருவிகள் இந்த பாக்டரியிலேதான் தயாராகிறது. 22 கோடி ரூபாய்க்கு ஆர்டர்கள் இருக்கின்றன. அரசுக்கு ஒரு யோசனை சொல்கிறேன், மத்திய அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ்—இண்டஸ்டிரீஸ் அமைச்சர்—அவர்களை எங்கள் சி. ஐ. டி. யு. பொதுச் செயலாளர் தோழர் இராமமூர்த்தி அவர்கள் சந்தித்து "பெல்" நிறுவனம், "இந்தியா மீட்டர்" போன்ற நிறுவனங்களை எப்படி நடத்துகிறார்களோ, அதே மாதிரி எடுத்து நடத்த வேண்டும் என்று கேட்டதை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால், அவர் சொன்னார், மாநில சர்க்கார் அப்படி ஒரு கோரிக்கையை வைத்தால் "பார்தர் ஆக்ஷன்" எடுக்கிறேன் என்று சொல்லி

[1978 செப்டம்பர் 14

இருக்கிறார்கள். நான் ரெஸ்பான்சிபிலிடி எடுத்துச் சொல்லு கிறேன். ஆகவே, மாநில சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்து ஒரு கோரிக்கையை அனுப்பினால் நல்லபடியாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றிய தகவல் எங்களுக்கு இல்லை.

But the position is this. The re-opening of the factory has been held up only for want of necessary financail assistance from the State Bank of India. The matter has been taken up with the Bank and it is hoped that an early solution will be found. We are hoping against hopes that early solution will be found. As to other information I am not in a position to comment now.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். We are hoping against hopes. என்று அது நம்பிக்கைக்கு எதிரான நம்பிக்கை என்று அர்த்தமாகிவிடும். (குறுக்கீடு) அது நல்ல அர்த்தமாக இருந்தால் சரிதான். என்ன அர்த்தம் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். அந்த நிறுவனத்தைப் பொறுத்த மட்டில் 7 மாதங்களாக 500 தொழி லாளர்கள் பட்டினி கிடக்கின்றார்கள். இதிலே தமிழ்நாடு அர சாங்கம் நேரடியாக பங்கு கொண்டிருக்கிறது. டி.ஐ.ஐ.சி. பணம் 25 சதவீதம் இருக்கிறது. ஆகவே, நேரடியாக முதல் அமைச்சர் கேரண்டி கொடுத்தால் ஸ்டேட் பாங்கியிலே பணம் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். மற்ற தொழிற்சாலை களுக்குக் கொடுக்கும்போது, என்பீல்டு இன்டியா தொழிற் சாலைக்கு கொடுத்ததைப்போல இதற்கும் கொடுத்தால் தவறு இல்லை. அப்படி இல்லாவிட்டால், கேரளாவில் செய்ததைப் போல, குவாலியர் ரயான்ஸ் நிறுவனத்தை எடுத்ததைப்போல எடுத்துக் கொள்ள அவசரச் சட்டம் போடவேண்டும். எதெதெற் கெல்லாம் அவசரப்படுகின்ற இந்த அரசாங்கம் இதற்கு அவசரப் படக் கூடாதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர் களே, நான் ஏற்கெனவே திரு. உமாநாத் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னேன். The matter has been taken up with the Bank and it is hoped that an early solution will be found.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சொரணம், இராசமாணிக்கம், நல்லதம்பி, பொன்னுரங்கம், ஆர். கிருஷ்ணன். அவர்கள் 41-வது விதியின் கீழ் கொடுத்த. கவன ஈர்ப்பு தீர்மானம் என்னால் அனுமதிக்கப்பட்டு அரசின் சார்பில்இருந்து இன்னும் பதில் வரவில்லை. அப்படி பதில் வருகிறபோது அச்சிட்டு அவர்களுடைய இல்லங்களுக்கு அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். (குறுக்கீடு) அவர்கள் பெயர்கள் பதிய வேண்டும் என்று நினைக்கிறார்கள். அப்படிப் பதிவதால்தான் பதில் தரவேண்டிய கடமை ஏற்படுகிறது.

1978 செப்டம்பர் 14] [பேரவைத் தலைவர்]

திருவாளர்கள் நல்லதம்பி, இராசமாணிக்கம், புருஷோத்தமன், பொன்னுரங்கம், அரங்கசாமி, உச்சி, ஜேம்ஸ், அழகர் சாமி போன்றவர்கள் 41-வது விதியின்கீழ் கொடுத்திருக்கிற பிரச்சினைக்கு, அரசாங்கத்தின் தரப்பில் இருந்து பதில் வரவில்லை. அப்படி வருகிறபோது அவர்களுடைய இல்லங் களுக்கு நிச்சயமாக அனுப்பி வைக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர். இன் றைக்கு நம்முடைய பேரவை கடைசி நாள். ஏற்கெனவே சில காரியங்களுக்குப் பரிகாரம் காண்பதற்கு நாங்கள் இப்படிக் கொடுத்து அரசின் பதிலை எதிர்பார்த்து வந்ததால்தான், நிச்சய மாக மக்களுக்கு அதை சொல்லி, நன்மைகள் செய்ய முடியும் என்று எதிர்பார்க்கிறோம். ஆகவே, சுருக்கமாக, 41-வது விதி யின் கீழ் மற்ற தீர்மானங்களை அனுமதித்ததைப் போல இதையும் அனுமதித்து இந்த மாதிரி சமாசாரம் என்று சொல்லும்போது அமைச்சர் அவர்களும் பதில் சொல்வார்கள் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த அடிப்படையில்— அவர்கள் பதில் அளிப்பார்கள். நீங்கள் கொடுத்த 41-வது விதி யின்கீழ் உள்ள அறிக்கைக்கு இன்னும் பதில் வரவில்லை. அமைச்சர் எப்படி விளக்கம் அளிப்பார்கள்?

திரு. சோ. அழகர்சாமி : இங்கே சொல்லுவதற்கு விரோத மாக நடைபெறுகின்றது. ஜப்தி இருக்காது என்று சொன்னார்கள். ஆனால், ஜப்தி நடக்கிறது ....

[முற்பகல் 11-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த விதியின்கீழ் நான் அதை அனுமதிக்க முடியும்?

திரு. சோ. அழகர்சாமி: நான் 41-வது விதியின்கீழ் அறி விப்புக் கொடுத்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்து இருப்ப தற்கு அரசிடமிருந்து எனக்குப் பதில் வரவில்லை. பதில் வந்தால் தான் அனுமதிக்க முடியும். என் கடமை அவ்வளவுதான். அதற்கு மேல் எனக்கு அதிகாரம் இல்லை. (குறுக்கீடு) இப்படி நீங்கள் கேட்டுக் கொண்டே போனால் நேரம் போதாது. அரசு மசோதாக்கள் நிறைவேற்றப்பட வேண்டும். அமைச்சர்களை பதில் கொடுங்கள் என்று நான் கட்டாயப்படுத்த முடியாது. நீங்கள் 41-வது விதியின்கீழ் கொடுத்துள்ளதற்குப் பதில் வந்து இருக்குமானால் நான் அதை அனுமதித்து இருக்க முடியும்.

திரு. சோ. அழகர்சாமி: நீங்கள் எங்களை மட்டும் கட்டுப் படுத்தலாமா?

[1978 செப்டம்பர் 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்ற உறுப்பினராக நீண்ட நாட்கள் இருப்பவர்கள் எனக்கு வழி காட்ட வேண்டும். அரசிடமிருந்து பதில் வராதபோது நான் எந்த விதியின் கீழ் அதை அனுமதிப்பது?

திரு. சோ. அழகர்சாமி: இதற்கு முன்னாலே ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டு, அவற்றிற்கெல்லாம் உடனடியாக பதில் அளிக்கப்பட்டு இருக்கின்றன. 10 ஆண்டுக் காலமாக அப்படித்தான் நடந்து வந்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசாங்கத்திடமிருந்து பதில் வராமல் நான் எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? அதற்கு வழி சொல்லுங்கள்.

திரு: சோ. அழகர்சாமி: இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் சட்டமன்ற உறுப்பினர் நம் பிரச்சினையைக் கிளப்பவில்லையே என்று கேட்பார்கள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுமக்களுக்கு அரசாங்கம் தருகிற அறிக்கையைப் படித்துக் காட்டுங்கள்.

திரு. தி. சு. நல்லதம்பி: தலைவரவர்களே, டி. ஐ. சைக்கிள் பற்றி எடுத்துக் கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த விதியின் அடிப்படையில் இவை இங்கே கேட்கிறீர்கள்?

திரு. சோ. அழகர்சாமி: அரசுத் தரப்பில் இருந்து பதில் வரவில்லை என்று சொல்லுகிறீர்கள்? எப்போது வரும்? அறையில் வந்து கேட்டபோது அவையில் வந்து கேளுங்கள் என்று சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறையில் வந்து கேட்ட போது நான் அதைத்தான் சொன்னேன். இங்கே ஒவ்வொரு வரையும் கேள்வி கேளுங்கள் என்று சொன்னேன். ஆனால் அவர்கள் அதைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை.

திரு. க. சுப்பு: பெயர்களைச் சொல்லிவிட்டீர்கள். அது என்னென்ன பிரச்சினை என்பதையும் நீங்களே சொல்லி விடுங்கள், அது போதும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு, உட்காருங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர், சார்...

1978 செப்டம்பர் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். நீங்கள் பொறுப்பு வாய்ந்த சட்ட மன்ற உறுப்பினர். உங்களுக்குத் தெரியும். நீங்கள் விதி 41, 42-ன் கீழ் அறிவிப்புகள் கொடுக்கிறபோது, அரசுத் தரப்பில் இருந்து பதில் வந்தால்தான் அதை நான் அவையில் அனுமதிக்க முடியும். நீங்கள் கொடுத்து இருப்பது அரசின் கவனத்திற்கு வந்து, தங்களுக்கு பதில் வர வேண்டும் என்பதற்காகத்தான் பெயர்களை இங்கே குறிப்பிட்டேன். அப்படிச் செய்ய வேண்டும் என்று எந்த விதியிலும் இல்லை. திரு. அழகர்சாமி போன்றவர்கள் அதை வற்புறுத்தக் கூடாது. தயவு செய்து அவைத் தலைவரோடு ஒத்துழையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே நேரத்தை வீணாக்க வேண்டாம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, என்னுடைய உரிமை இதிலே எப்படி பாதிக்கப்படுகிறது என்பதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இது மிகவும் அவசரம் வாய்ந்த பிரச்னை. ஆகவே தான் எழுத்து மூலம் 42-வது விதியின்கீழ் கொடுத்தேன். நீங்கள் அதை 41-வது விதியின்கீழ் என்று மாற்றி விட்டீர்கள். அதுவும் சட்டமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்கிறபோதுதான் வருத்தமாக இருக்கிறது. அதுவும் அந்த விஷயம் என்ன என்று சொல்லக்கூட இங்கே அனுமதிக்க மறுப்பு சொல்கிறபோது வருத்தமாக இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகர்சாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், விதி 41-ல் கொடுத்திருந்தாலும் அல்லது 42-ல் கொடுத்திருந்தாலும் கவர்னர் உரையில் பேசலாம் என்று தள்ளியிருப்பேன். நீங்கள் உங்கள் கடமையைச் செய்ய வேண்டுமென்று சொல்கிறீர்கள். நான் என்னுடைய கடமையைச் செய்ய வேண்டும். நீங்கள் பல ஆண்டு காலம் இந்த அவையில் இருந்திருக்கிறீர்கள். உங்களுக்கு எல்லாம் தெரியும். அரசிடமிருந்து பதில் வந்தால்தான் நான் அதை இங்கே வைக்க முடியும் ; வரவில்லை என்றால் நான் ஒன்றும் செய்ய முடியாது. தாங்கள் ஏதாவது விவரம் கேட்கவேண்டும் என்றால் அதை என்னுடைய அறையிலே வந்து கேட்க வேண்டுமே தவிர இந்த அவையில் வந்து கேட்கக் கூடாது; அது மரபு அல்ல. உங்களை அனுமதிப்பதாக இருந்தால் இங்கே இருக்கிற 235 உறுப்பினர்களும் இப்படிக் கேட்க ஆரம்பித்தால் நான் என்ன செய்ய முடியும்? இப்போதே நேரம் ஆகிவிட்டது. தயவு செய்து உட்காருங்கள். (திரு. மு. அரங்கநாதன், திரு. நல்லதம்பி ஆகியோர் எழுந்தார்கள்) தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள்.

7 அறிக்கை அளித்தல்.

(அ) மதிப்பீட்டுக் குழு அறிக்கை.

திரு. கா. செங்கோடன் : மாண்புமிகு தலைவரவர்களே,
ஆவண பதிவுத் துறைபற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்
துறைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து
மதிப்பீட்டுக் குழுவின் ஐந்தாவது அறிக்கையையும், பாசனத்
துறை பற்றி மதிப்பீட்டுக் குழுவின் ஆருவது அறிக்கையையும்
அவைமுன் வைக்கிறேன்.

(ஆ) அரசினர் உறுதிமொழிக் குழுவின் அறிக்கை.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : தலைவரவர்களே, அரசினர்
உறுதிமொழிக் குழுவின் 1977–78-ஆம் ஆண்டுக்கான இரண்
டாவது அறிக்கையை (ஆருவது சட்டமன்றப் பேரவை) அவை
முன் வைக்கிறேன்.

(இ) பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை.

திரு. இரா. முத்தையா : பேரவைத் தலைவரவர்களே,
1965–66 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரி
யத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீதான
பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை அவைமுன் வைக்
கிறேன்.

8 அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள்
(வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாம்
திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே :—

"தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள்
(வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது
திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட
முன்வடிவு எண். 38/1978) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்
பெற வேண்டும்"

என்று முன் மொழிகிறேன்.

*1978 செப்டம்பர் 11 ஆம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளி
யிடப்பெற்றுள்ளது.

*திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவரவர்களே, இன்றைய தினம் 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு அளிக்கின்ற சட்ட முன்வடிவின்மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே கொண்டுவந்திருக்கக்கூடிய இந்தச் சட்டத்தின் மூலம் விவசாயிகளிடமிருந்து குத்தகை வசூல் செய்வதை இன்னும் 6 மாத காலத்திற்குத் தள்ளி வைக்க வகை செய்யப்படுகிறது. இது குத்தகை விவசாயிகள் எதிர்பார்த்ததற்கு மாருக கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

தமிழக விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்குப் பதிலாக குத்தகை பாக்கிகளை எல்லாம் தள்ளுபடி செய்யக்கூடிய சட்டத்தைக் கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அதற்கு மாருக இன்றைய தினம் அவர்களுக்கு ஏமாற்றம் அளிக்கும் விதத்தில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்பட இருக்கிறது. அதனால் இந்தச் சட்டம் விவசாயிகளுக்கு ஒரு பாதகமான நிலைமையை ஏற்படுத்துகின்ற சட்டம் என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற மூன்ருண்டு காலமாக தமிழ்நாட்டில் கடுமையான பாதிப்பு விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கின்றன. முதலிலே வறட்சி ஏற்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு கடுமையான புயல் வீசி இருக்கிறது. அதற்குப் பின்னல் புயல் காரணமாக ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள். சென்ற ஆண்டு இதே மன்றத்தில் இதே மாதிரியான ஒரு சட்டத்தைக் கொண்டுவரும்போது இதே காரணத்தைத் தான் சொல்லியிருக்கிருர்கள். இப்படி 2, 3 ஆண்டுகளாக பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளால் எப்படி குத்தகை பாக்கிகளைக் கொடுக்க முடியும் என்பதை விவசாயிகள் நலனில் அக்கறை கொண்டிருக்கிற இந்த அரசு நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இந்தச் சட்டமன்றத்தில் 4 தினங்களுக்கு முன்னல் செய்தி அறநிலையத் துறை அமைச்சரவர்கள் ஒரு கருத்தைச் சொன்னர்கள். கோயில் நிலங்களிலே குத்தகை சர்குபடி செய்யக் கூடிய விவசாயிகள் கொடுக்க வேண்டிய பாக்கிகளை சிவில் கோர்ட் மூலமாக வசூல் செய்து கொள்ளலாம் என்று ஒரு கருத்தைச் சொன்னர்கள். அப்படி வசூல் செய்துகொள்வதற்குத் தடை ஏதும் இல்லை என்று கூட சொல்லியிருக்கிருர்கள்.

[திரு. இரெ. இராசமாணிக்கம்] [1978 செப்டம்பர் 14
[முற்பகல் 11-40]

அந்தக் கருத்தை வலியுறுத்துவது போல் நம்முடைய மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் நேற்றைக்கு முன்தினம் பேசுகிற
போது கோயில் நிலங்களுக்குக் கொடுக்க வேண்டிய குத்தகை
பாக்கிகளைக் கண்டிப்பாகக் கொடுத்துத்தான் ஆக வேண்டும்
என்று சட்டமன்றத்திலே பேசி இருக்கிறார்கள்.

நான் உள்ளபடியே இந்த நேரத்திலே விவசாயி
களின் சார்பாக பணிவோடு தெரிவித்துக்கொள்
கிறேன், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில்
எல்லா நிலங்களும், கிட்டத்தட்ட பல ஆயிரக்கணக்கான
ஏக்கர் நிலங்கள் கோயில்களுக்கும், மடங்களுக்கும் சொந்தமான
நிலங்களாகத்தான் இருக்கின்றன. அவற்றைப் பல ஆயிரக்
கணக்கான விவசாயிகள் பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள்.
அதுவும் இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட புயலாலும் வெள்
ளத்தாலும் கடுமையான பாதிப்புக்கு ஆளாகி இருப்பவர்கள்
தஞ்சை மாவட்ட விவசாயிகள். அப்படி பாதிக்கப்பட்டிருக்கக்
கூடிய விவசாயிகள் கொடுக்க வேண்டிய அந்தக் குத்தகை பாக்கிகளை
கண்டிப்பாகக் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று அறநிலையத்
துறை அமைச்சரவர்களும், மாண்புமிகு முதலமைச்சரவர்களும்
வெளியிட்டிருக்கக்கூடிய கருத்து பயிரிடும் விவசாயிகள்
மேலும் பாதிப்புக்கு ஆளாகக்கூடிய ஒரு கருத்து என்பதை மிகவும்
பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இப்படிப்பட்ட
ஒரு கருத்தை இந்த அவையிலே தெரிவித்திருப்பது விவசாயிகள்
மத்தியிலே ஒரு பெரும் பரபரப்பான, பதட்டமான நிலையை
உருவாக்கி இருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்
கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சட்டம் கொண்டு வருகிற நேரத்தில்
நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதற்கு முன்னால்
தமிழ்நாட்டிலே ஆட்சி செய்த திராவிட முன்னேற்றக் கழக
அரசு நிலம், கோயில் மடம் யாருக்குச் சொந்தமாக இருந்தாலும்
குத்தகை பாக்கிகளை எல்லாம் தள்ளுபடி செய்யக்கூடிய வகை
யில் ஒரு சட்டத்தை இந்தச் சட்டமன்றத்திலே கொண்டு வந்து
நிறைவேற்றியது. ஆகவே அது போன்று அந்தக் குத்தகை பாக்கி
களை எல்லாம் தள்ளுபடி செய்யக்கூடிய வகையில் இன்றைய
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு
சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்பதைப் பணிவோடு
கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கொண்டு வருகிறபோது நிலம்,
கோயில் மடம் யாருக்குச் சொந்தமானதாக இருந்தாலும் வி
விலக்கு கொடுக்காமல் எல்லோருக்கும் குத்தகை பாக்கிகளைத்
தள்ளுபடி செய்து கொடுக்கக்கூடிய அளவில் விவசாயிகள் வாழக்
கூடிய அளவில், அந்தச் சட்டம் இருக்கவேண்டும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 செப்டம்பர் 14] [திரு. இரெ. இராசமாணிக்கம்]

பேரறிஞர் அண்ணா அவர்கள் உழுபவனுக்கு நிலம் சொந்த மாக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். நாம் எல்லோரும் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கின்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிய அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு உழுபவனுக்கே நிலம் சொந்த மாக்கப்பட வேண்டும் என்ற சட்டத்தை இயற்றி நிறைவேற்றியது. ஆனால், அந்தச் சட்டம் இன்றைய தினம் எந்தக் காரணத்தாலோ முடக்கி வைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, மீண்டும் அந்தச் சட்டத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டுவர வேண்டும். அதுவும் உடனடியாகக் கொண்டு வர வேண்டும் என்று நான் மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள் கிறேன். அப்படி உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்கப்பட்டால் தான் தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளை வாழ வைக்க, அவர்களைப் பாதுகாக்க முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைய தினம் தமிழகத்தில் இருக்கக்கூடிய விவ சாயிகள் அனைவரும் கடன்காரர்களாக இருக்கிறார்கள். தன் னுடைய மனைவியின் கழுத்திலே இருக்கக்கூடிய நகைகளை எல்லாம் கொண்டு வந்து அடகு வைக்கக் கூடிய நிலையிலே இருக்கிறார்கள். அவ்வாறு இன்றைய தினம் விவசாயிகள் தவித்துக் கொண்டிருக் கிறார்கள். மூன்றாண்டுக் காலமாக கூட்டுறவுச் சங்கங்களால் கொடுக்கப்பட்ட கடன்களைக்கூட திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் கடன்காரர்களாக அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார் கள். ஆகையினால், தயவுசெய்து கூட்டுறவுச் சங்கங்கள் அரசு கடன் உட்பட எல்லாக் கடன்களையும், குத்தகை சாகுபடி பாக்கி உட்பட தள்ளுபடி செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.) ஆகவே, உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற அளவில் ஆக்கப்பட வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்ததைப் போல் குத்தகை பாக்கிகள் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சிறு விவசாயிகளுக்குத் தேவையான உரம், பூச்சி மருந்து, விதை போன்றவைகளை அவர்களுக்குத் தேவையான அளவுக்கு நியாயமான விலைகளில் வழங்கவேண்டும் என்றும் இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே பேசு கிறபோது பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் கொண்டுவருகிறபோது, சில இடங்களில் பரீட்சார்த்தமாக செய்து பார்த்து பிறகு எல்லா

இடங்களுக்கும் கொண்டு வருவோம் என்று சொன்னார்கள்.
ஆகவே, அந்த நிலையில் பரீட்சார்த்தமாகக் கொண்டு
தமிழகம் முழுவதும் பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டு வராமல்
வர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.
போதுதான் விவசாயிகளை வாழ வைக்கக்கூடிய ஒரு திட்டமாக அப்
அது இருக்கும், ஏழைகளை வாழ வைக்கக்கூடிய ஒரு நிலைமை
ஏற்படும் என்பதைத் தெரிவித்து, வருவாய்த் துறை அமைச்ச
ரவர்கள் அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைத் தமிழக சட்ட
மன்றத்திலே கூடிய விரைவில் சமர்ப்பிப்பார்கள் என்று
எதிர்பார்த்து நான் என்னுடைய உரையை முடித்துக்
கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

[மாண்புமிகு துணைத் தலைவர் தலைமை]

*<u>திரு. எம். அண்ணாமலை</u> : தலைவர் அவர்களே, பயிரிடும்
குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்)
இரண்டாவது சட்ட முன்வடிவின் பேரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சி சார்பில் எனது கருத்துக்களை முன் வைக்கிறேன். இப்
போது பயிரிடும் குத்தகைதாரர்களை வெளியேற்றப்படுவதில்
இருந்து மேலும் 6 மாத காலம் நீட்டிக்கும் பொருட்டு வகை
செய்யும், இந்தத் திருத்தத்தை வரவேற்பதோடு, கடந்த ஐந்து
வருட கால அனுபவத்தை எடுத்துக் கொண்டால் மேலும் 6
மாதத்திற்கு குத்தகை பாக்கி வசூலில் இருந்து ஒத்திவைப்பது
என்பது ஒரு நிவாரணமாக இருக்காது. கடந்த ஐந்தாண்டுகளில்
இயற்கையாக ஏற்பட்ட வெள்ளச்சேதம், வறட்சி அல்லது பயிர்
கொல்லி பூச்சித் தொல்லைகள் இவற்றினால் விவசாயிகள் எந்தள
விற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் அவர்களது விவசாயத்
தொழிலை மீண்டும் செய்ய முடியாத ஒரு சூழ்நிலையிலும், தங்கள்
குடும்பங்களை நடத்த முடியாத ஒரு கட்டத்திலும் அவர்கள்
இன்று தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, மேலும் ஒரு ஆண்டு
இதை நீட்டிக்க வைத்தாலும்கூட அது பயன் அளிக்காது.
ஆகவே, நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர
விரும்புவது என்னவென்றால், அந்தக் கடன்கள் முழுமையும் ரத்து
செய்யப்பட வேண்டும். மேலும் ஒத்திவைக்கப்பட்ட காலங்
களிலும்கூட பரவலாக மாநிலம் முழுவதிலும் நிலப் பிரபுக்கள்
ரௌடிகளை வைத்துக் கொண்டு குத்தகை பாக்கிகளை பலாத்கார
மாக வசூலிப்பதும், நிலத்தை விட்டு வெளியேற்றப்படும் நிலை
இருப்பதையும், அதைப் பற்றிய புகார்கள் அதிகாரிகளிடமும்
போலீஸிடமும் எடுத்துக் கூறியும் போதுமான கவனிப்பும் பாது
காப்பும் இல்லாத ஒரு சூழ்நிலையிருக்கிறது. ஆகவே, அரசாங்கம்
இதைப் பரிசீலனை செய்து குத்தகை விவசாயிகளுக்குப் பாதுகாப்பு
அளிப்பதோடுகூட அவர்களுக்கு முழு நிவாரணமும் அளிக்க
வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

*<u>திரு. பொ. உத்திராபதி</u> : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவை கொண்டு வந்திருக்கிறார்கள். தற்போது இதை ஆதரிக்கிறோம். ஆனால் 1385 பசலி வறட்சி, 1386 பசலி வெள்ளம், 1387 பசலி புயல், வெள்ளம், இது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப் பட்ட ஒன்று. கூட்டுறவு நாணயச் சங்கங்கள் கடன்கள் எல்லாம் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. வரி வஜா செய்யப்பட்டிருக் கிறது. இவ்வளவையும் அரசாங்கம் செய்தும் குத்தகை பாக்கி களைத் தொடர்ந்து ஒத்தி வைத்துக் கொண்டு போவது என்பது சாலச் சிறந்ததல்ல. உடனடியாக குத்தகை விவசாயிகளைப் பாது காக்கும் அடிப்படையில் வெகு விரைவில் அனைத்துக் குத்தகை பாக்கிகளையும் தள்ளுபடி செய்வதற்கு அரசாங்கம் முன்வர வேண் டும். இன்றிருக்கக்கூடிய அரசு தந்தை பெரியார் அவர்களது பாரம்பரியத்தில் வளர்ந்து வந்து இன்றைக்கு ஆட்சியில் இருக் கிறார்கள். தந்தை பெரியார், இந்த நாட்டில் சாமி என்ற பெயரால் ஆசாமிகள் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள், அப்படிப்பட்ட சாமி தேவையில்லை என்று தமிழ்நாடு பூராவும் பரப்பி வந்திருக்கிறார்கள். இன்றைக்குகூட அதே சாமிகளை, தில்லை நடராசர் சிலையை அமெரிக்காவிற்குக் கொண்டுபோய் போட்டு நொறுக்கினார்கள். அந்தச்சாமி அவர்களை ஒன்றும் செய்ய வில்லை. குத்தகை விவசாயிகள் நிலத்தில் பயிரிட்டு, உழைத்து தங்கள் குடும்பத்தைப் பாதுகாத்து வருகிறார்கள். எனவே கோவில், மடங்கள் இவற்றின் பெயரால் இருக்கக்கூடிய நிலங்களை இந்த அரசு தைரியமாக எடுத்து அவற்றைக் குத்தகை விவ சாயிகளுக்குச் சொந்தமாக்க வேண்டும். அப்படியாக்கினால் தமிழ் நாட்டிலுள்ள சாமிகள் அத்தனையும் கூடி இந்த தந்தை பெரியார் கொள்கை வழியில் வந்தேன் என்று சொல்கிற அரசைப் பாராட் டும், நன்றி செலுத்தும். குத்தகை பாக்கி அத்தனையும் தள்ளுபடி செய்யப்படவேண்டும். கோவில், மடங்கள் இவற்றின் நிலங்களில் உள்ள குத்தகை விவசாயிகளுக்கு அந்த நிலத்தைச் சொந்தமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

<u>திரு. ரா. மார்க்கபந்து</u> : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, இந்த மசோதாவை அறிமுகப்படுத்துகிறபோது அதன் ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீஸன்ஸில்,

Pending finalisation of the permanent relief measures to cultivating tenants it is also proposed to extend the protection given to cultivating tenants under President's Act 36 of 1976 upto and inclusive of the 15th January 1979

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 செப்டம்பர் 14
[முற்பகல் 11-50[

என்று தந்திருக்கிறார்கள். எனக்குள்ள குறை என்னவென்றால் —
விவசாயிகளுக்குப் பாதுகாப்புத்தரவேண்டும் என்பதில் ஒத்த கருத்
துடையவர்கள் நாங்கள். ஆனால், ஏற்கனவே உள்ள ஒரிஜனல்
சட்டத்தில் செக்ஷன் 4 (ஏ) என்ற செக்ஷன் இருக்கிறது. அதில்,
சப் லீஸாக இருந்தாலும் அல்லது விவசாயத்திற்காக என்றிருக்கிற
நிலத்தை பயிரிடுகிற பர்பஸ்க்காகப் பயன்படுத்தாது வேறு ஐட்
டங்களுக்காக பயன்படுத்தினால் அவர்களை வெளியேற்றலாம் என்ற
நிலைமைகள் எல்லாம் செக்ஷன் 4 (ஏ) யில் இருந்தது, அதுவும்
இல்லாதவர்கள் 10 ஏக்கர் நிலத்தை வைத்திருந்தால், நிலச்
சொந்தக்காரர்கள் சொந்த உபயோகத்திற்காக சொந்தமாகப்
பயிரிட வேண்டும். பெர்ஸனல் கல்டிவேஷன் என்ற முறையில்
நிலத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று விரும்பினால், குத்
தகைக்கு கொடுத்திருக்கின்ற நிலத்தில் பாதியை ரிலீஸ் செய்து
கொள்ளலாம் என்று முன்பு சட்டம் இருந்தது. ஆனால் பின்னால்
வந்த 36/78-வது சட்டத்தில் 4-ஏ பிரகாரம் பூராவையும்
குத்தகைதாரர்களே வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்
பட்டது. இப்படி ஒட்டுமொத்தமாக குத்தகை நிலத்தை யாருமே
எடுத்துக்கொள்ளமுடியாது என்ற நிலையை வைத்திருப்பது
சரியல்ல.

ஒன்றை நாம் சிந்திக்க வேண்டும். கணவனை இழந்த
விதவைகள் இருக்கிறார்கள், அவர்கள் தங்கள் நிலத்தை குத்த
கைக்காக விட்டிருந்தால், இப்போதுள்ள சட்டப்படி நிலத்தையும்
சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொள்ள முடியாது, குத்தகையை
யும் வசூல் செய்து கொள்ள முடியாது பட்டினி கிடந்து சாக
வேண்டியது தான். அதுபோன்று அரசாங்க உத்தியோகத்தில்
இருப்பவர்கள், தங்களுக்குச் சொந்தமான நிலங்களை வேறு
ஒருவருக்கு குத்தகைக்கு விட்டிருந்தாலும், உத்தியோகத்தில்
இருந்தவர்கள் ரிட்டயராகிவிட்டு, வேலையிலிருந்து போகும்போது,
சொந்தமாகப் பயிரிடவேண்டுமென்று நிலத்தைக் கேட்பதற்கும்
வழியில்லை,குத்தகையையும் கேட்பதற்கு வழியில்லை என்ற நிலைமை
வந்துசேருகிறது. ஆகவே ரிட்டயர்டு பெர்ஸன்ஸ், விடோஸ் இவர்
களை இந்தச் சட்டத்திலிருந்து எக்ஸம்ப்ட் செய்து கொடுப்பது
சரியாக இருக்கும் என்று நம்புகிறேன். அப்படியில்லாமல் ஒட்டு
மொத்தமாக நிலத்திலிருந்து யாரையுமே வெளியேற்ற முடியாது
என்று சொல்லப்பட்டிருப்பது சரியல்ல. இப்போதுள்ள நிலையை
மாற்றி குத்தகைக்கு விடப்பட்டிருக்கும் நிலங்கள், நஞ்சையாக
இருந்தால் 5 ஏக்கரும், புஞ்சையாக இருந்தால் 7½ ஏக்கரும்,
இதற்குக் கீழேயுள்ளவர்களுக்கு ஒரு கேட்டகரியாக
கொண்டு வந்து சொந்த உபயோகத்திற்குத் தேவை என்று கருது
கின்றவர்கள் எடுத்துக்கொள்ளலாம். நஞ்சையாக இருந்தால்
5 ஏக்கரும், புஞ்சையாக இருந்தால் 7½ ஏக்கரும், இதற்கு மேல்
இருந்தால் குத்தகைதாரர்கள் எடுத்துக் கொள்ளலாம்
என்ற முறையில் 36/78 என்ற சட்டத்தில் ஒரு பிரவிஷனை

1978 செப்டம்பர் 14] [திரு. ரா. மார்க்கபந்து]

சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே 36/78 ஆக்டில், குத்தகை பாக்கி பெண்டிங்காக இருந்தால், குத்தகை பாக்கித் தொகையில், ஒரு பசலிக்கு உள்ளதை மட்டும் கொடுத்துவிட்டால், முன்னால் உள்ள பாக்கியெல்லால் வைப் அவுட்டாகிவிடும் என்று சொல்லப்பட்டிருப்பது போல், இப்போது ஆறு மாதங்கள் நீடிப்பு (எக்ஸ்டன்ஷன்) என்று சொல்லுகின்ற நேரத்தில், ஏற்கெனவே இருக்கின்ற பாக்கியில் ஒரு பசலிக்கு மட்டும் குத்தகை பாக்கியை செலுத்திவிட்டால், ஏழை எளிய மக்களுடைய குத்தகை பாக்கி வைப் அவுட்டாகிவிடும். அந்த முறையில் இந்தச் சட்டத்தில் வழிவகை செய்தால் நலமாக இருக்கும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

*<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u> : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் பயிரிடுபவர்கள், குத்தகைதாரர்கள், இவர்களை வெளியேற்றக் கூடாது என்கின்ற அவசரச் சட்டத்தை இப்போது சட்ட முன்வடிவாக இங்கே கொண்டு வந்திருக்கின்ற இந்த நேரத்தில் இதன் மீது உறுப்பினர்களுடைய கருத்துக்களையும் கேட்டு நிறைவேற்றித் தரவேண்டும்என்கின்ற வகையில் இங்கு பேச இருக்கிறேன். இங்குள்ள அருமை நண்பர்கள் இந்தச் சட்டத்தை நீட்டிப்பதை பூராவாக வரவேற்கிறோம் என்றும், சிலர் இதற்கு உடனடியாகப் பரிகாரம் தேடாமல், இப்படி நீட்டித்துக்கொண்டு போவது சரியல்ல என்றும் சொன்னார்கள். சிலர் நீட்டித்தது சரி என்றும் சிலர் இப்படி நீட்டிப்பது சரியல்ல என்றும் பேசியிருக்கிறார்கள். அரசு இதைப்பற்றி சரியான முடிவுகளை எடுத்து விரைவில் நிலைமைகளை சீர்திருத்தும் என்பதை இங்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

அருமை நண்பர் மார்க்கபந்து அவர்கள் பேசும்போது, குத்தகைக்கு விட்டிருக்கும் சில நிலச் சொந்தக்காரர்கள் விதவைகளாக இருக்கிறார்கள், அவர்களால் வாழ்வதற்கு வேறு வழியில்லை; வேறு வழியில் பணம் சம்பாதிக்க முடியாது; அவர்கள் இந்தக் குத்தகை நிலத்தை நம்பித்தான் வாழ வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு வாழ்வதற்கு என்ன வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்ற ஒரு கேள்வியை கேட்டிருக்கிறார்கள்.

இவைகளையெல்லாம் இந்த அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் சொல்கிறபோது, 4 (ஏ) என்று ஒன்றைச் சொன்னார். அப்படி 4 (ஏ) என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது. அந்தப் பிரிவிலே இருக்கின்ற நிலைமையை நான் தெளிவாகச் சொல்கிறேன். இந்த 4 (ஏ) என்றால், குத்தகை வெள்ளாமைக்காக ஒருவன் நிலத்தை எடுத்திருந்தால், அந்த நிலத்தின் சொந்தக்காரர் சொந்த வெள்ளாமைக்காக பாதியை எடுத்துக் கொள்ளலாம் என்று விதி இருந்தது. இந்த விதி நீக்கப்பட்டிருக்கிறது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகஅரசு இந்த விதியை மீண்டும் நிச்சயமாக கொண்டு வராது என்பதையும் நான் தெரிவித்துக் கொண்டு இந்த சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[1978 செப்டம்பர் 14

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள
கேள்வி — '' தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை
தாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்
டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட
முன்வடிவு எண் 38/1978) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற
வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்
றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்
கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்
பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின்
முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே,

'' தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள்
(வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது
திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்
வடிவு எண் 38/1978) சட்டமாக நிறைவேற்றப்பெறவேண்டும் ''
என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவை முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்
பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக ஆக்கப்பெற்றது.

3 தகவல் கோரல் (தொடர்ச்சி) :

(ஆ) அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனின் ஆண்ட
றிக்கை இந்தியில் அனுப்பப்பட வேண்டும் என்று சொல்லப்
பெறுவது குறித்து.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு சட்டப் பேரவையின்
துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையிலே நான் ஏற்கெனவே
இந்தப் பிரச்னையை எழுப்பியிருக்கிறேன். மத்திய சர்க்கார்
இந்தியைத் திணிக்காது என்று சொல்லிக்கொண்டே, இந்தத்
தமிழ் நாட்டிலே இருக்கும் தமிழ்நாடு அக்ரோ இண்டஸ்ட்ரீஸ்
கார்ப்பரேஷன், தன்னுடைய பைனன்ஷியல் ரிப்போர்டை இந்தியில்
எழுதி அனுப்பினால்தான், மத்திய சர்க்கார் நிதி உதவி அளிக்கும்
என்ற ஒரு குறிப்பு வந்திருக்கிறதா ? ஆனால், கேரளாவில் அப்படி

1978 செப்டம்பர் 14] [திரு. அ. ரகுமான்கான்]

ஒரு குறிப்பு வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அப்படி நமக்கும்
தாக்கீது வந்திருக்கிறதா, அப்படி வந்திருந்தால் அதன்மீது
என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்று நான்
கேட்டேன். அப்போது நமது மாண்புமிகு நிதி அமைச்சர்
அவர்கள், அது குறித்து தகவல் சேகரித்து, இந்த அவையிலே
அறிவிப்பதாகச் சொன்னார்கள். அப்படி ஏதாவது தகவல்
வந்திருந்தால், அதை இந்த அவையிலே அறிவித்தால் நலமாக
இருக்கும் என்று நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைக்
கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, நான் அதிகமான நேரத்தை எடுத்துக்
கொள்ளப் போவதில்லை. நமது ரகுமான்கான் அவர்கள் நேற்
றைக்கு அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் பற்றியும், அந்த
கார்ப்பரேஷன் சார்பாக பைனான்ஷியல் ஸ்டேட்மெண்டை மத்திய
சர்க்காருக்கு அனுப்பும்போது, அதை இந்தியில்தான் அனுப்ப
வேண்டுமென்றும், இல்லாவிட்டால் அதைப்பற்றி பரிசீலிக்க முடி
யாது என்று மத்திய சர்க்கார் கூறி தடுத்து விட்டதாகவும் பத்திரி
கையிலே செய்தி வந்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். நானும்
கூட நேற்று சொன்னேன். நானும் அந்தப் பத்திரிகைச் செய்தி
யைப் பார்த்தேன் என்று குறிப்பிட்டேன். 11-9-1978 ஆம்
தேதிய 'இண்டியன் எக்ஸ்பிரஸ்'லே வந்துள்ள செய்தி.

The Union Government is reported to have refused by implica-
tion to make available its share of finances to Kerala Government's
Agro Industries Corporation, unless the Corporation fell in line
with the Centre's policy on Hindi என்று குறிப்பிட்டிருக்கிறது.

[நண்பகல் 12-00]

நான் அதைப் பற்றிய தகவலைச் சேகரித்தேன். எனக்குக்
கிடைத்த தகவலின்படி நான் அந்தக் கருத்தைத் தெரிவிப்பதற்கு
முன்பு ஒன்றை மட்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்தி
ஆதிக்கத்தை எதிர்த்து நிற்பதில் இந்த அரசு எந்தக் காரணத்தைக்
கொண்டும் பின்வாங்காது என்பதையும், அதிலே எந்தக் கட்சிக்
கும் இளைத்த கட்சியாக இது இருக்காது என்பதையும் பல
முறை இந்த மன்றத்திலே நான் தெரிவித்திருக்கிறேன். முதல
மைச்சர் அவர்கள் இதை அழுத்தந்திருத்தமாக வலியுறுத்திப்
பேசியிருக்கிறார்கள். இது குறித்து நான் கடிதம் ஒன்றை
பிரதம அமைச்சருக்கு சில நாட்களுக்கு முன்னால் எழுதிய
அந்தப்பகுதியை ஒரு சந்தர்ப்பத்தில் இதே அவையில் மாண்புமிகு
உறுப்பினர் துரை முருகன் அவர்கள் படித்துக் கூடக் காட்டி

ஞர்கள். நான் அந்தக் கடிதத்தில் எழுதியது— நிலைமை நெருக்
கடியாகப் போகுமானல் இந்திய துணைக்கண்டம்—பன்மையில்
ஒருமை என்ற அந்தப் பண்பாடு நிச்சயமாகப் பாதுகாக்கப்படா
மல் போகும். அதன் மூலம் பிரிவினை அபாயம் ஏற்பட வாய்ப்பு
இருக்கிறது என்ற கருத்தை எழுதி அதற்குப் பிரதம அமைச்சர்
அவர்கள் தனது கருத்தைத் தெரிவிக்கிறபோது 'உங்களது
மாநிலத்தைப் பொறுத்தவரை நீங்கள் இரண்டு மொழிக்
கொள்கையை பின்பற்றுகிறீர்கள்; ஆகையால் இது உங்களைப்
பாதிக்காது' என்று அவர்கள் தனது கடிதத்திலே எழுதியிருக்
கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் இன்னொன்றையும் நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். ரயில்வே நிலையங்களில் எங்கே
பார்த்தாலும் சரி, இந்தியிலே எழுதப்பட்டிருக்கிற ஒரு சூழ்நிலை
இருப்பதை ஆக்ராவில் இருக்கும் ஒரு மாணவர் தனது எண்ணங்
களை வெளிப்படுத்துவதற்காக, முயற்சி செய்து நேஷனல்
ஹெரால்டு என்ற பத்திரிகையில் எழுதியபோது குறிப்பிடுகிறார்—
'நீங்கள் நாடாளுமன்றத்தில் எந்தக் காரணத்தைக் கொண்டும்
ரயில்வே துறையில் இந்தியை ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்று
சொன்னீர்கள். நான் ஆக்ராவில் இருந்து பல பகுதிகளுக்கும்
வட நாட்டில் சுற்றுப் பயணம் செய்தவரை எனக்குக் கிடைத்த
அனுபவங்கள் அத்தனையும்— அனைத்துப் பெயர்களும் இந்தியிலே
தான் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
நாடாளுமன்றத்தில் ஒரு கருத்தும், ஆனால் வெளியே நீங்கள்
சொல்லுகிற கருத்துக்கு மாறாக கருத்துக்கள் அமைவதும் செய
லாக்கம் பெறுவதும் எப்படிப் பொருத்தமானதாக இருக்கும்
என்று எழுதியிருக்கிறார். நான் அதை டில்லியில் இருந்தபோது
படித்துப் பார்த்து, அதைக் கத்தரித்து, அதனுடைய ஒரு
பிரதியை நமது ரயில்வே அமைச்சருக்கு அனுப்பி—'இந்தப் பகுதி
மக்கள் பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள்; உங்கள் ரயில்வே
டிப்பார்ட்மெண்டிலும் அமைச்சரவையிலும் இப்படிப்பட்ட
நிலைமை வருமானால் விரும்பத்தகாத விளைவுகள் உண்டாகும் என்
றும், ஆகையால உடனடி பதில் தேவை' என்று தெரிவித்து
கடிதம் எழுதினேன். ஒரு வாரத்திற்கு முன்பு அவர் எனக்கு
எழுதிய கடிதம்—'உங்களுடைய கடிதம் பெற்றேன். நான்
நிசசயமாக அதைப் பற்றித் தீர விசாரித்து விரிவான விளக்க
பதிலை உங்களுக்குத் தருகிறேன்' என்று எழுதியிருக்கிறார் என்
பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு மேலும் சும்மா இருக்கவில்லை. ஒவ்வொரு துறை
யிலும் இப்படிப்பட்ட நிலைமைகள் நடக்கும்போது உடனுக்
குடன் அரசின் கவனத்தைக் கவர்ந்து எந்தக் காரணத்தைக்
கொண்டும் தமிழக அரசு இதை ஏற்றுக் கொள்ளாது என்பதை

வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை ரகுமான்கான் அவர்
களுக்கும் மற்றைய நண்பர்களுக்கும் நான் இந்த நேரத்தில் தெரி
வித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு இங்கே இருக்கிற தமிழ்நாடு அக்ரோ
இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டுக்கு ஏதாவது கடிதம்
வந்திருக்கிறதா என்று கேட்டார். நான் கொஞ்சம் விளக்கமாகச்
சொல்வதற்காக என்னை மன்னிக்க வேண்டுமென்று கேட்
டுக் கொள்கிறேன். 1972 ஆம் ஆண்டு மானேஜிங் டைரக்டர்,
தமிழ்நாடு அக்ரோ இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷனுக்கு டில்லி
யிலிருந்து அண்டர் செகரட்டரி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.
அந்தக் கடிதத்தின் முக்கிய பகுதிகளை மட்டும் நான் படிக்கிறேன்.

"Under Section 619 (1) (b) of the Indian Companies Act, it is
obligatory on the part of the Corporation that their Annual Reports
should be placed at the Table of both Houses of Parliament simulta-
neously in both these languages. I, therefore, request that arrange-
ments may kindly be made to supply the Hindi version of the
Reports already sent immediately, as already requested. In future
also Reports to this Ministry-both the English and Hindi verisons
may be sent simultaneously as this is a requirement of the Parlia-
ment." என்று கடிதம் எழுதியிருந்தார்கள். அதற்குப் பின்னல்
நான் இங்கே நடந்ததைப் பற்றித் தெரிவிப்பது எனது
கடமையாக இருக்குமென்று கருதுகிறேன்.

நம்முடைய பெருமதிப்பிற்குரிய சுப்பையா அவர்கள் இதற்
குத் தலைவராக இருந்தபோது அவர்கள் அனுப்பிய கடிதத்தை
இந்த நேரத்திலே படிக்க விரும்பாவிட்டாலும் அந்தக் கருத்தை
மட்டும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். அவர் தெரிவித்
தது, இந்தியிலே நீங்கள் எழுதியனுப்ப வேண்டுமென்று கேட்
டிருக்கிறீர்கள், இந்தியிலே எழுதியனுப்புவதற்கு எங்களுக்கு
ஒன்றும் அபிப்பிராயபேதம் இல்லை. ஆனால் அப்படி எழுதியனுப்
பும் பொழுது ஏதாவது பிழைகள் இருக்குமானால் அந்தப்
பிழைகளைத் திருத்திக்கொள்ளுகின்ற பொறுப்பை நீங்கள்
எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிவிட்டு, 1972 ஆம்
ஆண்டிற்குப் பிறகு தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது
அனுப்பப்பட்ட பைனன்ஷியல் ரிப்போர்ட் இந்தியிலே அச்சடிக்கப்
பட்டு இங்கேயிருந்து அனுப்பப்பட்டது, இந்தியிலே அச்சடிக்கப்
பட்டு அனுப்பப்பட்ட அந்த பைனன்ஷியல் ரிப்போர்ட் இங்

கிருந்து (மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதை
காட்டினார்கள்) அனுப்பப்பட்டது, இதிலிருந்து நீங்கள் அவைக்குக்
கொள்வீர்கள் என்று நம்புகிறேன். 1972 ஆம் தெரிந்து
தக் காரணத்தைக் கொண்டும் நாங்கள் இந்தியிலே ஆண்டிலே எந்
டோம் என்று சொல்லியிருந்தால் நிலைமை அனுப்ப மாட்
மாக இருக்கக்கூடும். தமிழ்நாடு அக்ரோ ஒருவேளை வேறுவித
ரேஷனை இரண்டு பேர்களும் இணைந்து இண்டஸ்ட்ரிஸ் கார்ப்ப
கிறார்கள், ஒன்று தமிழ்நாடு, இன்னொன்று நடத்திக் கொண்டிருக்
அதற்காக 3 கோடியே 30 லட்சம் ரூபாய் மத்திய சர்க்கார்,
தனத்தை இரண்டு பேர்களும் பகிர்ந்து அளவில் உள்ள மூல
தீர்கள் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். நடத்திக்கொண்டிருக்கி
மைப் பொறுத்தவரையில் நான் அதற்குப் பிறகு நம்
பத்திரிகையிலே வந்ததைப்போல எந்தவிதமான தெரிவித்துக் கொள்கிறேன்,
படி தமிழ்நாடு அக்ரோ-இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷனுக்கு கடிதமும் அப்
வில்லை என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். வர

It has been since ascertained over the phone from the Secretary of
the Tamil Nadu Agro Industries Corporation Thiru K. V. Sampath
Kumar that Annual Reports in Hindi have been furnished to the
Government for the Report of 1970-71, from 1972 onwards.
அதிலிருந்து அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. Copies
of the Eleventh Annual Report of the Corporation for
1976-77 in English have been sent to the Government of India.
It is also learnt from him that the Government of India have called
for Hindi version of the report also, but no communication as stated
in the Press Cutting has been received by the Tamil Nadu Agro
Industries Corporation. Government have also not received
any such communication from the Government of India so far.
என்பதை அவர்கள் மூலம் நான் பெற்றிருக்கிறேன்.
நான் விளக்கமாக திரு. ரகுமான்கான் அவர்களுக்குத் தெரிவித்துக் இதை
கொள்கிறேன். இரண்டும் தேவை என்று அவர்களைக் கேட்ட
போது, அதை ஒப்புக்கொண்டு இந்தியிலே பைனான்ஷியல் ரிப்
போர்ட்டை அனுப்பிய அரசு தி.மு.க. அரசு என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன். நான் குறை சொல்வதாக யாரும் தயவு
செய்து கருதக்கூடாது. திரு. சுப்பையா அவர்கள் எழுதிய
கடிதத்திலே நீங்களும் பாதி கேப்பிடல் போடுகிறீர்கள், நாங்களும்
பாதி கேப்பிடல் போடுகிறோம். அந்த அடிப்படையிலே இந்தியிலே
அனுப்புவதிலே ஆட்சேபனையில்லை, ஆனால் அதிலே ஏதாவது
தவறுகள் வருமானால் திருத்திக்கொள்கின்ற பொறுப்பை நீங்கள்
ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கேரள அரசுக்கு அப்படிப்பட்ட கடிதம் வந்தபோது டேலன்டட் இந்தி டிரான்ஸ்லேட்டர்ஸ் எங்களிடம் இல்லை, நாங்கள் ஆங்கிலத்திலேயே அனுப்புகிறோம், நீங்கள் அதை மொழிபெயர்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னதற்கு மத்திய சர்க்கார் மறுத்திருக்கிறது என்ற செய்தி வந்திருக்கிறது. அப்படிப்பட்ட செய்திகள் இந்த அரசுக்கு வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் விளக்கமான பதிலை இங்கே வைத்தார்கள். தி.மு.க. ஆட்சியின்போது அக்ரோ-இன்டஸ்ட்ரீஸ் பைனான்ஷியல் ரிப்போர்ட் இந்தியிலேஅனுப்பப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அவசரநிலைப் பிரகடனம் செய்யப்பட்டிருந்த நேரத்திலே நிதியமைச்சர் அவர்கள் நாடாளுமன்றத்திலே 'வி ஆர் ஃபார் இந்தி' என்றும். கருணாநிதிதான் மொழிப் பிரச்சினையைத் தூண்டுகிறார் என்றும் பேசி இருக்கிறார்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியிலிருந்து திரு. ரகுமான்கான் திசை மாறி எங்கோ சென்றுகொண்டிருக்கிறார். ஆகவே வழிபார்த்து தடம்பார்த்துச் செல்ல வேண்டுமென்று அவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : நிதியமைச்சர் அவர்கள்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கனவே பத்திரிகையிலேயே வந்து விளக்கப்பட்டது. அதை இப்போது இங்கே பேசமுடியாது.

[பிற்பகல் 12-10]

திரு. அ. ரகுமான்கான் : மத்திய அரசிலிருந்து ஒரு அறிவிப்பு வந்தால் அதைக் கிழித்து எறியவேண்டும் என்று சொல்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, கிழிக்கிற வேலை, வெட்டுகிற வேலை இந்தச் சர்க்காருக்கு இல்லை, கடமையாற்றுவதுதான் வேலை.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதியதைப்பற்றியும், பதில் வந்ததைப்பற்றியும் சொல்கிறார்கள். அவர்கள், நீங்கள்தான் இருமொழிக் கொள்கையைக் கடைபிடிக்கிறவர்கள் ஆயிற்றே, எனவே, இந்தப் பிரச்சினை வராது என்று குறிப்பிட்டதாகக் குறிப்பிட்டார்கள். நமக்குள்ள

சந்தேகமெல்லாம், மத்திய அரசாங்கமும்,
இந்தி பேசும் மாநிலங்களும் முழுமையாக இன்னும் மற்ற
படுத்துவது என்று உத்தரப்பிரதேசம், இந்தியைப் பயன்
மாகாணங்களில் முழுவதும் இந்தியைப் பீகார் போன்ற
தை அகற்றிவிடுவது என்ற ஒரு பயன்படுத்தி ஆங்கிலத்
கொண்டிருக்கிறார்கள். நம்மைப்போன்ற மொழிக்கொள்கையை வைத்துக்
மாநிலங்கள் ஆங்கிலத்தையும் அப்புறப்படுத்த இந்தி பேசாத
தமிழையும் பயன்படுத்த முடியவில்லை என்ற ஒரு நிலை முடியவில்லை,
இந்தி கட்டாயமாக மறைமுகமாகத் திணிக்கப்படுகிறது இருப்பதால்
சொல்லும் நிலை ஏற்படுகிறது. எனவே, இருமொழிக்கொள்கை என்று
என்ற பிரதமரின் வார்த்தைகளை நம்பாமல், மற்ற மாநிலங்களில்
ஆங்கிலமும் இந்தியும் என்றும், இந்தி பேசாத மாநிலங்களில்
ஆங்கிலம் அசோசியேட்டட் லாங்க்வேஜாக இருக்கும் என்றும் நேரு
கொடுத்த வாக்குறுதி நடைமுறையில் இருக்க வேண்டுமென்று
இந்த அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இன்னொன்றையும் நான்
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். துணைத் தலைவரவர்களே,
நாங்கள் பிரதம அமைச்சருக்கு எழுதிய கடிதத்தின் கடைசிப்
பகுதியைப் படிக்கிறேன்.

"Already you have stated that the slogan of the three language
formula has been completely given a go-by in Hindi States where
one language formula is in vogue. In those States Hindi is the
mother tongue, regional language and ultimately official language
If such type of baffling and bewildering psychological situation is
allowed to develop, I am a raid along with that, unity in diver-
sity may be put to a severe and shocking test."

இந்த உணர்வுகளை உணர்ந்ததற்குப் பிறகு அதை உணரக்
கூடிய ஆற்றல் அருமை நண்பர் ரகுமான்கான் அவர்களுக்கும்,
துரை முருகன் அவர்களுக்கும் இருக்கும் என்று நம்பி இதற்கு
மேல் இதை வலியுறுத்தவேண்டியதில்லை என்று கூறி அமர்கிறேன்.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே,.............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள்,
இன்னும் நிறைய பில்கள் இருக்கின்றன.

திரு. துரை முருகன் : இது முக்கியமான விஷயம். அக்ரோ
இன்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷன் ரிப்போர்ட் அனுப்பியதைப்
பற்றி நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது
நீங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் கார்ப்ப

ரேஷன் ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறதா? எப்படி அதை அனுப்பி யிருக்கிறது? அல்லது அனுப்பப் போகிறது என்றால் எப்படி அனுப்பப்போகிறது? இதை நிதியமைச்சரவர்கள் தெளிவாக்கு வார்களா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இதைப்பற்றித் தனிக் கேள்வி போடவும்.

திரு. துரை முருகன் : துணைத் தலைவரவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் மிகவும் அழகாகச் சொன்னார்கள். நிதியமைச்சரவர் களுடைய இந்தி எதிர்ப்புக் கொள்கையின் தாபத்தை நான் உணர்கிறேன்....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : உங்களுடைய உணர்வு களை உணர்ந்திருக்கிறேன். உங்களுடைய யோசனை நிச்சயம் அரசின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. துரை முருகன் : துணைத் தலைவரவர்களே, நிதியமைச்சர் அவர்கள் என்னை ஓரிடத்தில் நிறுத்தி விட்டு வேறு வழியாகப் போகப் பார்க்கிறார். நான் கேட்க விழைகிறேன், அவரே சொன்னார், அது நம்முடைய கார்ப்பரேஷன் அல்ல, அவர்கள் பாதி, நாம் பாதி, நம்முடைய சபையிலேயும் வைக்க வேண்டும், அவர்கள் சபையிலேயும் வைக்க வேண்டும், அவர்கள் சபையிலே இந்தியிலேவைக்க வேண்டும் என்பதற்காக, அவர்கள் பணம் கொடுக்கிறார்கள், இந்தியிலே எழுதி அனுப்பியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அப்படியேதான் இப்பொழுதும் மாநில அரசும் மத்திய அரசும் சேர்ந்து நடத்துவதால் நீங்கள் எப்படி அனுப்பியிருக்கிறீர்கள்? அல்லது எப்படி அனுப்பப்போகிறீர்கள்? திராவிட முன்னேற்றக் கழகம்தான் இந்தியில் அனுப்பியது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதற்கு எதிர்ப்பு என்று சொல்லட்டும் அல்லது அதன் வழி நிற்கிறோம் என்று இருக்க வேண்டும் அல்லது தவிர்க்க முடியாதது என்று இருக்க வேண்டும்.

THIRU A. RAHMAN KHAN : Thiru Durai Murugan has raised a fine point. That is an issue for consideration.

THE HON. THIRU K. MANOHARAN: It is a very beautiful English speech.

நான் அந்தக்கால வரலாற்றைச் சொன்னேன். கடுமை யான குற்றச்சாட்டாக அதைக் கருதக் கூடாது. வருங் காலத்தில் என்ன செய்யப் போகிறீர்கள் என்பது உங்கள் கேள்வி. ஏற்கனவே பைனான்ஷியல் ஸ்டேட்மெண்ட் அனுப்பப்பட்டிருக்

கிறதா என்பது உங்கள் கேள்வி. அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. அதை எப்படி அனுப்புவது என்பதுபற்றி நாங்கள் முடிவெடுப்போம் என்பதையும் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முறையோடு, எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அந்த அடிப்படையில் தமிழகத்தின் நலன் காக்கின்ற அளவுக்கும் தமிழுக்குக் கேடு வராத அளவுக்கும் இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்குப் பிறகும் நீங்கள் தயவுசெய்து வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : 1972-லே அனுப்பியதைப் பற்றி அவர்களுக்குத் தகவல் இருக்கிறது. 'லேட்டஸ்ட்' தகவல் இல்லையென்று சொல்வது—

It will amount to suppression of material to the House. It will amount to breach of privilege.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : (ஒரு புத்தகத்தைக் காண்பித்து) இது 1976, upto 1976 போயிருக்கிறது. அடுத்தது, இதுவரையில் போகவில்லை. After 1976 இனிமேல்தான் போகும் என்றுதான் சொல்கிறேன். (குறுக்கீடு) ஆளுநர் ஆட்சியில் எதில் அனுப்பினார்கள் என்று எனக்குத் தெரியாது. இதற்கு முன்னாலே தொடர்ந்து 1972-லேயிருந்து அத்தனையும் இந்தி, 1976 வரை என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : நான் தெரிந்துகொள்ள விழைவது..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பதில் சொல்லி முடித்தாகிவிட்டது.

திரு. துரை முருகன் : நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? அவர் எல்லாவற்றுக்கும் பதில் சொல்வார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது டிஸ்கஷனோ, கேள்வி நேரமோ கிடையாது. நீங்கள் கேள்வி கேட்டீர்கள், அவர் பதில் சொன்னார்கள்.

THIRU K. SUPPU: Let the hon. Minister not suppress the facts.

திரு. துரை முருகன் : இது மானத்தோடு விளையாடுகிற பிரச்சனை. அவர் தி.மு.க. மீது குற்றமும் சொல்லவில்லை, இதிலே விளக்கம் சொன்னால் ஒன்றும் இல்லை..........
(கூச்சல் குழப்பம்).

ஏற்கனவே ஒரு முறை நான் பிரிவிலெஜ் கமிட்டிக்குப் போயிருக்கிறேன். மறுபடியும் அங்கு போகும்நிலையைக் கொண்டு வராதீர்கள். நான் எவ்வளவோ பணிவாகக் கேட்கிறேன். (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : யாராவது ஒருவர் சொல்லுங்கள்.

(திரு. துரை முருகன் எழுந்து நின்றார்).

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : எந்தக் கேள்வியை நீங்கள் கேட்கப் போகிறீர்களோ அதைப் புரிந்துகொண்டு நான் பதில் அளிக்கிறேன். நாம் இரண்டுபேரும் நீண்டகாலமாகப் பழகியவர்கள். ஆகவே, நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள் என்பதைப் புரிந்துகொண்டு, தெரிந்துகொண்டு பதில் அளிக்கிறேன்.

The report for 1976-77 has not yet been sent in Hindi. 1977-78 report is not ready even in English.

திரு. அ. ரகுமான்கான் : நான் பிரிவிலெஜ் எழுப்புகிறேன், உரிமை மீறல் பிரச்னையை எழுப்புகிறேன்.

I raise a privilege matter against the Hon. Finance Minister under Rule 184. விதி 184-ன் கீழ், அவைக்குள்ளேயே உரிமை மீறல் பிரச்னை இருக்குமானால், அந்த உரிமை மீறலை அப்பொழுதே கவனத்திற்குக் கொண்டு வரலாம். அந்த விதியின்கீழ் நான் உரிமை மீறல் பிரச்னையை எழுப்புகிறேன்.

Ag o Industries Corporation Financial Report—

அறிக்கை இந்தியில் தயாரிக்கப்படுகிறதா என்ற கேள்வியை நான் கேட்டேன். அந்தக் கேள்விக்கு அமைச்சரவர்கள் விளக்கம் கொடுத்தார்கள், செய்திகளைச் சேகரித்துதான் நான் இந்த அவையில் வைப்பேன் என்று சொன்னார்கள், செய்திகளைச் சேகரிப்பேன் என்றும் சொன்னார்கள். இப்பொழுது விவரங்களையும் எடுத்துச் சொன்னார்கள். ஆனால், மிக சௌகரியமான, அவருக்கு சௌகரியமான விஷயங்களை மட்டும் சொல்லி,

he has supprassed material facts - suppression of material facts

சொல்ல வேண்டிய தகவலை வேண்டுமென்றே சபைக்குக் கொடுக்காமல் மறைத்திருக்கிறார்கள் என்று சொல்லி, எல்லாத் தகவல்களைக் கொடுப்பதற்குப் பதிலாக மாண்புமிகு நிதியமைச்சரவர்கள்........

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான், துணைத் தலைவரவர்களே, தயவு செய்து திரு. ரகுமான்கானுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், என்னைத் தெரிந்தவர்களுக்குத் தெரியும், எதையும் மறைத்து வைத்து வழக்கம் இல்லை, வெளிப்படையாகச் சொல்லித்தான் பழக்கம். அதை நீங்கள் நம்பவில்லை யென்றால் தயவு செய்து நம்புங்கள். அந்த " suppression of facts " எனக்குத் தெரியாது. உங்களிடமிருந்து அந்த வார்த்தைகளை நான் கற்றுக் கொண்டதற்காகப் பெருமைப்படுகிறேன்.

[பிற்பகல் 12-20.]

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்— (தொடர்ச்சி).

(ஆ) தமிழ்நாடு 1978-ம் ஆண்டு, வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தி அமைத்தல் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1978).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தி அமைத்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1978) என்ற சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கோருவார்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே. " தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு வேளாண்மை காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்காக மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தி அமைத்தல் சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1978) என்ற சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, இங்கே தரப்பட்ட The Tamil Nadu Revision of Tariff Rates on Suppl of Electrical Energy for Non-Agricultural Purposes Bill, 1978

* 1978 செப்டம்பர் 12 ஆம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

என்ற மசோதாவின்மீது நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை தங்கள் மூலம் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதிலே மிகத் தெளிவான, முக்கியமான அம்சம், மத்திய சர்க்கார் ஏறத்தாழ 3 பைசா எக்சைஸ் சர்சார்ஜ் உயர்த்தியிருக்கிறார்கள் என்பதாகும். அதனால் 15 கோடி ரூபாய்கள் இங்கே இருக்கக் கூடிய தமிழ்நாடு எலக்டிரிசிடி போர்டுக்கு சிரமம் இருக்கிறது. அந்தத் தொகையைக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகையினால் இங்கே எலக்டிரிசிடி கன்சம்ஷன் செய்யக்கூடிய கன்சூமர்கள் பயன்படுத்துகின்ற மின்சாரப் பட்டியலில் இந்தத் தொகை இணைக்கப்பட வேண்டும் என்று, அதுவும் மார்ச்சு மாதத்தில் இருந்து இந்தத் தொகை இணைக்கப்பட வேண்டும் என்று இந்த மசோதா இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது.

நான் கேட்டுக்கொள்வதெல்லாம், ஏறத்தாழ 30 ஆண்டு காலம் ஆகின்றன இந்தியா சுதந்திரம் பெற்று. இந்த 30 ஆண்டுக் காலத்தில் மத்திய அரசாங்கம் இப்படிப்பட்ட ஒரு வரியை போட்டதாக எனக்குத் தகவல் கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட வரியை 30 ஆண்டு கால ஆட்சியிலே போட்டதாக இல்லை. கேரளாவில் இல்லை, ஆந்திராவில் இல்லை, பீகாரிலே இல்லை, இந்தியாவிலே வேறு எங்குமே இப்படி ஒரு சர்சார்ஜ் போடவில்லை என்பதுதான் நான் பெற்ற தகவல். ஆனால் முதன் முறையாக இன்றைய தினம் மத்திய அரசு போட்டிருக்கிறது. அதை எப்படி ஈடுகட்டுவது, நாங்கள் என்ன செய்ய முடியும், மத்திய அரசு இப்படி ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறது. அதனால் 15 கோடி ரூபாய்கள் இன்றைய தினம் பைனான்சியல் கமிட்மென்ட் சரிகட்ட வேண்டும். அதற்கு வேறு வழியில்லை, விவசாயிகள் அல்லாத மின்சாரம் உபயோகிப்பாளர்களிடம் இருந்துதான் இந்த மின் கட்டண சர்சார்ஜை சேர்க்கவேண்டும் என்று இவர்கள் சொல்லுகிறபோது நான் கேட்கிறேன், இப்படி மத்திய சர்க்கார் போட்டிருப்பதை தவறு என்று சொல்லுகிறார்கள், கடிதம் எழுதியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள், இது ஒரு தவறான ஆர்டர், இந்த சர்சார்ஜ் 3 பைசா கொடுக்கக்கூடாது, தமிழ்நாட்டின் மீது இந்த மாபெரும் சுமையைச் சுமத்துகிறது, நாங்கள் போராடுவோம் என்றெல்லாம் சொன்னார்கள். இப்போதுதான் நமது நிதி அமைச்சர் அவர்கள், அக்ரோ இன்டஸ்டிரிஸ் விவகாரமாகச் சொல்லும்போது மத்திய சர்க்கார் இப்படிப்பட்ட ஒரு தவறான உத்தரவைப் போட்டாலும், இந்தியைத் திணித்தால் இந்த சர்க்கார் அமைதியாக இருக்காது. மத்திய அரசாங்கத்தை எதிர்த்துப் போராடுவோம், எங்களை நம்புங்கள் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு இவர்கள் சொல்கிறார்கள் மத்திய சர்க்கார் 3 பைசா உயர்த்தி இருக்கிறது. இது அநியாயம், அநீதி என்றெல்லாம் சொல்லிவிட்டு, வேறு வழி இல்லை அந்த சர்சார்ஜ் கொடுக்கிறோம் என்று சொன்னால், இவர்கள்

[திரு. அ. ரகுமான்கான்] [1978 செப்டம்பர் 14

எவ்வளவு பெரிய போராட்ட வீரர்கள். எனக்கு ஒரு சந்தேகம் வருகிறது. இந்தி ஆதிக்கம் வந்தால் எதிர்ப்போம் என்று சபைக்கு உள்ளேயும், வெளியேயும் இவர்கள் வாதாடுவது வெறும் காற்றோடு கலந்து போகின்ற கீதமாக, தமிழக மக்களை உற் சாகப்படுத்துகின்ற வார்த்தையாக இருக்குமே தவிர, மத்திய சர்க்காரை எதிர்த்துப் போராடும் ஆற்றல் இந்த ஆட்சிக்கு இல்லை என்று கருதுகிறேன். மத்திய அரசு ஒரு உரிமைப் போடுகிறது, வேறு வழியில்லை என்று விவசாயிகள் அல்லாதவர்களிடம் அதை வசூலிக்கிறார்கள்.

நம்முடைய முதலமைச்சர் ஒரு காலத்தில் சொல்லவில்லையா? மாநில சுயாட்சி வராவிட்டால் ராணுவத்தைச் சந்திப்பேன் என்று பேசவில்லையா? அப்படிப்பட்ட துணிச்சல் உள்ளவர் முதல் அமைச்சராக இருப்பதால் சொல்கிறேன். நான் அப்போது கல்லூரியில் படித்துக் கொண்டு, மாணவர் தி. மு. க.வில் இருந்தேன். மத்திய சர்க்காரை எதிர்த்து இன்றைய தினம் ஏன் நம்முடைய முதலமைச்சர் போராடக் கூடாது என்று முதலில் சொல்லிக் கொள்கிறேன்.

இப்போது விவசாயம் இல்லாதவர்களுக்குப் போடுகிறேன் என்று சொல்கிறார்கள். நாளைக்கு விவசாயத்திற்கும் போடலாம். அது மட்டுமல்ல, மதுரை பசுமலையில் உள்ள நிலைமைகளைப் பற்றி நான் தகவல் தரத் தயாராக இருக்கிறேன். மார்க்ஸிச கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் வரதராசன் அவர்கள் கூடச் சொன் னார்கள். 15 லட்ச ரூபாய் மதிப்புள்ள காப்பர் ஒயர்கள் அங்கே எந்தவிதமான பயனும் இல்லாமல் முடக்கி வைக்கப்பட்டு இருக்கிறது. இதுபோன்று எத்தனை கோடிக்கணக்கான ரூபாய் களுக்கு விரயம் ஏற்பட்டு இருக்கிறது என்று தெரியவில்லை. ஆகவே, இப்படி நிலைமைகள் இருக்கிறபோது, இந்தச் சட்டம் கொண்டுவருவது சரியல்ல. ஆகவே, இந்தச் சட்டத்தை எதிர்த்துப் போராட வேண்டும், அந்த உத்தரவை திரும்பப்பெற வேண்டும், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்த மசோதாவை வன்மையாகக் கண்டித்து, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இந்த மசோதாவை வாபஸ் பெற்று மத்திய சர்க்காரோடு இந்த அரசு போராட வேண்டும் என்று கேட்டு, இந்த மசோதாவை நான் சார்ந்து இருக்கிற கழகத்தின் சார்பாக நிராகரிக்கிறேன் என்று தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு உதவித் தலைவரவர்களே, மத்திய அரசு மின்சாரக் கட்டணத்தை சென்ட்ரல் எக்சைஸ் லெவி என்ற அடிப்படையில் விதித்ததை யொட்டி, இங்கே மின் கட்டணத்தை 3 பைசா அதிகப்படுத்து வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. ஏற்கனவே நாடு முழுவதும் இருக்கக்கூடிய ஏழை மக்கள்,

[திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு]
1978 செப்டம்பர் 14]

விவசாயப் பெருங்குடி மக்கள் மின்சாரக் கட்டணம் அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த நிலையில் மத்திய அரசு மேலும் எக்சைஸ் லெவி மூலம் இந்த மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது சரியல்ல என்பதை மார்க்ஸிச கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள் கிறேன்.

தமிழ் நாட்டின் ஒரு பகுதி ஏற்கனவே வறட்சியால், வெள்ளத் தால் பாதிக்கப்பட்டு இருக்கிற காரணத்தால் இந்தச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதன் மூலம் தமிழக அரசு இன்றைக்கு விவசாயக் காரியங்கள் அல்லாத இதர காரியங்களுக்கு இந்த மின் கட்டண உயர்வு கொண்டு வந்து இருந்தாலும் எதிர் காலத்தில் விவசாயிகளுக்கும் இது வராது என்பது என்ன நிச்சயம் என்று தெரியவில்லை. ஆகவே, இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்குப் பதிலாக யார் யார் அதிகமாக மின் கட்ட ணம் செலுத்த வேண்டி இருக்கிறது என்பதைப் பார்த்து அவர் களிடமிருந்து வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதைக் கொண்டுவருவதன்மூலம் சாதாரண சாமான்ய ஏழை மக்கள், நடுத்தர மக்கள், சிறு வியாபாரிகள், சிறு தொழில் புரிபவர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள் என்றும் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட மக்களுக்கு அதைப் போடுவதற்குப் பதிலாக மின் கட்டணத்தை அதிக அளவில் செலுத்த வசதியும் வாய்ப்பும் இருக்கிற ஏகபோக முதலாளிகள் மற்றும் பெரும் வர்த்தக நிறுவனங்கள், மற்றும் மால்கோ, டி. வி. எஸ்., பெரிய சிமெண்ட் கம்பெனிகள் ஆகியவர்களிடம் இருந்து வசூலிக்க வேண்டும், அந்த வகையில் அரசின் நட வடிக்கை இருக்க வேண்டும் என்று கேட்டு, இதை மார்க்ஸிச கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்தி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு புதிதாக மின்சாரத்திற்கு 3 பைசா மின் கட்ட ணத்தை விவசாய சம்பந்தம் இல்லாத பிற தொழில்களுக்குக் கொண்டு வருவதற்கு இன்று சட்டம் கொண்டுவரப்பட்டு இருக் கிறது. கடந்த காலத்தில் தமிழ் நாட்டை எடுத்துக் கொண்டு பார்த்தால், தமிழ்நாட்டில் மின் கட்டணம் உயர்த்தியதற்காக கிளர்ச்சிகள் ஏற்பட்டு இருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ் நிலையில் அமைதியாக இருந்து கொண்டு இருக்கும் தமிழ்நாட்டில் புதிதாக மத்திய அரசு சர்சார்ஜ் திணிப்பதன் காரணமாக மின் கட்டண உயர்வு 3 பைசா அளவிற்குப் போட வேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழகத்தில் அப்படி ஒரு கலகம் உண்டாக்கப்பட வேண்டித் தான் மத்திய அரசு இந்தத் திணிப்பைச் செய்கிறதோ என்று சிந்திக்கக்கூடிய நிலையில் இருக்கி றோம். இங்கே 15 கோடி ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டு இருக்கி றது. அந்த 15 கோடி ரூபாய் நஷ்டத்தைத் தவிர்த்து இருந்தால்

[திரு. செ. சிவசாமி] [1978 செப்டம்பர் 14

இந்த 3 பைசா உயர்வு தவிர்க்கலாம். தமிழகத்தில் தொழில்கள் பாதிக்கப்படும். இந்த உயர்வால் எடுத்துப் பார்த்தால் தமிழகம் இந்திய தொழில் மேப்பில் 3-வது ஸ்தானத்தில் இருக்கிறது. குறிப்பாக, இந்த மின் கட்டண உயர்வு கொண்டு வருவதன் மூலம் மீண்டும் பழைய நிலைக்கு தமிழகம் போய்விடுமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஆகவே, இந்த உயர்வைத் தவிர்த்து, அதற்கான பணத்தை ஈடுகட்டும் வகையில் மால்கோ போன்ற நிறுவனங்களிடமிருந்து வரவேண்டிய 'மின் கட்டண பாக்கி பலகோடி ரூபாய் இருப்பதை வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12–30]

மொத்தத்தில் இதுபற்றி ஏற்கெனவே இங்கே சொல்லப்பட்டிருக் கிறது. பழைய பாக்கியாக 23 கோடி ரூபாய் இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பாக்கியை கடுமையான நட வடிக்கை எடுத்து வசூல் செய்து அந்த வசூல் மூலம் வரக்கூடிய ரூபாயைக் கொடுத்து, 15 கோடி ரூபாயை ஈடுகட்டலாம். அதை விட்டு விட்டு தமிழ்நாட்டில் மீண்டும் யூனிட் ஒன்றுக்கு 3 பைசா அதிகரிக்க வேண்டுமென்று சொன்னால், மின் கட்ட ணத்தை மேலும் உயர்த்தினால் நிச்சயமாக ஒரு கொந்தளிப்பான நிலைமைதான் உருவாகும்; மீண்டும் ஒரு கிளர்ச்சி உண்டாகும் என்று சொல்லி, இந்தக் கட்டணத்தை உயர்த்துவதை வன்மை யாகக் கண்டித்து, இந்தச் சட்டத்தை நிறைவேற்றக் கூடாது என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> சார், பாயிண்ட் ஆப் இன்பர் மேஷன். துணைத் தலைவரவர்களே, நேற்று நம்முடைய பேரவை யில் "எயர் கண்டிஷன்" பஸ் விடுவதாக அறிவிக்கப்பட்டது. இன்றைக்கு ஊருக்குப் போவதற்காக பஸ் ஸ்டாண்டில் போய், அந்த எயர் கண்டிஷன் பஸ்ஸில் இடம் கேட்டபோது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இதில் செல்ல அனுமதி கிடையாது என்று சொல்லி விட்டார்கள். நான் திருவனந்தபுரம் செல்லக்கூடிய 4–00 மணி வண்டிக்கு இடம் கேட்டேன்; இல்லை என்று சொல்லி விட்டார்கள். மற்ற பஸ்ஸுக்கும் இதற்கும் உள்ள வித்தியா சத்தை வேண்டுமானால் கொடுத்துவிடுகிறேன் என்றும் கேட்டுப் பார்த்தேன், இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அதிகமான ரேட்டை கொடுத்தாலும் ஏன் அனுமதிக்க மாட்டேன் என்கிறார் கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய ஆலோசனையை அரசு பரிசீலிக்கும். சட்டமன்ற உறுப்பினர்கள் செல்வதற்கு அனுமதிக் கப்படும். மிகையான கட்டணத்தைச் செலுத்திவிட்டு அவர் கள் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

1978 செப்டம்பர் 14]

<u>திரு. மு. அம்பிகாபதி :</u> தலைவரவர்களே, எங்களுக்கு பாஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் "வி.ஐ.பி." (வெரி இம் பார்ட்டன்ட் பர்சன்ஸ்) என்று இருக்கிறது. அப்படி இருக்கும் போது நாங்கள் எயர் கண்டிஷன் பஸ்ஸில் போனால் என்ன, ஆர்டி னரி பஸ்ஸில் போனால் என்ன? அதைப்பற்றி அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. துரை முருகன் :</u> தலைவரவர்களே, திரு. அம்பிகாபதி அவர்கள் சொல்வது முற்றிலும் நியாயமானது. அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்கள் "பர்ஸ்ட் கிளாஸில்" போகலாம்; ஆனால் எயர் கண்டிஷன் வண்டிகளிலும் போகிறார்கள். அதைப் போல, எங்களுக்கும் பாஸ் கொடுத்திருக்கிறார்கள்; இந்த பாஸை வைத்துக்கொண்டு எந்த வண்டியில் போனால் என்ன? அமைச்சர்கள் மட்டும் ஏ.சி.யில் போகலாம், நாங்கள் ஏ.சி.யில் போகக் கூடாதா? ஆகவே, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரவர்கள் அதற்கான அறிவிப்பை இங்கேயே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. ர. ஜெபமணி :</u> கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, அமைச்சரவர்கள் இந்த அவையிலே சொன்னார்கள். நீங்கள் கவலைப்பட வேணடாம், உங்களுக்கு எயர் கண்டிஷன் பஸ் விடு கிறோம், அதிலே தாராளமாகப் போகலாம் என்று அன்றைக்குச் சொன்னார்கள். ஆகவே, அந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையிலே இன்றைக்கே உறுதியளிக்கலாம்; உறுதியளிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> நான் அறிவித்தபடியே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எயர் கண்டிஷன் பஸ்ஸிலே போகலாம். தற்போது அதிகப்படியான கட்டணத்தைக் கொடுத்து விட்டுப் போகலாம். சலுகையைப் பொறுத்தமட்டில் பரிசீலித்து விரைவில் அறிவிக்கிறேன்.

<u>திரு. தீ. சு. நல்லதம்பி :</u> துணைத் தலைவரவர்களே, பல்லவன் போக்குவரத்து பஸ்ஸிலே பயணம் செய்வதற்கு ஒரு பிரச்சனை இங்கே வந்திருக்கிறது. இது ஒரு பெரிய பிரச்சனை அல்ல; சாதாரண பிரச்சனைதான். இதில் பரிசீலனை செய்வதற்கு என்ன இருக்கிறது? இப்போதே கூட அறிவிக்கலாம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> அமைச்சரவர்கள் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்; பரிசீலித்து நல்ல முடிவை அறிவிப்பார்கள் என்று நம்பலாம்.

<u>*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, திரு. அழகர்சாமி அவர்கள் இங்கே ஒரு பிரச் சனையை எழுப்பினார்கள். அவர்கள் இந்த மசோதாவின்மீது

ஏதோ பேசப்போகிறார்கள் என்று எதிர்ப்பார்த்தேன்.
அவர்கள் ஏ.சி. பஸ்ஸிலே பயணம் செய்யக் கூடாதா ஆனால்
கேட்டார்கள். இப்போது நாம் இந்த மசோதாவுக்கு வருவோம். என்று

இந்த சட்ட முன்வடிவில் பல உறுப்பினர்கள் கலந்துகொண்டு
தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.
அரசைப் பொறுத்தமட்டில் முதன் முதலாக பாராளுமன்றத்தில் இந்த
இந்த ஆயத் தீர்வை சம்பந்தமான அறிவிப்பு வந்தவுடன் அதை
எதிர்த்து பாரத பிரதம அமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதிய
முதல் மாநிலம் தமிழகம்தான் என்பதையும் அந்தக் கருத்து இந்தச்
சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது என்பதையும் இந்த மாமன்
றத்து உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். ஆகையால்
கொள்கை அளவில் இந்த வரி விதிப்பானது நிச்சயம் ஏற்றுக்
கொள்ளக்கூடியது அல்ல என்பதுதான் இந்த அரசின் கருத்து.
இங்கே மாண்புமிகு உறுப்பினர்களும் அதே கருத்தைத்தான் வலி
யுறுத்தினார்கள்.

1976–77 ஆம் ஆண்டுக்கான மின் வாரியத்தின் வரவு-செலவுக்
கணக்குகளை இன்றைக்கு இந்த மன்றத்தின் முன் வைத்துள்ளேன்.
மாண்புமிகு உறுப்பினர்கள் அதனைப் படித்துப் பார்த்திருந்தால்
ஒரு விவரம் அவர்களுக்குப் புரிந்திருக்கும். மின்வாரியமானது
1976–77 ஆம் ஆண்டுக்கான தனது வரவு-செலவைச் சரிக்கட்டிக்
கொள்ள முடியாமல் அரசு 31·4 கோடி ரூபாய் உதவித் தொகை
யாக மின் வாரியத்திற்குத் தரக்கூடிய நிலை இருக்கின்றது. அந்த
அளவுக்கு மின் வாரியத்தினுடைய நிதி நிலை இருக்கின்றது. மேலும்
15 கோடி ரூபாயை மின் வாரியம் கட்ட வேண்டும் என்ற
நிலை வருகிறபோது அதை மாநில அரசுதான் கட்ட வேண்டும்
என்ற நிலை வருகின்றது. ஆகவே, இதுகுறித்து பிரதம அமைச்சர்
அவர்களுக்கும், மத்திய நிதியமைச்சர் அவர்களுக்கும் கடிதம்
எழுதினோம். அதற்கு மத்திய நிதியமைச்சரவர்கள், இது மாநிலத்
தின் அதிகாரத்தை எடுத்துக்கொள்வதாக ஆகாது மின்சாரத்தைப்
பயன்படுத்துபவர்களுக்கு கட்டணத்தை உயர்த்தக் கூடிய அதிகா
ரம் இன்னும் மாநிலங்களுக்கே இருக்கின்றது, ஆகையினால் நீங்கள்
உயர்த்திக்கொள்ளலாம் என்று கடிதம் எழுதி இருக்கிறார்கள்.

நான் இந்த நேரத்திலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்,
கட்டணத்தை உயர்த்துவது என்பது எந்த அளவுக்கு மின்சாரத்
தைப் பயன்படுத்துபவர்களால் தாங்கிக் கொள்ள முடியுமோ அந்த
அளவுக்குத்தான் உயர்த்த முடியும். கட்டணத்தை உயர்த்தி
வருகிற வருவாயை மத்திய அரசுக்கு கட்டுவதே மாநில அரசி
னுடைய தொழிலாக இருக்குமேயானால் அது மாநில அரசுக்கு
வருகின்ற வருவாயாக ஆகாது. ஒரு 5 பைசா அல்லது 6 பைசா
மின் கட்டணத்தை உயர்த்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது
என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த 6 பைசா கட்டணத்தை
உயர்த்தி அதனால் வருகிற வருமானத்தைக் கொண்டு

மாநில அரசு திட்டமிட்டு பல நல்ல காரியங்களைச்
செய்ய முடியும். ஆனால், அந்த 6 பைசாவில் மூன்று
பைசாவை மத்திய அரசு எடுத்துக்கொள்ளுமேயானால் மீதி இருக்
கின்ற அந்த மூன்று பைசா அளவுக்குத்தான். காரியங்களை
ஆற்றக்கூடிய வாய்ப்பு மாநில அரசுக்கு இருக்கிறது.
ஆகையினால் மாநில அரசுக்கு வரவேண்டிய வருவாயை மத்திய
அரசு எடுத்துக் கொள்வது என்பது கொள்கையளவில் சரியான
தல்ல என்பதை இந்த அரசும் வற்புறுத்தக் கடமைப்பட்டு இருக்
கின்றது. இந்த மாநிலம் மட்டுமல்ல. நம்முடைய முதலமைச்
சரவர்கள் இதே கருத்தை மத்திய அரசுக்கு எடுத்து எழுதிய
போது அந்தக் கடிதங்களின் நகல்களை எல்லா மாநில முதலமைச்
சர்களுக்கும் அனுப்பி வைத்திருக்கிறார்கள். அப்படி அனுப்பி
வைத்து அவர்களும் இந்தக் கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று
கேட்டுக்கொண்டார். மற்ற மாநில முதலமைச்சர்களும் இதே
கருத்தை தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயும் அதற்குப்
பின்னால் தேசிய வளர்ச்சி மன்றத்தின் குழுக் கூட்டத்திலேயும்
எடுத்து வற்புறுத்தி இருக்கிறார்கள்.

இருந்தாலும் அதனால் ஏற்பட்ட பலன் ஒரு பத்து சதவீதம்
அந்த ஆயத் தீர்வையைக் குறைத்துக் கொள்வது என்ற ஒரு
சலுகை அளவிலே அளிக்கப்பட்டிருக்கிறதே தவிர, அவர்கள் இந்த
ஆயத்தீர்வை விதிக்கின்ற உரிமையை விட்டுக்கொடுக்கவில்லை.
இதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையாகும்.

இந்த ஆயத்தீர்வையைப் பொறுத்தவரையில் இன்னொன்றை
யும் நான் குறிப்பிட விரும்புகிறேன். மின் உற்பத்தியை அதி
கரிக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். ஆனால் அதே
நேரத்தில் அப்படி மின் உற்பத்தியை அதிகரித்தால் ஆயத்தீர்வை
செலுத்தவேண்டி வருகின்றது. ஆகவே, மின் உற்பத்திக் கட்டணம்
என்கிற அடிப்படையில் ஆயத்தீர்வை விதிக்கச் செய்வது மின்
உற்பத்தியையே தடை செய்வதற்கு பயன்படுமே தவிர அதற்கு
ஊக்கம் அளிப்பதற்குப் பயன்படாது. எல்லாக் கட்சியினர்களும்
மாநிலங்களுக்கு வருவாய்கள் அதிகமாக வரவேண்டும், ஆகவே
மாநிலங்களுக்கு நிதி ஆதாரங்கள் அதிகமாகத் தரப்பட வேண்டும்
என்ற கருத்தை வலியுறுத்துகின்ற நேரம் இது. ஆனால் இந்த
நேரத்தில் மாநில அரசு இந்த வரியைக் கட்ட வேண்டும் என்ற
அளவுக்கு மத்திய சர்க்கார் இங்கே இருக்கின்ற பணத்தை
அங்கே எடுத்துச் செல்வது என்ற போக்கு நேர்மாறானது.
ஏற்கெனவே இருக்கிற அதிகாரங்களும் வாய்ப்புகளும் போதாது
என்று சொல்கின்ற நேரத்தில் இருக்கின்ற, வாய்ப்பினையும்
எடுத்துக்கொள்வது என்பது ஒட்டைக்கூத்தனுக்கு இரட்டைத்
தாழ்ப்பாள் என்று சொல்வது போல் இருக்கிறது. ஆகவே, இது
பிற்போக்குத்தனமான ஒரு நிலைமை என்பதை நிச்சயமாக நான்
வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இப்படிச் சொல்கின்றபோது நீங்கள் கேட்டால் என்ன
என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள்
என்னைக் கேட்கக்கூடும்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 14
(பிற்பகல் 12–40).

அவர்களுக்குத் தெரியும். இது நன்மை பயக்காதது,
கொள்கைக்கு முரணானது, மாநில உரிமைகளைப் பறிப்பது,
உற்பத்தியைப் பாதிக்கக்கூடியது என்ற வாதங்களை எடுத்துச்
சொல்ல முடியுமே தவிர அவர்கள் இந்த வரியைக் கட்ட
வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டுவந்து விட்டார்கள்.
சட்டத்தை மீறுகிற ஒரு குற்றத்தை ஒரு மாநில அரசு செய்ய
இயலாது.

திரு. அ. ரகுமான்கான் : சட்டம் படித்தவர்களுக்குத்
தெரியும். இந்திய அரசியல் சட்டப்படி மத்திய அரசு போடுகிற
உத்தரவுகளை மாநில அரசு ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.
அப்படி ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் இந்த அரசை டிஸ்மிஸ்
செய்கிற அதிகாரம் இந்த நாட்டிலுள்ள ஜனாதிபதிக்கு உண்டு.
அது அவர்களுக்குத் தெரியும். எல்லோருக்கும் தெரியும். ஆனால்
அவர்கள் சட்டம் போட்டு விட்டார்கள். இப்படி ஒரு உத்தரவு
போட்டுவிட்டார்கள். ஆகவே இப்படி விதித்திருக்கிறோம்.
இப்படிக் கொண்டுவந்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள்.
தானேயே இந்தியைத் திணித்து மத்திய அரசு ஒரு உத்தரவு
போட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள், அதை அமுல் நடத்து
வீர்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

"கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது".

நாம் எந்தப் பிரச்னைக்குப் போராடுகிறோம் என்பதுதான் முக்கிய
மானது. பதினைந்து கோடி ரூபாய் கட்டமாட்டேன் என்று
சொல்லி அவர்கள் ஒரு அரசாங்கத்தை டிஸ்மிஸ் செய்ய வேண்டு
மென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள்
நிச்சயமாக ஆசைப்பட மாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும்.
இதற்காக, சட்ட விரோதமாக இந்த அரசு நடந்து கொள்ள
வேண்டுமென்று அவர்கள் நிச்சயமாக எதிர்பார்க்க மாட்டார்
கள். அண்மையில் நடந்த குழுக் கூட்டத்தில்கூட முதல் அமைச்சர்
அவர்கள் இதை மீண்டும் வலியுறுத்தி இந்தப் பணத்தை வசூலித்
தாலும் கூட இது மீண்டும் மாநிலங்களுக்குத் தரப்படவேண்டும்
என்று நாம் வலியுறுத்தியிருக்கிறோம். ஆகஸ்ட் 21, 22 தேதி
நடந்த கூட்டத்தில் நம்முடைய அரசாங் ... முடி
பட்ட கருத்து இது : ... டிவு எண் 39/1978)
... ண்டும் ".

"The Government of India rec:ntly levie
city gener ted. Th y have not given up the
protest by all tne St tes. The State Gover ... டப்பெற்று, நிலை
proceeds from this and the lcvy may be co ... வாரியாக ஆய்வுக்கு
f)oting and transferred fully to the States de ... ceipts."

1978 செப்டம்பர் 14] [திரு. ச. இராமச்சந்திரன்]

என்றும் நாம் மீண்டும் வற்புறுத்திக் கொண்டு வருகிறோம்.
ஆகவே இப்போது பணம் வசூலிக்கப்பட்டாலும் கூட நாம் நமது
கோரிக்கையை விட்டுவிடவில்லை, கொள்கையை விட்டுவிடவில்லை.
தொடர்ந்து வற்புறுத்தக் காத்திருக்கிறோம் என்ற காரணத்தால்
மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வுகளின் அடிப்படையில்
அரசு இயங்குகிற காரணத்தால் இதை ஏகமனதாக ஏற்று
ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : இந்தச் சட்டம் 1949-ம் ஆண்டு எலக்ட்ரி
சிட்டி சம்பந்தமாக எப்படி வரி விதிக்க வேண்டும், எப்படி
கட்டணம் விதிக்க வேண்டும் என்பதற்காக உள்ள சட்டத்
திற்குத் திருத்தம் கொண்டுவரும் முறையில் வருகிறது.
1949-ம் ஆண்டு சட்டத்தில் 'ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்'
என்ற முறையில், பின்காலத்தைக் கணக்கிட்டு வரி வசூல் செய்ய
முடியாது என்ற நிலையில் இப்போது இது இவ்விதம் மாற்றப்படு
கிறது. மத்திய அரசாங்கம் போட்டிருக்கிற இது, இந்த முறை
தப்பு என்பதை இந்தியா முழுவதும் பலரும் கண்டித்து இந்த
அரசும் அந்த நிலையை எடுத்திருப்பது நல்லது. அதற்காகப்
பாராட்டுவது என்பதெல்லாம் கரெக்ட். ஆனால் 'ரெட்ராஸ்ப்-
பெக்டிவ் எபெக்ட்' என்று போட்டால் இது ஒரு நிரந்தரமான
சட்டமாக சர்க்கார் கைக்கு கிடைத்துவிடுகிறது. மத்திய
சர்க்கார் சட்டம் போட்டிருக்கிறது, அல்லது மத்திய அரசு
கேட்டிருக்கிறது என்று சொல்லி இதைக் கொண்டு வருகிறார்கள்
என்று சொன்னாலும், ரெட்ராஸ்ப்பெக்டிவ் எபெக்ட் என்று
போடப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் சொல்வதால் போடப்
பட்டிருக்கிறது என்றால் இப்போது அது சரியாகயிருக்கும்,
அப்போது இந்த வரி போட்டுத்தானாக வேண்டும். இது எக்ஸைஸ்
ட்யூட்டி, சுங்கவரி மாதிரி. அப்படி வரி போடும்போது சக்தி உடை
யவர்கள்மீது போடலாம் அல்லவா ? விவசாயிகளுக்கு தள்ளிக்
கொடுப்பது நல்லது. ஆனால் எழைக் கடைக்காரர்கள், பெட்டிக்
கடைக்காரர்கள் ... இந்த வரி செலுத்த
... ' பல்க் கஸ்டமர் ... க்ரூப் '-க்கு அதிகப்
படுத்தி ... பணத்தை உயர்த்தி வசூல் ... பலகீனமான மக்களை
... ற்கு இதுதானே வழி. விவசா... து விலக்களித்
திருப்பதுபோல் ஏழைகளுக்கும் பாதுகாப்பு ... நிக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஏற்கனவே மின்
கட்டண ... சட்ட அடிப்படையில் உத்தரவுகள் பிறப்
... நாடு 1949-ம் ஆண்டு இன்றியமையாப்
... டு, கேட்டுப் பெறுதலும் தாற்காலிக
மாண்புமிகு ... ன் கீழ் செய்யப்பட்டது.
முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 5–இ ... இந்த மசோதாவில் என்ன செய்கிறோம்
ஆக்கப்பெற வேண்டு ... த்தை நிர்ணயிப்பதற்கு அல்லது உயர்த்து
... ம் கொண்டு வருகிறோம். இனிமேல்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 14

இந்தச் சட்டத்தின் கீழ் அரசு ஆணைகளின் மூலம் கட்டணத்தை உயர்த்த வேண்டிய தற்குப்பதிலாக இந்த சட்டமன்றத்தின் மூலமாகத்தான் உயர்த்திக் கொள்ள முடியும். அந்த முறையில் இப்போது சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆயத்தீர்வையைப் பொறுத்தவரையில் சர்க்கார் ஆணைகள் பிறப்பிக்கலாம். இந்த ஆயத்தீர்வையைப் பொறுத்தவரையில் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் தேதியிலிருந்து வந்துவிட்டது. மத்திய சர்க்காரிடம் இதைத் திரும்பப்பெற வேண்டும், திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டு கேட்டு வற்புறுத்திக் கொண்டிருந்ததால் இதுவரையில் ஆயத்தீர்வை நாம் விதிக்கவில்லை. எந்தத் தேதியிலிருந்து வரும் என்று சொல்வதற்கு முன்பு இடமில்லாமல் இருந்தது. இப்போது நாமே நிர்ணயம் செய்து கொள்கின்ற வகையில், 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் தேதியிலிருந்து மட்டுமே இது விதிக்கப்படுகிறது என்பது இந்த மசோதாவின் மூலம் அர்த்தமாகிறது.

இரண்டாவது ஒரு பிரச்னையைக் கிளப்பினார்கள், தாங்க முடியாதவர்களிடம் இந்தத் தீர்வையை வசூலிக்காமல், தாங்கக் கூடியவர்களிடம் மட்டும் வசூலிக்கலாம் என்று. அத்தகைய யோசனை தற்போது அரசினிடத்தில் இல்லை.

திரு. ப. பொன்னுரங்கம்: ரெட்ராஸ்பெக்டீவ் எபெக்ட் என்று சொல்லும்போது மார்ச் 1978-லிருந்து வரும்போது, 8, 9 மாதங்களுக்கான அரியர்ஸ் வரும். இதை ஒரே லம்ப்பாக வசூலிக்காமல், இன்ஸ்டால்மென்ட்டாக வசூலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. [illegible] ...ம்ச்சந்திரன்: [illegible] ...களில் வசூல் செய்வதற்கு வாரி [illegible] ...காரிகளுக்கு அதிகாரம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—" தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, வேளாண்மை காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தியமைத்தல் [illegible] வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்[illegible] 39/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவே[illegible]டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு [illegible]டப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு [illegible]வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

1978 செப்டம்பர் 14]

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

" பிரிவு 2—இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும் ".

THE HON. THIRU S. RAMACHANDRAN: Mr. Deputy Speaker, Sir, I move the following amendment:—

'In Clause 2, in sub-clause (b), omit the expression "for non-agricultural purposes."'

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 2 திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

" பிரிவு 3—இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும் ".

THE HON. THIRU S. RAMACHANDRAN: Mr. Deputy Speaker, Sir, I move the following amendment:—

In clause 3,—

(i) in the marginal heading, omit the expression "supplied for non-agricultural purposes".

(ii) omit the expression "for non-agricultural purposes."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 3 திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 4 பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 5.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

" பிரிவு 5—இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

THE HON. THIRU S. RAMACHANDRAN : Mr. Deputy Speaker Sir, I move the following amendment :

" In Clause 5, in sub-clause (1) *substitute* " for agricultural and non-agricultural purposes " for the expression " for non-agricultural purpose".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 5 திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

அட்டவணை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''அட்டவணை இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

THE HON. THIRU S. RAMACHANDRAN : Mr. Deputy Speaker Sir, I move the following amendment :

''In the Schedule (1) under the heading "Part II-TARIFF - LOW TENSION SUPPLY "—

(i) renumber paragraphs VI and VII as paragraphs VII and VIII respectively;

(ii) before paragraph VII as so renumbered, insert the following paragraph, namely :

"VI. (i) *Agricultural services.*— For supply to bonafide agricultural services with a connected load of not less than 3 H.P. per service.

(a) for all consumers, except small farmers, for the entire consumption per month 16 paise per unit upto 31-5-78 and 14 paise per unit thereafter.

(b) for small farmers, for the entire consumption per month 14 paise per unit upto 31-5-78 and 12 paise per unit thereafter.

Explanation : For the purpose of sub-paragraph (i) (b) 'small farmer' means a person whose total holding whether as owner, tenant or mortgagee with possession, on partly in one capacity and partly in another does not exceed two and a half acres of wet lands or five acres of dry lands. In computing the extent of land held by a person who holds both wet and dry lands, two acres of dry land shall be taken to be equivalent to one acre of wet land.

(ii) For supply to bonofide agricultural services with a connected load of not less than 3 H.P. per service, a monthly fixed charge, calculated at the rate of Rs. 1.25 per H.P. subject to a maximum of Rs. 5 per month per service, shall be charged, in addition to the charges specified in (i) above.

(iii) The Agricultural consumers will be permitted lighting up to 50 watts per 1,000 Watts of motive power connected subject to a maximum of 150 Watts inclusive of Wattage of Pilot lamps each of which should not exceed 15 Watts and with not more than 3 lamps (excluding pilot lamps) for lighting the farm or the field around the pumpset. Energy used for radios and other appliances including domestic lighting in farm houses shall be metered separately and charged for at the appropriate tariff.

(iv) In the case of permissible lighting load connected to the unmetered phase in agricultural services Rs. 2.00 per month per 40 Watts lamp (ordinary lamp) will be charged.

(v) Extra lighting in agricultural services over the permissible limit will be charged for, either if separately metered as per Low Tension Tariff II, or if not separately metered on a flat rate of Rs. 2.00 per 50 watts lamp (ordinary). Larger lamps in proportion If Flourescent/mercury Vapour lamps are connected, the rates will be enhanced as laid down under Low Tension Tariff IV (b).

(vi) The agricultural tariff is applicable to bonafide small cottage industries having connected horse power not exceeding 5. This limit may, however, be relaxed by the Chief Engineer for Electricity under special conditions";

THE HON. THIRU S. RAMACHANDRAN : Mr. Deputy Speaker Sir, I move the following amendment :

" In Clause 5, in sub-clause (1) *substitute* " for agricultural and non-agricultural purposes " for the expression " for non-agricultural purpose".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 5 திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

அட்டவணை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''அட்டவணை இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

THE HON. THIRU S. RAMACHANDRAN : Mr. Deputy Speaker Sir, I move the following amendment :

"In the Schedule (1) under the heading "Part II-TARIFF - LOW TENSION SUPPLY "—

(i) renumber paragraphs VI and VII as paragraphs VII and VIII respectively;

(ii) before paragraph VII as so renumbered, insert the following paragraph, namely ;

"VI. (i) *Agricultural services.*— For supply to bonafide agricultural services with a connected load of not less than 3 H.P. per service.

(a) for all consumers, except small farmers, for the entire consumption per month 16 paise per unit upto 31-5-78 and 14 paise per unit thereafter.

(b) for small farmers, for the entire consumption per month-14 paise per unit upto 31-5-78 and 12 paise per unit thereafter.

Explanation : For the purpose of sub-paragraph (i) (b) 'small farmer' means a person whose total holding whether as owner, tenant or mortgagee with possession, on partly in one capacity and partly in another does not exceed two and a half acres of wet lands or five acres of dry lands. In computing the extent of land held by a person who holds both wet and dry lands, two acres of dry land shall be taken to be equivalent to one acre of wet land.

(ii) For supply to bonofide agricultural services with a connected load of not less than 3 H.P. per service, a monthly fixed charge, calculated at the rate of Rs. 1.25 per H.P. subject to a maximum of Rs. 5 per month per service, shall be charged, in addition to the charges specified in (i) above.

(iii) The Agricultural consumers will be permitted lighting up to 50 watts per 1,000 Watts of motive power connected subject to a maximum of 150 Watts inclusive of Wattage of Pilot lamps each of which should not exceed 15 Watts and with not more than 3 lamps (excluding pilot lamps) for lighting the farm or the field around the pumpset. Energy used for radios and other appliances including domestic lighting in farm houses shall be metered separately and charged for at the appropriate tariff.

(iv) In the case of permissible lighting load connected to the unmetered phase in agricultural services Rs. 2.00 per month per 40 Watts lamp (ordinary lamp) will be charged.

(v) Extra lighting in agricultural services over the permissible limit will be charged for, either if separately metered as per Low Tension Tariff II, or if not separately metered on a flat rate of Rs. 2.00 per 50 watts lamp (ordinary). Larger lamps in proportion. If Flourescent/mercury Vapour lamps are connected, the rates will be enhanced as laid down under Low Tension Tariff IV (b).

(vi) The agricultural tariff is applicable to bonafide small cottage industries having connected horse power not exceeding 5. This limit may, however, be relaxed by the Chief Engineer for Electricity under special conditions";

[1978 செப்டம்பர் 14

(iii) in paragraph VII as so renumbered, in sub-paragraph (i), *omit* the entry "Central excise surcharge— 3 paise per unit will also believed.

(2) under the heading "Part III—Terms and Conditions for temporary service connections," at the end of paragraph *(iv)* add the following, namely :

"(C) Agriculture	Low Tension Tariff VI Plus 25%	Rs. 5/- per H. P. for 30 days or part thereof"

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

அட்டவணை திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

[பிற்பகல் 12-50]

பிரிவு 1.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"பிரிவு 1—இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

THE HON. THIRU S. RAMACHANDRAN: Mr. Deputy Speaker, Sir, I move the following amendment :—

"In Clause 1, in sub-clause *(1)*, *omit* the expression "for Non-Agricultural Purposes".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1 திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

1978 செப்டம்பர் 14]

நெடுந்தலைப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நெடுந்தலைப்பு இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்".

THE HON. THIRU S. RAMACHANDRAN: Mr. Deputy Speaker, Sir, I move the following amendment :—

"In the long title, *omit* the expression "for non-agricultural purposes".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவை துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தியமைத்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1978) திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப் பெறவேண்டும்."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவை முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி சட்டமாக ஆக்கப் பெற்றது.

(இ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1978).

THE HON. THIRU K. NARAYANASWAWY MUDALIAR : Mr. Deputy Speaker, Sir, I move—

"That the Tamil Nadu Debt Relief Bill, 1978* *(L. A. Bill No 41 of 1978)* be taken into consideration".

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்த மசோதா இரண்டு காரணங்களுக்காக கொண்டு வரப் பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. உழவர்கள்,

*1978 செப்டம்பர் 13 ஆம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. க. சுப்பு] [1978 செப்டம்பர் 14

உழவர்கள் அல்லாதவர் ஆகியோர் வாங்கிய கடன் தொகைகளை
அவர்கள் உடனடியாகச் செலுத்தாமல்,
வைப்பது; இது குடியரசுத் தலைவர் நீடித்து
காலத்திலேயே போடப்பட்ட சட்டம். அவர்கள் ஆட்சிக்
தான் இந்த அரசாங்கம் இப்போது கொண்டு அந்தச் சட்டத்தையே
அதே காரணம் தான் வந்திருக்கிறது.
கிறது. அடுத்து, அடகு இதிலேயும் சொல்லப்பட்டிருக்
வேண்டிய தொகையைத் வைத்தவர்கள் தாங்கள் செலுத்த
விட்டு, பொருள்களை தவணை முறையில் திருப்பிச் செலுத்தி
அடகுக் கடைக்காரர்கள் மீட்டுக்கொள்ள இயலும் வகையில்
கொண்டு போகாமல் ஏலத்திற்கு பொருட்களைக்
பட்டிருக்கிறது. தடுப்பதற்காகவும் கொண்டு வரப்

[திரு. பி. எச். பாண்டியன் தலைமை]

உழவர்களுக்கு கடன் சுமையைக் குறைப்பதற்கு
சட்டம் கொண்டு வரப்பட்டிருப்பதாகத் அறிவித்திருக்கிறார்கள். இந்தச்
ஆனால், அவர்களுக்கு எந்த அளவுக்கு இதிலே
அளிக்கப்பட்டிருக்கின்றது என்பதைப் பார்த்தால், நிவாரணம்
பசிக்கு சோளப் பொரி' போடுவதைப்போல்தான். 'யானைப்
திருப்பிச் செலுத்தவேண்டியதற்கு ஒரு அவர்கள்
பட்டியலையே போட்டிருக்கிறார்கள். நீண்ட நெடும்
நிவாரணம் அளிக்கப்படவில்லை. அதற்கெல்லாம் அவர்களுக்கு
கடன் பெற்றிருந்தால், கூட்டுறவு உழவர்கள் அரசாங்கத்திடம்
தால், வேறு விவசாயக் வங்கியிலே கடன் வாங்கியிருந்
தால் அவைகளையெல்லாம் கடன்கள் செலுத்த வேண்டியிருந்
சொல்லியிருக்கிறார்கள். இதிலே ஏற்கப்படமாட்டாது என்று
பெற்றிருந்தால் அதனைத் ஆனால், அவன் தனியாரிடம் கடன்
குத்தான் வசதி செய்திருக்கிறார்கள். திருப்பிச் செலுத்தாமல் இருப்பதற்
ஒத்துக் கொள்கிறேன். ஆனால், இவர்கள் கொள்கையை
பொருந்தும் என்றிருந்தால் மிகவும் எல்லாவற்றுக்கும்
இருக்கும். அரசாங்கக் கடனுக்கும், வரவேற்கத்தக்கதாக இது
மட்டும் விதிவிலக்கு அளித்து சட்டம் கூட்டுறவு கடனுக்கு
அவர்களுக்கு உண்மையிலேயே நிவாரணம் கொண்டு வந்திருப்பது,
முடியாது. இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தை அளிப்பதாக இருக்க
வரை நீட்டிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. 15—1—1979
கால அளவுக்கு நீட்டிப்பது என்பதுகூட அவ்வளவு இந்த
குறைந்தது ஓராண்டு காலத்திற்காகவாவது தள்ளி சரியல்ல.
திருக்கவேண்டும். வைத்

மேலும், உழவர்கள் எல்லா சொசைடிகளிலும்
வாங்கிய கடனைக் கொடுக்கவேண்டும்; சர்க்காரிடம் இருந்து
வாங்கிய கடனைக் கொடுக்கவேண்டும், இன்னும் இருந்து
பல கடன்களைக் கொடுக்கவேண்டும். அவர்கள்
ஆனால், தனிப்பட்ட

1978 செப்டம்பர் 14] [திரு. க. சுப்பு]

மனிதன் ஒருவனிடம் வாங்கிய கடனைக் கொடுக்க வேண்டிய தில்லை. கிராமப் புறங்களிலே ஒன்றிரண்டு பேர்கள் கடன்கள் கொடுத்திருப்பார்கள். கடைசியிலே அவர்கள் தான் ஏமாந்தவர்களா? ஆகவே, உழவர்களுக்கு நிவாரணம் அளிக்கிறோம் என்று சொன்னால், அனைத்துக் கடன்களையும் ரத்துசெய்யக் கூடிய வகையில் ஒரு மசோதாவைக் கொண்டு வரவேண்டும்.

வரம்பு 500 ரூபாய் என்று வைத்து, அதற்கு மேற்படாமல் இருக்குமானால் அசல் தொகை முழுவதும் அதற்குரிய வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்பட்டு விட்டதாகக் கருதப்பட வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், இப்போது நாம் விவசாயிகளுக்கு கூலி நிர்ணயம் செய்திருக்கிறோம். ஆள் ஒன்றுக்கு எட்டு ரூபாய் சம்பளம். ஒரு குடும்பத்திலே 2, 3 பேர்கள் இருப்பார்கள். அப்படியிருந்தால், அவர்களுக்கு இந்த நிவாரணம் உதவி செய்யாது. காரணம், அவர்கள் சர்டிபிகேட் வாங்குவதற்காக தாசில்தாரிடம் போக வேண்டும். அவர் ஒருவருக்கு எட்டு ரூபாய் என்று கணக்குப்போட்டு, குடும்பத்திலே 3 பேர்கள் இருந்தால், மொத்தம் 24 ரூபாய் வருமானம் என்று சொல்லி, அவர்களுக்கு சர்டிபிகேட் மறுக்கப்படுகிறது. காரணம், It is deemed that they are earning.

மூன்று பேர் இருந்தால் 8 ரூபாய் வீதம் ஒரு நாளைக்கு 24 ரூபாய் சம்பாதிக்கிறார்கள் என்று கருதப்படுகிற அடிப்படையில் போடப்படுகிறது. இதனால் சட்டத்தின் பலன் அவர்களுக்குக் கிடைக்க முடியாது. நோக்கத்தை வரவேற்கிறேன். அந்த நோக்கத்தின் அடிப்படையில் முழுமையான நிவாரணம் அளிக்கும் வகையில் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : இந்தக் கடன் நிவாரணம் அளிக்கும் மசோதாவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. இது மிகவும் காலதாமதமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. முன்கூட்டியே இந்த மசோதா முன்மொழியப்பட்டு பலருடைய ஆலோசனைகளையும் பெறக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்க வேண்டும். காலம் கடந்து போனதை நாங்கள் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தச் சட்டத்தின் மூலமாக அடிமட்டத்தில் இருப்பவர்களுக்கு எந்தவித நிவாரணமும் கிடைக்காது. நகரப் புறங்களில் இருக்கக்கூடிய கடைநிலை ஊழியர்கள், நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு இந்த நிவாரணம் கிடையாது. குறைந்த பட்சம் 200 ரூபாய்க்கு மேல் வாங்குபவர்களுக்கு நிவாரணம் கிடையாது. இந்த வருமான வரம்பைப் பொறுத்தவரை ஆண்டு

[திரு. ரா. கிருஷ்ணன்] [1978 செப்டம்பர் 14

வருமானம் 5,000 ரூபாய் வரை இருப்பவர்களுக்கு பயனளிக்கும் வகையில் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

500 ரூபாயிலிருந்து 5,000 ரூபாய் வரை பெற்ற கடனுக்கு பாதி மட்டும் வட்டி கிடையாது என்று சொல்லப்படுகிறது. அதை முழுமையாக ஆக்கக்கூடிய திருத்தத்தைக் கொண்டு வர வேண்மென்று சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக, கிராமப் புறங்களிலானாலும் சரி, நகரப் புறங்களிலானாலும் சரி கடன் பெறுகிறவர்கள் அவசரத்தைப் பயன்படுத்தி, சில லேவாதேவி வட்டிக்காரர்கள் ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டிய வெள்ளைத்தாளில் கையெழுத்து வாங்குவது வழக்கமாக இருக்கிறது. ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தால் நிச்சயமாக 6,000 ரூபாய் என்று வெள்ளைத்தாளில் எழுதக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆறாயிரம் ரூபாய்க்கு மேல் இருந்தால் நிவாரணம் கிடையாது. இப்படி மோசடி நடைபெறக்கூடிய முறையை எப்படிக் கட்டுப்படுத்தப் போகிறார்கள் என்பதுதான் பெரிய மர்மமாக இருக்கிறது. இதைப் போக்க விசாரணைக்கு வழி செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அந்த விதத்தில் ஒரு ஏற்பாடு அவசியமாக ஏற்படுத்தப்பட வேண்டும்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பாக கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகப் பெற்ற கடனுக்கு நிவாரணம் வேண்டுமென்று சொன்னார்கள். கிராமப் புறங்களை எடுத்துக் கொண்டால் சிறு விவசாயிகளுக்குக் கடன் கிடைப்பதில்லை. கூட்டுறவுத் துறை மூலமாக மிக அதிகமான கடன், கோடிக்கணக்கான ரூபாய் கடன் யாருக்குக் கிடைத்தது என்றால் பெரிய பெரிய நிலச்சுவான்தார்களுக்குத்தான் கிடைத்தது. ஆகவே, அதைப் பற்றி நான் வலியுறுத்த விரும்பவில்லை. அடித்தள மக்களுக்கு, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு, சிறு விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் திருத்தம் அமையவேண்டுமென்று சொல்லி, இந்த அளவோடு அமைகிறேன்.

<u>திரு. ரா. மார்க்கபந்து</u>: இங்கே கொண்டு வந்திருக்கின்ற இந்த மசோதாவில் சில திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று நான் கருதுகிறேன். கிளாஸ் 2-ல் கீழ்க்கண்ட திருத்தத்தைச் செய்வது நலமாக இருக்குமென்று கருதுகிறேன்:—

'Any person defined as a debtor within the meaning of this Act, if he had lent any amount, this Act should not be made applicable.'

என்று ஒரு திருத்தத்தைச் சேர்ப்பது முறையாக இருக்கும்.

1978 செப்டம்பர் 14] [திரு. ரா. மார்க்கபந்து]

வைப்பிங் அவுட் 500 ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் வசதி இருப்பவர்கள், பணத்தைத் திருப்பிக் கொடுக்கக்கூடிய சக்தி படைத்திருப்பவர்களுக்குக் கூட அப்ளிகபிள் ஆகும் என்ற நிலைமை இருக்கக் கூடாது.

[பிற்பகல் 1-00]

அதனாலே அவர்களுக்கு நிவாரணம் அளிக்கிற முறையிலே ஒரு சிறிய திருத்தத்தைக் கொண்டுவந்தால் நன்றாக இருக்கும் என்று கருதி நான் இதைச் சொல்கிறேன்.

'In case of agriculturists other than the small farmers owning more than 2½ acres of wet land and 5 acres of dry land, this Act should not be made applicable

என்ற முறையிலே வைப்பிங் அவுட்டுக்கு மட்டும் அந்த ப்ரவிஷனைக் கொண்டுவர வேண்டும்.

அடுத்து, செக்ஷன் 14 இல் இந்தச் சட்டம் அமுலாக்கப்பட்டு 6 மாத காலத்திற்குள்ளாக ஸ்கேல் டவுன் பெட்டிஷன் போட வேண்டுமென்றும், அப்படிப் போடவில்லையென்றால் பூராவையும் வசூல் பண்ணவேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. அதிலே எக்ஸ்பார்ட்டியாக தீர்ப்பு வந்தது இருக்கும். ஏற்கனவே தீர்ப்பு வந்து 3 வருடங்கள் பெண்டிங் ஆக இருக்கும். அல்லது டிக்ரி வாங்கியது எல்லாம் கிராமப்புறங்களிலே உள்ள டெப்டார்களுக்குத் தெரியாத நிலைமை இருக்கும். அந்த நிலைமையிலே அவர்கள் 6 மாதம் கழித்து வந்தால் இந்தச் சட்டத்தினுடைய பெனிபிட் அவர்களுக்கு எதுவும் கிடைக்காது. ஆகவே, எக்ஸிக்யூஷன் நோட்டீஸ் போய் இரண்டு மாதங்களுக்குள்ளாக என்று இருக்கும் வகையில் within two months from the date of execution notice என்ற திருத்தத்தை இதிலே செய்வது நல்லதாக இருக்கும்.

அடுத்து, செக்ஷன் 26ஏ இல் லிமிட்டேஷன் புரவிஷன் கிளியராக இல்லை. ஆகவே, லிமிட்டேஷன் புரவிஷன் செய்வது நல்லது.

அடுத்து, இதிலே விடோஸ் அன்ட் மைனர்ஸ்க்கு மட்டும் புரவிஷன் இருக்கிறது. செக்ஷன் 3 (iv) ஜே. இல்

'pensioners getting pensions less than Rs. 200 per mensem'

என்ற முறையிலே அவர்களுக்கும் சேர்த்து எக்ஸம்ஷன் இருக்கிற மாதிரி புரவைட் பண்ணினால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வருமானம் 5,000 ரூபாய் வரை இருப்பவர்களுக்கு பயனளிக்கும் வகையில் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

500 ரூபாயிலிருந்து 5,000 ரூபாய் வரை பெற்ற கடனுக்கு பாதி மட்டும் வட்டி கிடையாது என்று சொல்லப்படுகிறது. அதை முழுமையாக ஆக்கக்கூடிய திருத்தத்தைக் கொண்டு வர வேண்மென்று சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக, கிராமப் புறங்களிலானாலும் சரி, நகரப் புறங்களிலானாலும் சரி கடன் பெறுகிறவர்கள் அவசரத்தைப் பயன்படுத்தி சில லேவாதேவி வட்டிக்காரர்கள் ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டிய வெள்ளைத்தாளில் கையெழுத்து வாங்குவது வழக்கமாக இருக்கிறது. ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தால் நிச்சயமாக 6,000 ரூபாய் என்று வெள்ளைத்தாளில் எழுதக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆறுயிரம் ரூபாய்க்கு மேல் இருந்தால் நிவாரணம் கிடையாது. இப்படி மோசடி நடைபெறக்கூடிய முறையை எப்படிக் கட்டுப்படுத்தப் போகிறார்கள் என்பதுதான் பெரிய மர்ம மாக இருக்கிறது. இதைப் போக்க விசாரணைக்கு வழி செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அந்த விதத்தில் ஒரு ஏற்பாடு அவசியமாக ஏற்படுத்தப்பட வேண்டும்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப் பாக கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகப் பெற்ற கடனுக்கு நிவா ரணம் வேண்டுமென்று சொன்னார்கள். கிராமப் புறங்களை எடுத் துக் கொண்டால் சிறு விவசாயிகளுக்குக் கடன் கிடைப்பதில்லை. கூட்டுறவுத் துறை மூலமாக மிக அதிகமான கடன், கோடிக்கணக் கான ரூபாய் கடன் யாருக்குக் கிடைத்தது என்றால் பெரிய பெரிய நிலச்சுவான்தார்களுக்குத்தான் கிடைத்தது. ஆகவே, அதைப் பற்றி நான் வலியுறுத்த விரும்பவில்லை. அடித்தள மக்களுக்கு, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு, சிறு விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் திருத்தம் அமையவேண்டுமென்று சொல்லி, இந்த அளவோடு அமைகிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: இங்கே கொண்டு வந்திருக்கின்ற இந்த மசோதாவில் சில திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று நான் கருதுகிறேன். கிளாஸ் 2-ல் கீழ்க்கண்ட திருத்தத்தைச் செய்வது நலமாக இருக்குமென்று கருதுகிறேன்:—

'Any person defined as a debtor within the meaning of this Act, if he had lent any amount, this Act should not be made applicable.'

என்ற ஒரு திருத்தத்தைச் சேர்ப்பது முறையாக இருக்கும்.

வைப்பிங் அவுட் 500 ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் வசதி இருப்பவர்கள், பணத்தைத் திருப்பிக் கொடுக்கக்கூடிய சக்தி படைத்திருப்பவர்களுக்குக் கூட அப்ளிகபிள் ஆகும் என்ற நிலைமை இருக்கக் கூடாது.

[பிற்பகல் 1-00]

அதனாலே அவர்களுக்கு நிவாரணம் அளிக்கிற முறையிலே ஒரு சிறிய திருத்தத்தைக் கொண்டுவந்தால் நன்றாக இருக்கும் என்று கருதி நான் இதைச் சொல்கிறேன்.

'In case of agriculturists other than the small farmers owning more than $2\frac{1}{2}$ acres of wet land and 5 acres of dry land, this Act should not be made applicable

என்ற முறையிலே வைப்பிங் அவுட்டுக்கு மட்டும் அந்த ப்ரவிஷனைக் கொண்டுவர வேண்டும்.

அடுத்து, செக்ஷன் 14 இல் இந்தச் சட்டம் அமுலாக்கப்பட்டு 6 மாத காலத்திற்குள்ளாக ஸ்கேல் டவுன் பெட்டிஷன் போட வேண்டுமென்றும், அப்படிப் போடவில்லையென்றால் பூராவையும் வசூல் பண்ணவேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. அதிலே எக்ஸ்பார்ட்டியாக தீர்ப்பு வந்தது இருக்கும். ஏற்கனவே தீர்ப்பு வந்து 3 வருடங்கள் பெண்டிங் ஆக இருக்கும். அல்லது டிக்ரி வாங்கியது எல்லாம் கிராமப்புறங்களிலே உள்ள டெப்டார்களுக் குத் தெரியாத நிலைமை இருக்கும். அந்த நிலைமையிலே அவர்கள் 6 மாதம் கழித்து வந்தால் இந்தச் சட்டத்தினுடைய பெனிபிட் அவர்களுக்கு எதுவும் கிடைக்காது. ஆகவே, எக்ஸிகியூஷன் நோட்டீஸ் போய் இரண்டு மாதங்களுக்குள்ளாக என்று இருக்கும் வகையில் within two months from the date of execution notice என்ற திருத்தத்தை இதிலே செய்வது நல்லதாக இருக்கும்.

அடுத்து, செக்ஷன் 26ஏ இல் லிமிட்டேஷன் புரவிஷன் கிளியராக இல்லை. ஆகவே, லிமிட்டேஷன் புரவிஷன் செய்வது நல்லது.

அடுத்து, இதிலே விடோஸ் அன்ட் மைனர்ஸ்க்கு மட்டும் புரவிஷன் இருக்கிறது. செக்ஷன் 3 (iv) ஜே. இல்

'pensioners getting pensions less than Rs. 200 per mensem'

என்ற முறையிலே அவர்களுக்கும் சேர்த்து எக்ஸம்ஷன் இருக்கிற மாதிரி புரவைட் பண்ணினால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 செப்டம்பர் 14

அடுத்தபடியாக, 10 ஆயிரம் ரூபாய் வரைக்கும் இருந்தால்
இந்தச் சட்டம் அவர்களுக்கு அப்ளை ஆகாது என்ற நிலைமை இருக்
கிறது. ஒரு விதவைக்கு ஏற்கனவே இருக்கிற இம்மூவபிள்
புராப்பர்டியையும் சேர்த்து 10 ஆயிரம் ரூபாய்க்கு இருக்கலாம்,
அப்படியானால் அந்த விதவை கொடுத்த கடனை வாங்க முடியாத
நிலைமை ஏற்பட்டுவிடும். ஒருவர் இறந்துவிட்டால் அவருடைய
மனைவிக்கு அந்த விதவைக்கு—10 ஆயிரம் ரூபாய் அரசாங்கம்
கொடுக்கிறது பேமிலி பெனிபிட் பண்ட் என்ற அடிப்படையிலே,
அந்த விதவை அதை யாருக்காவது கொடுத்தால்கூட திரும்ப
வசூலிக்க முடியாத நிலைமை இதனால் ஏற்படுகிறது. ஆகவே அந்த
பத்தாயிரம் ரூபாய் என்பதை 25 ஆயிரம் என்று மாற்றவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 3 எச். என்று ஒன்று இருக்கிறது. அதிலே Any amount
advanced will have to be realised.
என்று இருக்கிறது. விவசாயிகள் தாங்கள் விளைவிக்கின்ற
பொருட்களை வெல்ல மண்டியிலோ அல்லது நெல் வியாபாரி
களிடத்திலோ கொடுத்துப் பணம் வாங்குகிறார்கள். அப்போது
அக்ரிமெண்ட் வாங்கி வைத்து விடுகிறார்கள். அந்த அக்ரி
மெண்ட் இந்த ஆக்டின்கீழ் செல்லுபடியாகாது. அதனால் விவ
சாயிகள்தான் பாதிக்கப்படுவார்கள். அதனாலே 3 எச். என்ற
புரவிஷனை வைத்துக் கொண்டு அதோடு This shall not be made
applicable to the agriculturalist in respect of the advance received
for the supply of agricultural produce என்ற புரவிஸோவைச்
சேர்த்தால் நன்றாக இருக்கும். அந்த அக்ரிமெண்டுகளை வைத்துக்
கொண்டு ஏராளமான கேஸ்களைப் போடுகிறார்கள். ஆகவே அப்படி
ஒரு புரவிஸோ போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) :
முடித்துவிடுங்கள்.

THIRU R. MARGABANDHU : I will finish in a few minutes.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) :
எல்லா பில்களிலேயும் தாங்கள் பேசுகிறீர்கள், முடித்துக்கொள்
ளுங்கள். நேரம் ஆகிறது.

1978 செப்டம்பர் 14]

திரு. ரா. மார்க்கபந்து : அப்படியானால் பேசவேண்டா
மென்று சொல்லுகிறீர்களா? முடித்து விடுகிறேன். கிரடிட்
டார்ஸ்க்கு 'includes his heirs, legal representatives and assigns'
என்று டெபனிஷன் வருகிறது, அதைப்போன்று டெட்டார்ஸ்க்கும்
his heirs, legal representatives and assigns என்று அந்த
டெபனிஷனிலே சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கிளாஸ் 7 இல் It should be made applicable
only to the debtors and not to the creditors என்ற முறையிலே
திருத்தத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
ஏற்கனவே நான் தெரிவித்தபோது அரசாங்கம் அந்தத்
திருத்தங்களைக் கொண்டுவருமென்று சொல்லப்பட்டது. ஆனால்
இந்தச் சட்டத்திலே அந்தத் திருத்தத்தைக் காணோம்.
அதையும் திருத்த வேண்டுமென்று கேட்டு, அவ்வாறு செய்தால்
நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, கடனைக் கட்ட
முடியாமல் கஷ்டப்படுகிறவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்
காக கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஏற்
கனவே சட்டம் கொண்டுவரும் நேரத்தில் பல தடவைகள்
இந்த மன்றத்திலே சொல்லப்பட்டிருக்கிறது, தனியார் கடன்
கொடுத்தால், கொடுத்த ரூபாய்க்கு அப்படியே சரியாக தஸ்தா
வேஜுகள் தயாரிப்பதில்லை. நாம் போட்ட சட்டத்தில் கூட
500 ரூபாய் வரை தள்ளுபடி, 500 ரூபாய்க்கு மேல் 5,000
ரூபாய் வரையில் கடன் இருந்தால் கடனிலே 50 சதவிகிதமும்,
வட்டியில் 50 சதவிகிதமும் கொடுக்க வேண்டும் என்று சொல்லி
யிருக்கிறது. இதனால் கொடுத்தவர்கள் யாரும் கவலைப்பட
வில்லை. பரவலாக, சேர வேண்டியது வரும் என்று சந்தோஷப்
பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஏனென்றால் 100 ரூபாய்
கடன் கொடுத்தால் 200 ரூபாய்க்கு டாகுமெண்ட் எழுதி வைத்
திருக்கிறார்கள். ஆகவே, சட்டத்திலே இம்மாதிரி போட்டாலும்
இதையாவது உடனடியாக ஜப்தி செய்து ஆஸ்தி பூராவையும்
ஜப்தி செய்து பணத்தை வரவழைத்துக்கொள்ளலாம் என்று சந்
தோஷமாக இருக்கிறார்கள்.

நிவாரணம் என்றால் நியாயமாக அளிக்கப்பட வேண்டும்.
1,000 ரூபாய் கடன் வாங்கியிருக்கிறார்கள் என்றால் நூற்றுக்கு
4 ரூபாய், 5 ரூபாய் மாதத்திற்கு வட்டி கொடுத்தவர்கள் இருக்
கிறார்கள். நாம் நிவாரணம் கொடுத்தாலும்கூட பணம்

கொடுத்தவர்கள் உண்மையிலேயே அந்தப் பணத்தைக் கொடுத்
திருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க மக்கள் கமிட்டி என்று
ஒரு குழுவை அமைக்க வேண்டும். உண்மைகளைக் கண்டுபிடிப்
பதைப்பற்றி அமைச்சரவர்கள்கூட முன்பு ஏதோ சொன்னதாக
ஞாபகம். 1,000 ரூபாய் கடன் கொடுத்திருந்தால் 2,000
ரூபாய் என்று எழுதுகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. எனவே,
50 சதவிகிதம் தள்ளுபடி என்று சொன்னால் அவர்களுக்கு அதனால்
பாதிப்பு வராது. கடன் வாங்கியவர்கள்தான் பாதிக்கப்படு
கிறார்கள். கோர்ட்டில் கேஸ் போட்டால், 5,000 ரூபாய் கடன்
வாங்கியிருந்தால் அவர்கள் வீட்டையோ, நிலத்தையோ, ஆஸ்தி
யையோ எடுக்க வேண்டியிருக்கும். தவணை முறை அவர்களுக்கு
கொடுக்கவில்லை. ஐந்து வருடம், 10 வருடங்களில் வசூல் செய்
வதாக இருந்தாலும்கூடப் பரவாயில்லை. ஆனால் ஒரேயடியாகச்
சேர வேண்டிய பணத்தைச் சட்டபடி வசூல் செய்துக் கொள்ள
லாம் என்பது கடன் வாங்கியவர்களைப் பாதிப்புள்ளாக்கும்.
உண்மையாக எவ்வளவு கடன் கொடுத்தார்கள் என்பதைக்
கண்டுபிடிக்க வேண்டுமா வேண்டாமா? அவர்களிடத்தில்
கணக்கு கேளுங்கள், இன்கம்டாக்ஸ் கட்டுகிறீர்களா என்று
கேளுங்கள், 1,000 ரூபாய் கொடுத்திருந்தால் கணக்கு இருக்
கிறதா என்று கேளுங்கள். கோர்ட்டுக்குப் போனால் "இந்தக்
கையெழுத்து உங்களுடையது தானா?" என்று கேட்கிறார்கள்.
"'இரண்டாயிரம் ரூபாய் வாங்கினார்களா" என்று கேட்கிறார்கள்.
இல்லை, ஆயிரம் ரூபாய்தான் வாங்கினேன்' என்று சொன்னால்
இதில் இரண்டாயிரம் என்று இருக்கிறது என்று' சொல்லுகிறார்
களே தவிர கொடுத்தவர்களைக் கூப்பிட்டுக் கணக்கு கேட்பதில்லை
அவர்களிடம் கேட்க வேண்டும். உண்மையான கணக்கு என்ன
என்று கேட்க வேண்டும். இல்லையென்றால் கடன் வாங்கிய
வர்கள் அதோகதிக்கு ஆளாக வேண்டியதுதான். ஒரேயடியாக
வசூல் செய்யலாம் என்று சொல்லிவிட்டால் கடன் வாங்கியவர்
களுக்குப் பாதிப்பு ஏற்படும். உண்மையைக் கண்டறிய
ஊராட்சி ஒன்றிய மட்டத்திலோ அல்லது தாலுக்கா மட்டத்
திலோ ஒரு குழுவை அமைத்து நியாயமான முறையில் உண்மை
யாகக் கொடுக்கப்பட்ட கடன்தானா என்று பரிசீலித்து அந்தக்
கமிட்டி சிபார்சு செய்த பிறகு டிக்ரி பண்ணலாம் என்றாவது
செய்ய வேண்டும். இது தனியார் கடன்களைப் பொறுத்தது.

அடுத்து கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட
கடன்கள். அந்தக் கடன்களை வாங்கிய சாதாரணமானவர்
களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்தால்
கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு நஷ்டம் ஏற்படாதா என்றால் அதை
அரசாங்கம் ஈடு செய்ய வேண்டும். 5 கோடி, 10 கோடி ரூபாய்
என்றாலும் அரசாங்கம் அதை ஈடு செய்ய வேண்டும். பட்ஜெட்
டிலே எவ்வளவோ செலவாகிறது. எனவே, இதற்கும் செய்ய
வேண்டும். கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு எவ்வளவோ வட்டி

என்றும் அபராத வட்டி என்றும் போய்கொண்டிருக்கிறது.
இந்த மாதிரி தாங்கள் வாங்கிய தொகைக்கு வட்டி செலுத்தி
யிருக்கிறார்கள், எங்கே அதிகமாக வட்டி செலுத்தியிருக்கிறார்
களோ அந்தக் கடன்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டும்.
அந்த மாதிரிச் சட்டம் கொண்டு வர வேண்டும். அவர்கள்
புலியிடம் இரையாகாமல் திருத்தம் கொண்டு வர வேண்டும்,
உண்மையான கடன்களுக்கு நிவாரணம் கொடுக்க ஏற்பாடு
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-10]

திரு. கு. வடிவேல்: பேரவை மாற்று தலைவரவர்களே,
கடன் நிவாரணச் சட்டத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச்
சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக இந்தக் கடன் நிவாரணச்
சட்டம் ஏழை, எளிய மக்களுடைய கடன் தொல்லைகளை நிரந்தர
மாகத் தீர்ப்பதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை
நான் உணர்கிறேன், பாராட்டுகிறேன். அதே நேரத்தில், வரு
மான வரி கட்டுபவர்களுக்கும், விற்பனை வரி கட்டுபவர்களுக்கும்,
விவசாய வருமான வரி கட்டுபவர்களுக்கும் இத்தனை பேர்களுக்
கும் இந்தச் சட்டம் பொருந்தாது என்று சொல்லப்பட்டிருக்
கிறது. அதே நேரத்தில் தொழில் வரி கட்டுபவர்களுக்கும்
இந்தச் சட்டம் பொருந்தாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.
இதிலே ஒரு திருத்தம் சொல்கிறேன். ரூ. 1, ரூ. 2 தொழில்
வரி கட்டக் கூடியவர்கள்கூட இருக்கிறார்கள். தொழில் வரி
கட்டக் கூடியவர்கள் பலர் கடன் தொல்லைகளுக்கு ஆளாகி இருக்
கிறார்கள். குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே ஆரம்பப்
பள்ளி ஆசிரியர்கள் கடன் தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள்.
அவர்கள் தொழில் வரி ரூ. 1, ரூ. 2 கட்டுகிறார்கள். இந்தப்
பள்ளி ஆசிரியர்களது வருமானம் கடன்களை அடைக்க முடியாத
சூழ்நிலையிலிருக்கிறது. என்னுடைய தொகுதியிலே மட்டுமல்ல,
தமிழகத்திலே உள்ள எல்லா பகுதிகளிலும் ஆரம்பப் பள்ளி
ஆசிரியர்கள் கடன் தொல்லையிலே அவதிப்படுகிறார்கள். குறிப்
பாக, இத்தனை ரூபாய் தொழில் வரி கட்டக்கூடியவர்களுக்கு
இந்தச் சட்டம் பொருந்தாது என்று தொகையைக் குறிப்பிட்டு
விட்டால் நிச்சயமாக, நிரந்தரமாக நல்ல தீர்வாக இருக்கும்
என்று நான் கருதுகிறேன்.

அதற்கடுத்து, ரூ. 500 கடன்பட்டிருந்தால் அந்தக் கடன்
அதோடு தீர்ந்துவிடுகிறது என்று சட்டத்திலே சொல்லப்பட்
டிருக்கிறது. ரூ. 500 கடன் கொடுக்கக்கூடியவன் ஏழை
எளியவர்களாகத்தான் இருப்பான். அவன் கஷ்டப்பட்டு சம்
பாதித்துதான் கடன் கொடுத்திருப்பான். அதே நேரத்தில்
ரூ. 500-ஐ வாங்கியவனும் பெரிய ஏழையாகத்தான் இருக்க
முடியுமே தவிர, வசதி படைத்தவனாக இருக்க முடியாது.
ரூ. 500-லிருந்து ரூ. 1,000 வரை கடன் இருந்தால், பாதி அசலும்,

[திரு. கு. வடிவேல்] [1978 செப்டம்பர் 14

பாதி கடனும் கொடுக்கலாம் என்று இருக்கிறது. அதிலே பாதி அசல் தொகையோடு நிற்கட்டும், வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம், கிராமப்புரங்களை எடுத்துக்கொண்டால், எந்த ஒரு நபர் கடன் வாங்கினாலும் "டபுள் பாண்ட்" என்று சொல்வார்கள். அந்த முறையில்தான் கடன் வாங்கமுடியும். அதாவது, ரூ. 1,000-க்குக் கடன் வாங்கினால் ரூ. 2,000 என்று எழுதி வாங்கித்தான் கடன் கொடுக்கிறார்கள். அந்த நிலைமைகள் தமிழகம் முழுவதும் நிலவுகிறது. அதற்கு நிரந்தரமான தீர்வு காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இரட்டிப்பு பாண்டினால், இந்தச் சட்டம் வருவதானால் ஏற்படும் நல்ல காரியங்கள் உரியவர்களைப் போய்ச் சேராமல் போய்விடுகிறது. அவர்களுக்குப் பரிகாரம் கிடைக்காமல் போகிறது. அதைத் தடுக்க சட்ட அமைச்சரவர் கள் நிரந்தரமான தீர்வு காணவேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள் கிறேன்.

THE HOH. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Mr. Deputy Speaker, Sir, I am obliged to hon. Members for their valuable suggestions on the various provisions of the Bill.

I am obliged to Mr. Suppu for the phrase with which he has described this Bill. Even according to him, there is partial relief from the burden of the debt sustained by the debtors.

My friend Thiru R. Krishnan has moved two amendments. I am afraid these two amendments would result in the enlargement of the slightly richer sections of the people who have been contemplated within the scope of this Bill, namely, amendment to Clause 2(3)(iv) and 7(1)(b). They would only enlarge the scope of the influential debtors, who are much better placed, than those for whom the proposed Bill is contem-plated. I would appeal to the House to reject these two amendments.

I am really obliged to Mr. Margabandhu for having given notice of some amendments. In the course of working of the provisions of the Bill, when it becomes an Act, if difficulties are encountered by the debotr and they are brought to the notice of the Government, they will be examined closely and necessary relief may be contemplated after taking into consideration the interest of all concerned, predominantly the interest of the debtors. I am also beholden to Thiru Alagarswamy, for his kind contribution, for his elucidating contribution, on the plight of the debtors. But there is one thing, I would like to assure the House. There are enough provisions in this Bill which would not result in the sudden and immediate collection of any debt. There are provisions pertaining to scaling down and there is also provision for staying the Execution Petitions. Under such circumstances, there is no sudden avalanche

1978 செப்டம்பர் 14] [Thiru K. Narayanaswamy Mudaliyar]

on the homes and homesteads of the Debtors. Therefore, my own feeling is that if such complaints are brought to notice as a result of practical working of the provisions of the Bill, it will be looked into.

I am obliged to Thiru Vadivelu for his suggestions. I request that the House may be pleased to reject the amendments proposed by the hon. Member Thiru Krishnan, particularly to clause 2 (3)(iv) and 7 (1) (b) of the Bill.

I request the House to accept my motion.

MR. SPEAKER - The question is :

"That the Tamil Nadu Debt Relief Bill, 1978 (L.A. Bill 41 of 1978) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into considera-tion.

பிரிவு 2, 6, 7 ஆகியவற்றுக்கு திருத்தங்கள் கொடுத்திருந்த உறுப்பினர்கள் இருக்கையில் இல்லாததால் அவை திரும்பப் பெற்றனவாக கருதப்பட்டன.

பிரிவுகள் 2 முதல் 30 வரை, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: I move "That the Tamil Nadu Debt Relief Bill, 1978 (L.A. Bill No. 41 of 1978) be passed into Law."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன் வடிவு சட்டமாக ஆக்கப்பெற்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): பேரவையின் அனுமதியுடன் சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 36/78-க்குப் பதிலாக சட்ட முன்வடிவு எண் 37/78 எடுத்துக் கொள்ளப்படும். 36/78 பின்னர் எடுத்துக் கொள்ளப் படும்.

(ஈ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 37/78)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் (நியாயவாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன் வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/78) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று முன்மொழிகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுவிலக்கு மசோதா குறித்து இப்போது நடைபெற வேண்டிய விவாதம்..............

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : Passed over.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, உங்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த சபையில் ஒரு அஷ்யூரன்ஸ் கொடுத்திருக்கிறார். அதாவது நான் சபையில் முழுமையாக இருந்து............

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் : (திரு. பி. எச். பாண்டியன்): That has been passed over. அடுத்தது எடுத்துக் கொள்ளப்படும்.

[பிற்பகல் 1-20]

திரு. வி. கே. கோதண்டராமன் : ஐயா, பயிரிடும் குத்தகை தாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு என்கிற இந்தத் திருத்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில், இப்படி வருஷா வருஷம் துண்டு துண்டாக பலவிதமான பெயர்களில்—குறிப்பாக குத்தகை பதிவு சட்டம், குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம், குறைந்த பட்ச கூலிச் சட்டம் இங்கே வரவில்லை—சட்டங்கள் கொண்டுவருவதற்குப் பதிலாக எல்லாச் சட்டங்களையும் ஒன்றாகச் சேர்த்து, ஒரே சட்டமாக, நிரந்தரமாக அந்த விவசாயிகளுக்கு நன்மை செய்கிற சட்டமாக கொண்டு வரக்கூடிய அளவிற்குச் செய்வதுதான் நலமாக இருக்கும், பொருத்தமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. காரணம் என்னவென்றால், ஒரு கோரிக்கை. ஒரு மசோதா இங்கே வந்தால் அதன் மீது இரண்டு நிமிடத்தில்

*1978 செப்டம்பர் 11 ஆம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

பேசு, 3 நிமிடக்கத்தில் பேசு என்று சொல்லி அவசர அவசரமாக திருத்தச் சட்டங்களை கொண்டு வந்து, அதன் மீது நாங்களும் கருத்துக்களை எடுத்துச் சொல்ல முடியாமல் இருக்கும் போக்கு சரியல்ல. ஆகவே, நிரந்தரமாக ஒரு சட்டத்தை கொண்டு வந்து நிறைவேற்றுவது நலமாக இருக்கும் என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

நியாயவாரம் என்று சொல்கிறோம். ஆனால் அநியாய வாரம் தான் இன்றைக்கு எல்லா இடத்திலும் இருக்கிறது. 40/60 என்று சொன்னாலும், நடைமுறையில் அது 25/75 ஆகத்தான் இருக்கிறது. ஆகவே, இந்த விவசாயிகளுக்கு நல்லது செய்யக்கூடிய சட்டங்களை யெல்லாம் நிறைவேற்ற வேண்டுமானால், அந்த குத்தகை யார் பேரில் இருக்கிறதோ அதை மாத்திரம் நம்பி யிருக்காமல், அதிகாரிகள் தரும் கணக்கை நம்பி இருக்காமல், வாரத்திற்கு யார் பயிர் செய்கிறார்களோ, குத்தகைக்கு யார் பயிர் செய்கிறார்களோ அவர்கள் எவ்வளவு நாள் பயிர் செய்கிறார்கள் என்பதைக் கண்டுபிடித்து அவர்கள் பேரில் அதைக் கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுக்க, சர்வ கட்சித் தலைவர்களைக் கொண்ட கமிட்டிகளை அமைக்க வேண்டும். அப்போதுதான் நியாய வாரம் கிடைக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தை உருப்படியாக, ஒழுங்காக கொண்டு வருவதற்கும் இந்த அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்றால் இப்போது 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று போட்டு இருப்பதை 15 ஏக்கர் என்று போட வேண்டும். மிச்ச நிலம் இருப்பதை இப்போது சொன்ன அந்த சர்வ கட்சிக் கமிட்டி பரிந்துரையின் அடிப்படையில் நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு பட்டா செய்து கொடுக்க வேண்டும். உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்று சொல்கிறபோது, யார் உழுபவர்கள் என்பதை சிந்தித்துப் பார்த்துக் கொடுக்க வேண்டும். ஏற்கெனவே பெரும் தலைவர் காமராஜர் சொன்னது போல்,

* * * * *

திரு. ஜே. ஜேம்ஸ் : பாய்ன்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, தேவை அற்ற முறையில் காலம் சென்ற பெரும் தலைவர் காமராஜர் அவர்களுக்குக் களங்கம் கற்பிக்கும் முறையில் மாண்புமிகு அங்கத்தினர் பேசுவது சரியல்ல. அதை அவைக் குறிப்பில் இருந்து நீக்கி விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், பெரும் தலைவர் காமராஜர் கூறாத ஒன்றை கூறியதாகச் சொல்வது சரியல்ல. அதற்கு ஆதாரமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1978 செப்டம்பர் 14

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) :
பெரும் தலைவர் காமராஜர் பற்றி அவர் பேசியதை அவைக்
குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, இன்
றைக்கு ஆதாரம் இல்லை என்று அவர்கள் சொன்னவுடனே நீக்க
வேண்டுமென்று நீங்கள் சொல்லிவிட்டீர்கள். அதற்கு ஆதாரம்
இருக்கிறது. அவர்களுடைய கட்சிப் பத்திரிகையிலேயே அந்தச்
செய்தி வந்திருக்கிறது. உண்மையை நேர்மையாக, நாணயமாக
புரிந்துகொண்டு, விவசாயிகளுக்கு நியாயம் வழங்க வேண்டும்
என்பதற்காகத்தான் சொல்கிறேனே தவிர வேறொன்றும் அல்ல.

திரு. இரா. தாமரைக்கனி : சார், பாயின்ட் ஆப்
ஆர்டர், பெரியவர் கோதண்டராமன் அவர்கள் பெருந்தலைவரை
காமராஜ் நாடார் என்று சொன்னார்கள். அந்த நாடார் என்ற
வார்த்தையை சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன் :
உங்களுக்கு ஒதுக்கிய நேரம் முடிந்துவிட்டது. நீங்கள் இன்னும்
அரை நிமிடத்தில் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : எனக்கு 5 நிமிடம்
கொடுத்தீர்கள், 4 நிமிடம் ஆகிவிட்டது. அதிலும் குறுக்கீடுகள்
வந்து நேரம் வீணாகிவிட்டது. இன்னும் இரண்டு நிமிடத்தில்
முடித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தாமரைக்கனி அவர்களும் ஒரு நாடார்.
ஆகையால் நாடார் என்ற வார்த்தை ஏதோ அவமரியாதை
யாகப் பயன்படுத்தப்படுவதாக நினைத்துக்கொண்டு, நீக்கச் சொல்
கிறார் என்று கருதுகிறேன். காமராஜ் என்று மொட்டை
யாகச் சொன்னால் அது மொட்டையாக நின்றுவிடும் என்பதால்
மரியாதைக்காக நாடார் என்ற வார்த்தையை சேர்த்துச் சொன்
னேன். (மணி அடிக்கப்பெற்றது)

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர்வர்களே, விவசாயிகளுக்
காகப் போடுகின்ற பில்கள் எல்லாம் தனித்தனியாக அவ்வப்
போது போடப்படுகின்றன. முழுமையாக விவசாயிகளுக்கு
இதுதான் சட்டம் என்று சொல்லுகின்ற வகையில் ஒரே ஒரு சட்ட
மாகப் போடுங்கள். எல்லாவற்றையும் சேர்த்து ஒரு 'கன்சாலி
டேடட் பில்'லாகப் போட்டு, "காம்ப்ரிஹென்சிவ் லெஜிஸ்
லேஷன்" என்று போடுங்கள். நீங்கள் இங்கே 3, 4 சட்டங்கள்
கொடுத்திருக்கிறீர்கள். எத்தனை சட்டத்தில் என்னென்ன சொல்
லப்பட்டிருக்கிறது என்பது யாருக்கும் புரியவில்லை. விவசாயி

1978 செப்டம்பர் 14] [திரு. ரா. மார்க்கபந்து]

களுக்கு அதனால் எந்தவிதமான 'பெனிபிட்'டும் இல்லை. அவர்
களுக்கு 'பெனிபிட்' ஏற்படும் வகையில் ஒரு 'காம்ப்ரிஹென்
சிவ் லெஜிஸ்லேஷன்' கொண்டு வரப்பட வேண்டுமென்று கேட்
டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இப்போது
வந்திருப்பதைப் போல பல சாகுபடியாளர்கள் பாதுகாப்புச்
சட்டங்கள் வந்திருக்கின்றன. எந்தச் சட்டத்தினாலும் சாகுபடி
யாளர்களுக்குப் போதுமான பாதுகாப்பு இல்லை. சாகுபடியாளர்
கள் ஒன்றுதிரண்டு, ஒரு பலமான அமைப்பாக இருக்கும்
இடங்களில்தான் பாதுகாப்பு கிடைக்கிறது. மீதி இடங்களில்
சட்டம் சரியாக அமல்படுத்தபபடுவதில்லை. சட்டத்தை அமல்
படுத்த அரசாங்க அதிகாரிகள் ரொம்ப ரொம்ப தயக்கம் காட்டு
கிறார்கள். அவர்கள் சாகுபடியாளர்களுக்கு ஆதரவாக இருப்
பதற்குப் பதிலாக நிலத்தை விட்டு வெளியேற்றவேண்டுமென்று
சொல்லுகின்ற நிலச் சொந்தக்காரர்களுக்குப் பாதுகாப்பாக
இருக்கிறார்கள். ஆகவே, முதலில் அரசாங்க அதிகாரிகளின் முறை
கேடான இந்தப் போக்குக்குப் பாதுகாப்பு வேண்டும்.

எங்கள் பகுதியில் வேளார்குளம், ஸ்ரீவைகுண்டம் தாலூக்கா
திருச்செந்தூர் தாலுக்கா போன்ற இடங்களில் 20 வருஷம்
30 வருஷமாக சாகுபடி செய்துவந்தார்கள். முன்னால் சாகுபடி
செய்யக்கூடியவர்களுக்கு நிலம் சொந்தமாகும் என்று ஒரு சட்டம்
வந்தது. அதாவது உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று சொன்
னார்கள். உழுபவனுக்கே நிலம் சொந்தமாகும் என்ற காரணத்
தால் பல சாகுபடியாளர்கள் பல்வேறு காரணங்களினால் நிலத்தி
லிருந்து வெளியேற்றப்பட்டார்கள். மேலும் வெளியேற்ற
முயற்சி செய்கிறார்கள். கர்ணம், வி. எம். போன்றவர்கள்,
உண்மையிலேயே பயிர் செய்து கொண்டிருக்கிறவர்கள் பெயரை
சாகுபடியாளர் இன்னார் என்று பதிவு செய்யாமல் தவறான
பெயர்களை ரிக்கார்டுகளில் பதிவு செய்துகொள்கிறார்கள். அதனால்
உண்மையிலேயே பயிர் செய்கிறவன் நிலத்திலிருந்து வெளி
யேற்றப்படுகிறான். ஏனென்றால் சாகுபடியாளர் யார் என்ற விசா
ரணை நடக்கக்கூடிய காலத்தில் உண்மையாகச் சாகுபடி செய்
கிறவன் பெயர் இருக்காது. ஆகையால் விசாரணை நடத்தும் போது
அந்தந்த நிலத்திற்குப் பக்கத்தில் சாகுபடி செய்யும் ஏழை விவ
சாயிகளைக் கூப்பிட்டு, அவர்களைக் கேட்டு, முடிவு செய்ய வேண்
டும். எங்கோ கோர்ட்டில் போய் இரண்டு பேர் சொல்லக்கூடிய
சாட்சியை வைத்து, விரோதமாக தீர்ப்பு அளிப்பது சரியல்ல.

இன்றைக்குச் சாகுபடி செய்யும் பொருட்களைக்கூட சாகுபடி
யாளரிடமிருந்து கோர்ட் நியமிக்கும் ரிசீவர் மூலம் பெற்றுக்
கொள்ளலாம் என்று மத்தியஸ்தம் செய்யப்பட்டிருக்கிறது.

சட்டத்தில் இருக்கின்ற இத்தகைய ஓட்டை உடைசல்களை எல்
லாம் அடைக்க வேண்டுமென்றால் அதிகாரிகளை மட்டும் நம்பக்
கூடாது. உண்மை நிலவரத்தை அறிவதற்கு கிராம மட்டத்தில்
ஒரு கமிட்டி போட வேண்டும். அந்தக் கமிட்டியில் ஆளும் கட்சி
யைச் சேர்ந்தவர்களும் மற்றும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்
களும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். அந்தக் கமிட்டியின்
மூலமாக விசாரித்தால் உண்மையான சாகுபடியாளர் யார் என்று
அறிய முடியும். அரசாங்கத்திலிருந்து போடுகிற சட்டம் சரியா
கச் செயல் படுத்தப்பட வேண்டும். சட்டம் போட்டோம்
என்று சொன்னால் மட்டும் போதாது; அந்தச் சட்டம் உண்மை
யிலேயே சரியாகச் செயல் படுத்தப் படுகிறதா என்பதைப் பார்த்
துக்கொள்வது முக்கியம். உண்மையிலேயே அதனால் விவசாயி
களுக்கு பலன் ஏற்பட வேண்டும். ஆகையால் கர்ணம், முன்சீப்
ரெவின்யூ இன்ஸ்பெக்டர், தாசில்தார் போன்ற அரசாங்க அதிகாரி
கள் மட்டும் சொல்வதை நம்பாமல், நான் ஏற்கனவே சொன்ன
தைப்போல் கிராம மட்டத்தில் ஒரு உயர் மட்ட கமிட்டி போட்டு
அந்தக் கமிட்டியினர் என்ன சொல்கிறார்கள் என்பதையும் கேட்க
வேண்டும். உயர்மட்ட கமிட்டி போட வேண்டுமென்று
சொல்லும் போது இது எப்படி முடியும் என்று கேட்கலாம்.

(பிற்பகல் 1-30)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கேரளாவிலே போட்டிருக்கிறார்கள். வெஸ்ட் பெங்காலிலே
போட்டிருக்கிறார்கள். ஆகவே அப்படி வேறு மாநிலங்களிலே
அவர்கள் செய்யும் போது நாம் ஏன் செய்யக்கூடாது? ஆகவே
சாகுபடியாளர்களைப் பாதுகாக்க வேண்டும் என்று சட்டம்
கொண்டு வருகிற நேரத்தில் மக்கள் கமிட்டிகள் போட்டு அவர்கள்
கொடுக்கக்கூடிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வெளி
யேற்றப்படுதல் போன்றவை இருக்க வேண்டும். எத்தனைச் சட்டம்
கொண்டுவந்தாலும் அதனை சரியாக நடைமுறைப்படுத்துகின்ற
வகையில் நாம் காரியங்களைச் செய்ய வேண்டும். நில உச்ச
வரம்புச் சட்டம் ....

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> அவையின் நேரத்தை
பேரவையின் அனுமதியோடு நீட்டிக்கிறேன்.

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> ஆகவே அப்படி எத்தனை சட்டம்
கொண்டுவந்தாலும் அவைகளை நன்கு நடைமுறைப்படுத்த வேண்
டும் என்று சொன்னால் மக்கள் குழுக்களை அதாவது எல்லாக்
கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட மக்கள் குழுக்
களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி
செய்தால் தான் சட்டம் நல்ல வகையிலே அமலாகும் என்பதைப்
பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

*<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u> : பேரவைத் துணைத்
தலைவரவர்களே, இங்கே சட்டத்தைக் கொண்டுவருகிறபோது
எல்லோரும் வரவேற்று இருக்கிறார்கள். ஆனால் துண்டு துண்டா
கக் கொண்டுவருகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால்
இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது கன்னியாகுமரி மாவட்
டம் நம்முடைய தமிழகத்தில் இல்லாமல் இருந்தது. ஆகவே
இதற்கு முன்னாலே இந்தக் குத்தகைதாரர் சட்டம் கன்னியாகுமரி
மாவட்டத்திலே இல்லாமல் மற்ற மாவட்டங்களில் மட்டும்
இருந்தது. இந்தச் சட்டத்தின்படி 6.33 ஏக்கருக்கு மேலே
உள்ளவர்களுக்கு இந்தச் சட்டத்திலே பாதுகாப்பு இல்லை. ஆகவே
கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ளவர்களுக்கும் சேர்ந்தாற்
போல் ஒட்டு மொத்தமாக எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்ற
விவசாயிகளுக்கும் பொருந்துகின்ற வகையில் எல்லா உறுப்பினர்
களும் எதிர்பார்க்கின்ற அளவுக்கு மேலேயே மிக அதிகமான
அளவில் சீர்திருத்தங்களைக் கொண்ட ஒரு சட்டம் விரைவில் வர
இருக்கிறது என்பதைச் சொல்லி கொண்டு வரப்பட்டிருக்கின்ற
இந்த சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்
கொண்டு விடை பெறுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : பேரவை முன்னுள்ள
கேள்வி —

" தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள்
(நியாயவாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட
மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 37/1978) ஆய்வுக்கு
எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்
றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்
கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்
றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின்
முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

<u>மாண்புமிகு திரு. எஸ், டி. சோமசுந்தரம்</u> : பேரவைத் துணைத்
தலைவரவர்களே, "தமிழ்நாடு 1978-ம் ஆண்டு பயிரிடும் குத்தகை
தாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு
(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1978) சட்ட
மாக நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்
றப் பெற்று, சட்ட முன் வடிவு சட்டமாக ஆக்கப் பெற்றது.

[1978 செப்டம்பர் 14

(உ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 36/1978).

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR :—Sir, I move—

" That the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 36/1978)"* be taken into consideration.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ...

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ ரவர்களே, இதுவரை நிறைய சட்ட முன்வடிவுகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். மீதியை அடுத்த கூட்டத் தொடரிலே வைத்துக் கொள்ளலாம் என்று இந்தப் பக்கம் இருந்து ஒரு யோசனை வந்திருக்கிறது. அதைக் கொஞ்சம் பரிசீலனை செய் தால் பரவாயில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் என்ன சொல்கிறார் என்பதைப் பார்க்கலாம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இரண்டு மசோதாக்கள் இருக்கின்றன. மிக விரைவிலே அவற்றை உறுப்பினர்கள் ஒத்துழைப்போடு முடித்துவிடலாம் என்று நான் கருதுகிறேன். திரு. துரை முருகன் போன்றவர்கள் ஒத்துழைப்பார்களே யானால் பத்து நிமிடங்களுக்குள் முடித்துவிடலாம்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத்துணைத்தலைவர் அவர்களே, இந்த மதுவிலக்குச் சட்டத்திற்கான ஒரு திருத்தத்தை இந்த அரசு கொண்டு வருகிறது. முதலில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது முதல் அமைச்சர் அவர்கள் இதில் ஆர்வம் உடையவர்கள் என்றும், அவர்கள் இங்கிருந்து நான் சொல்கிற கருத்துக்களைக் கேட்டால் மிகவும் வசதியாக இருக்கும். ஆனால் பரவாயில்லை. பாராளு மன்ற, ஜனநாயக முறைப்படி 'கலக்டிவ் ரெஸ்பான்ஸிபிலிட்டி' என்று சொல்வார்கள், அதன் ஆத்மாவாகத்தான் தெரிகிறது. எனவே அவர்கள் இல்லாவிட்டாலும் அமைச்சர் பெருமக்கள் எல்லாம் இருக்கிறார்கள். இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டிருப்பதற்கு இரண்டு காரணங்கள் சொல்லப்பட்டிருக் கின்றன. ஒன்று, 'டினேச்சேர்ட் ஸ்பிரிட்'க்கு லைசென்ஸ் கொடுப்பதில் ஊழல்கள் ஏற்பட்டிருக்கிறது. அது குறித்

*1978 செப்டம்பர் 11 ஆம் தேதிய இறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1978 செப்டம்பர் 14] [திரு. அ. ரகுமான்கான்]

அரசுக்கு புகார் வந்திருக்கிறது. எனவே இதற்கு, 'டினேச்சேர்ட் ஸ்பிரிட்' லைசென்ஸ்தாரர்கள் தவறாக அதைப் பயன்படுத்துகிற காரணத்தால் அதைத் தடுப்பதற்காகவும், இரண்டாவதாக, To enforce Prohibition vigorously அதாவது மது விலக்கை வேகமாகவும் அழுத்தமாகவும் அமுல்படுத்துவதற் காகவும் இதைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

இப்படி இரண்டு காரணங்கள் தெளிவாகச் சொல்லப்பட்டிருக் கின்றன. மதுவிலக்கை அமுல்படுத்துவதில் இந்த அரசு மிகவும் வேகமாகவும் அழுத்தமாகவும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. நமது முதல் அமைச்சர் அவர்கள் கூட ஓராண்டுச் சாதனையில் மதுவிலக்கை சரியாக அமுல்படுத்தி இருக்கிறோம் என்று கோடிட்டுக்காட்டியிருக்கிறார்கள். சுதந்திர தின கொடி யேற்று விழாவின்போது கூடப் பேசியிருக்கிறார், திருமண வீடு களில் கூட அதையே பேசுகிறார்கள். மதுவிலக்கு சரியாக அமுல் படுத்த பட்டிருக்கிறதா, அந்த நோக்கம் நிறைவேற்றப்படுகிற அளவிற்கு இருக்கிறதா? இப்போது இதைக் கொண்டு வந் திருக்கிறார்கள். டினேச்சேர்ட் ஸ்பிரிட் லைசென்ஸ்தாரர்கள் டி.எல்.2 லைசென்ஸை தவறாக உபயோகப்படுத்தினார்கள். எனவே, ஒரு மாற்று வழி கண்டுபிடித்தாக வேண்டும் என்று ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பப்ளிக் செக்டார் அண்டர் டேக்கிங்க்ஸ்-இல் இருப்பவர்கள், டைரக்டர்-ஜெனரல் ஆப் டெக்னிக்கல் டெவலப்மென்ட், அதேபோல் டைரக்டர் ஆப் இன்டஸ்ட்ரீஸ் அன்ட் காமேர்ஸ், கவர்மென்ட் ஆப் இந்தியா, இதிலே ரெஜிஸ்டேர்ட் செய்துகொண்ட டி.எல். 2 லைசென்ஸ் தாரர்களுக்குக் கொடுக்கலாமென்று கொண்டு வந்திருக்கி றார்கள்.

இதைவிட பெரிய அம்சம் சாராயம் நாட்டில் ஓடுகிறது. மதுவிலக்கு வெற்றிபெறவில்லை, தோல்வி அடைந்திருக்கிறது. ஆர்.எம்.வீ. கூட இருக்கிறார். புதுக்கோட்டையில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கிறபோது பிட் நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, விநியோகிக்கப்பட்டு, 'காரம், குணம், மணம் நிறைந்த சாராயம் எங்களிடம் கிடைக்கிறது' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அது பத்திரிகையிலும் வந்திருக்கிறது. இங்கும் பேசப்பட்டிருக்கிறது. மாயூரத்தில் ஒரு பட்டிமன்றம் நடக்கிறது. போலீஸ் அதற்கு அனுமதி கொடுத்திருக்கிறது. எந்த ஊர் சாராயத்தில் போதை அதிகம். லட்சோப லட்சம் மக்கள் கூடியிருக்கிறார்கள். இது மாயூரத்தில் நடைபெற்றிருக்கிறது. போலீஸ் அதற்கு அனுமதி தந்திருக் கிறார்கள். ஓட்டேரி சம்பவம் எப்படி நடந்தது?

இந்த அரசு மதுவிலக்கை அமுல்படுத்துவதில் உற்சாகமாக இருப்பதாகத் தெரிகிறது. எனக்கு வந்துள்ள தகவல்கள் அடிப் படையில் நான் சொல்கிறேன். அது தவறாக இருந்தால் அமைச்சர் அவர்கள் திருத்தலாம். பெயரைச் சொல்ல விரும்பினால்

சொல்லத் தயாராயிருக்கிறேன். குடிப்பழக்கம் உடைய ஒருவர்
துணைவேந்தராக இருக்கவேண்டும் என்று சிபார்சு செய்கிறார்கள்.
இன்றைய ஆஸ்தான கவிஞர் யார்? குடிப்பழக்கம் உள்ளவரை
ஆஸ்தானக் கவிஞராகப் போட்டிருக்கிறார்கள். அமைச்சர்
ராஜா முகமது அவர்களிடம் தெரிவிக்க விரும்புகிறேன். குடிப்
பழக்கம் உடைய ஒரு நபரை வைக்கப் போர்டில் போட்டிருக்கி
றார்கள். பெயர்களை சபையில் தெரிவிக்கத் தயாராயிருக்கிறேன்.
எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால்....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இப்போது இந்த அவை
முன்னால் வைக்கப்பட்டிருக்கிற மசோதாவிற்குத் தொடர்
புடைய பேச்சா என்பதை திரு. ரகுமான்கான் அவர்கள்
நிர்ணயிக்க நான் கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1.40]

திரு. அ. ரகுமான்கான் : எதற்காக இந்தச் சட்டம் கொண்டு
வரப்படுகிறது என்று அதற்கான காரணங்கள் சொல்லப்
பட்டிருக்கின்றன. அப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸை கற்றறிந்த
எனது மரியாதைக்குரிய நிதி அமைச்சர் அவர்கள் பார்க்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டம்
எதற்காக கொண்டு வருகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கின்ற
காரணங்களை எடுத்துப் பார்த்தால்நான் சொல்கின்ற விஷயங்கள்
ரெலவன்ட் மேட்டராகத்தான் இருக்கிறது என்பதை கற்றறிந்த
நமது நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது
எனது தார்மீக கடமை என்று கருதுகிறேன். இந்தச் சர்க்கார்
மதுவிலக்கை தீவிரமாக அமல் படுத்தவேண்டும் என்று சொல்லிக்
கொண்டுதான் இருக்கிறதே தவிர நடைமுறையில் தீவிரமாக
நடத்தப்படவில்லை என்பதை நான் குற்றச்சாட்டாக சொல்ல
விரும்புகிறேன்.

அதே நேரத்தில் டி.எல். 2 லைசென்ஸ் தனிப்பட்ட
வர்களுக்குக் கொடுத்தால் அங்கு ஊழல் நடக்கிறது. ஆகவே
இதை கோவாப்ரட்டிவ் சொஸைட்டிகளுக்குக் கொடுக்கலாம்
என்று சொல்கிறார்கள். அப்படி கூட்டுறவு சொஸைட்டி
களுக்கு கொடுத்துவிட்டால் மட்டும் அங்கே ஊழல் நடக்
காதா ? அங்கெல்லாம் ஊழல்கள் நடந்தன என்று தானே அரசு
தனி அதிகாரிகளை நியமித்தது. ஊழல் நடக்கின்றது என்று
எண்ணித்தானே பல கூட்டுறவு சொஸைட்டிகளை கலைத்திருக்கி
றார்கள். இப்போது இவர்கள் சொல்லியிருப்பதைப் பார்த்தால்
தனிப்பட்டவர்கள் ஊழல் செய்வது மட்டும் போதாது.
கூட்டுறவு சொஸைட்டிகளும், தேசியமயமாக்கப்பட்ட நிறு
வனங்களும் ஊழல் செய்யட்டும் என்ற அளவில் ஒட்டு
மொத்தமாக ஊழலுக்கு ஒரு ப்ரமோஷன் கொடுப்பது
போல் இதைச் செய்திருக்கிறார்கள். கூட்டுறவு சொஸைட்டி
களில் இருப்பவர்கள் மட்டும் என்ன தேவர் திருமக்களா!
இவர்களே சொல்லியிருக்கிறார்கள். கூட்டுறவு சொஸைட்டிகளில்

ஊழல்கள் நடைபெறுகின்றன என்று. அப்படியிருக்கும் போது தனிப்பட்டவர்களிடமிருந்து லைசென்ஸ்களை எடுத்து கூட்டுறவு சொஸைட்டிகளில் கொடுத்து விடுவதால் மட்டும் என்ன பலன் கிடைத்துவிடப்போகிறது? உதாரணத்திற்கு சொல்வதாக இருந்தால்—புலிக்குப் பயந்து வேட்டைக்காரன் கையில் சிக்குவது—தனிப்பட்டவர்களுக்குப் பயந்து கூட்டுறவு சொஸைட்டியின் கையில் கொடுத்தால் என்ன அர்த்தம்? ஆகவே நிதி அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தச் சட்டம் கொண்டு வருவதன் நோக்கம் மதுவிலக்கை அமல்படுத்துகின்ற வகையில் அமையவில்லை, இதற்குத் தனியாக வேறு நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டுக்கொண்டு அமருகிறேன்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் வேகமாக பல சட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. இன்று கொண்டு வரப்பட்டிருக்கின்ற லைசென்ஸ் வழங்குவது பற்றிய இந்தச் சட்டத்தில் எனக்கு எந்த விதமான கருத்து வித்தியாசமும் இல்லை. அதே நேரத்தில் மதுவிலக்கை அமல்படுத்துவதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நமது முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் மதுவிலக்கை அமல்படுத்துவதற்கு தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வற்புறுத்திக் கூறியதை நான் ஊன்றி கவனித்துக் கொண்டிருந்தேன். மதுவிலக்கை அமல்படுத்துவதில், இப்படிப்பட்ட லைசென்ஸ்கள் கொடுப்பதில் தவறு செய்கின்றார்கள் என்று நினைத்து இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க அரசு முன் வந்திருக்கிறது நல்லது தான். ஆனால் இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்திற்கு மாறாக சாதாரண மக்களை இச் சட்டம் துன்புறுத்தாமல் இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறிக்கொண்டு அமருகிறேன்.

*திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களும், வரதராஜன் அவர்களும் சில கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். மதுவிலக்கை தீவிரப்படுத்துகிற முறையில் நாங்கள் நடவடிக்கை எடுப்பதற்காக இது கொண்டு வருகிறோம் என்று சொல்வது சரியல்ல. மதுவிலக்கு என்பது தோற்றுப் போய்விட்டது. இந்தியாவில் தமிழ்நாட்டிலும், குஜராத்திலும் தான் இது பெயரளவுக்கு இருந்து வருகிறதே தவிர வேறு எங்கும் மதுவிலக்கு இருப்பதாகத் தெரியவில்லை. மதுவிலக்கு என்பது செத்துப்போய்விட்டது. நாம் இதற்கு செய்கின்ற காரியங்கள் 'செத்துப்போன பிணத்திற்கு சென்ட் தடவுவது' மாதிரிதான். சாதாரண ஏழை மக்கள் போலீசுக்குப் பயந்து நல்ல சாராயத்தை குடிக்காமல் கள்ளச் சாராயத்தைக் குடித்து வயிற்றை எரித்துக் கொள்கிறார்களே தவிர வேறு என்ன நடக்கிறது? குடிக்காதே என்று யார் சொல்லி யார் கேட்டார்கள். புத்தர் சொல்லிக்

கொண்டிருந்தார். யார் கேட்டார்கள். ஏசு சொல்லிக்கொண் டிருந்தார், யார் கேட்டார்கள்? காந்தியடிகள் சொல்லிக் கொண்டிருந்தார், யார் கேட்டார்கள்? கவிஞர் கண்ண தாசன் எனக்கு மிகவும் வேண்டியவர், அவர் நன்ருகச் சாப் பிட்டுக் கொண்டுதான் கவிதைகளை எழுதிக்கொண்டிருக்கிருர். சோவியத் யூனியனில் குடிக்காமலா இருக்கிருர்கள்? அவர்கள் தான் இன்றைக்கு சந்திர மண்டலத்திற்குப் போய்க் கொண் டிருக்கிருர்கள். குடிக்காமல் இருந்துதான் நாம் எதைக் கண்டோம் ?....** என்று பலபேர் குடிக்கத் துவங்கிவிட்டார்கள் (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லைசன்ஸ் சம்பந்தமாக ஏற்படுகின்ற குறைபாடுகளை போக்குவதற்கும், மதுவிலக்கை தீவிரமாக அமல் செய்வதற்கும், நாட்டில் நலிந்திருக்கின்ற சமுதாயத்தை காப்பாற்றுவதற்கும் இதை அமல் செய்வதன் மூலமாக இந்த நாட்டிலுள்ள மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற எண்ணத்தோடும் இதுகொண்டு வரப்பட்டிருக்கிறது. நமது கனம் அம்பிகாபதி அவர்கள் தனது விருப்பத்தை மறைமுகமாக தெரி வித்து இருக்கிருர்கள். அவரது விருப்பத்தை நிறைவேற்று வதற்கு அண்டையிலுள்ள மாநிலங்கள் தயாராக இருக்கின்றன என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. மு. அம்பிகாபதி : இது என்னுடைய விருப்பம் அல்ல. மதுவிலக்கு அமல்படுத்துவது என்ருல் சோவியத் யூனியனில் இருப்பது போல் இருக்க வேண்டும். நலிந்து போனவர்களுக்கு குடிப்பது நல்லதல்ல என்ருலும், உடல் மெலிந்தவர்கள் கள் குடித்தால் அவர்களது உடல் உப்பும் என்று சொல்லப்படுகிறது. அது பற்றி உங்கள் கருத்து என்ன ? லட்சக்கணக்கான மதுமரத் தொழிலாளர்கள் இன்றைக்கு வேலையின்றி அவதிப்பட்டுக் கொண்டிருக்கிருர்களே. அவர்களை இது வாழவைக்குமா? அது பற்றி உங்கள் கருத்து என்ன ? ** கள் நல்ல சத்துள்ள பொருள் என்று கூறப்படுகிறதே உங்கள் கருத்தென்ன?

மாண்புமிகு திரு. கி. மனேகரன்: தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும் மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் கள்ளைப்பற்றி ஒரு கருத்தரங்கு நடத்து வதற்கு ஏற்பாடு செய்யலாம், அதில் யார் யார் பேச வேண்டும் என்று அவர்கள் விரும்புகிருர்களோ அவர்களை எல்லாம் அழைத் துப்பேச வைக்கலாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

*திரு. மு. அம்பிகாபதி : துணைத் தலைவர் அவர்களே, நாம் இந்தப் பிரச்சினையில் ஒரு குறிப்பிட்ட கட்டுப்பாட்டோடு, மதுவிலக்கை நாம் எப்படி அமுல் படுத்துவது என்று பரிசீலித்து அமுல்படுத்த வேண்டும். இதனுல் 140 கோடி ரூபாய் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்கு நிதிஇழப்பு ஏற்படுகிறது. இதைத் தவிர, இதற்காக போலீஸ், மற்றும் போக்குவரத்து போன்ற வைகளை யெல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது. இப்படித் தமிழ கத்திலே போலீஸ், மற்றவைகளை யெல்லாம் செய்வதற்குப் பதி லாக, இதைச் சட்டத்தின் மூலம் செய்யாமல், பிரசாரத்தின் மூலம் செய்யலாம். சட்டத்தின் மூலம் 6 மாதங்கள் கடுங்காவல் தண்டனை என்று சொன்னுல், சிறையிலேயே சாராயம் காய்ச்சு வார்கள் ; காய்ச்சப்படுகிறது. நோட்டுக்கள் சிறையிலேயே அச்சடிக்கப்பட்டது. கோயம்புத்தூர் சிறையிலே நோட்டுகள் அச்சடிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : துணைத் தலைவர் அவர் களே, குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். சிறைச்சாலை யிலே கள்ள நோட்டு அச்சடித்ததாகக் கூறுவது.......

*திரு. மு. அம்பிகாபதி : கோயம்புத்தூர் சிறையில் அச்சடித் ததாக பத்திரிகையிலேயே வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : பத்திரிகையிலே அவ்வாறு வந்திருக்கலாம். ஆனுல், பொறுப்புள்ள மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் தயவு செய்து அவ்வாறு சொல்லவேண் டாம் என்று கேட்டுக் கொள்கிறேன் ஒரு வேளை அப்படி அடித்திருக்கக்கூடும் ; அதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஏனெனில், இப்படிப்பட்ட செய்திகளை அவர்கள் தான் கூர்மை யாக சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிருர்கள், தவிர, இப்படிச் சொல்வதன் மூலம், இந்த உணர்வு சிறைச்சாலையிலே உள்ளவர்களுக்கு வரக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

திரு. துரை முருகன் : உறுபபினர் அவர்கள் இரண்டைப் பற்றிச் சொன்னுர்கள் (1) சிறைச்சாலையிலே சாராயம் காய்ச் சப்படுகின்றது; (2) சிறைச்சாலையிலே நோட் அடிக்கப்படு கின்றது. நோட் அடிப்பதைப் பற்றிச் சொன்ன நிதியமைச்சர் அவர்கள், சாராயம் காய்ச்சப்படுவதைப் பற்றி ஏன் மறுக்க வில்லை?

திரு. மு. அம்பிகாபதி : கடைசியாகச் சொல்ல விரும்புவது, தண்டனை பெற்றவர்கள்தான் இப்படிப் இந்தச் சமுதாயத்திலே பட்ட குற்றங்களைச் செய்கின்ருர்கள் என்று நினைக்க வேண்டாம். இந்தச் சமுதாயத்திலே இருக்கக்கூடிய வறுமை, வேலையில்லாமல் இருப்பவர்கள், பஞ்சம், பட்டினி, பசி போன்ற கொடுமை

களால் பாதிக்கப்பட்டவர்களும் செய்கிருர்கள். எனவே, அடிப்படையை மாற்றுகின்ற முறையில் இதை ஒரு சமுதாயப் பிரச்னையாக அணுக வேண்டுமே தவிர, சட்டத்தை உபயோகித்து மட்டும் சாதித்துவிட முடியாது. அந்த முறையிலே இந்தப் பிரச்னையைப் பரிசீலித்து முடிவெடுக்க ஒரு உயர் மட்டக் குழு அமைக்க வேண்டும். அதிலே ஆளும் கட்சியிலே உள்ளவர்களை மட்டும் போடாமல், விவரம் புரிந்தவர்களைப் போட்டு குழு அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் [* * *] என்று சொன்னதாக குறிப்பிட்ட வார்த்தைகளை அவைக் குறிப்பேட்டிலே இருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு).

அவ்வாறு பேசியதாக எனக்குத் தெரியாது ; இந்த அவையிலே பேசவில்லை. பத்திரிகையிலே வந்திருக்கலாம் ; அது தவருகவும் இருக்கலாம். எனவே, அந்த வார்த்தைகளை நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. போ. கோபாலன் : மாண்புமிகு உறுப்பினர் மு. அம்பிகாபதி அவர்கள் பேசும் போது, 'ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களை மட்டும் போடாமல், விவரம் புரிந்தவர்களாகப் போடுங்கள்' என்று கொஞ்சம் அழுத்தமாகவே பேசினுர்கள். அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிட உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : உண்மையிலேயே அதை நீங்கள் ஒரு 'காம்பிளிமெண்ட்' டாக ஏற்றுக் கொள்ள வேண்டும். உறுப்பினர் அவர்கள் சாராயம் காய்ச்சுவதிலே 'விவரம் தெரியாதவர்கள்' என்று உங்களைச் சொன்னுர்கள். Take it as a compliment.

திரு. மு. அம்பிகாபதி : திரு. உமாநாத் அவர்கள் சொன்னதை நான் மறுக்கிறேன். மொத்தமாக, இது சம்பந்தமாக அமுல் நடத்துவது பற்றி நன்கு பரிசீலனை செய்ய வேண்டுமென்று தான் நான் சொன்னேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பிற்பகல் 1-50]

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : Mr. Deputy Speaker, Sir, I used to read an old saying that "when wine is in, wit is out". And there has been plenty of wit, although there was no wine in. The wit has been very scintilating.

I am obliged to the hon. Member Thiru Rahman Khan for his experession of view that this amending legislation is not sufficient to enforce prohibition more vigorously. All that this Statement of objects and Reasons claims is only that in order to achieve the two objects, rather the twin objects, namely, (1) to prevent the misuse or abuse of denatured spirit and (2) to enforce prohibition more vigorously, this amendment is brought into effect. This is only one of the expedients for enforcing prohibition that has been thought of. There has been the prohibition Enforcement Cell and if the hon. Member Rahman Khan is pleased to give us some concrete suggestions, they will be passed on to the enforcement prohibition staff to act more vigorously and enforce them much more relentlessly.

The scope of the amendment is very narrow and therefore, I commend that this House may be pleased to pass this Bill.

திரு. துரைமுருகன் : இந்த 'டி-நேச்சர்டு ஸ்பிரிட்'டை ப்ரொகிபிஷன் சட்டத்தின் கீழ் கொண்டு வந்திருக்கிருர்கள். இது பிரிண்டிங் மெஷின் நிறுவனங்களுக்குத் தேவையான ஒன்று. கோவாப்பரேட்டிவிடம் கொடுப்பதன் மூலம் சிறு சிறு பிரஸ்காரர்களுக்குக் கிடைக்காமல் போய் விடக்கூடாது. இதை பெறுவதற்கு 'கம்பர்சம்' முறைகள் எல்லாம் இருக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"1978 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 36/1978) ஆய்வுக்குக் எடுத்து கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

[1978 செப்டம்பர் 14

பிரிவு 2 பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

The hon. Thiru K. NARAYANASWAMY MUDALIAR: Sir, I move that,

"The Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 36 of 1978) be passed."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக ஆக்கப்பெற்றது.

(ஊ) தமிழ்நாடு, 1978ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 30/1978.)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1978)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

திரு. க. சுப்பு: துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பொது விற்பனை வரி திருத்த சட்ட முன்வடிவின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக வரி விதிப்பது என்ற உரிமை சட்ட மன்றத்திற்குத்தான் உண்டு. இந்த உரிமையை சில எதிர்பாராத சூழ்நிலைகளில் நிர்வாகத்திற்கு விட்டுக் கொடுக்கிறோம். "ஆல்டரேஷன், கான்சலேஷன், அடிஷன்" எல்லாவற்றையும் அதிகாரத்திற்குக் கொடுத்துவிட்டால் சட்ட மன்றத்திற்கு வேலை இல்லை—

Imposition of Tax is the duty of the Legislature.

*1978 செப்டம்பர் 2 ஆம் தேதிய சிறப்பு **அரசிதழில் வெளியிடப்** பெற்றுள்ளது.

1978 செப்டம்பர் 14] [திரு. க. சுப்பு]

இந்த மசோதாவைப் பார்த்தால் பல்வேறு வரிகளை விதித்திருக்கிறார்கள். ஏர் கூலர்ஸ், ரிப்ரிஜரேட்டர்ஸ், எலக்ட்ரிசிடி அப்ளியன்சுக்கு வரிகளை உயர்த்தியிருக்கிறார்கள். அதற்குச் சொல்லப்படுகிற காரணம் வசதி படைத்தவர்கள் அவற்றைப் பயன்படுத்துகிறார்கள் என்பது. அவற்றையெல்லாம் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் பயன்படுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். இல்லாவிட்டால் சர்க்காரில் இருக்கும் அதிகாரிகள் பயன்படுத்துகிறார்கள். அதைச் சொல்லி வரியை உயர்த்துகிறார்கள். சிங்கிள் பாயிண்ட் டாக்சுக்கு மல்டி பாயிண்ட் போடும் முறையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

நான் சொல்ல விரும்புவது அதிகாரிகள் சில இடங்களில் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். சென்னை நகரில் மரத்தொட்டி வைத்திருப்பவர்களிடமிருந்து திடீரென்று வரி வசூலிக்கிறார்கள். ரெவின்யூ அமைச்சரிடம் அவர்கள் மகஜர் கொடுத்திருக்கிறார்கள். ஒரிஸ்ஸாவில் அப்படி போடப்பட்டிருக்கிறது என்கிறார்கள். ஆனால், மற்ற மாநிலங்களில் இல்லையே. எங்காவது தெரியாமல் போட்டால் நம் தலையிலும் போட்டுக் கொள்வதா?

அதிகாரிகள் ஒன்றைச் செய்து விட வேண்டியது. பிறகு நம்மிடம் ராடிபிகேஷனுக்கு வரவேண்டியது—

Are we the ratifying House?

அவர்கள் பாவத்தைச் சுமக்கிற வெள்ளாடா நாம்? "ஸ்கேப் கோட்"டா நாம்? எக்சிக்யூட்டிவ் ஆர்டரில் எதையாவது செய்துவிட்டு இங்கு பிறகு வருவது, அந்த வகையில் தான் இருக்கிறது. அது மாதிரி சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் இருக்கிற மர வியாபாரிகளுக்கு எல்லாம் அநியாயமாக வரியைப் போட்டு கசக்கிப் பிழிகிறார்கள். சேல்ஸ் டாக்ஸ் அதிகாரிகள் போய் ஏதாவது உருட்டுவது, மிரட்டுவது, அப்புறம் கொடுப்பதை வாங்கிக் கொண்டு போய் விடுவது—இதுதான் நடக்கிறது. யாராவது ஸ்பிரிட் லைசென்ஸ் வாங்கியிருந்தால் அவனைப் போய்ப் பிடிப்பது, அவன் இவனைச் சரிக்கட்டிவிட்டால் வேண்டியதில்லை என்று போய்விடுவது. இப்படிப்பட்ட வரி விதிக்கும் அதிகாரங்களை அதிகார வர்க்கத்திற்கு கொடுக்கக் கூடாது. அந்த அதிகாரங்கள் ஸ்பேரிங்காகத்தான் பயன்படுத்தப்பட வேண்டும். அதிகாரிகள் செய்து விடுவது, பிறகு அதை நாம் ரேட்டிபை செய்வது என்ற முறையிலே இந்தச் சட்ட மன்றம் ரேட்டிபையிங் ஹவுஸாக மாறிவிடக்கூடாது. இப்போது அப்படியிருந்தாலும், இனிமேலாவது அப்படி வேண்டாம். எதுவாக இருந்தாலும் அதிகாரிகளுக்கு அதிகாரங்களைக் கொடுத்துவிடாமல் சட்ட மன்றத்திலே வையுங்கள். மக்களின் பிரச்சினைகள் நமக்குத்தான் தெரியும். ஏதோ டைம் ஆகிவிட்டது, சீக்கிரம் முடியுங்கள், பசிக்கிறது. என்று சொல்வார் நம்முடைய நிதியமைச்சர், பிரச்சினைகளை இந்த மன்றத்திற்குக் காலாகாலத்தில் கொண்டு வந்து வரிகளை

நாம் போட வேண்டுமானுல் போடலாம். பண்டமன்டலாகவே
அதிகாரத்தை அவர்களிடம் கொடுப்பது ராங்க் ஆகும். இப்படி
ஆல்ட்ரேஷன், கேன்சலேஷன், அடிஷன் என்றெல்லாம் இதிலே
தெரிவித்திருக்கிருர்கள்... .. ..

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : தலைவர் அவர்களே,
திரு. சுப்பு பேசும்போது எனக்குப் பசிக்கிறது, சீக்கிரம் முடியுங்கள்
என்று நிதியமைச்சர் சொல்வார் என்று சொல்வதன் மூலமாக
தயவுசெய்து எனது பொறுப்புணர்ச்சியையும் கடமையுணர்ச்சி
யையும் சந்தேகிக்கிருர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன். இதற்காக 3 மணி நேரம் எடுத்துக் கொண்டாலும் அதைப்
பற்றி எனக்குக் கவலை இல்லை. அவசரமாக மசோதாவைக்
கொண்டுவர வேண்டியிருக்கிறது என்ற நிலைமையிலேதான் நான்
சொன்னேன். எனக்கு இப்போது பசியே இல்லை, வேண்டுமானுல்
திரு. சுப்பு அவர்களுக்குப் பசியாக இருந்தால் அவர்கள் சீக்கிரமாக
முடிக்கலாம்.

திரு. க. சுப்பு : லீடர் ஆப் தி ஹவுஸ் என்ருலே எல்லோரு
டைய உணர்வுகளையும் பிரதிபலிக்கிறவர். நான் இம்ப்யூட்
பண்ணுவதாக தாங்கள் எடுத்துக் கொள்ளக் கூடாது. போன
தடவை பசிக்கிறது; ஆளைவிட்டால் போதும் என்று சொன்ஞர்கள்.
அதனுல்தான் சொன்னேன். அதிகாரிகளிடம் இனிமேலாவது
அதிகாரங்களைக் கொடுக்கக் கூடாது, புதிதாக பொறுப்பேற்றி
ருக்கிற வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பாராளு
மன்றத்திலே பல காலம் பணியாற்றியிருக்கிறவர். இந்தச் சட்டங்
களை இயற்றுகிற அதிகாரம் சட்டசபைக்கு இருக்கிறது, அதை
அதிகாரிகளிடம் கொடுக்க வேண்டாம், எதிர் காலத்திலாவது
அப்படி இருக்காது என்று உறுதிமொழி கொடுத்துவிட்டால் வேறு
ஒன்றும் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, சட்டத்தை அதிகாரிகளிடத்திலே
கொடுக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய நோக்கம் என்பதை
முதலிலேயே நான் சொன்னேன். அதிகாரிகளிடத்திலே கொடுக்க
வில்லை. எந்த எந்த வரிகளைப் போட்டால் அந்த வரிகள் மங்களை,
அடித்தளத்திலே உள்ள மக்களைப் பாதிக்காமல் பணக்காரர்களை
மட்டும் பாதிக்கும், அதன் மூலமாக வருகின்ற வருமானத்தைக்
கொண்டு அரசாங்கத்தின் மூலமாக ஏழை எளிய மக்களுக்கு
திட்டங்களைக் கொண்டுவரலாம் என்ற முறையிலேதான் வரிகள்
போடப்படுகின்றன. போடப்பட்ட வரியினுல் பல லட்சக்கணக்
கான ரூபாய் வரவில்லை. மொத்தமாக நஷ்டம் எவ்வளவு தெரி
யுமா, 1 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய். ஆனுல் லாபம் என்று
சொல்வது ஒரே ஒரு இனத்தில் தான் ஏற்படும். ஏர் கூலர்ஸ்
இவைகளுக்கு எல்லாம் போட்ட வரியால் 3 லட்சத்து 5
ஆயிரம் ரூபாய் அதிகமாகக் கிடைக்கும் எங்கே நட்டம் வருகிறது
என்ருல், சென்னையைப் பொறுத்தவரையில் ஏழை எளிய மக்கள்
பால் வாங்கிச் சாப்பிடுகிருர்கள். பாலை பையிலே

போட்டுக் கொடுக்கிருர்கள். மற்ற மாநிலங்களில் என்று
சொல்கிறபோது மற்ற மாநிலங்களை நாம் பார்க்காமல்
இருக்க முடியாது. நாம் இந்த உலகத்திலேதான் இருக்கிருேம்.
போக்குவரத்து வெகு விரைவாக இருக்கின்ற இந்த நேரத்திலே
நாம் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு விலை குறையாமல்
பார்த்துக் கொள்வது நம்முடைய கடமையாகும். மற்ற மாநிலங்
களிலே 4, 5 பைசா வரியாக இருக்கிறது என்ருல் நம்முடைய
மாநிலத்திலே பால் பைக்கு 20 பைசா என்கிறபோது அதனுல்
ஏழை எளிய மக்கள்தான் பாதிக்கப்படுகிருர்கள். அதற்காக 2
மாத காலம் காத்திருக்க வேண்டுமா என்ற முறையிலே தான் இது
கொண்டுவரப்படுகிறது. திரு. சுப்பு அவர்கள் மர வியாபாரி
களைப்பற்றி யெல்லாம் சொன்ஞர்கள். எனக்குக்கூட அனுதாபம்
தான். இங்கே புதிதாக வரிப் போடப்படவில்லை. முந்தைய
நாளில் போடப்பட்ட வரி இப்போது வசூலிக்கப்படுகிறது. முந்
தைய நாளில் போடப்பட்ட வரியைப் பற்றி திரு. சுப்பு அவர்கள்
சொல்கிருர்கள் என்ருல் இனிமேல் வரிப் போட்டால் அடுத்துப்
பேசுகின்றபோது இவ்வளவு வரி போட்டு விட்டார்களே என்று
அப்போது பேசலாம்.

[பிற்பகல் 2-00]

வரி போடும்பொழுது யாருக்குப் போடுகிருேம், எப்படிப்
பட்டவர்களுக்குப் போடுகிருேம் என்பதை எண்ணிப் பார்க்க
வேண்டும். அதிகாரிகளிடத்தில் எதுவும் கொடுத்துவிடவில்லை
என்று உங்களுக்கும் நன்ருகத் தெரியும். அதிகாரிகளை நம்ப
வேண்டும், ஆனுல் அதிகாரிகளை மட்டுமே நம்பி நிற்கிற அரசாக
இன்றைக்கு இருக்கின்ற அனைத்திந்திய அண்ணு திராவிட முன்
னேற்றக் கழக அரசு இல்லை என்று கூறி சட்ட முன்வடிவை நிறை
வேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : அமைச்சரவர்கள் முன்னுலே போட்ட வரி
என்று சொல்கிருர்கள். அதிகாரிகள் போட்டதற்கு நாம் ரேட்டி
ஃபை பண்ண வேண்டுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மன்னிக்க வேண்
டும். அதிகாரிகள் போட்டது அல்ல, அமைச்சரவை இருக்கிறது.
அமைச்சர்கள் யோசித்துத் தான் போடுகிருேம். அதிகாரிகளே
அதிக வரி போட அதிகாரம் கொடுக்கப்படவில்லை. உங்கள்
அரசாங்கத்தில் ஒருவேளை அப்படிக் கொடுத்தீர்களோ என்னவோ
எனக்குத் தெரியாது. வரி போடுவது நாங்கள், யோசித்துத்தான்
அதைப் போடுகிருேம்.

திரு. க. சுப்பு : மரத் தொட்டி வியாபாரிகளுக்கு யார்
போட்டார்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இப்பொழுது
போடப்பட்டது அல்ல, பழைய வரிப்படி வசூல் செய்யப்படுகிறது.
மரத் தொட்டி வியாபாரிகள் மீது இவர்களுக்கு ஏன் இவ்வளவு
அனுதாபம் என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. தீ. சு. நல்லதம்பி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நமது வருவாய்த்துறை அமைச்சரவர்கள் மரந்தொட்டிக்கான வரி இப்பொழுது போடப்படவில்லை, முன்பே போடப்பட்டது என்று சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : போட்டது சரியில்லை என்று சொல்லவில்லை. மர வியாபாரிகளுக்குப் போட்ட வரியை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இப்பொழுது கொண்டு வரப்படவில்லை, பத்து வருஷங்களுக்கு முன்பு போட்ட வரியெல்லாம் இப்பொழுது பரிசிலனைக்கு வர வேண்டுமா என்பதற்காகத் தான் கேட்டேன்.

திரு. தீ. சு. நல்லதம்பி : இன்றைக்கு ஒவ்வொரு மரத் தொட்டிக்கும் விற்பனை வரி என்று நோட்டீஸ் அனுப்பப் பட்டிருக்கிறது . அது அரசாங்கத்திற்குத் தெரியாது. அப்படி அதிகாரிகள் எதேச்சாதிகார முறையிலே நடக்கும்தன்மையைத்தான் மாண்புமிகு உறுப்பினர் சுப்பு போன்றவர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள். இதைப்பற்றித் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : பாயிட் ஆப் ஆர்டர். கேட்பவர்களெல்லாம் சாப்பிட்டு விட்டு வந்து விட்டார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—" தமிழ் நாடு 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே,

" தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1978) சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும்." என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு சட்டமாக ஆக்க பெற்றது.

5. அரசினர் தீர்மானங்கள்.

(ஆ) பேரவை நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்தி வைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தற்போது, பேரவையை ஒத்தி வைப்பது குறித்து மாண்புமிகு அவை முன்னவர் ஒரு தீர்மானத்தை முன்மொழிவார்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மெத்த வருத்தத்தோடு இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழியக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30-ம் தேதி நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானித்தபடி பேரவையின் அலுவல்கள் இன்றோடு முடிவடைவதால், பேரவை கால வரம்பின்றி ஒத்தி வைக்கப்பெறும்"

திரு. க. சுப்பு : துணைத் தலைவரவர்களே, மெத்த வருத்தத்தோடு என்று சொன்னால் நாங்கள் அதை ஒத்துக் கொள்வது மாதிரி இருக்கும். அதை எடுத்து விட்டால் ஒத்துக் கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களையெல்லாம் பார்க்கும் சந்தர்ப்பம் இல்லை என்பதற்காக அப்படிச் சொல்லி இருக்கிறார்கள்.

திரு. துரை முருகன் : மீண்டும் அவை இந்த வருஷத்திற்குள் கூடுமா ? அல்லது அடுத்த வருஷம்தானா ?

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது. வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-05 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

[1978 செப்டம்பர் 14

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

93. பழம்பொருட் சின்னங்கள் சிலவற்றை பாதுகாத்தல் குறித்த கல்வித்துறையின் 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ந் தேதியிடப்பெற்ற 1109 ஆம் எண் புதுப்பித்தல், வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு அரசாணையில் வரலாற்றுச் சின்னங்கள் தொல்பொருளில் சார்ந்த பண்டைய தொல்பொருள் சின்னங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு இடங்கள், 25/1966) 39 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. சட்டம்

94. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு கட்டுதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்த வருவாய்த் துறையின் 19—4—1978 ஆம் தேதியிடப் பெற்ற 912 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

95. தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு அமைச்சர்கள் பயணப்படி விதிகளின் திருத்தமொன்று செய்வது குறித்த பொது (பணி அமைப்பு 1) துறையின் 26—5—1978-ல் தேதியிடப்பெற்ற 971 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

96. 1976-77ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கை [இந்திய அரசிலமைப்புச் சட்டத்தின் 15 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

97. 1976–77 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வணிகம்) அறிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 15 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

98. 1976–77-ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வருவாய் வரவினங்கள்) அறிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 15 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

99. தமிழ்நாடு அரசின் 1976–77 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் கணக்குகள் மீதான அறிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 15 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

1978 செப்டம்பர் 14]

100. தமிழ்நாடு அரசின் 1976–77 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்க கணக்குகள் மீதான அறிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 15 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

*101. 1976–77 ஆம் ஆண்டிற்கான பல்லவன் போககுவரத்துக் கழகத்தின் 5-வது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

101. அ. 1976–77 ஆம் ஆண்டிற்கான தமிழ் நாடு மினசார வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கை. [1948ஆம் ஆண்டு மின்சாரம் வழங்குவது குறித்த சட்டத்தின் 69 (5) (அ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

102. சென்னை கிண்டி, சைதாப்பேட்டை ஆகிய இடங்களில் 30—10—1977 அன்று நடைபெற்ற துப்பாக்கிச் சூடு குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பெற்ற, மாண்புமிகு நீதிபதி திரு. பி. எஸ். சோமசுந்தரம் விசாரணைக் கமிஷன் அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4)-வது பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

103. கோயம்புத்தூர், லியோகவுண்டர் மகன் அற்புதசாமி என்ற எல். ஆப்பு காணுமற்போனது குறித்து, அதில் காவலர்கள் எவ்வாறேனும் சம்பந்தப்பட்டிருந்தால் அதனை விசாரித்து முடிவு செய்வதற்காக நியமிக்கப்பெற்ற திரு. எஸ். ஏ. காதர் விசாரணைக் கமிஷனின் அறிக்கை, [1952-ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4)-வது பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

58. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தி அமைத்தல் சட்ட முன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1978.)

59. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமன்ற முன் வடிவு எண் 40/1978.)

**60. தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1978.)

[1978 செப்டம்பர் 14

**61. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் (நியாயவாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவிற்கான இணைப்பு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு 37/1978).

**62. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைத் தாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவிற்கான இணைப்பு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1978.)

63. ஆவணப் பதிவுத்துறை பற்றி மதிப்பீட்டுக்குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

64. பாசனத்துறை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

65. 1965-66 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை.

66. அரசினர் உறுதிமொழிக் குழுவின் இரண்டாவது (ஆறுவது சட்டமன்றப் பேரவை அறிக்கை).

***67. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவுக்கான இணைப்பு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1978.)

68. 27—8—1969 ஆம் தேதியன்று தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கிணங்க 31—3—1977 ஆம் தேதியன்று உள்ளவாறு கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களது சொத்திருப்பு பற்றிய விவரக் கணக்குகள் பேரவைமுன் வைக்கப் பெற்றன.

1. திரு. ரா. மார்க்கபந்து, எம். எல். ஏ.
2. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், எம். எல். ஏ.
3. திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால், எம். எல். ஏ.
4. திரு. சி. கோவிந்தராசன், எம். எல். ஏ.

1978 செப்டம்பர் 14]

69. 28-8-1969-ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கிணங்க கீழ்க்கண்ட சட்டமன்ற மேலவை உறுப்பினர்களது சொத்திருப்பு பற்றிய விவரக் கணக்குகள் பேரவைமுன் வைக்கப் பெற்றன.

1. திரு. ஜி. சுவாமிநாதன், எம். எல். சி. (31—3—1975, 1976, 1977 ஆம் தேதியன்று உள்ளவாறு).

2. திரு. எஸ். சந்தோஷம், எம். எல். சி. (31—3—1977 ஆம் தேதியன்று உள்ளவாறு).

3. திரு. பி. ஆர். தாமஸ், எம். எல். சி. (31—3—1977 ஆம் தேதியன்று உள்ளவாறு).

70. உடுக்குறியிடாத வினாப்பட்டியல் (401 முதல் 500 வரை)

71. உடுக்குறியிடாத துணை வினா பட்டியல் (501 முதல் 600 வரை).

---

* தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 21 (5) விதியில் கண்ட வரம்பு நிபந்தனையை ஒட்டி சட்டமன்ற நூலகத்தில் வைக்கப் பெற்றுள்ளது.

**9—7—1978-ஆம் தேதியன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றது.

***11—9—1878-அம் தேதியன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பட்டது.

இணைப்பு I.

(பக்கம் 750-ல் உள்ள வினா எண் 421-க்கான விடையைக் காண்க.)

பழமைமிக்க கலையான தெருக் கூத்துக் கலையை பயிற்றுவிக்கும் நிலையம் தமிழ் நாட்டில் இல்லை. ஆனால் தெருக் கூத்துக் கலையை தமிழ் நாட்டின் பல மாவட்டங்களில் புராதன முறைப்படி குழு பாரம்பரிய அடிப்படையில் கற்றுக் கொடுத்து வருகின்றார்கள். அப்படிப்பட்டவர்களின் முகவரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

(1) திரு. நடேச தம்பிரான்,
தெருக்கூத்துக் கலைஞர்,
செய்யாறு தாலூகா,
வட ஆற்காடு மாவட்டம்.

(2) திரு. ராஜகோபால் அவர்கள்,
திரு. பெரியசாமி அவர்களின் புதல்வர்,
ஆலங்குப்பம்,
திண்டிவனம் தாலூகா,
தென் ஆற்காடு மாவட்டம்.

(3) திரு. முனுசாமி அவர்கள்,
திரு. ஆறுமுகம் அவர்களின் புதல்வர்,
தெருக்கூத்துக் கலைஞர்,
ஆலங்குப்பம் காலனி.
ஆலங்குப்பம் அஞ்சல்,
திண்டிவனம் தாலூகா,
தென் ஆற்காடு மாவட்டம்.

(4) திரு. மணி அவர்கள்,
திரு. மாணிக்கம் பிள்ளை அவர்களின் புதல்வர்,
ஆலங்குப்பம் அஞ்சல்,
திண்டிவனம் தாலூகா,
தென் ஆற்காடு மாவட்டம்.

(5) திரு. தேசிகன் அவர்கள்,
தெருக்கூத்துக் கலைஞர்,
ஆடவல்லிக்கூத்தன்,
மூனூர் அஞ்சல்,
திண்டிவனம் தாலூகா,
தென் ஆற்காடு மாவட்டம்.

(6) திரு. டி. சுப்பிரமணியன்,
திரு. தூபமணி அவர்கள் புதல்வர்,
தெருக்கூத்துக் கலைஞர்,
சொக்கத்தங்கன் காலனி,
கீழ் சிவிரி அஞ்சல்,
திண்டிவனம் தாலுக்கா.

(7) திரு. ஏ. ராஜமாணிக்கம்,
ராஜமாணிக்கம் கலைக்குழு,
தொடந்தனூர் கிராமம்,
விழுப்புரம் தாலுக்கா,
தென் ஆற்காடு மாவட்டம்.

(8) திரு. கே. பாலகிருஷ்ணன்,
தெருக்கூத்துக் கலைஞர்,
1, தோடந்தனூர் கிராமம்,
விழுப்புரம் தாலுக்கா,
தென் ஆற்காடு மாவட்டம்.

(9) திரு. ராஜமாணிக்கம் கவுண்டர்,
திரு. ராமகிருஷ்ண கவுண்டர் அவர்களின் புதல்வர்,
ராஜமாணிக்கம் கலைக் குழு,
தொடர்ந்தனூர் கிராமம்,
விழுப்புரம் தாலுக்கா,
தென் ஆற்காடு மாவட்டம்.

(10) திரு. சின்னன் அவர்கள்,
சின்னன் கலைக்குழு,
ஆண்டி பாளையம்,
மயிலம்பாடி, பவானி தாலுக்கா,
கோயமுத்தூர் மாவட்டம்.

(11) திரு. விஜயவீரன் அவர்கள்,
விஜயவீரன் கலைக்குழு,
தொனுகல் பஞ்சாயத்து யூனியன் ஸ்கூல்,
கரணபட்டி பிளாக்,
ராமநாதபுரம் மாவட்டம்.

(12) திரு. வெங்கடசுப்பு,
திரு. அழகிரி ரெட்டியார் அவர்கள் புதல்வர்,
தெருக்கூத்துக் கலைஞர்,
எம். ரெட்டியார்பட்டி,
அருப்புக்கோட்டை தாலுக்கா,
ராமநாதபுரம் மாவட்டம்.

[1978 செப்டம்பர் 14

(13) திரு. சாகுல் ஹமீது,
தெருக்கூத்துக் கலைஞர்,
வேலாயுதபுரம் (வழி) சாம்பவர் வடகரை,
திருநெல்வேலி மாவட்டம்.

(14) திரு. ஜி. ராமச்சந்திர ராவ்,
தெருக்கூத்துக் கலைஞர்,
பஞ்சலிங்கபுரம், மகாதானபுரம் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.

அரசினால் நடத்தப்படும் பயிற்று நிலையங்கள் தமிழ் நாட்டில் இல்லை.

1978 செப்டம்பர் 14]

இணைப்பு II.

[பக்கம் 793-ல் உள்ள உடுக்குறியிடாத வினா எண். 491-க்கான விடையைக் காண்க].

வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும்.	பழங்குடி மக்கள் தொகை.	அவர்கள் வாழும் இடங்கள்.
(1)	(2)	(3)
1 சேலம்	94,383	கொல்லிமலை, ஏற்காடு கல்வராயன்மலை, அரநுத்துமலை, மற்றும் பச்சைமலை.
2 தர்மபுரி ..	30,123	சித்தேரி மலை, ஆரூர் தாலுக்கா.
3 வட ஆற்காடு ..	70,727	ஜவ்வாது மலை.
4 தென் ஆற்காடு	14,105	கல்வராயன் மலை.
5 திருச்சிராப்பள்ளி.	14,907	பச்சைமலை.
6 மதுரை	6,707	பழனிமலை அடிவாரம்.
7 இராமநாதபுரம்	1,056	செண்பத் தோப்பு ஐயன் கோவில் ஸ்ரீவில்லிபுத்தூர், தாலுக்கா.
8 கோயம்புத்தூர் ..	25,021	ஆசனூர், வால்பாறை அமராவதி நகர், மருதம்பட்டி, மட்டுத்துவாயல் மருதமலை, மானூர், பழமலை திருமூர்த்தி மலைகள், குழியாலத்தூர், கூடலூர் சின்னத் தடாகம், மேல் பாவி புத்தூர்.

9	நீலகிரி	19,869	மாவட்டம் முழுவதும் பரவலாக உள்ளனர்.
10	கன்னியாகுமரி ..	2,862	பேச்சிப் பாறை, பெத்தை காணி மற்றும் காயல் கரைப் பகுதி.
11	திருநெல்வேலி ..	1,614	பாபநாசம் மேல் அணைக் கட்டு அம்பாசமுத்திரம் தாலுக்கா.
12	செங்கல்பட்டு ..	27,189	மாவட்டம் முழுவதும் பரவலாக இருக்கிறார்கள்.
13	தஞ்சாவூர் ..	1,024	மாவட்டம் முழுவதும் பரவலாக இருக்கிறார்கள்.
14	**சென்னை** ..	928	மாவட்டம் முழுவதும் பரவலாக இருக்கிறார்கள்.
		3,11,515	

இணைப்பு III.

(386-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 563-க்கான விடையைக் காண்க.)

1977–78-ம் ஆண்டின் தமிழ் நாட்டில் அறிவியல் ஆய்வுக்கூட மானியம் பெற்ற 50 உயர்நிலைப் பள்ளிகளின் பட்டியல்—மாவட்ட வாரியாக :—

(1) அரசு உயர்நிலைப் பள்ளிகள்.

வரிசை எண்.	வருவாய் மாவட்டம்/கல்வி மாவட்டம்.	எந்த ஊரில் உள்ள பள்ளி என்பது.
(1)	(2)	(3)
1	சென்னை/சென்னை	கோடம்பாக்கம்.
2	செங்கல்பட்டு/திருவள்ளூர் ..	கே. ஜி. கண்டிகை (க)
3	செங்கல்பட்டு/காஞ்சிபுரம் ..	பெருநகர் (க)
4	செங்கல்பட்டு/காஞ்சிபுரம் ..	அனகாபுத்தூர் (க)
5	தென்னாற்காடு/பண்ருட்டி தாலூகா.	பேர்பெரியான்குப்பம் (க)
6	தென்னாற்காடு/கடலூர் ..	குள்ளஞ்சாவடி
7	தென்னாற்காடு/கடலூர் ..	குறிஞ்சிப்பாடி (க)
8	தஞ்சாவூர்/பட்டுக்கோட்டை	ஒரந்தராயன் கூடிக்காடு
9	தஞ்சாவூர்/தஞ்சாவூர் ..	விழுந்தமாவடி (க)
10	தஞ்சாவூர்/தஞ்சாவூர் ..	பட்டீஸ்வரம்.
11	தஞ்சாவூர்/மாயூரம்	திருமருகல்
12	திருச்சிராப்பள்ளி/கரூர் ..	துவரங்குறிச்சி (க)
13	திருச்சிராப்பள்ளி/அரியலூர்	விளந்தை (க)
14	மதுரை/பெரியகுளம் ..	வடுகப்பட்டி (க)
15	மதுரை/பெரியகுளம் ..	ஓடைப்பட்டி (க)
16	மதுரை/திண்டுக்கல்	மாரம்பாடி (க)
17	வட ஆற்காடு/திருப்பத்தூர் ..	புதுப்பேட்டை (க)

[1978 செப்டம்பர் 14

வரிசை எண்.	வருவாய் மாவட்டம்/கல்வி மாவட்டம்.	எந்த ஊரில் உள்ள பள்ளி என்பது.
(1)	(2)	(3)
18	வட ஆற்காடு/வேலூர் ..	ஆமூர் (க)
19	வட ஆற்காடு/செய்யார் ..	பெரணமல்லூர் (க)
20	வட ஆற்காடு/திருவண்ணாமலை	குன்னத்தூர் (க)
21	தர்மபுரி/தர்மபுரி	சிங்காரப்பேட்டை (க)
22	தர்மபுரி/கிருஷ்ணகிரி ..	குன்றப்பள்ளி
23	சேலம்/சேலம்	வலசையூர் (க)
24	சேலம்/நாமக்கல்	பாலப்பட்டி (க)
25	சேலம்/சங்கேரி துருக்கம் ..	மகுடஞ்சாவடி (க)
26	கோயம்புத்தூர்/கோபிசெட்டி பாளையம்.	கெட்டிச்சாயூர்
27	கோயம்புத்தூர்/ஈரோடு ..	வெள்ளோடு (க)
28	கோயம்புத்தூர்/பொள்ளாச்சி	பூலாங்கிண்று (க)
29	கோயம்புத்தூர்/ஈரோடு ..	சித்தோடு (க)
30	நீலகிரி/நீலகிரி	எடப்பள்ளி.
31	திருநெல்வேலி/கோயில்பட்டி	கரிவலம்வந்த நல்லூர் (க)
32	கன்னியாகுமரி/தக்கலை ..	காட்டாத்துறை.
33	கன்னியாகுமரி/நாகர்கோயில்	எரவிபுதூர்
34	கன்னியாகுமரி/குழித்துறை ..	நட்டாலம்
35	இராமநாதபுரம்/இராமநாதபுரம்	சாயல்குடி (க)
36	இராமநாதபுரம்/விருதுநகர் ..	ஆமத்தூர் (க)
37	இராமநாதபுரம்/தேவகோட்டை	ஆனந்தூர் (க)
38	இராமநாதபுரம்/இராமநாதபுரம்	ஜோகில் பட்டி மையம்.
39	திருநெல்வேலி/திருநெல்வேலி	மாவடிப்பண்ணை (க)

VB11,31 N78

1978 செப்டம்பர் 14]

(2) தனியார் மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள்.

N79.20

	மாவட்டம்.	பள்ளி.
	(1)	(2)
40	இராமநாதபுரம்	சாலியார் மஹாஜன உயர்நிலைப்பள்ளி, அருப்புக்கோட்டை.
41	கோயம்புத்தூர்	எஸ்.எஸ்.வி. பெண்கள் உயர்நிலைப் பள்ளி, கொடுமுடி.
42	மதுரை	பச்சையப்ப இந்து நாடார் உயர்நிலைப் பள்ளி, கமாட்சிபுரம்.
43	மதுரை	கார்டமம் பிளாண்டர்ஸ் யூனியன் உயர்நிலைப்பள்ளி, கம்பம்.
44	கன்னியாகுமரி	ஸ்காட் கிரிஸ்தியன் உயர்நிலைப்பள்ளி, நாகர்கோயில்.
45	தஞ்சாவூர்	என். டி. உயர்நிலைப்பள்ளி, வெளி பாளையம்.
46	திருச்சிராப்பள்ளி	செங்குந்தர் உயர்நிலைப்பள்ளி, துறையூர்.
47	சென்னை	மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, மேற்கு, மாம்பலம் சென்னை.
48	மதுரை	மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, ஷெனாய்நகர், மதுரை.
49	சேலம்	நகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளி. மணக்காடு.
50	கோயம்புத்தூர்	நகராட்சி உயர்நிலைபள்ளி, ஈரோடு.

["(க)" என்பது "அரசு(கழக) உயர்நிலைப் பள்ளி" [illegible] குறிக்கிறது.]

(22)32

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7. C. Subburaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9. C. Venkatesan Chetty and Company, No. 8-C, Rycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Thanjavore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-2.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris)
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street Salem.
16. Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumar Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Pannura High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17.

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS